# முன்னுரை



பிள்ளைகளை பரலோகத்திற்கு, தங்களுடன் அழைத்துச் செல்லுவது பெற்றோர்களின் பெரிய சிலாக்கியமாகும். ***"என் பிள்ளைகள் கர்த்தரை நேசிக்கவும், அவர் சித்தத்தை செய்து, அவரை மகிமைப்படுத்த நான் முயன்றிருக்கிறேன்"*** என்று பெற்றோர்கள் கூறலாம். இப்படிப்பட்டவர்களுக்கு பரலோகத்தின் வாசல்கள் திறக்கப்படும். ஆயினும் எல்லோராலும் அங்கு நுழைந்துவிட முடியாது. சிலர் தங்கள் பிள்ளைகளுடன் வெளியிலே விட்டுவிடப்படுவர். தேவனுடைய சித்தத்திற்கு தங்களை ஒப்படைக்காததினால் குணங்கள் மறுரூபமாக்கப்படாதவர்களாக இவர்கள் இருப்பர். ஒரு கரம் உயர்த்தப்பட்டு பின்வரும் வார்த்தைகள் பேசப்படுகின்றன. ***"இல்லத்தின் கடமைகளை நீ அசட்டை செய்துவிட்டாய். ஆத்துமாவை பரலோகிற்கு தகுதிப்படுத்தும் வேலையை செய்ய தவறிவிட்டாய். நீ உள்ளே வர முடியாது. தேவனுடைய சித்தத்தை செய்ய கற்றுக்கொள்ளளாததால் பிள்ளைகளுக்கு பரலோகம் மூடப்பட்டிருக்கிறது. பிள்ளைகளை இதைச் செய்யும்படி வழிநடத்தாததால், பெற்றோர்களுக்கும் பரலோகத்தின் கதவுகள் மூடப்படுகின்றன."***

தேவனுடைய வார்த்தையிலிருந்தும், அவருடைய ஆவியானவருடைய சாட்சியாகமங்களிலிருந்தும் சத்திய வெளிச்சம் நம்மீது பிரகாசிக்கின்றது. எவரும் இதில் தவற வேண்டியதில்லை. தேவனை அறிந்து, அவரை மதித்து நடக்கும்படி பிள்ளைகளை வளர்க்குமாறு தேவன் பெற்றோரிடம் சொல்லுகிறார். தேவனுடைய குடும்பத்தின் இளைய அங்கத்தினர்களாக பிள்ளைகள் இருக்கிறார்கள். அதற்கேற்றபடி அவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். பரலோக மன்றங்களில் பிரகாசிக்க அழகான குணங்களையும், அருமையான மனநிலையையும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும். பரலோகம் செல்வதற்கு இவைகளே அவர்களுடைய தகுதியாகயிருக்கும். பெற்றோர்கள் இக்கடமையை செய்யாமல்



1ST Proof

தவறானவைகளில் பிள்ளைகளை பங்கேற்கவைத்தால், பரலோகத்தின் கதவுகளை பிள்ளைகளுக்கு எதிராக பெற்றோர்களே மூடிவிடுகிறார்கள். பெற்றோர்களுக்கு இந்த விஷயங்கள் அழுத்தமாக சொல்லப்பட வேண்டும். ஆவர்கள் விழித்தெழுந்து வெகு காலமாக அசட்டை செய்த வேலையைச் செய்ய வேண்டும். - Testimonies for the Church, vol. 5, pp. 325, 326.

**எலன். ஜி. உவைட்.**

# பாகம் - I

# வீடு ஒரு பள்ளியாக செயல்படுவதின் முக்கியத்துவம்



1[ST] Proof

## அதிகாரம் - 1

## வீடு ஒரு பள்ளியாக செயல்படுவதின் முக்கியத்துவம்

**கல்வி இல்லத்தில் துவங்குகிறது**

வீட்டில்தான் பிள்ளையின் கல்வி துவங்க வேண்டும். இதுதான் குழந்தையின் முதல் பள்ளி. அங்கு பிள்ளையானவன் தன் பெற்றோர்களை ஆசிரியர்களாகக் கொண்டு வாழ்க்கைக்குத் தேவையான பாடங்களைக் கற்றுக்கொள்ளுகிறான். மதிப்பு, கீழ்ப்படிதல், தேவபக்தி, சுயகட்டுப்பாடு ஆகியன முக்கிய பாடங்களாக இருக்கின்றன. நன்மைக்கோ தீமைக்கோ ஏதுவான வல்லமையாக குடும்பத்தின் தாக்கம் இருக்கும். இத்தாக்கம் வெளிப்படையாக தெரியாததாக இருப்பினும், நீதிக்கும் சத்தியத்திற்கும் ஏதுவான பெரிய வல்லமையாக இது செயல்படலாம். இங்கு பிள்ளை சரி யாக வழிநடத்தப்படாவிட்டால், பிற்காலங்களில் சாத்தான் தவறானவை களைக் கற்றுக் கொடுத்துவிடுவான். இல்லம் ஒரு பள்ளியைப்போல் செயல் பட்டு பிள்ளைக்கு சரியான கல்வியை கொடுப்பது எவ்வளவு முக்கியமான தாக இருக்கிறது. ***Counsels to Parents, Teachers and Students,, p.107.***

**இங்கு அடித்தளம் போடப்படுகிறது**

பிள்ளைகளின் சரீரத்திற்கும், மனதிற்கும், ஆவிக்குரிய வாழ்க்கைக் கும், ஏற்றபடி பெற்றோர்கள் அவர்களை அறிவுறுத்த வேண்டும். தன் பிள்ளை சமநிலையான குணத்தை அடைவதே பெற்றோரின் இலக்காக இருக்கட்டும். இது சாதாரண வேலை கிடையாது. ஆழ்ந்த சிந்தனையும், ஜெபமும் பொறுமையும் சகிப்புத்தன்மையும் அவசியம். சரியான ஒரு அடித்தளம், அமைக்கப்பட வேண்டியுள்ளது. பெலமானதாகவும், மாறாதபடி யும் இவ்வடித்தளத்தின் உள்அமைப்பு கட்டப்பட வேண்டும். பிறகு ஒவ் வொரு நாளும் மேலும் கட்டப்பட்டு சீரமைக்கப்படுவதாகவும் உள்ளது. ***Counsels to Parents, Teachers and Students,, p. 107, 108.***

**இது பிள்ளைகளின் மறுக்கப்படமுடியாத உரிமை**

பெற்றோர்களே உங்கள் இல்லம் பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுக்கும் பள்ளி என்பதை நினைவில் கொள்ளுங்கள். பரலோக இல்லத்திற்கு செல்ல இந்த பூலோக இல்லம் ஆயத்தப்படும் இடமாக அமைகின்றது. குழந்தை பருவத்தில் தேவைப்படும் இந்த கல்வியைத் தவிர வேறெதையும் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டாம். அவசியமில்லாத வார்த்தைகளை பயன்படுத்தாதீர்கள். பொறுமையோடும், கரிசனையோடும் நடந்துகொள்ள கற்றுக்கொடுங்கள். மற்றவர்களின் நலனைப்பற்றி சிந்திக்க தெரிந்துகொள்ளட்டும். இதை நீங்கள் செய்தால் ஆன்மீகத்திற்கேதுவான உயர்ந்த ஊழியத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்துகிறீர்கள். ***Manuscript 102, 1903.***

இல்லமானது ஆயத்தப் பள்ளியாக இருக்க வேண்டும். தேவனுக்கு சேவை செய்யும் தகுதியை பிள்ளைகளும் வாலிபரும் வீட்டில்தான் பெறுகிறார்கள். தேவ இராஜ்யத்தின் உயர்ந்த பள்ளியில் சேருவதற்கான ஆயத்தம் இதுவே.

**வீட்டில் கொடுக்கப்படும் கல்வியின் முக்கியத்துவம்**

இது அந்த அளவிற்கு முக்கியமானதல்ல என்று நினைக்கப்படலாகாது. உண்மையான கல்வியில் இது முதலிடம் பெறுகிறது. பிள்ளைகளின் மனங்களை சரியான வகையில் அமைக்கும் பணி பெற்றோர்களுக்கு ஒரு பொறுப்பாகக் கொடுக்கப்படுகின்றது. ***Review And Herald, June 6, 1899.***

செடி எப்படி வளைகிறதோ, மரமாகும்போது அதே வளைவுடன் இருக்கும். இது நமக்கு அதிர்ச்சியூட்டக்கூடிய உண்மையாக இருக்கிறது. பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய இக்கல்வி ஒரு புனிதமான பணி. பெற்றோர்களே தேவன் உங்கள் மேல்வைத்திருக்கும் நம்பிக்கைக்கு பாத்திரவான்களாக இருப்பீர்களா? இந்த சிறு மரங்கள் சரியான விதத்தில் வளர்க்கப்பட வேண்டும். இளகின மனதுடன் பிள்ளைகளை கையாண்டு அவர்களை பயிற்றுவிக்க வேண்டும். கர்த்தரின் தோட்டத்திற்கு இம்மரங்கள் இடமாற்றப்படுவதே நமது தலையாய நோக்கம். வீட்டில் கொடுக்கப்பட வேண்டிய கல்வியை நாம் அசட்டைப்படுத்திவிடக்கூடாது. இதை அசட்டை செய்வோர் ஒரு ஆன்மீகக் கடமையைச் செய்யத் தவறுகிறார்கள். ***Manuscript 84, 1897.***



1ST Proof

**இல்லக்கல்வியின் ஆதாயங்கள்**

இது ஆழமான பொருளை உள்ளடக்கியதாக உள்ளது. ஆபிரகாம் விசுவாசிகளின் தந்தை என்று அழைக்கப்பட்டார். அவரது இல்லத்தில் தேவக்கட்டளைகள் எப்பொழுதும் கைக்கொள்ளப்பட்டன. ஆபிரகாம் அவைகளுக்கு தன் வீட்டில் முதல் இடத்தைக் கொடுத்திருந்தார். நமக்கு ஒரு மாதிரியாக அவர் திகழ்வதற்கு இதுவே காரணம். தனது இல்லத்தில் பக்தியையும் விசுவாசத்தையும் வளர்த்தார். ஒவ்வொரு வீட்டிலும் கொடுக்கப்படும் கல்வியை நோக்கிப்பார்த்து அதன் தாக்கத்தை அளக்கிறவர் ஆபிரகாமைப்பற்றி சொல்லுகிறார். ***“அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன்” (ஆதி 18:19). Letter 9, 1904.***

எபிரெயர்கள் தங்கள் பிள்ளைளுக்கு அவருடைய நியமங்களை கற்றுக்கொடுக்கும்படி தேவன் கட்டளையிட்டார். அவர் தம் ஜனத்திற்கு செய்தவைகளை அவர்கள் பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டியிருந்தது. இல்லம் தனியாகவும் பள்ளி தனியாகவும் இல்லை. இல்லமே பள்ளியாக செயல்பட்டது. அந்நிய உதடுகளுக்குப் பதிலாக தங்கள் சொந்த பெற்றோர்களின் அன்பான இருதயங்களிலிருந்து அவர்களுக் பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. வீட்டில் நடந்த எல்லா சம்பவங்களும் தேவனைப் பற்றிய சிந்தனையோடு நடந்தேரின. அனுதினமும் இது காணப்பட்டது. தேவன் தனது ஜனத்தை எப்படியாகக் காப்பாற்றி கூட்டி வந்தார் என்பதை பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு மீண்டும் மீண்டுமாய் நினைவுபடுத்தினர். பிள்ளைகளின் கவனத்தை கவரக் கூடிய வகையிலும், அவர்களது ஆர்வத்தையும், தேவ பக்தியையும் தூண்டும் விதத்தில் பெற்றோர்கள் இதை செய்தார்கள். தேவனுடைய வழிநடத்துதலைப் பற்றியும், எதிர்காலத்தைக் குறித்தும் மகத்தான சத்தியங்கள் அந்த பிஞ்சு உள்ளங்களில் பதிக்கப்பட்டன. பிள்ளைகள் உண்மையானவைகளையும், நம்மையானவைகளையும், அழகானவைகளையும் குறித்து தெரிந்து கொண்டார்கள்.

படங்களின் வழியாகவும் அடையாளங்களின் வழியாகவும் பாடங்கள் சொல்லித்தரப்பட்டன. இப்படிக் கற்றுக்கொடுக்கப்பட்டவைகள் பிள்ளைகளின் நினைவுகளில் மறையாமல் நின்றன. இந்தப் பாட முறை கல்வியி

னால், பிள்ளையானவன் தன் குழந்தை பருவத்திலிருந்தே முற்பிதாக்களின் இரகசியங்களிலும், விசுவாசத்திலும், ஞானத்திலும் நிலைநிறுத்தப்பட்டான். பார்க்கமுடியாத நித்தியத்தின் காரியங்களையும் சிந்திக்க குழந்தைகளும் வழிநடத்தப்பட்டன. எண்ணங்கள் பார்க்கக்கூடிய அநித்தியமான உலக காரியங்களுக்கு மேல் உயர்ந்தன. ***Fundamentals of Christian Education, p. 95.***

**பள்ளிக்கூடப் படிப்பிற்கு முன்பாகவும், பள்ளிக்கு செல்வதற்கான ஆயத்தமாகவும் இருக்கிறது**

பள்ளிகளின் ஆசிரியர்களது வேலைக்கு முன்பாகவே பெற்றோரின் வேலை துவங்குகிறது. இல்லம் முதல் பள்ளியாக திகழ்கிறது. இதை முதல் வகுப்பிற்கு ஒப்பிடலாம். இந்த முதற் வகுப்பின் ஆசிரியர்களான பெற்றோர்கள் கவனத்துடனும் ஜெபத்துடனும் தங்கள் கடமையை செய்ய பிரயாசப்பட வேண்டும். இதை அவர்கள் செய்யும் பொழுது பிள்ளைகள் அடுத்த வகுப்பிற்கு செல்வதற்கு ஆயத்தப்படுத்துகிறார்கள். பள்ளிக்கு செல்ல தேவையான தகுதியை பெறுகிறார்கள். அங்கு ஆசிரியரிடமிருந்து கற்றுக்கொள்ளுகிறார்கள். ***Review And Herald, June 13, 1882.***

**குணத்தை வடிவமைக்கிறது**

வீட்டில் கற்கும் கல்வியினால், ஒரு அழகான அரண்மனையைப் போன்ற அழகான குணத்தை பிள்ளைகள் பெறுகிறார்கள். ***Manuscript 136, 1898.***

**நாசரேத் இல்லத்தில் கல்வி**

இயேசு அவருடைய கல்வியை தன் இல்லத்தில்தான் பெற்றார். அவரின் தாயே அவரது முதல் ஆசிரியராக இருந்தார். மரியாளின் வாயிலிருந்தும், வேத தீர்க்கதரிசிகளின் எழுத்துக்களிலிருந்தும் அவர் பரலோக காரியங்களை கற்றார். ஒரு ஏழை தொழிலாளியின் வீட்டில் வாழ்ந்தார். உண்மையுடனும், உத்தமத்துடனும், அதே சமயத்தில் மன இரம்மியத்துடனும் வீட்டில் தன் கடமைகளை செய்தார். பரலோகத்தின் அதிபதியாக இருந்தவர், ஒரு வேலைக்காரனாக, கீழ்ப்படியும் அன்பு மகனாக வாழ்ந்தார். ஒரு தொழிலைக் கற்றுக்கொண்டார். யோசேப்புடன் ஆசாரியின் கடையில் தன் சொந்த கரங்களால் வேலை செய்தார். ***Ministry of Healing, p. 399.***



1ST Proof

அதிகாரம் - 2

## முதல் ஆசிரியர்கள்

**பெற்றோர்கள் தங்கள் பொறுப்பை புரிந்து கொள்ளுதல்**

தகப்பனும் தாயும் தங்கள் பிள்ளைகளின் முதல் ஆசிரியர்களாக இருக்க வேண்டும். ***Manuscript 67, 1903.***

பெற்றோர்கள் தங்கள் பொறுப்பை புரிந்து கொள்ள வேண்டும். இளம் வயதினருக்கு உலகம் ஒரு பெரிய கன்னியாக இருக்கிறது. சுயநலமான வாழ்க்கை வாழவும், உலக சிற்றின்பங்களை அனுபவிக்கவும் மக்கள் கவரப்படுகின்றனர். சந்தோஷத்தை தரும் என்று நினைத்து அநேகர் இந்த வழியை பின்பற்றுகின்றனர். மறைந்திருக்கும் ஆபத்துக்களையும் இந்த பாதையின் முடிவையும் அவர்கள் கண்டுகொள்ளுவதில்லை. தகாத ஆசைகளினாலும் இச்சைகளினாலும் சரீரத்தின் சக்தி வீணடிக்கப்படுகிறது. கோடிக்கணக்கானோர் இம்மைக்கும் மறுமைக்கும் பயனற்றவர்களாக சீர்குலைந்து போகிறார்கள். பிள்ளைகளுக்கு இந்த சோதனைகள் வரும் என்பதை பெற்றோர்கள் தங்கள் நினைவில் கொள்ள வேண்டும். குழந்தையின் பிறப்பிற்கு முன்பாகவே தீமையை வெற்றிகரமாக மேற்கொள்ளுவதற்கான ஆயத்தம் துவங்க வேண்டும். ***Ministry of Healing, p. 371.***

ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கும்பொழுது பெற்றோர்களுக்கு தெய்வீக ஞானம் தேவைப்படுகிறது. இந்த ஞானத்தை அவர்கள் பெற வேண்டும். அப்பொழுதுதான் உபயோகமான சந்தோஷமான ஒரு வாழ்க்கையை வாழ்வது எப்படி என்பதை, சிறந்த முறையில் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்க முடியும். உயர்ந்த சேவைக்கும் நித்தியத்தின் சந்தோஷத்திற்கும் பிள்ளைகள் வழிநடத்தப்படுவார்கள். ***Review And Hearld , Sep. 13, 1881.***

**பிள்ளையை பயிற்றுவித்தல் தேவதிட்டத்தில் ஒரு முக்கிய பங்கு**

கிறிஸ்தவத்தின் வல்லமை உலகத்திற்கு சாட்சியாக காட்டப்பட வேண்டும். இதற்கு பிள்ளைகளின் பயிற்சி தேவ திட்டத்தில் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. பிள்ளைகள் வளர்ந்து உலகத்திற்குள் செல்லும்பொழுது தாங்கள் தொடர்பு கொள்ளுபவர்களுக்கு நன்மையை செய்து தீமையை செய்யாமல் இருக்க வேண்டும். பிள்ளைகள் இப்படி இருக்கும்படியாக அவர்களுக்கு பயிற்சி கொடுக்கும் உன்னத பொறுப்பு பெற்றோர்க்கு கொடுக்கப்படுகிறது. ***Signs of the Times, Sep. 25, 1901.***

பிள்ளைகளை பயிற்றுவிக்கும் வேலையை பெற்றோர்கள் எளிதானதாக நினைத்து விடக்கூடாது. அதை அசட்டை செய்துவிடவும் கூடாது. நமது சரீரங்கள் சீராக செயல்பட பின்பற்றப்பட வேண்டிய ஆரோக்கிய விதிகளை கவனமாக படிக்க வேண்டும். இதற்கென்று அவர்கள் அதிக நேரம் செலவழிக்க வேண்டும். பிள்ளைகளை சரியான முறையில் கையாளும் அறிவை பெறுவதே பெற்றோர்களின் முதல் இலக்காக இருக்க வேண்டும். இதை செய்து தங்கள் பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான சரீரங்களில் ஆரோக்கியமான தெளிந்த புத்தியை பெற்றுக்கொள்ள செய்வர்.

கிறிஸ்துவின் பின்னடியார்களாக தங்களை கூறிக்கொள்ளும் அநேகர் குடும்ப கடமைகளில் தவறுகிறார்கள். இது பரிதாபத்திற்குரியது. தேவன் அவர்களது கைகளில் கொடுத்திருக்கும் உன்னத பொறுப்பை அவர்கள் உணருவதில்லை. வாலிபர்களை தாக்கும் சோதனைகளை ஜெயிக்கத் தேவையான ஒழுக்கத்தை பெலமாகப் பெரும் குணங்களை இவர்களது பிள்ளைகளில் உருவாக்க தவறுகிறார்கள். ***Pacific Health Journal, April 1890.***

**தேவனோடு ஒத்துழைப்பதின் அவசியம்**

கிறிஸ்துவானவர் தன் சீடர்களை உலகத்திலிருந்து எடுத்துவிடும்படி பிதாவிடம் ஜெபிக்கவில்லை. மாறாக உலகத்திலிருக்கும் தீமையிலிருந்து அவர்களை காக்கும்படி ஜெபித்தார். தாங்கள் சந்திக்கும் சோதனைகளில் விழுந்துவிடாதபடி ஜெபித்தார். இந்த ஜெபத்தையே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக ஏறெடுக்க வேண்டும். ஆயினும் தேவனிடம் இதற்காக மன்றாடி, பின் தங்கள் பிள்ளைகளை அவர்கள் விருப்பம் போல செய்ய விட்டுவிடலாமா? பெற்றோர்கள் தேவனோடு ஒத்துழைக்க



1ST Proof

வேண்டும். இல்லையெனில் தேவனால் பிள்ளைகளை தீமையிலிருந்து காக்க முடியாது. தைரியத்துடனும் சந்தோஷத்துடனும் அவர்கள் வேலையை துவங்க வேண்டும். விடாமுயற்சியுடன் அதை தொடர வேண்டும். ***Review And Herald, July 9, 1901.***

பெற்றோர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற இந்த பாரத்திலிருந்து ஒரு வினாடிக்கூட விடுவிக்கப்படுவதில்லை என்று உணர வேண்டும். தேவனுக்கேற்ற ஒரு கல்வியையும் பயிற்சியையும் பிள்ளைகளுக்கு அளிக்க வேண்டும். இதை விசுவாசத்துடன் செய்து தேவனோடு ஒத்துழைக்க வேண்டும். ஊக்கமான ஜெபமும் சரியான செயல்பாடுமே இந்த ஒத்துழைப்பாகும். இதை செய்தால் வெற்றிகரமாக பிள்ளைகளை இரட்சகரிடம் கொண்டு வரலாம். ***Signs of the Times, April 9, 1896.***

**பொறுப்புக்களை நிறைவேற்றின ஒரு குடும்பம்**

தங்கள் பிள்ளையை எவ்வாறு பயிற்றுவித்து வழிநடத்த வேண்டும் என்பதை தெரிவிக்க பரலோகத்திலிருந்து ஒரு தூதன் அனுப்பப்பட்டான். தேவனோடு அவர்கள் இசைவாக செயல்பட்டு இயேசுவின் வருகையை அறிவிக்கும் ஒரு மனித தூதனை அவர்கள் ஆயத்தப்படுத்தினார்கள். பெற்றோர்களாக தேவனோடு உத்தமமாக அவர்கள் ஒத்துழைக்க வேண்டியிருந்தது. தேவன் யோவானுக்கு கொடுத்திருந்த வேலையை செய்ய, அவரது குணத்தை உருவாக்குவதே அவர்களது ஒத்துழைப்பாக இருந்தது.

யோவான் அவர்களுக்கு வயோதிபத்தில் பிறந்த மகன். அவர் ஓர் அற்புத குழந்தை. தேவனுடைய ஒரு விசேஷ வேலையை செய்ய வந்த குழந்தை என்பதால் தேவனே குழந்தையை பார்த்துக்கொள்ளுவார் என்று அவர்கள் முடிவெடுத்திருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படி ஒரு முடிவிற்கு வரவில்லை. அமைதியான ஒரு கிராமப்புறத்திற்கு இடம் பெயர்ந்தார்கள். இங்கு தங்கள் மகன் நகரங்களில் சந்திக்கப்படும் சோதனைகளிலிருந்து காக்கப்படுவான். அத்துடன் தன் பெற்றோர்களின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் ஒரு சூழலையும் இது அமைத்தது. பிள்ளையிடம் இருக்க வேண்டிய குணாதிசியங்களை வளர்க்க தங்களுடைய பங்கை செய்தார்கள். தேவன் யோவானுக்கு வைத்திருந்த திட்டத்திற்கு இது ஏதுவாக அமைந்தது. பயபக்தியுடன் தங்கள் பொறுப்பை நிறைவேற்றினார்கள். ***Signs of the Times, April 16, 1896.***

**பிள்ளைகள் நமக்கு அருளப்பட்ட பெரிய பொறுப்பாக பார்க்க வேண்டும்**

தேவன் தங்களுக்கு கொடுத்திருக்கிற பெரிய பொறுப்பாக பிள்ளை களை பெற்றோர் பாவிக்க வேண்டும். தேவனுடைய பெரிய நம்பிக்கைக் குரிய பாத்திரவான்களாக இந்த வேலை பெற்றோருக்கு கொடுக்கப்பட்டி ருக்கிறது. பரலோக குடும்பத்தின் அங்கத்தினர்களாக வாழ, பிள்ளைக ளுக்கு பாடங்கள் கற்றுக்கொடுக்கப்பட வேண்டியுள்ளது. தேவ பயத்திலும் தேவ அன்பிலும் நிலைபெறும்படியாக பயிற்சி அளிக்கப்படட்டும். தேவ னுக்கு பயந்து நடப்பதே ஞானத்தின் ஆரம்பம். ***Signs of the Times, April 16, 1896.***

தேவனுக்கு உண்மையாக இருப்பவர்கள் தங்கள் குடும்ப வாழ் வில் அதை பிரதிபலிப்பார்கள். தங்கள் பிள்ளைகளை சரியாக வழிநடத் தும் பொறுப்பை, தேவன் கொடுத்திருக்கிற ஒரு புனிதமான வேலையாக பாவிப்பார்கள். ***Manuscript 103, 1902.***

**பெற்றோர்கள் ஆசிரியர்களாக தகுதி பெற வேண்டும்**

பெற்றோர்களின் இந்த பணி ஆழ்ந்த அர்த்தத்தை உடையது. புல காரியங்களை உள்ளடக்கியதாக உள்ளது. ஆயினும் இவ்வேலை அசட்டை செய்யப்பட்டிருக்கிறது. பெற்றோர்களே உங்கள் ஆவிக்குரிய தூக்கத்திலிருந்து எழும்புங்கள். குழந்தைக்கு கொடுக்கப்பட வேண்டிய முதல் பாடம் உங்களால் கொடுக்கப்பட வேண்டும் என்பதை புரிந்து கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகள் கிறிஸ்துவை அறிந்துகொள்ள கற்றுக்கொடுங்கள். சாத்தான் அவனுடைய விதையை அவர்களது இதயத் தில் விதைப்பதற்கு முன்பாக இதை நீங்கள் செய்ய வேண்டும். கிறிஸ்து பிள்ளைகளை அழைக்கிறார். கிறிஸ்துவிடம் அவர்கள் கொண்டு செல்லப் பட வேண்டும். ஒழுக்கமான, சுத்தமான, பயன் நிறைந்த, பழக்கங்கள் அவர்களுக்கு சொல்லித்தரப்பட்டிருக்க வேண்டும். இந்த ஒழுங்கையே அவர்கள் பெற வேண்டும் என்று கிறிஸ்து விரும்புகிறார். ***Review and Hearld Oct 9, 1900.***

ஞானமான, பாதுகாப்பான கிறிஸ்தவ ஆசிரியர்களாக பெற்றோர் கள் தகுதியடைய வேண்டியுள்ளது. இது நடக்காமற்போனால் வாசல் அருகே பாவம் வந்து தங்கிவிடும்.



1ST Proof

**பெற்றோர்களிடையே ஒற்றுமை அவசியம்**

இல்லம் பிள்ளைகளுக்கு கல்வி கற்கும் ஒரு பள்ளியாக அமைய வேண்டும். இது நடப்பதற்கு பெற்றோரிடையே ஒற்றுமை நிலவ வேண்டும். இளகிய மனதுடனும், கவனத்துடனும் வார்த்தைகள் பேசப்பட வேண்டும். இதை செய்ய தவறும்பொழுது சாத்தான் அவனுடைய சோதனைகளை திறந்து விடுவான். பின் அவன் வெற்றி மேல் வெற்றியை பெற்றுவிடுவான். பெற்றோர்கள் ஒருவரோடு ஒருவர் அன்பாகவும் தயவாகவும் நடந்து கொள்ள வேண்டும். ஒருவரை மற்றொருவர் மதிக்கும்படியாக நடவடிக்கைகள் இருக்க வேண்டும். வீட்டின் சூழ்நிலை விரும்பக்கூடிய வகையில் இருக்க ஒருவருக்கொருவர் உதவ வேண்டும். பிள்ளைகளுக்கு முன்னால் தங்களி டையே எழும்பும் வேற்றுமைகள் காட்டப்படக்கூடாது. கிறிஸ்தவ நடத்தை எப்பொழுதும் பாதுகாக்கப்பட வேண்டும். ***Letter 272, 1903.***

**ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைத்துள்ள பிரத்தியேக வழிகாட்டி**

பிள்ளைகளை பயிற்றுவிப்பதில் தாய்மார்கள் முதன்மை வகிக்க வேண்டும். முக்கியமான, ஒதுக்க முடியாத, பொறுப்புகள் தந்தைக்கும் இருக்கிறது. ஆயினும் பிள்ளைகளின் குழந்தை பருவத்தில் தாய்மார்களே எப்பொழுதும் அவர்களுடன் இருக்கிறார்கள். பிள்ளைகளின் நண்பனாகவும் விசேஷமாக கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டியாகவும் தாய் இருக்கிறாள். ***Pacific Health Tournal, Jan 1890.***

**வெரும் சட்டங்கள் அல்ல, விரிவான ஒரு கல்வி**

பெற்றோர்கள் தேவனுடைய குரலுக்கு அப்படியே கீழ்ப்படியும் பாடத் தைக் கற்றுக்கொள்ள வேண்டும். தேவன் அவருடைய தேவ வார்த்தையி லிருந்து நம்மோடு பேசுகிறார். பெற்றோர்கள் இந்த பாடத்தை கற்றுக் கொண்டால் அதையே பிள்ளைகளுக்கும் அவர்கள் கற்றுத்தர முடியும். வீட்டில் தொடர்ந்து நடக்க வேண்டிய வேலை இதை செய்பவர்கள் தாங்களும் உயர்ந்து பிள்ளைகளையும் உயர்த்த வேண்டும் என்பதை அறிவார்கள். கோட்பாடுகளை மட்டும் சொல்லிக்கொடுக்கும் கல்வி அல்ல இது. ***Manuscript 84, 1897.***

**ஒழுங்கில்லாத வேலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது**

இல்லத்தில் ஒழுங்கின்மை நியாயத்தீர்ப்பில் ஏற்றுக்கொள்ளப்பட

மாட்டாது. விசுவாசமும் அதற்கேற்ற கிரியைகளும் கிறிஸ்தவ பெற்றோர்களிடம் காணப்பட வேண்டும். ஆபிரகாம் தன் வீட்டை நடத்தின வகையில் அவர்களும் தங்கள் இல்லத்தை நடத்த வேண்டும். ஒவ்வொரு பெற்றோருக்கும் ஒரு உன்னத தரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ***"கடவுளுடைய வழியை அவர்கள் கைக்கொள்ள வேண்டும். வேறெந்த வழியும் தேவனுடைய நகரத்திற்கு அழைத்துச் செல்லாது, அழிவிற்கே வழி நடத்தும்."* Review and Herald, Mar 30 1897.**

**பெற்றோர்கள் தங்கள் வேலையை மறுஆய்வு செய்ய வேண்டும்**

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கொடுத்திருக்கிற கல்வியையும் பயிற்சியையும் மறு ஆய்வு செய்வார்களா? தேவ விசுவாசத்தினால் நம்பிக்கையோடு தங்கள் வேலையை சரிவர செய்திருக்கிறார்களா என்று பெற்றோர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். அவர்களுடைய வேலையினால் பிள்ளைகள் கர்த்தரின் நாளில் ஒரு கிரீடமாக இருப்பார்களா என்று யோசிக்க வேண்டும். இயேசுவானவர் உங்கள் கிரியைகளை பார்த்து அதை பரிசுத்தப்படுத்த ஆவியானவரை பொழியும்படி அவைகள் உள்ளனவா? பிள்ளைகளின் நன்மைக்கென்று நீங்கள் எடுத்த முயற்சிகள் இயேசுவின் ஆய்வுக்க முன்பாக நிற்குமா? பெற்றோர்களே இவ்வுலகிற்கும் வரவிருக்கும் மகிமைக்கும் மிகவும் பயனள்ள வகையில் உங்கள் பிள்ளைகளை வாழ வைக்கக்கூடிய வேலை உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ***Good Health Jan 1880.***

***அதிகாரம் - 3***

***பிள்ளையின் பயிற்சி எப்பொழுது துவங்க வேண்டும்***

***கல்வி கைக்குழந்தையிடமிருந்து துவங்குகிறது***

கல்வி என்ற வார்த்தைக்கு ஆழமான பொருள் இருக்கிறது. பல்கலைக் கழகத்தில் ஒரு படிப்பை எடுத்து முடிப்பது அல்ல கல்வி. கல்வியானது தாயின் மடியில் இருக்கும் கைக்குழந்தையிடமிருந்து துவங்குகிறது. ஒரு தாய் தன் குழந்தையின் குணத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும்பொழுதே அவள் கல்வியை கொடுக்க ஆரம்பித்துவிட்டாள். ***Good Health Jan 1880.***



1ST Proof

பெற்றோர்கள் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புகின்றனர். இதை செய்வதினால் பிள்ளைக்குத் தேவையான கல்வியை கொடுத்துவிட்டதா நினைக்கின்றனர். அநேகர் உணருவதைவிட கல்வி விரிவானதாக இருக்கிறது. கைக்குழந்தையின் நிலையிலிருந்து ஒரு நபராக வளரும் வரைக்கும் எந்த முறையில் அக்குழந்தை பயிற்றுவிக்கப்பட்டதோ அதுவே அதனுடைய கல்வியாகிறது. ஒரு யோவனையை சிந்திக்கும் அளவிற்கு ஒரு குழந்தை வளர்ந்தவுடனே அதன் கல்வி துவங்க வேண்டும். ***Review and Hearld June 27, 1899.***

***மனம் ஏதுவா இருக்கும்பொழுது ஆரம்பியுங்கள்***

பிள்ளையின் குழந்தை பருவத்திலிருந்தே அதற்கு கொடுக்கப்பட வேண்டிய கல்வியும் பயிற்சியும் துவங்கப்பட வேண்டும். குழந்தைப் பருவத்தில் எந்த தாக்கத்தையயும் உடனே ஏற்றுக்கொள்ளும்படி மனம் இருக்கும். கல்வியை துவங்குவதற்கும் இதுவே ஏதுவான சமயமாக இருக்கிறது. அப்பொழுது கற்றுக்கொடுக்கப்படும் பாடங்களும் நினைவிலிருந்து மறையாது. ***Letter 1 1877.***

நல்ல பள்ளியாக விளங்கும் இல்லத்தில் தொட்டிலிலிருந்து, வயது வரும் வரை பிள்ளைகள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். எந்த ஒரு நல்ல கல்வி ஸ்தாபனத்திலும் ஆசிரியர்கள் தங்கள் அறிவை வளர்த்துக்கொள்ளுவதை நாம் அறிவோம். இல்லப் பள்ளியின் முதன்மையான ஆசிரியரான தாயும் வாழ்க்கையின் முக்கிய பாடங்களை கற்க வேண்டும். ***Pacific Health Journal. May, 1890.***

சுரியான வார்த்தைகளை பேசுவது பெற்றோரின் கடமை. ஒவ்வொரு நாளும் பெற்றோரும் கிறிஸ்துவின் பள்ளியிலிருந்து பாடங்களை படிக்க வேண்டும். அவர் அவர்கள் மீது அன்பு செலுத்துகிறவராக இருக்கிறார். பின் தேவனுடைய நித்திய அன்பைப் பற்றிய பாடங்கள் பிள்ளைகளுக்கும் இல்லத்தில் கற்றுக்கொடுக்கப்பட்டடும். பகுத்தறிவு முழுமையாக வளருவதற்கு முன்பாகவே சரியான ஆவியை பெற்றோரிடமிருந்து பிள்ளைகள் பெற்றுக்கொள்ளலாம்.

***ஆரம்ப பயிற்சி பற்றி அதிகமாக படியுங்கள்.***

பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய ஆரம்ப பயிற்சியைக் குறித்து எல்லோரும் கவனமாகப் படித்துக் கொள்ள வேண்டும். வருமானத்திற்கென்று நாம் செய்யும் தொழிலைவிட இது முக்கியமானது. பிள்ளைகளினுடைய இரட்சிப்பு இதை சார்ந்தே அமையும். குழந்தைகளாக இருந்த பொழுது, அவர்களுக்கு கிடைத்த பயிற்சி அவர்கள் இரட்சிக்கப்படுவார்களா இல்லையா என்பதை தீர்மானிக்கும். பெற்றோரும், பிள்ளைகளை வளர்ப்போரும் தங்கள் இதயத்திலும் வாழ்க்கையிலும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். தாய் தந்தையராக முதலில் நாம் நம்மை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். அப்பொழுது நம்மால் இல்லத்தின் ஆசிரியர்களாக பிள்ளைகளுக்கு சரியான பயிற்சியை கொடுக்க முடியும். முடிவில்லா வாழ்க்கையை அவர்கள் சுதந்தரித்துக் கொள்ள அவர்களை ஆயத்தப்படுத்துவோம். ***Review and Herald, Sep. 8, 1904.***

***சரியாக துவங்குங்கள்***

உங்கள் பிள்ளைகள் தேவனுடைய சொத்தாக இருக்கிறார்கள். இயேசுவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டவர்கள். உன்னிப்புடன் செயல்படுங்கள். கிறிஸ்து நடப்பதைப்போன்று பிள்ளைகளிடம் நடந்து கொள்ளுங்கள். ***Manuscript 126, 1897.***

வாலிபர்களுக்கு அதிக கவனத்துடனும், முறையாகவும் பயிற்சி கொடுக்க வேண்டும். சிறு பிராயத்தில் அவர்கள் கற்றுக்கொள்ளும் தவறான பழக்கங்களை தங்கள் வாழ்க்கை முழுவதிலும் கைக்கொள்ளுகிறார்கள். சரியாக இப்பயிற்சியை துவங்கும் முக்கியத்துவத்தை நாம் பார்க்க தேவன் நம்கு உதவட்டும். ***The Gospel Herald Dec. 24, 1902.***

***முதல் குழந்தைக்கு கொடுக்கும் பயிற்சியின் முக்கியத்துவம்.***

முதல் குழந்தையை அதிக அக்கரையுடன் பயிற்றுவிக்க வேண்டும். அந்த குழந்தை பின் வரும் குழந்தைகளுக்கு அதே பயிற்சியை கொடுக்கும். தங்களை சுற்றி இருப்பவர்களின் தாக்கத்திற்கேற்ப பிள்ளைகள் வளருகிறார்கள். முரட்டுத்தனமாகவும் அதிக சத்தத்துடனும் கையாளப்பட்டாள் அதே குணங்கள் அவர்களிலும்



1ST Proof

வந்துவிடும். அப்பிள்ளைகள் பொருத்துக் கொள்ள முடியாத அளவிற்கும் செயல்படுவார்கள். ***Manuscript 64, 1899.***

***ஒரு செடியைப்போல பிள்ளை***

விதையிலிருந்து செடி வளருவது ஒரு குழந்தை வளருவதைப்போல் இருக்கிறது. **“முன்பு முளையையும் பின்பு கதிரையும் கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய்க் கொடுக்கும்” மாற்கு 4:28.** இந்த உவமையை சொன்னவரே சிறு விதையையும் சிருஷ்டித்தார். அதன் தன்மையையும் அது வளருவதற்கான சட்டங்களையும் நிர்ணயித்தார். இந்த உவமையில் சொல்லப்பட்ட சத்தியங்கள் அவர் வாழ்க்கையிலும் நிறைவேறின. பரலோகின் தேவன், மகிமையின் இராஜா பெத்லகேமில் குழந்தையாக பிறந்தார். வளரும் வரை ஒன்றும் செய்ய இயலாத குழந்தையாகவே அவரும் இருந்தார். தன் தாயையே சார்ந்து இருந்தார். சிறுவயதிலும் ஒரு பிள்ளையைப் போலவே நடந்து கொண்டார். தனது பெற்றோர்களை மதித்து அவர்களது விருப்பங்களை நிறைவேற்றினார். ஆயினும் தன்னுடைய அறிவை பயன்படுத்த துவங்கின காலத்திலிருந்து சத்தியத்தை அற்ந்துகொள்ளுவதிலும் கிருபையிலும் தொடர்ந்து வளர்ந்தார். **Education, p.106, 107.**

**பாகம் - II**

**முறைகளும் பாடப்புத்தகங்களும்.**

**அதிகாரம் - 4**

**சொல்லிக்கொடுக்கும் முறைகள்**

**குடும்ப நிர்வாகம் குறித்துப் படித்துக்கொள்ள வேண்டும்**

பெற்றோரின் வேலை செய்யப்பட வேண்டிய விதத்தில் செய்யப்படுவதில்லை. பெற்றோர்களே உங்கள் குடும்பத்தை எப்படி நடத்த வேண்டும் என்பதைப் பற்றி படித்து வைத்திருக்கிறீர்களா? பிள்ளைகளின் விருப்பங்களையும் உணர்ச்சிகளையும் சரியாக வழிநடத்த வேண்டும். படரும் செடியானது பெரிய மரத்தை இறுக்க சுற்றிவிடுகிறது. இதைப்போல உங்கள் பிள்ளைகள் தேவனை இறுக்கி சுற்றிக்கொள்ள

சொல்லிக்கொடுங்கள். "இதை செய்யுங்கள், அதை செய்யுங்கள்" என்று சொல்லுவதுமட்டும் போதாது. நாம் சொன்னதை நாமே மறந்துவிடாமல் பிள்ளைகள் அதை செய்கிறார்களா என்றும் கவனிக்க வேண்டும். இல்லையெனில் நாம் சொன்னதை செய்ய பிள்ளைகள் தவறுவார்கள். மகிழ்ச்சியுடன் உங்கள் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வழியை ஆயத்தப்படுத்துங்கள். இயேசுவைப் பற்றிக்கொள்ளும்படி கற்றுக்கொடுங்கள். வாழ்க்கையின் சிறு காரியங்களிலும் இயேசுவின் உதவியை கேட்கும்படி சொல்லுங்கள். செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் செய்ய விழிப்புடன் இருக்கட்டும். வீட்டிற்கு உதவும் கரமாக செயல்படட்டும். நீங்கள் நல்லவைகளை அவர்களுக்கு கற்றுக்கொடுக்காவிட்டால் மற்றொருவன் தீயவைகளை கற்றுத்தந்துவிடுவான். கதிர்களின் இடையே களைகளை இதயத்தில் நட அவன் தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். ***Manuscript 5, 1896.***

***அமைதியுடனும் அன்புடனும் வேலையை எதிர்கொள்ளுங்கள்***

என் சகோதரியே தாயாகும் பொறுப்பை தேவன் உன்னை நம்பி கொடுத்திருக்கிறாரா? உன் சிறு பிள்ளைகளுக்கு சரியானதை சொல்லிக்கொடுக்கும் முறைகளையும் அவைகளை செய்யும் அறிவையும் நீ பெற வேண்டும். பிள்ளைகள் தேவனின் வழியை கைக்கொள்ள வேண்டும். ஆத்துமாவும், மனமும் தேவனை நோக்கி தொடர்ந்து உயர்ந்து கொண்டிருக்க நாட வேண்டும். இதை செய்யும்பொழுது குழந்தையை பயிற்றுவிக்கும் வேலையில் ஒரு அமைதியான ஆவியையும் அன்பான இதயத்தையும் பெற்றுக்கொள்ளலாம். பிள்ளைகள் உங்கள் வழியாக நன்மையான இலக்குகளைப் பெறுவார்கள். பரிசுத்தமானவைகளின் மேலும் உத்தமமானவைகளின் மேலும் அன்பு செலுத்துவார்கள். தேவனுடைய ஒரு பிள்ளையாக நீங்கள் கிறிஸ்துவின் பள்ளியில் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் பெலன்களை அதிகரித்துக்கொள்ள நாடுங்கள். வீட்டில் முழுமையான குறையில்லாத ஒரு வேலையை செய்வீர்கள். வார்த்தையினாலும் செயலினாலும் ஒரு முன் உதாரணமாக திகழ்வீர்கள். ***Review and Hearld Sep. 15, 1891.***

***அமைதியான நடத்தையின் தாக்கம்***



1ST Proof

எந்த சூழ்நிலையிலும் மாறாத ஒரு அமைதியான நடத்தையின் தாக்கத்தை வெகு சிலரே புரிந்துகொள்ளுகிறார்கள். கைக்குழந்தையின் மீதும் இது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். பொருமையில்லாமல் அடிக்கடி முகங்கோணும் தாய் அதே குணத்தை தன் பிள்ளைகளுக்கும் கொடுத்துவிடுவாள். முன்கோபிகளாகவும் எப்பொழுதும் சிடுசிடுவென்றும் குழந்தைகள் வளருவார்கள். குழந்தைகள் மென்மையாக கையாளப்படும் பொழுது பிள்ளைகளும் அதே குணத்தை பெறுவார்கள். ***Pacific Health Journal Jan. 1890.***

***புத்தகங்களில் சொல்லப்பட்டவை சோதிக்கப்பட வேண்டும்***

புத்தகங்களில் நாம் படிப்பவைகளை நடைமுறை வாழ்க்கையில் அப்பியாசிக்க வேண்டும். இதை செய்ய முடியாவிட்டால் அப்புத்தகங்களை படிப்பதில் பயன் இல்லை. மற்றவர்கள் நமக்கு கொடுக்கும் விலைமதிப்பற்ற ஆலோசனைகளும், அறிவுரைகளும் நம்மால் முதலில் நன்கு ஆராயப்பட வேண்டும். அதைக் குறித்து சிந்தித்து அது சரிதானா என்று நாம் பகுத்தறிய வேண்டும். பின்பே அவ்வறிவுரைகளை பின்பற்ற வேண்டும். எல்லா அறிவுரைகளும் எல்லா தாய்மார்களுக்கும் எல்லா சூழ்நிலைகளுக்கும் பொருத்தமானதாக இருக்காது. தாய்மார்கள் மற்றவர்களின் அனுபவங்களிலிருந்து பாடங்களை கற்றுக்கொள்ளட்டும். மற்றவர்களின் அணுகுமுறைக்கும் தனது அணுகுமுறைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ளட்டும். பின்பே உண்மையான மதிப்புள்ளவைகளை பரிசோதித்து புரிந்துகொள்ள முடியும். ***Signs of the Times, Feb. 9, 1882.***

***முற்காலங்களில் கைக்கொள்ளப்பட்ட முறைகள்.***

ஆரம்பக் காலத்திலிருந்தே இஸ்ரவேலர்கள் கல்விக்கு அதிக கவனத்தை செலுத்தியிருந்தனர். குழந்தைப் பருவத்திலிருந்தே தேவனைப் பற்றியும் அவரது மகத்துவத்தைப் பற்றியும் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்று தேவன் அவர்களுக்கு கட்டளையிட்டிருந்தார். அவருடைய கட்டளைகளிலிருந்தும், இஸ்ரவேலரின் சரித்திரத்திலிருந்தும் பாடங்கள் எடுக்கப்பட்டு, அவரைப் பற்றி பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்று தேவன் சொல்லியிருந்தார். ஜெபத்தினாலும், பாடல்களினாலும், தேவ

வார்த்தைகளைக் கொண்டும் பிள்ளைகளுக்கேற்ப பாடங்கள் கற்றுக்கொடுக்கப்பட்டன. தேவனுடைய பிரமாணம் அவரது குணத்தின் வெளிப்பாடு என்பதையும் புரிய வைத்தார்கள். அந்த பிரமாணத்தை நாம் இதயத்திற்குள்ளாக ஏற்கும்பொழுது தேவ சாயல் நமக்குள் வருகிறது என்று பிள்ளைகளுக்கு அறிவுறுத்தினார்கள். ஆத்துமாவும் மனமும் தேவ சாயலை தரித்துக்கொள்ளுகிறது என்று உணர்த்தினார்கள். இல்லத்திலும், பள்ளியிலும் வாயின் வழியாகவே பெரும்பாலான பாடங்கள் சொல்லித்தரப்பட்டன. எழுதவைத்தோ, வேர் எந்த முறையைக் கொண்டோ பாடங்கள் நடத்தப்படவில்லை. ஆயினும் வாலிபர்கள் எபிரெய எழுத்துக்களை படிக்க கற்றுக்கொண்டார்கள். இதனால் பழைய ஏற்பாட்டின் தேவ வார்த்தைகளை தாங்களே படித்துக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. ***Fundamentals of Christian Education, பக்கம் 44***

### *தயவுடனும் கரிசனையுடனும் கற்றுக்கொடுங்கள்*

பிள்ளைகளுக்கு தயவு நிறைந்த அன்புடனும், கரிசனையுடனும் பாடங்களை சொல்லிக் கொடுக்க வேண்டிய கடமை பெற்றோர்களுக்கு இருக்கிறது. பெற்றோர்களாக குடும்பத்தின் நிர்வாகம் அவர்கள் கரங்களில் இருக்கிறது என்றும் பிள்ளைகளிடதில் இல்லை என்றும் காட்ட வேண்டும். கீழ்ப்படிதல் இன்றியமையாதனதென்றும் கற்றுத்தரப்பட வேண்டும். ***Letter 104, 1807.***

குறும்பு செய்யும் சுபாவம் பிள்ளைகளிடம் இயல்பாக இருக்கும். நல்லவற்றைக் கொண்டு அவர்களது மனம் ஆட்கொள்ளப்படட்டும். இல்லையெனில் சாத்தான் கூறுவதை கேட்டுவிடுவார்கள். பிள்ளைகளுக்கு சரியான விதிமுறைகள் வழிவகுக்கப்படட்டும். பாதுகாப்பான வழியில் அதினால் வழிநடத்தப்படுவார்கள். தீமையிலிருந்து காக்கப்படுவார்கள். பெற்றோரது அன்பினால் ஈர்க்கப்பட்டு நன்மை செய்வதில் உறுதிப்படுவார்கள்.

பெற்றோர்களே உங்களுக்கு ஒரு உன்னதமான பணி இருக்கிறது. உங்களது செயல்பாடுகளைச் சார்ந்து உங்கள் பிள்ளைகளின் இரட்சிப்பு இருக்கிறது. இக்கல்வியை எப்படி உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்போகிறீர்கள்? அவர்களை திட்டுவதினால்



1ST Proof

இது நடந்துவிடாது. பிள்ளைகளை திட்டுவது ஒரு நன்மையையும் கொடுக்காது. பிள்ளைகளின் திறன்களின் மீது முழு நம்பிக்கை கொண்டவர்கள்போல அவர்களிடம் பேசுங்கள். அன்புடனும், தயவுடனும், கரிசனையோடும், மனதுடன் அவர்களை கையாளுங்கள். அவர்களுக்கு தேவனின் சித்தம் என்ன என்பதை சொல்லுங்கள். உண்மையான கல்வியைப் பெற்றவர்களாக, சரியான பயிற்சி பெற்றவர்களாக, தேவனோடு சேர்ந்து அவர் வேலையை செய்வதே அவர்ளது அழைப்பு என்பதை புரியவையுங்கள். உங்கள் பங்கை நீங்கள் செய்யும்பொழுது, தேவன் அவருடைய பங்கை செய்வார் என்று முழுமையாக நம்பலாம். ***Manuscript 33, 1909.***

### *பிள்ளைகளுடன் கலந்து பேசுங்கள்*

ஒவ்வொரு தாயும் தன் பிள்ளைகளோடு கலந்து பேச வேண்டும். அவர்களது தவறுகளைப் பார்க்க வைத்து அவர்களை திருத்துங்கள். சரியானவற்றை பொருமையோடு சொல்லிக்கொடுங்கள். ***Testimonies for the Chruch Vol. 1 p. 390.***

### *பிள்ளைகளை அறிவுறுத்த பல முறைகளை கயையாளுங்கள்.*

வாலிபர்களுக்கு கொடுக்கப்படும் கல்வியில் அதிகமாக கவனம் செலுத்தப்பட வேண்டும். அவர்களை சீராக வழிநடத்தப் பல முறைகள் கையாளப்பட வேண்டும். அவர்களுடைய உயரிய பண்புகளைத் தட்டி எழுப்பும் வண்ணம் நாம் கொடுக்கும் கல்வி இருக்கட்டும். மனதின் தேவைகளை வெகு சிலரே அறிந்திருக்கிறார்கள். வளர்ந்து வரும் அவர்களது அறிவாற்றலையும், உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் அநேகர் சரியாக திசை திருப்புவது இல்லை. ***Counsels to Parents, Teachers and Students, p. 73.***

### *குழந்தையின் முதல் பாடங்கள் இயற்கையில் கற்றுத்தரப்படட்டும்.*

தாய்மார்களே உங்கள் குழந்தைகளை திறந்த வெளியில் விளையாடவிடுங்கள். பறவைகளின் பாடல்களை அவர்கள் கேட்கட்டும். தேவனுடைய அழகான சிருஷ்டிகளிலிருந்து தேவனுடைய அன்பை பற்றி கற்றுக்கொள்ளட்டும். இயற்கையின் புத்தகத்திலிருந்து எளிமையான பாடங்களை புகட்டுங்கள். தங்களை சுற்றி இருப்பவைகளை பார்த்து

அவர்களது அறிவு விரிவடையட்டும். இதற்குபின் புத்தகங்களிலிருந்தும் பாடங்கள் சேர்த்து கொள்ளப்படலாம். இப்படியாக சொல்லிக் கொடுக்கப்படும் பாடங்கள் என்றைக்கும் நினைவில் நிற்பவைகளாக இருக்கும். ***Counsels to Parents, Teachers and Students, p. 146.***

நிலத்தை பண்படுத்துவது பிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் நல்ல வேலையாகும். இது அவர்களை இயற்கையோடும் இயற்கையின் தேவனோடும் நேரடியாக தொடர்பு கொள்ள வைக்கிறது. இந்த நன்மையை நமது பிள்ளைகள் பெற வேண்டும். எனவே நமது பள்ளிகளுடன் பூந்தோட்டங்களும், விவசாய நிலங்களும் பள்ளியையொட்டி இருக்கட்டும்.

இத்தகைய சூழ்நிலையில் கொடுகப்படும் கல்வி தேவ வழிநடத்தலுக்கு ஏதுவானதாக இருக்கும். வாலிபர்களுக்கு நாம் பின்பற்ற வேண்டிய கல்வி முறையாக இதையே தேவன் கட்டளையிட்டிருக்கிறார்.

புத்தகங்களின் பாடங்கள் சில பிள்ளைளுக்கு கடினமானதாகவும் தங்களது முழு சக்தியையும் இழுத்துக்கொள்ளுவதைப்போல தெரியலாம். இதனால் பிள்ளைகளும் வாலிபர்களும் பதட்டம் அடைய வாய்ப்புள்ளது. இப்படிப்பட்டவர்களுக்கு இயற்கையில் கற்றுக்கொடுக்கப்படும் கல்வி விலைமதிப்பற்றது. இயற்கையின் படிப்பில் ஆரோக்கியமும் சந்தோஷமும் உள்ளது. இந்த வகையிலும் மனதில் பதியப்பட்ட பாடங்கள் நினைவிலிருந்து மறைவதில்லை. இயற்கைக்கு ஒவ்வொரு முறையும் வரும்பொழுது, அவர்களை சுற்றி இருக்கும் பொருட்கள் அவர்கள் படித்த பாடங்களை நினைவு படுத்துபவைகளாக இருக்கும்.

***பாடங்கள் சுருக்கமாகவும் ஆர்வத்தை தூண்டும்படியும் அமையட்டும்***

பெற்றோர்கள் தங்களுடைய பங்கை முழுமையாகச் செய்ய வேண்டும். பாடங்களை் தெளிவானவையாவும், கற்றுக்கொள்ள வேண்டியதை, துள்ளியமாகச் சொல்வதாக அமைக்கப்படட்டும். அப்பொழுது பாடங்கள் சுருக்கமாகவும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இருக்கும். புத்தகப்பாடத்தை சொல்லிக் கொடுப்பதுடன் நின்றுவிடாதபடி பெற்றோர்கள் ஒரு முன் உதாரணமாக இருப்பது அவசியம். இது நடந்தால் பெற்றோர்களுடன் தேவனும் இணைந்து அவர்களை திறம்



1ST Proof

படைத்த ஆசிரியர்களாக மாற்றுவார். ***Signs of the Times, Aug. 13, 1896.***

***சொல்வதை எளிமையாக சொல்லுங்கள். மீண்டும் மீண்டும் சொல்லுங்கள்.***

சொல்லப்பட வேண்டிய கருத்துக்கள் சுருக்கமாகவும் தேவையில்லாத விஷயங்களை தகர்த்ததாகவும் இருந்தால் பெரிய நன்மையைத் தரும். மிக நீளமான கருத்துக்களும் விமர்சனங்களும் இருக்கக் கூடாது. ஒரு வேளை நீளமாக கூறப்பட வேண்டிய பாடங்கள் வந்தாலும், அவைகளை சுருக்கமாக முடித்தலும், பின்பு அதை மீண்டும் மீண்டும் நினைவு கூறுங்கள். எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் சொல்லிவிடுவதைவிட, அவ்வப்பொழுது ஆர்வத்தைத் தூண்டக்கூடிய சில வார்த்தைகள், மிகவும் சிறந்ததாக இருக்கும். நீண்ட பேச்சுரைகள் குழந்தைகளின் சிறு மூளைகளின்மேல் பெரிய பாரத்தை வைப்பதாக இருக்கும். அதிகமான பேச்சு ஆவிக்குரிய காரியங்களையும்கூட அவர்கள் வெறுத்துவிடுமாறு செய்யும். ஆதிகமான உணவை உட்கொண்டால் வயிறு மந்தமாகி பசியில்லாத நிலை வந்துவிடும். இதைப்போலவே அதிகமான நீளமான பேச்சுறைகள் மூளையை மந்தப்படுத்தும். ***Testimonies to the Church Vol. 2 p. 420.***

***பிள்ளைகள் தனித்து சிந்திக்க ஊக்கப்படுத்துங்கள்***

பிள்ளைகளும் வாலிபர்களும் ஆசிரியர்களிடமிருந்தும், புத்தகங்களிடமிந்தும், தகவல்களை சேகரித்துக் கொள்ளுகிறார்கள். அத்தோடு தாங்களும் புது விஷயங்களை அறிந்து, உண்மையை கண்டறிய கற்றுக்கொள்ளட்டும். அழகான ஒரு திறந்த வெளியை அவர்கள் பார்க்கும்பொழுது, தேவன் ஏன் நிலங்களையும் காடுகளையும் இவ்வளவு அழகாக வடிவமைத்துள்ளார்? என்று கேளுங்கள். எல்லா செடி, கொடிகளுக்கும், மரங்களுக்கும் ஏன் தேவன் ஒரே நிறத்தைக் கொடுக்கவில்லை? அவர்கள் பூக்களைப் பார்க்கும் பொழுதும், சேகரிக்கும்பொழுதும் தேவன் எதற்காக இந்த அழகையும் மென்மையையும் ஏதேன் தோட்டததை ஞாபகப்படுத்தும்படியாக வடிவமைத்திருக்கிறார் என்றும் யோசிக்கட்டும். தேவன் நம்மீது எவ்வளவு அக்கரையுள்ளவராக இருக்கிறார் என்பதை இயற்கையிலிருந்து

பார்க்கட்டும். நம்முடைய தேவைகளுக்கும், சந்தோஷத்திற்காகவே எல்லாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளட்டும். ***Education, 119.***

***பிள்ளையின் செயல்பாடுகளை வழிநடத்தல்***

பிள்ளைகளின் செயல்களை பெற்றோர் கட்டுப்படுத்த வேண்டும் என்பது அல்ல. ஆயினும் அவர்களது ஆர்வங்களும் செய்கைகளும் சரியாக திசைதிருப்பப்பட வேண்டும். பிள்ளைகள் படரும் செடி கொடியைப் போன்றவர்கள். எதைப் பார்க்கிறார்களோ உடனே அதை பிடித்துக் கொள்ளுவார்கள். படரும் செடி எந்த கிளையையும் புதரையும் பற்றி வளருவதைப்போல் பிள்ளைகளும் இருப்பார்கள். சரியானவற்றை சார்ந்து வளர கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். பயனில்லாமல் தங்கள் பிரயாசங்களை வீணாக்கும் வாய்ப்புள்ளது. நோக்கமின்றி தங்கள் சக்திகளை செலவழிப்பார்கள். பிள்ளைகள் சரியாக வழிநடத்தப்பட வேண்டும். மனமும் சரீரமும் மேம்படும்படியாக அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட வேண்டும்.

***குழந்தை பருவத்திலிருந்தே உதவும்கரமாக இருக்க கற்றுக் கொடுங்கள்***

பயனள்ள ஒரு நபராகவும், உதவி செய்யும் ஒரு நபராகவும் இருக்க சிறுபிராயத்திலிருந்தே கற்றுக்கொடுக்கப்பட வேண்டியுள்ளது. சிறிது பெலனும் பகுத்தறிவும் வளர்ந்தவுடனே வீட்டில் செய்யவேண்டிய கடமைகளை கொடுத்துவிட வேண்டும். அவைகளை செய்ய வைக்க வேண்டும். தகப்பனுக்கும் தாய்க்கும் உதவ ஊக்கப்படுத்தப்படட்டும். தன் சுய நலத்தைவிட மற்றவர்களது நன்மையையும், நலனையும் முன்பாக வைத்து செயல்பட சொல்லித்தர வேண்டும். எப்பொழுதும் மற்றவர்க்கு உதவும் தருணத்தை எதிர்பார்த்திருக்கும் பிள்ளையாக இருத்தல் நலமானது. தன்னுடன் பிறந்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் உதவி செய்து, வயதானவர்களுக்கும், நோயாளிகளுக்கும், உதவி தேவைப்படுவோருக்கும் கரிசனையுடன் நன்மை செய்யட்டும். எந்த அளவிற்கு ஊழியத்தின் ஆவி வீட்டில் பரவியிருக்கறதோ அந்த அளவிற்கு பிள்ளைகளின் வார்ழ்க்கையிலும் அது காணப்படும். மற்றவர்களுடைய



1<sup></sup>

1ST Proof

சந்தோஷத்திற்காக சேவை செய்வதிலும், தற்தியாகம் செய்வதிலும் மகிழ்ச்சி அடைவார்கள். ***Ministry of Healing p. 401.***

பெற்றோர்களே உங்கள் குடும்பத்தில் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றுங்கள். இதை செய்வதின் மூலம் உங்கள் பிள்ளைகள் தேவசித்தத்தைச் செய்ய பெரிய உதவியாக இருப்பீர்கள். பிள்ளைகளுக்கு இரு ஒரு விலை மதிப்பற்ற அனுபவமாக இருக்கும். நங்களுடைய சந்தோஷத்தைப் பற்றி மட்டும் கவலைப்படாதபடி மற்றவர்களுடைய நலனைக்குறித்தும் சிந்திக்கும்படி இதுவழிநடத்தும். குடும்பவட்ட்திற்குள்ளாக அவர்களது பங்கை செய்ய கற்றுக் கொடுங்கள். ***Review and Herald, Nov. 17, 1896.***

சிறுகாரியங்களிலும் கவனமாயிருந்து நல்ல குணத்தை உருவாக்குங்கள். தொடர்ந்து இப்படிச் செய்யுங்கள்.

பெற்றோர்களே பிள்ளைகளை நீங்கள் வழிநடத்தும்பொழுது, இயற்கையில் தேவன் வைத்துள்ள பாடங்களை கற்றுக்கொள்ளுங்கள். அழகான இந்த பூ மலரும்படி தோட்டக்காரர் என்ன செய்திருப்பார் என்று உங்களை கேட்டுக் கொள்ளுங்கள். வன்முறையினாலோ, முரட்டுத்தனத்தினாலோ அந்த பூ மரலவில்லை என்று அவர் கூறுவார். அப்படி நடந்திருந்தால் செடி உடைந்திருக்கும். மென்மையாக, சிறு சிறு காரியங்களிலும், அதிக கவனம் செலுத்தியதால், அழகான பூ செடியில் மலர்ந்திருக்கிறது. தண்ணீர் முறையாக ஊற்றப்பட்டது, அதிக வெயிலிலிருந்து செடி பாதுகாக்கப்பட்டது, தகாத தாக்கங்கள் இல்லாதபடி பார்த்துக் கொள்ளப்பட்டது. இந்த முயற்சிகளின் பலனாகத் தேவன் செடியை வளரச் செய்து, அழகான பூக்கள் பூக்கும்படிச் செய்தார். உங்கள் பிள்ளைகளை நீங்கள் கையாளுவது, ஒரு தோட்டக்காரன் ஒரு பூச்செடியை கையாளுவதுபோல் இருக்க வேண்டும். மென்மையாக அவர்களை தொட்டும், அவர்களுக்காக நீங்கள் செய்யும் அன்பின் ஊழியத்தினாலும் அவர்களில் கிறிஸ்தவ குணங்களை உருவாக்குங்கள். கிறிஸ்துவின் குணத்தை அவர்கள் பின்பற்றட்டும். ***Desire of Ages p. 516.***

***சிறு காரியங்களிலும் கவனமாக இருங்கள்***

பிள்ளைகளின் வளர்ப்பில் ஒரு பெரிய தவறு காணப்படுகிறது. அவர்கள் எதைக் கேட்டாலும், கொடுத்துவிடுவதும் அதிகமாக செல்லம் கொடுப்பதும் தவறாகும். இதனால் அவர்கள் தன்னல பிரியர்களாகவும் திறன் அற்றவர்களாகவும் மாறிவிடுவர். வாழ்க்கையின் சிறிய வேலைகளைக்கூட அவர்களால் செய்யமுடியாத நிலை வந்துவிடும். முதிப்பில்லாததைப்போல் அவர்களுக்குத் தோன்றும் அனுதின கடமைகள் செய்யவைக்கப்படுவதில்லை. பிள்ளைகள் இதன் காரணமாக நல்ல குணத்தை பெறுவதில்லை.

சின்ன கடமைகளை சரியாக நிறைவேற்றாத எவரும் பெரிய வேலைகளைச் செய்ய தகுதியடைவதில்லை. மெதுவாக குணம் பிள்ளையினிடம் உருவாக்கப்படுகிறது. தனது பணியை நிறைவேற்ற ஆத்துமா பயிற்சி பெற்று ஆயத்தமாகுகிறது. ***Testimonies for the Church, Vol. 3, p. 46,47.***

***அதிக திறன் படைத்த குழந்தைகளுக்கு அதிக கவனம்***

தங்கள் இஷ்டம்போல் செல்லவும், வரவும், செயல்படவும், அவர்கள் தங்களுக்குரியவர்கள் அல்ல, தேவனுக்குரியவர்கள் என்பதை அவர்கள் மனதில் நாம் பதிக்க வேண்டும். விசேஷித்த தாலந்துகள் நிறைந்த குழந்தைகள் அதிக கவனத்துடன் பார்த்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த விசேஷ தாலந்துகளையும் திறன்களையும் அவர்கள் தவறாக பயன்படுத்தி ஆசீர்வாதத்தை சாபமாக மாற்றக்கூடாது. இது நடந்தால் வாழ்க்கையின் அலுவல்களுக்கு தகுதியற்றவர்களாக மாறிவிடுவர். மற்றவர்களுக்கு முன்பாக தங்களை உயர்ந்தவர்களாகக் காட்டவும், மாயையான இன்பங்களை நாடிச் செல்பவர்களாகவும் இருந்து, நித்தியத்திற்கு தகுதியில்லதவர்களாகிவிடுவர். ***Signs of the Times, Dec. 9, 1875.***

***தேவையில்லாத போலியான பாராட்டு இருக்கக்கூடாது.***

பிள்ளைகள் தங்களைக் குறித்து நினைத்து பெருமைப்படும்படியாக அவர்களை நாம் நடத்தக்கூடாது. அவர்களது கிரியைகளினாலே அவர்கள் சந்தோஷமடையக் கற்றுக்கொள்ளட்டும். காட்சிப்பொருளைப்போல் மற்றவர்களுக்கு முன்பாக அவர்களைப் புகழ்ந்து



1ST Proof

கொண்டிருக்காதீர்கள். அவர்களது எளிமையான குழந்தையின் நிலையில் அவர்களை வையுங்கள். பிள்ளைகள் துணிகரமாக பெரியவர்களுக்கு முன்பாக நடந்து கொள்ளுவதற்குப் பெற்றோர்களின் இந்த தவறே காரணம். பிள்ளைகளின் செயல்களைக்குறித்தும் வார்த்தைகளைக்குறித்தும் எப்பொழுதும் மற்றோரிடம் பெருமையாக சொல்லப்படுகிறது. இதுவே பிள்ளைகளை எந்த நேரத்தில் எப்படி பேசி நடந்து கொள்ள வேண்டும் என்பதை மறக்க வைக்கிறது. அதிகமாக குறைகளை சுட்டிக் காட்டிக்கொண்டிருப்பதும் தவறு. அதே சமயத்தில் அதிகமான புகழ்ச்சியும் பாராட்டும் இருத்தல் நல்லதல்ல. இந்த தவறுகளை சாத்தான் பயன்படுத்தித் தனது தீமையின் விதைகளை அவர்களிடம் விதைப்பான். அவன் இதைச் செய்ய நாம் ஏதுவாக நடந்து விடக்கூடாது. ***Signs of the Times, Feb. 9, 1882.***

***புத்தகங்களிலிருந்து படித்துக் காட்டுங்கள்***

பெற்றோர்களே நமது புத்தகங்களிலிருந்தும், பிரசுரங்களிலிருந்தும் பிள்ளைகளுக்குப் படித்துக் காட்டுங்கள். இதற்கென நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். மற்ற எல்லா வேலைகளையும் ஒரு நேரம் ஒதுக்கிவைத்து, அந்நேரத்தை குடும்பம்முழுவதும் சேர்ந்து படிப்பதற்கென்று பயன்படுத்த வேண்டும். கதைப்புத்தகங்களையும் மற்ற மதிப்பற்ற புத்தகங்களை படிக்கப் பழகியுள்ள வாலிபருக்கு இது ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். ***To Parents Teachers and Students p. 138.***

***சோல்லப்படுவதைச் செய்யும் பயிற்சியைக் கொடுங்கள்.***

எதிர்காலத்தின் நித்திய வாழ்க்கைக்காக பிள்ளைகளை ஆயத்தப்படுத்தும் பெரிய பொறுப்பு பெற்றோர்க்கு கொடுக்கப்படுகிறது. அதற்கேற்றபடி பிள்ளைகளை வளர்த்து, வழிநடத்தி பயிற்றுவிக்க வேண்டும். பிள்ளைகளுக்கு அடிப்படை தேவைகளை கொடுத்துவிட்டு உலகத் தரமான ஒரு கல்வியைக் கொடுத்துவிட்டால் தங்கள் கடமைகள் முடிவடைகின்றன என் பெற்றோர் நினைக்கின்றனர். பிள்ளைகளுக்கு பரலோகம் போவதற்கான கல்வி கொடுக்கப்படுகின்றதா என்று பார்க்காதபடி தங்கள் சொந்த வேலைகளிலும் சுகபோகங்களிலும் மும்முரமாக இருக்கின்றனர்.

பிள்ளைகளுக்கு இந்த கல்வியை எப்படிக் கொடுப்பதென்பதே ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் படிக்க வேண்டியுள்ள படிப்பாக உள்ளது. பிள்ளையாண்டானுக்கு நடத்த வேண்டிய வழியைசல் **“சொல்லு”** என்று நாம் வாசிப்பதில்லை. பிள்ளையாண்டானை நடத்த வேண்டிய வழியில் **“நடத்து”** என்று படிக்கிறோம். இது செய்யப்பட்டால் வயதான பிறகும் அவன் அதை விட்டு நீங்குவதில்லை. ***Review and Herald, June 24, 1890.***

***சுயகட்டுப்பாட்டை கற்றுக்கொடுங்கள்***

பிள்ளைகளை சரியாக வழிநடத்தி, சிறந்த ஒரு கல்வியை கொடுக்கும் வேரைக்கு அதிகமான அக்கரையும், செயலாற்றலும் தேவைப்படும். மனிதனின் எல்லா வேலைகளைக் காட்டிலும் இதைச் செய்வதெற்கே அதிகமான செயல்திறனும் கவனமும் தேவை. நமது வாழ்க்கையின் ஆரம்ப வருடங்களில் நம்மை சுற்றியிருப்பவை மிக பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பிற்காலங்களில் இந்த அளவிற்கு இருக்காது. மனிதன் மூன்று அடிப்படை கூறுகளை உள்ளடக்கியவனாக உள்ளான். ஆகவே அவனது பயிற்சியும், சரீர ரீதியாகவும், மனரீதியாகவும் ஒழுக்க ரீதியாகவும் இருக்க வேண்டும். இந்த வேலையை சரியாகச் செய்ய பெற்றோர்கள் முதலில் பிள்ளை நடக்க வேண்டிய வழியை புரிந்து கொள்ள வேண்டும். இது வெரும் புத்தகங்களிலிருந்தும் கல்வி ஸ்தாபனங்களிலிருந்தும் வரும் அறிவல்ல. ***சுயக்கட்டுப்பாட்டையும், அன்பையும் தெய்வீகத்தையும் கற்றுக்கொடுத்து, நமக்கும் மற்றவர்களுக்கும், தேவனுக்கும், நாம் செய்ய வேண்டிய கடமைகளை புரிந்துக் கொள்ளுவதே கல்வியாகும்.***

மிருகங்களை பயிற்றுவிக்க பின்பற்றப்படும் கோட்பாடுகள் பிள்ளைகளை பயிற்றுவிக்க பயன்படுத்தப்படக் கூடாது. இரண்டிற்கும் அடிப்படைத் தத்துவமே வெவ்வேராக இருக்க வேண்டும். மிருகமானது எஜமானுக்கு அடிபணிந்தாலே போதுமானது. ஆனால் பிள்ளையானவன் தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும். மனசாட்சிக்கேற்றபடியும், பகுத்தறிவிற்கு இணங்கின வகையிலும், அறிவானது தீர்மானங்கள் எடுக்க வேண்டும். மனமானது சரியானதைச்



1ST Proof

செய்ய தேர்ந்தெடுக்கும்படி பயிற்றுவிக்கப்பட வேண்டும். பிள்ளையும் தன் அறிவை பயன்படுத்தாத்படி தனித்துவமில்லாமல், சொல்லப்படுவதை மட்டும் செய்யும்படியாக பயிற்றுவிக்கப்படலாம். இது மிருகத்தை வழிநடத்துவதைப்போல் அமையும். இந்த ஞானமில்லாத பயிற்சி பெரிய பாதகத்தை கொண்டு வந்துவிடும். இப்படியாக பயிற்றுவிக்கப்பட்ட பிள்ளைகள் சரியான தெளிவான முடிவுகளை எடுக்கத் தெரியாதவர்களாக இருப்பர். எடுக்கும் முடிவுகளில் நிலையாகவும் இருக்க மாட்டார்கள். நன்மை தீமையை பகுத்தறிந்து சரியாகச் செயல்பட அவர்கள் பயிற்சிபெறவில்லை. இந்த அனுபவமும் அவர்களில் பெலப்படுத்தப் படவில்லை. ஒவ்வொரு பிள்ளையும் தன்நம்பிக்கையோடு செயல்பட பயிற்றுவிக்கப்பட வேண்டும். நல்ல பயிற்சியைப்பெற்று சரியாக வழிநடத்தப்பட்ட பிள்ளையானவன் தனது குணத்தின் எல்லா அம்சங்களையும் நன்கு அறிந்திருப்பான். தன் பெலம் என்ன, பெலவீனம் என்ன என்பதை புரிந்துகொண்டிருப்பான். ஒரு ஞானமான ஆசிரியர் அல்லது பெற்றோர் பிள்ளையின் பெலவீனங்களை கண்டறிந்து அவற்றை சரியான விதத்தில் பெலப்படுத்த அதிகமான கவனத்தை செலுத்துவார். இதை செய்வதின் மூலமாக பிள்ளையானவன் சம நிலையான ஒரு நல்ல குணத்தை தனக்குள் உருவாக்கிக் கொள்ளுகிறான். ***Fundementals of Christian Education, p.57.***

***அதிகாரம் - 5***

***பாடப்புத்தகமாக வேதம்***

***குழந்தையின் முதல் பாடப் புத்தகம்***

வேதமே பிள்ளையின் முதல் பாடப் புத்தகமாக இருக்க வேண்டும். ஞானத்தின் அறிவுரைகளை இதிலிருந்து பெற்றோர் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையே வாழ்க்கையின் சட்டமாக அமைதல் வேண்டும். அதிலிருந்து பிள்ளைகள், தேவன் அவர்களுடைய பிதாவென்று கற்றுக்கொள்ள வேண்டும். அவருடைய வார்த்தையின் அழகான பாடங்களிலிருந்து தேவனின் குணத்தை அறிந்துகொள்ள வேண்டும். வேதக் கோட்பாடுகளை தங்களுக்குள்ளாக ஏற்றுக்கொண்டு நீதியையும் நியாயத்தையும் செய்ய கற்றுக்கொள்ள வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 108.***

***வாக்குத்தத்தங்கள், ஆசீர்வாதங்கள் மற்றும் கடிந்து கொள்ளுதல்களின் புத்தகம்***

தாய் தனது சிந்தையை வேத வார்த்தைகளின் வாக்குத்தத்தங்களினாலும், ஆசீர்வாதங்களினாலும் எப்பொழுதும் நிறைந்து கொள்ள வேண்டும். இவ்வார்த்தையினால் புத்துயிர் பெற்றுக் கொள்ள வேண்டும். வேதத்தினால் தடை செய்யப்பட்டிருப்பவைகளையும் அறிந்திருக்க வேண்டும். பிள்ளைகள் தவறும்பொழுது வேத வார்த்தைகளைக் கொண்டு பிள்ளைகளை சிட்சிக்கலாம். இதை செய்தால் தேவ ஆவியானவரை தவறு செய்வதினால் எப்படி துக்கப்படுத்துகிறோம் என்று பிள்ளைகள் தெரிந்து கொள்ளுவார்கள். உலகின் மிக உயர்ந்த மனிதர்களின் பாராட்டைவிட இயேசுவின் புன்முறுவலும் பாராட்டுமே உயர்ந்தது என்று கற்றுக்கொடுங்கள். பணக்காரர்களைவிடவும், பண்டிதர்களைவிடவும், இயேசுவின் அங்கீகாரமே மேலானது என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ளட்டும். அன்போடும், தயவோடும் கரிசனையோடும் ஒவ்வாரு நாளும் பிள்ளைகளை இயேசுவிடம் அழைத்துச் செல்லுங்கள். இந்த உன்னதமான வேலைக்கு தடையாக எதையும் வரவிடாதீர்கள். ***Review and Herald, Apl. 14. 1885.***

***வேத வாசிப்பு, குணத்தை மேம்படுத்துகிறது.***

வேத வார்த்தையில் நாம் பல பாடங்களை படிக்கிறோம். அப்பாடங்கள் ஒழுக்கத்துடனும், விசுவாசத்துடனும் செயல்பட நம் குணத்தை மாற்றுகிறது. நடைமுறை வாழ்க்கையில் வேத வார்த்தைகளை நாம் அப்பியாசிக்கும்பொழுது இம்மாற்றத்தை அனுபவிக்கலாம். தீமோத்தேயு இப்பாடங்களையே படித்து தன் வாழ்க்கையிலும் கடைப்பிடித்தார். அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயு எந்த அளவிற்கு வேத சரித்திரங்களைப் படித்திருந்தார் என்பதை பல முறை சோதித்துப் பார்த்தார். அவரிடம் அநேக கேள்விகளைக் கேட்டார். தீமையை வெறுப்பதற்கான அவசியத்தைப் புரியவைத்தார். உண்மையுடனும், உத்தமத்துடன் இருக்கும் நபர், ஒரு உயரிய மனிதனாக வாழலாம் என்று பவுல் தீமோத்தேயுவுக்கு புரிய வைத்தார். உயரிய பண்புகள் நிறைந்த மனிதனாக வாழுவது தற்செயலாக



1ST Proof

நடந்துவிடாது. வாலிப பிராயத்தில் நல்ல குணம் உருவமைக்கப்பட்டதினாலும், குடும்பத்தில் தேவ பிரமாணம் கைக்கொள்ளப் பட்டதினாலும் இது சாத்தியமாகிறது. தேவன் காட்டியிருக்கும்படி தங்கள் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்போரது முயற்சிகளை தேவன் ஆசீர்வதிப்பார்.

***வேதம் தேவ அன்பை மகிழ்வளிக்கிறதாக காட்டுகிறது.***

ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கும் பிள்ளைகள் தேவ ஆதரவினாலும், தேவ கடிந்துரையினாலும் வளர்க்கப்பட வேண்டும். தீமைக்கேதுவான மனப்பாங்கு கட்டுப்படுத்தப்பட வேண்டும். கோபங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். பிள்ளைகள் தேவனுடைய சொத்து என்று அறிவுறுத்தப்பட வேண்டும். தேவனுடைய சொந்த இரத்தத்தினால் வாங்கப்பட்டதினால், பிள்ளைகள் சுகபோகமாகவும் மாயையையும் தேடி வாழ்ந்து அதே நேரத்தில் தேவனுடைய பிள்ளைகளாகவும் இருந்துவிட முடியாது. தங்கள் சுய விருப்பத்தின்படி வாழுபவர்கள் தேவபிள்ளைகளாக இருக்க முடியாது. அன்போடும் பொறுமையுடனும் பிள்ளைகள் அறிவுறுத்தப்பட வேண்டும். குடும்பத்தையே மகிழவைக்கும் வகையில் தேவ அன்மைப் பற்றி பிள்ளைகளுக்கு சொல்லித் தரப்படட்டும். இதைப்போல் சபையும் மந்தையின் ஆட்டுக்குட்டிகளையும், வளர்ந்த ஆடுகளையும் போஷிக்கும் பொறுப்பை எடுத்துக் கொள்ளட்டும். ***Review and Herald, Oct. 25, 1892.***

***பயந்த சுபாவமுள்ள குழந்தைகளுக்கு வேதக் கதைகள் நம்பிக்கையூட்டுகின்றன***

பயந்த சுபாவமுள்ள பிள்ளைகளுக்கு வாழ்க்கையே பெரிய பாரமாக இருக்கும். வேத பிரசன்னத்தை உணரும் அனுபவமே பயத்தை நீக்கும். பயந்த பிள்ளை தேவ வாக்குத்தத்தத்தை மனதில் நிறுத்தட்டும். **“கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களை அவருடைய தூதன் பாளையமிறங்கி காத்து விடுவிக்கிறார்” சங்கீதம் 34:7.** ஏலிசாவின் கதையை அவர்கள் படிக்கட்டும். அவரை பிடிக்க வந்த அந்த பெரிய படைக்கும் அவருக்கும் இடையே இருந்த தூதர் படையை பற்றித் தெரிந்து கொள்ளட்டும். மரண தண்டனைக்கு ஒப்புவிக்கப்பட்ட பேதுருவை தூதன் எப்படி சந்தித்தான் என்று படிக்கட்டும்.

சிறைக்காவலர்களையும், சிறையின் கதவுகளையும், இரும்பு வாயிற்கதவுகளையும் தாண்டி பேதுரு எப்படி வெளியே கொண்டுச் செல்லப்பட்டார் என்பதையும் அறிந்து கொள்ளட்டும். புயலினால் அலைக்கழிக்கப்பட்ட கப்பலில் இருந்தோர்க்குப் பவுல் எப்படி ஆறுதலாகப் பேசினார்கள் என்பதையும் படிக்கட்டும். தனது வழக்கு விசாரணைக்காகவும் மரணத்தையும் நோக்கி பவுல் பிரயாணப்பட்டிருந்தார். ஆயினும் பயந்தவர்களை தைரியப்படுத்தினார். **“ஆகிலும் திடமனதாயிருங்கள் என்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன். உங்களில் ஒருவனுக்கு பிராணச்சேதம் வராது. தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்று பவுலே பயப்படாதே நீ இராயனுக்கு முன்பாக நிற்க வேண்டும். இதோ உன்னோடு யாத்திரை பண்ணுகிறயாவரையும் தேவன் உனக்கு தயவுபண்ணினார் என்றான்”** இந்த வாக்குத்தத்தத்தை விசுவாசித்து பவுல் மற்றவர்களை திடப்படுத்தினார். எவர் தலையிலிருந்தும் ஒரு முடிகூட விழாதென்று பவுல் உத்தரவாதம் கொடுத்தார். அவர் சொன்னபடி எல்லோரும் காக்கப்பட்டார்கள். அந்த கப்பலில் தேவனுடைய மனிதன் ஒருவன் இருந்தான். அவன் வழியாக தேவன் கிரியை செய்ய முடிந்தது. அதன் நிமித்தமாக கப்பலில் இருந்த மற்ற எல்லா அஞ்ஞானிகளும் காப்பாற்றப்பட்டார்கள். பத்திரமாக எல்லோரும் கறையை சேர்ந்தார்கள். **அப்போஸ்தலர் 27: 22-24, 34.**

இவைகளை நாம் படித்து ஆச்சரியப்படுவதற்காகமட்டும் இவை எழுதப்படவில்லை. தேவனுடைய பிள்ளைகளிடம் ஆதிகாலத்தில் கிரியை செய்த அதே விசுவாசம் நமக்குள்ளும் கிரியை செய்யத்தக்கதாக எழுதப்பட்டிருக்கிறது. அதே வகையில் இன்றைக்கும் கிரியை செய்ய தேவன் வல்லவராயிருக்கிறார். அவரது வல்லமையின் கருவிகளாக இருக்க தேவப் பிள்ளைகள் தங்களை தேவனிடம் சமர்பிக்க வேண்டும். **Education, p. 255, 256.**

விசுவாசத்தில் பெலன் பெற்றவர்களாக நில்லுங்கள். தேவனையே நாம் எல்லோரும் சார்ந்து இருக்கிறோம் என்று உங்கள் பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுங்கள். அந்த நான்கு எபிரெய



1ST Proof

வாலிபர்களின் கதையை படித்துக் காட்டுங்கள். நன்மைக்கேதுவாக அவர்கள் ஏற்படுத்திய தாக்கத்தை பிள்ளைகள் மனதில் பதித்துக் கொள்ளட்டும். தேவ நியமங்களுக்கு அவர்கள் உண்மையாக இருந்ததினால் இது நடந்தது. ***Manuscript 33, 1909.***

***வேதத்தின் பாடங்கள் எளிமையானதாக இருக்கட்டும்***

வேதத்திலிருந்து பாடங்களை பிள்ளைகளுக்கு பெற்றோர் சொல்லிக் கொடுக்கட்டும். அப்பாடங்களை பிள்ளைகள் சுலபமாக புரிந்து கொள்ள எளிமையான வகையில் அவைகள் கற்றுத்தரப்பட வேண்டும். ***Letter 189, 1903.***

தேவனின் பிரமாணமே வாழ்க்கையின் சட்டம் என்று பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுங்கள். சூழ்நிலையும், சந்தர்ப்பமும் அவர்களை பெற்றோரிடமிருந்தும், வீட்டிலிருந்தும் பிரிக்கக் கூடும். ஆனாலும் சிறு வயதிலும், வாலிப பிராயத்திலும் அவர்கள் கற்றுக் கொண்டவை தங்கள் வாழ்க்கை நெடுகிலும் அவர்களோடு தங்கிவிடும். அவர்களுக்கு பெரிய ஆசீர்வாதமாகவும் அமையும். ***Manuscript 57, 1897.***

***அதிகாரம் - 6***

***இயற்கை என்ற புத்தகம்***

***தீராத பாடங்களின் ஊற்று.***

வேதப் புத்தகத்திற்கு அடுத்தபடியாக இயற்கையே நமது பெரிய பாடப் புத்தகமாக இருக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol. 6, p. 185.***

அச்சிடப்பட்ட புத்தகத்தைப் படிக்க முடியாத குழந்தைகள், பள்ளிக்கூடம் செல்லுமளவு வளராக குழந்தைகள் இயற்கையிலிருந்து நிறைய பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். முனதை சந்தோஷப்படுத்தக் கூடியவைகளாகவும் அப்பாடங்கள் இருக்கும். தீமையோடு தொடர்பு கொள்ளாத அந்த பிஞ்சு மனம் இயற்கையில் தேவ பிரசன்னத்தை எளிதில் கண்டுகொள்ளும். ஊலகத்தின் குரலால் கவரப்படாத செவிகள், தேவ குரலை கேட்கும். இயற்கையின் உச்சரிப்புகளால், பிள்ளைகள்

தேவனைப்பற்றி அறிந்து கொள்ளுவார்கள். வளர்ந்த பிள்ளைகளுக்கும் இயற்கையின் பாடங்கள் நித்தியத்திற்குரியவைகளையும், ஆவிக்குரியவைகளையும், தொடர்ந்து நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும். தேவ அறிவுரைகளுடன் மனதை மகிழ்ச்சியூட்டும். ***Education, p. 100.***

### *ஏதேனின் புத்தகமாக இருந்தது*

தேவனுடைய காரியங்களை விவரிக்கத்தக்கதாக இயற்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏதேன் தோட்டம் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவனைப்பற்றி சொல்லிக் கொடுத்தன. இயற்கையானது அவர்களுக்கு தேவ அறிவுரைகள் நிறைந்த ஒரு பிறப்பிடமாக இருந்தது. ஞானத்தின் குரலை அதன் வழியாக ஆதாமும் ஏவாளும் கேட்டார்கள். அவர்கள் கண்கள் கண்ட ஞானத்தை மனம் ஏற்றுக்கொண்டது. இயற்கையிலும் தேவனோடு தொடர்பு கொண்டார்கள். தேவ சிருஷ்டிப்பான இயற்கையும் தொழுதுகொள்ள ஏதுவாக அமைந்தது. ***Counsels to Parents and Students p. 186.***

இயற்கையின் புத்தகம் உயிருள்ள பாடங்களுடன் அவர்களுக்கு முன்பாக பரவி இருந்தது. தீராத சந்தோஷத்தின் ஊற்றாகவும், தேவ அறிவுரைகளின் உறைவிடமாகவும் இப்பாடங்கள் இருந்தன. காட்டின் ஒவ்வொரு இலையிலும், மலையின் ஒவ்வொரு கல்லிலும், வானத்தின் ஒவ்வொரு நட்சத்திரத்திலும் தேவநாமம் தரிக்கப்பட்டிருந்தது. இலையுடனும், பூவியுடனும், மரத்துடனும், உயிரில்லாத உயிரிருந்த எல்லா சிருஷ்டிகளோடும் ஏதேனில் வாழ்ந்தவர்கள் பேசினார்கள். ஒவ்வொன்றிலிருந்தும் அதன் ஜீவனின் இரகசியத்தை அறிந்து கொண்டார்கள். பரலோகத்தில் இருந்த தேவமகிமை, கணக்கில்லா மற்ற உலகங்கள், மேகங்களின் அதிசயங்கள், ஒளி, ஒலி ஆகியவற்றின் இரகசியங்கள் போன்றவை பூமியின் முதல் பள்ளியின் பாடங்களாக இருந்தன. ***Education, p. 21***

### *விழுகைக்குப் பின்பும் இருக்கும் பாடங்கள்*

பாவத்திற்கு பின் சாபத்தினால் பூமி பெரிதாக பாதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலும் இயற்கையே மனிதனின் பாட புத்தகமாக இருக்க



1ST
Proof

வேண்டியிருந்தது. ஆயினும் இப்பொழுது அது நன்மையை மட்டுமல்ல தீமையையும் பிரதிபலிக்கின்றது. தீமையானது இயற்கையை தீட்டுப்படுத்தியிருக்கிறது. தேவ குணமட்டும் எழுதப்பட்டிருந்த இடத்தில் இப்பொழுது சாத்தானின் குணமும் எழுதப்பட்டிருக்கிறது. தீமையின் அறிவும் காணப்படுகிறது. நன்மை தீமை ஆகிய இரண்டும் இயற்கையிலிருந்து வெளிப்படுகிறது. பாவத்தின் விளைவுகளைக் குறித்து மனிதன் எச்சரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறான். ***Education, பக்கம் 26.***

### *தேவ பாடங்களை இயற்கை விளக்குகிறது*

வேதத்திலிருந்து பல பாடங்களை இயற்கையின் வழியாகவே கற்கிறோம். வேத எழுத்தாளர்கள் இயற்கையை பயன்படுத்திப் பல பாடங்களை விளக்கியுள்ளனர். இயற்கையின் காரியங்களை நாம் கவனிக்கும்பொழுது தேவ ஆவியானவரின் வழிநடத்துதலால் தேவ வார்த்தையின் பாடங்களை ஆழமாக புரிந்துகொள்ளுவோம். ***Education, பக்கம் 120.***

வேத வார்த்தையின் பொக்கிஷங்களை திறக்கக்கூடிய திறவுகோலை தேவன் இயற்கையில் வைத்திருக்கிறார். பார்க்கப்படமுடியாதவைகள் பார்க்கக்கூடிய இயற்கையில் விவரிக்கப்படுகின்றன. தெய்வீக ஞானம், நித்தியத்திற்கான சத்தியங்கள், அளவில்லா கிருபை ஆகியவை தேவனால் படைக்கப்பட்ட இயற்கையில் வெளிக்காட்டப்படுகிறது. ***Counsels to Parents, Teachers and Students, பக்கம் 187, 188.***

வேதத்தின் பாடங்களை விளக்கும் இயற்கையின் பொருட்களை தேட பிள்ளைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். வேதத்திலும், இயற்கையிலும் எப்படி பாடங்கள் சொல்லப்படுகின்றதென்பதைம் பிள்ளைகள் ஆராய வேண்டும். வேதத்திலும் இயற்கையிலும் கிறிஸ்துவை வெளிப்படுத்தும் ஒவ்வொரு பொருளையும் அவர்கள் தேட வேண்டும். இயேசு எவைகளைச் சுட்டிக்காட்டிச் சத்தியத்தைத் தெளிவுபடுத்தனார் என்பது கண்டறியப்படட்டும். இதை செய்தால் மரத்திலும், கொடியிலும், மல்லியிலும், ரோஜாவிலும், சூரியனிலும், நட்சத்திரத்திலும் இயேசுவைக் காணலாம். புறவையின் பாடல்களிலும் மரங்களிடையே எழுப்பப்படும்

ஓசைகளிலும், சூழலும் இடியிலும், கடலின் இசையிலும் தேவனின் குரலைக் கேட்க பிள்ளைகள் கற்றுக் கொள்ளலாம். இயற்கையின் ஒவ்வொரு பொருளும் கிறிஸ்துவின் பாடங்களை நினைவிற்கு கொண்டுவரும்.

இப்பழயாகவும் கிறிஸ்துவை அறிந்து கொள்ளுபவர்களுக்கு உலகம் ஒரு தனிமையான, பரிதவிப்பு நிறைந்த இடமாக இருக்காது. உலகம் அவர்களது பிதாவின் வீடாக இருக்கும். ஒரு காலத்தில் மனிதனாகவே வாழ்ந்தவருடைய பிரசன்னத்தினால் நிறைந்ததாக இருக்கும்.

***இயற்கையின் இரகசியங்களை வேதம் விளக்குகிறது***

பிள்ளையானவன் இயற்கையோடு தொடர்புகொள்ளும்பொழுது புரிந்துகொள்ள முடியாதவைகளையும் பார்க்கலாம். ஏதிர்மறையான ஒரு சத்தியின் கிரியைகளும் இயற்கையில் தென்படும். இதன் நிமித்தமாகவே இயற்கைக்கும் அதன் காரியங்களை விளக்கும் ஒரு நபர் தேவை. இயற்கையிலும் தீமையின் பல வெளிப்பாடுகளை காணுகிறோம். ***“சத்துரு அதைச் செய்தான்”*** என்ற சோகமான பாடத்தையே எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. **மத்தேயு** 13: 28.

கல்வாரி சிலுவையிலிருந்து வரும் வெளிச்சத்தைக் கொண்டே நம்மால் இயற்கையை சரியாக புரிந்துகொள்ள முடியும். பெத்லகேமில் துவங்கி கல்வாரியில் முடிந்த கதையின் வழியாக தீமை எப்படி வெல்லப்பட வேண்டும் என்று காட்டப்படட்டும். சிலுவையின் வழியாகவே நமக்கு எல்லா ஆசீர்வாதங்களும் கிடைத்திருக்கிறது. மீட்பின் பரிசாக இவைகள் இருக்கின்றன.

முல்லும், களையும், முட்புதரும், தீட்டுப்படுத்தும் தீமையின் அடையாளமாக இருக்கிறது. ஆயினும் பாடும் பறவையும், பூக்கும் மலரும், இயற்கையின் பல ஆயிரம் பொருட்களும் சீர்ப்படுத்தும் தேவ அன்பின் அடையானமாக அமைகின்றன. தேவனின் நல் ஈவுகளை இயற்கை இன்றும் விவரிக்கத்தான் செய்கிறது. ***Education, 101.***

***வகுப்பறையில் பாடங்கள்***

ஏதேனில் வசித்தவர்கள் இயற்கையின் புத்தகத்தையே படித்தார்கள். மோசேயும் தேவனின் கையெழுத்தை அரபுதேச சமவெளிகளிலும், மலைகளிலும் படித்தார். இயேசுவும்கூட நாசரேத்தின் மலைப்பகுதிகளில் கற்றார். இதைப்போலவே இன்றும் பிள்ளைகள் தேவனைப்பற்றி கற்றுக்கொள்ளலாம். பார்க்கப்பட முடியாதவைகள் பார்க்கமுடிந்தவைகளால் சித்தரிக்கப்படுகிறது.

***இயற்கையின்மேல் ஒரு பற்றை வளர்த்துக் கொள்ளுங்கள்***

இயற்கையின் அழகான பொருட்களின்மேல் தாயானவள் ஒரு பற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும். பிள்ளைகளிடையும் இதை வளர்த்துவிட வேண்டும். அவன் தன் பிள்ளைகளுக்கு வானத்தின் மகிமைகளையும், எண்ணிலடங்கா பூமியின் அழகுகளையும் சுட்டிக் காட்டட்டும். இவைகளை படைத்தவரையும் நினைவுபடுத்தட்டும். இப்படியும் தேவனிடம் பிள்ளைகளின் மனங்கள் வழிநடத்தப்படட்டும். பிள்ளைகளின் இதயங்களில் தேவன்மேல் அன்பும் பக்தியும் உருவாகும். வயல்களும் மலைகளும் இயற்கையின் காட்சிபொருட்கள். இவைகளே சிறு பிள்ளைகளின் வகுப்பறைகளாக இருக்க வேண்டும். இவ்வியற்கையின் பொக்கிஷங்களே அவர்களது பாடப்புத்தகம். இப்படியாகவும் சொல்லிக் கொடுக்கப்படும் பாடங்கள் மறக்கப்படுவதில்லை. ***Review and Herald, Jan. 10, 1882.***

பிள்ளைகள் இயற்கையை விரும்பும்படிப் பெற்றோர் ஊக்குவிக்கும்பொழுது, தேவனோடு அவர்களை இணைக்கிறார்கள். தாங்கள் பெற்றுக் கொள்ளுபவைகளை தருபவர் தேவன் என்பதை உணருவார்கள். இந்த வகையிலும் சத்தியம் என்ற விதை விதைக்கப்படுவதற்கு முன்பு, இதயம் என்ற நிலம் பண்படுத்தப்படுகிறது. ஏற்றக் காலத்தில் பெரிய அறுவடையையும் எதிர்ப்பார்க்கலாம். ***Signs of the Times, Dec. 6, 1877.***

***பறவைகளுடன் சேர்ந்து தேவனை துதியுங்கள்***

சிறு பிள்ளைகள் இயற்கையிடம் அதிகமாக நெருங்க வேண்டும். உலகத்தின் பாணியை பின்பற்றி, கட்டப்படாமல், சுதந்திரமாக ஆட்டுக்குட்டிகளைப்போல் சூரிய வெளிச்சத்தில் விளையாடட்டும்.

1ST Proof

உயரமான மரங்களையும், புல்லையும், செடிகளையும் அடிக்கடி பார்க்கட்டும். ஒவ்வொன்றின் அழகான வடிவத்தை அறிந்துகொள்ளட்டும். தேவனது சிருஷ்டிப்பில் அவரது அன்மையும், ஞானத்தையும் காண கற்றுக் கொடுங்கள். அவர்களது இதயம் நன்றியினாலும் சந்தோஷத்தினாலும் களி கூறும். பறவைகளுடன் அவர்களும் சேர்ந்து தேவனை துதிக்கட்டும்.

அந்த உன்னத ஓவியரின் செய்கைகளை இயற்கையில் கவனிக்க பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுங்கள். இயற்கையின் உயரிய கொள்கைகளை பின்பற்றி அவைகளை தங்களது குணங்களாகவும் மாற்றிக் கொள்ளட்டும். தேவனுடைய அன்பு அவர்களது இதயத்தை ஆட்கொள்ளும்பொழுது, பரிசுத்தத்தின் அழகை வாழ்க்கையில் வெளிப்படுத்தட்டும். மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக அமைந்து தேவனுக்கும் தனிமதிப்பை கொடுப்பார்கள். ***Counsels to Parents, Teachers and Students, பக்கம் 188.***

***இயற்கையின் வழியாக இயற்கையின் தேவனை சுட்டிக்காட்டுங்கள்***

தீமையை எதிர்த்துப் போராட, ஊக்குவிக்கும்படியான பாடங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். முதலில் இயற்கையின்மேல் அவர்களது கவனங்களை திருப்பி, பின்பு அவ்வியற்கையின் தேவனைச் சுட்டிக்காட்டுங்கள். அவர்கள் சிருஷ்டிகரை அறிந்து கொள்ளுவார்கள். "என் பிள்ளைகள் தேவனுக்கு வேலை செய்து, அவரை மகிமைப்படுத்த, நான் எப்படி கற்றுக்கொடுக்க முடியும்? இதை மிகச் சிறப்பாக எப்படி செய்வது? இக்கேள்விகளே பெற்றோர்களது சிந்தையை எப்பொழுதும் ஆட்கொண்டிருக்க வேண்டும். பரலோகம் மனித குலத்தின் மேம்பாட்டையே ஊற்று நோக்கிக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்க நாம் நமது பிள்ளைகளைக் குறித்து எவ்வளவு அக்கரையுடன் இருக்க வேண்டும் நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்ய கவனமாக இருக்க வேண்டாமா? ***Manuscript 29, 1886.***

***இயற்கையின்படிப்பு மனதை பெலப்படுத்துகிறது***

தேவனின் மகிமை அவரது சிருஷ்டிப்பில் வெளிக்காட்டப்படுகிறது. இயற்கையின் இரகசியங்கள் ஆராயப்படும்பொழுது அறிவு



1ST Proof

பெலப்படுத்தப்படுகிறது. கதை புத்தகங்களை படித்துப் பாதிக்கப்பட்ட சிந்தைகளுக்கு, இயற்கை ஒரு திறந்த புத்தகமாக இருக்கும். தேவ சிருஷ்டிகளில் சத்தியங்களை படித்துக் கொள்ளலாம். இலையிலும், புல்வெளியிலும், செடியிலும், பூவிலும், மலையிலும் சமுத்திரத்திலும் பல பாடங்கள் உள்ளன. சூரிய ஒளியின் மகத்துவங்கள் நிலாவெளிச்சத்தின் மகிமைகள், சீராக செயல்படும் சீதோஷன மாற்றங்கள், கோடை வெப்பம், பனியின் குளிர், எல்லாவற்றிலும் ஆழமான சிந்தனைக்குரிய பாடங்கள் அமைந்துள்ளன.

தரம் தாழ்ந்த, ஒழுக்கமற்ற சுகபோகங்களில் அநேகர் தங்கள் சிந்தைகளை செலுத்துகிறார்கள். இதை செய்யாமல் உண்மையானவைகளின்மீதும், வாழ்க்கைக்குரியவைகளின்மீதும் மனம் திருப்பப்பட்டால், தேவபக்தியும், தேவமதிப்பும் இதயத்தில் நிரம்பும். இயற்கையின் தேவனும் ஆராதிக்கப்படுவார். இயற்கையில் வெளிப்படுத்தப்படும் தேவனின் குணம் படிக்கப்படட்டும். ஒழுக்கத்தைக் கெடுத்து, மனதை கறைப்படுத்தி தாழ்த்தும் பொழுது போக்குகளிலிருந்து இந்த படிப்பு நம் மனதை திசை திருப்பும் தேவ வழிகளையும், கிரியைகளையும் அறிந்துகொள்ளும் படிப்பை இவ்வுலகில் நாம் ஆரம்பிக்க மட்டுமே முடியும். நித்தியத்திற்கும் அது தொடரும் படிப்பாக இருக்கும். மனிதன் தனது அறிவாற்றலின் எல்லா கூறுகளையும் பயன்படுத்திப் படிக்கத்தக்கதாக பாடங்களை தேவன் வைத்திருக்கிறார். மேலுள்ள வானத்தைப் பற்றிப் படித்தாலும், கீழுள்ள பூமியைப் பற்றிப் படித்தாலும், அதிலிருந்து தேவனின் குணத்தை நாம் படிக்கலாம். இப்படிப்பு நன்றியினாலும் துதியினாலும் நம் இதயத்தை நிரப்பும்.

***இயேசுவின் பாடப்புத்தகங்கள்***

இயேசு அவரது கல்வியை பரலோகத்தால் நியமிக்கப்பட்டவைகளிலிருந்து பெற்றார். பயனுள்ள வேலை, வேதபடிப்பு, இயற்கை, வாழ்க்கையின் அனுபவங்கள் இவைகளே தேவன் நியமித்த பாட புத்தகங்களாக அவருக்கு இருந்தன. கண்களால் பார்த்து, இருதயத்தால் புரிந்துகொண்டு, கரங்களால் செயல்பட விரும்புவோர்க்கு இப்பாடப் புத்தகங்கள் அறிவுரைகளால் நிறைந்திருக்கின்றன. ***Ministry of Healing பக்கம் 400.***

இயேசுவுக்கு வேத அறிவு அதிகமாகயிருந்தது. தனது இளம் பிராயத்தில் எந்த அளவிற்கு அவர் வேதத்தை படித்திருப்பார் என்பதை இது காட்டுகிறது. இதனுடன் ஒரு பெரிய நூலகமாக இயற்கையும் அவருக்கு முனுபாக படர்ந்திருந்தது. எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரே, பூமியிலும் ஆகாயத்திலும் கடலிலும் அவரது கரங்கள் எழுதியதை அவரே படித்துக் கொண்டார். உலகின் துன்மார்க்க வழிகளிலிருந்து பிரிந்து இருந்தார். இயற்கையிலிருந்து அறிவியலையும் கற்றுக் கொண்டார். செடிகள், விலங்குகள் மற்றும் மனிதனின் வாழ்க்கையை படித்தார். தனது வாழ்க்கையின் ஆரம்ப காலத்திலிருந்தும் ஒரே நோக்கத்தோடு இருந்தார். மற்றவர்களை ஆசீர்வதிக்கவே வாழ்ந்தார். இயற்கை அவருக்கு பெரிதும் உதவியது. செடிகளையும் விலங்குகளையும் அவர் படித்தபொழுது புதிய யோசனைகளும் வழிகளும் அவர் சிந்தைக்குள் வந்தன. தன்னை சுற்றியிருப்பவைகள் எதனால் அவைகளின் தன்மைகளை பெற்றிருந்தன என்பதை அறிய முயற்சி செய்தார். இயற்கையும், தேவ வார்த்தையும் திறக்கப்பட்ட புத்தகங்களாக அவருக்கு முன்பாக இருந்தன. பரலோகத்தின் பிரஜைகள் அவருக்கு உதவினார்கள். நல்ல சிந்தனைகளையும் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டார். அறிவாற்றல் துவங்கின சமயத்திலிருந்து கிருபையிலும் சத்தியத்தின் அறிவிலும் வளர்ந்துகொண்டே இருந்தார்.

இயேசுவானவர் பெற்ற இக்கல்வியையும் அறிவையும் எப்பிள்ளையும் பெற்றுக் கொள்ளலாம். தேவ வார்த்தையின் வழியாக தேவனை அறிந்து கொள்ள நாம் முற்பட வேண்டும். தேவ தூதர்கள் நமக்கருகே வந்து நம்மை பெலப்படுத்துவார்கள். நமது குணங்கள் உயர்த்தப்பட்டு சுத்திகரிக்கப்படும். ***The Desire of Ages** பக்கம் 70,71.*

***இப்பாடங்களை மற்றவர்களுக்கும் புகட்டினார்***

இயேசு கிறிஸ்து ஒரு உயரிய அசிரியராக தனது செய்திகளை கேட்டவர்களை இயற்கையோடு தொடர்பு கொள்ளச் செய்தார். சிருஷ்டிப்பிலிருந்து வரும் தேவ குரலை கேட்டு, மனம் இளகி, அவர் சொல்வதைக் கேட்க அவர்களை ஆயத்தப்படுத்தினார். இயற்கையில் அவர்கள் பார்த்த காட்சிகளின் ஆவிக்குரியப் பாடத்தை அவர்கள் கற்றுக்கொள்ள உதவினார். உவமைகளைக் கொண்டு பல பாடங்களைச்



1ST
Proof

சொல்லிக் கொடுத்தார். இயற்கையின் தாக்கத்திற்கு அவரது ஆவி எந்த அளவிற்கு திறக்கப்பட்டதாய் இருந்தது. என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். அனுதின வாழ்க்கையின் காட்சிகளை வைத்து ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக் கொடுப்பதில் மகிழ்ந்தார்.

ஆகாயத்துப் பறவைகள், புஷ்பங்கள், விதைப்பவனும், விதையும், மேய்ப்பன், ஆடுகள் போன்ற இயற்கைக் காட்சிகளைப் பயன்படுத்தி அழிவில்லா சத்தியத்தை விளக்கினார். வாழ்க்கையின் அனுதின அலுவல்களிலிருந்தும் பாடங்களைக் கொடுத்தார். அப்பம், மறைக்கப்பட்ட புதையல், முத்து, மீன் வலை, தொலைந்த நாணயம், கெட்ட குமாரன், மண்ணின் மேலும், கல்லின் மேலும் கட்டப்பட்ட வீடுகள், ஆகியவைகளைக் கொண்டும் சத்தியங்களை விளக்கினார். அவரது பாடங்கள் எல்லா சிந்தைகளின் ஆர்வங்களைத் தூண்டின. சுற்றியிருந்த ஒவ்வொரு இதயத்திற்கும் ஒரு செய்தி இருந்தது. இதனால் மனிதர்களின் அனுதின வேலைகளும் ஒரு உயரிய நிலைக்கு கொண்டு செல்லப்பட்டன. அவ்வேலைகள் ஆவிக்குரிய சத்தியங்களை நினைவுபடுத்துபவைகளாக மாறின.

இதைப்போலவே நாமும் கற்றுக்கொடுக்க வேண்டும். இயற்கையில் தேவனுடைய அன்பும் ஞானமும் வெளிப்படுவதைப் பிள்ளைகள் பார்க்க கற்றுக்கொள்ள வேண்டும். மரத்துடனும், பறவையுடனும், மரலோடும் தேவனைப் பற்றிய சிந்தையும் இணைந்திருக்கட்டும். காணப்படுபவைகள் எல்லாம் பார்க்கப்பட முடியாதவைகளை குறித்துச் செய்திகளை தரட்டும் வாழ்க்கையின் சம்பவங்கள் தெய்வீக பாடங்களை அறிய வழி வகுக்கட்டும்.

இயற்கையிலிருந்தும், அனுபவங்களிலிருந்தும் ஒரு முக்கிய பாடத்தைக் கற்றுக் கொள்ளுகிறோம். எல்லா காரியங்களும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டிருப்பதைப் போன்றே, நமது வாழ்க்கையும் சட்டதிட்டங்களால் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பது புரியும். அவைகள் நமது நன்மைக்காக கொடுக்கப்பட்டதென்றும், அவைகளுக்கு கீழ்ப்படிவதில், உண்மையான சந்தோஷமும், வெற்றியும் இருக்கிறது என்பதும் தெளிவாகும்.

*அதிகாரம் - 7*

***இயற்கையிலிருந்து வரும் நடைமுறைப் பாடங்கள்***

***தேவ சிருஷ்டிப்பில் அவரது குரல்***

எங்கு திரும்பினாலும் தேவனுடைய குரலை கேட்கிறோம். அவரது கிரியைகளை நம்மைச் சுற்றி காண்கிறோம். இடியின் சத்தத்திலிருந்து பறவைகளின் சத்தம் வரையும் தேவ துதியையே இயற்கையில் கேட்கின்றோம். ஆகாயமும், பூமியும், கடலும், அவைகளின் வர்ணங்களுடனும் அழகுடனும் தேவ மகிமையையே வெளிப்படுத்துகின்றன. மலைகள் அவரது வல்லமையைக் குறித்துப் பேசுகின்றன. உயரத்தில் காற்றில் ஆடிக்கொண்டிருக்கும் மரங்களும் அழகான மலர்களும் தேவனையே சுட்டிக் காட்டுகின்றன. நிலத்தை மூடிக்கொண்டிருக்கும் பச்சை நிறப் போர்வை, சிறிய ஜீவராசிகளின் மேலும், தேவனது அக்கரையை காட்டுகிறது. சமுத்திரத்தின் குகைகளும் பூமியின் ஆழமும் அவரது பொக்கிஷங்களை வெளிப்படுத்துகின்றன. முத்துக்களை கடலில் வைத்திருக்கிறார். விலைமதிப்பற்ற உலோகங்களை பாறைகளிடையே வைத்திருக்கிறார். தேவன் அழகை நேசிக்கிறவராக இருக்கிறார். காலையில் உதிக்கும் சூரியன், எல்லா உயிரினங்களுக்கும் அவர் கொடுத்திருக்கிற ஜீவ ஒளிக்கு அடையாளமாக இருக்கிறது. பூமியையும் ஆகாயத்தையும் பிரகாசிக்கவைக்கும் அழகும் தேவனைப் பற்றியே நம்மிடம் பேசுகின்றன.

இத்தனை ஈவுகளைக் கொடுத்திருக்கிற தேவனை நாம் மறந்து விடலாமா? இவைகள் எல்லாம் தேவனைப் பற்றி அதிகமாகச் சிந்திக்க நம்மை வழிநடத்தட்டும். நாம் வசிக்கும் இல்லத்திலும் இடத்திலும் எவ்வளவோ அழகை நாம் இரசிக்கிறோம். பரலோகின் வயல்களையும், ஜீவ ஊற்றுகளையும், ஆறுகளையும், மரங்களையும், ஜொலிக்கும் பட்டணத்தையும், அங்கு பாடும் வெள்ளை அங்கி தரித்த பாடகர்களையும் இயற்கை நினைவூட்டட்டும். அந்த உலகின் அழகை எந்த ஓவியராலும் சித்தரிக்க முடியாது. ***"தேவன் நம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை காது கேட்கவும் இல்லை". 1 கொரி 2:9 Counsels to Parents, Teachers and Students, p. 54, 55.***

***தேவனின் அன்பும் அவரது குணமும்***



1ST Proof

தேவனின் உன்னதமாக இந்த இயற்கையின் புத்தகத்திலிருந்து தாய்மார்கள் பிள்ளைகளுக்கு பாடங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதை செய்ய முடியாமல் போகும்படியாக தங்கள் நேரங்களை செயற்கையான காரியங்களில் செலவழித்து மற்ற கவலைகளிலும் மூழ்கிவிடக்கூடாது. பூப்பதற்காக திறக்கும் மொட்டுகளிலிருந்தும், மலர்ந்த பூக்களிலிருந்தும் தேவனைப் பற்றிய செய்திகள் பிள்ளைகளின் மனதில் பதிக்கப்பட வேண்டும். உயரமான மரங்களும், பறவைகளின் பாடல்களும், தேவனின் நற்குணத்தையும், இரக்கத்தையும், அவரது ஈவுகளையும் நினைவூட்டும். தனித்தன்மையுடைய ஒவ்வொரு இலையும், பூவும் தேவன் அன்பானவர் என்பதை பிள்ளைகளுக்குச் சொல்லும். அழகான, இரம்மியமான, நன்மையான ஒவ்வொன்றும் தேவபிதாவின் அன்பைப் பற்றி அவர்களுக்குச் சொல்லும். தேவனுடைய படைப்பில் அவரது குணத்தை அவர்கள் கண்டுகொள்ளலாம். ***Signs of the Times, Aug. 5, 1875.***

***தேவனின் பூரண சர்குணம்***

இயற்கையின் பொருட்கள் தங்களால் முடிந்த வரை பூமியை அழகுபடுத்தித் தேவனது சர்குணத்தை வெளிப்படுத்துகின்றன. மனிதர்களும் தேவனின் இந்த குணத்தை உலகிற்கு தங்கள் வாழ்வில்காட்ட பிரயாசப்பட வேண்டும். மனிதர்கள் தங்கள் வழியாக தேவன் கிரியை செய்ய அனுமதிக்க வேண்டும். தேவனின் நீதியும் இரக்கமும், நன்மையும் வெளிப்படுமாறு நடக்க வேண்டும். ***Letter 47, 1903.***

***சிருஷ்டிகரும் ஓய்வுநாளும்***

பூமியில் பயிர்களும் மரங்களும் வளரத்தக்கதாக சூரிய ஒளியை நமக்கு தருபவர் யார்? முழை வர செய்பவர் யார்? ஆகாயத்தையும் நட்சத்திரங்களையும் சூரியனையும் நமக்குக் கொடுத்தவர் யார்? உங்களுக்கு அறிவை கொடுத்து உங்களை பாதுகாப்பவர் யார்? ஒவ்வொரு முறையும் நாம் உலகத்தைப் பார்க்கும்பொழுது அதை உருவாக்கியவரைப் பற்றி சிந்திக்க நினைவுபடுத்தப்படுகிறோம். வானமாக நமக்கு மேலாக இருக்கும் குடை. பச்சைப் பசேலேன பூமியை மூடும் ஜமுக்காளம். தேவ வல்லமையையும் தயவையும் அன்பையும் இவைகள் நியாபகப்படுத்துகின்றன. புல்லை கறுப்பாக அவர் படைத்திருக்கலாம்.

தேவன் அழகை விரும்புகிறவராக இருக்கிறார். எனவே நாம் பார்ப்பதற்கும் அழகானவற்றை நம்மைச் சுற்றி வைத்திருக்கிறார். பூக்களுக்கு அவைகளின் நிறங்களையும் அழகையும் அவரேயன்றி வேரு எந்த நபர் கொடுத்திருக்க முடியும்.

இயற்கையைக் காட்டிலும் சிறந்த ஒரு பாட புத்தகம் இருக்க முடியாது. **"காட்டு புஷ்பங்கள் எப்படி வளருகிறகென்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதும் இல்லை நூற்கிறதும் இல்லை. என்றாலும் சாலமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை."** பிள்ளைகளது மனங்கள் தேவனிடம் உயர்த்தப்படட்டும். இதற்காகவே தேவன் நமக்கு ஏழூாம் நாளை கொடுத்திருக்கிறார். சிருஷ்டிப்பின் நியாபகச் சின்னமாக அதை நமக்கு விட்டிருக்கிறார். ***Manuscript 16, 1895***

### *பிரமாணத்திற்கு கீழ்ப்படிதல்*

இயற்கையை தாங்கிக் கொண்டிருக்கும் அதே வல்லமையே மனிதனிடமும் கிரியை செய்கிறது. நட்சத்திரத்தையும், அனுவையும் செயல்படுத்தும் சட்டங்கள் நம்மையும் கட்டுப்படுத்துகின்றன. நமது இருதயம் அதற்கான சட்டங்களை பின்பற்றுகின்றது. இதன் நிமித்தமாக சரீரத்தின் இரத்த ஓட்டத்தை அது சீராக வைக்கிறது. இச்சட்டங்களும் இயற்கை கூறுகளும், தேவ ஞானத்திடமிருந்து வந்தவை. மனிதனையும் தேவனே ஆள வேண்டும். எல்லா உயிர்களின் பிறப்பிடம் தேவன். அவருடன் இசைந்து செயல்படுவதே வாழ்க்கையின் உண்மையான வேலையாகிறது. எல்லா சிருஷ்டிக்கும் இந்த நிபந்தனைக் கொடுக்கப்படுகிறது. தேவனது ஜீவனை பெற்றுக்கொளவதால் உயிர் நிலைகொண்டிருக்கிறது. ஆகவே தேவனது சித்தத்திற்கு இசைவான ஒரு வாழ்க்கை வாழப்பட வேண்டும். சரீர ரீதியாகவும் மனோரீதியாகவும் ஒழுக்கரீதியாகவும் அவர் அமைத்திருக்கின்ற கட்டளைகள் மீறப்பட்டால் வேற்றுமையையும் குழப்பத்தையும் சீரழிவையும் கொண்டு வரும். இதை செய்யும் நபர் பிரபஞ்சத்திற்கு எதிரானவராக மாறுகிறார்.

இந்நியமங்களை சரியாக புரிந்துகொள்ள வேண்டும். இயற்கையும் ஒரு புதிய பிரகாசத்துடன் நம் கண்களில் ஒளி வீசும். உலகம் ஒரு பாடப்புத்தகம். வாழ்க்கை ஒரு பள்ளிக்கூடம். இயற்கையுடனும், தேவனுடனும் மனிதன் இசைந்து இருக்க வேண்டும். தேவ நியமங்களும் பிரமாணங்களும் பிரபஞ்சத்தையே கட்டுப்படுத்துகின்றன. அவைகள் மீறப்பட்டதால் வந்த விளைவுகள் போன்ற பாடங்கள் மனதில் ஆழமாக பதியும். குணத்தையும் சீர்படுத்தும். இந்த பாடங்களையே நமது பிள்ளைகள் கற்க வேண்டும். ***Education, . பக்கம் 99, 100.***

1ST Proof

### *இயற்கையின் நியமங்களிலிருந்து வரும் பாடங்கள்*

நிலத்தை பயிறுக்காக பண்படுத்தும் ஒரு நபர் அநேக பொக்கிஷங்கள் தனக்கு முன்பாக திறக்கப்படுவதைக் காண்பார். விவசாயத்திலும், தோட்டக் கலையிலும் இயற்கையின் கூறுகள் கவனிக்கப்பட வேண்டும். அப்பொழுது வெற்றி பெறலாம். ஒவ்வொரு செடியின் விசேஷ தேவை படிக்கப்பட வேண்டும். வெவ்வேறு வகையான செடிகளுக்கு வெவ்வேறு வகையான மண்ணும், வெவ்வேறு வகையிலும் வளர்க்கப்பட வேண்டும். ஒவ்வொன்றின் கூறுகள் சரியாக அறியப்பட்டு பின்பற்றப்பட வேண்டும். இதுவே வெற்றியின் நிபந்தனை.

செடியை இடமாற்றி நடும்பொழுது வேர்கள் பாதிக்படக்கூடாது. சிறு செடிகளுக்கு அதிகமான கவனம் தேவை. தண்ணீர் ஊற்றப்பட்டு, குளிரிலிருந்தும் அதிக வெப்பத்திலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும். களைகள் நீக்கப்பட்டு பூச்சிகள் அண்டாதவாறு பார்க்கப்பட வேண்டும். இவைகளை செய்யும்பொழுது பல பாடங்களைக் கற்கிறோம். நமது குண வளர்ச்சிக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. இவ்வேலையே முன்னேறுவதற்கான ஒரு வழியாக இருக்கிறது. இயற்கையின் கூறுகளுக்கு இணங்கி பொருமையுடன், அதிகமான கவனத்தையும் செலுத்தி இதை செய்கிறோம். அவசியமான ஒரு பயிற்சியை இவ்வேலை கொடுக்கிறது.

உயிர்களின் இரகசியங்களுடன் நாம் தொடர்ந்து தொடர்பு கொள்ளுகிறோம். இயற்கையின் அழகையும் இவ்வேலையில் பார்த்துக் கொள்ளுகிறோம். இளகின இருதயத்துடன் கரிசனையுடனும் தேவசிருஷ்டிகளுடன் உடன்படுகிறோம். இது நம் சிந்தையை எழுப்பி, குணத்தை உயர்த்தி, நம்மை சுத்திகரிக்கின்றது. இப்பாடங்கள் மற்ற

மனங்களை சரியான வகையில் கையாள நம்மை ஆயத்தப்படுத்தும். ***Education, 111, 112.***

*விதைக்கப்படும் விதையிலிருந்து வரும் பாடங்கள்*

விதையைப் பற்றி பேசும் இவ்வுவமை ஆழமான ஆவிக்குரிய பாடங்களைக் கொண்டது. விதையானது இதயத்தில் போடப்பட்ட தேவகோட்பாடுகளை அடையாளப்படுத்துகின்றது. விதையின் வளர்ச்சி குண வளர்ச்சியைக் காட்டுகிறது. பிள்ளைகள் மண்ணை பண்படுத்தி விதைளை விதைக்கட்டும். இதை அவர்கள் செய்யும்பொழுது பெற்றோர் அல்லது ஆசிரியர் இதயம் என்ற மண்ணைப்பற்றி அவர்களிடம் பேசட்டும். நமது மனம் எப்படி நிலத்திற்கு ஒப்பாக இருக்கிறது என்று விளக்கட்டும். அதில் விதைக்கப்படும் நல்ல விதைகளையும் கெட்ட விதைகளையும் பற்றி பேசட்டும். மண்ணானது ஆயத்தப்படுத்தப்பட்டு நிலம் பண்படுத்தப்படுவதுபோல, சத்தியம் என்ற விதையை ஏற்றுக்கொள்ள இதயம் என்ற நிலம் பண்படுத்தப்படவேண்டும் என்றும் புரியவைக்கப்பட வேண்டும். செடி வளர வளர, அத்துடன் பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்க்கையும் இவ்வண்ணம் செடியுடனே வளர்க்கப்படலாம். ***Counsels to Parents, Teachers and Students, பக்கம் 142.***

விதையானது நிலத்தின்மேல் தூவப்படுவதைக் கொண்டு, இயேசுவின் மரணத்தைப் பற்றிய பாடங்களைச் சொல்லிக் கொடுக்கலாம். விதையிலிருந்து எழும்பும் சிறு செடியைக்கொண்டு, உயிர்த்தெழுதலைக் குறித்து கற்றுக்கொடுக்கலாம். ***Education, பக்கம் 111.***

*இதய தோட்டமும் பண்படுத்தப்பட வேண்டும்.*

நிலத்தை உழத் துவங்குவதிலிருந்து பாடங்களை தொடர்ந்து கற்கலாம். எந்த நிலமும் உடனே பலன் கொடுக்கும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. அயராது தொடர்ந்து நிலம் ஆயத்தப்படுத்தப்பட வேண்டும். பின்பு விதை விதைக்கப்பட்டு பயிறும் வளர்க்கப்படுகிறது. ஆவிக்குரிய விதையும் இப்படியே கையாளப்படவேண்டும். இதயம் என்ற தோட்டம் முதலில் பண்படுத்தப்பட வேண்டும். மனந்திரும்புதலினால் மண் உடைக்கப்பட வேண்டும். நல்ல செடிகளை நெருக்கும் களைகள் எடுக்கப்பட வேண்டும். களை அதிகமாக



1ST Proof

வளர்ந்துவிட்டால் அதை நீக்க அதிகமாக உழைக்க வேண்டும். இதயத்தின் களைகளை நீக்க கிறிஸ்துவுடன் விடாமுயற்சியுடன் செயல்பட வேண்டும். ***Education, பக்கம் 111.***

*கிருபையில் வளர்தல்*

தேவனின் அற்புதம் செய்யும் வல்லமையைப்பற்றி பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள். இயற்கையின் புத்தகத்தை அவர்கள் படிக்கும்பொழுது தேவன் அவர்ளோடு பேசுவார். சுத்தியங்களை இதயத்தில் பதிப்பார். விவசாயி நிலத்தை உழுது விதையை விதைக்கிறார். அவரால் செடியை வளரவைக்க முடியாது. முனித சக்தியால் செய்ய முடியாதவைகளை தேவனே செய்ய வேண்டும். அவரை நாம் சார்ந்திருக்க வேண்டும். தேவன் அவரது வல்லமையை விதைக்குள் வைத்திருக்கிறார். இதனால் அது உயிர் பெற்று வளருகிறது. விதையினுள் இருக்கும் உயிர், செடியாக வளருவதைத் தேவன் பார்த்துக் கொள்ளுகிறார். விதையின் கடினமான மேல்பாகத்தையும் உடைத்து செடி வளருகிறது. தேவனின் பராமரிப்பினால் இது நடக்கிறது. சிறிதாக முளைத்து கதிராகவும் செடியாகவும் வளருகிறது. விதைக்கு தேவன் செய்வதை பிள்ளைகளும் கேட்கும்பொழுது தேவகிருபையில் வளருவதன் இரகசியத்தைப் புரிந்து கொள்ளுவார்கள். ***Counsels to Parents, Teachers and Students, பக்கம் 124, 125.***

*சூழ்நிலைக்கு மேலாக உயருதல்*

அமெரிக்காவில் லீலி புஷ்பங்களைக் காணலாம். மிகவும் அழகாகவும் ஒரு சிறு துளி அழுக்குக்கூட இல்லாதபடி இவை பூத்திருக்கும். பூவானது மிக சுத்தமா இருக்கும். அவை வளரும் இடம் அழுக்கு நிறைந்த இடங்களாக இருக்கும். நான் என் மகளிடம் வேரின் அருகாமையில் இருக்கும் அச்செடியின் தண்டை எடுத்துவர சொன்னேன். ஒரு கைப்பிடி அளவு பூக்களுடன் இருந்த செடிகளை எடுத்து வந்தாள்.

ஆவைகளை நான் கவனித்தேன். பூவிற்கு கீழாக உள்ள செடிபகுதிகளில் அநேக சிறு துவாரங்கள் இருந்தன. அந்த துவாரங்கள் வழியாக செடியானது தேவையானவற்றை மண்ணிலிருந்து

எடுத்துக்கொண்டு அவைகளை அழகான பூவாக மாற்றுவதை புரிந்துக் கொண்டேன். தேவையில்லாத அழுக்குகளை அது ஒதுக்கியது. தூய்மையான ஒரு பூவை உருவாக்கியது.

இதைப்போலவே நமது வாலிபர்களுக்கும் நாம் கல்வியைக் கொடுக்க வேண்டும். இயேசுவைப் பற்றியும் அவரது தியாகபலியைக் குறித்தும் பிள்ளைகள் அறிவுறுத்தப்படட்டும். பரிசுத்தத்தையும், கிருபையையும், அன்பையும், பொருமையையும், இவைகளின் ஊற்றான தேவனிடமிருந்து எடுத்துக் கொள்ளட்டும். ***Manuscript 43a 1894.***

*விடாமுயற்சியையும் நம்பிக்கையயையும் கற்றுத்தரும் பாடங்கள்*

**“இப்போது நீ மிருகங்களையும் கேட்டுப்பார், அவைகள் உனக்கு போதிக்கும்; ஆகாயத்துப் பறவைகளைக் கேள், அவைகள் உனக்கு அறிவிக்கும். சமுத்திரத்தின் மச்சங்களைக் கேள் அவைகள் உனக்கு அறிவிக்கும். எறும்பினிடத்தில் போய்.... கற்றுக்கொள். ஆகாயத்துப்பட்சிகளை கவனித்துப் பாருங்கள். காகங்களை கவனித்துப் பாருங்கள்.” யோபு 12: 7,8; நீதிமொழிகள் 6: 6, மத்தேயு 6 : 26; லூக்கா 12 : 24.**

விலங்குகளும் ஆசிரியர்களாக பாடங்களைக் கொடுப்பார்கள். எறும்பு பொருமையையும், சுறுசுறுப்பையும், விடாமுயற்சியையும் கற்றுக்கொடுக்கிறது. எதிர்காலத்திற்கு எப்படி ஆயத்தமாக வேண்டும் என்பதையும் புரிய வைக்கிறது. பறவைகள் விசுவாசத்தையும், தேவன் மீது நாம் கொண்டுள்ள அழமான நம்பிக்கையைப் பற்றியும் கற்றுக்கொடுக்கின்றன. பரமபிதா எல்லாவைகளின் தேவைகளை சந்திக்கிறார். ஆயினும் விலங்குகள் உணவைத் தேட வேண்டியிருக்கிறது, பறவைகள் கூடு கட்ட வேண்டி இருக்கிறது. ஒவ்வொரு நொடியும் தங்களை பிடித்துவிடும் எதிரிகளின் ஆபத்து நிறைந்துள்ளது. ஆயினும் மன இரம்மியத்துடன் தங்கள் வேலைகளைச் செய்கின்றன. பறவைகளின் சிறு பாடல்களும் எவ்வளவு மகிழ்ச்சிகரமாக உள்ளன.

*தேவனின் பராமரிப்பை சங்கீதக்காரர் அழகாக வருணிக்கிறார்.*

**உயர்ந்த பர்வதங்கள் வரையாடுகளுக்கும் கன்மலைகள் குழிமுசல்களுக்கும் அடைக்கலாம். சங்கீதம் 104: 18.** அவர் பள்ளத்தாக்குகளில் நீரூற்றுகளை வரவிடுகிறார். ஆவைகள் மலைகள் நடுவே ஓடுகிறது. அவைகளின் ஓரமாய் ஆகாயத்து பறவைகள் சஞ்சரித்து, கிளைகளின்மேலிருந்து பாடும். ***நீர் உமது கையை திறந்து சகல பிராணிகளின் வாஞ்கையையும் திருப்தியாக்குகிறீர். சங்கீதம் 104: 12, 145: 16. Education, பக்கம் 117, 118.***

1ST Proof

*பூச்சிகள் கடுமையான உழைப்பைக் கற்றுக்கொடுக்கின்றன*

தேனீக்கள் நமக்கு ஒரு நல்ல உதாரணமாகத் திகழ்கின்றன. சரியான ஒழுங்கை பின்பற்றுகின்றன. வேலை செய்யாமல் இவைகள் இருப்பதில்லை. வேலைசெய்யாத எந்த தேனீயும் கூட்டிற்குள் அனுமதிக்கப்படுவதில்லை. தங்களுக்கு நியமிக்கப்பட்ட வேலையை அறிவாற்றலுடன் செய்கின்றன. இதுநம் ஞானத்திற்க மேலானதாக இருக்கிறது. சாலமோன் ஞானி சிறு காரியங்களை நாம் கவனிக்கும்படி சொல்லுகிறார். எறும்புகள் பெலனற்றவைகளாக இருந்தும் தங்கள் உணவை சேகரித்துக் கொள்ளுகின்றன என்கிறார். இந்த சிறிய ஆசிரியர்கள் உண்மையுடனும், உத்தமத்துடனும் செயல்படுவதை இவைகள் கற்றுத்தருகின்றன. இவைகளைப்போல் நாமும் தேவன் நமக்கு கொடுத்திருக்கிற திறமைகளைப் பயன்படுத்தி அவைகளை மேம்படுத்த வேண்டும். இதை நாம் செய்திருந்தால் எவ்வளவு பயனுள்ளவர்களாக இருந்திருப்போம். சிறு பிராணிகளின்மேலும் தேவனின் கண் இருக்கிறது. அவரது சாயலில் படைக்கப்பட்ட மனிதனை அவர் கவனியாமல் விடுவாரோ? மனிதனுக்கு அருளியிருக்கின்ற திறமைகளுக்கேற்ற பலன்களையும் நிச்சயமாக எதிர்பார்ப்பார். ***Testimonies for the Church, Vol. 1 p. 455, 456.***

*பாகம் - III*

*போதுமான பயிற்சியைப் பெற்ற ஆசிரியர்கள்*

*அதிகாரம் - 8*

*ஆயத்தம் தேவை*

*தாய்மார்கள் ஆயத்தப்படுவதில்லை*

ஒரு குழந்தையின் முதல் ஆசிரியர் அதன் தாய். பிள்ளைகள் அதிகமான பாதிப்புக்களுக்கு உள்ளாகும் பருவம் குழந்தைப் பருவம். இப்பருவத்தில் குழந்தையின் வளர்ச்சியும் வேகமாக இருக்கிறது. அச்சமயத்தில் குழந்தையோடு தாய்மட்டுமே அதிகமாக இருக்கிறாள். எனவே குழந்தைக்குக் கொடுக்கப்பட வேண்டிய கல்விக்கு பொறுப்பாளராகிறார். குழந்தையின் குணத்தை நன்மைக்கேதுவாகவோ, அல்லது தீமையின் பக்கமோ சேர, குழந்தையை வழிநடத்தும் முதல் தருணம் தாய்க்கு கிடைக்கிறது. தனது பொறுப்பின் முக்கியத்துவத்தை ஒரு தாய் புரிந்துகொள்ள வேண்டும். மற்ற எல்லா ஆசிரியர்களைக் காட்டிலும் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த தருணத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். எனினும் இதை எவரும் கவனிப்பதில்லை. நல்ல தாயாக இருப்பது எப்படி என்று சிந்திப்பது கூட கிடையாது. எந்த நபரின் தாக்கம் குழந்தையின் மேல் அதிகமாக இருக்கப்போகிறதோ அந்நபர் குழந்தைக்கு நல்ல ஒரு கல்வியைப் புகட்ட சிறு முயற்சியும் எடுப்பதில்லை. **Education, 275.**

***கவனத்துடன் ஒரு முழுமையான ஆயத்தமே உடனடித் தேவை***

குழந்தைகளை பராமரிப்போர் பெரும்பாலாக அதன் சரீர தேவைகளை அறியாதவர்களாக இருக்கிறார்கள். ஆரோக்கியத்தின் விதிகளையும், வளர்ச்சியின் கூறுகளையும் தெரியாதவர்களாகவே இருக்கின்றனர். குழந்தையின் மனோரீதியான வளர்ச்சியையும், ஆவிக்குரிய வளர்ச்சியையும் பார்க்க தகுதி இல்லாதவர்களாக காணப்படுகிறார்கள். இவர்கள் திறமையாக ஒரு தொழிலை நடத்தலாம், சமுதாயத்தில் ஒரு நட்சத்திரத்தைப்போல பிரகாசிக்கலாம், அதிகமாக படித்திருக்கலாம். ஆயினும் குழந்தையைப் பராமரிப்பதில் ஒன்றுமே தெரியாதவர்களாக இருக்கிறார்கள்.

குழந்தைக்குக் கொடுக்கப்படும் ஆரம்ப கால, மற்றம் பிற்காலத்தின் பயிற்சிக்கு, தாய் தந்தையர் தாமே பொறுப்பாளர்களாக இருக்கிறார்கள். தாயும் தந்தையும் கவனத்துடன் உடனடியாக இதற்கென்று ஒரு முழுமையான ஆயத்தத்தை ஏரெடுக்க வேண்டும். தாய், தந்தையாக மாறுவதற்கு முன்பாகவே இதை செய்ய வேண்டும்.



1ST Proof

சரீர வளர்ச்சி, அதன் இயக்கங்கள், ஆரோக்கியம் பற்றியும், அறிந்துகொள்ள வேண்டும். மரபியல் கூறுகள், எப்படி பிள்ளை பிறப்பதற்கு முன்பாகவே தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதும் தெரிந்திருக்க வேண்டும். சுத்தம், சுகாதாரம், உடை, உடற்பயிற்சி, நோய்களுக்கான சிகிச்சைகள், மனோ வளர்ச்சி ஒழுக்கத்தை வளர்க்கும் பயிற்சி ஆகியவைகளையும் படித்திருக்க வேண்டும். பெற்றோரின் இந்த வேலையின் முக்கியத்துவம் முதலில் அங்கிகரிக்கப்பட வேண்டும். இது நடந்தால் ஒழிய பிள்ளைக்குக் கொடுக்கப்படும் கல்வி அதன் முழுமையான வேலையைச் செய்ய முடியாமல் போய்விடும். பெற்றோர்கள் அவர்களது புனிதமாக பொறுப்புக்களை நிறைவேற்ற பயிற்சி பெற வேண்டும். **Education, பக்கம் 275, 275.**

இயற்கையின் விதிகளை பெற்றோர் படிக்க வேண்டும். மனித சரீரத்தின் இயக்கத்தைப் புரிந்திருக்க வேண்டும். ஒவ்வொரு அவயத்தின் வேலையையும், எப்படி ஒவ்வொரு அவையமும் ஒன்றோடு ஒன்று சார்ந்திருக்கிறதென்றும் தெரிந்திருக்க வேண்டும். அவயங்களினிடையே உள்ள தொடர்பும் படித்திருக்கப்பட வேண்டும். மனதுடன் சரீரம் எப்படி தொடர்புடையதாக இருக்கிறது என்பதையும், மனதையும், சரீரத்தையும் ஆரோக்கியமாகப் பராமரிப்பது எப்படி என்றும் அறிந்திருக்க வேண்டும். இந்த ஆயத்தமில்லாமல் பெற்றோரின் பொறுப்புக்களை சுமக்க முயன்றால் அது பாவம். **The Ministry of Healing பக்கம் 380.**

இதை செய்ய வல்ல நபர்

எப்படிப்பட்ட நபர் இவ்வேலையைச் செய்யக் கூடும் என்று பெற்றோர்கள் விசாரிக்கபட்டும். தேவன் மட்டுமே இதை முழுமையாகச் செய்து முடிப்பவரா இருக்கிறார். தேவனை விட்டு, அவர் உதவியையும் அறிவுறுத்தலையும் நாடாதிருந்தால் தோல்வியே மிஞ்சும். ஜெபத்தினாலும், வேத வாசிப்பினாலும், உண்மையான வாஞ்சையினாலும் இந்த முக்கிய வேலையில் வெற்றிக் காணலாம். அவர்கள் எடுத்த முயற்சிகளுக்கு நூறு மடங்கான நற்பலன்களை காண்பார்கள். ஞானத்தின் பிறப்பிடம் நமக்காக திறக்கப்பட்டிருக்கிறது. இந்த ஞான ஊற்றிலிருந்து அவசியமான அறிவாற்றலை எல்லோரும் பெற்றுக்கொள்ளலாம். சிறந்த

முறையில் இந்தப் பொறுப்பை நிறைவேற்றலாம். **Testimonies for the Church, Vol. 4 பக்கம் 198.**

சில நேரங்களில் நம் மனம் எளிதில் சோர்வடைந்துவிடும். ஆயினும் பிள்ளைகளின் நிகழ்கால மற்றும் எதிர்கால சந்தோஷத்தைக் குலைக்கும் அபாயங்களை உணர்ந்தவர்களாய் பெற்றோர்கள் செயல்பட வேண்டும். விடா முயற்சியுடன் முழு மனதுடன் தேவனிடமிருந்து பெலனையும் ஞானத்தையும் பெற வேண்டும். கணக்குக் கொடுக்கப்பட வேண்டிய இந்த ஆத்துமாக்களை பராமரிப்பதில் அமைதியுடனும், ஸ்திரமாகவும், தெளிவாகவும், ஒவ்வொரு சூழ்நிலையையும் நன்கு ஆராய்ந்துப் பிள்ளைகளுக்கு காவலாக இருக்க வேண்டும். **Review and Herald, Aug. 30, 1881.**

***குழந்தையை வழிநடத்த, தேவசித்தம் அறிந்திருக்கப்பட வேண்டும்.***

தேவசித்தத்தை அறிந்துக்கொள்ள பெற்றோர்கள் தவறக் கூடாது. தவறினால் இதற்காக எந்த ஒரு சாக்குப் போக்கையும் சொல்ல முடியாது. தேவ இராஜியத்தின் பிரமாணங்களுக்கு பெற்றோர்கள் கீழ்படிய வேண்டும். இதை அவர்கள் செய்தால் மட்டுமே பிள்ளைகளை பரலோகிற்கு வழிநடத்த முடியும். சகோதர சகோதரிகளே தேவன் உங்களிடம் எதை கேட்கிறார் என்று புரிந்துகொள்ளுங்கள். எது சரி என்றும் எது தவறென்றும் நீங்கள் முதலில் புரிந்துகொண்டால் மட்டுமே, பிள்ளைகளுக்கு தேவனை பற்றி ஒரு கல்வியைக் கொடுக்க முடியும். தேவனுக்கு கீழ்ப்படிவது ஜீவனென்றும், கீழ்ப்படியாமை நித்திய மரணம் என்றும் உணருங்கள்.

தேவனுடைய சித்தத்தை புரிந்துகொள்ளுவதே நம் வாழ்வின் பிரதான வேலையாகக் கொள்ள வேண்டும். இதை செய்தால் பிள்ளைகளை சரியாக வழிநடத்துவோம். **Manuscript 103, 1902.**

தேவனின் புத்தகம் எல்லா அறிவுரைகளையும் கொண்டது.

வாழ்க்கையின் அடிப்படை சட்டமாக, பெற்றோர்கள் வேத வார்த்தையை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லையெனில் அவர்களது பொறுப்புக்களை சரிவர நிறைவேற்ற முடியாமல் போய்விடும். தங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆத்தும பொக்கிஷமும் நித்திய ஜீவனை



1ST Proof

அடையும்படியாக ஒரு கல்வியைப் புகட்ட வேண்டும். பரலோகம் செல்வதற்கான ஒரு குணத்தை அவர்களில் உருவாக்க வேண்டும். பெற்றோர்கள் உணர வேண்டிய பெரிய உண்மை இதுவே. **Manuscript 84, 1897.**

அறிவுரைகள் நிறைந்த புத்தகமாக வேதம் இருக்கிறது. இதுவே அவர்களது பாடப்புத்தகமாக அமைய வேண்டும். அதன் நியமங்களின்படி பிள்ளைகள் வழிநடத்தப்பட வேண்டும். இதனால் சரியான வழியில், பிள்ளைகளின் கால்கள் நிலைநிறுத்தப்படும், பரிசுத்த கடமைகளைக் குறித்து ஒரு கல்வியையும் பெறுவார்கள். **Testimonies for the Chruch Vol. 4 பக்கம் 198.**

பெற்றோரின் பணி ஓர் உன்னதமாக முக்கியமான பணி. அவர்களது கடமைகள் மிகப்பெரியவைகளாக இருக்கின்றன. ஆயினும் தேவ வார்த்தைகளை அவர்கள் படித்தால் எல்லா அறிவுரைகளையும் மதிப்பற்ற வாக்குத்தத்தங்களையும் காண்பார். அவர்களது கடமையை உண்மையுடன் செய்யும்பொழுது எல்லா வாக்குத்தத்தங்களும் அவர்களுக்கு நிறைவேறும். **Signs of the Times, Apr. 8 1886.**

***பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்கும் விதிகள்***

பெற்றோர்களும் பிள்ளைகளும் வழிநடத்தப்படத் தக்கதாகத் தேவன் சட்டங்களைக் கொடுத்திருக்கிறார். இவைகள் மீறப்படவேக் கூடாது. பிள்ளைகள் விரும்புவதையெல்லாம் அனுபவிக்கவிடப்படக் கூடாது. தங்கள் விருப்பம்போல் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என் பிள்ளைகள் நினைத்துவிடுவார்கள். பெற்றோர்களது அறிவுரைகளை கேட்கமாட்டார்கள்.

தேவ நியமங்களிலிருந்து சற்று விளகுவதும் பாவம். அவரது வார்த்தையின் கோட்பாடுகளுக்கு ஏற்ப பெற்றோர் பிள்ளைகளை வழிநடத்த வேண்டும் என்று தேவன் எதிர்ப்பார்க்கிறார். விசுவாசமும் கிரியையும் சேர்ந்துக் காணப்பட வேண்டும். வீட்டிலும், பள்ளியிலும் செய்யப்படுபவைகள் எல்லாம், ஒழுங்கும் கிரமமாகவும் செய்யப்பட வேண்டும். **Letter 9, 1904.**

**வேதமும் சாட்சியாகமும்**

பிள்ளைகளுக்கு இல்லத்தில் கொடுக்கப்படும் கல்வி தேவதிட்டத்தின்படி அதன் வேலையை முடிக்க வேண்டும். பெற்றோர்கள் கண்ணும் கருத்துமான வேத மாணாக்கர்களாக இருந்தால் மட்டுமே இது நடக்கும் அந்த பெரிய ஆசிரியரின் மாணவர்களாக இருக்க வேண்டும். அவரிடம் கற்க வேண்டும். ஒவ்வொரு நாளும் அன்பின் பிரமாணம் அவர்களது உதடுகளில் இருக்க வேண்டும். அவர்களுடைய முன்மாதிரியான வாழ்க்கையில் காணப்பட்ட கிருபையும் சத்தியமும் அவர்களிடமும் இருக்க வேண்டும். இது நடந்தால் ஒரு பரிசுத்தப்படுத்தப்பட்ட அன்பு, பிள்ளைகளையும் பெற்றோர்களையும் இணைக்கும். இவர்களது இருதயங்கள் ஒன்றாக பிணைக்கப்படும். இப்படியும் வளரும் வாலிபர்கள் சத்தியத்தில் நிலைநிறுத்தப்பட்டிருப்பார்கள். தேவ அன்பில் ஆழமாக வேரூன்றி இருப்பார்கள்.

தேவனுடைய சித்தமும் வழியும் அட்வெந்து மக்களின் வழியும் சித்தமுமாக மாறும்பொழுது, இம்மக்களின் பிள்ளைகள் தேவனை நேசித்து அவருக்கு கீழ்ப்படியும்படி வளருவார்கள். சாத்தான் அவர்களது சிந்தையை ஆட்கொள்ள முடியாமல் போகும். தேவனுடைய வார்த்தைக்கு முதலிடம் கொடுக்கும்படி ஒரு கல்வியைப் பெற்றிருப்பார்கள். அவர்களுக்கு வரும் எல்லா அனுபவங்களையும் வேதத்தைக் கொண்டும் சாட்சியாகமத்தைக் கொண்டும் சோதித்துப் பார்ப்பார்கள். **Letter 356, 1907.**

**காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள்**

தங்களுக்காகவும் தங்கள் பிள்ளைகளுக்காகவும் பெற்றோர்கள் வேதத்தை படித்துக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் இது நடப்பதில்லை. சரியாகப் பராமரிக்கப்படாமல், கட்டுப்படுத்தப்படாமல், சரியான வழிநடத்தல் இல்லாமல் பிள்ளைகள் வளருகிறார்கள். வீணாக்கின காலத்தை மீட்டுக்கொள்ளத்தக்கதாக பெற்றோர் தங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்ய வேண்டும். மிகச் சிறந்த தாக்கங்களுக்கு மத்தியில் இருக்கத்தக்கதாக பிள்ளைகளை பார்த்துக்கொள்ள வேண்டும். ***Manuscript 76, 1905.***

பேற்றோர்களே வேத வார்த்தைகளைத் தேடுங்கள். கேட்கிறவர்களாக மட்டும் இராதபடி அதன்படி செய்கிறவர்களாகவும் இருங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் கொடுக்கும் கல்வி, தேவன் வைத்திருக்கிற தரத்தை எட்டட்டும். ***Manuscript 57, 1897.***

***"தேவன் கூறுவது என்ன" இதுவே நமது நியதி***

பிள்ளைகளை தேவனுடைய வழியில் நடத்துவதே பெற்றோர்களின் வேலை. இது அசட்டைச் செய்யப்படக்கூடிய விஷயம் அல்ல. தேவனுடைய கோபத்தைச் சம்பாதித்துவிடுவோம். முற்றவர்கள் என்ன செய்வார்கள் என்றும், எது சுலபமான வழி என்றும் நாம் யோசிக்கக் கூடாது. தேவன் என்ன சொல்லுகிறார் என்பதே நம் சிந்தையில் இருக்க வேண்டும். தவறான வழியில், பெற்றோர்களும் சரி, பிள்ளைகளும் சரி, சந்தோஷத்தையும் சமாதானத்தையும் காண முடியாது. தேவன் மேல் அன்பும் பயமும் இருக்கும் பொழுது, மகிழ்ச்சியும் சமாதானமும் நிலவும்.

தேவ வார்த்தையையும், உங்கள் இதயத்தையும் தேவனுக்கு முன்பாகத் திறங்கள். வேதம் என்ன சொல்லுகிறது என்பதைக் கண்டுபிடியுங்கள். உங்கள் வாழ்க்கையின் எல்லா இரகசியத்தையும் தேவன் வார்த்தையோடு வைத்து சோதித்துப் பாருங்கள். இது உங்கள் வாழ்க்கையின் நியதியாக இருக்கட்டும். மற்ற ஆத்துமாக்களை நேசிப்பவர்கள் அவர்கள் ஆபத்தில் இருப்பதைப் பார்த்து அமைதியாக இருக்கமாட்டார்கள். தேவனுடைய வார்த்தை மட்டுமே மற்றவர்களை சரியான வகையில் கையாளும் ஞானத்தைக் கொடுக்கும். அவர்களை இரட்சிக்கும்படி அது கிரியை செய்து அவ்வேலை தொடர்ந்து நடக்கவும் செய்யும். ***Review and Herald, 30, 1897.***

***தனிப்பட்ட ஆயத்தம்***

நமது சரீர பெலத்தையும், அறிவின் சக்தியையும் அதிகமாக பயன்படுத்தும் வேலையாகப் பிள்ளைகளை சரியாக வழிநடத்தும் வேலை உள்ளது. மற்ற எல்லா அலுவல்களைப் பார்க்கிலும் இதைச் செய்ய சரீரமும், சிந்தையும் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். ***Pacific Health Journal June, 1890.***

தாயாக பொறுப்பேற்க்கும் ஒவ்வொரு ஸ்திரியும் சம நிலையான மனதையும் நல்ல குணத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

1ST Proof


குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

நல்லதையும், உண்மையானதையும், அழகானதையுமே பிரதிபலிக்க வேண்டும். கணவனையும் பிள்ளையையும் தீராத அன்பினால் தன் இதயத்துடன் பிணைத்துக் கொள்ள வேண்டும். இந்த அன்பை தயவான வார்த்தைகளினாலும் கரிசனையுடன் நடந்துகொள்ளுவதினாலும் காட்ட வேண்டும். பிறகு இது வீட்டின் சட்டமாக உருவெடுத்துப் பிள்ளைகளாலும் பின்பற்றப்படும்.

***தாய்மார்களே இது உங்களது புனிதமான வேலை***

என் சகோதரியே, கிறிஸ்து அவருடைய கட்டளைகளை உன் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்கும் வேலையை உனக்குக் கொடுத்திருக்கிறார். இதைச் செய்ய நீங்கள் தகுதிபெற நீ முதலில் கிறிஸ்துவின் எல்லா நியமங்களுக்கும் கீழ்படிய வேண்டும். ஒவ்வொரு வார்த்தையிலும் செயலிலும் அதிக கவனம் இருக்கட்டும். உன் வார்த்தைகளை மிக கவனமாகக் காத்துக்கொள். சீக்கிரமாக கோவப்படுவதை மேற்கொள். பொறுமை இல்லாமை காணப்பட்டால் இல்ல வாழ்க்கையை, விரும்பப்பட முடியாத ஒன்றாகவும், வெறுக்கும்படியாகவும் மாற்ற சாத்தானுக்கு உதவியாக இருக்கும். ***Letter 47 a 1902.***

***தேவனுடன் சேர்ந்து வேலை செய்யுங்கள்***

தாய்மார்களே தேவ அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ள இதயத்தை எப்பொழுதும் திறந்துவையுங்கள். தேவசித்தத்திற்கு இசைந்து உங்கள் பங்கை நீங்கள் செய்ய வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவனுடைய ஒளியில் நின்று ஞானத்தைப் பெறுங்கள். சரியாக நடந்து, தேவனே உங்களுக்கு மேலாக வேலை செய்பவர் என்பதை ஏற்றுக்கொண்டு அவருடன் சேர்ந்து பணிபுரியுங்கள். பரலோக காரியங்களை ஆழமாக சிந்தியுங்கள் தாயாக நீங்கள் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்ற தேவன் உங்களுக்கு தந்திருக்கிற தாலந்துகளை உபயோகியுங்கள். தெய்வீக வேலையாட்களுடன் சேர்ந்து பணிபுரியுங்கள் அறிவாற்றலுடன் செயல்படுங்கள். குடித்தாலும் புசித்தாலும் எதைச் செய்தாலும் தேவ மகிமைக்கென்றுச் செய்யுங்கள். ***Signs of the Times, April 9, 1896.***



1ST Proof

மனதுருகும் மீட்பரின் பராமரிப்பிற்கு தாய் தன்னையும் தன் பிள்ளைகளையும் ஒப்படைத்துவிட வேண்டும். பொறுமையோடும், ஊக்கத்துடனும், உண்மையோடும் தாய் தன் திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். அறிவின் உயரிய வல்லமைகளை, பிள்ளைகளை சரியாக வழிநடத்த பயன்படுத்த வேண்டும். தேவன் அங்கிகரிக்கும் ஒரு கல்வியை பிள்ளைக்கு கொடுப்பதே தாயின் தலையாக நோக்கமாக இருக்க வேண்டும். இதை புரிந்து தன் வேலையை துவங்கும் தாய்க்கு அவள் பங்கை செய்ய தேவ வல்லமை கொடுக்கப்படும். ***Signs of the Times, April 3, 1901.***

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தலின் அவசியத்தைத் தாய் உணர வேண்டும். தேவ சித்தத்திற்கும், வழிக்கும் தன்னை முழுமையாக ஒப்படைக்கும் ஒரு உண்மையான அனுபவத்தை தாய் பெறலாம். பிறகு கிறிஸ்துவின் கிருபையால் பிள்ளைகளுக்கு ஞானம் நிறைந்து, அன்பான, தயவான ஆசிரியராக இருக்கலாம். ***Review and Herald, May 10, 1898.***

***துவறாக துவங்கிய பெற்றோருக்கு***

இதுவரை தவறான வழிநடத்தலை கொடுத்துவிட்ட பெற்றோர்கள் சோர்வடைய வேண்டாம் என்று நான் சொல்லுவேன். நீங்கள் மனம்மாருங்கள். தேவ வார்த்தைக்கு கீழ்ப்படியும் ஆவி உங்களுக்குத் தேவை. உங்கள் பழக்க வழக்கங்களிலும் நடவடிக்கைகளிலும் சீர்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். உங்கள் வாழ்க்கையை தேவ கோட்பாடுகளுக்கு இசைவா மாற்ற வேண்டும். இதை நீங்கள் செய்யும்பொழுது பிரமாணத்தைச் சூழும் கிறிஸ்துவின் நீதியை நீங்கள் பெறுவீர்கள். தேவனை நீங்கள் நேசிக்க துவங்கிவிட்டதாலும், அவரது பிரமாணம் அவர் குணத்தின் பிரதிபலிப்பு என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளுவதாலும் இது நடக்கிறது. கிறிஸ்துவின் நல்ஈவுகளை விசுவாசிப்பது மனதின் கற்பனை அல்ல. கிறிஸ்துவின் குணாதிசயங்களை உங்கள் வாழ்விலும் குணத்திலும் கொண்டுவருவது மிகவும் முக்கியமானது. இதையே, உங்கள் பிள்ளைகள் செய்யவும் வழிநடத்தி, இதற்கான கல்வியையும் பயிற்சியையும் அவர்களுக்கு விடா முயற்சியுடன் கொடுக்க வேண்டும். இதன் வழியாக தேவ கட்டளைகளைக்

கைக்கொள்ள பிள்ளைகள் வழிநடத்தப்படுவார்கள். கல்விக்கான உங்களுடைய திட்டத்தில் தேவன் கூறியிருப்பதையே பின்பற்ற வேண்டும்.

தேவனுக்கு முன்பாக ஆழமான, முழுமையான ஒரு மனந்திரும்பல் இருக்கட்டும். தேவனுடைய கிருபையை முழு மனதுடன் தேடி வருடத்தைத் துவங்குங்கள். தேவகிருபை ஆவிகுரிய பகுத்தறிவை உங்களுக்கு அருளி, கடந்த காலத்தின் தவறுகளை சுட்டிக்காட்டும். வீட்டின் ஊழியர்களாக நீங்கள் செய்ய தவறியவைகளுக்காக மனஸ்தாபப்படுங்கள். ***Manuscript 12. 1898.***

உங்கள் நம்பிக்கையின் நாள் இதுவே. பொறுப்பும் தருணமும் இன்றைக்கு உங்களுக்கு கொடுக்கப்படுகிறது. உங்கள் நியாயத்தீர்ப்பின் நாளும் சீக்கிரமாக வந்துவிடும். உங்கள் வேலையை உண்மையான முயற்சிகளோடு உள்ளார்ந்த ஜெபத்துடனும் துவங்குங்கள். ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெறும் சிறப்புரிமை கொடுக்கப்படுகிறது என்பதை பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள். கிறிஸ்துவின் நோக்கத்தை நிறைவேற்றும் அவரது கரமாக அவர் உங்களைப் பார்க்கட்டும். பிள்ளைகளுக்கான உங்கள் ஊழியம் வெற்றியடையும்படி ஜெபத்தினால் ஒரு அனுபவத்தைப் பெறுங்கள். ***Counsels to Parents, Teachers and Students,*** *பக்கம் 131.*

***அதிகாரம் - 9***

***சுயமுன்னேற்றத்திற்கான ஓர் அழைப்பு***

***தொடர்ந்து முன்னேறுதல் அவசியம்***

தாயினது தனிப்பட்ட வாழ்க்கையும் முன்னேற்றத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்க வேண்டும். தன் கடமைகளை நிறைவேற்ற தாய்க்கு இந்த முன்னேற்றம் அத்தியாவசியம். பிள்ளைகளும் அதிகதிகமாகச் சாதிக்க உயர்ந்துகொண்டே இருப்பார்கள். பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் ஆத்துமாக்களை தன்வசப்படுத்திக்கொள்ள சாத்தான் திட்டங்களை தீட்டுவான். தாய்மார்கள் வீட்டின் கடமைகளை விட்டு, பிள்ளைகளை வழிநடத்தாதபடி உலகின் பக்கமும் சுயத்தின் பக்கமும் இழுக்கப்படுகிறார்கள். ***Christian Temperance and Bible Hygiene p. 60.***



1ST Proof

ஒரு நாட்டின் அரசனைவிட பெரிய பொறுப்பு தாய்க்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. தன் பிள்ளைகளுக்காக தன் அறிவாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். வெகு சில தாய்மார்களே தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை உணருகிறார்கள். இவ்வேலையைச் செய்ய தங்களை தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியத்தை வெகு சில தாய்மார்களே உணருகிறார்கள். இதை அவர்கள் புரிந்துகொண்டு செயல்படுவது அவர்களது திறனை அதிகரிக்கும். பொருமையுடன் தங்களை முதலில் மேம்படுத்திக் கொண்டு பிள்ளைகளுக்கும் இதைச் செய்ய வேண்டும்.

தாயானவள் முதலில் தன்னுடைய எல்லா விருப்பு வெறுப்புக்களையும், ஆசாபாசங்களையும் சரியான முறையில் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். இதைச் செய்ய தவறினால் தனது பெலவீனங்களின், தவறுகளின் சுவடுகளை பிள்ளைகளிடமும் விட்டுச்செல்வாள். சும நிலையான ஒரு தெளிவான குணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். தாயின் தீவிர தன்மைகளையோ மற்றும் துற்குணங்களையோ பிள்ளைகளுக்குக் கொடுத்துவிடக் கூடாது. திருமண வாழ்க்கைக்குள்ளாக வந்த பெண்கள் தங்களது குணங்களிலும் தங்களது நோக்கங்களிலும், ஒரு மாற்றம் ஏற்பட வேண்டிய அவசியத்தை காணும்படியாக, செய்யப்பட வேண்டும். இது நடந்தால் மட்டுமே தங்களது கடமைகளை நியர்த்தியாக செய்ய முடியும். தானாகவே முன்வந்து தேர்ந்தெடுத்த திருமண வாழ்க்கைக்கேற்றக் கிரியைகள் இருக்க வேண்டும். இந்த விஷயங்கள் சரியாக கவனிக்கப்பட வேண்டும். தனது தாக்கத்தின் அளவில்லா தன்மையும் அப்பொழுது புரியும். ஒரு தாயாகவும் ஸ்திரியாகவும் தன் வேலைக்கு எல்லையே இல்லை என்றும் அறியப்படும். இவ்விஷயங்களுக்கு தாயானவள் போதிய கவனத்தை செலுத்த வேண்டும். மனித குலத்தின் **தலைவிதியே** இதனால் மாற்றி எழுதப்படும். ***Pacific Health Journal May*** *1890.*

ஞானத்திலும் திறமையிலும் தொடர்ந்து முன்னேருங்கள்

ஞானத்திலும் திறமையிலும் முன்னேற தாய்மார்கள் தங்களை ஆராய்ந்து, தங்களது நிலையைக் குறித்து அதிகமாக சிந்திக்க

வேண்டும். இதை செய்பவர்கள் தங்களிடம் உள்ள குறைகளை சரி செய்து கொள்ளும் அனுபவத்தை பெறுவர். பிள்ளைகளின் குணங்களை சரியான முறையில் உருவகிக்கக் கற்றுக் கொள்ளுகிறார்கள். இவ்வேலையின் பலன் பிள்ளைகளிடம் காணப்படும். எளிமையானவர்களாகவும், கீழ்ப்படிபவர்களாகவும் தாழ்மை நிறைந்தவர்களாகவும் மாசற்றவர்களாகவும் பிள்ளைகள் இருப்பர். எடுக்கப்பட்ட முயற்சிக்கு பெரிய பலனாக இது இருக்கிறது.

தனது இதயத்தையும், சிந்தையையும் முன்னேற்றத்தின் பாதையில் தாயானவள் தொடர்ந்து வழிநடத்த வேண்டும். தங்களது பிள்ளைகளை பராமரிப்பதில் தேவனுக்கென்று ஒரு வேலை இருக்கிறது என்பதை உணர வேண்டும். தங்கள் குணங்களை வளர்த்துக்கொள்ளும் பொழுது, பிள்ளைகளையும் திறன்பட வழிநடத்துவார்கள். ***Signs of the Times, Feb. 9, 1882.***

பெற்றோர்கள் அறிவிலும் ஒழுக்கத்திலும் வளர்தல்

தாய்மார்கள் தங்கள் மனதை காத்துக்கொண்டு இதயத்தை சரியான வகையில் பண்படுத்திக்கொள்ள வேண்டும். சிறந்த முன்னேற்றத்தைத் தங்கள் வாழ்க்கையில் கொண்டுவர, முடிந்ததைச் செய்ய வேண்டும். இதைச் செய்தால் பிள்ளைளின் சிந்தைகளையும் உயர்த்தும்படி தகுதிபெறுவார்கள். ***Testimonies for the Church, Vol. 3 பக்கம் 147.***

குிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பெற்றோர்கள் தினமும் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். தேவனுடைய சித்தம் பிள்ளைகளுக்குக் கற்றுத்தரப்பட வேண்டும். இதற்கு பெற்றோர்களுக்குப் புதுப்பொலிவும், வல்லமையும் தேவை. கிறிஸ்துவிடம் காணப்பட்ட தாழ்மையுடனும், எளிமையுடனும் பிள்ளைகள் பார்த்துக்கொள்ளப்பட வேண்டும். ***Signs of the Times, Sep. 25, 1901.***

*கிறிஸ்தவ கலாச்சாரத்தின் வியத்தகு வல்லமை*

பெற்றோர்கள் ஒரு நல்ல கிறிஸ்தவ கலாச்சாரத்தின் வல்லமையை புரிந்து கொள்வதில்லை. ஆழமான சுரங்கங்களைப்போன்ற சத்தியங்கள் அசட்டைச் செய்யப்பட்டிருக்கின்றன. தேவன் இதை



1ST Proof

ஏற்றுக்கொள்ளுவதில்லை. பெற்றோர்கள் அபிஷேகம் பெற்ற கண்களுடன் இதை பார்க்க தேவன் அழைக்கிறார். உங்கள் வேலையை இப்பொழுது துவங்கி இருக்கிறீர்கள். செய்வதற்கு எவ்வளவோ உள்ளது. வெகு காலமாக அசட்டை செய்யப்பட்ட இந்த வேலையைச் செய்யுங்கள். தேவன் உங்களுடன் ஒத்துழைப்பார். முழு இதயத்துடன் நீங்கள் இதை செய்யும்பொழுது தேவன் உதவுவார். நீங்களும் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். குடும்ப வாழ்க்கையில் சுவிசேஷம் கொண்டுவரப்படுவதே இவ்வேலையின் துவக்கம். ***Signs of the Times, Apr. 3, 1901.***

தேவனின் பட்டறையில் நாம் இருக்கிறோம். வடிவமைக்கப்படாத கற்களாக நாம் இருக்கிறோம். தேவ சத்தியம் நம்மிடம் வரும்பொழுது, அதன் தாக்கம் நமது பெலவீனங்களை சரி செய்கிறது. பரலோக ஆலயத்தில் புது அழகு பெற்ற கற்களாக பிரகாசிக்கிறோம். இதற்கான ஆயத்தமே இங்கு நடக்கிறது. எதிர்காலத்தில் பரிசுத்த தூதர்களுடனும் பரலோகின் ராஜாவோடும் நமக்குத் தொடர்பு இருக்கப்போகிறது. ***Christian Temperance and Bible Hygiene பக்கம் 161.***

*பரிபூரணமே நமது இலக்கு*

தாய்மார்களே பயனில்லாத முக்கியமற்றவர்களை விடமாட்டார்களா? அது அழிந்து போகும். தேவனிடம் நெருங்கிச் சேர வழி தேட மாட்டார்களா? நித்தியத்தைப் போன்ற இந்த முடிவில்லாப் பணியைச் செய்ய தேவன் கிருபையையும் ஞானத்தையும் கொடுப்பார். உங்கள் பிள்ளைகள் பரிபூரணமான ஒரு குணத்தைப் பெற வைப்பதே உங்கள் இலக்கு. இந்த பரிபூரணத்தை அடைபவர்கள் மட்டுமே தேவனைக் காண முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

அநேக பெற்றோர்கள் தேவன் அவர்களுக்குக் கொடுத்து இருக்கிற வேலையை நிராகரிக்கிறார்கள். பெற்றோர்களே பரிசுத்தத்திலிருந்தும், உண்மையான கிறிஸ்தவத்திலிருந்தும் வெகு தூரமாக இருக்கிறார்கள். பரிபூரண குணத்தைக் கண்நோக்குபவர்களாக இருந்தால் உங்களது உண்மையான நிலை புரியும். ***Signs of the Times, July 1, 1886.***

*நல்ல தாயாக மாறுவது எப்படி*

வீட்டு வேலைகளைச் செய்வதுடன் நின்றுவிடக்கூடாது. மனைவியாகவும், தாயாகவும் இருக்கும் ஸ்திரி படிக்க நேரம் எடுத்து அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். கணவனுக்கும் வளரும் பிள்ளைகளுக்கும் சரியான துணையாக இருக்க வேண்டும். தன் பிள்ளைகளின்மேல் தாயின் தாக்கம் அதிகமாக இருக்கும்படி வாய்ப்புகள் கொடுக்கப்படுகிறது. இதை அவள் சரியாக பயன்படுத்திப் பரலோக வாழ்க்கைக்கு ஏதுவாக பிள்ளைகளை வழிநடத்த வேண்டும். இரட்சகரை முதலில் தனது துணையாகவும், எப்பொழுதும் தன்னுடன் இருக்கும் நண்பரைப்போல் பார்க்க நேரம் எடுத்துக் கொள்ளட்டும். தேவனின் வார்த்தையை படிக்கவும், பிள்ளைகளுடன் வயல்வெளிகளுக்கும் சென்று தேவனைப்பற்றி அவரது கிரியைகளிடமிருந்து கற்றுக்கொள்ளட்டும்.

அவள் மன இரம்மியத்துடனும் சந்தோஷத்துடனும் இருக்கட்டும். ஒவ்வொரு மனித்துளியும் வேலை செய்வதற்குமட்டும் இராதபடி, மாலை நேரங்கள் குடும்ப ஐக்கியத்திற்கான ஒரு நேரமாக இருக்கட்டும். இது நடந்தால் ஆண்கள் சகவாசங்களைத் தேடி தேவையில்லாத இடங்களுக்கு செல்லாமல் தங்கள் இல்லத்திற்கு செல்வார்கள். இல்லத்தின் தாக்கம் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் வாழ்நாள் முழுவதற்கும் பெரிய ஆசீர்வாதமாக இருக்கும். இப்படி இருப்பதே தேவதிட்டமாக இருக்கிறது. வாலிபர்களும் பெண்களும் தகாத தாக்கங்களிலிருந்தும் காக்கப்படுவார்கள். ***Ministry of Healing* பக்கம் 294.**

***இல்லத்தின் வாழ்க்கை வெற்றிகரமாக இருக்கட்டும்***

***தாய்க்கு ஆலோசனை***

உங்களது சொந்த விருப்பு வெறுப்புக்களின்படி செயல்படாதீர்கள். எல்லா காரியங்களிலும் சரியான ஒரு முன் உதாரணமாகத் திகழ கவனமாக இருங்கள். சோர்வாக இருக்காதீர்கள். தூங்கிக்கொண்டிருக்கும் உங்கள் சக்திகளை எழுப்புங்கள். உங்கள் கணவனுக்கு ஒரு அத்தியாவசியமாக மாறுங்கள். அதிகமான அக்கரை காட்டுவதினாலும் உதவும் மனப்பான்மையைக் கொண்டு செயல்படுவதினாலும் இது நடக்கும். கணவனுக்கு எல்லாவற்றிலும் ஒரு ஆசீர்வாதமாக இருங்கள். கடமைகளை நிறைவேற்றுங்கள். சலிப்பு



1ST Proof

தட்டக் கூடிய அனுதின கடமைகளையும் ஆர்வத்துடனும், சுலபமாகவும் எப்படி செய்வதென்று படியுங்கள்.

குடும்ப வாழ்க்கையை ஒரு வெற்றிகரமான வாழ்க்கையாக வாழுங்கள். தாயாகவும், மனைவியாகவும் இருப்பது நீங்கள் நினைப்பதைவிட அதிக பொறுப்புக்களை கொண்டுள்ளது. இல்ல வாழ்க்கைக்கான அனுபவமும், நடைமுறையும் உங்களது தேவை. இதற்கான முயற்சியும், ஞானமும், பகுத்தறிவும், மனக்கட்டுப்பாடும் உங்களிடம் இருக்க வேண்டும். குடும்ப வாழ்க்கை இந்த குணங்களை உங்களிடம் கொண்டு வரும். ***Letter 5, 1884.***

***மற்ற அலுவல்களில் மூழ்கியிருக்கும் பெற்றோர்கள்***

அநேகப் பெற்றோர்கள் இதையெல்லாம் செய்வதற்கு நேரமில்லை என்பார்கள். மற்ற அலுவல்கள் தங்கள் நேரத்தை எடுத்து விடுகின்றன என்றும் கூறுவர். ***Testimonies for the Church, Vol. 3, பக்கம் 145.***

பெற்றோர்கள் தங்கள் மனதை பாவத்திலிருந்து காத்துக்கொள்ள தவறக் கூடாது. பாவமானது தங்களை சீரழித்து, பிள்ளைகளுக்கு வலியையும், பரிதவிப்பையும், வேதனையையும் கொண்டு வரும். தீமையை பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் பாவத்தினால் கொடுத்துவிடுவார்கள். தாங்கள் சரியான பாடங்களை முதலில் படித்துக்கொள்ள வேண்டும். பின்பும் பிள்ளைகளுக்குப் பரலோகமே ஆட்சி செய்கிறது என்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும். ***Letter 86, 1899.***

***பெற்றோர்கள் ஆலோசனைகளை ஏற்க வேண்டும்***

தேவன் என்று ஒருவர் இல்லை என்பதைப்போன்று பெற்றோர்கள் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் சாத்தான் பிள்ளைகளின் மனங்களில் அவனது விதைகளை தூவுகிறான். இதன் அறுவடை மரணமாக முடியும். ஆயினும் இப்படிப்பட்ட பெற்றோர்கள் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளுவதில்லை. ஆலோசனை வழங்குபவர்களையும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள். இதில் தலையிடுவதற்கு நீங்கள் யார் என்பதைப்போல் செயல்படுகிறார்கள். நமது பிள்ளைகள் தேவனுடைய பிள்ளைகளாகவும் இருக்கிறார்கள்.

அவருடைய பிள்ளைகளுக்குச் செய்யப்பட வேண்டியவை நிராகரிக்கப்படும் பொழுது தேவன் எப்படி அதை ஏற்றுக் கொள்ளுவார். பிள்ளைகளை பெற்றெடுத்து உலகிற்குள் கொண்டுவந்து, சோதனைகளில் விழும் சாத்தானின் கைப்பொருளாக ஏன் பிள்ளைகளை விட்டீர் என்று தேவன் கேட்பார். ***Signs of the Times, Apr. 3, 1901.***

மற்றவர்களிடமிருந்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள ஆயத்தப்படுங்கள். உங்களது பிள்ளைகளின் நடத்தையும், நீங்கள் அவர்களை நடத்தும் விதமும் மற்றவர்களால் கண்காணிக்கப்படக் கூடாது என்று நினையாதிருங்கள். ***Manuscript 27, 1911.***

***ஒன்றுகூடி ஆலோசனை பெறுவதின் நண்மைகள்.***

ஒரு புனிதமான வேலையை தேவன் நமது கரங்களில் கொடுத்திருக்கிறார். நாம் ஒன்றாகக் கூடி அறிவுரைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். நமது பணியைச் செய்ய தகுதியடைவோம். ஒன்றாகக் கூடி தெய்வீக கரத்தின் தொடுதலை உணர வேண்டும். வீட்டில் நமது வேலையை புரிந்துகொள்ள வேண்டும். வீடு என்ற ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து பிள்ளைகள் வெளிச்சமாக உலகத்திடம் செல்ல வேண்டும். இதற்கேற்ற கல்வியும் பயிற்சியும் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். இதைச் செய்வது எப்படி என்பதை பெற்றோர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நமது ஜெபக்கூட்டங்களிலிருந்தும், குடும்பத்தின் கடமைகளை நிறைவேற்றுவதைப்பற்றியும் கற்றுக்கொள்ளலாம். ஜெபக்கூட்டங்களில் இதுவும் சொல்லித்தரப்பட வேண்டும். நமது சகோதர சகோதரிகள் அவர்களது வீட்டீல் எப்படியாக தங்கள் கடமைகளைச் செய்ய தேவன் விரும்புகிறார் என்பதைக் கற்றுகொள்ள வேண்டும். கணவனுடனும் பிள்ளைகளுடனும் பேசும்பொழுது, வார்த்தைகளில் கரிசனையும் தயவும் இருக்க வேண்டும். குடும்ப அங்கத்தினர் ஒவ்வொருவரையும் தேவ ஒழுங்கின்கீழாகக் கொண்டுவர உதவுவது எப்படி என்று படித்துக்கொள்ள வேண்டும். தாயும் தகப்பனும் வீட்டின் சூழலை மகிழ்ச்சியூட்டும் வகையிலும் விரும்பப்படக் கூடிய விதத்திலும் அமைக்க வேண்டும். இது தேவன் அவர்களுக்கு நியமித்திருக்கிற பிரத்தியேக வேலையாக இருக்கிறது. பிள்ளைகளை திட்டுவதினாலும் மிரட்டுவதினாலும் கீழ்ப்படிய



1ST Proof

வைக்கக்கூடாது. திடீரென்று கூச்சலிட்டு திட்டுவதினால் ஒரு நன்மையும் கிட்டுவதில்லை என்று அநேக பெற்றோர்கள் புரிந்து கொள்ளுவது இல்லை. அநேகர் பிள்ளைகளிடம் அன்பாக பேசும் அவசியத்தைக் கண்டு கொள்ளுவதில்லை. சிறு பிள்ளைகளும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டிருக்கும் பொக்கிஷங்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. ***Manuscript 65, 1908.***

***பாகம் - IV***

***கீழ்ப்படிதல் மிக முக்கியப் பாடம்***

***அதிகாரம் - 10***

***சந்தோஷத்திற்கும் வெற்றிக்குமான திறவுகோல்***

***மகிழ்ச்சி கீழ்ப்படிதலை சார்ந்து இருக்கிறது***

பெற்றோர்களும், பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுத்தருவோம் ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு கீழ்ப்படிதலை சொல்லித்தருவதே உயர்க்கல்வியாக இருக்கிறது. ஆயினும் இன்று கொடுக்கப்படும் கல்வியில் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. ***Manuscript 92, 1899.***

பிள்ளைகள் ஒழுக்கத்திற்குள் வழிநடத்தப்பட வேண்டும். இதனால் உண்மையான மகிழ்ச்சியை அவர்கள் கண்டடைவார்கள். அவர்களது போக்கின்படி விடப்பட்டால் அது நன்மையை தருவதில்லை. ***Manuscript 49, 1901.***

பிள்ளைகள் தொடர்ந்து பெற்றோர்க்கு கீழ்ப்படிந்து அவர்களது அதிகாரத்திற்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும். இது அவர்களது சந்தோஷத்தை மேம்படுத்தி, தேவனை மகிமைப்படுத்தி, சமுதாயத்திற்கு பெரிய நன்மையை பயக்கும்.

இல்லத்தின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு இருப்பதே பரிபூரண சுதந்திரம் என்பதை பிள்ளைள் கற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்களுக்கும் இதே பாடம் உள்ளது. தேவ சட்டளைகளுக்கு கீழ்ப்படிவதே உண்மையான சுதந்திரம். ***Review and Herald, Aug. 30, 1881.***

தேவசித்தமே பரலோகின் சட்டம். தேவபிரமாணம் வாழ்வின் சட்டமாக இருந்த வரைக்கும் பரலோகக் குடும்பம் சந்தோஷத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருந்தது. ஆனால் தேவபிரமாணம் மீறப்பட்டது. பொறாமையும், பகையும் வேற்றுமையும் பரலோகிற்குள்ளும் நுழைந்தது. பரலோக வாசிகளில் ஒரு பாகத்தினர் விழுந்தனர். தேவனின் பத்து கட்டளைகளுக்கு பூமியின் இல்லங்கள் கீழ்ப்படிந்தால் அங்கு மகிழ்ச்சி நிலவும். ***Review and Herald, Aug. 30, 1881.***

***கீழ்ப்படியாமையினால் ஏதேனை இழந்தோம்***

பூமியின் சரித்திரத்தின் ஆரம்பத்தில் ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படியாமல் போனார்கள். அந்த ஒரு செயலினால் நமது ஆதிப் பெற்றோர் ஏதேனை இழந்தார்கள். மிகச் சிறிய காரியமாகவே அது இருந்தது. சிறு விஷயம் என்பதில் ஒரு நன்மை இருக்கிறது. ஒரு வேளை ஏதாவது பெரிய பாவத்தை அவர்கள் செய்திருந்தால், சிறு காரியங்களிலும் கீழ்ப்படிவதை அசட்டைச் செய்திருப்போம். ஒரு சின்ன சோதனையையே தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்தார்.

தேவபிரமாணத்தை மீறுவதும், கீழ்ப்பழயாமல் வாழ்வதும் தேவனுக்கு எதிரான செயல்கள். சிறு விஷயங்களில் உண்மையில்லாமல் இருத்தல், பெரிய பாவங்களைச் செய்ய வழிநடத்தும். எத்தனைப் பெரிய மீறுதல், அல்லது எத்தனை சிறிய மீறுதல் என்பதல்ல. கீழ்ப்படியாமையே குற்றமாகிறது. ***Manuscript 92, 1899.***

ஆவிக்குரிய மற்றும் உலகத்திற்குரிய செழிப்பின் அடித்தளம்

தேவ சட்டத்திற்கு கீழ்ப்படிந்தால் மட்டுமே நமது வாழ்க்கை செழிப்பாக இருக்கும். ஆனால் நாம் தேவ வார்த்தைகளை படிப்பதில்லை. எனவே ஆசீர்வாதங்களை எப்படி பெறுவது என்பதை அறியாதவர்களாக இருக்கிறோம். நம் குடும்பத்தினருக்கும் இதை சொல்லிக்கொடுக்க முடியாதவர்களாக இருக்கிறோம். தேவனுடைய பிரமாணங்களுக்கு கவனமாக கீழ்ப்பழவதினால் வரும் ஆசீர்வாதங்களை நாம் கண்டடைவதில்லை. தேவ வார்த்தைகளுக்குக் கீழ்ப்கடிவதே நமது ஜீவன். இதுவே நம் மகிழ்ச்சி. தேவ வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாத மனிதர்களின் துன்மார்க்கத்தினாலும், வன்முறையினாலும்



1ST Proof

திறப்பப்பட்டதாய் இவ்வுலகம் அழுது கொண்டிருக்கிறது. தேவன் தனது ஆசீர்வாதங்களை திராட்சைத் தோட்டங்களிலிருந்தும் பழத்தோட்டங்களிலிருந்தும் எடுத்துவிட்டார். தேவ கட்டளைகளுக்கு கீழ்ப்படியும் அந்த சிறுக் கூட்டமிராதிருந்தால் அவரது நியாயத்தீர்ப்புகளை உலகின்மேல் கொண்டுவந்திருப்பார். தேவனை நேசித்து அவருக்கு பயந்து நடக்கும் நீதிமான்கள் நிமித்தம் அவரது இரக்கம் மற்றோரையும் சென்றடைகிறது. ***Manuscript 64, 1899.***

***கீழ்ப்படிதலின் பாதையில் பிள்ளைகளை வழிநடத்துங்கள்***

நிலைமாராத கீழ்ப்படிதலின் பாதையில் பெற்றோர்கள் பிள்ளைகளை வழிநடத்த வேண்டும். இது அவர்கள்மேல் சுமத்தப்பட்டிருக்கிற ஒரு புனிதக் கடமை. “தேவன் இப்படியாக சொல்லுகிறார்” என்பதற்கேற்ற வாழ்வே உண்மையான சந்தோஷத்தை தரும். இம்மைக்கும் மறுமைக்குமுரிய பரிபூரண சந்தோஷமாகவும் இருக்கும். பெற்றோர்களே கிறிஸ்துவின் வாழ்க்கையே உங்களுக்கு முன் மாதிரியாக இருக்கட்டும். இந்த உயரியத் தரத்தை உடைக்கச் சாத்தான் தன்னால் இயன்றதை எல்லாம் செய்வான். இத்தரத்தை நம்மால் அடைய முடியாது என்பதைப்போல் காட்டுவான். பிள்ளைகள் தேவ சாயலில் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்கள் மனதில் பதிய வைக்க வேண்டும். எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காட்ட கிறிஸ்து தனது வாழ்க்கையை உதாரணமாக வைத்திருக்கிறார். சத்தியத்தை விசுவாசிப்பதாகச் சொல்லும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தேவனை நேசித்து அவருக்கு கீழ்ப்படியக் கற்றுக் கொடுக்க வேண்டும். பெற்றோர்கள் செய்ய வேண்டிய மிக முக்கியமான வேலை இதுவே. பிள்ளைகளும் வாலிபரும் தேவன் எதிர்பார்ப்பதைப் புரிந்துகொள்ளுவதே தேவதிட்டமாக இருக்கிறது. ஞானத்துடன் நீதியையும், பாவத்தையும் கீழ்ப்படிதலையும், மீறுதலையும் பகுத்தறிய வேண்டும். ***Manuscript 67, 1909.***

***கீழ்ப்படிதல் மகிழ்ச்சியூட்டக் கூடிய ஒன்று.***

பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு தேவ வார்த்தையின் ஒவ்வொரு வரியையும் ஒவ்வொரு நியமத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டும். தேவனின் பத்துப்பிரமாணம் அசட்டைச் செய்யப்படக் கூடாது.

கீழ்ப்படியாதவர்களையும் வழிவிலகினவர்களையும் திருத்த பிதா தனது ஒரே குமாரனை உலகிற்குக் கொடுத்தார். அவருக்கு உண்மையாய் இருக்கும்படி பிள்ளைகளை நடத்தப் பெற்றோர்கள் தேவ உதவியையே நாட வேண்டும். அவரது அன்பின் பெலத்தை மனிதர்கள்மேல் பொழிய தேவன் வாஞ்சையாய் இருக்கிறார். தேவசித்தத்தை மகிழ்ச்சியுடன் மனிதர்கள் நிறைவேற்றுவதை அவர் பார்க்க விரும்புகிறார். ஒவ்வொருவரும் முழு பெலத்துடன் பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதே கிறிஸ்துவினால் வரும் நீதியாக ஏற்க்கப்படுகிறது என்பதை எல்லோருக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

*அதிகாரம் - 11*

### *குழந்தைப் பருவத்திலிருந்து கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்*

*கற்றுக்கொடுப்பதை முன்கூட்டியே ஆரம்பியுங்கள்*

பெற்றோரின் அதிகாரத்திற்கு கீழ்ப்படியும் பழக்கம் குழந்தைப் பருவத்திலிருந்தே பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கப் பட்டிருக்க வேண்டும். வாலிப பிராயத்தில் இப்பழக்கம் மேலும் வலுவடையும்படி வழிநடத்த வேண்டும். ***Review and Herald, Mar.13, 1894.***

சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சிறு வயதில் அவர்களது விருப்பத்திற்கு விட்டுவிடுகிறார்கள். வயது வரும் பொழுது புரிந்துகொள்ளுவார்கள் என்று நினைக்கிறார்கள். இது தவறு. கீழ்ப்படிதல் குழந்தையாக இருக்கும் பொழுதே கற்றுத்தரப்பட வேண்டும். பள்ளியைப்போன்று இருக்கும் உங்கள் இல்லங்களில் கீழ்ப்படிதலை அத்தியாவசியமானதாக வையுங்கள். ***Letter 75, 1898.***

வாழ்க்கையின் ஆரம்பக் கட்டத்திலிருந்தே பிள்ளைகள் பெற்றோர்க்கு கீழ்ப்படியக் கற்றுத்தரப்பட்டிக்க வேண்டும். பெற்றோரது வார்த்தையை மதித்து பெற்றோரின் அதிகாரத்தைப் பிள்ளைகள் கனம் பண்ண வேண்டும். ***Review and Herald, July 16, 1895.***

*அறிவு வளர்ச்சிக்கு முன்பே இப்பாடம்*



1ST Proof

பிள்ளை கற்க வேண்டிய முதல் பாடங்களில் ஒன்று கீழ்ப்படிதல். பகுத்தறியும் வயது வருவதற் முன்பாகவே கீழ்ப்படியக் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். ***Education, p. 287.***

கைக்குழந்தையிடமிருந்தே தாயின் வேலைத் துவங்குகிறது. குழந்தையின் விருப்பு வெறுப்புக்களையும் குணத்தையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும். குழந்தையாக இருக்கும்பொழுதே கீழ்ப்படிதலைக் கற்றுத் தாருங்கள். வளரும் பொழுதும் அதையேச் செய்யுங்கள், இதை விட்டுவிடாதீர்கள். ***Signs of the Times, Feb. 26, 1880.***

*சுய சித்தம் பெலமடைவதற்க முன்பும்*

கீழ்ப்படிதலைப் பிள்ளைகளுக்கு ஆரம்பப் பருவத்திலிருந்து பெற்றோர்கள் சொல்லிக் கொடுப்பதில்லை. பிள்ளை குழந்தையாக இருக்கிறது என்று எண்ணி இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கும் பெற்றோர்கள் பிள்ளைகளை கண்டிப்பதில்லை. இந்த நேரத்தில் குழந்தையின் சுயம் பெலமாக வளர்க்கப்படுகிறது. பிறகு குழந்தையைக் கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கும். விடப்படும் ஒவ்வொரு நாளும் இக்கடினத்தைக் கூட்டுகிறது.

சிறு பிராயத்திலிருந்தும் தங்களிடம் சொல்லப்பட்டதைப் பிள்ளைகள் புரிந்துக் கொள்ளுவார்கள். அன்பினாலும் சரியான நிர்வாகத்தினாலும் பிள்ளைகளுக்குக் கீழ்ப்படியக் கற்றுக்கொடுக்கலாம். பிள்ளை தான் சொல்வதை கேட்காமல் போகும்படி ஒரு தருணத்தைக் கூட பிள்ளைக்குக் கொடுக்கக் கூடாது. இதற்காக குழந்தையிடம் கோபத்தைக் காட்ட வேண்டும் என்பதில்லை. சொல்லப்பட்டதைச் செய்யும்வரை அதை விடாமல் இருக்கும் குணம், அன்போடு கலந்துச் செயல்பட வேண்டும். பிள்ளைகளின்மீத நீங்கள் கொண்டுள்ள அன்பை அவர்களைக் கையாளும் முறையைக் கொண்டு அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது வெற்றியைக் கொடுக்கும். இதைச் செய்யாமல் முதல் மூன்று வருடங்களுக்கு சுய நலத்தையும், கோபத்தையும், சுய விருப்பத்தையும் வளரும்படிவிட்டால் பின்பு ஒழுங்கிற்குக் கொண்டுவருவது கடினமானதாக இருக்கும். அதன் குணம் தவறானதை கொண்டுள்ளதாக மாறி இருக்கும். அதன் விருப்பத்தின்படி செய்வதே அதற்குப்

பிடித்தமானதாக இருக்கும். பெற்றோரின் கட்டுப்பாட்டை விரும்பாது. இத்தீயப் பண்புகள் குழந்தையுடன் சேர்ந்து வளருகின்றன. வளர்ந்தப் பிறகு உச்சக் கட்ட சுய நலத்தையும் கட்டுப்பாடற்ற குணத்தையும் வெளிப்படுத்தப்படும். இப்படிப்பட்ட நபர் உலகில் காணப்படும் தீமைகளுக்கு பலியாகிவிடுவார். ***Pacific Health journal Apr.*** *1890.*

பெற்றோர்களை மதிக்காமல் நடக்கும்படி பிள்ளைகள் அனுமதிக்கப்படக் கூடாது. தன் இஷ்டத்திற்கேற்ப இருப்பது கண்டிக்கப்பட வேண்டும். சரியான ஒழுக்கத்தை மாறாதபடி பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். இது அன்புடனும் கரிசனையுடனும் செய்யப்பட வேண்டும். குழந்தையின் நல்ல எதிர்காலம் இதைச் சார்ந்தே அமையும். ***Counsels to Parents, Teachers and Students,*** *112.*

***பெற்றோர்க்கு கீழ்ப்படிதல் தேவனுக்கு கீழ்படிவதற்கு வழிநடத்தும்***

அதிகமாக ஜெபம் செய்யும் பெற்றோரையுடைய பிள்ளைகள் சிலாக்கியம் பெற்றவர்கள். தேவனை அறிந்து கொண்டு அவரை நேசிக்கும்படி சிறு பிராயத்திலிருந்தே ஒரு நல்ல தருணத்தை பெறுகிறார்கள். பெற்றோரை மதித்து கீழ்ப்படியும்பொழுது, தேவனுக்கு கீழ்ப்படிவதைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். ஒளியின் பிள்ளைகளாக அவர்கள் இருத்தல் வேண்டும். அன்புடனும், தயவுடனும், மதிப்புடனும் நடப்பார்கள். தாங்கள் பார்க்கும் பெற்றோர்களிடத்தில் இப்பண்புகளை காட்டும்பொழுது தாம் காணாத தேவனை நேசிக்க தகுதி பெறுகிறார்கள். நல்ல பெற்றோர்களின் பிரதிநிதிகளாக சத்தியத்தைத் தங்கள் வாழ்க்கையில் அப்பியாசித்தால், தேவனை ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்பதை காட்டுகிறார்கள். தங்களது வார்த்தையினாலும் நடத்தையினாலும் தேவனை கனப்படுத்துகிறார்கள். தேவ உதவியைப் பெற்ற ஒழுக்கமான வாழ்க்கையும் தேவனுக்கேற்ற சம்பாஷனைகளும் அவர்களிடம் காணப்படும். ***Youth's Instructor Jun.*** *15, 1893.*

***கீழ்ப்படிபவர்கள் மட்டுமே பரலோகத்திற்கு பிரவேசிப்பார்கள்***

தன்னை நேசித்து, தனக்குக் கீழ்ப்படிவார்களா என்று தேவன் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை பிள்ளைகளின் மனதில் பதியுங்கள். இதற்காகவே தேவன் அவர்களை பராமரித்துக் கொண்டிருக்கிறார்



1ST Proof

என்பதையும் அவர்கள் புரிந்துக்கொள்ள வேண்டும். இங்கு கிறஸ்துவுக்கு கீழ்ப்படியாதவர்கள் நித்தியத்தில் அவருக்குக் கீழ்ப்படிய முடியாது. ***Counsels on Sabbath School work. 9. 79.***

பெற்றோர்களும் பிள்ளைகளும் தேவ கட்டளைளுக்குக் கீழ்ப்படியக் கற்றுக் கொண்டிருந்தால் மட்டுமே பரலோக வாசஸ்தலங்களில் வரவேர்கப்படுவார்கள். ***Manuscript*** *60, 1903.*

*அதிகாரம் - 12*

***கீழ்ப்படிதல் பழக்கமாகவே மாறியிருக்க வேண்டும்***

***மென்மையுடனும் விடாமுயற்சியுடனும் செயல்படுங்கள்***

தேவனை கணம்பண்ணி அவரை மகிமைப்படுத்தவே நமக்கு எல்லா திறமைகளும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். இதை நிறைவேற்றவே அவர்கள் கீழ்ப்படிதலின் பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

விடாமுயற்சியுடனும் கரிசனையுடனும் நடந்துக் கீழ்ப்படிதலின் பழக்கத்தைக் கொண்டுவர வேண்டும். பிற்காலங்களில் பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்கும் இடையே எழும்பக்கூடும் மனஸ்தாபங்களையும் சண்டைகளையும் இது தவிர்க்கும். பெரியோரது கட்டுப்பாட்டையும் அதிகாரத்தையும் வெறுக்கும் மனோபாவமும் இப்பிள்ளைகளின் எதிர்காலங்களில் காணப்படாது கட்டுப்பாடில்லாத பிள்ளைகள் பின் நாட்களில் எல்லா அதிகாரத்தையும் அசட்டை செய்து பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் எதிர்ப்பார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 110, 111.***

***வாக்குவாதங்களையோ, அசட்டை செய்யும் குணத்தையோ அனுமதிக்காதீர்கள்***

பெற்றோர்களது முதல் கவனம் தங்கள் குடும்ப நிர்வாகமாக இருக்க வேண்டும். பெற்றோரது வார்த்தையே வீட்டின் சட்டமாக இருக்கட்டும். வாக்குவாதங்களோ, அசட்டை செய்யும் நடத்தையோ காணப்படக்கூடாது. பெற்றோரது வார்த்தைக்கு முழுமையாகக்

கீழ்ப்படிவதைக் குழந்தைப் பருவத்திலிருந்தே பிள்ளைகளுக்குச் சொல்லித்தரப்படட்டும். ***Pacific Health Journal** 1810.*

சரியான ஒழுக்கத்தை எல்லா நேரங்களிலும் கையாளுவது பிள்ளைகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தலாம். பிள்ளைகள் தங்கள் விருப்பங்களின்படி செயல்பட ஆசைப்படலாம். ஆயினும் கீழ்ப்படிதலின் பாடத்தையே அவர்கள் பெற வேண்டும். இது நடத்திருந்தால் மட்டுமே தேவ நியமங்களுக்கு தங்களை சமர்பிக்க ஆயத்தமாக இருப்பார்கள். சிறு வயதில் பெற்றுக்கொண்ட பயிற்சி ஆவிக்குரிய அனுபவத்தில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மனிதனின் குணத்தை உருவாக்குகிறது. ***Signs of the Times, Feb.** 26, 1880.*

*ஏந்த விதி விலக்கையும் அனுமதிக்காதீர்கள்*

இல்லத்தின் சட்டங்கள் மீறப்படாதபடி குடும்பத்தின் ஆசிரியர்களான பெற்றோர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். பிள்ளைகளைக் கீழ்ப்படியச் செய்யாமற்போனால் சரியான ஒழுங்கை பிரயோகிக்கத் தவறுகிறார்கள். பெற்றோரது அதிகாரத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்கவும் கீழ்ப்படியவும் பிள்ளைகள் வழிநடத்தப்பட வேண்டும். கீழ்ப்படியாமல் போகவிடும் பொற்றோரது வாசலருகே பாவம் தஞ்சம் கொண்டிருக்கிறது. நிச்சயமாக கீழ்ப்படிய வேண்டும் என்பதை பிள்ளைகள் புரிந்திருக்க வேண்டும். ***Manuscript** 82, 1901.*

*சமயத்திற்கேற்ற பரிபூரண கீழ்ப்படிதலைப் பெற்றுக் கொள்ளுங்கள்*

பரிபூரணமான கீழ்ப்படிதலைப் பிள்ளைகளிடையே நடைமுறைப்படுத்தத் தவறக்கூடாது. தவறினால் பிள்ளைகளின் குணங்களில் சரியாக ஒரு அடித்தளத்தைப் போடுவதில்லை. பிள்ளைள் எதிர்காலங்களில் தங்களை அவமதிக்கும்படி அவர்கள் ஆயத்தப்படுத்துகிறார்கள். வயதாகும் காலங்களில் மரணத்தை நெருங்கும் சமயதிலும் பிள்ளைகளின் குணங்களின் மூலம் சோகத்தை தங்கள் மீது வரவழைத்துக் கொள்ளுவார்கள். ***Manuscript** 18, 1891.*

*நியாயமாக நடந்து கொள்ளுங்கள்*



1ST Proof

பிள்ளைகளை பராமரிப்பதில் நீதியையும் நியாயத்தையும் கைக்கொள்ளுங்கள். அவர்களது எல்லா ஆசைகளுக்கு இசைவது அன்பாக இருக்கக் கூடாது. ஞானமாக கையாள வேண்டும். பிள்ளைகள் விரும்பும் வகையில் பெற்றோர்கள் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். குறை கண்டுபிடித்துக் கொண்டு திட்டிக்கொண்டிருக்கக் கூடாது. அன்பின் கையிறுகளால் பிள்ளைகளை தங்கள் இதயங்களுடன் பிணைத்துக் கொள்ள வேண்டும். எல்லா தாய் தந்தையரும், மூத்த சகோதர சகோதரிகளும் நல்ல கல்வியை புகட்டும் ஒரு சக்தியாக மாறட்டும். ஆவிக்குரிய விசுவாச வாழ்க்கையைப் பெலப்படுத்தி ஒரு பரிபூரண சூழல் இல்லத்திலும் பள்ளியிலும் கொண்டுவரப்பட வேண்டும். இதை பார்த்து இளைய பிள்ளைகள் தேவனின் வழியை பின்பற்றுவார்கள். ***Counsels tl Parents Teachers and Students** 158, 159.*

தீமை செய்வதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற பெற்றோர்கள் பிள்ளைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இதை செய்வதினால் பிள்ளைகள் பெற்றோர்களின் மீது கொண்டுள்ள அன்பு குறைத்துவிடாது. இதை எங்கள் பிள்ளைகளைக் கொண்டும், மற்ற பிள்ளைகளை வழிநடத்தினதின் அனுபவத்திலும் நிரூபித்திருக்கிறோம். ***Review and Hearld May** 10, 1898.*

*கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தின் காரணங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்*

குடும்ப நிர்வாகத்திற்கு கீழ்ப்படிய பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும். தேவன் ஆமோதிக்கக் கூடிய ஒரு சீரான குணத்தை தங்களில் உருவாக்க வேண்டும். குடும்ப வாழ்வின் சட்டங்களை இது நிலைநிறுத்தும். பிள்ளைகள் பிரமாணத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும். கிறிஸ்தவ பெற்றோர் இதற்கேற்ற ஒரு கல்வியைப் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும். எதற்காகப் பிரமாணத்தை மதித்து அதற்குக் கீழ்ப்படிகிறோம் என்பதை பிள்ளைகளுக்கு விளக்க வேண்டும். புரிந்து கொள்ளும் விவரம் வந்தவுடன் பிள்ளைகளுக்கு இதைப் பற்றி விவரிக்கலாம். பிள்ளைகள் எதை செய்ய வேண்டும் என்பதையும் எதை செய்யக்கூடாது என்பதையும் விளங்கிக் கொள்ளுவார்கள். ***Manuscript 126**, 1897.*

*பெற்றோர்களின் வார்த்தை சட்டமாக இருக்கட்டும்*

உங்களது கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் வார்த்தை சட்டமாக இருக்க வேண்டும். அதற்கேற்ற ஒரு இடத்தை பிள்ளைகள் உங்களுக்குத் தர வேண்டும். ***Review and Hearld Sep** 19, 1854.*

புல கிறிஸ்தவர்கள் பிள்ளைகள் தங்கள் வழ்களைப் பின்பற்ற அதிகாரத்துடன் உத்தரவிடுவதில்லை. பிறகு எதனால் வழிதவறிவிட்டார்கள் என்று கவலைப்படுகின்றனர். இப்படிப்பட்ட பெற்றோர்களை தேவன் கண்டிக்கிறார். தேவ பக்தியிலும், விசுவாசத்திலும் பிள்ளைகளை வளர்க்க அசட்டையாய் இருந்துவிட்டனர். கிறிஸ்தவத்தின் முதல் பாடத்தைக் கற்றுக்கொடுக்கவில்லை. "தேவனுக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்". மதிகேடு பிள்ளையை பிடித்திருக்கும் என்று ஞானி சொல்லுகிறார். மூடத்தனத்தையும் பயனற்ற சிற்றின்பஙகளை நேசிக்கும் சுபாவமும், தீமை செய்வதற்கான நாட்டமும், பரிசுத்த காரியங்களின்மேல் ஒரு வெறுப்பும் பிள்ளைகளிடையே காணப்படும். தங்களது குடும்ப ஊழியத்தில் பெற்றோர்கள் இப்பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

தேவ பெலத்தைக் கொண்டு பெற்றோர்கள் எழும்ப வேண்டும். தங்களது குடும்பங்கள் தங்களை பின்பற்றும்படி கட்டளையிட வேண்டும். தீமையை பெலமானக் கரத்தைக் கொண்டு ஒடுக்க வேண்டும். ஆயினும் உணர்ச்சிவசப்பட்டோ கோபப்பட்டோ இதை செய்யக் கூடாது. எது சரியான வழி என்று பிள்ளைகள் முடிவெடுக்க முடியாதபடி அவர்களை விடக்கூடாது. சரியான வழியை அவர்களுக்கு தெளிவாகக் காட்ட வேண்டும். அதில் நடக்க அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். ***Review and Hearld May** 4, 1886.*

*கீழ்ப்படியாத ஒரு பிள்ளையின் தாக்கம்*

தவறாக செயல்படும் ஒரு பிள்ளை மற்ற பிள்ளைகளின்மேல் ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். மற்ற பிள்ளைகளையும் தன்னை பின்பற்றும்படி செய்து விடுவான். ***Review and Hearld May** 13, 1894.*

1ST Proof

*பாவத்தைக் கண்டுகொள்ளாமல் இருத்தல்*

பிள்ளைகள் உங்களை கணம்பண்ணும்படி கற்றுத் தாருங்கள். தேவ பிரமாணம் இதையே அவர்களது கடமையாக காட்டுகிறது என்பதைப் புரிய வையுங்கள். நீங்கள் சொல்லுவதை அசட்டை செய்து, வீட்டின் சட்டதிட்டங்களுக்கு அவர்கள் மீற அனுமதித்தால், பாவத்தைக் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு சமமாகும். சாத்தான் அவனது வேலையை பிள்ளைகளிடம் செய்ய அனுமதி கொடுத்துவிடுகிறோம். அவர்களது இந்த தவறான குணத்தைப் பிள்ளைகள் தங்களது ஆவிக்குரிய வாழ்க்கைக்குள்ளும், சபைக்குள்ளும் கொண்டுவந்து விடுவார்கள். இவ்வளவு தீமைக்கும் பெற்றோரது கவனக்குறைவே என்று பரலோக ஏடுகளில் பதிவாகியிருக்கும். ***Review and Hearld Apr** 14, 1885.*

*தொடர்ந்து கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.*

கீழ்ப்படிதலைக் குறித்தும், அதிகாரத்திற்கு அடிப்பணிவதைக் குறித்தும் பாடங்கள் பிள்ளைகளுக்கு மீண்டும் மீண்டும் கற்றுத்தரப்பட வேண்டும். இப்படிப்பட்ட வேலை குடும்பத்தில் செய்யப்படும் பொழுது நன்மைக்கேதுவான ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். பிள்ளைகள் தீமை செய்வதிலிருந்து கட்டுப்படுத்தப்படுவார்கள். நீதியையும் சத்தியத்தையும் நேசிக்க வழிநடத்தப்படுவார்கள். பெற்றோர்களுக்கும் இது பெரிய நன்மையாக இருக்கும். இத்தகைய வேலையை தேவன் எதிர்ப்பார்க்கிறார். இதை சுலபமாகச் செய்துவட முடியாது. ஆதிகமான வேத வாசிப்பும் ஆழ்ந்த சிந்தனையும், இதற்கு அவசியம். பிள்ளைகளும் பெற்றோர்களால் தேவசித்தத்தின்படி அறிவுறுத்தப்படுவார்கள். ***Manuscript 24b, 1894.***

*பாகம் - **V***

*அதிகாரம் - 13*

*சுய கட்டுப்பாடு*

*வாழ்க்கைக்கும் அதன் கடமைகளுக்கும் பிள்ளைகளை ஆயத்தப்படுத்துங்கள்*

“என் பள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் கல்வியின் நோக்கம் என்ன”? என்ற கேள்வியை ஒவ்வொரு தாயும் ஆழமான பாரத்துடன் கேட்க வேண்டும். பிள்ளைகளின் கல்வி வாழ்க்கைக்கும் அதன் கடமைகளுக்கும் அவர்களை தகுதிப்படுத்துகின்றதா? ஊலகில் ஒரு நல்ல பதவியை அடைய அது வழிவகுக்குமா? மற்றவர்களுக்கு நன்மை செய்பவர்களாகவும் நீதியின் பரிசை பெறுபவர்களாகவும் பிள்ளைகள் இருப்பார்களா? கற்றுக்கொடுக்கப்பட வேண்டிய முதல்பாடம் சுய கட்டுப்பாடு. ஒழுக்கமில்லாத அகந்தை நிறைந்த வெரும் இவ்வுலகிலும் பரலோகிலும் எந்த வெற்றியையும் காண முடியாது. ***Pacific Health Journal May,*** *1890.*

### *விட்டுக்கொடுக்கும்படி பயிற்றுவியுங்கள்*

குழந்தைகளும் ஒரு வயது நிரம்புவதற்கு முன்பே தங்களைப் பற்றிப் பேசப்படுவதைக் கேட்டு புரிந்துகொள்ளும் நிலையை அடைகிறார்கள். தங்களது ஆசைகளையும் எந்த அளவிற்கு நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பதையும் அறிந்திருப்பார்கள். தாய்மார்களே உங்கள் பிள்ளைகள் உங்களது விருப்பத்திற்கு, விட்டுக்கொடுக்கும்படி அவர்களை பயிற்றுவியுங்கள். இது நடந்தால்மட்டுமே அவர்களை உங்களால் கட்டுப்படுத்த முடியும். தாயாக உங்களது மதிப்பையும் காத்துக்கொள்ள முடியும். நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதை பிள்ளைகள் எளிதில் புரிந்துகொள்ளுவார்கள். எந்த வகையில் உங்களை விட்டுக்கொடுத்துவிட வைக்க முடியும் என்பதையும் கணித்திருப்பார்கள். இப்படியாக அவர்கள் உங்களது சித்தத்திற்கு மேலாக அடையும் வெற்றியை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளுவார்கள். ***Signs of the Times, March*** *16, 1891.*

தவறான பழக்கங்களைப் பிள்ளைகளுக்குள் வளர விடுவதும், அவர்களது விருப்பங்களின் படி செய்ய விட்டுவிடுவதும், அதிகாரத்தை அவர்கள் எடுத்துக்கொள்ள விடுவதும் ஒரு கொடூரமான செயலாகும்.

### *சுய நலம் நிறைந்த ஆசைகளை நிறைவேற்றாதீர்கள்*

பெற்றோர்கள் கவனத்துடன் செயல்பட வேண்டும். பிள்ளைகளை நியர்த்தியாக நடத்த வேண்டும். பிள்ளைகள் மற்றவர்களது கவனம் தங்கள்மீது வர வேண்டும் என்பதைப் போலவும், தங்களுக்கென்று சிறப்புரிமைகளும் இருப்பது போன்றும் நினைக்க, பெற்றோர்கள் அவர்களை நடத்தக் கூடாது. பிறகு அவர்களது ஆசைகளை நிறைவேற்றப் பெற்றோர்கள் அதிகமான தியாகங்களைச் செய்ய வேண்டியதாயிருக்கும். அவர்களது விருப்பங்களை நிறைவேற்றும்படி பிள்ளைகள் பெற்றோரிடம் கேட்பார்கள். பெற்றோர்கள் அதற்கு இசைவாக நடக்கும் பொழுது பிள்ளைகளிடம் சுய நலத்தை வளர்க்கின்றனர். இதை செய்து பிள்ளைகளுக்கு ஒரு பெரிய தவறை இழைக்கின்றனர். தவறான இந்தப் பழக்கத்தின் தாக்கத்தை மேற்கொள்ளுவது எவ்வளவு கடினமானதாக இருக்கும் என்பதைப் பிற்காலங்களில் பெற்றோர்கள் புரிந்துக் கொள்ளுவார்கள். குழந்தையின் வாழ்க்கையில் முதல் சில வருடங்களில் கொடுக்கப்படும் தவறானக் கல்வி, பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். சுய நலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆசைகள் நிறைவேற்றப்பட மாட்டாது என்பதைப் பிள்ளைகள் கற்றுக் கொள்ள வேண்டும். ***Signs of the Times, Aug.*** *13, 1896.*

### *அடம் பிடிக்கும் எதையும் குழந்தைக்கு தராதீர்கள்*

ஒரு பாடத்தை தாய் மீண்டும் மீண்டும் கற்றுக் கொள்ள வேண்டும். வீட்டின் தலையைப் போன்று பிள்ளை அதிகாரம் செலுத்தக் கூடாது. தாயின் சித்தமே மேலோக்கி இருக்க வேண்டும். குழந்தை இதிலிருந்து சுய கட்டுப்பாட்டைக் கற்றுக் கொள்ளுகிறது. அடம் பிடித்து அழுவும் எதையும் பிள்ளைகளுக்குக் கொடுத்துவிடாதீர்கள். ஒரு வேளை உங்கள் இதயம்கூட குழந்தையின் ஆசையை நிறைவேற்றும்படி உங்களை ஏவலாம். ஒரு முறை அழுது நினைத்ததை பெற்றால், மீண்டும் அதையே முயற்சிப்பார்கள். இரண்டாம் முயற்சி அதிக பெலமுடையதாய் இருக்கும். ***Manuscript*** *43, 1900.*

### *உணர்ச்சிவசப்பட்டு கோபப்படுவதை அனுமதிக்காதீர்கள்*

உணர்ச்சிவசப்பட்டு நடந்து கொள்ளும் குணத்தைப் பிள்ளைகளிடம் வளரவிடக் கூடாது. இதை கட்டுப்படுத்துவதே தாயின் முதல் வேலைகளில் ஒன்றாகும். கோபப்பட்டு பேசுவதும், தரையில் விழுந்து அழுது, அடம் பிடிப்பதும் அனுமதிக்கப்படக் கூடாது. தாங்கள் விருப்பப்பட்ட ஒன்று தடைசெய்யப்பட்டதால் பிள்ளைகள் இப்படி நடக்கக்

1ST Proof

கூடும். பிள்ளையின் நன்மையைக் கருதிப் பெற்றோர் அது கேட்டதைக் கொடுக்காமல் இருந்திருப்பார்கள். எத்தனை பெற்றோர் தங்கள் பிள்ளைகள் கோபத்துடன் நடந்து கொள்ளுவதை அனுமதிக்கின்றனர். இதை பார்க்கும்பொழுது நான் சோர்வடைகிறேன். பிள்ளைகள் கோபத்துடன் கத்துவதையும், பேசுவதையும் பொருத்துக் கொள்ள வேண்டும் என தாய்மார்கள் நினைக்கிறார்கள். இதை கண்டுகொள்ளாமலும் இருக்கிறார்கள். ஒரு தீமை ஒரு முறை அனுமதிக்கப்பட்டால் மீண்டும் எழும்பும். பின்பு அது பழக்கமாக மாறி குழந்தையின் குணமாகிவிடுகிறது. தீமைக்கேதுவான குணமாக உருவாக்கப்படுகிறது. ***Signs of the Times, March 16, 1891.***

### *தீய ஆவியை எப்பொழுது கண்டிப்பது*

சிறு பிள்ளைகள் தரையில் விழுந்து அடம் பிடித்து அழுது அலறுவதை நான் பார்த்திருக்கிறேன். இக்குணம் வெளிப்படும் தருணத்திலேயே அது கண்டிக்கப்பட வேண்டும். பிசாசானவன் பிள்ளைகளின் சிந்தைகளை ஆட்கொள்ள முயலுவான். அவனுடைய சித்தத்தின்படி பிள்ளைகளை அவன் மாற்ற நாம் அனுமதிக்கலாமா? தங்களை ஏவிக்கொண்டிருக்கிற ஆவியின் தன்மையை பிள்ளைகள் அறியாதிருப்பார்கள். இதைப் பகுத்தறிந்து சரியான வகையில் கையாளுவது பெற்றோரது கடமை. பிள்ளைகளின் பழக்க வழக்கங்கள் கவனிக்கப்பட வேண்டும். தீய சுபாவங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். நன்மைக்கேதுவாக சிந்தை வழிநடத்தப்பட வேண்டும். தனது நடத்தை சரியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள பிள்ளையை ஊக்குவிக்க வேண்டும். ***Christian Teperance and Bible Hygiene பக்கம் 61.***

### *பெத்லகேமின் பாடல்களை முதலில் கற்றுக்கொடுங்கள்*

தாய்மார்கள் கையில் இருக்கும் குழந்தைக்கும் நல்ல நியதிகளையும் பழக்கங்களையும் சொல்லித்தர வேண்டும். பிள்ளைகள் தலையை தரையில் இடித்துக்கொள்ள அனுமதிக்கக் கூடாது. கைக்குழந்தைக்கும் தேவையான கல்வியை தாய் கொடுக்கட்டும். பெத்லகேமின் துதி கீதங்களை முதலில் அவர்களுக்கு கற்றுக் கொடுங்கள். இப்பாடல்கள் பிள்ளைகளை அமைதிப்படுத்தும்.



1ST Proof

இயேசுவைப் பற்றியும் அவரது அன்பைப் பற்றிய பாடல்களையும் மெதுவாக அவர்களுக்குப் பாடிக் காண்பியுங்கள். ***Manuscript 9, 1893.***

### *இரு மனதுடன் செயல்படாதீர்கள்*

பிள்ளையிடம் காணப்படும் தவறான குணமும், கோபமும் உடனடியாக கண்டிக்கப்பட வேண்டும். இது தாமதிக்கப்பட்டால் பிறகு செய்வது கடினமானதாகிவிடும். சீக்கிரத்தில் உணர்ச்சிவசப்படக் கூடிய பிள்ளைகளை அதிக கவனத்துடன் பராமரிக்க வேண்டும். அன்போடு நடந்தும், அதே நேரத்தில் தாங்கள் சொன்னவை மாற்றப்பட முடியாதவைகள் என்பதை போன்றும் பிள்ளைகளிடத்துக் காட்ட வேண்டும். பெற்றோர்கள் இவ்விஷயங்களில் விட்டுக்கொடுக்கக் கூடாது. பெற்றோர்கள் சரியான முடிவெடுக்க முடியாதவர்களாகவோ இருமனம் உள்ளவர்களாகவோ இருக்கக் கூடாது. பிள்ளைகளிடையே காணப்படும் நற்பண்புகள் ஊக்குவிக்கப்பட்டு பெலப்படுத்தப்பட வேண்டும். இது அவர்களுடைய தீய பண்புகள் வளராதபடி நிறுத்திவிடும். தவறான குணநலன்களைக் காட்டி கோபப்பட அனுமதித்தால் பிள்ளை சீரழிந்துவிடுவான். வயது செல்ல செல்ல அவனது குறைகள் அதிக பெலம் பெற்றவைகளாக வளர்ந்துவிடும். சுரியான மனோவளர்ச்சி நிறுத்தப்படும். எல்லா நற்பண்புகளுக்கும் மேலாக இத்தீமையின் தாக்கம் காணப்படும்.

### *பெற்றோரின் சுய கட்டுப்பாடே முக்கிய உதாரணம்*

சில பெற்றோர்களால் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிவதில்லை. தவறான ஆசைகளையும், கோபத்தையும் அவர்கள் கட்டுப்படுத்துவதில்லை. இதனால் பிள்ளைகளுக்கு இதை கற்றுத்தர முடியாமல் போகிறது. ***Pacific Health Journal Oct. 1871.***

பிள்ளைகளுக்கு சுய கட்டுப்பாட்டைக் கற்றுத்தர விரும்புவோர், அப்பழக்கத்தை முதலில் அவர்களில் கொண்டுவர வேண்டும். பிள்ளைகளை கோபத்துடன் திட்டுவதும், குறை கண்டுபிடிப்பதும் அவர்களது தீய குணங்களையே வளர்க்கும். பிள்ளைகள் எளிதில் உணர்ச்சிவசப்பட்டு முன்கோபிகளாக மாற ஊக்குவிக்கப்படுகின்றனர். ***Signs of the Times, Nov. 24, 1881.***

***நன்மை செய்வதில் சோராதிருங்கள்***

தேவன் பெற்றோர்களுக்கு குடும்பத்தில் ஒரு வேலை நியமித்திருக்கிறார். இதை செய்யாதபடிக்கு அவர்கள் சுக போகிகளாக இருக்கிறார்கள். இன்றைய வாலிபர்கள் தீங்கும் தீமையும் திறைந்தவர்களாக இருப்பதை நாம் பார்க்கிறோம். அவர்களது குடும்பங்களில் சரியான பயிற்சி கொடுக்கப்பட்டிருந்தால் இந்த அபல நிலை வந்திருக்காது. தேவன் தங்களுக்கு கொடுத்திருக்கிற வேலையை பெற்றோர்கள் செய்ய வேண்டும். பிள்ளைகளுக்கு சுய கட்டுப்பாட்டையும் சுய நலத்தை மறுத்து நல்லவர்களாக வாழுவதையும் கற்றுத்தர வேண்டும் சொல்லினாலும் செயலினாலும் பெற்றோர்கள் இதை செய்தாக வேண்டும். தேவனின் அங்கீகாரமும் இவ்வேலையில் கிடைக்கும். கிறிஸ்துவின் பள்ளியிலிருந்தும் பெற்றோர்களும் பல பாடங்களைக் கற்றுக்கொள்ளுவார்கள். இது நடந்திருந்தால் நீடிய பொறுமையையும் தயவையும், சாந்தத்தையும், சகிப்புத் தன்மையையும் பெற்றோர்கள் கற்றிருப்பார்கள். பிள்ளைகளுக்கு அசவியமானதாக இருக்கும் இப்பாடங்களையே அவர்களுக்கும் சொல்லிக் கொடுத்திருப்பார்கள்.

பொறுப்புக்களை உணர்ந்தவர்களாய் அசட்டை செய்த வேலையை பெற்றோர்கள் தொடங்க வேண்டும். இதைப் புரிந்துக் கொள்ள அவர்களது இதயங்கள் தங்களது ஆன்மீக கடமைகளைப் பார்க்க எழும்ப வேண்டும். இவ்வேலையில் அவர்கள் சோர்ந்துவிடக் கூடாது. தடைகளையும் வரவழைத்துக் கொள்ளக் கூடாது. அநேகர் சோர்ந்துவிடுகிறார்கள். அயராத முயற்சியும், சுய கட்டுப்பாடும், தேவ கிருபையும் அதிகமாகத் தேவைப்படும். இதைக் கண்டு வரும் சோதனைகளை சந்திக்க முடியாமல் பலர் சோர்ந்து விடுகிறார்கள். மனம் உடைந்து போராட்டத்தைக் கைவிடுகிறார்கள். சாத்தான் அவனது வழியை அமைத்துக் கொள்ள விட்டுவிடுகிறார்கள். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வருடமும், இவ்வேலை தொடர்ந்து நடக்க வேண்டும். உங்கள் குழந்தையின் குணம் பரிபூரணமாக உருவாகும வரையிலும், சரியான பழக்க வழக்கங்கள் ஸ்தாபிக்கப்படும் வரையிலும் இது நடந்தேர வேண்டும். முயற்சியை கைவிட்டு சரியான



1ST Proof

நிர்வாகம் இல்லாமல் உங்கள் குடும்பங்கள் தவறான வழிகளில் செல்ல விடாதீர்கள். ***Review and Herald, July 10, 1888.***

***சுயக்கட்டுப்பாட்டை இழந்துவிடாதீர்கள்***

எந்நிலையிலும் நாம் நம்மேல் கொண்டுள்ளக் கட்டுப்பாட்டை இழக்கக் கூடாது. நமது பரிபூரண முன்மாதிரியை எப்பொழுதும் நமக்கு முன்பாக வைக்க வேண்டும். பொருமையில்லாமல் பேசுவதும், முகங்கோணுவதும், கோபப்படுவதும் பாவம். இவைகளை வெளிக்காட்டாமல் நம் மனங்களுக்குள் வைத்திருப்பதும் பாவம். கிறிஸ்துவினுடைய பிராதனிகளாக தகுதியடைந்து நடக்க வேண்டும். கோபமான ஒரு வார்த்தையை பேசுவதும் தீயை முட்டும் வகையில் ஒரு உலோகம் இன்னொரு உலோகத்தை உரசுவதற்கு சமமாகும். கோபத்தையும் வெறுப்பையும் தூண்டும் உணர்வுகளை இது உருவாக்கும்.

கடினமான கட்டையைப்போல் இருக்காதீர்கள். வீட்டில் கோபமான புண்படுத்தும் வார்த்தைகளைப் பேசாதீர்கள். பரலோகின் விருந்தாளியை இல்லத்தினுள் வரவழையுங்கள். அவரும் தேவ தூதர்களும் உங்களுடன் தங்கும்படியாக செயல்படுங்கள். கிறிஸ்துவின் நீதியையும் பரிசுத்தத்தின் அழகையும் பெற்றுக் கொள்ளுங்கள். பரிசுத்தமாகும் அனுபவத்தைப் பெற்று ஜீவ ஒளியை எல்லோரின் மீதும் பிரகாசியுங்கள். ***Manuscript 102, 1901.***

கோபப்படாமல் பொறுமையாக இருப்பவன் பெலவானைப் பார்க்கிலும் மேன்மையானவன் என்று ஞானி சொல்லுகிறார். பட்டணத்தைப் பிடிப்பவனைப் பார்க்கிலும் தன்னைக் கட்டுப்படுத்துகிறவனே மேலானவன் என்பதையும் படிக்கிறோம். பாவம் செய்ய தூண்டப்படும் பொழுதும், சோதனையிலும் மனதை காத்துக்கொள்ளுபவன் உலகின் மாவீரர்களைக் காட்டிலும் மேலானவனாக பரலோகம் பார்க்கிறது. ஒரு மாமன்னர் தனது மரணப் படுக்கையில் பின்வரும் வார்த்தைகளைக் கூறினார். “நான் மேற்கொண்ட மகத்தான வெற்றிகளில், ஓர் வெற்றி மட்டுமே எனக்கு ஆறுதல் அளிக்கிறது. எனது கோப குணத்தின் மேல் நான் கண்ட வெற்றியே அது” என்று கூறினார். மாவீரன் அலெக்ஸ்சாண்டரும், ஜுலியஸ் சீசரும் உலகத்தை சுலபமாக கைப்பற்றினார்கள். ஆனால் அவர்களால் தங்களைக் கட்டுப்படுத்திக்

கொள்ள முடியவில்லை. உலகின் ஒவ்வொரு தேசத்தையும் அடுத்தடுத்து கைப்பற்றினார்கள். பின்பு இருவரும் தங்களது சுய கட்டுப்பாட்டின்மையினாலும், தவறான இலக்குகளாளும் விழுந்தனர். ***Good Health Nov. 1880.***

*அதிகாரம் - 14*

*அமைதியும், மதிப்பும், பக்கதியும்*

*தேவையில்லாத சத்தத்தையும் கூச்சலையும் தகருங்கள்*

தாயானவள் எப்பொழுதும் பல விஷயங்களைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டே இருக்கக் கூடாது. தனது எல்லா பெலத்தையும் பிரயோகித்து, முழு மனதுடன், ஆழ்ந்த அக்கரையுடனும் பிள்ளைகளை பராமரிக்க வேண்டும். பிள்ளைகள் கவனிக்கப்படாவிட்டால் அவர்களது அறியாமையின் இதயத்திலிருந்து தோன்றும் எல்லா ஆசைகளையும் நிறைவேற்றிவிடுவார்கள். அவர்களது உற்சாகமான ஆவியினால் வீட்டில் கூச்சலையும் சத்தத்தையும் ஏற்படுத்துவார்கள். இது கட்டுப்படுத்தப்பட வேண்டும். இப்படிப்பட்ட செயல்களைச் செய்யாமல் இருக்கக் கட்டுப்படுத்துவதினால் குழந்தைகளின் சந்தோஷம் குறைந்துவிடாது. வீட்டிற்கு விருந்தினர் வரும்பொழுது அமைதியாகவும் மதிப்புடனும் நடந்து கொள்ளும்படி கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். ***Manuscript 64, 1899.***

*இல்லத்தில் அமைதி நிலவட்டும்*

வீட்டின் சட்ட திட்டங்களுக்குப் பணிய வேண்டும் என்பதை பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சொல்லித்தர வேண்டும், பிள்ளைகள் என்பதால் இஷ்டம்போல் நடக்கலாம் என்று அவர்கள் நினைத்துவிட அனுமதிக்கக் கூடாது. ஞானமான விதிகள் கொண்டுவரப்பட்டு கைக்கொள்ளப்பட வேண்டும். குடும்ப வாழ்வின் அழகும் மங்காமல் இருக்கும். ***Signs of the Times Sep. 25, 1901.***

பிள்ளைகள் அழுது குரலை எழுப்பிக் கத்தவோ, அடம் பிடிக்கவோ விடுவது, பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு இழைக்கும் பெரிய தவறாகும். எதைப்பற்றியும் கவலைப்படாமல் கட்டுக்கடங்காமற்



1ST Proof

போகும்படி பிள்ளைகள் விடப்படக் கூடாது. துர்குணங்கள் ஆரம்பத்திலேயே சரிசெய்யப்பட வேண்டும். இல்லையெனில் இத்துர்குணங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து வளர்ந்து பெலம் பெறும். அவர்களது ஆவிக்குரிய வாழ்க்கையிலும், தொழிலிலும் காணப்படும் இல்லத்தில் அமைதியாக இருக்கும்படி பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தால் அவர்கள் துக்கப்படமாட்டார்கள். ***Signs of the Times Sep. 25, 1901.***

*அனுபவம் நிறைந்தவர்களின் வார்த்தைகளை மதிக்க கற்றுக்கொடுங்கள்*

அனுபவம் நிறைந்தவர்களின் ஆலோசனைகளையும் வார்த்தைகளையும் பிள்ளைகள் மதிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். தங்களது ஆசிரியர்களுடனும், பெற்றோர்களுடனும் இசைந்து செயல் படத் தக்கதாக அவர்கள் மனங்கள் பக்குவப்படுத்தப்பட வேண்டும். பெரியோர்களின் ஆலோசனைக்கு இணைந்து நடப்பதின் நன்மையைப் புரிந்து கொள்ளுவார்கள். இப்படியாகப் பெரியோர்களது பராமரிப்பிலிருந்து விலகும் வயது வரும்பொழுதும் காற்றினால் எத்திசையிலும் அசைக்கப்படும் பதறைப் போல இருக்க மாட்டார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 75.***

*பெற்றோர்கள் இதை அசட்டை செய்தால் பிள்ளைகளிடம் அவமரியாதையை ஊக்குவிக்கும்*

இல்லங்களில் கீழ்ப்படியாமல், அவமதிப்புடன் நன்றியின்றி தவறாக நடந்துகொள்ள பிள்ளைகள் விடப்படக்கூடாது. குடும்பத்தில் இது காணப்பட்டால் பாவம் வாசலருகே இருக்கிறது. ***Letter 104, 1897.***

தாய் தன் குடும்பத்தை ஞானத்துடன் நிர்வாகிக்க வேண்டும். அவளுடைய செல்வாக் முதன்மையானதாக இருக்க வேண்டும். அவளது வார்த்தை சட்டமாக இருக்க வேண்டும். தேவனால் கட்டுப்படுத்தப்பட்ட தாயாக இருப்பின் தன் பிள்ளைகளின் மதிப்பைப் பெறுவாள். பிள்ளைகளிடமிருந்து என்ன எதிர்ப்பார்க்கிறீர்கள் என்பதை அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 111.***

வீட்டில், பெற்றோர்கள் தங்களது அதிகாரத்தைப் பிள்ளைகளிடம் நிலைநிறுத்தாவிட்டால், அப்பிள்ளைகள் பள்ளியிலும் ஆசிரியர்களுக்கும் பள்ளி முதல்வருக்கும் கீழ்ப்படியமாட்டார்கள். பள்ளியில் இருப்பவர்களுக்குக் கொடுகப்பட வேண்டிய மரியாதை வீட்டில் கற்றுத்தரப்பட வில்லை. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சரிசமமானவர்களைப் போல நடந்திருப்பார்கள். ***Manuscript** 14, 1894.*

### *கட்டுப்படுத்தப்படாத துணிகரத்தின் விளைவுகள்*

உங்கள் பிள்ளைகளை மதியுங்கள். அதைப்போலவே அவமரியாதையுடன் ஒரு வார்த்தையைக் கூட உங்களிடம் பேச அனுமதிக்காதீர்கள். ***Manuscript** 114, 1903.*

### *சரியான மனப்பான்மை*

வாலிபர்கள் பெற்றோர்களை சார்ந்து வாழ்ந்து அவர்களது ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். பெற்றோர் இல்லாவிடில் தங்களை பார்த்துக் கொள்ளுபவர்களின் பராமரிப்பில் இருக்க வேண்டும். இது வாலிபர்களுக்கு ஒரு பெரிய ஆசீர்வாதம். சரியாக இவர்கள் வழிநடத்தப்பட வேண்டும். தங்களின் குடும்பத்தினர் விதிக்கும் கட்டுப்பாடுகள் வாலிபரை வழிநடத்த வேண்டும்.

### *தேவபக்தி கவனத்துடன் காத்துக் கொள்ளப்பட வேண்டும்*

தேவபக்தி நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற பெரிய ஈவாக காத்துக் கொள்ளப்பட வேண்டும். தேவன்மீது ஒரு ஆழ்ந்த பக்தியை வளர்த்துக் கொள்ள பிள்ளைக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். ***Prophets and Kings p.** 236.*

உலகினுடனும், சபையுடனும், தன் குடும்பத்துடனும் சரியான உறவு இருக்கும்படி பிள்ளைகள் வளர்க்கப்பட வேண்டும். இதுவே தேவனுடைய விருப்பம். குடும்பத்துடன் கொண்டிருக்கும் உறவே முதன்மையானது. ஒருவரோடு ஒருவரும் தேவனிடமும் அன்பாகவும், மரியாதையுடனும் நடந்து கொள்ளக் கற்றுக் கொடுப்போம். தேவனிடம் அன்பாக நடந்துகொள்ளுதலின் பொருள், தேவபக்தி எப்பொழுதும் தங்களை பற்றியிருக்க வேண்டும். கிறிஸ்து நமக்காக செய்திருக்கின்ற பெரிய தியாகத்தை எப்பொழுதும் நினைவில் கொண்டவர்களாக நடந்து கொள்ள வேண்டும். நமது நடக்கை அப்பெரிய தியாகத்தை ஆமோதித்து அதன் அளவில்லா தன்மையை அறிந்து கொண்டதற் கேற்றபடி இருக்கட்டும். பெற்றோர்களும் பிள்ளைகளும் தேவனுடன் ஒரு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வுறவு இருந்தால் மட்டுமே தூதர்களும் அவர்களை தொடர்பு கொள்ளுவார்கள். தவறான நடத்தையினால் இத்தூதர்கள் பல வீடுகளுக்குள் செல்ல முடியாமல் இருக்கின்றனர். தேவ வார்த்தையிலிருந்து பரலோகத்தின் ஆவியைப் பற்றிக் கொள்ளுவோம். அவ்வாவியுடன் இப்பூவுலக வாழ்க்கையை வாழுவோம். ***Manuscript** 100, 1902.*

1ST Proof

### *தேவ பக்தியைக் கற்றுக் கொடுப்பது எப்படி*

வேதத்தில் காட்டும் அறிவின்மேல் நாட்டம் காட்டும்படியாகப் பிள்ளைகளின் ஆர்வம் தூண்டப்பட வேண்டும். தங்கள் பிள்ளைகள் வேதத்தின் மேல் ஆர்வம் காட்ட, முதலில் பெற்றோர்கள் அதன்மீது ஆர்வமாக இருக்க வேண்டும். அதன் பாடங்களை அவர்கள் அறிந்திருக்க வேண்டும். உட்காரும்பொழுதும், வழியிலும், படுக்கையிலும், எழுந்திருக்கிற நேரத்திலும் அதைக் குறித்துப் பேச வேண்டும். உபாகமம் 11: 19. பிள்ளைகள் தேவனை நேசித்து அவர் மீது பக்தியாக இருக்க, நாம் செய்யவேண்டிய வேலை ஒன்று உண்டு. தேவனுடைய வல்லமையைக்குறித்தும், மகத்துவத்தைக் குறித்தும், அவரது நற்குணத்தைக் குறித்தும் வேதத்தில் காட்டியிருப்பதைப் பிள்ளைகளிடம் பேச வேண்டும். ***Patriachs and Prophets p.** 504.*

### *பக்தி கீழ்ப்படிவதினால் காட்டப்படுகிறது*

உண்மையான தேவபக்தி கீழ்ப்படிவதினால் வெளிப்படுத்தப்படுகிறது என்பது பிள்ளைகளுக்குக் காட்டப்படட்டும். முக்கியத்துவம் இல்லாத எதையும் தேவன் கட்டளையிடவில்லை. அவரது வார்த்தைக் கேற்றபடி நாம் கீழ்ப்படிவதே தேவனுக்குப் பிரியமான பக்தியாக இருக்கும். ***Counsels to Parents, Teachers and Students, p.** 111.*

*அதிகாரம் - 15*

***கெடுதலுக்கேதுவான சுபாவங்களைக் கட்டுப்படுத்துங்கள்***

பிள்ளைகளின் கல்வி முழுமையாததாகவும் சீரானதாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு தாயும் தளராது ஊக்கமுடன் செயல்பட வேண்டும். தனது கவனத்தை மற்ற எதுவும் எடுத்துக் கொள்ளாதபடிப் பார்க்க வேண்டும். வீட்டிலுள்ள பொருள்களைத் தங்கள் விருப்பத்திற்க்கேற்பக் கையாளும்படி அனுமதிக்கக் கூடாது. தங்களது சுய சந்தோஷத்திற்காக விட்டிலுள்ளவைகளை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. வீட்டை ஒழுங்கில்லாமல் வைத்திருக்கக் கூடாது என்பதும் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். வீட்டிலுள்ள எல்லா பொருட்களும் தங்களது விடையாட்டுப் பொருட்கள் என்று பிள்ளைகள் நினைக்காதபடி தாய்மார்கள் அவர்களுக்கு இதைப்பற்றிச் சொல்லித்தர வேண்டும். இச்சின்ன பொருள்களின் வழியாகவும் ஒழுங்கு கற்றுத்தரப்படுகிறது. பொருள்களை உடைத்து அழிக்கும் குணத்தை பிள்ளைகளிடம் வளரவிடாதீர்கள். அத்தீய குணத்தைக் கட்டுப்படுத்துங்கள். பிள்ளைகள் எந்த அளவிற்கும் அழுதும் அடம்பிடித்தாலும் இதில் விட்டுக்கொடுத்துவிடாதீர்கள். இத்தீய சுபாவம் குழந்தைகளிடமும் சிறுபிள்ளைகளிடமும் அதிகமாகக் காணப்படும். பிள்ளைகள் தவறாக நடந்துகொள்ள அனுமதிக்கும் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் பெரிய தவறை இழைக்கிறார்கள். அடிப்படையில் அவன் நல்ல பிள்ளையாக இருக்கக் கூடும். ஆயினும் அவன் தவறாக வழிநடத்தப்படுவதினால் பிரச்சனைக்குரியவனாகவும் அழிக்கும் சுபாவம் கொண்டவனாகவும் வளருகிறான். ***Manuscript 64, 1899.***

***மற்றவரின் பொருட்களை மதிக்கச் சொல்லிக் கொடுங்கள்***

தங்களுக்கு உரிமையில்லாதப் பொருட்களை எடுத்து விளையாடும்படி பிள்ளைகளை சில பெற்றோர்கள் அனுமதிக்கின்றனர். மற்றவர்களது பொருட்களைத் தாங்கள் கையாளக் கூடாது என்பதைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். குடும்பத்தின் மற்ற அங்கத்தினரின் சந்தோஷத்தையும் வசதிகளையும் பாதிக்காதபடி நடந்துகொள்ள சில விதிகளைக் கைக்கொள்ள வேண்டும். இதைச் செய் இதைச் செய்யாதே என்று தேவன் திட்டவட்டமாகச் சொல்லுகிறார். கோபத்துடனோ எரிச்சலுடனோ சொல்லுவதில்லை. பெற்றோர்கள் அப்படியேச் செய்ய வேண்டும். பார்த்தை எல்லாம் கையாளும்படி அனுமதிக்கப்படுவதினால் பிள்ளைகளின் சந்தோஷம் கூடுவதில்லை. அக்கரையுடன் நடந்து கொள்ளப் பிள்ளைகளுக்கு ஒரு கல்வி கொடுக்கப்பட வேண்டும். இது செய்யப்படாவிட்டால் தகாத குணங்களுடன் ஏற்கப்பட முடியாத சுபாவங்களுடன் பிள்ளைகள் வளருவார்கள்.

***திடமான எளிதில் உடையாத விளையாட்டுப் பொருட்கள்***

சுலபமாக உடைந்துவிடக் கூடிய விளையாட்டுப் பொருட்களைப் பிள்ளைகளிடம் கொடுக்காதீர்கள். அதிக நாட்கள் நீடித்து இருக்கக் கூடிய பொருட்களைக் கொண்டு பிள்ளைகள் விளையாடட்டும். சுலபமாக உடையும் பொருட்களை அவர்கள் கையாண்டால் அழிக்கும் சுபாவம் வளரும். சில விளையாட்டுப் பொருடகள் இருக்கட்டும். பெலமானதாகவும் இருக்கட்டும். இவை சிறு காரியங்களாக இருந்தாலும் பிள்ளைகளுக்குப் பெரிய பாடங்களைக் கற்றுக்கொடுக்கின்றன. ***Counsels to Parents, Teachers and Students, p. 123.***

***அதிகாரம் - 16***

***ஆரோக்கிய விதிகள்***

***சுகாதார கல்வியைச் சிறுவயதிலிருந்து கொடுங்கள்***

நமது சரீரத்தின் இயக்கங்களை தேவன் வடிவமைத்திருக்கிறார். ஒவ்வொரு இயக்கமும் வியக்கும் வகையில், ஞானத்துடன் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கிறது. தேவனது கட்டளைகளுக்கிணங்கி நாம் தேவனுடன் ஒத்துழைக்க வேண்டும். இதை செய்தால் நமது சரீரத்தின் இயக்கங்கள் ஆரோக்கியமாக இருக்கும் என்று தேவன் வாக்களிக்கிறார். இயற்கையில் தேவனின் கைவண்ணத்தை நாம் இரசிக்கலாம். இவை எல்லாவற்றைக் காட்டிலும் நம்மை அதிக வியப்பூட்டுவது நமது சரீரமே.

அறிவு வளர்ச்சி துவங்கும் காலத்திலிருந்து நமது சரீரத்தின் அமைப்பைப் பற்றி படித்துக் கொள்ள வேண்டும். மனிதன் தேவனின் சாயலில் படைக்கப்பட்டிருக்கிறான். இதில் தேவனது ஒரு நகலை இங்கு பார்க்கலாம். ***Medical Ministry p. 221.***

1ST Proof

பிள்ளைகள் முதலில் தங்கள் சரீரத்தைக் குறித்தும் அதை எப்படி பராமரித்துக் கொள்ள வேண்டும் என்பதையும் முதலில் படிக்க வேண்டும். ***Testimonies ofr the Church Vol. 3 p. 142.***

***முதன்மையாக்கப்பட வேண்டிய பாடங்கள்***

சிறு பிள்ளைகளைப் பராமரிக்கும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் சரீரத்தை ஆரோக்கியமாகப் பராமரித்துக் கொள்ளத் தேவையான கல்வியைப் பிள்ளைகளுக்குத் தர தவறிவிடுகின்றனர். இது நடந்தால் ஒழிய ஆரோக்கியமான உடலும், மனமும் இருக்காது. இதற்கு முதல் கவனத்தைச் செலுத்த வேண்டும். ***Health Reformer Dec. 1872.***

குடும்பங்கின் எதிர்காலமும் சமுதாயத்தின் எதிர்காலமும் சரீர ஆரோக்கியத்திற்கும், எழுக்கமான வாழ்க்கைக்கும் ஏதுவாக, கொடுக்கப்பட்டக் கல்வியையே சார்ந்து அமையும். இதற்கேற்ப பிள்ளைகளின் ஆரம்ப பிராயத்தில் கொடுக்கப்பட்ட கல்வியேப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். ***Fundementals of Christian Education, p. 156.***

***சரீர இயக்கங்களைப் புரிந்துகொண்டு கற்றுக்கொடுக்க வேண்டும்***

நமது சரீரங்களை ஆரோக்கியமாகப் பராமரித்துக்கொள்ளத் தேவையான அறிவை பெற்றோர்கள் முதலில் பெற்றுக்கொள்ள வேண்டும். பின் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் கல்வியில் இதை நடைமுறைப்படுத்த வேண்டும். இது நடந்தால் பிள்ளைகளிடையும் வாலிபர்களிடையும் ஒரு பெரிய மாற்றம் காணப்படும். தங்களது சரீாங்களைக் குறித்துப் பிள்ளைகள் அறிவுறுத்தப்பட வேண்டும். மனித உயிரின் இரகசியங்களை வெகு சில வாலிபர்களே புரிந்துக் கொண்டிருக்கின்றனர். சரீர இயக்கங்களினைப் பற்றி எவரும் அறிந்திருப்பதில்லை. தாவீது சொன்னதை அறிவோம்.

நமது சரீரங்களின்மீது ஏரெடுக்கப்படும் ஒவ்வொரு செயலுக்கும் பின்விளைவு உண்டு என்பதைப் பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும். ஆரோக்கிய விதிகள் மீறப்பட்டால், அதன் விளைவாக நோய்களை நாம் பெற்றுக்கொள்ளுவோம். இதை பிள்ளைகளுக்கு நாம் காட்ட வேண்டும். உங்கள் முயற்சிகளுக்கான பலன் உடனடியாகத் தெரியாவிட்டாலும் சோர்ந்து விடாதீர்கள். ஒவ்வொரு இயற்கை நியதிகளையும், அதின் ஒவ்வொரு வரியையும் பொருமையுடன் சொல்லிக் கொடுங்கள். வெற்றியை காணும்வரை தொடர்ந்து முயன்றுகொண்டிருங்கள். பிள்ளைகளுக்கு அவர்களது சரீரங்களைப் பற்றி சொல்லிக் கொடுங்கள். எப்படி ஆரோக்கியமாக நம்மை பராமரித்துக் கொள்ளுவது என்பதையும் கற்றுத் தாருங்கள். இதைப்பற்றி அக்கரையில்லாமல் இருக்கக் கூடாது. பிறகு பெரிய காரியங்களில் ஒழுக்கமில்லாமல் நடந்து கொள்ள இந்த அஜாக்கிரதை, வழிநடத்திவிடும். ***Testimonies for the Chruch Vol. 2 p. 536, 537.***

***ஆரோக்கியம் என்பது ஒரு குடும்ப விஷயம்***

இது ஒரு குடும்ப விஷயமாக மாறிவிட வேண்டும். கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்ற பெற்றோர்கள் விழித்தெழும்ப வேண்டும். பெற்றோர்கள் ஆரோக்கிய சீர்த்திருத்த விதிகளைக் கற்றுக் கொள்ளட்டும். சுய நலத்தை மறுத்து வாழ்வதே பாதுகாப்பான வாழ்வு என்பதைப் பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுக்கட்டும். உலகத்தில் பெரும்பான்மையானோர் ஆரோக்கிய விதிகளை அசட்டை செய்கின்றனர். சுய கட்டுப்பாட்டை இழக்கிறார்கள். நித்தியத்திற்கு தகுதியில்லாதவர்களாக மாறுகிறார்கள். பெற்றோர்கள் தங்கள் சரீரங்களைப் பற்றி எதையும் அறியாதவர்களாக இருக்கிறார்கள். இதனால் பிள்ளைகள் தவறான பழக்கங்களுக்குள்ளாக வழிநடத்தப்படுகிறார்கள். ஆரோக்கிய விதிகளை மீறி அதன் விளைவையும் சந்திக்கிறார்கள். ***Testimonies for the Chruch Vol. 6 p. 370.***

***உடற்பயிற்சிக் கொடுக்கப்பட வேண்டும்***

ஆவிக்குரிய பயிற்சியைக் காட்டிலும் உடற்பயிற்சி சுலபமாகக் கொடுகப்படலாம். தோட்டம், விளையாடும் இடம், வேலை செய்யும் இடம், விவசாயம், போன்றவைகள் உடற்பயிற்சி கொடுக்கின்றன. சாதகமான ஒரு நல்ல சூழலில் குழந்தை நல்ல ஆரோக்கியத்தை அடைந்து சரீரமும் நன்றாக வளருகிறது. ஆயினும் இதற்கும் தேவயையான பயிற்சி கொடுக்கப்பட வேண்டும்.

1ST Proof

***இயற்கையின் விதிகள் மகிழ்ச்சியைத் தருகின்றன***

பிள்ளைகள் அவர்களது சரீர அவயத்தைப் பற்றி நன்கு அறிந்தவர்களாக இருக்க வேண்டும். இதற்கென அவர்கள் அறிவுருத்தப்பட வேண்டும். சிறு வயதிலும் பிள்ளைகள் இந்த அறிவை பெற்றுக் கொள்ளலாம். ஆரோக்கிய விதிகளை கைக்கொண்டால் மட்டுமே நோயின்றி இருக்க முடியும் என்பது பிள்ளைகளுக்கப் பொருமையாக அறிவுருத்தப்பட வேண்டும். நோயால் பாதிக்கப்பட்டால் பயனுள்ளவர்களாகத் திகழ முடியாது என்பதைப் பிள்ளைகள் புரிந்து கொள்ளட்டும். தங்கள்மீது நோய்களை வரவழைத்துக் கொண்டால் இது தேவனுக்கும் பிரியமானதாக இருக்காது என்பயையும் பிள்ளைகள் அறியட்டும். ***Health Reformer Aug. 1877.***

***அதிகாரம் - 17***

***சுத்தமாக இருத்தல்***

***தேவன் இதை கவனிக்கிறார்***

இஸ்ரவேலர்கள் தங்கள் துணிகளை துவைத்து, பாலயத்திலிருந்து சகல அசுத்தங்களையும் நீக்கும்படி தேவன் கட்டளையிட்டார். அவர்கள் மத்தியில் அவர் வரும்பொழுது எந்த அசுத்தத்தையும் அவர் பார்க்கக் கூடாது என்பதற்காக இப்படி செய்திருந்தார். இன்றைக்குத் தேவன் நமது இல்லங்களின் வழியாகவும் கடந்து செல்லுகிறார். அசுத்தமான ஆரோக்கியமற்ற சூழலை கவனிக்கிறார். தாமதமின்றி நாம் நம்மை சீர்திருத்திக் கொள்ள வேண்டும்.

குழந்தையின் மனதில் நல்ல கோட்பாடுகளைப் பெற்றோர்கள் புகுத்த வேண்டும். இதை செய்ய வேண்டிய தேவ பிரதிநிதிகளாக பெற்றோர்கள் இருக்கிறார்கள். அவரது பிள்ளைகளைத் தேவன் பெற்றோர்களிடம் ஒப்படைத்திருக்கிறார். இஸ்ரவேலரின் பிள்ளைகள் ஆரோக்கியத்திற்கேற்ற பழக்கங்களுடன் வளர வேண்டும் என்பதை திட்டவட்டமாகப் பார்த்துக் கொண்டார். நமது இல்லங்களில் இன்று எந்த அசுத்தத்தையும் அனுமதிக்க மாட்டார். இதற்கேற்ப ஒரு கல்வியை உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுங்கள். சுத்தத்தைக் குறித்து உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது, ஆவிக்குரிய பாடங்களைச்



1ST
Proof

சொல்லிக் கொடுப்பதாகும். மனதளவிலும், சரீரத்திலும் தாங்கள் சுத்தமாக இருப்பதையே தேவன் விரும்புகிறார் என்பதை பார்ப்பார்கள். தேவ கோட்பாடுகளைப் புரிந்துகொள்ள வழிநடத்தப்படுவார்கள். அவைகளை வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்டு, அதன்படி ஒவ்வொரு செயலையும் செய்வார்கள். ***Manuscript 32, 1891.***

திறந்த வெளியில் எப்பொழுதும் பயணம் செய்துகொண்டிருந்த இஸ்ரவேலர்களின் சுகாதாரத்தைத் தேவன் கவனமாகப் பார்த்துக் கொண்டார். இன்றைக்கு நாம் மூடப்பட்ட வீடுகளில் வசிக்கிறோம். இங்கு அசுத்தங்கள் தெளிவாகத் தெரியும். ஆவைகளின் தாக்கமும் நமக்கு இன்று அதிகமாக இருக்கும். இஸ்ரவேலர்களுக்கு கூறியிருந்ததையே தேவன் நமக்கும் சொல்லுகிறார். ஆரோக்கியத்தைக் காக்கும்படியாக அவர் கட்டளையிட்டிருந்தவைகளின் எதுவும் குறைந்துவிடவில்லை. ***Counsels on Health p. 82.***

***சுத்தம் காத்தல் நம் சுபாவமாகவே மாறவேண்டும்***

இல்லத்தில் அசுத்தமாக இருப்பது ஒரு பெரிய தவறு. இப்படி இருந்தால் இதன் தாக்கம் இருந்துகொண்டே இருக்கும். தவறான ஒரு கல்வியைக் கொடுப்பதாக இத்தாக்கம் அமையும். குழந்தைப் பருவத்திலிருந்தே பிள்ளைகளின் மனங்கள் சரியான திசையில் திருப்பப்பட வேண்டும். அவர்களது பழக்கங்கள் இதற்கேற்ப உருவாக்கப்படட்டும். சரீரத்திலோ, உடையிலோ அசுத்தமாக இருப்பது தேவனுக்கு பிரியமில்லாதது என்பதைக் காட்டுங்கள். இதை தேவன் ஏற்றுக்கொள்ளுவதில்லை. சரியான முறையில் உணவை உண்ணவும் கற்றுக்கொடுங்கள். பிள்ளைகளை இவ்விஷயங்களில் நாம் கவனித்துக் கொண்டே இருக்க வேண்டும். சுத்தமான பழக்க வழக்கங்கள் அவர்களது இயல்பான செயல்களாகவே மாறிவிடும். அசுத்தம் வெறுக்கப்பட வேண்டும்.

இச்சிறு கடமைகளும் அசட்டை செய்யப்படக் கூடாது என்பதைப் புரிந்து கொள்ளுவது எவ்வளவு அவசியமானதாக இருக்கிறது. சிறு வயதில் பிள்ளைகள் ஏற்படுத்திக் கொண்ட பழக்கங்களைச் சார்ந்தே அவர்களது எதிர்காலம் அமையும்.

அசுத்தத்தையும் ஒழுக்கமில்லாமையையும் அனுமதிக்காமல் இருக்கும் பொழுது பிள்ளைகள் அதற்கேற்றபடி பக்குவப்படுகிறார்கள். தேவையான அறிவையும் பெற்று சொல்லப்பட்டப் பாடங்களை மறக்காமல் மனதில் வைப்பார்கள். ***Manuscript** 32, 1899.*

### *சுத்தத்தை விரும்பவும் அசுத்தத்தை வெறுக்கவும் கற்றுக் கொடுங்கள்*

சுத்தத்தையும் சுகாதாரத்தையும் நேசிப்பவர்களாக உங்கள் குணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். ***Testimonies for the Chruch Vol. 2 p.** 66.*

எளிமையாகவும் சாதாரணமாகவும் பிள்ளைகளுக்கு உடை அணிவியுங்கள். அதிக நாட்கள் இருக்கக் கூடிய துணிகளை உபயோகியுங்கள். உடைகள் சுத்தமாக இருக்கட்டும். எவ்வகையான அசுத்தத்தையும் வெறுக்கக் கற்றுக்கொடுங்கள். ***Manuscript** 79, 1901.*

எதை உண்பது, எதை குடிப்பது, எதை உடுத்துவது என்று தேவையில்லாத திட்டங்களைத் தீட்டுவதை விட்டுவிட வேண்டும். இதற்கென ஏறெடுக்கப்படும் பெலமானது சுத்தமாக இருக்கச் செலவிடப்படட்டும். இதில் என்னை தவறாக புரிந்துகொள்ளாதீர்கள். பிள்ளைகளை பொம்மைகளைப் போல் எப்பொழுதும் வீட்டில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. சுத்தமான மணலிலும் நன்கு காய்ந்த நிலத்திலும் அசுத்தங்கள் இருப்பதில்லை. நமது சரீரங்களிலிருந்து வெளியேறும் அசுத்தங்கள் நம்மை தீட்டுப்படுத்துகின்றன. உடைகள் மாற்றப்பட வேண்டும். சரீரம் கழுவப்பட வேண்டும். ***Christian Temperance and Bible Hygience p.** 141.*

### *இடத்தையும் சுத்தமாக வையுங்கள்*

பிள்ளைகள் பயன்பரும் ஏதேனும் ஒன்றை செய்துகொண்டிருக்கும்படி பார்த்துக் கொண்டால் முழு குடும்பமும் ஆசீர்வதிக்கப்படும். ஏன் ஊழியக்காரர்களும் ஆசிரியர்களும் இதைப்பற்றி அதிகமாக பேசுவதில்லை. சரீர ஆரோக்கியத்திற்கும், நல்ல ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் இது அத்தியாவசியமாக உள்ளது. குடும்பத்தின் பிள்ளைகள் தாங்கள் இல்லத்தின் ஒரு முக்கிய அங்கமாக தங்களை



1ST Proof

உணர வேண்டும். பார்க்க விரும்பப்படாத காட்சிகள் எதுவும் இல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இது குறித்து அறிவுரை கொடுக்கப்பட வேண்டும். ***Letter** 108, 1898.*

எந்த வகையான அசுத்தமும் நோயை வரவழைக்கக் கூடியதாக இருக்கும். வெளிச்சம் புகாத வீட்டின் மூளைகளில் கிருமிகள் தங்கும். சுத்தம் செய்யப்படாத குப்பையிலும், தூசியிலும், ஈரத்திலும் கிருமிகள் அதிகமாக வாழும். கெட்டுப்போகும் காய்கறிகளோ, மரத்திலிருந்து விழும் இலைகளோ வீட்டருகே குவியலாக இருக்கக்கூடாது. அது கெட்டுப்போகும் பொழுது சுற்றி இருக்கும் காற்றையும் அது அசுத்தப்படுத்தும். அசுத்தமானது எதுவும் கெட்டுப்போய்க்கொண்டிருக்கிற எதுவும் விட்டினுள் இருக்கக்கூடாது. சுகாதாரமாக பராமரிக்கப்படாத நகரங்களில் திடீரென நோயின் தாக்கமும் ஜுரமும் அநேகரைப் பாதித்தது. இதற்கு காரணம் ஏதேனும் ஒரு வீட்டில் கெட்டுப்போகும் தன்மையுடைய பொருட்கள், குப்பைகள் வீட்டின் அருகே விடப்பட்டது. இதுவே நோயை கொண்டுவந்தது என்பது பின் கண்டறியப்பட்டது. துள்ளியமான தூய்மையும், சூரிய ஒளியும், நல்ல சுகாதாரமும் அவசியம். இல்லத்தில் இது கைக்கொள்ளப்பட்டால் நோய்கள் நெருங்காது. குடும்ப அங்கத்தினர் மன இரம்மியத்துடனும் ஆரோக்கியத்துடனும் இருப்பர். ***Ministry of Healing p.** 276.*

### *தனி நபர் சுத்தம் ஆரோக்கியத்திற்கு அவசியம்.*

சுத்தமாக இருப்பது ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கு சரீர ஆரோக்கியத்திற்கும் அவசியமானது. நமது தோலின் வழியாகத் தொடர்ந்து அசுத்தங்கள் வெளியேற்றப்படுகின்றன. தோலின் சிறு துவாரங்கள் சுத்தம் செய்யப்பட வேண்டும். தினமும் கழுவியும் குளித்தும் இத்துவாரங்கள் சுத்தம் செய்யப்படாவிட்டால் அவைகள் அடைக்கப்படுகின்றன. வெளியேராத அசுத்தங்கள் உடலின் மற்ற அவயங்களை பாரப்படுத்துகின்றது. இந்த அவயங்கள் அசுத்தங்களை வெளியேற்ற முயலுகின்றன.

காலையில் அல்லது மாலையில் குளிர்ந்த நீரில் குளிப்பது அநேகருக்கு நன்மையைத் தரும். சுரியாக இது செய்யப்பட்டால் சலியை வரவழைக்காது. மாறாக சலியிலிருந்து இது நம்மை பாதுகாக்கும்.

இரத்த ஓட்டத்தை இது துரிதப்படுத்துகிறது. தோலுக்கு பக்கத்தில் அதிகமான இரத்தம் கொண்டுவரப்படுகிறது. இரத்த ஓட்டம் சீராக்கப்படுகிறது. சரீரமும் மனமும் எழுச்சியூட்டப்படுகின்றன. சிந்தை தெளிவடைகிறது. தசைகள் உபயோகத்திற்கு ஆயத்தப்படுத்தப்படுகின்றன. இக்குளியல் நரம்புகளை அமைதிப்படுத்துகிறது. செரிமான அவயங்களும் கீழ்வயிறிலும் பெலமூட்டப்படுகின்றன. செரிமானத்தை ஊக்குவிக்கிறது.

உடைகள் சுத்தமாக இருப்பது முக்கியம். தோலின் துவாரங்களின் வழியாக வரும் அசுத்தங்களை உடைகள் உரிந்து கொள்ளுகின்றன. உடனுக்குடன் உடைகள் மாற்றப்படாவிட்டால் இக்கழிவுகள் மீண்டும் சரீரத்திற்குள் இழுத்துக் கொள்ளப்படுகின்றன. ***Ministry of Healing*** *276.*

***தூய்மைக்கு ஏதுவாக சுத்தமான சூழல் அமையும்***

பிள்ளைகள் தூங்கும் மெத்தைகளை நான் பல இடங்களில் கவனித்திருக்கிறேன். தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு துர்நாற்றம் அவைகளிலிருந்து வருவதை அனுபவித்திருக்கிறேன். பிள்ளைகள் கையாளும் அல்லது தொடர்பு கொள்ளும் எல்லா பொருட்களையும் சுத்தமாக வையுங்கள். இதனால் பிள்ளைகள் தூய்மையானவற்றை தேர்ந்தெடுக்கப் பழகிக்கொள்ளுவார்கள். பிள்ளைகள் உறங்கும் அறைகள் சுத்தமாக இருக்கட்டும். விலை உயர்ந்தப் பொருடம்களினால் அறைகள் அலங்கரிக்கப்படாமற் இருந்தாலும் பரவாயில்லை. சுத்தமாக இருக்க வேண்டும். ***Christian Temperance and Bible Hygiene p.*** *142.*

***சம நிலையுடன் கையாளுங்கள்***

சுத்தமும் ஒழுங்கும் கிறிஸ்தவக் கடமைகள் ஆயினும் இதில் மட்டுமே தீவிரமாக இருந்துகிடக் கூடாது. இதை விட முதன்மை வாய்ந்தவைகளை அசட்டை செய்துவிடக் கூடாது. இவ்விஷயங்களை மட்டும் கவனித்துவிட்டு மற்றவைகளை கவனிக்காமல் இருத்தல் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசம பாகம் செலுத்தி, நீதியையும், இரக்கத்தையும், அன்பையும் அசட்டை செய்வதாகும். ***Christian Temperance and Bible Hygiene p. 68.***



1ST
Proof

***அதிகாரம் - 18***

***துப்புரவும், ஒழுங்கும், சீராக செயல்படுதலும்***

பிள்ளைகளிடத்தில் ஒழுங்கையும் துப்புரவையும் வளர்ப்பது அவர்களது கல்வியில் ஒரு முக்கிய பாகமாக இருத்தல் வேண்டும்.

பிள்ளையின் பாதுகாவலராக ஆசிரியராக நீங்கள் இருக்கிறீர்கள். வீட்டின் சின்ன வேலைகளையும் ஒழுங்குடனும் நல்ல முறையிலும் செய்யுங்கள். துணிகளை ஒழுங்காக வைத்துக்கொள்ள வேண்டிய மதிப்பற்றப் பாடத்தைக் கற்றுக்கொடுங்கள். உங்கள் துணிகளை நல்ல வகையில் பராமரியுங்கள்.

நல்ல உதாரணமாக இருக்கும்படி தேவன் உங்களை முன்நிறுத்தியிருக்கிறார். இல்லத்தில் அதன்படி நடவுங்கள். பரலோகில் எந்த ஒழுங்கின்மையும் இராது என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் வீடு இவ்வுலகில் ஒரு பரலோகமாக இருத்தல் வேண்டும். குடும்பத்தில் செய்யப்பட வேண்டிய சின்ன காரியங்களிலும் ஒவ்வொரு நாளும் உண்மையாய் இருங்கள். தேவனுடன் இணைந்து செயல்படுபவர்களாக திகழ்வீர்கள். பரிபூரண கிறிஸ்தவ குணத்தை உருவாக்கி கொள்ளுகிறீர்கள். ***Letter 47a,*** *1902.*

பிள்ளைகளின் இரட்சிப்பிற்காக செயல்படுகிறீர்கள் என்பதை மனதில் நிறுத்துங்கள். உங்கள் பழக்கங்கள் சரியானவையாக இருக்கட்டும். ஒழுங்கையும், நீதியையும், உத்தமத்தையும் வெளிக்காட்டுங்கள். ஆவியையும், ஆத்துமத்தையும், சரீரத்தையும் பரிசுத்தப்படுத்துங்கள். இவைகளை செய்தால் உலகத்தின் ஒளியாக இருக்கிறீர்கள் என்ற வாக்கியத்திற்கேற்றபடி இருப்பீர்கள். ***Manuscript*** *79, 1901.*

***துப்புரவாக இருக்க பயின்று கொள்ளுங்கள்***

தூய்மையையும், சுத்தத்தையும், பரிபூரணத்தையும் காட்டும் பழக்கங்கள் ஒவ்வொரு குடும்பமும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சத்தியத்தை விசுவாசிப்பதாக நாம் உலகினிடம் சொல்லிக் கொள்ளுகிறோம். சத்தியம், நீதி ஆகியவைகளின் கோட்பாடுகள்,

ஒழுங்கில்லாத அசுத்தமான மக்களை உருவாக்குவதில்லை என்பதைக் காட்டுங்கள்.

ஒரு குடும்பம் தேவனிடம் அன்பு கூறுவதை, பிள்ளைகளிடம் அன்பு காட்டுவதினால் வெளிப்படுத்துகிறது. உண்மையான அன்பு பிள்ளைகள் ஒழுங்கின்றி ஏனோதானோ என்று இருக்க விடாது. ஒழுங்கின்றி இருப்பதே எளிதானதாகத் தெரியலாம். பெற்றோர்கள் நல்ல உதாரணமாக விடா முயற்சியுடன் பயனுள்ள பழக்கங்களை தங்களிடம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு பின் பிள்ளைகளுக்கும் இதை கற்றுக் கொடுப்பார்கள். ***Manuscript 24, 1894.***

***துணிகளைப் பராமரித்துக் கொள்ள கற்றுக்கொடுங்கள்***

துணிகளைப் பராமரித்துக் கொள்ள சிறு பிள்ளைகளுக்கும் சொல்லிக்கொடுங்கள். அவர்களது பொருட்களை வைத்துக் கொள்ள ஒரு இடம் ஒதுக்கப்படட்டும். எல்லா பொருட்களையும் சீராக அடுக்கி வைத்துக் கொள்ள கற்றுக் கொடுங்கள். அவர்களுக்கென்று ஒரு அலமாரியை கொடுக்க முடியாமல் போகலாம். அவர்களுக்கென்று ஒரு பெட்டியையாவது கொடுங்கள். அதை ஒரு துணியினால் மூடி அழகுபடுத்துங்கள். அதனுள் அவர்களது துணிகளை அடுக்கிக் கொள்ளட்டும். இதற்கு நீங்கள் அதிக நேரம் செலவழிக்க வேண்டிய அவசியம் இல்லை. இதனுடைய நல்விளைவுகளைப் பிள்ளைகளின் எதிர்காலத்தில் பார்ப்பீர்கள். உங்களது நேரத்தையும் பிரயாசங்களையும் இது மிச்சப்படுத்தும். ***Christian Temperance and Bible Hygiene p.142***

***அறை சுத்தமாக இருக்க வேண்டும்***

முடிந்தால் பிள்ளைகளுக்கென்று ஒரு அறை கொடுக்கப்படலாம். அது அவர்களுடையது என்பதை அறிவார்கள் அதை சுத்தமாகவும் விரும்பக் கூடிய வகையில் பராமரித்துக் கொள்ள கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் அந்த அறைக்கு பொறுப்பாளியாகிறார்கள் என்பதை அறிவார்கள். வீட்டினுள் அவர்களுக்கு ஒரு சின்ன வீடு இருக்கிறதை உணருவார்கள். அதை நன்றாகப் பார்த்து கொள்ளுவதில் திருப்தியடைவார்கள். தாயானவள் பிள்ளைகளின் வேலைகளை ஆய்வு செய்து தேவையான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் கொடுக்க வேண்டும். இது தாயின் வேலை. ***Christian Temperance and Bible Hygiene p.142***

***போதுமான நேரம் தூங்க வேண்டும்***

இரவைப் பகல் போலவும் பகலை இரவைப் போலவும் பாவித்து செயல்படும் வழக்கம் அதிகமாக உள்ளது. பல வாலிபர்கள் காலையில் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறார்கள். விடியற்காலையில் எழுந்து பாடும் பறவைகளுடன் அவர்கள் எழுந்து செயல்பட வேண்டும். இயற்க்கை காலையில் தனது அலுவல்களில் இறங்குவதைப் போல் நாமும் செயலாற்ற வேண்டும். ***Youth's Instructor Sep. 7, 1893.***

சில வாலிபர்கள் இத்தகைய ஒழுங்கிற்கு எதிராக இருக்கிறார்கள். வீட்டின் சட்டங்களுக்கு கீழ்ப்படிவதில்லை. சரியான நேரத்தில் எழும்புவதில்லை. விடிந்த பின்பும் பல மணி நேரங்கள் கட்டிலில் கழிக்கின்றனர். எல்லோரும் துரிதமாக இருக்க வேண்டிய நேரமாக அது இருக்கிறது. அளவுக்கு அதிகமாக தங்களது சக்திகளைப் பிரயோகித்திருக்கிறார்கள். இதன் நிமித்தமாக செயல்பட வேண்டிய நேரத்தில் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. விலைமதிப்பற்ற வாய்ப்புகளை இழக்கிறார்கள். அதிகமான செலவுகளையும் கொண்டு வருகிறார்கள். என் வேலையை நேரத்திற்குள் என்னால் முடிக்கமுடிவதில்லை. சரியான நேரத்திற்கு என்னால் உறங்க முடிவதில்லை. ஏதேனும் வேலை இருந்துகொண்டே இருக்கிறது. என்றெல்லாம் கூறுவார்கள். சீரான ஒழுங்கு உடைக்கப்படுகிறது. காலையில் அவர்கள் நேரத்தை வீணடித்துவிட்டார்கள். இதன் நிதித்தமாக முடிக்க வேண்டிய வேலைகளை அவர்களால் செய்ய முடிவதில்லை.

நமது தேவன் ஒழுங்கின் தேவன். அவரது ஒழுங்கிற்கு கீழாக நாம் வர வேண்டும் என்பதை அவர் விரும்புகிறார். இரவைப் பகலைப்போலவும் பகலை இரவைப்போலவும் மாற்றும் இப்பழக்கத்தை விடுவது நன்மையைத் தருமல்லவா? வாலிபர்கள் சரியான பழக்க வழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டால் ஆவியிலும், சிந்தையிலும், சரிருத்திலும் குணத்திலும் மேம்பட்டிருப்பார்கள்.

வாழ்க்கையின் பழக்கங்களில் நல்ல விதிகளை துள்ளியமாக கைக்கொள்ளுவது நமது கடமை. அன்பான வாலிபர்களே இது உங்களது நன்மைக்கே. சரீரத்திற்கும் சரி ஒழுக்கமான வாழ்க்கைக்கும் சரி இது மிகவும் நன்மையானது. காலையில் எழுந்த பிறகு அன்றைக்க முடிக்க வேண்டியவைகளை மனதில் கொள்ளுங்கள். தேவைப்பட்டால் செய்ய வேண்டியவைகளை ஒரு சிறு புத்தகத்தில் எழுதிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு வேலையையும் செய்ய வேண்டிய நேரத்தையும் குறித்துக் கொள்ளுங்கள். ***Youth's Instructor Jan. 28, 1897.***

***அதிகாரம் - 19***

***மனத்தூய்மை***

கிறிஸ்தவ தாய்மார்களே, நானும் உங்களைப்போல் ஒரு தாயின் பொறுப்பில் இருக்கிறேன். உங்களது பொறுப்பை உணருங்கள் என்பதே எனது வேண்டுகோள். சுய கட்டுப்பாட்டையும், சுய மறுப்பையும் தொட்டிலிலிருந்தே பிள்ளைக்கு சொல்லிக் கொடுங்கள். நல்ல சரீரங்களையும், நல்ஒழுக்கத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக பிள்ளைகளை வளர்ப்பியுங்கள். நம்மை உடனடியாக சந்தோஷப்படுத்தும் தற்காலிகமான ஆசைகளுக்கு வாழுவது தேவதிட்டமல்ல என்பதை அவர்கள் மனதில் பதியுங்கள். உண்மையான நன்மை எதுவோ அதற்காகவே வாழ வேண்டும் இப்பாடங்கள் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளுக்கொப்பாய் இருக்கின்றன. அவ்விதைகள் நல்ல கனிகளைக் கொடுக்கும். அக்கனிகள் உங்களை மகிழவைக்கும். ***Manuscript** *44, 1900.*

பிள்ளைகள் தீமையான தாக்கங்களிலிருந்து காக்கப்பட வேண்டும். இதற்கென பெற்றோர்கள் பிள்ளைகளை அறிவுறுத்த வேண்டும். மனதை சுத்தமாக வைக்கும் கோட்பாடுகளை சொல்லித்தர வேண்டும்.

ஷஷஷஷஷ

வீட்டில் சுய கட்டுப்பாட்டையும் கீழ்ப்படிதலையும் கைக்கொள்ளும் பிள்ளைகள் பள்ளியிலும் இதை எளிதாக பின்பற்றுவார்கள். வாலிபர்களுக்கு வரும் அநேக சோதனைகளையும் மேற்கொள்ளுவார்கள். எல்லா இடங்களிலும் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுக்கு உண்மையாக இருக்க வேண்டும் என்பதை பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் புரிய வைக்க வேண்டும். இதற்கேற்ற பயிற்சி பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். குணங்களைப் பெலப்படுத்தும் தாக்கங்களால் அவர்கள் சூழப்பட வேண்டும். இப்பயிற்சியைப் பெற்ற பிள்ளைகள் பள்ளிக்கு அனுப்பப்படும்பொழுது எந்த தொந்தரவையும் கொடுக்கமாட்டார்கள். ஆசிரியர்களுக்கு இப்பிள்ளைகள் உதவும் கரமாக இருப்பார்கள். சக மாணவர்களுக்கு ஒரு நல்ல உதாரணமாக அமைந்து மற்றவர்களை ஊக்கப்படுத்துவார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p.** *150*

1ST Proof

***தொடர்ந்து கண்காணியுங்கள்***

பிள்ளைகள் மனதளவிலும் தூய்மை காக்க, பெற்றோர்களும், பிள்ளைகளை பராமரிப்பவர்களும் முதலில் தங்கள் இதயத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்குச் சரியான அறிவுரைகளைக் கொடுங்கள். பிள்ளைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். இளவயதினரின் சிந்தையில் ஒவ்வொரு நாளும் புது யோசனைகளும், எண்ணங்களும் எழும்பும். புதுப்புது காரியங்கள் மனதில் பதிக்கப்படும். அவர்கள் பழகும் நபர்கள், படிக்கும் புத்தகங்கள், கையாளும் பழக்க வழக்கங்களை குறித்தும் கவனமாக இருக்க வேண்டும். ***Signs of the Times, May 25, 1882.***

***வீட்டை சுத்தமாகவும் விரும்பத்தக்க விதத்திலும் வையுங்கள்***

வீடு சுத்தமாக வைக்கப்பட வேண்டும். சுத்தமில்லாத வீட்டின் மூளைகள், ஆத்துமாவில் அசுத்தமான மூளைகளைக் கொண்டுவரும். தாய்மார்கள் பிள்ளைகளுக்கு ஆசிரியர்களாக இருக்கிறர்கள். தூய்மையான எண்ணங்களை அவர்களுக்குள் புகுத்துங்கள். இதை காலமே செய்யுங்கள். அவர்களின் அறைகளை சுத்தமாகவும் அவர்கள் அதை விரும்பப்படக் கூடிய வகையில் அதை அலங்கரியுங்கள். ***Christian Temperance and Bible Hygiene p.** *142*

***பழகும் நபர்கள்***

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் நல்லவர்களாக இருக்க விரும்பினால், அவர்கள் பழகும் நபர்களைக் குறித்துக் கவனமாக இருக்க வேண்டும். நல்ல சம்பத்துக்களுடன் தொடர்பு கொள்ளும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். ***Christian Temperance and Bible Hygiene p.142***

ஒழுக்கத்தைக் கெடுக்கும் தவறான பழக்கங்களிலிருந்து பிள்ளைகளைப் பெற்றோர் மிக கவனத்துடன் காத்துக் கொள்ள வேண்டும். உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பின் முக்கியத்துவத்தை உணருகிறீர்களா? மற்ற பிள்ளைகளோடு பழகும்பொழுது எதை கற்றுக் கொள்ளுகிறார்கள் என்பதை கூட இருந்து கவனிக்கிறீர்களா? மற்ற பிள்ளைகளுடன் தனியாக அவர்களை விடாதீர்கள். அதிகமாக அக்கரைக் கொண்டு பராமரியுங்கள். ஒவ்வொரு மாலையிலும் எங்கு இருக்கிறார்கள் என்பதையும் என்ன செய்கிறார்கள் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள் சரியான பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளுகிறார்களா? ஒழுக்கமாக இருத்தலைக் குறித்து அவர்களை அறிவுறுத்திருக்கிறீர்களா? இதை நீங்கள் செய்யத் தவறியிருந்தால் ஒரு நாள்கூட தாமதிக்காதீர்கள். இந்த விஷயத்தில் நீங்கள் தவறியதை அவர்களிடமே ஒப்புக்கொள்ளுங்கள். தேவன் உங்களுக்கு நியமித்திருக்கிற வேலையைச் செய்ய துவங்கப்போவதாகச் சொல்லுங்கள். இந்த சீர்திருத்தத்தில் அவர்களும் உங்களோடு கைக்கோர்க்கும்படிச் செய்யுங்கள். ***Manuscript 119, 1901.***

அக்கம்பக்கததைச் சேர்ந்தவர்கள் அவர்களது பிள்ளைகளை மாலையிலும் இரவிலும் உங்கள் வீட்டிற்கு அனுப்பலாம். இது உங்களுக்கு ஒரு சோதனையாகவே இருக்கும். தீர்க்கமாக முடிவெடுக்க வேண்டியதாக இது உள்ளது. அப்பிள்ளைகளை அவர்களது இல்லத்திற்குத் திருப்பி அனுப்பினால் அவர்கள் வருத்தப்படலாம். அல்லது உங்கள் பிள்ளைகளுடன் இருக்க வைத்து அவர்களது சுய நல ஆசைகளை நிறைவேற்றலாம். அவர்களிடமிருந்து ஒரு தவறானக் கல்வியைப் பிள்ளைகள் பெறக்கூடும். இது வாழ்நாள் முழுவதும் அவர்களை பற்றும் சாபமாக மாறக்கூடும். சாபத்திற்கு ஒப்பானவைகளை மற்ற பிள்ளைகளிடமிருந்து அவர்கள் கற்றுக் கொள்ளலாம். மற்ற சிறுவர்களுடன் தங்குவதையோ தூங்குவதையோ நான்



1ST Proof

தவிர்த்திருக்கிறேன். பயணங்களிலும் எனது பிள்ளைகளுக்கு தரையில் படுக்கும்படி ஆயத்தப்படுத்தினேன். மற்றவர்களோடுச் சென்று தங்க அனுமதிக்கவில்லை. முரட்டுத்தனமாக நடந்து கொள்ளும் பிள்ளைகளோடு தொடர்பு கொள்ளாதபடி என் மகன்களை பார்த்துக் கொண்டேன். இல்லத்தில் உள்ள வேலைகளை சந்தோஷத்துடன் செய்யும்படியாக அவர்களை வழிநடத்தினேன். வீட்டின் வேலைகளை அவர்கள் விரும்பிச் செய்யும்படியாக அவர்களுக்குப் பிடித்தவைகளை வைத்து அவர்களை கவர்ந்திருக்கிறேன். அவர்களது அறிவுக்கும் சரீரத்திற்கும் எப்பொழுதும் ஏதேனும் வேலை கொடுக்கப்பட்டது. எனவே வெளியே சென்று மற்ற பிள்ளைகளுடன் விளையாட வேண்டும் என்ற ஆசை வந்ததில்லை. தெருவில் விளையாடும் பிள்ளைகளிடமிருந்து தவறானவைகளை அவர்கள் கற்றுக் கொள்ள வில்லை. ***Solemn Appeal p. 56.***

***ஒழுக்கச் சீர்கேட்டிலிருந்து பாதுகாருங்கள்***

பிள்ளைகளின் ஆத்துமாக்களும் சரீரங்களும் தேவனுடைய சொத்து. இவைகளை நம்மிடம் தேவன் ஒப்படைத்திருக்கிறார். இந்த காலத்தில் எங்கும் பரவியிருக்கும் ஒழுக்கச் சீர்கேட்டிலிருந்து அவர்களைப் பாதுகாக்க தடுப்புச்சுவர்களை எழுப்ப வேண்டும். இத்தீமை ஆயிரக்கணக்கானோரின் ஆத்துமாக்களை சீரழித்துக் கொண்டிருக்கிறது. இந்த காலத்தின் குற்றங்களுக்கான காரணம் கண்டறியப்படுமானால் அது பெற்றோர்களின் அறியாமையே என்பது தெரிய வரும். பெற்றோர்களாக இவ்விஷயத்தில் பிள்ளைகளைச் சரியாக வழிநடத்தாததால் இன்றைய சூழல் நிலவுகிறது. ஆரோக்கியமும், உயிரும் இத்தீமைக்குப் பலியாகிறது.

பிள்ளைகளுக்குக் கற்றுத்தர வேண்டியவைகளை எல்லாம் கற்பித்து அவர்களுக்கு ஒரு முழுமையான கல்வியைக் கொடுப்பதே பெற்றோர்களின் கடமை. இது தேவன் அவர்களுக்கு நியமித்திருக்கிற கடமை. இதை செய்யுத் தவறினால், அதன் விளைவுகளுக்காக நாம் தேவனிடம் கணக்கு கொடுக்க வேண்டியதாக இருக்கும். இத்தவறு உங்கள் பிள்ளையை மட்டும் பாதிக்காது. ஒரு களை, வயலில் முழுவதும் கலைகளால் நிரம்பும்படிச் செய்யும். இதைப்போல் உங்கள் தவறினால்

உங்கள் பிள்ளையிடம் காணப்படும் தீமை அவன் தொடர்பு கொள்ளும் எல்லோரையும் பாதிக்கும். ***Review and Herald, Jan 27, 1899.***

***தூய்மையானவைகளால் சிந்தையை நிரப்புங்கள்***

நமது சுயத்தை மறுத்து அதை கட்டுப்படுத்தும் வாழ்க்கையே கிறிஸ்தவ வாழ்க்கை. குழந்தை பருவத்திலிருந்தும் இப்பாடங்களையே நாம் பிள்ளைகளுக்குக் கற்றுத்தர வேண்டும். கட்டுப்பாடுடன் நடந்து கொள்ள அவர்கள் பழக வேண்டும். சிந்தையிலும், செயலிலும் இதயத்திலும் தூய்மை இருக்க வேண்டும். பிள்ளைகள் தேவனுடையவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டவர்கள் என்பதையும் சொல்லிக் கொடுங்கள். ***Christian Temperance and Bible Hygiene p.145.***

இளம் பிராயத்திலும் பிள்ளைகளின் மனங்கள் உண்மையானவைகளினாலும், தூய்மையானவைகளினாலும், நன்மையானவைகளினாலும் நிரப்பப்படட்டும். இது நடந்தால் மட்டுமே உயர்ந்தவைகளின் மீதும் தூய்மையானவைகளின் மீதும் அவர்களுக்கு ஒரு நாட்டம் ஏற்படும். அவர்களது மனமும் எளிதில் தீட்டுப்பட்டு கெட்டுப்போகாது. பேற்றோர்களின் மனங்கள் தரம் தாழ்ந்தவைகளின் மீது இருந்துகொண்டு இருந்தால், மற்றவர்களது குறைகளையே பேசிக்கொண்டிருந்தால் இந்த தவறான உதாரணத்தையே பிள்ளைகளும் பின்பற்றுவார்கள். பெற்றோர்களைப் போல இது பிள்ளைகளின் பழக்கமாக மாறிவிடும். தொழுநோயின் ஆரம்பத்தைப்போல இது அவர்களைத் தொற்றிக்கொண்டு எதிர்காலத்தில் அவர்களை இறுகப் பற்றிக்கொள்ளும்.

தேவனுக்கு பயந்து செயல்படும் தாயானவள் குழந்தைப் பருவத்தில் விதைக்கும் விதை நீதியின் மரமாக தழைக்கும். ஏற்றக் கனிகளையும் கொடுக்கும். வார்த்தையினாலும் உதாரணத்தினாலும் ஒரு தகப்பனின் பாடம் யோசேப்பைப்போன்று பெரிய அறுவடையைக் கொண்டு வரும்.

***பாகம் - VI***

***அதிகாரம் - 20***



1ST
Proof

***உதவும் கரமாக பிள்ளைகள்***

***பிள்ளைகளுக்கு உதவ கற்றுத்தாருங்கள்***

இல்லத்தின் பள்ளியில், நடைமுறை வாழ்க்கையின் கடமைகளைச் செய்ய பிள்ளைகளுக்குக் கற்றுத்தர வேண்டும். சிறு பிராயத்திலும் பிள்ளை செய்வதற்கான சிறு வேலைகளைத் தாய் தர வேண்டும். தாய் தானாகவே ஒரு வேலையை செய்து விடுவதைவிட பிள்ளைக்கு அதை சொல்லிக் கொடுப்பது அதிக நேரம் எடுக்கும். ஆயினும் பிள்ளையின் குணாதிசயத்தில் உதவும் மனப்பான்மையைக் கொண்டு வர வேண்டும். பிள்ளைகளின் குணத்தின் அடித்தளமாக இது இருக்க வேண்டும். வீடு ஒரு நல்ல பள்ளிக்கு ஒப்பாக இருப்பதை தாய் தனதில் கொள்ள வேண்டும். தலைமை ஆசிரியரைப்போல் தாய் இருக்கிறாள். வீட்டின் வேலைகளை துரிதமாகவும் சிறப்பாகவும் செய்வது எப்படி என்பதை பிள்ளைக்கு ஒரு தாய் கற்றுத்தர வேண்டும். இது அவளது கடமை. சிறுவயதிலிருந்தும் வீட்டின் பாரங்களை பகிர்ந்து கொள்ள பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். வளர வளர வயதிற்கேற்ப பெரிய வேலைகளும் கொடுக்கப்படட்டும். இப்படியாக வீட்டின் நிர்வாகத்தில் பிள்ளைகளும் உதவ வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 122.***

***வேலைகளில் காணப்படும் தவறுகளைப் பெரிது படுத்தாதீர்கள்***

ஆயிரக்கணக்கானோர் தங்கள் இல்லங்களில் கல்வி பெறாதவாகளைப்போல் இருக்கிறார்கள். பிள்ளைகளுக்கு இதை சொல்லித்தருவதைவிட நானே இதை செய்துவிடலாம். பிள்ளைகளுக்குச் சொல்லித்தருவது கடினமாக இருக்கிறது என்று தாய் கூறலாம்.

தனது சிறு பிராயத்தில் தானும் மெதுவாகவே கற்றுக்கொண்டதை தாய் மறக்கவேண்டாம். மெதுவாகவும், சிறிது சிறிதாகவும் பிள்ளைக்குத் தாய் கற்றுக்கொடுக்க வேண்டும். இதை செய்யாமற்போனால் பிள்ளைக்குப் பெரிய தவறை இழைப்பதாகும். பிள்ளைகளை உங்களுடன் வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் கேள்விகள் கேட்கட்டும். பொறுமையுடன் பதில் சொல்லுங்கள். அவர்கள் செய்வதற்கும் எதையேனும் கொடுங்கள். உங்களுக்கு உதவுகிறார்கள் என்று எண்ணி

அவர்கள் சந்தோஷமடையட்டும். பிள்ளைகள் வேலை செய்ய முற்படும்பொழுது அவர்களைத் தடுக்காதீர்கள். வேலையில் அவர்கள் தவறு செய்தாலும், பொருள் ஏதேனும் உடைந்தாலும் அவர்களைக் குற்றப்படுத்தாதீர்கள். அவர்களது குழந்தைப் பருவத்தில் கற்றுக் கொடுக்கப்பட்டவைகளைச் சார்ந்தே அவர்களது எதிர்காலம் அமையப்போகிறது. சரீரத்தினாலும், மனதளவிலும் அவர்கள் பெற்றிருக்கின்ற திறன்கள் எல்லாம் தேவனுடையவைகள் என்பதைப் பார்க்கக் கற்றுக்கொடுங்கள். தேவனுக்கு பயன்பட அவைகளை ஒப்படைப்பதே நமது வேலை என்பதையும் புரிய வையுங்கள். சில பிள்ளைகளுக்குத் தேவன் மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் சற்று முன்பாகவே தனது சித்தத்தை வெளிப்படுத்துவார். தேவன் கொடுத்துள்ள எல்லா திறமைகளையும் உபயோகித்து வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். ***Letter 104, 1897.***

### *வீட்டின் பாரங்களைப் பிள்ளைகளும் பகிர்ந்து கொள்ளட்டும்*

உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையானது சந்தோஷம் நிறைந்திருக்கும்படிப் பார்த்துக் கொள்ளுங்கள். அதே சமயத்தில் உதவி செய்யவும் கீழ்ப்படியவும் கற்றுக்கொடுங்கள். நீங்கள் பெரிய சுமைகளை சுமர்ப்பதைப்போல் சிறிய சுமைகளை அவர்கள் சுமக்கட்டும். பயனுள்ள வேலைகளைச் செய்யும் பழக்கத்தை அவர்களில் உருவாக்குங்கள். சாத்தான் அவர்களது சிந்தையை ஆட்கொள்ளமாட்டான். இந்த வாழ்க்கைக்கும் நித்திய வாழ்க்கைக்கும் பயனுள்ளதாக இருக்கும் ஒன்றைப் பிள்ளைகள் சிந்தித்துச் செயல்படும்படி வேலைகளைக் கொடுங்கள். ***Manuscript 62, 1901.***

சிறு பிராயத்திலிருந்தே வீட்டின் சுமைகளை சுமக்கப் பிள்ளைகளுக்குப் பயிற்சிக் கொடுக்க வேண்டும். வீட்டின் வேலைகளை எல்லோரும் பகிர்ந்து ஒரு மனதுடன் செய்ய வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுங்கள். துரிதமாகவும், துப்புரவுடனும் வேலை செய்ய கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்படும் இந்த கல்வியானது அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு விலைமதிப்பற்ற பாடங்களைக் கற்றுத்தரும். ***Signs of the Times, Dec. 11, 1901.***



1ST Proof

குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் தனது பங்கென்ன என்பதை புரிந்துகொண்டு, மற்றவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். ஆறு வயதிலிருந்து குழந்தைகளுக்கு வீட்டின் பொறுப்புக்களில் பங்கேற்கச் செய்ய வேண்டும். வாழ்க்கையின் சுமைகளை சுமப்பதில், அவர்களது பங்கும் இருக்க வேண்டியுள்ளதாக இருக்கிறது என்பதை அவர்கள் உணரட்டும். ***Testimonies for the Church, Vol. 2, p. 700.***

### *நல்ல அனுபவமாகவும் இன்பம் தரக்கூடியதாகவும் இருக்கும்*

குழந்தைப் பருவத்திலிருந்தே பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சரியான அறிவுரைகளைக் கொடுப்பது எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது. தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிய கற்றுத்தர வேண்டும். அவர்களது வாழ்நாட்களும் நீடித்திருக்கும். பிள்ளைகள் வளர்ந்து வர பெற்றோர்களின் பராமரிப்பை பாராட்டுபவர்களாக இருக்க வேண்டும். தாய்க்கும் தகப்பனுக்கும் உதவுவதே தங்களது உயரிய இன்பம் என்பதைப் பார்க்கட்டும். ***Manuscript 129, 1903.***

### *சாதாரண வேலையும் விருப்பத்துடன் செய்யப்படட்டும்*

சாதாரண வீட்டு வேலைகளைச் செய்வது தேவன் அவர்களுக்கு வரையறுத்திருக்கிற வழியாக இருக்கிறது என்பதை பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். உண்மையுடன் வேலைகளை செய்வதற்கான பயிற்சிப் பள்ளியாக இது இருக்கிறது. இதை பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்துவிட்டால் சாதாரண வேலைகளும் விரும்பக் கூடியவைகளாகவும், மதிப்பிற்குரியவைகளாகவும் தோன்றும். ஒவ்வொரு நாளின் கடமையையும் தேவனுக்குச் செய்யப்படும் வேலையைப்போல் பாவிக்கப்பட வேண்டும். இந்த எண்ணத்துடன் செயல்பட வேண்டும். இதை செய்தால் பூமியின் வேலையாட்கள் பரலோக வேலையாட்களுடன் இணைக்கப்படுவார்கள். பரலோகத்தில், தூதர்கள் அவர்களது வேலையைச் செய்வதுபோல இவ்வுலகில் நியமிக்கப்பட்ட இடத்திலிருந்து நமது வேலைகளை நாம் செய்ய வேண்டும். ***Signs of the Times, Oct. 11, 1910.***

*அதிகாரம் - 21*

*வேலை*

*பிள்ளைகளுக்கு ஓர் பாதுகாப்பு*

பயனுள்ள வேலையானது இள வயதினருக்கு ஒரு பெலமான பாதுகாப்பாகும். சோம்பலின்றி செயல்படும் பழக்கத்திற்குள்ளாக பிள்ளைகள் பயிற்சிக்கப்பட வேண்டும். அவர்களது நேரங்கள் பயனுள்ள வகையில் நல்ல வேலைகளில் உபயோகிக்கப்பட வேண்டும். கனவு கண்டுகொண்டு நேரத்தை வீணடிக்கவோ, தங்கள் நிலையைக் குறித்து விசனப்படவோ வாய்ப்பு இருக்காது. தவறான பழக்கங்கள் உண்டாகும் அபாயமும், கெட்ட தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் சூழ்நிலையும் அமையாது. ***Counsels to Parents, Teachers and Students, p.*** *122.*

பயனுள்ள வேலையின் மதிப்பு அளவிடப்பட முடியாது. பயனுள்ள ஏதேனும் ஒன்றைச் செய்ய பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். ஒரு பயனுள்ள சந்தோஷமான வாழ்க்கையைப் பிள்ளைகள் வாழ வேண்டும். தேவனுடைய உயரிய பணிக்கும் நித்தியத்தின் மகிழ்ச்சிக்கும் ஆயத்தமாக வேண்டும். இது நடக்கத்தக்கதான ஒரு கல்வியை பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும். இதை அவர்கள் முதலில் புரிந்துகொண்டு, இதை செய்வதற்கு சாதாரண மனித ஞானம் போதாதென்பதை உணரவேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p.*** *125.*

*வயதிற்கும் திறமைக்கும் ஏற்ற வேலைகளைக் கொடுங்கள்*

வயதிற்கும் திறமைக்கும் ஏற்ற வேலைகளைச் செய்யும்படி குழந்தைப் பருவத்திலிருந்தே பிள்ளைகள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். பிள்ளைகள் தனித்தியங்க பெற்றோர்கள் ஊக்கப்படுத்த வேண்டும். உலகத்தில் பெரிய பிரச்சனைகளை நாம் விரைவில் காணப்போகிறோம். இவைகளை சந்திக்கத்தக்கதாக பிள்ளைகள் ஆயத்தப்படுத்தப்பட வேண்டும். ***Signs of the Times, Aug.*** *13, 1896.*

பயனுள்ளவர்களாக இருக்கப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். வயதிற்கேற்ற சுமைகளைச் சுமக்கட்டும். வேலை செய்வதென்பது அவர்களது சுபாவமாகவே மாறிவிடும். பயனுள்ள வேலையை வெறுக்கமாட்டார்கள். ***Review and Herald, June*** *24, 1890.*

*சோம்பலின் கனி*

பிள்ளைகள் பயனுள்ள எதையும் செய்யாமல் சோம்பலாக இருக்க விடுவதைவிட பெரிய பாவத்தை பெற்றோர்கள் செய்ய முடியாது. தேவன் கொடுத்திருக்கின்ற பொறுப்பை இது அசட்டைச் செய்வதாகும். இப்படியாக விடப்படும் பிள்ளைகள் பயனற்றவர்களாக வளர்ந்து சோம்பலையே விரும்புவார்கள். வேலைக்குச் செல்லும் வயது வந்தபின்பும் சோம்பலுடனே தங்கள் வேலைகளைச் செய்வார்கள். நன்றாக வேலை செய்வதற்கும், சரியாக வேலை செய்யாமல் இருப்பதற்கும் வித்தியாசம் எதுவும் இல்லை என நினைப்பார்கள். எந்த வேலையாக இருந்தாலும் பின்வரும் வசனங்களுக்கேற்றபடி இருக்க வேண்டும். ***"அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்." ரோமர்*** *12: 11.* ***" கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்." லூக்கா*** *16: 10.* ***Manuscript*** *117, 1899.*

பிள்ளைகள் வீட்டில் சரியாக வழிநடத்தப்பட்டால் தெருவில் காணப்படமாட்டார்கள். தவறான கல்வியைப் பெறமாட்டார்கள். பிள்ளைகளை நேசிக்கும் பெற்றோர்கள் சோம்பலான பழக்கங்களுடன் வளர அனுமதிக்கமாட்டார்கள். அறியாமையைத் தேவன் ஏற்றுக்கொள்ளுவதில்லை. அவரது வேலைக்கு ஏதுவானதும் இல்லை. ***Counsels to Parents, Teachers and Students, p.*** *149.*

*நேரத்தை ஞானமாகச் செலவழித்தல்*

சோம்பல் அதிகமாக இருக்கும் இடத்தில் சாத்தான் தனது சோதனைகளைக் கொடுத்து அதிகமாக கிரியைச் செய்கிறான். வாழ்க்கையையும் குணத்தையும் கெடுக்கிறான். பயனுள்ள வேலைக்கு வாலிபர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். இல்லாவிடில் ஏழையாக

1ST Proof

இருந்தாலும் செல்வந்தராக இருந்தாலும் பெரிய அபாயத்தில் இருக்கிறார்கள். சாத்தான் அவனுக்கேற்றபடி அவர்கள் வேலை செய்ய வைத்துவிடுவான். முறையாக வளர்க்கப்படாத வாலிபர்கள் நேரதின் முக்கியத்துவத்தை உணருவதில்லை. நேரம் என்பது ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள விலைமதிப்பற்ற பொக்கிஷம். நம்மீது நம்பிக்கை வைத்து தேவன் இதை நமக்குக் கொடுத்திருக்கிறார். தேவனிடம் இதன் கணக்கை நாம் எல்லோரும் கொடுக்க வேண்டி இருக்கிறது. ***Manuscript** 43, 1900.*

நேரத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். பெற்றோருக்கு உதவவும் தன்நம்பிக்கையோடும் இருக்க வேண்டும். தேவைப்படும் எந்த வேலையையும் அவர்கள் குறைவாக மதிப்பிடக்கூடாது. அவ்வேலையை அவர்கள் செய்யாமல் இருக்க அனுமதிக்கக் கூடாது. ***Letter** 11, 1888.*

நேரத்தின் மதிப்பு கணக்கிடப்பட முடியாதது. வீணடிக்கப்பட்ட நேரம் மீண்டுமாக பெற்றுக்கொள்ளப்பட முடியாது. வீணடிக்கப்படக்கூடிய நேரத்தை பயனுள்ளதாக்குதல் புதையலுக்கு ஒப்பானது. ***Manuscript** 117, 1899.*

### *தவறான எல்லாப் பழக்கங்களையும் மேற்கொள்ளுங்கள்*

பிள்ளைகளின் கல்விக்குத் தேவன் அவருடைய வார்த்தையில் ஒரு திட்டத்தை வரையறுத்திருக்கிறார். இத்திட்டத்தைப் பெற்றோர்கள் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு தவறான பழக்கத்தையும் மேற்கொள்ள பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளைக்கும் செய்யவேண்டிய ஒரு வேலை உள்ளது என்பதை சொல்லித்தாருங்கள். ***Manuscript** 98, 1901.*

சோம்பலும், சுய நலத்தை திருப்திபடுத்தும் தவறான பழக்கங்களில் ஈடுபடுவதும், கிறிஸ்தவ மரத்தில் இருக்க வேண்டிய கனிகள் அல்ல. ***Manuscript** 24, 1894.*

சோம்பலாயிறுப்பது ஒரு பெரிய சாபமாகும். தேவன் மனிதனுக்கு நரம்புகளையும், அவயங்களையும், தசைகளையும் கொடுத்திருக்கிறார்.



1ST Proof

வேலையில்லாமல் இருந்தால் இவைகள் பெலன் இழந்துவிடும். இவைகள் பயன்படுத்தப்பட்டு ஆரோக்கியமாக பராமரிக்கப்பட வேண்டும். செய்வதற்கு ஒன்றுமில்லாமல் இருப்பது பெரிய துரதிஷ்டமாகும். சோம்பல் என்பது மனித இனத்திற்கு ஒரு சாபமாகவே இருந்திருக்கிறது. எதிர்காலத்திலும் சாபமாகவே இருக்கும். ***Manuscript** 24, 1894.*

பிள்ளைகளே எப்பொழுதும் உண்மையுள்ள வேலைக்காரர்களாக இருங்கள். உங்கள் கடமைகளிலிருந்து விலகாதீர்கள். நல்ல கடினமாக வேலை உங்களை பெலம் நிறைந்தவர்களாக மாற்றும். இப்படியாக வீட்டை நீங்கள் செழிக்கவைக்கும்பொழுது உங்கள்மீதும் பெரிய ஆசீர்வாதங்களைக் கொண்டுவந்து கொள்ளுவீர்கள். ***Manuscript** 117, 1899.*

### *விளையாட்டிற்கு முன்பு வேலை*

என் தாய் எனக்கு வேலை செய்ய கற்றுக்கொடுத்தார்கள். விளையாடுவதற்கு முன்பாக நான் ஏன் இவ்வளவு வேலைகளைச் செய்ய வேண்டும்? என்று கேட்டிருக்கிறேன். நன்றாக வேலை செய்யும்படி உனக்கு பயிற்சிக் கொடுக்க வேண்டும். மேலும் வேலை நேரத்தில் எந்த குறும்பையும் செய்யமாட்டாய். வயதாகும்பொழுது நான் இப்படி செய்ததற்காக எனக்கு நன்றி சொல்லுவாய் என்று என் தாய் எனக்கு பதில் கூறினார். என்னுடைய பேதி ஒருத்தி என்னிடம் நான் ஏன் துணிகளைத் தைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பாட்டிகள் தாமே இவ்வேலையை செய்வார்கள் என்றாள். பாட்டிகள் தைப்பதற்கு எப்பொழுது கற்றுக் கொண்டிருப்பார்கள் என்று கேட்டேன். அவர்கள் சிறுமிகளாக இருந்த பொழுதுதானே கற்றுக்கொண்டு இருப்பார்கள். ***Manuscript** 19, 1887.*

### *வேலைக்கான ஒரு அட்டவணையும் அதன் மதிப்பும்*

அந்த நாளுக்குரிய வேலைகளை காலையிலே நினைவு படுத்திக்கொள்ளுவது நல்லது. செய்ய வேண்டிய வேலைகளை பட்டியலிட்டு செய்யப்பட வேண்டிய நேரத்தையும் குறித்து கொள்ளுங்கள். எல்லா வேலைகளும் ஒழுங்குடனும் கிரமத்துடனும் செய்யப்படட்டும். அறைகளை ஒழுங்குபடுத்தும் வேலை வந்தால் அதில் மட்டுமே கவனம்

செலுத்துங்கள். மேஜையின்மீதோ, மற்ற இடங்களின்மீதோ கிடக்கும் பத்திரிக்கைகளும் செய்தித்தாள்களும் உங்கள் கவனத்தை ஈர்க்கக் கூடாது. இந்த வேலையை முடிப்பதற்கு இவ்வளவு நேரம் மட்டுமே இருக்கிறது என்றும் இந்த நேரத்திற்குள் வேலையை முடிக்க வேண்டும் என்று உங்களுக்குள் சொல்லிக்கொள்ளுங்கள்.

பொதுவாகவே மெதுவாகச் செயல்படுவோர், துரிதமாகச் செயல்பட பிரயாசப்பட வேண்டும். பவுலின் வார்தைகளை நினைவில் கொள்ளுங்கள். ***"அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்." ரோமர் 12: 11.***

சமைக்கும் வேலை வருமானால் கவனமாக திட்டமிடுங்கள். தேவையான நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். சரியான நேரதில் முடித்து, மேஜையின்மீது ஒழுங்காக அடுக்குங்கள். முடிக்க வேண்டிய நேரத்திற்கு ஐந்து நிமிடம் காலத் தாமதமாக முடிப்பதைவிட, ஐந்து நிமிடங்கள் முன்பாக முடிப்பது சாலச் சிறந்தது. ஒரு வேளை நீங்கள் மந்தமாக செயல்படுபவராக இருக்கலாம். அப்பொழுது சிறிய வேலைக்கு அதிகமான நேரத்தை எடுத்துக்கொள்ளுவீர்கள். இவ்விஷயங்களில் நீங்கள் ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். இக்கெட்டப் பழக்கங்களை நிச்சயம் நம்மால் மேற்கொள்ள முடியும். பாத்திரங்களை கழுவுவதிலும் கவனமாகவும், துரிதமாகவும் செயல்பட வேண்டும். உங்களது மனங்களில் நீங்கள் எடுக்கும் முடிவுகளுக்கேற்ப உங்கள் கரங்கள் செயல்படும். ***Youth's Instructor Sep. 7, 1893.***

***மனதையும் சரீரத்தையும் இணையுங்கள்***

எங்களது பொறுப்பில் இருக்கும்படி எங்களோடு தங்க பிள்ளைகள் அனுப்பப்பட்டார்கள். அப்பிள்ளைகள் ஒரு முறை இப்படிச் சொன்னார்கள். நான் துணி துவைக்கும் வேலையைச் செய்ய என் தாய் விருப்பப்படவில்லை என்றார்கள். சரி நாங்கள் உன்னுடைய இவ்வேலையைச் செய்கிறோம். இதற்கு கூடுதலாக எங்களுக்கு நீ பணம் கொடுக்க வேண்டும் என்றோம். உடனே அவர்கள் இது முடியாது எங்கள் பெற்றோர்கள் பணம் கொடுக்க ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்றார்கள். உடனே நான் அப்படியெனில் உன்னுடைய இவ்வேலையை



1ST Proof

காலையில் எழுந்து நீயே செய்துவிடு என்றேன். பின்வரும் அறிவுரைகளையும் கூறினேன். நீ தூங்கிக்கொண்டிருக்க உன் தாய் எழுந்து காலையில் சமைக்காதபடி, "அம்மா நீங்கள் விடியற்காலையில் எழுந்திருக்க வேண்டாம் இவ்வேலைகளை நான் செய்கிறேன் என்று நீங்கள் சொல்ல வேண்டும்." தலை முடிகள் வெள்ளையாகிக் கொண்டிருக்கும் வயதானவர்களை காலையில் ஓய்வுயெடுத்துக்கொள்ள விடப்பட வேண்டும்.

ஆயினும் இது ஏன் நடப்பதில்லை? பிரச்சனை எங்குள்ளது? சிறு வயதிலிருந்து எந்த வேலையையும் பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் கொடுக்காததினால் இந்த சூழ்நிலை வந்துவிட்டது. இப்பிள்ளைகள் வெளியேச் சென்று என் தாய் நான் எந்த வேலையை செய்யவும் விரும்புவதில்லை என்று கூறுவார்கள். இப்படிப்பட்ட தாய்மார்கள் மூடர்களாக இருக்கிறார்கள். பிள்ளைகளை தாங்களாக கெடுக்கிறார்கள். வேலையே மிகச் சிறந்த ஒழுங்காகும். பிள்ளைக்கு அவ்வேலை எந்த அளவிற்குக் கடினமானதாக இருக்கிதோ தாய்க்கும் அதேப்போல கடினமாக இருக்கும். சரீரத்தையும் மனதையும் பிள்ளைகளில் ஒன்றாக செயல்பட வையுங்கள். அவர்களது அறிவாற்றல் சிறப்பாக வளரும். ***Manuscript 19, 1887.***

***வழிகளை கண்டுபிடியுங்கள்***

பிள்ளைகள் பயனுள்ள வேலைகளைச் செய்து சோம்பலாக இராதபடி பெற்றோர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். சிறிய அளவு நிலம் அவர்களுக்குக் கொடுக்கப்படட்டும். அதில் அவர்கள் பயிற் செய்யட்டும். அவர்களது காணிக்கைகளை பிள்ளைகள் தேவனிடம் கொண்டு வரட்டும். ***Manuscript 67, 1901.***

தங்களால் முடிந்த எல்லா வகையிலும் பிள்ளைகள் உங்களுக்கு உதவ அனுமதியுங்கள். இதை செய்வதில் அவர்களை நீங்கள் ஊக்கப்படுத்துவதை அவர்கள் பார்க்கட்டும். அவர்களை பாராட்டுங்கள். வீட்டின் ஒரு பங்காக தங்களை உணரட்டும். முடிந்த வரையில் வேலைகளை திட்டமிட்டுச் செய்து முடிக்க அவர்களது அறிவை பயன்படுத்தட்டும். சரியான நேரத்தில் வேலைகளைச் செய்யவும் தெம்புடன் வேலைகளைச் செய்ய கற்றுக் கொடுங்கள். அவர்களுக்கு

ஒதுக்கப்பட்ட நேரதில் சில நிமிடங்கள்கூட வீணாகாதபடி நேரத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளட்டும்.

***வேலை உன்னதமானது***

கரங்கள் சிறிதாக இருக்கும் பருவத்திலிருந்தே நமக்கு உதவ பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். வேலை உன்னதமானதென்றும் தேவனால் நியமிக்கப்பட்ட ஒன்று என்றும், மனதும் சரீரமும் வளர, ஏதேனில் மனிதனுக்கு கொடுக்கப்பட்டதென்றும் சொல்லுங்கள். மனித வளர்ச்சிக்கு வேலை அத்தியாவசியமானது. வேலைக்குப் பின்பாக நாம் இன்பமாக இருத்தலே முழுமையான மகிழ்ச்சி என்பதை கற்றுக் கொடுங்கள். வேலையில்லாமல் அனுபவிக்கப்படும் எந்த இன்பமும் உண்மையான திருப்தியைக் கொடுக்காது. ***Pacific Health Journal May, 1890.***

***அதிகாரம் - 22***

***தளராத வேலையும் விடா முயற்சியும்***

***முடிக்கப்பட்ட வேலையில் திருப்தி***

பிள்ளைகள் ஆசையுடன் ஒரு வேலையைத் துவங்குவார்கள், பின்பு சோர்ந்து எப்படி செய்வதென்றும் தெரியாமல் வேறு வேலையைச் செய்ய விரும்புவார்கள். இப்படியாக பல வேலைகளைத் துவங்கி சோர்வுற்று விட்டுவிடுவார்கள். ஒன்றிலிருந்து இன்னொன்றிற்கு மாரிக்கொண்டிருப்பார்கள். எதையும் முழுமையாகச் செய்திருக்கமாட்டார்கள். ஒரு வேலையிலிருந்து இன்னொன்றிற்கு மாறும் ஆசையைப் பெற்றோர்கள் அனுமதிக்கக்கூடாது. பிள்ளைகளின் வளரும் மனங்களை நேரம் எடுத்து ஒழுக்கப்படுத்த வேண்டும். மற்ற அலுவல்களிலேயே மூழ்கிவிடக் கூடாது. ஊக்கமான சில வார்த்தைகளும், சரியான நேரத்தில் கொடுக்கப்படும் சிறிய உதவியும் பிள்ளைகளின் சோர்வை நீக்கிவிடும். முழுமையாக முடிக்கப்பட்ட வேலையின் மனத் திருப்தி இன்னும் பெரிய வேலைகளை எடுத்து முடிக்கத் தூண்டும்.



1ST Proof

ஆதரவான வார்த்தைகளை கேட்காததினாலும், சிறிய உதவி கொடுக்கப்படாததினாலும் பிள்ளைகள் மனந்தளர்ந்து ஒரு வேலையிலிருந்து மற்றொன்றிற்கு தாவுகிறார்கள். இந்த பெலவீனத்தை தாங்கள் பெரியவர்களான பின்பும் வெளிப்படுத்துவார்கள். தாங்கள் ஏரெடுக்கும் எதையும் வெற்றிகரமாக முடிப்பதில்லை. இடையூறுகளையும் பிரச்சனைகளையும் கடந்து முன்னேர அவர்களுக்குக் கற்றுத்தரப்படவில்லை. இதனால் அநேகருடைய வாழ்நாளும் தோல்வியில் முடியும். சிறுவயதில் சரியான ஒழுங்கு அவர்களுக்குக் கற்றுத்தரப்படவில்லை. குழந்தைப் பருவத்திலும் வாலிபத்திலும் அவர்கள் பெற்றுக் கொண்ட தவறான கல்வி அவர்களது எதிர்காலத்தைப் பாதித்துவிடுகிறது. ஆவிக்குரிய வாழ்க்கையிலும் இந்த பாதிப்பின் தாக்கம் இருக்கும். ***Testimonies for the Church, Vol. 3, p. 147, 148.***

***சோம்பலின் பழக்கங்கள் தொடர்ந்து வரும்***

ஆதிகமாகச் செல்லம் கொடுக்கப்பட்டு, தாங்கள் விரும்பியதை எஜமான்களைப்போல எப்பொழுதும் பெற்றுக் கொண்ட பிள்ளைகள் இப்படியே தொடர்ந்து இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அவர்கள் விரும்பியதைப் பெறாமல்போனால் சோர்வடைந்து மனமுடைகின்றனர். தங்கள் வாழ்க்கை முழுவதற்கும் மற்றவர்களையே சார்ந்து இருப்பார்கள். அவர்களது விருப்பங்களுக்கு மற்றவர்கள் இணங்கி அவர்களுக்கே சாதகமாக இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். வளர்ந்த பிறகும், எதிர்க்கப்படுவார்களாகில் மற்றவர்கள் தங்களை தவறாகப் பயன்படுத்திக் கொள்ளுவதாக எண்ணுவார்கள். கவலைப்பட்டுக் கொண்டு வாழுவார்கள். அவர்களது பாரங்களைச் சுமக்க முடியாதவர்களாக தாங்கள் நினைத்தது நடக்காததால், முறுமுறுத்துக் கொண்டும் முகங்கோணித்துக் கொண்டும் இருப்பார்கள். ***Testimonies for the Church, Vol. 1, p. 392, 393.***

***வேலைகள் முழுமையாகவும், நேரத்திற்குள்ளும் முடிக்கப்படும் பழக்கங்கள்***

தாயினிடமிருந்து இந்த நல்ல பழக்கங்களைப் பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும். அதை மணி நேரத்திற்குள் முடிக்கப்பட வேண்டிய வேலையைச் செய்ய ஒரு மணி நேரம், அல்லது இரண்டு

மணி நேரம் எடுத்துக் கொள்ள அனுமதிக்கக்கூடாது. இது நடந்தால் பிள்ளையிடம் ஒரு தவறான பழக்கத்தை ஏற்படுத்துகிறது. எடுத்துக் கொண்ட ஒரு வேலையைக் குறைவின்றி முழுமையாக செய்வதும், துரிதமாகக் குறித்த நேரத்திற்குள்ளாகவும் அதை முடிக்கும் பழக்கம் பிள்ளைக்குச் சொல்ல முடியாத ஆசீர்வாதமாக இருக்கும். வளர்ந்த பிறகு, வாழ்க்கை என்ற பள்ளியில் அவர்கள் கால் எடுத்து வைக்கும் பொழுது இக்குணம் அவர்களுக்குச் சாதகமாக இருக்கும். ***Counsels to Parents Teachers and Students p.*** *122, 123.*

*பெண்களுக்கு அறிவுரைகள்*

சில பெண்களிடம் காணப்படும் ஒரு பழக்கம் என்னை அதிக கவலைக்குள்ளாக்கியுள்ளது. பயனில்லாதவைகளைப் பேசி நேரத்தை வீணடித்துத் தங்கள் நாவுகளை விருப்பம்போல ஓட விடுகிறார்கள். பேச்சிற்கு கவனம் போகும்போது வேலை பின்தங்குகிறது. இவைகள் சிறு விஷயங்களாகக் கருதப்படுகின்றன. சிறு விஷயங்கள் என்றால் என்ன என்பதில் அநேகர் வஞ்சிக்கப்படுகிறார்கள். சிறு காரியங்களாக இருந்தாலும் முக்கியமானவைகளுடன் நெருங்கிய தொடர்புள்ளவைகளாக இருக்கின்றன. மனித நன்மைக்கென்று இருக்கிற சிறு விஷயங்களைக்கூட தேவன் அசட்டை செய்வதில்லை. ***Youth's Instructor Sep. 7,*** *1893.*

*சிறு விஷயங்களின் முக்கியத்துவம்*

சிறு விஷயங்களின் முக்கியத்துவத்தைக் குறைவாக எண்ணிவிடாதீர்கள். இச்சின்ன விஷயங்கள்தாமே வாழ்க்கையின் ஒழுங்கை நிர்ணயிக்கின்றன. இவைகளைக் கொண்டே இயேசுவைப்போல மாற ஆத்துமா பயிற்சி பெறுகிறது. இவைகளே சாத்தானைப்போல வளருகிறறோமா என்பதையும் காட்டுகின்றன. நமது சிந்தையும், வார்த்தையும், பார்வையும் நடத்தையும் நாம் இயேசுவோடு இருந்ததை சாட்சி பகர வேண்டும். ***Youth's Instructor Mar.*** *9, 1893.*

*தவறுகளை படிக்கல்லாக மாற்றுங்கள்*

மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு தவறும், பெலவீனமும், தடையும் உயரிய தரத்தை அடையும் படிகளாக இருக்கின்றன என்பதை பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். இப்படிப்பட்ட அனுபவங்களைக் கொண்டே வாழ்க்கையில் பெற்றவர்களும் அந்நிலையை அடைந்தார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p.*** *60.*

*அதிகாரம் - 23*

*ஒவ்வொரு வீட்டிலும் தேவைப்படும் பாடங்கள்*

ஒவ்வொரு வீட்டிலும் சுய மறுப்பின் பாடங்கள் கற்றுத்தரப்பட வேண்டும். தகப்பனார்களும் தாய்மார்களும் தங்கள் பிள்ளைகளுக்குச் சிக்கனத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். ஊழியத்திற்கென்று சேமிக்க ஊக்கப்படுத்துங்கள். கிறிஸ்துவே நமது உதாரணம். நமக்காக அவர் ஏழையானார். அவரது ஏழ்மையினால் நாம் ஐஸ்வர்யவான்களாக மாறுகிறோம். இயேசுவைப்போன்று எல்லோரும் அன்பிலும் ஒற்றுமையிலும் ஒருங்கிணைய வேண்டும். அவரைப்போன்று வேலை செய்யவும், தியாகம் பண்ணவும் தேவனின் பிள்ளைகளாக எல்லோரையும் நேசிக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol. 9, p.*** *130, 131.*

சுய மறுப்பின் பாடங்களைக் கற்றுக்கொண்டு பிள்ளைகளுக்கும் அவைகளைக் கற்றுக்கொடுங்கள். சுயத்தை மறுப்பதினால் சேமிக்கப்படும் பணம் தேவனுடைய வேலைக்குத் தேவைப்படுகின்றது. துன்பப்படுவோர் விடுதலையடைய வேண்டும், நிர்வாணிகள் உடுத்தப்பட வேண்டும், பசியுற்றோர்க்கு உணவு தரப்பட வேண்டும்; இந்த காலத்திற்கான சத்தியம் அதை தெரியாதவர்களுக்குச் சொல்லப்பட வேண்டும். ***Messages to Young People, p.*** *314.*

*தியாக குணம் பழக்கமாகிவிட வேண்டும்*

வார்த்தையினாலும் செயலினாலும் சுய மறுப்பையும், சிக்கனத்தையும், பெருந்தன்மையையும் தன் நம்பிக்கையையும் கற்றுக் கொடுங்கள். உண்மையான குணமுள்ளவர்ள் பிரச்சனைகளை சந்தித்து தேவ வார்த்தைகளையே பின்பற்றுவார்கள். மனிதர்கள் கிறிஸ்துவின் பள்ளியின் அவரது நுகத்தை சுமக்க வேண்டும். சுயக்கட்டுப்பாட்டையும் கீழ்ப்படிதலையும் கைக்கொள்ள வேண்டும். இதை செய்தால்மட்டுமே தேவனுக்கு அவர்கள் செய்ய வேண்டியதை புரிந்து கொள்ளுவார்கள். சத்தியத்தைப் பரப்புவதற்கும் ஸ்தாபனங்களை உருவாக்குவதற்கும் தியாகமே ஆரம்பமாக இருக்கிறது. கல்வியின் ஒரு இன்றியமையான

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

பாகமாக இது உள்ளது. நமது குணத்தைக் கட்டும் பழக்கமாகத் தியாகம் மாறவேண்டும். இதை செய்யும்பொழுது கைகளால் கட்டப்படாத ஒரு கட்டிடம் நமக்காக பரலோகில் ஆயத்தமாகும். ***Testimonies for the Church, Vol. 6, p. 214.***

*சுய மறுப்புப் பெட்டி*

சுயத்தை மறுக்க பிள்ளைகளுக்குச் சொல்லித்தர வேண்டும். நஷ்வில்லே என்ற இடத்தில் நான் பேசினபொழுது தேவன் இதைக் குறித்து எனக்கு வெளிச்சம் கொடுத்தார். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சுய மறுப்புப் பெட்டி இருக்க வேண்டும் என்று எனக்குக் காட்டப்பட்டது. பொதுவாக பிள்ளைகள் இனிப்புகளுக்கும் தேவையில்லாத மற்றவைகளுக்குச் செலவழிக்கப்படும் காசுகளை இதில் போடுமாறு அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

உங்கள் பிள்ளைகள் இந்தப் பெட்டியில் தங்கள் காசுகளைப் போடும்பொழுது பெரிய ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். குடும்பத்தில் உள்ள எல்லா நபர்களும் சுய மறுப்பை அப்பியாசிக்க வேண்டும். ***Review and Herald, June 22, 1905.***

*எல்லோரது கவனத்தின் மையமாகப் பிள்ளைகள் இருக்கக் கூடாது*

இரண்டு வயதிலிருந்து நான்கு வயதுவரை உள்ளக் குழந்தைகள் தாங்கள் நினைப்பதெல்லாம் பெற்றுக் கொள்ளலாம் என்று நடக்கும்படி ஊக்குவிக்கப்படக் கூடாது. பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சுய மறுப்பின் பாடங்களை சொல்லித்தர வேண்டும். அவர்களே எல்லோரது கவனங்களின் மையமாக இருக்கிறார்கள் என்று நினைக்கும்படி அவர்களை நடத்தக் கூடாது. எல்லாமே அவர்களைச் சுற்றித்தான் நடக்கிறது என்றும் அவர்கள் நினைக்கக் கூடாது.

பல பிள்ளைகள் பெற்றோர்களிடமிருந்து சுயநலத்தை சுதந்தரித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த தீய சுபாவத்தின் ஒரு துளி கூட பிள்ளைகளிடத்துக் காணப்படாதபடி அதை நீக்க வேண்டும். சுய நலத்துடன் செயல்பட்டவர்களை இயேசு பல முறை கடிந்திருக்கிறார். இத்தீய குணத்தின் சுவடுகள் தெரிய ஆரம்பிக்கும் பொழுதே அதை தகர்த்தெரிய பெற்றோர்கள் பிரயாசப்பட வேண்டும். பெற்றோர்களது



1ST Proof

முன்னிலையிலோ அல்லது அவர்கள் இல்லாத சமயத்திலோ பிள்ளைகள் இப்படி நடப்பது அனுமதிக்கப்படக் கூடாது. ***Signs of the Times, Aug 13, 1896.***

சில பெற்றோர்கள் பிள்ளைகளை மகிழ்விக்க அதிக நேரம் எடுத்துக் கொள்ளுகின்றனர். பிள்ளைகள் தாங்களே தங்களை மகிழ்ச்சியோடு வைத்துக்கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களது சாமர்த்தியத்தையும் திறமைகளையும் பயன்படுத்த வேண்டும். இதனால் சிறிய காரியங்களிலும் பிள்ளைகள் சந்தோஷப்பட்டு திருப்தியடைவார்கள். அவர்களது ஏமாற்றங்களையும், சோதனைகளையும் தைரியமாகச் சுமக்கக் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு சிறு விஷயத்திற்கும் உங்களைக் கூப்பிடக் கூடாது. அவர்களின் சிந்தைகளை திசை திருப்புங்கள். அசவுகிரியத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தும் சிறு விஷயங்களை பெரிது படுத்தாதபடி அவைகளை லேசாகக் கருதி விட்டுவிட கற்றுக் கொடுங்கள். ***The Ministry of Healing p. 389.***

*சுயத்தை மறந்துவிடுங்கள்*

சுயத்தை மறந்து வாழும் குணம் பிள்ளைகளிடம் வளர்க்கப்பட வேண்டும். வாழ்க்கைக்கு இது அழகைத் தரும். மற்ற எல்லா நற்குணாதிசயங்களைக் காட்டிலும் இது மிகவும் அழகானது. வாழ்க்கையில் உண்மையான எந்த வேலைக்கும் இது அடிப்படை தகுதியாக இருக்கிறது. ***Education, p. 237.***

மற்றவர்களைப் பற்றியும் சிந்திக்கும்படி பிள்ளைகளுக்கு எப்படி கற்றுக் கொடுப்பது என்று படித்துக் கொள்ளுங்கள். அதிகாரத்திற்கு இணங்கவும் சுயத்தை மறுத்து மற்றவர்களது நலநன மனதில் கொள்ளும்படி வாலிபர்கள் பழகியிருக்க வேண்டும். கோபத்தைக் கட்டுப்படுத்தி, கோபமான வார்த்தைகளை பேசாமல் அன்பையும், கரிசனையையும் சுயகட்டுப்பாட்டையும் வெளிப்படுத்த வேண்டும். இதுவும் அவர்களுக்குக் கற்றுத்தரப்பட வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 123, 124.***

சுய நலத்தின் தூண்டல்களைப் பிள்ளைகள் மேற்கொள்ள பெற்றோர்கள் பிள்ளைகளை அதிக கவனத்துடன் பராமரிக்க வேண்டும். பெற்றோர்களுக்கு உதவவும் மற்றவர்களின் நலனையும் மனதில் கொள்ளவும் அறிவுரைகள் கொடுக்கப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். பெற்றோர்களே அவர்களுக்கு எல்லாவற்றையும் செய்கிறார்கள் என்பதும் மனதில் நிறுத்தப்பட வேண்டும். ***Signs of the Times, Aug. 13, 1896.***

*அதிகாரம் - 24*

*திறமையான பொருளாதாரம்.*

*அதிகமாகச் செலவு செய்வதை விடுங்கள்*

நாம் வைத்திருக்கும் எல்லாவற்றின்மீதும் தேவன் உரிமை பாராட்டுகிறார். நம்மிடம் இருக்கும் எதுவும் நம்முடையதல்ல. தேவன் நம்மிடம் ஒப்படைத்தவைகளாக உள்ளன. எதையும் என்னுடையது என்று நாம் சொல்ல முடியாது. இவைகளை நமக்குக் கொடுத்து அவருக்கு கீழ்ப்படிகின்றோமா என்பதை தேவன் சோதிக்கிறார் என்பதை பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். பணம் தேவையானது ஒன்று. அதன் தேவை இல்லாதவர்களுக்கு அது அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டியதில்லை. உங்களுடைய உதவி நிச்சயமாக எவரேனுக்கும் தேவைப்படும். அதிகமாகச் செலவு செய்யும் பழக்கம் உங்களிடம் இருந்தால் உடனே அதை உங்கள் வாழ்க்கையிலிருந்து நீக்குங்கள். இதை நீங்கள் செய்யாவிடில் நித்தியத்திற்குக் கொண்டு போகும் செல்வத்தை இழந்துவிடுவீர்கள். பரலோக வங்கிக் கணக்கில் உங்கள் பெயருக்கு ஒன்றும் இல்லாதவர்களாக இருப்பீர்கள். பொருளாதாரத்தை மேம்படுத்தும் பழக்கங்கள், உழைப்பு, தெளிவுடன் செயல்படுதல், போன்றவைகள் இவ்வுலகின் செல்வத்தைப் பார்க்கிலும் மேலானவைகள். உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் இது பொருந்தும். ***Manuscript 139, 1898.***

*சீரான பொருளாதாரத்தைக் குறித்து பிள்ளைகளுக்கு அறிவுறுத்துங்கள்*



1ST Proof

நமது பணத்தையும் நேரத்தையும் அதிக கவனத்துடன் செலவிட வேண்டுமென்று எனக்கு வெளிச்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மூடத்தனமாக, இவைகளை நாம் வீணடித்துவிடக்கூடாது. அநேக பொருட்கள் மீது நாம் ஆசை கொள்ளலாம். உணவு போன்ற அத்தியாவசிய அடிப்படையான காரியங்களுக்குச் செலவு செய்து தேவையற்ற மற்றவைகளுக்காக செலவு செய்யாமல் இருக்க வேண்டும். நகரங்களில் நமது ஊழியங்களைச் செய்ய அதிகமான பொருளாதார வசதி தேவைப்படுகிறது. கர்த்தருடைய வேலையில் எல்லோருக்கும் ஒரு பங்கு இருக்க வேண்டும். நல்ல பொருளாதாரத்தை தக்க வைத்துக் கொள்ள, பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அறிவுரைகளைக் கொடுக்க வேண்டும். தேவ மந்தையின் இள அங்கத்தினர்களும் தங்களது பொறுப்பை உணர்ந்து தேவனின் வேலையில் தங்களது பங்கைச் செய்ய வேண்டும். ***Letter 4, 1911.***

*அதிகமாக செலவு செய்வதினால் அன்பு வெளிப்படுத்தப்படுவதில்லை*

வீட்டில் நல்ல பொருளாதாரத்தை கைக்கொள்ளுங்கள். இவ்விஷயத்தில் பல விக்கிரகங்கள் காணப்படுகின்றன. அவைகளை தூக்கி எரியுங்கள். உங்களது சுயநலமான சிற்றின்பங்களை விட்டுவிடுங்கள். வீடுகளை தேவையில்லாத அளவிற்கு அலங்கரிக்கப்பதற்காகவும் அழகுபடுத்துவதற்காகவும் தேவனது பணத்தைப் பயன்படுத்தாதீர்கள். அப்பணம் மீண்டுமாக உங்களிடமிருந்து கேட்கப்படும். பெற்றோர்களே தேவனது பணத்தை உங்களது பிள்ளைகளின் தேவையற்ற அளவில்லா ஆசைகளை நிறைவேற்ற பயன்படுத்தாதீர்கள். கிறிஸ்துவிற்காக இத்தவறைச் செய்யாதீர்கள். உலகம் பாராட்டுவதற்காக பிள்ளைகள் தேவையற்ற அலங்கரிப்புகளையும் உலகின் முறைகளையும் பின்பற்றாதபடி சொல்லிக்கொடுங்கள்.

அதிகமாக அவர்களுக்குச் செலவு செய்வதுதான் அன்பு என்பதைப் போல நடக்காதீர்கள். அவர்களது பெருமையைக் கூட்டும் ஆசைகளையும் சுய நலத்தின் விருப்பங்களையும் நிறைவேற்றுவது அன்பல்ல. பணத்தை செலவழிப்பதற்காக புதிதான வழிகளைக் கண்டுபிடிக்க இது நேரமல்ல.

உங்களுடைய முழு பெலத்தையும் நல்ல ஒரு பொருளாதாரத்தை ஏற்படுத்திக்கொள்ள பயன்படுத்துங்கள். ***Manuscript 139, 1898.***

*கிறிஸ்துவின் பாடங்கள்*

ஐந்தாயிரம் நபர்களை அவர் போஷித்ததில் நமக்கு ஒரு பாடம் உள்ளது. பொருளாதாரம் செழிப்பாக இல்லாத சமயங்களில் நாம் கையாளவேண்டிய சிக்கனத்தை இது காட்டுகின்றது. ஓர் அற்புதத்தைச் செய்து பெரிய கூட்டத்தை இயேசு போஷித்தார். பின்பு ஒரு பருக்கைக் கூட வீணாக்காதபடி கவனமாக இருந்தார். ***Manuscript 3, 1912.*** எதுவும் வீணாகாதபடி கவனமாக சேரிக்கப்படும்படி சீஷருக்குக் கட்டளையிட்டார். பரலோகமே அவரது கைவசம் இருந்தது. ஆயினும் ஒரு சிறிய அப்பத்துண்டு கூட வீணாக அனுமதிக்கவில்லை. ***Letter 20a 1893.***

*பயனுள்ள எதையும் எரித்துவிடாதீர்கள்*

உபயோகப்படுத்தப்படக் கூடிய எதுவும் வீசிவிடப்படக் கூடாது. ஞானத்துடனும், சிந்தித்தும் கவனத்துடன் செயல்பட வேண்டும். சிறு விஷயங்களிலும் சேகரிக்க கற்றுக் கொள்ளாததால் அக்குடும்பங்கள் அடிப்படைத் தேவைகள் கிடைக்காமல் தவிக்கின்றன என்பது எனக்குக் காட்டப்பட்டது. ***Manuscript 3, 1912.***

*சிக்கனத்தை அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை*

கிறிஸ்துவிற்கு அளவில்லாத வேலைகள் செய்யப்படவேண்டி உள்ளன. கிறிஸ்துவின் வேலையில் பெரிய பதவிகளில் இருக்கும் நபர்கள் அவ்வேலையில் தோல்வியடைந்திருக்கின்றனர். இதற்கு காரணம் அவர்களது திறனற்ற பொருளாதாரம். ஊழியத்திற்கு வந்த பின்பு அவர்களது செலவுகளைக் கட்டுப்படுத்தவில்லை. அதிகமாக செலவழிக்கும் பழக்கம் ஊழியத்தின் வெற்றியைத் தடை செய்துள்ளது. அவர்களது பணமானது ஊழியத்திற்கு பயன்படவில்லை.

*பணத்தை சரியாக கையாளுவதை எப்படி கற்றுக் கொடுப்பது*

பிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் வரவு செலவுகளைக் குறித்துச் சரியான கணக்குகளை வைத்துக் கொள்ள கற்றுக் கொடுக்க வேண்டும். இல்லாத பிரச்சனைகளை தீர்ப்பதில் முயற்சிகள்



1ST
Proof

வீணடிக்கப்படக் கூடாது. பணத்தை சரியாக உபயோகிக்க அவன் கற்றுக் கொள்ளட்டும். அவர்களது பணமாக இருந்தாலும் அல்லது பெற்றோர்களது பணமாகயிருந்தாலும் வாலிபர்கள் கணக்குகளை சரியாக பராமரித்துக் கொள்ள வேண்டும். தங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களைத் தாங்களே தேர்வு செய்து, வாங்கிக் கொள்ளட்டும். கணக்குகள் தீர்க்கமாக இருக்கட்டும். பணத்தின் மதிப்பை புரிந்துகொள்ளுவார்கள். வேரு எந்த முறையிலும் இப்பாடத்தை அவர்களால் கற்றுக் கொள்ள முடியாது. ***Counsels on Stewordship p. 294.***

*கணக்குகளை வைத்துக் கொள்ளுவதின் முக்கியத்துவம்*

சிறு பிராயத்திலிருந்தே பிள்ளைகள் எழுத, படிக்க கணக்கு பார்க்க கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். படிப்படியாக இதில் முன்னேறி செல்லட்டும். ***Counsels to Parents, Teachers and Students, 168, 169.***

தங்களது பணக் கணக்குகளைச் சரியாக வைத்துக்கொள்ள பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அளவில்லாமல் செலவு செய்யும் சிறுவன், அளவில்லாமல் செலவழிக்கும் மனிதனாக மாறுவான். சுய நலம் நிறைந்த, மாயைகளைப் பின்பற்றும் சிறுமி அவைகளைச் செய்யும் ஸ்திரியாக மாறிவிடுவாள். நம்மால் நேரடியாகத் தொடர்புகொள்ள முடியாத மற்ற வாலிபர்களைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பும் நமக்குள்ளது. நமது பிள்ளைகளை நாம் சரியாக வழிநடத்தியிருந்தால் அவர்கள் மற்றவர்களை சரியாக வழிநடத்துவார்கள். ***Letter 11, 1888.***

*பாகம் - VII*

*கிறிஸ்தவ பண்புகளை வளர்த்தல்*

*அதிகாரம் - 25*

*எளிமை*

*எதார்த்தமான எளிமையைக் கற்றுக் கொடுங்கள்*

குழந்தைகளைப் போல் எளிமையாக இருக்கப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். அவர்களது வயதிற்கேற்றச் செயல்களினாலும்,

கடமைகளினாலும் இன்பங்களினாலும் அனுபவங்களினாலும் அவர்கள் திருப்தியடைய வேண்டும். பிள்ளைகள் விதையிலிருந்து எழும்பியிருக்கிற சிறு கதிர்களுக்கு ஒப்பாக இருக்கிறார்கள். குழந்தைப் பருவத்தின் பொலிவும் அழகும், அதிக நாட்களுக்கு அவர்களிடம் இருக்க வேண்டும். வயதிற்கு மீறிய ஒரு முதிர்ச்சி இருக்கக் கூடாது. அமைதியாகவும் எளிமையாகவும் குழந்தையின் வாழ்க்கை இருக்க வேண்டும். உணர்ச்சிகளைத் தூண்டும் செயற்கையான இன்பங்கள் இல்லாமல் இருப்பது நல்லது. இயற்கையோடு ஒன்றி, இயல்பான ஒரு மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும். சரீர வளர்ச்சிக்கும், மன வளர்ச்சிக்கும் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் இது உகந்தது. ***Education, 107.***

எளிமையான பழக்க வழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளப் பெற்றோர் ஒரு உதாரணமாக இருக்க வேண்டும். செயற்கையானவைகளிலிருந்து இயற்கையாகவே இருக்கக் கூடியவைகள் மீது பிள்ளைகளது மனங்களை இழுக்க வேண்டும். ***Signs of the Times, Oct. 2, 1884.***

### *தவறான தாக்கங்களால் பாதிக்கப்படாத பிள்ளைகள்*

தவறான செயற்கையான தாக்கங்களால் பாதிக்கப்படாத பிள்ளைகளே விரும்பப்படக் கூடியவர்களாக இருப்பார்கள். தேவையில்லாத விசேஷ கவனத்தைப் பிள்ளைக்குக் கொடுப்பது நல்லதல்ல. அவர்களது அழகையோ, வார்த்தைகளையோ, செயல்களையோ பெருமையாகப் பேசி அவர்கள் மாயமானவைகளைப் பின்பற்றும்படி செய்யக்கூடாது. அவர்களது உடையும் விலை உயர்ந்த தன்மையையோ ஆடம்பரத்தையோ காட்டுவதாகவோ இருக்கக் கூடாது. இது பெருமையை ஊக்கப்படுத்தும். அவர்களது நண்பர்களின் மனங்களில் பொறாமையைத் தூண்டும். உண்மையான அலங்காரம் வெளிப்புரமானதல்ல என்பதைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். “மயிரைப் பின்னி பொன்னாபரனங்களை அணிந்து உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலும் உள்ள ஆவியாகிய இதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. *1 பேதுரு 3: 3, 4.* ***Counsels to Parents, Teachers and Students, p. 141, 142.***

### *உண்மையான அழகின் இரகசியம்*

உண்மையான அழகு தோற்றத்திலோ, உருவ அமைப்பிலோ நமது சாதனைகளிலோ இல்லை, அமைதியான தாழ்மையான ஆவியிலும், பொருமையிலும், பெருந்தன்மையிலும், அன்பிலும், மற்றவர்களுக்காக தானாக முன்வந்து கடினப்படுவதிலும் உன்ளது. இதைப் பெண்களுக்கு சொல்லித்தர வேண்டும். வேலை செய்யவும், ஒரு நோக்கத்துடன் படிக்கவும், ஓர் இலக்குடன் வாழவும், தேவனுக்குப் பயந்து, அவரை விசுவாசிக்கவும் பெற்றோர்களை மதிக்கவும். அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள். இப்படியாகக் கற்றுக் கொண்டு இப்பெண்கள் வளரும்பொழுது தூய்மையான உள்ளம் படைத்தவர்களாகவும், தன்நம்பிக்கையுடையவர்களாகவும் அன்பான ஸ்திரிகளாக மாறுவார்கள். இப்படிப்பட்ட ஒரு ஸ்திரியைத் தாழ்த்திவிட முடியாது. அநேகரைச் சீரழித்த சோதனைகளிலிருந்தும் இக்கட்டுக்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளுவாள். ***Health Reformer Dec, 1877.***

### மாயையின் விதைகள்

அநேகக் குடும்பங்களில் சுயநலம் மற்றும் மாயையின் விதைகள் பிள்ளைளின் இதயத்தில் குழந்தைப் பருவத்திலிருந்து விதைக்கப்படுகின்றது. அவர்களது தவறான செய்கைகளும் வார்த்தைகளும் அவர்களுக்கு முன்பாக மற்றவர்களிடம் பெருமையாகச் சொல்லப்படுகின்றன. அவைகள் நல்லவைப்போல பாவிக்கப்பட்டு, இருப்பதற்கு பல மடங்கு பெரிதாக விளக்கப்பட்டு புகழப்படுகின்றன. பிள்ளைகள் இதை கவனிக்கிறார்கள். அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக தங்களை நினைத்துக் கொள்ளுகிறார்கள். பெரியவர்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது இடையே குறுக்கிடுகிறார்கள். பெரியவர்களைப் போல் பேசவும் நடக்கவும் துணிகிறார்கள். அவர்களைப் புகழ்ந்து, பெருமையடித்துக் கொண்டே இருப்பது அவர்களது அகந்தையைக் கூட்டுகிறது. துங்கள் விருப்பத்தின்படியே எதையும் செய்யவும், அதன்படி நடக்கவும்

வழிநடத்தப்படுகிறார்கள். சின்ன பிள்ளையானவன் வீட்டை கட்டுப்படுத்திக் கொண்டு பெற்றோரின்மீதும் அதிகாரம் செலுத்தும் நிலை வந்துவிடும்.

துவறான இப்பயிற்சியினால் உருவாக்கப்பட்ட இக்குணம் வயது வந்தும் அப்படியே இருக்கும். அவன் வளர அதுவும் வளரலாம். குழந்தைப் பருவத்தில் சிறிய தவறாகத் தெரிந்து, வெறுக்கப்படத்தக்க துன்மார்க்கமான முதிர்ச்சி பெரும் மற்றவர்கள்மீது அதிகாரம் செலுத்த முயலுவார்கள். இதை செய்ய முடியாமற்போனால் பெரிய தவறு தங்களுக்கு இழைக்கப்பட்டதைப் போல் நடப்பார்கள். சிறு வயதில் தங்களது விருப்பத்திற்கு எல்லாம் விடப்பட்டதின் விளைவு இது. வாழ்க்கையின் சுமைகளைத் தாங்குவதற்கு தேவையான சுய மறுப்பு அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படவில்லை. ***Testimonies for the Church, Vol. 4, p. 200, 201.***

*புகழப்பட விரும்புவதை அனுமதிக்காதீர்கள்*

பிள்ளைகளுக்கு நமது பாராட்டும், ஊக்கமும், கரிசனையும் தேவையே. ஆயினும் தங்களை மற்றவர்கள் புகழ வேண்டும் என்று ஆசை அவர்களிடம் வளர விடக் கூடாது. நல்ல குணங்களைப் பிள்ளைகள் அடையவும், சாதனைகளைப் புரிவதற்கும் சுய திருப்தி ஒரு தடையாக அமைந்துவிடும். பிள்ளைகளின் நன்மையைக் கோரும் எந்த ஆசிரியரும் பெற்றோரும் இதை மனதில் கொள்ளுவார்கள். தங்களது திறமைகளை வெளிக்காட்ட வேண்டும் என்ற ஆசையை வாலிபர்களின் மனங்களில் வர விடமாட்டார்கள். தனக்கும் மேலாக தன் கண்களை உயர்த்துபவன் தாழ்மையாக இருப்பான். அதே நேரத்தில் கனம் பொருந்தியவனாகவும் இருப்பான். தற்காலிகமான, வெளிப்புறமான விஷயங்ளினால் பாதிக்கப்பட மாட்டான்.

*உணவிலும் உடையிலும் எளிமையை ஊக்கப்படுத்துங்கள்*

வீட்டின் சுமைகளைத் தாங்களும் சுமக்க பெற்றோர் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். இது ஒரு புனிதமான கடமை. சாதாரணமாகவும் எளிமையாகவும் இருக்கும் உணவும் உடையும் நம்மை திருப்திபடுத்த வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 158.***



1ST Proof

பெற்றோர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து, தேவனுக்குக் கொடுக்க வேண்டிய கணக்கைப் புரிந்துகொள்ளுவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கினறது. சமுதாயமே மாறிவிடும். பிள்ளைகளும் தங்கள் விருப்பம்போல் செய்யச் செல்லம் கொடுத்து கெடுக்கப்பட மாட்டார்கள். தவறான உடையினால மாயமானவர்களாக இருக்க மாட்டார்கள். ***Review and Herald, Apr. 13, 1897.***

*எளிமையையும் விசுவாசத்தையும் கற்றுக்கொடுங்கள்*

எளிமையையும் விசுவாசத்தையும் உண்டு பண்ணும் பாடங்களைப் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும். சிருஷ்டிகரை நேசித்து, அவருக்குப் பயந்து நடக்கவும், அவருக்குக் கீழ்ப்படியவும் சொல்லித்தர வேண்டும். வாழ்க்கையின் எல்லா திட்டங்களிலும், இலக்குகளிலும் தேவ மகிமையே முதலிடம் பெற வேண்டும். ஒவ்வொரு செயலின் தூண்டுதலாக தேவ அன்பே இருக்க வேண்டும். ***Review and Herald, June 13, 1882.***

*கிறிஸ்து நமது உதாரணம்*

ஒரு ராஜாவின் கனத்துடன் இயேசு இவ்வுலகிற்கு வந்தபொழுது, நடந்து கொண்டார். ஆயினும் தாழ்மையானவராகவே இருந்தார். ஒவ்வொரு இல்லத்திற்கும் வெளிச்சமாகவும் ஆசீர்வாதமாகவும் இருந்தார். மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் ஊக்கத்தையும் தான் சென்ற இடங்களுக்கெல்லாம் சுமந்து சென்றார். வெளிப்புற காரியங்களுக்காகவும் அழகு பொருட்களுக்காகவும் நாம் ஏங்கி செயல்படுகிறோம். தேவன் மதிக்கும் தாழ்மையான ஒரு அமைதலான ஆவியை பெற்றுக் கொள்ளுவதில்லை. எளிமையான, தாழ்மையான உண்மையான அன்பு எந்த இல்லத்தையும் பரலோகமாக்கிவிடும். சமாதானத்தையும் மனதிருப்தியையும் இழப்பதைவிட அசவுரியங்களை மகிழ்சிசியுடன் சகித்துக் கொள்ளுவது மேலானது. ***Testimonies for the Church, Vol. 4, p. 622.***

*அதிகாரம் - 26*

*நாகரீகமும் தன்னடக்கமும்*

*நாகரீகம் இல்லத்தில் துவங்குகிறது*

மற்றவர்களிடம் மதிப்புடன் நடந்து கொள்ளுவதைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். தயவையும் அன்பையும் ஒருவருக்கொருவரிடையே காட்டச் சொல்லிக் கொடுங்கள். சுய நலத்தை இதயத்திலோ வீட்டிலோ தங்கவிடாதீர்கள். ***Manuscript 74, 1900.***

ஏதைக் குறித்தும் அக்கரை இல்லாமல், வார்த்தையிலும் செயலிலும் முரட்டுத்தனத்தை வெளிப்படுத்தும் வாலிபர்கள், வீட்டில் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பயிற்சியைக் காட்டுகிறார்கள். பெற்றோர்கள் தங்கள் வேலையின் முக்கியத்துவத்தை இன்னும் உணரவில்லை. அவர்கள் விதைத்ததை அறுத்திருக்கிறார்கள். ***Manuscript 117, 1899.***

***பரலோகின் கோட்பாடுகள் நிலவட்டும்***

பரலோகின் கோட்பாடுகள் வீட்டு நிர்வாத்திற்குள் கொண்டுவரப்பட வேண்டும். அன்புடனும், கரிசனையுடனும், நாகரீகத்துடனும் இளகிய மனதுடனும் பிள்ளைகள் இருக்க வேண்டும். இரக்க குணமும், மற்றவர்களிடம் மதிப்புடன் நடந்துகொள்ளும் பண்பும் ஒவ்வொரு பிள்ளையிடமும் இருக்க வேண்டும். ***Manuscript 100, 1902.***

இயேசுவின் ராஜரீக குடும்பத்தின் அங்கத்தினர்களாக மாறும்பொழுது எல்லோரையும் மதித்து நடத்தும் தன்மை வீட்டில் இருக்கும். குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் மற்றவர்களது விருப்பத்தை நிறைவேற்ற வழி தேடுவார்கள். ***Manuscript 60, 1903.***

***வார்த்தையினாலும் முன்உதாரணத்தினாலும் கற்றுக் கொடுங்கள்***

பிள்ளைகளும் பெரியோர்களும் சோதிக்கப்படுகிறார்கள். குடும்பத்தின் மூத்த அங்கத்தினர்கள் பிள்ளைகளுக்கு வார்த்தையினாலும் செயலினாலும் ஒரு நல்ல முன் உதாரணமாக இருக்க வேண்டும். கடமைகளை உத்தமமாக நிறைவேற்றவும், அன்பையும், மன இரம்மியத்தையும், நாகரீகத்தையும் பிள்ளைகளுக்குப் பாடங்களாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். ***Manuscript 27, 1896.***

***ஓய்வை நெருங்கும் கால்களை மதியுங்கள்***

வயதானவர்களை கனம் பண்ணத் தேவன் பிரத்தியேகமாகச் சொல்லியுள்ளார். ***"நதியின் வழியில் உண்டாகும் நரை மயிரானது நீதியின் கிரீடம்." நீதி. 16: 31.*** போராட்டங்கள், வெற்றிகள், சுமக்கப்பட்ட பாரங்கள், மேற்கொள்ளப்பட்ட சோதனைகளுக்கு, நிரைத்த முடி அடையாளமாக இருக்கிறது. ஓய்வை நெருங்கும் சோர்வுற்ற கால்களைக் காட்டுகிறது. அவர்கள் வசிக்கும் இடங்கள் விரைவில் காலியாகிவிடும் என்பதை சொல்லுகிறது. பிள்ளைகள் இதை சிந்திக்க உதவுங்கள். பெரியோர்களிடம் நாகரீகத்துடனும் மரியாதையுடனும் நடந்துகொள்ளுவர். அவர்களது பாதையையும் மென்மையாக்குவார்கள். ***"நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம் பண்ணி"*** என்ற கட்டளைக்கிணங்கி, தங்களது வாழ்க்கைக்குள்ளும் கிருபையையும் அழகையும் கொண்டு வருவார்கள். ***Education, p. 244.***

1ST Proof

***அடக்கத்தையும், தாழ்மையையும் கற்றக் கொடுங்கள்***

பெருமையும், மேட்டிமையும், துணிகரமும் இக்காலத்துப் பிள்ளைகளின் குணாதிசயமாக இருக்கிறது. இது ஒரு சாபம். தாழ்மையையும், தன்னடக்கத்தையும் சொல்லும் புனிதமான பாடங்கள், வீட்டிலும் ஓய்வு நாள் பள்ளியிலும் கற்றுத்தரப்பட வேண்டும். ***Counsels on Sabbath School Work p. 46.***

இதைப்படித்துக் கொண்டிருக்கும் நீங்கள் இந்த அறிவுரைகளுக்குச் செவிகொடுப்பீர்களா? வாலிபர்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளட்டும். மற்றவர்ளோடு பேசும்பொழுது துணிகரமான, மேட்டிமையான வார்த்தைகளைப் பேசாமல் இருக்கட்டும். தன்னடக்கமும் தாழ்மையும் காட்டப்படட்டும். ஆத்துமத்திற்கு நன்மையானவைகளைக் கேட்க துரிதமாக இருக்கவும், பேசுவதில் பொறுமையாக இருக்கவும் தெரிந்துக் கொள்ளட்டும். இயேசுவைப் பிரதிபலிப்பதாகவும், சத்தியத்திற்கு சாட்சியாகவும் தங்கள் பேச்சு இருக்கட்டும். தாழ்மையுடன் நடந்துகொண்டு தன்னடக்கத்தைக் காண்பியுங்கள். ***Youth's Instructor July 11, 1895.***

***நல்ஒழுக்கத்திற்கு ஒரு பாதுகாப்பு***

தன்னடக்கம் என்ற விலையுயர்ந்த ஆபரணத்தைத் தரித்துக் கொள்ளுங்கள். இது நல்லொழுக்கத்தைப் பாதுகாக்கும். சகோதரிமார்கள் தன்னடக்கத்துடனும் அமைதியுடனும் நடக்கும்படி


குழந்தை வளர்ப்பிற்கான
ஆலோசனை

சொல்ல ஆவியானவர் என்னைத் துண்டுகிறார். வாலிப சகோதரிகள் நடந்து கொள்ள வேண்டிய வகையில் எப்பொழுது நடந்துகொள்ளுவார்கள் என்று விசாரித்திருக்கிறேன். பிள்ளைகளை சரியாக வழிநடத்துவதில் பெற்றோர்கள் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும். இல்லையெனில் நன்மைக்கேதுவாக எந்த மாற்றமும் காணப்படாது. பிள்ளைகள் தாழ்மையுடனும் அடக்கத்துடனும் நடக்கக் கற்றக்கொடுங்கள். ***Testimonies for the Church, Vol. 2 p. 458, 459.***

***உண்மையான அழகும் அலங்கரிப்பும்***

கீழ்ப்படிதலிலும், தன்னடக்கத்திலும் உண்மையான அழகு இருக்கிறது. கவனத்துடன் கேட்கும் காதுகளும், கடமையைச் செய்யும் கரங்களும், பாதங்களும், அலங்கரிப்புகளாக இருக்கின்றன. நற்குணத்தையுடைய ஒரு பிள்ளையின் பலன்கள் இவ்வுலக வாழ்க்கையிலேயே காணப்படும். ***Review and Herald, May 10, 1898.***

***அதிகாரம் - 27***

***மன எழுச்சியும் நன்றியும்***

***வீட்டில் ஒரு இனிமையான தாக்கம் நிலவட்டும்***

மன எழுச்சி, நற்பண்பு, அன்பு ஆகியவற்றின் தாக்கங்களால் வீட்டின் சூழல் நிரப்பப்படட்டும். பிள்ளைகளைச் சுற்றி இத்தாக்கங்களே காணப்பட வேண்டும். அன்பு நிறைந்திருக்கும் ஒரு இல்லத்தில், பார்வையினாலும், வார்த்தையினாலும், செய்கைகளினாலும் அவ்வன்பு வெளிப்படுத்தப்படும். அவ்வில்லத்தில் தேவதூதர்கள் தங்கள் பிரசன்னத்தைக் காட்ட விரும்புவார்கள்.

பெற்றோர்களே, மன எழுச்சியும் அன்பும், மனமகிழ்ச்சியின் திருப்தியும் சூரிய ஒளியைப்போல் உங்கள் இதயத்திற்குள் பிரவேசிக்கட்டும். இதன் தாக்கம் உங்கள் வீடுகளில் நிலவட்டும் அன்பான, பொறுமையான ஆவி உங்களுக்குள் இருக்கட்டும். உங்கள் பிள்ளைகளிலும் இதை ஊக்கப்படுத்துங்கள். வீட்டின் வாழ்க்கையை பிரகாசிக்கச் செய்யும் எல்லா நற்பண்புகளையும் வளர்த்துக் கொள்ளுங்கள். வளரும் செடிகளுக்குச் சூரிய ஒளியும், காற்றும் பெரிய



1ST Proof

நன்மைகளாக இருக்கின்றன. இதைப்போன்ற நன்மையையே வளரும் பிள்ளைகளுக்கு நற்பண்புகள் கொடுக்கின்றன. சரீரமும், மனமும், அறிவும் இத்தாக்கங்களினால் சிறப்பாக வலுவடைகின்றன. ***Ministry of Healing p. 386, 387.***

***முக மகிழ்ச்சி இருக்க வேண்டும்***

கிறிஸ்தவ விசுவாசத்தில் சோகம் எதுவும் இல்லை. கேலியும் கிண்டலும் தகாத பேச்சும் தகர்க்கப்பட வேண்டும், என்று பவுல் கூறுகிறார். ஆயினும் ஒரு இனிமையான ஓய்வும் சமாதானமும் இயேசுவிற்குள் நிலவும். இது முகத்தில் வெளிப்படும். சோகம் நிறைந்து, துயரப்படுபவர்களாக கிறிஸ்தவர்கள் இருக்க மாட்டார்கள். தெளிவானவர்களாக இருப்பார்கள். உலகத்திற்கு கிருபை தரக்கூடிய ஒரு மன மகிழ்ச்சியைக் காட்டுவார்கள். ***Review and Herald, Apr 15, 1884.***

சந்தோஷமான, பிரகாசிக்கின்ற ஒரு முகம் பிள்ளைகளைக் கவரும். பிள்ளைகளிடம் அன்பையும் தயவையும் காண்பியுங்கள். அதையே உங்களிடமும் ஒருவருக்கொருவரிடமும் காட்டுவார்கள். ***Education, p. 240.***

மனமகிழ்ச்சிக்கும் நன்றியுணர்விற்கும் ஆத்துமாவானது பயிற்சிக்கப்பட வேண்டும். அவரது பெரிதான அன்பின் நிமித்தம் இது இருக்க வேண்டும். கிறிஸ்தவ மனமகிழ்ச்சியே பரிசுத்தத்தின் அழகு. ***Youth’s Instructor July 11, 1895.***

***ஊக்கப்படுத்தும் நல்ல வார்த்தைகளைப் பேசுங்கள்***

நல்ல வார்த்தைகளைப் பேச பணம் எதுவும் நாம் கொடுக்க வேண்டியதில்லை. கோபத்துடன் உங்களைப் புண்படுத்தும்படி எவரும் உங்களிடம் பேச நீங்கள் விரும்புவதில்லை. இதைப்போல் நீங்கள் மற்றவர்களிடம் பேசும்பொழுது அவர்களும் உங்களைப்போலவே பாதிக்கப்படுவார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். குடும்ப வாழ்வில் நடைமுறை தெய்வத்துவத்தைக் கொண்டு வாருங்கள். வேற்றுமைகள் நிலவும் இல்லத்திற்குள் தேவ தூதர்கள் வர விரும்புவதில்லை. மகிழ்ச்சியையும் சூரிய ஒளியைப்போல் நன்மையைத்

தரும் வார்த்தைகளைப் பேச பிள்ளைளுக்குக் கற்றுக் கொடுங்கள். ***Review and Herald, Dec. 31, 1901.***

*மகிழ்ச்சியுடன் மனதை வைத்துக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்*

தொடர்ந்து நன்றி நிறைந்த மனதுடன் இருக்கக் கிறிஸ்தவன் கடமைப்பட்டிருக்கிறான். இவ்வாழ்க்கையிலும் ஒரு கிறிஸ்தவனுக்கே உண்மையான மகிழ்ச்சி இருக்கும். உண்மையுடன் கிறிஸ்துவைப் பின்தொடரும்பொழுது இம்மகிழ்ச்சி காணப்படும். மகிழ்ச்சியுடன் இருப்பது தேவ பிள்ளைகளின் கடமை. மற்றவர்களும் அப்படியிருக்க ஊக்கப்படுத்த வேண்டும். எப்பொழுதுமே ஒரு சோகத்தின் மேகத்திற்கு கீழாக இருப்பது தேவனை மகிப்படுத்துவதாக இருக்காது. நிழலைப்போல் இராதபடி தேவபிள்ளைகள் சூரிய ஒளியைப்போல் இருத்தல் வேண்டும். கிறிஸ்தவன் ஒரு மகிழ்ச்சி நிறைந்த முகத்தையே பெற்றிருப்பான். ***Review and Herald, Apr 28, 1859.***

சோகத்தையும் வருத்தத்தையும் பிள்ளைகள் வெறுப்பார்கள். அன்பிற்கும் மகிழ்ச்சிக்கும் பிள்ளைகளின் இதயம் பதில் கொடுக்கும். ***Counsels on Sabbath School Work p. 98.***

*பெற்றோர்களே அதிகமாக சிரியுங்கள்*

சில பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒரு சமயம் தாங்களும் பிள்ளைகளாக இருந்தார்கள் என்பதை மறந்துவிடுகிறார்கள். உணர்ச்சியற்றவர்களைப்போன்று, கரிசனையுடன் பிள்ளைகளிடம் நடந்து கொள்ளுவதில்லை. அதிகாரத்தை மட்டும் காட்டுகிறார்கள். எப்போதும் பிள்ளைகளைக் கண்டிப்பது போன்றே முகத்தை வைத்துக்கொள்ளுகிறார்கள். பிள்ளைகள் துரு துரு வென்று இருப்பதும் எதையாவது செய்து கொண்டே இருப்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளுவதில்லை. சின்ன விஷயங்களும் பெரிய தவறுகளாக பாவிக்கப்படுகின்றன. இப்படி நடப்பது கிறிஸ்துவைப்போல இருப்பது கிடையாது. இப்படியாக நடத்தப்படும் பிள்ளைகள் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயப்படுகிறார்கள். அவர்களை நேசிப்பதில்லை. இதனால் பிள்ளைகளது நற்பண்புகள் அழிக்கப்படுகின்றன.



1ST
Proof

குளிர்பனியினால் சிறு செடியானது குளிர்ந்து விரைந்துவிடுவதற்கு இது சமமாக இருக்கிறது.

பெற்றோர்களே பிள்ளைகளே சிரியுங்கள். மனவருத்தத்துடன் இருந்தாலும் முகத்தில் அதைக் காட்டாதீர்கள். அன்பான இதயத்திலிருந்து வரும் சூரிய ஒளி உங்கள் முகத்தைப் பிரகாசிக்கச் செய்யட்டும். இரும்பைப்போன்றதான உங்கள் சுய கவுரவத்திலிருந்து இறங்கி வாருங்கள். பிள்ளைகளின் தேவைகளுக்கேற்ப உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். அவர்களை உங்களை நேசிக்க வையுங்கள். விசுவாசத்தைக் குறித்து அவர்களுக்கு நீங்கள் சொல்லித்தர வேண்டுமானால், முதலில் அவர்களது அன்பைச் சம்பாதியுங்கள். ***Review and Herald, Mar 21, 1882.***

*சரியான ஒரு ஜெபம்*

துதியின் கீதங்களைப் பாடி உங்கள் வேலையைச் சுலபமானதாக மாற்றுங்கள். பரலோகப் புத்தகங்களில் உங்களைக் குறித்து நல்ல விதமாக பதியப்பட வேண்டும். அதற்கேற்றபடி நடவுங்கள். கோபங்கொண்டு திட்டாதீர்கள், மகங்கோணாதீர்கள். ***"என்னால் முடிந்த சிறப்பான வேலையைச் செய்ய எனக்கு உதவுங்கள்"*** என்று தினமும் ஜெபம் செய்யுங்கள். ***"இப்பொழுது செய்வதைவிட அதிக சிறப்புடன் வேலை செய்ய ஒரு மனதையும், பெலனையும் கொடும் கர்த்தாவே"*** என்பது உங்களுடைய ஜெபமாக இருக்கட்டும். நீங்கள் செய்யும் எல்லாவற்றிர்குள்ளும் கிறிஸ்துவைக் கொண்டு வாருங்கள். உங்கள் வாழ்வு ஒளி வீசும். நன்றியால் நிறைந்ததாகவும் இருக்கும். தேவனின் வேலையைச் சிறப்பாக செய்துகொண்டு முன்னேறுவோம். நமது இதயம் அவரது அன்பினாலும் மகிழ்ச்சியினாலும் நிரப்பப்படட்டும். ***Australian Union Record Nov. 15, 1905.***

*நன்றியோடு இருக்கப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள்*

உங்கள் தேவனாகிய கர்த்தர் கொடுக்கும் ஒவ்வொரு நன்மையிலும் மகிழ்ந்து களிகூறுங்கள். தேவன் நமக்குக் கொடுக்கும் ஒவ்வொரு ஆசீர்வாதத்திற்கும் நன்றிகூறி அவரைத் துதிக்க வேண்டும். பரலோக வாசஸ்தலங்களைச் சென்றடையத்தக்கதாக தேவன்

ஆயத்தப்படுத்தி கொண்டிருக்கும் ஒவ்வொரு குடும்பமும் அவரை மகிமைப்படுத்த வேண்டும். தேவனது கிருபையின் பொக்கிஷங்களுக்காக அவருக்கு நன்றி சொல்லுவோம். தேவனிடம் நன்றியோடு இருக்கப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டால், பரலோகின் கிருபை நமது குடும்பங்களில் வெளிப்படும். இல்லம் மகிழ்ச்சியினால் நிரப்பப்படும். இத்தகைய இல்லங்களிலிருந்து வரும் வாலிபர்கள் நல்மதிப்பையும் பயபக்தியையும் பள்ளிக்குள்ளும் சபையினுள்ளும் கொண்டு வருவார்கள். தேவன் மனிதர்களைச் சந்திக்கும் அவரது ஆசரிப்புக்கூடாரத்தில் ஜனம் அதிகமாக இருக்கும். பயபக்தியுடனும் துதியுடனும், நன்றியுடனும் தேவ ஆராதனைகள் நடத்தப்படும்.

ஆதி இஸ்ரவேலர்களைப் போல் தேவனுடைய வார்த்தையைச் சற்றும் விலகாமல் கைக்கொண்டால், மதிப்பற்ற உதாரணமாகப் பிள்ளைகளுக்கு இது அமையும். ஒவ்வொரு ஆசீர்வாதமும் நன்றியுடன் பெற்றுக் கொள்ளப்படும். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் இரட்டிப்பான மதிப்பையுடையவைகளாகத் தெரியும். தேவ வார்த்தையினால் இல்லத்தின் ஒவ்வொருவரது பகுத்தறிவும் பரிசுத்தப்பட்டிருக்கும். இப்படியாகவும் அவரது ஈவுகளை மேன்மைப்படுத்துவோருக்கு அருகாமையில் இயேசு காணப்படுவார். எல்லா நன்மைகளுக்கும் ஊற்றாகத் தேவன் இருக்கிறார் என்பதை அறிவதுடன்; எல்லா தயவிற்கும், கிருபைகளுக்கும் ஆதரவுகளுக்கும் பிறப்பிடம் தேவனே என்பதையும் புரிந்துகொள்ளுவார்கள். தீர்க்கமுடியாத கிருபையின் உற்றாகவே தேவன் விளங்குகிறார் என்பதை அங்கீகரிப்பார்கள். ***Manuscript 67, 1907.***

***அதிகாரம் - 28***

***உண்மையோடிருத்தல்***

***உண்மையோடிருத்தலின் உதாரணமாக பெற்றோர்கள்.***

பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இதைச் சொல்லுகிறேன். தேவனுக்கு உண்மையாய் இருங்கள். வஞ்சகமான செயல்கள் உங்கள் வாழ்கையில் இல்லாமல் இருக்கட்டும். உங்கள் நாவுகளில் கபடு இருக்க வேண்டாம். எப்படிப்பட்ட இக்கட்டிற்கு ஆளானாலும், வார்த்தையினாலும் செயலினாலும் தேவனுக்கு உண்மையாய் இருங்கள். ஒரு வஞ்சிக்கும் செயலின் விளைவு எவ்வளவு கொடியதானதாக இருக்கும். தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்ளுபவர்கள் ஏமாற்றும் செயல்களுக்கும், பொய்க்கும் தங்களை ஒப்புக்கொடுத்தல் சரிதானா?

என் தாய் உண்மையை பேசுவதில்லை என்று நினைக்கக் கூடிய சிறிய வாய்ப்பைக்கூட பிள்ளைகளுக்குக் கொடுக்காதீர்கள். தகப்பனைப் பற்றியும் பிள்ளைகள் இவ்வண்ணம் நினைத்துவிடக் கூடாது. பரலோக நீதிமன்றத்தில் உங்களது வழக்கு தேவனுக்கு முன்பாக வரும். அச்சமயதில் உங்கள் பெயர்களுக்குப் பக்கத்தில் ஏமாற்றுபவன் என்று பதிவுசெய்யப்படலாமா? உங்கள் பிள்ளைகள் தவறான முன் உதாரணத்தினால் கெடுக்கப்படலாமா? இவர்கள் சத்தியத்தின்படி நடக்கும் உதாரணங்களாக இருந்திருக்க வேண்டும். தேவனுடைய வல்லமை பெற்றோர்களின் இதயங்களுக்குள் புகுந்து அவர்களை மனமாறவைக்க வேண்டாமா? பரிசுத்த ஆவியானவர் பிள்ளைகளின் மேல் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டாமா?

பிள்ளைகள் எந்த குறையும் இல்லாமல் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட முடியாது. ஆயினும் தவறான நிர்வாகத்தினால் பிள்ளைகள் உண்மையோடு நடந்துகொள்ளும் பண்பு அழிக்கப்படும் அபாயம் உள்ளது. குழந்தைகளிடம் இயற்கையாகவே இருக்கக்கூடிய அப்பாவித்தனமும் மாறிவிடும். சோல்லினாலும் செயலினாலும் மாயமாலமற்ற ஒரு எளிமையைக் காத்துக்கொள்ள வேண்டும். இதற்கென தங்களது எல்லா வல்லமைகளையும் பிரயோகிக்க வேண்டும். பிள்ளைகள் வளர்ந்து வரும்பொழுதும் இத்தீயக்குணங்களுக்கான எந்த விதையும் விதைக்கப்பட வாய்ப்பு கொடுக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாய்ப்புகள் வஞ்சகத்தையும், பொய்யையும், கெட்ட பழக்கங்களையும் வளர்த்துவிடும். ***Review and Herald, Apr. 13, 1897.***

***நல்ல முன் உதாரணமாக நிலைத்திருத்தல்***

உண்மையோடு நடந்துகொள்ளுவதின் முன் உதாரணங்களாக பெற்றோர்கள் திகழ வேண்டும். இதையே பிள்ளைகள் அனுதின பாடமாக பார்க்க வேண்டும். இப்பாடம் அவர்களது மனங்களில் பதிவாகும். வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் நெறிதவறாமல் நடந்து கொள்ள

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

வேண்டும். பிள்ளைகளை வழிநடத்தும் இவ்வேலையில் இது நிச்சயமாகக் கையாளப்பட வேண்டும். சிறு குழந்தையும் தன்னுடைய செய்கையினால் அவன் எப்படிப்பட்டவன் என்பதைக் காட்டுகிறான். ***Good Health Jan, 1889.***

தேவ வழிநடத்தலை பின்பற்றாமல், நன்மை தீமையை சரியாகக் கண்டறிய முடியாத தாயானவள் தன் பிள்ளைகளை மாய்மாலக்காரர்களாகவும் வஞ்சிப்பவர்களாகவும் வளர்த்துவிடக் கூடும். தவறான இக்குணங்கள் நிறந்தரமாகத் தங்கிவிடும் சுவாசத்தைப் போன்று பொய்யும் அவர்களது நாவுகளிலிருந்து சரளமாக கிளம்பும். அவர்களது மாய்மாளங்கள் உண்மையானவைகளாக மற்றவர்களால் தவறாக நினைக்கப்படும். ***Review and Herald, Apr 13, 1897.***

பெற்றோர்களே இவ்விஷயத்தில் ஒரே நிலையில் இருங்கள். வார்த்தையினாலும் செயலினாலும் பொய்க்குச் சாட்சியாக இருக்காதீர்கள். உங்கள் பிள்ளைகள் உண்மையுடன் நடந்துகொள்ள, முதலில் நீங்கள் உண்மையுள்ளவர்களாக இருங்கள். இதில் நிலை மாறாதீர்கள். பொதுவாக தாய்மார்கள் நிலைமாறுகிறார்கள். பிள்ளைகளும் இந்த உதாரணத்தையே பின்பற்றுகிறார்கள். ***Manuscript 126, 1897.***

***கடுமையான வார்த்தைகள் பொய் சொல்லத் தூண்டும்***

பிள்ளைகள் தவறு செய்யும்பொழுது பொறுமையை இழந்துவிடாதீர்கள். அவர்களைத் திருத்தும்பொழுது கடுமையாகப் பேசாதீர்கள். இது அவர்களை குழப்பமடையச் செய்யும். உண்மையைச் சொல்ல பயப்படச் செய்யும். ***Manuscript 2, 1903.***

***அதிகாரம் - 29***

***நேர்மையும் நாணயமும்***

***நேர்மை அப்பியாசிக்கப்பட்டு கற்றுத்தரப்பட வேண்டும்***

தாயினுடைய வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் நேர்மை இருத்தல் அவசியம். குழந்தைகளுக்கும் வாலிபர்களுக்கும் நேர்மையைவிட்டு சிறிதுகூட விளகாதபடி இருக்கச் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். எவரையும் சிறு வகையிலும்கூட ஏமாற்றக் கூடாதென்பதும் சொல்லித் தரப்பட வேண்டும். ***Letter 41, 1888.***

***தேவனது கரம்***

அவரது வேலையில் ஈடுபட்டிருக்கும் மனிதர்கள் எல்லா விஷயங்களிலும் முழுமையான நேர்மையைக் காட்டத் தேவன் விரும்புகிறார். குணம் மாசுப்படாதவர்களாகவும், பொய்யின் சிறு சுவடுகூடத் தெரியாதபடி தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும். நாவும் கண்களும், செயல்களும் நேர்மையானவைகளாகவும் தேவனால் அங்கீகரிக்கக் கூடியவைகளாகவும் இருக்க வேண்டும். நாம் ஒரு உன்னத தேவனின் ஆய்விற்கு முன்பாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். “உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்” என்று அவர் கூறுகிறார். அவரது தெய்வீகக் கண்ணானது நம்மீது இருக்கிறது. எந்த ஒரு அநியாயமான செயலையும் தேவனிடமிருந்து நாம் மறைத்துவிட முடியாது. தேவன் நமது ஒவ்வொரு செயலுக்கும் சாட்சியாக இருக்கிறார் என்பது பெரிய உண்மையாக இருக்கிறது. இதை வெகு சிலரே புரிந்துகொள்ளுகிறார்கள். ***Letter 41, 1888.***

தேவனையே சார்ந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டவர்கள், சக மனிதர்களுடன் நேர்மையாக இருக்க வேண்டும் என்பதை அறிந்திருப்பார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுக்கு உண்மையாக இருத்தல் வேண்டும். அவரிடமிருந்தே ஜீவியத்தின் எல்லா ஆசீர்வாதங்களும் நமக்கு வருகின்றன. தசம பாகங்களைக் குறித்ததான தேவனின் கட்டளைகளை அசட்டை செய்தல் தேவனிடமிருந்து திருடுவதற்குச் சமமானதாக இருக்கிறது. ***Counsels on Stewardship p. 77.***

***நேர்மையான தராசுகள்***

தளராத நாணயத்தையும், உத்தமத்தையும் கைக்கொள்ளுபவனே, தேவனது அளவுகோலுக்கு முன்பாக நேர்மையானவனாக இருக்கிறான். தவறான தராசுகளையும் எடைகளையும் இலாபத்திற்காகப் பயன்படுத்துவோரின் செயல் தேவனுக்கு முன்பாக அறுவருப்பாக இருக்கிறது. நிலை மாறாத ஒரு நேர்மை

1ST Proof

இவ்வுலகின் தரம் தாழ்ந்த குப்பைகளுக்கு மத்தியில் ஒரு சுத்தமாக தங்கமாகத் திகழ்கிறது. பொய்யும், ஏமாற்று வேலையும், வஞ்சகமும், உண்மையில்லாமல் இருத்தலும், மனித கண்களிடமிருந்து மறைக்கப்படலாம். தேவனது கண்கள் எல்லாவற்றையும் நோக்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொருவரது குணத்தின் வளர்ச்சியைத் தேவதூதர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒழுக்கத்தரத்தையும் அளந்து கொண்டிருக்கிறார்கள். பரலோக புத்தகங்களில் சிறு காரியங்களையும் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். குணத்தை வெளிக்காட்டும். எல்லாமே பதிவு செய்யப்படடிருக்கும். ***Testimonies for the Church, Vol. 4, p. 310.***

### *பணத்தைக் குறித்தும் நேரத்தைக் குறித்தும் நேர்மையாகயிருத்தல்*

சரியானவைகளைத் தவிர வேறு எதையும் தங்களது நேரங்களுக்குள்ளாக நுழைய விடக்கூடாது. இப்படிப்பட்ட மனிதர்கள் தேவைப்படுகிறார்கள். தேவனுடையவைகளைக் கையாளுகிறோம் என்பதை உணர்ந்தும், ஒரு சல்லிக் காசைக்கூட அநியாயமாகக் கொள்ளாதபடி இருக்க வேண்டும். தங்களுக்கு வேலையை கொடுத்திருப்பவர் பக்கத்தில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் வேலை நேர்மையுடன் செய்யப்பட வேண்டும். மனிதப் பிரியர்களாக இராதபடி, பார்வைக்காக வேலை செய்பவர்களாக இராமல் மனசாட்சிக்கு பயந்து நடக்கும் உண்மையான வேலையாட்களாக இருக்க வேண்டும். மனிதர்கள் பாராட்டுவதற்காக செயல்படாமல், தேவன்மீது அன்பு கொண்டு, அதன் நிமித்தமாக நாணயமாக நடந்துகொள்ளும் மனிதர்களாக இருக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol. 3, p. 25.***

### *நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை மற்றவர்கள் புரிந்து கொள்ளும்படி நமது கிரியைகள்*

ஒவ்வொரு வரவு செலவிலும் ஒரு கிறிஸ்தவன் தான் யார் என்பதை உலகத்திற்குக் காட்டுவான். நீதியின் கோட்பாடுகளால் அவனது செயல்கள் வரையறுக்கப்பட்டிருக்கும். மறைவான திட்டங்களை எதுவும் தீட்டுவதில்லை. மறைப்பதற்கு ஒன்றும் இருப்பதில்லை. கவலைப்பட்டு பயப்படுவதற்கும் ஒன்றும் இருப்பதில்லை. அவன் தவறாக பேசப்படலாம், சோதிக்கப்படலாம் அவனது வழிவிலகாத நேர்மையானது சுத்த பொன்னைப்போல் ஜொலிக்கும். அவனுடன் தொடர்பு கொள்ளும் எல்லோருக்கும் ஒரு ஆசீர்வாதமாக இருக்கிறான். நம்பக் கூடியவனாக இருக்கிறான். தனது அயலானை தவறாக பயன்படுத்திக் கொள்ள மாட்டான். எல்லாருக்கும் நன்மை தரும் நண்பனாக இருக்கிறான். அவனது ஆலோசனைகளை அவனது ஆட்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளாக நம்புகிறார்கள். ஒரு நேர்மையான மனிதன் மற்றவர்களுடைய பெலவீனத்தையோ, அவர்கள் திறமையற்றிருப்பதையோ தனக்கு வசமாக, இலாபமடையும்படி பயன்படுத்திக் கொள்ள மாட்டான். ***Letter 3, 1878.***

### *வலுவான நேர்மையிலிருந்து விளகாதீர்கள்*

ஒவ்வொரு வணிக செயல்பாட்டிலும் நேர்மையாக இருங்கள். எப்படிப்பட்ட சோதனை வந்தாலும் ஏமாற்றாதீர்கள். நேர்மையுடன் நடந்து கொள்ளுங்கள். சிறு காரியத்திலும் நிலை மாறாதீர்கள். சில நேரங்களில் நமது இயல்பான சுபாவம் கூட நாம் தவறும்படி தூண்டலாம். ஒரு முடிஇழை அளவுகூட விட்டுக் கொடுக்காதீர்கள். ஒன்றை செய்வேன் என்று நீங்கள் சொல்லியிருக்கலாம். நீங்கள் ஒப்புக்கொண்டது உங்களுக்குப் பெரிய நஷ்டத்தையும் மற்றவர்களுக்கு ஏதுவாக இருப்பதை நீங்கள் பிறகு அறிந்து கொள்ளலாம். ஆயினும் நீங்கள் கூறியதை மாற்றிவிடாதீர்கள். செய்த ஒப்பந்தத்தைக் கைக்கொள்ளுங்கள். ஒரு வேளை கூறியதை மாற்றிக்கொண்டால் நீங்கள் நம்பிக்கைக்குரியவர்களல்ல என்பதைக் காட்டுகிறீர்கள். சின்ன காரியங்களில் இதை நீங்கள் செய்தால், பெரிய காரியங்களிலும் இதையே செய்வீர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சிக்குவோர் பொய் உரைக்கும்படி சோதிக்கப்படுகிறார்கள். "என்னை தவறாக புரிந்து கொண்டார்கள்." "நான் அப்படி கூறவில்லை." "எனது வார்த்தைகள் தவறாக அர்த்தம் கொள்ளப்பட்டன" என்றும் கூறுவர். உண்மையென்னவெனில், புரிந்து கொள்ளப்பட்டதையே அவர்கள் முதலில் சொன்னார்கள். ஆனால் பிறகு அந்த நல்ல மனதை இழந்தார்கள். இதன் நிமித்தம் ஒப்புக் கொண்டதிலிருந்து பின் வாங்குகிறார்கள். அவர்களுக்கு நஷ்டம் வந்துவிடக் கூடாது என்பதற்காக இப்படி செய்கிறார்கள். நாம் நீதியைக் கைக்கொள்ள தேவன் விரும்புகிறார்.

கிருபையையும், சத்தியத்தையும் தேவ நீதியையும் நேசித்து இவைகளின் மேல் அன்பு வைக்க வேண்டும். ***Letter 103, 1900.***

*திட்டவட்டமான கோட்பாடுகளை வைத்துக் கொள்ளுங்கள்*

வாழ்க்கையின் எல்லா விஷயங்களிலும் முழுமையான நேர்மைக்கேதுவான நெறிகள் கைக்கொள்ளப்பட வேண்டும். ஒரு வணிக செயல்பாட்டில் சற்றுவிட்டுக் கொடுப்பது பெரிதாகத் தெரியாமல் இருக்கலாம். சிலர் இப்படி நினைக்கக் கூடும். நமது இரட்சகர் இதை இப்படி பார்க்கவில்லை. தெளிவாகவே அவர் விளக்கியுள்ளார். “சிறியதில் உண்மையாக இருப்பவன், பெரியதில் உண்மையாக இருக்கிறான்” தனது அயலானை ஒரு சின்ன காரியத்தில் நேர்மையுடன் நடந்து கொள்ளாதவன், பெரிய விஷயத்திலும் அப்படியாகவே நடந்து கொள்ளுவான். சோதனை வரும்பொழுது இதை செய்துவிடுவது உறுதி. ஒரு சிறு காரியத்திலும் நேர்மை தவறுவது, தேவனுக்கு முன்பாக பெரிய காரியத்தில் நேர்மை தவறுவதற்கு ஒப்பாக இருக்கிறது. ***Letter 3, 1878.***

நமது வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் நேர்மையின் முத்திரை தரித்திருக்கப்பட வேண்டும். நமது கரங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையை தூதர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். நேர்மையின் கோட்பாடுகள் எங்கெல்லாம் மீறப்பட்டிருக்கின்றன என்பதையும் பார்க்கிறார்கள். தவறும் சிறு காரியமாக இருந்தாலும் பரலோக பதிவுகளில் “குறைவுள்ளவன்” என்று எழுதப்படும். ***Counsels on Stewardship p. 142.***

*அதிகாரம் - 30*

*சுய சார்ந்திருத்தலும், சுய மதிப்பும்*

*தன்னையே சார்ந்திருக்கும்படி பிள்ளைக்குச் சொல்லிக் கொடுங்கள்*

முடிந்த வரையில் ஒவ்வொரு பிள்ளையும் தன்னை சார்ந்து இருக்க பயிற்றுவிக்கப்பட வேண்டும். தனது எல்லா திறன்களையும் பிரயோகிக்கும்படி இது செய்யும். பிள்ளையானவன் தனது பெலத்தையும் பெலவீனத்தையும் அறிந்து கொள்ளுவான். ஞானத்துடன் பிள்ளையை அறிவுறுத்துபவர், பிள்ளையின் குணக்குறைபாடுகளைச் சரி செய்து கொள்ளும்படியாக வழிநடத்துவார். சும நிலையிலான ஒரு சீரான குணம் உருவாக்கப்படும். ***Fundementals of Christion Education, p. 57.***

*அதிக சுக போகமான வாழ்வு பெலவீனர்களையே வளர்க்கும்*

தங்களுக்கு தாங்களே உதவி செய்துகொள்ளும்படியாக பெற்றோர்கள் பிள்ளைகளை வழிநடத்த வேண்டும். இறந்த பின்பு அவர்களுக்கு பெரிய தொகையை விட்டுச்செல்லுவதைவிட இது மேலானது. தங்களையே சார்ந்து வாழ வேண்டியிருந்த பிள்ளைகள், பெற்றோர்களையே சார்ந்து இருந்த பிள்ளைகளைக் காட்டிலும் மேலானவர்களாக இருப்பார்கள். நடைமுறை வாழ்க்கைக்கும் தகுதியடைந்திருப்பார்கள். தங்களை தாங்களே பார்த்துக் கொள்ள வேண்டியிருந்த பிள்ளைகள் தங்களது திறமைளை பெரிய பரிசுகளாக பாவிப்பார்கள். அளிக்கப்படும் தருணங்களை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளுவார்கள். வெற்றிகரமாக ஒரு உன்னத இலக்குடன் வாழவும் தங்களை உயர்த்திக் கொள்ளுவார்கள். கடின உழைப்பு, சிக்கனம், நல்ஒழுக்கம் போன்ற பண்புகளை வளர்த்து கொள்ளுவார்கள். இப்பண்புகள் கிறிஸ்தவ வாழ்க்கையின் வெற்றிகு அடித்தளமாக அமைகின்றன. பிள்ளைளுக்கு அதிகமாக செய்யும் பெற்றோர்களுக்கு அப்பிள்ளைகள் பொதுவாக எந்த வகையிலும் பெற்றோர்க்கு தாங்கள் கடமைப்பட்டிருப்பதாக நினைப்பதில்லை. ***Testimonies for the Church, Vol. 3, p. 122, 123.***

*தடைகள் பெலத்தை அதிகரிக்கிறது*

தடைகளே மனிதர்களை பெலசாலிகளா மாற்றுகிறது. துன்பங்களும், உபத்திரவங்களும், போராட்டங்களும், கடந்து கொள்ளுதலுமே, ஒழுக்கத்தில் பலசாலிகளாக மனிதர்களை உண்டு பண்ணுகிறது. ஊதவிகள் இதை செய்வதில்லை. பொறுப்புகள் இல்லாத ஒரு சுகபோக வாழ்க்கை மனிதர்களை பெலவீனர்களாகவும், வளர்ச்சி குன்றினவர்களாகவும் மாற்றுகிறது. ஒழுக்கத்தில் வல்லமையானவர்களாகவும் பெலன் நிறைந்த ஆவிக்குரிய தசைகளை

1ST Proof

இவர்கள் பெற்றிருக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol. 3, p. 495.***

வாழ்க்கையின் ஆரம்ப வருடங்களிலிருந்தே நாணயத்தோடு நடக்கும் பண்பு, குணத்தினுள் புகுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆண்களாகவும், பெண்களாகவும், வாலிபகர்களாகவும் ஓர் உயரியத் தரத்தை அடைவதற்கு இது ஏதுவானதாக அமையும். தாங்கள் கிரியத்திற்கு வாங்கப்பட்டவர்கள் என்பதை எப்பொழுதும் கண்களுக்கு முன்பாக வைத்துக் கொள்ள வேண்டும். தேவனுக்குச் சொந்தமான தங்களது ஆவியாலும், சரீரத்தினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். வாழ்க்கையின் நோக்கமென்ன என்பதையும், தங்களது வாழ்நாட்களின் வேலையாக எது இருக்கப்போகிறது என்பதையும் கவனத்துடன் சிந்திக்க வேண்டும். மாசு படியாத பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ள ஒரு நல்ல அடித்தளம் போடப்பட வேண்டும். மற்றவர்களின் மேலாக தங்களது நல்ல செல்வாக்கு இருக்க வேண்டுமானால் தங்களையே சார்ந்திருக்க வேண்டும். ***Youth's Instructor Jan 5, 1893.***

### *பிரச்சனைகளை தைரியமாகச் சந்திக்கப் பிள்ளைகளை ஆயத்தப்படுத்துங்கள்*

வீட்டு ஒழுங்கு, பள்ளி ஒழுங்கு ஒரு பக்கம் இருக்க, நடைமுறை வாழ்க்கை கற்றுத்தரும் ஒழுங்கின் பாடங்களும் மறுபக்கம் இருக்கின்றன. இதை ஞானத்துடன் சந்திப்பது எப்படி என்பதை ஒவ்வொரு வாலிபருக்கும் பிள்ளைக்கும் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். தேவன் நம்மீது அன்பு கூர்ந்து, நமது மகிழ்ச்சிக்காக கிரியை செய்துகொண்டிருக்கிறார் என்பது உண்மையே. அவரது கட்டளை கைக்கொள்ளப்பட்டிருந்தால் எந்த துன்பத்தையும் நாம் அனுபவிக்க வேண்டியிருந்திருக்காது. ஆயினும் இவ்வுலகில் பாவத்தின் விளைவாக உபத்திரவமும், பிரச்சனையும், பாரங்களும் ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் காணப்படுகின்றன. இதுவும் இன்னொரு பெரிய உண்மையாக இருக்கிறது. இப்பிரச்சனைகளையும், பாரங்களையும் தைரியத்துடன் சந்திக்க பிள்ளைகளுக்கும் வாலிபருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். இதை நாம் செய்யும்பொழுது அவர்களது வாழ்நாள் முழுவதற்குமான பெரிய நன்மையை நாம் செய்கிறோம்.



1ST Proof

நமது கரிசனை பிள்ளைகளுக்கு தேவையே. அதற்காகப் பிள்ளைகள் சூழ்நிலைகளை எண்ணி பரிதாபத்துடன் தங்களை நோக்கிக் கொண்டிருக்கக் கூடாது. இந்த விதமாக அவர்களை வழிநடத்திவிடக் கூடாது. அவர்கள் தூண்டப்பட்டு பெலனடைய வேண்டும். பெலவீனமடையக் கூடாது.

இவ்வுலகம் ஒரு போர்க்களம் என்பது அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். நல்ல போர்வீரர்களாக எதிர்ப்புக்களையும் பிரச்சனைகளையும் சந்திப்பதே அவர்களது அழைப்பாக இருக்கிறது. திடன் கொண்டு உண்மையான மனிதர்களாக அவர்கள் திகழ வேண்டும். பாரங்களைச் சுமப்பதும், கடினமான இடத்தையும் எடுத்துக் கொள்ளவும், செய்யப்பட வேண்டிய வேலையைச் செய்வதே அவர்களது குணத்திற்கான சோதனை என்பதைப் புரிய வையுங்கள். இதை செய்வதற்கான விருப்பம் அவர்களிடம் காணப்பட வேண்டும். இவ்வுலகில் இதற்கு எந்த அங்கீகாரமும், வெகுமதியும் கிடைக்காமற் போகலாம். ***Education, 295.***

### *சுய மதிப்பை பெலப்படுத்துங்கள்*

ஒரு நல்ல ஆசிரியர் பிள்ளையின் தன்நம்பிக்கையையும், பிள்ளை தன்மீது கொண்டுள்ள ஒரு மதிப்பையும் வளர்ப்பார். பிள்ளைகளும் வாலிபர்களும் நம்பப்பட வேண்டும். இது அவர்களுக்குப் பெரிய நன்மையை செய்கிறது. சிறு பிள்ளைகளும் கூட தங்கள்மீது ஒரு நல்ல மதிப்பை வைத்திருப்பார்கள். மரியாதையுடன் நடத்தப்பட விரும்புவார்கள். இது அவர்களது உண்மையும்கூட. கண்காணிக்கப்படாமல் வெளியே செல்லவோ வீட்டினுள் வரவோ முடியாது என்று அவர்கள் நினைக்கும்படி நடத்தப்படக் கூடாது. அவர்களை சந்தேகிப்பது அவர்களது ஒழுக்கத்தைக் கெடுத்துவிடுகிறது. ஏதை தகர்க்க சந்தேகப்படுகிறோமோ, அத்தீமையை அது உருவாக்குகின்றது. ஆவர்கள் நம்பப்படுகிறார்கள் என்று அவர்கள் நினைக்கும்படி அவர்களை வழிநடத்துங்கள். இப்படிப்பட்ட நடத்தையினால் வாலிபர்களும் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்ள ஏவப்படுவார்கள். ***Education, p. 289, 290.***

### *பாகம் - **VIII***

*முதன்மையான பணி*

*குண வளர்ச்சி*

*அதிகாரம் - 31*

*குணத்தின் முக்கியத்துவம்*

*இவ்வுலகிலிருந்து கொண்டு செல்லப்படும் ஒரே பொக்கிஷம்*

தெய்வீக சாயலுக்கு ஏதுவாக நாம் வளர்த்துக் கொள்ளும் குணத்தை மட்டுமே இவ்வுலகிலிருந்து அவ்வுலகிற் எடுத்து செல்ல முடியும். கிறிஸ்துவினால் இவ்வுலகில் அறிவுறுத்தப்படுபவர்கள், தங்களது தெய்வீக சாதனைகளைப் பரலோகின் வாசஸ்தலங்களுக்கு எடுத்துச் செல்லுவார்கள். பரலோகிலும் நாம் தொடர்ந்து வளர்ந்துகொண்டே இருப்போம். குண வளர்ச்சி என்பது எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது. ***Christ Object Lesson p. 332.***

*உண்மையான குணம் ஓர் ஆத்தும தரம்*

அறிவாற்றல் நிறைந்த மேதையாக இருப்பது குணமல்ல. நல்ல குணத்திற்கு எதிர்மறையான பண்புகளையுடையோரிடமும் இது அதிகமாக காணப்படலாம். மற்றவர்கள் நம்மைப் பற்றி நல்ல விதத்தில் நினைப்பது குணமல்ல. நல்ல குணமென்பது ஆத்துமத்தின் ஒரு தன்மையாக இருக்கிறது. நடத்தையில் அது காட்டப்படுகிறது. ***Youth's Instructor Nov. 3, 1886.***

நல்ல குணம் தங்கத்தையும் வெள்ளியையும்விட விலையுயர்ந்தது. பயத்தினாலோ தோல்வியினாலோ அது பாதிக்கப்படுவதில்லை. உலக ஐஸ்வர்யங்கள் அழிந்துபோகும் அந்நாளில் குணம் என்ற முதலீடு பெரிய இலாபத்தைக் கொடுப்பதாக இருக்கும். நாணயம், எச்சூழ்நிலையிலும் மாறாத ஒரு நிலை, பொறுமை, சகிப்புத் தன்மை போன்ற பண்புகளை வளர்த்துக்கொள்ள எல்லோரும் பிரயாசப்பட வேண்டும். தள்ளப்பட முடியாத ஒரு வல்லமையினால் இப்பண்புகள் ஒரு நபரை நிரப்புகின்றன. நன்மையைச் செய்வதற்கும், தீமையை ஒதுக்குவதற்கும், எதிர்ப்புகளை மேற்கொள்ளுவதற்கான வல்லமையாக இது இருக்கும். ***Counsels to Parents, Teachers and Students, p. 225, 226.***



1ST Proof

*இரண்டு முக்கிய அம்சங்கள்*

நல்ல குணமானது இரண்டு அம்சங்களை உள்ளடக்கியதாக உள்ளது. முதல் காரியம் நமது தேர்ந்தெடுக்கும் வல்லமை, இரண்டாவது நமது சுய கட்டுப்பாட்டின் வல்லமை. கட்டுப்படுத்த முடியாத பெலமான ஆசைகளையும் இச்சைகளையும், வல்லமையான குணமாக அநேக வாலிபர்கள் தவறாக நினைத்துவிடுகிறார்கள். உண்மை என்னவெனில் தனது இச்சைகளால் மேற்கொள்ளப்படும் மனிதன் பெலவீனமானவன். தனது உணர்ச்சிகளை கட்டுப்படுத்தும் மனிதனே கனம் பெற்றவன். ஊணர்ச்சிகள் தன்னை கட்டுப்படுத்த விடுபவன் கனம் பொருந்தியவன் அல்ல. உபத்திரவப்படும் பொழுதும் பாதிக்கப்பட்டாலும், உணர்வுகளைக் கட்டுப்படுத்தி விரோதிகளை மனிப்பவனே உண்மையான பெலவான். ***Counsels to Parents, Teachers and Students, p. 222.***

*வெளிப்புறமான பகட்டைக் காட்டிலும் இன்றியமையாதது*

காலத்திற்கேற்ப மாறும் பிரபலமான பழக்க வழக்கங்களை உடையிலும், நடத்தையிலும் பின்பற்றுவது முக்கியமான இடத்தைப் பிடித்துவிட்டது. இதே முக்கியம் நல்ல குணத்தை உருவாக்கிக் கொள்ளுவற்கும் கொடுக்கப்பட வேண்டும். இது நடந்தேரினால், சமுதாயத்தின் மேல் ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு நபரின் இடத்தில் நூறு நபர்கள் காணப்படுவார்கள். செயல்வீரர்களாக இவர்கள் ஆயத்தப்பட்டிருப்பார்கள். ***Fundementals of Christion Education, p. 69.***

*குணவிருத்தி வாழ்நாளின் பணி*

நல்ல குணத்தை உருவாக்கிக் கொள்ளுவது வாழ்நாள் முழுவதும் செய்யப்பட வேண்டிய வேலை. நித்தியத்தற்கும் இது தொடரும். இதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். இதை புரிந்துகொள்ளுபவர்கள் ஒவ்வொரு நாளும் நமது நடத்தையினால் நித்திய ஜீவனுக்கோ அல்லது அழிவிற்கோ நமது விதியை தீர்மானித்துக் கொண்டிருக்கிறோம் என்று சிந்திக்கத்தக்கதாக எழுப்பப்படுவார்கள். தனித்தனியாக நாம் எல்லோரும் இதை செய்து கொண்டிருக்கிறோம். இந்த அறிவு எல்லோருக்கும் வந்துவிட்டால் எவ்வளவு பெரிய மாற்றம்

ஏற்படும். நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இந்த தவணையின் காலம் வீணடிக்கப்படாமல் பயனுள்ள வகையில் செலவழிக்கப்படும். இன்றைக்கு நாம் காண்பதைவிட, மேலான மனிதர்கள் உலகத்தை நிரப்புவார்கள். ***Youth's Instructor Feb. 19, 1903.***

*வளர்ச்சியும் முன்னேற்றமும்*

விதையிலிருந்து சிறு செடி புறப்படுவது ஆவிக்குரிய வாழ்க்கையின் ஆரம்பத்தைக் குறிக்கிறது. வளர்ச்சியில்லாமல் எந்த உயிரும் இருப்பதில்லை. செடி வளர்ந்து கொண்டிருக்கும். வளராவிட்டால் மறித்துவிடும். சேடி வளருவது குண வளர்ச்சிக்கு அடையாளமாக இருக்கிறது. வளர்ச்சியில்லாத எந்த செடியிலும் ஜீவன் இருக்காது. இது நமக்கும் பொருந்தும். சேடி அமைதியாக வளருகிறது. அதன் வளர்ச்சி எளிதில் கண்டுகொள்ளப்படுவதில்லை. ஆயினும் அது தொடர்ந்து வளருகிறது. குண வளர்ச்சியும் இப்படியே நடக்கிறது. வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் நமது வாழ்க்கை பரிபூரணமாக இருக்க முடியும். தொடர்ந்து முன்னேறிக்கொண்டே இருப்போம். இதுவே தேவன் நம்மீது கொண்டிருக்கிற நோக்கமாக இருக்கிறது. ***Education, p. 105, 106.***

*இதுவே வாழ்க்கையின் அறுவடை*

நமது வாழ்க்கையின் அறுவடை நமது குணம். இம்மைக்கும் மறுமைக்கும் நமது விதியை இதுவே நிர்ணயிக்கிறது. விதைக்கப்பட்ட விதையின் பலனாக அறுவடை வருகிறது. ஒவ்வொரு விதையும் ஒவ்வொரு வகையான கனியைக் கொடுக்கிறது. இதைப்போலவே நமது வெவ்வேரு குணநலன்கள் இருக்கின்றன. சுய நலம், தற்பிரியம், சுய மேட்டிமை, போன்றவை பரிதவிப்பையும் அழிவையும் அறுவடையாகக் கொண்டு வரும் தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான். கலாத்தியர் 6 : 8. அன்பும், கரிசனையும், தயவும், அழியாத ஓர் ஆசீர்வாதமான அறுவடையைக் கொண்டு வருகிறது. ***Education, p. 109.***

*கிறிஸ்தவத்தின் பெரிதான சாட்சி*



1ST
Proof

ஸ்திரமான கோட்பாடுகளுடன், நல்லொழுக்கம் நிறைந்த, நேர்மையான குணங்களைக் கொண்டுள்ள பிள்ளைகளை தாய்மார்கள் சமுதாயத்தினிடம் கொடுக்க வேண்டும். இதை அவர்கள் செய்வதே மற்ற எல்லா ஊழியங்களைவிட மிக முக்கியமான ஊழியமாக இருக்கிறது. சமூகத்தில் தங்கள் இடங்களை நிரப்ப, தகுதிபெரும்படியாக பிள்ளைகள் கற்பிக்கப்பட வேண்டும். இப்பிள்ளைகளே கிறிஸ்தவத்தின் பெரிய சாட்சிகளாக உலகத்தில் விளங்குவார்கள். ***Pacific Health Journal June 1890.***

*சரியாக பயிற்சிகொடுக்கப்பட்ட ஒரு பிள்ளையின் தாக்கம்.*

நல்ல குணங்களை உருவாக்கும் வேலையைவிட பெரிதான வேலை எதுவும் மனிதனுக்கு கொடுக்கப்படவில்லை. பிள்ளைகளுக்கு நாம் கற்றுக்கொடுத்து, அதற்கேற்ற பயிற்சியையும் கொடுக்க வேண்டும். வளரும் ஒரு பிள்ளையின் எதிர்காலமோ, அல்லது ஒரு வாலிபனின் எதிர்காலமோ எப்படி இருக்கும் என்பதை எவராலும் கனிக்க முடியாது. பிளளைகளை பராமரிப்பதில், அதிகமான கவனமும், அக்கரையும் செலுத்தப்படட்டும். சத்தியத்தின் கோட்பாடுகளில் சரியாக வழிநடத்தப்பட்ட ஒரு பிள்ளை, தேவனது அன்பையும், தேவ பயத்தையும் தனது குணத்தில் தரித்துள்ள ஒரு பிள்ளை, நன்மைக்கேதுவான ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அத்தாக்கத்தின் வல்லமை மதிப்பிடப்பட முடியாது. ***Signs of the Times, July 13, 1888.***

*அதிகாரம் - 32*

*நல்ல குணத்தை உருவாக்குதல்*

*சோர்வடையாத தளராத முயற்சி*

நல்ல குணம் தானாகவே வந்துவிடுவதில்லை. ஒரு முறை கோபப்படுவதினாலோ, ஒரு தவறான செய்கையினாலோ அது நிர்ணயிக்கப்படுவதில்லை. அதே செயல் மீண்டும் மீண்டும் செய்யப்படும்பொழுது அது பழக்கமாகிவிடுகிறது. குணத்தை அதன்படி நன்மைக்கோ தீமைக்கோ வடிவமைக்கிறது. சோர்வுராமல் தளராது தொடர்ந்து ஏரெடுக்கப்படும் முயற்சியினால் குணம் உருவாகிறது. ஒவ்வொரு திறனையும், தாலந்தையும் தேவ மகிமைக்கென்று

பயன்படுத்துவதினாலும் குணம் மேம்படுகிறது. இதை நாம் செய்ய, நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட நமது தாலந்துகளும் வளர்ந்துகொண்டே இருக்கும். அநேகர் இதை செய்யாதபடி சூழ்நிலைக்கும் தங்களது ஆசைகளுக்கேற்ற விதத்தில் நடந்து கொள்ளுகிறார்கள். அவர்கள் கெட்டவர்கள் என்பதினால் அவர்கள் இப்படி நடக்கவில்லை. மிகச் சிறப்பானவைகளை வாலிப பிராயத்திலேயே செய்ய தேவன் விரும்புகிறார் என்பதை அவர்கள் உணருவதில்லை. ***Youth's Instructor July 27, 1899.***

நமது குணங்களில் வளருபவர்களாக நாம் இருக்க வேண்டும். இதுவே தேவனுக்கும் சக மனிதர்களுக்கும் நாம் செய்கின்ற முதல் கடமையாகும். சிருஷ்டிகர் நமக்குக் கொடுத்திருக்கிற ஒவ்வொரு திறமையையும் பரிபூரணத்தை அடைய நாம் வளர்ந்துகொண்டிருக்க வேண்டும். இதனால் நம்மால் முடிந்த அளவிலான நன்மையைச் செய்பவர்களாக இருப்போம். நமது குணங்களை சுத்திகரித்துத் தூய்மைபடுத்திக்கொள்ள கிறிஸ்துவின் கிருபை நமக்குத் தேவை. நமது குறைகளைக் கண்டு கொண்டு திருத்திக்கொள்ளுவோம். நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளுவோம். ***Pacific Health Journal Apr. 1890.***

***தேவன் அருளியிருக்கிற வல்லமைகளை வளர்த்தல்***

ஒவ்வொரு மனிதனும் தனது குணத்தை அவனே வரையறுத்துக் கொள்ளுகிறான். குணம் என்ற சித்திரத்தை வரையும் ஓவியனாக இருக்கிறான். ஒவ்வொரு நாளும் அப்படம் மேலும் வரையப்படுகிறது. முழுமையை நெருங்குகிறது. ஒவ்வொரு நாளும் நமது குணத்தை எப்படி கட்டிக்கொண்டிருக்கிறோம் என்பதைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி தேவ வார்த்தைச் சொல்லுகிறது. நித்திய கன்மலையின்மேல் அது கட்டப்பட வேண்டும். நமது வேலை எத்தகையதாக இருந்திருக்கிறது என்பதைக் காட்டும் காலம் சீக்கிரமாக வரப்போகிறது. தேவன் கொடுத்திருப்பவைகளை வளர்த்துக் கொள்ளுவதற்கு இதுவே காலம். உபயோகமான ஒரு குணத்தை இவ்வாழ்க்கைக்கும் பரலோக வாழ்க்கைக்கும் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.



1ST Proof

இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் விசுவாசம் குணத்தைப் பெலப்படுத்தி அதை மேலும் ஸ்திரப்படுத்தும். கிறிஸ்துவை உண்மையில் விசுவாசிப்பவர்கள் தெளிந்த புதியுடையவர்களாக இருப்பார்கள். தேவனது கண்கள் தங்களை நோக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுவார்கள். எல்லா மனிதர்களின் நீதிபதி ஒவ்வொருவரின் ஒழுக்கத்தை அளந்து கொண்டிருக்கிறார் என்பதையும், பரலோகவாசிகள் எப்படிப்பட்ட குணம் உருவாகிக்கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கக் காத்துக் கொண்டிருப்பதையும் மறக்க மாட்டார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 222, 223.***

***ஒவ்வொரு செயலின் தாக்கம்***

வாழ்க்கையின் ஒவ்வொரு செயலும், எவ்வளவு சிறியதாக இருந்தாலும், குணத்தின்மேல் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நல்ல குணம் ஐஸ்வரியங்களைக் காட்டிலும் விலையுயர்ந்தது. இதை உருவாக்கிக்கொள்ளும் வேலையைவிட உன்னதமான பணி எதுவும் மனிதர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

சூழ்நிலையினால் உருவாக்கப்படும் குணமானது மாறிக்கொண்டு இருக்கும். எதிரும் புதிருமான இருக்கும். சீரானதாகவும் இருக்காது. இத்தகைய குணத்தை உடையவர்கள் வாழ்க்கையில் எந்த ஒரு இலக்கும், உயரிய குறிக்கோளும் இல்லாதவர்களாக இருப்பர். மற்றவர்களது குணங்களின்மேல் நல்லதொரு தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. வல்லமையற்றவர்களைகவும், நோக்கமாற்றவர்களாக வாழுவர். ***Testimonies for the Church, Vol. 4, p. 657.***

***தேவன் காட்டியிருக்கும் வழி***

தேவன் நமக்குக் காண்பித்திருக்கும்படி நமது குணங்களை உருவாக்கிக் கொள்ள தேவன் எதிர்பார்க்கிறார். ஒவ்வொரு கல்லையும் சரியாகப் பொருத்த வேண்டும். தேவைப்படுபவைகளை ஒவ்வொன்றாக சேர்த்து அதை அழகாக்க வேண்டும். தேவ வழிநடத்துதலின்படி குறைகளைக் கண்டுபிடித்துச் சரிசெய்து கொள்ள வேண்டும். சுவற்றில் ஒரு விரிசல் இருந்தால், அக்கட்டிடத்தில் குறை இருப்பதை புரிந்து

கொள்ளுகிறோம். நமது குணம் என்ற கட்டிடத்திலும் விரிசல்கள் அடிக்கடி காணப்படும். இக்குறைகள் சரி செய்யப்படாவிட்டால் சோதனை என்ற புயல் அடிக்கும்பொழுது வீடு விழுந்துவிடும். ***Youth's Instructor Oct. 25, 1900.***

தேவன் அங்கிகரிக்கும்படி ஒரு குணத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கான பெலத்தையும், பகுத்தறிவையும், காலத்தையும் தேவன் கொடுத்திருக்கிறார். அவரது ஒவ்வொரு பிள்ளையும் நல்லதொரு குணத்தைக் கட்டிக்கொள்ள அவர் ஆசைப்படுகிறார். மாசற்ற தூய்மையான செயல்களினாலும், உன்னதமான பண்புகளினாலும், நிறைந்த சீரான ஒரு ஆலயமாக நம்மை முன்நிறுத்த தேவன் விரும்புகிறார். இவ்வாலயம் மனிதர்களாலும் தேவனாலும் கனப்படுத்தப்படும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும்.

குணத்தைக் கட்டுகையில் கிறிஸ்துவின்மேல் நாம் கட்ட வேண்டும். அவரே நிலையான அஸ்திபாரம். இவ்வஸ்திபாரம் அசைக்கப்பட முடியாத ஒன்று. உபத்திரவமும் சோதனையும் புயலைப்போல் இவ்வீட்டின்மேல் அடித்தாலும் நித்திய கன்மலையின்மேல் கட்டப்பட்டதினால் இது அசையாது.

கிறிஸ்துவுக்கென்று ஒரு அழகான கட்டிடமாக ஒவ்வொருவரும் வளர வேண்டும். தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஜீவியத்தின் எல்லா பெலன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். நமக்குத் தரப்பட்டிருக்கிற தாலந்துகளை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் வழியாகவே ஒரு சீரான குணம் நமக்குள்ளாக உருவாக்கப்படுகிறது. பொன்னாகவும், வெள்ளியாகவும் விலைமதிப்பற்ற கற்களாகவும் வேதத்தில் குறிப்பிடப்பட்டவைகளை நமது அஸ்திபாரமாக அமைத்துக் கொள்ளுவோம். தேவனுடைய சுத்திகரிக்கும் அக்கினியின் சோதனையை இந்த அஸ்திபாரம் கடந்து செல்லும். குணத்தை கட்டுவதில் கிறிஸ்துவே நமது மாதிரியாக இருக்கிறார். ***Youth's Instructor May 16, 1901.***

***சோதனைகளை எதிர்த்துப் போராட வேண்டும்***

பரிசுத்தப்படுத்தப்பட்ட ஒரு நல்ல குணத்திற்கு முன் மாதிரியாக தானியேலின் வாழ்க்கை இருக்கிறது. இது நம் எல்லோருக்கும் ஒரு பாடமாக இருக்கிறது. குறிப்பாக வாலிபருக்கு விசேஷித்த பாடங்களை இதிலிருந்து கற்றுக் கொள்ளலாம். தேவனுடைய நியமங்களுக்குச் சற்றும் விலகாமல் கீழ்ப்படிய வேண்டும். சரீரத்திற்கும் மனதிற்கும் இது நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கும். ***Fandementals of Christian Education, p. 80.***

கட்டுப்பாடுடன் இருக்கும் பழக்கங்களில் சிறு வயதுமுதல் தானியேல் தனது பெற்றோர்களால் பயிற்றுவிக்கப்பட்டிருந்தார். இயற்கையின் ஆரோக்கிய விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுத்திருந்தார்கள். இதுவே தானியேலின் பழக்கமாகவே மாறியிருந்தது. நமது புசிப்பும், குடிப்பழக்கங்களும் நேரடியாக நமது சரீரத்தையும் மனதையும், ஒழுக்கத்தையும் பாதிக்கின்றன என்பதும் தானியேலுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. தேவன் தனக்குக் கொடுத்திருந்த எல்லா திறமைகளுக்கும் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதை உணர்ந்திருந்தார். தேவனிடமிருந்து பெறப்பட்ட ஈவாக இவைகளை பாவித்து எச்செயலினாலும் அவரது திறமைகளை முடமாக்கிவிடக் கூடாது என்பதையும் மறவாமல் இருந்தார். அவர் சரியான பாடங்களைக் கற்றுக் கொண்டார். தேவ பிரமாணத்தைத் தன் இதயத்தில் நிலைநிறுத்தி பயபக்தியுடன் வாழ்ந்தார். முதல் இடத்தை தேவனுக்குக் கொடுத்திருந்தார். அவர் சிறைபிடிக்கப்பட்ட பிறகும், இந்த புது இடத்தின் ஆரம்ப கால அனுபவங்களிலும் அவருக்கு இன்னொரு பயிற்சி கொடுக்கப்பட்டது. ஆரசவையின் மகத்துவங்களுக்கும், அங்கிருந்த மாய்மாலங்களுக்கும், அஞ்ஞான மார்க்கத்திற்கும் பழகிக்கொண்டார். ஒரு வினோதமான பள்ளியாகவே இது இருந்தது. ஆயினும் உழைப்பிற்கும், உத்தமத்திற்கும் புத்தி தெளிவுடன் செயல்படுவதற்கான ஒரு ஆயத்தத்தை இங்கு பெற்று கொண்டார். தீமையினால் சூழப்பட்டிருந்தாலும் அதினால் மாசுப்படாதவராகவே இருந்தார்.

தானியேலுக்கும் அவரது நண்பர்களுக்கும் சிறு பிராயத்தில் ஒரு நல்ல கல்வியும் பயிற்சியும் கொடுக்கப்பட்டிருந்தது. இது அவர்களுக்குப் பெரிய நன்மையாக இருந்தது. இதனால் மட்டுமே அவர்கள் சிறந்து விளங்கவில்லை. அவர்கள் சுயமாக செயல்பட

1ST Proof

வேண்டிய நேரம் வந்தது. அவர்களது எதிர்காலமும் அதை சார்ந்து இருந்தது. ஆயினும் அவர்கள் சிறு வயதில் கற்றுக் கொண்ட பாடங்களுக்கு உண்மையாய் இருக்க முடிவெடுத்தனர். ஞானத்தின் ஆரம்பமான தேவனுக்குப் பயந்து நடக்கும் குணம் அவர்களது மேன்மையின் அடித்தளமாக அமைந்தது. தேவ ஆவியானவர் அவர்களின் உயரிய உன்னத நோக்கத்தைப் பெலப்படுத்தினார். ***Manuscript 132, 1901.***

*உயரிய இலக்கு இருத்தல் வேண்டும்*

இன்றைய வாலிபரும் தானியேல் நின்றதைப்போல் நிற்க வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையின் ஒவ்வொரு நரம்பின் மற்றும் தசையின் முழு வல்லமையையும் பிரயோகித்துச் செயல்பட்டால் அவரைப்போல் நிற்கலாம். கன்றுகுட்டிகளாக வாலிபர்கள் இருப்பது வேத சித்தமல்ல. ஏணியின் உயரமான படியையும் ஏறி அதிலிருந்து தேவ இராஜியத்திற்குள்ளாக அடுத்த அடியை எடுத்துவைப்பதே தேவனின் விருப்பம். ***Youth's Instructor July 27, 1899.***

நற்குணத்தின் முக்கியத்துவத்தை வாலிபர்கள் புரிந்து கொண்டால், தேவ ஆய்விற்க்கு முன்பாக நிற்கத்தக்கதாக தங்கள் பணிகளை நிறைவேற்றுவார்கள். பெலவீனப்பட்டு தாழ்ந்திருப்பவர்களும் கூட விடாமுயற்சியுடன் சோதனைகளை மேற்கொண்டு, தேவ ஞானத்தைத் தேடி, நினையாத உயரத்தையும் எட்டலாம். சிறு கடமைகளிலும் உண்மையாய் இருக்க தீர்மானித்து அந்த நோக்கத்துடன் செயல்பட்டால் மட்டுமே இது சாத்தியமாகும். தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும். கேடான பண்பு நலன்கள் பெலப்படவிடக் கூடாது. வாலிபர்களும் ஒழுக்கத்திற்கு ஏதுவான ஒரு வல்லமையைப் பெற்றுக் கொள்ளலாம். நமக்கு முன் மாதிரியாக இருக்கவும், எல்லா காலத்தைச் சேர்ந்த எல்லோருக்கும் தெய்வீக உதவியைக் கொடுப்பதற்குமே இயேசு வந்தார்.

*கடிந்து கொள்ளுதலுக்கும் அறிவுரைகளுக்கும் செவிகொடுக்க வேண்டும்.*

குணத்திலும், பழக்க வழக்கங்களிலும், நடத்தையிலும் குறையுள்ளவர்கள் அறிவுரைக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் செவிகொடுக்க வேண்டும். இவ்வுலகம் தேவனின் பட்டறை. பரலோக ஆலயத்தில் பயன்படக் கூடிய ஒவ்வொரு கல்லும் வடிவமைக்கப்பட்டு பளபளப் பூட்டப்பட வேண்டும். விலையேறப் பெற்ற கல்லாக அது மாறும்வரை இது நடந்தாக வேண்டும். பிறகே தேவனது கட்டிடத்தில் அதன் இடத்தை அது நிரப்பும். தேவன் நம்மை பயிற்றுவித்து ஒழுங்குபடுத்த நாம் அனுமதியாவிட்டால் பயனற்ற கல்லாக வீசி எரியப்படுவோம். ***Youth's Instructor Aug 31, 1893.***

உங்களது குணத்தில் அதிக வேலை செய்யப்பட வேண்டியதாக இருக்கலாம். நீங்கள் ஒரு முரடான வடிவமற்ற கல்லாக இருக்கலாம். தேவனது ஆலயத்தில் உங்கள் இடத்தை எடுத்துக் கொள்ளுவதற்கு முன்பாக நீங்கள் ஒரு நல்ல சதுரமாக வடிவமைக்கப்பட்டு, தூய்மைப்படுத்தப்படவும் வேண்டும். சுத்தியையும் உளியையும் கொண்டு உங்களது குணத்தின் கூர்மையான ஓரங்களை வெட்டி எடுத்தால் ஆச்சரியப்படாதீர்கள். அவர் உங்களுக்காக வைத்திருக்கும் இடத்ஜ நிரப்ப நீங்கள் ஆயத்தமாகும் வரையிலும் இது நடக்கும். எந்த மனிதனாலும் இந்த வேலையைச் செய்ய முடியாது. தேவனால் மட்டுமே இதை செய்து முடிக்க முடியும். தேவையற்ற எந்த அடியையும் அவர் அனுமதிப்பதில்லை என்பது உறுதி. ஒவ்வொரு அடியும் அன்பினால் விழுகிறது. உங்களது நித்திய மகிழ்ச்சிக்கென்று இது சம்பவிக்கிறது. அவர் உங்கள் பெலவீனங்களை அறிந்திருக்கிறார். உங்களை சீரழிக்க அல்ல, சீராக்கவே செயல்படுகிறார். ***Testimonies for the Church, Vol. 7, p. 264.***

*அதிகாரம் - 33*

*நற்குணத்தை உருவாக்குவதில் பெற்றோரின் பொறுப்பு*

*பெற்றோர்களுக்கு ஒரு தெய்வீகப் பொறுப்பு*

பெற்றோர்களுக்கு அவர்களது வேலையை தேவன் கொடுத்திருக்கிறார். தெய்வீக மாதிரியின்படி பிள்ளைகளின் குணங்களை உருவாக்குவதே அவ்வேலை. தேவ கிருபையால் அவர்களால் இதைச் செய்ய முடியும். பொருமையும், அதிக முயற்சியும் தேவைப்படும். நெடுங்காலத்திற்கும் கவனமாக இருக்க வேண்டியிருக்கம். தீர்க்கமான

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

முடிவுகளை எடுத்து, தளர்ந்துவிடாமல், பிள்ளைகளின் தவறான ஆசைகளை கட்டுப்படுத்தி, அவர்களை நன்றாக வழிநடத்த வேண்டும். கவனிக்கப்படாமல் அதன்போக்கிற்கு விடப்படும் நிலம் முட்களையும் புதர்களையுமே விளைவிக்கும். நல்ல ஒரு அறுவடையைப் பெற்றிட, முதலாவது நிலம் ஆயத்தப்படுத்தப்பட வேண்டும், பின்பு விதை விதைக்கப்படும். சிறு செடிகளைச் சுற்றி களைகள் எடுக்கப்பட்டு, மண்ணும் பதப்படுத்தப்படுகிறது. செடிகள் நன்றாக வளர்ந்து செயப்பட்ட வேலைக்கேற்ற பலனைக் கொடுக்கும். ***Signs of the times Nov. 24, 1881.***

மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட எல்லா வேலைகளைவிட முக்கியமானது குணத்தை வளர்த்துக் கொள்ளும் வேலையே. இந்த காலத்தில் அதைப் படித்துக் கொள்ளுவது மிக அவசியமானதாக இருக்கிறது. இந்த தலைமுறையினர் சந்திப்பவைகளை கடந்த தலைமுறையினர் சந்தித்ததில்லை. வாலிபர்களை இன்றைக் எதிர்கொண்டிருக்கும் அபாயங்கள் எந்த காலத்திலும் இருந்ததில்லை. ***Education, p. 225.***

பேற்றோர்களே இதுவே உங்களது வேலை. தேவ வார்த்தையின் நியமங்களுக்கிசைவாக உங்களது பிள்ளைகளின் குணங்களை உருவாக்குங்கள். இந்த வேலைக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். நித்தியத்திற்குரிய காரியங்கள் இவ்வேலையில் அடங்கியுள்ளது. உங்கள் நிலங்களில் விவசாயம் செய்வதைவிட, வீடுகளைக் கட்டுவதைவிட, எந்த ஒரு தொழிலை செய்வதைவிடவும் இது முக்கியமானது. ***Signs of the Times, Sep. 10, 1894.***

***குணவளர்ச்சிக்கான சிறந்த இடம்***

குண வளர்ச்சிக்கு ஏதுவான இடம் பள்ளியோ, கல்லூரியோ கிடையாது. வீட்டில் மட்டுமே சரியான அஸ்திபாரத்தின் மீது குணமானது கட்டப்பட்ட தருணங்கள் கிடைக்கும். ***Counsels to Parents, Teachers and Students, p. 162.***

***கோணலான குணங்கள் நேராக்கப்பட வேண்டும்***



1[ST] Proof

இந்த வாழ்க்கையிலுமே கோணலான குணங்களை சீராக்கிக் கொள்ளாதவர்கள் நித்திய ஜீவனுக்கு பங்காளிகளாக இருக்க முடியாது. நேராக இருப்பது வாலிபருக்கு எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது. பெற்றோர்களுக்கும் இதில் ஒரு முக்கிய பங்குண்டு. தேவனுக்கென்று பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் புனிதமான பொறுப்பு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பரலோகின் வாசல்களுக்குள்ளாக பிரவேசிக்க தகுதிபெறும் குணத்தைப் பிள்ளைகள் உருவாக்கிக் கொள்ள பெற்றோர்கள் உதவ வேண்டும். ***Letter 78, 1901.***

***பெற்றோர்களே இதில் தவறாதீர்கள்***

பெற்றோர்களே உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த மிக முக்கியமான வேலையைச் செய்ய தவறிவிடாதீர்கள். வேரு எதற்காக இல்லாவிட்டாலும் கிறிஸ்துவிற்காக இதை செய்யுங்கள். இந்த வாழ்க்கைக்கும் மறுமையின் வாழ்க்கைக்கும் உங்கள் பிள்ளைகளின் குணங்களை சீர்படுத்துங்கள். சரியான அறிவுரைகளை கொடுத்து தகாதவைகளைச் செய்ய அன்பு என்ற பெயரில் விட்டுவிடாதீர்கள். அவர்களது குறைகளைக் கண்டுகொண்டு அவைகளைத் திருத்துங்கள். இதை நீங்கள் செய்யாமற்போனால் பிள்ளைகள் சீரழிந்துவிடுவது உறுதி. உங்களது தவறான வழிமுறை அவர்களது எதிர்காலத்தைத் தவறான திசையில் திருப்பிவிடும். அவர்கள் யாராக இருக்கப் போகிறார்கள் என்பதும், கிறிஸ்துவிற்கும், மற்றவர்களுக்கும், தங்களுக்கும் என்ன செய்யப் போகிறார்கள் என்பதும் உங்கள் முடிவுகளைச் சார்ந்துள்ளது.

உங்கள் பிள்ளைகளிடம் நேர்மையாக நடந்துகொள்ளுங்கள். பொருமையுடனும் தைரியத்துடனும் வேலை செய்யுங்கள். இதற்காக, எந்த சிலுவையை ஏற்றுக்கொள்ள பயப்படாதீர்கள். எந்த பாரத்தையும் சுமருங்கள், என்ன துன்பமானலும் தாங்கிக்கொள்ளுங்கள். உங்களது வேலையின் தன்மையைக் குறித்து உங்களது பிள்ளையின் எதிர்காலம் சாட்சி கொடுக்கும். உங்களது பிள்ளைகளின் நற்குணம் நீங்கள் கிறிஸ்துவுக்கு உண்மையாக இருந்திருக்கிறீர்கள் என்பதைக் காட்டும். பிள்ளைகள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பெற்ற அவரது சொத்தாக இருக்கிறார்கள். அவர்கள் முழுமையாக கிறிஸ்துவின் பக்கம் இருந்தால், இயேசுவுடன் சேர்ந்து வேலை செய்பவர்களாக இருப்பார்கள்.

மற்றவர்கள் ஜீவ பாதையைக் கண்டுகொள்ள உதவுவார்கள். உங்கள் வேலையை நீங்கள் அசட்டை செய்தால், உங்களது தவறான வழிநடத்தல் இருளின் இராஜியத்தின் வேலையாட்களாக பிள்ளைகளை மாற்றிவிடும். கிறிஸ்துவிடமிருந்து தாங்களும் பிரிந்து மற்றவர்களையும் சிதரடிப்பவர்களாக இருப்பார்கள். ***Testimonies for the Church, Vol. 5, p. 39, 40.***

***ஒரு தூய்மையான இல்லம், ஆனால் சரியாக வழிநடத்தப்படாதப் பிள்ளைகள்***

நான் ஒரு தாயை கவனித்திருக்கிறேன். வீட்டின் சுத்தத்தைக் கண்ணும் கருத்துமாக பார்த்து கொண்டார். சரீரத்திற்கும் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் மேலாக இதை வைத்தார். சிறு குறையைக் கூட வீட்டில் காணப்படுவதைப் பொருத்துக் கொள்ள மாட்டார். ஆனால் தன் பிள்ளைகள் தெருவில் உலாவ விட்டிருந்தார். அப்பிள்ளைகள் நாகரீகமற்ற கீழ்ப்படியாத முரடர்களாக வளர்ந்திருந்தனர். வீட்டு வேலை செய்வதற்கு ஒரு நபரை அவர்கள் வேலைக்கு வைத்திருந்தனர். ஆயினும் தாயினால் பிள்ளைகளுடன் இருந்து அவர்களைச் சரியாக பயிற்சிக்க முடியவில்லை. வீட்டு வேலைகளிலே எல்லா நேரமும் மூழ்கியிருந்தார். குழந்தைகள் குணத்தில் குறைபாடுடன் ஒழுக்கமற்று சரியாக வழிநடத்தப்படாமல் இருந்தனர். இந்த தாய் தனது கவனத்தையும் அக்கரையையும் தவறான திசையில் செலுத்தியிருந்தார். இத்தவறு அவரிடம் காணப்படாமல் இருந்தால் பிள்ளைகளின் குணங்களை சரியான வகையில் வடிவமைக்கவில்லை.

இத்தாய் தனது வாழ்க்கையில் முதன்மையாக வைத்திருந்தவைகளை ஒதுக்கி பிள்ளைகளின் பராமரிப்பையே முதலாவதாக வைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் பிள்ளைகளின் சரீர வளர்ச்சியும், மன வளர்ச்சியும், ஆவிக்குரிய வளர்ச்சியும் எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்ந்திருப்பார். தாயின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுபவர்கள் தேவனுக்கும், தனது பிள்ளைகளுக்கும் ஆற்ற வேண்டிய உன்னத கடமைகளைப் புரிந்துகொண்டவர்களாக இருக்க வேண்டும். அதன்படி பிள்ளைகளுக்கு ஏற்ற ஒரு கல்வியைக் கொடுத்து அழகான குணங்களையுடையவர்களாக



1ST Proof

பிள்ளைகளை வளர்க்க வேண்டும். ஒழுக்கமானவர்களாகவும் எல்லோரும் விரும்பக் கூடிய விதத்திலும் அப்பிள்ளைகள் இருப்பார்கள். ***Signs of The Times Aug 5 1875.***

***தேவ ஆவியானவர் மட்டுமே இதை செய்வார்.***

மகிமையின் வாசல்களுக்குள்ளாகப் பிரவேசிக்க நாம் நம்மை தகுதிப்படுத்திக்கொள்ள முடியுமா? நமது குணங்களையும், வாழ்க்கையும் நாமே மாற்றிக் கொள்ள முடியுமா? நிச்சயமாக முடியாது. ஒவ்வொரு நொடிப்பொழுதும் தேவ ஆவியானவரையே நாம் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. அவர் தாமே நம்மீதும் நமது பிள்ளைகளின் மீதும் கிரியைச் செய்கிறார். ***Manuscript 151, 1897.***

***தேவனின் பங்கும் உங்களது பங்கும்***

கிறிஸ்தவப் பெற்றோர்களே நீங்கள் விழித்தெழும்பும்படி நான் உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். உங்கள் கடமைகளை அசட்டை செய்து, பொறுப்புக்களை ஒதுக்கிவிட்டு, தேவன் இவைகளை செய்வார் என்று எதிர்பார்ப்பது எமாற்றத்தில் முடியும். உங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்துவிட்டு பிள்ளைகளை இயேவிடம் கொண்டு வாருங்கள். விசுவாசத்துடன் தொடர்ந்து உண்மையான ஜெபத்தை அவர்களுக்காக ஏரெடுங்கள். தேவன் உங்களுக்கு உதவுவார். உங்களது முயற்சிகளுடன் தேவனும் வேலை செய்வார். அவரது பெலத்தினால் நீங்கள் வெற்றியடையலாம்.

இப்படியாக முயற்சித்து இந்த வகையிலும் பிள்ளைகளின் மேல் பெற்றோர்கள் அக்கரைக் காட்ட வேண்டும். அப்பொழுது தேவன் அவர்களது ஜெபத்தைக் கேட்பார். அவர்களுடன் சேர்ந்து பிள்ளைகளுக்காக வேலை செய்வார். பெற்றோர்கள் செய்ய வேண்டியவைகளைா அவர் செய்வது அவரது நோக்கமல்ல. ***Review and Herald, Sep. 13, 1881.***

***சிருஷ்டிகர் உங்களுக்கு உதவுவார்***

தாய்மார்களே உங்களுடைய வேலையில் பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர் உங்களுக்கு உதவுவார் என்பதை மறந்துவிடாதீர்கள்.

அவரது பெலத்தினாலும், அவரது நாமத்தின் வழியாகவும் உங்கள் பிள்ளைகளை சரியாக நீங்கள் வழிநடத்தலாம். அப்பிள்ளைகள் தீமையை வெற்றிகரமாக மேற்கொள்ளுவார்கள். பெலத்திற்காக தேவனை நோக்கிப் பார்க்கக் கற்றுக் கொடுங்கள். அவர்களது ஜெபங்களைத் தேவன் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள். தீமையை நன்மையினால் வெல்லக் கற்றக் கொடுங்கள். மனிதர்களை உன்னதமானவர்களாகவும் மேன்மையானவர்களாகவும் மாற்றும் ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தச் சொல்லிக் கொடுங்கள். தேவனோடு இணைய அவர்களை வழிநடத்துங்கள். பெரிய சோதனைகளையும் மேற்கொள்ள பெலப்படுவார்கள். தீமையை மேற்கொள்ளுபவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வெகுமதி அவர்களுக்கும் கிடைக்கும். ***Review and Herald, July. 9, 1901.***

உங்களது கரிசனை நிறைந்த மீட்பர் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அன்பாலும், தயவாலும் உங்களை கண்நோக்கிக் கொண்டு இருக்கிறார். உங்களது ஜெபங்களைக் கேட்டு தேவையான உதவியைச் செய்ய ஆயத்தமாயிருக்கிறார். அன்பு, சமாதானம், மனமகிழ்ச்சி, நீடிய பொறுமை, விசுவாசம், அன்பு, சமாதானம், மனமகிழ்ச்சி, நீடிய பொறுமை, விசுவாசம், மென்மை ஆகியவை கிறிஸ்தவ பண்புகளாக இருக்கின்றன. மதிப்பற்ற இவைகள் ஆவியின் கனிகளாக இருக்கின்றன. இவைகள் ஒரு கிறிஸ்தவனின் கிரீடமாகவும் கேடயமாகவும் விளங்குகின்றன.

***தவறியவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகள்***

பிள்ளைகளை இதுவரையிலும் தவறாக வழிநடத்தியிருக்கிற பெற்றோர்கள் சோர்ந்துவிட வேண்டாம். தேவன் பட்சமாக மனமாறுங்கள். உண்மையான கீழ்ப்படிதலின் ஆவியை கண்டடைய முயற்சியுங்கள். தீர்க்கமான சீர்திருத்தத்தைக் கொண்டு இது வழிவகுக்கும். உங்களது சொந்த பழக்கங்களை தேவ பிரமாணத்திற்கு இசைவாக மாற்றும் பொழுது நல்லதொரு செல்வாக்கைப் பிள்ளைகளிடம் கொண்டு செல்வீர்கள். ***Signs of the Times, Sep. 17, 1894.***

***சில பிள்ளைகள் பெற்றோரது அறிவுரைகளை கேட்கமாட்டார்கள்***



1ST Proof

பிள்ளைகள் தங்கள் இதயங்களை தேவனிடம் ஒப்படைக்கப் பெற்றோர்கள் தங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்ய வேண்டும். இப்படிச் செய்தும் பிள்ளைகள் சரியான வழியில் நடக்காமல் போகலாம். தவறான நடத்தையினால் பெற்றோர்கள்மீது தகாத ஒரு தாக்கத்தை ஏற்படுத்தலாம். அவர்கள் மீது உண்மையான அன்பு செலுத்தி அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற ஏக்கத்துடன் இருக்கும் பெற்றோர்களுக்கும் இது நேரிடலாம்.

சாத்தானே பிள்ளைகள் தவறாக நடக்கும்படி அவர்களைத் தூண்டுகிறான். பாவத்தின் வழியிலும் கீழ்ப்படியாமையின் வழியிலும் அவர்கள் நடக்க அவர்களுக்குச் சோதனைகளைக் கொடுக்கிறான். பிள்ளைகள் வெளிச்சத்தின் வழியில் நடக்காமல், தேவனுக்கு தங்களது சித்தத்தை சமர்பிக்காமல் போனால் நியாயத்தீர்ப்புக்கு உள்ளாவார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகளும் அனுகூலங்களும் அவர்களுக்கு எதிராக எழும்பி அவர்களை நியாயந்தீர்க்கும். அவர்களது தவறான வழியில் துணிகரமாகத் தொடர்ந்து செயல்பட்டால் இது சம்பவிப்பது உறுதி. சாத்தான் அவர்களை வழிநடத்திக் கொண்டிருக்கிறான். உலக மக்களின் ஏளன பேச்சுக்கும் ஆளாகின்றனர். ஜனங்கள் இப்படியாகப் பேசுவார்கள். ***“அப்பிள்ளைகளைப் பாருங்கள், அவர்களது பெற்றோர்கள் பக்திமான்களாக இருக்கிறார்கள், ஆனால் பிள்ளைகளோ என் பிள்ளைகளைவிட மோசமானவர்களாக இருக்கிறார்கள்.” “ நான் என்னை ஒரு கிறிஸ்தவன் என்று எல்லோரிடமும் நான் சொல்லிக் கொள்ளுவதும் இல்லை.”*** இப்படியாகப் பெற்றோர்கள் அவமதிக்கப்படும்படியாக பிள்ளைகள் நடந்து கொள்ளுகிறார்கள். நல்ல அறிவுரைகளைப்பெற்றும் அதற்கு கீழ்ப்படியாதப் பிள்ளைகள் பக்தியற்ற இவ்வுலகத்திற்கு முன்பாகப் பெற்றோர்களை அவமானப்படுத்துகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் மதத்தின்மீதும் அவதூரைக் கொண்டுவருகிறார்கள். அவர்களது துன்மார்க்கமான செயல்களே இதற்குக் காரணம்.

***பெற்றோர்களே இதுவே உங்கள் வேலை.***

பெற்றோர்களே பொருமையையும், அன்பையும், நிலைமாறாமல் நிற்கும் பண்பையும் பிள்ளைகளுக்குள் வளர்ப்பதே உங்கள் வேலை. தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கிற பிள்ளைகளைச் சரியாக கையாளுங்கள். இதை செய்தால் மாசற்ற சம நிலையான ஒரு

குணத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு, ஏற்ற ஒரு அஸ்திபாரத்தை அமைத்துக் கொள்ள அவர்களுக்கு உதவுகிறீர்கள். எதிர்காலத்தில் அவர்களது குடும்பங்களில் அப்பிள்ளைகள் பின்பற்றப்போகும் விதிகளையும், கோட்பாடுகளையும் அவர்களுடைய மனங்களுக்குள்ளாகப் புகுத்துகிறீர்கள். உங்களுடைய இந்த சரியான முயற்சிகளின் விளைவைக் காண்பீர்கள். பெரியவர்களான பின்பு அவர்களது இல்லங்களை தேவனுடைய வழியில் நடத்திச் செல்வார்கள். ***Review and Herald, Jan. 6, 1899.***

***அதிகாரம் - 34***

***குணம் சீரழிக்கப்படும் வழிகள்***

***சீரழிவின் விதைகளைப் பெற்றோர்களே தூவிவிடுகிறார்கள்***

தவறு செய்யும் பெற்றோர்கள், பிள்ளைகளுக்கு தவறானப் பாடங்களைச் சொல்லிக் கொடுத்துவிடுகிறார்கள். இது அவர்களது அழிவிற்கு வழிவகுப்பது உறுதி. பெற்றோரும் தங்களது பாதங்களுக்கும் சேதத்தை வரவழைத்துக் கொள்ளுப்படி, முட்களை விதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்த தவறானப் பாடங்களே இம்முட்கள்.

பிள்ளைகளின் எதிர்கால மகிழ்ச்சி பெற்றோர்களின் கைவசம் உள்ளது. பிள்ளைகளின் குணங்களை உருவகிக்கும் முக்கிய பணியும் அவர்ளுடைதாய் இருக்கிறது. சிறுபிராயத்தில் கொடுக்கப்பட்ட அறிவுரைகள், வாழ்நாள் முழுவதும் அவர்களைப் பின்தொடரும். நன்மைக்கோ, தீமைக்கோ கனிகொடுக்கும் விதையை பெற்றோர்கள் தூவுகிறார்கள். மகிழ்ச்சிக்கு, அல்லது துக்கத்திற்கு தங்கள் பிள்ளைகளை தகுதிப்படுத்துகிறார்கள். ***Testimonies for the Church, Vol. 1 p. 393.***

***இரண்டு தவறுகள்***

பிள்ளைகள் குழந்தைப் பருவத்திலிருந்தும் தாங்கள் விரும்பும் எல்லாவற்றையும் செய்துகொள்ளும்படி அனுமதிக்கப்படுகிறார்கள். தவறான பழக்கங்கள் உருவாகிவிடுகின்றன. நேராக வளர வேண்டிய



1ST Proof

நாற்றை வளைத்துவிடுகிறார்கள். பெற்றோர்களது பயிற்சியினால் குணமானது சீராக்கப்படும் அல்லது முடமாக்கப்படும். ஒரு கூட்டத்தார் பிள்ளைகளை மனம் போன போக்கில் செயல்படும்படி விடுகின்றனர். இன்னொரு கூட்டத்தார் இதற்கு எதிர்மறையான சர்வதிகாரத்தைக் கையாளுகின்றனர். இவை இரண்டுமே வேதத்தின் முறைகள் அல்ல. இவ்விரு கூட்டத்தாரும் பரிதாபத்திற்குரிய ஒரு வேலையைச் செய்கிறார்கள். பிள்ளைகளின் மனங்களைத் தவறாக உருவமைக்கிறார்கள். இதை செய்கதற்காக தேவனது நாளில் கணக்குக் கொடுக்க வேண்டியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்த வாழ்க்கையில் நமது கிரியைகளின் விளைவுகளை நித்தியத்தில் காண்போம். ***Testimonies for the Church, Vol. 4 p. 368 369.***

***தேவனுக்கென்று ஒரு பயிற்சியைக் கொடுக்கத் தவறுதல்***

தேவனுடைய வழிகளைக் கைக்கொள்ளும்படி பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல பயிற்சியைக் கொடுக்க வேண்டும். தேவன் கட்டளையிட்டிருப்பவைகளை பெற்றோர்கள் செய்யாமறபோனால் ஒரு உன்னத கடமையைப் புறக்கனிக்கிறார்கள். ***Manuscript 12, 1898.***

தங்கள் விருப்பம்போல் செயல்பட சில பிள்ளைகள் விடப்பட்டிருக்கிறார்கள். மற்ற சில குழந்தைகள் அதிகமான குறைகளே சுட்டிக்காட்டப்பட்டதினால் சோர்ந்துபோயிருக்கிறார்கள். நல்லதொரு மகிழ்வளிக்கிற சூழலும், பாராட்டும் ஆதரவும் கொடுக்கப்படவில்லை. ***Manuscript 34, 1898.***

பிள்ளைகள் சரியாக வழிநடத்தப்பட்டு, அவர்களது மாம்சத்திற்கேதுவான தவறான சுபாவங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். தாய்மார்கள் ஞானத்துடனும், நிதானத்துடன் தீர்க்கமான முடிவுகளை எடுத்தும் பிள்ளைகளுக்குச் சிறந்த ஒரு பயிற்சியைக் கொடுக்க வேண்டும். தாய்மார்கள் இதை செய்தால் அநேக பாவங்கள் முளையிலேயே கிள்ளப்பட்டு தூக்கி எரியப்படும். இதை செய்யாததின் நிமித்தமாக சபைக்கு வரும் பல உபத்திரவங்களும் வராமலே இருந்திருக்கும். பிள்ளைகளை ஒழுங்குபடுத்தும் வேலையை பெற்றோர்கள் அசட்டை செய்ததினால் அநேக ஆத்துமாக்கள் இரட்சிப்பை இழப்பார்கள். வாலிபர்கள் அதிகாரத்திற்கு பணிந்து நடக்கவும்

கற்றுக்கொடுக்கப்படாததினாலும் பல ஆத்துமாக்கள் இரட்சிப்பிற்குள்ளாக வருவதில்லை. கோடாரியானது தீமையின் வேரருகேவைக்கப்பட வேண்டியுள்ளது. தவறுகளை தட்டிக்கொடுத்து ஊக்கப்படுத்துவதினாலும், பிரச்சனைவராமல் இருக்க பாவங்களை மறைப்பதினாலும், இது நடப்பதில்லை. ஆயிரக்கணக்கானோரின் ஆத்துமாக்கள் சீரழிந்து போகிறது. இந்த கடமையை அசட்டை செய்ததற்காகப் பெற்றோர்கள் தேவனிடம் என்ன பதிலை கூற முடியும். ***Testimonies for the Church, Vol. 4 p. 92.***

*பாவத்தை சகித்துக் கொள்ளும் அசட்டைத் தன்மை*

பிள்ளைகள் விழிப்புடனும் கவனத்துடனும் வழிநடத்தப்பட வேண்டும். எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு மும்முரமாகச் செயல்பட வேண்டும். பிள்ளைகளின் இதயங்களையும் சிந்தைகளையும் ஆட்கொள்ளச் சாத்தான் பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கிறான். தேவ ஆவியானவரை அவர்களது இதயங்களிலிருந்து வெளியே தள்ளிவிட வகை தேடிக்கொண்டிருக்கிறான். இந்த காலத்து வாலிபர்களின் நிலை, நாம் கடைசி காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கான பெரிய அடையாளமாக இருக்கிறது. ஆயினும் அநேகரது சீரழிவிற்கு பெற்றோரது தவறான நிர்வாகமே காரணமாக இருக்கும். கடிந்து கொள்ளப்படும்பொழுது முறுமுறுக்கும் ஆவி பெலமாக வேர்பிடித்துவிட்டது. பெரியோர்களுக்கும், அதிகாரத்திற்கும் எதிராகத் துணிந்து செயல்படும் கனியை இது கொடுத்திருக்கிறது. பிள்ளைகளின் தவறுகளைக் கண்டு பெற்றோர்கள் மகிழ்ச்சியடைவதில்லை. அவர்களது துர்குணங்கள் பெருந்துயரத்தைக் கொடுக்கின்றன. ஆயினும் பிள்ளைகளை இந்நிலைக்கு கொண்டுவந்து வட்ட அவர்களது தவறுகளைப் பார்ப்பதில்லை.

பாவத்துடனும் குற்றத்துடனும் சமரசமாக போகும் போக்கு தேவ ஆக்கினைக்குரியதாக உள்ளது. இத்தீமையின் தாக்கத்தை எவரும் சரியாக உணர்ந்துகொள்ளுவதில்லை. கிறிஸ்தவ குடும்பங்களாக தங்களை பரைசாற்றிக் கொண்டிருப்பவர்களிடையும் இத்தீமை நிலவுகிறது. ***Testimonies for the Church, Vol. 4 p. 199, 200.***

*பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவதில்லை*



1ST Proof

பிள்ளைகள் சீராக கட்டுப்படுத்தப்பட்டு சரியாக திசை திருப்பப்படுவதில்லை. ஆயிரக்கணக்கானோர் இதனால் முடமான குணங்களுடன், ஒழுக்கமற்று, நடைமுறை வாழ்க்கைக்கு தகுதியற்றவர்களாக வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். தங்களது நேரத்தையும், உணர்வுகளையும், திறமைகளையும் விருப்பம்போல் செலவிட விடப்படுகிறார்கள். இத்தாலந்துகள் அசட்டை செய்யப்படுவதற்கான காரணம் பெற்றோர்களின் வாசலருகே நிற்கிறது. தேவனுக்கென இவைகள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். பிள்ளைகளை சரியாக வழிநடத்தும் பொறுப்பை ஏற்ற வேலைக்காரர்களாக பெற்றோர்கள் இருக்கிறார்கள். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த ஆத்துமாக்கள் தேவனை மகிமைப்படுத்தாமல் போனதற்கு எஜமானிடம் என்ன பதிலைச் சொல்லுவார்கள். ***Testimonies for the Church, Vol. 5 p. 326.***

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நேசித்ததாக நினைத்தார்கள். ஆனால் பிள்ளைகளின் மோசமான விரோதிகளாக இருந்திருக்கிறார்கள் என்பது நிருபணமாகிறது. தீமையை கட்டுப்படுத்தாமல் விட்டுவிட்டார்கள். தங்கள் பிள்ளைகள் பாவங்களை வைத்துக்கொள்ளும்படி அனுமதித்துவிட்டார்கள். விரியன் பாம்பைக்கூட வைத்திருப்பதற்கு இது சமமாக இருக்கிறது. இந்த விரியன் தன்னை வைத்திருப்பவரைமட்டும் கடிக்காமல் அவரோடு தொடர்புடைய எல்லோரையும் கடித்துவிடும். ***Fundementals of Christion Education, p. 52, 53.***

*துணிகரமான தவறுகளை கண்டுகொள்ளாமல் இருத்தல்*

ஒழுக்கத்தின் தரத்தை உயர்த்த பாடுபடுவோருடன் சேர்ந்து பெற்றோர்கள் பணியாற்ற வேண்டும். முழு ஆத்துமத்துடனும், இதயத்துடனும், தேவ பயத்துடனும் பிள்ளைகளின் தவறுகளை திருத்த வேண்டும். ஆனால் அநேக பெற்றோர்கள் இதை செய்வதில்லை. “பிள்ளைகளைக் காட்டிலும் என் பிள்ளைகள் மோசமானவர்கள் அல்ல” என்று சொல்லிக்கொண்டு தங்கள் மனசாட்சியை அமைதிப்படுத்திவிடுகின்றனர். தேவன் அறுவருக்கும் பெரிய தவறுகளை மறைக்கு முயலுகிறார்கள். பாவங்களை சுட்டிக்காட்டினால் பிள்ளைகள் வருத்தப்பட்டு விபரீதமாக எதையாவது செய்துவிடுவார்கள் என்று அஞ்சுகின்றனர். அதிகாரத்தை எதிர்த்து செயல்பட்டு கலகம் செய்யும்

குணம் உங்கள் பிள்ளைகளிடையே காணப்பட்டால் அதை வளரவிடுவது நல்லதல்ல. பழக்கத்தினால் அது பெலன்பெற்றுவிடும். உடனே அதை கட்டுப்படுத்துங்கள். பெற்றோர்கள் தங்கள் கடமைகளை சரிவர செய்தால் இப்பொழுது நாம் காணும் நிலை இருந்திருக்காது. இப்பெற்றோர்களில் அநேகர் தேவனிடமிருந்து பின்வாங்கியிருக்கிறார்கள். தேவனிடமிருந்து அவர்கள் ஞானம் பெற்றிருக்கவில்லை. சாத்தானின் வழிகளையும், கன்னிகளையும் அவர்களால் அறிந்துகொள்ள முடிவதில்லை. அவைகளை மேற்கொள்ளவும் முடிவதில்லை. ***Testimonies for the Church, Vol. 4 p.650, 651.***

### *செல்லம் கொடுத்து விருப்பம்போல் நடக்க விடுவது*

பெற்றோர்கள் பிள்ளைளை பெரும்பாலாக தங்கள் விருப்பத்திற்க்கு ஏற்றவைகளை செய்யவும், மனம் போன போக்கில் நடந்துகொள்ளவும் விட்டுவிடுகின்றனர். இந்த வகையில் அவர்களை பராமரிப்பது எளிதானதாக அவர்களுக்குத் தோன்றுகிறது. தவறுகளை சுட்டிக்காட்டி திருத்துவதைவிட இது அமைதியான வழியைப்போல் தெரிகிறது. ஆனால் இது கோழைத்தனம். பொறுப்புக்களை உதரித் தள்ளுவது ஒரு துன்மார்க்கமான செயல். இப்பிள்ளைகளின் தவறான சுபாவங்கள், கேடான பண்பு நலன்களாக காலப் போக்கில் மாறிவிடும். தங்கள் மீதும் குடும்பங்கள்மீதும் அவமதிப்பையும் அசிங்கத்தையும் கொண்டுவருவார்கள். சோதனைகளை சந்திக்க ஆயத்தப்படாமல் வாழ்க்கைக்குள் பிரவேசிக்கிறார்கள். பிரச்சனைகளையும் குழப்பங்களையும் தாங்க பெலனில்லாதவர்களாக இருக்கிறார்கள். எளிதில் உணர்ச்சிவசப்பட்டு, ஒழுக்கமின்றி மற்றவர்கள் தங்களுக்குப் பணிய வைக்க முற்படுவார்கள். இது நடக்காமற்போனால் உலகம் தங்களை தவறாக பயன்படுத்திக் கொள்ளுவதாக நினைப்பார்கள். உலகத்திற்கு எதிராக திரும்பிவிடுவார்கள். ***Testimonies for the Church, Vol. 4 p. 201.***

### *மாயையின் விதைகள்*

எங்கு சென்றாலும் பிள்ளை தங்கள் விருப்பம்போல் செயல்படுவதைப் பார்க்கிறோம். தேவையில்லாமல் அதிகமாகப் புகழப்படுகிறார்கள். இது பிள்ளைகளை ஏமாற்றுகிறவர்களாகவும், துணிகரமானவர்களாகவும், பயனற்றவர்களாகவும் மாற்றும். பெற்றோர்கள் தற்பெருமையின் விதைகளை தவறான நடத்தையினால் பிள்ளைகளின் மனங்களில் விதைத்து விடுகிறார்கள். பிள்ளைகள் கேட்பதையெல்லாம் கொடுப்பதினாலும் அவர்களை புகழ்ந்துகொண்டே இருப்பதினாலும் இது நடக்கிறது. எதிர்காலத்தைப் பற்றி இவர்கள் சிறிதும் யோசிப்பதில்லை. பெருமையும் சுய நலமான ஆசைகளும் தேவ தூதர்களையே பிசாசுகளாக மாற்றின. இதனால் பரலோகின் வாசல்கள் அவர்களுக்கு மூடப்பட்டது. ஆயினும் இதைப் புரிந்துகொள்ளாமல் பெற்றோர்கள் பிள்ளைகளை சாத்தானின் ஆட்களாகச் செயல்பட பயிற்சிக் கொடுக்கிறார்கள். ***Pacific Health Journal Jan 1890.***

1ST Proof

### *வாலிப பிள்ளைகளுக்கு அடிமை*

அநேக பெற்றோர்ள் தங்களது வாலிப பிள்ளைகளின் அடிமைகளாக மாறியிருக்கின்றனர். பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதும் அதிகமாக உழைத்துக் களைத்து இந்நிலைக்கு வந்து விடுகின்றனர். இவ்வாலிபர்களுக்கு சிறு பிராயத்தில் தவறான கல்வியும் பயிற்சியும் கொடுக்கப்பட்டிருந்தது. பிள்ளைகள் அதற்கேற்றபடி சுயத்தை மகிழ்வித்துக் கொள்ளுவதற்கும், தங்களை மகிமைப்படுத்திக் கொள்ளவும் வாழ்கிறார்கள். பிள்ளைகளின் இதயங்களில் விதைகளை விதைத்துவிட்டு அதன் அறுவடையை சந்திக்க கவனமாக இருப்பதில்லை. இந்த தவறான பயிற்சியில், பத்து, பன்னிரெண்டு அல்லது பதினாறு வயதை எட்டும்பொழுது தங்களை பெரிய ஞானிகளாக நினைத்துக் கொள்ளுகிறார்கள். மேதைகளாக தங்களை கற்பனை செய்து கொள்ளுகிறார்கள். பெற்றோருக்குப் பணிய வேண்டியதில்லை என்று முடிவெடுத்துவிடுகிறார்கள். அன்றாட வாழ்கையின் கடமைகளைச் செய்வது தலைகுறைவானதாகப் பார்க்கிறார்கள். சிற்றின்பங்களின் மீதான நாட்டம் அவர்களுடைய மனதைக் கட்டுப்படுத்துகிறது. சுய நலமும் பெருமையும் கலகமும் தங்கள் வாழ்க்கையில் சகப்பான விளைவுகளை அனுப்பி வைக்கும். சாத்தானின் தூண்டுதலுக்கேற்றபடி தவறான இலக்குகளை உருவாக்கிக்கொள்ளுகிறார்கள். உலகில் தங்களது பெருமையை காட்டவே விரும்புவார்கள்.

### *தவறான அன்பும் கரிசனையும்*

தேவனின் பரிசுத்த பிரமாணத்திற்கு கீழ்ப்பழயாமற்போகப், பெற்றோர்கள் பிள்ளைகளின் ஆசைகளுக்கு இணங்கிவிடலாம். பிள்ளைகளின்மீது கொண்டுள்ளப் பாசம் அவர்களை இப்படி நடக்க வைத்துவிடும். இந்த பாசத்தினால் வழிநடத்தப்பட்டு பிள்ளைகள் தவறுகளைச் செய்யும்படி அனுமதிக்கிறார்கள். இதனால் பெற்றோர்களும் தேவனுக்கு கீழ்ப்படியாதவர்களாகிறார்கள். தேவன் கட்டளையிட்டிருக்கிற ஒழுங்கையும் அறிவுரைகளையும் பிள்ளைகளுக்குக் கொடுப்பதில்லை. பெற்றோர்கள் இதை செய்து தேவ கட்டளைகளை அசட்டை செய்தால், தங்கள் ஆத்துமாக்களையும், பிள்ளைகளின் ஆத்துமாக்களையும் பெரிய ஆபத்துக்குள்ளாகத் தள்ளுகிறார்கள். ***Review and Herald, Apr. 6, 1897.***

பிள்ளைகளிடம் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கமாமல் இருப்பது ஒரு பெலவீனம். துவறான அன்பும் கரிசனையும் மற்றும் சில பெலவீனங்கள் பிள்ளைகளை கட்டுப்படுத்தாமல் அவர்கள் விரும்புவதையெல்லாம் அனுபவிக்க விடும். பயிற்சி தேவதூதர்களையும் சோகத்தில் ஆழ்த்துகிறது. ஆனால் இது சாத்தானை மகிழ்விக்கிறது. நூற்றுக்கணக்கானோரை ஆயிரக்கணக்கானோரை தன்னுடைய வழிக்குள்ளாகக் கொண்டு வருகிறது. இதற்காகவே பெற்றோரின் கண்களை குருடாக்குகிறான். உணர்வுகளை மந்தப்படுத்துகிறான். மனங்களை குழப்புகிறான். தங்களது பிள்ளைகள் அன்பானவர்களாகவும், கீழ்ப்படிபவர்களாகவும் மகிழ்ச்சியூட்டுபவர்களாகவும் இல்லை என்பதை பார்க்கிறார்கள். ஆயினும் குடும்பத்தில் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாகிறது. இது பெற்றோரது வாழ்க்கையை விஷமானதாக மாற்றி, பிள்ளைகளின் துர்கிரியைகளினால் மனம் நொந்து போகும்படி செய்துவிடும். இதனுடன் கூட சாத்தான் பக்கமாக சேரும் நபர்களின் தொகையும் அதிகமாகிறது. இவர்களை சாத்தான் வஞ்சித்து அழிவிற்கு கொண்டு சென்று விடுவான். ***Testimonies for the Church, Vol. 1, p. 393.***

### *கீழ்ப்படிதலை பெற்றுக்கொள்ளத் தவறினால்*

நன்றி இல்லாது நடக்கும் பிள்ளைகளுக்கு உணவும், உடையும் தரப்பட்டு திருத்தப்படாமல் விடப்பட்டால் தங்களது தீமையின் பாதையில் செல்ல அதிக அதிக துணிச்சலுடன் செயல்படுவார்கள். இப்படியாக பிள்ளைகளுக்கு ஏதுவாகச் செயல்படும் பெற்றோர்கள் பிள்ளைகளின் துன்மார்க்கத்தில் பங்குள்ளவர்களாகிவிடுகிறார்கள். இப்பிள்ளைகள் பெற்றோருடன் இருப்பதைப்போல், துன்மார்க்கருடன் இருந்தாலும் எந்த பாதிப்பையும் கொண்டு வராது. பிள்ளைகள் ஏற்கனவே துன்மார்க்கராக மாறியிருக்கிறார்கள். கிறிஸ்தவ இல்லங்களில் இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு மற்றவர்களையும் கெடுத்துவிடுவார்கள். துன்மார்க்கத்தின் இந்த காலத்தில், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தீமையை கண்டிப்பதில் ஸ்திரமாக நிற்க வேண்டும். வழிவிலகியுள்ளப் பிள்ளைகளின் பிசாசிற்கேதுவான செயல்களைச் சுட்டிக்காட்ட வேண்டும். தீமை செய்யும் வாலிபர்களை நல்லவர்களை நடத்துவதுபோல நடத்தக் கூடாது. சமாதானத்தைக் குலைப்பவர்களாகவும் நண்பர்களைக் கெடுப்பவர்களாக இருக்கும் அவர்களை, நடத்த வேண்டும்.

1ST Proof

### *சொந்த விருப்பங்களின்படி செய்ய விடுதல்*

வாலிபர்களை தங்களது சொந்த விருப்பங்களின்படி செயல்பட விட்டுவிடுவதே இன்றைய சமுதாயம் விரும்புகிறது. ***Messages to Young People, p. 373, 374.***

பிள்ளைகளை அவர்களது போக்கின்படிவிட்டு அவர்களது ஆசைகளையெல்லாம் நிறைவேற்றிவிட்டால் தங்கள் மீது அன்பு செலுத்துவார்கள் என்று பெற்றோர்கள் நினைக்கின்றனர். இது பெரிய தவறு. இப்படியாக கையாளப்படும் பிள்ளைகள் ஆசைகளை கட்டுப்படுத்தாதவர்களாக வளருகிறார்கள். விட்டுக்கொடுக்கும் மனதில்லாமல், சுயநலத்துடன் செயல்பட்டு கடுமையானவர்களாக இருப்பார்கள். தங்களுக்கும் தங்களைச் சுற்றியிருப்பவர்களுக்கும் ஒரு சாபமாக விளங்குவார்கள். ***Testimonies for the Church, Vol. 1, p. 393.***

### *தவறான மனப்பான்மையை வளர விடுதல்*

குழந்தைப் பருவத்தில் கற்றுக் கொண்ட பாடங்கள் பயனற்றுப் போவதில்லை. அப்பாடங்கள் நல்லவைகளாகவும் இருந்திருக்கலாம். தீயப் பாடங்களாகவும் இருந்திருக்கலாம். இதன்படி வாலிபத்திலும் குணம் உருவாகிறது. நுன்மையானதாக இருக்கக்கூடும் அல்லது தீமையானதாகவும் இருக்கக்கூடும். வீட்டில் தவறாக பாராட்டப்பட்டு புகழப்படலாம். உலகத்தை ஒவ்வொருவரும் தனித்தனியே சந்திக்க

வேண்டியுள்ளது. இல்லங்களில் செல்லம் கொடுக்கப்பட்டு கெடுக்கப்பட்டவர்கள், வெளியில் மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற கடினமான பாடத்தை தெரிந்துகொள்ள வேண்டியிருக்கும். இதை அவர்கள் மனங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்தாலும், பெரும் சங்கடத்திர்குள்ளாகி இப்பாடத்தைக் கற்றுக் கொள்ளுவார்கள். ஒவ்வொரு நாளும் இந்த அனுபவங்களை பெறுவார்கள். நடைமுறை வாழ்க்கையில் அவர்களது உண்மையான நிலை என்ன என்பதை அப்பொழுது புரிந்துகொள்ளுவார்கள். மேல் அதிகாரிகளால் கடிந்துகொள்ளப்படுவார்கள். ஏமாற்றங்களை சந்திப்பார்கள். அவர்களது குறைகளும் தெளிவாக மற்றவர்களால் சுட்டிக்காட்டப்படும். அநேக நேரங்களில் தாழ்த்தப்படுவார்கள். தங்களது நிலையைப் புரிந்து கொண்டு அதை ஏற்பார்கள். இது மிகவும் கடுமையான அனுபவமாக இருக்கும். வாலிபத்தில் சரியாக பயிற்றுவிக்கப்பட்டிருந்தால் இதை சந்திக்க வேண்டிய அவசியமே இருந்திருக்காது.

சரியான ஒழுக்கமில்லாத பெரும்பாலானோர் உலகத்திற்கு எதிராகவே செயல்படுவதைப்போல வாழுவார்கள். அவர்களின் நோக்கங்களும் திட்டங்களும் உலகத்திற்கு எதிர்மறையானதாக இருக்கும். வெற்றிபெற வேண்டிய இடங்களில் தோல்வியைச் சந்திப்பார்கள். உலகம் தங்களை பகைக்கிறது என்று நினைத்துக் கொண்டு அதன்மேல் பகையை வளர்த்துக் கொள்ளுவார்கள். உலகம் அவர்களை பாராட்டுவதில்லை என்பதற்காகவும், அவர்களை தட்டிக் கொடுத்து ஊக்குவிப்பதில்லை என்பதைற்காகவும் உலகத்தை வெறுக்கிறார்கள். சூழ்நிலையின் நிமித்தமாக ஒரு சில வேளைகளில் தங்களை தாழ்த்துவார்கள். உண்மையான மனமாற்றம் இருக்காது. விரைவில் அவர்களது சுயரூபம் தெரிந்துவிடும்.

தங்களுடன் தொடர்புகொள்ளுபவர்களுடன் யுத்தம் செய்யும் வகையில் ஏன் பெற்றோர்கள் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். ***Testimonies for the Church, Vol. 4, p. 201, 202.***

***சமுதாயத்தை பின்பற்ற பயிற்சி***



1ST Proof

சமுதாயத்தைப் பின்பற்றும்படி பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்கப்படக் கூடாது. பிள்ளைகள் மோலேகுக்கு பலியிடப்படக் கூடாது. தேவ குடும்பத்தின் அங்கத்தினராக மாற வேண்டும். கிறிஸ்துவின் தயவினால் பெற்றோர்கள் நிரப்பப்பட வேண்டும். அவர்களுக்குக் கீழாக வைக்கப்பட்டிருக்கும் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக வேலை செய்ய வேண்டும். உலகத்தின் பழக்க வழக்கங்களில் மூழ்கிவிடக் கூடாது. விருந்துகள், விழாக்கள், இசை நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கலந்து கொள்ளும்படி பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாது. இவைகளை நடத்தவும் கூடாது. அஞ்ஞான மார்க்கத்தாரே இவைகளின் வழியில் நடக்கிறார்கள். ***Review and Herald, Mar 13, 1894.***

***சுயநலமான இன்பங்களைத் தேட அனுமதித்தல்***

அநேக வாலிபர்கள் சமுதாயத்திற்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாக இருந்திருக்கலாம். தேவனையும் கனப்படுத்தியிருக்கலாம். ஆயினும் எது வெற்றிகரமான ஒரு வாழ்க்கையின் அம்சங்கள் ஆரம்பத்திலிருந்து சரியாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த நல்ல யோசனைகளுடன் அவர்களும் வாழ்க்கையை ஆரம்பித்திருக்க வேண்டும். பகுத்தறிவும், நீதியின் கோட்பாடுகளும் தங்களை கட்டுப்படுத்த அனுமதிக்கவில்லை. மாறாக சுயத்தை திருப்திபடுத்தும் இன்பங்களையே நாட, தங்கள் ஆசைகளின்படி நடந்துகொள்ளும்படியாக ஒரு பயிற்சியைப் பெற்றார்கள். உண்மையான சந்தோஷமும் இதுவே என நினைத்தார்கள். சுய நலத்தின் பாதை பெருந்துயரைே கொண்டு வரும். சமுதாயத்திற்கு பயனற்றவர்களாகவும் தேவனுக்கும் பயனற்றவற்களாகவும் இருக்கிறார்கள். இவ்வுலகிலும் வரப்போகும் பரலோகிலும் வெற்றிபெறுவதற்கான சாத்திம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இது ஒரு பரிதாப நிலை இன்பங்களின்மேல் கொண்டுள்ள சுயநலமான அன்பினால் இம்மையையும் மறுமையையும் இழக்கிறார்கள். ***Youth's Instructor July 20, 1893.***

***வீட்டில் தேவபக்தி இருப்பதில்லை***

கிறிஸ்தவ குடும்பங்களாகத் தங்களைப் பறைசாற்றிக் கொள்ளுபவர்கள் வேத வார்த்தைகளை கண்ணும் கருத்துமாகப்

படிப்பவர்களாக இருக்க வேண்டும். வேதம் எவைகளை அனுமதிக்கின்றது எவைகளைத் தடுக்கிறது என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். ஆனால் இக்குடும்பங்களில் வேத வார்த்தைகள் படிக்கப்படுவதில்லை. அதன் அறிவுரைகள் பின்பற்றப்படுவதில்லை. பிள்ளைகள் தேவ பயத்துடனும் தேவகடிந்துரையுடனும் வளர்க்கப்படுவதில்லை. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்கள் இல்லங்களில் தேவ பக்தியை அப்பியாசிப்பதில்லை. கிறிஸ்தவ பெற்றோர்கள் ஒரு தாழ்ந்த தரத்துடனே திருப்தியடைந்துவிடுகின்றனர். இதனால் அவர்களால் பிள்ளைகளுக்குக் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக இருக்க முடிவதில்லை. கிறிஸ்துவின் குணத்திற்கு ஒத்த ஒரு குணத்தை பெற்றிருப்பவர்கள் மீதுமட்டுமே தேவ முத்திரை கொடுக்கப்படும். ***Review and Herald, May 21, 1895.***

***பெற்றோர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தால்***

பெற்றோர்களின் தவறான நடத்தை தேவனது பார்வையில் சரியானதாக இருப்பதில்லை. இன்றைக்கு நூற்றுக் கணக்கான பிள்ளைகள் சாத்தானின் பக்கமாக சேர்ந்துள்ளனர். தேவனைவிட்டு பிரிந்து தவறான நோக்கங்களுடன் செயல்படுகிறார்கள். கீழ்ப்படியாதவர்களாகவும், நன்றிகெட்டவர்களாகவும் பரிசுத்தமில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த பாவத்திற்கான காரணம் பெற்றோர்களது வாசலருகே இருக்கிறது. கிறிஸ்தவப் பெற்றோர்களே ஆயிரக்கணக்கான பிள்ளைகள் பாவங்களில் அழிந்து கொண்டிருக்கிறார்கள். இல்லத்தைச் சரியாக நிர்வகிக்காததால் இந்த நிலை வந்துவிட்டது. இஸ்ரவேலின் சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்குப் பெற்றோர்கள் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். மேகஸ்தம்பத்திற்குள்ளும் அவரது மகிமையே மறைக்கப்பட்டிருந்தது. அவருக்கு பெற்றோர்கள் கீழ்ப்படிந்திருந்ததால், அநேக குடும்பங்களில் இன்று காணப்படும் அபல நிலை வந்திருக்காது. ***Review and Herald, Jan 6, 1899.***

***அதிகாரம் - 35***

***பெற்றோர்கள் நல்ல குணங்களை உருவாக்குவது எப்படி***



1ST Proof

***இதற்காக நேரம் எடுத்து சிந்தியுங்கள்***

உதவியற்ற ஒரு குழந்தையை தேவன் பெற்றோரது கரங்களில் வைக்கிறார். அக்குழந்தை எதையுமே அறியாததாக இருக்கிறது. தேவன் மீது அன்பு செலுத்த அதற்கு கற்றுத்தரப்பட வேண்டும். தேவ பயத்திலும் தேவ கடிந்துரையிலும் அது வளர்க்கப்பட வேண்டும். தெய்வீக மாதிரியின்படி உருவாக்கப்பட வேண்டும்.

பிள்ளைகளுக்கு இந்த பயிற்சியைக் கொடுக்கும் வேலையின் முக்கியத்துவத்தைப் பெற்றோர்கள் பார்க்க வேண்டும். நித்தியத்திற்குரியவைகள் இதில் அடங்கியுள்ளன என்பதை பார்க்கும்பொழுது சிறந்த ஒரு முயற்சியை இதற்கென்று எடுப்பார்கள். ***Signs of the Times, Mar 16, 1891.***

***கோட்பாடுகளைப் புரிந்து கொள்ளுதல்***

குழந்தைப் பருவத்தில் உண்டான பழக்கங்களும், கற்றுக் கொண்ட பாடங்களும் குணத்தை உருவகித்துப் பிள்ளளையின் எதிர்காலத்தைத் திசை திருப்புகிறது. பிற்காலங்களில் கொடுக்கப்படும் அறவுரைகளை விடவும், பயிற்சியைவிடவும் இந்த சிறு பிராய அனுபவங்கள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

பெற்றோர்கள் இதை மனதில் கொள்ள வேண்டும். பிள்ளைகளின் பராமரிப்பிலும் பயிற்சியிலும் இவ்வடிப்படை கூறுகளை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும். சரீரமும், மனமும், ஒழுக்கமும் ஆரோக்கியத்துடன் வளர்க்கப்பட வேண்டும். ***The Ministry of Healing p. 380.***

***மேலோட்டமாக செயல்படாதீர்கள்***

எல்லா காரியங்களுமே மேலோட்டமாகவே கையாளப்படும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். குழந்தைப் பருவத்திலிருந்தே ஒரு மேலோட்டமான பயிற்சியையே பிள்ளைகள் பெற்றிருக்கிறார்கள். எனவே உறுதியான குணம் படைத்தவர்களை நாம் பார்ப்பதில்லை. சரியும் மணலின்மேல் அவர்களது குணம் கட்டப்பட்டிருக்கிறது. சுய மறுப்பையும் சுய கட்டுப்பாட்டையும் அவர்கள்

பெற்றிருப்பதில்லை. தவறான வளர்ப்பினால் நடைமுறை வாழ்க்கைக்கு தகுதியில்லாதவர்களாக கெடுக்கப்பட்டிருக்கின்றனர். இன்பங்களின் மேல் கொண்டுள்ள நாட்டமே பிள்ளைகளைக் கட்டுப்படுத்துகிறது. செல்லம் கொடுக்கப்பட்டும் விருப்பம்போல் இருக்க விடப்பட்டும் சீரழிக்கப்பட்டிருக்கிறார்கள். ***Health Reformer Dec. 1872.***

### *ஜெபத்தினாலும் விசுவாசத்தினாலும் பிள்ளைகளைப் பெலப்படுத்துங்கள்*

தங்களைக் குறித்து எதையுமே அறியாத, எதையுமே செய்ய முடியாதப் பிள்ளைகளை உலகினுள் கொண்டுவந்திருக்கிறீர்கள். அவர்களது எதிர்கால மகிழ்ச்சிக்கு நீங்களே பொறுப்பாளிகள். அவர்களது நித்தியத்திற்கான வாழ்வும் உங்கள் கரங்களில் உள்ளது. தேவனுக்கென்று இப்பிள்ளைகளை நீங்கள் பயிற்றுவிக்க வேண்டும். இதை உணர்ந்தாலும் உணராமல் இருந்தாலும் இப்பாரம் உங்கள்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. எதிராளியானவனின் வருகையை உடனே கண்டுகொள்ள கவனமாக இருங்கள். அவனுக்கு எதிராக ஒரு தரத்தை எழுப்புங்கள். ஜெபத்தினாலும் விசுவாசத்தினாலும் அவர்களைச் சுற்றி ஒரு கோட்டையைக் கட்டுங்கள். கவனமாக கண்காணியுங்கள். ஒவ்வொரு நொடிக்கும் சாத்தான் அவனது தாக்குதல்களை நமக்காக வைத்திருக்கிறான். உண்மையுடன் வேலை செய்வதிலிருந்து ஒரு வினாடிக் கூட நாம் ஓய்வு எடுக்க முடியாது. உங்கள் நிலையில் ஒரு கனம்கூட தூங்கிவிடக் கூடாது. இது மிக முக்கியமான ஒரு போராட்டம். நித்தியத்திற்கான பின்விளைவுகள் இதில் அடங்கியுள்ளன. உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் வாழ்வையும் சாவையும் நிர்ணயிப்பதாக இது உள்ளது. ***Testimonies for the Church, Vol. 2, p. 397, 398.***

### *உங்கள் நிலையில் உறுதியாக இருங்கள்*

பெற்றோர்கள் அநேக வேளைகளில் பிள்ளைகளை அதிகமாக நம்பிவிடுகிறார்கள். பிள்ளைகள் தங்கள் தவறுகளை பெற்றோர்களிடமிருந்து மறைத்துவிடுகிறார்கள். பெற்றோர்களே பிள்ளைகளை கவனத்துடன் கண்காணியுங்கள். அறிவுறுத்துங்கள், கடிந்துகொள்ளுங்கள் ஊக்கப்படுத்துங்கள். உட்காரும்பொழுதும், நிற்கும் பொழுதும் போகும்பொழுதும் வரும்பொழுதும் இதை செய்யுங்கள். ஒவ்வொரு வரியாக ஒவ்வொரு கோட்பாட்டையும் கற்றுத் தாருங்கள். இங்கு கொஞ்சமும் அங்கு கொஞ்சமுமாக போதியுங்கள். இளம் பிராயத்திலும் உங்கள் பிள்ளைகளைக் கட்டுப்படுத்துங்கள். அநேக பெற்றோர்கள் இதை செய்ய தவறுகிறார்கள். இது பரிதாபத்திற்குரியது. பிள்ளைகளின் பராமரிப்பில் உறுதியான நிலைமாறாத முடிவுகளை அவர்கள் எடுப்பதில்லை. ***Testimonies for the Church, Vol. 1, p. 156.***

### *பெருமையுடன் விலையுயர்ந்த விதைகளை விதையுங்கள்*

***"ஒரு மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்".*** பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் நட்பை சம்பாதியுங்கள். பொருமையாக விலைமதிப்பற்ற விதைகளை அன்புடன் விதையுங்கள். திருப்தியுடன் உங்கள் வேலையை செய்யுங்கள். உங்கள் வேலையின் கடினத்தைக் குறித்து முறையிட்டுக்கொண்டிருக்காதீர்கள். பொருமையான, அன்பான கிறிஸ்துவைப் போன்ற முயற்சிகளினால் ஒரு ஆத்துமாவையாகிலும் நீங்கள் ஆதாயப்படுத்திக் கொண்டால் உங்கள் வாழ்வு வீணானதாக இருக்காது. உங்கள் நடத்தையிலும் முகத்திலும் ஒரு சோர்வையும் வெளிப்படுத்தாதீர்கள். ஒரு குணத்தை உருவாக்கும் வேலை உங்களது கரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு குணத்தை உருவாக்கும் வேலை உங்களது கரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனின் உதவியுடன் அவரது திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்து அநேகரை ஆதாயப்படுத்தும் வேலையை செய்ய ஒரு நபரை நீங்கள் ஆயத்தப்படுத்துகிறீர்கள். நல்ல பழக்கங்களை பெற்றுக் கொள்ளவும், நல்ல இயல்புகளை வளர்த்துக் கொள்ளுவதற்கும் ஒரு உயரிய தரத்திற்கு உங்கள் பிள்ளைகளை உயர்த்துங்கள். அவர்களது குறைகளை பொருமையுடன் கையாளுங்கள். தேவன் உங்களை பொருமையுடன் கையாண்டு கொண்டிருக்கிறார். அவருடைய மகிமைக்கென்று நீங்கள் கனிகள் கொடுக்கும்படி உங்களை பராமரித்துக் கொண்டிருக்கிறார். குறைவுபடும் பண்புகளை வளர்த்துக் கொள்ள பிள்ளைகளை ஊக்கப்படுத்துங்கள். ***Manuscript 9, 1893.***

### *கட்டளைகளுக்கு பணிய கற்றுகொடுங்கள*

1ST Proof

பெற்றோர்களே விவேகத்துடன் இருங்கள். சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதை த பிள்ளைகளுக்கு சொல்லிகொடுங்கள். ***Manuscript 136, 1898.***

ஒரு பிள்ளையை அதன் விருப்பத்திற்கு விட்டு, திருத்தாமல் அதற்கேற்றபடி நாம் செயல்படுவது அன்பல்ல. அதை தண்டிப்பதற்கு உங்கள் மனம் இடங்கொடுக்காத வகையில் நீங்கள் அதை நேசிப்பதாக நினைத்துக் கொள்ளலாம். தன்னையும் மற்றவர்களையும் உபத்திரவப்படுத்தும் பண்புகளை வளர்த்துக்கொள்ளுவதை அனுமதிப்பது எப்படி அன்பாகும். இப்படிப்பட்ட அன்பை வீசி எரியுங்கள். உண்மையான அன்பு ஒரு ஆத்துமத்தின் நித்திய நன்மைக்காக செயல்படும். தற்காலிக இன்பத்தைமட்டும் பாராது. ***Revieuw and Herald July 16, 1895.***

பிள்ளைகளை பெற்றோர்கள் உலகினுள் கொண்டு வருகிறார்கள். எந்த ஒரு கிறிஸ்தவ பயிற்சியையும் கலாச்சாரத்தையும் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்காமல் அவர்களை அசட்டை செய்ய பெற்றோர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது. பெற்றோர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும். பிள்ளைகட்கு கட்டுப்பாட்டை கற்றக்கொடுங்கள். அவர்கள் பணிந்துபோக வேண்டும் என்பதை சொல்லிக் கொடுங்கள். ***Manuscript 9, 1893.***

***சரீரம், மனம், ஆவிக்குரிய வளர்ச்சி***

சம நிலையான ஒரு குணம் உருவாக்கப்பட வேண்டும். சரீரமும், மனமும், ஆவிக்குரிய கூறுகளும் சேர்ந்தாற்போல் வளர்க்கப்பட வேண்டும். பிள்ளைகள் கண்காணிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டும். முழுமையான ஒரு வளர்ச்சியைப் பெற அவர்கள் ஒரு ஒழுங்கிற்குள்ளாக கொண்டுவரப்பட வேண்டும். ***Testimonies for the Church, Vol. 4, p. 197, 198.***

இயேசுவானவரின் சரீர வளர்ச்சியையும் ஆவிக்குரிய வளர்ச்சியையும் நாம் படிக்கிறோம். ***"இயேசுவானவர் ஞானத்திலும் வளர்த்தியிலும் அதிகதிகமாய் விருத்தியடைந்தார்."*** குழந்தை பருவத்திலும் வாலிபத்திலும் சரீர வளர்ச்சி கவனிக்கப்பட வேண்டும். உணவு, குடி, உடை, உடற்பயிற்சி ஆகியவற்றில் பிள்ளைகள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். இவ்விஷயங்களில் பிள்ளைகள் நல்ல பழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதனால் நல்ல



1ST
Proof

ஆரோக்கியத்திறகான ஒரு சீரான அடித்தளம் போடப்படுகிறது. சரீரம் விசேஷமாக கவனிக்கப்பட வேண்டும். சரீரத்தின் வல்லமைகள் பெலவீனமாக்கப்படக் கூடாது. முழுமையாக வளர்க்கப்பட வேண்டும். இதனுடன் கூட பிள்ளைகளும் வாலிபரும் நல்ல ஆவிக்குரிய பயிற்சியையும் பெற்றிருக்க வேண்டும். கிறிஸ்துவைப்போல் ஆவியில் பெலனடைந்தவர்களாகத் திகழுவார்கள். ***Youth's Instructor July 27, 1893.***

***ஆரோக்கியம் அறிவையும் ஒழுக்கத்தையும் சார்ந்திருக்கிறது***

பிள்ளைகள் ஒழுக்கமாக நடந்துகொள்ள தங்களுக்கிருக்கும் பொறுப்பை உணர வேண்டும். இது அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிற ஒரு தேவ நியமணமாக இருக்கிறது. தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது எப்படி என்பதை அவர்களது மனதிலும் இதயத்திலும் நீங்கள் பதிய வைக்க வேண்டும். தாங்கள் பெற்றிருந்த சரீரங்களைக் கொண்டு இதை அவர்கள் செய்தாக வேண்டும். நல்ல அரோக்கியம் அறிவாற்றலுக்கும் ஒழுக்கத்திற்கும் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது. ஆரோக்கியத்தையும், இதயத்தில் தூய்மையையும் பெற்றிருந்தால் நல்ல வகையில் வாழுவதற்கும், ஒரு ஆசீர்வாதமாகத் திகழுவதற்கும் ஆயத்தப்பட்டிருப்பார்கள். மனதை சரியான வதத்திலும், சரியான திசையிலும் சம நிலைப்படுத்திக் கொள்ளுவது மிக முக்கியமான வேலை. ஊபத்திரவங்களை சந்திக்கும் சமயங்களில் அவர்கள் எடுக்கும் முடிவுகள் இதை சார்ந்தே இருக்கும்.

ஆகவே பெற்றோர்களின் மனங்களும் தெளிவாக இருந்தால் அவசியமானதாக இருக்கிறது. தேவையில்லாத கவலைகளினாலும் குழப்பங்களினாலும் பாராப்பட்டிருக்கக் கூடாது. நிதானத்துடன் செயல்படுவதற்கு இது ஏதுவாக இருக்கும். சரியான ஞானமும், அன்பும், பிள்ளைகளின் ஒழுக்கத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் முதலிடம் கொடுக்கும். ***Health Reformer Dec. 1872.***

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கட்டுப்படுத்துவது கடினமானதாக மாறிவிட்டது என்று யோசிக்கலாம். அவர்கள் பிள்ளைகளை தவறாக வழிநடத்திய விதமே பெரும்பாலான சூழ்நிலைகளில் இதற்கு காரணமாக இருக்கும். எப்படிப்பட்ட

உணவுகளை நாம் பிள்ளைகளுக்கு முன்பாக வைக்கிறோம் என்பதும் முக்கியம். துகாத உணவுகள் தவறான உணர்வுகளையும் ஆசைகளையும் தூண்டும். மிருகப் பண்புகளை பெலப்படுத்தும். அவர்களது அறிவாற்றலும் ஒழுக்கமும் பெலவீனப்படும். ***Pacific Health Journal Oct. 1897.***

### *மனதிற்கும் நல்ல உணவு தேவை*

தரம் இல்லாத எதற்கும் மனம் இடம் கொடுக்கக் கூடாது. இதற்கேற்ற விதத்தில் பிள்ளைகளின் ஆசைகளையும் நாட்டங்களையும் சீர்படுத்துங்கள். தரம் தாழ்ந்தும் எந்த சிந்தனையோ செயலோ அனுமதிக்கப்படக் கூடாது. கிறிஸ்துவின் கிருபையே தீமைக்கெதிரான ஒரே மருந்து. தீமையை அது நெருங்கிவிடாமல் நிறுத்துகிறது. நம்மைச் சுற்றி தீமையும் இருக்கிறது நன்மையும் இருக்கிறது. இவைகளில் எது உங்கள் பிள்ளைகளின் மனங்களை நிரப்ப வேண்டும். இந்த முடிவை நீங்களே எடுக்கிறீர்கள். தற்பெருமையும் தேவ பயமில்லாத நடத்தையுமே நம்மை சூழ்ந்து இருகிகறது. மாசற்ற தூய்மையான எண்ணங்களே பிள்ளைகளின் சிந்தைகளை ஆட்கொள்ள வேண்டும். சரீரம் ஆரோக்கியமாக இருக்க நல்ல உணவு தேவை என்பதைப் படித்தோம். மனமும் ஆரோக்கியத்துடனும் பெலத்துடனும் இருக்க நல்ல உணவு தேவை. தங்களைப் பற்றி சிந்தியாமல், தங்களுக்கு மேலானவைகளைப் பற்றி பிள்ளைகளை சிந்திக்க வையுங்கள். பரிசுத்தமான, தூய்மையான ஒரு சூழலில் வசிக்கும் மனம் சுய நலத்தை நாடாது. பயனில்லலாதவைகளையும் மாயமானவைகளையும் தேடாது. ***Letter 27, 1890.***

உண்மையானவைகளும், இயற்கையானவைகளும், நிரந்தரமானவைகளும் இன்று உயர்த்தப்படுவதில்லை. மாறாக உண்மையற்றவைளும் மேலோட்டமானவைகளுமோ பெரிதாக உயர்த்தப்படுகின்றன. தவறான திசையில் வழிநடத்துபவைகளிலிருந்து மனம் காக்கப்பட வேண்டும். சிந்தையின் ஆற்றலை கூட்டாத தரமில்லாத பயனற்ற கதைகள் ஒரு இடையூராக இருக்கக் கூடாது. மனம் எதை உட்கொள்ளுகிறதோ சிந்தையும், யோசனையும் அதன்படி இருக்கும். ***Testimonies for the Church, Vol. 5, p. 544.***



1ST
Proof

### *சிறந்த அறிவாற்றல் மட்டுமே போதுமானதல்ல*

உங்கள் பிள்ளையின் சிறப்பான அறிவாற்றல் உங்களை மகிழ்விக்கலாம். ஆயினும் பரிசுத்தப்படுத்தப்பட்ட ஒரு இதயத்தின் கட்டுப்பாட்டில் அது இயங்க வேண்டும். இல்லையெனில் தேவ திட்டங்களுக்கு நேர் எதிராகவே செயல்படும். சிருஷ்டிப்பினாலும் மீட்பினாலும் தேவன் நம்மீது கோரும் உரிமைகளை நாம் ஆழமாக உணர்ந்துகொள்ள வேண்டும். இது நடந்தால்மட்டுமே வெற்றியைத் தரும் குணத்தையும், விவேகத்தையும், ஆழ்ந்த அறிவையும் நாம் பெற முடியும். இவ்வுலகிலும் வெற்றியடைவோம், வரும் வாழ்க்கையிலும் வெற்றி அடைவோம். ***Review and Herald, Apr. 23, 1889.***

### *குண விருத்தியில் மேண்மையடையுங்கள்*

பிள்ளைகளுக்கு நன்றாக உழைக்கக் கற்றுக் கொடுத்தால் அபாயத்தில் பாதியளவை கடந்துவிடுவோம். ஒரு வேலையும் இல்லாமல் சோம்பலாக இருப்பது எல்லா சோதனைகளுக்கும் வழிநடத்தும். துணிகரமாக இல்லாதபடி எளிமையாக நடந்துகொள்ள பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்போம். ஊதவி செய்யும் மனதுடனும் தற்தியாகத்துடனும் இருந்து, பொருளாதாரத்தைச் சீராக நிர்வகிக்கும்படியாகப் பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும். அதிகமாகச் செலவுகளைச் செய்யாதபடியும் அதே நேரத்தில் கஞ்சத்தனத்தைக் காட்டாமல் இருப்பதே நல்ல பொருளாதாரம். ஏல்லாவற்றிற்கும் மேலாக தேவன் அவர்கள்மீது உரிமை கோருவதை நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்திலும் அவர்களது விசுவாசத்தை நடைமுறைப்படுத்தவும் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். தேவனை முதன்மையா நேசித்து மனிதர்களின்மீதும் அன்பு செலுத்த வேண்டும். வாழ்வை மகிழ்வூட்டும் கரிசனையாக சிறு உதவிகளையும் செய்ய மறந்துவிடக் கூடாது. ***Pacific Health Journal May, 1890.***

### *பரலோக ஞானத்துக்கு ஜெபியுங்கள்*

பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சரியான ஒரு பயிற்சியைக் கொடுக்க வேண்டும். இதற்காக தேவனிடம் ஞானத்திற்காகவும் உதவிக்காகவும் ஜெபிக்க வேண்டும். அவர் ஏற்றுக் கொள்ளக் கூடிய

பிள்ளைகள் வளர்ந்தகொள்ள வேண்டும். உலகம் போற்றுவதற்கான ஒரு கல்வியைக் கொடுக்க பெற்றோர்கள் பிரயாசப்பட வேண்டியதில்லை. அழகான ஒரு கணத்தை உருவாக்கிக் கொள்ளவே ஒரு நல்ல கல்வி கொடுக்கப்பட வேண்டும். தேவ அங்கிகரிப்பைப் பெறும் குணமாக அது இருக்க வேண்டும். இள மனங்களை சரியாகக் கையாளும் ஞானத்தைப் பெற்றுக்கொள்ள அதிகமான ஜெபமும் வேத வாசிப்பும் தேவை. பேற்றோர்கள் பிள்ளைகளை சரியாகத் திசை திருப்புவதை சார்ந்தே வாழ்க்கை அமைகிறது. ***Health Reformer Dec. 1872.***

***ஒழுக்கமான வாழ்க்கைக்கும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கும் நல்வழிகள்***

நல்ல குணங்களையுடையப் பிள்ளைகளை பெற்றோர் உலகிற்குக் கொடுக்க வேண்டும். இப்பொறுப்பை நிறைவேற்றுவதின் அசவியத்தைப் பெற்றோர்களுக்குக் கூறப்பட வேண்டும். சோதனைகளை மேற்கொள்ள ஒழுக்கத்தைப் பெற்றிருக்ககவும், தேவனைக் கனப்படுத்தும் ஒரு வாழ்க்கையை வாழவும், சக மனிதருக்கு ஆசீர்வாதமாகவும் இருக்க வேண்டும். இப்படியாக வாழ்க்கையை துவங்குவோரை உலகத்தின் ஒழுக்கக்கேடான தீமைகள் தீட்டுப்படுத்தாது. ***Christian Temperance and Bible Hygiene.***

***சுரியாக தேர்ந்தெடுக்க கற்றுக் கொடுங்கள்***

பரலோகில் நெய்யப்பட்ட அந்த ராஜரீக வஸ்திரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள, பிள்ளைகளுக்கும் வாலிபருக்கும் சொல்லிக் கொடுக்கப்படட்டும். வெளி 19: 8. " வெண்மையான தூய்மையான வஸ்திரம்" பரிசுத்தவான்கள் எல்லோருத் தரித்துக் கொள்ளும் வஸ்திரமாக இது இருக்கும். கிறிஸ்துவின் மாசற்ற குணமே இவ்வஸ்திரம். இது இலவசமாக எல்லா மனிதருக்கும் கொடுக்கப்படுகிறது ஆயினும் இதைப் பெற்றுக் கொள்ளுபவர்களே தரித்துக் கொள்ள முடியும்.

தூய்மையான அன்பான யோசனைகளுக்குத் தங்கள் மனங்களை திறக்க பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கப்படட்டும். அன்போடு எல்லோர்க்கும் உதவட்டும். இதை செய்வதின் மூலம் கிறிஸ்துவின் அழகிய அங்கியை தரித்துக் கொள்ளுகிறார்கள். இவ்வஸ்திரம்



1^ST^ Proof

அவர்களை அன்பானவர்களாகவும் நேசிக்கப்பட தக்கவர்களாக மாற்றும். ராஜாவின் அரண்மனைக்குள் நுழைவதற்கான தகுதியாகவும் இது இருக்கிறது. ***Education, 249.***

***பாகம் - IX***

***குண வளர்ச்சியின் அடிப்படை கூறுகள்***

***அதிகாரம் - 36***

***இளம் பிராயத்தின் நன்மைகள்***

***இது முக்கியமான ஒரு கால கட்டம்***

சிறு பிராயத்திலிருந்தே பிள்ளைகளுக்கு ஒரு நல்ல பயிற்சியைக் கொடுப்பதின் முக்கியத்துவத்தை அதிகமாக விளக்கினாலும் அது தவறாகாது. குழந்தை தன் வாழ்க்கையின் முதல் ஏழு வருடங்களில் கற்றுக் கொள்ளும் பாடங்களை அடிப்படையாகக் கொண்டே அதன் குணம் உருவாகும். இதற்கு பின் எப்படிப்பட்ட பயிற்சியை பெற்றாலும் அது இரண்டாவது இடத்தையே எடுத்துக் கொள்ளும். ***Manuscript 2, 1903.***

குழந்தைப் பருவத்திலிருந்தும் பிள்ளையின் குணம் தேவ திட்டத்திற்கு இசைவாக உருவாக்கப்பட வேண்டும். திறந்துகொண்டிருக்கும் மனதிற்குள் நல்லொழுக்க நெறிகள் புகுத்தப்பட வேண்டும். ***Signs of the Times, Sep. 25, 1901.***

பிள்ளை கைக்குழந்தையாக இருக்கும் பொழுதே பெற்றோரின் வேலை துவங்க வேண்டும். உலகம் அதன் தவறான முத்திரையைப் பிள்ளையின்மேல் பதித்துவிடாதபடி அதற்கு முன்பாக, நல்ல குணத்தை பிள்ளைகள் பெற்றுக்கொள்ள வேண்டும். ***Review and Herald, Aug. 30, 1881.***

***சரியான வயது***

குழந்தையின் வாழ்க்கையின் ஆரம்ப கால வருடங்களே அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நன்மைக்கோ அல்லது தீமைக்கோ செயல்பட இந்த காலத்தில் மனம் பக்குவமடைகிறது. இந்த வருடங்களில் தீர்க்கமான வளர்ச்சி காணப்படுகிறது. அது சரியான

திசையிலும் வளரலாம், அல்லது தவறான திசையை நோக்கியும் வளரலாம். ஒரு பக்கம் பயனற்ற தகவல்கள் தெரிந்துகொள்ளப்படலாம். அல்லது மதிப்பற்ற ஞானத்தையும் அறிவையும் பெற்றுக் கொள்ளப்படலாம். நல்ல அறிவாற்றலின் பெலமும், ஞானம் நிறைந்த அறிவும், தங்கத்தைவிட மதிப்பானவைகள் தங்கத்தைக் கொடுத்தாலும் இதை வாங்க முடியாது. தங்கத்தையும், வெள்ளியையும்விட இது விலையுயர்ந்தது. ***Counsels to Parents, Teachers and Students, p. 132.***

### *மனதில் முதலில் பதிபவைகள் மறக்கப்படுவதில்லை*

குழந்தைகளோ பிள்ளைகளோ வாலிபர்களோ பெற்றோரிடமிருந்தோ அல்லது விட்டின் எந்த நபரிடமிருந்தோ பொருமையில்லாத ஒரு வார்த்தையைக் கேட்கக் கூடாது. இவ்வயதின் தாக்கங்கள் மனதில் ஆழமாக பதியும். பெற்றோர்கள் இந்த நாளிலும் பிள்ளைகளுக்கு முன்பாக எப்படியாக இருக்கிறார்களோ அதைப்போலவே பிள்ளைகள் வருகின்ற நாட்களில் இருப்பார்கள். அவர்கள் இந்த சிறு பிராயத்தில் கற்றுக்கொள்ளும் பாடங்களை மறப்பதில்லை.

இதயத்தில் பதிவானவைகள் எதிர்கால வாழ்க்கையில் காட்டப்படும். ஒரு வேளை வெளியே தெரியாதபடி புதைத்திருக்கலாம் ஆனால் அவை நீங்குவதில்லை.

### *முதல் மூன்று வருடங்களில் அஸ்திபாரம்*

தாய்மார்களே உங்கள் பிள்ளையின் முதல் மூன்று வருடங்களில் சரியான ஒரு ஒழுங்கைக் கற்றுக் கொடுக்க மறவாதீர்கள். இந்த சிறு பிராயத்திலும் தங்களுக்கென்று விருப்பங்களையும் ஆசைகளையும் வளர்த்துக்கொள்ள விடாதீர்கள். தாயானவளே பிள்ளையின் சிந்தையாக இருக்க வேண்டும். இந்த சிறு செடியையும் வளைப்பதற்கான ஏதுவான காலமாக முதன் மூன்று வருடங்கள் அமைகின்றன. இந்த கால கட்டத்தின் முக்கியத்துவத்தை தாய்மார்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நேரத்தில் தாமே அஸ்திபாரம் போடப்படுகிறது.

பெரும்பாண்மையான பெற்றோர்கள் தவறான முதற் பாடங்களையே கற்றுக் கொடுத்துவிடுகின்றனர். கிறிஸ்துவிற்காகவும்,



1ST
Proof

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும், அவர்களது நித்திய நன்மைக்காகவும் உங்கள் தவறுகளை சரி செய்து கொள்ளுங்கள். சுய கட்டுப்பாட்டையும் கீழ்ப்படிதலையும் கற்றுக்கொடுக்க ஒரு வேளை உங்கள் குழந்தை மூன்று வயதை எட்ட காத்திருந்திருக்கலாம். இப்பொழுதாவது உடனே இதை செய்யுங்கள். எதிர்காலத்தில் இதை செய்வது கடினமானதாகிவிடும். ***Manuscript 64, 1899.***

### *இது கடினமான வேலை அன்று*

தங்கள் விருப்பம்போல் செயல்படுவதையே வாழ்வின் சட்டமாகக் கொள்ளக் கூடாது என்பதை தொட்டிலிலிருந்தே பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுத்திருக்க வேண்டும். இது சரியாக நடந்தால் எதிர்காலத்தில் தேவையற்ற மனக்கசப்பும், துயரமும் குடும்பத்தில் இருக்காது. இன்றைக்கு குடும்பங்களில் நாம் பார்க்கும் போராட்டங்களும், சர்ச்சைகளும் எழுந்திருக்க வேண்டியதே இல்லை. கோபத்தைக் கட்டுப்படுத்தி, ஆசைகளையும், அடக்கிக் கொள்ளுவதை பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்பது கடினமானதில்லை. ***Paciic Health Journal Apr. 1890.***

### *இவ்வேலையைத் தள்ளிப்போடாதீர்கள்*

குழந்தையின் வாழ்க்கையின் ஆரம்ப வருடங்களில் பெற்றோர்கள் இவ்வேலையைச் செய்ய தவறிவிடுகின்றனர். பிள்ளை வளர்ந்தவுடன் இதை செய்யலாம் என்று நினைக்கின்றனர். பிள்ளைகள் குழந்தைகளாக நமது கைகளில் இருக்கும் காலமே இதை செய்வதற்கு சரியான நேரமாக இருக்கிறது. பிள்ளைகளை செல்லமாக நடத்துவதும் தவறு. ஆதிக கண்டிப்பை காட்டுவதும் தவறு. தெளிவாகவும் தீர்க்கமாகவும், நேரடையாகவும் செயல்பட்டு நிலைமாறாத ஒ ருவழியை பின்பற்றுவது நல்ல பலன்களைக் கொடுக்கும். ***Testimonies for the Church, Vol. 4, p. 313.***

பல பெற்றோர்கள் பிள்ளைகளை தவறாக வழிநடத்திக் கொண்டிருந்ததை நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். சிலர் நான் கூறியதை கேளாதவரைப்போல் இருந்தனர். மற்றும் சிலர் ***“ என் செல்லங்களை நான் வருத்தப்பட வைக்க முடியாது.” “வயதானால் எல்லாம்***

*சரியாகிவிடும்" "கோபத்துடன் கத்துவது தவறு என்பதை வளர்ந்து புரிந்துகொள்ளுவார்கள்." "இந்த சிறு குழந்தைகளிடம் கண்டிப்பாக இருக்கக் கூடாது." "பொய் சொல்லுவதையும், ஏமாற்றுவதையும் சுய நலத்திற்காகச் செயல்படுவதையும் வளர வளர விட்டுவிடுவார்கள்" என்று சொன்னார்கள்.* தப்பித்துக்கொள்ளுவதற்கு இது சுலபமான வழியாக இருக்கிறது. இது தேவசித்தம் அல்ல. ***Manuscript 43, 1900.***

*சாத்தானின் முயற்சிகளை தோற்கடியுங்கள்*

பெற்றோர்களே ஆரம்பத்திலேயே இவ்வேலையை துவங்க தவறுகிறீர்கள். சாத்தான், இதயம் என்ற நிலத்தை ஆக்கிரமித்துக் கொள்ளுகிறான். அவனது முதல் பயிரை வளர்த்துவிடுகிறான். ***Review and Herald, Apr. 14, 1885.***

சாத்தான் உங்கள் பிள்ளைகளை தன் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு செல்லாதபடி நீங்கள் வேலை செய்ய வேண்டும். உங்களது கரங்களை விட்டு இறங்கும் வயது வருவதற்கு முன்பாகவே பிள்ளைகளை உங்களிடமிருந்து பிரித்துவிடுவான். தாய்மார்களே அந்தகாரத்தின் வல்லமைகள் உங்கள் பிள்ளைகளை கட்டுப்படுத்தாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் இல்லங்களில் சாத்தான் அவனது இருளின் கொடியை நாட்டாதபடி செயல்பட முடிவெடுங்கள். ***Signs of the Times, July 22, 1889.***

*நடைமுறை வாழ்க்கைக்கான ஆயத்தம்*

குழந்தை பன்னிரண்டு அல்லது பதினைந்து வயதை எட்டுவதற்குள் எவ்வளவு அறிவை பெற்றுக் கொள்ளலாம் என்பதை வெகு சிலரே உணருகின்றனர். இது உலகத்திற்கான அறிவாக இருக்கலாம். நித்தியத்திற்கான அறிவாகவும் இருக்கலாம். புத்தக அறிவுடன் நின்றுவிடாதபடி நடைமுறை வாழ்க்கைக்கு தேவைப்படும் தொழிற்கல்வியின் அறிவையும் பெற வேண்டும். புத்தக அறிவை பெற்றுக்கொள்ள இதை ஒதுக்கிவைக்கப்படக் கூடாது. ***Manuscript 43, 1900.***

*நெப்போலியன் பெற்றுக்கொண்ட குணம்*



1ST Proof

பிள்ளையாக இருந்தபொழுது அவன் பெற்ற பயிற்சியே அவனது குணத்தை உருவாக்கியது. அவரது ஆசிரியர்கள் தவறான ஆசைகளை அவருக்குள் வளர்த்துவிட்டனர். மற்ற தேசங்களை பிடித்து தன்கட்டுப்பாட்டிற்குள்ளாக கொண்டு வரும் விருப்பத்தை அவரிடம் உருவாக்கினர். சிறு கூட்டத்தைக் கூடி அதற்கு தளபதியாக அவரை நிற்க வைத்தனர். இது வெறும் கற்பனையாக இருந்தாலும் அவரது எதிர்காலத்தின் அடித்தளம் இங்கு போடப்பட்டது. இரத்த சிந்துதலும், வன்முறையும் நிறைந்த வாழ்க்கையாக அவர் வாழ்க்கை இருந்தது. இந்த முயற்சிகள் சரியாக ஏரெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவரை நல்ல மனிதராக மாற்றவும், சுவிசேஷத்தின் ஆவி அவருக்குள்ளாக செல்லவும் பிரயாசப்பட்டிருந்ததால் அவரது சரித்திரமே மாற்றி எழுதப்பட்டிருக்கும். ***Signs of the Times, Oct. 11, 1910.***

*ஹியூம்மும் (Hume), வோல்டேயரும் (Voltaire)*

இவர்கள் இருவரும் வேதத்திற்கு எதிரான பிரெஞ்சு புரட்சிக்கு வித்திட்டவர்கள். ஹியூம் எதையுமே எளிதில் நம்பாதவராக இருந்தார். தனது வாழ்க்கையின் ஆரம்ப நாட்களில் வேதத்தை பக்தியுடன் விசுவாசித்த நபராக இருந்தார். தரம் தாழ்ந்த ஒரு சமுதாயத்துடன் தொடர்பு வைத்துக் கொண்டார். ஒழுக்க நெறிகள் இன்றி வாழ்வதினால் வரும் நன்மைகளை பேசும்படி அவருக்கு ஓர் அழைப்பு வந்தது. இதை செய்வதற்காக நிறைய புத்தகங்களைப் படிக்கத் துவங்கினார். அவர் படித்த தவறான புத்தகங்களின் தத்துவங்களை ஏற்றுக் கொண்டார். அவரது மனப்பான்மை முற்றிலும் மாறியது. வஞ்சகமான தத்துவங்களை விசுவாசிக்க ஆரம்பித்துவிட்டார். அவரது குணமும் ஒழுக்கமற்றதாகவே மாறியது.

வோல்டேயர் ஐந்து வயது சிறுவனாக இருந்தபொழுது தவறான ஒரு கவிதையை மனப்பாடம் செய்துகொண்டார். அதனுடைய தாக்கம் அவரது மனதைவிட்டு நீங்கவேயில்லை. மனிதர்கள் தேவனிடமிருந்து பிரிக்கும் சாத்தானின் திறமையான கருவியாக மாறினார். நியாயத்தீர்ப்பில் ஆயிரக்கணக்கானோர் எழுந்து, தங்களது ஆத்துமாக்களை சீரழித்ததாக, இவருக்கு எதிராக சாட்சி கொடுக்கப் போகிறார்கள்.

சிறு பிராயத்தில் அனுபவிக்கும் உணர்ச்சிகளினாலும், யோசனைகளினாலுமே ஒவ்வொரு வாலிபனும் தனது எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொண்டிருக்கிறான். வாலிப பிராயத்திலும், ஒழுக்கமான, சீரான, ஒரு நல்ல ஆண் மகனுக்கு ஏதுவான பழக்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். இது குணமாக மாறுகிறது. வாழ்க்கையில் தேர்ந்தெடுக்கப்போகும் வழியை இது முன் கூட்டியே காட்டுகிறது. வாலிபர்கள் தீமையானவர்களாகவோ அல்லது நல்லவர்களாகவோ இருப்பது அவர்களிடமே உள்ளது. நன்மை செய்பவர்களாக போற்றப்படலாம் இல்லையெனில் தீமை செய்பவர்களாக இகழப்படலாம். ***Signs of the Times, Oct. 11, 1910.***

***அன்னாளின் பரிசு***

புரிந்துகொள்ள முடியாத விலைமதிப்பற்ற தருணங்கள் ஒவ்வொரு தாய்க்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாமுவேல் தீர்க்கதரிசி குழந்தையாக இருந்தபொழுதும் தன் வாழ்க்கையின் முதல் மூன்று வருடங்களில் நன்மையைம் தீமையையும் பகுத்தறியக் கற்றுக் கொண்டார். இதை அவரது தாய் அவருக்குக் கற்றுக் கொடுத்தார். தங்களை சுற்றியிருக்கும் சாதாரண பொருட்களின் வழியாகவும் தேவனிடம் சிந்தையைக் கொண்டு செல்ல அன்னாள் முயற்சித்தாள். தேவனுக்கு அவள் கொடுத்த வாக்கை நிறைவேற்றினாள். பேரிய தற்தியாகத்தைச் செய்து தனது மகனை ஏலியின் பராமரிப்பில்விட்டாள். அங்கு அவன் தேவ ஊழியத்திற்கான பயிற்சியைப் பெற்றான். அன்னாள் அவனுக்கு சரியான பயிற்சியைக் கொடுத்திருந்தார். இதனால் சாமுவேல் எப்பொழுதும் ஒரு உண்மையான கிறிஸ்தவனாக நடந்துகொள்ளுவதையே தெரிந்துகொண்டார். அன்னாள் இதற்காக பெற்ற வெகுமதி எவ்வளவு பெரிதானதாக இருக்கிறது. உண்மையுடன் இருக்க எப்படிப்பட்ட ஒரு உதாரணத்தை நமக்கு முன்பாக இது வைக்கிறது. சொல்ல முடியாத அளவிற்கு இது நம்மை ஊக்கப்படுத்துகிறது. ***Review and Herald, Sep. 8, 1904.***

***யோசேப்பின் மனம் எப்படி பாதுகாக்கப்பட்டது***

யாக்கோபு யோசேப்புக்கு அவரது வாலிப பிராயத்தில் பல பாடங்களைக் கற்றுக் கொடுத்திருந்தார். தேவனை முழுமையாக விசுவாசிக்கவும் அவரது அன்பின் வெளிப்பாடுகளை மனதில் கொண்டு, நம்மீது தேவன் கொண்டிருக்கும் அக்கரையையும் யாக்கோபு சொல்லிக் கொடுத்திருந்தார். இந்த பாடங்களே யோசேப்பின் உபத்திரவத்திலே அவருக்கு அதிக பலனைத் தரக்கூடியவைகளாக இருந்தனர். அவர் சோதிக்கப்பட்ட வேளையில், அவர் கற்றப் பாடங்களை நடைமுறை வாழ்க்கையில் அப்பியாசித்தார். சோதனை உச்சத்தைத் தொட்டபொழுதும் பரம பிதாவை நோக்கிப் பார்த்தார். தேவனை நம்பக் கற்றுக் கொண்டிருந்தார். அவரது தகப்பன் தவறான உதாரணத்தைக் கொடுத்திருந்தால், சரித்திரத்தில் யோசேப்பு உண்மையாகவும், உத்தமத்துடனும் நடந்துகொண்ட கதையை நாம் படித்திருக்கவே முடிந்திருக்காது. அவரது குணமும் பிரகாசித்திருக்காது. சிறு வயதில் அவரது மனதில் பதிந்த பாடங்கள், சோதனை வேலையிலே அவரை பாதுகாத்தன. இவ்வளவு பெரிய துன்மார்க்கத்தைச் செய்து, எப்படி தேவனுக்கு எதிராக பாவம் செய்வேன்? என்று கேட்டார். ***Good Health Jan. 1880.***

***நல்ல பயிறிசியின் கனிகள்***

தாயின் எந்த பெலவீனத்தையும் பிள்ளைகள் உடனே கண்டறிந்துவிடுவார்கள். பிள்ளைகளை கட்டுப்படுத்துவதில் சரியாக முடிவெடுக்காமல் இருந்தாலும் பிள்ளைகள் இதையும் கவனித்துவிடுவார்கள். இதை வைத்து சாத்தான் பிள்ளைகளை சோதிப்பான். அவர்களது விருப்பங்களின்படியே செயல்பட தூண்டுவான். பிள்ளைகளுக்குச் சரியான ஒரு பயிற்சியைக் கொடுப்பதற்குத் தேவையான பண்புகளைப் பெற்றோர்கள் முதலில் வளர்த்துக் கொள்ள வேண்டும். பின்பற்றப்பட வேண்டிய விதிகளைத் தெளிவாகப் பிள்ளைகளிடம் விளக்க வேண்டும். இவைகளை மீறுவது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதையும் புரியவைக்க வேண்டும். இது நடந்தால் பெற்றோரையும் பிள்ளைகளையும் தேவன் ஆசீர்வதிப்பார். ***Manuscript 133, 1898.***

சிறு வயதிலும் தவறான தாக்கங்களினால் பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களது ஒழுக்கம் கெடுகிறது. கிறிஸ்தவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் பெற்றோர்கள் அவர்களது தவறான வழிகளின் தீமையைப் பார்ப்பதில்லை. சிறு பிராயத்திலும் பிள்ளைகளிடம் அவர்கள் நடந்துகொள்ளும் முறையே அவர்களது

1ST Proof

ஜீவனையோ மரணத்தையோ முடிவு செய்கிறது. ஒழுக்கத்திற்குரிய, மற்றும் ஆவிக்குரிய பாடங்களைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளத்தக்கதாகப் பிள்ளைகளின் மனங்கள் செயல்படும். சரியான பயிற்சியைப் பெற்ற பிள்ளைகளும் சில வேளைகளில் தவறலாம். ஆயினும் பாதை மாறி வெகு தூரம் செல்லுவதில்லை. ***Signs of the Times, Apr. 16, 1896.***

*அதிகாரம் - 37*

*பழக்கங்களின் வல்லமை*

*எவ்வகையில் பழக்கங்கள் உருவாகின்றன*

ஒரு செயலினால் குணம் உருவாகிவிடுவதில்லை. ஆயினும் அச்செயலுக்கேற்ற சிந்தனையும் உணர்வும் தொடர்ந்தால் இதைப்போன்ற செயல்கள் மீண்டும் மீண்டும் செய்யப்படும். அச்செயல் நன்மையானதாகவோ, தீமையானதாகவோ இருக்கலாம். ***Youth's Instrcutor Dec. 15, 1886.***

ஒரு செயலை மீண்டும் மீண்டுமாகச் செய்வதினால் அது பழக்கமாகிறது. இப்பழக்கங்களே ஒருவரது குணத்தை ஸ்தாபிக்கின்றன. ***Signs of the Times, Aug. 6, 1912.***

*நல்ல பழக்கங்களை உருவாக்கிக் கொள்ளுவதற்கான நேரம்*

சிறு பிராயத்தில் குணமானது பெரும்பாலான அளவில் உருவாக்கப்படுகின்றது. இள வயதின் பழக்கங்கள் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இயற்கையாகவே நம்மிடம் காணப்படும் திறன்களைவிட இப்பழக்கங்களின் பாதிப்பு அதிகமாக இருக்கும். இவைகளே மனிதர்களை அறிவாற்றலில் உயரமானவர்களாகவோ அல்லது குட்டையானவர்களாகவோ உருவகப்படுத்தும். விசேஷித்த திறமைகளும் தவறான பழக்கங்களினால் பெலனிழந்துவிடுகின்றன. எவ்வளவு சீக்கிரத்தில் ஒரு கேடான பழக்கம் உருவாக்கப்படுகிறதோ, அந்த அளவிற்கு அப்பழக்கங்கள் அந்நபரை கெட்டியாகப் பிடித்துவிடும். அப்பழக்கம் அந்நபரை அடிமைப்படுத்தி ஆவிக்குரிய ஜீவியத்தை அழித்துவிடும். நல்ல பழக்கங்கள் உருவாக்கப்பட்டிருந்தால் அவைகளின் வழியே வாழ்வும் அமையும். தேவனுக்கு பயந்து, பயபக்தியுடன்



1ST Proof

நடந்துகொள்ளுவோர் அப்பாடத்தை சிறு வயதிலே கற்றுக் கொண்டிருப்பார்கள். அநேக நபர்களின் அனுபவத்தில் இது உண்மையாக இருக்கிறது. உலகமானது பாவத்தின் முத்திரையை அவர்கள்மீது தரிப்பதற்கு முன்பாகவே இந்த அனுபவத்தைப் பெற்றிருப்பர். வயதில் முதிர்ந்தவர்கள் பொதுவாக கடினமாக பாறையைப் போல் இருப்பார்கள். புதியவைகளை ஏற்றுக் கொள்ள மனதில்லாமல் இருப்பார்கள். வாலிபர்களின் தன்மை இப்படியாக இருப்பதில்லை. ***Christian Temperance and Bible Hygiene p. 45.***

*பழக்கங்கள் மாற்றப்படுவதில்லை*

பிள்ளை பார்ப்பவைகளும் கேட்பவைகளும் இள மனதில் ஆழமான கோடுகளை வரைகின்றன. இக்கோடுகளை வாழ்க்கையின் எந்த அனுபவமும் அலைத்துவிட முடியாது. அறிவாற்றல் வளர்ந்துகொண்டிருக்கிற சமயம் இது. மனதின் நாட்டங்களும் பெலமடைகின்றன. மீண்டும் மீண்டுமாக ஒரு செயல் செய்யப்படும்பொழுது அது பழக்கமாக மாறுகிறது. இப்பழக்கங்கள் மாற்றங்களைப் பெறலாம். ஆயினும் மறைவது கிடையாது. ***Good Health Jan 1880.***

பழக்கங்கள் உருவான பின்பு குணத்தில் ஆழமாக பதிகின்றன. சூழ்நிலையின் நிமித்தமாகவும், தருணங்களின் வழியாகவும் அறிவாற்றல் உருவாகுகின்றது. ஒவ்வொரு நாளும் நல்ல குணங்களை உண்டுபண்ணுவோமாகில் இம்மானுவேலின் கொடியின் கீழாக பிள்ளைகளை வரிசைப்படுத்துவோம். இதை செய்ய தவறினால் இருளின் அரசனிடமாக அவர்களைச் சேர்க்கிறோம். நாம் எதை செய்யப் போகிறோம். ***Manuscript 69, 1897.***

*விடா முயற்சி அவசியம்*

நாம் ஒரு முறை செய்ததை மீண்டும் செய்வோம். சுய கட்டுப்பாடு, நல்ல பொருளாதாரம், பொறுமை, நாகரீகம், நல்ல பேச்சு போன்றவைகளை எளிதில் பழக்கிக்கொள்ள முடியாது. நம்மை நாமே கவனத்துடன் கண்காணித்துக் கொள்ள வேண்டும். குறைகளை மேற்கொள்ளுவதைவிட அவைகளுக்கு விழுந்துவிடுவதே சுலபமானதாக

இருக்கும். கிறிஸ்தவ குணங்கள் நமக்குள் பரிபூரணப்பட விடா முயற்சி தேவை. ***Testimonies for the Church Vol. 4, p. 452***

*தவறான குழந்தைகள் மற்றவர்களையும் பாதிக்கின்றனர்*

சரியான பழக்கங்களுக்குள்ளாகப் பிள்ளைகளை பயிற்றுவிக்க ஆழ்ந்த யோசனையும் நல்ல திட்டமும் அவசியம். தேவனுக்குப் பயப்படும் பெற்றோர்கள் நிச்சயமாக இதை செய்வார்கள். தங்கள் பிள்கைளுக்கான நன்பர்களை இவர்களே தேர்ந்தெடுப்பார்கள். பிள்ளைகள் இதை செய்யவிட மாட்டார்கள். இவ்விஷயத்தில் பிள்ளைகள் அனுபவமில்லாமல் தவறானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவர்கள். ***Review and Herald, Jan 24, 1890.***

குழந்தைப் பருவத்திலிருந்தும் தளராத முயறிசியினாலும் பொருமையினாலும் சரியான வழியில் பிள்ளைகள் வழிநடத்தப்பட வேண்டும். இல்லையெனில் பிள்ளைகள் தவறான பழக்கங்களைக் கற்றுக்கொள்ளுவார்கள். இப்பழக்கங்கள் எதிர்காலத்தில் வளர்ந்து மற்றவர்களையும் பாதிக்கும். இல்லங்களில் தவறானத் தாக்கங்களுக்கும், வஞ்சகமான செயல்களுக்கும் உட்படுத்தப்பட்டவர்கள் தங்களது தவறான பழக்கங்களை வாழ்க்கை முழுவதும் சுமந்து செல்லுகின்றனர். ஒரு வேளை அவர்கள் நாங்கள் தேவனை நம்பும் விசுவாசிகள் என்று பரைசாற்றிக் கொண்டால், விசுவாச வாழ்க்கைக்குள்ளும் இத்தவறானவைகளைக் கொண்டு வருவார்கள். ***Review and Herald, Mar. 30, 1897.***

*சவுல் இராஜா, ஒரு தவறான உதாரணம்*

இஸ்ரவேலின் முதல் இராஜாவினுடைய சரித்திரம் ஒரு சோகமான உதாரணமாக நம்முன் நிற்கிறது. இளம் பிராயத்தில் கற்றுக் கொண்ட தவறான பழக்கங்களின் வல்லமையை இது காட்டுகிறது. தனது வாலிப பிராயத்தில் சவுல் தேவனுக்குப் பயந்து நடக்கவில்லை. அவரை நேசிக்கவில்லை. அவரது துணிகரமான ஆவி அடங்கிப்போகும்படி பயிற்றுவிக்கப்படவில்லை. இதுவே தெய்வீக அதிகாரத்தையும் எதிர்த்துச் செயல்பட்டது. வுாலிப பிராயத்திலும் தேவ சித்தத்தை பரிசுத்தமாகக் காத்துக்கொண்டு, பொறுப்புக்ளை உண்மையுடன் நிறைவேற்ற வேண்டும்.



1<sup></sup>

1ST Proof

இதை செய்பவர்களே எதிர்காலத்திலும் உயரிய பணிகளையும் செய்ய ஆயத்தமாகுவர். தேவன் அருளியிருக்கின்ற வல்லமைகளை தவறாகவே பயன்படுத்திவிட்டு, திடீரென்று அவைகளை நல்ல வகையில் பயன்படுத்திவிட முடியாது. ***Patriachs and Prophets p. 622.***

நல்ல அறிவுரைகளை பிள்ளைப் பெறலாம். ஆயினும் தவறான ஒரு பழக்கத்தை வளரவிட்டுவிட்டால், அது மேற்கொள்ளப்படாவிட்டால் இரட்சிப்பை அழித்துவிடும். ***Testimonies for the Chruch Vol. 5, p. 53.***

*சிறு செயல்களும் முக்கியத்துவம் வாய்ந்தவைகள்*

ஒவ்வொரு செயலும் இரண்டு வகையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. எந்தச் செயலுக்கும் ஒரு நோக்கமிருக்கும். அது நன்மையானதாக இருக்கக்கூடும். தீமையானதாக இருக்கக் கூடும். இந்நோக்கமே நல்ல செயல்களுக்கும் தீய செயல்களுக்கும் அடித்தளமாக அமையும். ஒரு தவறான செயல் மீண்டும் மீண்டும் செய்யப்பட்டால், அதை செய்பவரின் மனதிலும், அவரோடு எந்த வகையிலும் தொடர்பு கொள்ளுபவர்களின் மனதிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும். வாலிபர்களின் சிறிய தவறுகளைக் கண்டு கொள்ளாமல் ஆசிரியர்களும் பெற்றோர்களும் விட்டுவிட்டால், அத்தவறுகளை அவர்கள் தொடர்ந்து செய்ய ஒரு அஸ்திபாரத்தை அமைக்கிறார்கள். ***Review and Herald, May 17, 1898.***

தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆத்துமாக்களை நேர்மையுடன் கையாள வேண்டும். பெருமையையும், தற்புகழ்ச்சியையும், ஊதாரித்தனத்தையும், வெளிப்புற ஆடம்பரத்தையும் பிள்ளைகளிடம் வளரவிடக் கூடாது. வஞ்சிக்கத்தக்கதாக, தவறான நோக்கங்களையுடைய சிறு குறும்புகளையும் பிள்ளைகளை செய்ய விடக்கூடாது. இவைகளை பிள்ளைகள் விட வேண்டும். இத்தவறுகள் திருத்தப்பட வேண்டும். ***Testimonies for the Chruch Vol. 1, p. 396.***

குழந்தை செய்யும் குறும்புகளும் தவறுகளும் பார்ப்பதற்கு நன்றாக உள்ளது என்பதற்காக அனுமதிக்கப்பட்டு ஊக்கப்படுத்தப்படாலாம். ஆனால் குழந்தை வளரும்பொழுது இத்தவறுகள் மனவருத்தத்தையும் வெறுப்பையும் எற்படுத்தும். ***Letter 1, 1877.***

***கெட்ட பழக்கங்கள் எளிதில் உருவாகிவிடுகின்றன.***

சிறு பிராயத்தில் பிள்ளைகள் சரியான ஒழுங்கிற்குள்ளாக கொண்டு வரப்பட வேண்டும். இது நடக்காமல் போனால் பெரியத் தீங்கை விளைவிக்கும். எதிர்காலத்தில் என்ன படிப்பு படித்தாலும் இத்தீமை சரி செய்யப்பட முடியாது. அசட்டை செய்யும் ஒரு செயல் தொடர்ந்து செய்யப்பட்டு பழக்கமாகிவிடுகிறது. ஒரு தவறான செயல் மற்றோரு தவறான செயலுக்கு வழிவகுக்கும். நல்ல பழக்கங்களைவிட கெட்ட பழக்கங்களே சுலபமாக கற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆயினும் இப்பழக்கங்களை விடுவது சுலபமானதாக இருக்காது. ***Review and Herald, Dec. 5, 1899.***

சிறு பிள்ளைகள் தனியாக விடப்பட்டால் நல்லதைவிட கெட்டதையே விரைவாக கற்கின்றனர். இதயத்தின் இயல்பான சுபாகத்திற்கு கெட்ட பழக்கங்கள் இசைவாக அமைகின்றன. குழந்தைப் பருவத்திலும் பார்க்கப்படுபவைகளும் கேட்கப்படுபவைகளும் மனதின்மேல் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ***Pacific Health Journal Sep. 1897.***

***வெற்றியையும் தோல்வியையும் பழக்கங்களே நிர்ணயிக்கின்றன***

ஒவ்வொரு நபரையும் இந்த காலத்திற்கும் நித்தியத்திற்கும் பழக்கங்களே உருவாக்குகின்றன. என் பழக்கங்களின் விளைவாக நான் என் தனித்துவத்தைப் பெற்றிருக்கிறேன். ஒவ்வொரு கடமையையும் உண்மையுடன் செய்து, சரியான பழக்கங்களை உருவாக்கிக் கொள்ளுவோரது வாழ்க்கை பிரகாசிக்கும் ஒளியாக இருப்பதும் மற்றவர்களது பாதையிலும் வெளிச்சத்தை கொடுப்பார்கள். கடமைகளை புறக்கனிப்பதும் சோம்பலும் மற்ற தவறான பழக்கங்களும் வாழ்க்கையின்மீது ஒரு இருளான மேகமாக படர்ந்துவிடும். நித்திய வாழ்க்கைக்குள்ளாக செல்ல முடியாதபடி நிறுத்தும் தடையாகிவிடும். ***Testimonies for the Chruch Vol. 4, p. 452.***

குழந்தைப் பருவத்திலும், வாலிப பிராயத்திலும் மனமானது விரைவில் பாதிப்புக்குள்ளாகிறது. எந்த செய்தியையும் ஏற்றுக்கொள்ளுகிறது. சுய கட்டுப்பாட்டுடன் வாழ இந்த பருவத்திலும் வல்லமை பெறப்பட வேண்டும். இல்லத்தின் அன்றாட சம்பாஷனைகளிலிருந்தும் காரியங்களிலிருந்தும் நித்தியத்திற்கென்றும் செல்வாக்குகள் உருவாகின்றன.

1ST Proof

ஒரு மனிதன், வாழ்க்கையில் வெற்றியையோ தோல்வியையோ சந்திப்பதை அவனது பழக்க வழக்கங்களே முடிவு செய்கின்றன. அவன் பெற்றிருக்கும் பிரத்தியேக திறமைகள் இதை நிர்ணயிப்பதில்லை. ***Desire of Ags p.101.***

***அதிகாரம் - 38***

***படிக்கும் வயதில் நற்பண்பும் நன்நடத்தையும்***

***குழந்தையின் தன்மையை விட்டுவிட அவசரப்படுத்தாதீர்கள்***

குழந்தைப் பருவத்தைவிட்டு விரைவாக வெளியேறும்படி பெற்றோர் பிள்ளைகளை அவசரப்படுத்தக் கூடாது. உன்னதமான உயரிய நோக்கங்களை அவர்களது மனங்களில் புகுத்துமாறு பாடங்கள் கொடுக்கப்படட்டும். பிள்ளைகளாகவே அவர்கள் இருக்கட்டும். குழந்தைகளுக்குரிய எளிமையுடனும், நேர்மையுடனும், இளகிய தன்மையுடனும் அவர்கள் வளரட்டும். தேவ இராஜியத்திற்குள்ளாக செல்வதற்கு இது அவர்களை ஆயத்தப்படுத்தும். ***Good Health Mar. 1880.***

***ஒவ்வொரு பருவத்திற்கேற்ற ஒரு அழகு***

வளரும் செடிகள் வளர்ச்சியின் வெவ்வேறு பருவங்களில் வெவ்வேறு வகையில் அழகை வெளிப்படுத்தும். அதைப் போலவே பிள்ளைகளும் அவரவருடைய பருவத்திற்குரிய இயல்புகளுடன் அழகாக வளரும்படி வழிநடத்தப்பட வேண்டும். இயற்கையின் வளர்ச்சி கூறுகளுக்கு இது ஒத்ததாக இருக்கும். ***Education, p. 107.***

கிறிஸ்துவினுடைய மிகவும் அழகான உவமையாக விதையின் உவமை இருக்கிறது. ஆழமான சத்தியத்தைக் கொண்டுள்ளதாகவும் உள்ளது. இவ்வுவமையின் சத்தியங்களை தனது வாழ்க்கையில் இயேசு கைக்கொண்டார். சரீரத்திலும், ஆவிக்குரிய வாழ்க்கையிலும் தேவன் அமைத்திருந்த இயற்கையான முறையின்படியே அவரும் குழந்தைப் பருவத்திலிருந்து மனிதனாக வளர்ந்தார். செடியானது இயற்கையில்



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

எந்த விதமாக வளருகின்றதோ அவ்வண்ணமே அவரது வளர்ச்சியும் இருந்தது. இதையே எல்லா வாலிபர்களும் செய்ய அவர் விரும்புகிறார். பரலோகத்தின் தேவன், மகிமையின் ராஜா பெத்லகேமில் ஒரு சாதாரண குழந்தையைப்போலவே இருந்தார். அந்த பருவத்திலும் உதவியற்ற குழந்தையாக தன் தாயின் பராமரிப்பிற்கு தன்னை ஒப்புக் கொடுத்தார்.

பிள்ளையின் பருவத்தை எட்டியபொழுதும் கீழ்ப்படியும் ஒரு மகனின் கிரியைகளைச் செய்தார். ஒரு பிள்ளையின் ஞானத்துடன் பேசினார். நடந்துகொண்டார். பெரிய மனிதனைப்போல் நடக்க வில்லை. பெற்றோர்களை கனப்படுத்தினார். அவர்களது விருப்பங்களை நிறைவேற்றி அவர்களுக்கு உதவினார். ஒரு பிள்ளையின் திறனுடனே செயல்பட்டார். ஆயினும் அவரது வளர்ச்சியின் ஒவ்வொரு பருவத்திலும் பரிபூரணமானவராக இருந்தார். பாவமில்லாத ஒரு வாழ்வை எளிமையுடனும் இயற்கையான அழகுடனும் வாழ்ந்தார். அவரது வாலிப பருவத்தைக் குறித்து வேதம் சொல்லுகிறது. ***"இயேசுவானவர் ஞானத்திலும் வளர்த்தியிலும் தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகதிகமாய் விருத்தியடைந்தார்." லூக்கா 2: 52. Counsels to Parents, Teachers and Students, p. 140, 141.***

### *ஒரே குடும்பத்தில் பல்வேறு பண்புகள்*

ஒரே குடும்பத்தில் வெவ்வேரான பண்பு நலன்களும் குணாதிசயங்களும் காணப்படும். பல்வேறு வகையான குண லட்சணங்களை உடையோர் ஒன்றாகத் தொடர்புகொண்டு வாழுவது தேவ முறையாக இருக்கிறது. குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் மற்றவரது உணர்வுகளையும் உரிமைகளையும் மதிக்க வேண்டும். பொருமையையும், மற்றவர்களின்மீது அக்கரைகொள்ளும் பண்பையும் இது வளர்க்கும். வேற்றுமைகள் மென்மையாக்கப்படும். குணத்தின் கூர்மையான ஓரங்கள் சரி செய்யப்பட்டு இலகுவானதாக மாறும். ஒற்றுமை நிலவ வேண்டும். பல குணங்கள் ஒன்றிணைவது ஒவ்வொரு தனி நபருக்கும் பெரிய நன்மையைத் தரும். ***Signs of the Times, Sep. 9, 1886.***

### *ஒவ்வொருவரது தனித்துவ சிந்தையும் பண்பும்*

பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் பெற்றோரின் பொறுப்பைக் கூட்டுகிறது. பிள்ளைகளின் நடத்தையும், பண்பு நலன்களும் சுபாவங்களும் ஆழமாக கவனிக்கப்பட வேண்டும். சரியான கோட்பாடுகளை பெற்றோர்கள் அடிப்படையாகக் கொண்டு, தவறான சுபாவங்களைத் தகர்த்து, நன்மையானவைகளை பிள்ளைகளிடம் ஊக்கப்படுத்த வேண்டும். இதை தெளிவாகப் பகுத்தறிய பெற்றோர்கள் முதலில் பாடங்களைக் கற்று ஒரு கல்வியைப் பெற வேண்டும்.

வன்முறையும் முரட்டுத்தனமும் இவ்வேலைக்குள் கொண்டுவரப்படக் கூடாது. சுய கட்டுப்பாட்டை பெற்றோர்கள் வளர்த்துக்கொண்டு, பிள்ளைகளின் இதயங்களிலும், மனங்களிலும் இதை பதியவைக்க வேண்டும். ***Manuscript 12, 1898.***

முனித மனங்களை கையாளும் வேலை சிறப்பானது. எல்லா பிள்ளைகளையும் ஒரே விதத்தில் நாம் கையாண்டுவிட முடியாது. ஒரு குழந்தையின்மீது விதிக்கப்பட வேண்டிய கட்டுப்பாடு இன்னொரு பிள்ளையின் ஜீவனையே நொருக்குவதாக இருக்கும். ***Manuscript 32, 1899.***

### *பெலவீனமான பண்பு கூறுகளை பெலப்படுத்துங்கள். தவறுகளை ஒடுக்குங்கள்.*

சம நிலையான மனதை வெகு சிலரே பெற்றிருக்கின்றனர். இதற்கு காரணம் அவர்களுடைய பெற்றோர்கள். தங்கள் கடமைகளை பெற்றோர்கள் அசட்டை செய்கிறார்கள். இது துன்மார்க்கமானது. பிள்ளைகளுடைய பெலவீனமான பண்புக் கூறுகளைப் பெற்றோர்கள் பெலப்படுத்த வேண்டும். தவறுகளை கட்டுப்படுத்த வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் இயல்பைக் கூர்ந்து கவனிக்க வேண்டிய பொறுப்பை மறந்துவிடுகின்றனர். நல்ல பழக்க வழக்கங்களையும், நல்ல வகையில் சிந்திக்கவும் பெற்றோர்கள் பிள்ளைகட்கு கற்றுக் கொடுக்க வேண்டும். ***Signs of the Times, Jan. 31, 1884.***

### *ஒவ்வொரு குழந்தையின் குண நலன்களையும் தெரிந்துகொள்ளுங்கள்*

பிள்ளைகள் தொடர்ந்து கவனிக்கப்பட வேண்டும். நீங்கள் அவர்களை இப்படியாக கண்காணிப்பதை அவர்கள் தெரிந்துகொள்ள

வேண்டியதில்லை. ஒருவரொருவருடன் பழகுவதில் அவர்களுடைய குணப் பண்புகளைத் தனித்தனியாக அறிந்துகொள்ளுங்கள். அவர்கள் குறைகளை திருத்துங்கள். நல்ல பண்புகளை ஊக்கப்படுத்துங்கள். சரீர பெலத்தையும் மனோ பெலத்தையும் வளர்த்துக் கொள்ளுவது அவர்கள் கையிலே உள்ளது என்பது சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் முயற்சிகளுக்கு ஏற்ற பலன் காணப்படும். சுயத்தை திருப்திபடுத்திக் கொள்ளுவதில் சந்தோஷம் இல்லை என்பதை அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். கடமையை நிறைவேற்றுவதில் உண்மையான மகிழ்ச்சி உண்டு. இதை செய்யும் பொழுது தாயானவள் பிள்ளைகளை மகிழ்விக்கவும் வழி தேட வேண்டும். ***Signs of the Times, Feb. 9, 1882.***

***மனதின் தேவைகளும் முக்கியமானவைகள்***

சில பெற்றோர்கள் பிள்ளைகளின் சரீர தேவைகளை மட்டும் நன்றாக கவனிக்கின்றனர். நோய்வாய்படும் சமயங்களில் பிள்ளைகளை அன்புடனும் கரிசனையுடனும் கவனித்துக் கொள்ளுகின்றனர். அத்துடன் தங்கள் வேலை துவங்கியிருக்கிறது முடியவில்லை. மனதின் தேவைகளும் கொடுக்கப்பட வேண்டும். புன்பட்ட மனதை சரியான விதத்தில் கையாள வேண்டும். புண்களை ஆற்ற வேண்டும்.

பிள்ளைகளுக்கும் பெரியவர்களைப்போன்றே துன்பங்களும் உபத்திரவங்களும், சோதனைகளும் வருகின்றன. பெரியோர்கள் இவைகளினால் சஞ்சலப்படுவதைப் போன்று பிள்ளைகளும் பாதிக்கப்படுகிறார்கள். பெற்றோர்களும் எல்லா சமயங்களிலும் ஒரே மன நிலையைக் கொண்டிருப்பதில் அநேக சமயங்களில் அவர்களது மனங்கள் பெருங் குழப்பத்திற்குள்ளாகின்றது. துவறான ஒரு மனப்பான்மையுடனும் தவறான உணர்வுகளுடனும் வேலை செய்கின்றனர். சாத்தானின் தூண்டுதல்களுக்கு விழுகின்றனர். கோபத்துடன் பேசி பிள்ளைகளின் கோபத்தைத் தூண்டுகின்றனர். சர்வாதிகாரர்களைப் போல் நடக்கிறார்கள். வருத்தப்பட்டுக் கொண்டும் கவலைப்பட்டுக் கொண்டும் சந்தோஷமில்லாமல் இருக்கின்றனர். இதே ஆவி பிள்ளைகளையும் பற்றுகிறது. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு இதை மேற்கொள்ள உதவுவதில்லை. பெற்றோர்களே இப்பிரச்சனைக்குக்



1ST
Proof

காரணமாக இருந்திருக்கின்றனர். சில நேரங்களில் எல்லாமே தவறாக நடப்பதைப் போன்று தெரிகிறது. மகிழ்ச்சியற்ற ஒரு பரிதவிக்கத்தக்கதான சூழல் நிலவுகிறது. பிள்ளைகள் கீழ்ப்படிவதில்லை என்றும் மோசமாக நடந்துகொள்ளுகிறார்கள் என்றும் அவர்களை திட்டுகின்றனர். தங்கள் பிள்ளைகள்தாமே உலகத்திலேயே மிகவும் கெட்ட குணத்தை பெற்றிருக்கிறார்கள் என்றும் நினைக்கின்றனர். இவை அனைத்திற்கும் காரணம் பெற்றோர்களே. ***Testimonies for the Church, Vol. 1, p. 384.***

***நல்ல சூழலை ஊக்கப்படுத்துங்கள்***

சம நிலையில்லாத மனம், கோபம், மகிழ்ச்சியற்ற நிலை, பொறாமை, ஒருவரிடம் காணப்பட்டால் பெற்றோர்கள் தங்கள் கடமையை புறக்கணித்ததை அது காட்டுகிறது. இந்த தவறான பண்புகள் இதை உடையவர்களுக்கு பெருந்துயரத்தைக் கொண்டுவரும். அநேகருக்கு தங்கள் நண்பர்களிடமிருந்தும் தங்களுடன் இருப்பவர்களிடமிருந்தும் அன்பு கிடைப்பதில்லை. இனிதான ஒரு சூழலை நாம் அமைக்க வேண்டும். இச்சூழல் அமைந்தால் அன்பிற்கு குறைவு இருக்காது. எங்கு சென்றாலும் சரி, எதை செய்தாலும் சரி, பலர் பிரச்சனையையே உருவாக்கிவிடுவார்கள். ***Fundementals of Christian Education, p. 67.***

***ஒவ்வொரு குணமும் அதற்கேற்றபடியே சீரமைக்கப்பட வேண்டும்***

ஓர் இடத்தில் இருக்கும் பல பிள்ளைகள், பல்வேறு குணங்களைப் பெற்றிருப்பார்கள். ஒரே விதமாக எல்லோரையும் கையாள முடியாது. ஒவ்வொரு மனதிற்கும் ஒவ்வொரு தன்மையிருக்கும். ஜெபத்துடன் இவை புரிந்துகொள்ளப்பட வேண்டும். சரியான வகையில் பிள்ளைகளின் குணங்களை சீர்பொருந்த வேண்டும். தேவ நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும். ***Good Health July, 1880.***

தாய்மார்களே உங்கள் பிள்ளைகளை புரிந்துகொள்ள நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களது பண்புகளையும் இயல்புகளையும் படியுங்கள். இதை நீங்கள் செய்தால்மட்டுமே அவர்களை சரியாக கையாள முடியும். சில பிள்ளைகளுக்கு அதிக கவனம் தேவைப்படும். ***Review and Herald, July 9, 1901.***

*கெட்ட பிள்ளைகளையும் கையாளுதல்*

சில பிள்ளைகளை அதிக பொருமையுடன் கையாள வேண்டியிருக்கும். அதிக அன்பும் கரிசனையும் காட்டப்பட வேண்டியதாகவும் இருக்கும். தவறான குணப் பண்புகளை இவர்கள் சுதந்தரித்துக் கொண்டுள்ளார்கள். இவர்களை கையாள அதிக தயவும் கரிசனையும் தேவை. தொடர்ந்து முயற்சி செய்தால் இவர்களும் தேவனின் வேலையை செய்ய ஆயத்தப்படுத்தப்பட முடியும். அவர்களிம் இருக்கும் வல்லமைகள் சீராக வளர்க்கப்பட்டால் எதிர்பார்த்திராத வகையிலும் சிறப்பாக பணியாற்றுவார்கள். அதிகமான எதிர்பார்ப்போடு வளர்க்கப்படும் நல்ல பிள்ளைகளைவிட இவர்கள் மேண்மையாளவர்களாகத் திகழுவார்கள்.

வினோதமான சுபாவங்களை உங்கள் பிள்ளைகள் பெற்றிருந்தால் மனம் சோராதீர்கள். பிள்ளைகளையும் சோர்வுக்குள்ளாக தள்ளாதீர்கள். நீடிய பொருமையையும் தயவையும் காண்பியுங்கள். அன்பான வார்த்தைகளலும் செயல்களாலும் அவர்களை பெலப்படுத்துங்கள். குறைபாடுகளை மேற்கொள்ளவையுங்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 115, 116.***

*ஒரு நல்ல பயிற்சியைக் கொடுக்கலாம்*

கிறிஸ்துவின்மேல் அன்பு செலுத்த தொடங்கியவுடன் ஒரு தாய் தன் பிள்ளைகளை கிறிஸ்துவிற்கென்று பயிற்றுவிக்க விரும்புவாள். நீங்கள் நினைப்பதைவிடவும் மேலாக உங்கள் பிள்ளைகளின் குணங்களை சீர்படுத்தலாம். இயேசுவின் விலைமதிப்பற்ற நாமம் ஒவ்வொரு இல்லத்தின் வார்த்தையாக இருக்க வேண்டும். ***Manuscript 17, 1893.***

*அதிகாரம் - 39*

*ஒன்றை செய்ய உறுதியுடன் தீர்மானித்தல்*

*இது வெற்றிக்கான ஒரு கூறு*

ஒவ்வொரு பிள்ளையும் உறுதியுடன் முடிவுகளை எடுப்பது ஒரு பெரிய வல்லமை என்பதை புரிந்துகொள்ள வேண்டும். மனிதனை



1ST Proof

ஆளுகை செய்யும் வல்லமையாக இது உள்ளது. எல்லா ஆற்றல்களையும் இது கட்டுப்படுத்தக் கூடியதாக உள்ளது. இது ஆசையோ விருப்பமோ அல்ல. தீர்க்கமான முடிவுகளைக் கொண்டுவரும் வல்லமை. இதுவே மனிதனை தேவனுக்கு கீழ்ப்படியவும் வைக்கிறது, கீழ்ப்படியாமல் போகும்படியும் செய்கிறது. ***Testimonies for the Church, Vol. 5 p. 513.***

*நமது விருப்பங்கள் தேவன் பக்கமாக இருக்க தீர்மானித்தால் வெற்றி கிட்டும்*

பகுத்தறிவை பெற்றிருக்கும் ஒவ்வொரு மனிதனும் நல்லதை தேர்ந்தெடுக்கும் வல்லமையை பெற்றிருக்கிறான். நமது வாழ்வின் ஒவ்வொரு அனுபவத்திலும் தேவனுடைய வார்த்தையைக் கேளுங்கள். ***“யாரை சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்” யோசுவா 24 : 15.*** ஒவ்வொருவரும் தங்கள் சித்தத்தை தேவசித்தத்தின் பக்கமாக வைக்கலாம். தேவனுக்கு கீழ்ப்படிய தேர்ந்தெடுக்கலாம். இதை செய்து பரலோகின் வேலையாட்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளலாம். தீமையைச் செய்ய எதுவும் கட்டாயப்படுத்த முடியாதபடியும் நிற்கலாம். ஒவ்வொரு வாலிபனிடமும், ஒவ்வொரு பிள்ளையினுடனும் இந்த வல்லமை இருக்கிறது. தேவவுதவியுடன் ஒரு நெறிதவறாத குணத்தை உருவாக்கிக்கொண்டு பயனுள்ள ஒரு வாழ்க்கையை வாழலாம்.

இத்தகைய அறிவுரைகளுடன் பிள்ளையை சுய கட்டுப்பாட்டுடன் வாழ பயிற்றுவிக்கும் பெற்றோர்களே வெற்றியை கண்டடைவார்கள். இவ்வெற்றி நிரந்தரமானதாக அமையும். மேலோட்டமாக பார்த்தால் இது சிறப்பானதாக தோன்றாது. இவ்வழியைப் பின்பற்றுவதைவிட ஒரு சர்வாதிகாரியைப்போல் பிள்ளையைக் கட்டுப்படுத்துவதே சிறந்த வழியாக நினைக்கப்படலாம். பிள்ளையின் எதிர்காலம் இந்த பயிற்சியின் சிறப்பிற்கு சாட்சி கூறும். ***Education, p. 289.***

***பிள்ளையின் சுய சித்தத்தைப் பெலவீனப்படுத்திவிடாதீர்கள் அதை சரியாக திசை திருப்புங்கள்.***

நமது தீர்மானிக்கும் திறனை நாம் வளர்த்து சேமித்துக்கொள்ள வேண்டும். மனிதனுக்கு கண்டிப்பாக இது முழுமையாகத் தேவைப்படும். அதை சரியாக திசை திருப்புங்கள். இச்சக்தியை ஞானத்துடனும் மென்மையாகவும் கையாளுங்கள். அது ஒரு புனித பொக்கிஷம். பெரிய சுத்தியை எடுத்து அதை துண்டு துண்டாக உடைத்துவிடாதீர்கள். வார்த்தையினாலும் செயலினாலும் பிள்ளை தன் பொறுப்பை உணரும் வயது வரும்வரை அதை சரியாக வடிவமையுங்கள். ***Counsels to Parents, Teachers and Students,. P. 116.***

பிள்ளைகள் சிறு வயதிலிருந்தே தங்களது சித்தத்தையும் விருப்பங்களையும் பெற்றோரின் அதிகாரத்திற்கும் சித்தத்திற்கும் ஒப்படைக்கப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். பெற்றோர்கள் இந்த பாடத்தைக் கொடுத்தால், பிள்ளைகள் தேவனின் சித்தத்திற்குத் தங்களை சமர்பிக்கக் கற்றுக் கொடுக்கின்றனர். பிள்ளைகள் தேவனுக்கு கீழ்ப்படிவதைக் கற்றுக்கொண்டு கிறிஸ்துவின் குடும்பத்தின் அங்கத்தினர்களாக மாற தகுதி பெறுகிறார்கள். ***Manuscript 119, 1899.***

*வழிநடத்த வேண்டும் ஒடுக்கக் கூடாது*

பிள்ளையின் வளர்ச்சியை அதிகமான கட்டுப்பாட்டினால் தடை செய்துவிடாமல், சரியாக அதை திசை திருப்ப பெற்றோர்களும் ஆசிரியர்களும் படித்துக் கொள்ள வேண்டும். தேவையைவிட அதிகமாக காட்டப்படும் அதிகாரமும் எந்த கட்டுப்பாடும் இல்லாத நிலைக்கு சமமாக இருக்கிறது. பிள்ளையின் சொந்த சித்தத்தை உடைக்க நினைப்பது தவறு. எல்லா மனங்களும் ஒரே வகையில் அமைந்திருப்பது இல்லை. கட்டாயப்படுத்தினால் வெளிப்புறமான கீழ்படிதலை நாம் கொண்டு வரலாம். ஆயினும் மனம் தீவிரமான கீழ்ப்படியாமைக்கும் அதிகாரத்தை எதிர்த்து செயல்படவும் திடமாக முடிவெடுக்கும். இந்த வகையிலும் பிள்ளைகளை கட்டுப்படுத்தினாலும் இது பிள்ளைகளுக்குப் பெரிய தீங்காகவே இருக்கும்.

சில பிள்ளைகளுக்கு தங்கள் சித்தத்தை சமர்பிப்பதென்பது மற்ற பிள்ளைகளைவிட கடினமானதாக இருக்கும். எனவே இது சுலபமான ஒன்றாக இருக்கும்படி ஆசிரியர் செய்ய வேண்டும். பின்பற்ற எளிமையான வழிமுறைகளை பிள்ளைகள் கைக்கொள்ளும்படி வழிநடத்த வேண்டும். ஒவ்வொரு பிள்ளையின் சொந்த சித்தமும் சரியாக வழிநடத்தப்பட்டு



1ST
Proof

உருவகிக்கப்பட வேண்டும். அது உதாசீனப்படுத்தப்பட்டு ஒடுக்கப்படக் கூடாது. ***Education, 288, 289.***

*வழிநடத்துங்கள் விரட்டாதீர்கள்*

உங்களது பராமரிப்பின் இருக்கும் பிள்ளைகள் தனித்துவத்துடன் இருக்க அனுமதியுங்கள். நீங்கள் தனித்துவத்தைப் பெற்றிருப்பதைப்போல் பிள்ளைகளுக்கும் அதை கொடுக்க வேண்டும். அவர்களை வழிநடத்துங்கள் விரட்டிக்கொண்டு இருக்காதீர்கள். ***Testimonies for the Church Vol. 5, p. 653.***

*சித்தத்தை சரியாக பிரயோகிக்கும் பயிற்சி மனதை விரிவாக்கி பெலப்படுத்துகிறது.*

தனக்கென்று ஒரு சொந்த சித்தம் இல்லாத வகையிலும் ஒரு பிள்ளை வழிநடத்தப்படலாம். அப்பிள்ளையின் தனித்துவமும் வழிநடத்தும் நபரின் தனித்துவத்துடன் இணைந்துவிடவும் செய்யலாம். தனது நோக்கங்கள் இலக்குகள் எல்லாவற்றையும் தனது ஆசிரியரின் சித்தத்திற்கு ஒப்படைக்கும்படியும் செய்யலாம். இப்படியாக பயிற்சி பெறும் பிள்ளைகள் ஒழுக்கத்தில் பெலமானவர்களாக இருக்க மாட்டார்கள். தங்களது தனிப் பொறுப்பையும் உணர மாட்டார்கள். நிதானத்தன் பகுத்தறிந்து நல்ல கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்பட அவர்களுக்குக் கற்றுத்தரப்படவில்லை. அவர்களது சித்தம் மற்றவர்களது சித்தத்தினாலேயே முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனவே அது விரிவடைந்து பெலப்படவில்லை. அப்பிள்ளைகள் தங்கள் ஒவ்வொருவரின் தனித் தன்மைகளுக்கும் திறமைகளுக்கும் ஏற்ற வகையில் வழிநடத்தப்படவில்லை. அவர்களால் தங்கள் மனதின் முழு பெலத்தை பிரயோகிக்க முடியாதவர்களாக இருக்கினறனர். ***Counsels to Parents, Teachers and Students,. P. 74.***

*வெவ்வேறான சித்தங்கள் ஒன்றுடன் ஒன்று போராடும்பொழுது*

ஒரு பிள்ளை தான் நினைப்பதையே செய்யும் மனம் கொண்டிருக்கலாம். இப்படிப்பட்ட பிள்ளையை கையாளும் தாய் அதன் பிள்ளைக்கு அக்குணத்தைத் தாமே கொடுத்திருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டு தன் பொறுப்பை விளங்கிக்கொள்ள வேண்டும்.

குழந்தை வளர்ப்பிற்கான
ஆலோசனை

குழந்தையின் அப்பண்பை ஒடுக்கிவிட வேண்டும் என்று நினைக்கக் கூடாது. சில நேரங்களில் தாயின் சித்தமும் பிள்ளையின் சித்தமும் எதிரெதிராகச் செயல்படும். இச்சூழ்நிலையில் ஒன்று தாயின் பக்குவமடைந்த சித்தத்திற்கு பிள்ளை தன் சித்தத்தை ஒப்படைக்கக் கூடும். இப்படிப்பட்ட இக்கட்டான சமயங்களில் அதிக ஞானம் தேவைப்படுகிறது. பிள்ளையை தவறாக கையாண்டாலோ அல்லது கட்டாயப்படுத்தினாலோ பிள்ளையின் குணம் இவ்வாழ்விற்கும் பரலோக வாழ்விற்கும் தகுதியடையாதபடி கெட்டுவிடும். ஞானத்துடன் நடந்துகொள்ளாததினால் எல்லாவற்றையும் இழக்க நேரிடும்.

இப்படிப்பட்ட நெருக்கடி வராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். பிள்ளைக்கும் அதன் தாய்க்கும் இது பெரிய போராட்டமாக இருக்கும். ஒரு வேளை இந்த சூழ்நிலை வந்துவிட்டாலும் பெற்றோரின் ஞானமான சித்தத்திற்கு தனது சித்தத்தை ஒப்படைக்கும்படியாக பிள்ளை வழிநடத்தப்பட வேண்டும். தாய் தனது வார்த்தைகளை கவனத்துடனும் கட்டுப்பாட்டோடும் பேச வேண்டும். குரலை எழுப்பி கட்டளையிடுவது இருக்கவே கூடாது. அதிகாரத்தை எதிர்க்கும்படி பிள்ளையை தூண்டும் எந்த செயலும் செய்யப்படக் கூடாது. பிள்ளையானவனை இயேசுவிடம் கொண்டு வரும்படியாக அவனை தாய் வழிநடத்தப் படிக்க வேண்டும். சாத்தான் தன் பிள்ளையின் சித்தத்தை ஆட்கொண்டு போய்விடாதபடிக்கு விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும். பரலோக தூதர்களும் இக்காட்சியை கவனித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தேவனே தனக்கு உதவ முடியும் என்பதை தாய் உணர வேண்டும். அவளது வல்லமையாகவும் வெற்றியாகவும் அவள் காட்டும் அன்பே நல்ல பலனைக் கொடுக்கும். ஞானமான எந்த கிறிஸ்தவ தாயும் பிள்ளை தனக்கு கட்டுப்படும்படி கட்டாயப்படுத்தமாட்டாள். அவள் ஜெபிப்பாள். அவள் ஜெபிக்கும்பொழுது அவனது ஆவிக்குரிய வாழ்க்கை புதுப்பிக்கப்படும். தனக்குள் கிரியை செய்து கொண்டிருக்கும் ஒரு வல்லமையே பிள்ளையிடமும் கிரியை செய்துகொண்டிருக்கிறது என்பதை பார்ப்பாள். பிள்ளை கட்டாயப்படுத்தப்படுவதற் பதிலாக சரியாக வழிநடத்தப்படுகிறது. பிள்ளையின் மனமும் மென்மையாகிறது. போராட்டத்தில் வெற்றி அடைகிறாள். ஓவ்வொரு அன்பான எண்ணமும்



1ST Proof

செயலும் வெள்ளிப் பாத்திரத்தில் வைக்கப்படுகின்ற தங்க பழங்களுக்கு ஒப்பாயிருக்கிறது. வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஒரு வெற்றியை தாய் பெற்றுவிட்டாள். புதுப்பிக்கப்பட்ட வெளிச்சத்தையும் ஒரு புதிய அனுபவத்தையும் பெற்றிருக்கிறாள். ஒவ்வொரு மனிதனையும் ஒளிவீச செய்யும். அந்த ***“உண்மையான ஒளி “*** அவளை கட்டுப்படுத்தியுள்ளது. புயலுக்குப் பின் அமைதி நிலவுகிறது. முழைக்குப்பின் சூரிய ஒளி பிரகாசிக்கின்றது. ***Letter 55, 1902.***

***பெற்றோர் தங்கள் வாலிப காலத்து உணர்வுகளை மறக்கக்கூடாது.***

தங்களது வாலிப பிராயத்து உணர்வுகளை பெரும்பாலான பெற்றோர்கள் தக்க வைத்துக் கொள்ளுவதில்லை. இதன் நிமித்தமாக பிள்ளைகளை புரிந்துகொள்ளாமல் கடினமான முறையில் பிள்ளைகளிடம் நடந்துகொள்ளுகின்றனர். பெற்றோர்களிடம் பிள்ளையின் எளிமையும் வளர்ந்த நபரின் பெலமும் ஞானமும் முதிர்ச்சியும் சேர்ந்து காணப்பட வேண்டும். சிலருக்கு நல்லதொரு குழந்தைப்பருவம் அமைந்திருக்காது. அந்த ஆரம்ப கால வாழ்க்கையின் எளிமையையும் சுதந்திரத்தையும், புதுப்பொலிவையும் அனுபவித்திருக்கமாட்டார்கள். திட்டப்பட்டு, அடிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டிருப்பர். இதனால் அவர்களது இயல்பான கபடற்ற மனநிலையை இழந்து, பயத்தினாலும், பொறாமையினாலும் வஞ்சகத்தினாலும் ஆட்கொள்ளப்பட்டிருப்பர். இப்படிப்பட்ட அனுபவங்களைப் பெற்ற பெரும்பாலோர், தங்கள் பிள்ளைகளுக்கும் ஒரு மகிழ்ச்சியான குழந்தை பருவத்தை தர இயலாமல் போய்விடும். ***Good health March, 1880.***

***ஒரு பெரிய தவறு***

கட்டுப்படுத்தும் அதிகாரம் பிள்ளையிடம் கொடுக்கப்படக் கூடாது. அவன் வீட்டில் தனது விருப்பங்களின்படி செயல்படக் கூடாது. இது பெரிய தவறு. அவனது சுய சித்தத்தின் வல்லமையை இது தவறாக திசை திருப்புகிறது. இந்த தவறு நடந்திருக்கிறது. இனியும் நடக்கும். இதற்கு காரணம் பெற்றோர்கள் பகுத்தறிவுடன் பார்க்காமல் குருடர்களைப்போல செயல்படுகிறார்கள். ***Manuscript 126, 1897.***

***பிள்ளையின் அழுகைக்கு இணங்கிவிட்ட ஒரு தாய்***

உனது பிள்ளை ஞானத்தின் கரத்தினால் வழிநடத்தப்பட வேண்டும். அவன் விரும்புவதை பெறுவதற்காக அழுக அனுமதிக்கப்பட்டிருக்கிறான். இது அவனது பழக்கமாகிவிட்டது. அவனது தகப்பனை பார்க்கும்படி மீண்டும் மீண்டும் அழுது அடம்பிடிக்க விடப்பட்டிருக்கிறான். இதைப் பார்த்து மற்றவர்கள் தன் தகப்பனை பார்க்க வேண்டும் என்று எப்படி அழுகிறான் பாருங்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் இப்படி சொல்ல வேண்டும் என்பதற்காகவே இதை மீண்டும் மீண்டும் செய்கிறான். உன் பிள்ளை என் பராமரிப்பில் இருந்தால் மூன்று வாரங்களில் அவனை மாற்றிவிடுவேன். எனது வார்த்தையே அவனுக்குக் கட்டளை என்பதை புரிய வைப்பேன். அன்போடும் அதே நேரத்தில் உறுதியுடனும் இதை செய்திருப்பேன். பிள்ளையின் சித்தத்திற்கு என் சித்தத்தை கொடுத்துவிட மாட்டேன். இங்கு நீ செய்ய வேண்டிய ஒரு பெரிய வேலை உள்ளது. இதுவரையிலும் இவ்வேலையை செய்ய நீ தவறினதால் பெரிய இழப்புக்களை சந்தித்திருப்பாய். ***Letter 5, 1881.***

*கெடுக்கப்பட்ட ஒரு குழந்தையின் இன்பமற்ற வாழ்வு*

ஜெபத்துடனும், அதிக கவனத்துடனும் சரியான ஒழுங்கிற்குள்ளாக கொண்டுவரப்படாத எந்த குழந்தையும் இத்தவணையின் காலத்திலும் துன்பத்தையே அனுபவிக்கும், தீமையான பண்பு நலன்களை உருவாக்கிக்கொள்ளும். இதனால் தேவனால் அப்பிள்ளையை பரலோக குடும்பத்துடன் இணைக்க முடியாமல் போகிறது. துவறான வழிநடத்துதலினால் கெடுக்கப்பட்ட ஒரு குழந்தை தனது வாழ்க்கை முழுமைக்கும் ஒரு பெரிய பாரத்தை சுமந்துகொள்ளுகிறது. உபத்திரவத்திலும், சோதனையிலும், ஏமாற்றங்களை சந்திக்கும்பொழுதும் தனது ஒழுங்கற்ற சித்தத்தையே நிறைவேற்றுவான். ***Manuscript 126, 1897.***

தங்கள் சொந்த வழிகளை பின்பற்றும்படி அனுமதிக்கப்படும் பிள்ளைகள் மகிழ்ச்சியாக இருப்பதில்லை. இதயத்தில் திருப்தியும் ஓய்வும் இல்லை. அது மனமாறாத இதயமாக இருந்திருக்கிறது. எதற்கும் கட்டுப்படாததாகவே செயல்பட்டிருக்கின்றது. மனமும் சிந்தையும் சரியான ஒழுங்கிற்குள் கொண்டுவரப்பட வேண்டும். சரியான கட்டுப்பாட்டிற்குள்ளாக வரவேண்டும். இது நடந்தால் மட்டுமே நமது குணமானது ஞானத்தின் சட்டங்களுடன் இசைவாக செயல்படும். நமது வாழ்வும் சரியாக வழிநடத்தப்படும். விரும்பியதையெல்லாம் பெற்றுக்கொண்ட சுயநலமான வாழ்வு அதிருப்தியையும் சமாதானமின்மையையும் கொண்டுவரும். ***Testimonies for the Church, Vol. 4, p. 202.***



1ST Proof

*அநேக உபத்திரவங்களின் பிண்ணனி*

நமது சபை இன்றைக்கு சந்திக்கும் சோதனைகள் இது போன்று தவறாக வழிநடத்தப்பட்டவர்களின் கலகத்தின் ஆவியினாலே வருகின்றது. இது நம் சபையின் செழிப்பிற்கு பெரிய ஆபத்தாக உள்ளது. இந்த தவறான சாட்சிகளைக் கண்டு அவிசுவாசிளும் சத்தியத்தின் வழியைவிட்டு தூரமாக சென்றுவிடுகின்றனர். சத்தியத்தை சந்தேகிக்கின்றனர். பெற்றோர்கள் பிள்ளைகளையும் வாலிபர்களையும் சரியாக வழிநடத்தாததே இதற்கு காரணம். எத்தனை வாழ்வுகள் சீரழிகின்றன. எத்தனை குற்றங்கள் செய்யப்படுகின்றன. கட்டுப்படுத்தப்பட முடியாத உணர்ச்சிகளாலும் ஆசைகளினாலும் இப்பாவங்கள் நடந்தேறுகின்றன. இவைகள் சிறுபிராயத்திலும் கட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அந்த பருவத்தில் மனமானது ஒரு தாயின் அன்பான சித்தத்திற்கு வளைந்துகொடுக்கக் கூடியதாக இருந்திருக்கும். பிள்ளைகள் திறமையற்ற வகையில் பயிற்றுவிக்கப்படாததே இன்றைய ஒழுக்கச் சீர்கேட்டின் அடித்தளமாக இருக்கின்றது. ***Testimonies for the Church, Vol. 4, p. 202.***

## *அதிகாரம் - 40*

## *கிறிஸ்தவ நெறிகளை உதாரணமாக வையுங்கள்*

*பெற்றோர்கள் செய்வதை பிள்ளைகளும் செய்வார்கள்*

பெற்றோர்களே நீங்கள் ஆசிரியர்களாக இருக்கிறீர்கள். உங்கள் பிள்ளைகளே உங்கள் மாணவர்கள். உங்கள் பேச்சின் தோரணை, உங்கள் நடத்தை, உங்களை ஆட்கொள்ளும் ஆவி ஆகியவற்றை பிள்ளைகள் கவனிக்கிறார்கள். நீங்கள் செய்வதையே அவர்களும் பின் பற்றுவார்கள். ***Signs of the Times, March 11, 1886.***

பிள்ளைகள் பெற்றோர்கள் நடந்துகொள்ளுவதைப்போலவே அவர்களும் நடப்பார்கள். நல்ல உதாரணங்களாக இருக்க நாம் அக்கரையுடன் செயல்பட வேண்டும். பெற்றோர்கள் அன்புடனும் மதிப்புடனும் நடந்து, உறுதியுடன் பிள்ளைகளை சரியாக வழிநடத்தினால், பிள்ளைகளிடமும் அதையே பார்ப்பார்கள். நேர்மையுடனும் பிறர் மதிக்கும்படி நடந்துகொண்டால் பெரும்பாலாக பிள்ளைகளும் இப்படியே செய்வார்கள். தேவனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய இடத்தைக் கொடுத்து அவரை தொழுதுகொண்டு, பிள்ளைகளுக்கும் அதே பயிற்சியைக் கொடுக்க வேண்டும். அவர்களும் தேவனை ஆராதிக்க மறக்கமாட்டார்கள். ***Testimonies for the Church, Vol. 5, p. 319, 320.***

பின்பற்றப்பட வேண்டிய உதாரணத்தைப் பிள்ளைகளுக்கு முன்பாக பெற்றோர்கள் எப்பொழுதும் வைக்க வேண்டும். அவர்கள் ஒருவருக்கொருவர் வார்த்தையிலும் செயலிலும் பார்வையிலும் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவரே அவர்களை கட்டுப்படுத்துகிறார் என்பதை காட்ட வேண்டும். இயேசுவின் குணத்தை பிள்ளைகளிடம் பிரதிபலிக்க வேண்டும். பார்ப்பதை அப்படியே செய்யும் தன்மை பிள்ளைகளிடமும் வாலிபர்களிடையும் பெலமாக இருக்கும். எனவே சரியான ஒரு மாதிரி அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட வேண்டும். பிள்ளைகள் பெற்றோர்களை நம்பத்தகுந்தவர்களாக பார்க்க வேண்டும். இதன் வழியாக பெற்றோர்கள் தரும் பாடங்களை எடுத்துக்கொள்ள வேண்டும். ***Review and Herald, March 13, 1894.***

***வார்த்தையினாலும், நல்ல உதாரணத்தினாலும் சொல்லிக்கொடுங்கள்***

பிள்ளையை ஒரு தாய் வழிநடத்துவது தொடர்ந்து ஒரு பள்ளியில் இருப்பதற்கு சமமாக இருக்கிறது. பிள்ளைக்கு தினமும் கற்றுக்கொடுக்கும் பொழுது தானும் கற்கிறாள். சுய கட்டுப்பாட்டைப் பற்றி பிள்ளைக்கு கற்றுத்தரும் பாடங்களை தானும் அப்பியாசிக்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு மன நிலையைக் கொண்டதாக இருக்கும். தாய் ஞானத்துடன் பிள்ளைகளை புரிந்துகொண்டு அவர்களை கையாள வேண்டும். இல்லையெனில்



1ST Proof

பிள்ளைகளை தவறாக புரிந்துகொண்டு பார பட்சத்துடன் நடந்துவிடுவான். அன்பு என்ற பிரமாணத்தை தாய் வீட்டில் கைக்கொள்ள வேண்டும். பிள்ளைகளும் அப்பொழுதுதான் அன்புடனும் மரியாதையுடனும் நடப்பார்கள். இப்பாடங்கள் ஒவ்வொரு நாளும் கொடுக்கப்பட வேண்டும். ***Pacific Health Journal, June 1890.***

பள்ளியில் ஆசிரியர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல கல்வியைக கொடுப்பதில் ஒரு சிறு பங்கை செய்யலாம். ஆனால் உங்களது உதாரணமே அதிகமாக கிரியை செய்யும். மற்ற எல்லா தாக்கங்களைவிட இந்த பாதிப்பே அதிகமாக இருக்கும். உங்கள் பேச்சு, நிர்வாகம், எதை நீங்கள் விரும்புகிறீர்கள் எதை வெறுக்கிறீர்கள் அதை வெளிப்படுத்தும் விதம், இவைகள் எல்லாமே உங்களது பிள்ளையின் குணத்தை உருவகிக்கும். உங்கள் அன்பான நடத்தை, சுய கட்டுப்பாடு, பண்பு நலன்கள் எல்லாவற்றையும் பிள்ளைகள் கவனிக்கிறார்கள். இதுவே அவர்கள் தினமும் கற்றுக்கொள்ளும் பாடமாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் உங்கள் கீழாக பிள்ளைகள் ஒரு பள்ளியைப் போன்று பல பாடங்களை கற்கிறார்கள். தினமும் இக்கல்வியைப் பிள்ளைக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் பிள்ளைகளில் நல்லதொரு குணத்தை உருவாக்கும் கல்வியாக இது இருக்கட்டும். ***Review and Herald, June 27, 1899.***

பிள்ளைகளிடம் முரட்டுத்தனமாக நடக்காதீர்கள். இதற்கு அதிக கவனத்தைச் செலுத்துங்கள். கீழ்ப்படிதலை எதிர்பாருங்கள். அக்கரையில்லாததைப்போல் பிள்ளைகளிடம் பேசாதீர்கள். உங்கள் வார்த்தையும் நடத்தையுமே அவர்களின் பாட புத்தகமாக இருக்கிறது. இளகிய மனதுடன் மென்மையுடன் அவர்களுக்கு உதவுங்கள். உங்கள் பிரசன்னம் மகிழ்ச்சியூட்டும் சூரிய ஒளியைப்போல இருக்கட்டும். அவர்களின் இதயங்களிலும் இச்சூரிய ஒளி பிரகாசிக்கட்டும். வளரும் பிள்ளைகள் எளிதில் சிறு விஷயங்களினாலும் கூட மனசஞ்சலத்திற்குள்ளாவார்கள். முரட்டுத்தனமாக அவர்களை கையாண்டால் அவர்கள் வாழ்க்கையையே பாதித்துவிடுவீர்கள். தாய்மார்களே அதிகமாக அக்கரைக்காட்டுங்கள். பிள்ளையை

திட்டாதீர்கள் அது ஒரு பயனையும் தருவதில்லை. ***Manuscript 127, 1898.***

***பெற்றோர்கள் சுயகட்டுப்பாட்டின் மாதிரிகளாக இருத்தல் வேண்டும்.***

தேவையில்லாத கிளர்ச்சிகளிலிருந்தும் உணர்ச்சிவசப்பட வைக்கும் விஷயங்களிலிருந்தும் பிள்ளைகள் பாதுகாக்கப்பட வேண்டும். தாய் அமைதியுடனும் பதட்டமின்றி இருக்க வேண்டும். நரம்புகள் அமைதியாக இருக்கும்படியான ஒரு சமாதானமான மன நிலையை பெற்றிருக்க வேண்டும். தாய்க்கும் பிள்ளைக்கும் ஒழுங்கைக் கற்றுக்கொடுக்கும் பள்ளியாக இது அமைகிறது. பிள்ளைகளுக்கு சுய மறுப்பை கற்றுக்கொடுக்கும்பொழுது அதை தானும் கைக்கொண்டு பிள்ளைக்கு ஒரு நல்ல மாதிரியாக இருக்க ஒரு கல்வியை பெற்றுக்கொள்ளுகிறாள். புயிறிட ஆயத்தப்படுத்தப்படும் ஒரு நிலத்தை பண்படுத்துவதுபோல் பிள்ளையின் மனங்களை பண்படுத்துகிறாள். புாவ நாட்டங்களையும் ஆசைகளையும் கட்டுப்படுத்துகிறாள். தனது குணத்திலும் ஆவியின் கிருபைகளை வளர்த்துக்கொள்ளுகிறாள். ***Manuscript 43, 1900.***

உங்கள்மீது நீங்கள் கொள்ளும் வெற்றி விலையேறப்பெற்றது. உங்கள் பிள்ளைகளுக்கும் இது பெரிய உதவியாகவும் ஊக்கமாகவும் இருக்கும். ***"நான் தேவனது வேலையாள்" என்றும் , "நான் தேவனின் கட்டிடம்"*** என்று நீங்கள் சொல்ல வேண்டும். அவரது கரங்களுக்குள்ளாக நான் என்னை சமர்பிக்கிறேன். தேவ சாயலின்படி நான் வடிவமைக்கப்பட வேண்டும். தேவனுடன் சேர்ந்து வேலை செய்து என் பிள்ளைகளின் சிந்தைகளையும் குணங்களையும் வடிவமைத்துக் கொண்டிருக்கிறேன். பிள்ளைகள் தேவனுடைய வழியில் நடப்பதை இது எளிதாக்குகிறது. பெற்றோர்களே உங்களை நீங்கள் கட்டுப்படுத்தினால், பிள்ளைகளை கட்டுப்படுத்துவதில் பெரிய வெற்றியைக் காணலாம். ***Letter 75, 1898.***

***சுய கட்டுப்பாட்டின் பலன்கள்***

பெற்றோர்களே நீங்கள் கோபத்துடன் பேசி, பொருமையின்றி செயல்பட்டு, சுய கட்டுப்பாட்டை இழக்கும் ஒவ்வொரு முறையும் தேவனுக்கு எதிராக பாவம் செய்கிறீர்கள். பொருமையில்லாமல் பேசப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் தூதர்கள் பதிவுசெய்துகொண்டிருக்கிறார்கள். ஏளனமாகவோ கவனமின்றியோ நீங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் உங்கள் கிறிஸ்தவ குணத்தை மாசுப்படுத்தும் ஒரு கறையாக படிகிறது. பிள்ளைகளிடம் அன்புடன் பேசுங்கள். ஒவ்வொரு சிறிய விஷயமும் உங்களை எப்படி பாதிக்கின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள். குற்றம் சுமத்தப்பட்டால் உங்களால் தாங்கிக்கொள்ள முடிகிறதா? உங்களால் சுமக்க முடியாத பாரங்களை பிள்ளைகளின்மேல் சுமத்தாதீர்கள். சுய கட்டுப்பாட்டைக் கைக்கொண்டு, சிந்தித்து செயல்படுதல் நூறு மடங்கான கனிகளைக் கொடுக்கும். விரும்பக்கூடிய, மனதை உற்சாகப்படுத்தும் வார்த்தைகளைப் பேசுங்கள். சூரிய ஒளியைப் போல் இது உங்கள் குடும்பத்தில் இருக்கட்டும். ***Signs of the Times, April 10, 1884.***

1ST Proof

பிள்ளைகள் நல்லவர்களாக இருந்து சரியாகச் செயல்பட, பெற்றோர்கள் பேச்சிலும் நடத்தையிலும் சரியானவர்களாக இருக்க வேண்டும். ***Good Health Jan. 1880.***

***கிறிஸ்தவர்கள் என்று பரைசாற்றுபவர்களின் நடத்தை பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது***

ஓய்வுநாளை ஆசரிக்க பிள்ளைகளுக்குக் கற்றுத்தரப்படுகிறது. இவர்களது பெற்றோர்களும் ஓய்வுநாளை ஆசரிப்பவர்களாக இருக்கிறார்கள். இப்பிள்ளைகளில் சிலர் உலகக் காரியங்களை பொருத்தவரை நல்லவர்களாகவே இருக்கிறார்கள். ஆயினும் பாவத்தின் தன்மையை புரிந்துகொண்டு மனஸ்தாபப்படுவதில்லை. அதை விட்டுவிடுவதுமில்லை. இவர்களின் நிலை அபாயகரமானது. கிறிஸ்தவர்கள் என்று தங்களை பரைசாற்றிக்கொள்ளும் பெரியவர்களின் நடத்தையை உற்று கவனிக்கிறார்கள். கிறிஸ்தவர்களாக இருக்கிறோம் என்று சொல்லுபவர்கள் மனசாட்சியின் படி நடக்காததை பார்க்கிறார்கள். அவர்களோடு தங்களை ஒப்பிட்டு தாங்கள் அவர்களைவிட மேலானவர்கள் என்று சந்தோஷப்பட்டுக் கொள்ளுகிறார்கள். இப்பெரியவர்கள் இடறக்கற்களாக இருக்கிறார்கள். ***Testimonies for the Church, Vol..4, p. 40.***


குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

அநேக பெற்றோர்களும் ஆசிரியர்களும் தேவ வார்த்தையை விசுவாசிப்பதாக கூறிக்கொண்டு அதன் வல்லமையை மறுதளிக்கிறார்கள். இதனால் வேத வார்த்தைகள் வாலிபாகளுக்குச் சொல்லிக்கொடுக்கப்படும்பொழுதும் அது பயனற்றுப் போகிறது. வாலிபர்களிடையே எந்த மாற்றத்தையும் கொண்டுவருவதில்லை. சில நேரங்களில் இவர்கள் வேத வார்த்தையின் வல்லமையை உணருவார்கள். இயேசுவின் விலைமதிப்பற்ற அன்பைப் பார்க்கிறார்கள். அவரது அழகான குணத்தையும் பார்த்து, அவருக்கு வேலை செய்யும் வாழ்க்கையின் சாத்தியங்களை புரிந்துகொள்ளுகிறார்கள். இதற்கு நேர் எதிராக கிறிஸ்துவை பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் நபர்களை பார்க்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையின் தவறான சாட்சியத்தைக் கவனிக்கிறார்கள். ***Education, p. 259.***

### *சோதனைக்கு "முடியாது" என்ற தீர்க்கமான பதில்*

உலகத்தின் பழக்கங்களை கைக்கொள்ளாமல், தாய்மார்கள் தேவனுக்கு உண்மையாக இருக்கும் ஒரு உதாரணத்தைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம். சோதனை வரும்பொழுது முடியாது என்று சொல்ல கற்றுக்கொடுக்கலாம். ***"என் மகனே, பாவிகள் உனக்கு நயங்காட்டினாலும் நீ சம்மதியாதே." நீதி. 1:10*** என்பதன் பொருளை பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுங்கள். ஆனால் உங்கள் பிள்ளைகள் சோதனைக்கு முடியாது என்று பதில் கூற முதலில் நீங்கள் இதை சொல்ல வேண்டும். பிள்ளை இதை சொல்லுவதைப் போல் வளர்ந்த மனிதனும் இப்படி சொல்லுவது பிள்ளை சொல்லுவதைப்போன்றே முக்கியத்துவம் வாய்ந்தது. ***Review and Herald, Mar. 31, 1891.***

### *மென்மையை வெளிகாட்டுங்கள்*

பெற்றோர்களே பிள்ளைகளிடம் அன்போடும் மென்மையாகவும் நடந்துகொள்ளுங்கள். அவர்களும் அதை கற்பார்கள். நாம் கிறிஸ்தவர்கள் என்பதை நம் வீட்டில் காட்டுவோம். தனது குடும்பத்தில் வெளிப்படாத அன்பும் தயவும் கிறிஸ்தவ வாழ்வும் பயனற்றது. ***Manuscript 97, 1909.***



1ST Proof

### *உங்கள் வார்த்தைகளையும், பேச்சையும் கவனியுங்கள்*

கோபத்துடன் முகங்கோனி ஒரு வார்த்தையைக்கூட பேசாதீர்கள். கிறிஸ்துவின் கிருபையை நீங்கள் கேட்டால் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் மனசாட்சியையும் இதயத்தையும் கிறிஸ்துவின் ஆவியானவர் கட்டுப்படுத்துவார். உங்கள் வார்த்தைகளையும் செயல்களையும் வழிநடத்துவார். யோசனையின்றி அவசரத்துடன் பேசி உங்கள் மதிப்பைக் கெடுத்துக்கொள்ளாதீர்கள். உங்கள் வார்த்தைகள் தூய்மையானவைகளாகவும் உங்கள் பேச்சு பரிசுத்தமானதாகவும் இருக்கட்டும். பிள்ளைகளிடம் நீங்கள் எதிர்பார்ப்பதை, உதாரணமாக உங்கள் வாழ்வில் காண்பியுங்கள். இல்லத்தில் சமாதானும் விரும்பப்படக்கூடிய வார்த்தைகளும் மன இரம்பியமான முகங்களும் இருக்கட்டும். ***Letter 28, 1890.***

பெற்றோர்கள் பிள்ளைகளை கட்டாயப்படுத்துவதில் பாதுகாப்பு இல்லை. எஜமானைப்போன்று குறைகூறிக்கொண்டு தவறுகளையே சுட்டிக் காட்டிக்கொண்டு இருக்கக்கூடாது. அவர்களது வார்த்தைகள், அவ்வார்த்தைகளை தோரணை, பெரிய பாடங்களை பிள்ளைகளுக்குக் கொடுக்கின்றன. தவறான வார்த்தைகள் உங்கள் உதடுகளிலிருந்து வந்தால், பிள்ளைகளும் அதையே செய்ய சொல்லிக்கொடுக்கிறீர்கள். ஆவியானவரின் சுத்திகரிக்கும் வல்லமை பயனில்லாமல் போகிறது. பொருமையுடன் தொடர்ந்து நன்மையைச் செய்யுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு உங்கள் கடமைகளை நிறைவேற்ற இது அத்தியாவசியமானது. ***Letter 8a 1896.***

### *குணங்களை வடிவமைக்கும் தேவனின் வேலையாட்கள்*

உங்கள் பிள்ளைகளின் அறிவாற்றல் ஒரு வடிவத்தை அடைந்துகொண்டிருக்கிறது. குணமானது உருவாகிக்கொண்டிருக்கிறது. எந்த வடிவத்தை அது பெற்றுக்கொள்ளுகிறது என்பதே கேள்வி. தேவனின் வேலையாட்களாக பெற்றோர் உள்ளனர் என்பதை அவர்கள் நினைவில் கொள்ளட்டும். அவர்கள் கல்லறைக்கு சென்ற பிறகும் அவர்களது வேலை எப்படிப்பட்டதா யிருந்திருக்கின்றது என்பது தெரியவரும். ***Pacific Health Journal Jan 1890.***

**தெய்வீக சாயலை பதித்தல்**

ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் எச்சரிப்புகளையும் கொடுங்கள். உங்களது பார்வை, வார்த்தை, செயல் யாவும் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை நேரடியாக பாதிக்கிறது என்பதை மனதில் கொள்ளுங்கள். ஒரு ஓவியத்தை வரைவதோ, அல்லது உருவத்தை செதுக்குவதோ உங்கள் வேலையல்ல. தேவ சாயலை ஒரு ஆத்துமத்தின் மீது நீங்கள் பதிக்க வேண்டும். ***Signs of the Times, Mar 25, 1882.***

***பாகம் - X***

***நல்ல ஒழுங்கை கொண்டுவருதல்***

***அதிகாரம் - 41***

***ஒழுங்குப்படுத்துவதின் நோக்கங்கள்***

***திறமையான சுய நிர்வாகமே முதன்மையான இலக்கு***

தன்னை சரியாக பராமரித்துக்கொண்டு, அதற்கேற்ற ஒரு நிர்வாகத்தை அப்பியாசிக்க வைப்பதற்கு நாம் பிள்ளைகளை ஒழுங்குபடுத்துகிறோம். பிள்ளையானவனுக்கு தன்நம்பிக்கையும் சுய கட்டுப்பாடும் கற்றுத்தரப்பட வேண்டும். புரிந்துகொள்ளும் அளவு வளர்ந்தவுடன் தன் பகுத்தறிவை கீழ்ப்படிய பயன்படுத்த வேண்டும். கீழ்ப்படிவது எல்லா விதத்திலும் நியாயமானது என்பதை நீங்கள் கையாளுவதைக் கொண்டு அவன் புரிந்துக் கொள்ளவேண்டும். எல்லா காரியங்களும் சட்டங்களுக்கு கீழாகவே இயங்குகின்றன என்பதை பிள்ளை பார்க்க உதவுங்கள். கீழ்ப்படியாமை பெருந்தோல்விக்கும் துன்பத்திற்குமே வழிநடத்தும் என்பதை அறிந்துகொள்ளட்டும். ***"செய்யாதிருப்பாயாக"*** என்ற வார்த்தையில் தேவனின் அன்பின் எச்சரிப்புகளைக் கேட்கிறோம். நஷ்டத்திலிருந்தும் உபத்திரபத்திலிருந்தும் நம்மை காப்பாற்ற தேவன் இவ்வெச்சரிப்புகளைக் கொடுக்கிறார். ***Education, p. 287.***

***நமது சித்தத்தின் வல்லமை***



1ST Proof

தவறு செய்யும் ஒரு நபர், தான் செய்தது தவறு என்பதை புரிந்துகொண்டு மனமாற வேண்டும். இதுவே கடிந்துகொள்ளுதலின் உண்மையான நோக்கமாக இருக்கிறது. இந்த அனுபவத்தை அவர் பெற்றவுடன் மன்னிப்பையும் வல்லமையையும் அருளும் தேவனை அவருக்குச் சுட்டிக் காட்டுங்கள். ***Education, p. 291.***

மரியாதைக்குரிய நபர்களாகவும் பயனுள்ளவர்களாகவும் மாறும் வல்லமை தங்களுக்குள்ளே இருக்கிறது என்பதை உணர மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். இந்த வழிநடத்தலே நிரந்தர வெற்றியைக் கொடுக்கும். ***Fundementals of Christian Education, p. 58.***

***தீய சுபாவங்களையும், தவறான இயல்புகளையும் கெட்ட பழக்கங்களையும் திருத்துங்கள்***

தவறுகளை தடுத்து, பிள்ளைகளை சரியாக வழிநடத்தி அவர்களை கட்டுப்படுத்த வேண்டும். இந்த வேலை பெற்றோர்க்கு கொடுக்கப்படுகிறது. பிள்ளைகளை தங்களது எல்லா ஆசைகளையும் சுய நலமான விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொள்ள அனுமதிப்பதைவிட பெரிய தீமை எதுவும் இருக்க முடியாது. தங்களது சொந்த நாட்டங்களை பூர்த்தி செய்துகொண்டு தங்களை சந்தோஷமாக வைத்துக்கொள்ள மட்டுமே வாழுகிறார்கள் என்று அவர்கள் நினைக்கும்படி விடுவது, அவர்களுக்குப் பெரிய தவறை இழைப்பதாகும். இதைவிட பெரிய தவறு அவர்களுக்கு இழைக்கப்பட முடியாது. வாலிபர்களுக்குச் சரியான ஒரு கல்வியைக் கொடுத்து அவர்களை ஒழுங்குபடுத்த வேண்டும். தவறான பழக்கங்களும் சுபாவங்களும் திருத்தப்பட்டு தீமைக் கேதுவான நாட்டங்கள் வெட்டப்பட வேண்டும். இதை செய்யும் பெற்றோர்கள் தேவைப்படுகிறார்கள். ***Manuscript 12, 1898.***

***சாத்தானின் பிடிகளைத் தகர்த்தெரியுங்கள்***

தாய்மார்களே உங்கள் பிள்ளைகளின் விதி உங்கள் கரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களது விதியை நிர்ணயிப்பதில் பெரும்பாண்மையான பங்கு உங்களுடையதாக இருக்கப்போகிறது. உங்கள் வேலையில் தோல்வியுற்றால் பிள்ளைகளை சாத்தானின்

பக்கமாக நிறுத்துகிறீர்கள். அவர்கள் மற்றவர்களின் வாழ்வையும் சீரழிப்பார்கள். உங்கள் உத்தமமான ஒழுங்கும் தெய்வீக உதாரணமும் அவர்களை கிறிஸ்துவண்டை அழைத்து வரும். அவர்கள் அநேகரை அவரிடம் கொண்டு செல்லுவார்கள். உங்களது நல்ல வேலையின் நிமித்தமாக அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவார்கள். ***Signs of the Times, Feb. 9, 1882.***

அக்கரையுடன் கவனம் செலுத்தி விட்டவைகளை பிடிப்போம். சாத்தானின் பிடிகளை உடைத்தெரிவோம். நாம் நேசிக்கும் பிள்ளைகளை இரக்கத்துடன் திருத்தி எதிரியின் வல்லமையிலிருந்து பாதுகாப்போம். சோர்ந்துவிடாதீர்கள். ***Review and Herald, July 16, 1895.***

***தேவனின் அதிகாரத்தையும் பெற்றோரின் அதிகாரத்தையும் மதிக்க கற்றுக்கொடுங்கள்***

பிள்ளைகள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி ஒரு நல்ல பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். நல்லதொரு ஒழுங்கிற்குள்ளாக வரும் ஒரு கல்வியைக் கொடுக்க வேண்டும். அதிகாரத்தை பிள்ளைகள் மதிக்க வேண்டும். தேவ அதிகாரத்தையும் மதிக்கும் குணம் பிள்ளைகளிடம் உருவாகும். பரலோக குடும்பத்திற்கு செல்வதற்கான ஆயத்த பயிற்சி இப்பூலோக குடும்பத்தில் கொடுக்கப்படட்டும். தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தின் வழியாக வரும் கடமைகளை நிறைவேற்றி பரலோகத்தின் மன்றங்களுக்காகவும் செல்பதற்கேதுவான பயிற்சி பிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் கொடுக்கப்படட்டும். ***Review and Herald, Mar. 13, 1894.***

எல்லா அறிவிற்கும் ஊற்றாகிய தேவன் நாம் பரலோகம் செல்வதற்கான தகுதியை திட்டவட்டமாக கூறியுள்ளார். ***“ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.” வெளி. 22:14.*** பரலோகம் செல்வதற்கு தேவனது கற்பனைகளை கைக்கொள்ளுவதே நாம் கொடுக்கும் விலை. பிள்ளைகள் இதனுடன் கர்த்தருக்குள் பெற்றோர்க்கும் கீழ்ப்படிய வேண்டும். பிள்ளைகள்



1ST Proof

கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடம் இதுவே. ***Manuscript 12a, 1896.***

***கட்டாயத்தினால் கீழ்ப்படிதல் கூடாது***

பிள்ளைகளிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதை தெளிவாக அவர்களிடம் சொல்லுங்கள். உங்கள் வார்த்தைகளை சட்டமாக மதித்து கீழ்ப்படிய வேண்டியதை அவர்கள் புரிந்துகொள்ளட்டும். இதன் வழியாக தேவனின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறீர்கள். தேவ கட்டளைகளை எதை செய்ய வேண்டும், எதை செய்யக் கூடாது என்பதை தெளிவாகக் காட்டுகிறது. இக்கோட்பாட்டின் அடிப்படையில் உங்கள் பிள்ளை உங்களுக்கு கீழ்ப்படியட்டும். கட்டாயத்தின் பேரில் கீழ்ப்படியக் கூடாது. ***Review and Herald, Sep. 15, 1904.***

***முழுமையான நம்பிக்கையை விளக்கும் பாடம்***

ஈசாக்கு தனது அன்பான தகப்பனின், நடுங்கும் கரங்களினால் கட்டப்படுகிறான். தேவன் சொல்லியதன் நிமித்தம் அந்த இரக்கம் நிறைந்த தந்தை இதை செய்கிறார். தந்தையின் நேர்மையை மகன் முழுமையாக நம்பியதால் தான் பலியாகும்படி மகன் அனுமதிக்கிறார்.

ஆபிரகாமின் இந்த விசுவாச செயல் நமது நன்மைக்காக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தேவன்மீது நாம் கொள்ள வேண்டிய நம்பிக்கையின் பெரிய பாடத்தை இது தருகிறது. எவ்வளவு நெருக்கடிக்குள்ளாக நாம் தள்ளப்படாமல் எவ்வளவு விபரீதமானதாக தெரிந்தாலும் தேவ கட்டளைகளை நாம் கைக்கொள்ள வேண்டும். பெற்றோர்களுக்கு முழுமையாக கீழ்ப்படிய வேண்டும் என்ற பாடத்தை இது பிள்ளைகளுக்குப் புகட்டுகிறது. தேவனுக்குக் கொடுக்க முடியாத அளவிற்கு விலைமதிப்பானது நம்மிடம் எதுவும் இல்லை. ஆபிரகாமின் கீழ்ப்படிதல் இதை நமக்கு கற்றுக் கொடுக்கிறது. ***Testimonies for the Church, Vol. 3, p. 368.***

***வாலிபர்கள் நம்பிக்கைக்கு பாத்திரவான்களாக நடப்பார்கள்***

பெரியோர்கள் தங்கள்மீதும் நம்பிக்கை வைக்கிறார்கள் என்று வாலிபர்களின் மனதில் நாம் பதிய வைக்க வேண்டும். அவர்களுக்கென்று ஒரு மதிப்பு உண்டு. இது அவர்களது உரிமை. செல்லவோ, வரவோ, உட்காரவோ, நிற்கவோ, எதை செய்யவோ தங்களுக்கு உரிமை இல்லை என்று வாலிபர்கள் நினைக்கக் கூடாது. இது தவறான தாக்கத்தைக் கொண்டுவந்து, அவர்களின் ஒழுக்கத்தை பாதிக்கும். அவர்களது நேரத்தை மன மகிழ்ச்சியுடன் கழிக்க முடியாமல் ஆகிவிடும். எப்பொழுதும் பெற்றோர்கள் நம்மை கண்காணித்துக்கொண்டே இருக்கிறார்கள் என்று அவர்கள் நினைக்கும்படி செய்வது மோசமானது. ஞானமான பெற்றோர்கள் வாலிபரை பார்க்கும்பொழுதே அவர்களுக்குள் என்ன நடக்கின்றது என்பதை கனித்துவிடுவார்கள். தீமையை மேற்கொள்ளுவதற்கான திட்டங்களை ஏரெடுப்பார்கள். தொடர்ந்து பிள்ளை என்ன தவறு செய்கிறான் என்று ஒரு காவலாளியைப் போல் செயல்படுவது இயற்கையானது இல்லை. எந்த தீமையை வாலிபர் செய்யக் கூடாதென்று இப்படி காவல்காக்கப்படுகிறதோ, அந்த தீமையை இதுவே விளைவித்துவிடும். வாலிபர்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். உடற்பயிற்சியும், மன மகிழ்ச்சியும் விருப்பப்படக் கூடிய ஒரு சூழலும் அவர்களை சுற்றி இருப்பது அவசியம். சரீர ஆரோக்கியமும் கூடும் குணமும் சீராக வளர்ச்சியடையும். ***Fundementals of Christian Education, p. 114.***

***சுய நிர்வாகமும், சர்வாதிகாரமும்***

அநேக குடும்பங்களில் பிள்ளைகள் சரியாக பயிற்றுவிக்கப்பட்டு, சரியான ஒழுங்கிற்குள் கொண்டுவரப்பட்டதைப்போல் தோன்றுகிறது. ஆயினும் தங்களை கட்டுப்படுத்தும் சூழல் மாறும்பொழுது சுயமாக சிந்தித்து செயல்பட்டு தீர்க்கமாக முடிவெடுக்க முடியாதவர்களாக இருப்பர். இப்பிள்ளைகள் ஒரு இரும்புக் கோலின் ஆட்சிக்கு கீழாக வழிநடத்தப்பட்டிருக்கிறார்கள். சுயமாக சிந்தித்து செயல்பட வேண்டியவைகளிலும் அப்படி செய்ய அவர்கள் அனுமதிக்கப்பட வில்லை. ஆதலால் தங்கள்மீது நம்பிக்கை இல்லாதவர்களாக இருக்கிறார்கள். தங்களின் சொந்த பகுத்தறிவை சார்ந்து செயல்பட முடியாமல் நிலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களது மனம் சரியாக வளர்ந்து பெலமடையவில்லை. பெற்றோர்கள் தங்களை முற்றிலும் கட்டுப்படுத்திவிட்டதால் பெற்றோர்களையே சார்ந்து இருக்கிறார்கள். பெற்றோர்களே இவர்களின் சிந்தையாகவும் அறிவாகவும் செயல்படுகிறார்கள்.

இது ஒரு புறம் இருக்க, பெரியோர்களை கேட்காமல் எதையும் சுதந்திரமாக செய்துவிடலாம் என்பதைப் போலவும் பிள்ளைகள் நினைத்துவிடக் கூடாது. வயதானவர்களின் கணிப்புக்களையும், ஆலோசனைகளையும் மதிக்க கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அனுபவம் நிறைந்த ஆசிரியர்களும் பெற்றோர்களும் தங்களை வழிநடத்த வாலிபர்கள் அனுமதிக்க வேண்டும்.

பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் சிந்தையுடன் தங்கள் சிந்தைகளையும் இணைக்க வேண்டும். இதற்கான ஒரு கல்வி கொடுக்கப்பட வேண்டும். அப்பொழுது பெரியோரின் ஆலோசனைகளின் நன்மையை அவர்கள் பார்த்து அதன்படி செயல்படுவார்கள். பிறகு பெற்றோரின், மற்றும் ஆசிரியர்களின் கரங்களை விட்டு பிரியும்பொழுது காற்றடித்துச் செல்லும் பதறைப்போல் இருக்க மாட்டார்கள்.

தனியாக சிந்தித்துச் செயல்பட பயிற்சிக் கொடுக்காமல், சர்வாதிகாரத்துடன் கடுமையான விதத்தில் பிள்ளைகள் வளர்க்கப்படக் கூடாது. இப்படியாக வளர்க்கப்படுவோர் தங்கள்மீது ஒரு நம்பிக்கையை வளர்த்துக்கொண்டாலும், இத்தவறான வழிநடத்தல் பெலவீனமான மனம் படைத்தவர்களையே உண்டு பண்ணும். மனதளவிலும் ஒழுக்கத்திலும் பெலனற்று இருப்பார்கள். உலகத்தை சந்தித்து தனியாக செயல்படும்பொழுது மிருகங்களைப்போலவே நடத்தப்பட்டதையும் சரியான கல்வி கொடுக்கப்படாததையும் வெளிப்படுத்துவார்கள். அவர்களது சொந்த சித்தம் சரியாக வழிநடத்தப்பட வில்லை. பெற்றோர்களின், ஆசிரியர்களின் கடுமையான வழிநடத்துதலினாலும் கட்டாயத்தினாலும் இவர்களது சுய சித்தம் ஒடுக்கப்பட்டது. ***Testimonies for the Church, Vol. 3, 132, 133.***

***ஒரு மனம் இன்னொரு மனதின் மீது ஆதிக்கம் செலுத்துவது தீமையைக் கொண்டு வரும்***

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

தங்கள் பிள்ளைகளின் சிந்தையையும், மனதையும் முழுமையாக கட்டுப்படுத்துவதாக சில பெற்றோர்களும் ஆசிரியர்களும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அந்த பிள்ளைகளின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது என்பதை அவர்களால் பார்க்க முடிந்தால் இப்படி பெருமை பாராட்ட மாட்டார்கள். பயத்தினாலும், கட்டாயத்தினாலும் இப்பிள்ளைகள் கட்டுப்படுத்தப்பட்டனர். வாழ்க்கையின் பொறுப்புக்களை சுமக்க ஆயத்தமில்லாதவர்களாக இருக்கிறார்கள். தனியாக செயல்படும் காலம் வரும்பொழுது நிச்சயமாக தவறான வழியை தெரிந்துகொண்டு சோதனையின் விழுந்துவிடுவார்கள். இவ்வாழ்க்கையில் அவர்கள் வெற்றியைக் காண்பதில்லை. ஆவிக்குரிய வாழ்க்கையிலும் இக்குறைபாடுளை வெளிப்படுத்துகின்றனர். பிள்ளைகளையும் வாலிபர்களையும் வழிநடத்திக் கொண்டிருப்போர், தங்களது தவறான வழிநடத்துதலினால், பிள்ளைகளின் எதிர்காலம் எப்படியாக பாதிக்கப்படுகிறது என்பதை பார்க்க முடிந்தால், தங்களது கல்வி முறையையே மாற்றிவிடுவார்கள். பிள்ளைகளை முழுமையாக கட்டுபடுத்திவிட்டோம் என்று பெருமை பாராட்டும் ஆசிரியர்கள் வெற்றியை சந்திக்கும் ஆசிரியர்கள் அல்ல. தற்காலிகமாக வேண்டுமெனில் நன்மையானதாக தெரியலாம்.

ஒரு மனம் இன்னொரு மனதின் மீது முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்துவது தேவன் வரையறுத்த வழி அன்று. பிள்ளைகளின் தனித்துவங்களை தங்களது தனித்துவத்திற்கு இணைக்க நினைப்பவர்கள் ஆழ்ந்த பயத்தை கொண்டுவரும் தேவையில்லாத பொறுப்பை சுமக்கிறார்கள். இப்படியாக பயிற்றுவிக்கப்பட்டவர்கள் நல்ல இராணுவ வீரர்களைப்போல் வெளியே சாட்சி கொடுக்கலாம். கட்டுப்பாடு எடுக்கப்படும் பொழுது சுயமாக செயல்படும் திறன் இல்லாதவர்களாகவே இருப்பார்கள். ***Testimonies for the Church, Vol. 3, 133, 134.***

***திறமையான பொறுமையான முயற்சி***

குணத்தை சரியாக உருவகிக்க அதிகமான பொறுமையும் விசேஷ திறமையும் தேவை. பிள்ளைகள் பெற்றோர்களது பாவ சுபாவங்களையும், தீமைகளையும், சுதந்தரித்துக் கொண்டே பிறக்கிறார்கள். இது பெற்றோர்களின் பாவத்தின் நேரடியான விளைவாக இருக்கிறது. இப்படிப்பட்ட பிள்ளைகள் ஞானத்துடனும், கவனமான பராமரிப்பிலும் வழிநடத்தப்பட வேண்டும். அறிவும் ஒழுக்கமும் பெலப்படுத்தப்பட வேண்டும். பெற்றோர்களின் பொறுப்பும் மிக பெரியது. தீய சுபாவங்கள் நிறுத்தப்பட வேண்டும். இளகிய மனதுடன் கடிந்து கொள்ள வேண்டும். நன்மைக்கேதுவாக மனம் தூண்டப்பட வேண்டும். தன்னை சரியாக நிர்வகித்துக் கொள்ள பிள்ளை ஊக்கப்படுத்தப்பட வேண்டும். சம நிலையான மனதுடன், நீதியையும் நியாயத்தையும் கைக்கொண்டும் இவ்வேலை செய்யப்பட வேண்டும். இல்லையெனில் இவ்வேலையின் நோக்கம் கண்டடையப்பட முடியாது. ***Christian Temperance and Bible Hygine p. 138.***

1^ST Proof

***அதிகாரம் - 42***

***ஒழுக்கத்தை துவங்க வேண்டிய காலம்***

***கீழ்ப்படியாத பிள்ளைகள் இறுதிக்கால அடையாளங்களில் ஒன்று***

பெற்றோர்களுக்கு பிள்ளைகள் கீழ்ப்படியாமல் இருப்பது கடைசி கால அடையாளங்களில் ஒன்று. பெற்றோர்கள் தங்கள் பொறுப்பை உணருகிறார்களா? அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கண்காணிக்க வேண்டியதை மறந்துவிட்டது போன்று இருக்கிறார்கள். பிள்ளைகள் தவறான ஆசைகளை நிறைவேற்றிக் கொண்டு தங்களுக்கு கீழ்ப்படியாமல் போகும்படி அனுமதிக்கிறார்கள். ***Review and Herald, Sep. 19, 1854.***

பிள்ளைகள் கர்த்தரின் சுதந்திரவாளிகளாக இருக்கிறார்கள். அதற்கேற்ற ஒரு பயிற்சியை பெற்றோர்கள் கொடுக்க வேண்டும். இப்பயிற்சி அவர்கள் கர்த்தரின் வழியைக் கைக்கொள்ள உதவும். இதை பெற்றோர்கள் செய்யாமல் போனால் ஒரு உன்னதமான கடமையை உதாசீனப்படுத்துகிறார்கள். பிள்ளைகள் கீழ்ப்படியாதவர்களாக, நன்றியில்லாமல், பரிசுத்தமின்றி ஒழுக்கமற்று அநாகரீகமாக இருப்பது தேவ சித்தம் அல்ல. மேட்டிமையான சிந்தையுடன், தேவனுக்கு பயப்படுவதைவிட சிற்றின்ப பிரியர்களாக இருக்கக் கூடாது. சமுதாயத்தின் இந்த அபல நிலை கடைசி கால அடையாளங்களில் ஒன்று என்பதை வேதம் தெளிவுபடுத்துகிறது. ***Signs of the Times, Sep. 17, 1814.***

***பிள்ளைகளின் ஆசைகளுக்கேற்ப நடக்கும் பெற்றோர்கள் பரலோக ஒழுங்கிற்கு தகுதியடைவதில்லை***

பரலோகில் பரிபூரணமான ஒழுங்கு நிலவுகிறது. சிறு குறைகூட இராதபடி எல்லோரும் ஒருவரோடொருவர் இசைந்து செயல்படுகிறார்கள். பெற்றோர் இவ்வுலகிலும் பிள்ளைகளை அவர்களது அதிகாரத்திற்கு கீழாகக் கொண்டுவர முடியாமல் போனால், பரலோகம் சென்று தூதர்களுடன் ஐக்கியம் கொள்ள பிள்ளைகள் தகுதியடைவார்கள் என்று எப்படி நம்பிக்கைக் கொள்ள முடியும். சமாதானமும் ஒருங்கிணைப்பும் நிறைந்த உலகம் அது. ***Testimonies for the Church, Vol. 4, 199.***

இவ்வுலகில் ஒழுங்கையும் ஒழுக்கத்தையும் மதிக்காதவர்கள் பரலோகின் ஒழுங்கையும் மதிக்கமாட்டார்கள். அவர்கள் அங்கு அனுமதிக்கப்பட முடியாது. ஒழுங்கை நேசித்து ஒழுக்கத்தை மதிப்பவர்களே அங்கு செல்ல தகுதிபெறுவார்கள். இந்த உலகிலும் உருவாக்கப்படும் மனமே எதிர்காலத்தை நிர்ணயிக்கிறது. கிறிஸ்து வரும்பொழுது எவர் குணத்தையும் அவர் மாற்றுவதில்லை. பிள்ளைகளுக்கு நன்மையை பயக்கும் எந்த கடமையையும் பெற்றோர்கள் புறக்கணிக்கக் கூடாது. சமுதாயத்திற்கு ஒரு ஆசீர்வாதமாக இருக்கும்படி பிள்ளைகளை பயிற்றுவிக்க வேண்டும். இதை செய்தால் நித்திய ஜீவனை பரிசாக நித்தியத்தில் பெறலாம். ***Testimonies for the Church, Vol. 4, p. 429.***

***ஒழுக்கம் எப்பொழுது துவங்க வேண்டும்***

ஒரு குழந்தை எப்பொழுது தன் சுய சித்தத்தை செய்ய தேர்ந்தெடுத்து செயல்படுகிறதோ அந்த நொடிப் பொழுதிலும் ஒழுக்கத்திற்கான கல்வி கொடுக்கப்பட ஆரம்பிக்கப்பட வேண்டும். இது பெரிதாக வெளியில் தெரியாத ஒரு கல்வியாக இருக்கிறது. ஆயினும் வல்லமையான இந்த வேலை அப்பொழுதே துவங்க வேண்டும். இந்த வேலையின் பாரத்தை தாயானவளே அதிகமாக சுமக்க வேண்டியுள்ளது. குழந்தையை முதலில் பராமரிப்பது தாய். நல்ல குணத்தை உருவாக்கும் கல்வியின் அஸ்திபாரத்தை அவள் இடவேண்டும்.

அநேக நேரங்களில் குழந்தைகளும் அடம் பிடிப்பதைப் பார்க்கிறோம். குழந்தையின் தவறான விருப்பங்களும் தாயின் அதிகாரத்திற்குள்ளாக கொண்டுவரப்பட வேண்டும். இது நடக்காமல் இருந்தால் பிள்ளையின் சிந்தையை சாத்தான் தனது கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்து விடுவான். அவனது சித்தத்திற்கேற்ற ஒரு குணத்தை உருவாக்குவான். ***Letter 9, 1904.***

துவறான பண்புகள் பெலமடைந்த பின் குழந்தையை திருத்த முயலுவது பெரிய தவறாகும். பிள்ளைகள் சுய நலம் நிறைந்தவாகளாக நேசிக்கப்பட முடியாதவர்களாக மாறிவிடுகின்றனர். தங்களையும் நேசிக்க முடியாமல் மற்றவர்களையும் நேசிக்க முடியாதவர்களாக இருப்பார்கள். அத்திருப்தியால் நிரப்பப்படுவார்கள். தாயின் வேலை விரைவாக தொடங்க வேண்டும். பிள்ளையை சாத்தான் கட்டுப்படுத்த வாய்ப்பு கொடுக்கப்படக் கூடாது. சிந்தையையும் குணத்தையும் கொள்ளை கொண்டு விடுவான். ***Manuscript 43, 1900.***

***தீமையின் முதற் சுவடு தெரியும் பொழுதே அதை நிறுத்துங்கள்***

பெற்றோர்களே ஒழுக்கத்தின் பாடங்களை உங்கள் பிள்ளைகள் கைக்குழந்தைகளாக இருக்கும்பொழுதே நீங்கள் துவங்க வேண்டும். உங்கள் சித்தத்திற்கு அவர்கள் சித்தத்தை சமர்பிக்க் கற்றுக் கொடுங்கள். சம நிலையான மனதுடன் உறுதியுடன் செயல்பட்டு இதை செய்யலாம். பெற்றோர்கள் தங்கள் மீது முழுமையான கட்டுப்பாட்டை கொண்டிருக்க வேண்டும். மென்மையாகவும் அதே நேரத்தில் உறுதியுடனும் பிள்ளையின் சித்தத்தை வளைக்க வேண்டும். பெற்றோரின் விருப்பத்திற்கு இசைவதை தவிர பிள்ளை வேரு எதையும் எதிர்பார்க்கக் கூடாது. சரியான நேரத்தில் பெற்றோர்கள் வேலையை துவங்குவதில்லை. கோபத்தின் சிறு சுவடு தெரியும் வேளையில் அது கட்டுப்படுத்தப்படுவதில்லை. பிள்ளைகள் இக்குணத்தை மாற்றிக் கொள்ளாதவர்களாக வளருகிறார்கள். இது அவர்களுடன் சேர்ந்து வளர்ந்து பெலனடைகிறது. ***Testimonies for the Church, Vol. 1, p.218.***

***தண்டிக்கும் வயது வரவில்லை***

குடும்பத்தை நடத்த தேவன் கொடுத்திருந்த கட்டளைகளின்படி ஏலி தன் வீட்டை நடத்தவில்லை. அவரது சொந்த அறிவை பயன்படுத்தினார். அந்த பிரியமான தகப்பன் தன் மகன்களின் தவறுகளை

1ST Proof

சிறு வயதில் திருத்தாமல் விட்டார். சில காலத்திற்கு பிறகு இத்தீய பண்புகளை விட்டுவிடுவார்கள் என்று தனக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டார். இன்றைக்கு அநேகர் இந்த தவறையே செய்கிறார்கள். தேவன் அவன் வார்த்தையில் சொல்லியிருப்பதைவிட வேரு ஒரு சிறந்த வழியை அறிந்திருப்பதாக நினைக்கின்றனர். பிள்ளைகள் சிறியவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லி அவர்கள் தவறுகளை வளர்க்கிறார்கள். வயதானவுடன் புரிந்துகொள்ளுவார்கள் என்றும் சொல்லுகின்றனர். இந்த வகையில் தவறான பழக்கங்கள் இயல்பாகவே மாறுகிறது. எந்த கட்டுப்பாடும் இன்றி வளருகிறார்கள். இத்தீய பண்புகள் அவர்களுக்கே சாபமாக இருக்கும். இவைகளை மற்றவர்களிடமும் பரப்புவார்கள்.

வாலிபர்களை தங்கள் விருப்பம்போல இருக்க விடுவதைவிட பெரிய சாபம் எதுவும் இல்லை. பெற்றேர்கள் பிள்ளைகளின் எல்லா ஆசைகளையும் நிறைவேற்றுகிறார்கள். நன்மையாக இல்லாததையும் அனுமதிக்கிறார்கள். விரைவில் பிள்ளைகள் பெற்றோர்மீது கொண்டுள்ள மதிப்பை விட்டுவிடுவார்கள். மனித அதிகாரத்தையும் தேவ அதிகாரத்தையும் அசட்டை செய்வார்கள். சாத்தானின் கைதிகளாக மாறி அவன் சித்தத்தை செய்வார்கள். ***Patriachs and Prophets p. 578, 579.***

***வீட்டின் பயிற்சிக்கு முதலிடம் கொடுங்கள்***

அநேகர் ஊழியக்காரர்களின் குடும்பங்களையும் மதிப்பிற்குரியவர்களின் குடும்பங்களையும் சுட்டிக் காட்டுகின்றனர். அவர்களது குடும்பங்களில் குறைகளை சொல்லுகின்றனர். மேன்மை பொருந்திய இம்மனிதர்களே இதில் தோற்கும் பொழுது தாங்கள் வெற்றி பெறுவது சாத்தியமில்லை என்றும் கூறுகின்றனர். இங்கு ஒரு கேள்வி கேட்கப்பட வேண்டும். இம்மனிதர் நல்ல உதாரணங்களாக இருந்து நல் ஆலோசனைகளை கொடுத்திருக்கிறார்களா? பிள்ளைகளை கட்டுப்படுத்தி சரியாக வழிநடத்தியிருக்கிறார்களா? இவைகள் பிள்ளைகளின் அடிப்படை உரிமைகள். இந்த அத்தியாவசியங்களை பெற்றோர் புறக்கணித்திருப்பர். இதனால் பொருமையில்லாத, சமநிலையாக செயல்படாத, அறியாமையின் பிள்ளைகளை சமுதாயத்திற்கு கொடுக்கின்றனர். நடைமுறை வாழ்க்கைக்கு இவர்கள் ஏதுவானவர்களாக இருப்பதில்லை. இத்தவறினால் உலகத்தை காயப்படுத்துகிறார்கள். அவர்களது மற்ற நற்கிரியைகளை விட இத்தீமையின் பாதிப்பே அதிகமாக இருக்கும். இந்த பிள்ளைகள அவர்களுடைய பிள்ளைகளுக்கு தங்கள் துற்குணங்களை கொடுப்பார்கள். அவர்களின் தீமையான உதாரணமும், தாக்கமும், சமுதாயத்தை தீட்டுப்படுத்தி சபைக்கு பெரிய உபத்திரவத்தை கொண்டு வருகிறது. தனது பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை எந்த மனிதனும் அசட்டை பண்ணக் கூடாது. இதை அசட்டை செய்து வேரு எந்த வகையிலும் பெரிய சாதனை செய்வதாக நினைத்துக் கொள்ள முடியாது. ***Signs of the Times, Feb. 9, 1882.***

***பரலோக ஒத்துழைப்பு வாக்களிக்கப்படுகிறது***

சரியான ஒரு ஒழுக்க முறையை தேவன் ஆசீர்வதிப்பார். என்னையன்றி உங்களால் எதையும் செய்ய முடியாது என்று கிறிஸ்து கூறுகிறார். பிள்ளைகளை சரியாக வழிநடத்தாத பெற்றோர்களுடன் பரலோக வாசிகள் ஒத்துழைக்க முடியாது. சாத்தான் பிள்ளைகளை கையாள இவர்கள் வட்டுவிடுகிறார்கள். தேவ ஆவியானவரின் கிரியைக்கு எதிராக பிள்ளைகள் செயல்பட சாத்தான் அவர்களை பயன்படுத்துகிறான். ***Manuscript 126, 1897.***

***அதிகாரம் - 43***

***வீட்டில் ஒழுக்கம்***

***ஒழுக்கமான, ஒழுங்கான குடும்பங்கள்***

கிறிஸ்தவர்கள் என்று அநேகர் தங்களை பரைசாற்றிக் கொள்ளுகிறார்கள். ஒழுக்கமான ஒழுங்கான குடும்பங்களை உலகிற்கு முன்பாக வைப்பதே இவர்களது கடமையாகிறது. ஊண்மையான கிறிஸ்தவத்தின் வல்லமையை இக்குடும்பங்கள் காட்ட வேண்டும். ***Review and Herald, Apr. 13, 1897.***

பிள்ளைகளை ஞானமாக பயிற்றுவித்து ஒரு நல்ல கல்வியைக் கொடுப்பது எளிதானதல்ல. பகுத்தறிவையும் தேவபயத்தையும் பெற்றோர் தங்கள் முன்பாக வைக்க பிரயாசப்படும்பொழுது பிரச்சனைகள் எழும்.

1ST Proof

பிள்ளைகள் தங்கள் இதயங்களை பற்றியிருக்கும் தீமையை வெளிப்படுத்துவார்கள். மூடத்தனத்தையும் முழு சுதந்திரத்தையே நேசிப்பார்கள். கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் வெறுப்பார்கள். வஞ்சகத்தைக் கையாண்டு பொய் பேசுவார்கள். அநேக பெற்றோர்கள் இத்தவறுகளுக்காக பிள்ளைகளை தண்டிப்பதில்லை. இவைகளை பார்க்காத குருடர்களைப்போன்று இருக்கிறார்கள். ஆழமாகப் பார்த்து பகுத்தறிவதில்லை. எனவே பிள்ளைகள் தங்கள் தவறுகளை தொடர்ந்து செய்கிறார்கள். தேவனால் ஏற்றுக் கொள்ள முடியாத குணத்தை உருவாக்கிக்கொள்ளுகிறார்கள்.

தேவ வார்த்தையில் சொல்லப்பட்டிருக்கும் தரத்தை பெற்றோர் ஒதுக்கிவிடுகின்றனர். இது அவர்களுக்கு பிரியமானதாக இல்லை. இதன்படி பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க விரும்புவதில்லை. அநேக பெற்றோர்கள் வேத வார்த்தைகளின் கோட்பாடுகளை வெறுக்கின்றனர். இவைகள் பெரிய பொறுப்புக்களை கொண்டு வருகின்றன. தேவனின் வழிகளே சிறந்தவை என்பதை பிறகு பார்ப்பார்கள். பாதுகாப்பிற்கும் மகிழ்ச்சிக்குமான ஒரே வழி தேவ சித்தத்திற்கு கீழ்படிவதில் உள்ளது. ***Review and Herald, Mar. 30, 1897.***

### *பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவது எளிதல்ல*

இன்றைய சமுதாயத்தில் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தி வேதத்தின்படி அறிவுறுத்துவது சுலபமானதன்று. தேவ வார்த்தைகளுக்கு இசைவாக பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுத்து, ஆபிரகாமைப்போன்று அவர்களை தேவ கட்டளைகளைக் கைக்கொள்ள செய்தால், இதை தவறாக புரிந்துகொள்ளுகிறார்கள். பெற்றோர்கள் தீவிரமாகவும் கடுமையாகவும் நடப்பதாக நினைத்துவிடுகின்றனர். ***Signs of the Times, Apr. 17, 1884.***

### *கட்டுப்பாட்டைப் பற்றிய தவறான கருத்துக்கள்*

தேவ ஆசீர்வாதங்களைப் பெற விரும்பினால் பெற்றோர்கள் ஆபிரகாம் செய்ததைச் செய்ய வேண்டும். தீமையை தடுத்து நன்மையை ஊக்குவியுங்கள். பிள்ளைகளின் விருப்பங்களுக்குச் செவி சாய்ப்பது போன்று இராமல் சில நேரங்களில் கட்டளையிட வேண்டியதாக இருக்கும். ***Letter 53, 1887.***

ஒரு பிள்ளையை அதன் சொந்த இயல்பான எல்லா ஆசைகளின் வழியை பின்பற்றவிடக் கூடாது. பிள்ளை தரம் தாழ்ந்து தீமையில் வல்லமை பெற்றுவிடும். ஞானமான பெற்றோர்கள், ***"உன் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள், எங்கு வேண்டுமானாலும் செல், எதை வேண்டுமானாலும் செய்"*** என்று சொல்லுவதில்லை. மாறாக ***" தேவ அறிவுரைகளைக் கேள்"*** என்பார்கள். ஞானமான கட்டுப்பாடுகளும் விதிகளும் இயற்றப்பட்டு பின்பற்றப்பட வேண்டும். குடும்ப வாழ்கையின் அழகும் காக்கப்படும். ***Counsels to Parents, Teachers and Students, p. 112.***

1ST Proof

### *ஆகானின் குடும்பம் ஏன் அழிந்தது*

ஆகானுடன் தொடர்பு கொண்டிருந்தவர்களும் எதனால் தண்டிக்கப்பட்டார்கள் என்பதை சிந்தித்திருக்கிறீர்களா? அந்த குடும்பத்தினரும் தேவ நியதிகளின்படி வழிநடத்தப்பட்டு கற்றுக் கொடுக்கப்பட வில்லை. தேவ பிரமாணத்தின்படி அவர்கள் வாழ்வு இல்லை. தேவ வார்த்தையை மீறும் சுதந்திரத்தை ஆகானுக்கு அவர் பெற்றோர்கள் கொடுத்திருந்தனர். அவரது வாழ்க்கையில் அவர் கற்றுக் கொண்டவைகளை தன் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தார். ஒரு மனம் நிச்சயமாகவே இன்னொரு மனதை பாதிக்கும். அவரின் உறவுகளுக்கும் தண்டனை கொடுக்கப்பட்டது. அவர்களுக்கும் பாவத்தில் பங்கிருந்தது என்பது தெளிவாகிறது. ***Manuscript 67, 1894.***

### *நல்ல பயிற்சியின் பெரிய தடை*

பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு தாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைப் புறக்கணிப்பது உலகத்தின் எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. கண்மூடித் தனமான பாசம் ஒரு நபரை உறவுகளுடன் பிணைக்கிறது. இப்பாசம் அளவிற்கு மீறி செல்லுகிறது. ஞானத்தினாலோ தேவ பயத்தினாலோ இது சமநிலைப்படுவதில்லை. பிள்ளைகளின் சரியான பயிற்சிக்குப் பெற்றோரின் இந்த கண்மூடித்தனமான பாசமே பெரிய தடையாக உள்ளது. தேவன் எதிர்பார்க்கும் ஒழுங்கையும்



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

ஒழுக்கத்தையும் இது தடுக்கிறது. இதினால் பெற்றோர்கள் பகுத்தறிவையே இழந்து விடுகிறார்கள். இது துன்மார்க்கரின் இரக்கத்தைப் போன்றதாகும். அன்பு என்ற போர்கையில் ஒரு பெரிய தீங்கு செய்யப்படுகிறது. இதுவே பிள்ளைகளை அழிவிற்குக் கொண்டு செல்லும். ***Review and Herald, Apr 6, 1897.***

தேவ கட்டளைகளுக்கும் மேலாக பெற்றோர்கள் பிள்ளைகளின்மீது பாசம் செலுத்தும் பெரிய அபாயம் உள்ளது. இது தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறது. பிள்ளைகளை மகிழ்விப்பதற்காக தேவன் அனுமதிக்காததை பிள்ளைகள் செய்ய விடுகின்றனர். ***Review and Herald, Jan 29, 1901.***

***பிள்ளைகளின் தவறுக்கு பெற்றோர்களே பொறுப்பாளிகள்***

இல்லத்தின் ஆசிரியர்களாக பெற்றோர்கள் இருக்கிறார்கள். பிள்ளைகள் பெற்றோர்களைக் கட்டுப்படுத்தி, தங்கள் சொந்த விருப்பங்களின்படி நடந்துகொண்டாலும், இந்த தவறுக்கு பெற்றோர்களே பொறுப்பாளிகள். சரியாக வழிநடத்தப்பட்டிருந்தால் பிள்ளைகள் எப்படிப்பட்டவர்களாக இருந்திருப்பார்கள் என்பதும் பார்க்கப்பட வேண்டும். பெற்றோர்கள் இதற்கும் பதில் கூற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ***Review and Herald, Sep 15, 1904.***

சொந்த நாட்டங்களின்படி செயல்பட்டு, கண்மூடித்தனமான பாசத்தைச் செலுத்தி, பிள்ளைகளின் ஆசைகளையே நிறைவேற்றுவது, தேவனுக்கும் மேலாக பிள்ளைகளை வைப்பதாகும். தீமையை திருத்த தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தை இவர்கள் பிரயோகிப்பதில்லை. தேவனை மகிமைப்படுத்துவதைவிட தங்கள் நற்பெயரை காத்துக் கொள்வதையே முதன்மையாக வைக்கின்றனர். தேவனை மகிழவைக்காமல் பிள்ளைகளை மகிழவைக்கவே ஆசைப்படுகின்றனர்.

தவறை கண்டிக்கும் துணிவில்லாதவர்களாக சிலர் உள்ளனர். ஆர்வமின்றி இக்காரியங்களில் சோம்பலாகவும் இருப்பர். குடும்பத்தையோ சபையையோ தூய்மைபடுத்த எந்த உண்மையான முயற்சியையும் ஏரெடுப்பதில்லை. இவர்களின் அசட்டைத்தனத்தினால் உருவான தீமைக்கு இவர்களே காரணமாகிறார்கள். பதில் சொல்ல வேண்டியவர்களாகிவிடுகின்றனர். பெற்றோர்களாகவும் போதகர்களாகவும் இருப்பவர்களுக்குத் தேவன் பிரத்தியேக அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். பெற்றோர்களாக இருப்பவர்களும் போதகர்களாக இருப்பவர்களும் தங்களுக்குக் கொடுக்கப்படுகிற அதிகாரத்தைக் கொண்டு தீமையை தடுக்க வேண்டும். இதைக் குறித்து நாம் ஒன்றும் செய்யாமலும் கண்டுகொள்ளாமலும் இருந்தால், அப்பாவத்தில் நாமும் பங்கு கொள்ளுவதற்கு இது சமமாகிறது. ***Patriarchs and Prophets p. 578.***

***பார பட்சத்துக்கு இடம் கொடுக்காதீர்கள்***

தங்கள் பிள்ளைகளுக்கே சாதகமாகவும் ஆதரவாகவும் இருப்பது பெற்றோர்களுக்கு இயற்கையான ஒன்று. ஒரு வேளை தாங்கள் விசேஷித்த திறமைகள் பெற்றிருந்தால் தங்கள் பிள்ளைகள் மற்ற பிள்ளைகளிவிட மேண்மையானவர்கள் என்று நினைத்துவிடக் கூடும். மற்ற பிள்ளைகளிடம் பெரிய குறைகளாக சுட்டிக்காட்டப்படுபவை தங்கள் பிள்ளைகளிடம் கண்டுகொள்ளப்படாமல் விடப்படும். தங்கள் பிள்ளைகளிடம் காணப்படும் அதே குறைகள் சுவாரசியமானதாக பார்க்கப்படும். இது ஒரு கிறிஸ்தவ பண்பல்ல. இப்படியாக நாம் நம் பிள்ளைகளுக்குச் சாதகமாக நடந்தால் அவர்களுக்குப் பெரிய தவறை இழைத்துவிடுகிறோம். ***Signs of the Times, Nov 24, 1881.***

***தீமைக்கு இடம் கொடுக்காதீர்கள்***

தேவனது ஆரசாங்கம் தீமையுடன் எந்த தொடர்பையும் வைத்துக் கொள்ளுவதில்லை என்பது தெளிவுப்படுத்தப்பட வேண்டும். வீட்டிலோ, பள்ளியிலோ கீழ்ப்படியாமை பொருத்துக் கொள்ளப்படக் கூடாது. பிள்ளையின் நன்மையைக் கோரும் எந்த பெற்றோரும் ஆசிரியரும் அதிகாரத்திற்கு எதிர்த்து செயல்படும் துணிகரத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இக்கட்டுப் பாட்டிலிருந்து வஞ்சகமாக பிள்ளைகள் தப்பித்துக்கொள்ளவும் விடமாட்டார்கள். தவறுகளுக்கு இடம் கொடுப்பது அன்பு அல்ல. உணர்ச்சிவசப்பட்டு அதை அன்பு என்று நினைத்து பிள்ளைகளை சரியாக வழிநடத்தாமல் விடக்கூடாது. பிள்ளை சொல்லப்பட்டதை செய்ய வைப்பதற்கு தேவையில்லாத போலியான



1ST Proof

புகழ்ச்சியும் பாராட்டும் கொடுக்கப்பட்டு, இப்படியாக கீழ்ப்படிய வைக்க முயற்சிக்கப்படுகிறது. முழுமையான கீழ்ப்படிதலை இது கொண்டுவராமல் அதற்கு பதிலாக வேரு கிரியைகளை பிள்ளைகள் செய்வார்கள். ஒரு போலியாக திருப்தியை இது கொடுக்கக் கூடும். இதனால் பெற்றோர்கள் தங்களுக்குப் பிள்ளைகள் கீழ்ப்படிந்துவிட்டதாக தவறாக நினைக்கின்றனர். ***Education, p. 290.***

இன்றைக்கு பெரும்பாலான குடும்பங்களில் கீழ்ப்படியாமையும் தீய பண்புகளும் திருத்தப்படாமல் விடப்படுகின்றன. பிள்ளைகள் தங்களது ஆசைகளையே நிறைவேற்றிக் கொள்ளுகிறார்கள். மற்ற சில குடும்பங்களில் கடுமையான ஒரு சர்வாதிகார ஆவி ஆளுகை செய்து பிள்ளைகளிடம் மோசமான தீமைகளை உருவாக்குகிறது. பெற்றோர்கள் பிள்ளைகளை கடுமையாக தண்டித்துவிடுகிறார்கள். அவர்கள் வாழ்க்கை பெருந்துயரமாக மாறுகிறது. பெற்றோர்க்கும் எல்லா குடும்ப அங்கத்தினர்மீதும் வெறுப்பும் அவமதிப்பும் உருவாகிறது. ***Letter 75, 1898.***

***சரியான கோட்பாடுகளைப் பெற்றோர் புரிந்துகொள்ளுவதில்லை***

தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கிற அதிகாரத்தை திராணியில்லாதவர்களைப் போல் பெற்றோர்கள் கையாளுகின்றனர். இது நம் இதயங்களை பெருஞ் சோகத்திற்குள்ளாக்குகிறது. மற்ற எல்லா காரியங்களிலும் ஞானத்துடனும் விவேகத்துடனும் நடந்துகொள்ளுபவர்கள் பிள்ளைகளை சரியாக வழிநடத்துவதில்லை. நன்னெறிகளை அடிப்படையாகக் கொண்டு பிள்ளைகளுக்குச் சரியான பயிற்சியை அளிப்பதில்லை. இந்த அறிவு அவர்களிடம் காணப்படுவதில்லை. நீதியின் கோட்பாடுகளை பெற்றோரே அறியாதவர்களாயிருக்கிறார்கள். பிள்ளைகளுக்குச் சரியான அறிவுரைகளைக் கொடுக்க தவறுகிறார்கள். அனுபவம் இல்லாத மனங்களை சரியாக வழிநடத்துவதில்லை. நல்ல உதாரணங்களை பார்த்து, உறுதியான முடிவுகளும், எடுக்கப்பட வேண்டிய பருவத்தில் பிள்ளைகளுக்கு இவைகள் கிடைப்பதில்லை. தங்களை சுற்றியிருக்கும் வஞ்சகமான தீமையான தாக்கங்களை பிள்ளைகள் அறியாதவர்களாக இருக்கிறார்கள். ***Manuscript 119, 1899.***



1ST Proof

மனித குடும்பத்தின் மீது பெரிய உபத்திரவமும் பெருந்தவிப்பும் படர்ந்து இருக்கிறது. இதற்கு காரணம் பெற்றோர்கள் தெய்வ திட்டத்தைவிட்டு விளகியிருக்கிறார்கள். தங்களது சொந்த கற்பனைகளையும் தவறான யோசனைகளையும் பின்பற்றுகிறார்கள். அநேகர் உணர்ச்சிவசப்பட்டு செயல்படுகிறார்கள். அந்த நேரத்திலும் எதை செய்ய வேண்டும் என்று தோணுகிறதோ அதையே செய்கிறார்கள் பிள்ளைகள் ஞானத்துடன் கையாளப்பட்டு ஒரு ஒழுக்கத்திற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டால் மட்டுமே இன்றைக்கும், எதிர்காலத்திலும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். இதை பெற்றோர் முழுமையாக மறந்துவிடுகின்றனர். ***Manuscript 49, 1901.***

***தவறான நிர்வாகத்தை தேவன் ஏற்பதில்லை***

பெற்றோரின் தவறான ஒழுக்கத்தினால் பிள்ளைகளின் மனங்களில் துணிகரமும் கலகமும் உருவாகிறது. சரியான வழி பின்பற்றப்பட்டிருந்தால் பிள்ளைகள் நல்ல குணத்தை பெற்றிருப்பார்கள். ***Testimonies for the Church, Vol. 3, p. 532, 533.***

பிள்ளைகளை சரியான ஒரு ஒழுக்கத்திற்குள்ளாகக் கொண்டு வந்து, அதற்கேற்ற ஒரு நல்ல கல்வியைக் கொடுக்கும் வல்லமை பெற்றோரிடம் உள்ளது. இந்த வல்லமையை தேவனக்கென்று அவர்கள் பயன்படுத்தட்டும். தேவன் முழுமையான கீழ்ப்படிதலையும் தவறில்லாத ஒரு தூய்மையான நடத்தையையும் எதிர்பார்க்கிறார். தேவனால் வேரு எதையும் ஏற்றுக்கொள்ளவோ பொறுத்துக்கொள்ளவோ முடியாது. பிள்ளைகளை தவறாக வழிநடத்தியதற்காக எந்த சாக்கு போக்கையும் அவர் ஏற்றுக் கொள்ள மாட்டார். ***Review and Herald, Apr 13, 1897.***

***பிள்ளையின் துற்குணத்தின் ஆவியை மேற்கொள்ளுங்கள்***

சில பிள்ளைகளை கையாளுவது மற்ற பிள்ளைகளைவிட கடினமானதாக இருக்கும். நல்லதை கூறினாலும் தவறை செய்வதிலேயே உறுதியாக இருப்பார்கள். நினைத்ததையே செய்வார்கள். ஒழுங்கிற்கு கட்டுப்பட மாட்டார்கள். இதன் விளைவாக விரும்பப்படக் கூடியவர்களாகவும் இருப்பதில்லை. எவரோடும் ஒத்துப்போக முடியாதவர்களாகவும் இருப்பார்கள். இந்த துர்குணத்தை தாய்

ஞானத்துடன் கையாள வேண்டும். இதில் தவறினால் பெரிய துயரத்தைக் கொண்டு வந்துவிடும். இப்படிப்பட்ட பிள்ளைகள் அழிந்துபோகும் வரையிலும் தங்கள் சொந்த தவறான வழிகளையே பின்பற்றிக்கொண்டிருப்பார்கள். இந்த தீய குணத்தின் ஆவியை வளர்ந்த பிறகும் பிள்ளை பெற்றிருந்தால் எவ்வளவு மோசமானதாக இருக்கும். சிறுவயதின் இந்த தவறான குணம் வளர்ந்த பிறகும் மனக்கசப்பையும் வெறுப்பையுமே தாய்க்கும் கொடுக்கும். அவன் பிள்ளையை சரியாக கட்டுப்படுத்தாததின் நிமித்தம் இது சம்பவித்திருக்கிறது. ***Manuscript 18, 1891.***

***"உன்னை வைத்து எதையுமே செய்ய முடியாது" என்று கூறாதீர்கள்***

உன்னை வைத்து எதுவும் செய்ய முடியாது என்ற வார்த்தைகளை உங்கள் பிள்ளைகள் கேட்கக் கூடாது. தேவ சிங்காசனத்தருகேயும் செல்ல நாம் அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுவது அவமானத்திற்குரியது என்பதை உணர வேண்டும். இயேசுவிடம் சென்று அவர் உதவுவார். ***Review and Herald, July 16, 1895.***

***குடும்ப நிர்வாகத்தை படித்துக் கொள்ள வேண்டும்***

குடும்பத்தை மற்றவர்களைப் போல் சரியாக நடத்தும் திறன் தன்னிடம் இல்லை என்று தாய்மார்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். அவர்களிடம் இந்த தாலந்து இல்லை என்றும் சொல்கிறார்கள். இதிலும் தங்கள் குறைகளை உணருவோர் எவ்வளவு உன்னிப்பாகவும் கவனமாகவும் இதை படித்துக்கொள்ள பிரயாசப்பட வேண்டும். மற்றவர்களின் மேலான கருத்துக்களும் உடனே ஏற்றுக்கொள்ளப்படக் கூடாது. ஆராயப்பட்டு ஆழமாக பகுத்தறியப்பட்டே பின்பற்றப்பட வேண்டும். ஒவ்வொரு தாயின் சூழ்நிலையும் வெவ்வேராக உள்ளது. ஒரு குடும்பத்தில் செய்யபபடக் கூடிய ஒன்று இன்னொரு இடத்தில் உகந்ததாக இருக்காது. ஒவ்வொரு பிள்ளையின் குணத்திற்கேற்ப நாம் கையாள வேண்டும். எல்லா பிள்ளைகளையும் திருத்த ஒருவழியை மட்டுமே பின்பற்ற முடியாது. தாய் மற்றவர்களின் அனுபவங்களையும் தனது அனுபவங்களையும் கூர்ந்து நோக்கட்டும். வேற்றுமைகளை புரிந்துகொள்ளட்டும். சரியாக தோன்றுபவைகளை



1ST Proof

சோதிக்கட்டும். ஒரு திட்டம் வெற்றியை கொடுக்காவிட்டால் இன்னொரு முறை கையாளப்படட்டும். அதன் விளைவுகள் ஆராயப்படட்டும்.

தாய்மார்கள் மற்றவர்களைப் பார்க்கிலும் ஆழமாகச் சிந்திக்கவும் ஆராயவும் பழக வேண்டும். இந்த வழியை அவர்கள் பின்பற்றினால் தங்கள் குறைகளையும் நிறைவு செய்து கொள்ளுகிறார்கள் என்பதை பார்ப்பார்கள். பிள்ளைகளிடம் சரியான குணங்களை வளர்க்க கற்றுக் கொள்ளுகிறார்கள். இதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசங்களும் முயற்சிகளும் பிள்ளைகளின் கீழ்ப்படிதலாக வெளிப்படும். பிள்ளைகள் தூய்மையானவர்களாகவும் எளிமையானவர்களாகவும் இருப்பார்கள். ஏரெடுக்கப்பட்ட முயற்சிகள் பெரும்பலனைத் தரும். ***Signs of the Times, Mar 11, 1886.***

***பெற்றோர்கள் இணைந்து செயல்படுதல்***

தாய் பிள்ளைகளிடம் நல்ல கிறிஸ்தவ குணத்தின் அடித்தளத்தை அமைக்க வேண்டும். இந்த முயற்சியில் தகப்பனின் ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். தந்தை பிள்ளைகளின் தவறுகளை காணாதபடி கண்களை மூடிக்கொள்ளக் கூடாது. திருத்தும் வேலை விரும்பப்படக் கூடியதாக இல்லாததினால் பிள்ளைகளின் தந்தைகள் இப்படி நடக்கக் கூடாது. ***Testimonies for the Church, Vol. 1, p. 547.***

சரியான கோட்பாடுகள் பிள்ளையின் மனதில் ஸ்தாபிக்கப்பட வேண்டும். ஒழுக்கப்படுத்தும் இவ்வேலை இருவரும் சேர்ந்து செய்யும்பொழுது, பிள்ளையானவன் தன்னிடம் எதிர்பார்க்கப்படுவதை புரிந்துகொள்ளும். தந்தை தன் வார்த்தையினாலோ செயலினாலோ தாயின் வழியை ஏற்றுக்கொள்ளாததைப்போல் நடக்கக் கூடாது. தாய் கடுமையாக நடக்கிறான் என்று எண்ணி பிள்ளைக்கு செல்லம் கொடுக்கக் கூடாது. இதை செய்தாள் குழந்தை சீரழிந்துவிடும். இப்படியும் நினைக்கும் பெற்றோர்கள் வஞ்சகத்தைக் கையாளுவார்கள். பிள்ளையும் விரைவில் தனது விருப்பத்தின்படியே செய்யலாம் என்று கற்றுக் கொள்ளலாம். பிள்ளைகளுக்கு எதிராக இப்பாவத்தை இழைக்கும் பெற்றோர்கள் அவர்களது ஆத்துமாக்களை சீரழித்ததற்கு கணக்கு கொடுக்க வேண்டும். ***Manuscript 58, 1899.***

***அதிகாரத்தையும் பாசத்தையும் இணைப்பதின் தாக்கம்***

தேவ கிருபை உங்கள் குணத்தை பிரகாசிக்கச் செய்யட்டும். வீட்டில் அந்த ஒளி நல்ல சூரிய ஒளியைப்போல் இருக்கட்டும். சமாதானமும், அன்பான வார்த்தைகளும், மகிழும் முகங்களும் இருக்கட்டும். இது கண்மூடித்தனமான பாசமல்ல. அன்பு என்று தவறை ஊக்கப்படுத்தும் குணமும் அல்ல. பிள்ளைகளை அதிகாரம் செய்யும்படி விடும் தவறும் அல்ல. இத்தவறுகள் பிள்ளைக்கு பெரிய தீங்கை செய்வதற்கு சமமாக இருக்கிறது. பெற்றோர்கள் பட்சபாரத்துடன் நடந்து பிள்ளைகளை ஒடுக்கக் கூடாது. அன்பும் அதிகாரமும் சேர்ந்து செயல்பட வேண்டும். இது குடும்பத்தின் மீது சரியான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். ***Review and Herald, Sep 15, 1891.***

***ஒழுக்கப்படுத்துவதிலும் தேவ குணத்தை வெளிப்படுத்துங்கள்***

தேவ அறிவுறைகளை கைக்கொள்ள உறுதியுடன் முடிவெடுங்கள். உணர்ச்சிவசப்படாதீர்கள். கோபப்பட்டு பகுத்தறிவை இழக்கும் பொழுது பிள்ளைகளுக்கும் அதையே கற்றுக்கொடுக்கிறோம். தேவ கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் ஒரு ஞானமான ஆசிரியராக பிள்ளைக்கு ஒரு நல்ல கல்வியைக் கொடுங்கள். இதையே தேவன் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறார். தேவனது மனமாற்றும் வல்லமை உங்கள் இல்லத்தில் இருக்குமானால், நீங்களும் தொடர்ந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளுவீர்கள். கிறிஸ்துவின் குணத்தை வெளிப்படுத்துவீர்கள். உங்களது இந்த முயற்சி தேவனை மகிழவைக்கும். தேவ குடும்பத்தின் இளைய அங்கத்தினர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை புறக்கணிக்காதீர்கள். நீங்கள் பெற்றோர்கள். இல்லத்தின் ஒளியாக இருக்கிறீர்கள். தயவான வார்த்தைகளினாலும் மனதைத் தேற்றும் உங்கள் பேச்சின் தோரணையினாலும் உங்கள் ஒளியை பிரகாசிக்க விடுங்கள். உங்கள் வார்த்தைகளில் புண்படுத்தாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். சுய கட்டுப்பாட்டிற்காக தேவனிடம் ஜெபியுங்கள். தேவ தூதர்கள் உங்கள் வீட்டில் இருப்பார்கள். உங்கள் ஒளியை அவர்களும் காணுவார்கள். உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் சரியாக கற்றுக்கொடுக்கும் நல் ஒழுக்கம் உலகத்தினுள் பாய்ந்து செல்லும். ***Manuscript 142, 1898.***



1ST
Proof

***நீதியைவிட்டு விலாகாதீர்கள்***

கடந்த காலங்களில் பெற்றோர்க்கு தீர்க்கமான அதிகாரம் இருந்தது. பிள்ளைகள் அவர்களுக்கு முழுமையாக கட்டுப்பட்டு மதிப்புடன் நடந்தனர். இந்த காலத்தில் இது தலைகீழாக மாறிவிட்டது. சில பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு கட்டுப்படுகின்றனர். பிள்ளைகளின் விருப்பங்களை எதிர்க்க பயப்படுகின்றனர். அவர்களுக்கு இசைவாக நடந்துகொள்ளுகிறார்கள். பெற்றோர்கள் தெளிவுடன் செயல்பட வேண்டும். பிள்ளைகளை அவர்களின் வழியில் நடக்க வைக்க வேண்டும். ***Testimonies for the Church Vol. 1, p. 216, 217.***

***துணிகரமான கீழ்ப்படியாமையை ஒடுக்குங்கள்***

சில பெற்றோர்கள் தங்கள் மகன்களின்மீது முழுமையான அதிகாரத்தை செலுத்துவதில்லை. இது கடினமானதாக இருப்பதால் இதை செய்வதில்லை. பிள்ளை வீட்டை விட்டு ஓடி விடுவான் என்று பயப்படுகிறார்கள். வீட்டின் நன்மைகளை அனுபவித்துக் கொண்டு தேவ அதிகாரத்திற்கும் மனித அதிகாரத்திற்கும் பணியாமல் இருப்பதைவிட ஓடி விடுவதே மேலானது. பிள்ளைகள் இப்படியாக சென்றாலும் நல்ல பாடங்களையும் அனுபவங்களையும் பெறுவார்கள். அவர்கள் எதிர்பார்க்கும் முழு சுதந்திரம் வாழ்க்கை என்றால் என்ன என்பதை கற்றுக் கொடுக்கும். வீட்டில் இருந்ததைப் போன்று ஒன்றும் செய்யாமல் வாழ முடியாது என்பதை புரிந்து கொள்ளுவார்கள். *“ வீட்டை விட்டு சென்றுவிட வேண்டும் என்று நீ நினைத்தால் நாங்கள் உன்னை தடுக்க மாட்டோம்.” நல்ல நியதிகளுக்குக் கீழ்படிந்து நடப்பதைவிட சென்றுவிட நீ தீர்மானித்தால் அதை செய் என்று பெற்றோர் சொல்ல வேண்டும். “ சிறு வயதிலிருந்து உன்னை வளர்த்தவர்களைவிட உலகம் உனக்கு அருமையானதாகத் தெரிந்தால் அதனிடம் சென்று உன் தவறுகளை உணர்ந்துகொள்.”* உன் தகப்பனுக்கு கீழ்ப்படிந்து எங்களுடன் வாழ முடிவெடுத்தால் நாங்கள் உன்னை வரவேற்போம். உனது அடிப்படை தேவைகளை நாங்கள் கொடுக்கிறோம். அதற்கு ஏற்ற வகையில் வீட்டின் ஒழுக்கத்திற்குள் நீ வர வேண்டும். புகையிலையின் வாசனையோ குடிப்பழக்கமோ வீட்டை மாசுபடுத்த அனுமதிக்க முடியாது. தேவ தூதர்கள் வீட்டிற்குள்வர

நான் விரும்புகிறேன். சாத்தானுக்கு வேலை செய்ய தீர்மானித்திருந்தால், உன்னைபோல் இருப்பவர்களின் ஐக்கியமே வீட்டைவிட உனக்கு உகந்ததாக இருக்கும் என்று திட்டவட்டமாக சொல்லிவிட வேண்டும்.

இப்படி பிள்ளைகள் கையாளப்பட்டால் ஆயிரக்கணக்கானோர் அழிவிலிருந்து காக்கப்படுவர். ஆயினும் பாவம் செய்தாலும் ஞானமில்லாத தாய் தங்கள் பாவங்களை மறைக்கவே விரும்புவாள் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். வீட்டிற்கு அடங்காத மகன்கள் தன் குடும்பத்தினர் தன்னை கட்டுப்படுத்தாததற்கு பெருமிதம் கொள்ளுகிறான். பெற்றோர்கள் கீழ்ப்படிதலை கட்டாயப்படுத்துவதில்லை. இவர்கள் பிள்ளைகளை தவறு செய்ய ஊக்கப்படுத்துகிறார்கள். தேவனையும் இதனால் தூஷிக்கிறார்கள். இந்த வகையிலான துணிகரமான வாலிபர்களே பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பெரிய உபத்திரவத்தை ஏற்படுத்துவார்கள். ***Review and Herald, Jun 13, 1882.***

***நன்மை செய்வதில் சோராதீர்கள்***

பெற்றோர்களின் பணி தொடர்ந்துகொண்டே இருப்பதாக உள்ளது. ஒரு நாள் செய்யப்பட்டு அடுத்த நாள் கைவிடப்படக் கூடாது. அநேகர் வேலையை துவங்குகிறார்கள் அதில் நீடித்திருப்பதில்லை. பெரிய காரியங்களை முடிக்கவும் பெரிய தியாகங்களைச் செய்யவும் ஆர்வம் காட்டுகின்றனர். அனுதின வாழ்க்கையின் சாதாரண அலுவல்களில் தவறுகின்றனர். ஒவ்வொரு மணி நேரமும் முக்கியம். அந்நேரத்திற்கான பயிற்சி தொடர்ந்துகொண்டே இருக்க வேண்டும். அறிவுரையும், கடிந்துகொள்ளுதலும், ஊக்கப்படுத்துவதும் சிறிது சிறிதாக தேவைக்கேற்ப இருந்து கொண்டே இருக்க வேண்டும். பிள்ளைகள் தவறுகளை உடனே திருத்தி, வெற்றியின் மலையுச்சிக்கு வேகமாகச் செல்ல விரும்புகிறார்கள். படிப்படியாகச் செல்ல விரும்புவதில்லை. தங்கள் நம்பிக்கைகள் விரைவாக நிறைவேற்றப்படாததினால் சோருகிறார்கள். அப்போஸ்தலனின் வார்த்தைகள் நம்மை தேற்றட்டும். ***"நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம் "*** *கலா. 6:9.* ***Signs of the Times, Nov. 24, 1881.***



1ST Proof

ஓய்வு நாளை ஆசரிக்கும் பிள்ளைகள் பெற்றோரது கட்டுப்பாட்டினால் பொறுமை இழந்துவிடலாம். பெற்றோர்களை கண்டிப்பானவர்களாக கருதலாம். கடுமையான உணர்வுகள் எழும்பி அதிருப்தியைக் கொடுக்கலாம். சில வருடங்களுக்கு பிறகு இப்படியும் தங்களை கட்டுப்படுத்தியவர்களை ஆசீர்வதிப்பார்கள். தற்சமயத்தின் சந்தோஷத்திற்காகவும் எதிர்காலத்தின் மகிழ்ச்சிக்காகவே அவர்கள் இந்த ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுத்தனர் என்பதை புரிந்துகொள்ளுவார்கள். ***Testimonies for the Church, Vol. 1, p. 400.***

***தேவ வார்த்தையின் கடிந்துரைகளை படியுங்கள்***

பிள்ளைகள் தவறும்பொழுது பெற்றோர்கள் வேதத்திலிருந்து படித்துக்காட்ட நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கேற்ற வசனங்களை படித்து அவர்களது தவறுகளை பார்க்க வைக்க வேண்டும். உபத்திரவப்பட்டும் சோதிக்கப்பட்டும், அவர்கள் சோர்வுரும் வேளையில் வேதத்தின் ஆறுதலான வார்த்தைகளை காண்பித்து சொல்லுங்கள். இயேசுவின்மீது நம்பிக்கைக் கொள்ள மென்மையாக வழிநடத்துங்கள். இளமனங்கள் உயர்ந்தவைகளை பார்க்கக் கொண்டு செல்லப்படும். வாழ்க்கையின் பெரிய பிரச்சனைகளையும் தேவன் மனித குலத்தையும் எப்படி கையாளுகிறார் என்பதையும் பார்ப்பார்கள். பகுத்தறிவு வளரும். நியாயமாக நடப்பார்கள். தெய்வீக பாடங்கள் இவைகளை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும். இப்படியாக பெற்றோர்கள் அனுதினமும் பிள்ளைகளின் குணங்களை வடிவமைக்கலாம். எதிர்கால வாழ்விற்கு அவர்கள் தகுதிபெறுவார்கள். ***Review and Herald, Jan 13, 1882.***

*அதிகாரம் - 44*

***சீர்பொருந்தும் ஒழுக்கத்தைக் கொண்டுவருதல்***

***தேவன் வந்து ஆளுகை செய்யும்படி கேளுங்கள்***

உங்கள் குடும்பத்தில் கீழ்ப்படிதலை பெற்றுக்கொள்ளுங்கள். இதை செய்யும்பொழுதும் உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து தேவனைத் தேடுங்கள். அவர் வந்து ஆளும்படி சொல்லுங்கள். தண்டிக்கப்பட வேண்டிய ஒரு செயலை உங்கள் பிள்ளை செய்திருக்கலாம்.

கிறிஸ்துவின் ஆவியில் அவர்களை கையாளுங்கள். அன்பான கரங்களுடன் உங்களை தழுவிக்கொள்ளுவார்கள். தேவனுக் முன்பாக தங்களை தாழ்த்தி தங்கள் தவறுகளை ஒப்புக்கொள்ளுவார்கள். இது போதுமானது. இதை அவர்கள் ஒப்புக்கொண்டால் தண்டனை தேவையில்லை. ஒவ்வொரு ஆத்துமாவையும் சந்திக்கும் வழியை தேவன் வைத்திருக்கிறார். இதற்காக தேவனுக்கு நன்றி சொல்லுவோம்.

உங்கள் பிள்ளைகள் கீழ்ப்படியாதவர்களாக இருந்தால், திருத்தப்பட வேண்டும். இதை நீங்கள் செய்வதற்கு முன்பு தேவனிடம் செல்லுங்கள். உங்கள் பிள்ளைகளின் மனங்கள் இளகிட தேவனிடம் ஜெபியுங்கள். அவர்களை கையாள ஞானத்தையும் கேளுங்கள். நான் இந்த முறையை பயன்படுத்தி ஒரு முறைகூட தவறியது கிடையாது. கோபமான உணர்ச்சிகளால் நிரப்பப்பட்ட பிள்ளையின் மனம் ஆவிக்குரிய காரியங்களை புரிந்துகொள்ளாது. ***Manuscript 27, 1911.***

***பொருமையாக பிள்ளைகளை அறிவுறுத்துங்கள்***

குழந்தை பருவத்திலிருந்தே தங்கள் இதயங்களை அவரது ஊழியத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். பகுத்தறியும் வயது இல்லாவிடினும் அவர்களை சரியாக திசை திருப்புங்கள். வயதாகும் பொழுது வார்த்தையினாலும் செயலினாலும் அவர்களின் தவறான ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்பதைக் காட்டுங்கள்.

பொருமையுடன் அறிவுறுத்துங்கள். சில வேளைகளில் தண்டிக்க வேண்டிய அவசியம் வரும். இதை செய்தாலும் பெற்றோரின் கோபத்தினால் தண்டிக்கப் பட்டதைப்போன்று அவர்கள் உணர கூடாது. அவர்கள் இப்படி நினைப்பதற்கு இடம்கொடுக்காமல் தண்டியங்கள். நீங்கள் கோபப்பட்டு தண்டித்தால் பெரிய தீமையே விளைவாக வரும். தேவ ஆலோசனைகளை பெற்றோர் கைக்கொண்டு கீழ்ப்படிய வேண்டும். இதை செய்தால் தேவையற்ற வேற்றுமைகளும் மனஸ்தாபங்களும் குடும்பத்திற்குள் எழாது. ***Manuscript 93, 1909.***

***பெற்றோர் தேவ ஒழுக்கத்தின் கீழாக இருக்க வேண்டும்***

தாய்மார்களே பிள்ளைகள் அவர்களது அறியாமையினால் உங்கள் கோபத்தைத் தூண்டலாம். பொறுமை இழக்காதீர்கள். பொருமையுடனும் அன்புடனும் சொல்லிக் கொடுங்கள். உறுதியுடன் நடவுங்கள். சாத்தான் அவர்களை கட்டுப்படுத்த விடாதீர்கள். தேவ ஒழுக்கத்தின் கீழாக நீங்கள் இருந்தால் மட்டுமே அவர்களை ஒழுக்கப்படுத்துங்கள். உங்கள் பிள்ளைகளின் வாழ்வில் கிறிஸ்து வெற்றியைக் காண்பார். இதற்கு முதலில் நீங்கள் கிறிஸ்துவிடமிருந்து கற்க வேண்டும். தாழ்மையானவராகவும், தூய்மையானவராகவும் தீட்டுப்படாதவராகவும் அவர் இருக்கிறார். ***Letter 272, 1903.***

1ST Proof

சுய கட்டுப்பாடின்றி பிள்ளைகளைக் கட்டுப்படுத்தினால் ஒரு முறையின்றி ஜெபிக்காமல் இதை நீங்கள் செய்தால் கசப்பான விளைவுகளை சந்திப்பீர்கள். ***Signs of the Times, Feb 9, 1882.***

***கோபத்தில் திருத்தாதீர்கள்***

உங்கள் பிள்ளைகளை அன்பில் திருத்துங்கள். நீங்கள் கோபப்பட்டு தண்டிக்கும் அளவிற்கு, அவர்களை அவர்களின் போக்கில் விடாதீர்கள். பின்பு திருத்த முயற்சிக்காதீர்கள். இப்படி செய்வது தீமையானதாக இருக்கும். தீமையை இது சரி செய்வதில்லை. ***Review and Herald, Sep.19, 1854.***

தவறும் ஒரு குழந்தையிடம் கோபத்தைக் காட்டினால் அது தீமையின் அளவைக் கூட்டிவிடும். பிள்ளையின் மோசமான உணர்வுகளை அது தூண்டும் அவன் மீது உங்களுக்கு அக்கரையே இல்லை என்று முடிவெடுத்துவிடுவான். உண்மையில் அவன் மீது நீங்கள் அக்கரைக் கொண்டால் நிச்சயமாக இப்படி நடக்க மாட்டீர்கள் என்று அவன் பகுத்தறிவான்.

நீங்கள் உங்கள் பிள்ளைகளைத் திருத்தும் முறைகளை தேவன் கண்டுகொள்ளுவதில்லை என்று நினைக்கிறீர்களா? அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். ஓர் ஆத்துமாவை ஆதாயப்படுத்தும்படியாக இவ்வேலை நடந்தால் எவ்வளவு ஆசீர்வாதமானதாக இருந்திருக்கும் என்பதையும் அவர் அறிவார்.

இவ்வேலையும் ஆத்துமாவை தேவனிடமிருந்து தள்ளிவிடுவதைப் போன்றே செய்யப்படுகிறது.

கோபத்தில் உங்கள் பிள்ளைகளை திருத்த முயற்சி செய்யாதீர். நான் இதை உங்களிடம் கெஞ்சி கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த சமயத்தில் தாமே பொருமையுடனும், ஜெபத்துடனும் தாழ்மையுடனும் நீங்கள் செயல்பட வேண்டும். குழந்தைகளுடன் சேர்ந்து மன்றியிட்டு தேவ மன்னிப்பைப் பெறுங்கள். அன்பினாலும் தயவினாலும் பிள்ளைகளை கிறிஸ்துவிற்கு ஆதாயப்படுத்துங்கள். இதை நீங்கள் செய்யும்பொழுது பரலோக வல்லமைகளும் உங்களுடன் ஒத்துழைப்பதைக் காண்பீர்கள். ***Manuscript 53, 1912.***

பிள்ளையை திருத்தும் பொழுது குரலை உயர்த்தாதீர்கள். சுய கட்டுப்பாட்டை இழக்காதீர்கள். கோபத்துடன் பிள்ளையைத் திருத்த முயற்சி செய்யும் பெற்றோர், பிள்ளையைவிட பெரிய தவறை செய்கிறார்கள். ***Signs of the Times, Feb 17, 1904.***

***திட்டுவதும் முகங்கோணுவதும் உதவுவதில்லை***

கோபமான வார்த்தைகள் பரத்திலிருந்து வருவதில்லை. திட்டுவதும் முகம் சுளிப்பதும் உதவுவதில்லை. இந்த செயல்கள் இதயத்தின் மோசமான உணர்வுகளை தூண்டுகின்றன. பிள்ளைகள் தவறு செய்து உங்கள் அதிகாரத்தை எதிர்த்தால், கோபத்துடன் பேசிவிட சோதிக்கப்படுகிறீர்கள். சற்று பொருமையாக காத்திருந்து அவர்களை திருத்த வேண்டும். சிந்திப்பதற்கு அவர்களுக்கு அவகாசம் கொடுங்கள் நீங்களும் சாந்தமடையுங்கள்.

பிள்ளைகளை அன்புடனும் மென்மையுடனும் கையாளுங்கள். அவர்களும் நீங்களும் தேவ ஆசீர்வாதத்தை பெறுவீர்கள். நியாயத்தீர்ப்பின் நாளிலும் பிள்ளைகளிடம் அன்பாகவும் பொருமையாகவும் இருந்தமைக்கு எவரும் வருத்தப்படப் போவதில்லை. ***Manuscript 114, 1903.***

***பதட்டப்படுதலை சாக்காக சொல்ல முடியாது***

தங்கள் உடல் நலம் சரியில்லாமல் இருந்ததால் இப்படி நடந்தோம் என்று பெற்றோர் கூற முடியாது. அவர்கள் பதட்டப்படுவதினால் பொருமையாகவும் நிதானமாகவும் செயல்பட்டு உகந்த வார்த்தைகளை பேச முடியாது என்று நினைக்கின்றனர். இதில் தங்களை வஞ்சித்து சாத்தானை மகிழ்வூட்டுகிறார்கள். அவன் பெலவீனங்களை மேற்கொள்ள தேவகிருபை போதுமானதல்ல என்று கூறி பெருமிதம் கொள்ளுகிறான். பெற்றோர்கள் எல்லா சூழ்நிலைகளிலும் தங்களை கட்டுப்படுதிக்கொள்ள முடியும். தேவன் இதை அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறார். ***Testimonies for the Church, Vol. 1, p. 385.***

சில நேரங்களில் வேலைபலுவினால் பெற்றோர்கள் ஒரு அமைதியான ஆவியைக் காத்துக் கொளளுவதில்லை. பொருமையில்லாத பண்பை வெளிப்படுத்துகிறார்கள். இது தேவனை மகிழவைப்பதில்லை. குடும்பத்தின்மீது ஒரு கருமேகத்தைப் படறச் செய்கிறது. பெற்றோர்களே கோபத்துடன் மனக் கசப்புடன் இருப்பதால் இந்த ஆவியை உங்கள் குடும்பத்திற்கும் பரவ செய்யாதீர்கள். இது விஷத்தைப் போன்று உங்களை குடும்பத்தை தாக்கிவிடும். இப்படிப்பட்ட நேரங்களில் அதிக கவனத்துடன் உங்களை காத்துக் கொள்ளுங்கள். நல்ல வார்த்தைகளையே பேசவும் திடமாக முடிவெடுங்கள். சுய கட்டுப்பாட்டை கைக்கொள்ளம்பொழுது பெலமடைவீர்கள். உங்கள் நரம்பு மண்டலத்துக்கும் இது நன்மை செய்யும். இயேசு நமது பெலவீனங்களை அறிந்திருக்கிறார். பாவத்தைத் தவிர மற்ற எல்லாவற்றையும், நம்மைப்போல் அவரும் அனுபவித்திருக்கிறார். நமது பெலத்திற்கும் திறனுக்கும் ஒற்ற ஒ ருவழியை ஆயத்தப்படுத்தியிருக்கிறார்.

சில சமயங்களில் எல்லாமே தவறாக நடப்பதுபோன்று தெரியலாம். எல்லோரும் கோபத்துடன் காணப்பட்டு துக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையும் வரும். எல்லாவற்றிற்கும் பிள்ளைகளே காரணம் என்று பெற்றோர்கள் பிள்ளைகளின்மீது பழியை சுமத்துகிறார்கள். உலகத்திலேயே தங்கள் பிள்ளைகளே மிகவும் மோசமாக இருப்பதாகவும் நினைத்துக் கொள்ளுவார்கள். உண்மையில் எல்லா பிரச்சனைகளுக்கும் பெற்றோரே காரணமாக இருப்பார்கள். சுய கட்டுப்பாட்டை பெற்றோரிடமிருந்து தேவன் எதிர்பார்க்கிறார். பொருமையின்றி கோபப்பட்டு

1ST Proof

முகங்கோணும் பொழுது மற்றவர்களை தவிக்க வைக்கிறார்கள் என்பதை பெற்றோர் உணர வேண்டும். அவர்களை சுற்றியிருப்பவர்களும் அதே ஆவியால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களும் அதே விதமாக நடந்து தீமையை கூட்டுவார்கள். ***Signs of the Times, Apr 17, 1884.***

### *அமைதி காத்தலிலும் வல்லமை உள்ளது*

மற்றவர்களை கட்டுப்படுத்த முனைவோர் தங்களை முதலில் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு ஆசிரியரோ, பெற்றோரோ பொறுமை இழந்தால் ஞானமில்லாமல் பேசும் அபாயம் உள்ளது. அமைதியாக அவர் இருந்துவிடட்டும். அமைதியிலும் ஒரு பெரிய வல்லமை உள்ளது. ***Education, p. 292.***

### *சில கட்டளைகளைக் கொடுங்கள், கீழ்ப்படிய வையுங்கள்*

அதிகமான கட்டுப்பாடுகளை விதிக்காதபடி தாய் கவனமாக இருக்க வேண்டும். அதிகாரத்தைக் காட்டுவதற்கு தேவையற்ற தடைகளைக் கொண்டு வரக் கூடாது. வெகு சில கட்டளைகளை கொடுங்கள். ஆயினும் அவைகளை பிள்ளைகள் கைக்கொள்ளும்படி பார்த்துக் கொள்ளுங்கள். ***Signs of the Times, Feb 9, 1882.***

ஒரு வேலையைச் செய்யச் சொல்லி பிறகு அவ்வேலையை செய்ய வேண்டாம் என்று சொல்லாதீர்கள். மற்ற காரியங்களில் மூழ்கிக் கொண்டு இதில் அக்கரையின்றி இருந்துவிடாதீர்கள். பிள்ளைகள் உங்கள் வார்த்தைகளை மறந்து நீங்கள் தடுத்ததை செய்தால் சோர்ந்துவிடாதீர்கள். ***Manuscript 32, 1899.***

பிள்ளைகளின் நன்மையை மனதில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு கட்டளையையும் கொடுங்கள். அக்கட்டளைகள் கீழ்ப்படியப்படுகின்றனவா என்பதையும் பாருங்கள். உறுதியுடன் மாறாத வகையில் முடிவெடுத்துச் செயல்படுங்கள். கிறிஸ்துவின் ஆவிக்குட்பட்டவர்களாக எப்பொழுதும் இருங்கள். ***Signs of the Times, Sep 13, 1910.***

### *கடினமான ஒரு குழந்தையைக் கையாளுதல்*

உங்கள் மகனை ஒரு வேலையை செய்யும்படி நீங்கள் சொல்லலாம். அவன் சரி என்று கூறியும் அதை செய்யாமற் போனால், நீங்கள் விட்டுவிடக் கூடாது. இப்படி நீங்கள் விட்டுவிட்டாள் கடமைகளை புறக்கணிக்க கற்றுக் கொடுக்கிறீர்கள். உங்கள் பிள்ளையை அழைத்து விளக்கம் கேட்க வேண்டும். தேவன் ஒவ்வொரு பிள்ளைக்கும் கூட அதன் வேலையை வைத்திருக்கிறார். பிள்ளைகள் பெற்றோர்க்கு கீழ்ப்படிய வேண்டும். வீட்டின் பாரங்களை சுமந்து பொறுப்புக்களை ஏற்க வேண்டும். அவர்கள் அதை செய்யாமற் போனால் அவர்களை அழைத்து விளக்கம் கேளுங்கள். கடமைகளைச் செய்ய வையுங்கள். ***Manuscript 127, 1899.***

### *பொருமையின்றி அவ்வப்பொழுது ஒழுக்கப்படுத்துவது*

பிள்ளைகள் ஒரு தவறை செய்துவிட்டு, அது தவறென்பதை அவர்களே உணருவார்கள். வருத்தத்துடன், ஒரு சங்கடமான ஆவியால் நிறைந்திருப்பார்கள். மனதில் தாங்கள் செய்த தவறை எண்ணி சஞ்சலப்பட்டுக் கொண்டிருப்பார்கள். தவறுகளுக்காக நாம் அவர்களைத் திட்டினால், செய்த தவறையே தொடர்ந்து செய்ய துணிவார்கள். அவர்களின் தவறுகளை இரகசியமாக வைத்துக்கொள்ளுவார்கள். கட்டுக் கடங்காத குதிரைக் குட்டிகளைப்போல் ஏதேனும் ஒரு தவறை செய்துகொண்டே இருப்பார்கள். இதற்காக அவர்களை திட்டிவிடுவது ஒரு பயனையும் தரப்போவதில்லை. பெற்றோர் அவர்கள் மனங்களை வேரு காரியங்களுக்குள்ளாக திசை திருப்ப வேண்டும்.

பெற்றோர் பிள்ளைகளை கையாளுவதில் ஒரு சீராக செயல்படுவதில்லை. உணர்ச்சிவசப்பட்டு செயல்படுகிறார்கள். உணர்ச்சிவசப்பட்டு கோபமடைந்து விடுகின்றனர். நல்ல கிறிஸ்தவ பெற்றோர்களாக, ஒரு நல்ல உதாரணமாக இருப்பதில்லை. ஒரு நாள் தவறுகளைக் கண்டுகொள்ளுவதில்லை. அடுத்த நாள் அவைகளைக் கண்டு பொருமையையும் சுய கட்டுப்பாட்டையும் இழக்கின்றனர். தேவனது வழிகளைக் கைக்கொண்டு நீதியையும் நியாயத்தையும் கடைபிடிப்பதில்லை. பிள்ளைகளைவிட இவர்களே பெரிய குற்றவாளிகள்.

சில பிள்ளைகள் பெற்றோர் அவர்களுக்கு எதிராக செய்த தவறுகளை விரைவில் மறந்துவிடுவார்கள். ஆயினும் சில பிள்ளைகளால் இதை மறக்க முடியாது. நியாயமற்ற வகையில் அவர்கள் அனுபவித்தக் கடுமையான தண்டனைகள் மனதை விட்டு நீங்குவதில்லை. அவர்கள்

1ST Proof


குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

ஆத்துமாக்கள் காயப்படுகின்றன. மனம் ஒரு குழப்பதிற்குள்ளாக செல்கிறது. நல்ல நெறிகளை பிள்ளைகளுக்குள் புகுத்தும் தருணங்களை தாய் இழந்து விடுகிறாள். சுய கட்டுப்பாட்டுடனும், சம நிலையான மனதுடனும் அவள் இவ்வேலையைச் செய்ய தவறியதே இதற்குக் காரணம். செயலிலும் வார்த்தையிலும் நற்பண்புகளை வெளிப்படுத்தவில்லை. ***Manuscript 38, 1895.***

கோபப்படாமல் அமைதியாக, நிதானத்துடன் இருங்கள். அப்பொழுது பிள்ளைகள் நீங்கள் அவர்களை நேசிப்பதை புரிந்து கொள்ளுவார்கள். நீங்கள் அவர்களை தண்டித்தாலும், உங்கள் அன்பை மறக்கமாட்டார்கள். ***Manuscript 8, 1903.***

***தண்டிப்பதைவிட நல்ல நாட்டங்களைத் தூண்டுங்கள்***

இவ்வேலையின்மீது எனக்கு ஆழமான ஒரு ஆர்வம் உண்டு. பிள்ளைகளை சரியாக வழிநடத்தப் பல பிள்ளைகளை நான் தத்தெடுத்திருக்கின்றேன். தவறு நடந்தபொழுது அவர்களை தண்டிக்கவில்லை. அவர்கள் ஆர்வங்களை வேரு வகையில் திசை திருப்பினேன். நல்ல நடத்தைக்கு பரிசுகள் கொடுப்பேன். ஒரு பெண் குழந்தை தான் விரும்பியது கிடைக்காமற் போனால் அடிக்கடி தரையில் விழுந்து புரண்டு அழுவாள். நான் அவளிடம் இவ்வார்த்தைகளைக் கூறினேன். இன்றைக்கு நீ கோபப்படாமல் இருந்தால் நாங்கள் உன்னை குதிரை வண்டியில் வெளியில் கூட்டி செல்வோம். இயற்கையின் அழகில் இந்நாளை கழிக்கலாம். ஆயினும் ஒரு முறையேனும் நீ அழுது அடம் பிடித்தாள் உன்னை வெளியே அழைத்து செல்ல மாட்டோம். இந்த வகையில் இப்பிள்ளைகளுக்காக வேலை செய்தேன். இவ்வேலையை செய்ய எனக்கு கொடுக்கப்பட்ட அரிய வாய்ப்பிற்கு நான் நன்றி சொல்லுகிறேன். ***Manuscript 95, 1909.***

***தவறை உடனுக்குடன், ஞானத்துடனும் உறுதியுடனும் கையாளுங்கள்***

கீழ்ப்படியாமை தண்டிக்கப்பட வேண்டும். தவறுகள் திருத்தப்பட வேண்டும். பிள்ளையின் இதயத்துடன் இணைந்திருக்கும் பாவம் பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் நீக்கப்பட வேண்டும். தவறுகளை



1ST
Proof

உடனுக்குடன், ஞானமாகவும், உறுதியுடனும் கையாளப்பட வேண்டும். பிள்ளைகள் கட்டுப்பாட்டை வெறுப்பார்கள். ஆசைகள் நிறைவேற்றிக்கொள்ள விரும்புவார்கள். நித்தியத்தின் காரியங்களைக் குறித்து அக்கரையற்று இருப்பார்கள். இத்தீமைகள் மிக கவனமாக கையாளப்பட வேண்டும். தீமை வெளிப்படுத்தப்படாவிட்டால் ஆத்துமா அழிந்துவிடும். தீமையின் வழியில் செயல்படும் ஒரு நபர் மற்றவர்களையும் அப்பாதையில் நடக்க இழுத்துவிடுவார்கள். இது மிகப் பெரிய தீமையாகிறது. சாத்தானின் வழிநடத்துதலை பின்பற்றுவார்கள். உலகத்தின் ஆவி பிள்ளையிடம் வளராதபடி தடுக்க வேண்டும். சிறு பிராயத்திலிருந்தே இதை செய்ய வேண்டும். ***Letter 166, 1901.***

***சில சமயங்களில் பிரம்பு தேவைப்படலாம்***

என் பிள்ளையை நான் தண்டிக்கவே கூடாதா? என்று ஒரு தாய் கேட்கலாம். மற்ற எல்லா முறைகளும் தோல்வியடைந்தால் பிரம்பு அவசியப்படலாம். பிரம்பை பிரயோகிக்காமலும் பிள்ளையை திருத்த வேரு வழி இருப்பின், பிரம்பு பயன்படுத்தப்பட வேண்டியதில்லை. ஆயினும் அமைதியான வழிகள் பலன் கொடுக்காமல் போனால், பிள்ளை தன் தவறை உணர பிரம்பு பயன்படுத்தப்படட்டும். இதுவும் அன்பில் செய்யப்பட வேண்டும். ஒரு முறை நாம் இதை செய்தாலே அதன் தாக்கம் வாழ்நாள் முழுவதற்கும் இருக்கும். அதிகாரம் பிள்ளையிடம் இல்லை என்பது காட்டப்பட வேண்டும்.

இதன் அவசியம் ஏற்படும்பொழுது, பெற்றோரின் திருப்திக்காக இது நடக்க வில்லை என்பதை பிள்ளைகள் அறிந்து தங்கள் தவறுகளின் தீய தன்மைகளை ஆழமாக புரிந்துகொள்ளத்தக்கதாக இது இருக்க வேண்டும். அதன் நன்மைக்கே இது நடக்கிறது என்பதை பிள்ளை பார்க்க வேண்டும். அதன் நன்மைக்கே இது நடக்கிறது என்பதை பிள்ளை பார்க்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் அதிகாரத்தை காட்டுவதற்காக இப்படி நடப்பதில்லை என்பதையும் பிள்ளைகள் உணர்ந்துகொள்ளும் வகையில் இச்சிட்சையும் இருக்க வேண்டும். திருத்தப்படாத ஒவ்வொரு தவறும் தனக்கு துக்கத்தைக் கொடுத்து தேவனையும் வருந்த வைக்கம் என்பது பிள்ளைகளுக்குக் கற்றுத்தரப்பட

வேண்டும். இப்படிப்பட்ட வழிநடத்துதலின் கீழாக பிள்ளைகள் மனமகிழ்ச்சியையே அனுபவிப்பர். தேவ சித்தத்திற்கு தங்கள் சித்தத்தை ஒப்படைத்துவிடுவதிலே இம்மகிழ்ச்சி இருக்கிறது என்பதை கண்டுபிடித்துக் கொள்ளுவார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 116, 117.***

***கடைசி முயற்சியாக இருக்கட்டும்***

அநேக நேரங்களில் பிள்ளைகளிடம் பேசி அவர்கள் தங்கள் தவறுகளை புரிந்து கொள்ளும்படி செய்தால், அடிக்க வேண்டிய அவசியம் வராது. இந்த வகையிலும் அவர்களை பகுத்தறியச் செய்து வழிநடத்தினால் அவர்களுக்கு உங்கள்மீது கொண்டுள்ள நம்பிக்கை அதிகமாகும். அவர்கள் உங்களிடம் எல்லாவற்றையும் கூறுவார்கள். பிள்ளைகள் உங்களிடம் வந்து ***"இன்றைக்கு இந்த நேரத்தில் இந்த தவறை செய்தேன். நீங்கள் என்னை மன்னியுங்கள். தேவனையும் என்னை மன்னிக்க சொல்லுங்கள்"*** என்று நேரடியான வார்த்தைகளை பேசுவார்கள். இப்படிப்பட்ட அனுபவங்களை நான் கடந்திருக்கிறேன். இதைப்பற்றி பேசுகிறேன். பிள்ளைகள் இவ்வார்த்தைகளை பேசியபொழுது உறுதியுடன் அவர்களை கையாண்டேன். அந்த தைரியம் எனக்கு இருந்ததற்கு தேவனுக்கு நன்றி சொல்லுகிறேன். அவர்களுடன் சேர்ந்து ஜெபித்தேன். தேவ வார்த்தையின் தரத்தை அவர்களுக்கு முன்பாக நான் குறைத்துவிடவும் இல்லை. பாவங்களை மேற்கொள்ளுபவர்க்கு தேவன் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்களை சுட்டிக் காட்டினேன். உண்மையுடன் நடந்துகொள்ளுபவர்களுக்கு தேவனது ஆசீர்வாதங்களையும் காட்டினேன். இதை நினைக்கும்பொழுது என் மனம் மகிழ்கிறது. ***Manuscript 27, 1911.***

***கோபத்தில் அடிக்காதீர்கள்***

கோபத்தில் உங்கள் பிள்ளையை அடித்தால் சண்டைப் போடவே உங்கள் பிள்ளை கற்றுக்கொள்ளுவான். பெற்றோராக தேவனது இடத்தில், பிள்ளைக்கு முன்பாக நீங்கள் நிற்கிறீர்கள். எப்பொழுதும் உங்களது நன்னடத்தையை காத்துக்கொள்ளுங்கள். ***Manuscript 32, 1899.***



1ST Proof

பிரம்பைப் பயன்படுத்தி தண்டிக்க வேண்டிய அவசியம் சில சமயங்களில் நேரிடலாம். பிரச்சனையை சரி செய்வதற்கு முன்பாக உங்களை தெளிவுப்படுத்திக் கொள்ளுங்கள். தேவ சித்தத்திற்கு என் வழியையும் சித்தத்தையும் ஒப்படைத்திருக்கிறேனா? என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுங்கள். தேவன் என்னை வழிநடத்தும்படி அவர் கரத்திற்குள் என்னை கொடுத்துவிட்டு ஞானத்துடனும், பொருமையுடனும், கரிசனையுடனும், அன்புடனும், தவறுகளை சரியாக கையாளுகிறேனா? ***Manuscript 79, 1901.***

***கோபப்படும் தகப்பனுக்கு எச்சரிக்கை***

சகோதரரே குழந்தையாக இருப்பது எப்படிப்பட்ட அனுபவமாக இருக்கிறது என்பதை சிந்திதிருக்கிறீர்களா? அக்குழந்தை எவ்வகையான எதிர்காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை மனதில் கொள்ளுகிறீர்களா? உங்கள் பிள்ளைகள் தேவ குடும்பத்தின் இளைய அங்கத்தினர்கள். பரலோகிற்கு செல்லத்தக்கதான ஒரு கல்வியை அவர்களுக்கு நீங்கள் கொடுக்க வேண்டும். இதற்காகவே தேவன் அவர்களை உங்கள் பொறுப்பில் விட்டிருக்கிறார். பிள்ளைகளை மென்மையின்றி முரட்டுத்தனத்துடன் கையாண்டால் தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டி வராதா? இதையே நீங்கள் செய்திருக்கிறீர்கள். பிள்ளைகளை இந்த வகையில் கையாளாதீர்கள். உங்கள் விருப்பத்தை மட்டும் நிறைவேற்றிக் கொண்டு சுற்றி திரிய உங்கள் பிள்ளை ஒரு குதிரையோ, நாயோ கிடையாது. எல்லா சமயங்களிலும் பிரம்பை வைத்துக் கொண்டு கட்டுப்படுத்திக் கொண்டிருக்கக் கூடாது. அல்லது கரங்களினால் அடித்து மிரட்டிக் கொண்டிருக்கக் கூடாது. ஒரு வேளை சில பிள்ளைகளுக்கு சில சமயங்களில் இப்படியாக கையாளப்பட வேண்டிய நிர்பந்தம் ஏற்படலாம். ஆயினும் பெரும்பாலான பிள்ளைகள் இப்படி நடத்தப்படுவதினாள் மோசமானவர்களாகவே மாறுகிறார்கள்.

தேவனுக்கு முன்பாக தலை தாழ்த்தி நல்மனசாட்சியுடன் நீங்கள் கொடுக்கவிருக்கும் அடியும், அதன் வழியாக உங்களது திருத்தும் முயற்சியின்மீதும், தேவ ஆசீர்வாதத்தை, பெற்றுக்கொள்ள முடிந்தால் மட்டுமே இதை செய்யுங்கள். பிள்ளைகளின் மனங்களில் அன்பை ஊக்கப்படுத்துங்கள். நீங்கள் அவர்களை கட்டுப்படுத்துவதற்கான உயரிய

நோக்கத்தை அவர்கள் பார்க்கட்டும். இதை புரிய வையுங்கள். நீங்கள் சொல்லுவதினாலோ, அல்லது விரும்புவதினாலோ, ஒரு சர்வாதிகாரிக்கு கீழ்ப்படிவதைப்போல் அவர்கள் கீழ்ப்படியக் கூடாது. நீங்கள் தந்தையாக இருப்பதினாலும், அவர்களை காட்டிலும் பெலனானவராக இருப்பதினாலும் கீழ்ப்படிய வேண்டும் என்றும் அவர்கள் நினைத்துவிடக் கூடாது. உங்கள் குடும்பத்தை சீரழிக்க விரும்பினால் மிருகங்களைக் கையாளுவதைப்போல் பிள்ளைகளிடம் நடந்துகொள்ளுங்கள். நிச்சயம் வெற்றியைக் கண்டடைவீர்கள். ***Testimonies for the Church, Vol. 2, p. 259, 260.***

***பிள்ளையை பிடித்து கோபத்தில் அடிக்காதீர்கள்***

பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சரியான ஒரு கல்வியைக் கொடுக்கவில்லை. பிள்ளைகளிடம் காணப்படும் குறைகள் அவர்களிடமும் அதிகமாக வெளிப்படுகிறது. ஒழுங்கின்றி உண்ணுகிறார்கள். நரம்பு மண்டலத்தின் சக்தி வயிற்றிற்காக அளவிற்கு மிஞ்சி செலவிடப்படுகிறது. மற்ற எதையுமே திறன்பட செய்ய முடியாதவர்களாகிறார்கள். பொருமையில்லாதவர்களாக இருக்கின்றனர். இதனால் தங்கள் பிள்ளைகளை கட்டுப்படுத்த முடிவதில்லை. சரியான வழியையும் கற்றுக்கொடுக்க முடிவதில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் பிள்ளை திடீரென்று பிடித்து, கோபத்தில் உலுக்கி அடித்துவிடுகிறார்கள். இது நடந்தால் அவர்களை பிடித்திருக்கக் கூடும் ஒரு தீய ஆவியை வெளியே தள்ளி, இரண்டு தீய ஆவிகளை அவர்களுக்குள் புகுந்துவிடும் என்பதை நான் சொல்லியிருக்கிறேன். பிள்ளை தவறு செய்தால், முரட்டுத்தனமாக கையாளுவதினால் சூழ்நிலையை இன்னும் கேடானதாகவே மாற்றும். தீமையை இது தடுப்பதில்லை. ***Testimonies for the Church, Vol. 2, p. 365.***

***பகுத்தறிவையும் ஜெபத்தையும் உபயோகியுங்கள்***

பிள்ளைகளிடம் பேசுங்கள். அவர்களது தவறுகளை அவர்களுக்குப் புரிய வையுங்கள். உங்களுக்கு எதிராக மட்டுமல்ல தேவனுக்கெதிராக பாவம் செய்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் இதயங்களில் பதிய வையுங்கள். இரக்கத்துடன் மன வருத்தத்துடன் முதலில் அவர்களுடன் சேர்ந்து ஜெபியுங்கள். பிறகு திருத்துங்கள். இதை நீங்கள் செய்யும்பொழுது, உங்களை உபத்திரவப்படுத்தியதால் நீங்கள் அவர்களை தண்டிக்கவில்லை என்பதை புரிந்துகொள்ளுவார்கள். உங்கள் கோபத்தைக் காட்ட அவர்களை தண்டிக்கவில்லை என்பதையும் அறிந்து கொள்ளுவார்கள். அது உங்கள் கடமையென்பதையும் அவர்களது நன்மைக்காகவே இதை செய்கிறீர்கள் என்பதையும் அவர்கள் உணர்ந்தால் உங்களை நேசித்து மதிப்பார்கள். ***Signs of the Times, Apr 10, 1884.***

இந்த சூழ்நிலையிலும் அவர்களுடன் சேர்ந்து நீங்கள் ஏரெடுக்கும் ஜெபம் நீங்கள் அநியாயமான விதத்தில் நடக்கிறதில்லை என்பதை அவர்களுககுக் காட்டும். இது நடந்தால் உங்களுக்கு இது ஒரு மிகப் பெரிய வெற்றி. இந்த கடைசி நாட்களிலும் நமது குடும்பங்களில் செய்யப்பட வேண்டிய வேலை இதுவே. ***Manuscript 73, 1909.***

1ST Proof

***இக்கட்டான சூழலில் ஜெபத்தின் வல்லமை***

பிள்ளைகள் தவறு செய்தால் தேவ கோபத்தை சுட்டிக்காட்டி அவர்களை அச்சுறுத்தாதீர்கள். அவர்களது தவறுகளை ஜெபத்தில் கிறிஸ்துவிடம் எடுத்து வாருங்கள். ***Manuscript 27, 1893.***

ஒரு தவறின் நிமித்தம் தண்டனையாக பிள்ளையின் சரீரத்தில் வலியை ஏற்படுத்துவதற்கு முன்பாக கிறிஸ்தவ பெற்றோர்களாக உங்களது அன்பை வெளிக்காட்டுங்கள். பிள்ளைகளுடன் சேர்ந்து இரட்சகரண்டை செல்லுங்கள். அவரது வார்த்தைகளையே சொல்லுவீர்கள். ***“சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.” மாற்கு 10:14.*** நீங்கள் செய்யும் இச்ஜெபம் தேவ தூதர்களை உங்கள் பக்கத்தில் கொண்டு வரும். இந்த அனுபவங்களை உங்கள் பிள்ளைகளும் மறக்க மாட்டார்கள். இந்த அனுபவத்துடன் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களை தேவன் ஆசீர்வதிப்பார். கிறிஸ்துவிடம் பிள்ளைகள் வழிநடத்தப்படுவார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 117, 118.***

***பிள்ளைகளை ஒழுக்கப்படுத்தலில் தனிப்பட்ட அனுபவங்கள்***



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

என்னை துன்பப்படுத்திவிட முடியும் என்று சிறு பிராயத்தில் என் பிள்ளைகள் நினைக்க நான் அனுமதித்ததில்லை. மற்ற குடும்பங்களை சேர்ந்த பிள்ளைகளையும் என் பிள்ளைகளுடன் நான் வளர்த்திருக்கிறேன். கோபத்துடன் பொருமையின்றி பிள்ளைகளிடம் பேசவோ, முகங்கோணவோ நான் என்னை அனுமதிக்கவில்லை. என் கோபத்தைத் தூண்டி ஒரு முறை கூட பிள்ளைகள் என்னை மேற்கொண்டதில்லை. பொருமையிழந்து கோபத்துடன் பிள்ளைகளிடம் நான் ஒரு வார்த்தைக் கூட நான் பேசியதில்லை. ஒரு முறைக்கூட பிள்ளைகள் என்னை மேற்கொள்ளும்படி நான் விட்டதில்லை. நான் உணர்ச்சி வசப்பட தூண்டப்பட்ட வேளைகளில் ***“பிள்ளைகளே இப்பொழுது இதை விடுவோம், இதைக்குறித்து பேச வேண்டாம். இரவு தூங்கச் செல்லுவதற்கு முன்பாக இதைப் பற்றி பேசுவோம்”*** என்று சொல்லுவேன். சிந்தித்து செயல்பட அதிகமான நேரத்தை எடுத்துக் கொண்டபடியால் அவர்களை நிதானத்துடன் சரியாக கையாண்டேன். அவர்களின் மனங்களும் பதட்டம் இல்லாத நிலையை அடைந்த பிறகு தீர்வுகளுக்கான முயற்சிகளை ஏரெடுத்தேன்.

சுரியான வழியும் உண்டு, தவறான வழியும் உண்டு. பேசி புரிய வைப்பதற்கு முன்பாக கோபத்தில் நான் என் கையை உயர்த்தியது கிடையாது. பிள்ளைகளுடன் சேர்ந்து ஜெபித்தபின், அவர்களுடன் பேசி தவறுகளை புரிய வைத்தேன். அவர்களும் மனம் உடைந்து தவறுகளை உணர்ந்துகொண்டார்கள். என் கட்டுப்பாட்டிற்குள்ளாக வந்தார்கள். வேரு வகையில் அவர்களும் நடந்து கொண்டதில்லை. அவர்களுடன் சேர்ந்து நான் ஜெபிக்கும்பொழுது மனம் உடைந்து என்னை தழுவி அழுதுவிடுவார்கள்.

என் பிள்ளைகளை திருத்துகையில் என் குரலின் சத்தத்தையோ, பேச்சின் தோரணையையோ நான் சிறிதும் மாற்றியது கிடையாது. பிரச்சனையின் சூழலை நான் கவனித்தபொழுது பதட்டம் தணியும்வரை காத்திருப்பேன். பிறகு தங்கள் தவறுகளை எண்ணி அவர்களே சங்கடப்பட்டு திருந்தும்படி பேசுவேன். இதற்கு முன்பாக அவர்கள் சிந்திக்கவும் போதுமான நேரத்தைக் கொடுத்தேன். அந்நேரத்தில் நான் ஜெபித்தேன். ஜெபிக்காமல் அவர்களுடன் நான் பேசியது கிடையாது.

துனியாக விடப்பட்ட அந்த நேரத்திலும் பிள்ளைகள் சிந்தித்து, அதைப்பற்றி பேச என்னிடம் வருவார்கள். மாலை வரை காத்திருப்போம் என்று அவர்களிடம் சொல்லுவேன். நாங்கள் ஒன்றாக ஜெபிப்போம். இறுதியில் அவர்கள் தங்கள் ஆத்துமத்தையும், தேவ ஆவியையும், தங்களின் தவறான நடத்தையினால் துக்கப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை பேசி உணர வைப்பேன். ***Manuscript 82, 1901.***

1ST Proof

***ஜெபிக்க நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்***

நான் கோபப்பட்டு பேசும்படியாக சோதிக்கப்பட்ட பொழுது அமைதியாக இருந்துவிடுவேன். அந்த அறையை விட்டு வெளியேறி பொருமைக்காக தேவனிடம் ஜெபிப்பேன். பிறகு அவர்களிடம் சென்று பேசுவேன். அந்த தவறை அவர்கள் மீண்டும் செய்யக் கூடாதென்பதை நிதானத்துடன் கூறினேன். பிள்ளைகளின் கோபத்தை தூண்டிவிடாதபடி நம்மால் நடக்க முடியும். அன்புடனும் பொருமையுடனும் பேச வேண்டும். நாம் எப்படியெல்லாம் வழி தவறியிருக்கிறோம் என்பதையும் எப்பொழுதும் மனதில் நினைத்தவர்களாய், தேவன் நம்மை எப்படி நடத்துகிறார் என்பதும் நமக்கு முன்பாக இருந்துகொண்டே இருக்க வேண்டும்.

பெற்றோர்கள் இந்த பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். இதை நீங்கள் கற்றுக்கொண்டால் கிறிஸ்துவின் பள்ளியில் மிக சிறந்த மாணவர்களாக இருப்பீர்கள். பிள்ளைகளுக்கு தேவ பயத்தையும் அவரது கட்டளையை கைக் கொள்ளவும் கற்றுக்கொடுப்பீர்கள். பிள்ளைகளை இப்படியும் நீங்கள் சரியாக வழிநடத்தினால் சமுதாயத்திற்கு அவர்கள் ஆசீர்வாதமாக இருப்பார்கள். பிள்ளைகள் மிக சிறந்தவர்களாக இருப்பார்கள். தேவனுடன் சேர்ந்து ஊழியம் செய்ய அவர்களை நீங்கள் தகுதிப்படுத்துகிறீர்கள். ***Manuscript 19, 1887.***

***சரியான ஒழுக்கம் மகிழ்ச்சியைக் கொண்டு வரும்***

சோதனையிலிருந்து தப்பித்துக் கொள்ள முயலுவது சரியல்ல. அதை மாற்ற வேண்டும். எல்லா வகையான ஒழுக்க வழிநடத்துதல்களுக்கும் இது பொருந்தும். பிள்ளையின் ஆரம்ப

பிராயத்தில் சரியான பயிற்சி கொடுக்கப்படாவிட்டால், தவறான சுபாவங்கள் பெலப்பட்டுவிடும். பிறகு குழந்தைக்கு நல்ஒழுக்கத்தின் கல்வியைக் கொடுப்பது கடினமானதாகிவிடும். சிட்சையும், கடிந்து கொள்ளுதலும் சுயத்திற்கு வலியை கொடுப்பதாக இருக்கும். எதிர்காலத்தில் இதனால் வரப்போகிற மகிழ்ச்சியை பார்க்கும் பொழுது இந்த வலி மறைந்துவிடும்.

மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு தவறும் ஒவ்வொரு இக்கட்டும் உயரியவைகளை கண்டடைவதற்கான படி கற்களாக இருக்கின்றன. இத்தகைய அனுபவங்களின் வழியாகவே வாழ்க்கையில் வெற்றியைச் சந்தித்தவர்களும் நடந்திருக்கிறார்கள். இவைகளை சரியாக கையாண்டதன் நிமித்தமாகவே இவர்கள் வெற்றி சிறந்திருக்கிறார்கள். ***Education, p. 295, 296.***

***தேவ புத்தகத்தை பின்பற்றுங்கள்***

பிள்ளைகளை சரியாக வளர்க்க பெற்றோர்களுக்கு பரத்திலிருந்து ஞானம் தேவை. இது இருந்தால் மட்டுமே சம நிலையான மனதுடன் எல்லா காரியங்களையும் கையாள முடியும். வீட்டையும் சரியான ஒழுக்கத்திற்குள்ளாக கொண்டு வர முடியும். ***Pacific Health Journal Jan. 1890.***

பிள்ளைகளை சரியாக வழிநடத்த வேதம் ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. பிள்ளைகளின் கல்விக்கும், பயிற்சிக்குமான ஒரு வழி இதில் வரையறுக்கப்பட்டுள்ளது. பெற்றோர்கள் இந்த வழியின்மீது நாட்டத்துடன் செயல்பட்டால் தவறுகளை செய்ய வேண்டிய அவசியமே இராது. இப்புத்தகம் பின்பற்றப்பட்டால் பிள்ளைகளின் சுய நல ஆசைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கு பதிலாக பெற்றோர்கள் அவர்களை சரியாக சிட்சிப்பார்கள். பிள்ளைகளின் குறைகளைக் காணாத குருடர்களாக இருக்க மாட்டார்கள். வேத வெளிச்சத்தைக் கொண்டு தெளிவாகப் பகுத்தறிந்து பிள்ளைகளின் துற்குணங்களை அறிந்துகொள்ளுவார்கள். சரியான வழியில் நடக்க பிள்ளைகளுக்கு கட்டடையிட வேண்டும் என்பதை உணருவார்கள். ***Manuscript 97, 1897.***

கலகக்காரர்களையும் அதிகாரத்தை எதிர்ப்பவர்களையும் தேவனால் அவரது இராஜியத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது. தேவ



1ST Proof

கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பதே அவசியமாக உள்ளது. தேவன் சொல்லுவதை கண்ணும் கருத்துமாக பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இது நடந்தால், தூதர்களும், மக்களும், தேவன் அவரது ஜனத்தை பாதுகாக்கிறார் என்பதை பார்ப்பார்கள். ***Manuscript 64, 1899.***

***உங்கள் பங்கும் தேவனின் பங்கும்***

பெற்றோர்களே உங்கள் கடமைகளை உத்தமமாகவும் முழுமையாகவும் நிறைவேற்றுங்கள். உங்கள் பங்கை நீங்கள் செய்தால், உங்களால் செய்ய முடியாததை, அவரது பங்கை செய்யும்படி தேவனிடம் கேட்கலாம். ***Signs of the Times, Feb 9, 1882.***

உங்கள் கடமைகளை செய்து தேவனிடம் சென்று ஜெபியுங்கள். அவரது உதவியைக் கேளுங்கள். உங்கள் பங்கை செய்ததையும் சொல்லி, அவரது பங்கை செய்யும்படி விசுவாசத்துடன் கேளுங்கள். அவரது ஆவியானவரைக் கொண்டு பிள்ளைகளோடு கிரியை செய்யும்படி ஜெபியுங்கள். குணங்களைப் பண்படுத்தி அவர்களை மென்மையானவர்களாக மாற்ற செய்யும்படி விண்ணப்பியுங்கள். உங்கள் ஜெபத்தை தேவன் கேட்டார். உங்கள் ஜெபங்களுக்குப் பதில் கொடுக்க தேவன் ஆசைப்படுவார். அவரது வார்த்தையின் வழியாக பிள்ளைகளை திருத்தும்படி தேவன் சொல்லுகிறார். அழுகிறார்கள் என்பதற்காக பிள்ளைகளை விட்டுவிடாதீர்கள். இந்த காரியங்களில் அவரது வார்த்தையின் அறிவுறுத்தல்களே கேட்கப்பட வேண்டும். ***Review and Herald, Sep 19, 1894.***

***அதிகாரம் - 45***

***அன்புடனும் உறுதியுடனும் வழிநடத்தல்***

***இரண்டு வழிகளும் அவ்வழிகளின் முடிவும்***

பிள்ளைகளை கையாள இரண்டு வழி உள்ளது. இவ்விரண்டு வழிகளும் வெவ்வேறு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவ்வழிகளின் விளைவும் வெவ்வேறாக இருக்கும். அன்பும், உண்மையும், உறுதியும், தேவ ஞானத்துடன் இணைக்கப்பட வேண்டும். வேத

வார்த்தைகளுக்கு இசைவாக இவைகள் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த வாழ்க்கையும் மறுமையின் வாழ்க்கையும் இதனால் மகிழ்ச்சியால் நிரப்பப்படும். கடமைகளை புறக்கணித்து, பிள்ளைகளை அவர்களது வழிகளுக்கு விட்டு, வாலிபர்களை சரியாக கட்டுப்படுத்தாவிட்டால் மிகுந்த துக்கத்தைக் கொண்டு வந்துவிடும். பிள்ளைகள் இறுதியில் அழிவையே சந்திப்பார்கள். ஏமாற்றமும் துயரமுமே பெற்றோர்களுக்கு மிஞ்சும். ***Review and Herald, Aug. 30, 1881.***

அன்பும் கடமையும் இரட்டைப் பிள்ளைகள் போன்றது. இவை இரண்டும் அருகருகே இருக்கின்றன. அன்பை மட்டுமே செலுத்தி கடமையைச் செய்ய தவறக் கூடாது. பிள்ளைகள் துணிகரமானவர்களாகவும் கீழ்ப்படியாதவர்களாகவும் சுய நலம் நிறைந்தவர்களாக வளர்ந்துவிடுவார்கள். தங்களின் விருப்பங்களின் படியே செயல்படுவார்கள். அன்பு இல்லாமல் வெரும் கண்டிப்பு மட்டுமே இருக்கவும் கூடாது. இதுவும் பிள்ளைகளிடம் மேற்சொல்லப்பட்ட துர்குணங்களை வளர்க்கும். அன்பும் கடமையும் சேர்ந்த ஒரு கலவையாக கொடுக்கப்பட வேண்டும். பிள்ளைகள் இதன் வழியில் மட்டுமே நல்ஒழுக்கத்தைப் பெறுவார்கள். ***Testimonies for the Church, Vol. 3, p. 195.***

***திருத்தப்படாத தவறுகள் துயரத்தைக் கொண்டு வருகின்றன***

பிள்ளையின் சித்தத்தை எதிர்த்து அதன் விருப்பத்தை நிராகரிக்கும் சூழ்நிலை வரும். பெற்றோர்கள் தங்கள் அதிகாரத்தைக் காட்டவோ அல்லது தங்களது சுயத்தை திருப்திபடுத்ததிக் கொள்ளவோ இப்படி நடப்பதில்லை என்பதை பிள்ளைகளுக்குப் புரிய வைக்க வேண்டும். பிள்ளையின் நன்மைக்கே இது நடக்கிறது என்பது பிள்ளையின் மனதில் பதிய வைக்க வேண்டும். திருத்தப்படாத ஒரு தவறும் தனக்கு சோகத்தைக் கொண்டு வந்து தேவனையே துயரப்படுத்துகிறது என்பது கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இத்தகைய ஒழுக்கத்தின் கீழ் பிள்ளைகள் பெருமகிழ்ச்சியை அனுபவிப்பார்கள். தேவ சித்தத்திற்கு தங்கள் சித்தத்தை சமர்பிப்பதிலே உண்மையான மன மகிழ்ச்சி என்பதைப் பார்ப்பார்கள். ***Fundementals of Christian Education, p. 68.***



1ST Proof

தங்களது விருப்பங்களையும் ஆசைகளையுமே நிறைவேற்றிக் கொள்ளும் வாலிபர்கள் உண்மையான மகிழ்ச்சியைக் கண்டடைவதில்லை. இறுதியில் நித்திய ஜீவனை இழப்பார்கள். ***Jan 27, 1899.***

***“அன்பு” வீட்டின் சட்டமாக இருக்கட்டும்***

தேவனது நிர்வாகமும் அவரது அரசாங்கமும் நாம் பிள்ளைகளை வழிநடத்த வேண்டிய முறையின் உதாரணமாக அமைந்துள்ளன. தேவ ஊழியத்தில் எவரும் ஒடுக்கப்படுவதில்லை. வீட்டிலும் பள்ளியிலும் இது இருக்கக் கூடாது. ஆயினும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் தங்கள் வார்த்தைகள் அசட்டைச் செய்யப்படும்படி விடக் கூடாது. பிள்ளைகளை திருத்தாவிடில் தேவனிடம் கணக்கு கொடுக்க வேண்டும். தவறுகளையே எப்பொழுதும் சுட்டிக் காட்டிக் கொண்டு இருக்கக் கூடாது. வீட்டின் சட்டமாக அன்பு இருக்க வேண்டும். பள்ளியிலும் இப்படியே இருக்க வேண்டும். தேவ கட்டளையை கைக்கொள்ள பிள்ளைக்குக் கற்றுக் கொடுங்கள். உறுதியான அன்பான ஒரு தாக்கம் தீமையிலிருந்து விலக பிள்ளைகளைக் கட்டுப்படுத்தட்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 155.***

***பிள்ளையின் அறியாமையை சரியாகக் கையாளுங்கள்***

பெற்றோர்களே, தந்தைகளாக, தாய்மார்களாக தேவ குணத்தை பிள்ளைகளுக்கு நீங்கள் வெளிப்படுத்த வேண்டும். புயலைப்போல வார்த்தைகளை உபயோகித்து பிள்ளைகளை கீழ்ப்படிய வைக்காதீர்கள். அன்பான தயவான முறையில் இதை செய்யுங்கள் கரிசனையுடன் நீங்கள் நடந்துகொண்டால் பிள்ளைகள் உங்கள் பக்கம் இழுக்கப்படுவார்கள். ***Manuscript 79, 1901.***

விருப்பக்கூடிய வகையில் வீட்டில் நடவுங்கள். கோபத்தைத் தூண்டும் ஒரு வார்த்தையையும் பேசாதீர்கள். ***“ பிள்ளைகளைக் கோபப்படுத்தாது இருங்கள்”*** என்பது ஒரு தேவ நியமனமாகவே இருக்கிறது. வயதிலும் அனுபவத்திலும் பிள்ளைகள் சிறியவர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்களை கட்டுப் படுத்துவதில்

அன்புடனும், அதே சமயத்தில் உறுதியுடன் செயல்படுங்கள். ***Review and Herald, Apr. 21, 1904.***

பிள்ளைகளால் எல்லா நேரங்களிலும் நன்மை தீமையை சரியாகப் பகுத்தறிய முடிவதில்லை. இதனால் அவர்கள் தவறுகிறார்கள். இத்தவறுகளுக்காக கடுமையாக அன்பில்லாமல் பெரும்பாலும் கையாளப்படுகிறார்கள். ***Manuscript 12, 1898.***

பிள்ளைகள் கீழ்ப்படியாவிட்டால் அவர்களை கடுமையாக நடத்தவோ, ஒடுக்கவோ தேவ வார்த்தை நமக்கு அதிகாரம் கொடுப்பதில்லை. தேவ கட்டளையானது இல்லத்திற்கும், தேசங்களுக்கும் எல்லையில்லா அன்பின் இதயத்திலிருந்து கொடுக்கப்படுகின்றது. ***Letter 8a, 1896.***

***கடினமாக குழந்தையிடம் கரிசனையைக் காட்டுங்கள்***

தவறு செய்யும் பிள்ளைகளை கிறிஸ்துவின் ஞானத்துடன் பெற்றோர்கள் கையாள வேண்டிய அவசியத்தை நான் பார்க்கிறேன். கையாள கடினமாக இருக்கும் குழந்தையிடம் அதிக அன்பையும் கரிசனையையும், பொருமையையும் கடைபிடிக்க வேண்டும். ஆயினும் இப்படிப்பட்ட பிள்ளைகளிடம் பெற்றோர் இரக்கம் இல்லாமல் நடந்து கொள்ளுகிறார்கள். இந்த நடத்தை பிள்ளைகள் தங்கள் தவறுகளை உணர வைக்காது. பெற்றோர்களின் இதயங்களும் கிறிஸ்துவின் கிருபையினால் இளகட்டும். அவரது அன்பு இதயங்களுக்குள்ளாகச் செல்லும் ஒரு வழியை ஆயத்தப்படுத்தும். ***Manuscript 22, 1890.***

நமது இரட்சகரின் கட்டளை ***“ மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.” லூக்கா 6:31.*** பிள்ளைகளையும் வாலிபர்களையும் கையாளுவதில் இதுவே அடிப்படை சட்டமாகக் கொள்ளப்பட வேண்டும். கர்த்தரின் குடும்பத்தில் இவர்கள் இளைய அங்கத்தினர்கள். ஜீவியத்தின் கிருபைக்கான சுதந்திரவாளிகளாக இருக்கிறார்கள். மந்தமாக இருந்து, பெரிய தவறுகளை செய்யும் குழந்தைகளை கையாளுவதிலும் கிறிஸ்துவின் இச்சட்டமே புனிதமாக கைக்கொள்ளப்பட வேண்டும். சிறிய குழந்தைகளுக்கும், துணிகரமாக தவறுகள் செய்யும் பிள்ளைகளுக்கும் இதுவே பொருந்தும். ***Education, p. 292, 293.***

***பிள்ளைகளுக்கு உதவுங்கள்***

தேவன் பிள்ளைகளை இளகிய மனதுடன் பார்க்கிறார். ஒவ்வொரு நாளும் அவர்கள் வெற்றியைக் காண விரும்புகிறார். பிள்ளைகள் தங்கள் பெலவீனங்களை மேற்கொள்ள நாம் உதவ வேண்டும். இதற்கென நம் முயற்சிகள் இருக்க வேண்டும். தங்கள் சொந்த குடும்பத்தினரே, பிள்ளைகளை நோகடிக்கக் கூடாது. பிள்ளைகளின் கோபத்தை தூண்டும்படியாக உங்கள் வார்த்தைகளும் செயல்களும் இருக்கக் கூடாது. இதை மனதில் வைத்துக் கொண்டு அவர்கள் தவறும் பொழுது திருத்தி நல் ஒழுக்கத்திற்குள் கொண்டு வர வேண்டும். இதையும் செய்யாமல் விடக் கூடாது. ***Manuscript 47, 1908.***

***பிள்ளைகளைப் பாராட்டுங்கள்***

பிள்ளைகள் நன்மையை செய்யும் பொழுது அவர்களைப் பாராட்டுங்கள். சம நிலையான ஒரு பாராட்டு பிள்ளைகளுக்கு ஒரு பெரிய உதவியாக இருக்கும். பெரியவர்கள் பாராட்டப்படுவதினால் ஊக்குவிக்கப்படுவது போலவே பிள்ளைகளும் ஊக்குவிக்கப்படுவார்கள். இல்லம் என்ற ஆசரிப்புக் கூடாரத்தில் துற்குணங்களைக் காட்டாதீர்கள். அன்புடனும் இளகிய மனதுடனும் கிறிஸ்தவப் பண்பை கடைபிடியுங்கள். பிள்ளைகள் உங்களுக்குச் செய்யும் உதவிக்காக அவர்களை பாராட்டுங்கள். ***Manuscript 14, 1905.***

மனதிற்கு பிரியமான வகையில் நடந்துகொள்ளுங்கள். கோபமான வார்த்தைகளை சத்தமாகப் பேசாதீர்கள். பிள்ளைகளை கட்டுப்படுத்துவதிலும் ஒழுக்கப்படுத்துவதிலும் உறுதியுடன் செயல்படுங்கள். ஆயினும் அன்புடன் இதை செய்யுங்கள். வீட்டு அமைப்பின் அங்கத்தினர்களாக அவர்கள் பங்கை செய்ய ஊக்கப்படுத்துங்கள். தவறு செய்யாதபடி பிள்ளைகள் தங்களை கட்டுப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளை கவனித்துப் பாராட்டுங்கள். ***Manuscript 22, 1904.***

1ST Proof

எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகள் எந்த வகையில் குடும்பத்தை நடத்திக் கொள்ள விரும்புவீர்களோ அதையே நீங்கள் செய்யுங்கள். அவர்கள் எப்படி பேசவேண்டும் என்று நினைக்கிறீர்களோ அப்படியே நீங்கள் பேசுங்கள். ***Manuscript 42, 1903.***

***பேச்சைக் குறித்து கவனம் தேவை***

எப்பொழுதும் நிதானமாகவும், அமைதியாகவும், உண்மையுடனும் பேசுங்கள். உங்கள் வார்த்தைகளில் கோபமோ பதட்டமோ இருக்கக் கூடாது. கீழ்ப்படிய வைப்பதற்கு கோபப்பட வேண்டிய அவசியம் இல்லை. ***Letter 69, 1896.***

பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் பொறுப்பாளிகளாக இருக்கிறீர்கள். உங்கள் பிள்ளைகளை எத்தகைய சூழ்நிலையில் வைக்கிறீர்கள் என்பதை குறித்து கவனமாய் இருங்கள். திட்டுவதினாலோ, முகங் கோணுவதினாலோ நீங்கள் அவர்கள்மீது கொண்டிருக்க வேண்டிய நல்ல செல்வாக்கை இழக்காதீர்கள். பிள்ளைகளை நீங்கள் வழிநடத்த வேண்டும். அவர்களது கோபத்தை தூண்டாதீர்கள். நீங்கள் எந்த வகையிலும் தூண்டப்பட்டாலும் உங்கள் பேச்சின் தன்மையைக் காத்துக் கொள்ளுங்கள். வார்த்தையில் எரிச்சலைக் காட்டாதீர்கள். பிசாசின் ஆவியின் வெளிப்பாடுகளைப் பிள்ளைகள் உங்களிடம் பார்க்கக் கூடாது. இது உங்கள் பிள்ளைகளுக்கு நித்திய ஜீவனுக்கேதுவாக பயிற்சியைக் கொடுக்க உதவாது. ***Manuscript 47, 1908.***

***நீதியும் இரக்கமும் சேர்ந்திருக்க வேண்டும்***

தேவனே நமது வாழ்வின் சட்டங்களைக் கொடுப்பவராக இருக்கிறார். இராஜாக்களும், பெற்றோர்களும் தேவ ஆளுகையின் கீழாக வாழ வேண்டும். தேவனின் கட்டளைகள் பிள்ளைகளிடம் கீழ்ப்படியாமையை அனுமதிப்பதில்லை. அதே கட்டளைகள் பெற்றோர்கள் பிள்ளைகளை ஒடுக்குவதையும் அனுமதிப்பதில்லை. தேவன் அன்பும், தயவும், சத்தியமும் நிறைந்தவராக இருக்கிறார். அவரது பிரமாணம் பரிசுத்தமானதாகவும் நீதியானதாகவும் இருக்கிறது. பெரும் நன்மை தரக்கூடியதாகவும் இருக்கிறது. பெற்றோர்களும் பிள்ளைகளும் இத்தேவ



1^ST^ Proof

பிரமாணத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். பெற்றோர்களின் வாழ்வுகளையும் பிள்ளைகளின் வாழ்வுகளையும் சீர்படுத்தும் தேவனின் சட்டங்கள் அளவில்லா அன்பின் இதயத்திலிருந்து உருவாகியிருக்கின்றன. தேவ பிரமாணங்களை தங்கள் இல்லங்களில் கைக்கொள்ளும் பெற்றோர்களின்மீது விசேஷ ஆசீர்வாதங்களைப் பொழிவார். கீழ்ப்படியும் பிள்ளைகளுக்கும் இவ்வாசீர்வாதங்கள் கொடுக்கப்படும். நீதியும் இரக்கமும் இணைய வேண்டும். இதன் தாக்கம் இல்லத்தில் நிலவ வேண்டும். ***"கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ் செய்யும்." சங். 85:10.*** இந்த ஒழுங்கிற்குள்ளாக இருக்கும் வீடுகள் தேவனுடைய வழியில் நடப்பார்கள். நீதியையும் நியாயத்தையும் செய்வார்கள். ***Signs of the Times, Aug. 23, 1899.***

தங்கள் சட்டத்தை சர்வாதிகாரியைப்போல் வீட்டில் அமல்படுத்தும் பெற்றோர் பெரிய தவறை செயிறார்கள். பிள்ளைகளுக்கு மட்டுமின்றி தங்களுக்கும் பெரிய தவறை இழைத்துக்கொள்ளுகிறார்கள். பிள்ளைகளின் மனங்களில் இருக்கும் அன்பை தனித்துவிடுகிறார்கள். வார்த்தையிலும் செயலிலும் பிள்ளைகள் அன்பை வெளிக்காட்டுவதில்லை. தயவும், அன்பும், பொருமையும் பிள்ளைகளுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். அதையே அவர்களும் பெற்றோரிடம் வெளிக்காட்டுவார்கள். அவர்கள் விதைப்பதையே அறுப்பார்கள்.

நீதியை பிரயோகிக்க பிராயசப்படும்பொழுது ஒன்றை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். நீதியும் இரக்கமும் இரட்டைப் பிள்ளைகளாக இருக்கிறார்கள். ஒருவரோடொருவர் சேர்ந்தார்போல நிற்கிறார்கள். இவர்கள் பிரிக்கப்படக் கூடாது. ***Review and Herald, Aug 30, 1881.***

***பிள்ளைகளை கடுமையுடன் கையாளுவது துணிகரத்தைத் தூண்டும். இப்படிப்பட்ட பெற்றோர்களுக்கு அறிவுரைகள்***

அன்பில்லாமல் கடுமையாக நடந்து, நீதியை மட்டும் கைக்கொள்ளுதல், பிள்ளைகளை சரியானவைகளைச் செய்ய வழிநடத்தாது. அவர்களுக்குள்ளே இருக்கும் துணிகரமான ஆவி தூண்டப்படும். அவர்களை கட்டாயப்படுத்துவதைவிட அவர்களை

கையாள வேரு ஒரு சிறந்த வழி உள்ளது. நீதியும் அன்பும் இரட்டைப் பிள்ளைகள். உங்கள் நிர்வாகத்தில் நீதியும் அன்பும் கைக்கோர்த்து செயல்படட்டும். தேவனும் உங்களது நல்ல முயற்சிகளில் உங்களுக்கு ஒத்துழைப்பார். தேவைப்படும் உதவிகளைச் செய்வார். கர்த்தர் உங்களது கிருபை நிறைந்த மீட்பர். அவர் உங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார். அவரது சிந்தையையும், கிருபையையும், இரட்சிப்பையும் தர ஆசைப்படுகிறார். இவைகளை நாம் பெற்றால் அவர் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு குணத்தை நாம் வைத்திருப்போம். ***Letter 19a, 1891.***

பெற்றோரின் அதிகாரம் முழுமையானதாக இருக்க வேண்டும். ஆயினும் இவ்வதிகாரத்தை அவர்கள் தவறாக பயன்படுத்தக் கூடாது. தன் பிள்ளைகளை ஒரு தகப்பன் கட்டுப்படுத்தும் பொழுது வேத தரமே தன் செயல்களின் அடிப்படையாக இருக்க வேண்டும். ஒரு தந்தை தனது கடுமையான பண்பு நலன்களை வெளிப்படுத்தினால் சர்வாதிகாரியாக மாறுகிறார். ***Review and Herald, Aug 30, 1881.***

***இளகிய மனதுடனும், அன்புடனும் கடிந்து கொள்ளுங்கள்***

நிச்சயமாக உங்கள் பிள்ளைகளிடம் பல்வேறு தவறுகளையும் பெலவீனங்களையும் காண்பீர்கள். சில பெற்றோர்கள் பிள்ளைகளிடம் பேசி அவர்களை தண்டித்தாலும் அது ஒரு பயனையும் தருவதில்லை என்று உங்களிடம் சொல்லுவார்கள். இப்படிப்பட்ட பெற்றோர் புதிய முறைகளை கையாள வேண்டும். குடும்ப நிர்வாகத்திற்குள் அன்மையும் தயவையும் அவர்கள் கொண்டு வர வேண்டும். நீதியின் கோட்பாடுகளுக்கு இணங்கி நடப்பதில் கற்பாறையைப் போல் உறுதியாக இருக்கட்டும். ***Manuscript 38, 1895.***

கல்லான இதயத்துடன் எவரும் பிள்ளைகளைக் கையாளக் கூடாது. இரக்கமும், அன்பும், தயவும், கரிசனையும் நிறைந்த நல்ல நண்பர்களைப்போலவும் பெற்றோர் இருக்க வேண்டும். அதே நேரத்தில் தாங்கள் கடிந்து கொள்ளப்பட்டும், திருத்தவும் படுவார்கள் என்பதை பிள்ளைகள் அறிந்துகொள்ள வேண்டும். அவர்களிடம் இருக்கும் தீமை வெட்டப்படவே இது நடக்கிறது என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ***Manuscript 58, 1897.***



1ST Proof

பெற்றோர்களுக்கு இதை சொல்ல நான் அறிவுறுத்தப்படுகிறேன். உங்களது நடத்தையின் தரத்தை உங்கள் இல்லங்களில் உயர்த்துங்கள். பிள்ளைகளுக்குக் கீழ்ப்படியக் கற்றுக்கொடுங்கள். அன்புடனும், கிறிஸ்துவைப்போன்றதான ஒரு அதிகாரத்துடனும் பிள்ளைகள் வழிநடத்தப்படட்டும். கொர்நேலியுவைப்பற்றி சொல்லப்பட்ட வார்த்தைகள் உங்களைப் பற்றியும் சொல்லப்படட்டும். ***"அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்தான்" அப். 10:2. Review and Herald, Apr. 21, 1904.***

***கடுமையான நடத்தையும், பிள்ளைகளை தங்கள் விருப்பத்தின்படிவிடும் நடத்தையும் இருக்கக் கூடாது***

பிள்ளைகளை அதிகமாக குற்றப்படுத்தி அவர்களை சோரவைக்கக் கூடாது. நாம் கோபப்பட்டு பிள்ளைகளைக் கையாண்டு அவர்களது கோபத்தையும் தூண்டக் கூடாது. இப்படி செய்துவிட்டதால் அதை சரிசெய்வதாக நினைத்துக் கொண்டு அதிகமான அன்பைக் காட்டி, அவர்களின் கேடான ஆசைகளை நிறைவேற்றும் நடத்தையும் சரியானதல்ல. இந்த இரண்டுமே தவறான போக்காகும். இவை இரண்டுமே இல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். உறுதியும், கண்காணிப்பும் அவசியமே. அதே சபை கரிசனையும், தயவும், இல்லாமற்போகக் கூடாது. சோதனைகளுடன் போராடிக் கொண்டிருக்கும் பிள்ளைகளை பெற்றோர்கள் கையாளுகிறார்கள். இதை அவர்கள் மறக்கக் கூடாது. பெரியவர்களைப் போலவே பிள்ளைகளுக்கும் அவர்களின் தீமைக்கேதுவான சுபாவங்கள் மேற்கொள்ளப்பட கடினமானதாக இருக்கும். நல்லதையே செய்ய வேண்டும் என்று ஆசைப்படும் பிள்ளைகளும் மீண்டும் மீண்டும் தோல்வியை சந்திக்கலாம். இவர்கள் ஊக்குவிக்கப்பட்டு பொருமையுடன் கையாளப்பட வேண்டும். ஜெபத்துடன் கூட இந்த இளம் மனங்கள் எப்படி செயல்படுகின்றன என்பதை கண்நோக்குங்கள். நன்மையானவைகளை பெலப்படுத்துங்கள். ஒவ்வொரு உயரிய செயலையும் ஊக்கப்படுத்துங்கள். ***Signs of the Times, Nov. 24, 1881.***

***சீரான உறுதியையும் உணர்ச்சிவசப்படாத கட்டுப்பாட்டையும் கைக்கொள்ளுங்கள்***

பிள்ளைகள் சிறு காரியங்களினாலும் பெரிதாகப் பாதிக்கப்படுபவர்களாக இருக்கிறார்கள். எளிதில் மகிழ்கின்றனர். எளிதில் சோர்ந்தும் விடுகின்றனர். மென்மையாக பிள்ளைகளை ஒழுக்கப்படுத்துங்கள். அன்பான வார்த்தைகளும் செயல்களும் பிள்ளைகளிடம் காட்டப்படட்டும். இப்படியும் செய்தால் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை பிரியாத கட்டுகளினால் பிள்ளைகளை தங்கள் இருதயங்களுடன் பிணைத்துக் கொள்ளலாம். நிலையான உறுதியும் உணர்ச்சிவசப்படாத கட்டுப்பாடும் ஒவ்வொரு குடும்பத்தின் ஒழுக்கத்திற்கும் அவசியம். நீங்கள் சொல்லுவதை நிதானமாகச் சொல்லுங்கள். பிள்ளைகளைப் புரிந்துகொண்டு நடவுங்கள். உங்கள் வார்த்தைகளில் மாறாமல் நில்லுங்கள் ஒன்றை சொல்லி பின்பு மாறாதீர்கள்.

பிள்ளைகளிடம் அன்பை காட்டுவது பெரிய நன்மையைக் கொண்டு வரும். அவர்களின் குழந்தைத்தனமான விளையாட்டுகளையும், மகிழ்ச்சிகளையும், சோகங்களையும் நிராகதித்துவிடாதீர்கள். இவைகளையும் புரிந்துகொள்ளுங்கள். ஒரு முறை கூட முகங்கோணாதீர்கள். கடுமையான ஒரு வார்த்தையும் பேசாதீர்கள். ***Testimonies for the Chruch Vol..3, p. 532.***

அன்பிற்கும் அளவுண்டு. அதிகாரத்தை உறுதியும் காத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் அதிகாரம் பரிகாசம் செய்யப்படும். ஏளனமாக எதிர்கொள்ளப்படும். வாலிபர்களை தங்கள் விருப்பம் போல, செயல்படவிடுவது அன்பாக நினைக்கப்படுகின்றது. இளகிய முறையில் அவர்கள் இப்படியும் கையாளப்படுவதாக நினைக்கப்படுகின்றது. ஊண்மையில் இது ஒரு மோசமான தீமையாக இருக்கிறது. உறுதியும் தெளிவான முடிவுகளும், நன்மைக்கேதுவான சட்டங்களும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவசியம். ***Testimonies for the Chruch Vol. 5, p. 45.***

***உங்கள் தவறுகளை மறக்காதீர்கள்***



1ST Proof

பெற்றோர்களும் வளர்ந்த பிள்ளைகளாக இருக்கிறார்கள். இதை அவர்கள் மறக்கக் கூடாது. இவர்கள் அதிகமான வெளிச்சத்தையும் அனுபவத்தையும் பெற்றவர்கள். ஆயினும் எளிதில் சோதிக்கப்படுகிறார்கள். பொறாமைக்கும், தீய பேச்சுக்கும் தூண்டப்படுகிறார்கள். தங்களது தவறுகளை மறக்காதவர்களாக தங்கள் தவறுகளிலிருந்துப் பாடங்களைக் கற்றுக் கொண்டவர்களாக பிள்ளைகளை மென்மையாகக் கையாள வேண்டும். ***Manuscript 53.***

உங்களின் வார்த்தைகளுக்கு எதிராக செயல்பட்டதினால் பிள்ளைகள்மீது நீங்கள் எரிச்சலடையலாம். தேவன் உங்களுக்கு கட்டளையிட்டவைகளுக்கு எதிராக எத்தனை முறை நீங்கள் செயல்பட்டிருக்கிறீர்கள் என்பதை சிந்தித்திருக்கிறீர்களா? ***Manuscript 45, 1911.***

***அன்பையும் நம்பிக்கையையும் சம்பாதிப்பது எப்படி***

பெற்றோரும் ஆசிரியரும் அளவிற்கு அதிகமான அதிகாரத்தைக் காட்டும் அபாயம் உள்ளது. பிள்ளைகளுடனும், மாணவர்களுடனும் சரியான உறவை ஏற்படுத்திக்கொள்ள முடியாமல் போய்விடுகிறது. பிள்ளைகளிடமிருந்து வெகு தூரமாகவே இருந்துகொண்டு அதிகாரத்தை மட்டுமே காண்பித்து பிள்ளைகளின் அன்பையும் நம்பிக்கையையும் சம்பாதித்துவிட முடியாது. பிள்ளைகளை நெருக்கமாக சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் நேசிக்கப்படுகிறார்கள் என்பது காட்டப்பட வேண்டும். அவர்களது எல்லா முயற்சிகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும். சில நேரங்களில் ஒரு பிள்ளையைப் போன்றும் அவர்களுடன் இணைவது தவறாகாது. இது அவர்களை அதிகமாக மகிழ்வுட்டும். பிள்ளைகளின் அன்பும் நம்பிக்கையும் நம்மீது திரும்பும். பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் அதிகாரத்தை மதிக்க விரைவாக கற்றுக் கொள்ளுவார்கள். அவர்களை நேசிக்கவும் துவங்குவார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 76, 77.***

***கிறிஸ்துவைப் பின்பற்றுங்கள்***

கிறிஸ்து தாழ்த்தப்பட்டோருடனும், ஏழைகளுடனும், துன்பப்பட்டோருடனும் தன்னை இணைத்துக் கொண்டார். சிறு

பிள்ளைகளையும் தன் கரங்களில் தூக்கினார். அவர்களின் நிலைக்கே தானும் இறங்கினார். அவரது அன்பின் பெரிய இதயம் அவர்களது கடினங்களையும் தேவைகளையும் புரிந்து கொண்டது. அப்பிள்ளைகளின் சந்தோஷத்தில் இவரும் பங்கு கொண்டார். நகரத்தின் கூட்டம் குழப்பத்தினாலும் மாய்மாலம் நிறைந்த மனிதர்களினாலும் சோர்ந்த அவர் ஆவி பிள்ளைகளின் மத்தியில் புத்துயிர் பெற்றது. அவரது பிரசன்னம் அவர்களை ஒதுக்கவில்லை. பரலோகின் தேவன் அவர்களது கேள்விகளுக்கும் பதில் கொடுத்தார். அவரது பாடங்களை அவர்கள் புரிந்து கொள்ளும்படி எளிமையாக விளக்கினார். வளரும் அந்த மனங்களில் சத்தியத்தின் விதைகளை விதைத்தார். அவ்விதைகள் வரும் காலங்களில் பெரிய அறுவடையைக் கொடுக்கக் கூடியதாக அமைந்தது. ***Testimonies for the Chruch Vol. 4, p. 141.***

***தவறிய வாலிபனுக்கு தயவு பாராட்டுதல்***

உங்கள் கடிதங்களை ஆர்வத்துடனும், மனதுருக்கத்துடனும் படித்தேன். இந்த சூழ்நிலையில்தாமே மற்ற எல்லா சமயங்களைவிட உங்கள் மகனுக்கு ஒரு தந்தை அவசியம். ஆவன் தவறியிருக்கிறான். இதை நீங்கள் நன்கு அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் அவன் தவறுகளை அறிந்திருக்கிறீர்கள் என்பதையும் அவன் அறிவான். உங்கள் வார்த்தைகள் ஒரு கத்தியைப்போல் அவனை வெட்டிவிட முடியும். முன்பு சாதாரணமாக தோன்றியிருக்கும் வார்த்தைகள் கூட இந்நிலையில் அவனை காயப்படுத்தக் கூடும். பிள்ளைகளின் தவறுகள் பெற்றோர்களை எந்த அளவிற்கு அசிங்கப்படுத்தி கனவீனப்படுத்தும் என்பதை நான் புரிந்துகொள்ளுகிறேன். ஆயினும் நாம் தேவ பிள்ளைகளாக நமது பிதாவின் மனதை காயப்படுத்தியதைவிடவா நம் பிள்ளைகள் நம்மை புண்படுத்திவிட்டார்கள். நம் பரலோக பிதா நம்மை எவ்வளவு பொருமையாக கையாளுகிறார். மனந்திரும்பி பாவத்தைவிட இன்னும் நமக்கு அவகாசம் கொடுத்துக் கொண்டிருக்கிறார். நம் பாவங்களை மன்னிக்க அன்புடன் காத்துக் கொண்டிருக்கிறார்.

உங்கள் மகன்மீது நீங்கள் கொண்ட அன்பில் மாறிவிடாதீர்கள். உங்களது அன்பும், அவனை புரிந்துகொள்ளும் மனப்பான்மையும் இச்சூழலில் அவனுக்கு முன்பைவிட அதிகமாக தேவைப்படுகிறது. மற்றவர்கள் உங்கள் மகனை வெறுப்புடன் கண்நோக்கி அவனது தவறுகளை மோசமாக விமர்சிக்கக்கூடும். பெற்றோர்களாகிய நீங்கள் அவனை பாதுகாப்பான பாதையில் வழிநடத்த வேண்டும். இரக்கத்துடன் இதை செய்யும் முயற்சியை துவங்குங்கள். உங்கள் மகனின் தவறு எதுவாக இருந்தாலும், அவனை நீங்கள் மீண்டும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு உங்களை கனவீனப்படுத்திவிட்டான் என்று அவன் நினைத்துவிடக் கூடாது. மற்றவர்களின் விமர்சனங்களினாலும் கருத்துக்களினாலும் அவனை தவறாக கையாண்டுவிடாதீர்கள். அவன் பாவம் மன்னிக்கப்படவும் மறக்கப்படவும் முடியாததைப்போல நடக்காதீர்கள். நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். அவன்மீது நீங்கள் கொண்டுள்ள அன்பும், கனிவும் எக்காரணத்தைக் கொண்டம் துண்டிக்கப்படக் கூடாது. அவன் தவறுபவனாக இருக்கின்றனர். இந்த நிலையில் உங்களது அன்பு அவனுக்கு முக்கிய தேவையாக இருக்கிறது. சாத்தானின் கண்ணிகளிலிருந்து மீண்டு வர உங்கள் உதவியை கொடுக்கும் பெற்றோராக இருங்கள். அன்பினாலும் விசுவாசத்தினாலும் அவனை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். நமது மீட்பரை சார்ந்து இருங்கள். அவர்மீது உங்கள் பிடியை பெலப்படுத்துங்கள். உங்களுக்கும் மேலாக உங்கள் மகன் மீது தேவன் அக்கரைக் கொண்டுள்ளார் என்பதை மறக்காதீர்கள்.

நம்பிக்கையற்ற, சோர்வுபடுத்தும் வார்த்தைகளைப் பேசாதீர்கள். ஊக்குவிக்கும்படியாக பேசுங்கள். அவனால் தன்னை சரி செய்து கொள்ள முடியும் என்பதை அவனிடம் சொல்லுங்கள். நதித்திய கன்மலையாகிய கிறிஸ்துவின்மீது நிற்கவும், அவரிடமிருந்து தோல்வியை மேற்கொள்ளும் பெலத்தையும் பெற அவனுக்கு உதவுவதாகவும் சொல்லுங்கள். உங்கள் மகன் ஒரு பெரிய தவறை செய்திருந்தாலும் அதையே அவனுக்கு முன்பாக எப்பொழுதும் வைப்பது ஒரு நன்மையையும் செய்யப்போவதில்லை. ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து மீட்க சரியாக செயல்பட வேண்டும். இது திரளான பாவத்திலிருந்தும் ஒரு ஆத்துமா காக்கப்படும். ***Letter 1890.***

***கோபத்தை மேற்கொள்ள தெய்வீக பெலத்தை நாடுங்கள்***

1ST Proof

ஒவ்வொரு தந்தைக்கும், தாய்க்கும் இதை நான் சொல்ல விரும்புகிறேன். கோபப்டும் பண்பு உங்களிடம் இருக்குமானால் அதை மேற்கொள்ளு தேவனிடமிருந்து உதவியைப் பெற நாடுங்கள். நீங்கள் பொறுமை இழந்து கோபம்கொள்ளும்படி சோதிக்கப்படும்பொழுது தனியாக ஒரு இடத்திற்குச் சென்றுவிடுங்கள். மன்றியிட்டு உங்கள் பிள்ளைகளின் மேல் சரியான ஒரு தாக்கத்தை கொண்டுவர தேவ உதவிக்கு ஜெபியுங்கள். ***Manuscript 33, 1909.***

தாய்மார்களே நீங்கள் பொறுமை இழந்து பிள்ளைகளை கடுமையாக கையாளும்பொழுது நீங்கள் கிறிஸ்துவிடமிருந்து கற்றுக்கொள்ளுவதில்லை. மாறாக வேரு ஒரு எஜமானிடமிருந்து கற்றுக் கொள்ளுகிறீர்கள். ***“ நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது”*** என்று இயேசு சொல்லுகிறார். உங்கள் வேலை கடினமானதாக தோன்றி, உபத்திரவங்களையும் சோதனைகளையும் நீங்கள் காரணம் காட்டி, சோதனைகளை மேற்கொள்ள பெலனில்லை என்றும், கோபத்தை மேற்கொள்ள முடியவில்லை என்றும், கிறிஸ்தவ வாழ்வு ஒரு கடினமான மலையை ஏறுவதுப்போல் உள்ளது என்றும், நீங்கள் சொன்னால், நிச்சயமாக நீங்கள் கிறிஸ்துவின் நுகத்தை சுமக்கிறதில்லை. மற்றோரு எஜமானின் நுகத்தை சுமக்கிறீர்கள். ***Signs of the Times July 22, 1889.***

***தெய்வீக சாயலைப் பிரதிபலிப்பது***

நிதானமான தாழ்மையான ஆவியைப் பெற்றிருக்கும் மனிதர்களே சபையின் பெரிய தேவையாக இருக்கிறது. நீடிய சாத்தமும் பொருமையும் இவர்களிடம் இருக்க வேண்டும். தங்கள் குடும்பங்களை சரியாக கையாளுவதில், மனிதர்கள் இப்பண்புகளை கற்றுக் கொள்ளட்டும். பெற்றோர்கள் அநித்தியமான உலக சவுரியங்களை குறித்து சிந்திப்பதைவிட, பிள்ளைகளின் நித்தியத்திற்கு ஏதுவாக அதிகமாக சிந்திக்க வேண்டும். தேவ குடும்பத்தின் இளைய அங்கத்தினர்களாக பெற்றோர்கள் பிள்ளைகளைப் பார்க்க வேண்டும். பிள்ளைகள் தேவ சாயலை வெளிப்படுத்தும்படியான ஒரு பயிற்சியையும், நல்லொழுக்கத்தையும் பெற்றோர்கள் கொடுக்கட்டும். ***Review and Herald, July 16, 1895.***



1ST Proof

***பாகம் - XI***

***அதிகாரம் - 46***

***தவறான ஒழுக்கம்***

***உண்மையான அன்பு எல்லா ஆசைகளையும் நிறைவேற்றாது***

பிள்ளையின் இதயத்திற்கு அன்பே திறவு கோல். பிள்ளைகளின் தவறான ஆசைகளையும் நிறைவேற்றும் அன்பு உண்மையான அன்பல்ல. இத்தவறான அன்பு பிள்ளைக்கு நன்மையானதாகவும் இருக்காது. இயேசுவின்மேல் கொண்டுள்ள அன்பினிமித்தம் வெளிப்படும் அன்பே சமமான அதிகாரத்தையும் காத்து பிள்ளைகளை கீழ்ப்படிய வைக்கும். பெற்றோரின் இதயங்களும் பிள்ளைகளின் இருதயங்களும் ஒன்றாக பிணைக்கப்பட்டிருக்க வேண்டும். நெருப்பினால் சூடாக்கப்பட்டு உலோகங்கள் இணைக்கப்படுவதைப் போன்று இப்பிணைப்பு இருக்க வேண்டும். இந்த நெருக்கம் இருந்தால் ஞானமும், அன்பும், நற்கீர்த்தியும், நீடிய பொருமையும், சகிப்புத்தன்மையும் அக்குடும்பங்களிலிருந்து உலகினுள் பாயும். ***Review and Herald, Jan 24, 1890.***

***அளவை மிஞ்சும் சுதந்திரம் கெட்ட குமாரன்களை உருவாக்கும்***

பிள்ளைகளுக்கு அதிகமான சுதந்திரம் கொடுக்கப்படுவதினால், அவர்கள் தேவபக்தியை கண்டடைவதில்லை. அவர்களது எல்லா விருப்பங்களும் ஆசைகளும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பிள்ளைகள் இதனால் கெட்ட குமாரன்களாக மாறுகிறார்கள். இவர்களின் பெற்றோர்கள் தேவ வார்த்தையின்படி செயல்படவில்லை. பரிசுத்தப்படுத்தப்பட்ட மாறாத கொள்கைகளினால் மனமும் சிந்தையும், நமது நோக்கமும் நிலைநிறுத்தப்பட வேண்டும். நிலையான அன்பு நிறைந்த ஒரு நல் முன் உதாரணத்தினால் பிள்ளைகள் வழிநடத்தப்பட வேண்டும். ***Letter 117, 1898.***

*விருப்பங்களின்படி செய்ய விடப்பட்ட பிள்ளைகளை நிர்வகிப்பது கடினம்*

பெற்றோர்களே உங்கள் இல்லங்களை பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய வகையில் அமையுங்கள். பிள்ளைகளை அவர்கள் எல்லா விருப்பங்களின்படி செயல்பட விடுவது இம்மகிழ்ச்சியல்ல. இந்த வகையிலும் தவறாக வழிநடத்தப்பட்ட பிள்ளைகளை நிர்வகிப்பது கடினமானதாக இருக்கும். எதிர்காலத்திலும் உலகில் ஒரு நல்ல வாழ்க்கையை வாழுவது அப்பிள்ளைகளுக்கே மிகவும் கடினமானதாக இருக்கும். பிள்ளைகளை அவர்களின் ஆசைகளையே நிறைவேற்றிக் கொள்ளாவிட்டால், குணத்தின் தூய்மை மற்றும் உயரிய பண்புகளும் மறைந்துவிடுகின்றன. பிள்ளைகளுக்கு கீழ்ப்படிய கற்றுக் கொடுங்கள். உங்கள் அதிகாரம் மதிக்கப்பட வேண்டியதை அவர்கள் பார்க்கட்டும். அவர்கள் சந்தோஷம் இதினால் பரிபோகிறது என்று அவர்கள் நினைக்கக் கூடும். ஆயினும் இது தற்காலிகமானது. எதிர்காலத்தின் பெருந்துயரத்திலிருந்து இது அவர்களைக் காப்பாற்றும். ***Manuscript 2, 1903.***

ஒரு பிள்ளையின் இளம் பிராயத்திலும் அதின் போக்கில் விட்டுவிடுவது பாவம். பிள்ளை கட்டுப்பாட்டிற்குள்ளாக இருக்க வேண்டும். ***Letter 144, 1906.***

பிள்ளைகளை அவர்களது போக்கில் விட்டுவிட்டால் மற்றவர்கள் தங்களுக்குச் சேவை செய்து தங்களை மகிழ்வூட்ட வேண்டும் என்றும் நினைப்பார்கள். அவர்கள் ஆசைகளே நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கருதுவார்கள். ***Manuscript 27, 1896.***

அவ்வப்பொழுதும் கூட பிள்ளை தன் சொந்த வழியைப் பின்பற்ற விடக் கூடாது. இது நடந்தால் சாத்தான் அவனது கொடியை வீட்டில் பறக்கவிடுவான். பிள்ளையால் எதிர்கொள்ள முடியாத யுத்தத்தை பிள்ளையின் சார்பில் தாய் போராட வேண்டும். இதுவே தாயின் வேலை. பிசாசை கடிந்து தேவனை உண்மையோடு தேட வேண்டும். சாத்தான் பிள்ளையை தன் கரத்திலிருந்து எடுத்துவிட அனுமதிக்கக் கூடாது. அவன் கரங்களில் அவர்களைப் பற்றிக் கொள்ளுவான். ***Manuscript 70.***



1ST Proof

*அதிருப்தியையும் ஓய்வின்மையையும் உருவாக்குகிறது*

சில குடும்பங்களில் பிள்ளைகளின் விருப்பங்களே சட்டமாகக் கொள்ளப்படுகின்றன. அவன் விரும்பும் எல்லாவற்றையும் அவனுக்கு கொடுக்கப்படுகிறது. அவன் விரும்பாத எதையும் விரும்பாமல் இருந்துவிடவே ஊக்குவிக்கப்படுகிறான். இத்தவறான வழிநடத்தல் அவனது உணவு பழக்கத்தை கெடுத்துவிடுகிறது. ஆரோக்கியமான எளிமையான உணவுகளை அவன் விரும்புவதில்லை. அவன் விரும்பினவைகளெல்லாம் கொடுக்கப்பட்டதால் அதிருப்தியடைந்து நிதானமின்றி, ஒரு ஓய்வற்ற மனநிலையினால் தவிக்கிறான். எல்லா ஆசைகளையும் அனுபவித்துவிட்டதால், இம்மைக்கும் மறுமைக்கும் தகுதியிழக்கும்படி குணம் சம நிலையின்றி தடுமாறுகிறது. ***Manuscript 126. 1897.***

*எலிசாவின் கடிந்துறை*

பிள்ளைகளின் தவறான போக்குகளை பொருத்துக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனை தவறானது. எலிசா தனது பணியின் ஆரம்பத்தில் பெத்தேலின் வாலிபர்களால் பரிகாசம் செய்யப்பட்டார். அவர் சாந்தமான குணமுடையவராக இருந்தார். ஆயினும் தேவ ஆவியின் தூண்டுதலினால் அந்த தீய வாலிபர்களை சபித்தார். அவர்கள் எலியா பரமேரியதைக் கேள்விப்பட்டு அதைக் குறித்து ஏளனமாகவும் பரிகாசத்துடனும் பேசினார். தனது பணியின் உன்னத அழைப்பு எவ்வளவு பரிசுத்தமானதாக இருந்தது என்பதை திட்டவட்டமாக காட்டினார். ஏலியா பரமேரினதுபோல் அவரும் பரமேரும்படி அவ்வாலிபர்கள் அவரை கேலி செய்தனர். தேவனின் நாமத்தில் அவர்களைச் சபித்தார். தேவனே அவ்வாலிபருக்கு அந்த நியாயத்தீர்ப்பைக் கொடுத்தார்.

இச்சம்பத்திற்குப் பின் எலிசாவிற்கு அவரது பணியில் எந்த இடையூறும் எழும்பவில்லை. ஐம்பது வருடங்களுக்கும் பெத்தேலின் வாசற்கதவுகளுக்குள்ளும் வெளியும் பிரவேசித்தார். பல பட்டணங்களுக்கும் போக்கும் வரத்துமாக இருந்தார். பெரிய கூட்டங்களிடையேயும் சென்றார். மோசமான வாலிபர்கள் அங்கும் இருந்தனர். எவரும் அவரை தலைகுறைவாக நடத்தவோ, பேசவோ

இல்லை. உன்னத தேவனின் தீர்க்கதரிசி என்பதை எல்லோரும் ஆமோதித்தனர். ***Testimonies for the Church, Vol. 5, p.44.***

***பிள்ளைகளின் தூண்டுதல்களுக்கு இணங்காதீர்கள்***

பிள்ளைகள் தங்கள் ஆசைகளின்படியே இருக்க பெற்றோர் விட்டுவிடுகின்றனர். இந்த துன்மார்க்கத்திற்காக பெற்றோர் தேவனிடம் கணக்குக் கொடுக்க வேண்டும். பிள்ளைகள் கொடுக்கும் தொந்தரவுகளை தாங்க முடியாமல் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள, தவறான ஆசைகளையும் பெற்றோர்கள் நிறைவேற்றுகின்றனர். ஒன்றை நாம் நிராகரிக்கும்பொழுது பிள்ளை சரியான ஒரு ஆவியோடு அதை ஏற்க வேண்டும். அதையே முடிவாக ஒப்புக்கொள்ள வேண்டும். இப்படி செய்ய பிள்ளைகள் பயிற்சிக்கப்பட வேண்டும். ***Pacific Health Journal May 1890.***

***பிள்ளைகளின் வார்த்தைகளுக்கு முதலிடம் கொடுக்காதீர்கள்***

பிள்ளைகளின் பாவங்களை பெற்றோர் கண்டுகொள்ளாமல் விட்டுவிடக் கூடாது. ஒரு நண்பர் தங்கள் பிள்ளையின் தவறை சுட்டிக்காட்டினால் தங்கள் உரிமை பரிக்கப்படுவதாக பெற்றோர் நினைக்கக் கூடாது. தங்களுக்கு எதிராக எதுவோ நடந்துவிட்டதுபோன்று இதை பாவிக்கக் கூடாது. ஒவ்வொரு பிள்ளையின், வாலிபனின் பழக்கங்கள் சமுதாயத்தை பாதிக்கின்றன. ஒரு வாலிபனின் தவறான வழி பலரை அவ்வழியில் நடக்க வைத்துவிடும். ***Review and Herald, Jan 13, 1882.***

அனுபவம் நிறைந்த கிறிஸ்தவ பெரியவர்களின் வார்த்தைகளை விட உங்கள் பிள்ளைகளின் வார்த்தைகளுக்கு முதலிடம் கொடுப்பதுபோன்று நடக்காதீர்கள். இதை நீங்கள் செய்தால் பிள்ளைகளையே நீங்கள் புண்படுத்துகிறீர்கள். நல்ல தேவ பிள்ளைகளின் வார்த்தைகளைவிட என் பிள்ளைகளின் வார்த்தைகளையே நம்புவேன் என்று நீங்கள் கூறினால் ஏமாற்றவும், பொய் சாட்சி கூறவும் பிள்ளைகளை நீங்கள் ஊக்கப்படுத்துகிறீர்கள். ***Review and Herald, Apr. 13, 1897.***

***கெடுக்கப்பட்ட ஒரு குழந்தை சுதந்தரித்துக் கொள்ளுபவைகள்***



1ST Proof

பிள்ளையை அதன் போக்கிற்குவிடுவது எவ்வளவு தீமையை கொண்டுவரும் என்பதை எவராலும் கணிக்க முடியாது. சிறு வயதில் இப்படியும் தவறாக வழிநடத்தப்பட்ட சில பிள்ளைகள், எதிர்காலத்தில் நடைமுறை வாழ்க்கையின் பாடங்களினால் தங்கள் நிலையை உணருவார்கள். பெரும்பாலான பிள்ளைகளும் வாலிபர்களும் இத்தவறான வழிநடத்துதலினால் இரட்சிப்பை இழக்கிறார்கள். இந்த வகையில் கெடுக்கப்பட்ட ஒரு பிள்ளைக்கு வாழ்க்கையே பெரிய சுமையாக இருக்கும். ஏமாற்றத்திலும், சோதனையிலும், உபத்திரவத்திலும் இப்பிள்ளை தனது தவறான சித்தத்தையே செய்வான். கீழ்ப்படிய கற்றுக்கொள்ளாத பிள்ளைகள் உணர்ச்சிவசப்படும் பெலவீனமான குணத்தை பெற்றிருப்பார்கள். இவர்கள் ஆதிக்கம் செலுத்த முற்படுகிறார்கள். அதிகாரத்திற்கு அடிபணிய கற்றுக்கொள்ளவில்லை. நல்ஒழுக்கத்தை காத்துக்கொள்ள பெலனில்லாதவர்களாக இருப்பார்கள். கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், தவறுகளை திருத்திக்கொள்ள முடியாமல், தங்களை கட்டுப்படுத்த முடியாமல் தவிப்பர். தவறாக வழிநடத்தப்பட்டதால் பிள்ளைகளாக பெற்றுக்கொண்ட கேடுகளையே பெரியவர்களாக வளர்ந்தும் சுதந்தரித்துக் கொள்ளுகிறார்கள். நன்மையையும் தீமையையும் அவர்களது தெறளிவிழந்த அறிவால் பகுத்தறிய முறயாமற் போகிறது. ***Counsels to Parents, Teachers and Students, p. 112, 113.***

***அதிகாரம் - 47***

***ஒழுக்கமின்மையும் அதன் விளைவும்***

***தவறான பயிற்சி விசுவாச வாழ்க்கையை பாதிக்கிறது***

தேவ பயத்திற்குள்ளாக பிள்ளைகளை வழிநடத்தாத பெற்றோர்கள் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவார்கள். இப்பிள்ளைகள் ஒழுக்கமின்றி கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருப்பார்கள். குழந்தைப் பருவத்திலும் கோபப்பட்டு உணர்ச்சிவசப்பட இவர்கள் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் வளர்ந்த பிறகும் இதே ஆவியை அவர்களது குடும்பங்களுக்குள்ளும் கொண்டு செல்லுகின்றனர். சுய கட்டுப்பாடின்றி உணர்ச்சிவசப்பட்டு குடும்பத்தை நடத்துகின்றனர். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பிறகும் சிறு வயதிலிருந்து தங்களை பிடித்திருந்த கோபத்தை அவர்கள்

மேற்கொள்ளுவதில்லை. அவர்கள் பெற்ற தவறான பயிற்சியின் விளைவுகளை விசுவாச வாழ்க்கைக்குள்ளும் கொண்டுவந்து விடுகின்றனர். மரமாக வளருவதற்கு முன்பு சிறு செடி வளைந்துவிடுவதைப்போல் இவர் சிறுவதில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை சரி செய்வது மிகவும் கடினமானதாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் பெற்றோரான பிறகும் இயேசுவை ஏற்றுக்கொண்டாலும் கடினமான போராட்டங்களை சந்திக்க வேண்டியிருக்கும்.

அவர்கள் குணங்கள் மாறலாம். ஆயினும் சிறு பிராயத்தின் ஒழுக்கமின்மை விசுவாச வாழ்க்கையிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும். அவர்களது பிள்ளைகளும் பாதிக்கப்படுகிறார்கள். மூன்றாம் நான்காம் தலைமுறை வரையும் இத்தவறுகளின் விளைவுகள் இருக்கும். ***Review and Herald, Oct. 9, 1900.***

***இன்றைய ஏலிக்கள்***

பெற்றோர்கள் பிள்ளைகளின் தவறுகளை திருத்தாவிட்டால் அத்தவறுகளை ஆமோதிப்பதற்கு இணையானதாக இது உள்ளது. ஏலியைப்போன்று பிள்ளைகளின் தவறுகளை வளர்த்துவிடுபவர்கள் மோசமான ஒரு சூழ்நிலைக்குள்ளாக தள்ளப்படுவார்கள். தங்களின் செல்வாக்கையும் சீரழித்து, பிள்ளைகளின் செல்வாக்கையும் சீரழித்துவிட்டதை புரிந்துகொள்ளுவார்கள். கசப்பான பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கும். ***Manuscript 33, 1903.***

இன்றைக்கும் எல்லா இடங்களிலும் ஏலிக்களைப் பார்க்கிறோம். பிள்ளைகளின் தவறுகளுக்கு காரணங்களை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் உடனே தங்கள் அதிகாரத்தைப் பிரயோகித்துப் பிள்ளைகளை கட்டுப்படுத்தி திருத்த வேண்டும். பெற்றோர்களும், பிள்ளைகளை வழிநடத்தும் பொறுப்பை எடுத்துள்ளோரும் தவறுகளை கண்டுகொள்ளாமல் விட்டால், அவைகளில் இவர்களும் பங்குடையவர்களாக மாறுகிறார்கள். திருத்தும் பிரம்பை உணர்ச்சிவசப்படாமல் அன்புடனும் ஜெபத்துடனும் அவர்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும். இது நடந்திருந்தால் சந்தோஷமான குடும்பங்களையும் ஒரு நல்ல சமுதாயத்தையும் நாம் பார்த்திருப்போம். ***Signs of the Times, Nov. 24, 1881.***



1ST Proof

ஏலி தன் கடமையை உதாசீனப்படுத்தியது ஒவ்வொரு தகப்பனுக்கும் தாய்க்கும் முன்பாக வைக்கப்படுகிறது. பரிசுத்தப்படுத்தப்படாத ஒரு பாசத்தைக் காட்டினார். மனம் விரும்பாத வேலையை புறக்கணித்தார். பாவத்தின் ஒரு அறுவடையை தன் மகன்களின் துன்மார்கங்களில் பெற்றுக்கொண்டார். துன்மார்க்கத்தை அனுமதித்த பெற்றோரும் அதை செய்த பிள்ளைகளும் தேவனுக்கு முன்பாக ஒரே தராசில் நிற்பார்கள். அப்பாவத்தை செய்ததைப்போன்றே தேவன் அப்பெற்றோர்களை கடந்த காலங்களில் கையாண்டார். இப்பாவத்திறகென்று எந்த பலியையும் அவர் ஏற்கவில்லை. ***Review and Herald, May 4, 1886.***

***கேடான குணங்களையுடையோர் சமுதாயத்தின் சாபம்***

பெற்றோர்களுக்கு என்றைக்கு ஞானம் உதிக்கப்போகிறது? தேவ வார்த்தைக்கு இணங்கி, கீழ்ப்படிதலை பிள்ளைகளிடமிருந்து பெற்றோர் எதிர்பார்க்கிறதில்லை. தங்கள் பணியை அசட்டை செய்கிறார்கள். இந்த தவறை எப்பொழுது பெற்றோர்கள் உணரப்போகிறார்கள்? இத்தவறின் தன்மையை என்றைக்கு கண்டுகொள்ளப் போகிறார்கள்? பிள்ளைகளுக்கு தவறான பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஒழுக்கமில்லாதவர்களாக பிள்ளைகள் உலகினுள் காலடிவைக்கிறார்கள். குடும்பங்களை நடத்தும் பொறுப்புக்களையும் ஏற்றுக்ககொள்ளுகிறார்கள். தங்கள் பெற்றோர்களின் தவறுகளை அவர்களும் செய்கிறார்கள். கேடான பண்பு நலன்களை மற்றவர்களுக்கும் பரப்புகிறார்கள். சமுதாயத்திற்கு சாபமாக இருக்கிறார்கள். ***Testimonies for the Church, Vol5, p. 324, 325.***

உலகம் துன்மார்க்கத்தில் மூழ்கியிருக்கிறது. பெற்றோர்கள் சரியாக பிள்ளைகளை ஒழுக்கப்படுத்தாததினால் நிலை வந்துவிட்டது. சிறு பிராயத்தில் தவறாக கையாளப்பட்ட ஆயிரக்கணக்கானோர் சாத்தானிடம் விழுந்துகிடக்கிறார்கள். இந்த தவறான நிர்வாகத்தை தேவன் வன்மையாக கண்டிக்கிறார்.

***ஒழுக்கத்தின் பிடியை தகர்த்துக்கொள்ளுதல்***

பிள்ளைகள் தவறாக வழிநடத்தப்படுவதினால் கீழ்ப்படியவும், மற்றவர்களை மதிக்கவும் அவர்கள் படித்துக் கொள்ளவில்லை. இவர்கள் உலகத்துடன் சேருகிறார்கள். பெற்றோர்களுக்கும் இவர்கள் கடிவாளங்களைப் போட்டு தாங்கள் செல்லும் வழியில் அவர்களையும் இழுத்துச் செல்லுகிறார்கள். பெரும்பான்மையான நேரங்களில் பிள்ளைகள் எதிர்ப்பின்றி கீழ்ப்படியும் வேளையிலும் பெற்றோர்கள் ஒழுக்கத்தின்பிடியை தகர்த்துக் கொள்ளுகிறார்கள். நல்ல உதாரணங்களாக இருந்த பெற்றோர்கள் பிள்ளைகளால் வழிநடத்தப்படுகிறார்கள். உறுதி தளர்ந்துபோகிறது. கிறிஸ்துவின் சிலுவையை சுமந்து தேவ வழிகளை காத்த தந்தைகளும் தவறான வழிகளுக்குள் பிள்ளைகளால் கொண்டு செல்லப்படுகிறார்கள். ***Review and Herald, Apr 13, 1897.***

***பேரிய பிள்ளைகளை கட்டுப்பாடின்றி விடுதல்***

பெற்றோர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து பிள்ளைகளிடம் நல்லொழுக்கத்தைக் காக்க வேண்டும். ஆனால் வளரும் பிள்ளைகளின் இயல்புகளுக்கும், சுபாவங்களுக்கும் இணங்குகிறார்கள். இதனால் அவர்கள் கொடுத்துக்கொண்டிருந்த நல்லொழுக்கப் பயிற்சியின் பிடி தளர்ந்து போகிறது. பிள்ளையின் விருப்பமே சட்டமாகக் கொள்ளப்படுகிறது. இதில் உறுதியாக நின்ற தாய்மார்களும் பிள்ளைகள் பெரியவர்களாக வளரும் பருவத்தில் அவர்களை விட்விடுகிறார்கள். ஆண்களாக பெண்களாகவும் உருவெடுக்கிற நேரத்தில் தங்கள் இஷ்டப்படி இருக்க விடப்படுகிறார்கள். இதை செய்து பெற்றோர் பிள்ளைகளை சாத்தானின் கரங்களில் கொடுக்கிறார்கள். மோலேக்கைப்போன்று பாகாலுக்காக பிள்ளைகளை நெருப்பின்மேல் நடக்க வைக்கிறார்கள். ***Manuscript 19, 1891.***

***பிள்ளைகளை ஆதாயப்படுத்த தேவனை அவமதித்தல்***

பெற்றோர்கள் பிள்ளைகளின் தீய நாட்டங்களுக்கு வழிவிட்டுவிடுகிறார்கள். பிள்ளைகள் தேவனை சார்ந்து வாழ்வதில்லை. உலகத்திற்கு ஒரு நல்ல தோற்றம் கொடுப்பதற்காக பெற்றோர் பிள்ளைகளுக்கு பொருளுதவியும் வசதிகளும் செய்து கொடுக்கின்றனர். இந்த பெற்றோர் எத்தகைய கணக்கை தேவனிடம் ஒப்படைக்க வேண்டியதாய் இருக்கிறது. தேவனை அவமதித்து பிள்ளைகளை கனப்படுத்துகின்றனர். கடந்த நாட்களில் அனுமதிக்காத சிற்றின்பங்களையும் பிள்ளைகள் அனுபவிக்கும்படி விடுகின்றனர். சீட்டு ஆட்டங்களுக்கும் நடன நிகழ்ச்சிகளுக்கும் செல்ல அனுமதிக்கின்றனர். பிள்ளைகள் உலக அங்கீகாரம் பெற்றுக்கொள்ள இதை செய்கிறார்கள். உண்மையான கிறிஸ்துவத்தின் வல்லமையான சாட்சியை பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டிய நேரம் இது. ஆனால் ஏலியைப்போன்று சாபத்தை வரவழைத்துக் கொள்ளுகின்றனர். தேவனை கனவீனப்படுத்தி அவர் நியமங்களை உதாசீனப்படுத்துகிறார்கள். பிள்ளைகளை தங்கள் பக்கமாக ஆதாயப் படுத்திக்கொள்ள இப்படி செய்கிறார்கள். மரணத்தின் தருவாயில் நவ நாகரிகம் நம்மை இரட்சிக்கப்போவதில்லை. சில ஊழியர்கள் இத்தவறுகளை ஏற்றுக்கொள்ளும் ஒரு விசுவாச வாழ்க்கையை அனுமதிக்கலாம். பெற்றோர்கள் இதை செய்தால் மகிமையின் கிரீடத்தை மதிப்பற்றவைகளுக்காக விட்டுக்கொடுத்துவிடுகிறார்கள். கடமைகளை நிறைவேற்ற பெற்றோர்கள் எழுப்பப்பட வேண்டும். தேவனே இந்த உதவியை அவர்களுக்குச் செய்யட்டும். ***Review and Herald, Apr. 13, 1897.***

***நல்ல முன் உதாரணம்***

பிள்ளைகளிடம் நீங்கள் எதிர்பார்ப்பவைகளை நீங்கள் முதலில் கைக்கொள்ளுங்கள். சொல்லினாலும், செயலினாலும் பெற்றோர் தவறான முத்திரையையே பிள்ளையின்மீது பதித்திருக்கின்றனர். தவறான நடத்தையும், தகாத வார்த்தைகளும், கோப குணமும் பிள்ளைகளின் இதயங்களில் பெற்றோர்களால் பதிவாக்கப்பட்டிருக்கின்றன. பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் இதை கொடுத்துவிடுகிறார்கள். அடுத்து வரும் தலைமுறைகளும் பெற்றோரின் தவறுகளுக்குச் சாட்சி பகருகின்றன. ***Signs of the Times, Sep 17, 1894.***

***அதிகாரம் - 48***

***பிள்ளையின் நடத்தை***

***தூண்டிவிடுவது***

1ST
Proof

பெற்றோர்க்கு கீழ்ப்படிய பிள்ளைகள் வேதத்தில் அறிவுறுத்தப்படுகிறார்கள். பிள்ளைகளை பெற்றோர் கோபப்படுத்தக் கூடாது என்ற அறிவுரையும் வேதத்தில் கொடுக்கப்படுகின்றது. ***Manuscript 38, 1895.***

அநேக வேளைகளில் பிள்ளைகளை நாம் ஆதாயப்படுத்திக் கொள்ளுவதில்லை. அவர்களின் கோபத்தை தூண்டுகிறோம். ஒரு தாய் தன் பிள்ளையிடமிருந்து வேகமாக ஒரு பொருளை பறித்தாள். அந்த பொருள் அப்பிள்ளைக்கு மனமகிழ்சிசியைக் கொடுத்து கொண்டிருந்தது. தாய் இப்படி நடந்ததற்கான காரணத்தை பிள்ளையால் புரிந்து கொள்ள முடியவில்லை. தனக்கு பெரிய தவறு இழைக்கப்பட்டதாக அப்பிள்ளை நினைத்துக் கொண்டது. தாய்க்கும் பிள்ளைக்கும் இடையே வாக்குவாதம் ஆரம்பித்தது. பிள்ளை வெகுவாக கண்டிக்கப்பட்டு அந்த சம்பவம் முடிவடைந்தது. எல்லாம் முடிந்ததைப்போல் தோன்றிற்று. ஆனால் அப்பிள்ளையின் மனம் தவறான விதத்தில் பாதிக்கப்பட்டிருந்தது. இந்த பாதிப்ப அப்பிள்ளை மறக்க முடியாத ஒன்றாக இருக்கும். தாய் ஞானமில்லாமல் நடந்து கொண்டாள். தன் செயலின் விளைவுகளை யோசிக்கவில்லை. அவனது கடுமையான நடத்தைப் பிள்ளையின் மோசமான கோபத்தைத் தூண்டியது. இது போன்ற சம்பவம் நடக்கும் போதெல்லாம் இது நடந்து பிள்ளையின் கோபம் பெலனடைகிறது. ***Counsels to Parents, Teachers and Students, p. 117.***

### *தவறு கண்டுபிடித்தல்*

பிள்ளைகளை எப்பொழுதும் குறை கூறிக் கொண்டு ஒரு சோர்வின் மேகத்தை அவர்கள்மீது படற செய்ய உங்களுக்கு உரிமை கொடுக்கப்படவில்லை. சிறிய தவறுகளை பெரிதாக்கிவிடக் கூடாது. தவறின் தன்மை தெளிவாக புரிய வைக்கப்பட வேண்டும். மீண்டும் அது நடக்காதபடி உறுதியுடன், செய்ல்பட வேண்டியதை செய்ய வேண்டும். ஆயினும் பிள்ளையின் மனதிலிருந்து நம்பிக்கையை எடுத்துவிடக் கூடாது. அவர்கள் மேம்படவும் உங்கள்மீது நம்பிக்கை கொள்ளவும் ஊக்குவிக்கப்பட வேண்டும். பிள்ளைகள் நல்லதைச் செய்ய விரும்பலாம். கீழ்ப்படிய முடிவெடுக்கலாம் ஆயினும் உங்கள் உதவி அவர்களுக்குத் தேவைப்படும். ***Signs of the Times, Apr. 10, 1884.***

### *கடுமையான நடத்தை*

குடும்ப ஒழுக்கத்தைப் பற்றி குடும்பங்கள் சரியாக புரிந்து கொள்ளாததால் தேவன் அவமதிக்கப்படுகிறார். பிள்ளைகளும் ஒழுக்கத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளாதபடி குழம்புகின்றனர். தேவைக்கு அதிகமாக தவறு கண்டுபிடித்தலும், வன்மையாக நடந்துகொள்ளுதலும் பிள்ளை அதிகாரத்தை அவமதிக்கும்படி வழிநடத்துகிறது. தவறாக கையாளப்பட்டதினால் கிறிஸ்துவின் நியமங்களையும் பிள்ளை மீறுகிறது. ***Review and Herald, Mar. 13, 1894.***

ஒடுக்குகின்ற முரட்டுத்தனமான ஒரு எஜமானின் ஆவியை பெற்றோர் காட்டினால், பிள்ளையின் மனதில் துணிகரமும், அதிகாரத்திற்கு எதிராக செயல்படும் பண்பும் உதயமாகிறது. பெற்றோர்கள் பிள்ளைகளின் மீது அவர்களை மென்மையுட்டும் ஒரு தாக்கத்தைக் கொண்டு வருவதில்லை. பெற்றோர்களே கடுமையான வார்த்தைகள் எதிர்ப்பையே தூண்டும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவில்லையா? உங்கள் பிள்ளையை நீங்கள் நடத்துவதுபோல் நீங்கள் நடத்தப்பட்டால் என்ன செய்வீர்கள். உங்கள் செயல்களின் விளைவுகளை ஆராயுங்கள். ஒன்றும் செய்ய முடியாத ஒரு சிறு பிள்ளையை திட்டி அடித்தால், உங்கள் செயலின் விளைவை நீங்கள் சிந்தித்திருக்கிறீர்களா? நீங்கள் அந்த பிள்ளையாக இருந்து நீங்கள் அப்படி கையாளப்பட்டால் உங்களுக்கு எப்படியாக இருக்கும் என்பதையும் யோசியுங்கள். மற்றவர்கள் உங்கள் குறைகளை சுட்டிக்காட்டும் பொழுது நீங்கள் எப்படி பாதிக்கப்படுகிறீர்கள் என்பதை சிந்தியுங்கள். உங்களது திறமைகள் அங்கீகரிக்கப்படுவதில்லை என நினைத்து எவ்வளவு எளிதில் நீங்கள் புண்படுகிறீர்கள். நீங்களும் பிள்ளைகளே, அவர்களைவிட நீங்கள் வளர்ந்திருக்கிறீர்கள். வித்தியாசம் இதுவே கடுமையான வார்த்தைகளை பேசி, மனம் ஒடையும்படி சிறு தவறுகளுக்கும் கொடுரமாக அவர்களை தண்டித்தால் அவர்களது மனநிலை எப்படியிருக்கும். அவர்கள் செய்த தவறைவிட, அதன்நிமித்தம் அவர்களை நீங்கள் நடத்தும்விதமே

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

தேவனுக்கு முன்பாக பெரிய பாவமாக நிற்கிறது. ***Manuscript 42, 1903.***

கிறிஸ்தவர்கள் என்று பரைசாற்றிக் கொள்ளும் பெற்றோர்கள் மனமாறாதவர்களாக இருக்கிறார்கள். விசுவாசத்தினால் கிறிஸ்து அவர்களின் இதயங்களில் வசிப்பதில்லை. அவர்களின் கடுமையான நடத்தையும், ஞானமில்லாமல் பிள்ளையை கையாண்டதும், கோபமும், பிள்ளைகள் அவர்களை வெறுக்கச் செய்திருக்கிறது. தேவனைப்பற்றி இப்பெற்றோர் கொடுக்கும் அறிவுரைகளையும் பிள்ளைகள் வெறுப்பார்கள். ***Letter 18b, 1891.***

***தொடர்ந்து குறை கண்டுபிடித்தல்***

நாம் தீமையை திருத்த வேண்டும். அதற்காக எப்பொழுதும் தவறு கண்டுபிடித்து குறை சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. தொடர்ந்து இப்படி செய்தால் பிள்ளை குழப்பம் அடைகிறது. திருந்தாது. பெரும்பான்மையான மனங்கள் கரிசனையின்றி தொடர்ந்து கண்டிக்கப்படுவதினால் பெருந்தீமைக்கு ஏதுவாக மாறுகின்றன. பெருங்காற்று வீசினால் பூக்களால் மலர இயலாது.

ஒரே தவறிற்காக பிள்ளையைத் தொடர்ந்து குறை கூறினால் அத்தவறை தன்னால் மேற்கொள்ள இயலாது என்று பிள்ளை நினைத்துவிடும். அதை தனது மாறாத ஒரு சுபாவமாகவும் எண்ணிவிடும். மனச்சோர்வும் அவநம்பிக்கையும் உருவாக்கப்படுகிறது. இவைகளை மறைக்க பிள்ளை தைரியமாக இருப்பதைப்போன்று காட்ட துணிகரமாக செயல்படுகிறது. எதையுமே ஒரு பொருட்டாக எண்ணாததைப்போல நடக்கிறது.

***திட்டுவதும், கட்டளையிடுவதும்***

சுய கட்டுப்பாடின்மையினால் பெற்றோர்கள் பல புயல்களை உருவாக்குகிறார்கள். அன்புடன் பிள்ளைகளை வேலை செய்ய சொல்லுவதில்லை. சதா நேரமும் கோபத்துடன் கட்டளையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இத்துடன் பிள்ளைகளின் தவறுகளையும் சுட்டிக்காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இப்படி நடத்தப்படுவதற்குப் பிள்ளைகள் எந்த தவறையும் செய்திருக்கமாட்டார்கள். பெற்றோர்களே



1ST Proof

உங்களுடைய இந்த போக்கு பிள்ளைகளின் நல்ல குறிக்கோள்களையும் மனமகிழ்ச்சியையும் அழித்துவிடுகிறது. நீங்கள் சொல்லுவதை அன்பினிமித்தமாக செய்வதில்லை. பயந்து செய்கிறார்கள். அவர்களது இருதயம் அதில் இருப்பதில்லை. இப்படியாக கீழ்ப்படிவது வெறுக்கப்படுகின்றது. செய்ய வேண்டியவைகளை அவர்கள் மறந்துவிடுவார்கள். இது உங்கள் கோபத்தை தூண்டி, சூழ்நிலையை அப்பிள்ளைகளுக்கு மோசமானதாக மாற்றுகிறது. அவர்களது தவறுகளே மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டப்படுகின்றன. அவர்களது தவறான நடத்தை பெரிதாக்கப்பட்டு பல வண்ணங்களில் சித்தரிக்கப்படுகின்றது. சோகம் அவர்களை ஆட்கொள்ளுகிறது. எதையுமே பொருட்படுத்தாதவர்களாக மாறுகிறார்கள். வீட்டிற்கு வெளியே சந்தோஷத்தைத் தேடுகிறார்கள். இல்லத்தில் கிடைக்காததை, பெற்றோரை விட்டு விலகி மற்ற இடங்களில் தேடுகின்றனர். தெருக்களில் சுற்றித் திரிபவர்களுடன் இணைகிறார்கள். மோசமானவர்களாகவே மாறிவிடுகின்றனர். ***Testimonies for the Church, Vol. 1 p. 384, 385.***

***பிள்ளைகளை ஒடுக்கும் நடத்தை***

பெற்றோரின் சித்தம் கிறிஸ்துவின் ஒழுக்கத்திற்கு கீழாக இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரால் கட்டுப்படுத்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும். இது இருக்குமானால் பிள்ளைகள் எதிர்க்க முடியாத அதிகாரத்தை அவர்கள்மீது செலுத்த முடியும். சர்வாதிகாரியைப்போன்று நடந்து கடுமையாக பிள்ளைகளை ஒடுக்கினால் சரிசெய்துகொள்ள முடியாத தவறை செய்கிறார்கள். தங்களுக்குப் பெரிய அநீதி இழைக்கப்படுவதாக பிள்ளைகள் நினைப்பார்கள். ***Manuscript 7, 1899.***

***அநீதியுடன் நடத்தல்***

சிறிய தவறினாலும் பிள்ளைகள் பெரிதாக பாதிக்கப்படுகிறார்கள். சில பிள்ளைகள் சோர்வடைகின்றனர். சொல்லப்படுபவைகளுக்கு செவிசாய்க்காமல் எந்த மிரட்டலுக்கும் பணிவதில்லை. பெற்றோர் பிள்ளையை தவறாக நடத்துவதினாலே பிள்ளையின் மனதில் கலகம் உருவாகிறது. அவர்கள் சரியாக கையாளப்பட்டிருந்தால் நல்ல குணங்களை பெற்றிருப்பார்கள். தன்னை முழுமையாகக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாத ஒரு தாய் பிள்ளைகளை பராமரிக்கும்

தகுதியை இழக்கிறாள். ***Testimonies for the Church, Vol. 3 p. 532, 533.***

***பிள்ளையை அடிப்பது***

ஒரு தாய் தன் பிள்ளையை முரட்டுத்தனமாக பிடித்து உலுக்கினாலோ, அல்லது அடித்தாலோ, அழகான ஒரு கிறிஸ்தவ குணத்தை பிள்ளையால் பார்க்க இயலுமா? இல்லை. தீய உணர்வுகளே பிளக்கும். பிள்ளையும் திருந்தாது. ***Manuscript 45, 1911.***

***கடுமையான வார்த்தைகள்***

பிள்ளைகளுக்கு நற்கல்வியை பெற்றோர்கள் கொடுக்க வேண்டும். இதை செய்வதற்கு அவர்களுக்கு உதவ கிறிஸ்து ஆயத்தமாக இருக்கிறார். அவரது பள்ளியில் படிக்கும் பெற்றோர் கடுமையாகப் பேசுவதில்லை. பிள்ளைகளின் நிலையை புரிந்து கொள்ள தவறுவதில்லை. புண்படுத்தும் வார்த்தைகள் செவியுள் புகுந்து நரம்பு மண்டலத்தைப் பதட்டப்படுத்துகிறது. மனம் பெருந்துயரத்திற்குள்ளாகிறது. இப்பாதிப்புக்குள்ளான பிள்ளை தன் கோபத்தைக் கட்டுப்படுத்த முஎயாதபடிக்கு உணர்ச்சிவசப்படும். இதன் காரணமாகவே பெற்றோரிடம் பிள்ளைகள் அவமரியாதையுடன் பேசுகிறார்கள். ***Letter 47a, 1902.***

***ஏளனம் செய்து பரிகாசம் பண்ணுதல்***

பிள்ளைகளை திட்டுவதற்கோ அவர்களை பரிகாசம் செய்வதற்கோ பெற்றோர்க்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. பிள்ளைகளின் தவறான பண்பு நலன்களை வைத்து அவர்களை ஏளனம் செய்யக் கூடாது. இப்பண்புகளை இவர்களே பிள்ளைகளுக்கு கொடுத்திருக்கின்றனர். பிள்ளைகளை இப்படி கையாளுவது தீமையை விலக்காது. தேவ வார்த்தைகளைக் கொண்டு பிள்ளைகளை திருத்துங்கள். தேவன் என்ன சொல்லுகிறார் என்பதை அவர்கள் கேட்கட்டும். கோபத்துடன் பேசி கடுமையாக நடப்பதைவிட தேவ வார்த்தையைக் கொண்டு பிள்ளையை கையாளுதல், நல்ல பலனைக் கொடுக்கும். ***Fundementals of Christian Education, p. 67, 68.***

***பொருமையின்மை***



1ST Proof

பெற்றோர் பொருமையின்மையை வெளிப்படுத்தினால் பிள்ளைகளிடமும் அது காணப்படும். பெற்றோரிடம் காணப்படும் கோபம் பிள்ளைகளிடம் கோபத்தை தூண்டுகிறது. அவர்களது தீய சுபாவங்களை எழுப்புகின்றது. சுய கட்டுப்பாட்டை இழந்து, பொருமையில்லாம் பேசி செயல்படும் ஒவ்வொரு முறையும் தேவனுக்கு எதிராக பாவம் செய்கிறோம். ***Testimonies for the Church, Vol. 1 p. 398.***

***ஒரே சமயத்தில் இரு வேலை***

பல இடங்களில் பிள்ளைகள் தரையில் விழுந்து புரண்டு அலறி, அடம் பிடித்து, அழுவதை பார்த்திருக்கிறேன். அவர்கள் விருப்பப்பட்டதை தாய் கொடுக்காததினால் இப்படியும் நடந்தனர். இதை கையாளும் விதமாக தாய் ஒரே சமயத்தில் பிள்ளையை திட்டிக் கொண்டும், அத்துடனே பிள்ளையை சமாதானப்படுத்த பேசுவதையும் நான் கவனித்திருக்கிறேன். இந்நடத்தை பிள்ளையின் கோபத்தை அதிகரிக்கும். அடுத்த முறை அதிக முனைப்புடன் தரையில் விழுந்து கதரும். இப்படி நடந்தால் நினைத்ததை சாதித்துவிடலாம் என்பதை அது புரிந்து கொண்டது. சுரியான ஒரு கண்டிப்பு கொடுக்கப்படாமல் பிள்ளை கெடுக்கப்படுகிறது.

ஒரு தருணத்தில் கூட பிள்ளை இந்த வகையிலும் தன்னை மேற்கொள்ள தாய் விடக்கூடாது. அதிகாரத்தைக் காத்துக் கொள்ள கடுமையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதில்லை. நிலையான உறுதியான கரத்துடன் அன்பை பிரயோகியுங்கள். பிள்ளைகள் நீங்கள் அதை நேசிக்கிறீர்கள் என்பதையும் அதன் நன்மைக்காகவே செயல்படுகிறீர்கள் என்பதை புரிய வைக்க வேண்டும். இதை நீங்கள் செய்தால் உங்கள் நோக்கம் நிறைவேறும். ***Pacific Health Journal Apr. 1890.***

***உறுதியில்லாமை***

உறுதியின்றி செயல்படுவதினால் பெரிய தீமை உருவாகிறது. பெற்றோர்கள் பிள்ளை கேட்கும் ஒன்றினை மறுத்துவிடுவார்கள். பிறகு தாங்கள் கண்டிப்பாக இருப்பதாக நினைத்துக் கொண்டு அவர்கள் தர மறுத்ததை கொடுத்துவிடுகின்றனர். இந்நடத்தை பிள்ளையை வாழ்நாள்

முழுமைக்கும் காயப்படுத்துவதாக உள்ளது. மனதின் முக்கிய நியதி ஒன்று உண்டு. இந்நியதியை நாம் மறக்கக் கூடாது. விரும்பும் ஒரு பொருள் திட்டவட்டமாக மறுக்கப்படும் பொழுது, அதை பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை மறைந்துவிடுகிறது. மற்ற காரியங்களில் மனம் கவனம் செலுத்துகிறது. இது செய்யப்படாமல் விரும்பின பொருள் கிடைத்துவிடுவதற்கான வாய்ப்பை நாம் கொடுத்தால் அதை பெறுவதற்கான முயற்சி ஏரெடுக்கப்படும்.

பெற்றோர் பிள்ளைகளுக்கு ஒரு கட்டளையைக் கொடுக்கும் பொழுது, அது மீறப்பட்டால் அதற்கான தண்டனையும் மாறாத இயற்கையின் சட்டங்களைப் போன்று இருக்க வேண்டும். இந்த உறுதியான ஆளுகைக்கு கீழாக இருக்கும் பிள்ளைகள் மறுக்கப்பட்ட ஒன்றை எந்த தந்திரத்தினாலும் முயற்சியினாலும் பெற்றுக் கொள்ள முடியாது என்பதை திட்டவட்டமாக புரிந்து கொள்ளுவார்கள். எனவே அதிகாரத்திற்கு இணங்க கற்றுக் கொள்ளுகிறார்கள். அவர்களது மகிழ்ச்சியும் கூடுகிறது. உறுதியாக நிற்க முடியாத பெற்றோரின் பிள்ளைகள் தாங்கள் விரும்பியதை அடைய பல வகைகளில் முயற்சி செய்வார்கள். விரும்பியதை எப்படியாகிலும் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை இருந்துகொண்டே இருக்கும். அழுதும், அடம்பிடித்தும், கீழ்ப்படியாமலும் தாங்கள் விரும்பியதைப் பெற செயல்படுவார்கள். ஆசை தூண்டப்பட்ட நிலையில் தொடர்ந்து நிதானமின்றி இருப்பார்கள். என்ன நடக்கப் போகிறதோ என்ற தவிப்பும் இருந்துகொண்டே இருக்கும். துணிகரமாக செயல்படவும் எரிச்சல் கொள்ளவும் இது வழிநடத்தும். இப்படியாக பிள்ளைகளை கையாளுவது தேவனது பார்வையில் பெரிய துன்மார்க்கமாக இருக்கிறது. பிள்ளைகளின் மகிழ்ச்சியை அழித்த பழியை இப்பெற்றோர். சுமக்க வேண்டியதாக இருக்கும். இந்த துன்மார்க்கமான நிர்வாகமே ஆயிரக்கணக்கானோரின் பக்தியின்மைக்கும், மனம் மாறாத நிலைக்கும் காரணமாக இருக்கிறது. கிறிஸ்தவர்கள் என்று தங்களை சொல்லிக்கொண்ட பலரின் அழிவை கொண்டுவந்துள்ளது. ***Signs of the Times, Feb. 9, 1882.***

***தேவையில்லாத கட்டுப்பாடுகள்***

முதிர்ந்த பெற்றோர்கள் சிறு பிள்ளைகளை வளர்க்க வேண்டியிருந்தால், தகப்பன் பிள்ளையும் தனது கடினமான பாதையையே பின்தொடர வேண்டும் என்று நினைக்கக் கூடும். பிள்ளைகளின் வாழ்வு மகிழ்ச்சிகரமானதாகவும் மனரம்மியமானதாகவும் இருக்க வேண்டும். பெற்றோர் பிள்ளைகளின் வாழ்வை இதற்கேற்ப அமைக்க வேண்டும்.

நன்மையானவைகளைக்கூட பல பெற்றோர்கள் பிள்ளைகள் பெற்றுக்கொள்ள அனுமதிப்பதில்லை. தவறான ஆசைகளை பிள்ளைகள் வளர்த்துக்கொள்ளுவார்களோ என்று பயப்படுகின்றனர். இதனால் பிள்ளைகள் இயல்பாக அனுபவிக்க வேண்டிய சந்தோஷங்களை அனுமதிப்பதில்லை. தீமையை விளைவித்திடும் என்று பயந்து, பிள்ளைகள், எளிமையான வகையில் தங்களை மகிழ்வுட்டிக்கொள்ள விடுவதில்லை. எந்த தீமையை தகர்க்க இப்படி செய்கிறார்களோ அத்தீமையை இந்நடத்தையே கொண்டு வந்து விடும். பிள்ளைகள் எந்த ஆதாயத்தைக் கேட்டாலும் மறுக்கப்படுவதினால் எதையுமே கேட்பாமல் அமைதியாகிவிடுகின்றனர். இரகசியமாக தங்கபளை மகிழ்வுட்டுபவைகளை அனுபவிக்கின்றனர். பெற்றோர் இதை அனுமதிக்க மாட்டார்கள் என்று இரகசியமாக அதை செய்கின்றனர். பெற்றோர் பிள்ளைகளிடையே ஒரு நம்பிக்கையில்லாத நிலை உருவாகிறது. ***Signs of the Times, Aug 27, 1912.***

***நியாயமான கோரிக்கைகளை மறுத்தல்***

பெற்றோர்கள் சந்தோஷமான ஒரு குழந்தைப் பருவத்தைப் பெறாமல் இருந்திருக்கலாம். அவர்களுக்கு இது பெரிய இழப்பு. இதற்காக பிள்ளைகளின் வாழ்வில் சோகத்தின் நிழலை படறவிடக்கூடாது. தந்தையானவர் இதுவே பாதுகாப்பானது என்று நினைக்க் கூடும். எல்லோரினுடைய மன நிலையும் ஒரே வகையில் இருப்பதில்லை. கட்டுப்படுத்த அதிகமாக முயலும்பொழுது, தடைசெய்யப்பட்டதை அடைய ஆசை அதிகமாகிறது. பெற்றோரின் அதிகாரத்திற்குப் பிள்ளைகள் கீழ்ப்படிய தவறுவார்கள். இதுவே இதன் விளைவு. மகனின் தவறான போக்கை எண்ணித் தந்தை சஞ்சலப்படலாம். பிள்ளையின் துணிகரம் இதயத்தை நோகடிக்கலாம். மகனின் கீழ்ப்படியாமைக்கு அவரே காரணம் என்பதை தந்தை புரிந்துகொள்ள வேண்டும். பிள்ளையின் சிறிய

1ST Proof

கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்க வேண்டும். விதிக்கப்பட்ட தடைக்கான காரணத்தைப் பிள்ளையிடம் சொல்லிவிட்டதாக பெற்றோர் நினைக்கலாம். பிள்ளைகள் நம்மைப்போல் அறிவாற்றல் உடையவர்கள். மற்றவர்கள் நம்மை எந்த வகையில் கையாள விரும்புகிறோமோ அப்படியே நாம் பிள்ளைகளைக் கையாள வேண்டும். ***Signs of the Times, Aug 27, 1912.***

*சர்வாதிகார நடத்தை*

தங்களது பெற்றோரிடமிருந்து பெற்ற கடுமையான ஆவியைப் பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடமும் காட்டுகிறார்கள். இது பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் சரியான பயிற்சி அல்ல. இந்த தவறான முறை பிள்ளைகளின் மோசமான உணர்வுகளைத் தூண்டுகிறது. தங்களுக்கு பெரிய தீங்கும் அநீதியும் இழைக்கப்பட்டதாக பிள்ளைகள் உணருவார்கள். பெற்றோர் தங்களின் குணத்தையே பிள்ளையிடம் எதிர்கொள்ளுகின்றனர்.

இத்தகைய பெற்றோர் பிள்ளைகள் தேவனைவிட்டு வெகுதூரம் செல்லும்படி துரத்திவிடுகின்றனர். இந்நடத்தையுடன், கிறிஸ்தவத்தைப் பற்றியும் அவர்களுக்கு போதிக்கின்றனர். இதனால் பிள்ளைகளுக்கு சத்தியம் விரும்பப்பட முடியாத ஒன்றாக மாறுகிறது. கிறிஸ்தவ மதத்தையே வெறுக்க ஆரம்பித்துவிடுவார்கள். பிள்ளைகள் இப்படியாக பேசுவார்கள். ***"இதுதான் உங்கள் மதம் என்றால் அதனுடன் ஒரு தொடர்பையும் நான் வைத்துக்கொள்ள விரும்பவில்லை"*** என்பார்கள். மதத்தின் மீது இவ்வழியிலும் ஒரு விரோதம் உருவாக்கப்படுகின்றது. பெற்றோரின் அதிகாரத்தினால் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். தேவ பிரமாணத்தையும் தேவ இராஜ்யத்தையுமே வெறுக்க வழிநடத்தப்படுகிறர்கள். பெற்றோர்கள் தங்களது தவறான நடத்தையினால் பிள்ளைகளின் விதியை நிர்ணயித்துவிட்டனர். ***Review and Herald, Mar 13, 1894.***

*அமைதியான அன்பான நடத்தை*

பெற்றோர் தங்கள் பிள்ளைகள் அன்பானவர்களாக இருக்க விரும்பினால், பிள்ளைகளை திட்டுவதைப் போன்று அவர்களிடம் பேசக்



1ST Proof

கூடாது. தாய் பல சமயங்களில் எரிச்சலடைந்து பதறுகிறாள். பிள்ளையை முரட்டுத்தனமாக கையாளுகிறாள். கடுமையாக பேசுகிறாள். பிள்ளை அன்பாகவும் நிதானத்துடனும், அமைதியுடனும் கையாளப்பட வேண்டும். இது பிள்ளையின் நற்குணத்தைக் காக்கும். ***Review and Herald, May 17, 1898.***

*அன்பின் வேண்டுகோள்கள்*

வீட்டின் ஆசாரியராக தந்தை இருக்கிறார். அவர் பிள்ளைகளை மென்மையாகவும் பொருமையுடனும் கையாள வேண்டும். சண்டையிடும் ஒரு ஆவியைப் பிள்ளைகளிடம் தூண்டாதபடி கவனமாக இருக்க வேண்டும். தவறுகளை திருத்தாமல் விடக்கூடாது. குழந்தையின் கோபத்தை தூண்டாதபடி பிள்ளையை திருத்த வேண்டும். அன்பாக பிள்ளைகளிடம் அவர் பேசட்டும். இரட்சகர் அவர்களது நடத்தையினல் எப்படி துக்கப்படுகிறார் என்பதை விளக்கட்டும். இதற்கு பின் கிருபாசத்திற்கு முன்பாக பிள்ளைகளுடன் மன்றியிடட்டும். கிறிஸ்துவிடம் அவர்களை ஒப்படைக்கட்டும். கிறிஸ்து இரக்கம் காட்டி, அப்பிள்ளைகள் மனம் உடையச் செய்யும்படி அவரிடம் மன்னிப்பு கேட்க வழிநடத்தும்படி ஜெபியுங்கள். இந்த முறையைக் கைக்கொண்டால் கல்லான இதயத்தையும் உடைத்துவிடலாம்.

பிள்ளைகளை நாம் எளிமையான விதத்தில் கையாள தேவன் விரும்புகிறார். பெரியவர்களைப்போன்று அனுபவமோ, வயதோ பிள்ளைகளிடம் இல்லை என்பதை மறந்துவிடுகிறோம். நமது யோசனைகளுக்கேற்ப நடக்காவிட்டால் பிள்ளைகளைத் திட்ட தூண்டப்படுகிறோம். இது ஒரு திருத்தத்தையும் கொண்டு வராது. இரட்சகரிடம் அவர்களைக் கொண்டு செல்லுங்கள். அவரிடம் எல்லாவற்றையும் கூறுங்கள். இதை செய்த பின் அவர் உங்களை ஆசீர்வதிப்பார் என்று விசுவாசியுங்கள். ***Manuscript 70, 1903.***

*அதிகாரம் - 49.*

*உறவினர்களின் மனநிலை*

*உறவினர்களால் வரும் பிரச்சனைகள்*

உறவினர்கள் உங்கள் பிள்ளைகளை அவர்களின் போக்கிற்குவிடும் அபாயம் உள்ளது. உங்கள் பிள்ளைகளை பராமரிக்கும் பொறுப்பை வேரு எவருக்கும் கொடுக்காதீர்கள். தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கின்ற இந்த பொறுப்பை மற்றவர்களால் நிறைவேற்ற முடியாது. நண்பர்கள் மற்றும் உறவினர்களின் தலையிடுதலால் பல பிள்ளைகள் சீரழிந்திருக்கிறார்கள். தாய்மார்கள் தங்கள் தாயையோ சகோதரிகளையோ இதில் தலையிட விடக்கூடாது. ஒரு தாய் தனது தாயிடம் மிகச் சிறந்த பயிற்சியைப் பெற்றிருக்கலாம். ஆயினும் பாட்டிகள் பேரப்பிள்ளைகளை அவர்கள் போக்கிற்கு விட்டும் அவர்களை தேவையில்லாமல் புகழ்ந்தும் கெடுத்துவிடுவார்கள். இந்த தவறினால் தாய் கொடுத்த சிறந்த பயிற்சியும் வீணாகிவிடும். பாட்டிகள் பேரப் பிள்ளைகளை வளர்க்க தகுதியானவர்கள் அல்ல, என்பதை பலரும் அறிந்திருப்பார்கள். ஆண்களும் பெண்களும் பெற்றோர்களைக் கனப்படுத்துவது அவசியமே. ஆயினும் தங்களது பிள்ளைகளின் பராமரிப்பில் எவரையும் தலையிட விடக் கூடாது. பிள்ளையின் நிர்வாகத்தைத் தன் கரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ***Pacific Health journal Jan 1890.***

### *அவமரியாதையையும் கோபத்தையும் பார்த்து சிரிப்பார்கள்*

நான் எங்கு சென்றாலும் இல்லங்களில் சரியான ஒழுங்கு கடைபிடிக்கப்படாததை பார்க்கிறேன். இது என்னை கவலைக்குள் ஆழ்த்துகிறது. சிறு பிள்ளைகள் பெரியவர்களுக்கு சரிசமமாக பேசுகிறார்கள். அவமதிப்புடனும் துணிகரமாகவும் பிள்ளைகள் நடந்துகொள்ளுகிறார்கள். பேசக் கூடாத வார்த்தைகளை பெரியவர்களிடம் பேசுகிறார்கள். இதை செய்யும் பிள்ளைகளைவிட இதை அனுமதிக்கும் பெற்றோர்களுக்கே அதிகமான பழி சேருகிறது. வயதை மிஞ்சும் துணிகரமான பேச்சும் நடத்தையும் ஒரு முறைகூட அனுமதிக்கப்படக் கூடாது. ஆனால் பெற்றோர்களும், மாமன்மார்களும் அத்தைகளும் தாத்தா பாட்டிகளும் ஒரு வயது பிள்ளையின் கோபத்தைக் கண்டு சிரிக்கிறார்கள். அதன் துணிகரமும் அவமதிப்பான வார்த்தைகளும் இரசிக்கப்படுகின்றன. இந்த தவறான பழக்கங்கள் பெலமடைகின்றன.



1ST
Proof

பிள்ளை இக்குணத்துடன் வளர்ந்தால் எல்லோரும் அதை வெறுத்துவிடுவார்கள். ***Signs of the Times, Feb 9, 1882.***

### *பிள்ளைகள் திருத்தப்படுவதைத் தடுப்பது*

தாய்மார்கள் தங்களுக்கு இருக்கும் பொறுப்பைப் பார்க்காத குருடர்களாக இருக்கிறார்கள். இதைப் பார்க்க என் இதயம் நடுங்குகிறது. சில மாதங்களே ஆன குழந்தையிடமும் சாத்தான் வேலை செய்வதைப் பார்க்கிறார்கள். அச்சிறு பிள்ளையும் பெருங்கோபங் கொள்ளுகிறது. சாத்தான் அக்குழந்தையை முற்றிலும் ஆட்கொண்டுவிட்டதைப்போன்று இருக்கின்றது. அப்பிள்ளையின் உறவினர் எவரேனும் வீட்டில் இருந்தால், அச்சிறு பிள்ளையைத் திருத்த முயற்சிப்பது கொடூரமான செயல் என்று சொல்லுவார்கள். பிள்ளையை இப்படி விட்டுவிடுவதே கொடூரமான செயல். தாத்தாவோ, பாட்டியோ, அத்தையோ, நண்பனோ பிள்ளையை திருத்த தடைவிதிக்கக் கூடும். அப்பிள்ளையைச் சாத்தான் கைப்பற்றிவிடக் கூடாது. சாத்தான் கடிந்துகொள்ளப்பட வேண்டும். பிள்ளையின்மீது அவனது பிடி தகர்க்கப்பட வேண்டும். திருத்த வேண்டிய அவசியம் வந்தால் உண்மையுடனும் உத்தமத்துடனும் அதை செய்யுங்கள். தேவனை நீங்கள் நேசித்தால், பிள்ளையின் மீது இரக்கம் கொண்டால், இதை செய்வீர்கள். ***Review and Herald, Apr 14, 1885.***

### *குடும்பத்தின் சிக்கல்கள்*

இரண்டு அல்லது மூன்று உறவினர்களாக இருக்கும் குடும்பங்களின் பிள்ளைகள் ஒன்றாக இருப்பது சிறந்ததல்ல. இக்குடும்பங்களிடையே திருமணங்கள் நடந்தேரியதால் இவர்கள் உறவினர்களாயிருக்கலாம். மிகவும் அருகாமையில் வசிப்பது நல்லதன்று. இது நல்லதொரு தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. ஒரு குடும்பத்தின் வேலையே பக்கத்தில் இருக்கும் எல்லா குடும்பங்களின் வேலையாக மாறும். குடும்பத்திற்குள்ளாக வைக்கப்பட வேண்டியவை பரப்பப்படுகின்றன. ஜெபத்திற்காக கூடும்பொழுதும் இதன் தாக்கம் இருக்கும். மூன்றாவது நபருக்குத் தெரியக் கூடாத விஷயங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கும். நெருக்கமாக இருந்தாலும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளப்படக் கூடாது. அக்குடும்பங்களே அவைகளைச் சுமக்க வேண்டும். பல குடும்பங்கள் நெருக்கமாகத்

தொடர்பு கொண்டு ஒன்றாக வாழ்ந்து, ஒருவரோடொருவர் நெருக்கமாக இருக்க நேரிடும். ஒவ்வொரு குடும்பத்தின் தனித்துவத்தையும் மதிப்பையும் எடுத்துவிடும். ஒருவரையொருவர் கடிந்துகொள்ளும் சூழ்நிலை வரும். மற்றவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் அபாயம் அதிகமாகும். மிக கவனமாக ஞானமாகச் செயல்பட வேண்டியிருக்கும். மிக சிறந்த உதாரணமாக இருக்கும் நபர்களும் தவறு செய்வார்கள். சிறு காரியங்கள் கூட பெரிதாக நினைக்கப்படும்.

குடும்ப உறவுகளும் சபை உறவுகளும் ஒன்றாக இருந்தால் நல்லது என்று தோன்றலாம். நல்ல கிறிஸ்தவ குணம் சீராக உருவாகுவதற்கு இது ஏற்ற சூழல் அல்ல. தனித்தனியாகவே வாழ்ந்து, அவ்வப்பொழுது ஒருவரையொருவர் சந்தித்தால் மகிழ்ச்சி காக்கப்படும். இது பத்து மடங்கு நல்ல தாக்கத்தைக் கொண்டு வரும்.

திருமணத்தால் இணைக்கப்பட்ட குடும்பங்கள் ஒன்றாக வாழ்ந்தால், எப்பொழுதும் ஒருவரோடொருவர் இருக்க வேண்டியதாக இருக்கும். எல்லோரும் எல்லோருடைய குறைகளையும் பெலவீனங்களையும் அறிந்துகொள்ளுவார்கள். மற்றவர்களை திருத்துவது நம் கடமையாக நினைப்பார்கள். மேலும் இவர்கள் நெருக்கமான உறவினர்களாக இருப்பதால் சிறு விஷயங்களும் பெரிய மனஸ்தாபங்களை உருவாக்கும். அதே தவறுகளை இவர்கள் மற்றவர்களிடம் கண்டால் அதை பெரிதாகவே நினைக்க மாட்டார்கள். பெருந்துயரத்திற்குள்ளாக மனம் கொண்டு செல்லப்படும். சிலர் தாங்கள் பாரபட்சத்துடன் நடத்தப்படுவதாக எண்ணுவார்கள். பொறாமைகள் எழும்பி சிறு கற்களும் பெரிய மலைகளாக பாவிக்கப்படும். இந்த மனஸ்தாபங்களும் வேற்றுமைகளும் மற்ற இடங்களிலிருந்து வரும் உபத்திரவங்களைவிட பெரிதாக இருக்கும். ***Testimonies for the Church, Vol.. 3, p. 55, 56.***

***பாகம் - XII***

***அதிகாரம் - 50***

***அறிவாற்றலை வளர்த்தல்***

***உண்மையான கல்வி***



1ST
Proof

***உண்மையான கல்வியின் ஆழம்***

ஒரு பட்டத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்காக மட்டும் படிப்பது கல்வியல்ல. அது விரிவானது. சரீரத்தையும், மனதையும், அறிவையும் வளர்ப்பதாகும் அன்பையும் தேவ பயத்தையும் அது கற்றுக் கொடுக்கிறது. வாழ்வின் கடமைகளை உண்மையுடன் செய்ய ஒரு ஆயத்தமாக இருக்கிறது. ***Counsels to Parents, Teachers and Students, P. 64.***

அறிவை மட்டும் வளர்ப்பது கல்வியல்ல. நல்ஒழுக்கத்தையும், நற்குணத்தையும் பெற்றுக்கொள்ளும் பயிற்சியே உண்மையானக் கல்வி. ***Counsels to Parents, Teachers and Students, P. 331.***

தேவனுடைய சித்தத்தைக் கேட்டு புரிந்துகொள்ளுவதே எல்லாக் கல்வியின் முதல் முக்கிய பாடம். இந்த அறிவை பெற்றுக் கொள்ள ஒவ்வொரு நாளும் நாம் முயற்சி செய்ய வேண்டும். அறிவியலை மனித வியாக்கியானங்களைக் கொண்டு மட்டும் படிப்பது தவறு. இது தவறான கல்வி. தேவனைப்பற்றியும் கிறிஸ்துவைப்பற்றியும் படிப்பதே பரலோகின் அறிவியல் தேவனுடைய அறிவும் ஞானமும் உயர்த்தப்படாததால் கல்வி பெரிய குழப்பத்திற்குள்ளாகியிருக்கிறது. ***Counsels to Parents, Teachers and Students, P. 447.***

***சுய நலமான போட்டிக்கும் பேராசைக்கும் எதிரிடையான தாக்கம்***

இந்த முக்கிய காலக் கட்டத்திலும் எப்படிப்பட்டக் கல்வி கொடுக்கப்படுகிறது. கொடுக்கப்படும் கல்வியின் நோக்கம் என்ன? சுயத்தை மேம்படுத்தவா? கல்வி என்று கற்றுக்கொடுக்கப்படும் அநேக காரியங்களை தீங்கானவைகளாக இருக்கின்றன. சுயநலம் நிறைந்த இலக்கிற்கும், பதவிக்கான பேராசைக்கும் எதிர்மறையான தாக்கத்தை உண்மையான கல்வி ஏற்படுத்தும். மனித குலத்தின் தேவைகளையும், உரிமைகளையும் புறக்கணிக்காது. இத்தீமைகள் உலகின் மேல் விழுந்துள்ள சாபங்களாக இருக்கின்றன. வாழ்விற்கு தேவன் வைத்திருக்கும் திட்டத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு உண்டு. ஒவ்வொரு நபரும் அவரது தாலந்தை முடிந்த வரையிலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். உண்மையுடன் இதை செய்ய வேண்டும். இதை செய்தால் கனமடைவோம். ஒரு தாலந்தை பெற்றிருந்தாலும், அல்லது பல தாலந்துகளை பெற்றிருந்தாலும் இதுவே வெற்றியைக் கொடுக்கும்.

தேவனின் திட்டத்தில் சுய நலமான போட்டிக்கு இடம் இல்லை. நம்மை மற்றவர்களுடன் ஒப்பிட்டு பார்த்துக் கொள்ளுவது ஞானமானதன்று. *“ ஆகிலும் தங்களைத்தாங்களே மெச்சிக்கொள்ளகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணிய மாட்டோம்; தங்களைக்கொண்டு தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல.” 2 கொரி. 10 : 12.* தேவன் நமக்கு கொடுத்திருக்கிற திறனுக்கேற்ப முழு மனதுடன் தேவனுக்குச் செய்வதைப்போன்று செய்ய வேண்டும். மனிதனுக்கென்று செய்யக் கூடாது. *“ ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக.” “ நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.” 1 பேதுரு 4 : 11, கொலோ. 3: 23, 24.* இந்த நியதிகளின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட கல்வியும், செய்யப்பட்ட வேலையும் புனிதமானது. ஆனால் இன்றைக்கு கொடுக்கப்படும் கல்வி இந்த அடிப்படையில் கொடுக்கப்படுவதில்லை. இதற்கு மாறான விதிகளை கொண்டதாக உள்ளது. சிறு பிராயத்திலிருந்து போட்டியையும், சுய மேன்மையையும் தூண்டுவதாக உள்ளது. எல்லாத் தீமைக்கும் வேரான சுய நலத்தை வளர்க்க இது ஏதுவாக உள்ளது. ***Education, p. 225, 226.***

### *ஏதேனில் கொடுக்கப்பட்ட மாதிரி*

ஊலகத்தின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட கல்வி முறை எல்லா காலத்திற்கான உதாரணமாக இருக்கிறது. ஏதேனில் ஒரு பள்ளி நிறுவப்பட்டது. நமது ஆதி பெற்றோரின் வீடாக இது இருந்தது. ஏதேன் தோட்டமே பள்ளி அறையாக இருந்தது. இயற்கை பாட புத்தகமாக இருந்தது. சிருஷ்டிகரே ஆசிரியராக இருந்தார். ***Education, p. 20.***



1ST Proof

### *ஆசிரியர்களுக்கான ஆசிரியர்*

### *ஆசிரியராக தேவனின் முன் உதாரணம்*

ஆரம்பத்தில் ஸ்தாவிக்கப்பட்ட கல்வி முறையே இயேசு கையாண்டார். பன்னிரெண்டு சிஷர்களுக்கும் சிறந்ததொரு கல்வியைக் கொடுத்தார். இச்சீஷர்களும் இவர்களுடன் தொடர்பு கொண்டிருந்த மற்ற சில நபர்களுமே இயேசுவின் குடும்பமாக இருந்தனர். வீட்டிலும், வயலிலும், தனித்த இடங்களிலும், உண்ணும் பொழுதும், எல்லா நேரங்களிலும் இயேசுவுடன் இருந்தார்கள். அவரது பிரயாணங்களில் அவருடன் கூட சென்றனர். அவரது சோதனைளையும் உபத்திரவங்களையும் பங்கு கொண்டனர். முடிந்த வரையிலும் அவருடைய வேலையை செய்தார்கள்.

சில நேரங்களில் மலையின்மீது அவர்களுடன் அமர்ந்து அவர்களுக்குப் போதித்தார். கடலோரங்களிலும், மீனவர் படகுகளிலும், நடக்கும் வழியிலும் தனது பாடங்களைக் கற்றுக் கொடுத்தார். பெரிய கூட்டத்திற்கு அவர் பேசும்பொழுது சீஷர்கள் அவரருகே நெருக்கமான வட்டமாக இருந்தனர். அவருடனே எப்பொழுதும் இருந்தனர். அவரிடமிருந்து வரும் வார்த்தைகளைக் கேட்க கவனமாக இருந்தனர். சுத்தியங்களை புரிந்துகொள்ள ஆர்வமாக இருந்தனர். முற்றவர்களுக்கு எல்லா இடங்களிலும் அவர்கள் எதிர்காலத்தில் கற்றுக்கொடுக்க வேண்டியசத்தியங்களாக அவை இருந்தன. ***Education, p. 84, 85.***

### *புத்தக அறிவும் செய்முறை பயிற்சியும்*

பிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் புத்தக கல்வியும் செய்முறை பயிற்சியும் சேர்ந்து கொடுக்கப்பட வேண்டும். இந்த விதத்திலும் சிறந்த அறிவால் நிரப்பப்பட வேண்டும். வீட்டு வேலைகளில் பிள்ளைகளுக்கும் ஒரு பங்கு கொடுக்கப்பட வேண்டும். தாய்க்கும் தந்தைக்கும் சிறிய முறையிலும் உதவியாக இருக்கக் கற்றுத்தரப்பட வேண்டும். சிந்திக்கும்படியாக அவர்களது சிந்தை பயிற்றுவிக்கப்பட வேண்டும். அவர்களின் வேலையை அவர்கள் மறக்கக் கூடாது. அதற்கேற்றபடி வழிநடத்தப்பட வேண்டும். வீட்டின் வேலைகளை செய்யவைக்கும்பொழுது

நடைமுறை கடமைகளை செய்யும் பயிற்சியை பெறுகிறார்கள். அவர்களது வயதிற்கேற்ற கடமைகளை செய்கிறார்கள். ***Fundementals of Christian Education, p. 368, 369.***

***வாலிபர்கள் இதை தேர்ந்தெடுப்பதில்லை***

நடைமுறை வாழ்க்கைக்குத் தகுதிப்படுத்தும் கல்வியைப் பொதுவாக வாலிபர்கள் தேர்ந்தெடுப்பதில்லை. அவர்களது ஆசைகளுக்கும் நாட்டங்களுக்கும் முதலிடம் கொடுக்கின்றனர். பெற்றோர்கள் தேவனையும், அவரது சத்தியத்தையும் நன்கு அறிந்திருந்தால் அனுபவமில்லாத வாலிபர்களை சரியாக வழிநடத்துவார்கள். தேவன் கொடுத்திருக்கிற பொறுப்பை உணருவார்கள்.

***வாழ்வின் சுமைகளிலிருந்து தப்பிக்கும் வழியல்ல***

வாழ்க்கையின் பாரங்களிலிருந்தும், பொறுப்புக்களிலிருந்தும் தப்பித்துக்கொள்ள நாம் கல்வி கற்கிறதில்லை என்பதை வாலிபர்களின் மனங்களில் நாம் பதிய வைக்க வேண்டும். அவர்களது வேலையை லெகுவாக மாற்றுவதே கல்வியின் இலக்கு. இதற்கென ஒரு சிறந்த கல்வியைக் கொடுக்க வேண்டும். தங்களுக்கென்று பெரிய இலாபங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுவது கல்வியின் நோக்கமல்ல. பொறுப்புக்களை நிறைவேற்றி உலகில் தங்கள் வேலையை செய்து, பெலவீனமானவர்களுக்கு ஒரு உதவும்கரமாக இருப்பதற்கே கல்வியைப் பெறுகிறோம் என்பதை புரிய வையுங்கள். ***Education, p. 221, 222.***

***சேவையின் ஆவியை கல்வி எழுப்ப வேண்டும்***

ஒரு வாழ்க்கையினுடைய அனுதின சிறு காரியங்களிலும் கிறிஸ்துவிற்காக சேவை செய்ய வேண்டும். மற்ற எல்லாவற்றையும்விட இதுவே குணத்தை உருவகப்படுத்தும். சுய நலமில்லாத ஊழியத்தின் வழியில் நடத்தும். இந்த ஆவியை எழுப்பி, ஊக்குவித்து, சரியான திசையில் வழிநடத்த வேண்டும். இதுவே பெற்றோர்களின் ஆசிரியர்களின் வேலை. இதைவிட முக்கிய வேலை எதுவும் கொடுக்கப்பட முடியாது. ஊழியத்தின் ஆவி பரலோகத்தின் ஆவி. ஆதை வளர்த்துக்கொள்ளவும் ஊக்குவிக்கவும் எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியுடனும் தேவ தூதர்கள் ஒத்துழைப்பார்கள்.



1ST Proof

இத்தகைய கல்வி வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதாக இருக்க வேண்டும். வேத வார்த்தைகளிலே இந்நியதிகளின் முழுமையும் காணப்படுகிறது. படிப்பின் அடித்தளமாக வேதாகமம் அமைய வேண்டும். அத்தியாவசியமான அறிவு தேவனைப் பற்றியும் அவரை அனுப்பினவரைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் அறிவே. ***The Ministry of Healing p. 401.***

***அறிவிற்கும் மேலாக ஒழுக்கத்தை வைக்கும்***

பிள்ளைகளுக்கு சரியான கல்வியைக் கொடுக்கும் பெரிய தேவையுள்ளது. இது கொடுக்கப்பட்டால் பிள்ளைகள் உலகிற்கு பயனுள்ளவர்களாக இருப்பார்கள். ஒழுக்கத்தைவிட அறிவை உயர்த்தும் எந்த கல்வியும் சரியானதல்ல. அறிவுறுத்தி, சுத்தப்படுத்தி, சரியாக வழிநடத்துவதே பெற்றோர்களின் மற்றும் ஆசிரியர்களின் பாரமாக இருக்க வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 84, 85.***

***குணவிருத்தியே இலக்கு***

குணத்தை சிறப்பாக வளர்த்துக் கொள்ள அறிவையும் ஒழுக்கத்தையும் கொடுக்கும் கல்வியே உயர்ந்தது. தேவனது ஜீவனால் அளக்கப்படும் ஒரு வாழ்வைப் பெற இது தகுதிப்படுத்தும். நித்தியத்தை எப்பொழுதும் நாம் நினைத்துக்கொள்ள மறக்கக் கூடாது. கிறிஸ்தவத்தின் அறிவியலை பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுப்பதே மிக உயர்ந்த கல்வி. தேவனை அனுபவத்தினால் அறிந்துகொள்ளும் அறிவை இது கொடுக்கிறது. கிறிஸ்து சீஷர்களுக்கு கற்றுக்கொடுத்த பாடங்களை இது கொடுக்கிறது. பலலோகின் தந்தையாக தேவனின் குணத்தை விளக்குகிறது. ***Counsels to Parents, Teachers and Students, p. 45, 46.***

***திசை திருப்பி முன்னேற்றும் கல்வி***

பிள்ளைகளை பயிற்றுவிக்கவும், வாலிபர்களுக்குக் கல்வியைக் கொடுக்கவும் அதனதன் நேரம் இருக்கிறது. பள்ளியில் இவை இரண்டும்

சேர்ந்து செய்யப்பட வேண்டும். நீதியின் ஊழியத்திற்கோ, அல்லது பாவத்தின் ஊழியத்திற்கோ பிள்ளைகள் பயிற்றுவிக்கப்படலாம். இளம் பிராயத்தில் வாலிபர்கள் பெற்ற கல்வியே விசுவாசத்தையும், வாழ்க்கையையும், நிர்ணயிக்கும். சாலமோன் சொல்லுகிறார். *“ பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.” நீதி. 22: 6* சரியாக திசை திருப்பி, முன்னேற்றத்தைக் கொடுக்கும் ஒரு கல்வியைக் கொடுக்கச் சொல்லுகிறார்.

பெற்றோர்கள் இதை செய்ய, பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியை முதலில் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது வெரும் புத்தக அறிவல்ல. நன்மையான, உத்தமமான, ஒழுங்கான, நீதியான யாவற்றையும் உள்ளடக்கியதாக உள்ளது. சுயகட்டுப்பாட்டை அப்பியாசிப்பதையும் கொண்டுள்ளது. தெய்வீகம், சகோதர அன்பு, தேவனையும் சக மனிதர்களையும் உண்மையாக நேசித்தல் போன்றவைகளும் இதன் அம்சங்களாக உள்ளன. இந்த இலக்கு எட்டப்பட வேண்டும். சரீரத்திற்கும், மனதிற்கும், ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்ளுவதற்கும் ஏற்ற கல்வி கொடுக்கப்பட வேண்டும். ***Testimonies for the Church, Vol. 3, p. 131, 132.***

***தேவனுக்கென்று ஊழியர்களை ஆயத்தப்படுத்துகிறது***

தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிள்ளைகளுக்கு ஒரு கிறிஸ்தவ கல்வியைக் கொடுக்கும் பொறுப்பு பெற்றோர்க்கு உள்ளது. மற்ற வேலைகளில் மூழ்கி பிள்ளைகளைக் கவனிக்காமல் விடுவது அனுமதிக்கப்படுவதில்லை. பிள்ளைகள் தேவனை பிரிந்து வெகு தூரம் சென்று விடுவார்கள். பிள்ளைகள் அவிசுவாசிகளின் கரங்களுக்குள்ளாக அகப்பட்டுவிட அனுமதிக்கப்படக் கூடாது. உலகத்தின் ஆவியை பெற்றுக்கொள்ளாமல் இருக்க தங்களால் முடிந்ததையெல்லாம் பெற்றோர் செய்ய வேண்டும். தேவனுடன் சேர்ந்து வேலை செய்ய பயிற்சிக்கப்பட வேண்டும். தேவனது மனித கரமாக அவர்கள் செயல்பட வேண்டும். முடிவில்லா ஒரு வாழ்விற்குத் தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் தகுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். ***Fundementals of Christian Education, p. 545.***



1ST
Proof

***தேவ அன்பையும் தேவ பயத்தையும் கற்றுக்கொடுக்கிறது***

கிறிஸ்தவ பெற்றோர்களே கிறிஸ்துவிற்காக உங்களது ஆசைகளை பரிசோதித்துக்கொள்ள மாட்டீர்களா? தேவ கட்டளைக்கு முன்பாக அவைகள் நிற்குமா? தேவனது அன்பையும், அவருக்குப் பயந்து நடப்பதையும் கற்றுக்கொடுப்பதே மிக அவசியமான கல்வி. ***Review and Herald, Jun 24, 1890.***

***பழமையாகிவிட்டதாக அநேகர் நினைக்கின்றனர்***

நித்தியத்திற்கும் நிலையாக நிற்கும் கல்வியை எல்லோரும் புறக்கணித்துவிடுகிறார்கள். பழமையானதாகவும் விரும்பப்படாத ஒன்றாகவும் பார்க்கப்படுகிறது. குணத்தை கட்டுவதினால் வரும் மகிழ்ச்சியும், சமாதானம், இதைக் கொண்டு தேவனால் கிரயத்திற்கு கொள்ளப்பட்டவர்களின் பாதையில் நடப்பது இந்தக் காலத்திற்குரியதல்ல என்று கருதப்படுகிறது. இதனால் முக்கியமானது அல்ல என்று பாவிக்கப்படுகிறது. தேவ நகரத்தின் வாசல்களுக்குள்ளாக பிள்ளைகள் வெற்றி பெற்றவர்களாக பிரவேசிக்க வேண்டும். இது நடக்க தேவனுக்குப் பயந்து அவரது கட்டளைகளை இவ்வுலகில் கைக்கொள்ள ஒரு கல்வி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ***Fundementals of Christian Education, p. 111.***

***இதற்கு முடிவில்லை***

இவ்வுலகின் வாழ்வு, நித்திய வாழ்க்கைக்கான ஆயத்தம். இங்கு தொடங்கப்படும் கல்வி இங்கு முடிவடைவதில்லை. நித்தியத்திற்கும் அது தொடர்ந்துகொண்டே இருக்கும். இதற்கு முடிவில்லை. இரட்சிப்பின் திட்டத்தில் தேவனின் அன்பும், ஞானமும் இன்னும் முழுமையாக வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். இரட்சகர் பிள்ளைகளை ஜீவ ஊற்றுக்களண்டை நடத்துவார். அவரது அறிவின் ஐஸ்வரியங்களைக் கொடுப்பார். ஒவ்வொரு நாளும் தேவனின் மகத்தான கிரியைகள், அவரது வல்லமையின் சாட்சிகள் அதிகமாகக் காணப்படும். பிரபஞ்சத்தை சிருஷ்டித்து அதைத் தாங்கி நடத்தும் தேவனது மகத்துவம் புதிய அழகுடன் வெளிப்படும். சிங்காசத்திடமிருந்து வரும் ஒளி மறைவானவைகளையும் இரகசியங்களையும் தெளிவுபடுத்து.

புரிந்துகொள்ள முடியாமற் இருந்தவைகளின் இரகசியங்களை ஆத்துமா புரிந்துகொள்ளும். ஆச்சரியத்தினால் பிரம்மிப்படைவோம். ***The Ministry of Healing P. 466.***

*அதிகாரம் - 51*

***பள்ளிக்கான ஆயத்தம்***

***முதல் எட்டு அல்லது பத்து வருடங்கள்***

மூடப்பட்ட அறைகளுக்குள்ளாக பிள்ளைகள் அதிக நேரம் வைத்திருக்கப்படக் கூடாது. சரீர ஆரோக்கியத்திற்கு முதலில் ஒரு நல்ல அஸ்திபாரம் போடப்பட வேண்டும். பிள்ளையின் முதல் எட்டு பத்து வருடங்களுக்கு வயலும் தோட்டமுமே சிறந்த பள்ளி அறைகள். தாயாளவளே உகந்ததொரு சிறந்த ஆசிரியர். இயற்கையே சிறந்த பாட புத்தகம். பிள்ளை இந்த வயதை எட்டிய பிறகும் புத்தக அறிவைவிட சரீர ஆரோக்கியத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். சரீரத்துக்கும் மனதிற்கும் ஏற்ற சூழல் அமைய வேண்டும். நல்ல தாக்கங்கள் பிள்ளைகளை சூழ வேண்டும். ***Education, p. 208.***

பிள்ளைகள் மிக சிறிய வயதிலும் பள்ளிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். அவர்களது மனங்களை பாரப்படுத்தும் படிப்பை புத்தகங்களிலிருந்து படிக்கிறார்கள். இது ஞானமானதல்ல. பதட்டப்படும் ஒரு பிள்ளைக்கு அதிகமான சுமைகளைக் கொடுக்கக் கூடாது. ***Fundementals of Christian Education, p. 416.***

***குழந்தைப் பருவம்***

பிள்ளையின் முதல் ஆறு அல்லது ஏழு வருடங்களுக்கு சரீரத்திற்கே அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். அறிவாற்றலுக்கு அல்ல. இந்த காலத்திற்குப்பின் சரீரம் நன்றாக இருக்குமானால், அறிவும் சேர்த்து கொடுக்கப்பட வேண்டும். ஏழு வயது வரையிலும் குழந்தை பருவமே. இந்த வயது வரையிலும் சுதந்திரமான ஆட்டுக்குட்டிகளைப்போல வீடுகளில் சுற்றித்திரிந்து விளையாட விடப்பட வேண்டும். உற்சாகமான ஆவியுடன் துள்ளி, குதித்து எந்த ஒரு பாரமும் கவலையும் இல்லாமல் இருக்க வேண்டும்.



1ST Proof

இத்தகைய குழந்தை மனங்களின் ஆசிரியர்களாக பெற்றோர்களே இருக்க வேண்டும். புத்தகத்திலிருந்து கல்வியைக் கொடுக்கக் கூடாது. இயற்கையின் காரியங்களைப் படித்துக் கொள்ள பிள்ளைகள் ஆர்வம் காட்டுவார்கள். பார்ப்பவைகளைப் பற்றியும் கேள்விப்படுபவைகளைக் குறித்தும் கேள்விகளை கேட்பார்கள். பிள்ளைகளை அறிவுறுத்த பெற்றோர் இத்தருணங்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவர்களது கேள்விகளுக்கு பொருமையுடன் பதிலளிக்க வேண்டும். இந்த வகையிலும் சாத்தானின் மீது ஒரு வெற்றியைக் கண்டடைகிறோம். நல்ல விதைகளை விதைத்து பிள்ளைகளைச் சுற்றி ஒரு கோட்டையை கட்டுகிறோம். தீயவைகளை வேர் கொள்ள விடுவதில்லை. அந்த இளகிய வயதிலும் நல்ல குணம் உருவாக்கப்பட தாயின் அறிவுறுத்தலே பிள்ளைக்கு அவசியமானது. ***Pacific Health Journal Sep. 1897.***

***அடுத்தப் பருவம்***

தாயானவளே ஆசிரியராக இருக்க வேண்டும். இல்லத்தில் ஒவ்வொரு பிள்ளையும் தனது முதற் பாடங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வேலை செய்யும் பழக்கத்தையும் உருவாக்க வேண்டும். தாய்மார்களே உங்கள் பிள்ளைகள் திறந்த வெளியில் விளையாடட்டும். பறவைகளின் பாடல்களை அவர்கள் கேட்கட்டும். தேவனின் அழகான சிருஷ்டிகளிலிருந்து அவரது அன்பை கற்றுக்கொள்ளட்டும். இயற்கையின் புத்தகத்திலிருந்தும் தங்களைச் சுற்றியிருக்கும் பொருட்களிலிருந்தும் எளிமையான பாடங்களைக் கற்றுக்கொடுங்கள். இதற்குப் பின் அவர்களின் அறிவாற்றல் கூடும்பொழுது புத்தகங்களிலிருந்து பாடங்கள் சேர்க்கப்படட்டும். இப்படியும் கற்றுக்கொடுக்கப்படும் பாடங்கள் மறக்கப்படுவதில்லை. சிறு வயதிலும் பயனுள்ளவர்களாக இருக்க கற்றுக்கொள்ளட்டும். வீட்டின் அங்கத்தினர்களாக அவர்களின் பங்கையும் செய்ய வேண்டும் என்று அவர்கள் நினைக்கும்படியாக ஒரு பயிற்சியைக் கொடுங்கள். வீட்டு வேலைகளில் அவர்களும் உதவட்டும். ***Fundementals of Christian Education, p. 416. 417.***

***இது வேதனைதரும் வேலையல்ல***

நல்ல ஒரு பயிற்சி விலைமதிப்பற்றது. இது கடினமானதாகவோ வேதனை தருவதாவோ இருக்காது. உதவியாக இருப்பதிலும்

மகிழ்ச்சியைக் காணும்படியாக பிள்ளை வழிநடத்தப்படலாம். தாய்மார்கள் பிள்ளைகளுக்குச் சிறு வேலைகளைச் செய்ய கற்றுக்கொடுப்பதின் மூலமாகவும் அவர்களை மகிழ்விக்கலாம். இதுவே தாயினுடைய வேலை. பொருமையாகப் பிள்ளையை அறிவுறுத்த வேண்டும். ***“கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள்” ஏசாயா 28: 10.*** இதைச் செய்யும்பொழுது தாயும் விலையேறப்பெற்ற ஒரு பயிற்சியைப் பெறுகிறாள். ***Letter 55, 1902.***

பள்ளிக் கூட சகவாசங்களினால் ஒழுக்கம் கெடுகிறது. சிறு பிள்ளைகளை சீக்கிரமாகப் பள்ளிக்குச் சிறு பிராயத்திலேயே அனுப்பி விடாதீர்கள். தன் பிள்ளையை மற்றவர்களது கரங்களில் ஒப்படைப்பதில் தாய் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ***Christian Temperance and Bible Hygiene p. 67.***

அநேக தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை அறிவுறுத்த நேரம் இருப்பதில்லை என கருதுகிறார்ள். பிள்ளைளளை எங்கேயாவது அனுப்பிவிட வேண்டும் என்றும், அவர்களது தொந்தரவிலிருந்து விடுபட வேண்டும் என்றும் பள்ளிக்கு அனுப்புகிறார்கள்.

சிறு பிராயத்தில் பள்ளிக்குச் செல்லுவதினால் சரீரமும் மனமும் பாதிப்புக்குள்ளாகிறது. ஒழுக்கமும் கெடுகிறது. தவறான பிள்ளைகளுடன் தொடர்பு உருவாகிறது. துற்குணங்களினால் நிரப்பப்படடோரினுடைய மத்தியில் பிள்ளைகள் வைக்கப்படுகிறார்கள். அத்துர்குணங்களை மற்றவர்க்கும் பரப்ப அவர்கள் ஆர்வமாக இருப்பர். இச்சூழலில் விடப்படும் பிள்ளைகள் தீமையையே நன்மையைக் காட்டிலும் எளிதாக பெற்றுக்கொள்ளுகிறார்கள். மனித சுபாவத்திற்கு தீமையே ஏற்றதாக இருக்கும். சிறு பிராயத்திலும் பிள்ளைகள் பார்ப்பவைகளும் கேட்பவைகளும் மனதை ஆழமா பாதிக்கும். விதைக்கப்பட்ட தீய விதைகள் முட்களாக வளர்ந்து பெற்றோரின் இதயத்தைக் குத்தும். ***Solemn Appeal p. 130, 132.***

***அதிகாரம் - 52***



1ST
Proof

***பள்ளியைத் தேர்ந்தெடுத்தல்***

***பெரிய இழப்பு***

மனோவாவின் மனைவியுடன் அவள் கேட்கத்தக்கதாக தேவன் நேரடியாக அவளிடம் பேசினார். இது போலவே இன்றைய தாய்மார்களிடம் தேவன் பேச வேண்டும் என்று நான் ஆசைப்பட்டிருக்கிறேன். மனோவாவின் மனைவியிடம் தேவன், பிள்ளையை பயிற்றுவிக்கும் வழியைச் சொன்னார். வீட்டில் சரியான பயிற்சி பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படாததால் நாம் பெரிய இழப்புக்களைச் சந்திக்கிறோம். இதன் நிமித்தமாகவே நல்லதொரு சூழலையுடைய பள்ளிகளின் தேவையை நாங்கள் உணர்ந்தோம். தீமையை எதிர்க்க என்ன செய்ய முடியுமோ கிறிஸ்துவின் பெலத்தைக் கொண்டு நாம் அதை செய்வோம். ***Manuscript 119, 1899.***

***இது முக்கியமான ஒன்று***

சுரியாக நடத்தப்படும் ஒரு நல்ல குடும்ப பள்ளியைப் போல் இயங்கும் பள்ளிகளுக்கு உங்கள் பிள்ளைகளை அனுப்புங்கள். நல்ல ஒரு ஆவிக்குரிய சூழல் ஜீவனைத் தருவதாக இருக்கும். இத்தகைய பள்ளிகளில் ஆசிரியர்கள் பிள்ளைகளை ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்திற்கு சிறப்பாக வழிநடத்துவார்கள். பெற்றோரிடமிருந்து சிறு வயதில் பெற்றுக்கொண்ட நல்லொழுக்கமும் சத்தியமும் வாலிபர்களை தொடர்ந்து பரிசுத்தப்படுத்த வேண்டும். எத்தகைய சூழல் அமைகிறதோ அதுவே இது நடப்பதை சாத்தியமாக்கும். வாலிபர்களும் தாங்கள் சந்திக்கும் நபர்களிடமிருந்து கிறிஸ்தவ அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ள நாட்டம் காட்டுவார்கள். ***Testimonies ofr the Church Vol.. 8, p. 225, 226.***

***கல்வியைக் கொடுப்போர்***

கல்வியைப் புகட்டுவோர் இரண்டு வகையில் பிரிக்கப்படலாம். தேவனுக்கென்று செயல்படுவோர், சாத்தானுக்கென்று செயல்படுவோர். ஒரு கூட்டம் தேவ குணத்தை தியானிக்கிறது. இயேசுவின் அறிவில் வளர்கிறது. பரத்தின் வெளிப்பாடுகளுக்கு இவர்கள் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். ஆத்துமாவை தேவனிடம் உயர்த்துகிறார்கள்.

ஒவ்வொரு திறமையும் தேவனிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக இருக்கிறது. ஒவ்வொரு சிந்தனையும் கிறிஸ்துவினுள் இருக்கத்தக்கதாக கட்டுப்படுத்தப்படுகிறது. மற்றோரு கூட்டம் அந்தகார லோகாதிபதியுடன் வேலை செய்கிறது. அவன் தீமையின் அறிவைப் பரப்ப, தருணங்களைத் தேடிக்கொண்டிருக்கிறான். ***Fundementals of Christian Education, p. 174.***

***தேவன் அடித்தளமாக இருக்கும் பள்ளியைத் தேர்ந்தெடுங்கள்***

பிள்ளைகள் கல்வியைப் பெற பெற்றோர் அவர்களை வெளியிடங்களுக்கு அனுப்ப திட்டமிடுகிறார்கள். பொதுவான பள்ளிகளுக்கு அனுப்புவது பாதுகாப்பானதல்ல. வேத வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் பள்ளிகளுக்கு பிள்ளைகளை அனுப்ப வேண்டும். தேவனைப் பற்றி அறிந்துகொள்ளும் ஒரு அறிவைப் பெற்றுக்கொள்ளுவதற்கு ஒரு கல்வியைப் பிள்ளைகளுக்குக் கொடுப்பதே பெற்றோரின் உன்னத பொறுப்பு. கீழ்ப்படிதலின் மூலமாக பிள்ளைகள் தெய்வீக சாயலைப் பங்குகொள்ள வேண்டும். தேவ சித்தத்திற்கும் வழிக்கும் இணங்க வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 205.***

***இஸ்ரவேரருக்கு தேவனின் ஆலோசனை***

எகிப்தின்மீது தேவனின் நியாயத்தீர்ப்புகள் விழுந்தன. இஸ்ரவேலர்களின் பிள்ளைகளையும், மிருக ஜீவன்களையும் வெளியில்விடாதபடி பாதுகாப்பாக தங்களுடன் வைத்திருக்கும்படி தேவன் சொல்லியிருந்தார்.

இஸ்ரவேலர்கள் அவர்களின் பிள்ளைகளை நியாயத்தீர்ப்பின் வேளைகளில் தங்களுடன் வீட்டில் வைத்துக் கொண்டார்கள். அப்படிப்பட்ட அபாயகரமான காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நமது பிள்ளைகளையும் உலகத்திடமிருந்து பிரித்து தனியாக பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். தேவ கட்டளைகளின் ஆழமான பொருளை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். இவைகளை கைக்கொள்ளுகிறவர்கள் தேவ கட்டளைகளை மீறுவோரின் வழிகளைப் பின்பற்ற மாட்டார்கள்.



1ST Proof

பெற்றோர் தேவ வார்த்தைகளை மதிக்க வேண்டும். அதற்கு கீழ்ப்படிய வேண்டும். இக்காலத்துப் பெற்றோர்க்கும் இஸ்ரவேலர்களுக்கும் தேவன் சொல்லுகிறார். !!!!!!!!!!!!!!!!!!

இந்த தெளிவான அறிவுரைக்குப் பிறகும் தேவ மக்களில் சிலர், பிள்ளைகளை பொதுவா நடத்தப்படும் பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். ஒழுக்கங்கெட்டோருடன் பிள்ளைகள் இணைகிறார்கள். இப்பள்ளிகளில் பிள்ளைகள் வேதத்தைப் படிக்கவோ அதன் நியமங்களைக் கற்றுக்கொள்ளவோ முடியாது. கிறிஸ்தவ பெற்றோர்களே வேத நியதிகளை கற்றுக்கொடுக்கும் ஒரு கல்வியைப் பிள்ளைகளுக்குக் கொடுங்கள். ***Manuscript 100, 1902.***

***வேத சத்தியத்தின் தாக்கம் ஒடுக்கப்படுகிறது***

***பிள்ளை குழப்பம் அடைகிறது***

வேத வார்த்தைகளுக்கு இசைவான சிந்தனைகளை பிள்ளைகள் தாங்கள் செல்லும் பள்ளியின் ஆசிரியர்களிடமிருந்து பெறுகிறார்களா? பாவம் தேவனுக்கு எதிரானதாக வைக்கப்படுகிறதா? தேவனின் எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவதே ஞானத்தின் ஆரம்பம் என கற்றுக் கொடுக்கப்படுகிறதா? குத்தியங்களை அறிந்துகொள்ள பிள்ளைகளை ஓய்வு நாள் பள்ளிக்கு அனுப்புகிறோம். வாரத்தின் மற்ற நாட்களில் மற்ற பள்ளிக்கு அனுப்புகிறோம். அங்கு பொய்யை கற்கிறார்கள். இவைகள் பிள்ளையை குழப்பமடையவைக்கும். கொடுக்கப்படும் அறிவு சத்தியத்திற்கு எதிராக இருக்கிறது. இக்கல்வியின் தவறான தாக்கம் எப்படி மேற்கொள்ளப்பட முடியும்?

நம்மிடையே இருக்கும் வாலிபர்கள் ஆன்மீக வாழ்க்கையை அசட்டை செய்வதற்கு இதுவே காரணம். சோதனையிலும் இதன் காரணமாகவே விழுந்துவிடுகிறார்கள். பொழுதுபோக்குகளுக்கும் சிற்றின்பங்களுக்கும் தங்கள் பெலனை வீணடிக்கிறார்கள். இவைகள் அவர்களுக்கு ஒரு நன்மையையும் செய்வதில்லை. ஆவிக்குரிய வாழ்க்கை இருளாகிறது. மனம் எதை கண்நோக்கிக் கொண்டு இருக்கிறதோ அதே தன்மையை அதுவும் பெற்றுவிடும். விதைக்கப்படும் விதைகளுக்கேற்ற அறுவடை வரும். பிள்ளைகளினுடைய கல்வி

அவர்களின் சிறு பிராயத்திலிருந்து கவனமாகக் காக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட தவறான கல்வியைப் பெறுவதற்கு பதிலாக வாலிபர்கள் அறியாமையில் இருப்பதே மேலானதாக இருக்கும். இக்கல்வி தேவ சத்தியத்தைக் கண்டுகொள்ளாதபடி செய்துவிடும். ***Testimonies for the Church, Vol.. 6, p. 193, 194.***

*நமது எல்லா சபைகளிலும் பள்ளிகள்*

நமது எல்லா சபைகளிலும் அவைகளுடன் சேர்ந்து பள்ளிகளும் இருக்க வேண்டும். இப்பள்ளியின் ஆசிரியர்கள் ஊழியக்காரர்களாக இருக்க வேண்டும். ஓய்வு நாளை ஆசரிப்போரின் பிள்ளைகளுக்குக் கல்வியைக் கொடுக்க இவ்வாசிரியர்கள் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். அறிவியலைப் பற்றி மட்டுமல்லாமல் வேத வாக்கியங்களும் படிக்கப்பட வேண்டும். பழைய ஏற்பாட்டு காலங்களில் தீர்க்கதரிசிகளின் பள்ளிகள் ஸ்தாபிக்கப்பட்டன. எந்த நியதிகளை அடிப்படையாகக் கொண்டு அவைகள் நிறுவப்பட்டன என்பதை படித்துக் கொள்ள வேண்டும். அதே அடிப்படையில் நமது பள்ளிகள் அமைக்கப்பட வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 168.***

*நகரங்களில் சபை பள்ளிகள்*

பிள்ளைகளைப் படிக்க அனுப்புவதற்காக சபைபள்ளிகளை அமைப்பது மிக முக்கியம். இப்பள்ளிகளுக்குச் சென்றும், தாயின் கண்காணிப்பிலும் பிள்ளைகள் இருக்க வேண்டும். வீட்டில் பயனுள்ள பாடங்களைக் கற்கவும் தருணங்கள் கொடுக்கப்பட வேண்டும். பிள்ளைகளும் பயனுள்ளவர்களாக இருப்பார்கள்.

நகரங்களிலிருந்து வெளி வர முடியாதவர்களுக்கு, அவர்களின் பிள்ளைகளுக்கு ஒரு நற்கல்வியைக் கொடுக்க அதிகமாக பிரயாசப்பட வேண்டும். சிறந்த முயற்சிகளை ஏரெடுக்க வேண்டும். நகரங்களில் வசிக்கும் பிள்ளைகளுக்காக சபை பள்ளிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். மேற்படிப்பிற்கான ஆயத்தங்களையும் இப்பள்ளிகள் செய்யலாம். தேவைப்படும் இடங்களில் மேற்படிப்பை அங்கேயே தொடரவும் வழி செய்யப்படட்டும். ***Review and Herald, Dec. 17, 1903.***

*சிறிய சபைகளுக்கும் பள்ளிகள்*



1ST Proof

அநேக குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளின் படிப்பிற்காக நமது பெரிய பள்ளிகள் அமைந்திருக்கும் இடங்களுக்கு குடிபெயருகிறார்கள். இவர்கள் இருந்த இடத்தில் வசித்திருந்தால் தேவனுக்கு அதிகமாக வேலை செய்திருக்க முடியும். தங்கள் அங்கத்தினர்களாக இருக்கும் சபைகளிலே பள்ளிகள் தொடங்க ஊக்குவிக்க வேண்டும். அப்பள்ளிகளிலும் பிள்ளைகள் முழுமையான ஒரு நடைமுறை கல்வியையும் பெற்றுக்கொள்ள வழி செய்யப்பட வேண்டும். பெரிய சபைகளுக்குச் செல்லுவதற்கு பதிலாக இச்சிறு சபைகளில் அவர்களது உதவி அதிகமாக தேவைப்படுகிறது. பெரிய சபைகளில் அவர்களின் உதவி தேவைப்படாது. இந்த நிலையில் அவர்கள் அச்சபைகளுக்கு சென்றால் ஒன்றுமே செய்யாமல் இருந்துவிடும் அபாயம் உள்ளது. ஆவிக்குரிய வாழ்வும் மந்தமாகும்.

எங்கெல்லாம் ஓய்வுநாளை ஆசரிப்போர் இருப்பார்களோ அங்கெல்லாம் ஒரு பள்ளி துவங்கப்படட்டும். இக்குடும்பங்கள் முயற்சி செய்து இதற்கான ஒரு இடத்தை ஒதுக்கட்டும். பிள்ளைகளும் வாலிபர்களும் அங்கு அறிவுறுத்தப்படட்டும். கிறிஸ்தவ ஆசிரியரை அவர்கள் பணியில் வைக்க வேண்டும். முழுமையாக தன்னை தேவனிடம் சமர்வித்த ஊழியராக அவர் இருக்க வேண்டும். பிள்ளைகளும் ஊழியக்காரர்களாகும்படி அவர் வழிநடத்த வேண்டும். முழுமையான ஒரு கல்வி கொடுக்கப்பட தக்கதாக மற்ற ஆசிரியர்களும் சேர்க்கப்பட்டு வேதமே எல்லா படிப்புக்களின் அடிப்படையாக இருக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol. 5, p. 198.***

விசுவாசிகள் குறைவாக இருக்கும் இடங்களில் இன்று மூன்று சபைகள் ஒன்றாக சேர்ந்து ஒரு பள்ளியை ஆரம்பிக்கட்டும். சபை பள்ளிக்கென்று ஒரு கட்டிடம் எழுப்பப்படட்டும். ***Testimonies for the Church, Vol. 6, p. 109.***

பெற்றோர் இக்கல்வி மையங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். தேவன் செய்ய விரும்பும் வேலையை அவருடன் ஒத்துழைத்துச் செய்ய வேண்டும். சாத்தான் நமது பிள்ளைகளுக்காக வைத்திருக்கும் திட்டங்கள் தகர்க்கப்படும். ***Manuscript 33, 1908.***

*வீட்டு சபை பள்ளிகள்*

நமது பிள்ளைகள் கிறிஸ்தவ கல்வியைப் பெற வேண்டும். இதற்கென்று வீட்டு சபை பள்ளிகளை துவங்க வேண்டிவரும். ஒரு இடத்தில் இருக்கும் பல குடும்பங்கள் பிள்ளைகளுக்கு கல்வி கொடுக்க ஒருவரை ஆசிரியராக பணி அமர்த்தலாம். இந்த ஆசிரியர் பிள்ளைகளுக்குப் பெற்றோர் சரியான கல்வியைக் கொடுக்க உதவுவார். தனித்துவிடப்பட்டு, தூரத்து இடங்களில் இருக்கும் குடும்பங்களுக்கு இது ஆசீர்வாதமானதாக இருக்கும். இது தேவனுக்கு உகந்த ஒரு திட்டம். பிள்ளைகளை வெகு தூரத்தில் இருக்கும் பெரிய பள்ளிகளுக்கு அனுப்புவதைவிட இதுவே சாலச் சிறந்தது.

சிறு கூட்டமாக அங்கங்கு ஓய்வுநாளை ஆசரிப்பவர்கள் இருக்கிறார்கள். தங்களது அயலகத்தரினிடம் இவர்கள் சத்திய வெளிச்சத்தை தூக்கிக் காட்ட வேண்டும். இக்குடும்பங்களில் பிள்ளைகள் இருப்பதும் அவசியம். படிப்பிற்குப் பிறகு இவர்கள் பெற்றோர்க்கு உதவ வேண்டும். நல்ல ஒழுங்குடன் இயங்கும் கிறிஸ்தவ இல்லமே பிள்ளைகள் இருக்க வேண்டிய இடம். பிள்ளைகளை சரியான வகையில் ஒரு ஒழுக்கத்திற்குள் கொண்டு வர பெற்றோர் இங்கு இருப்பார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 198.***

**தனியாக இருப்பவர்களின் பிரச்சனை**

ஓய்வு நாளை ஆசரிக்கும் சில குடும்பங்கள் தனியாக வசிக்கின்றனர். அல்லது மற்ற சக விசுவாசிகளினிடத்திலிருந்து வெகு தூரத்தில் இருப்பார்கள். இக்குடும்பங்கள் சில வேளைகளில் பிள்ளைகளை தூரத்தில் இருக்கும் தங்கும் வசதியுள்ள நமது பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். எல்லோராலும் இதை செய்ய முடியாமற் போகிறது. இத்தகைய சூழ்நிலையில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக ஒரு பக்தி நிறைந்த நல்ல கிறிஸ்தவ ஆசிரியரை வேலைக்கு வைக்கலாம். தேவனுக்கென்று எந்த வேலையும் செய்ய ஆயத்தமாக இருக்கும் நபராக இவர் இருக்க வேண்டும். இந்த ஆசிரியருடன் பெற்றோர் ஒத்துழைக்க வேண்டும். பிள்ளைகளின் மனமாறுதலுக்கென்று எல்லோரும் மும்முரமாக செயல்பட வேண்டும். ***Testimonies for the Church, Vol. 6, p. 198, 199.***



1ST
Proof

*ஜீவனுக்காக போராடுவதைப்போன்று வேலை*

சில நாடுகளில் பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டியது சட்டமாக இருக்கிறது. இந்நாடுகளிலும் எங்கெல்லாம் சபைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பள்ளிகள் ஆரம்பிக்கப்படலாம். ஆறு குழந்தைகள் மட்டுமே இருந்தால் கூட பள்ளிகள் துவங்கப்படட்டும் உலகத்தின் தவறான தாக்கத்தில் பிள்ளைகள் மூழ்கிவிடாதபடி, ஜீவனுக்காக போராடுவதைப்போன்று பிள்ளைகளைப் பாதுகாக்க செயல்படுங்கள்.

இந்த முக்கிய விஷயத்தில் நாம் பின் தங்கி இருக்கிறோம். பல இடங்களில் பல வருடங்களுக்கு முன்பாகவே பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அநேக இடங்களில் சத்தியத்திற்கான பிரதிநிதிகள் எழும்பியிருப்பார்கள். தேவனின் வேலைக்கு ஒரு பிரத்தியேக தன்மையை கொடுத்திருப்பார்கள். ஒரே இடத்தில் அதிகமான கட்டிடங்களை எழுப்புவதைவிட, பல இடங்களில் பள்ளிகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இப்பள்ளிகள் இப்பொழுது துவங்கப்படட்டும். ஞானத்துடன் இவ்வேலை செய்யப்படட்டும். பிள்ளைகளும் வாலிபர்களும் தங்கள் சபைகளிலேயும் கல்வியைப் பெறட்டும். இந்த வேலை அசட்டை செய்யப்பட்டிருக்கிறது. இது தேவனை சஞ்சலப்படுத்துகிறது. தேவையான எல்லாவற்றையும் நாம் பெற்றிருந்தும் இவ்வேலையை செய்ய நாம் தவறிவிட்டோம்.

*ஸ்தாபிக்கப்பட்ட பள்ளி மூடப்படக் கூடாது*

சபை பள்ளியாக இயங்கிக் கொண்டுவரும் இடங்களில், பள்ளியின் வேலையை நிறுத்திவிடக் கூடாது. தேவன் அது மூடப்பட வேண்டும் என்று தெளிவாக காட்டினாலொழிய எக்காரணத்தைக் கொண்டும் இவ்வேலை தடைபடக் கூடாது. தகாக தாக்கங்கள் ஒன்றாக இணைந்து பள்ளிக்கு எதிராக செயல்படலாம். ஆயினும் தேவனது உதவியுடன் ஆசிரியர் ஒரு மகத்தான இரட்சிப்பின் வேலையைச் செய்யலாம். இருந்த பழைய முறைமைகளை மாற்றலாம். ***Counsels to Parents, Teachers and Students, p. 157.***

***கீழ்ப்படியாத அடங்காத பிள்ளைகள்***

சில நேரங்களில் பள்ளியில் ஒழுங்கற்ற ஒரு பிள்ளை பெரிய உபத்திரவத்தைக் கொடுக்கலாம். சரியான கல்வியைப் பெறாத பிரச்சனைகளை உருவாக்குகிறார்கள். அவர்களது தவறினால் ஆசிரியரை சோர்வாக்குகிறார்கள். ஆசிரியர் சோர்ந்துவிட வேண்டாம். சோதனையும் உபத்திரவமும் அனுபவத்தைக் கொடுக்கிறது. பிள்ளைகள் கீழ்ப்படியாமலும் தகாத முறையிலும் நடந்தால் கடின முயற்சிக்கான அவசியம் வருகிறது. இத்தகைய பிள்ளைகளுக்காகவே சபை பள்ளிகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். பெற்றோர் ஒழுங்குபடுத்த தவறின பிள்ளைகளளை முடிந்த வரையில் நாம் காப்பாற்ற முயற்சி செய்வோம். ***Counsels to Parents, Teachers and Students, p. 153.***

***உலக வாலிபர்களை மனமாற செய்ய***

பல வருடங்களுக்கு முன்பாகவே பல இடங்களில் இதற்காக கட்டிடங்கள் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். பெரிய கட்டிடங்களாக இருக்க வேண்டியதல்ல. பிள்ளைகளும் வாலிபர்களும் சரியான கல்வியை பெற்றுக் கொள்ளுவதற்கு ஏதுவான சபை பள்ளிகள் இயங்கக்கூடிய கட்டிடங்களாக இருக்கட்டும். தேவ கட்டளைகளை நினைவிற்குக் கொண்டு வரத் தக்கதான பாட புத்தகங்கள் உபயோகிக்கப்படட்டும். கல்வியின் அடிப்படையாக வேதம் இருக்கட்டும். இவ்வேலையில் சத்தியத்தின் வல்லமையும் மகத்துவமும் வெளிப்படும். உலகின் வாலிபர்கள், கெட்ட தீங்குகளினால் பாதிக்கப்படாதவர்கள். இப்பள்ளிகளுடன் தொடர்பு கொண்டு மனமாறுவார்கள். இத்தகைய ஊழியமே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. சத்தியத்தின் வெளிச்சத்தையும் அறிவையும் இதுவே வல்லமையாக பரப்பும். ***Manuscript 150, 1899.***

***உயர்ந்த தரம்***

நமது சபை பள்ளிகளில் செய்யப்படும் வேலை உயர்ந்த தரமுடையதாக இருக்க வேண்டும். தவறான கல்விக்கான ஒரே தீர்வு இயேசுவே. அவரது வார்த்தையில் அவர் வைத்திருக்கும் பாடங்கள் வாலிபர்களுக்கு முன்பாக வைக்கப்பட வேண்டும். அவர்களது ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இது செய்யப்பட வேண்டும். வீட்டில் கொடுக்கப்படும் பயிற்சியுடன் பள்ளியின் ஒழுங்கும் இன்னொரு கரமாக இணைய வேண்டும். வீட்டிலும் பள்ளியிலும் எளிமையும், தெய்வீகமும் இருக்க வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 174.***

1ST Proof

***பரலோகின் மதிப்பீட்டுக்கு ஆயத்தமாகுதல்***

பெற்றோர்க்கு தேவன் ஒரு எச்சரிப்பைக் கொடுக்கிறார். உங்கள் பிள்ளைகளை உங்கள் வீடுகயில் உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். தேவ கட்டளைகளை அசட்டை செய்பவர்களிடமிருந்து அவர்களை பிரியுங்கள். தீமையை கைக்கொண்டு அதை அப்யாசிப்பவர்களிடமிருந்தும் அவர்கள் பிரிக்கப்பட வேண்டும். பெரிய நகரங்களை விட்டு விரைவாக வெளியேறுங்கள். சபை பள்ளிகளை ஸ்தாபியுங்கள். எல்லா கல்வியின் அடித்தளமாக வேத வார்த்தைகளை பிள்ளைகளுக்குக் கொடுங்கள். இது அழகான பாடங்களை உடையதாக உள்ளது. இவ்வுலகின் வகுப்பறைகளில் மாணவர்கள் அதை படித்தால் பலலோகின் மேலான வகுப்பறைகளில் படிக்க தகுதிபெறுவார்கள். ***Testimonies for the Church, Vol. 6, p. 195.***

***தேவன் ஏற்படுத்தியிருப்பவைகள்***

நமது பள்ளிகள் தேவனின் விசேஷ கருவிகள். பிள்ளைகளையும் வாலிபர்களையும் தேவ ஊழியம் செய்வதற்கு இவைகள் தகுதிப்படுத்தும். பெற்றோர் தங்கள் பொறுப்பை புரிந்துகொள்ள வேண்டும். பிள்ளைகள் தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருப்பவைகளை பாராட்ட பெற்றோர் அவர்களுக்கு உதவ வேண்டும். நல்ல கல்வியை பெற்றுக்கொள்ளுவதினால் தேவன் தங்களுக்கு அருளியிருக்கும் ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் அறிந்தவர்களாகப் பிள்ளைகள் இருக்க வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 149.***

***அதிகாரம் - 53***

***சபையின் பொறுப்பு***

*ஜாமக்காரனாக சபை*

வரப்போகும் காலங்களுக்கு பிள்ளைகளை பெற்றோர் ஆயத்தப்படுத்த வேண்டும். அதற்கேற்ற ஒரு கல்வியைப் பெற்றோர் பிள்ளைகளுக்குக் கொடுக்க சபை பள்ளிகளை உதவும் கருவியாகப் பயன்படுத்த தேவன் விரும்புகிறார். இவ்வேலையை சபை முழு மனதுடன் செய்யட்டும். தேவன் இப்பணி எத்தகையதாக இருக்க விரும்புகிறாரோ அவ்வண்ணமே அது இருக்கட்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 167.***

ஒரு காவலாளியாக சபையை தேவன் நியமித்திருக்கிறார். சபையானது பிள்ளைகள்மீதும் வாலிபர்கள்மீதும் ஆழ்ந்த அக்கரை கொண்டு, போர் வீரர்களைப்போல் செயல்பட்டு எதிரியின் வருகையைக் கண்டுகொண்டு எச்சரிப்பைக் கொடுக்க வேண்டும். சபை இதை உணருவதில்லை. சபை காவல்காக்க வேண்டிய இடத்தில் நின்று கொண்டு தூங்கிக்கொண்டிருக்கிறது. ஆபத்தான இச்சமயத்தில் பெற்றோர் எழும்பி ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள முயலுவதைப்போன்று பணியாற்ற வேண்டும். இல்லையெனில் வாலிபர்களை நித்தியத்திற்கும் இழந்துவிடுவோம். ***Counsels to Parents, Teachers and Students, p. 165.***

*தேவ பிரமாணம் உயர்த்தப்படட்டும்*

சபைக்கென்று ஒரு பிரத்தியேக வேலையுண்டு. பள்ளிக்கு செல்வதினாலோ, மற்ற தொடர்புகளினாலோ கேடான பழக்கங்களை உடையவர்களால் பிள்ளைகள் பாதிக்கப்படக் கூடாது. இதை சபை பார்க்க வேண்டும். உலகம் பாவத்தினால் நிரம்பியிருக்கிறது. தேவ நியமங்கள் அசட்டை செய்யப்படுகின்றன.

புராட்டஸ்டண்டு சபைகள் தவறான ஓய்வுநாளை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த போலியான ஓய்வுநாள் பாப்பு மார்க்கத்தின் பிள்ளையாக இருக்கிறது. இதை தேவன் பரிசுத்தப்படுத்தின நாளுக்கு மேலாக வைக்கிறது. வாரத்தின் முதல் நாள் உண்மையான ஓய்வு நாள் அல்ல என்பதை பிள்ளைகளுக்கு தெளிவாக்குவதே நமது வேலை. இதைக் குறித்ததான வெளிச்சம் வந்த பிறகும் தவறான ஓய்வுநாளைக் கைக்கொள்ளுவது தேவ பிரமாணத்திற்கு புறம்பானது என்பதை விளக்க வேண்டும். ***Testimonies for the Church Vol. 6, p. 193.***

*திறன்படைத்த வேலையாட்கள் கிறிஸ்துவிற்காக பயிற்சிக்கப்பட வேண்டும்*

சபையாக, தனி நபர்களாக குறையில்லாதவர்களாக நியாயத்தீர்ப்பில் நிற்க, நமது வாலிபர்களின், மற்றும் பிள்ளைகளின் பயிற்சிக்கு பெரிய முயற்சிகளை நாம் ஏரெடுக்க வேண்டும். நமது கரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிற மகத்தான வேலைக்கு அவர்கள் தகுதி பெறுவார்கள். ஞானமாக திட்டமிட வேண்டும். விசேஷ தாலந்துகளையும் திறமைகளையும் பெற்றவர்கள் நல்ல ஒழுக்கத்திற்குள்ளாக கொண்டு வரப்பட வேண்டும். மின்னும் கற்களாக ஜொலிக்க அழகுப்படுத்தப்பட வேண்டும். திறன் நிறைந்த வேலையாட்களின் தட்டுப்பாட்டினால் கிறிஸ்துவின் வேலை தடைபடக் கூடாது. இவ்வேலையாட்கள் உண்மையுடனும் உத்தமத்துடனும் செயல்படுபவர்களாக இருப்பார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 43.***

*எல்லோரும் செலவுகளை சுமக்கட்டும்*

செலவுகளை எல்லோரும் பகிர்ந்துகொள்ளட்டும். இந்த நல்ல பயிற்சியின் நன்மைகளைப் பெற வேண்டியவர்கள் இப்பள்ளிகளில் படிக்கும்படி சபை பார்க்க வேண்டும். ஏழை குடும்பங்களுக்கு உதவுங்கள். நமக்கு அருகாமையில் இருப்பவர்களை நாம் அசட்டை செய்தால், நம்மை ஊழியக்காரர்கள் என்று நாம் சொல்லிக்கொள்ள முடியாது. இந்த ஏழைகள் பரிதபிக்கும் நிலையில் இருக்கக் கூடும். அறிவையும் அனுபவத்தையும் அவர்கள் பெற்றுக்கொள்ள நமது உதவி அவர்களுக்கு அவசியம். இதை நாம் செய்யும்பொழுது தேவனுடைய வேலைக்கு அவர்களும் தகுதி பெறுவார்கள். முடிந்த வரையிலான எல்லா முயற்சிகளையும் பிள்ளைகளின் கல்விக்காக நாம் செய்ய வேண்டும். ***Testimonies for the Church, Vol. 6, p. 217.***

*தகுதியுள்ள வாலிபர்களுக்குப் பண உதவியைக் கொடுங்கள்*

1ST Proof


குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

வெவ்வேறு இடங்களில் இருக்கும் சபைகள் தங்கள் உன்னத பொறுப்பை உணர வேண்டும். ஊழியத்திற்கு வாலிபர்களை பயிற்றுவிப்பதே இப்பொறுப்பு. சபையில் நல்ல வேலையாட்களாக உருவாகும் திறன்பெற்றவர்களை நாம் பார்ப்போம். நமது பள்ளிகளிலும் பயிற்சி மையங்களிலும் படிக்க முடியாத நிலையில் பொருளாதாரத்தில் தாழ்ந்து இருப்பவர்களை நாம் கண்டறிய வேண்டும். அவர்கள் நமது பயிற்சி பள்ளிகளில் ஒன்றிற்கு செல்லும் வசதி செய்து தரப்பட வேண்டும். நமது சபைகளில் நிறைய தாலந்து முடங்கி கிடக்கிறது. தேவனது திராட்சை தோட்டத்தில் நல்ல வேலையை செய்யக் கூடியவர்கள் அநேகர் இருக்கிறார்கள். உதவி கிடைக்காமல் இவர்களால் நமது பள்ளிகளில் படித்து தேவையான கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியாது. இத்தகையவர்களை தாங்குவது சபை ஒரு பெரிய சிலாக்கியமாகக் கொள்ள வேண்டும்.

சத்தியத்தை தங்கள் இதயத்தில் கொண்டவர்கள் திறந்த மனதுடையவர்களாக இருப்பார்கள். தேவைப்படும் உதவிகளையும் செய்வார்கள். அவர்கள் முன்னோடிகளாக நடந்து மற்றவர்களை அவ்வழியில் நடத்துவார்கள். நமது பள்ளிகளில் படிக்கும் நன்மையைப் பெற வேண்டியவர்களால் படிப்பு கட்டணத்தை முழுமையாக செலுத்த முடியாத நிலையில், சபை தனது பெருந்தன்மையை காட்டட்டும். அவர்களுக்கு உதவட்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 69.***

***உயர் படிப்பிற்கு ஒரு தொகை***

நன்கொடைகளினால் ஒரு தொகை சேகரிக்கப்படட்டும். பள்ளிகளை ஸ்தாபிப்பதற்கும், இந்த கல்வியின் வேலையை தொடர்ந்து செய்யவும் இத்தொகை பயன்படுதப்படட்டும். நல்ல பயிற்சியையும் கல்வியையும் பெற்ற நபர்கள் சபைக்காக வேலை செய்ய வேண்டும். மற்ற சபைகள் ஆரம்பித்துள்ள கல்லூரிகளுக்கும் தேவ பயிற்சி மையங்களுக்கும் நம் வாலிபர்களை நம்பிக்கையுடன் அனுப்ப முடியாது. உண்மையான வேலையாட்கள் இதை வலியுறுத்துவார்கள். ஆவிக்குரிய பயிற்சி சரியாக கொடுக்கப்படும் இடங்களில் நம் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும். இவ்விடங்களில் இந்த ஆன்மீக பயிற்சி புறக்கணிக்கப்படாது. ***Counsels to Parents, Teachers and Students, p. 44, 45.***

***ஊழியத்திற்கு கொடுங்கள் நம்முடன் இருக்கும் வாலிபர்களை அசட்டை செய்யாதீர்கள்***

மற்றவர்கள் கிறிஸ்துவின் வேலையை செய்ய பண உதவி செய்பவர்கள் தங்கள் பிள்ளைகள் சாத்தானின் வேலையை செய்ய விடலாமா? ***Testimonies for the Church, Vol. 6, p. 217.***

நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கும் வெளியிடங்களிலும் ஊழியம் செய்வது அவசியமே. இதையே நம் பிள்ளைகளையும் வாலிபர்களையும் புறக்கணிப்பதற்கு காரணமாக செல்லக் முடியாது. தேவனுக்கு வேலை செய்ய இவர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். பெற்றோர்களும் ஆசிரியர்களும் இதை செய்ய வேண்டும். சொல்லினாலும் செயலினாலும் சத்தியத்தின் கோட்பாடுகளையும், நேர்மையின் நியதிகளையும் இளம் மனங்களுக்குள் புகுத்த வேண்டும். தேவனுக்கும் அவரது காரியத்திற்கும் இரும்பைப் போன்று திடமாக நிற்பார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 165.***

***விசுவாசத்துடன் ஜெபியுங்கள் தேவன் வழிகளைத் திறப்பார்***

இப்படிப்பட்ட பள்ளிகளை எப்படி ஸ்தாபிக்க முடியும் என்று சிலர் கேட்கலாம். நாம் செல்பந்தர்கள் அல்ல. விசுவாசத்துடன் ஜெபித்து தேவனை நமக்காக கிரியை செய்ய அனுமதிக்க வேண்டும். நமது வாலிபர்களுக்காக பள்ளிகளை ஆரம்பிக்கும் வழிகளை அவர் திறப்பார். தேவ அறிவிற்கும் புத்தக அறிவிற்கும் மட்டுமில்லாதபடி தொழிற் கல்விகளை கற்கவும் வழிகள் திறக்கப்படும். ***Counsels to Parents, Teachers and Students, p. 204.***

***எழுந்து கட்டுவோம்***

சரியாக வேலையை நாம் ஸ்தாவிக்க வேண்டும். நமது பிள்ளைகள் உலகத்தால் கறைபட விடலாமா? பாவத்தினாலும் தேவ கட்டளைகளை அசட்டை செய்வதினாலும் உலகம் கறைப்பட்டிருக்கிறது.

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

பொதுவாக எல்லோருக்கும் நடத்தப்படும் பள்ளிகளுக்கு அனுப்புவதில் எவ்வளவு அபாயம் இருக்கிறது.

பள்ளிக்கூடத்திற்கென்று ஒரு கட்டிடத்தை எழுப்ப நாங்கள் விரும்புகின்றோம். புல நேரங்களில் இதற்கு போதிய பணத்தை சேகரிப்பது கடினமானதாகத் தோன்றலாம். இப்படியாக ஒரு பள்ளியை அமைக்க நினைத்தவர்களுக்கு எனது இடத்தில் ஒரு பகுதியை அவர்கள் பயன்படுத்தவிட்டிருக்கிறேன். தேவனுடைய வார்த்தைக் கற்றுக்கொடுக்கப்படத்தக்கதாக ஒரு கட்டிடம் எழுப்பப்பட அநேகர் ஆர்வம் காட்டுவார்கள் என நம்புகிறேன். வேத வார்த்தைகளே கிறிஸ்துவின் மாமிசமாகவும் இரத்தமாகவும் இருக்கின்றன. வேத வாக்கியங்கள் சொல்லிக் கொடுக்கப்படத்தக்கதாக எழும்பப்படும் கட்டிடங்களைக் கட்ட ஆர்வம் காட்ட மாட்டார்களா? கிரிஸ்டல் ஸ்பிரிங்க்ஸ் என்ற இடத்தில் இதற்கென கட்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு கட்டிடத்திற்கு ஒரு நபரிடம் உதவி கேட்டோம். அவர் தனக்கு ஒரு நாளைக்கு மூன்று டாலரும், தங்குவதற்கு வசதி செய்துகொடுத்தால் தன்னால் முடிந்த உதவியை செய்வதாக கூறினார். இப்படிப்பட்ட உதவி நமக்கு தேவையல்ல. நமக்கு உதவி கிடைக்கும். வேதத்தை சொல்லிக்கொடுக்க ஒரு கட்டிடத்தைக் கட்ட நான் எதிர்பாாக்கிறோம். ஜெபங்களும் தொடர்ந்து ஏரெடுக்கப்பட்டு, வேத நியதிகளில் பிள்ளைகள் அறிவுறுத்தப்படும் இடமாகவும் அது இருக்கும். எங்களுடன் கைக்கோர்ப்பவர்கள் அவர்களது பங்கை செய்வார்கள் என்று நம்புகிறோம். இயேசுவிற்கென்று ஒரு சிறு இராணுவத்தை உருவாக்குவதே எங்கள் திட்டம். ***Manuscript 100, 1902.***

***சரீர உதவியும் பொருளாதார உதவியும்***

எங்களது இந்த முயற்சியில் நாங்கள் வெற்றியடைய எல்லோரும் ஆர்வமாக இருக்கிறார்கள். நேரம் ஒதுக்க முடிந்தவர்கள் கட்டிட வேலையிலும் உதவட்டும். அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கான பணம் முழுவதுமாக இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்த உதவிக்கு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எல்லோரும் இதில் அதிக ஆர்வம் காட்டும்படி கேட்கிறோம். விரைவில் வேதத்தை படித்துக் கொள்ள பிள்ளைகளுக்கு ஒரு இடம் ஆயத்தமாகிவிடும். வேத கல்வியே உண்மையான கல்வியின் அடித்தளம். தேவ பயமே கற்றுக்கொடுக்கப்பட வேண்டிய முதற்பாடம். இதுவே ஞானத்தின் ஆரம்பம்.

அதிக நாட்களுக்கு இவ்வேலை இழுக்கப்பட வேண்டியதில்லை. எல்லோரும் உதவட்டும். வேலை முடியும்வரை விடாமுயற்சியுடன் ஆர்வத்தோடு பணிபுரியட்டும். ஒவ்வொரு நபரும் எதையாகிலும் செய்யட்டும். உதவுவதற்கு சிலர் விடியற்காலை நான்கு மணிக்கு எழுந்திருக்க வேண்டி வரலாம். நான் என் வேலைகளை அதற்கு முன்பாகவே துவங்கிவிடுவேன். விடியத்துவங்கியவுடன் சிலர் கட்டிட வேலையை ஆரம்பிக்கலாம். காலை உணவிற்கு முன்பாக ஒன்று அல்லது இரண்டு மணி நேர அளவும் இதற்கென செலவழிக்கலாம். எல்லோராலும் இதை செய்ய முடியாது. தேவ ஊழியத்திற்கு பிள்ளைகள் பயிற்றுவிக்கப்பட ஒரு இடத்தைக் கட்ட ஒவ்வொருவரும் எதையாகிலும் செய்ய ஆர்வம் காட்டலாம். இத்தகைய ஒவ்வொரு முயற்சியின் மீதும் நிச்சயமாக தேவனுடைய ஆசீர்வாதம் தங்கும்.

சகோதர சகோதரிகளே ஒரு சபை பள்ளியைக் கட்ட நீங்கள் என்ன உதவியை செய்யப்போகிறீர்கள். இப்பள்ளியை அமைப்பது எல்லோராலும் ஒரு பெரிய ஆசீர்வாதமாக பார்க்கப்படும் என்று நம்புகிறோம். எழும்பி கட்டுவோம் என்று எல்லோரும் கூறி உற்சாகத்தின் ஆவியை பிடிக்கட்டும். ஒருங்கிணைந்து வேலை செய்தால், விரைவிலே தேவ வழியைக் கற்றுக்கொள்ள பிள்ளைகளுக்கு ஒரு பள்ளி அறை கிடைத்துவிடும். நம்மால் முடிந்த சிறந்த முயற்சிகளை நாம் ஏரெடுப்போம். தேவ ஆசீர்வாதம் நம்மீது தங்கும். நாம் எழும்பி கட்ட வேண்டாமா? ***Manuscript 100, 1902.***

***( படிப்பவரின் கவனத்திற்கு – தனது இல்லத்திற்கு பக்கத்தில் ஒரு சபை பள்ளி கட்டப்படத்தக்கதாக திருமதி. உவைட் பேசிய பேச்சுரையின் ஒரு பகுதியையே நாம் படித்தோம்)***

***அதிகாரம் - 54***

***ஆசிரியரும் பெற்றோரும் ஒருங்கிணைதல்***

***ஒருவர் வேலையை மற்றொருவர் புரிந்துகொள்ள வேண்டும்***

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

வீட்டில் உள்ள ஆசிரியர்கள், பள்ளியில் உள்ள ஆசிரியர்களின் வேலையையும், பள்ளி ஆசிரியர்கள், வீட்டிலுள்ள ஆசிரியர்களின் வேலையை புரிந்துகொள்ள வேண்டும். ஒருங்கிணைந்து, இசைவாக வேலை செய்ய வேண்டும். ஊழியத்தின் ஆவி இருசாரர்களையும் பற்றியிருக்க வேண்டும். பிள்ளைகளின் சரிரத்திற்கும், மனதிற்கும் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் நன்மை செய்ய வேண்டும். சோதனையை வெல்லும் ஒரு குணத்தை பிள்ளைகள் வளர்த்துக் கொள்ள செயல்பட வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 157.***

சுபை பள்ளிகள் பிள்ளைகளுக்கு பெரிய நன்மையாக இருக்கும் என்பதை உணர வேண்டும். அப்பொழுது இப்பள்ளிகளின் வேலை அதிக திறன்படைத்தாக அமையும். பள்ளியின் ஆசிரியர்களுடன் பெற்றோர்களும் முழுமனதுடன் இணைந்துவிடுவார்கள். ஜெபத்தினாலும் நீடிய பொருமையினாலும், பொருமையின்றி ஞானமில்லாமல் செய்த தவறுகளை திருத்திக்கொள்ளலாம். பெற்றோரும் ஆசிரியர்களும் ஒன்றாக வேலை செய்யட்டும். தேவனுக்கு பயந்த ஒரு ஆசிரியர் சமுதாயத்திற்கு பெரிய உதவியாக இருப்பார் என்பதை பெற்றோர்கள் மனதில் கொள்ள வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 155, 156.***

***ஒற்றுமையின்மை நல்ல தாக்கத்தை கெடுத்துவிடும்***

சிலரது மனதை ஆட்கொண்டிருக்கும் ஒற்றுமையில்லாத ஆவி மற்றவர்களுக்கும் பரவும். பள்ளியின் நல்ல தாக்கத்தைக் கெடுத்துவிடும். ஆசிரியருடன் ஒத்துழைக்க பெற்றோர் ஆயத்தமாக வேண்டும். பிள்ளைகள் இரட்சிக்கப்படுவதற்கு ஏதுவாக ஒரு பள்ளி அமைக்கப்படும். ***Testimonies for the Church, Vol. 6, p. 202.***

***கூட்டணி முயற்சி வீட்டில் துவங்குகிறது***

ஒரு அணிக்காக விளையாடுபவர்கள் ஒன்றாக செயல்படுவதைப்போல் எல்லோரும் இணைந்து செயல்பட வேண்டும். இவ்வேலை தகப்பன் தாயிடமிருந்து துவங்குகிறது. பிள்ளையை பயிற்றுவிப்பதில் இருவரது பொறுப்பும் உள்ளது. ஒன்றாக செயல்படவே அவர்கள் முயல வேண்டும். தேவனண்டை தங்களை சமர்பிக்கட்டும். ஒருவரொருவரை இவ்வேலையில் தாங்கத்தக்கதாக தேவனிடம் உதவியை நாடட்டும். தேவனுக்கும் சத்தியத்தின் நியதிகளுக்கும் உண்மையாய் இருக்கும்படி பிள்ளைகளுக்குச் சொல்லி கொடுக்கட்டும். தாங்கள் தொடர்பு கொள்ளும் எல்லோருடனும் தங்களுடனும் உண்மையாய் நடந்துகொள்ளும்படியும் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். இப்படியாக பயிற்சிக்கப்பட்ட பிள்ளைகள் பள்ளிகளில் தொந்தரவாக இருக்க மாட்டார்கள். மற்றவர்களை பதட்டப்படுத்துபவர்களாகவும் நடந்துகொள்ள மாட்டார்கள். ஆசிரியர்களுக்கு பெரிய ஆதரவாக இருப்பார்கள். சக மாணவர்களுக்கு ஒரு நல்ல உதாரணமாக திகழ்ந்து அவர்களையும் ஊக்கப்படுத்துவார்கள். ***Education, p. 283.***

1ST Proof

உங்களது பயிற்சியையே பள்ளி அறைக்குள்ளாகவும் பிள்ளைகள் கொண்டு செல்லுவார்கள். தேவ பக்தி நிறைந்த பெற்றோரும் ஆசிரியர்களும் இசைந்து செயல்படும்போது தேவனின் வேலையில் ஆர்வம் காட்டத்தக்கதாக பிள்ளைகளின் இதயம் ஆயத்தப்படும். வீட்டில் கற்றுக் கொள்ளப்பட்ட நற்பண்புகள் சபைக்கும் எடுத்துச் செல்லப்படும். தேவன் மகிமைப்படுத்தப்படுவார். ***Letter 29, 1902.***

பெற்றோர் மற்ற அலுவல்களிலும் சுக போகங்களிலும் மூழ்கி பிள்ளைகளை ஒழுக்கப்படுத்துவரை அசட்டை செய்தால், ஆசிரியரின் வேலை கடினமானதாக இருக்கும். பல நேரங்களில் பயனில்லாமல் போய்விடும். ***Review and Herald, June 13, 1882.***

***ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கு உதவுபவர்கள்***

குணத்தை உருவாக்குவதில் இல்லத்தின் தாக்கமே அதிகமாக இருக்கும். ஆசிரியரின் வேலை பெற்றோரின் வேலைக்கு ஒரு உதவும் கரமாக அமைகிறது. பெற்றோர்களின் ஆசிரியர்களால் செய்ய முடியாது. பிள்ளைகளின் நன்மைக்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒன்றாக செயல்பட வேண்டும். ***Education, p.283.***

பிள்ளைகளுக்கு வீட்டில் கொடுக்கப்படும் அறிவுரைகள் ஆசிரியர்களுக்கு உதவியாக செயல்படும்படி இருக்க வேண்டும். சுத்தம், ஒழுங்கு, எதையும் பரிபூரணமாக செய்தல் போன்ற முக்கிய பாடங்கள்

வீட்டில் கற்றுத்தரப்பட வேண்டும். பள்ளியில் மீண்டுமாக இவைகள் வலியுறுத்தப்பட வேண்டும். ***Manuscript 45, 1912.***

பிள்ளை பள்ளி செல்லும் வயதை எட்டியவுடன் ஆசிரியர் பெற்றோருடன் ஒத்துழைக்க வேண்டும். வேலைக்கான பயிற்சிகளும் பள்ளியில் கொடுக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட வேலைகள் பள்ளியில் செய்யப்படுவதை மாணவர்கள் விரும்பாமல் இருக்கலாம். பயனுள்ள ஒரு தொழிலை கற்றுக்கொள்ளுவது தலைகுறைவானதாக மாணவர்கள் நினைக்கின்றனர். உண்மையான மரியாதையையும் கணத்தையும் இவர்கள் அறியாதவர்களாக இருக்கிறார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 146.***

***பள்ளியின் வழியாக வீடும் ஆசிர்வதிக்கப்படும்***

ஆசிரியர் பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் உண்மையுடனும் கிறிஸ்துவின் வழியில் பணிபுரிய வேண்டும். இந்த விதத்திலும் பள்ளியில் கொண்டுவரப்படும் சீர்திருத்தம் இல்லங்களையும் சென்றடையும். வீடுகளில் ஒரு பரிசுத்த சூழல் உருவாகும். இதுவே உயர்தரமான ஊழிய பணி. ***Counsels to Parents, Teachers and Students, p. 157.***

பயனுள்ள வகையில் மாணவர்களை திசை திருப்ப ஆசிரியர் பல தருணங்களை கண்டடைவார். சிறு பிள்ளைகள் ஆசிரியர்களுக்கு தங்களது முழு நம்பிக்கையையும் ஒரு மேலான இடத்தையும் கொடுக்கிறார்கள். வீட்டில் உதவியாக இருக்கவோ, உண்மையுடன் கடமைகளை செய்யவோ, திக்கற்றவர்களுக்கு உதவவோ, ஆசிரியர் கொடுக்கும் அறிவுரைகள் கனிதராமல் போவதில்லை. இரண்டத்தனையாக இலாபம் வருகிறது. பிள்ளைகளை நல்ல வகையில் வழிநடத்தும் நபருக்கும் அது நன்மையாக இருக்கிறது. நன்றியுணர்வுடன் பெற்றோர்கள் ஆசிரியர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும். அப்பொழுது ஆசிரியர்களின் பலு குறைந்து பாதை செம்மையாகும். ***Education, 213.***

***பெற்றோர் ஆசிரியரின் வேலையை இலகுவாக்குதல்***

பெற்றோர்கள் குறையின்றி தங்களது கடமைகளை செய்தால் ஆசிரியர்களின் வேலை சுலபமானதாக இருக்கும். ஆசிரியர்களின் நம்பிக்கையும் ஊக்கமும் கூடும். இயேசுவின் அன்பால் நிரப்பப்பட்ட பெற்றோர் ஆசிரியர்களை குறைசெல்லாமல் அவர்களுக்கு தங்களால் முடிந்த உதவியை செய்வார்கள். குறைசொல்லாமல், அவர்களுக்கு தங்களால் முடிந்த உதவியை செய்வார்கள். தங்களைப் போன்ற ஆசிரியர்களும் அவர்களது வேலையை உண்மையுடன் செய்வார்கள் என்ற நம்பிக்கை பெற்றோரிடம் காணப்படும். ***Counsels Parents Teachers and Students p. 157***

பெற்றோர்கள் தங்கள் பொறுப்புக்களை உணர்ந்து கொண்டால் ஆசிரியர்களின் வேலை குறைந்துவிடும். ***Counsels Parents Teachers and Students p. 148.***

***ஆசிரியர்களுக்கு ஆலோசகர்களாக பெற்றோர்***

நமது இல்லங்களில் தேவனின் அன்பைப் பற்றி பேச வேண்டும். பள்ளிகளிலும் அதை நாம் சொல்லிக் கொடுக்க வேண்டும். வேத வார்த்தையின் நியதிகள் வீட்டிலும் பள்ளி வாழ்க்கையிலும் கொண்டுவரப்பட வேண்டும். தேவ சித்தத்திற்கு தங்களை முழுமையாக ஒப்படைப்பதை பெற்றோர் முழுமையாக புரிந்திருந்தால் இன்று ஞானமாக ஆலோசகர்கள் இருந்திருப்பார்கள். தங்களது இல்லங்களில் அவர்கள் பெற்ற நற்பயிற்சி இந்த காலத்து பிள்ளைகளையும் வாலிபர்களையும் சோதனையிலிருந்து காப்பது எப்படி என்பதை கற்றுக்கொடுக்கும். ஆசிரியர்களும் பெற்றோரும் தேவனின் சக ஊழியர்களாக மாறுவார்கள். பரத்திற்கென்று பிள்ளைகளுக்கு ஒருசே கல்வியை கொடுப்பார்கள். ***Letter 356, 1907.***

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் பிரத்தியேக பண்புகளை அறிந்திருப்பார்கள். இதை அவர்கள் ஆசிரியர்களிடம் தெரியப்படுத்தினால், அவர்களுக்கு பெரிய உதவியாக இருக்கும். இதை அநேகர் உணருவதில்லை. பெரும்பாலாக பெற்றோர் ஆசிரியரைப்பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் காட்டுவதில்லை. அவர்களுடன் ஒத்துழைக்கவும் விரும்புவதில்லை. ***Education, p. 284.***

ஆசிரியர்களுடன் ஒத்துழைப்பது தங்களது கடமை என பெற்றோர் உணர வேண்டும். தங்களது பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்

1ST Proof


குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

கொடுப்பவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு ஜெபிக்க வேண்டும். ***Fundementals of Christian Education, p. 270.***

***ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கு ஆலோசனை கொடுக்க வேண்டும்***

பெற்றோர்கள் ஆசிரியர்களை தெரிந்துகொள்ளுவதில்லை. எனவே ஆசிரியர்கள் பெற்றோர்களை அறிந்துகொள்ள பிரயாசப்பட வேண்டும். இது முக்கியமானது. ஆசிரியர்கள் மாணவர்களின் இல்லங்களுக்குச் சென்று அவர்களை சந்திக்கலாம். எத்தகைய சூழலில் வாழுகிறார்கள் என்பதை கண்டுகொள்ளலாம். மாணவர்கள் இல்லங்களுடனும், வாழ்க்கையுடனும் தனிப்பட்ட வகையில் தொடர்பு கொள்ளுவதால் மாணவர்களுடன் தனது உறவை பெலப்படுத்துகிறார். பிள்ளைகளை எப்படியாக கையாள வேண்டும் என்பதையும் அறிந்துகொள்ளுவார்.

வீட்டில் கொடுக்கப்படும் கல்வியைக் குறித்தும் ஆசிரியர் அக்கரை காட்டும்பொழுது, இரட்டிப்பான நன்மையை செய்கிறார். பல பெற்றோர்கள் வேலையில் மூழ்கி பிள்ளைகளின் மீது ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் தருணங்களை இழந்துவிடுகின்றனர். பெற்றோர் தங்களது பொறுப்புக்களை உணர ஆசிரியர்கள் உதவலாம். தங்களது பொறுப்பை பெரிய பாரமாக நினைத்துக் கொண்டிருக்கும் பெற்றோரையும் ஆசிரியர்கள் சந்திப்பார்கள். ஆசிரியர்கள் அவர்களது சுமையை இலகுவாக்கலாம். ஒன்றாக ஆலோசித்து இருதரப்பினரும் பெலப்பட்டு ஊக்கப்படுத்தப்படுவர். ***Education, p. 284, 285.***

***அதிகாரம் - 55***

***ஒழுக்கத்தில் ஒற்றுமை***

***ஆசிரியராக நிர்வாகம் செய்ய ஞானம் தேவை***

வெவ்வேரு குணம் படைத்த வாலிபர்களை ஆசிரியர்கள் காண்பார்கள். ஒவ்வொரு மாணவன் பெற்றிருக்கின்ற கல்வியும் வெவ்வேரானதாக இருக்கும். சிலர் அளவிற்கு அதிகமான கட்டுபாட்டில் வளர்ந்திருப்பார்கள். இது துணிகரத்தையும், அதிகாரத்திற்கு எதிர்த்து செயல்படும் ஆவியையும் வளர்த்திருக்கும். சிலர் தங்கள் விருப்பம்போல் விடப்பட்டு கெடுக்கப்பட்டிருப்பார்கள். ஒவ்வொரு பெலவீனத்திற்கும் ஏதேனும் ஒரு சாக்கு சொல்லப்படுகிறது. அவர்களது குணங்கள் முடமாகிவிட்டன. சாதுர்யமாகவும், மெண்மையுடனும், ஞானத்துடனும், திறமையுடன் இவர்கள் கையாளப்பட வேண்டும். இவர்களை வழிநடத்துவதில் உறுதியும் காண்பிக்கப்பட வேண்டும்.

மாணவர்கள் அதிகாரத்தை விரும்பாமல் அதை வெறுக்கவும் செய்வார்கள். வெளிப்படையாக இதை காண்பிப்பார்கள். தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதில் சில மாணவர்கள் ஞானமாக இருப்பார்கள். சிலர் எதையுமே ஒரு பொருட்டாக எண்ணாததைப்போல் இருப்பார்கள். இச்சூழ்நிலைகளில் அதிகமான பொறுமை தேவை. ஆதிகமாக பிரயாசப்பட வேண்டியதாகவும் இருக்கும். ***Testimonies for the Church, Vol. 5, 88, 89.***

***தேவைப்படும் கட்டுபாடுகள் ஞானமாக விதிக்கப்படட்டும்***

வீடுகளிலும் பள்ளியிலும் ஞானத்துடன் ஒழுக்கம் கைக்கொள்ளப்பட வேண்டும். பிள்ளைகளின் நடத்தையை சரியாக வழிநடக்கத்தக்கதாக விதிகள் கொண்டுவரப்பட வேண்டும். அதிகமான கட்டுப்பாடுகள் இருக்கக் கூடாது. கொண்டுவரப்பட்ட விதிகள் கைக்கொள்ளப்பட வேண்டும். நன்றாக சிந்தித்து ஆலோசித்து மாணவர்கள் கைக்கொள்ள சட்டங்களை இயற்ற வேண்டும். ஒவ்வொரு கட்டுப்பாட்டின் பின்னணியில் இருக்கும் நியாயமான கோட்பாட்டை பிள்ளைகள் பார்க்கும்படி செய்ய வேண்டும். பிள்ளைகள் இக்கட்டுப்பாடுகள் நீதியானவைகள் என்பதை புரிந்து கொள்ளுவார்கள். ***Counsels Parents Teachers and Students p. 153.***

***ஆசிரியர் கீழ்ப்படிதலைக் கொண்டுவர வேண்டும்***

வீட்டிலும் பள்ளியிலும் நல்லொழுக்கம் தெளிவாக புரிந்துகொள்ளப்பட்டிருக்க வேண்டும். பிரம்பை பிரயோகிக்க சூழ்நிலை வராது என்று நம்ப வேண்டும். ஆயினும் மற்ற எல்லா வழிகளும், பயன்தராமல் போனால், கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தை பிள்ளைகளுக்குப் புரிய வைக்க வேண்டும். நல் ஆலோசனைகளும்

1ST Proof


குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

பாரத்துடன் செய்யப்பட்ட எல்லா முயற்சிகளும் பயன்தராமல் போகும் நிலையில் பிரம்பை கையாளும் அவசியம் ஏற்படலாம்.

சில ஆசிரியர்கள் மாணவர்களை கீழ்ப்படிய வைப்பது சிறந்ததன்று என்று நினைக்கிறார்கள். பாடத்தை கற்றுக் கொடுப்பதே அவர்களது பணி என்று நினைக்கிறார்கள். அவர்கள் கல்வியை புகட்ட வேண்டியது உண்மையே. நன்நெறிகளை புரிந்து கொள்ளாமலும் நல்லொழுக்கத்தின் கோட்பாடுகளை அறிந்துகொள்ளாமலும் பெறப்படும் கல்வி எதற்கு பயன்படப் போகிறது? பிள்ளைகளின்மீது அதிகாரம் செலுத்தும் உரிமையை ஆசிரியர் பெறாமற்போனால் கொடுக்கப்படும் கல்விக்கு அர்த்தமில்லாமல் போகிறது. ***Review and Herald, Sep. 15, 1904.***

***பெற்றோரின் ஒத்துழைப்பு தேவை***

ஆசிரியர் தனியாக தனது பணியின் பாரத்தை சுமக்கக் கூடாது. அன்பும், கரிசனையும் ஒத்துழைப்பும், அங்கத்தினர்களின் ஆதரவும் அவருக்குத் தேவை. பெற்றோர்கள் ஆசிரியர்களின் வேலையை அங்கிகரித்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களது நல்ல முயற்சிகளைப் பாராட்ட வேண்டும். ஆசிரியருக்கு எதிராக எழும்பும்படியாக பிள்ளைகளுக்கு முன்பாக பெற்றோர் எதையும் கூறக் கூடாது. இது மாணவர்களிடம் அதிகாரத்தை எதிர்க்கும் துணிகரத்தை உண்டு பண்ணும்.

பல பெற்றோர்கள் ஆசிரியர்களுடன் ஒத்துழைப்பதில்லை என்பதை நான் அறிவேன். பள்ளியில் காணப்பட்ட நல்ல தாக்கத்தை அவர்கள் இல்லத்தில் உருவாக்குவதில்லை. பிள்ளைகளை அவர்கள் விருப்பம்போல் செய்ய விடுகிறார்கள். கட்டுப்பாடின்றி பிள்ளைகள் விடப்படுகிறார்கள். இதற்கு மாறாக ஆசிரியர் கீழ்ப்படிதலை கொண்டுவர முயற்சி செய்தால், தாங்கள் தவறாக நடத்தப்பட்டதாக கற்பனை செய்து பெற்றோரிடம் குறை கூறுகிறார்கள். தவறான ஒரு சாட்சியத்தை கொடுக்கிறார்கள். ஆசிரியர் தனது கடமையையே கடினமானதாக இருந்தாலும் செய்திருப்பார். பெற்றோர் பிள்ளைகள் பக்கமாக சேருகிறார்கள். பிள்ளைகளின் மீதே தவறு இருந்தாலும் இப்படியே நடக்கிறார்கள். கோபத்துடன் பகுத்தறிவின்றி அளவிற்கு அதிகமாக பிள்ளைகளை கட்டுப்படுத்தின பெற்றோர்களே, தங்கள் பிள்ளைகள் பள்ளியில் ஒழுக்கப்படுத்தப்படும் பொழுது, நிதானிக்கத் தவறுகிறார்கள். ***Counsels Parents Teachers and Students p. 153, 154.***

1ST Proof

பிள்ளைகளின் குற்றச்சாட்டுகளை பள்ளி ஒழுங்கிற்கும் அதிகாரத்திற்கும் எதிராக பெற்றோர்கள் நியாயப்படுத்துகிறார்கள். செய்வதினால் ஒழுக்கத்திற்கு எதிரான தீமையின் வல்லமையை பெலப்படுத்துகிறார்கள் என்பதை அவர்கள் பார்ப்பதில்லை. வாலிபர்களை சுற்றியிருக்கும் எல்லா தாக்கமும் நன்மைக்கேதுவானதாக இருக்க வேண்டும் வாலிபர்களின் நிலை தரம் குறைந்து கொண்டே போகிறது. ***Testimonies for the Church, Vol. 5, p.112.***

***நல்ல ஆசிரியர்கள் நிலைநிறுத்தப்பட வேண்டும்***

பிள்ளைகளின்மீது அக்கரை கொள்ளாமல் கட்டுப்பாடின்றி அவர்களை பெற்றோர் விட்டுவிடுகின்றனர். இந்த பிள்ளைகள் பள்ளியில் கட்டுப்படுத்தப்படும் பொழுது அப்பெற்றோர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. பள்ளியையும் ஆசிரியரையும் வெறுப்புடன் எதிர்கின்றனர். இப்பிள்ளைகளில் சிலர் சபைக்கும் அட்வெந்தினர் என்ற பெயருக்கே அவதூராக இருக்கின்றனர். ***Counsels Parents Teachers and Students p. 51.***

தேவனுக்கு உண்மையாய் இருப்பதை பெற்றோர் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கட்டும். பிள்ளைகளுக்கு இதை கற்றுக்கொடுக்கும் பெற்றோர் ஆசிரியரை குற்றப்படுத்திக் கொண்டிருப்பதில்லை. பிள்ளைகளின் நன்மைக்கு, நீதி சரியாக கைக்கொள்ளப்படுவதற்கும் அவர்களின் பொறுப்பை பகிர்ந்துகொள்ளும் ஆசிரியரை கனப்படுத்தி நிலைநிறுத்தவே நல்ல பெற்றோர் முயலுவார்கள். ***Education, p. 283.***

***பிள்ளைகளுக்கு முன்பாக ஆசிரியரை குற்றப்படுத்தாதீர்கள்.***

பெற்றோரே சபை பள்ளியின் ஆசிரியர் உங்கள் பிள்ளைகளை பயிற்றுவித்து ஒழுக்கப்படுத்தும் பொழுது, பிள்ளைகளுக்கு முன்பாக அவர்களை குறை கூறாதீர்கள். உங்கள் பிள்ளைகள் இரட்சிக்கப்பட அவர் வேலை செய்கிறார். ஒரு வேளை ஆசிரியர் அதிக கண்டிப்புடன் செயல்படுகிறார் என்று தோன்றினாலும் அவரை குற்றப்படுத்தாதீர்கள்.



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

பிள்ளைகள் அவர்கள் இதயத்தை இயேசுவுக்கு தர நீங்கள் விரும்பினால் அவர்களது இரட்சிப்பிற்காக ஆசிரியர் ஏறெடுக்கும் முயற்சிகளுடன் ஒத்துழையுங்கள். தாயின் வாயிலிருந்து ஆசிரியரை குறை சொல்லும் வார்த்தைகளுக்கு பதிலாக அவரை பாராட்டும் வார்த்தைகளை பிள்ளைகள் கேட்டால் எவ்வளவு நன்மையானதாக இருக்கும். இவ்வார்த்தைகளின் தாக்கம் பிள்ளைகளின் மனதை ஆழமாக பாதிக்கும். பிள்ளைகளும் ஆசிரியரை மதிக்கும்படி வழிநடத்தும். **Counsels Parents Teachers and Students p. 154, 155.**

ஒரு வேளை ஆசிரியரைக் குறித்து ஏதேனும் சொல்ல வேண்டிய அவசியம் வந்தால் அதை தனியாக அவரிடம் சொல்ல வேண்டும். இது பயன்தராமல் போனால், பள்ளி நிர்வாகத்திடம் தெரியப்படுத்தலாம். பிள்ளைகளுக்கு பெரிய நன்மைகள் ஆசிரியரிடமிருந்து வர வேண்டி இருக்கிறது. ஆசிரியர்களை பிள்ளைகள் மதிக்காமல் போகும்படி எந்த வார்த்தையும் பேசப்படக் கூடாது. **Counsels Parents Teachers and Students p. 161, 162.**

பெற்றோர் ஆசிரியரின் இடத்தில் தங்களைப் பொறுத்திப் பார்த்தால், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்களை கையாளுவது கடினமானது என்பதை புரிந்துகொள்ளுவார்கள். **Testimonies for the Church, Vol. 4, p. 429.**

***கீழ்ப்படியாமையும், துணிகரமும் பெரும்பாலும் வீட்டில் துவங்குகிறது***

பிள்ளைகளை அவர்கள் விருப்பத்திற்கு கட்டுப்பாடின்றி விடுவதில் தங்கள் பாசத்தைக் காட்டுவதாக பெற்றோர்கள் நினைக்கிறார்கள். உண்மையில் பிள்ளைகளுக்குப் பெரிய தீங்கை இழைக்கின்றார்கள். பிள்ளைகளாலும் பகுத்தறிய முடிகிறது. அளவிற்கு அதிகமான பாசத்தை பொழிவதாலும் அவர்கள் ஆத்துமா காயப்படுகிறது. பெற்றோரின் பார்வையில் இது நன்மையானதாகத் தோன்றலாம். இப்பிள்ளைகள் வளரும்பொழுது அதிகாரத்தை எதிர்க்கிறார்கள். ஆசிரியர்கள் அவர்களை திருத்த முயலுகின்றனர். ஆயினும் பெற்றோர் பிள்ளைகள் பக்கமாக சேருகின்றனர். இத்தீமை வளர்க்கப்படுகிறது. நல்லதைப்போன்று ஒரு வஞ்சகப் போர்வையை போத்திக் கொள்ளுகிறது. இப்பிள்ளைகளின் தவறான நடத்தையினால், மற்ற பிள்ளைகளும் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள். இந்த நிலையிலும் பெற்றோர்களால் தங்கள் பிள்ளைகளின் தவறைக் காண முடிவதில்லை. ஆசிரியரின் வார்த்தைகளுக்கும் மேலாக பிள்ளைகளின் வார்த்தைகளுக்கே செவிசாய்க்கின்றனர். ஆசிரியர்கள் இப்பிள்ளைகளின் நடத்தையினால் பெருந்துயத்திற்குள்ளாகின்றனர். **Review and Herald, Jan. 20, 1901.**

***ஒத்துழைக்காத பெற்றோர் ஆசிரியரின் வேலையை இரட்டிப்பாகக் கூட்டுகிறார்கள்***

பிள்ளைகளை சரியாக பயிற்றுவிக்கும் வேலையை புறக்கணிக்கின்றனர். இது ஆசிரியரின் வேலையை இரண்டு மடங்கிற்கும் கடினமாக்குகிறது. பெற்றோர்களின் துற்குணங்களை பிள்ளைகளும் வெளிப்படுத்துகிறார்கள். வீட்டில் கட்டுப்படுத்தப்படாததால், பள்ளி ஒழுங்கு அளவிற்கு அதிகமானதாக பிள்ளைகளுக்குத் தோன்றுகிறது. இத்தகைய பிள்ளைகள் சரியாக கவனிக்கப்படாவிட்டால் கெட்டப்பண்புகளால் மற்ற பிள்ளைகளையும் கெடுப்பார்கள். வீட்டில் தவறாக வழிநடத்தப்பட்டிருந்தாலும், அதற்கு எதிர்மறையான ஒரு நல்ல தாக்கத்தை பள்ளியில் பெற்றுக் கொள்ளுகிறார்கள். பெற்றோர்கள் பிள்ளைகள் பக்கமாக சேர்ந்து கொள்ளுவதால் இந்நல்ல தாக்கம் பயனற்றுப் போகிறது.

தேவ வார்த்தையை விசுவாசிக்கும் பெற்றோர்கள் இப்படி நடக்கலாமா? பிள்ளைகளை தவறாக வழிநடத்துகிறார்கள். அவர்களின் தீயச் சுபாவங்களை வளர்த்துவிடுகிறார்கள். இந்த காலத்திற்குரிய சத்தியத்தை விசுவாசிப்பதாக சொல்லிக்கொள்ளும் பெற்றோர் தெளிவடைய வேண்டும். இனியும் தீமையில் பங்குகொள்ளக் கூடாது. மனம் மாறாத பிள்ளைகளின் தவறான குற்றச்சாட்டுகளுக்கு செவி கொடுத்து சாத்தானின் வேலையைச் செய்யக் கூடாது. பிள்ளைகளை கையாளுவதே ஆசிரியருக்கு போதுமான வேலையாக இருக்கும். பெற்றோரின் தீய தாக்கங்களையும் எதிர்கொள்ள வேண்டி வந்தால் அது மிகவும் கடினமானதாக இருக்கும். **Review and Herald, Oct. 9, 1900.**

***அதிகாரம் - 56***

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

*மேற்படிப்பும் கல்லூரி பயிற்சியும்*

*உலக ஸ்தாபனங்களில் வழியை இழத்தல்*

வாலிபர்கள் இன்று அனுப்பப்படும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், ஒழுக்கத்தைக் கெடுத்து துர்குணத்தை உருவாக்கும் தாக்கங்கள் அதிகமாக இருக்கின்றன. அறிவையும் நாகரிகத்தையும் வளர்த்துக்கொள்ள வாலிபர்கள் இவ்விடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். இதற்கு நேர்எதிரான செல்வாக்கே காணப்படுகிறது. இந்த உண்மை பெற்றோரின் இதயங்களை நடுங்க வைக்க வேண்டும். பக்தியற்றவர்களுடனும் சிற்றின்ப பிரியர்களுடனும், கெட்டவர்களுடனும் தொடர்பு ஏற்படுகிறது. பெற்றோர்கள் ஜெபத்தாலும் அறிவுறுத்துதலினாலும் கவனமாக காத்துக்கொண்ட தேவ விசுவாசத்தின் தூய்மையும் எளிமையும் பரிபோகிறது. தியாகத்தின் ஆவியும் மறக்கப்படுகிறது.

சுய நலமில்லாத ஒரு ஊழியத்திற்கு தகுதிபெற மேற்படிப்புக்கென்று இவ்விடங்களுக்கு வாலிபர்கள் செல்கின்றனர். உலகின் மற்ற படிப்புகளில் இவர்கள் ஆர்வம் காட்ட துவங்குகிறார்கள். உலகத்தின் பெயரையும், புகழையும் சம்பாதிக்க மனம் திசை திருப்பப்படுகிறது. அவர்கள் படிக்கச் சென்ற நோக்கம் புறக்கணிக்கப்படுகின்றது. சுய நலமான உலகத்து நோக்கங்களுக்காக வாழ்வு சமர்பிக்கப்படுகின்றது. துவறான பழக்கங்கள் உருவாகி இம்மைக்கும் மறுமைக்கும் வாழ்வை சீரழித்துவிடுகின்றன. ***Ministry of Healing p. 403.***

*பக்திகரமான இல்லத்தின் தாக்கம் மறைகிறது*

"எங்களை சோதனையில் விழவிடாதேயும்" என்று ஜெபிக்கிறீர்கள். இதை செய்துவிட்டு தேவையில்லாத சோதனைகளை சந்திக்கும் இடங்களில் உங்கள் பிள்ளைகளை விடாதீர்கள். தவறான தொடர்புகளால் இதயதில் களைகள் விதைக்கப்படக்கூடிய இடங்களுக்குப் பிள்ளைகளை அனுப்பாதீர்கள்.

பிள்ளையின் சிறு பிராயத்தில் இல்லப் பள்ளியில் பயிற்சியைக் கொடுங்கள். நல்லொழுக்கத்தையும் கொண்டு வாருங்கள். தேவ பயத்தை கற்றுக் கொடுங்கள். இதை செய்துவிட்டு இந்த நல்ல தாக்கங்கள் மறைந்துவிடும்படியாக பிள்ளையை விடாமல் இருக்க கவனமாக இருங்கள். தேவ அன்பு அவர்களின் மனங்களைவிட்டு வெளியேற்றப்படும். அதிகமான ஊதியத்தினாலோ, அல்லது நல்ல கல்வி என்று நினைத்து கவரப்பட்டு பிள்ளைகளை உங்களைவிட்டு சென்று விடும்படியாக அனுப்பிவிடாதீர்கள். இவ்விடங்களில் பெரிய சோதனைகளை சந்திப்பார்கள். ***"மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? " மாற்கு 8 : 36, 37. Manuscript 30, 1904.***

1ST Proof

*நமது கல்லூரிகள் தேவ அபிஷேகம் பெற்றவை*

நமது வாலிபர்களின் கல்விக்காக ஒரு கல்வி ஸ்தாபனம் நிறுவப்பட வேண்டும் என்று ஒரு தேவ தூதனால் எனக்கு காட்டப்பட்டது. ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கான ஒரு பெரிய வழியாக அது இருக்கும் என்பதை நான் பார்த்தேன்.

நமது கல்லூரிகளில் சரியான தாக்கம் இருக்குமானால் வாலிபர்கள் தேவனை கண்டறிந்துகொள்ளுவார்கள். அவரை மகிமைப்படுத்துவார்கள். தேவன் அருளியிருக்கும் திறமைகளை மேம்படுத்திக்கொள்ளும் வேளையிலும், அவருக்கென்று பணிபுரிய ஆயத்தமாவார்கள். ***Testimonies for the Church, Vol. 4, p. 419 – 422.***

நமது பள்ளிகளுக்குச் செல்ல வாலிபர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். நமது பள்ளிகள் தீர்க்கதரிசிகள் ஆரம்பித்த பள்ளிகளைப்போல் இருக்க வேண்டும். நமது பள்ளிகள் தேவனால் ஸ்தாபிக்கப்பட்டவை. ***Fundementals of Christian Education, p. 489.***

*பள்ளி ஒரு இல்லமாக இருத்தல்*

பிள்ளைகள் தங்கள் குடும்பங்களில் தவறான கல்வியை பெற்றிருக்கலாம். தங்கள் இல்லங்களிலிருந்தும் பிரிந்து நமது பள்ளிகளில் இருந்து படித்தால் நல்ல முன்னேற்றம் அடைவார்கள். நமது பள்ளிகள் இருக்கும் இடங்களுக்கு சில குடும்பங்கள் குடிபெயர



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

வேண்டியிருக்கும். இப்படி செய்து பிள்ளைகளை வீட்டிலிருந்து அனுப்பி செலவுகளை குறைத்துக் கொள்ளலாம். பெரும்பாலான சூழ்நிலைகளில் பிள்ளைகளுடன் தவறாக அவர்களை வழிநடத்தியிருக்கும் குடும்பங்கள் பள்ளிக்கு அன்மையில் இருப்பது நல்ல முன்னேற்றத்திற்கு தடையாகவே இருக்கும். ***Fundementals of Christian Education, p. 313.***

***ஒரு பெண்ணுக்கு பள்ளி இல்லமாகிறது***

சாத்தான் உனது மகளை தனது வழியில் கொண்டு சென்றிருக்கிறான். அவனது கட்டுகள் உன் பெண்ணை இரும்பைப்போல் பற்றிக் கொண்டுள்ளன. அவளது ஆத்துமா இரட்சிக்கப்பட வல்லமையான, தளராத முயற்சி தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். இதில் நீங்கள் வெற்றியை கண்டடைய அரை மனதுடன் முயலுவது பலன் கொடுக்காது. வருடங்களாக இருந்துகொண்டு இருக்கும் பழக்கங்கள் எளிதில் நீங்காது. உறுதியான ஒரு நல்ல தாக்கம் தொடர்ந்து இருக்கும் இடத்தில் அவள் இருக்க வேண்டும். நான் சொல்லும் நமது கல்லூாயீல் அவளை சேருங்கள். அங்கேயே தங்கி அவள் படிக்கட்டும். பள்ளியின் தங்கும் விடுதியின் ஒழுக்கம் அவளுக்கு தேவை. பல வருடங்களுக்கு முன்பாகவே அவள் அங்கு சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

நமது கல்லூரியின் தங்கும் விடுதியின் செயல்பாடும் சிறப்பாக திட்டமிடப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரு நல்ல இல்லமாகவே இருக்கும். இவ்வில்லம் சிலருக்கு கடினமானதாக தெரியலாம். இதற்கு காரணம் இவர்கள் தவறான கல்வியை பெற்றிருக்கின்றனர். சுய நல ஆசைகளை திருப்திப்படுத்திக் கொள்ளவே இவர்கள் கற்றுக் கொண்டனர். தவறான பழக்கங்களை கையாண்டிருகின்றனர். என் அருமை சகோதரியே நாம் காலத்தின் முடிவிற்கு வந்துவிட்டோம். உலகத்தின் விருப்பங்களையும், செயல்களையும் நாம் பற்றிக்கொள்ளக் கூடாது. தேவனை பற்றிக் கொண்டு தேவ வார்த்தைகள் என்ன சொல்லுகின்றன என்பதை பார்க்க வேண்டும். வேதத்தின் சத்திய வெளிச்சத்தின்படி நாம் நடக்க வேண்டும். நம்முடைய சொந்த ஆசைகளும் பாரம்பரியங்களும் தேவனுடைய வார்த்தைக்கு முன்பாக வைக்கப்படக் கூடாது. தேவனது வார்த்தையே நமது தரமாக இருக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol. 5, p. 506.***



1ST Proof

***தங்கும் விடுதி மாணவர்கள்***

மாணவர்கள் பள்ளியிலே தங்கிவிட வேண்டும் என சில ஆசிரியர்கள் நினைக்கிறார்கள். பள்ளி விடுதிகளில் தங்கும் மாணவர்களுக்கு மட்டுமே பள்ளி நன்மை செய்ய வேண்டும் என்றும் நினைக்கின்றனர். இது ஒரு வினோதமான சிந்தனை.

சில வாலிபர்களின் இல்லங்களில் நல்லதொரு செல்வாக்கு இருந்திருக்காது. இவர்கள் நன்றாக நடத்தப்படும் ஒரு பள்ளியில் தங்கிப் படிப்பதே இவர்களுக்கு சிறந்ததாக இருக்கும். இப்பள்ளியும் அவர்களுக்கு ஒரு நல்ல இல்லமாகவே திகழும். ஆயினும் பள்ளிக்கு அன்மையில் வசிக்கும் மாணவர்கள் அங்கு தங்கிப் படிக்க வேண்டும் என்பது அவசியமல்ல. பள்ளியைவிட்டு வெகு தூரத்தில் வசிப்பவர்களுக்கு அங்கு செய்து தரப்படும் தங்குவதற்கான வசதிகள் பெரிய ஆசீர்வாதமாக இருக்கும். தேவனுக்கு பயந்து அவருக்குக் கீழ்படியும் பெற்றோரது இல்லமே பிள்ளைகளுக்குச் சிறந்த இடம். பெற்றோர்களின் நல்ல பயிற்சிக்குக் கீழாக நல்ல ஒழுக்கத்தையும் பராமரிப்பையும் அவர்கள் பெற்றுக் கொள்ளலாம். பக்தி நிறைந்த ஒரு குடும்பம் பிள்ளைகளுக்கு இச்சூழலை அமைத்துத் தரும். பெற்றோர்களே இந்த நல்ல சூழலை பிள்ளைகளுக்கு அமைத்துத் தருவர்.

விடுதிகளில் தங்கும் வயதை எட்டிய வாலிபர்கள் அவர்களது இல்லங்கள் பள்ளிக்குப் பக்கத்தில் இருக்கும் பட்சத்தில் பள்ளியிலே தங்கிப் படிக்க வேண்டும் என்பதல்ல. பெற்றோரைவிட்டு பிரிந்தாக வேண்டும் என்பது கட்டாயமல்ல.

தங்களுடன் இருப்பதைவிட ஒரு பள்ளியில் தங்கி படிப்பதே பிள்ளைக்கு நன்மையைத் தரும் என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்தால் ஒழிய பிள்ளைகளை தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழாக வைத்துக்கொள்ள வேண்டும். முடிந்த வரையிலும் பிள்ளைகள் தங்களுடனே இருப்பது நல்லது. சில இடங்களில் பிள்ளைகளின் இல்லங்கள் பள்ளிக்கு அருகாமையில் இருந்தாலும் பள்ளியிலே தங்கிப் படிப்பதே பிள்ளைகளுக்கு ஏற்றதாக இருக்கும் என்று பெற்றோர்கள் பார்ப்பார்கள். இப்படி அவர்கள் அங்கேயே தங்கி படிக்கும்போது வீட்டில் கிடைக்காத சில அறிவுரைகளையும் நல்லொழுக்கத்தையும் பெற்றுக்

கொள்ள வாய்ப்பு அதிகரிக்கும். இவைகள் வீட்டில் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருக்கும். இதற்காக எல்லாப் பிள்ளைகளும் பள்ளிப் படிப்பிற்காக பெற்றோர்களை விட்டுப் பிரிய வேண்டும் என்பதல்ல. இது கட்டாயப்படுத்தப்படக் கூடாது.

பெற்றோர்களே பிள்ளைகளுக்கு தேவன் நியமித்த காப்பாளர்களாக இருக்கிறார்கள். பிள்ளைகளின் கல்வியையும் பயிற்சியையும் பார்த்துக் கொள்ள வேண்டிய உன்னத பொறுப்பு பெற்றோருக்கு இருக்கிறது. சிறு வயது முதல் பிள்ளைகளை பார்த்து பராமரித்து அவர்களது வளர்ச்சியை பெற்றோர்கள் கவனித்து இருப்பார்கள். மற்ற நபர்களைவிட இவர்களே அப்பிள்ளைகளை வழிநடத்த மற்றவர்களைக் காட்டிலும் ஏதுவானவர்களாக இருப்பார்கள். பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய சிறந்த பயிற்சியையும் நல்லதொரு நிர்வாகத்தையும் இவர்கள் கொடுப்பார்கள். பள்ளிக்கு அன்மையில் வசிக்கும் பிள்ளைகள் இரண்டு அல்லது மூன்று மைல் தொலைவில் இருந்தாலும் வீட்டில் தங்கிக்கொண்டே பள்ளிக்கு சென்று வருவதே நல்லது என்று நான் அறிவுறுத்துவேன். பெற்றோர்களின் தாக்கம் அவர்களுக்கு நல்லதொரு செல்வாக்கைக் கொண்டுவரும். முடிந்தவரையிலும் குடும்பம் ஒன்றாக இருக்கட்டும். ***Letter 60, 1910.***

***எல்லா பிள்ளைகளுக்கும் கல்வி வாய்ப்பு***

சபை தூங்கிக் கொண்டு இருக்கிறது. பிள்ளைகளையும் வாலிபர்களையும் சரியாகப் பயிற்றுவித்து நல்லதொரு கல்வியைக் கொடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அது உணரவில்லை. கல்வியைப் பற்றி ஏன் இவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்று ஒருவர் கேட்கிறார். ஒரு படிப்பை படிக்கத் தேர்ந்தெடுத்து அதற்காக பிரயாசப்படும் சிலரை மட்டும் கவனித்துக் கொண்டால் போதுமானதாக இருக்காது. எல்லா வாலிபர்களும் முறையாக பயிற்சிக்கப்பட வேண்டும். ஆனால் இது இன்று நடப்பதில்லை. எல்லா வாலிபர்களுக்கும் நமது பள்ளிகளில் படிக்கும் ஆசீர்வாதமும் வாய்ப்புக்களும் கொடுக்கப்பட வேண்டும். நமது பள்ளிகளில் இவர்கள் கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சிலரைமட்டும் சரியாக வழிநடத்தினால் போதுமா என்ற கேள்விக்கு இல்லை என்றுதான் பதில் சொல்லுவேன். எல்லோரும் நல்லதொரு கல்வியைப் பெற்று தேவனது ஊழியக்காரர்களாக வேலைசெய்ய ஊக்குவிக்கப்பட வேண்டும். நமது பள்ளிகளே இந்த



1^ST^
Proof

வேலையை செய்ய முடியும். இவ்வாலிப்களுக்கு ஒரு முழுமையான கல்வி கொடுக்கப்பட வேண்டும். தனிப்பட்ட வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் பயனுள்ளவர்களாக இருக்க இக்கல்வி அவர்களை தகுதிப்படுத்தும். தங்களது பொறுப்புக்களையும் இவர்கள் சீராக நிறைவேற்றுவார்கள். ***Review and Herald, Feb. 13, 1913.***

***ஒரு சமநிலையான கல்வித் திட்டம்***

மனதின் ஆற்றல் வளர்க்கப்பட வேண்டும். தேவ மகிமைக்கென்று அவைகள் பிரயோகிக்கப்பட வேண்டும். அறிவாற்றலை வளர்த்துக் கொள்ளவும் அதிக கவனம் செலுத்த வேண்டும். மனதின் எல்லா திறன்களும் சமமாக வளர்க்கப்பட வேண்டும். சரியாகப் பயன்படுத்தப்பட வேண்டும். அதனதன் பங்கையும் அது நிறைவேற்ற வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளின் மனங்களை அவர்களது சொந்த விருப்பங்களுக்கேற்ப செயல்பட விட்டால் கடமைகளை புறக்கணித்து இன்பங்களையே தேடிச் செல்வார்கள். அவர்களது குணங்களும் இந்த வகையில் உருவாகிவிடும். வாழ்க்கையில் எந்தஒரு பொறுப்பையும் எடுத்துக்கொள்ள திறனற்றவர்களாகி விடுவார்கள். இளவயதினரின் ஆசைகளும், விருப்பங்களும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். பெலவீனமான பண்புகள் பெலப்படுத்தப்பட வேண்டும். தவறான சுபாவங்கள் ஒடுக்கப்பட வேண்டும்.

ஏதேனும் ஒரு திறமை சரியாக வளர்க்கப்படாமலோ சரியாக வழிநடத்தப்படாமலோ விடப்பட்டால் தேவ நோக்கம் நிறைவேறுவதில்லை. தேவன் அருளியிருக்கின்ற எல்லா திறன்களும் சீராக வளர்க்கப்பட வேண்டும். ஒவ்வொன்றின் மீதும் தனி அக்கரை செலுத்தப்பட வேண்டும். ஒன்றின் தாக்கம் மற்றொன்றின் மீது நிச்சயமாக இருக்கும். மனம் சமநிலையில் இருந்து செயல்பட இவைகள் அனைத்தும் சேர்ந்து வேலை செய்ய வேண்டும். பிள்ளைகள் விரும்புகிறார்கள் என்பதால் ஓரிரு அவயங்களை மட்டும் அதிகமாகப் பயன்படுத்தி மற்றவைகளை கண்டு கொள்ளாமல் விடுவது சமநிலையான மனதை வளர்க்காது. மனமானது சமநிலையை இழந்து துர்குணம் உருவாகிவிடும். ஏதேனும் ஒன்றைச் செய்ய அதிக நாட்டம் காட்டுவார்கள். மற்றவைகளை நிராகரித்துவிடுவார்கள். இவைகளும் முக்கியமானவைகளே. திறம்

படைத்த ஆண்களாகவும் பெண்களாகவும் இவர்கள் இருக்க முடியாது. அவர்களது குறைகள் தெளிவாகக் காணப்படும். முழுகுணத்தையும் கறைபடுத்திவிடும். ***Testimonies for the Church, Vol..3, p.26.***

***வருடம் முழுவதும் தொடர்ந்து படிப்பதால் வரும் தீமைகள்***

அநேக பெற்றோர்கள் பிள்ளைகளை வருடம் முழுவதும் பள்ளியிலே வைக்கிறார்கள். இப்பிள்ளைகள் தொடர்ந்து ஒரு இயந்திரத்தைப் போல படித்துக்கொண்டே இருக்கிறார்கள். ஆயினும் படித்தவைகள் மனதிலே நிற்பதில்லை. இத்தகைய மாணவர்கள் அறிவாற்றலில் குன்றியவ்களாக இருப்பார்கள். தொடர்ந்துகொண்டே இருக்கும் படிப்பு மனதை சோர்வுபடுத்துகின்றது. இவர்கள் படிப்பில் ஆர்வம் காட்டுவதில்லை. புத்தக பாடங்களை துன்பத்தை தருவதுபோன்று பார்க்கப்படுகிறது. உண்மையான உள்ளான அன்பை இவர்கள் பெற்றிருப்பதில்லை. அறிவைப் பெற்றுக்கொள்ளும் ஆசையும் இல்லாமற் போகிறது.

பகுத்தறிந்து ஆழ்ந்து சிந்திப்பவர்கள் சிலரே இருக்கின்றனர். தவறான தாக்கங்கள் அறிவாற்றலின் வளர்ச்சியைத் தடுக்கின்றன. தொடர்ந்து படித்துக்கொண்டே இருப்பதால் அறிவு பெலப்படும் என்று ஆசிரியர்களும் பெற்றோர்களும் நினைக்கின்றனர். இது தவறான ஒரு கருத்து. தொடர்ந்து வருடம் முழுவதும் படித்துக் கொண்டே இருப்பது அறிவை குன்ற செய்துவிடும். ***Counsels to Parents, Teachers and Students, p. 84, 85.***

***பெற்றோரிடம் தவறு***

பெற்றோர்களின் வேலையை ஆசிரியர்கள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. அநேக பெற்றோர்கள் தங்கள் கடமைகளை அசட்டை செய்துள்ளனர். ஏலியைப் போன்று அவர்கள் பிள்ளைகளை சரியாக கட்டுப்படுத்தவில்லை. இந்த ஒழுக்கமற்ற பிள்ளைகளை கல்லூரிகளுக்கு அனுப்புகின்றனர். பெற்றோர்கள் கொடுத்திருக்க வேண்டிய பயிற்சியை கல்லூரி கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.



1ST Proof

ஆசிரியரின் வேலையை சிலரே புரிந்து கொள்ளுகின்றனர். இந்த தவறான வாலிபர்களை அவர்கள் சீர்படுத்தினாலும் அவர்களுக்கு எந்த நல்ல பெயரும் கிடைப்பதில்லை. தீமையை தேடி சென்று வாலிபர்கள் மோசமான நிலைக்கு சென்றாலும் ஆசிரியர்களே இதற்காக குற்றப்படுத்தப்படுகின்றனர். பள்ளியே இதற்கு பொறுப்பு என்கின்றனர்? பெரும்பாலான சமயங்களில் பெற்றோர்களிடமே தவறு இருக்கிறது. பிள்ளைகளை திருத்துவதற்கான முதற் வாய்ப்பும், சாதகமான தருணங்களையும் அவர்கள் பெற்றிருந்தனர். பிள்ளைகளை கட்டுப்படுத்தி அவர்களை சரியாக பயிற்றுவித்திருக்கலாம். சிறு பிராயத்தில் அவர்களது மனம் எதையும் சுலபமாக ஏற்றுக் கொண்டிருக்கும் பெற்றோரின் சோம்பலினால் பிள்ளைகள் தங்கள் விருப்பத்திற்கு விடப்படுகின்றனர். தீய வழியில் செல்ல பெலப்படுகின்றனர். ***Counsels to Parents, Teachers and Students, p. 91.***

***ஆசிரியரின் அதிகாரத்தை பெற்றோர் ஆதரிக்க வேண்டும்***

ஆசிரியர்களுடன் பெற்றோர் ஒத்துழைப்பதில்லை. இதுவே இவர்கள் மேற்கொள்ள வேண்டிய பெரிய பிரச்சனையாக இருக்கிறது. பள்ளி அல்லது கல்லூரியின் விதிகளுக்கு பிள்ளைகள் கீழ்ப்படியும்படி பெற்றோர் செய்வதில்லை. ஆசிரியரின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள பெற்றோர் தீர்க்கமாக முடிவு செய்திருந்தால் இன்றைக்கு நிலவும் துணிகரமும் தீமையும் வளர்ந்திருக்காது. நியாயமான அதிகாரத்திற்கு கட்டுப்படும்படி பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். இதை பிள்ளைகள் அப்பியாசிக்க வைக்க வேண்டும். ஆழ்ந்த அக்கரையுடன் விடாமுயற்சியினால் பிள்ளைகளை கட்டுப்படுத்தி, அறிவுறுத்தி சரியாக வழிநடத்த வேண்டும். இந்த பயிற்சி கொடுக்கப்படுமேயானால் வாலிபர்கள் அதிகாரங்களுக்கு கட்டுப்படுவார்கள். ஒழுக்க நெறிகளையும் பின்பற்றுவார்கள். ***Testimonies for the Church, Vol. 5, p. 89.***

கல்லூரி அல்லது பள்ளியின் ஒழுங்கு சரியாக இருக்கிறதா இல்லையா என்று பிள்ளைகள் முடிவு செய்யக் கூடாது. அக்கல்வி ஸ்தாபனத்தின் கல்வித் திட்டத்தையும், அதன் ஆசிரியர்களையும் நம்பி

பிள்ளைகளை அனுப்பினால் பிள்ளைகளை ஒழுக்கப்படுத்த ஏரெடுக்கப்படும் ஆசிரியர்களின் அதிகாரத்தை இவர்களும் ஏற்க வேண்டும்.

எவ்விதமான தீமையையும் பொருத்துக்கொள்ளாத ஸ்தாபனங்கள் இருக்குமானால், அவைகளுக்காக நன்றி பாராட்ட வேண்டும். இதையே ஞானமான பெற்றோர்கள் செய்வார்கள். இவ்விடங்களில் பிள்ளைகள் கீழ்ப்படிய பயிற்றுவிக்கப்படுவார்கள். நல்ல தாக்கங்கள் அவர்களை சூழும். சுய நல ஆசைகளையே நிறைவேற்றிக்கொள்ள செயல்பட மாட்டார்கள்.

பிள்ளைகளை வீட்டில் ஒன்றும் செய்ய முடியாத காரணத்தினால் சில பெற்றோர் பிள்ளைகளை கல்வி ஸ்தாபனங்களுக்கு படிக்க அனுப்புகின்றனர். இப்பெற்றோர்கள் ஆசிரியர்களுக்கு ஒரு உதவும் கரமாக இருப்பார்களா? அல்லது சொல்லப்படும் ஒவ்வொரு பொய் குற்றச்சாட்டையும் நம்பி கொண்டிருப்பார்களா? ***Manuscript 119, 1819.***

***பள்ளியின் ஒழுங்கை பெற்றோர் ஆதரிக்க வேண்டும்***

ஒரு குறிப்பிட்ட கல்வி ஸ்தாபனத்திற்கு பிள்ளைகளை பெற்றோர் அனுப்பினர். பகுத்தறிவிற்கு ஏற்றபடி இராததுப்போல் தோன்றுவதை செய்ய, சொல்லப்பட்டால் அதை செய்ய வேண்டியதில்லை என்று சொல்லிக் கொடுத்து அனுப்புகின்றனர். பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்கப்படும் எப்படிப்பட்ட பாடமாக இது உள்ளது. அனுபவமில்லாத பிள்ளைகளால் எப்படி தெளிவாக பகுத்தறிய முடியும்.

இரவு நேரங்களில் வேரு எங்காவது சென்று தங்கிக் கொள்ள அவர்கள் விரும்பலாம். அவர்கள் எங்கிருந்தார்கள் என்று சொல்ல மறுக்கலாம். அது கேட்கப்படும்பொழுது அவர்களின் பகுத்தறிவிற்கு இது சரியற்றதாகத் தோன்றலாம். அவர்களது உரிமையாக இதை நினைத்துக் கொள்ளலாம். தங்கள் சுதந்திரம் போவதாக கருதிக்கொள்ளலாம். இவர்களை தங்கள் விருப்பங்களின்படி விட்டால் எந்த விதிகளைக் கொண்டு இவர்களை கட்டுப்படுத்த முடியும். சட்டங்கள் தங்களது உரிமைகளை பரிப்பதாக நினைப்பார்கள்.

இத்தகைய வாலிபர்கள் சில காலமே பள்ளியில் இருந்து தங்கள் படிப்பை முடிக்காமலே திரும்பிவிடுவர். ஒழுக்கப்படுத்தப்படாத தங்களது சுய விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள திரும்பிவிடுகின்றனர். பள்ளியின் மறுக்கப்பட்ட உரிமைகளை அனுபவிக்க வந்துவிடுகின்றனர். அவர்களை தங்களது விருப்பங்களின்படி விட்டுவிட்ட பெற்றோர்களின் தவறான பாடங்கள் இப்படியும் கனிகொடுத்திருக்கின்றன. இந்த ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்கான கணக்கை பெற்றோரே கொடுக்க வேண்டும்.

***கல்லூரிக்கு வெளியிலும் கல்வி***

பிள்ளைகளும் வாலிபகளும் முழுமையான கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்கேற்ற பழக்கங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு படிப்பு மட்டும் அவர்கள் கற்க வேண்டிய எல்லாவற்றையும் சொல்லிக்கொடுத்துவிடாது. அவர்கள் அனுதினமும் பார்ப்பவைகளிலிருந்தும் கேட்பவைகளிலிருந்தும் தொடர்ந்து பாடங்களைப் பெற்றுக்கொண்டே இருக்கிறார்கள். வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையும் சம்பவமும் பாடங்களை கற்றுக் கொடுக்கின்றன. ஒன்றன் காரணத்தையும், அதன் விளைவையும் அனுபவித்து புரிந்துகொள்ளுகின்றனர். ஒவ்வொரு நாளும் விட்டு விலக வேண்டியவைகளைா கற்பார்கள். கைக்கொள்ள வேண்டியவைகளைா அறிவார்கள். அவர்களை உயர்த்தி உன்னதப்படுத்துபவைகளின் அறிவும் பெருகும். நல்ல ஆணாகவும், பெண்ணாகவும் திகழ குணம் பெலப்படும். இதை கொண்டு வரும் விதிகளை படிப்பார்கள்.

நல்ல நோக்கமும் அக்கரையுமின்றி இவர்கள் படித்தால் தேவன் அவர்களுக்கென்று வைத்திருக்கும் தரத்தை எட்டமாட்டார்கள். ***Youth's Instructor Apr. 21, 1886.***

*அதிகாரம் - 57*

*பாகம் - XIII*

***சரீர வளர்ச்சியின் முக்கியத்துவம்***

***சீரான வேலையும் பொழுதுபோக்கும்***

பிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் நல்ல ஆரோக்கியமும் மனமகிழ்ச்சியும் சரீர பெலமும் தேவை. மூளையும் சரீரத்தின் தசைகளும்

1ST Proof

நன்றாக வளர்ந்திருக்க வேண்டும். இவைகள் நடப்பதற்கு பிள்ளைகள் திறந்த வெளியில் அதிகமாக இருக்க வேண்டும். வேலையும், பொழுது போக்குகளும் சம நிலையுடன் இருக்க வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 83.***

அவர்களுடைய நேரத்திற்கான வேலை பிள்ளைகளுக்கு இருக்க வேண்டும். அறிவிற்கு வேலையும், சரீரத்திற்கான வெளிப்புற உடற்பயிற்சியும் உங்கள் மகன்களை பெலவீனப்படுத்திவிடாது. பயனுள்ள வேலைகளும், வீட்டு வேலைகளை அறிந்துகொள்ளுவதும் உங்கள் மகன்களுக்கு பெரிய நன்மையாகும். வேளி வேலைகளும் அவர்களது ஆரோக்கியத்திற்கு நல்லதும் அவசியமானதுமாகும். ***Testimonies for the Church, Vol. 4, p. 97.***

### *ஆரோக்கியமும் தூய்மையான காற்றும்*

ஒவ்வொரு நாளும் தங்கள் கரங்களை பயன்படுத்தாதோர், அவைகளை தீடீரென்று பயன்படுத்த முயலும்பொழுது அவைகள் பெலவீனமாக இருப்பதை உணருவார்கள். அவர்களது நரம்புகளும் தசைகளும் வேலை செய்யும் நிலையில் இல்லை. எல்லா அவையங்களும் சீராக செயல்படும் சரீர இயக்கமும் இருப்பதில்லை. கரங்கள் பயன்படுத்தப்படும்பொழுது பெலப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் மிதமான உடற்பயிற்சி இருக்க வேண்டும். தசைகளை இது வலுவூட்டும். உடற்பயிற்சி இல்லாமற்போனால் அவைகள் பெலவீனப்படுகின்றன. கொழுப்பு நிறைந்தும் காணப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் திறந்த வெளியில் மிதமான உடற்பயிற்சியை செய்ய வேண்டும். நுரையீரலும், சிறுநீரகமும் கல்லீரலும் பெலப்படும். அவைகளின் வேலையை சீராகவும் செய்யும்படி வலுவூட்டப்படுகின்றன.

உங்களது முடிவெடுக்கும் வல்லமையை பயன்படுத்துங்கள். உங்கள் நரம்பு மண்டலத்தை இது பெலப்படுத்தும். ஜலதோஷத்தையும் அண்ட விடாது. தூய்மையான காற்று மற்றும் உடற்பயிற்சியின் நன்மையை உணருவீர்கள். இவ்வாசீர்வாதங்கள் இல்லாமல் நம்மால் வாழ முடியாது. நல்ல காற்றின்றி உங்கள் நுரையீரல் உணவு கிடைக்காத மனிதனைப்போல் தவிக்கும். உணவின்றிகூட அதிக நேரம் இருக்க முடியும். காற்றின்றி இருக்க முடியாது. தூய்மையான காற்றே நுரையீரலுக்கு தேவன் வைத்திருக்கின்ற மருந்து. ***Testimonies for the Church Vol..2, p. 533.***

### *மாணவர்களுக்கு சரீர வேலை தேவை*

வேலையின்மை சரீர இயக்கத்தை பெலவீனப்படுத்துகிறது. தேவன் வேலை செய்வதற்காகவும் பயனுள்ளவர்களாக வாழுவதற்காகவும் தேவன் மனிதனை படைத்தார். எல்லா தசைகளையும் பிரயோகித்து பயனுள்ள வேலையை செய்ய வேண்டும். இது இளவயதினரின் பெலத்தைக் கூட்டும். ***G. O. T. Aug. 19, 1875.***

### *எல்லா சரீர கூறுகளும் உடற்பயிற்சியால் பெலப்படுகின்றன*

பள்ளியில் நான்கு சுவற்றிர்குள்ளாக மட்டும் எப்பொழுதுமே புத்தக பாடங்களை படிக்கும் பிள்ளைகள் நல்ல சரீரங்களை பெற்றிருப்பதில்லை. மூளை அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. மற்ற சரீர அவயங்கள் பயபடுத்தப்படுவதில்லை. இரத்தம் மூளைக்கு அதிகமாக பாய்கிறது. சரீரத்தில் சம நிலையான இரத்த ஓட்டம் இருப்பதில்லை. மூளைக்கு அதிக இரத்தம் செல்கிறது. சரீரத்தின் மற்ற இடங்களுக்கு குறைவாக செல்கிறது. படிப்பிற்கு சில மணி நேரம் ஒதுக்கப்பட்டு மற்ற நேரத்தில் சரீர வேலை இருக்க வேண்டும். உணவு, உடை, ஓய்வு சம்பந்தமான பழக்கங்கள் சீராக இருந்தால் சரீர ஆரோக்கியமும் மன ஆரோக்கியமும் கெடுக்கப்படாமல் ஒரு கல்வி கொடுக்கப்படும். ***Counsels to Parents, Teachers and Students, p. 83.***

பிள்ளைகளின் சிறு வயதிலும் சிறிய பொறுப்புக்களை சுமக்க கற்றுத்தரப்பட வேண்டும். அவர்களது திறமைகள் பயன்படுத்தப்படுவதினால் வளருகின்றன. பிற்காலங்களில் அழைக்கப்படவிருக்கின்ற பெரிய வேலையை திறம்பட செய்ய ஆயத்தமாகுகிறார்கள். தேவ வேலையின் அழைப்பை ஏற்று தேவனுக்கென்று நல்ல வேலையாட்களாக இருப்பார்கள்.

இந்த காலங்களில் வெகு சில பிள்ளைகளே சுருசுருப்பாக வேலைகளை செய்யும் பழக்கங்களை கற்றுக்கொண்டிருக்கின்றன. சோம்பலே இந்த காலத்து பிள்ளைகளினுடைய பெரிய சாபமாக இருக்கிறது. பயனுள்ள முழுமையான சரீர வேலை ஒரு பெரிய

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

ஆசீர்வாதம். நல்ல பழக்கங்களையும், நல்ல பண்புள்ள குணத்தையும் வளர்க்கும். ***Review and Herald, Aug. 30, 1881.***

*பல வகையான வேலைகள்*

வாலிபர்களின் மனங்களும், கரங்களும் அமைதியாக இருப்பதில்லை. மற்றவர்களுக்கு பயன்தரும் வேலைகளை செய்ய அவர்கள் திசைதிருப்பப்பட வேண்டும். இந்த வகையிலும் அவர்கள் சுற்றி இருப்பவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பார்கள். இதை அவர்கள் செய்யாமறபோனால், தங்களது சரீரத்திற்கும் மனதிற்கும் தீங்கு விளைவிக்கக் கூடியவைகளை செய்வார்கள்.

வாழ்க்கையின் சுமைகளை பெற்றோருடன் வாலிபர்களும் மன மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். இதை செய்து ஒரு நறமனசாட்சியை பெறுவார்கள். இது அவர்கள் சரீரத்திற்கும் நல் ஒழுக்கத்திற்கும் மிகவும் நல்லது. ஒரே வேலையை அதிக அளவிற்கு செய்யவைக்கக் கூடாது. சலிப்புத்தட்டும் வரை ஒரே வேலையை செய்ய விடப்படக்கூடாது. வேலைகளில் மாற்றம் இருந்துகொண்டு இருந்தால் நிறைய சாதிக்கப்படும். வேலையின் திறனும், தரமும் மேம்படும். பயனற்ற அபாயகரமான பொழுதுபோக்குகளுக்கு பயனுள்ளவைகளை நிராகரிக்க வேண்டியதில்லை. ***Youth's Instructor July 27, 1893.***

*அதிக வேலை சோர்வுபடுத்துகிறது*

செய்வதற்கு ஒரு வேலையையும் கொடுக்காமல் விடுவது பெரிய தீங்குகளை வரவழைக்கும். உங்கள் மகள்களும் பயனுள்ள வேலைகளை நேர்ந்தெடுத்து செய்யட்டும். துணிகளை தைக்கும் வேலையோ அல்லது பயன்தரும் எந்த வேலையாகிலும் இருக்கட்டும். கரங்களையும் கால்களையும் தசைகளையும் அவர்கள் பயன்படுத்தட்டும். வேலை செய்து அவர்கள் சோர்வடைந்துவிடலாம். நீங்கள் சோர்வடைவதைப்போலவே அவர்களும் சோர்வடைந்து விடுவார்கள். வேலை செய்ததினால் வரும் சரீர சோர்வு ஆபத்தானதல்ல, அவர்களை அது புண்படுத்தாது. ***Testimonies for the Church Vol. 2, p. 371.***

நல்ல வேலைக்குப்பின் எடுக்கப்படும் ஓய்வு இனிமை நிறைந்ததாக இருக்கும். சரீரமும் வேலைப்பார்த்ததினால் சோர்வுற்ற நிலையில் சரீரம் நல்ல ஓய்வெடுக்கும். இதற்கு தூக்கம் இயற்கையின் நல்ல தீர்வாக இருக்கிறது. அடுத்த நாளின் வேலைக்கு சரீரம் ஆயத்தப்படுத்தப்படுகிறது. ***Signs of the Times, Apr. 10, 1884.***

*ஏழ்மையும் ஒரு ஆசீர்வாதமே*

ஐஸ்வரியத்தை வைத்துக்கொண்டு ஒன்றும் செய்யாமல் இருப்பதையே ஆசீர்வாதங்களாக நினைக்கப்படுகின்றன. மன மகிழ்ச்சியுடன் கடமைகளை செய்துகொண்டு, எப்பொழுதும் தாங்கள் செய்வதற்கென்று ஒரு பணியை வைத்திருப்பவர்களே சந்தோஷமாக இருப்பார்கள். எதிர்காலத்தின் மகிமைகளை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற தேவனே மனிதன் தன் அனுதின உணவிற்கு வேலை செய்ய வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். இவை இரண்டுமே ஆசீர்வாதங்கள். ஒரே சிங்காசனத்தினின்று இரண்டு ஆசீர்வாதங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ***Christian Temperance and Bible Hygiene p. 97.***

பெரும்பாண்மையானோருக்கு வருமையும் ஆசீர்வாதமே. வேலையின்றி பிள்ளைகளும் வாலிபர்களும் அழிந்துவிடாதபடி இது காக்கின்றது. அறிவின் ஆற்றலும் சரீரத்தின் ஆற்றலும் சேர்ந்தாற்போல் வளர்க்கப்பட வேண்டும். பிள்ளைகள் நல்ல சரீரங்களை பெற்றுக்கொள்ளவைப்பதே பெற்றோரின் முதல் கவனமாக இருக்க வேண்டும். திறனான ஆண்களாகவும் பெண்களாகவும் பிள்ளைகள் இருக்க வேண்டும். சரீர வேலை இல்லாமல் இது நடக்காது.

பிள்ளைகளின் ஆரோக்கியத்திற்கும் நல்ஒழுக்கத்திற்கும் வேலை செய்ய அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். ஒரு வேலை சரீர வேலை செய்ய வேண்டியதின் அவசியம் இல்லாமல் இருக்கலாம். ஆயினும் ஒழுக்கமான தூய்மையான குணங்களை அவர்கள் பெற்றுக்கொள்ள சம நிலையிலான சரீர வேலையும் கொடுக்கப்பட வேண்டும். எல்லா தசைகளையும் பயன்படுத்தப்பட வேண்டி வரும் வேலை கொடுக்கப்பட வேண்டும். பயனுள்ள வகையில் செயல்பட்டதற்கான திருப்தியும் மற்றவர்களுக்கு உதவ தியாகம் செய்வதினாலும் வரும் மன நிறைவே அவர்களின் எல்லா இன்பங்களையும்

1ST Proof

பெரிய இன்பமாக இருக்கும். ***Testimonies for the Church Vol. 3, p. 151.***

*அறிவிற்கான வேலையும் சரீரத்திற்கான வேலையும் சமமாக இருத்தல்*

சரீர வேலைக்கென்று நேரமில்லாதபடி பிள்ளைகள் அதிகமான படிப்புக்களை எடுக்க அனுமதிக்கப்படக் கூடாது. திறந்த வெளியில் ஒவ்வொரு நாளும் நன்றாக தசைகளை பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு வேலை செய்ய வேண்டும். இல்லையெனில் சரீரத்தின் ஆரோக்கியம் காக்கப்படாது. சரீர வேலைக்கென்று சில மணி நேரங்கள் ஒதுக்கப்பட வேண்டும். சரீரத்தின் எல்லா பாகங்களும் பயன்படுத்தப்பட வேண்டும். அறிவின் வல்லமையும் சரீரத்தின் வல்லமையும் சரி சமமாக உபயோகிக்கப்பட வேண்டும். மனம் புத்துயிர்பெறும். உடற்பயிற்சியினால் நோயால் பாதிக்கப்பட்ட சரீரமும் இதனால் குணம் பெறும். ஒரு கல்லூரியை சேரும்பொழுதைவிட அதைவிட்டு செல்லும்பொழுது வாலிபர்களுக்கு நல்ல ஆரோக்கியம் இருக்க வேண்டும். ஆரோக்கிய சட்டங்களை குறித்தும் நன்கு அறிந்திருக்க வேண்டும். குணத்தைப் போன்று சரீரமும் கவனமாக பாதுகாக்கப்படும். ***Christian Temperance and Bible Hygiene p. 82, 83.***

*வாலிபத்தின் வல்லமைகள் வீணடிக்கப்படக் கூடாது.*

தங்களுக்கு அருளப்பட்டு இருக்கிற வல்லமைகளை வாலிபர்கள் உணர்ந்துகொள்ளுவதில்லை. புது பெலன் படைத்தவர்களாகவும் புத்துயிர் பெற்றவர்களைப் போலவும் அவர்கள் இருக்கிறார்கள். இது ஒரு பெரிய பொக்கிஷம். பதவிகளையும், ஐஸ்வரியங்களையும்விட இது மேலானது. இதன் மதிப்பு புரிந்துகொள்ளப்படுவதில்லை. அது வீணடிக்கப்படுகிறது.

சரீர இயக்கங்களைக் குறித்து வாலிபர்கள் படித்துக்கொள்ள வேண்டும். தங்கள் சரீரங்களின் வல்லமைகளின் மதிப்பை அவர்கள் உணர்ந்துகொள்ள வைக்கப்பட வேண்டும். அது பாதுகாக்கப்படவும் வளர்த்துகொள்ளப்படவும் வாழ்க்கையின் போராட்டத்தில் வெற்றியடைய



1ST Proof

அது உதவும் வகையில் வாலிபர்கள் வழிநடத்தப்பட வேண்டும். ***Education, p. 195, 196.***

*நல்ல செயல்பாடுகள் சரியாக வழிநடத்தப்பட வேண்டும் ஒடுக்கப்படக் கூடாது*

இரண்டு வழிகளை பிள்ளைகள் தங்களுக்கு முன்பாக பார்க்கிறார்கள். தேவனின் வழியைவிட்டு விலகச் செய்யும் கவர்ச்சி கரமான உலக காரியங்களை எல்லா இடங்களிலும் இருக்கும் சுயத்தை திருப்திபடுத்திக்கொள்ளும் உலகின் வழி தேவனால் கிரயத்துக்கு கொள்ளப்பட்டவர்களின் வழியைவிட்டு நீங்க செய்யும். அவர்களின் வாழ்வு ஆசீர்வாதமாக இருக்கப் போகிறதா, அல்லது சாபமாக இருக்கப் போகிறதா என்பதை அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறார்கள். இளவயதின் பெலத்துடன், அனுபவமின்றி, புதிய சவால்களை ஏரெடுக்க ஆர்வம் காட்டுகிறார்கள். நன்மைக்கோ தீமைக்கோ துரிதமாக செயல்படுவார்கள்.

தேவ வார்த்தை சுருசுருப்பான செயல்பாட்டையே ஊக்குவிக்கிறது. அதை சரியாக வழிநடத்துகிறது. தேவன் வாலிபர்களை எதையும் சாதிக்காமல் இருந்துவிட சொல்லவில்லை. பெரிதான நன்மைகளை தேடும் வாஞ்சை, சோராத விடா முயற்சி, மனோபலம் ஆகியவைகள் நல்ல குணத்தின் கூறுகள் இவைகளே ஒரு மனிதனை வெற்றியை கண்டடையச் செய்கின்றன. இவைகள் வளர்க்கப்பட வேண்டும். தகர்க்கப்படக் கூடாது. சுய நலமில்லாத நல்ல நோக்கங்களை கண்டடைய தேவ கிருபையால் இவைகள் திசை திருப்பப்பட வேண்டும். உலகிற்கும் மேலான பரலோகத்தைப் போன்று உயரமான இலக்குகளை எட்ட வேண்டும். ***Ministry of Healing p. 396.***

*அதிகாரம் - 58*

*நடைமுறை வாழ்க்கைக்கான பயிற்சி*

*ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் ஏன் வேலையை நியமித்தார்.*

தேவன் ஆதாமையும் ஏவாளையும் படைத்து ஏதேன் தோட்டத்தில் வைத்தார். அத்தோட்டத்தை தேவனுக்கென்று அவர்கள் பண்படுத்த

வேண்டி இருந்தது. அவர்களின் சந்தோஷத்திற்கே வேலை கொடுக்கப்பட்டது. வேலை மகிழ்ச்சியையும் நன்மையையும் கொடுக்கும் அன்பதினால் தேவன் அதை நியமித்தார். இல்லாவிடில் இதை அவர் கொடுத்திருக்கமாட்டார். ***Manuscript 24b, 1894.***

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஒரு தோட்டத்தை கொடுத்து, அதிலிருக்கும் பழ மரங்களையும் செடிகளையும் அவர்களை பராமரிக்கும்படி செய்ய, பிதாவோடு ஆலோசிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது. இது தேவதிட்டமாக இருக்கிறது. இந்த வேலை அவர்களுடைய பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்டது. அடுத்து வந்த தலைமுறையினலும் இதை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. உலகின் முடிவுவரையிலும் இது தொடரப்பட வேண்டியதாகவும் இருந்தது. ***Signs of the Times Aug. 13, 1896.***

***இயேசுவின் உதாரணம்***

அவரது உலக வாழ்க்கையில் இயேசுவானவர் கீழ்ப்படிந்தும் தனது இல்லத்திற்கு உதவும் நபராகவும் இருந்தார். தச்சு வேலையை கற்றுக்கொண்டார். நாசரேத்திலிருந்த சிறு கடையில் தனது கரங்களைக் கொண்டு வேலை செய்தார். இயேசுவைக் குறித்து வேதம் சாட்சி கொடுக்கிறது. ***“ பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன் கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது.” லூக்கா 2: 40.*** பிள்ளையாகவும் ஒரு வாலிபராகவும் அவர் வேலை செய்தார். சரீரமும் மனமும் வளர்ந்தது. தனது சரீரத்தின் வல்லமைகளை அக்கரையின்றி அவர் பயன்படுத்தவில்லை. ஆரோக்கியம் காக்கப்படும்படி தனது சரீரத்திற்கு நல்ல உடற்பயிற்சியை கொடுத்தார். எல்லா வேலைகளிலும் சிறந்துவிளங்க அவர் இப்படி செய்தார். வேலைக் கருவிகளை கையாளுவதிலும் பரிபூரணத்தைக் கைக்கொண்டார். அவர் குணம் குறையில்லாமல் பூரணமாக இருந்ததைப்போலவே அவர் வேலையும் இருந்தது. ***Fundementals of Christian Education, p. 417, 418.***

அவர் செய்த ஒவ்வொரு பொருளும் நன்றாய் இருந்தது. ஒவ்வொரு பாகமும் திட்டவட்டமாக பொருந்தின. எந்த சோதனையையும் தாங்கக் கூடியதாய் இருந்தது. ***Evangalism p. 378***



1ST Proof

***பொறுமை நிறைந்த கரங்களுடன் தினமும் உழைத்தார்***

அவரது உதாரணத்தினால் மனிதனின் சாதாரண அலுவல்களையும் புனிதப்படுத்தினால் அயராத உழைப்பு அவரது வாழ்க்கையில் காணப்பட்டது. பரலோகின் தேவனாக இருந்தும், ஒரு தொழிலாளியின் உடையில் சாதாரண மனிதனாக சுற்றினார். வேலைக்கும் வீட்டுக்கும் மலைப்பாதையின் வழியே நடந்து சென்றார். தாழ்மையான வேலையையும் செய்தார். இவ்வேலைகளில் அவருக்கு உதவ தேவ தூதர்கள் அனுப்பப்படவில்லை. தூதர்கள் அவரை தூக்கி சென்று மலையின்மீது விடவில்லை. ஒவ்வொரு நாளின் தனது வேலையினால் குடும்பத்தைத் தாங்கினார். அவரது உதவும் கரத்தை நீட்டினார். ஐயாயிரம் நபர்களை போஷித்த வல்லமையை உடையவராயிருந்தும் தனது பங்கை தாழ்மையுடன் செய்தார்.

அவரது தெய்வீக வல்லமையை அவரது சுமைகளை குறைத்துக்கொள்ள அவர் பயன்படுத்தவில்லை. மனிதர்களுக்கு இருக்கும் எல்லா பெலவீனங்களையும் தானும் ஏற்றுக்கொண்ட ஒரு முழுமையான மனிதராகவே இருந்தார். மனிதனாக பிறந்ததால் சந்திக்க வேண்டிவந்த சோதனைகளிலிருந்து அவர் விலகிக்கொள்ளவில்லை. ஒரு ஏழை தொழிலாளியின் வீட்டில் வாழ்ந்தார். சாதாரண உடைகளையே அணிந்தார். தாழ்மையானவர்களுடன் பழகினார். பொருமையாக தன் கரங்களை கொண்டு தினமும் உழைத்தார். வேலை செய்வது மனிதனுடைய கடமை என்பதை தனது உதாரணத்தினால் காட்டினார். வேலை கணத்திற்குரியது என்பதை காட்டினார். ***The Health Reformer Oct. 1876.***

வெகு காலத்திற்கும் இயேசுவானவர் நாசரேத்தில் வசித்தார். எவரும் தன் நிலையை அறியாத ஒரு சாதாரண நபராக இருந்தார். எந்த கனத்தையும் மதிப்பையும் அவர் பெறவில்லை. வாழ்வின் சாதாரண கடமைகளை நிறைவேற்றிக்கொண்டும் தேவனுக்கு அருகாமையில் எப்படி வாழுவதென்பதை கற்றுக்கொடுத்தார். மனிதனாக பிறந்து மனிதனின் பொறுப்புக்களையும், சுமைகளையும், தாழ்மையான பணிகளையும் ஏற்றுக்கொண்டார். தேவதூதர்களுக்கு இது புரியாத ஒரு இரகசியமாக இருந்தது. நம்மைப்போல் ஒருவராக மாறுவதற்காக இதை செய்தார்.

சோர்வுகளையும் சோகங்களையும் தானும் அனுபவித்துக்கொள்ள உலகிற்கு வந்தார். ***The Health Reformer Oct. 1876.***

***பயனுள்ள வேலைகளின்மீது ஒரு நாட்டத்தை வளர்த்துவிடுங்கள்***

தங்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்தரும் வேலைகளை செய்யும் ஆசையை நாம் பிள்ளைகளிடம் வளர்க்க வேண்டும். குணத்தையும் மனதையும் இது மேம்படுத்துகிறது. இதனால் வாலிபர்கள் வாழ்க்கையின் பொறுப்புக்களை சுமக்க பயிற்சி பெறுகிறார்கள். சரீரத்தை பெலப்படுத்தி எல்லா திறனையும் இரு வளர்க்கின்றது. நன்மை செய்வதை பழக்கமாக்கிக் கொண்டு, சோராது உழைப்பதினால் நிச்சயமாக அதற்கான பரிசையும் பெறலாம். ***Counsels to Parents, Teachers and Students, p. 147.***

பொறுப்புக்களை அக்கரையோடு சுமந்து உத்தமத்துடன் வேலை செய்வதே வாழ்க்கை என்பதை வாலிபர்களுக்குக் கற்றுத்தர வேண்டும். நடைமுறை வாழ்க்கைக்கான ஆண்களாகவும் பெண்களாகவும் மாற ஒரு பயிற்சி தேவை. எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ளுபவர்களாக இவர்கள் இருக்க வேண்டும். ஒரு ஒழுங்குடன் சரீர வேலை ஏரெடுக்கப்படுவது அவசியம் என்பது அவர்களுக்குக் கற்றுத்தரப்பட வேண்டும். நல்ல பாதுகாப்பாக மட்டுமிராமல் முழுமையான வளர்ச்சிக்கும் இது வழி செய்கிறது. ***Education, p. 215.***

***சரீர வேலை தலைகுறைவானதல்ல***

பலர் வேலையை தலைகுறைவானதாக பாவிக்கிறார்கள். எனவே வாலிபர்கள் ஆசிரியர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், அலுவலக வேலை செய்வதற்காகவும் ஒரு கல்வியைப் பெற முடிவு செய்கின்றனர். சரீர வேலை செய்ய வேண்டிய அவசியம் வராத ஒரு படிப்பை படித்துக் கொள்ளுகின்றனர். பெண்களும் வீட்டு வேலைகளை இப்படியே கண்ணோக்குகின்றனர். ஆகவே பெண்களும் இந்த வகையிலான வேலையை செய்ய வேண்டி வராதபடி, ஆசிரியராகவோ மற்ற அலுவலக வேலைகளை செய்வதற்கோ படிக்கின்றனர். உடலை பெலப்படுத்தும் வேலைகளை புறக்கணிக்க விரும்புகின்றனர். உட்கார்ந்து கொண்டே



1ST Proof

வேலை செய்யும் ஏதேனும் ஒரு தொழிலை கற்றுக்கொள்ளுகிறார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 291.***

எந்த பயனுள்ள வேலையையும் அறியாமல் இருப்பதாக உலகம் முழுவதும் ஆண்களும் பெண்களும் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறார்கள். இவர்கள் திருப்தியற்று, வீணானவைகளை பின்பற்றி தற்பெருமையினால் நிரப்பப்பட்டு மகிழ்ச்சியின்றி காணப்படுவர். ஒழுக்கமின்றியும் பரிதபிக்கத்தக்க நிலைக்கு தங்களைக் கொண்டு செல்லுபவர்களாகவும் இருப்பார்கள். இத்தகையோர் சமுதாயத்திற்கு ஒரு கறையாகவும் பெற்றோருக்கு அவதூராகவும் இருக்கிறார்கள். ***The Health Reformer Dec. 1877.***

வேலையை கண்டு எவரும் பதட்டப்பட வேண்டியதில்லை. எவ்வளவு சிறிதானதாக இருந்தாலும், தாழ்ந்ததாக தெரிந்தாலும் அது ஒரு பொருட்டல்ல. வேலை உன்னதப்படுத்துகிறது. அறிவை பயன்படுத்தியோ, கரங்களை பயன்படுத்தியோ வேலை செய்பவர்கள் எல்லோருமே உழைப்பாளிகளே. பாத்திரங்களை கழுவிக்கொண்டு சுத்தப்படுத்துகிற வேலையை செய்கிறவர்களும் தங்கள் கடமைகளையே நிறைவேற்றுகிறார்கள். ஜெபக் கூட்டத்திற்கு செல்பவர்களைப்போலவே இவர்களும் தங்கள் மதத்தை அவ்வேலையிலும் கணப்படுத்துகிறார்கள். கரமானது சாதாரண வேலையை செய்தாலும் மனமானது தூய்மையான எண்ணங்களால் நிரப்பப்பட்டு கொண்டு இருக்கலாம். ***Testimonies for the Church Vol. 4, p. 590.***

***வாலிபர்கள் அடிமைகளைப்போல வேலை செய்யக் கூடாது. எஜமான்களைப்போல் வேலை பார்க்க வேண்டும்.***

சரீர வேலையின் கனத்தையும் அதற்குரிய மதிப்பையும் வாலிபர்கள் பார்க்க வழிநடத்தப்பட வேண்டும். ***Education, p.214.***

வேலையானது தாழ்ந்த ஒன்றாக பார்க்கப்படுவதற்கு ஒரு முக்கிகய காரணம் இருக்கின்றது. இத்தகைய வேலைகள் ஒழுங்குடன், முழுமையாக செய்யப்படுவதுகிடையாது. இங்கும் அங்குமாக செய்யப்படுகின்றன. ஒரு உண்மையான ஒப்படைப்பின்றி இது செய்யப்படுகின்றன. கடமைக்கென்று, அவசியமாக இருப்பதால்

இவைகளை செய்கின்றனர். மனம் அதில் இருப்பதில்லை சுய மதிப்பும் வளர்க்கப் படத்தக்கதாக இருப்பதில்லை. மற்றவர்களின் மதிப்பைப் பெறும் வகையிலும் இவ்வேலை இருப்பதில்லை. மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சி இத்தவறை திருத்தி வேண்டும். நல்ல தீர்க்கமான இலக்கை முடிக்கும் பழக்கங்களை வளர்க்க வேண்டும். நேர்தை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவும் கற்றுத்தரப்பட வேண்டும். ஒவ்வொரு செயலும் முக்கியமானதாகக் கருதப்பட வேண்டும். சிறப்பான முறைகளும் திட்டங்களும் கற்றத்தரப்படுவதுடன் அவைகளை வளர்த்துக்கொள்ளும் வாஞ்சையும் புகுத்த வேண்டும். செய்யும் எந்த வேலையையும் முழுமையாக ஒரு சிறு குறைகூட இராதபடி செய்வதே அவர்களது நோக்கமாக இருக்கட்டும்

இப்படிப்பட்ட பயிற்சி வாலிபர்களை எஜமான்களைப் போல வேலை செய்ய வைக்கும். அடிமையைப்போல வேலை செய்ய வைக்காது. கடினமாக உழைப்பவர்களின் சுமையை இது குறைக்கும். சாதாரண வேலைக்கும் ஒரு உன்னதத்தை கொடுக்கும். கடமைக்கென்று வேரு வழி இல்லாததால் அதையே செய்கிறோம் என்று எண்ணி வேலைப் பார்ப்பவர்களுக்கு அது சுமையாகவே இருக்கும். சிறு பணியிலும் அழகையும் உன்னதத்தையும் பார்ப்பவர்கள் அதை செயவதில் இன்பம் கொள்ளுவார்கள். திறம்பட அவ்வேலையை உத்தமமாக செய்வார்கள். ***Education, p. 222.***

***ஐஸ்வர்யம் வேலையை தடைசெய்யக் கூடாது.***

பணக்காரர்களாக இருக்கும் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அறிவியல் படிப்புக்களையெல்லாம் கற்றுக்கொடுக்கின்றனர். நடைமுறை வாழ்க்கையின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான பயிற்சியைக் கொடுப்பதில்லை. பயனுள்ள வேலையின் நன்மையை பிள்ளைகள் அறிந்துகொள்ள வைப்பதில்லை. சரீர வேலை நல் ஒழுக்கத்திற்கும் மன வளர்ச்சிக்கும் பயனுள்ளதாக இருக்கிறது என்பதை பெற்றோரும் பார்க்கிறதில்லை. பிள்ளைகள் எதிர்காலத்தில் எத்தகைய விதத்தில் சமுதாயத்திற்கு பயன்படப் போகிறார்கள் என்பதும் இதை சார்ந்தே அமையும். ஒரு வேளை அசம்பாவிதங்கள் நேர்ந்தாலும் தனியாக நின்று கரங்களைக் கொண்டு பிழைத்துக்கொள்ள தெரிந்திருக்க



1ST
Proof

வேண்டும். ஒரு வேளை பணமில்லாமல் இருக்கலாம். நல்ல வேலைகளை கற்றுக்கொள்ளுவது ஆபத்துக் காலத்தில் பெரிய முதலீடாக அமையும். இதை செய்திருப்பவர்கள் நிச்சயமாக ஏழைகள் அல்ல.

வாலிபத்தின் வசதியாக வாழ்ந்தவர்கள் திடீரென்று ஏழ்மைக்கு தள்ளப்படலாம். பெற்றோரையும் கூட பிறந்தோரையும் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் இந்த வறுமையிலும் வரலாம். வேலை செய்ய தெரிந்துகொள்ளுவது ஒவ்வொரு வாலிபனுக்கும் மிக முக்கியமானது. எந்த சவாலையும் சந்திக்க ஆயத்தமாக இருக்க முடியும். பயனுள்ள தொழில்களையும் வேலைகளையும் செல்வம் இருப்பதினால் அறிந்துகொள்ளாமல் போனால், அச்செல்வம் ஒரு சாபமாக இருக்கிறது. பிள்ளைகள் நடைமுறை வாழ்விற்கு தகுதிபெறாமல் போகிறார்கள். ***Testimonies for the Church, Vol. 3, p. 150.***

***வீட்டு வேலைகளை பிள்ளைகள் பகிர்ந்துகொள்ள வேண்டும்***

ஒரு நல்ல தாய் உலகின் புதிய பழக்கங்களை கற்றுக்கொள்ள விரும்பமாட்டாள். பிள்ளைகள் அவர்கள் விருப்பம்போல் செயல்பட அவர்களது வேலைக்காரியைப் போலும் செயல்பட மாட்டாள். தனது வீட்டு வேலைகளை பிள்ளைகளும் பகிர்ந்துகொள்ளும்படி கற்றுக்கொடுப்பாள். நடைமுறை வாழ்க்கான அறிவையும் பிள்ளைகள் பெற வேண்டும். தாயோடு சேர்ந்து வீட்டுப் பணிகளை பிள்ளைகளும் பகிர்ந்துகொண்டால் மன மகிழ்ச்சிக்குப் பயனுள்ள சரீர வேலை அவசியம் என்பதை புரிந்து கொள்ளுவார்கள். இது அவர்களைத் தாழ்த்துவதில்லை அவர்களை உயர்த்தவே செய்கிறது. தாய் இதை செய்ய வேண்டும். தன் மகனை ஒன்றுமே செய்யாமல் இருக்க விட்டு தானே எல்லா வேலைகளையும் செய்தால், இவ்வேலைகளை தாழ்ந்தவைகளாக பார்க்கும்படி தாய் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கிறாள். அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளை தாய் செய்ய வேண்டியிருக்கிறது. தாயானவள் தனது மதிப்பைக் காத்துக்கொள்ள வேண்டும். ***Pacific Health Journal June 1890.***

சில தாய்மார்கள் தங்கள் மகள்களுக்கு வேலைகளை கொடுப்பதில்லை. இது தவறு. சோம்பலாக இருக்கும்படி இவர்கள் பிள்ளைகளை ஊக்குவிக்கிறார்கள். “ என் மகளால் இதை செய்ய

முடியாது. அவள் பெலவீனமாக இருக்கிறாள்” என்று தாய்மார்கள் கூறலாம். துங்கள் மகள்களை இப்படிக் கூறி விடுவதே அவர்களை உண்மையாகவே பெலவீனப்படுத்தும் வழியாகும். பிள்ளைகள் பெலவீனமானவர்களாகவும் திறனற்றும் இருப்பர். வல்லமைக்கும், மனமகிழ்ச்சிக்கும், ஊக்கத்திற்கும் சரியான சரீர வேலையே தேவையானதாக இருக்கிறது. வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ள பிள்ளைகள் இதன் வழியாகவே ஆயத்தமாகுகிறார்கள். ***Signs of the Times, Aug. 19, 1875.***

### *பயனுள்ள வேலைகளை பிள்ளைகளுக்குக் கொடுங்கள்*

பிள்ளைகள் செய்வதற்கென்று வேலைகளைப் பெற்றோர் கொடுக்காமல் விடுகின்றனர். இது சொல்ல முடியாத தீங்குகளை விளைவித்திருக்கிறது. அநேக வாலிபர்களின் வாழ்வை அபாயத்துக்குள்ளாக தள்ளி பலரை பயனில்லாதவர்ளாக முடமாக்கியிருக்கிறது.

ஆசிரியர்களும் பெற்றோர்களும் நடைமுறை வாழ்க்கையின் கடமைகளை செய்ய பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். இது தேவனது வாஞ்சையாக இருக்கிறது. வேலை செய்வதை ஊக்குவியுங்கள். பெண்களும், முடியும் தருணங்களில் மகன்களும் தாய்க்கு உதவியாக இருக்க வேண்டும். சிறு பிராயத்திலிருந்தும் வளர வளர பெரிய பெரிய சுமைகளையும் சுமக்க கற்றுத்தரப்பட வேண்டும். குடும்பத்துக்கு அவர்கள் உதவ வேண்டும். தாய்மார்களே பொருமையுடன் பிள்ளைகளின் கரங்களை உபயோகித்து வேலை செய்வது எப்படி என்பதை சொல்லிக் கொடுங்கள். உங்களது கரங்கள் திறம்பட வீட்டு வேலைகளை செய்வதைப்போலவே அவர்களது கரங்களும் செயல்பட வேண்டும் என்பதை கற்றுக் கொடுங்கள். ***Review and Herald, Sep. 8, 1904.***

ஒவ்வொரு பிள்ளைக்கும் வீட்டு வேலைகளில் ஒரு பங்கு கொடுக்கப்பட வேண்டும். உண்மையுடனும், மகிழ்ச்சியுடனும் அதை செய்யவும் கற்றுத்தரப்பட வேண்டும். வேலை இப்படி பிரிக்கப்பட்டால் வீட்டில் எவருமே அதிகமான சுமைகளை சுமக்க வேண்டி வராது. இல்லம் நன்மையானதாகவும், இனிமை நிறைந்ததாகவும் காணப்படும். எல்லா வேலைகளும் அமைதியாக, கடினம் தெரியாத வண்ணம் முடிக்கப்படும். வீட்டைக்குறித்து எல்லோரும் அக்கரைக் காட்டுவார்கள். நல்ல பொருளாதாரத்திற்கும் இது ஏதுவானதாக இருக்கும். ***Signs of the Times, Aug. 23, 1877.***

### *சமயற்கலை, தையற்கலை அடிப்படை பாடங்கள்*

தாய்மார்கள் தங்கள் மகள்களை தங்களுடன் சமயலறைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். சமையலைக் குறித்ததான முழு கல்வியைக் கொடுக்க வேண்டும். தையற்கலையையும் கற்றுக் கொடுக்க வேண்டும். துணியை திறமையுடன் வெட்டி ஒன்றாக தைத்துக் கொண்டு உடுத்தும் ஆடையாக மாற்றிக்கொள்ள தேவையான பாடங்கள் கொடுக்கப்பட வேண்டும். மகள்களுக்கு இதை சொல்லிக் கொடுப்பதைவிட தாங்களே இதை செய்துவிடுவது சுலபமானதாக நினைக்கிறார்கள். அனுபவமில்லாத தங்கள் பிள்ளைகளுக்கு இதை கற்றுக்கொடுப்பது கடினமானதாகத் தெரியலாம். இதை செய்தால் பிள்ளைகளுக்குப் பெரிய தவறை இழைக்கிறார்கள். வாழ்க்கையின் எதிர்காலங்களில் இந்த அடிப்படையானவைகளை அறியாததினால் மற்றவர்களுக்கு முன்பாக தலைகுனியும்படி நேரிடும். ***Appeal to Mothers p. 15.***

### *இருபாலருக்கும் பயிற்சி*

வீட்டின் வேலைகளை ஆண்மகன்களும் பெண் பிள்ளைகளும் கற்றுக்கொள்ள வேண்டும். படுக்கையை சீர்படுத்தி, அறையை ஒழுங்குபடுத்தி, பாத்திரங்களை துளக்கி, உணவை சமைத்து, தன் உடைகளை பராமரித்துக் கொள்ளுவது போன்ற வேலைகள் எந்த ஆணினுடைய ஆண்மையைக் குறைப்பதில்லை. அவனை அதிக பயனுள்ளவனாகவும் மாற்றி அதிக சந்தோஷத்தையே கொடுக்கும். பெண்களும் வெளி வேலைகளை செய்ய தெரிந்துகொள்ள வேண்டும். வெளி வேலைகளுக்காக உபயோகப்படும் கருவிகளை பயன்படுத்த கற்றுக்கொள்ளுவது இக்கட்டான சூழ்நிலைகளில் பெரிய உதவியாக இருக்கும். ***Education, p. 216, 217.***

நம் மகன்களைப்போலவே நமது பெண் பிள்ளைகளுக்கும் நேரத்தை பயனுள்ள வகையில் செலவழிப்பதின் முக்கியத்துவத்தை கற்றுக்கொள்ளுவது அவசியம். அவர்களும் தேவனுக்கு முன்பாக ஆண்களைப் போலவே தங்கள் நேரங்களை செலவழித்தக் கணக்கை தேவனண்டை கொடுக்க வேண்டும். நாம் பெற்றிருக்கும் திறமைகளையும் தாலந்துகளையும் ஞானமாக வளர்த்துக்கொள்ளவே நமக்கு உயிர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ***The Health Reformer Dec. 1877.***

### *தாயின் பெலன் வீணடிக்கப்படக் கூடாது இது பெரிய சிலாக்கியமாக அமையும்*

ஒவ்வொரு நாளும் வீட்டு வேலைள் செய்யப்பட வேண்டியதாய் இருக்கிறது. சமையல் வேலை, துணிகளை துவைக்கும் வேலை, பாத்திரங்களை கழுவும் வேலை, வீட்டை சுத்தப்படுத்தும் வேலை, போன்றவைகள் உள்ளன. தாய்மார்களே உங்கள் மகள்களுக்கு இவ்வேலைகளை செய்ய கற்றக்கொடுத்துவிட்டீர்களா. அவர்களது தசைகளுக்கு பயிற்சி தேவை. குதிப்பதினாலும், விளையாடுவதினாலும் இந்த உடற்பயிற்சியை பெறுவதைவிட பயனுள்ள ஒரு வேலையை செய்து இந்த உடற்பயிற்சியை பெறுவதே நல்லதாகும். ஒரு நோக்கத்துடன் செயல்படுகிறவர்களாக பிள்ளைகள் இருப்பார்கள். ***Manuscript 129, 1898.***

வீட்டின் சுமைகளில் அவர்களது பங்கை சுமக்க பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். பயனுள்ள வேலையை அவர்கள் செய்துகொண்டிருக்கட்டும். அவ்வேலைகளை சுலபமாகவும் நன்றாகவும் செய்ய கற்றுக்கொடுங்கள். தாயின் சுமைகளை குறைப்பதன் மூலம் அவளது பெலத்தை காத்து, தாயின் ஆயுசு நாட்களை நீடித்துக்கொள்ளுகிறார்கள் என்பதை பிள்ளைகள் உணர அவர்களுக்கு உதவ வேண்டும். பிள்ளைகள் தனது சுமைகளை பகிர்ந்து கொள்ளாததினால் பல தாய்மார்கள் காலத்திற்கு முன்பாகவே மறித்திருக்கிறார்கள். பிள்ளைகள் இதை செய்ய அவர்களுக்குக் கற்றுத்தரப்படவில்லை. இதுவே இதற்குக் காரணமாக இருக்கிறது. சுய நலமின்றி வேலை செய்யும் ஒரு ஆவியை பிள்ளைகளிடம் பெற்றோர் வளர்க்க வேண்டும். இதை செய்தால் கிறிஸ்துவிடம் பிள்ளைகளை



1ST Proof

கொண்டு வருகிறார்கள். இயேசுவே முழுமையாக சுயநலமற்றவராக இருந்தார். ***Manuscript 70, 1903.***

### *மகிழ்ச்சி தரும் ஒரு செய்முறை*

பிள்ளைகளே உங்கள் தாயை இருக்கையில் அமர வையுங்கள். செய்ய வேண்டிய முதல் வேலை என்ன என்று கேளுங்கள். சோர்வு நிறைந்த பல தாய்மார்களுக்கு இரு பெரிய ஆச்சரியமாக இருக்கும். தாய்க்கு வீட்டின் வேலைகளில் உதவி செய்து, அவளது பாரத்தை குறைத்தால் உண்மையான சமாதானத்தைத் தரும். மனத் திருப்தியை பிள்ளைகள் அனுபவிப்பார்கள். சோர்வடைந்த தாயின் கரங்களுக்கும் மூளைக்கும் நல்லதொரு ஓய்வை கொடுப்பார்கள். உயரிய கல்வியைப் பிள்ளைகள் பெற்றுக் கொள்ளுவதற்கான படிகள் இவைகள்.

ஒவ்வொரு நாளின் வீட்டு வேலைகளை உண்மையுடனும் உத்தமத்துடனும் செய்வது திருப்தியையும் சமாதானத்தையும் கொடுக்கும். இதை செய்யும் நபரே இல்லத்தை உருவாக்குகிறவராக இருக்கிறார். வீட்டு வேலைகளை புறக்கணிக்கிறவர்களே அதிருப்தியையும் தனிமையையும் உணருகிறார்கள். மகிழ்ச்சியுடன் இருப்பவர்கள் வீட்டு வேலைகளில் தங்கள் பங்கை செய்ததினால் மன நிறைவாக இருக்கிறார்கள் என்ற உண்மையை இவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. அநேகர் பயனுள்ள பல பாடங்களை கற்றுக்கொள்ளுவதில்லை. இது அவர்களது எதிர்காலத்தின் நன்மைக்கு மிகவும் அத்தியாவசியமானவைகளாக இருக்கின்றன.

### *உண்மையுடன் பணிபுரிதலின் வெகுமதிகள்*

வீட்டு வேலைகளில் தனது பங்கை உண்மையுடன் செய்தல் ஒரு நபரை உயரிய நிலைக்கு உயர்த்தும். அது தாழ்மையான ஒரு வேலையாகவும் இருந்திருக்கலாம், அல்லது மேன்மையான ஒரு வேலையாகவும் இருந்திருக்கலாம். இந்த தெய்வீக தாக்கம் தேவைப்படுகிறது. இதிலே சமாதானமும் புனிதமான மனமகிழ்ச்சியும் உள்ளது. சுகமாக்கும் வல்லமை இதிலுண்டு. மனதின் காயங்களையும் சரீரத்தின் வேதனைகளையும் இது நீக்கும். புனிதமான தூய்மையான இலக்குகளினாலும் செயல்களினாலும் சரீரத்தின் எல்லா அவையங்களும் புத்துயிர் பெறுகின்றன. உள்ளான சமாதானமும் தேவனுடன்

ஒன்றியிருக்கின்ற மனமும் அறிவாற்றலைக் கூட்டும். சிறு செடிகளின் மீது தூய தண்ணீர் விழுவதைப்போன்றதான தாக்கம் இருக்கும். மனம் சரியாக வழிநடத்தப்பட்டு கட்டுப்படுத்தப்படுகிறது. தெளிவானவைகளையும் தீமையில்லாதவைகளையும் செய்ய விருப்பம் உண்டாகிறது. இது திடமான முடிவாக மாறுகிறது. சிந்தனைகளும் பரிசுத்தப்படுத்தப்பட்டவைகளாக இருப்பதினால் மன இரம்மியத்தைக் கொடுக்கின்றன. நீங்கள் அனுபவிக்கும் இந்த சமாதானம் நீங்கள் தொடர்புகொள்ளும் நபர்களுடன் ஒரு தாக்கத்தைக் கொண்டு வரும். உங்களது இந்த சமாதானம் ஒளிச் சுடர்களைப்போல் உங்களிடமிருந்து மற்றவர்கள்மீது பிரகாசிக்கும். மீண்டுமாக உங்களிடமே வந்து சேரும். எந்த அளவிற்கு இந்த சமாதானத்தையும் அமைதியையும் அனுபவிக்கிறீர்களோ அந்த அளவிற்கும் அது பெருகிக்கொண்டே இருக்கம். இது ஒரு புத்துயிர் பெற்ற இன்பமானநிலை. துரிதமாக கிரியை செய்யும்படிக்கு இது நமது வல்லமைகளை தட்டி எழுப்பும். பரிபூரணமான இந்த சமாதானத்தையே பரலோகின் தூதர்கள் கொண்டிருக்கிறார்கள். இது பரலோகத்திற்குரிய ஒன்றாக இருக்கிறது.

*பரலோகிலும் வேலை உண்டு*

தூதர்கள் வேலையாட்களாக இருக்கிறார்கள். தேவனுக்கும் மனு புத்திரருக்கும் ஊழியக்காரர்களாக இருக்கிறார்கள். பரலோகில் வேலையே இருக்காது என்று நினைக்கும் சோம்பலான ஊழியர்கள் தவறான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கிறார்கள். சுயத்தை திருப்திபடுத்தும் பாவமான சோம்பேரித்தனத்துக்கான இடமாக பரலோகம் ஆயத்தப்படுத்தப்படவில்லை. ஆர்வம் நிறைந்த வேலைகளின் இடமாக பரலோகம் உள்ளது. ஆயினும் இவ்வுலகில் பெரிய பாரங்களை சுமந்து சோர்வுற்றவர்களுக்கு, நல்ல விசவாசப் போராட்டத்தை போராடியவர்களுக்கு அது மகிமையான ஓய்வாகவும் இருக்கும். சாவாமையின் பெலன் அவர்களுடையதாக இருக்கும். வாலிபத்தின் பெலத்துடனே இருப்பார்கள். பாவத்துடனும் சாத்தானுடனும் போராட வேண்டி இருக்காது. உலகில் இப்படியாக தேவனுடைய வேலையாட்களாக இருந்தவர்களுக்கு, ஒரு வேலையுமே இல்லாதிருக்குமானால், அது நித்தியம் அவர்களது மனங்களுக்கு வெறுப்பையே தரும். அது அவர்களுக்கு பரலோகமாகவே இருக்காது. உலகில் கிறிஸ்தவனுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பாதை கடினமானதாக



1ST Proof

இருக்கலாம். ஆயினும் இயேசுவின் கால் சுவடுகளை இந்த வழியில் மட்டுமே நாம் பார்க்கலாம். அவரும் இவ்வழியே சென்றதால் இது மகிமைப்பெற்ற வழியாக இருக்கிறது. இந்த புனிதமான வழியை பின்பற்றுகிறவனே பாதுகாப்பாக இருப்பான். ***Christian Temperance and Bible Hygiene p. 99.***

*அதிகாரம் - 59*

*பயனுள்ள தொழில்களை கற்றுக்கொடுத்தல்*

*ஒவ்வொரு பிள்ளையும் ஏதேனும் ஒரு தொழிலைக் கற்க வேண்டும்*

பிள்ளைகளுக்கு பயனுள்ள வேலைகளை பெற்றோர்கள் கற்றுத்தருவதில்லை. சொல்ல முடியாத தீங்கை இது விளைவித்திருக்கிறது. இப்பிள்ளைகளை உலகினுள் கொண்டுவந்த பொறுப்பை பெற்றிருந்தும் அவர்களை பெரிய அபாயத்திற்குள்ளாக விட்டிருக்கின்றனர். இப்பிள்ளைகள் உபயோகமற்றவர்களாக முடமாக்கப்பட்டிருக்கிறார்கள். வாலிபர்கள் எந்த ஒரு தொழிலையும் கற்றுக்கொள்ளலாம். வளர அனுமதிப்பது பெரிய தவறு. ***Manuscript 121, 1901.***

மேக ஸ்தம்பத்திலிருந்து மோசேயின் வழியாக இஸ்ரவேலர்கள் தங்கள் பிள்ளைகள் வேலை செய்யத்தக்கதாக ஒரு கல்வியை கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருந்தார். பிள்ளைகள் தொழிற்கல்விகளை கற்க வேண்டும் என்றும் ஒன்றுமே செய்யாதவர்களாக பிள்ளைகள் இருக்கக் கூடாதென்றும் சொல்லப்பட்டிருந்தது. கடமைகளின் அழைப்பிற்கு செவிசாய்க்க பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுங்கள். ***Signs of the Times, Aug. 19, 1875.***

*வேலைக்கருவிகளை பயன்படுத்த கற்றுக்கொடுத்தல்*

ஒரு குறிப்பிட்ட வயதை எட்டியவுடன் பிள்ளைகளிடம் வேலைக்கு பயன்படுத்தப்படும் கருவிகளும் கொடுக்கப்படட்டும். அவர்களின் ஆர்வத்தை தூண்டும்படியாக வேலை இருக்க வேண்டும். கருவிகளை பயன்படுத்தி வேலை செய்வதையும் விரும்ப தொடங்குவார்கள். தகப்பன் ஆசாரியாக இருந்தால் வீடு கட்டுவதற்கான பாடங்களை சிறு

வயதிலிருந்து மகன்களுக்கு கற்றத்தர வேண்டும். வேத அறிவுரைகளையும் தனது பாடங்களுக்குள்ளாக கொண்டு வர வேண்டும். மனிதர்களை அவருடைய கட்டிடமாக தேவனே பார்க்கிறார். இதை வேதத்தில் படிக்கிறோம். ***Manuscript 45, 1912.***

***மகன்களுக்கு விவசாயத்தைக் கற்றுக்கொடுங்கள்***

தந்தைகள் தங்களது தொழில்களில் தங்கள் மகன்களும் பயிற்சிபெறும்படியாக செய்ய வேண்டும். விவசாயிகள் தங்கள் வேலையை தலைகுறைவானதாக நினைக்கக் கூடாது. தங்கள் மகன்களுக்கும் இதை கற்றுக்கொடுக்க வேண்டும். அறிவியலின் அறிவையும் பயன்படுத்தி விசவாயம் முன்னேற வேண்டும்.

விசவாயம் இலாபம் ஈட்டுவதில்லை என்று சொல்லப்படுகிறது. மண்ணானது ஏற்ற பலனைத் தருவதில்லை என்று மக்கள் சொல்லுகிறார்கள். விவசாயத்தை செய்பவர்களின் அபல நிலையை சித்தரிக்கிறார்கள். ஆனால் திறம்படைத்தவர்கள் இவ்வேலையில் இறங்கி, நுணுக்கங்களைப் படித்துக்கொண்டு பயிறிடவும், மண்ணைப் பண்படுத்தி அறுவடையை பெற வேண்டும். நம்மை ஊக்கப்படுத்துகின்ற இலாபமும் வரும். ***“ நாங்கள் விவசாயத்தை செய்து பார்த்தோம். அதன் விளைவுகளை நாங்கள் அறிந்திருக்கிறோம்”*** என்றும் அநேகர் கூறுவர். இவர்கள் மண்ணை எப்படி பண்படுத்த வேண்டும் என்பதை கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அறிவியலின் அறிவை அவர்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும். பூமியை ஆழமாகவும் அகலமாகவும் உழ வேண்டும். இதை சரியாக செய்ய வேண்டும்.

சரியான நேரத்தில் விதைக்க வேண்டும். தேவன் அருளியிருக்கின்ற திட்டத்தை பின்பற்றட்டும். ***Signs of the Times, Aug. 13, 1896.***

***நல்ல பயிற்சி விலைமதிப்பற்றது***

விவசாயம் செய்ய பயிற்சி பெறுவது மற்ற எல்லா வேலைப் பயிற்சிகளைக் காட்டிலும் மேலானதாக இருக்கிறது. விவசாயத்தின் தொழில்கள் செய்யப்பட முயற்சிகளை எடுக்க வேண்டும். அதிகமான ஆர்வத்தை இதற்கு காட்ட வேண்டும். விவசாயத்தைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது என்பதை ஆசிரியர் எல்லோரின் கவனத்திற்கு கொண்டுவரட்டும். நிலத்தை மனிதன் பண்படுத்தவேண்டியதை தேவன் திட்டமிட்டிருந்தார். உலகின் அதிபதியாக இருந்த முதல் மனிதன் பராமரிப்பதற்கு ஒரு தோட்டம் கொடுக்கப்பட்டது. உலகின் மாமனிதர்களும் விவசாயிகளாக இருந்திருக்கின்றனர். இவ்வாழ்க்கயின் நன்மைகள் காட்டப்பட வேண்டும்.

விவசாயத்தினால் தன் ஊதியத்தைப் பெற்றுக்கொள்ளுபவன் அநேக சோதனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளுகிறான். சொல்ல முடியாத எண்ணிலடங்கா சிலாக்கியங்களும் ஆசீர்வாதங்களும் இவ்வேலையில் இருக்கின்றன. பட்டணங்களில் வேலைபார்ப்பவர்களுக்கு இவ்வாசீர்வாதங்கள் கிடைப்பதில்லை. போட்டி அதிகமாக இருக்கும் இந்த காலக்கட்டத்தில் முதலீட்டுக்கேற்ற இலாபத்தை விசவாசயத்தைப் போன்று மற்ற எந்த தொழிலிலும் நாம் முழுமையாக நம்பி இருக்க முடியாது. ***Education, p. 239.***

***நிலத்தின் புதுப் பலன்கள் விசேஷமானவைகள்***

குடும்பங்களும் ஸ்தாபனங்களும் நிலத்தைப் பண்படுத்தி அதிகமாக படிக்க வேண்டும். பூமியில் இருந்து கிடைக்கப்பெறும் பொருள்களின் அருமையை எவரும் அறிந்திருக்கவில்லை. இதை உணர்ந்திருந்தால் இதற்கான முயற்சிகள் கூடியிருக்கும். தோட்டங்களிலிருந்தும் தோப்புகளிலிருந்தும் கிடைக்கும் காய்கறிகளின், பழங்களின் சிறப்பை எல்லோரும் புரிந்திருக்க வேண்டும். ***Counsels on Diet and Food. P. 312.***

***பயனுள்ள தொழில்களை பள்ளிகள் கற்றுக்கொடுக்க வேண்டும்***

சரீர வேலைக்கான பயிற்சிக்கு இப்பொழுது செலுத்தப்படுவதைவிட அதிகமான கவனம் செலுத்தப்பட வேண்டும். சிறந்த ஒரு கல்வியையும் நல்லொழுக்கத்தையும் கற்றுக்கொடுப்பதுடன் நல்ல தொழிற்பயிற்சியை கொடுக்கும் ஸ்தாபனங்கள் அமைக்கப்பட வேண்டும். விவசாயத்திலும், பொருள் உற்பத்தியிலும் பயிற்சி கொடுக்க வேண்டும். முடிந்த வரையிலும் எல்லா தொழிற்கல்விகளும் பள்ளிகளில் கற்றுத்தரப்பட வேண்டும். நல்ல பொருளாதாரம், சமையல், தையற்கலை, சுகாதாரமான

1ST Proof

உடைகளை செய்தல், நோய்ச்சிகிச்சை போன்றவைகளில் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். தோட்டங்களும், பட்டறைகளும், சிகிச்சை அறைகளும் இந்த ஸ்தாபனங்களில் இருக்க வேண்டும். ஒவ்வொரு தொழிற்கல்வியையும் திறம்படைத்தோர் ஆசிரியர்களாக இருந்து சொல்லிக் கொடுக்க வேண்டும்.

வேலைக்கு ஒரு இலக்கை அமைத்துக் கொள்ள வேண்டும். முழுமையான வேலை செய்யப்பட வேண்டும். கைப்பொருட்களை செய்ய தெரிந்து கொண்டாலும், ஒரு தொழிலையாவது முழுமையாக கற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு வாலிபனும் பள்ளியைவிட்டு செல்லும்பொழுது ஒரு தொழிலையோ, வேலையையோ நன்றாக தெரிந்திருக்க வேண்டும். அதைக் கொண்டும் தனது தேவைகளை சந்தித்துக் கொள்ளலாம். ***Education, p. 218.***

***இரண்டு மடங்கான பயிற்சி***

பள்ளிகள் தொழில் ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு மாணவர்களை அங்கு வேலை பார்க்கவும், தேவையான உடற்பயிற்சியை பெற்றுக்கொள்ளவும் வழி செய்யலாம். புத்தக அறிவுடன் நடைமுறை வாழ்க்கைக்கான அறிவும் இதனால் கொடுக்கப்படுகிறது. படிக்கும் நேரத்தை திவர மற்ற நேரங்களில் மாணவர்கள் இந்த சரீரத்திற்கு ஏதுவான பயிற்சியையும் பெறலாம். ***Counsels to Parents, Teachers and Students, p. 83, 84.***

***வேலைகளை தெரிந்துகொள்ளுவதே அறிவியலை தெரிந்து கொள்ளுவதைவிட மேலானது***

சுமையலை பெண்களுக்கு கற்றுக்கொடுக்க அனுபவம் நிறைந்த ஆசிரியர்கள் இருந்திருக்க வேண்டும். இளம் பெண்கள் தையற்கலையை நன்றாக கற்றிருக்க வேண்டும். நடைமுறை வாழ்க்கைக்கு தேவையான கல்வியைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆண் வாலிபர்களுக்கு தொழில்களை கற்றுக்கொடுக்கும் ஸ்தாபனங்கள் அமைக்கப்பட வேண்டும். இது மனதின் வல்லமையுடன் சரீரத்தின் பெலத்தையும் உபயோகிக்கும். இவை இரண்டில் ஒரு வேளை ஒன்றை மட்டுமே பெற முடியும் என்ற நிர்பந்தம் வந்தால், புத்தக அறிவை



1ST Proof

தள்ளிவைத்து, நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான தொழிற்கல்வியையே கற்க வேண்டும். ***Testimonies for the Church, Vol. 3, p. 156.***

சிலர் தவறான பயிற்சியை பெற்றிருக்கலாம். பிள்ளைகளை பயிற்றுவிப்பதைக் குறித்து தவறாக புரிந்து வைத்திருக்கலாம். பிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் மிக சிறப்பான பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். மனதிற்கான அறிவைத் தருவதுடன் சரீர வேலையையும் அத்துடன் இணைக்க வேண்டும். இரண்டுமே ஒன்றாக செய்யப்பட வேண்டும்.

***இயேசு நன்றாக வேலை செய்தார்***

ஒரு தொழிலாளியாக, வழக்கறிஞராக, விவசாயியாக, வெவ்வேரு தொழில்களை செய்துகொண்டும், கிறிஸ்துவுக்காக வேலை செய்வது எளிமையானதன்று. ஊழியம் செய்வோர் ஊழியக்காரர்களாக தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுவதால் அதற்கேற்றபடி சமுதாயம் நடந்துகொள்ளும். ஆகவே கிறிஸ்துவிற்காக வேலை செய்வதில் இதன் நிமித்தமாகவே பாதி அளவிற்கு கடினங்களும் தடைகளும் நீங்க பெறும். மற்ற வேலைகளை செய்வோர் இதைப்போன்று தேவனுக்கென்று சாட்சியாக நிற்பதற்கு அதிகமான கிருபையும் நல்லொழுக்கமும் தேவைப்படும். இவர்கள் செய்யும் தங்களது அன்றாட வேலைகளில் கிறிஸ்துவைக் கொண்டு செல்லுவது ஊழியக்காரனின் வேலையைவிட கடினமானதாகவே இருக்கும். நமது விசுவாசத்தை வேலை செய்யும் இடங்களுக்கும் கொண்டு செல்லுவதற்கு ஆவிக்குரிய பெலனும் திடமும் அவசியமாகிறது. பெயரளவிற்கு விசுவாசிகளாக இருப்பவர்களால் இதை செய்ய முடியாது. அன்றாட வாழ்க்கயின் ஒவ்வொரு காரியமும் பரிசுத்தமாக்கப்பட வேண்டும். வருமானத்திற்கென்று செய்யப்படும் ஒரு செயலும் வேத தரத்தின்படி இருக்க வேண்டும்.

முப்பது வருடங்களுக்கு இயேசுவும் நாசரேத்தில் ஒரு சாதாரண மனிதராகவே அன்றாடம் உழைத்தும், ஓய்வு எடுத்தும் வாழ்ந்தார். விசேஷ நபராக எந்த ஒரு தனி கவனத்தையும் அவர் பெறவில்லை. அந்த வேளையிலும் அவர் உலகின் இரட்சகராகவே இருந்தார். தூதர்களால் போற்றப்படபவராக இருந்தார். தனது பிதாவின் வேலை

செய்துகொண்டு வாழ்ந்தார். மனிதர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடத்தை தனது தாழ்மையான வாழ்க்கையின் வழியாக சொல்லிக் கொடுத்தார்.

இந்த பாடத்தை கிறிஸ்துவின் பின்னடியார்களில் அநேகர் இன்னும் கற்றுக்கொள்ள வில்லை. நாம் செய்யும் வேலைகளை ஆய்வு செய்வதற்கு ஒருவரும் இல்லாத சூழ்நிலையிலும், தேவனுக்கென்று வேலை செய்வதைப்போன்று நாம் செயல்பட வேண்டும். அவர் நம்மை ஆய்வு செய்து கொண்டிருக்கிறார் என்பதை நாம் மனதில் வைத்து செயலாற்ற வேண்டும். வாழ்வின் பெரிய காரியங்களில் உண்மையாக இருப்பதைப்போன்று சிறு கடமைகளிலும் உண்மையாய் இருக்க வேண்டும். ***Health Reformer Oct. 1876.***

***அதிகாரம் - 60***

***வாழ்வின் சட்டங்களை அறிந்து கொண்டு கீழ்ப்படிதல்***

***மனித சரீரத்தின் அதிசயங்கள்***

நாம் தேவனால் செய்யப்பட்டவர்களாக இருக்கிறோம். தேவ வார்த்தை நம்மை பற்றி இப்படிக் கூறுகிறது. ***“ நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் “ சங். 139 : 14.*** நமது மனதிற்கு இந்த சரீரத்தை தேவன் ஆயத்தப்படுத்தி கொடுத்திருக்கிறார். விசித்திரமான வகையில் நாம் செய்யப்பட்டிருக்கிறோம். தேவ ஆவியானவர் வாசம் செய்வதற்காக தேவன் அருளியிருக்கிற ஆலயமாக நமது சரீரங்கள் இருக்கின்றன. மனமே ஒரு மனிதனை முழுமையாக கட்டுப்படுத்துகிறது. நன்மையான எல்லா செயல்களும் தீமையான எல்லா செயல்களும் மனதிலிருந்து உருவாகின்றன. நமது மனமே நம்மை பரலோகத்துடன் இணைக்கின்றது. ஆயினும் பலர் தங்களது சரீரங்களைப் பற்றி தெரிந்துகொள்ளாமலே தங்கள் வாழ்நாட்களை கழித்துவிடுகின்றனர். மனம் என்ற பெரிய பொக்கிஷத்தை சரீரம் தனக்குள்ளே வைத்துக் கொண்டு இருக்கிறது.

நமது சரீரத்தின் எல்லா அவயங்களும் மனதின் வேலையாட்களாக இருக்கின்றனர். செய்திகளை சரீரத்தின் பல இடங்களுக்குக் கொண்டு செல்லும் தூதர்களாக நரம்புகள் செயல்படுகின்றன. சரீர இயக்கத்தை



1ST
Proof

சீர்பட வழிநடத்துகின்றன. ***Fundementals of Christian Education, p. 425, 426.***

நமது சரீரத்தின் இயக்கங்களும் செயல்பாடுகளும் படிக்கப்பட வேண்டும். தனது வேலையை ஒவ்வொரு அவையமும் மற்றொன்றுடன் சார்ந்து எப்படி செய்கிறது என்பது அறிந்துகொள்ளப்பட வேண்டும். ஒருங்கிணைந்து எல்லா அவையங்களும் சீராக செயலாற்ற எந்த வகையில் ஆச்சியமான மாற்றங்களை பெற்றுள்ளன என்பதை புரிந்துகொள்ள வேண்டும். மாணவனின் ஆர்வம் இப்படியாக தூண்டப்பட வேண்டும். சரீரத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளுவதற்கு இது வழிநடத்தும். இவைகளை கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் இப்பாடங்களின் வழியாக நல்லொழுக்கத்தையும் நல்ல பழக்கங்களையும் மாணவர்களிடையே வளர்க்கலாம். ***Education, p. 198.***

***ஆரோக்கியம் காக்கப்பட வேண்டும்***

மனமும் ஆத்துமமும் சரீரத்தின் வழியாக வெளிப்படுகின்றன. ஆவிக்குரிய ஜீவியம் பெலமும் சரீர ஆரோக்கயத்தையும் செயல்பாட்டையும் சார்ந்து இருக்கிறது. சரீரத்தை பெலப்படுத்துகிற எதுவும் மனதையும் சம நிலையான ஒரு நல்ல குணத்தையும் வளர்க்கிறது. நல்ல ஆரோக்கயமில்லாத எந்த நபரும் தன்னைக் குறித்து தனக்கிருக்கிற கடமைகளையும் தேவனுக்கென்று செய்ய வேண்டிய கடமைகளையும் புரிந்துகொள்ள முடியாது. மற்ற மனிதர்களுக்கு செய்ய வேண்டியவைகளையும் அறிந்துகொள்ள முடியாது. குணத்தைப்போலவே சரீர ஆரோக்கியமும் கவனத்துடன் காக்கப்பட வேண்டும். எல்லா கல்வியின் அடிப்படையாக, நமது சரீர இயக்கம் மற்றும் சுகாதாரத்தைப்பற்றிய கல்வி அமைய வேண்டும். ***Education, p. 195.***

***ஆரோக்கிய விதிகளை அநேகர் படிக்க விரும்புவதில்லை***

ஆரோக்கியத்துடன் ஜீவிப்பதற்கு தெரிந்து கொள்ள வேண்டிய அடிப்படை விதிகளை அறிந்துகொள்ள தேவைப்படும் முயற்சியை பலர் ஏறெடுப்பதில்லை. ஆரோக்கியத்தை சரீரத்திற்கு மீண்டும் கொடுக்கும் வழிகளையும் தெரிந்திருப்பதில்லை. தாங்கள் பெற்றிருந்த ஜீவனுக்கேற்ற வகையில் அவர்கள் நடந்து கொள்ளுவதில்லை. ஆரோக்கியத்தின்

விதிகளை மீறி நோய்வாய்ப்படுகிறார்கள். தங்கள் தவறுகளை திருத்திக்கொண்டு தேவனின் ஆசீர்வாதத்தைக் கேட்பதில்லை. ***Christian Temperance and Bible Hygiene p. 112, 113.***

ஆரோக்கியத்தின் கூறுகளை நாம் படித்துக்கொண்டு மற்றவர்களுக்கும் இதை நாம் கற்றுக்கொடுக்க வேண்டும். நல்ல ஆரோக்கியத்தையும், சுயகட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தையும் இந்த காலத்திற்கேற்ற சத்தியத்தை விசுவாசிப்பதாக சொல்லுகிறவர்களும் அறியாமல் இருக்கிறார்கள். ஒவ்வொரு காரியத்தையும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இது எப்பொழுதும் அவர்களது மனங்களுக்கும் முன்பாக இருக்க வேண்டும். தேவையற்ற ஒன்றாக இது ஒதுக்கப்படக் கூடாது. ஒவ்வொரு குடும்பமும் இதை பற்றி புரிந்துகொள்ள எழும்ப வேண்டும். இந்த உண்மையான சீர்திருத்தத்தை அப்பியாசிக்க மனசாட்சி எழுப்பப்பட வேண்டும். ***Christian Temperance and Bible Hygiene p. 117.***

பிள்ளைகளின் பராமரிப்பிலும், உடற்பயிற்சியிலும் உணவிலும், சுகாதாரத்தின் கோட்பாடுகள் கைக்கொள்ளப்பட வேண்டும். இப்பொழுது கொடுக்கப்படுகின்ற கவனத்தைவிட அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். நோயாளிகளுக்கு சரியான சிகிச்சைகளை கொடுப்பதும் இதில் அடங்கும். ***Education, p. 197.***

***நோய்வராமல் பாதுகாத்துக் கொள்ளுதல்***

நன்றாக வளர்ந்த நாடுகளிலும் அதிகமான மரணமும் நோய்களும் காணப்படுகின்றன. இதைப் பற்றி எவரும் சிந்திப்பதில்லை. மனித குலமானது பின்நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

மனித சமுதாயத்தைப் பெருந்தவிப்புக்குள்ளாக தள்ளும் பல தீங்குகள் வராதபடி தகர்க்கப்பட்டிருக்கலாம். இந்த நிலையை சரியாக கையாளுவது பெற்றோரின் கரங்களில் உள்ளது. ***The Ministry of Healing p. 380.***

***பிள்ளைகளுக்கு பகுத்தறிய கற்றுக்கொடுங்கள்***



1ST Proof

பிள்ளைகளுக்கு காரணங்களையும் அவைகளின் விளைவுகளையும் பகுத்தறிய கற்றுக்கொடுங்கள். தங்களது ஜீவனின் அடிப்படை நியதிகளை மீறினால் அதற்கான தண்டனை நோயாக வரும் என்பதை அவர்கள் பார்க்க வையுங்கள். எதிர்ப்பார்க்கும் வகையிலும் முன்னேற்றத்தைக் காணாதிருந்தாலும் சோர்ந்துவிடாதீர்கள். பொருமையாக பிள்ளைகளை அறிவுறுத்துங்கள். வெற்றியை கண்டடையும் வகையிலும் இதை செய்யுங்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 126.***

சரியான முறையில் ஆரோக்கியத்தைக் காத்துக்கொண்டு வாழ்பவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். சரீரமும் ஆவிக்குரிய ஜீவியமும் நன்றாக இருக்கும். ஆரோக்கிய கோட்பாடுகளை நன்றாக புரிந்துகொள்ளுதல் அநேக தீமைகளிலிருந்து பெரிய பாதுகாப்பாக அமையும். ***Counsels to Parents, Teachers and Students, p. 138.***

***தொடர்ந்து அறிவுறுத்துங்கள்***

சிறுவயது முதலே பிள்ளைகளுக்கு சரீரங்களைப் பற்றிய எளிமையான பாடங்கள் கொடுக்கப்பட வேண்டும். சரீர இயக்கமும் ஆரோக்கயமும் கற்றுத்தரப்படட்டும். இவ்வேலையை தாய் வீட்டில் துவங்க வேண்டும். பள்ளியில் இது தொடரப்பட வேண்டும். பிள்ளைகள் வளர வளர இக்கல்வி தொடரப்பட வேண்டும். தாங்கள் வசிக்கும் இடத்தை தாங்களே பராமரித்துக் கொள்ளும்படி பிள்ளைகள் வழிநடத்தப்பட வேண்டும். ஒவ்வொரு நோயிலிருந்தும் தங்களைக் காத்துக்கொள்ளும் முக்கியத்துவத்தைப் பிள்ளைகள் புரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு அவயத்தின் பெலனும் பாதுகாக்கப்பட வேண்டும். சாதாரண நோய்களுக்காக சிகிச்சை முறைகளையும், விபத்துக்களை கையாளும் முறைகளையும் சொல்லிக் கொடுக்க வேண்டும். ***Education, p. 196.***

***புத்தக அறிவு போதுமானதல்ல***

சரீரத்தைப் பற்றி படிக்கும் மாணவன், அறிவை வளர்த்துக் கொள்ள மட்டும் படிப்பதில்லை என்பதை சொல்லுங்கள். இது பெரிய நன்மையைக் கொடுப்பதில்லை. அவன் தூய்மையான காற்றைப் பற்றி

குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

அறிந்திருக்கலாம். அறை காற்றோட்டமாக இருக்க வேண்டியதின் அவசியத்தைப் படித்திருக்கலாம். ஆயினும் அவனது நுரையீரல்கள் தூய்மையான காற்றினால் நிரப்பப்பட்டால் மட்டுமே அவனுக்கு நன்மையை தரும். இல்லையெனில் சரியாக சுவாசிக்காததினால் வரும் பலன்களை அவன் சந்திக்க வேண்டி வரும். இதைப்போலவே சுத்தத்தின் அவசியம் புரிந்துகொள்ளப்படலாம். தேவையான வசதிகளும் செய்யப்படலாம். இவைகள் உபயோகிக்கப்பட வேண்டும். இவைகளின் முக்கியத்துவத்தை மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அப்பொழுதே அவர்கள் இவைகளை அப்பியாசிப்பார்கள். ***Education, p. 220.***

***இயற்கையின் சட்டங்களை புரிந்துகொள்ளுவது அவசியம்***

சரீர இயக்கங்களைப் படிப்பதிலும், தெரிந்து கொள்ளப்பட வேண்டிய அநேக பாடங்கள் கற்கப்படுவதில்லை. பொதுவாக கற்றுக்கொடுக்கப்படும் தகவல்களைவிட இவைகள் முக்கியமானவைகளாக இருக்கின்றன. ஆரோக்கியத்தின் இந்த இயற்கையின் சட்டங்கள் தேவனின் சட்டங்கள் என்பதை வாலிபர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். இப்படிப்பின் அடிப்படைத் தத்துவமாக இது இருக்க வேண்டும். பத்து கட்டளைகளைப் போலவே இவைகளும் முக்கியத்துவம் படைத்தவைகளாக இருக்கின்றன. நமது சரீரத்தை ஆளுகை செய்யும் இயற்கையின் சட்டங்கள் ஒவ்வொரு நரம்பின் மீதும் தசையின்மீதும் எழுதப்பட்டிருக்கின்றன. இவைகள் துணிந்து மீறுவது நமது சிருஷ்டிகருக்கு எதிரான பாவமாகும். எனவே இந்த இயற்கையின் ஆரோக்கிய விதிகளை கற்றுக்கொடுப்பது மிக முக்கியமானதாக இருக்கிறது. ***Education, p. 196, 197.***

***உண்ணுவதிலும் உறங்குவதிலும் ஒரு ஒழுங்கு***

சரியான நேரத்தில் உண்ணவும் உறங்கவும் செல்ல வேண்டும். இது அசட்டை செய்யப்படக் கூடாது. ஓய்விலும் தூக்கத்திலும் நமது சரீரம் பெலப்படுகிறது. வாலிபர்களுக்குப் போதிய நேரம் தூக்கமும் ஓய்வும் தேவை. ***Education, p. 205.***

தூக்கத்தின் நேரத்தை ஒழுங்குபடுத்திக்கொள்ளுவதில் அறை மனதுடன் செயல்படக் கூடாது. இரவின் நேரத்தில் சரீரத்தின் சக்திகளை பிரயோகித்து, காலை நேரங்களில் தூங்கக் கூடாது. ஒரு வேளை



1ST
Proof

இந்த பழக்கம் இருக்குமானால் திருத்தப்பட வேண்டும். சரியான நேரத்தில் தூங்கச் செல்ல வேண்டும். காலையில் புத்துயிர் பெற்றவர்களாக கடமைகளை செய்ய எழும்புவார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 297.***

***சரியான ஆரோக்கியத்தின் பழக்கங்களை வலியுறுத்துங்கள்***

உணவிலும், பருகுதலிலும், உடையிலும் சில பழக்கங்கள் கைக்கொள்ளப்பட வலியுறுத்த வேண்டும். தவறான பழக்கங்களையுடையோர் வேத அறிவுரைகளுக்குச் செவி கொடுக்க மாட்டார்கள். தவறான உணவு பண்டங்களை உண்ணும் ஆசையிலிருந்து பிள்ளைகள் காக்கப்பட வேண்டும். நரம்புகளை தூண்டிவிடும் உணவுகளிலிருந்தும் நம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். உணவுகள் சுவையூட்டிகளாலும் நறுமணம் ஊட்டும் பொருட்களாலும் நிரப்பப்படக்கூடாது. ***Counsels to Parents, Teachers and Students, p. 126.***

மனதையோ சரீரத்தையோ பெலவீனப்படுத்தும் எந்த பழக்கத்திலும் நாம் ஈடுபடக் கூடாது. நமக்கு அருளப்பட்டிருக்கும் சக்திகளை தவறாகப் பயன்படுத்தக் கூடாது. ஆரோக்கியத்துடன் இருக்க நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்ய வேண்டும். இனிமையான குணத்தையும் தெளிந்த புத்தியையும் பெறுவோம். நன்மை தீமையை சரியாக பகுத்தறிய இது ஏதுவாக இருக்கும். நமது ஆவியினாலும் சரீரத்தினாலும் தேவனை கனப்படுத்துவோம். நாம் பெற்றிருக்கும் எல்லாமே தேவனுடையதாக இருக்கின்றன. ***Youth's Instructor Aug. 24, 1893.***

***சரியான தோற்ற அமைவின் முக்கியத்துவம்***

நிற்கும்பொழுதும், உட்காரும் பொழுதும் சரியான தோற்ற அமைவுடன் இருக்க வேண்டும். நிமிர்ந்த நிலையில் முதுகுத்தண்டு நேராக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். கற்றுக்கொள்ளப்பட வேண்டிய முதற்பாடங்களில் இது ஒன்றாக இருக்கின்றது. தேவன் மனிதனை சீரான நேரான வடிவத்தில் படைத்தார். நேரான தோற்ற அமைப்புடன் இருப்பது சரீரத்துக்கு மட்டுமில்லாமல் மனதிற்கும் ஆரோக்கியத்தை தர வல்லது. நல்லொழுக்கம், சுயமதிப்பு,

தன்நம்பிக்கை ஆகியவற்றை இது கூட்டுகிறது. ஆசிரியரும் இதற்கான நல் உதாரணத்தை மாணவர்களுக்குக் கொடுக்கட்டும். சரியான தோற்ற அமைப்பை கற்றுக்கொடுத்து அதுகைக்கொள்ளப்படுவதையும் வலியுறுத்துங்கள். ***Education, p. 198.***

*நற்சுவாசமும் குரல் இனிமையும்*

நல்ல சுவாசமும், குரலை வளர்த்துக்கொள்ளுதலும், அடுத்த முக்கிய பாடங்கள். சரியான தோற்ற அமைவுடன் உட்கார்ந்து, நின்று, நடப்பவர் நன்றாக, ஆழமாக சுவாசிப்பவராக இருப்பார். ஆழமாக சுவாசிப்பதின் முக்கியத்துவத்தை ஆசிரியர் மாணவர்களுக்கு வலியுறுத்த வேண்டும். சுவாசிப்பதற்கு உதவும் அவையங்கள் நன்றாக பயன்படுத்தப்படும்பொழுது இரத்த ஓட்டம் நன்றாக இருக்கும். முழு சரீரத்திற்கும் இது பெலத்தைக் கொடுக்கும். உணவு செரிமானம் துரிதப்பட்டு பசி தூண்டப்படும். நல்ல நித்திரையைக் கொடுத்து புத்துயிர் அளிக்கும். மனதை அமைதிப்படுத்தும். இவைகள் மாணவர்களுக்கு விளக்கப்பட வேண்டும். இந்த பழக்கம் கொண்டுவரப்பட வேண்டும். இதை செய்வதற்கான உடற்பயிற்சிகளை கொடுக்கப்படட்டும். இதன் வழியாக எல்லோரும் இதை பழகிக்கொள்ளலாம்.

நல்ல குரலை பெற்றுக்கொள்ள ஏரெடுக்கப்படும் இத்தகைய பயிற்சிகள் சரீரத்தின்மீதும் ஒரு நல்ல தாக்கத்தைக் கொண்டுவருகின்றன. நுரையீரல் விரிவடைந்து பெலப்படுத்தப்படுகின்றன. சரியாக படிக்கவும் பேசவும் கீழ்வயிற்றுப் பகுதியின் தசைகள் பயன்படுத்தப்பட வேண்டும். ஆழமாக சுவாசிப்பதற்கும் இத்தசைகள் பயன்பட வேண்டும். சுவாசிக்க பயன்படுத்தப்படும் உறுப்புகள் எந்த வித தடையுமின்றி செயல்பட வேண்டும். பேசும்பொழுது அடிவயிற்று பகுதியின் பெலம் உபயோகிக்கப்பட வேண்டும். தொண்டையின் தசையின் பெலத்தை மட்டும் பயன்படுத்தக்கூடாது. இது சரிவர செய்யப்பட வேண்டும். தொண்டை நோய்களும் நுரையீரல் நோய்களும் வராமல் இருக்கும். பேசும்பொழுது சோர்வும் ஏற்படாது. மிதமான சத்தத்துடன் அவசரமின்றி பேச வேண்டும். குரல் மென்மையாகவும் சீரான ஏற்றங்களுடனும், இறக்கங்களுடனும் இருக்க வேண்டும். இது ஆரோக்கியத்தைக் கூட்டி மாணவனின் திறமையையும் மேம்படுத்தும். ***Education, p. 198, 199.***



1ST
Proof

*குடும்ப மகிழ்ச்சிக்கான மூன்று அத்தியாவசியங்கள்*

ஆரோக்கியத்தையும், சுகாதாரத்தையும் கற்றுக்கொடுக்கும் உத்தமமான ஆசிரியர் சுத்தத்தைக் கற்றுக்கொடுக்க தருணங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார். தனிப்பட்ட விதத்தில் சுத்தமாக இருப்பதையும், வசிக்கும் இடத்தையும் சுத்தமாக வைத்திருக்கவும் வலியுறுத்துவோம். ஆரோக்கியத்தைப் பேணி காக்க தினமும் குளிப்பதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட வேண்டும். அறிவாற்றலையும் இது துரிதப்படுத்துகிறது. நல்ல சூரிய ஒளி கிடைத்திடவும் தூய்மையான காற்றை சுவாசிக்கும்படியாகவும் பார்த்துக் கொள்ள வேண்டும். படுக்கை அறையும், சமையலறையும் சுத்தமாக இருக்க வேண்டும். ஆரோக்கியமான படுக்கை அறையும், சுத்தமான சமையலறையும், அடுக்கப்பட்டிருக்கும் மேஜையும், விலையுயர்ந்த அலங்காரங்களைவிட மேலானது. உண்மையான மகிழ்ச்சியையும் தரக்கூடியது. வீட்டில் வசிப்பவர்களுக்கும் மட்டுமின்றி விருந்தாளிகளுக்கும் இது பொருந்தும். ***“ ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகளாயிருக்கிறது.” லூக்கா 12 : 23.*** இயேசுவின் இந்த பாடமானது 2000 வருடங்களுக்கு முன்பதாக எந்த அளவிற்கு முக்கியமானதாக இருந்ததோ, இன்றைக்கும் அதே முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது. ***Education, p. 200.***

*இயற்க்கை மருத்துவத்தைப் புரிந்துகொள்ளுங்கள்*

தூய்மையான காற்று, சூரிய ஒளி, இச்சையடக்கம், ஓய்வு, உடற்பயிற்சி, சரியான உணவு, தண்ணீர், தேவ நம்பிக்கை, இவைகளே இயற்க்கை நமக்கு கொடுக்கும் மருந்துகள். இவைகளே நோயிலிருந்து முழு விடுதலையை கொடுக்கின்றன. நோய்க்கான இந்த இயற்கையின் தீர்வுகளை எல்லோரும் அறிந்திருக்க வேண்டும். சிகிச்சை முறைகளில் பயிற்சிபெற வேண்டும். இச்சிகிச்சைகளின் அடிப்படை தத்துவங்களைப் புரிந்திருக்க வேண்டும். நோயாளிகளுக்கு இவ்வறிவைக் கொண்டு சரியான சிகிச்சையை கொடுக்கலாம்.

இயற்கையின் சிகிச்சை முறைகளை அப்பியாசிக்க அதிக முயற்சியும், கவனமும் தேவை. இம்முயற்சியை ஏரெடுக்க பலர் விரும்புவதில்லை. இயற்கையின் வழியாக வரும் சுகம் மெதுவாகவே

வரும். பொருமையில்லாதவர்களுக்கு சுகம் பெறுவது தாமதிக்கப்படுவதாகத் தோன்றலாம். துவறான பழக்கங்களை விட்டுவிடுவது எளிதானதல்ல. ஆயினும் தவறானவைகள் நிறுத்தப்பட வேண்டும். இந்த இயற்கையின் தீர்வுகளுக்கு முழுமையாக ஒத்துழைத்தால் சுகம் கிடைப்பது உறுதி இயற்கையின் ஆரோக்கிய விதிகளை முழுமையாகக் கைக்கொள்ளுவோர்க்கு ஆரோக்கியத்துடன் சரீரமும் மனமும் காக்கப்படும். ***Ministry of Healing p. 127.***

***நாம் செய்ய வேண்டியவைகள்***

நமது கடமைகளைக்குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும். நான் என்னை அறிந்துகொள்ள வேண்டும். எனது சரீரமாகிய இந்த கட்டிடத்தை எப்படி பராமரிப்பது என்பதை கற்றுக்கொள்ள விருப்பம் காட்ட வேண்டும். தேவன் அருளியிருக்கின்ற இந்த சரீரத்தை சிறப்பான வகையில் நான் பாதுகாக்க வேண்டும். எனது சரீரத்திற்கு ஆரோக்கியத்தை தரக் கூடியவைகளை மட்டுமே நான் உண்ண வேண்டும். எனது இரத்த ஓட்டத்திற்கு ஏற்புடைய உடைகளை அணிய வேண்டும். சுற்றமான காற்றை சுவாசிக்க வேண்டும். உடற்பயிற்சி இல்லாமல் இருக்கக் கூடாது. முடிந்த வரையிலான சூரிய ஒளியைப் பெற வேண்டும். சரீரத்தை உத்தமாக காத்துக்கொள்ள ஞானத்தை பெற வேண்டும்.

வியர்த்த உடம்புடன் குளிர்ந்த நிலையில் இருக்கும் ஒரு அறைக்குள் நான் செல்லக் கூடாது. குளிர்ந்த காற்று தொடர்ந்து வீசிக்கொண்டிருக்கும் இடத்தில் நான் இருக்கக் கூடாது. சலி பிடிக்கும் வாய்ப்பு அதினால் உருவாகும். கைகளையும் கால்களையும் ஈரமாகவே இருந்துவிட விடக்கூடாது. இவ்விடங்களில் இரத்த ஓட்டம் சரியாக இருக்காது. குளிர்ந்த சீர்தோஷண நிலையில் என் பாதங்களை சூடாக வைத்துக்கொள்ள வேண்டும். சிறந்த இரத்தத்தை உருவாக்கும் நல்ல உணவுகளை உண்ண வேண்டும். கட்டுப்பாடின்றி நான் வேலை செய்யக் கூடாது. தேவன் அமைத்திருக்கின்ற ஆரோக்கிய பிரமாணங்களை மீறினால் மனஸ்தாபப்பட்டு ஒரு சீர்திருத்துதலுக்குள்ளாக வர வேண்டும். தேவன் கொடுத்திருக்கும் மருத்துவர்களிடம் என்னை சமர்பிக்க வேண்டும். சுத்தமானகாற்று, தூய்மையான நீர், சூரிய ஒளி போன்ற இயற்கையின் பொருள்களே இம்மருத்துவர்கள். ***Medical Ministry p. 230.***



1ST Proof

***தேவனுக்கு முன்பாக பொறுப்பாளிகளாக இருக்கிறோம்***

நமது சரீரங்களை கிறிஸ்து கிரயத்துக்கு வாங்கப்பெற்றார். நமது விருப்பங்களுக்கு ஏற்ப நமது சரீரங்களை நாம் நடத்தக்கூடாது. இயற்கையின் ஆரோக்கிய விதிகளை உணர்ந்துகொள்ளுபவர்கள் இந்நியதிகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். தேவனே இச்சட்டங்களை நமது சரீரங்களில் நியமித்திருக்கிறார். இது தனிப்பட்ட கடமையாகக் கொள்ளப்பட வேண்டும். நமது பழக்கங்களுக்கான கணக்கையும் செயல்களுக்கான கணக்கையும் தேவனிடம் ஒப்படைக்க வேண்டும். எனவே ***“உலகம் என்ன செய்கிறது”*** என்பது நமது கேள்வியாக இருக்கக்கூடாது. மாறாக ***“தேவன் எனக்கு அருளியிருக்கும் இந்த கூடாரத்தை நான் எப்படி நடத்த வேண்டும்”*** என்ற கேள்வியைக் கேட்க வேண்டும். ***The Ministry of Healing p. 310.***

***பாகம் - XIV***

***அதிகாரம் - 61***

***சரீர ஆரோக்கியத்தைப் பேணிக் காத்தல்***

***சமயலறையில் இருக்கும் வீட்டைக் கட்டும் நபர்***

***ஓர் உயரிய அழைப்பு***

வீட்டு வேலைகளைவிட முக்கியமான வேலை வேரு எதுவும் இருக்க முடியாது. நன்றாக சமைத்து, ஆரோக்கியமான உணவுகளை விரும்பத்தக்க வகையில், மற்றவர்க்கு முன்பாக வைக்க அனுபவமும் அறிவாற்றலும் தேவை. நாம் உண்ணும் உணவு இரத்தமாக மாற்றப்படுகிறது. நமது சரீரத்தை பெலப்படுத்துகிறது. சமைக்கும் வேலை ஒரு முக்கியமான உன்னதமான வேலையாகும். ***Testimonies for the Church, Vol. 3, P. 158.***

ஒவ்வொரு வாலிபனும் அன்றாட கடமைகளைச் செய்ய நன்கு அறிந்திருக்க வேண்டும். ஒரு இளம் பெண் மற்ற மொழிகளையும், உயரிய மேற்படிப்புகளையும் கற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். எந்த ஒரு இசைக்கருவியையும் வாசிக்கத் தெரியாமலும் இருந்துவிடலாம்.

ஆனால் நல்ல விதத்தில் சமைப்பதையும், தையற்கலையையும், வீட்டிற்கு சம்பந்தமான வேலைகளை படித்துக்கொள்ளாமல் இருக்கக் கூடாது.

சமைப்பவரின் திறமையையும் அறிவாற்றலையும் சார்ந்தே குடும்ப மகிழ்ச்சி இருக்கிறது. குடும்ப ஆரோக்கியமும் இந்நபரை சார்ந்தே உள்ளது. சரியாக ஆயத்தப்படுத்தாமல், தவறான உணவுகளை முன்வைத்தால் பெரியவர்களின் உபயோகமும் பிள்ளைகளின் முன்னேற்றமும் தடைபடும். சரீரத்தின் தேவைக்கேற்ற உணவுகளை சமைத்து, மனம் விரும்பும் வகையில் சுவையும் நன்றாக இருக்க வேண்டும். இப்படியும் செய்தால் இவ்விஷயத்தில் செய்த தவறுகளுக்கு இணையான நன்மையை செய்துவிடலாம். வாழ்வின் அடிப்படையான கடமைகளை உத்தமமாக செய்வதில் உண்மையான மகிழ்ச்சி உள்ளது. ***Education, p. 216.***

***சுமையற்கலை அத்யாவசியமானது***

நன்றாக சமைப்பது என்பது ஒரு சிறிய காரியம் அல்ல. மற்ற எல்லா வேலைகளைக் காட்டிலும் இது சிறப்பானதாக பார்க்கப்பட வேண்டும். ஜீவனுடன் மிக நெருங்கிய தொடர்புள்ளதாக இது உள்ளது. இதற்கு அதிக கவனம் கொடுக்கப்பட வேண்டும். நல்ல இரத்தம் உற்பத்தியாவதற்கு நல்ல உணவு சரீரத்திற்கு கொடுக்கப்பட வேண்டியுள்ளது. நன்றாக சமைப்பதும் ஒரு மருத்துவ ஊழிய வேலையாக இருக்கிறது. மனிர்களை ஆரோக்கியமாக வைக்கும் அடித்தளமாக இது இருக்கிறது. உணவு காரியங்களில் பல நேரங்களில் சீர்திருத்தங்கள் தோல்வியடைகின்றன. இதற்கு காரணம் சீர்திருத்தம் என்ற பெயரில் சுவையில்லாத விதத்தில் சமைப்பதே. ஆரோக்கியமாகவும், அதே நேரத்தில் மனதிற்கேற்ப சுவையாகவும் சமைக்க முதலில் அறிந்து கொள்ள வேண்டும். இது நடந்தால் மட்டுமே இதற்கென செய்யப்படும் சீர்திருத்த முயற்சிகள் வெற்றி பெரும்.

நன்றாக சமைக்கக் கூடியவர்கள் வெகு சிலரே உள்ளனர். புல தாய்மார்களுக்கு இதைப்பற்றிய பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். அப்பொழுது நன்றாக சமைத்த உணவுகளை குடும்பத்திற்கு முன்பாக வைப்பார்கள். ***Counsels on Diet and Food p. 263.***

***இதில் சிறந்து விளங்க வேண்டும்***



1ST
Proof

நமது சகோதரிகளில் அநேகருக்கு சரியாக சமைக்கத் தெரியாது. இவர்களுக்கு நான் கூறுவது இதுவே. நாட்டின் மிகச் சிறந்த சமையல்கலையில் தேரின நபரிடம் செல்லுங்கள். தேவைப்படுமானால் வாரக் கணக்கிலும் அவருடன் தங்கி இக்கலையைக் கற்றுக்கொள்ளுங்கள். திறமையாக ஞானமாக சமையலைச் செய்ய தெரிந்துகொள்ளும் வரையிலும் இதை செய்யுங்கள். நன்றாக சமைக்கத் தெரிந்திருப்பது உங்கள் கடமை. இதை உங்கள் மகள்களுக்கு கற்றுக்கொடுப்பதும் உங்கள் கடமை. ***Testimonies for the Church, Vol. 2, p. 370.***

***படித்துக்கொண்டு பழகிக் கொள்ளுங்கள்***

உணவு ஆரோக்கியமாகவும் எளிமையாகவும் சமைக்கப்படலாம். அதை சுவை நிறைந்ததாகவும் சமைக்க திறமை இருக்க வேண்டும். நன்றாக சமைப்பதை பெண்கள் முதலில் படிக்க வேண்டும். இதன்பின் பொறுமையுடன் படித்ததை நடைமுறைப்படுத்த வேண்டும். இது செய்யப்படாததால் அநேகர் துன்பத்திற்குள்ளாகின்றனர். உங்களது தூங்கிக் கொண்டிருக்கும் சக்திகளை எழுப்புங்கள் அதற்கான நேரம் வந்துவிட்டது. தெரிந்துகொள்ள வேண்டியவைகளின் அறிவை பெற்றுக்கொள்ளுங்கள். இதற்கென நீங்கள் எடுத்துக்கொள்ளும் நேரம் வீணடிக்கப்படுகிறது என்று நினைக்காதீர்கள். சமையலில் பல வருடங்களின் அனுபவத்தை நீங்கள் பெற்றிருக்கலாம். ஆயினும் குடும்பத்தின் பொறுப்பை சுமக்கும் நீங்கள், உங்களது குடும்ப அங்கத்தினர்களை சரியாகப் பராமரிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ***Christian Temperance and Bible Hugiene p. 49.***

***எளிமையும், பல வகைகளும் அவசியம்***

நமது உணவு ஒரே வகையில் இருக்கக் கூடாது. வேறுபட்ட உணவுகளை சமைக்க வேண்டும். ஒரே முறையில் ஆயத்தப்படுத்தப்பட்ட ஒரே வகையான உணவு ஒவ்வொரு வேளைக்கும் தினமும் உண்ணவைக்கப்படக் கூடாது. வெவ்வேறு வகையான உணவுகள் விரும்பப்பட்டு ஆசையுடன் உண்ணப்படும். நமது சரீரமும் பல வகையான உணவுகளை உட்கொள்ளம்பொழுது நல்ல ஊட்டத்தைப் பெறுகிறது. ***Ministry of Healing p. 300.***

நாம் உண்ணுவதை வைத்தே நமது சரீரம் கட்டப்படுகிறது. நல்ல தசைகள் உருவாவதற்கு நல்ல உணவுகளை நாம் உண்ண வேண்டும். நமது சரீர இயக்கங்களின் தேவைக்கேற்றபடி உணவுகள் திறம்பட ஆயத்தம்பண்ணப்பட வேண்டும். சமையல் செய்வோர், ஆரோக்கியம் தரும் பல்வேறு வகையான சுவையான உணவுகளை செய்ய கற்றிருக்க வேண்டும். கிறிஸ்தவ மதத்தின் ஒரு கடமையாக அமைகிறது. ***Christian Temperance and Bible Hygiene p. 48, 49.***

உண்ணும் மேஜையின்மீது பொருள்கள் அடுக்கப்படும் விதம் கூட பெரிய தாக்கத்தைக் கொண்டு வருகிறது. இது அலங்கரிப்புடன் இருப்பதற்காக உலகில் பின்பற்றப்படும் புது பழக்கங்கள் வீடுகளில் கையாளப்படுகிறது. இது ஒரு தகாத தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சாப்பிடப்படும் உணவைவிட இந்த அலங்கரிப்புகளுக்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. ஒரு வேளைக்கு பல விதமான உணவுகளை ஆயத்தப்படுத்துதல் அதிகமான நேரத்தை எடுத்துக்கொள்ளும். ஆதிகமான பணமும் செலவாகும், வேலையும் அதிகமாகிறது. இதினால் பெரிய நன்மை எதுவும் கிடைப்பதில்லை. ஒரே சமயத்தில் ஆறு வகையான உணவுகளையும் நமக்கு முன்பாக வைத்துக் கொள்ளலாம். இது சரீரத்திற்கு நல்லதல்ல. ஆரோக்கியத்தை அழிக்கும். இந்த பழக்கத்தைப் பகுத்தறியும் ஆண்களும் பெண்களும் கண்டிக்க வேண்டும். அவர்களும் இத்தவறைச் செய்யக் கூடாது. ஆயத்தப்படுத்தப்படும் உணவுகள் எளிமையானவைகளாக இருக்க வேண்டும். இல்லத்தின் ஆரோக்கயத்திற்கு இதுவே நல்லது. ***Christian Temperance and Bible Hygiene p. 73.***

### *தரமில்லாத சமையலின் விளைவுகள்*

சரியான சமையல் செய்யப்படாததினால் ஆயிரக்கணக்கானோரின் ஜீவசக்திகள் குன்றியிருக்கின்றன. இதன்நிமித்தமாக நாம் நினைப்பதைவிட நிறைய நபர்களை இழக்கக்கொடுத்திருக்கிறோம். சரீர இயக்கத்தை இது மாற்றிவிடுகிறது. நோயைக் கொண்டு வருகிறது. இந்த சூழ்நிலையில் பரலோகின் சத்தியங்கள் விளங்குவதில்லை. ***Christian Temperance and Bible Hygiene p. 49***

1ST Proof

சரியாக சமைக்கப்படாத உணவு பண்டங்கள் இரத்தத்தை உண்டுபண்ணும் அவயங்களை பெலவீனப்படுத்துகின்றன. அவயங்கள் பாதிக்கப்பட்டு நோய் வருகிறது. இந்நோய்களினால் நரம்புகள் பதட்டப்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக முன் கோபம் போன்ற கெட்ட பண்பு நலன்களை விளைவித்து விடுகின்றன. தவறான சமையலின் பலிகளாக உலகில் பல ஆயிரக்கணக்கானோர் பரிதபிக்கிறார்கள். பல கல்லறைகளின்மீது இவ்வாக்கியம் எழுதப்படலாம். ***“தவறான சமையலினால் மறித்தார்” “ வயிற்றை தவறாக பயன்படுத்தியதால் மறித்துப் போனார். “ Ministry of Healing p. 302.***

### *நன்றாக சமைக்க பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள்*

நன்றாக சமைக்கப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பதை புறக்கணிக்காதீர்கள். இதை செய்வதின் மூலம் கிறிஸ்தவ மதத்தின் அடிப்படை கோட்பாடுகளையே அவர்களுக்குச் சொல்லிக் கொடுகிறீர்கள். நமது விசுவாசத்தற்கு அடிப்படையான ஒரு கல்வியை அவர்களுக்கு கொடுக்கிறீர்கள். பிள்ளைகளுங்கு நமது சரீரத்தின் அமைப்பையும், அவையங்களின் இயக்கங்களையும் சொல்லிக் கொடுங்கள். இதோடு நன்றாக சமைக்கவும் கற்றுத்தாருங்கள். சிறந்த ஒரு கல்விக்கான அடித்தளத்தை இதை செய்வதினால் ஸ்தாபிக்கிறீர்கள். நல்ல அப்பத்தை செய்வற்கும் திறமை அவசியம். நன்றாக சமைப்பதும் நமது மதமாகவே உள்ளது. இதை தெரிந்துகொள்ளாதவர்களின் மதமும் விசுவாச வாழ்க்கையும் கேள்விக்குள்ளாகிறது. ***Testimonies for the Church, Vol. 2, p. 437***

### *பொருமையுடனும் மனமகிழ்ச்சியோடும் அறிவுறுத்துங்கள்*

தாய்மார்கள் தங்கள் மகள்களை சிறு வயதிலிருந்தே சமையலறைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். சமைக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். இவைகளை மகள்களுக்குக் கற்றுக்கொடுக்காமல் எதிர்காலத்தில் அவர்களது இல்லங்களை நன்றாக பராமரித்துக்கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அன்புடனும், நிதானத்துடனும் இதை செய்ய வேண்டும். பிள்ளைகள் இதை விரும்பும் வகையிலும் மகிழ்ச்சி நிறைந்த முகத்துடனும் பிள்ளைகளுக்கு ஏற்ற

முறையிலும் இதை செய்ய வேண்டும். ஊக்கப்படுத்தும் பாராட்டின் வார்த்தைகளையும் பேச வேண்டும். ***Testimonies for the Church, Vol. 2, p. 684.***

ஒரு முறையோ இரண்டு முறையோ மூன்று முறையோ பிள்ளைகள் தவறு செய்யலாம். உடனே குறைகூறிவிடாதீர்கள். அவர்களின் மனங்கள் தவறுகின்றபொழுது சோர்வுற்ற நிலையில் இருக்கும். “ ***இது பயனல்ல. என்னால் இதை செய்ய இயலாது*** “ என்பதைப் போலவும் அவர்கள் சிந்தித்துக்கொண்டிருப்பார்கள். இச்சமயத்தில் நாம் அவர்களை குற்றப்படுத்திவிடக் கூடாது. அவர்கள் பெலவீனப்பட்டு விடுவார்கள். ஆறுதலான, நம்பிக்கையூட்டி உற்சாகப்படுத்தும் வார்த்தைகள் தேவைக்கடுகின்றன. “ ***தவறுகளினால் சோர்ந்துவிடாதே. இதை நீ இப்பொழுது செய்யக் கற்றுக் கொள்ளுகிறாய், ஆதலால் தவறு செய்வது இயற்கையே. மீண்டும் முயற்சி செய். நீ செய்வதில் உன் முழு கவனத்தை செலுத்து. நிச்சயம் வெற்றி பெறுவாய்*** “ போன்ற வார்த்தைகளை நாம் பேச வேண்டும். ***Testimonies for the Church, Vol. 2, p. 684, 685.***

***வேலைக்கான ஆர்வம் எப்படி தளர்கிறது***

பல தாய்மார்கள் இவ்வேலையின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ளுவதில்லை. பிள்ளைகளை வேலை செய்ய வைப்பதினால் அவர்கள் செய்யும் தவறுகள் நமக்கு இடையூறுகளாக தெரியலாம். இதனால் பலர் இக்கடினத்தை பொறுத்துக்கொள்ள மனமில்லாமல் தாங்களே எல்லா வேலைகளையும் செய்துவிடுகின்றனர். தங்கள் மகள்கள் ஏதேனும் தவறுகளைச் செய்தால் இதில் பயனில்லை “ ***உன்னால் இதை செய்ய முடியாது*** “ என்று கூறி அவர்களை அனுப்பிவிடுகின்றனர். உதவியைவிட உபத்திரவத்தையே செய்கிறாய் என்றும் சொல்லுகிறார்கள்.

இவ்வேலைகளை கற்றுக்கொள்ள பிள்ளைகளால் ஏரெடுக்கப்படும் முயற்சிகளும் இந்த வகையில் ஒடுக்கப்படுகின்றன. இச்சிறு தோல்விகள் அவர்களது ஆர்வத்தை தணித்துவிடுகிறது. இத்தோல்வியை மீண்டும் சந்திக்க மனதில்லாமல் சமைப்பதைக்காட்டிலும் மற்ற வேலைகளை செய்யப்போவதாக கூறி இதிலிருந்து விடுபட முயலுவார்கள். நான் வீட்டை சுத்தப்படுத்துகிறேன் என்றும், துணிகளை தைக்கப்போகிறேன் என்ற சொல்லி தப்பித்துக்கொள்ள பார்ப்பார்கள். இங்கு தவறு தாயினுடையதாக இருக்கிறது. பொருமையுடன் பிள்ளைகளை கையாண்டு அறிவுறுத்தியிருக்க வேண்டும். மீண்டும் மிண்டுமாக பயிற்சி எடுப்பதினால் எல்லா தவறுகளும் நீங்கப்பெற்றுவிடும் என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூறியிருக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol. 2, p. 685.***

***நடைமுறை வாழ்க்கைக்கு பெண்களின் ஆயத்தம்***

வாலிப பெண்கள் நன்றாக சமைக்கக் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். அவர்கள் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் இதை அவர்கள் அறிந்திருப்பது நடைமுறை வாழ்விற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். முனித வாழ்வின் மீது நேரடியான ஒரு ஆழமான தாக்கத்தை சமையற்கலை உண்டு பண்ணுகிறது. தங்களுடன் நெருக்கமாக இருப்பவர்களின் வாழ்வுகளை இது வெகுவாக பாதிக்கிறது. ***Testimonies for the Church, Vol. 2, p. 683, 684.***

எனக்கு பல உதவியாட்கள் இருக்கிறார்கள். பல வேலைகளை செய்ய உதவுகிறார்கள். எல்லோரைவிட முக்கியமான இடத்தை எனக்கு சமைக்கும் நபருக்கு நன்கு கொடுத்திருக்கிறேன். மற்ற எல்லா உதவிகளைவிட இதையே மேலான உதவியாக நான் பார்க்கிறேன். ***Testimonies for the Church, Vol. 2, p. 370.***

வாலிப பெண்கள் சமைப்பதையும், வீட்டு வேலைகளை செய்வதையும் தரம் தாழ்ந்த வேலைகளாக நினைக்கின்றனர். இதன் நிமித்தமாகவே, இப்பெண்கள் திருமணமான பின்பு குடும்பத்தை பராமரிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஒரு தாயாக, மனைவியாக தங்கள்மீது விழுந்திருக்கும் கடமைகளை அறியாதவர்களாக இருக்கிறார்கள். ***Ministry of Healing. P. 302.***

***தீமைக்கும் மூடத்தனத்துக்கும் எதிரான தடைச்சுவர்***

உங்கள் மகள்களுக்கு நீங்கள் சமைக்க கற்றுக்கொடுப்பதினால், தீமையிலிருந்தும், முடத்தனத்திலிருந்தும் அவர்கள் பாதுகாக்கப்படத் தக்கதாக ஒரு தடைச் சுவரை அவர்களை சுற்றி எழுப்புகிறீர்கள். இதை

1ST Proof

அவர்கள் கற்றுக்கொள்ளாத நிலையில் பல சோதனைகளுக்குள்ளாக விழும் வாய்ப்புள்ளது. ***Testimonies for the Church, Vol. 2, p. 370.***

***ஆண்களும் பெண்களும் சமைக்க கற்க வேண்டும்***

ஏளிமையான ஆரோக்கியமான உணவுகளை சமைக்க ஆண்களும் பெண்களும் கற்றுக்கொள்ள வேண்டும். சில சூழ்நிலைகளில் அவர்களின் வேலையின் நிமித்தமாக நல்ல உணவுகள் கிடைக்கப்பெறாத இடங்களுக்கு அவர்கள் சென்று வேலை பார்க்க வேண்டி வரலாம். அச்சமயங்களில் அவர்கள் சமைக்க கற்றிருந்திருப்பாகளானால் அது அவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். ***Ministry of Healing p. 323.***

குறைந்த செலவில் சமைத்து உண்ண ஆண்களும் பெண்களும் கற்றுக்கொள்ள வேண்டும். எந்த வகையிலான மாமிச உணவுகளையும் உண்ணக் கூடாது. ***Counsels to Parents, Teachers and Students, p. 313.***

***நல்ல பொருளாதாரத்தை படித்துக்கொள்ளுங்கள், எதையும் வீணாக்காதீர்கள்***

ஒவ்வொரு சமையலுக்கு முன்பாகவும் இக்கேள்வி கேட்கப்பட வேண்டும். ***"ஆரோக்கியமான விதத்தில் முழுமையான ஒரு உணவை குறைந்த செலவிலே சமைப்பது எப்படி "*** மீதமாகும். உணவு துணிக்கைகளும் வீணாக்கப்படக் கூடாது. இப்படி மீதமாகும் உணவுகளை வீணாக்காமல் பயன்படுத்தப் படியுங்கள். இந்த திறமையும் நல்ல பொருளாதாரமும் ஒரு பெரிய சொத்தாகவே இருக்கிறது. கோடைக்காலங்களில் உணவுகளை சற்று குறைவான அளவில் சமையுங்கள். காய்ந்த பொருட்களை அதிகமாக பயன்படுத்துங்கள். அநேக குடும்பங்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். உண்ணுவதற்குப் போதிய அளவு உணவின்றி தவிக்கிறார்கள். இவர்கள் அதிகமாக வீணாக்குவதினால் இந்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். ***Counsels on Diet and Foods p. 358.***

***சந்திக்க வேண்டியவைகள்***



1ST Proof

நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் தேவ மகிமைக்கென்று செய்யுங்கள். சமைப்பது, அவ்வுணவை உண்ண உங்கள் குடும்பத்தினரை அழைக்கும்பொழுது இவ்வசனத்தை நிலைவில் கொள்ளுகிறீர்களா? நல்ல இரத்தத்தை உண்டுபண்ணும் உணவையே உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கிறீர்களா? அவர்களது சரீர இயக்கங்களை ஆரோக்கியத்துடன் காத்துக்கொள்ளும் உணவா அது? சிறந்த ஆரோக்கியத்தையும் ஜீவனையும் அது கொடுக்க வல்லாதாக இருக்கிறதா? இத்தகைய உணவுகளையே உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக வைக்க பிரயாசப்படுகிறீர்களா? அல்லது பிள்ளைகளின் எதிர்கால நன்மையை மனதில் கொள்ளாமல் ஆரோக்கியமற்ற நரம்புகளை தூண்டிவிட்டு, எரிச்சலூட்டும் உணவுகளை கொடுக்கிறீர்களா? ***Testimonies for the Church, Vol. 2, p. 359, 360.***

***அதிகாரம் - 62***

***வாழ்வதற்காக உண்ண வேண்டும்***

***நாட்டங்களும், விருப்பங்களும் தேவன் கொடுத்தவைகள்***

நமது இயல்பான நாட்டங்களும், விருப்பங்களும் தேவனால் நியமிக்கப்பட்டவைகளாக இருக்கின்றன. தூய்மையானவைகளாகவும் பரிசுத்தமானவைகளாக நமக்கு இவைகள் அருளப்பட்டன. நமது எல்லா விருப்பங்களையும் பகுத்தறிந்து செயல்பட வேண்டும் என்பது தேவனின் திட்டமாயிருந்தன. நமது மகிழ்ச்சிக்கென தேவன் இவைகளைக் கொடுத்தார். பரிசுத்தப்படுத்தப்பட்ட ஒரு பகுத்தறிவைக் கொண்டு ஒழுங்காக இந்நாட்டங்களை நாம் கட்டுப்படுத்த வேண்டும். அப்பொழுது தேவனுக்கேதுவான ஒரு புனிதத்தைக் கொண்டிருக்கலாம். ***Temperance p. 12***

***தெய்வீக கவனிப்பு***

இஸ்ரவேலர்களுக்கு தேவனால் ஒரு கல்வி கொடுக்கப்பட்டது. வாழ்வின் எல்லா பழக்கங்களையும் உள்ளடக்கிய ஒரு கல்வியாக இருந்தது. அவர்களது நன்மைக்கான யாவையும் தெய்வீக கவனிப்புக்குக் கீழாக இருந்தது. இஸ்ரவேலர்களைப் பற்றிய அனைத்துமே தேவ சட்டத்திற்கு உள்ளாக நடப்பிக்கப்பட்டது. மிக சிறந்த உணவையே

தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்தார். இதிலும் அம்மக்களின் நன்மையையே தேவன் மனதில் கொண்டிருந்தார். உணவாக மன்னா கொடுக்கப்பட்டது. அது அவர்களது சரீரத்தையும் மனதையும், ஒழுக்கத்தையும் பெலப்படுத்தி வளர்த்தது. வனாந்தரத்தில் பல இடையூறுகளை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. ஆகிலும் அந்த பெரியக் கூட்டத்தில் ஒருவர்கூட பெலவீனமான நிலையில் இருக்கவில்லை. ***Education, p. 38.***

***உண்ணும் உணவு சரீரத்தைக் கட்டுகிறது***

சாம் உண்ணும் உணவைக் கொண்டு நமது சரீரம் கட்டப்படுகிறது. நமது சரீரத்தின் பல தசைகள் தொடர்ந்து உடைந்து கொண்டிருக்கின்றன. வெளி அனுப்பப்பட வேண்டிய கழிவுகளாகின்றன. ஒவ்வொரு அவயத்தின் ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் சக்தி தேவைப்படுகிறது. நாம் உண்ணும் உணவிலிருந்து அது கிடைக்கப்பெறுகிறது. ஒவ்வொரு அவயத்தின் செயல்பாட்டிற்கு ஊட்டச் சத்து தேவைப்படுகிறது. மூளை, எலும்புகள், தசைகள், நரம்புகள், எல்லாம் ஊட்டச் சத்தின் ஒரு பங்கைப் பெற்றுக்கொள்ளுகின்றன. உணவு இரத்தமாக மாற்றப்படுகிறது. இது நம்மை ஆச்சரியப்படுத்தும் மகத்தான செயலாக உள்ளது. இந்த உற்பத்தியாக்கப்பட்ட இரத்தமே சரீரத்தின் பாகங்களைக் கட்டுகிறது. இது தொடர்ந்து நடக்கிறது. இதனால் ஒவ்வொரு தசையும், நரம்புகளும் அவயமும் பெலனையும் ஜீவனையும் பெறுகிறது. நாம் உண்ணும் உணவே நம் சரீர அவயங்களின் செயல்பாடுகளினால் வரும் தேய்மானங்களைச் சரிசெய்கிறது. ***Ministry of Healing p. 295.***

***கைக்குழந்தைக்கும் சரியான உணவைக் கொடுத்து இவ்வேலையை துவங்குங்கள்***

பிள்ளைகளை சரியான உணவு பழக்கங்களுக்குள்ளாக வழிநடத்த வேண்டும். இதன் முக்கியத்துவம் என்றுமே குறையாது. சிறு பிள்ளைகளும் வாழுவதற்காகவே உண்ணுகிறோம் என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். உண்ணுவதற்காக நாம் வாழ்கிறதில்லை என்பதை அறிந்துகொள்ள வேண்டும். கைக்குழந்தையிடமிருந்தும் இப்பயிற்சி துவங்க வேண்டும். குழந்தைக்கும் சரியான நேரத்தில் உணவு கொடுக்கப்பட வேண்டும். குழந்தை வளர்ந்து வரும்பொழுது



1^ST^
Proof

தொடர்ந்து அதற்கு உண்ண கொடுக்கக் கூடாது. உணவின் நேரங்கள் தீர்க்கமாக இருக்க வேண்டும். பெரியவர்களின் உணவுகள் குழந்தைக்குக் கொடுக்கப்படக் கூடாது. இனிப்புகளும் கொடுக்கப்படக் கூடாது. குழந்தையால் அதை செரிமானம் செய்துகொள்ள முடியாது. குழந்தையின் ஆரோக்கியத்தை இது கெடுக்கும். நல்ல மனநிலையும் குழந்தையிடம் உருவாகிறது. குழந்தை அமைதியாக இருக்கும். நல்ல பழக்கங்கள் கற்றுக்கொள்ளப்படுவதற்கு இது அடிப்படையாக அமைகிறது. எதிர்காலத்தில் இது அவர்களுக்கு பெரிய ஆசீர்வாதமாகவும் இருக்கும். ***Ministry of Healing p. 383.***

***நற்சுவைகளைப் பற்றியும் பசியைப் பற்றியும் கற்றுக் கொடுங்கள்***

நல்லவைகளைச் சுவைத்து உண்ணவும் ஆரோக்கியமான உணவுகளின்மீது நாட்டம் கொள்ளும்படியும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். நன்மை தருவபைகளைக் கொண்டு பிள்ளைகள் தங்கள் உணவு பசியை திருப்திப்படுத்திக்கொள்ள வேண்டும். பல வேலைகளில் பிள்ளைகள் அவர்களது போக்கிற்கு விடப்படகிறார்கள். எப்பொழுது வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் உண்ணுகிறார்கள். ஆரோக்கியத்தைக் குறித்து சிந்திப்பதில்லை. ஆரோக்கியமற்ற உணவு பண்டங்களை சாப்பிட பெரு முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. பணமும் அதிகமாக செலவிடப்படுகிறது. பிள்ளைகள் பல வகையான ருசியுள்ள உணவுகளை உண்பதே வாழ்வின் மகிழ்ச்சி என்று நினைத்துக் கொள்ளுகின்றனர். பெருந்தீனிக்காரர்களாக பிள்ளை மாறி நோய்வாய்ப்படுகிறார்கள்.

பிள்ளைகளின் பசியுணர்வை பெற்றோர்கள் சரியாக வழி நடத்த வேண்டும். முழுமையற்ற ஆரோக்கியமில்லாத உணவுகளை எடுத்துக் கொள்ள அனுமதிக்கக் கூடாது. ***Ministry of Healing p. 384.***

***சரீரத்தையும், மனதையும், அறிவையும் உணவு பாதிக்கிறது***

பிள்ளைகளை மகிழ்விப்பதற்காக தாய்மார்கள் கேடானவைகளை அவர்கள் உட்கொள்ளும்படியும் விட்டுவிடுகின்றனர். இவர்கள் தீமையின் விதைகளை விதைக்கிறார்கள். நல்ல ஆரோக்கியத்தையும் நற்பண்புகளையும் மனதில் கொள்ளுவதில்லை. தீய கனிகளை அறுவடை

செய்யப்போகிறார்கள். இப்பிள்ளைகள் வளர, தங்கள் சொந்த ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளும் சுபாவமே பெலனடைந்துவிடும். மனமும் சரீரமும் பலியாகிறது. இந்த வேலையை செய்த தாய்மார்கள் பெருந்துயருடன் அதன் விளைவுகளை சந்திக்கிறார்கள். சமுதாயத்திற்கும், தங்களும் குடும்பங்களுக்கும் ஒரு நல்ல பங்கை ஆற்ற தகுதியற்றவர்களாகிறார்கள். மனமும் சரீரமும் ஆரோக்கியமற்ற உணவினால் பெலவீனப்படுகின்றன. மனசாட்சி மந்தமாகிறது. பகுத்தறிவு முடமாகிறது. ***Diets and Foods p. 230.***

***சிறந்த உணவுகளை தேர்ந்தெடுங்கள்***

சிறந்த உணவுகளை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இதை அறிந்திட ஆதியில் தேவன் மனிதனுக்கு வைத்திருந்த உணவு திட்டத்தைப் பார்க்க வேண்டும். மனிதனை சிருஷ்டித்து அவனது தேவைகளை அறிந்திருந்த தேவன், ஆதாமின் உணவை நிர்நயித்தார். பழங்களும், காய்கறிகளும், தானியங்களும், விதைகளுமே தேவன் தனிதனுக்குக் கொடுத்திருந்த உணவுகள். ***Ministry of Healing p. 295, 296.***

***பசியைத் தூண்டும் விதத்திலும், எளிமையாகவும் ஆயத்தப்படுத்துங்கள்***

நல்ல பசியை திருப்திப்படுத்திக்கொள்ள அநேக உணவுகளை தேவன் மனிதனுக்கு வைத்திருக்கிறார். பூமியின் பலன்களை அவனுக்கு முன்பாக வைத்திருக்கிறார். வெவ்வேறு வகையான, ஆரோக்கியமான, சுவை நிறைந்த சத்து நிறைந்த உணவுகளாக இவைகள் உள்ளன. இவைகளை நாம் எந்த தடையுமின்றி உண்ணலாம் என்று நம்மீது அக்கரைகொண்டுள்ள பரலோக பிதா கூறுகிறார். பழங்களும் தானியங்களும் காய்கறிகளும் எளிய முறையில் ஆயத்தப்படுத்தப்பட வேண்டும். எந்த வகையான கொழுப்பும் இருக்கக் கூடாது. இவைகளுடன் நல்ல பாலும், பாலாடை மேலேடும், சேர்த்துக்கொள்ளப்படலாம். இது ஒரு ஆரோக்கியமான உணவுத் திட்டம். சரீரத்திற்கு சக்தியைக் கொடுத்து, அறிவாற்றலைக் கூட்டுகிறது. நமது நரம்புகளையும் உணர்வுகளையும் தூண்டும் உணவுகளில் இத்தன்மைகள் இருக்காது. ***Counsels on Diet and Food. P. 92.***



1ST Proof

***நமது ஆசைகள் நம்பத்தகுந்தவைகளல்ல***

நமது சரீரத்தை கட்டக்கூடிய சிறந்த உணவுகளை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். நமது விருப்பத்தினால் நாம் வழிநடத்தப்படக் கூடாது. தவறான உணவுப் பழக்கங்கள், தீயவைகளை உண்ணும் ஆசையை உருவாக்கியுள்ளது. சரீரத்தைக் கெடுக்கும் பண்டங்களை சாப்பிட நாம் இதனால் தூண்டப்படுகிறோம். தவறான உணவுகளினால் இன்றைக்கு பல இடங்களில் நோய் காணப்படுகிறது. ***Ministry of Healing p. 295.***

***தீயவைகளை உண்ணும் நாட்டத்தை பின்பற்றி பிள்ளைகள்***

என் பிள்ளைகள் மாமிச உணவும், முட்டை, வெண்ணை, சர்க்கரை சேர்த்து உலையடுப்பில் வரட்டியாக செய்யப்படும் இனிப்பான பண்டங்களும் (கேக்குகள்) இல்லாமல் சாப்பிட விருப்பங்காட்டுவதில்லை என்று அநேகர் கூற நான் கேட்டிருக்கிறேன். அவர்களது மத்திய உணவை கவனித்தேன் மிளகில் பொரிக்கப்பட்ட மாமிச உணவும், சுவையூட்டிகளும் நறுமனப்பொருட்களாலும், சிறு ஊர்காய்த் துண்டுகள் பரப்பப்பட்டதாகவும் இருந்தது. அப்பிள்ளைகளின் ஆரோக்கியத்தை அவர்களது முகங்களில் கண்டேன். முகங்கள் வாடி துவண்ட நிலையில் இருந்தன. அவர்களது வயிறுகளின் பரிதபிக்கும் நிலையை அவர்களது முகங்கள் காட்டின. சேரிமான அவையமான வயிற்றிற்கு அது தாங்க இயலாத சுமைகளை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு அண்மையில் இன்னொரு குடும்பம் பாலாடைக் கட்டிகளை உண்டுகொண்டிருந்தார்கள். மாமிச உணவை உண்டுகொண்டிருந்த பிள்ளைகள் அடுத்த குடும்பத்தன் பாலாடை கட்டிகளின்மீது நாட்டம் காட்டினார்கள். அது கிடைத்தால்மட்டுமே தங்களது உணவை உண்ணப்போவதாக அடம் பிடித்தார்கள். அப்பிள்ளைகளின் தாய் ஒரு சிறு பாலாடை கட்டியைக் கேட்டு பெற்று தன் பிள்ளைகளுக்குக் கொடுத்தார். பிள்ளைகள் தங்களது உணவை உண்ணாமல் போய்விடுவார்கள் என்று பயந்து தாய் இப்படி செய்தாள். ***"என் பிள்ளைகள் இதையே அதிகமாக விரும்புகிறார்கள். அவர்களது விருப்பத்திற்கு நான் விடுகிறேன். அவர்களது சரீரத்திற்கு***

***இத்தகைய உணவுகளே ஏற்புடையதாக இருக்கிறது"*** என்று அத்தாய் கூறினாள்.

தவறான உணவுகள் பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்டன. ஆகவே தீயவை உண்ணும் ஆசையே அதிகமாகிவிட்டது. மற்றவைகளை உண்ண அவர்கள் நாட்டம் காட்டுவதில்லை. பெற்றோர்களே இப்பிள்ளைகளுக்கு தவறான பசி ஆசைகளை தூண்டிவிட்டிருக்கின்றனர். காபியும், டீயும், சுவையூட்டிகளும், நறுமணப்பொருட்களும் இல்லாமல் சரீரத்தால் இயங்க முடியாது என்று நினைகிறார்கள். அவர்களது பசியுணர்வு தவறாக வழிநடத்தப்பட்டிருக்கிறது. வயிற்றின் அவையங்களும் அவைகளின் மென்மையை இழந்திருக்கின்றன. எளிமையான ஆரோக்கியமான உணவு சுவையில்லாததாகத் தெரிகிறது. வழக்கமாக திணிக்கப்படும் உணவு பண்டங்கள் கொடுக்கப்பட்டால் மாத்திரமே வயிறும் அதன் வேலையை செய்ய தூண்டப்படுகிறது. இப்பிள்ளைகள் அவர்களது குழந்தைப் பருவத்திலிருந்து சரியாக பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும். சுவையூட்டிகளும், கொழுப்பும் இல்லாத ஆரோக்கியமான எளிய உணவுகளை எடுத்துக்கொள்ள பழகியிருக்க வேண்டும். இது நடந்திருந்தால் நல்ல உணவுகளை உண்ண நாட்டம் உருவாகியிருக்கும். எந்த உணவும் அதனுடைய இயற்தன்மையில்தாமே சரீரத்துக்கு சிறப்பான உணவாகிறது. ஆதிகமாக சமைக்கப்படும்பொழுதும், பதப்படுத்தப்படும்பொழுது உணவின் தன்மை மாறிவிடுகிறது. ***Counsels on Diet and Foods p.239.***

***மாமிச உணவுகள்***

உணவை குறித்து இதைத்தான் பின்பற்ற வேண்டும் என்று எந்த ஒரு திட்டத்தையும் நான் சொல்லவில்லை. ஆயினும் பழங்களும் காய்கறிகளும், தானியங்களும், விதைகளும் நன்றாக கிடைக்கக்வுகூடிய நாடுகளில் மாமிச உணவு தேவ பிள்ளைகளுக்கு ஏற்ற உணவல்ல. மாமிச உணவானது மனித சுபாவத்தை மிருகத்தைப்போல மாற்றுகிறது என்று நான் அறிவுறுத்தப்பட்டேன். மனிதர்கள் மற்றவர்கள்மீது அன்புடனும் கரிசனையுடனும் நடந்துகொள்ளும் பண்பை இழந்துவிடுகிறார்கள். ஆசைகளும் இச்சைகளும் மாமிச உணவு தூண்டுகிறது. இவைகள் பகுத்தறிவிற்கும் மேலாக செயல்படுகின்றன. மாமிச உணவை உட்கொள்ளுதல் கடந்த காலங்களில் ஆரோக்கியத்தை தருவதைப்போன்று கருதப்பட்டிருந்தாலும், இன்றைய காலதில் அது பாதுகாப்பானது அல்ல. ***Testimonies for the Church, Vol. 9, p.159.***

***மாமிச உணவை விடவேண்டிய காரணங்கள்***

மாமிச உணவை உட்கொள்ளுகிறவர்கள் காய்கறிகளிலிருந்தும் தானியங்களிலிருந்தும் வரும் சக்தியையே பெறுகிறார்கள். இதை நேரடியாக பெறுகிறதில்லை. மிருகங்கள் தாவரங்களையும் காய்கறிகளையும் உண்டு தங்கள் சரீரங்களை வளர்க்கின்றன. மிருகங்களின் மாமிசத்திலிருந்து அதே சக்தியை அதை உண்ணும் மனிதர்கள் பெற்றக்கொள்ளுகின்றனர். இச்சக்தியை நேரடியாக காய்கறிகளிடமிருந்தும், பழங்களிலிருந்தும், கீரைகளிலிருந்தும் எவ்வளவு மேன்மையானதாக இருக்கும். இந்த உணவையே நாம் உண்ண தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார்.

மாமிச உணவு நமக்கேற்ற உணவாக இருக்க அல்ல. இன்றைக்கு நிச்சயமாகவே அதன் கேடுகள் அதிகரித்துள்ளன. மிருகங்களில் பல நோய்கள் பரவிக்கொண்டிருக்கின்றன. மாமிச உணவுகளை உட்கொள்ளுகிறவர்கள் தாங்கள் எதை உண்ணுகிறார்கள் என்பதை அறியாதிருக்கிறார்கள். சொல்லப்படுவதற்கு முன்பு அவர்கள் புசிக்கும் மிருகத்தின் நிலையை அவர்கள் பாத்திருப்பார்களானால், அந்த உணவை வெறுத்திருப்பார்கள். புற்றுநோயையும், காச நோயையும் கொண்டு வரும் கிருமிகளையுடைய மாமிசத்தை புசிக்கிறார்கள். இவைகள் மட்டுமின்றி மற்ற கொடிய நோய்களும் பரப்பப்படுகின்றன. ***Ministry of Healing p. 313.***

***இதன் விளைவுகளை உடனே பார்ப்பதில்லை***

மாமிச உணவின் பாதிப்பை உடனுக்குடன் நாம் அனுபவிக்காமல் இருக்கலாம். இதனால் அது தீமையல்ல என்பதற்கு இது ஆதாரம் இல்லை. தாங்கள் உண்ட மாமிச உணவே தங்கள் இரத்தத்தை அசுத்தப்படுத்தி, அவர்களை நோயாளிகளாக மாற்றியுள்ளது என்பதை வெகு சிலரே நம்புவார்கள். மாமிச உணவை உட்கொண்டதினால் வந்த நோய்களின் நிமித்தமாகவே அநேகர் மாளுகின்றனர். இதை

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

எவரும் அறியாதவர்களாக இருக்கிறார்கள். ***Ministry of Healing p. 315.***

*ஆதியில் கொடுக்கப்பட்ட உணவிற்குத் திரும்புதல்*

எல்லோரும் மாமிச உணவை விட்டுவிட வேண்டிய நேரம் வந்துவிட்டது. தூய்மையை அடைய பிராயசப்பட்டுக்கொண்டு, தேவதூதர்களின் ஐக்கியத்திற்கு ஆயத்தமாகிக்கொண்டிருப்போர் இத்தகைய கேடுகளை விளைவிக்கும் மாமிச உணவை எப்படி உண்ண முடியும்? ஆத்துமத்தையும் சரீரத்தையும் இது பாதிக்கிறது. மாமிச உணவை பெரிய இன்பமாக மக்கள் நினைத்துக்கொண்டு இதனால் மறித்துப்போகின்றனர். இதை மற்றவர்களுக்கு கொடுப்பவர்கள் மறைமுகமாக அவர்களின் ஜீவனை அழிக்கும் வேலையை செய்கின்றனர். ஆதியில் மனிதனுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட உணவுத்திட்டத்திற்கு எல்லோரும் திரும்ப வேண்டும். ***Ministry of Healing p. 317.***

*கிறிஸ்துவிற்காக காத்திருப்போரின் வழி*

கிறிஸ்துவின் வருகைக்காக காத்திருப்போரின் மத்தியிலிருந்து மாமிச உணவை உண்ணும் பழக்கம் நீங்கிவிடும். மாமிசத்தை அவர்கள் உண்ணமாட்டார்கள். இதை நாம் மனதில் வைத்துக்கொண்டு இதற்காக பிரயாசப்பட வேண்டும். தேவன் நமக்கு கொடுத்திருக்கும் வெளிச்சதிற்கு உகந்ததாக மாமிச உணவு உட்கொள்ளும் பழக்கம் இல்லை என்பதை நான் பார்க்கிறேன். ***Counsels on Diet and Food p. 380, 381.***

*தேவதிட்டத்துக்கு திரும்புதல்*

தேவன் தனது ஜனங்களை அவரது ஆதி திட்டத்திற்குள்ளாக கொண்டுவந்துகொண்டிருக்கிறார் என்பது எனக்கு காட்டப்பட்டது. இறந்த மிருகங்களின் மாமிசத்தைச் சார்ந்து வாழக்கூடாது. இதைவிட ஒரு மேலான வழியை தேவன் காட்டுகிறார். முாமிச உணவை உண்ணும் பழக்கம் விளக்கப்பட வேண்டும். அந்த சுவையை விரும்பும்படி நாம் வழிநடத்தப்படக்கூடாது. தானியங்களையும் பழங்களையும் உட்கொள்ள நாம் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். எல்லோரும் இதை செய்ய ஊக்குவிக்கப்பட வேண்டும் இது நடக்குமானால் தேவன் நமக்கு கொடுத்த ஆதிதிட்டத்துக்கு திரும்பிவிடுவோம். தேவ மக்கள் மாமிச



1ST Proof

உணவை உபயோகிக்க மாட்டார்கள். ***Counsels on Diet and Food p. 82.***

*உணவை மாற்ற அறிவுறுத்தல்*

மாமிச உணவை உட்கொள்ளுவதினால் மட்டுமே பெலம் கிடைக்கும் என்று நினைப்பது தவறு. இதை பயன்படுத்தாமலும் சரீரத்தின் தேவை சிறப்பாக சந்திக்கப்படலாம். ஆரோக்கியம் காக்கப்படலாம். நல்ல இரத்தத்தை உண்டு பண்ணுவதற்கான எல்லா சத்தும், காய்கறிகளிலும் பழங்களிலும் தானியங்களிலும், விதைகளிலும் உள்ளன. இவைகளில் கிடைக்கப்பெறும் முழுமையான சத்துக்கள் மாமிச உணவிலிருந்து கிடைப்பதில்லை. ஆரோக்கயத்திற்கும் பெலத்திற்கும் மாமிச உணவு அவசியமாக இருந்திருப்பின் ஆதி உணவுத் திட்டத்தில் தேவன் அதை உட்படுத்தியிருப்பார்.

மாமிச உணவை உட்கொண்டிருந்தோர், அப்பழக்கத்தை விட்டவுடன் ஒருவிதமான பெலவீனத்தை உணருவார்கள். இதன் காரணமாக மாமிச உணவு அவசியமானது என்று பலர் கூறுவர். உண்மை இதுவன்று. இந்த வகையான உணவுகள் நமது நரம்புகளை தூண்டக்கூடியவைகளாக இருக்கின்றன. இவை நிறுத்தப்படுவதால் இந்த தூண்டுதல்கள் இல்லாத ஒரு நிலை வருகிறது. இதுவே பெலவீனமாக இருப்பதைப்போன்று உணரப்படுகின்றது. குடிகாரன் அப்பழக்கத்தைவிட இயலாமல் தவிப்பதைப் போன்று மாமிச உணவுப்பழக்கத்தையும்விட இயலாமல் சிலர் தவிப்பார்கள். இந்த மாற்றம் நன்மையையே கொண்டுவரும்.

மாமிச உணவு நிறுத்தப்பட்டவுடன், அதற்கு பதிலாக வெவ்வேறு தானியங்களை, பழங்களையும், காய்கறிகளையும், கொட்டைவகையான உணவுகளையும் உண்ண வேண்டும். இது சத்தையும் கொடுத்து பசியையும் தூண்டுவதாக அமையும். பெலவீனத்தை உணருவதாக நினைப்பவர்களுக்கு இது அவசியம். ஆதிக சரீர வேலையில் ஈடுபட்டிருப்போருக்கும் இது செய்யப்பட வேண்டும். ***Ministry of Healing p. 316.***

***நன்றாக ஆயத்தப்படுத்தப்பட்ட மாற்று உணவுகள் உதவியாயிருக்கின்றன.***

மாமிச உணவு விடப்பட்ட நிலையில் நல்ல சமையலின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது. உண்ணப்பட்டிருந்த மாமிச உணவிற்கு பதிலாக நன்றாக ஆயத்தப்படுத்தப்படும் மற்ற உணவுகளை உண்ண வேண்டும். பழைய உணவின் இடத்தை இது பிடிக்க வேண்டும். பழைய உணவிற்கான ஆசையும் வராதிருக்கும். ***Letter 60a, 1896.***

சில குடும்பங்கள் மாமிச உணவை விட்டன. அவர்கள் சத்து இல்லாத ஒரு உணவுத் திட்டத்தை வைத்திருந்தார்கள். வயிறு விரும்ப முடியாத உணவுகளை சமைத்து உண்ணுகிறார்கள். இப்படிப்பட்டோர் ஆரோக்கிய சீர்திருத்தத்தை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று முயற்சி செய்தும் தோல்வியுற்றதைப்போல் பேசுகிறார்கள். தங்கள் பெலன்கள் குறைவதாகவும் கூறுகிறார்கள். இவர் மாமிச உணவைவிட்டது நல்லதாக இருந்தாலும், அதற்கு பதிலான நல்ல உணவுகளை எடுத்துக்கொள்ளுவதில்லை. அவர்களின் உணவுகள் சத்தற்றவைகளாக இருக்கின்றன. நல்ல உணவுகளை ஆயத்தப்படுத்த முயற்சி எடுக்கப்படுவதில்லை. ஒரே வகையான உணவையே எல்லா சமயங்களிலும் உண்ணுகிறார்கள்.

ஒரு வேளை சாப்பிடும்பொழுது பல்வேறு உணவுகள் இருக்கக்கூடாது. ஆனால் ஒவ்வொரு வேளைக்கும் வெவ்வேறு உணவுகள் இருக்க வேண்டும். உணவு எளிமையானதாகவும் பசியை தூண்டக்கூடியதாகவும் இருக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol..2, p. 63.***

***தவறான உணவு ஆசைகளை மேற்கொள்ளுதல்***

அதிகமான சுவையூட்டிகளை உபயோகித்து நரம்புகளை தூண்டக்கூடிய உணவுகளை உண்போர், எளிமையான சாதாரண உணவுகளை உடனே விரும்ப முடியாது. அவர்களுக்கு தவறான உணவுகளின் மீது ஆசை வருகிறது. மற்ற உணவுகள் பசியைத் தூண்டுவதில்லை. நன்றாக உண்ணும் நாட்டத்தை ஏற்படுத்துவதில்லை. இது மாறுவதற்கு காலம் எடுக்கும். தவறான சுவைகளின் நாட்டங்கள் மாறி நல்ல உணவுகளின் மீது பசி ஆர்வம் வர வேண்டும். வயிறும் அதன் பாதிப்பிலிருந்து உடனே மீள முடியாது. ஆயினும் இதை விடாமல் கைக்கொள்ளுவோர், நல்ல உணவுகளை தொடர்ந்து உட்கொள்ளுவோரின் பசி நாட்டங்களும் நாட்பட மாறும். எளிமையான உணவுகளை சாப்பிடவும் விருப்பம் எழும், அவ்வுணவுகளும் பசியைத் தூண்டுபவைகளாக இருக்கும். நல்ல உணவுகளில் சுவைகளும் நறுமனங்களும் பாராட்டப்படும். சிறிது காலத்திற்கு பிறகு, மாமிச உணவை உட்கொண்டபொழுது அனுபவித்த சுவைகளையும் திருப்தியைவிட இவ்வுணவுகள் நல்ல மகிழ்ச்சியையும் திருப்தியையும் கொடுக்கும். இவைகளில் சுவை மாமிச உணவின் சுவையைவிட மேலாகத் தோன்றும். வயிறும் ஆரோக்கியத்தைப் பெறும். அதிகமான பலு அதற்கும் இருக்காது. அதன் வேலைகளைச் செய்ய நல்ல ஆயத்தத்துடன் இருக்கும். ***Ministry of Healing p. 298, 299.***

1ST Proof

***ஆரோக்கியத்திற்கு உண்ணுதல் தியாகமல்ல***

தீங்கான உணவுகளின்மீது வரும் பசி ஆசையை கட்டுப்படுத்தி ஆரோக்கியமான உணவுகளை உண்ண பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்களுக்கு கேட்டை விளைவிக்கக் கூடியவைகளையே அவர்கள் ஒதுக்குகிறார்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். கெட்ட உணவுகளை விடுகிறார்கள். அவற்றிற்கு பதிலாக மற்ற ஆரோக்கியமான உணவுகளை உண்ணுகிறார்கள். பசி ஆசையை தூண்டக்கூடிய நல்ல உணவுப் பொருட்கள் உண்ணும் மேஜையின்மீது வைக்கப்படட்டும் அளவில்லாத நல்ல உணவுகளை தேவன் நமக்கென வைத்திருக்கிறார். ***Ministry of Healing p. 385.***

***வேலைக்கும், சீதோஷண நிலைக்கும் ஏற்ற உணவு***

எல்லா சூழ்நிலைகளுக்கும் எல்லா உணவுகளும் ஏற்றதாக இருக்காது. அக்கரையுடன் உணவு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நாம் செய்யும் தொழிலுக்கும், நாம் வசிக்கும் இடத்திலுள்ள சீதோஷன நிலைக்கேற்றதான உணவுகளை உண்ண வேண்டும். வருடத்தின் ஒரு காலத்திற்கு உகந்ததான உணவு மற்ற காலங்களுக்கு ஏற்புடையதாக இராது. வெவ்வேறு தொழில்களை செய்வோருக்கு



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

வெவ்வேறு உணவுகள் பொருத்தமாக இருக்கும். எல்லோருக்கும் ஒரே வகையான உணவுகள் பொருந்தாது. சரீரத்தை அதிகமாக பயன்படுத்தி வேலைசெய்வோருக்கான உணவு, அறிவை பயன்படுத்தி உட்கார்ந்து வேலை செய்யும் நபர்களுக்கு பொருந்தாது. இத்தேவைகளுக்கென்றே வெவ்வேரு வகையான ஆரோக்கியமான உணவுகளை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். அனுபவத்தை கொண்டும் நன்றாக பகுத்தறிந்தும் நமக்கேற்ற உணவுகளை தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். ***Ministry of Healing p. 296, 297.***

***அறிவாற்றலை கொண்டு திறம்பட சமைக்க வேண்டும்.***

பசியை திருப்திப்படுத்துவதற்காக மட்டும் உண்ணுவது தவறு. நல்ல உணவுகளை நன்றாக ஆயத்தப்படுத்த வேண்டும். இதில் அசட்டையாக இருந்துவிடக்கூடாது. உண்ணும் உணவின் சுவை இரசிக்கப்பட்டு உண்ணப்பட வேண்டும். அப்போதுதான் அதுநல்ல சத்தைக் கொடுக்கும். அக்கரையுடன் உணவுகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அறிவாற்றலைப் பயன்படுத்தி திறமையான விதத்தில் சமைக்க வேண்டும். ***Ministry of Healing p. 300.***

***நாம் எதையும் உண்ணலாம்***

பல குடும்பங்களில் வருகின்ற விருந்தாளிகளுக்குப் பெரிய ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. பல உணவுகள் ஆயத்தப்படுத்தப்படுகின்ற இந்த வெவ்வேறு வகையான உணவுகள் வருகின்ற விருந்தினருக்கு ஒரு சோதனையாகிறது. சிலர் ஒரே வேளையில் பல்வேறு உணவுகளை உண்ணும் பழக்கமில்லாதவர்களாக இருப்பார்கள்.

இப்படியாக விருந்தினருக்கு விசேஷித்த ஆயத்தங்களை செய்யும் சிலரைப் பற்றி நான் அறிந்திருக்கிறேன். விருந்தாளிகள் இல்லாத மற்ற சமயங்களில் தங்கள் குடும்பத்துக்கு சமைப்பதில் இவர்கள் ஒரு ஒழுங்கை கைக்கொள்ளுவதில்லை. தாயாகவும், மனைவியாகவும் இருக்கும் ஸ்திரி தனது வசதியை மட்டுமே மனதில் கொண்டு எதையும் சமைக்கிறாள். அந்த உணவு பிள்ளைகளையும், கணவனையும் மகிழ்விக்குமா என்பதை பார்ப்பதில்லை. விருந்தாளிகளை கவனிப்பதில் பெரிய ஆயத்தங்கள் செய்யப்படுகிறது. தன் குடும்பம் என்று



1ST Proof

வரும்பொழுது "நமக்கு தானே" எதுவும் நமக்கு நல்லதாக இருக்கும் என்று நினைக்கப்படுகிறது. கடமைக்கென்று மேஜையின்மீது ஒரு உணவு வைக்கப்படுகிறது. அது விரும்பப்பட்டு சுவை அறிந்து உண்ணப்பட எந்த முயற்சியும் செய்யப்படுவதில்லை. "நமக்கு என்பதால்" எதை உண்ணலாம் என்றே பாவிக்கப்படுகின்றது. ***Manuscript 1, 1876.***

***உணவின் நேரம், மகிழவைக்கும் குடும்ப ஐக்கியத்தின் சமயம்***

உணவின் நேரங்கள் நல் ஐக்கியத்தின் சமயமாக இருக்க வேண்டும். குடும்பத்தினர் ஒருவரோடொருவர் கொண்டுள்ள உறவைப் புதுப்பித்துக்கொண்டு பெலப்படுத்திக்கொள்ளுகிற நேரமாக இருக்க வேண்டும். வெறுப்பையோ, மனசோர்வையோ கொடுக்கும் எதுவும் அங்கு கொண்டுவரப்படக் கூடாது. பாரமான எதுவும் அங்கு இருக்கக் கூடாது. தேவ நம்பிக்கையும் அன்பும் நிலவுகின்ற ஒரு மனப்பான்மை எல்லோரிடமும் இருக்க வேண்டும். இது சொற்களும் வார்த்தைகளும் எல்லோரையும் மகிழ்விக்கும்படியாக செய்யும். எல்லோரும் மேம்படுத்தப்படுவார்கள். எவரும் சோர்வாக காணப்பட மாட்டார்கள். ***Education, 206.***

பெற்றோர் செய்யும் தவறுகளினால், பிள்ளைகள் அவர்களை எதிர்க்கும் இடமாக உணவின் மேஜை இருக்கக் கூடாது. முழு குடும்பமும் மகிழ்ச்சியுடனும் நன்றியுணர்வுடனும் உண்ண வேண்டும். தேவனை நேசித்து அவருக்கு கீழ்ப்படிவோர் ஆட்டுக்குட்டியானவரின் திரமான விருந்திலும் உண்ணுவார்கள் என்பதை நினைவுகூற வேண்டும். அந்த விருந்தில் இயேசுவே எல்லோருக்கும் பரிமாருபவராக இருப்பார். ***Letter 19, 1892.***

***உணவு உண்பதில் ஒரு ஒழுங்கு***

ஒரு ஒழுங்கின்றி எல்லா நேரங்களிலும் உண்ணுவது செரீமான அவையங்களின் ஆரோக்கியத்தைக் கெடுக்கிறது. இதனால் சரீர ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் குலைகிறது. ***Ministry of Healing p.384.***

ஒரு ஒழுங்கின்றி நாம் உணவுகளை உண்ணக் கூடாது. இரவின் உணவின் நேரத்தைவிட ஒரு மணி நேரம், அல்லது இரண்டு மணி நேரத்திற்கு முன்பாக உணவு உட்கொள்ளப்பட்டால், வயிறு அந்த

உணவை பெற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்காது. அதற்கு முன்பாக உண்ணப்பட்ட உணவு முழுமையாக செரித்திருக்காது. இது புது சுமையை ஏற்றுக்கொள்ள வயிறு பெலனற்றதாக இருக்கும். சரீர இயக்கங்களுக்கு அதிக பலு கொடுக்கப்படுகின்றது.

அதே சமயம் ஒரு மணி நேரமோ, அல்லது இரண்டு மணி நேரமோ உணவை தாமதமாகவும் உண்ணக் கூடாது. வேலையின் நிமித்தமாக இப்படி நடக்கக் கூடும். வழக்கமாக உணவு பெறப்படும் வேளையில் வயிறானது உணவை எதிர்ப்பார்க்கிறது. அந்நேரத்தில் உணவு கொடுக்கப்படாவிட்டால் அதன் செயல்திறன் குன்றுகிறது. பசி முற்றிலும் அடங்கிவிடும் நிலை வந்துவிடும். இந்நிலையில் உண்ணப்படும் உணவை வயிற்றினால் சரியாக கையாள முடியாது. உணவு நல்ல இரத்தமாக மாற்றப்பட முடியாமல் போகிறது. எல்லோரும் சரியான நேரத்தில் உண்ண வேண்டும். இடையில் எதையும் உண்ணக் கூடாது. இதை அவர்கள் கைக்கொண்டால் உணவு அவர்களுக்கு அதிகமான இன்பத்தையும் மகிழ்ச்சியையும் தரும். அவர்களது நல் முயற்சிகளும் ஏற்ற வெகுமதிகளை பெறுவர். ***Counsels on Diets and Foods p. 179.***

***எதை உண்ண வேண்டும், எப்படி உண்ண வேண்டும், எப்பொழுது உண்ண வேண்டும் பிள்ளைகளுக்கு இவைகளைச் சொல்லிக் கொடுங்கள்.***

இந்த விஷயங்களின் முக்கியத்துவத்தை எவரும் பிள்ளைகளுக்குப் பொதுவாகச் சொல்லிக்கொடுப்பதில்லை. எல்லாவற்றையும் உண்ண அனுமதிக்கப்படுகிறார்கள். எல்லா நேரங்களிலும் பார்த்து விரும்பும் எதையும் உண்ணுகிறார்கள். தொடர்ந்து உண்டுகொண்டே இருப்பதினால், உணவுப்பிரியர்களாகிறார்கள். மகிழ்ச்சியற்ற மனநிலையைப் பெறுகிறார்கள். எளிதில் எரிச்சடைகிறார்கள். செரிமான அவையங்கள் இயந்திரத்தைப் போன்று தொடர்ந்து வேலைசெய்து கொண்டே இருக்க வேண்டியுள்ளது. இதனால் செயலாற்ற இயலாதபடி பெலவீனப்படுகின்றன. இந்த வேலை நடக்க மூளையிடமிருந்து அதிகமான சக்தி பெற்றுக்கொள்ளப்படுகிறது. மூளையும் பெலவீனப்படுகிறது. இத்தவறான பசித் தூண்டுதல்களினால் சரீரத்தின் வீரியம் குறைகிறது. இந்நபர்கள் பெலவீனர்களாக



1ST Proof

மாறுகிறார்கள். கட்டுப்பாட்டிற்கு அடங்காமல் எரிச்சலடைகின்றனர். இத்தகைய பிள்ளைகளை பெற்றோரின் மேற்பார்வையிலேயே இருக்க வேண்டியுள்ளது. இவர்களின் மீது நம்பிக்கை வைத்து தனியாக விட முடியாது. நல்லொழுக்கமும் மந்தமாக்கப்பட்டு மறித்துப்போகிறது. பாவத்தின் அகோரத்தையும் அசிங்கத்தையும் இவர்களை பார்க்க வைக்க முடியாது. பொய் கூறுதல், ஏமாற்றுதல் போன்ற கெட்ட பழக்கங்களை எளிதில் கற்கிறார்கள் எதிலும் நிலையற்றவர்களாக மாறுகிறார்கள்.

பிள்ளைகளின் இத்தவறுகளை பெற்றோர் அருவருக்கின்றனர். அவர்களின் தவறான வழிநடத்துதலே இத்தீமைக்கு காரணம் என்பதை உணருவதில்லை. பிள்ளைகளின் நாட்டங்களையும் ஆசைகளையும் கட்டுப்படுத்தும் அவசியத்தை அவர்கள் பார்க்கவில்லை. பிள்ளைகளிடம் இத்தீமைகள் வளர்ந்து வல்லமை பெற்றிருக்கின்றன. மனதையும் சரீரத்தையும் பாதிக்கும் உணவை தாய்மார்கள் செய்து பிள்ளைகளுக்கு முன்பாக வைக்கின்றனர். ***Pacific Health Journal May 1890.***

***இடையில் எதையும் உண்ணாதீர்கள்***

வயிற்றிற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். தொடர்ந்து வேலைசெய்து கொண்டே இருக்கும்படி வைக்கப்படக் கூடாது. இதற்கு ஓய்வையும், அமைதியையும் கொடுப்போம். இது நம்மால் தவறாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு வேளையின் உணவை உண்ட பிறகு வயிற்றுக்கு ஐந்து மணி நேர ஓய்வு கொடுக்க வேண்டும். அடுத்த வேளை உணவிற்கு முன்பாக சிறு அளவில் கூட எதையும் உண்ணக் கூடாது. இந்த இடைவெளியில் வயிறு அதன் வேலையை செய்யும். அடுத்த உணவை பெறவும் ஆயத்தமாகும். ***Counsels on Diets and Foods p. 173, 179.***

பிள்ளைகளை இடைஇடையே உண்ண தாய்மார்கள் விட்டுவிடுகிறார்கள். இது பெரிய தவறு. இதனால் வயிறு சமநிலையை இழக்கிறது. எதிர்கால நோய்க்கு அடித்தளம் போடப்படுகிறது. பிள்ளைகள் பல சமயங்களில் கோபங்கொண்டு எரிச்சலடைகின்றனர். செரிக்காத உணவுகளே இப்பண்புகளை கொண்டுவருகின்றன. இதை நேரம் எடுத்து ஆராய்ந்து, தன் தவறான நிர்வாகத்தை தாய்

திருத்திக்கொள்ளுவதில்லை. பிள்ளைகளின் பொறுமையற்ற நிலையையும் நிறுத்தமுடியாமல் தாய் தவிக்க வேண்டியுள்ளது. அவர்களை அமைதிப்படுத்த ஒரு சிறிய இனிப்புத் துண்டையோ ஒரு பதார்த்தத்தையோ உண்ண கொடுக்கிறாள். அவர்கள் அமைதி கொள்ளுவார்கள் என்று நினைக்கப்பட்டு இது செய்யப்படுகிறது. உண்மையில் இது தீமையைக் கூட்டுகிறது.

பல நேரங்களில் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளின் சரீரங்கள் பெலவீனமாக இருப்பதாக மருத்துவரை அணுகுகிறார்கள். சிறிதளவு பகுத்தறிந்து அவர்கள் செயல்பட்டால் தவறானது உணவில் உள்ளது என்பதை பார்ப்பார்கள். ***Christian Temperance and Bible Hygiene p. 61.***

***தூங்குவதற்கு முன் நொருக்கு தீனிகளை உண்பது இது ஒரு கேடான பழக்கம்***

இரவில் வெகு நேரம் சென்ற பிறகும் உறங்குவதற்கு முன்பாக நொறுக்கு தீனிகள் உண்ணப்படுகின்றன. சரியான நேரத்தில் சாப்பிட்டிருப்பார்கள். ஆயினும் ஏதோ ஒரு சோர்வை உணர்வதில்லை எதையேனும் மீண்டும் உண்ணுகிறார்கள். இது பழக்கமாகிவிடுகிறது. இது இன்றி உறங்க இயலாது என்று தோன்றும் நிலை வருகிறது. இரவு உணவானது தாமதமாக உண்ணப்படக் கூடாது. உறங்குவதற்கு சற்று முன்பாக உண்டால், உறங்கும் நேரங்களில் வயிறு அதன் வேலையை செய்ய வேண்டியிருக்கிறது. அது தொடர்ந்து வேலை செய்தாலும் அதின் வேலையை அதனால் சரியாக செய்யமுடிவதில்லை. இதனால் ஆழ்ந்த தூக்கம் வருவதில்லை. கெட்டகனவுகள் வருகின்றன. காலையில் எழும்பும்பொழுது இந்நபர்கள் சோர்வாகவே எழுந்திருப்பார்கள். காலை உணவின்மீது ஒரு நாட்டம் இராது. தூங்குவதற்காக நாம் படுக்கும்பொழுது வயிறும் அதன் வேலையை முடித்திருக்க வேண்டும். அதுவும் அதோடு தொடர்புடைய அவையங்களும் ஓய்வெடுக்க வேண்டும். சரீர வேலை அதிகமாக செய்யாத நபர்களுக்கு இரவு நேரங்களில் தாமதமாக உண்பது கேடானதாகும். இதன் நிமித்தமாக சரீரத்தில் உண்டாகும் தொந்தரவுகள் நோயை கொண்டுவந்து மரணத்துக்கு வழிநடத்தும். ***Ministry of Healing p. 303, 304.***



1[ST] Proof

***காலை உணவின் முக்கியத்துவம்***

***ஒரு தாய்க்கு அறிவுரை***

உன் பிள்ளை எளிதில் உணர்ச்சிவசப்பட்டு பதட்டப்படக்கூடிய மனநிலையை பெற்றிருக்கிறாள். அவளது உணவைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும். சத்தைக் கொடுக்காமல், ருசியை மட்டும் திருப்திப்படுத்தும் உணவுகளை அவள் உண்ண அனுமதிக்கக் கூடாது. காலை உணவை உண்ணாமல் பள்ளிக்கு அவளை செல்லாவிடாதீர்கள். இவ்விஷயங்களில் உங்களது சொந்த நாட்டங்களை பின்பற்றாதீர்கள். தேவ கட்டுப்பாட்டிற்கு கீழாக இருங்கள். அவருடைய வழிகளுக்கு இசைவாக உங்கள் விருப்பங்களை மாற்றிக்கொள்ள அவர் உதவுவார். ***Letter 69, 1896.***

இன்றைக்கு எல்லோரும் கடனுக்கென்று காலை உணவை எடுத்துக்கொள்ளுகிறார்கள். போதிய அளவும் எடுத்துக்கொள்ளுவதில்லை. சத்தானதாகவும் அது இருப்பதில்லை. இது நமது வயிற்றுக்கு சரியானதல்ல. காலை சமயத்தில் அதிக அளவிலான உணவை கையாள வயிறு ஆயத்தமாக இருக்கும். மற்ற சமயங்களில் இது போன்று இருக்காது. குறைவாக காலை உணவையும், அதிகமான அளவில் இரவின் உணவையும் உண்பது தவறு. உங்களது காலை உணவு மிக சிறந்த உணவு வேளையாக இருக்க வேண்டும். ***Counsels on Diets and Foods p. 173.***

***சிறந்த உணவுகளை அதிகமாக கொடுங்கள்***

பிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் போதிய அளவிலான உணவு கொடுக்காமல் இருக்கக் கூடாது. ஆரோக்கியமான நிறைய உணவுகள் கொடுக்கப்பட வேண்டும். இனிப்புப் பண்டங்களையும் பலகாரங்களையும் அவர்களுக்கு முன்பாக வைக்க வேண்டும் என்பதில்லை. மிக சிறந்த உணவையும், மிகச் சிறந்த உடற்பயிற்சியையும் அவர்கள் பெற வேண்டும். இது மனதின் மீதும் நல்லொழுக்கத்தின் மீதும் ஆழமான தாக்கத்தைக் கொண்டு வருகிறது. சரியான முழுமையான ஒரு உணவு திட்டம் சரீரமானத்தை ஆரோக்கியமாக வைக்கிறது.

***எதையும் அளவோடு செய்ய வேண்டும்***

பெற்றோர் பெருன்பான்மையான சமயங்களில் பிள்ளைகளுக்கு தேவையைவிட அதிகமான உணவை கொடுத்துவிடுகிறார்கள். இப்படியாக வளரும் பிள்ளைகள் பொருமையில்லாமல் எரிச்சலடைவார்கள். இது அவர்களது குணமாகவே மாறிவிடும். நல்ல உணவுகளையும் அளவுடன் பயன்படுத்த வேண்டும். எந்த அளவு உணவு உண்ணப்பட வேண்டுமோ, அந்த அளவை மட்டும் அவர்களுக்கு முன்பாக வையுங்கள். எந்த அளவு உண்ணவேண்டும் என்பதை அவர்களில் விருப்பத்திற்கு விடாதீர்கள்.

இதில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். இல்லையெனில் பிள்ளைகள் மந்தமாவார்கள். பள்ளிக்கூடம் சென்றாலும் ஒழுங்காக படிக்க முடியாமல் போகும். ஆதிகமாக உண்டதினால், மூளைக்கு அனுப்பப்பட வேண்டிய பெலன் வயிற்றிற்கு அனுப்பப்படுகிறது. வயிற்றிலிருக்கும் அதிகமான உணவை கையாள அதிக சத்து தேவைப்படுகிறது. அளவிற்கு அதிகமான உணவை பிள்ளைகளுக்கு கொடுத்தால் பெலவீனமடைவார்கள். பெலப்பட மாட்டார்கள். இதை பெற்றோர்கள் அறிந்துகொள்ள வேண்டும். ***Manuscript 199, 1899.***

### *பெற்றோர்கள் முடிவெடுக்க வேண்டும்*

தவறான உணவுகளின்மீது பசி ஆசை கொள்ளுவதை மேற்கொள்ள பிள்ளைளுக்குச் சொல்லிக் கொடுங்கள். நீங்கள் பசியுணர்வுகள் மறுக்கப்பட வேண்டும். தேவன் கொடுத்திருக்கின்ற எளிமையான சாதாரண உணவுக்குத் தேவனிடம் பிள்ளைகள் நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும். பிள்ளைகள் எதை உண்ணுவார்கள் என்பதை அவர்கள் உங்களுக்குச் சொல்லக்கூடாது. அவர்களது உணவுகளை நீங்கள் நிர்ணயிக்க வேண்டும். நல்ல உணவுகளை உண்ண வைக்கப்படுவதினால் பிள்ளைகள் முறுமுறுத்து குறை சொல்ல விடாதீர்கள். இது பாவம். அவர்களின் தவறான ஆசைகளுக்கு உகந்ததாக இல்லாதபடியினால் பிள்ளைகள் இப்படி நடக்கக் கூடும். ***Letter 23, 1888.***

உங்களுடைய பிள்ளையாக இருப்பதினால் எதையும் தேர்ந்தெடுத்து செயல்படலாம் என்று உங்கள் பிள்ளைகள் நினைக்கும்படி நடக்காதீர்கள். எதுவும் மறுக்கப்படாது என்றும் அவர்கள் நினைக்கக் கூடாது. தனக்கு பிடித்திருப்பதால் ஆரோக்கியமற்ற உணவுகளை தேர்ந்தெடுக்க விடாதீர்கள். பெற்றோரின் அனுபவம் நிறைந்த பகுத்தறிவு, பிள்ளைகளை கட்டுப்படுத்த வேண்டும். ***Signs of the Times, Aug. 13, 1896.***

1ST Proof

### *நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிகொடுங்கள்*

நமது வாழ்வை நமது சரீரம் ஆளுகை செய்ய போகிறதா அல்லது நமது மனம் சரீரத்தைக் கடடுப்படுத்தப்போகிறதா என்பது நம்மிடமே உள்ளது. ஒவ்வொரு வாலிபனும் அவனது வாழ்வை நிர்ணயிக்கப்போகும் முடிவுகளை எடுக்க வேண்டி வரும். அவன் கையாள வேண்டிய சக்திகளை அவன் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். அவனது குணத்தையும் விதியையும் நிர்ணயிக்கிற தாக்கங்களை அவன் அறிந்துகொள்ள வேண்டும். ***Education, 202.***

உலகினுடைய புசிப்பும், குடித்தலும், உடைகளும், ஆரோக்கியத்தின் விதிகளுக்கு ஏதுவானதாக இல்லை என்பதை பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். இந்த அடிப்படையான காரியங்களும் அறிவாற்றலாலும், பகுத்தறிவினாலும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். பசி தூண்டுதல்களும், தவறான உணவுகளின் மீது நாட்டங்கொள்ளுவதும், தவறான பழக்கங்களும் பகுத்தறிவை கட்டுப்படுத்தக் கூடாது. இந்த இலக்கை கண்டடைய வாலிபர்கள் உயரிய நோக்கங்களை உடையவர்களாக இருக்க வேண்டும். இதை உண்ண வேண்டும், அதை பருக வேண்டும், மிருகங்களைப்போல என்று ஆசைகளை திருப்திப்படுத்திக்கொள்ளுவதில் மட்டும் மனம் செயல்படக் கூடாது. ***Good Health July 1889.***

### *தவறான பசி நாட்டத்தின் விளைவுகள்*

தேவ மகிமைக்கென்று புசித்து, குடிப்பதின் அவசியத்தை சிலர் பார்ப்பதில்லை. தவறான உணவுகளை உட்கொள்ளும் பழக்கம் அவர்களது வாழ்வின் எல்லா அம்சங்களையும் பரிதிக்கிறது. குடும்பங்களில், சபைகளில், ஜெபக் கூட்டங்களில், பிள்ளைகளின் நடத்தையில் இதன் தீமை அனுபவிக்கப்படுகிறது. இது வாழ்வின் சாபமாக இருக்கிறது. இந்த காலத்திற்கான சத்தியத்தை புரிந்துகொள்ள

முடியாதபடி செய்கிறது. ***Christian Temperance and Bible Hygiene p. 191.***

***ஆரோக்கியமாக வாழ்தல், தனிப்பட்ட கடமை***

நாம் உண்ணுபவைகளும், பருகுபவைகளும் நம் வாழ்வில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கிறிஸ்தவர்கள் இயற்கையின் சட்டங்களுக்கு உட்பட வேண்டும். இச்சட்டங்களுக்கேற்ப உண்ணவும், பருகவும் வேண்டும். இதில் தேவனுக்கு நமது கடமையை புரிந்திருக்க வேண்டும். ஆரோக்கிய விதிகளை கடைபிடிக்க ஆழமாக படிக்க வேண்டும். வேண்டுமென்றே அறியாமையில் இருப்பதும் பாவம். ஆரோக்கியமாக வாழ்வது ஒவ்வொருவரின் தனிப்பட்ட கடமையா இருக்கிறது என்பதை உணர வேண்டும். ***Manuscript 47, 1896.***

***அதிகாரம் - 63***

***எல்லாவற்றிலும் கட்டுப்பாடோடிருத்தல் ( இச்சையடக்கம் )***

***கட்டுப்பாடில்லாமை தீங்குகளின் காரணமாக இருக்கிறது***

வாழ்க்கையின் பெரும்பாலான தீங்குகளுக்கு அடித்தளமாக கட்டுப்பாடின்மை இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் பல ஆயிரக்கணக்கானோரை இது அழிக்கிறது. போதை வஸ்துக்களை தவிர்ப்பது மட்டும் கட்டுபாடல்ல. கேட்டை விளைவிக்கக் கூடிய எல்லா வகையிலான தவறான ஆசைகளையும், இச்சைகளையும் அடக்கி ஆளுவதே இவ்வார்த்தையின் முழுபொருள். ***Pacific Health Journal Apr. 1890.***

இச்சையடக்கமில்லாமல் சிலர் தங்கள் சரீரத்தின் மற்றும் மனதின் ஒரு பாதியளவு பெலத்தை வீணடிக்கிறார்கள். சிலர் இன்னும் அதிகமாக மூன்றில் இரண்டு பங்கு அளவிற்கு தங்கள் சக்திகளை வீணடித்துவிடுகிறார்கள். எதிராளியான சாத்தானின் விளையாட்டு கைப்பொருளாக மாறிவிடுகிறார்கள். ***Messages to Young People, p. 236.***

***எதிலும் அளவை மிஞ்சுவது பாவம்***



1ST Proof

உண்ணுவதிலோ, பருகுவதிலோ, உறங்குவதிலோ, பார்க்கும் காரியங்களிலோ அளவை மிஞ்சுவது பாவம். மனம் மற்றும் சரீரத்தின் எல்லா வல்லமைகளும் ஒருங்கிணைந்து இசைவாக செயல்படுவதே மகிழ்ச்சியைக் கொடுக்கும். மனிதனின் வல்லமைகளும் பரிசுத்தப்படுத்தப்பட்டு உயர்த்துப்பட வேண்டும். எந்த அளவிற்கு இது செய்யப்படுகிறதோ, அந்த அளவிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். அது தூய்மையானதாகவும் இருக்கும். ***Counsels on Diets and Foods p. 44.***

***இது கிறிஸ்தவ மதத்தின் ஒரு கோட்பாடு***

வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். இது எல்லோருக்கும் கற்றுக்கொடுக்கப்பட்டு அப்பியாசிக்கப்பட வேண்டும். உண்பதிலும், பருகுவதிலும் உடையிலும் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். கிறிஸ்தவ மதத்தின் மகத்தான கோட்பாடாக இது இருக்கிறது. சரீரமாகிய ஆசரிப்புக் கூடாரத்திற்குள் சத்தியம் வருகிறது. சரீரத்தை நாம் நடத்தும் தன்மையை இது மாற்றுகிறது. நமது ஆரோக்கியத்திற்கு சம்பந்தப்பட்ட எதுவும் முக்கியமற்றதில்லை. இவ்வாழ்க்கையில் நமது நேரத்தையும் வல்லமைகளையும், செல்வாக்கையும் பயன்படுத்திக்கொள்ளுவதை சார்ந்தே நமது நித்தியத்திற்கான நன்மையும் உள்ளது. இவ்வாழ்க்கையை வாழும் விதமே நமது நித்தியத்தை நர்ணயிக்கப் பேரிகறது. ***Testimonies for the church Vol. 6, 375.***

இங்கு ஒரு முறையே நமக்கு ஜீவன் கொடுக்கப்படுகிறது. நல்ல இலாபங்களை நான் பெற்றுக்கொள்ளத்தக்கதாக இவ்வாழ்க்கையில் நான் என்ன முதலீட்டை செய்ய வேண்டும் என்பதே ஒவ்வொருவரது கேள்வியாக இருக்க வேண்டும். ***Pacific Health Journal Apr. 1890.***

நமது வாழ்க்கையில் நாம் தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருக்க வேண்டும். தேவனுக்கும், சம மனிதர்களுக்கும் இதுவே நாம் செய்யும் முதல் கடமையாகிறது. நமக்கு தேவனால் அருளப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு திறமையும் பரிபூரணமடையத்தக்கதாக வளர வேண்டும். இதை செய்தால் நம்மால் முடிந்த எல்லா நன்மைகளையும் செய்பவர்களாக இருப்போம். நல்ல சரீர ஆரோக்கியமும் மனோ பெலமும்

ஸ்தாபிக்கப்படுவதற்கு நேரம் செலவிடப்படுகிறது. மனதின் மற்றும் சரீரத்தின் ஒரு செயல்பாட்டைக் கூட நாம் முடங்கிவிடும்படி செய்துவிடக் கூடாது. அளவிற்கு அதிகமாக பயன்படுத்தப்படுவதினால் இது நேரிடும். இத்தவறை நாம் செய்தால் அதன் விளைவுகளை சந்திப்போம். ***Sigms of the Times Nov. 17, 1890.***

***இதில் மகத்தான வல்லமை உள்ளது***

எல்லாவற்றிலும் கட்டுப்பாடோடிருத்தலில் ஒரு மகத்தான வல்லமை உள்ளது. இனிமையான ஒரு குணத்தை இது வளர்த்துவிடும் சூழ்நிலைகளுக்கும், தாலந்துகளுக்கும் மேலாக இது கிரியை செய்ய வல்லது. வாழ்க்கையின் பாதையை மென்மையானதாக மாற்றும். இப்படியாக பெற்றுக்கொள்ளப்பட்ட சுயகட்டுப்பாட்டின் வல்லமை வாழ்க்கையின் கடமைகளையும், சுமைகளையும் வெற்றிகரமாக கையாளும் விலைமதிப்பற்ற கருவியைப்போல இருக்கும். ***Education, 206.***

***தெளிவான சிந்தனைக்கு உதவுகிறது***

பெரிய பதவிகளில் இருக்கும் நபர்கள் ஒவ்வொரு நாளும் முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டியதாக உள்ளது. அம்முடிவுகளின் பின்விளைவுகள் மிக முக்கியமானவைகளாக இருக்கும். துரிதமாக சிந்தித்து முடிவெடுக்க வேண்டியதும் வரும். தீர்க்கமான கட்டுப்பாட்டை பின்பற்றுபவர்களால் மட்டுமே இதை செய்ய முடியும். மனமும் சரீரமும் சரியாக நடத்தப்படும்பொழுது சிந்தை பெலப்படுகிறது. ஒவ்வொரு முறையும் இது சரியாக பயன்படுத்தப்பட வேண்டும். அதிகமான பலு கொடுக்கப்படாமல் சீராக இது நடந்தால், திறன் கூடுகிறது. ***Ministry of Healing p. 309.***

***கட்டுப்பாடான பழக்கங்கள் உயரிய வெகுமதிகளைக் கொடுக்கின்றன***

வளருகின்ற தலைமுறையினரின் தகாத ஆசைகளைத் தூண்டும் வண்ணமாக இன்றைய காலம் அமைந்துள்ளது. குறிப்பாக பட்டணங்களில் எல்லோரையும் கவரும்படியாகவும், எதையுமே சுலபமாக பெற்றுக்கொள்ளும்படியாகவும் சூழ்நிலை அமைந்துள்ளது. தானியேலைப்



1ST Proof

போன்று தங்களை தீட்டுப்படுத்திக்கொள்ளாதவர்கள் தங்களது கட்டுப்பாடான பழக்கங்களில் நன்மைகளை அனுபவிப்பார்கள். சரீர பெலன் கூடினவர்களாக, எதையும் தாங்கும் சக்தியைப் பெற்றுக்கொண்டு எந்த இக்கட்டையும் சந்திக்க ஆயத்தமாக இருப்பார்கள். வங்கியில் வைப்புத் தொகை இருப்பதைப்போன்று இவர்களது நீடித்து உழைக்கும் திறன் இருக்கும்.

சரீரத்தின் நியர்த்தியான பழக்கங்கள் மனதின் தரத்தை உயர்த்துகிறது. அறிவாற்றலும், சரீர பெலனும் நீண்ட ஆயுசும் மாற்றப்பட முடியாத விதிகளை சார்ந்தே உள்ளன. எதிர்பாராத விதத்திலோ, தற்செயலாகவோ இவைகள் நடந்தேருவதில்லை. இயற்கையின் சட்டக் கூறுகள் மீறப்படக்கூடாது. மீறப்பட்டால் இயற்கையின் தேவன் தீய விளைவுகளிலிருந்து நம்மைக் காக்க குறுக்கிடமாட்டார். ***Christian Temperance and Bible Hygiene.***

***எல்லாவற்றிலும் கட்டுப்பாட்டுடன் இருத்தல் பூரண ஆரோக்கியத்தைத் தரும்***

ஆரோக்கியம் காக்கப்படுவதற்கு எல்லா காரியங்களிலும் ஒரு கட்டுப்பாட்டை கைக்கொள்ளவேண்டும்.

தவறான ஆசைகளின் தீமைகளிலிருந்து நம்மைக் காக்கவே தேவன் ஆரோக்கிய சீர்த்திருத்தத்தின் வெளிச்சத்தைக் கொடுத்திருக்கிறார். பரிசுத்தத்தையும், தூய்மையையும் விரும்புவோர் இவ்வெளிச்சத்தின் மூலமாக தேவன் தந்திருக்கிற நன்மையானவைகளையும் மிதமாகவே கையாள கற்றுக்கொள்ளுகிறார்கள். அனுதின வாழ்க்கையில் இச்சையடக்கத்துடன் நடப்பார்கள் சத்தியத்தினால் பரிசுத்தப்பண்ணப்படுவார்கள். ***Christian Temperance and Bible Hygiene p. 52.***

***சுய கட்டுப்பாடு பரிசுத்தமாகுதலின் முதற்படி***

எல்லாவற்றிலும் கட்டுப்பாட்டுடன் இருக்க தேவ பிள்ளைகள் கற்க வேண்டும். சுய நலமான கேடான ஆசைகளை திருப்திபடுத்திக்கொள்ளும் பழக்கம் அவர்களது வாழ்க்கையிலிருந்து வெட்டப்பட வேண்டும். இதை செய்தால் கிறிஸ்துவின் சித்தத்தையும்

குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

பரிசுத்தமாகுதலையும் புரிந்துகொள்ளுவார்கள். தேவனுடன் ஒத்துழைத்து தவறான பழக்கங்களையும் செயல்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். ***Medical Ministry p. 275.***

*ஆதிகமான படிப்பு*

படிப்பிலும் கட்டுப்பாடின்றி இருப்பதும் ஒரு போதை பொருளை பயன்படுத்துவதற்கு சமமாக உள்ளது. குடிகாரனைப்போல் இவர்களும் சரியான பாதையைவிட்டு விலகி இருளிற்குள்ளாக சென்றுவிடுவார்கள். தேவ மகிமைக்கென செயல்படுவதற்கே நாம் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். இதையே எல்லா மாணவர்களுக்கு தங்களின் மனதில் வைக்க தேவன் எதிர்ப்பார்க்கின்றார். அறிவியல்களின் அறிவை மட்டுமே பெற்றுக்கொள்ள மாணவன் தனது எல்லா மனோ பெலத்தையும் சரீரத்தின் பெலத்தையும் வீணடித்துவிடக் கூடாது. தேவனின் வேலையை செய்யவும், ஆத்துமாக்களை நீதியின் பாதைக்கு வழிநடத்தவும் எல்லா சக்திகளின் வீரியம் பாதுகாக்கப்பட வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students, p. 405, 406.***

*வேலையில் கட்டுப்பாடு*

நமது வேலையிலும் நாம் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். அளவிற்கு அதிகமாக வேலைகளை செய்யக் கூடாது. சில சமயங்களில் இது அவசியமாகலாம். ஆயினும் எல்லா சமயங்களிலும் இப்படி இருக்கக் கூடாது. அனுதினமும் இப்படி அதிகமாக வேலை செய்யக் கூடாது. எல்லாவற்றிலும் நாம் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். இதில் நமது பங்கை நாம் சரியாக செய்து தேவனை கணப்படுத்த வேண்டும். இதை செய்தால் தேவன் அவரது பங்கை நிறைவேற்றி நம்மை பாதுகாப்பார். நமது எல்லா அவையங்களையும் சீராக கட்டுப்படுத்த வேண்டும. உணவிலும், பருகுதலிலும், உடையிலும், எல்லா வேலைகளிலும் நாம் கட்டுப்பாட்டைக் கைக்கொள்ள வேண்டும். இதினால் மருத்துவர்கள் செய்ய முடியாத நன்மையை நாம் நமக்குச் செய்து கொள்ளுபவர்களாக இருப்போம். ***Temperance p. 139.***

காலையில் துவங்கப்படும் வேலையானது மாலை வரையிலும் தொடர்ந்து செய்யப்படக் கூடாது. இதை செய்பவர்கள் நன்மையை பெறுவதில்லை. தீமையையே பெறுகிறார்கள் என்பது எனக்கு காட்டப்பட்டது. பெலன் குன்றி சோருகிறார்கள். நரம்புகளும் பதட்டப்படுகின்றன. உடனடியாக எந்த பாதிப்பையும் அனுபவிக்காததைப்போன்று தெரியலாம். ஆயினும் சரீரத்திற்கு பெரிய தீங்கு விளைவிக்கப்படுகிறது. ***Counsels on Health p. 99.***

குறைந்த நேரத்தில் அதிகமான வேலைகளை செய்ய முனைவோர் நன்மையை பெற்றுக் கொள்ளுவதில்லை. ஓய்வு தேவை என்று உணர்ந்த பிறகும் இவர்கள் வேலை செய்து சரீரத்தை கெடுத்துக்கொள்ளுகிறார்கள். எதிர்காலத்தில் அவர்களுக்கு தேவைப்படும் சக்தியை ஒரு சமயத்திலே அதிகமாக பயன்படுத்திவிடுகிறார்கள். பிறகு பெலனைக்கொண்டு வேலை செய்யவேண்டிய சூழ்நிலைகளில் அதை செய்ய திராணியற்று தவிப்பர். அத்தியாவசியமான ஜீவியத்தின் சக்தியை இவர்கள் வீணடித்திருக்கின்றனர். சரீர பெலமானது அவர்களைவிட்டு நீங்கியிருக்கின்றது. அறிவின் சக்தியும் குன்றியிருக்கின்றது. சரீரம் பழுதாகியிருப்பதை உணருவார்கள். ஆனாலும் எங்கு தவறினார்கள் என்பதை அறியாமல் குழம்புவார்கள். வேலையின் தேவை வருகிறது. ஆதை சந்திக்க திராணியற்று இருக்கின்றனர். ஆரோக்கிய விதிகளை மீறுவோர் அதற்கான விளைவுகளினால் நிச்சயமாக பாதிக்கப்படுவர். தேவன் நாம் எல்லோருக்கும் ஒரு அடிப்படையான சக்தியை கொடுத்திருக்கிறார். இது நமது வாழ்வு முழுவதற்கும் தேவைப்படும். இச்சக்தியை தொடர்ந்து அதிகமாக பயன்படுத்தினால் நஷ்டத்தைக் கொண்டு வரும். இதில் அக்கரையின்றி இருக்கக்கூடாது. ***Fundementals of Christian Education, p. 153, 154.***

*ஊடையில் கடடுப்பாடு*

உடையும் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். எல்லாவற்றிலும் நாம் ஆரோக்கியமாக இருக்கவே தேவன் விரும்புகிறார். ஆத்துமமும் சரீரமும் இரண்டின் ஆரோக்கியமும் இதில் உள்ளடங்கியுள்ளது. இந்த ஆரோக்கியத்தை நாம் பெற்றுக்கொள்ள தேவனுடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டும். சரியான உடைகளை அணிவதினால் ஆரோக்கியம் மேம்படுகிறது.

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

உடை எளிமையானதாகவும், அழகானதாகவும், தேவையில்லாத அலங்காரிப்பு இல்லாமலும் இருக்க வேண்டும். ஜீவனத்தின் பெருமையைக் குறித்து இயேசு நம்மை எச்சரித்துள்ளார். உடையானது நன்றாகவும் அழகாகவும் இருக்கக்கூடாதென்று சொல்லவில்லை. ***Ministry of Healing p. 288, 289.***

***உணவில் கட்டுப்பாடு***

தீங்கானவைகளை முழுமையாக தவிர்த்துவிட வேண்டும். ஆரோக்கியமானவைகளையும் பகுத்தறிந்து மிதமான அளவில் உபயோகிக்க வேண்டும். இதுவே உண்மையான இச்சையடக்கம். நமது பழக்கங்கள் ஆரோக்கியத்தை எவ்வளவாக பாதிக்கின்றன என்பதை வெகு சிலரே உணருகிறார்கள். நம் பழக்கங்கள் நமது குணத்தையும் நித்தியத்திற்கான நம் நிலையையும் நிர்ணயிக்கின்றன. நாம் எந்த அளவிற்கு பயனுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதும் இதை சார்ந்தே இருக்கிறது. நமது உணவு பழக்கங்களும் பகுத்தறிவுக்கும் நல்ல அறிவாற்றலுக்கும் உட்பட்டதாகவே இருக்க வேண்டும். சரீரம் மனதிற்கு அடிமையாக இருக்க வேண்டும். மனம் சரீரத்திற்கு அடிமையாகிவிடக் கூடாது. ***Temperance 138.***

சரியாக பகுத்தறியாமலும் கட்டுப்பாடின்றியும் உண்ணுபவர்கள், அதே விதத்தில் செயல்படுவார்கள். மதுபானம் அருந்தினால் மட்டுமே தவறு என்பதில்லை. கட்டுப்பாடின்றி உண்ணுவது ஒரு பாவம். அதிகமாக உண்பதும், குறிப்பிட்ட நேரமின்றி எப்பொழுதும் உண்பதும், முழுமையற்ற உணவுகளை உண்பதும் செரிமான அவையங்களின் ஆரோக்கியத்தை அழிக்கிறது. மூளையும் பாதிக்கப்பட்டு தெளிவான சிந்தை மந்தமாகிறது. நிதானமாகப் பகுத்தறிந்து பொருமையுடன் செயல்பட முடியாமற் போகிறது. ***Christian Temperance and Bible Hygiene p. 155.***

***அதிகமாக உண்ணாதிருக்க அதிக கவனம்***

பெரும்பாலாக பத்து நபர்களை எடுத்துக் கொண்டால், அதில் ஒன்பது நபர்கள் அளவிற்கு அதிகமாக உண்ணுபவர்களாக இருப்பார்கள். குறைவாக உண்ணுவதைவிட அதிகமாக உண்ணும் அபாயமே மிகுதி. அநேகர் நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களது



1ST
Proof

கட்டுப்பாடில்லாத பசியே அதற்குக் காரணம். ஆரோக்கியமான உணவென்பதால் அளவின்றி உண்ணலாம் என்று நினைக்கிறார்கள். இது பெரிய தவறு. ஆதிகமாக உண்ணுவதினால் சிலர் பெலவீனப்படுகிறார்கள். உடன் பருமன், மந்தம் வேலை செய்ய இயலாமை போன்ற பிரச்சனைகள் எழும். இவர்கள் மிதமான அளவிலான உணவையே உட்கொள்ள வேண்டும். இதை அவர்கள் செய்தால் சரீர இயக்கங்கள் சீராக செயல்பட சாத்தியமாகிறது. பேரிய நோய்களையும் வாதைகளையும் தவிர்த்துக்கொள்ளலாம். ***Manuscript 1, 1876.***

***கட்டுப்பாடில்லாத ஒரு செயல் தேவனை மறுதலிக்கிறது***

நாம் விலைகொடுத்து வாங்கப்பட்டிருக்கிறோம். ஆகவே சரீரத்திலும் ஆவியிலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். நமது சரீரமும் ஆவியும் தேவனுக்குரியவைகளாக இருக்கின்றன. இச்சையடக்கம் இல்லாத ஒரு செயலினால் கூட தேவனை நாம் நிந்தித்து, மறுதலித்துவிடக் கூடாது. தேவனது ஒரே பேரான குமாரன் சொல்ல முடியாத ஒரு விலையை நமக்காக கொடுத்திருக்கிறார். அவரது உயிரை நமக்குத் தியாகம் செய்திருக்கிறார். தீய பழக்கங்களுக்கு நாம் அடிமையாவதற்காக அவர் மறிக்கவில்லை. தேவ குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் நாம் மாற அவர் இறந்தார். ஜீவியத்தின் எல்லா வல்லமைகளையும் அவருக்கென்று நாம் பயன்படுத்த அவர் பலியானார். ***Letter 166, 1903.***

தேவனுக்கு முன்பாக நாம் நிற்கிறோம். தேவனுடன் தொடர்ந்து நல்ல உறவைவைத்துக்கொள்ள வேண்டும் என்பதை உணர்வோர் செரிமான அவயங்களை பாதிக்கும் எதையும் வயிற்றுக்குள் அனுப்பமாட்டார்கள். சுவைக்கு முதலிடம்கொடுத்து சரீரத்தை கெடுக்கமாட்டார்ள். தேவனுடைய சொத்தான நமது சரீரங்களை தவறான உணவு, உடை, மற்றும் பருகும் பழக்கங்களால் சரீரத்தை சேதப்படுத்த மாட்டார்கள். இயந்திரத்தைப்போல செயல்பட்டுகொண்டிருக்கும் சரீர இயக்கங்களை, அக்கரையுடன் பார்த்துக்கொள்ளுவார்கள். இதை செய்வதின் மூலமாக தேவனின் சக வேலையாட்களாகிறார்கள் என்பதை பார்ப்பார்கள். அவர்கள் ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியுடன் ஜீவித்து, பயனுள்ளவர்களாக இருக்க தேவன் விரும்புகிறார். இது நடப்பதற்கு

அவர்களுக்கு சித்தத்தை தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். ***Temperance p. 214.***

*இல்லற வாழ்வில் கட்டுப்பாடு*

குடும்ப வாழ்வின் எல்லா காரியங்களிலும் கட்டுப்பாடு இருக்க வேண்டும். பெற்றோர்களின் நடத்தை பிள்ளைகளுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். சுய மறுப்பும், சுய கட்டுப்பாடும் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். குழந்தை பருவத்திலிருந்தும் பிள்ளைகள் இதை சடைபிடிக்க வைக்கப்பட வேண்டும். ***Review and Herald, Sep. 23, 1884.***

குடும்பத்திலும், சபையிலும் கிறிஸ்தவ இச்சையடக்கத்திற்கு ஒரு உயர்ந்த இடத்தைக் கொடுக்க வேண்டும். உயிருள்ள ஒரு சக்தியாக இது கிரியை செய்து கொண்டிருக்க வேண்டும். பழக்கங்களையும் குணங்களையும் இது சீர்திருத்துவதாக இருக்க வேண்டும். ***Temperance p. 165.***

*அதிகாரம் - 64*

*குடும்பமும், இச்சையடக்கமில்லாமையை எதிர்க்கும் போராட்டமும்*

*கட்டுப்பாடின்மை பரவலாக உள்ளது*

கட்டுப்பாடின்றி நடந்துகொள்ளுவதின் தீமைகள் தொடர்ந்துகொண்டு இருக்கப் போகிறது. சுத்தியத்தின் முன்னேற்றத்தையும் நீதியின் முன்னேற்றத்தையும் தடுக்க பாவமானது தடை சுவற்றைப்போலவே எழும்பியுள்ளது. அறிவில்லாமையினாலும், தீமைகளினாலும் சமுதாயத்திற்கு எதிராகப் பெரிய தவறுகள் செய்யப்படுகின்றன. சொல்ல முடியாத பரிதவிப்பையும் சோகத்தின் நிழலையும் இது சபையின்மீதும் உலகின்மீதும் படற செய்கிறது. வாலிபர்களின் நிலை தாழ்ந்துகொண்டே இருக்கிறது. உத்தமமான விடா முயற்சியே இச்சாபத்தை நீக்கும். பரிசுத்தமற்ற இச்சைகளையும், தவறான பசி ஆசைகளையும், கெட்ட பழக்கங்களையும் எதிர்க்கும் போராட்டம் பயங்கரமானதாக இருக்கும். பகுத்தறிந்து, நன்மையான கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்படுபவர்கள் மட்டுமே இப்போராட்டத்தில் ஜெயிக்க முடியும். ***Temperance p. 234.***

இச்சையடக்கமின்மை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இதை கட்டுப்படுத்த பல முயற்சிகள் ஏரெடுக்கப்பட்டாலும் இத்தீமை வளர்ந்துகொண்டே இருக்கிறது. இதை தடுக்க நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். விடப்பட்டதை தூக்கவும் பெலவீனர்களை சோதனைகளிலிருந்தும் காக்க செயல்பட வேண்டும். பெலனற்ற நமது மனித கரங்களால் குறைவான ஒரு வேலையையே நாம் செய்ய முடிகிறது. ஆயினும் தோற்றிராத உதவியாளர் நமக்கு உண்டு. மனித பரிதவிப்பின் எந்த நிலைக்குள்ளும் கிறிஸ்துவின் கரம் சென்று காப்பாற்றும் என்பதை மறக்கக் கூடாது. இத்தீமையைத் தூண்டிக்கொண்டிருக்கும் பிசாசை மேற்கொள்ளவும் கிறிஸ்து உதவுவார். ***Christian Temperance and Bible Hygiene p. 21.***

*தீயவற்றை முற்றிலும் விலக்கிவிட வேண்டும்*

எந்த வகையிலான மதுபானத்தையும் முற்றிலுமாக விலக்கிவிடுவதே நல்ல பாதுகாப்பு. நல்ல தனிதர்களாக வாழ்வதற்கு இவைகளை ஒதுக்கிவிட வேண்டும் என்பதை பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். நல்ல மனிதனாகவும், ஆண்மகனாகவும் இருப்பதென்றால் என்ன என்பதை தேவன் விளக்கியுள்ளார். மேற்கொள்ளுகிறவனே கணம்பெறுவான். இவனது நாமமே ஜீவப்புத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்படாது. ***Christian Temperance and Bible Hygiene p. 37***

பெற்றோர்கள் துரிதமாகவும் விடா முயற்சியுடனும் செயல்பட வேண்டும். உலகின் புது பழக்கங்களினால் திசை திரும்பிவிடாமல் பிள்ளைகளை சுற்றி வலுவான ஒரு நல்லொழுக்கத்தின் சுவற்றைக் கட்ட வேண்டும். இச்சையடக்கமின்மையினால் வரும் குற்றங்களிலிருந்தும் தவிப்புக்களிலிருந்தும் இது அவர்களை பாதுகாக்கும். பிள்ளைகள் அவர்களது விருப்பங்களுக்கேற்றபடி விடப்படக் கூடாது. தவறான பண்புகள் வளர்ந்துவிடும். இவைகள் முளையிலேயே கிள்ளப்பட வேண்டும். பிள்ளைகள் சரியான ஒரு ஒழுக்கத்திற்குள்ளாகக்

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

கொண்டுவரப்பட வேண்டும். சீர்திருத்தத்தின் பக்கமாகவும், நீதியின்பக்கமாகவும் தீயவைகளை முழுமையாக ஒதுக்கிடவும் பிள்ளைகள் ஸ்திரமாக அவர்களது இடத்தில் நிற்க வேண்டும். இதனால் பிள்ளைகள் சுதந்திரத்திலும் நல்லோமுக்கத்தைப் பேணுவார்கள். இதன் வல்லமைகை கொண்டு உண்மையான சீர்திருத்தத்திற்காக நிற்போரை எதிர்க்கும் சக்திகளை திறம்பட சந்திப்பார்கள். ***Temperance p. 214, 215.***

*குடும்பத்தில் அனுமதிக்கப்பட்ட தவறுகள் கட்டுப்பாடில்லாமையின் காரணமாகின்றன*

இச்சையடக்கமில்லாமலும், கட்டுப்பாடில்லாமலும் செயல்படுவதை தடுக்க நாடுகளில் பெரிய முயற்சிகள் ஏரெடுக்கப்படுகின்றன. ஆனால் முழுமையாக வளர்ந்துவிட்ட சிங்கத்தை எளிதாக அடக்கி கட்டுப்போட்டுவிட முடியாது. இந்த சமயத்திலும் பெரிய முயற்சிகளை மேற்கொள்ள திட்டமிடப்படுகிறது. இதில் பாதி அளவிற்கு பெற்றோர்க்கு இதை புரிய வைக்கும்படி செயல்பட்டிருந்தால் ஆயிரம் மடங்கான நன்மைகள் கிடைத்திருக்கும். இப்பொழுது அவர்கள் போடும் பெரிய திட்டங்களைவிட இதை செய்திருந்தால் மேலானதாக இருந்திருக்கும். பிள்ளைகளின் பழக்கங்களையும் குணங்களையும் உருவாக்குவதில் பெற்றோர்க்கு இருக்கும் பொறுப்பை அவர்கள் உணரவைக்கப்பட்டிருக்க வேண்டும். இத்தீமைகளை எதிர்த்துச் செயல்படுவோரின் மீது தேவ ஆசீர்வாதம் தங்க நாம் விரும்புகிறோம். ஆயினும் இத்தீமையின் வேரை அவர்கள் பார்க்கும்படியாக நாங்கள் அழைக்கின்றோம். இதை பார்த்து இதன் காரணத்தைப் புரிந்துகொண்டு திடமனதுடன் சீர்திருத்தத்துக்குள்ளாக வரும்படி கூறுகிறோம். ***Review and Herald, Sep. 23, 1884.***

இச்சையடக்கமில்லாமை பெரிய தீமையாகவே இருக்கிறது. இது உண்டாவதற்கான காரணமாக அமைந்த வேரை நாம் புரிந்துகொள்ள வேண்டும். புகையிலையை பயன்படுத்துவதும், மதுபானம் அருந்துவதுமட்மே இந்த பிரச்சனையல்ல. வேலையில்லாமல் இருந்தாலும், நோக்கமின்றி அலைந்து தீய சகவாசங்களை உண்டாக்கிக்கொள்ளுவதே இதற்கான காரணமாக அமைகிறது. இத்தவறு குடும்பங்களில் துவங்குகிறது. கட்டுப்பாடோடு இருக்கிறோம் என்றும் பரைசாற்றிக்கொள்ளும் குடும்பங்களிலும் இத்தீமை இருக்கிறது.



1ST Proof

இயல்பான செரிமானத்தை பாதித்து நரம்புகளைத் துாண்டி உணர்ச்சிவசப்படுத்தும் எதுவும் சரீர இயக்கங்களை பெலவீனப்படுத்துகின்றது. மனதின் சம நிலையான நிலையையும், சரீரத்தையும் இது சேதப்படுத்துகிறது. சரீரத்தை கட்டுப்படுத்தும் மன வல்லமையை இது குறைக்கிறது. கட்டுப்பாடின்றி இச்சையடக்கமின்றி நடப்பதற்கு இது வழிவகுக்கிறது. தவறான உணவு பழக்கத்தினால் பல வாலிபர்கள் தவறான உணவுகளின்மீது ஆசையை வளர்த்துக்கொண்டு கட்டுப்பாட்டை இழந்து தீமையில் விழுகிறார்கள். ***Education, p. 202, 203.***

நமது நாட்டின் உணவு மேஜைகளில் பொதுவாக வைக்கப்படும் உணவுகள் ஒரு வகை குடிகாரனாக மாற்றும் வகையில் உள்ளன. போதை வஸ்துக்களைப்போல் அவ்வுணவுகளின் தன்மைகள் இருக்கின்றன. எதை உண்ண ஆசை வருகிறதோ அதை சார்ந்தே உணவு ஆயத்தப்படுத்தப்படுகிறது. ஆரோக்கியமற்ற உணவுகளை அதிகமாக உண்ணும் நபர் தனது இச்சைகளையும் தவறான ஆசைகளையும் கட்டுப்படுத்தும் பெலத்தை இழக்கிறார். தீங்கான பழக்கங்களின் பெலன் கூடுகிறது. ***Testimonies for the Church, Vol. 3, p. 563.***

*காபியும் தேயிலையும் தீமையை வளர்க்கிறது*

கட்டுப்பாடில்லாமல் இருக்கவும், கெட்ட பழக்கங்களையும் பொதுவாக தங்கள் குடும்பங்களில் எல்லோரும் கற்றார்கள். செரிமான அவயங்கள் பெலவீனப்படுகின்றன. சாதாரணமான உணவுகள் இவ்களை திருப்திப்படுத்துவதில்லை. ஆரோக்கியமற்ற நிலை உருவாக்கப்படுகிறது. கேடான பசி உணர்வையும், நரம்புகளையும் துாண்டிவிடும் உணவுகளையும் உண்ண நாட்டம் உண்டாகிறது. காபி கொட்டையும், தேயிலையும் அவைகளின் வேலையை உடனடியாக காட்டுகின்றன. இந்த நச்சுப் பொருட்கள் நரம்பு மண்டலத்தை தூண்டுகின்றன. சில நேரங்களில் அறிவாற்றல் கூடுவதைப்போல தோன்றலாம். கற்பனைத்திறன் கூடுவதாகவும் நினைக்கப்படலாம். இத்தகைய விளைவுகளைக் கொண்டுவருவதைப்போல உணரப்படுவதினால் அநேகர் இது அவர்களுடைய ஒரு தேவை என்றே கருதிவிடுகின்றனர். இதன் தீங்கான விளைவும் பின்தொடருகிறது. நரம்பு மண்டலம் தூண்டப்பட்டது.

இதன் நிமித்தமாக வழக்கமாக அது உபயோகிக்கும் சக்தியைவிட சரீரத்தின் சக்தியை அதிகமாக இழுத்துக்கொண்டு நரம்புகள் செயல்படுகின்றன. சரீரத்தின் பெலம் குன்றுகிறது. எதிர்காலத்தின் இயக்கங்களுக்காக பயன்பட வேண்டிய சரீரத்தின் சக்தி நரம்புகளால் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இந்த செயற்கையான தூண்டுதலுக்குப்பின் ஒரு சோர்வு உண்டாகிறது. காபி, தேயிலை பானங்களை அருந்துவோர் உடனடியாக புத்துணர்வை அனுபவிப்பதைப்போன்று வரும் உணர்வுகள் நரம்புகள் தூண்டப்படுவதினால் ஏற்படுகின்றன. இறுதியில் இது சரீர இயக்கத்தைக் காயப்படுத்துகிறது. ***Christian Temperance and Bible Hygiene.***

***புகையிலை எளிதில் கண்டுணரப்படாத நச்சு***

புகையிலை பழக்கம் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கின்றது. மதுபானத்தில் இந்த தாக்கத்தின் வீரியம் அதிகமாக இருக்கிறது. மதுபானத்தைவிட வல்லமையாக இந்த பழக்கம் பெலமான கட்டுகளால் ஒருவரை அடிமையாக்குகிறது. இந்த இரண்டு தவறான பழக்கங்களினால் சரீரமும் மனமும் போதையைக் கொடுக்கிறது. இப்பழக்கத்தைவிடுவது மிக கடினமானதாக இருக்கும். புகையிலை எளிதில் கண்டுணரப்பட முடியாத நச்சாக இருக்கிறது. ***Testimonies for the Church, Vol. 3 p. 562.***

புகையிலை மூளையை பாதிக்கிறது. உணர்வுகளை மந்தமாக்குகிறது. ஆவிக்குரிய காரியங்களை மனதால் அறிந்துகொள்ள முடிவதில்லை. குறிப்பாக இத்தீங்கை சுட்டிக்காட்டி, இதை கண்டிக்கும் சத்தியங்களை புரிந்துகொள்ள முடியாமல் போகிறது. புகையிலையை பயன்படுத்துவோர் தேவனுக்கு முன்பாக சரியான நிலையில் நிற்கிறதில்லை. தேவனை நமது சரீரங்களால் மகிமைப்படுத்த முடியாதபடிக்கு நம்மை தள்ளும் ஒரு கெட்ட பழக்கம் தேவனுடையதாக இருக்கும். சரீரத்தையும் மனதையும் மோசமான வகையில் அழுக்காக்குகிறது. ***Counsels on Health p, 81.***

புகையிலை மூளையை பெலவீனப்படுத்துகிறது. அதன் மென்மையான உணர்வுகளை செயலிழக்கச் செய்கிறது. மதுபானங்கள் போன்ற வல்லமையான பானங்களை பருகும் தாகத்தை



1<sup></sup>ST Proof

உருவாக்குகிறது. மதுபானம் அருந்தும் பழக்கத்திற்கு பெரும்பாலும் இதனால் ஒரு வலுவான அடித்தளம் போடப்படுகிறது. ***Temperance and Bible Hygiene p. 17.***

***நரம்புகளைத் தூண்டிவிடும் மற்ற போதை வஸ்துக்கள்***

இவைகள் சரீர பெலத்தை குறைத்துவிடுகின்றன. சரீரத்தை பாதிக்கும் எதுவும் மனதையும் பாதிக்கிறது. திடீரென இவைகள் ஒரு குறிப்பிட்ட நேரம் வரை சக்தியை உயர்த்துவதைப்போல் தோன்றலாம். ஆதிகமான செயல்பாட்டையும் கொண்டு வரலாம். இவைகளின் தற்காலிகமான செயல்பாடு நீங்கிவிடும். இதற்கு பின் மனமும் சரீரமும் முன்பு இருந்ததைவிட மோசமான நிலைக்குள்ளாக தள்ளப்படுகின்றன. மதுபானம் புகையிலை போன்ற போதை வஸ்துக்கள் மனித இனத்தின் சாபமாக உள்ளன. சரீரத்தை பெலவீனப்படுத்தி மனதை குழப்புகின்றன. நல்லொழுக்கமும் கெடுகிறது. பகுத்தறிவு ஒதுக்கப்படுகிறது. மிருகத்தைப் போன்ற இச்சைகள் தலை தூக்குகின்றன. இவைகள் எந்த அளவிற்கு பயன்படுத்தப்படுகின்றனவோ, அந்த அளவிற்கு நல்ல சுபாவமும் சீர்கெடுகிறது. ***Signs of the Times, Sep. 13, 1910.***

***இவைகளை வெறுக்கக் கற்றுத்தாருங்கள்***

இத்தகைய கேடான பொருட்களை வெறுக்கப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். அநேக பெற்றோர்கள் இந்த ஆசைகளை பிள்ளைகளிடம் வளர்த்துவிடுகின்றனர். இதை செய்வதை அறியாமலேயே இதை செய்கின்றனர். ***Temperance and Bible Hygiene p. 17.***

தவறானவற்றை உண்ணும் பசி ஆசைகளிலிருந்து பிள்ளைகளை பெற்றோர் பாதுகாக்க வேண்டும். குறிப்பாக போதையூட்டக் கூடிய பொருட்களை பிள்ளைகள் பயன்படுத்தாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். சுவையூட்டிகளையும் நறுமனமூட்டிகளையும் அதிகமாக சேர்க்கப்படும் உணவுகளை கிறிஸ்தவர்கள் சமைக்கக் கூடாது. வயிற்றை நாம் தவறான விதத்தில் பயன்படுத்தக் கூடாது. ***Review and Herald, June 27, 1899.***

இன்றைய துரிதமான நவீன காலத்தில் நம்மை உணர்ச்சிவசப்பட வைக்கக்கூடிய உணவுகளை உண்ணாமல் இருப்பது நல்லது.

எல்லாவற்றிலும் இச்சையடக்கத்துடன் இருக்க வேண்டும். தவறானவற்றை உண்ணத் தூண்டும் பசியுணர்வு தீர்க்கமாக மறுக்கப்பட வேண்டும். இதுவே பாதுகாப்பின் ஒரே வழியாக இருக்கிறது. ***Testimonies for the Church, Vol. 3, p. 561.***

### *பெற்றோர்க்கு ஒரு சாவல்*

பெற்றோர் பிள்ளைகள் தவறான ஆசைகளை சுதந்தரித்துக் கொள்ளும்படியான காரணமாக இருக்கலாம். இப்பிள்ளைகளுக்கு இச்சையடக்கத்தைக் கற்றுக்கொடுப்பது கடினமானதாக இருக்கும். நல்ல பழக்கங்களையும் நல் ஒழுக்கத்தையும் இவர்களுக்கு சொல்லிக்கொடுப்பதும் எளிதானதாக இருக்காது. பெற்றோரிடமிருந்து தீய ஆசைகளை பிள்ளைகள் சுதந்தரித்துக் கொண்டிருப்பார்களானால் எவ்வளவு பெரிய பொறுப்பை இப்பெற்றோர்கள் பெறுகிறார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்திருக்கும் தீய சுபாவங்களை திருத்த எந்த அளவிற்கு பிரயாசப்பட வேண்டும். இப்பெற்றோர் விடாமுயற்சியுடன், கவனமாக, தொடர்ந்து தங்கள் கடமைகளை நிறைவேற்ற முயற்சிசெய்தே கொண்டிருக்க வேண்டும். துரதிஷ்டவசமாக தீமைகளை சுதந்தரித்துக்கொண்ட பிள்ளைகளுக்காக விசுவாசத்துடன் நம்பிக்கையோடு செயல்பட வேண்டும். ***Testimonies for the Church, Vol. 3, p. 567, 568.***

### *ஆசைகளும் விருப்பங்களும் சீராக்கப்பட வேண்டும்*

நல்ல ஆரோக்கியத்தின் கூறுகளை புரிந்து கொள்ளுவதையே பெற்றோர் தங்கள் முதற்கடமையாகக் கொள்ள வேண்டும். தவறான உணவுகளினாலோ, பழக்கங்களினாலோ பிள்ளைகள் கேடான சுபாவங்களை வளர்த்துக் கொள்ளாதபடி பெற்றோர் பார்க்க வேண்டும். தாய்மார்கள் அக்கரையுடன், மிக கவனமாக எளிமையான ஆரோக்கயமான உணவுகளை ஆயத்தப்படுத்த பிரயாசப்பட வேண்டும். செரிமான அவயங்கள் பெலவீனப்படுத்தப்படக் கூடாது. நரம்பு மண்டலத்தின் சக்திகள் சம நிலையை இழக்கக் கூடாது. பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் நல்ல அறிவுரைகளுக்கு எதிர்மறையான உணவுகள் அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட கூடாது. நாம் உண்ணும் ஒவ்வொரு உணவும் நமது வயிற்றின் அவயங்களை



1ST Proof

பெலவீனப்படுத்துவதாக இருக்கும், அல்லது பெலப்படுத்துவதாக இருக்கும். பிள்ளைகளின் நல்லொழுக்கத்தையும் சரீரத்தின் ஆரோக்கியத்தையும் இது வெகுவாக பாதிக்கின்றது. நமது பிள்ளைகள் கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப் பெற்ற தேவனது சொத்தாக இருக்கிறார்கள். ***Testimonies for the Church, Vol. 3, p. 568.***

அத்தகைய ஒரு உன்னதமான நம்பிக்கையின் பொறுப்பை தேவன் பெற்றோர்க்கு கொடுத்திருக்கிறார். பெற்றோர்கள் பிள்ளைகளது சரீரங்களையும் நல்லொழுக்கத்தையும் பாதுகாக்க வேண்டும். நரம்பு மணடலம் சம நிலையுடன் இருந்து, அவர்களது ஆத்துமாக்களும் அபாயத்திற்குள்ளாக தள்ளப்படாது. ***Testimonies for the Church, Vol. 3, p. 561.***

ஆரோக்கியமான உணவுகளை ஆயத்தப்படுத்துவதின் வழியாக நமது சகோதரிகள் மற்றவர்களின் இரட்சிப்பின் பெிய வேலையில் அவர்களது பங்கை நிறைவேற்றுகிறார்கள். பிள்ளைகளுக்கு நல்ல பழக்கங்களையும், ஆரோக்கியமான உணவுகளை உண்ணும் விருப்பத்தை தாய்மார்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். இதை செய்வதில் தங்கள் விலைமதிப்பற்ற நேரத்தை செலவிட வேண்டும். எல்லாவற்றிலும் கட்டுப்பாடோடு இருக்கும் பழக்கத்தை பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்து, மற்றவரின் நன்மைக்காக சுயத்தை மறுக்க ஊக்குவிக்கப்பட வேண்டும். ***Testimonies for the Church, Vol. 3, p. 489.***

### *பொறுப்பை அசட்டை செய்வோர்*

பிள்ளைகளுக்கு பொருமையுடன் இவைகளைக் கற்றுக் கொடுக்கப் பெற்றோர் விரும்புவதில்லை. எதையும் உண்ணவும் பருகவும் விட்டுவிடுகின்றனர். எப்பொழுது வேண்டுமானாலும் புசிக்கவும் குடிக்கவும் விடப்படுகிறார்கள். தீமையான நாட்டங்களை திருப்திப்படுத்திக் கொள்ளும் ஆசைகளும் பிள்ளைகளுடன் சேர்ந்து வளருகின்றன. இவர்கள் வாலிபர்களாக வளருகிறார்கள். எளிதில் உணர்ச்சிவசப்படுகிறவர்களாகவும் தவறான பசி ஆசைகளுக்கு அடிமைகளாகவும் இருக்கிறார்கள். தங்கள் வாழ்க்கையை துவங்கி சமுதாயத்தில் தங்கள் இடத்தை இவர்கள் எடுக்கும்பொழுது சோதனைகளை வெல்ல பெலனில்லாதவர்களாக இருக்கிறார்கள். சிறு

குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

வயதில் தவறாக வழிநடத்தப்பட்டதினால், பலர் பெருந்தீனிக்காரர்களாகவும், புகையிலைக்கு அடிமைகளாகவும், நல்ல குணங்களை பெறாதவர்களாகவும் இருக்கிறார்கள். தவறான கல்வியின் விளைவுகளாக இவர்களைப் பார்க்கிறோம்.

கிறிஸ்தவ ஆண்களும் பெண்களும் இன்றைய கட்டுப்பாடற்ற நிலையை குறித்து அதிகமாக பேசுகிறார்கள். ஒரு கேள்வி கேட்கப்பட வேண்டும். இந்த வாலிபர்களை வழிநடத்தியது யார்? துவறான ஆசைகளையும், தவறான உணவிற்கான நாட்டத்தையும் இவர்களில் வளர்த்தவர்கள் யார்? இந்நபர்கள் தங்கள் பொறுப்புக்களை புறக்கணித்துள்ளனர். வாலிபர்களின் குணங்களை இவர்கள் சரியாக உருவகிக்கவில்லை. இப்பிள்ளைகள் இந்த சமுதாயத்தற்கும், பரலோகின் ஐக்கியத்திற்கும் பயனற்றவர்களாக இருக்கிறார்கள். ***Christian Temperance and Bible Hygiene p. 76.***

### *வேலையானது வீட்டில் துவங்குகிறது*

இந்த வேலையானது இல்லத்தில் துவங்குகிறது. வாலிபர்களுக்கு ஒரு நல்ல கல்வியைக் கொடுக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் பெரிய சுமைகளை சுமக்கிறவர்களாக இருக்கிறார்கள். பிள்ளைகளிடமும் வாலிபர்களிடமும் நல்ல குணங்கள் உருவாக்கப்பட வேண்டும். இங்கு தாய்மார்களுக்கான ஒரு வேலையுள்ளது. பிள்ளைகள் நல்ல பழக்கங்களைப் பெற்றுக்கொண்டு, நல்ல நாட்டங்களை வளர்த்துக் கொள்ள இவர்களே உதவ வேண்டும். தேவையான பெலத்தை பெற்றவர்களாக இப்பிள்ளைகள் நல்லொழுக்கத்தில் ஸ்திரமாக நிற்க தகுதியடைய வேண்டும். மற்றவர்களால் தவறாக வழிநடத்தப்படக் கூடாது என்பதை கற்றுக்கொடுங்கள். மற்றவர்களின் தவறான செல்வாக்கினால் சரியான பாதையைவிட்டு விலகக் கூடாது. தொடர்பு கொள்ளுபவர்களின் மீது ஒரு நல்ல செல்வாக்கைக் கொண்டுபோகவும் இவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். மற்றவர்களை ஒரு உயரிய நிலைக்கு உயர்த்துபவர்களாக இவர்கள் இருக்க வேண்டும். தேவனுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்திக்கொண்டால் மோசமான சோதனைகளையும் வெல்ல பெலன் கிடைக்கும் என்பதும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ***Christian Temperance and Bible Hygiene p. 21, 22.***

### *இச்சையடக்கம் பரிகாசத்திற்குரியதல்ல*

பலர் இதை பரிகாசத்திற்கான ஒரு தலைப்பாக மாற்றுகிறார்கள். நாம் எதை புசிக்கிறோம் என்பதும், எதை குடிக்கிறோம் என்பதும் தேவன் கவனிக்கின்ற அளவிற்கு முக்கியமானவைகள் அல்ல என்கின்றனர். தேவன் இவைகளிலும் அக்கரை கொள்ளுகிறார். மனோவாவின் மனைவிக்கு இரண்டு முறை தரிசனம் கொடுத்து இக்காரியங்களில் கவனமாக இருக்கும்படி எச்சரிக்கிறார். இந்த விஷயங்களிலும் தேவன் கவனமாகவே இருக்கிறார் என்பதற்கு இது நல்ல ஆதாரமாக உள்ளது. ***Temperance p. 233, 234.***

### *சீர்திருத்தம் தாயிடம் துவங்குகிறது*

தாயானவள் தனது பழக்க வழக்கங்களை எப்படி பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதும் வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ***Ministry of Healing p. 372.***

பிள்ளையின் பிறப்பிற்கு முன்பாகவே தாயிடம் சீர்திருத்தம் துவங்க வேண்டும். தேவனது அறிவுறுத்தல்கள் உண்மையாக கைக்கொள்ளப்பட்டால் கட்டுப்பாடின்மை இருக்காது. ***Signs of the Times, Sep. 13, 1910.***

அந்த எபிரெய தம்பதிகளுக்கு தெளிவான அறிவுரைகள் கொடுக்கப்பட்டன. தாயின் பழக்க வழக்கங்களை குறித்தும் பிள்ளையின் பயிற்சியைக் குறித்தும் தேவதூதன் தெளிவாகப் பேசினார். சிம்சோன் தனது பிறப்பிலும் நன்மையானவைகளையே சுதந்தரித்துக் கொள்ள வேண்டியதாக இருந்தது. அத்துடன் கவனத்துடன் சீரான பயிற்சியும் தொடர வேண்டியதாக இருந்தது. சிறு வயதுமுதலும் தீர்க்கமான கட்டுப்பாட்டையும், இச்சையடக்கத்தையும் பரைசாற்றும் பழக்கங்களை கைக்கொள்ள அவர் பயிற்றுவிக்கப்பட வேண்டியிருந்தது.

எபிரெய குழந்தைகளை பராமரிக்க பெற்றோர்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுரைகளை நாம் பார்க்கிறோம். சரீரத்திற்கு ஏதுவான எதுவும் அசட்டை செய்யப்படக் கூடாது என்பதை புரிந்துகொள்ளுகிறோம்.

1ST Proof

முக்கியமல்ல என்று எதையும் நாம் ஒதுக்க முடியாது. சரீரத்தை பாதிக்கின்ற எதுவும் குணத்தையும் மனதையும் பாதிக்கிறது. ***Ministry of Healing p. 379, 380.***

இச்சையடக்கமும் சுயகட்டுப்பாடும் தொட்டிலிலிருந்தே சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். இவ்வேலையின் பெரிதான சுமை தாயின்மீதே அதிகமாக இருக்கிறது. தந்தையினுடைய உதவியைப்பெற்றுக் கொண்டு தாயானவள் வெற்றிகரமாக இவ்வேலையைச் செய்ய வேண்டும். ***Review and Herald, July 9, 1910.***

***இல்லத்திலும், பள்ளியிலும் தொடரப்படும் பாடங்கள்***

வாழ்க்கையின் முழுமைக்கும் கைக்கொள்ளப்பட்டவைகளை விடுவது மிகவும் கடினமானதாக இருக்கும். மனதின் நாட்டமும் அதற்கேற்றபடியே வளைந்திருக்கும். இச்சையடக்கமில்லாமை என்ற பிசாசை சுலபமாக ஜெயித்துவிட முடியாது. இது ஒரு இராட்சதனைப்போல் உள்ளது. மேற்கொள்ள எளிமையானதாக இருப்பதில்லை. இத்தீமையை மேற்கொள்ளத்தக்கதான ஒரு போராட்டத்தைப் பெற்றோர்கள் தங்கள் இல்லங்களில் துவங்கட்டும். நமது தனிப்பட்ட குடும்பங்களில் இவ்வேலை துவக்கப்படட்டும். குழந்தை பிராயத்திலிருந்தும் பிள்ளைகளுக்கு நல்ல கோட்பாடுகளைச் சொல்லிக்கொடுத்தால் வெற்றியை எதிர்பார்க்கலாம். தாய்மார்களே தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கின்ற அருமையான நேரங்களை பிள்ளைகள் நல்ல குணங்களை உருவாக்கிக்கொள்ள அவர்களை பயிற்றுவிக்க செலவிடுங்கள். புசிப்பிலும் குடிப்பிலும் இச்சையடக்கத்தின் கோட்பாடுகளை கைக்கொள்ள சொல்லிக்கொடுங்கள். ***Testimonies for the Church, Vol. 3, p. 567.***

இதைக்குறித்ததான அறிவுரைகள் ஒவ்வொரு இல்லத்திலும் பள்ளியிலும் கொடுக்கப்பட வேண்டும். பிள்ளைகளும் வாலிபரும் தீய போதை பொருட்களின் தன்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். மதுபானம் புகையிலை போன்றவைகள் சரீரத்தை அழித்து மனதை மந்தப்படுத்தி ஆத்துமத்தை மாம்சத்திற்குரியதாக மாற்றுகின்றன. இவைகளை பயன்படுத்துவோர் சரீரத்திலும், மனதிலும், நல்லொழுக்கத்திலும் முழு பெலத்தை அனுபவிக்க முடியாது என்பதை தெளிவாக காட்ட வேண்டும். ***Education, 202.***

***சிறு காரியங்களை அசட்டை செய்தல்***

***பின்விளைவுகள் விளக்கப்படட்டும்***

எந்த வகையிலான தீமையின் ஆரம்பமும் வந்துவிடாதபடி காத்துக்கொள்ள வேண்டும். வாலிபர்களை வழிநடத்துவதிலும், அறிவுரைகளை கொடுப்பதிலும், ஒன்றை துள்ளியமாக விளக்க வேண்டும். சிறு விஷயங்கள் என்று அசட்டையாக இருந்துவிடுவதின் விளைவுகள் காட்டப்பட வேண்டும். வாலிபர்கள் எஜமான்களைப்போல் இருக்க வேண்டியவர்கள். அடிமைகளைப்போல் அல்ல. இது அவர்களது மனங்களில் பதிக்கப்படட்டும். அவர்களுக்குள்ளாக இருக்கும் இராஜியத்தின் அரசர்களாக இருக்கிறார்கள். தேவன் அவர்களுக்கு அருளியிருக்கின்ற இந்த ராஜரீகத்தை அவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வறிவுறுத்தல்கள் ஒழுங்காக கொடுக்கப்பட வேண்டும். இதன் நற்பலன்கள் இவ்வாலிபர்களையும் தாண்டி மற்றவர்களையும் சென்றடையும் அழிவின் விளிம்பிலுள்ள ஆயிரக்கணக்கானோர் இரட்சிக்கப்படத் தக்கதான ஒரு செல்வாக்கு பரவும். ***Education, 203, 204.***

***சோதனையை எதிர்கொள்ள நல்லொழுக்கத்தைப் பெலப்படுத்திக் கொள்ளுங்கள்***

இச்சையடக்கமில்லாமையின் தீமையை கட்டுப்படுத்த ஒவ்வொருவரின் தனி முயற்சியும் தேவைப்படுகிறது. இதை பெற்றோர்கள் புரிந்துகொள்ளும் படியாக புதிய வார்த்தைகள் கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வளவு நன்மையானதாக இருக்கும். பெற்றோரின் மனங்களுக்குள்ளாக தீயைப் போன்று ஊடுருவி மனங்களை உருக வைக்கும் வார்த்தைகளாக இவைகள் இருத்தல் வேண்டும். ***Pacific Health Journal May 1890.***

பிள்ளைகள் ஆரேர்கியமான மகிழ்ச்சிகரமான ஒரு நல்ல வாழ்க்கையை வாழுவதற்கான அடித்தளத்தைப் பெற்றோர்கள் இடலாம். நல்லொழுக்கத்தின் முழு பெலனுடன் பிள்ளைகள் வீட்டிலிருந்தும் உலகினுள் அனுப்பலாம். சோதனையை மேற்கொள்ளுபவர்களாகவும்

1^ST^ Proof

வாழ்வின் பிரச்சனைகளை ஊக்கத்துடன் துணிவாக சந்திப்பவர்களாக இவர்கள் இருக்க வேண்டும். தேவனை கணப்படுத்தவும், உலகிற்கு ஒரு ஆசீர்வாதமாக விளங்கும் ஆசையை அவர்களில் உண்டாக்கலாம். சூரிய ஒளியிலும், இருளிலும் தங்கள் பாதங்களுக்கு சீரான பாதைகளை உருவாக்கிக்கொள்ளலாம். அதன் வழியாக பரலோகின் உயரிய மகிமைகளையும் சென்றடையலாம். ***Ministry of Healing p. 352.***

இச்சையடக்கம் என்ற மேடையின்மீது நாம் நிற்க தேவன் அழைக்கிறார். புசிப்பதிலும், குடிப்பதிலும், உடையிலும் இந்த அகலமான மேடையின்மீதே நாம் இருக்க வேண்டும். பெற்றோர்களே தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கின்ற பொறுப்புக்களுக்கு விழித்தெழும்ப மாட்டீர்களா? ஆரோக்கிய சீர்திருத்தத்தை படியுங்கள். பிள்ளைகளுக்கு சுயத்தை மறுக்கும் பாதையைக் காட்டுங்கள். பாதுகாப்பான ஒரே பாதை இதுவே. ***Manuscript 86, 1897.***

***பாகம் - XV***

***அதிகாரம் - 65***

***சரியான உடை***

***சீரான உடையின் ஆசீர்வாதங்கள்***

***சமயத்திற்கேற்ற நல்ல உடை***

எல்லாவற்றிலும் நாம் தேவனை மகிமைப்படுத்தவேண்டியிருக்கிறது. உடைகளும் அந்தப்படியே இருக்க வேண்டும். நாம் அணியும் உடைகள் சுத்தமாகவும் ஆரோக்கியமானதாகவும் இருக்க வேண்டும். நமக்கேற்ற நல்ல உடைகளை நாம் உபயோகிக்க வேண்டும். இதை தேவன் எதிர்பார்க்கிறார். ***Education, 248.***

நாம் சிறப்பாக தோற்றமளிக்க வேண்டும். ஆசரிப்புக் கூடாரத்தில் பணியாற்றிய ஆசாரியர்களின் உடைகளின் ஒவ்வொரு துள்ளியமான விஷயமும் தெளிவாகக் கூறப்பட்டது. இவர்கள் வேனுக்கு முன்பாக அவருடைய வேலைகளை செய்தனர். அவரது வேலையை செய்பவர்களின் உடையை குறித்தும் அவர் கவனமாக இருக்கிறார்



1ST Proof

என்பதை இதன் வழியாக தெரிந்துகொள்ளுகிறோம். ஆரோனுடைய உடையைப்பற்றி துள்ளியமாக சொல்லப்பட்டிருந்தது. அவரது உடை ஓர் அடையாளமாக செயல்பட்டது. இதைப்போலவே கிறிஸ்துவின் வேலையாட்களுடைய உடைகளும் இத்தகைய அடையாளங்களாக இருக்க வேண்டும். எல்லாவற்றிலும் தேவனின் பிரதிநிதிகளாக நாம் இருக்க வேண்டும். தூய்மையும், தாழ்மையும் ஒழுங்கும் நமது உடையில் வெளிப்பட வேண்டும். ***Testimonies for the Church, Vol. 6, p. 96.***

***இயற்கையின் பாடங்கள்***

பரலோகம் பெரிதாக நினைக்கும் அழகை இயற்கைக் காட்டுகின்றது. கிறிஸ்து இயற்கையைக் கொண்டு உண்மையான அழகைச் சித்தரிக்கின்றார். பூக்களைப் பார்க்கச் சொல்லுகிறார். உடையானது தாழ்மையையும் தூய்மையையும் காட்ட வேண்டும். நேர்த்தியானதாகவும் இருக்க வேண்டும். இதுவே தேவனை மகிழ்வூட்டும் உடையாகும். ***Ministry of Healing p. 289.***

***உடை குணத்தைக் காட்டுகிறது***

பொதுவாக உடையும் அது அணியப்படும் விதமும், ஒரு மனிதர் எப்படிப்பட்டவர் என்பதைக் காட்டுகிறது. ***Review and Herald, Jan. 30, 1900.***

ஒரு நபரது உடையை வைத்து அந்நபரின் குணத்தைக் கணிக்கிறோம். தாழ்மையுடன் நடந்துகொள்ளுபவர் அதைக் காட்டும் உடைகளை அணிவார். மேம்பட்ட விருப்பமும், நன்றாக வளர்க்கப்பட்ட சிந்தையும் எளிமையான தேவைக்கேற்ற உடைகளையே தேர்வு செய்யும். எளிமையான உடைகளை அணிந்து தேவையில்லாத அலங்கரிப்பையும் ஆடம்பரத்தையும் தவிர்க்கும் ஸ்திரி ஒரு குணசாலியான ஸ்திரியாக இருப்பாள். நல்லொழுக்கத்தில் தேர்ச்சிபெற்ற நபராகவும் இருப்பார். உடைகளில் எளிமையை கைக்கொள்வது இரம்மியமானதாகவும் ஆாவத்தைத் தூண்டுகிற தாழ்மையாகவும் இருக்கும். நிலத்தை அழகான பூக்களுக்கு இது ஒப்பிடப்படலாம். ***Review and Herald, Nov. 17, 1904.***

***வழிநடத்துகிற கோட்பாடுகள்***

தேவனுக்கு முன்பாக நம் போக்கை ஆராய்ந்து நடக்க வேண்டும். இதில் எச்சரிப்புடன் செயல்பட வேண்டும். நமது மக்கள் இதை செய்யும்படி கெஞ்சி கேட்கிறேன். ஆரோக்கியத்துக்கு ஏதுவான உடைகளை பயன்படுத்துங்கள். நமது சகோதரிகள் சாதாரணமான உடைகளை அணியட்டும். உடைகள் நல்ல தரமான துணியைக் கொண்டு தைக்கப்படட்டும். வயதிற்கேற்ற உடைகள் தேர்ந்தெடுக்கப்படட்டும். இதையே பெரிய காரியமாக நினைத்துக்கொண்டிருக்க வேண்டாம். நமது சகோதரிகள் உடைகளை அணிவதில் எளிமையைக் கைக்கொள்ளட்டும். நல்லொழுக்கத்திற்கும், நல்ல தெளிந்த புத்திக்கும் சாட்சி பகரும் விதத்தில் உடைகள் இருக்கட்டும். உடையில் தாழ்மையும் வெளிப்பட வேண்டும். தேவகிருபையினால் நாம் உள்ளுக்குள்ளாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறோம். இதை உலகிற்கு சித்திக்கத்தக்கதாக நமது வெளித்தோற்றம் இருக்க வேண்டும். ***Manuscript 167, 1897.***

***நடைமுறையில் உள்ள நல்ல பழக்க வழக்கங்கள் ஆரோக்கயமானவைகளாகவும்ஈ தாழ்மையானவைகளாகவும், நமக்கேற்றவைகளாக இருப்பின் பின்பற்றப்படலாம்.***

உலகத்திலிருந்து மற்றும் வேருபட்டவர்களைப்போல் எல்லோரும் வினோதமாக பார்க்கும்படியாக நாம் உடையணிய வேண்டியதில்லை. ஆயினும் ஆரோக்கியமானதாகவும் எளிமையானதாகவும் இருக்கும் உடைகள் நடைமுறை பழக்கத்தில் இல்லாமல் இருக்கலாம். இதற்காக இந்த உடைகளை உலகை பின்பற்ற நாம் மாற்றிக்கொள்ள வேண்டியதில்லை. ஒரு உள்ளத்துடன் நமது சுதந்திரத்தைப் பயன்படுத்தி, உலகமே மாறுபட்டிருந்தாலும் நல்லொழுக்கத்தை பற்றிக்கொள்ள துணிவை பெற்றிருக்க வேண்டும்.

உலகமானது வேதத்திற்கு ஏற்ற ஒரு எளிமையான நல் ஆரோக்கியத்துக்கு ஏதுவான ஒரு உடையை அறிமுகப்படுத்தினால் நாம் அதை அணிவது தவறில்லை. தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவும் இதனால் மாறிவிடாது, உலகின் உறவையும் காத்துக்கொள்ளுகிறோம். கிறிஸ்தவர்கள் இயேசுவை பின்பற்ற வேண்டும். அவர்களது உடைகள் தேவ வார்த்தைகளுக்கு இசைவானதாக இருக்க வேண்டும். எந்த விதத்திலும் தீவிரமாக நடந்து கொள்ளக் கூடாது. தாழ்மையுடன் நேரான பாதையில் செல்ல வேண்டும்.



1ST Proof

உலகம் குறை கூறினாலும், புகழ்ந்தாலும், சரியானதையே நன்மை என்றறிந்து பற்றிக்கொள்ள வேண்டும். ***Testimonies for the Church, Vol. 1, p. 458, 459.***

***தீவிரத்தைத் தகர்க்க வேண்டும்***

உடைகளில் வந்துள்ள புது பழக்கங்களை பின்பற்ற முயற்சித்து உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள். நல்ல ஒழுங்கான உடைகளை அணிந்துகொள்ளுங்கள். உலகம் தேவையில்லாத எதையும் பேசமுடியாதபடி இதை செய்யுங்கள். இதை குறித்து நாம் அசட்டையாக இருக்கவும் கூடாது, அதே சமயம் சுயத்தை தூக்கிவிடும் பகட்டான உடைகளையும் பயன்படுத்த வேண்டாம். இந்த இரண்டு தீவிரமான செயல்களுமே தகாத வார்த்தைகளை உலகத்தினரிடம் உருவாக்கும். பரலோகின் கண் உங்கள்மீதுள்ளது என்பதை மனதில் கொண்டவர்கள் போல செயல்படுங்கள். ஒன்று பலலோகத்தால் அங்கிகரிக்கப்பட்டுக் கொண்டிருப்போம். இல்லையெனில் நம் செயல்களினால் பரலோகத்தை துக்கப்படுத்திக் கொண்டிருப்பவர்களாக இருப்போம். ***Manuscript 53, 1912.***

***உடையில் அக்கரைக் கொள்ளுவது மேட்டிமையுடன் சேர்க்கப்படக் கூடாது***

உடைகளில் தற்பெருமையும் மேட்டிமையும் காட்டப்படுவதாகக் கூறி ஒரு கூட்டத்தினர் தங்கள் உடைகளைப் பற்றி எதையும் சிந்திப்பதே இல்லை. ஒழுங்கில்லாத அழுக்கான உடைகளை அணிவதே ஒழுக்கம் என்று சிலர் நினைத்துக் கொள்ளுகிறார்கள். இவர்களது உடைகள் மோசமான தோற்றத்தை உடையதாக இருக்கும். தானாகவே எங்கிருந்தோ பறந்து வந்து அவர்கள்மீது விழுந்துவிட்டதைப்போல் காட்சி அளிக்கும். இவர்களது உடைகள் அழுக்காக இருக்கும். இவர்கள் எப்பொழுதும் தற்பெருமையை எதிர்த்துக்கொண்டு பேசிக்கொண்டே இருப்பார்கள். ஒழுங்கையும் துப்புரவையும் இவர்கள் தற்பெருமையென்று பேசுகிறார்கள். ***Review and Herald, Jan. 23, 1900.***

***இயேசுவின் எச்சரிப்பு***

இயேசுவானவரும் உடைகள் தவறாக பயன்படுத்தப்படுவதைக் கவனித்தார். அவரதுபின்னடியார்களுக்கு இதை குறித்து ஒரு கட்டளையைக் கொடுத்தார். இதைப்பற்றி அவர்கள்சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டாம் என்று சொல்லியிருந்தார். *உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். மத் 6: 28, 29.* அதிகமாக செலவு செய்து பகட்டான உடைகளை அணிந்துகொண்டு இதில் பெருமைப்பட்டுக் கொள்ளுவது ஒரு பாவம். பெண்கள் இதில் அதிகமாக விழுகிறார்கள். எனவே உடைகளைக் குறித்ததான நல்ல கோட்பாடுகள் பெண்களுக்காகவே நியர்த்தியாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. கிறிஸ்துவினுடைய அன்போடும் தாழ்மையோடும் ஒப்பிடும்பொழுது தங்கமும், விலையுயர்ந்த முத்தும் அதன் மதிப்பை இழக்கிறது. ***Christian Temperance and Bible Hygiene p. 93, 94.***

***தேவ மக்களுக்கு வேதத்தின் அறிவுரைகள்***

பின்வரும் வசனங்களை கவனிக்கும்படி எனக்கு சொல்லப்பட்டது. தூதன் இப்படியாக சொன்னான். “இவ்வசனங்கள் தேவ மக்களை அறிவுறுத்த வேண்டும்.” *“ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்.” 1 தீமோத் 2 : 9, 10 “மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.” 1 பேதுரு 3: 3-5.* ***Testimonies for the Church, Vol. 1, p. 189.***

பலர் இந்த அறிவுரைகள் பழங்காலத்திற்குரியவைகளாக நினைக்கிறார்கள். இந்த நவீன காலத்திலும் உடைகளால் வரும் அபாயங்களை இயேசு புரிந்து கொண்டிருந்தார். இதை மனதில் வைத்துக் கொண்டே சீஷர்களை அன்றைக்கே எச்சரித்தார். இது நமக்கான எச்சரிப்பாக உள்ளது. இதற்கு நாம் செவிகொடுப்போமா? ஞானமாக செயல்படுவோமா? ***Testimonies for the Church, Vol. 4, p. 630.***

கிறிஸ்துவை உண்மையுடன் பின்தொடருபவர்கள் தங்களது உடைகளின் எல்லா காரியங்களிலும் கவனத்துடன் செயல்படுவார்கள். தேவன் அவரது வார்த்தையில் சொல்லியுள்ளவைகளைக் கைக்கொள்ள பிரயாசப்படுவார்கள். தேவன் இவைகளை தெளிவாக சொல்லியுள்ளார். ***Message to young people p. 345, 346.***

***உடைகளை நேசிப்பதின் அபாயங்கள்***

உடைகளின் மீது அதிகமாக நாட்டங்கொண்டு உடைகளையே நேசிப்பது ஒரு கிறிஸ்தவ பெண்ணின் குணமல்ல. கிறிஸ்தவ பெண் தாழ்மையுடையவளாகவும் தெளிந்த அறிவுடையவளாகவும் இருப்பாள். எல்லோரின் கவனங்களை ஈர்க்கக்கூடிய பகட்டான பெருமிதம் கொள்ள வைக்கும் உடைகள், அதை உடுத்திக் கொள்ளுபவர்களின் மனங்களின் இச்சைகளைத் தூண்டுகிறது. இவ்வுடைகளை கண்நோக்குபவர்களின் இதயங்களில் தகாத ஆசைகளைத் தூண்டுகிறது. உடைளில் பார்க்கப்படும் இத்தவறுகளினால் குணம் சீர்கெடுகிறது. தற்பெருமையும் உருவாகி மாயைகளின் மீது ஒரு நாட்டம் பிறக்கிறது. நல்லதை செய்யும் ஆசையை இது போக்குகிறது. ***Testimonies for the Church, Vol. 4, p. 645.***

***உடையில் எளிமையாகயிருத்தலின் சாட்சி***

எளிமையான சாதாரண தேவையற்ற ஆடம்பரமும் இல்லாத உடைகளே நமது வாலிப ஸ்திரிகளுக்கு ஏற்றவைகளாக இருக்கின்றன. உடையில் எளிமையையும் நற்பண்பையும் காட்டுவதின் வழியாக நம்மிடம்



1ST Proof

குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

உள்ள ஒளியை மற்றவர்களின் மீது பிராகாசிக்க செய்கின்றோம். நல்ல உடைகளை அணிவதின் மூலமாகவே மற்ற எல்லா வழிகளைக் காட்டிலும் நாம் பெற்றிருக்கும் ஒளியை எல்லோரின் மீதும் சிறப்பாக ஒளி வீசச் செய்யலாம். பரலோகின் நித்திய காரியங்களுக்கும் இவ்வுலகின் காரியங்களுக்கும் அவையவைகளுக்குரிய இடத்தை கொடுத்து கணம்பண்ணுகிறீர்கள் என்பதை காட்டலாம். ***Testimonies for the Church, Vol. 3, p. 376.***

***தன்னடக்கத்தைக் காட்டும் உடைகள் பாதுகாப்பின் கேடகங்கள்***

சகோதரிகளே தீமையின் தோற்றத்தை தகர்த்து எரியுங்கள். சீர்கேட்டால் நிரப்பப்பட்டிருக்கும் இந்த துரிதமான நவீன காலத்தில் எச்சரிப்புடன் இல்லாவிடில் பாதுகாப்பாக இருக்க முடியாது. நல்லொழுக்கமும் தன்னடக்கமும் அரிதாகவே காணப்படுகின்றன. கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்று கூறுகிறீர்கள். கிறிஸ்தவத்தின் உயரிய தரத்தை பரைசாற்றுபவர்களாக தங்களை சொல்லிக் கொள்ளுபவர்களுக்கு ஒரு தாழ்மையான வேண்டுகோலை வைக்கிறேன். தன்னடக்கம் என்ற விலைமதிப்பற்ற இரத்தின கல்லை வைத்துக் கொள்ளுங்கள். உங்களது நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் இது பாதுகாக்கும். ***Testimonies for the Church, Vol. 2, p. 458.***

ஊடையில் ஒழுக்கம் நிறைந்த எளிமையும், தன்னடக்கமான நடத்தையும், ஒரு பரிசுத்தமான பாதுகாப்பு வளையத்தை ஒவ்வொரு பெண்ணைச் சுற்றியும் உருவாக்கும். ஆயிரக்கணக்கான அபாயங்களிலிருந்து பாதுகாக்கும் கேடகமாக இது அமையும். ***Education, p. 248.***

***பழங்காலத்தின் யோசனை***

பிள்ளைகளை பரிசுத்தமான, தூய்மையான பாதையில் நடக்க பயிற்றுவிப்பது பழங்காலத்திற்குரியதாக கருதப்படுகிறது. தேவபக்தியைப் பரைசாற்றும் பெற்றோரிடமும் இக்கருத்து நிலவுகிறது. இவர்களின் கிரியை இவர்கள் தேவனை அல்ல பிசாசை தொழுகிறார்கள் என்பதைக் காட்டுகின்றன. ஆயினும் தேவனை தொழுதுகொள்ளுவதாக இவர்கள் கூறிக்கொள்ளுகிறார்கள். அக்கம்பக்கத்தாருடன் போட்டியிட



1ST Proof

விரும்புகிறார்கள். உடைகளிலும் மற்றவர்களைப்போலவே இருக்க ஆசைப்படுகிறார்கள். தாங்களும், தங்கள் பிள்ளைகளும் சபையாட்களைவிடவும், உலகத்தாரைவிடவும் தாங்களே மேலானவர்களாக தென்பட இவர்கள் செயல்படுகிறார்கள். ***Signs of the Times, Sep. 10, 1894.***

***பரலோகம் அனுமதிக்கும் ஒரே உடை***

ஒவ்வொரு பிள்ளையும் வாலிபனும் ஒரு உடையைப் பெற்றுக் கொள்ள நாட வேண்டும். அதுவே பரிசுத்தவான்களின் நீதியின் உடை. இதை தரித்துக்கொள்ள முடிவெடுத்து விடாமுயற்சியுடன் தவறாமல் செயல்பட வேண்டும். பொதுவாக உலகின் தரத்தை அடைவதற்காக பெலமான முயற்சிகள் ஏரெடுக்கப்படுகின்றன. இவைகளை கிறிஸ்துவின் நீதியின் அங்கியைப் பெற பயன்படுத்தப்பட வேண்டும். இதை செய்தால் இந்த உடையை பெறலாம். ஜீவப்புத்தகத்திலிருந்து அவர்களது நாமங்கள் கிறுக்கிப்போடப்படாது. தாய்மார்களும் வாலிபர்களும் பிள்ளைகளும் ஜெபிக்க வேண்டும். ***"தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்". சங் 51 : 10.*** இந்த இதயத்தின் தூய்மையும் அன்பின் ஆவியும் தங்கத்தைவிட தரமானதாகும். இம்மைக்கும், மறுமைக்கும் இவைகள் விலை மதிப்பற்றவைகளாக இருக்கின்றன. இதயத்தில் சுத்தம் உள்ளவர்களே தேவனை தரிசிப்பார்கள்.

கிறிஸ்துவின் நீதியின் உடையை பெற்றுக்கொண்டால் மட்டுமே பரலோகம் போக முடியும். தாய்மார்களே வேதத்தின் ஒவ்வொரு வரியைக்கொண்டும், வாக்கியத்தைக்கொண்டும் பிள்ளைகளுக்கு இதை சொல்லிக்கொடுங்கள். இந்த உடையை தரித்துக் கொண்டவர்கள், இவ்வுலகிலும் தேவனை மகிமைப்படுத்தும் கடமைகளை தொடர்ந்து செய்பவர்களாக இருப்பார்கள் என்பதும் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். ***Christian Temperance and Bible Hygiene p. 95.***

***அதிகாரம் - 66***

குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

***உடைகளை அணிவதின் அடிப்படை கோட்பாடுகளை கற்றக்கொடுத்தல்***

***கல்வியின் ஒரு அத்தியாவசிய பாகம்***

உடைகளைக் குறித்து பேசாத எந்த கல்வியும் முழுமையானதல்ல. இதன் கோட்பாடுகள் தெளிவாக கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். இதை கண்டுகொள்ளாத கல்வி வளர்ச்சியற்றதாகவும் கேடானதாகவும் அமைந்துவிடும். உடைகளில் ஆடம்பரமாக்க விரும்புவதும் சரியான உடைகளை அணிய கற்றக்கொடுப்பதில் பெரிய தடையாக உள்ளன. இத்தவறான நாட்டங்கள் எதிர்மறையான போட்டியை உருவாக்குகின்றன.

***எந்த குறிப்பான வரைமுறையும் அல்ல***

உடையில் இப்படியாகவே இருக்க வேண்டும் என்ற குறிப்பிட்ட வரைமுறையும் எனக்கு கொடுக்கப்படவில்லை. ***Letter 19, 1897.***

***சுத்தமான ஒழுங்கான விரும்பத்தகுந்த உடைகள்***

இளவயதினர் உடையில் சரியான பழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ள ஊக்குவிக்கப்பட வேண்டும். ஒழுங்காகவும் விரும்பக்கூடிய விதத்திலும் ஒவ்வொருவரும் தோற்றமளிக்க வேண்டும். உடைகளை சீராக பராமரித்துக் கொள்ளவும் சுத்தமாக வைக்கவும் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். மற்றவர்களுக்கு ஆறுதலாகவும் உதவியாகவும் இருக்கும்படி அவர்கள் பழக்கங்கள் இருக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol. 5, p.170.***

உடையானது நல்லதாகவும் சூழ்நிலைக்கு தகுந்ததாகவும் இருக்கட்டும். விலை குறைந்த உடையாக இருப்பினும் துப்புரவாகவும் சுத்தமாகவும் வைக்கப்பட வேண்டும். ***Testimonies for the Church, Vol. 4, p. 641.***

***சீரான ஒழுங்கான உடைகள்***

கிறிஸ்தவர்கள் தேவையற்ற மேற்புறமான அலங்கரிப்புகளையும் ஆடம்பரங்களையும் தகர்த்துவிட வேண்டும். உடைகள் எல்லோரது தேவையற்ற கவனங்களை கவரக்கூடிய வகையில் இருக்கக் கூடாது.



1ST Proof

தன்னடக்கமான முறையில் சீராக அணியப்பட்டிருக்க வேண்டும். ***Messages to Young People, p. 349.***

சுரியான உடைகளை குற்றப்படுத்தக் கூடாது. நமது விசுவாசம் உடையில் எளிமையாக இருக்க வழிநடத்தும். நற்கிரியைகளை செய்ய வாஞ்சித்து, உலகமானது நம்மிடமிருக்கும் வேற்றுமையை கவனிக்கும்படியாக நமது நடத்தையை விசுவாசம் மாற்றும். உடையைக் குறித்து நாம் அசட்டையாக இருக்கும்போது சத்தியத்தையும் விட்டுவிடுவோம். சுத்தியமானது எல்லா வகையிலும் நம்மை உயர்த்தவே செய்யும் நம்மை தாழ்த்துவதில்லை. ***Testimonies for the Church, Vol. 4, p.353.***

எனது சகோதரிகளே உங்களது உடைகள் ஒன்று இயேசுவிற்கு சாட்சிகொடுப்பவைகளாக இருக்கும், அல்லது உலகின் பக்கமாக சாட்சி கொடுப்பவைகளாக இருக்கும். எதுவாக உங்கள் உடை இருக்கிறது. ***Review and Herald, Nov. 17, 1904.***

***வண்ணங்களும் அமைப்பும்***

நல்ல வண்ணங்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதில் சீராக இருப்பதே ஏற்றதாக இருக்கும். உடைகளின் நிறங்கள் நபர்களின் நிறங்களுக்கேற்றபடி இருப்பதும் தவறல்ல. அடக்கமான நிறங்கள் பயன்படுத்தப்படட்டும். அமைப்பை காட்டக்கூடிய உடைகள் அதை அணிபவர்களின் தற்பெருமையையும், மாயைகளின் மீதுள்ள நாட்டத்தைக் காட்டுகின்றன. இது தவிர்க்கப்பட வேண்டும். வெவ்வேரு நிறங்களை ஒரே நேரத்தில் காண்பிப்பதும் நல்லதல்ல. ***Healthful Living p. 120.***

***நீண்ட நாட்கள் உழைக்கக் கூடிய உடைகள்***

நமது உடைகள் எளிமையானவைகளாகவும், தன்னடக்க மானவைகளாக இருந்தாலும் நல்ல தரத்தை பெற்றவைகளாக இருக்க வேண்டும். செய்யப்படும் வேலைக்கு ஏற்ற வகையிலும் அமைந்து நல்ல நிறங்களை கொண்டதாகவும் இருக்கட்டும். அழகிற்காக இல்லாதபடி உழைக்கக்கூடிய தன்மையை பொறுத்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நல்ல சூட்டையும் பாதுகாப்பையும் தர வேண்டும். நீதி 31:21-ல் சொல்லப்பட்ட ஸ்திரி குளிருக்கும் பனிக்கும் அஞ்சுவதில்லை.

அவளது குடும்பத்தினர் தேவையான உடையினால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றனர். *"தன் வீட்டார் அனைவருக்கும் இரட்டைப்புரை உடுப்பிருக்கிறதால், தன் வீட்டாரினிமித்தம் குளிருக்குப் பயப்படாள்." நீதி 31:21.* ***Ministry of Healing p. 288.***

***தரமான துணிகளை உபயோகிப்பதே நல்ல பொருளாதாரமாகும்***

நல்ல தரமான துணிகளை வாங்கி, அவைகளை கவனமாக தைத்துக் கொள்ளுவது சரியானதாக இருக்கும். இதுவே நல்ல பொருளாதாரமாகவும் இருக்கும். இவ்வுடைகளில் அலங்கரிப்புகள் தேவையல்ல. இந்த தேவையற்ற அலங்கரிப்புக்களுக்காக பணத்தைச் செலவு செய்வது நமது சுயத்தை திருப்திப்படுத்துவதாக இருக்கும். தேவனுக்கென்று இந்த பணம் பயன்படுத்தப்படலாம். ***Counsels on Stewardship p. 301.***

***தேவனது திராட்சை தோட்டத்தின் தேவைகளை மனதில் வையுங்கள்***

நாம் ஒழுங்காகவும், விரும்பத்தக்க விதத்திலும் உடைகளை அணிந்துகொள்ள வேண்டும். சகோதரிகளே உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் துணிகளை வாங்கி அவைகளை தைக்கும் பொழுதும் தேவனுடைய தேவையையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். தேவனது திராட்சைத் தோட்டத்தில் செய்யப்பட வேலை எவ்வளவோ உள்ளது. ***Counsels on Stewardship p. 301.***

உலகின் மக்கள் உடைகளுக்கென்று அதிகமாக செலவு செய்கிறார்கள். தேவன் அவரது மக்களை உலகிடமிருந்து வெளியே வந்து பிரித்திருக்கும்படி கூறுகிறார். விலையுயர்ந்த ஆடம்பரமான உடைகளை கடைசி காலத்தில் வாழ்கிறோம் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களுக்கு ஏற்றதான ஒன்றாக இருக்காது.

உடைகளுக்கென்று நீங்கள் செலவுகளை செய்வதில் நல்ல பொருளாதாரத்தை கைக்கொள்ளுங்கள். நீங்கள் அணியும் உடைகள் உங்களை சுற்றியிருப்பவர்களின் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள். மற்ற இடங்களுக்கு தேவைப்படும் பணத்தை உங்களுக்காகவே அளவிற்கு அதிகமாக செலவு



1ST Proof

செய்து வீணடித்துவிடாதீர்கள். விலையுயர்ந்த உடைகளுக்காகவும் இதன் வழியாக உங்கள் சுயத்தை திருப்திபடுத்திக் கொள்ளுவதற்கும் அதிகமாக செலவுகளை செய்யாதீர்கள். ***Manuscript 24, 1904.***

***உடையில் எளிமை, அந்நபரின் மதத்திற்கு சாட்சியளிக்கிறது***

எளிமையான உடைகள் ஒரு பெண்மணிக்கு நல்ல தோற்றத்தைக் கொடுக்கும். அவளுக்கு உகந்ததாகவும் இருக்கும். ***Review and Herald, Nov. 17, 1904.***

கிறிஸ்தவர்களைப் போல உடைகளை அணியுங்கள். தேவனை விசுவாசிக்கிறோம் என்று நாம் சொல்லிக் கொள்ளகிறோம். அதற்கேற்ற உடைகளை உடுத்தி தேவனுக்கேற்ற தோற்றத்தை மற்றவர்க்கு காண்பியுங்கள். இதனுடன்கூட உங்கள் நற்கிரியைகளும் சேர்ந்திருக்கட்டும். ***Review and Herald, Dec. 6, 1881.***

இக்காலத்தின் வினோதமான புதுப்பழக்கங்களைப் பின்பற்றிக் கொள்ள இயற்கையாக எளிமையை அநேகர் இழக்கிறார்கள். செயற்கையானவைகளின் மீது ஒரு நாட்டத்தை உருவாக்கிக்கொள்ளுகிறார்கள். காலத்தையும், பணத்தையும், அறிவாற்றலையும் ஆத்தும வளர்ச்சியையும் பலிகொடுத்துவிடுகிறார்கள். உலகின் புது மாற்றங்களையும் பழக்கங்களையும் பின்பற்றவே தங்களை முழுமையாக சமர்வித்துவிடுகின்றனர். ***Health Refermer April 1872.***

அன்பான வாலிப பிள்ளைகளே உலகின் புது நவ நகாரீக பழக்கங்களுக்கேற்றபடியே உடைகளை அணிய வேண்டும் என்று முடிவெடுத்து, செயற்கையான அலங்கரிப்புகளை செய்துகொள்ளுவது, மற்றவர்களுக்கு நமது சத்தியத்தையோ விசுவாசத்தையோ சாட்சியாக காட்டுவதில்லை. பகுத்தறியும் நபர்கள் உங்களது வெளியான அலங்கரிப்புக்களை கவனிப்பார்கள். உங்களுடைய பெருமைக்கும், பெலவீனமான மனதையும் அறிந்துகொள்ளுவார்கள். ***Testimonies for the Church, Vol. 1, p. 135, 136.***

***தேவையற்ற வெளிப்புற ஆடம்பரமும் அலங்கரிப்பும் இருக்கக் கூடாது***

வெளிப்புறமாக தங்களை அழகுபடுத்திக் கொண்டும், தேவைக்கதிகமான தலை அலங்கரிப்புக்களையும் செய்து கொள்ளுபவர்களுக்கு இதை சொல்லுகிறேன். அவர்களது இந்த பாவமே இயேசுவானவர் தனது தலையில் ஒர முட்கிரீடத்தை சுமக்க வைத்தது. உங்கள் உடைகளை அலங்கரித்துக் கொள்ளும்பொழுது இயேசுவானவர் ஒரு சாதாரண நீளமான உடையை மட்டும் அணிந்திருந்தார் என்பதை நினையுங்கள். சரீரங்களை அழகுப்படுத்திக்கொள்ளபவர்கள் இயேசுவானவர் பல நேரங்களில் அதிகமான வேலை பலுவினால் களைத்து, சோர்ந்திருந்தார் என்பதை மனதில் வையுங்கள். தற்தியாகத்துடனும், சுய மறுப்புடனும் மற்றவர்களின் துன்பங்களை நீக்கவதே அவரது வேலையாக இருந்தது. நமக்காகவே அவர் தேவனிடம் கண்ணீருடன், பாரத்துடன் பல முறை ஜெபித்தார். சிற்றின்ப பிரியங்களிலிருந்தும், பெருமையிலிருந்தும், மாயையான உலக காரியங்களை பின்பற்றுவதிலிருந்தும் நம்மை காப்பாற்ற இயேசுவானவர் தேவனிடம் ஜெபம் செய்தார். இந்த உலகின் காரியங்கள் இயேசுவின் அன்பை நம் மனதைவிட்டு வெளியே தள்ளிவிடுகிறது. இவைகளில் ஈடுபட நாம் விருப்பங்கொள்ளாமல் இருக்கவே இயேசுவும் அழுதார். அவரது முகமானது சோகத்தினாலும் துயரத்தினாலும் வாடியிருந்தது. மற்ற எல்லா மனிதர்களைவிட அவரே துக்கம் நிறைந்தவராக இருந்தார். ***Testimonies for the Church, Vol. 1, p. 379, 380.***

*தேவையற்ற அலங்கரிப்பு*

உங்களது தேவையற்ற அலங்கரிப்புக்களை விளக்கிவிடுங்கள். இதனால் சேமிக்கப்படும் பணத்தை தேவனுடைய வேலைக்காக பயன்படுத்தப்படட்டும், சுயத்தை மறுக்கும் பாடங்களைக் கற்றுக் கொடுங்கள். பிள்ளைகளுக்கு இதை கற்றுக்கொடுங்கள். ***Counsels on Stewardship p. 301, 302.***

*ஒரு விளக்கம்*

அநேகர் ஒரு கேள்வியை என்னிடம் கேட்கிறார்கள். சாதாரண ................... அணிந்துகொள்ளுவது தவறா என்ற என்னிடம் கேட்கப்படுகிறது. இக்கேள்விக்கு எப்பொழுதும் நான் ***"இல்லை"*** என்றே பதில் கொடுத்திருக்கிறேன். நான் எழுதியதை சிலர் தீவிரமான விதத்தில் புரிந்துகொண்டிருக்கின்றனர். இதை போன்ற எதையுமே அணியக் கூடாது என்று நினைத்துவிட்டனர். ஓய்வநாளை ஆசரிக்கம் சில நபர்கள், தேவையற்ற அலங்காரத்தையும், அதற்காக அதன்மேலும் பல வகைகளில் துணிகளை அழகுப்படுத்தும்படியாக தைத்துக் கொண்டிருந்தனர். உலகின் புது உடை பழக்கங்களை பின்பற்ற இதை செய்தனர். அதையே நான் கண்டித்திருந்தேன். ..................... போன்ற ஒன்று பயன்படுத்தப்படவே கூடாது என்று நான் சொல்லவில்லை. ***Testimonies for the Church, Vol. 1, p. 135, 136.***

*தீவிரமான ஆடம்பர அலங்கரிப்புக்கள்*

நமது ஊழியர்களும் அவர்களது மனைவிகளும் எளிமையான சாதாரண உடைகளை அணிவதில் மற்றவர்களக்கு ஒரு உதாரணமாக இருக்க வேண்டும். ஒழுங்காக இருக்கும், நன்மைக்கேதுவான, நல்ல தரமான உடைகளை நாம் அணிய வேண்டும். தீவிரமான அலங்காரங்கள் இருக்கக் கூடாது. பணம் இதற்கென அதிகமாக செலவிடப்படாமல் இருந்தாலும் இதை செய்யக் கூடாது. இவைகள் நம்மைக் குறித்து ஒரு நற்சாட்சியை கொடுப்பதில்லை. தேவையற்ற அலங்கரிப்புக்கள் விடப்படட்டும். இதற்கென்று சொர்ப்பமான பணத்தையே செலவு செய்ய வேண்டி வந்தாலும் இதை செய்யாதீர்கள். ***Testimonies to Ministry and Gospel Workers p. 180.***

*வெளிப்புற அழகல்ல*

உண்மையான சுத்திகரிப்பு, சரீரத்தை அழகுபடுத்திக் கொள்ளுவதில் திருப்தி காண்பதில்லை. ***Christian Temperance and Bible Hygiene.***

உடையில் நாம் தன்னடக்கத்துடன் இருக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது. ***"ஸ்திரிகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தனாலாவது தங்களை அலங்கரியாமல்," 1 தீமோ 2 : 9*** தேவையற்ற பகட்டான உடை அலங்கரிப்பையும், மற்றவர்களின் கவனங்களை ஈர்க்கும் நிறங்களும், நகை, சிகை அலங்காரங்களும் வேதத்தில் அனுமதிக்கப்படுவதில்லை. மற்றவர்களின் கவனங்களை

1ST Proof

இழுக்கும் எதுவும் இருக்கக் கூடாது. இவைகள் இருப்பின் அவ்வுடைகள் தன்னடக்கமான உடைகளாக இருப்பதில்லை. ***Counsels to Parents Teachers and Students p. 302.***

உடையிலும் நமது சுயத்தை மறுப்பதும் ஒரு கிறிஸ்தவனின் கடமை. எந்த வகையிலான வெளிப்புற நகை அலங்கரிப்பும் மற்ற எந்த வகையிலான ஆபரன அலங்கரிப்புகளும், நமது விசுவாசத்திற்கு ஒத்ததாக இருப்பதில்லை. இவ்விஷயங்களில் உலகின் மூடத்தனத்தை நாம் பகுத்தறிகிறவர்களாக இருக்கிறோமா? உலகின் இன்பங்களையும் அடையாளங் கண்டு கொள்ளகிறோமா? ***Testimonies for the Church, Vol. 3, p. 366.***

***அழியாத நகைகளும், உலகின் நகைகளும்***

அழியாத ஒரு ஆபரணம் உண்டு. இந்த ஆபரணம் நம்மை சுற்றியிருக்கும் எல்லோரினுடைய மகிழ்ச்சியைக் கூட்டும். மங்காத ஜுவாலையினால் மறுமையிலும் ஜொலிக்கும். அமைதியான தாழ்மையான ஆவியே உண்மையான அலங்கரிப்பு. விலையுயர்ந்த ஆபரணத்தையே நம் ஆத்துமா தரித்துக்கொள்ள தேவன் சொல்லுகிறார். வெளிப்புறமான நகை அலங்காரங்களைத் தேடி செல்வதைவிட, பசும்பொன்னிலும் விலையுயர்ந்த அந்த ஞானத்தை பெற்றுக்கொள்ள வகை தேட வேண்டும். ***Testimonies for the Church, Vol. 4, p. 643, 644.***

கிறிஸ்துவினுடைய அன்புடன் ஒப்பிடும்பொழுது தங்கமும், முத்துக்களும் மதிப்பிழந்துவிடுகின்றன. ஒவ்வொரு பாகமும் மற்றொன்றுடன் சரீரத்தில் சீராக பொருந்துவதே அழகு. ஆயினும் கிறிஸ்துவைப்போலவே நாம் இருப்பது ஆத்துமத்தின் அழகாக இருக்கிறது. இதைப் பெற்றிருப்பவர் கிறிஸ்து கொடுக்கும் இவ்வழகே விலைமதிப்பற்ற அலங்காரம். இதைக் கொண்டிருப்பவர்களை இது உன்னதப்படுத்தி உயர்த்துகிறது. இதன் மகிமை மற்றவர்களின்மீதும் பிரகாசிக்கின்றது. ஆசீர்வாதத்தின் ஒளியின் ஊற்றுடன் தொடர்புகொள்ள வைக்கிறது. ***Review and Herald, Dec. 6, 1881.***

***உண்மையான அழகின் தன்மை***



1ST Proof

நடைமுறையில் பகுத்தறிந்து செயல்படுவதைவிட உணர்ச்சிவசப்படும் இயல்பே பொதுவாக காணப்படுகிறது. இதை மனதில் கொண்டு பெற்றோர்கள் ஒரு முக்கியமான வேலையைச் செய்ய வேண்டும். பிள்ளைகள் சத்தியத்தை நேசித்து, கடமையை செய்து, சுயத்தை மறுக்கவும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். தங்கள் சுதந்திரத்தை உன்னதமாக பயன்படுத்தி பெரும்பாலானோர் தவறை செய்தாலும் சரியானதை செய்ய தேர்ந்தெடுக்க வேண்டும். முக்கியமான இப்பாடங்களை பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

பிள்ளைகள் நல்ல சரீர ஆரோகியத்தையும் சம நிலையான குணத்தையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இதை அவர்கள் செய்தால் தேவ கிருபையைக் கொண்டு உண்மையான அழகை தரித்துக் கொள்ளுவார்கள். செயற்கையான அலங்கரிப்புகள் தேவைப்படுவதில்லை. உள்ளான நற்பமதிப்பும் சீரான ஒழுக்கமும் இல்லாதவர்களே வெளிப்புற அலங்காரங்களை செய்துகொள்ள நாடுவார்கள். நல்ல தேவனது பார்வையில் கணம்பெற்றதாக இருக்கிறது. இந்த உண்மையான அழகு மற்றவர்களைக் கவரும், ஆனால் தவறாக வழிநடத்தாது. இத்தகைய நிறங்கள் மங்குவதில்லை. ***Signs of the Times, Dec. 9, 1875.***

இயேசுவின் உண்மையான மதம் இயற்கையான அழகின் எளிமையையே எதிர்ப்பார்க்கிறது. உயரிய தூய்மையும் இயற்கையான சுத்திகரிப்பும் செயற்கையானவற்றிற்கும் போலியானவற்றிற்கும் மேலானது. ***Testimonies for the Church, Vol. 3, p. 375.***

***சரியான உடைகளை கண்டுகொள்ள பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள்***

வீட்டின் கடமைகளை செய்ய உத்தமமாக இருப்போம். கீழ்ப்படிதலே வீட்டில் ஆளுகை செய்ய வேண்டும். உடையின் காரியங்களில் சரியானதையும், மூடத்தனத்தையும் பிரித்தறிய கற்றுக்கொடுங்கள். எளிமையான ஒழுங்கான உடைகளை பிள்ளைகளுக்குக் கொடுங்கள். இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் மக்களாக இருக்கும் நாம்,

இவ்விஷயத்தில் உலகிற்கு ஒரு தன்னடக்கமான உதாரணத்தைக் கொடுக்க வேண்டும். உலகின் பழக்க வழக்கங்களுக்கு நேர் எதிரானதாக இது இருக்கும். இதைக் குறித்து பேசி செய்வதை ஞானமாக திட்டமிடுங்கள். உங்கள் திட்டங்களை உங்கள் குடும்பங்களில் நடைமுறைப்படுத்துங்கள். பிள்ளைகளின் ஆசைகளினால் வழிநடத்தப்படாமல் உயர்ந்த கோட்பாடுகளால் வழிநடத்தப்படுங்கள். ***Manuscript 45, 1911.***

கிறிஸ்துவின் இதயத்துடன் நம் இதயம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். இப்படியாக இணைந்த நபர்கள் மற்றவர்களின் கவனங்களை ஈர்க்கும் வகையில் எதையும் அணியமாட்டார்கள். எந்த ஒரு எதிர்ப்பையும் போராட்டத்தையும் கொண்டுவரக்கூடிய எந்த ஆடையையும் இவர்கள் உடுத்துவதில்லை. ***Testimonies to Ministers and Gospel Workers p. 131.***

***சூழ்நிலைக்கும், வயதிற்கேற்ற உடைகளைக் கொடுங்கள்***

எனது சகோதரியே அன்பின் கட்டுகளால் உங்கள் பிள்ளைகளை உங்கள் இதயத்துடன் கட்டிக் கொள்ளுங்கள். எல்லாவற்றிலும் அக்கரை செலுத்தி நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள். அவர்களது தோற்றமானது அவர்களுக்கு எதிரான எந்த தகாத தாக்கத்தையும் கொண்டுவராதபடி நல்ல உடைகளை கொடுங்கள். அவர்கள் அணியும் உடைகளின் நிமித்தமாக அவர்கள் வெட்கப்படக் கூடாது. இது அவர்களுடைய சுய மரியாதையை வெகுவாக பாதித்துவிடும். துப்புறவான, சூழ்நிலைக்கேற்ற உடைகளை உபயோகிப்பது எப்பொழுதும் சரியானது. வயதையும் நாம் செய்யப்போகும் வேலையையும் மனதில் கொண்டு அதற்கேற்றபடி உடைகளை நாம் அணிய வேண்டும். ***Testimonies for the Church, Vol. 4, p. 142.***

***சரீரம் இறுக்கப்படக் கூடாது***

உடையானது சீராக பொறுந்த வேண்டும். இரத்த ஓட்டம் இறுக்கப்படக் கூடாது. இயற்கையான ஆழ்ந்த சவாசத்தை நெருக்கக் கூடாது. ஈரப்பதத்திலிருந்து பாதங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நம் சரீரத்தை முழுமையாக ஆடைகளினால் மூடி பாதுகாப்பாக



1ST Proof

வைப்போமேயானால், காலையின் பணி வேலையிலும், மாலையிலும் வெளியில் உடற்பயிற்சி செய்யலாம். முழைக்குப் பின்னரோ, அல்லது பனி கொட்டியவுடன் உடற்பயிற்சியை துவங்கலாம். சலி பிடிக்கும் என்று அஞ்ச வேண்டியதில்லை. ***Christian Temperance and Bible Hygiene p. 89, 90.***

***சிறு பிள்ளைகளின் ஆடைகள்***

உடையானது தேவையான சூட்டையும் பாதுகாப்பையும் கொடுத்து, சரீரத்தை நல்ல நிலையில் வைக்க வேண்டும். இது கவனிக்கப்பட்டால், எந்த வகையான உறுத்தலும் அசௌகரியமும் இருக்காது. சிறு பிள்ளையும் ஆரோக்கியமாக இருக்கும். பிள்ளையை பராமரிப்பது தாய்க்கு பெரிய பாரமாக தோன்றாது.

இடையை இறுக்குவது இதயத்தின் செயலையும், நூரையீரலின் செயல்பாட்டையும் தடை செய்கிறது. உடலின் எந்த பாகமும் இயல்பாக இலகுவாக செயல்பட முடியாதபடிக்கு உடைகள் எந்த இடத்திலும் இறுக்கக் கூடாது. அவைகளின்மீது தேவையற்ற அழுத்தம் கொடுக்கப்படக் கூடாது. ஆழமாகவும் எளிதாகவும் சுவாசிக்க விடும் உடைகளையே நாம் குழந்தைகளுக்குப் பயன்படுத்த வேண்டும். தோறப்பட்டைகள் உடையின் எடையை சுமக்க வேண்டும். இதற்கேற்ப உடைகள் சரீரத்தின்மீது ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். ***Ministry of Healing p. 382.***

***சரீரத்தின் முடிவில் இருக்கும் அவயங்கள் மூடப்பட வேண்டும்***

மார்பைச் சுற்றி, நாம் உடையைக் கொண்டு நன்றாக மூடுகிறோம். இதயம் இருக்கும் இடமும் இதனால் நல்ல சூட்டை பெறுகிறது. இந்த இடங்களைப் போலவே நம் கைகளும், பாதங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த அவயங்களை பிள்ளைகளுக்குச் சரியாக உடையினால் மூடாத பெற்றோர்கள் தவறை செய்கிறார்கள். புது நாகரிகம் என்று சொல்லப்படும் புதிய உடை மாற்றங்களை செய்து தங்கள் பிள்ளைகளின் ஆரோக்கியத்தையும் வாழ்வையும் பலிகொடுக்கிறார்கள். பாதங்களும் நம் கைகளும் சூடாக வைத்திருக்கப்படாவிட்டால் சரீரத்தின் சூடு எல்லா இடங்களிலும் சம நிலையாக இருப்பதில்லை. இந்த அவயங்கள் சரீரத்தின் முக்கிய அவயங்களிலிருந்து தூரத்தில் இருக்கின்றன.

இவ்விடங்களுக்கு சமமமாக இரத்த ஓட்டம் இருப்பதில்லை. தலைக்கு இரத்தம் மிகுதியாக செல்லுகிறது. தலைவலியும், மூக்கிலிருந்து இரத்தம் வரும் நிலையும் உண்டாகிறது. மார்பு எதைக் கொண்டோ நிரப்பப்பட்டதைப்போன்று ஒரு உணர்வு ஏற்படுகின்றது. இருமலும் இதய படபடப்பும் சரீரத்தை தாக்குகிறது. இவ்விடங்களில் இரத்தம் மிகுதியாக குவிந்திருப்பதே இதற்கு காரணம். சில நேரங்களில் வயிற்றுப் பகுதிக்கு நிறைய இரத்தம் செல்கிறது. இதனால் உணவு சரியாக செரிப்பதில்லை.

உடையில் வந்துள்ள புது மாற்றங்களைப் பின்பற்ற தாய்மார்கள் பிள்ளைகளின் கால்களுக்கும் கரங்களுக்கும் மூடாமல் விடுகின்றனர். இவ்விடங்களுக்குப் பாயும் இரத்தம் அதன் சூட்டை இழக்கிறது. குளிர்கிறது. குளிராக்கப்பட்ட இந்த இரத்தம் முக்கியமான உள் அவயங்களை சென்றடைகிறது. சீரான இரத்த ஓட்டத்தை இது பாதிக்கிறது. நோயை கொண்டு வருகிறது. வெளியே காட்டப்படுவதற்காக நமது கைகளையும் கால்களையும் தேவன் படைக்கவில்லை. நமது முகத்தைப் பராமரிப்பதிலும் இதை மனதில் கொள்ள வேண்டும். நமது கால்களுக்கும் கைகளுக்கும் சீராக இரத்தம் பாய பெரிய இரத்த நாணங்களை கொடுத்திருக்கிறார். அவைகளும் சரீரத்தின் மற்ற பாகங்களைப்போன்று போதிய வெப்பத்துடன் இருக்கவே இப்படி அமைக்கப்பட்டிருக்கின்றது. இவைகளும் நன்றாகவும் முழுமையாகவும் மூடப்பட வேண்டும். போதிய அளவு இரத்தம் இவைகளை வந்து சேருவதற்கு இது ஏதுவாக இருக்கும்.

நம் சரீரத்தின் முடிவில் அமைக்கப்பட்டிருக்கின்ற பாகங்களை மூடாமல் விட்டுவிடும் புது பழக்கத்தை சாத்தான் கண்டுபிடித்து உள்ளான். ஜீவனை பெலப்படுத்துகின்ற இரத்தத்தை இது பாதிக்கிறது. இரத்தமானது தனது நிலையான வெப்பத்தை இழந்து குளிர்கிறது. இரத்தம் இயல்பாக செல்ல வேண்டிய பாதையையும் மாற்றிவிடுகிறது. புதிய நவ நாகரீகம் என்ற விக்கிரகத்திற்கு பெற்றோர் தலை வணங்குகிறார்கள். பிள்ளைகளின் இரத்த நாணங்களை சுருங்கச் செய்யும் உடைகளை அணிவிக்கிறார்கள். நரம்புகளும் சுருங்கிவிடுகின்றன. தேவன் அமைத்திருந்த திட்டம் சரீரத்தில் செயல்படுவதில்லை. இதனால் பாதங்களும் கைகளும் வெப்பத்தை இழக்கின்றன. எப்பொழுதும் குளிர்ந்த



1ST Proof

நிலையில் இருக்கின்றன. பகுத்தறிவைப் பயன்படுத்தாமல் புதிய பழக்கங்களை பின்பற்றும் பெற்றோர்கள் பிள்ளைகளின் ஆரோக்கியத்தை திருடிவிடுகின்றனர். இதற்காக அவர்கள் தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும். நவ நாகரீகம் என்ற தேவனுக்கு உயிர்கள் பல நேரங்களில் பலியாகக் கொடுக்கப்படுகின்றன. ***Testimonies for the Church, Vol. 2, p. 531, 532.***

***ஆண், பெண் உடை வேறுபாடு இருக்க வேண்டும்***

பெண்கள் ஆண்களைப்போல உடையணிந்து, அவர்களைப்போலவே தோற்றமளிக்கின்ற நாட்டம் அதிகமாகிவிட்டது. தேவன் இதை ஒரு அருவருப்பாக ஒதுக்குகிறார். ***"ஸ்திரிகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல்," 1 தீமோ 2 : 9***

ஆண்களின் உடைக்கும் பெண்களின் உடைக்கும் தீர்க்கமான வேறுபாடு இருக்க வேண்டும் என்பதே தேவனின் திட்டமாக இருக்கிறது. இது முக்கியமான ஒரு காரியமாக இருப்பதால் தேவன் இதைக் குறித்து தெளிவாக பேசியுள்ளார். இத்தீய பழக்கம் பெரிய குழப்பத்தைக் கொண்டு வரும். குற்றங்கள் அதிகரிப்பதற்கு காரணமாகும். ***Testimonies for the Church, Vol. 4, p. 457, 610.***

***சபைக்கான ஆடை***

இதில் அசட்டையாக இருப்பதினால் எவரும் தேவனின் கூடாரத்தை அவமாக்க வேண்டாம். ***Testimonies for the Church, Vol. 5, p. 499.***

உடை துப்புரவாகவும், சுத்தமாகவும் ஒழுங்காகவும் இருக்க வேண்டும். வெளிப்புறமான அலங்கரிப்பும் அலங்காரமும் ஆசரிப்பு கூடாரத்திற்கு ஏற்றதாக இருப்பதில்லை. உடையில் தேவையற்ற ஆடம்பரம் இருக்கக் கூடாது. இது அவபக்தியைத் தூண்டும். எல்லோரும் பார்க்க வேண்டிய காட்சிப் பொருளைப் போன்று தோற்றமளிக்க உடைகளைப் பயன்படுத்தக் கூடாது. சபைக்கு வருபவர்களின் கவனம் மற்றவர்களின் இத்தகைய ஆடைகளின் நுணுக்கங்களால்

இழுக்கப்படுகின்றது. ஆராதனையின்போது வரக்கூடாத சிந்தனைகள் எழும்புகின்றன. இந்நேரங்களில் தேவனே நமது சிந்தனையாகவும் நமது நோக்கமாகவும் இருக்க வேண்டும். மனதை வேரு விதமாக திசை திருப்பும் எதுவும் தேவனுக்கு உகந்ததல்ல. பொன், வெள்ளி ஆபரணங்களும், உடைகளில் இறகுகளைக் கொண்டோ மற்ற எந்த துணியையும் கொண்டோ, அலங்கரிப்பதும் ஒரு வகையான விக்கிரக ஆராதனையாக இருக்கிறது. இவைகள் தேவ ஆராதனையில் இடம்பெற வேண்டியவைகள் அல்ல. ***Testimonies for the Church, Vol. 2, p. 531, 532.***

உடைகளை முற்றிலுமாக அசட்டை செய்துவிடுவதே வேத வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவது என்று சிலர் தவறாக நினைத்து விடுகிறார்கள். மற்ற நாட்களில் அணிந்துகொள்ளும் சாதாரண உடைகளையே ஓய்வு நாளிலும் ஆராதனைக்கு அணிந்துகொள்ளலாம் என்று சகோதரிகள் எண்ணுகின்றனர். இதை செய்வதே உலகிலிருந்து வேறுபட்டு இருப்பதாக இருக்கிறது என்றும் கருதுகிறார்கள். கிறிஸ்தவர்கள் என்று தங்களைப் பரைச்சாற்றிக் கொள்ளும் சில ஆண்களும் இதையே செய்கிறார்கள். அழுக்கான தூசி படிந்த உடைகளுடன் இவர்கள் மற்றவர்களுடன் ஓய்வு நாளில் ஆலயத்தில் கூடுகிறார்கள். சில நேரங்களில் இவ்வுடைகள் கிழிந்தும் கூட இருக்கின்றன. ஒழுங்காகவும் அணியப்பட்டிருப்பதில்லை.

இக்கூட்டத்தினர் உலகின் மதிப்பை பெற்ற ஒரு நபரின் உதவியை நாடிச் செனறால் மிக சிறப்பான உடைகளை அணிவார்கள். அழுக்கான, தரமில்லாத உடைகளில் அவருக்கு முன்பாக தோற்றமளிப்பது அவரை அவமதிப்பதைப்போன்று இருக்கும். இவர்கள் உன்னதமான தேவனை ஓய்வுநாட்களில் தொழ வரும்பொழுது எப்படி வேண்டுமானாலும் வரலாம் என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். இதை ஒரு பொருட்டாகவே எண்ணுவதில்லை. ***Review and Herald, Jan. 30, 1900.***

***சர்ச்சைக்குரிய நபராக இருக்க ஆடை அணியாதீர்கள்***

உங்களது மதத்தின் மிக முக்கியமான காரியமாக இதை ஆக்கிக் கொள்ள வேண்டாம். பேசுவதற்கு இதைவிட உயரிய காரியங்கள் உள்ளன. இயேசுவைக் குறித்து பேசுங்கள். இதயம்



1ST Proof

மனமாற்றமடையும்பொழுது, தேவ வார்த்தைக்கு இசைவாக இல்லாத யாவுமே விழுந்துவிடும். ***Evangalism p. 272.***

உங்களது உடையை பார்த்து தேவன் உங்களை மதிப்பதில்லை. உள்ளான அலங்காரத்தையே தேவன் பார்க்கிறார். ஆவியின் கிரியைகள், அன்பான வார்த்தைகள், கரிசனையான குணம் போன்றவற்றையே தேவன் பெரிதாக மதிக்கிறார். ***Counsels on Stewardship p. 301.***

***மற்றவர்களின் மனசாட்சியாக இருக்க வேண்டியதில்லை***

***நல்ல முன் உதாரணமாக இருங்கள்***

உடைகளையே தங்கள் மதமென்று நினைத்துக்கொள்ளுபவர்களை ஊக்குவிக்காதீர்கள். ஒவ்வொருவரும் வேதத்தின் வார்த்தைகளின் எளிமையான பாடங்களைக் கற்றுக்கொள்ளட்டும். அதில் எளிமையான சாதாரண உடைகளை உடுத்துவதைப்பற்றி படித்துக் கொள்ளலாம். இப்பாடங்களுக்கு உண்மையாக இருந்து புதிதாக விசுவாசத்திற்குள் வருபவர்களுக்கு ஒரு நல்ல முன் உதாரணமாக இருக்கலாம். நாம் மற்றவர்களுடைய மனசாட்சியாக செயல்படுவதை தேவன் விரும்புவதில்லை.

இயேசுவின் அன்பையும் தாழ்மையையும் பற்றிப் பேசுங்கள். சகோதர சகோதரிகளே மற்றவர்களின் தோற்றத்தில் குறை கண்டு பிடிப்பவர்களாக இருக்கக் கூடாது. இப்படி செயல்பட அவர்கள் ஊக்குவிக்கப்படக் கூடாது. சிலர் பெருமகிழ்ச்சிகொண்டு இவ்வேலையை செய்கிறார்கள். மனங்கள் இவ்வாறு வேலைசெய்யும் பொழுது, சபையை பழுது பார்க்கும் பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொள்ளுகின்றனர். நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்தின் மேல் ஏறிவிடுகிறார்கள். ஒரு சகோதரியையோ தேட ஆரம்பித்துவிடுகின்றனர். குறுகிய மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுவதற்கான வழியாக இது உள்ளது. ஆவிக்குரிய வளர்ச்சியை நிறுத்துகிறது. நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்திலிருந்து இறங்கிவிடும்படி தேவன் கூறுகிறார். அச்சிங்காசனத்தின்மீது ஏறி அமர்ந்துகொள்ள அவர் சொல்லவில்லை. தேவன் அவ்விடத்தை அவர்களுக்கு கொடுக்கவில்லை.

***இதயம் சரியாக இருக்க வேண்டும்***

நாம் கிறிஸ்தவர்களாக இருந்தால் இயேசுவை பின்பற்றுவோம். நமது இயல்பான நாட்டங்களை வெட்டுகின்ற எதிர் மறையான பாதையில் நடக்க வேண்டி வரலாம். ஆயினும் இதை செய்தாகவே வேண்டும். மாயையான காரியங்கள் உங்கள் இதயத்தில் இருக்க, இதை அணியாதே அதை அணியாதே என்று கூறினாலும் ஒரு பயனையும் கொடுக்காது. உங்களது வெளிப்புறமான அலங்காரங்களை விட்டாலும் மரத்தின் சில காம்புகளையும் இலைகளையும் வெட்டுவதைப் போலவே இருக்கும். உங்களது மனதின் இயல்பான தவறான நாட்டங்கள் மீண்டுமாக தலை தூக்கும். உங்களுக்கு நீங்களே நல்லதை சுட்டிக்காட்டும் மனசாட்சியாக இருக்க வேண்டும்.

***பல சபையினர் பெலத்தை இழந்திருக்கின்ற இடம்***

வேத வார்த்தைகளின் நேரான எளிமையான அறிவுறுத்தல்களை மனித பகுத்தறிவு ஒதுக்கிவிடப் பார்க்கிறது. ஒவ்வாரு காலத்திலும் கிறிஸ்துவை பின்பற்றுவதாக சொல்லிக்கொண்ட அநேகர் சுய மறுப்பையும் தாழ்மையையும் வலியுறுத்தும் வேத கோட்பாடுகளை அசட்டை செய்தனர். இவைகளை கைக்கொள்ள வார்த்தையிலும், நடத்தையிலும், உடையிலும், தன்னடக்கமும், எளிமையும் அவசியமாக இருக்கிறது. வேத வார்த்தைகளின் கோட்பாடுகளை அசட்டை செய்வதன் விளைவுகள் என்றுமே மாறுவதில்லை. உலகின் பாரம்பரியங்களும் பழக்க வழக்கங்களும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. உண்மையான கிறிஸ்தவ ஜீவியம் சடங்காக மாறுகிறது. தேவனின் பிரசன்னமும் வல்லமையும் இக்கூட்டத்தைவிட்டு எடுக்கப்படுகிறது. உலகை நேசிப்பவர்களாக இவர்கள் உள்ளனர். ஆயினும் எடுக்கப்பட்ட தேவ பிரசன்னம் தாழ்மையுடன் தேவனை தொழுதுகொள்ளும் ஒரு கூட்டத்தின் மீது தங்குகிறது. வேத வார்த்தைகளின் பாடங்களுக்குக் கீழ்ப்படிபவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு தலைமுறையிலும் இது நடந்திருக்கின்றது. ஒன்றின் பின் ஒன்றாக பல சபைகள் எழும்பியுள்ளன. ஆரம்பத்தில் கொண்டிருந்த எளிமையின் தன்மையை விட்டுவிட்டதால் ஆதியில் கொண்டிருந்த வல்லமையை இழந்தனர். ***Messages to Young People, p. 364.***



1ST
Proof

***தேவ வார்த்தையே நமது தரமாக இருக்கிறது***

ஊடையை குறித்ததான எல்லா காரியங்களும் கவனமாக பாதுகாக்கப்பட வேண்டும். வேத சட்டத்தை நெருக்கமாக பின் தொடர வேண்டும். உலகின் புது பழக்க வழக்கங்கள் நவ நாகரீகம் என்ற பெயரில் உலகத்தை ஒரு தேவதையைப்போன்று ஆண்டுகொண்டிருக்கின்றது. சபையானது தேவ வார்த்தையையே தனது அளவுகோலாகவும், தரமாகவும் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் அறிவாற்றலைக் கொண்டு சிந்திக்க வேண்டும். அவர்களின் பிள்ளைகள் உலகின் புதுநடை பாணியை பின்பற்றுவதை பார்ப்பார்கள். ஆபிரகாமைப் போன்று தனது வீட்டாருக்குத் திட்டவட்டமாகக் கட்டளையிட வேண்டும். தங்களை பின் தொடரச் சொல்ல வேண்டும். பிள்ளைகள் உலகத்துடன் இணைவதைவிட, தேவனோடு அவர்களை இணைத்துவிடுங்கள். ***Testimonies for the Church, Vol. 5, p. 499.***

***அதிகாரம் - 67***

***உலகின் புதுநடை பாணியின் ஈர்ப்பு***

***உலகின் செயற்பாடு கொடுங்கோல் ஆட்சியைப்போல உள்ளது***

இன்றைய புதிய நடத்தை பாங்கே உலகை ஆண்டுகொண்டிருக்கிறது. இது ஒரு சர்வாதிகார ஆட்சியைப்போல் உள்ளது. இந்த சர்வாதிகாரி தன்னை பின்பற்றுபவர்களை பெரிய கடினங்களுக்குள்ளாகச் செல்ல கட்டாயப்படுத்துகிறது. பகுத்தறிவின்றி பலுவான சுமைகளை இவள் வைக்கிறாள். இரக்கமின்றி தான் வேண்டுவதை எடுத்துக் கொள்ளுகிறாள். எல்லோரையும் கவரும் வல்லமையை இவள் பெற்றிருக்கிறாள். குற்றப்படுத்தவும் பரிசாசம் பண்ணவும் ஆயத்தமாக இருக்கிறாள். தன்னை பின்பற்றாதவர்களுக்கு இவைகளை செய்கிறாள். ***Christian Temperance and Bible Hygiene, p. 85.***

ஒவ்வொரு நாளும் மாறிக்கொண்டிருக்கும் அவளது புதுப்புது செயற்பாடுகளைப் பின்பற்றுவதில் அசௌளரியவான்கள் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக் கொள்ளுகின்றனர். நடுத்தர வர்க்கத்தினரும், ஏழைகளும் இதை உயர்ந்த தரமாக நினைத்துக் கொள்ளுகின்றனர்.

அசௌரியவான்கள் செய்வதை இவர்களும் செய்ய முயலுகின்றனர். உலகின் இந்த புது வழிகளைப் பின்பற்ற முடியாத மக்கள் இருக்கின்றனர். போதிய பொருளாதாரமும் வசதிகளும் இல்லாதவர்களாக இருப்பார்கள். உலகின் நவ நாகரிகங்களை பின்பற்ற போட்டியிடுவது இவர்களுக்கு ஒரு பெரிய பாரமாகிவிடுகிறது. இந்த ஆசையையும் அவர்களால் விட்டுவிட முடிவதில்லை. பரிதபிக்கத்தக்க நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள். ஒரு உடையின் தரத்தையோ அழகையோ வைத்து முடிவுசெய்வதைவிட, காலத்திற்கேற்றதாக இருக்கிறதா என்பது மட்டுமே பார்க்கப்படுகின்றது. இல்லையெனில் ஒதக்கப்படுகின்றது, அல்லது மாற்றி வடிவமைக்கப்படுகின்றது. ***Education, p. 246.***

சாத்தானே இதின் காரண கர்த்தாவாகவும், இதை தலைமை தாங்கி வழிநடத்துபவனாகவும் இருக்கிறான். திருப்தியடையாத ஏதேனும் புது மாற்றங்கள் ஒவ்வொரு நாளும் வந்துகொண்டே இருக்கின்றன. சரீரத்தையும் மனதையும் காயப்படுத்துகின்ற புதிதானவைகளை சாத்தான் உருவாக்கிக் கொண்டிருக்கிறான். அவனது கருவிகள் வெற்றியைக் கண்டடைகின்றன. இதில் பெருமிதம் கொள்ளுகிறான். மரணம் இதைக் கண்டு நகைக்கிறான். ஆரோக்கியத்தை அழிக்கும் மூடத்தனங்களை காண்கிறான். நவ நாகரீகம் என்ற விக்கிரகத்துக்கு மக்கள் தலைவணங்குவது அவனை மகிழ்விக்கிறது. எல்லோரையும் இது அவனது ஆளுகைக்கு கீழாக கொண்டு வருகிறது என்பதை புரிந்துகொள்ளுகிறான். தேவ ஈவும், மனமகிழ்ச்சியும் பலிவிடப்படுகிறது. இவ்விக்கிரக ஆராதனையின் பலிபீடத்தில் இவைகள் பலியாகின்றன.

உடையை ஒரு விக்கிரகமாக வைத்துக் கொள்ளுவது ஒரு ஆவிக்குரிய நோய். நல்லொழுக்கத்தைக் கெடுக்கும் வாதையாகவும் இருக்கிறது. கிறிஸ்தவனின் புது ஜீவியத்திற்குள் இது கொண்டுவரப்படக் கூடாது. சுவிசேஷத்திற்கு நம்மை முழுமையாக ஒப்படைத்துவிட பல நேரங்களில் நமது உடைகளில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியதாகவே இருக்கும். ***Testimonies for the Church, Vol. 6, p. 96.***

***சிலர் கொடுக்கும் விலை***

உடைகளில் புது நாகரிகமாக கொண்டு வரப்பட்டுள்ள மாற்றங்கள் வேத கோட்பாடுகளுக்கு முரண்பாடானவைகளாக உள்ளன. கடந்த சில வருடங்களாக வந்திருக்கும் மாற்றங்களை சிந்தியுங்கள். சுய மரியாதையுடன் செயல்படம் தேவபக்தி நிறைந்த ஒரு கிறிஸ்தவ பெண்ணுக்கு இவ்வுடைகள் தகுதிற்றவைகளாக இருக்கின்றன. பல பெண்கள் புது வகையான ஆடைகளை அணிவதினால் சரீரத்தை தேவையான அளவு ஆடையை உபயோகித்து சரீரத்தை முழுமையாக மூடுவதில்லை. உடலை சூடாக வைக்கும் உள்ளாடைகளும் சரியாக அணியப்படுவதில்லை. இதற்கு தண்டனையாக தங்கள் ஜீவனை பலர் பலயாக கொடுத்திருக்கின்றனர். மற்றும் பலர் ஆடம்பரமான விலையுயர்ந்த உடைகளை பெற்றுக்கொள்ள தவறான வழிகளுக்குள்ளாக இழுக்கப்படுகின்றனர். இதனால் பல குடும்பங்கள் தேவைப்படும் வசதிகள் இல்லாமல் தவிக்கின்றன. பல மனிதர்கள் ஆண்டியாகியிருக்கிறார்கள். மனைவி அல்லது பிள்ளைகளின் அளவில்லாத ஆசைகளே இவர்களை இந்நிலைக்கு தள்ளியிருக்கிறது. ***Ministry of Healing, p. 290.***

***இந்த விக்கிரகத்தினால் இரட்சிப்பு கேள்விக் குறியாகிறது***

தற்பெருமையும், மேட்டிமையும் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது. கண்ணாடியைப் பார்த்து தங்கள் அழகை இரசித்துக் கொள்ள விருப்பப்படுபவர்கள் தேவ கட்டளைகளின் மீது எந்த விருப்பமும் இல்லாதவர்களாக இருப்பர். ஒழுக்கத்தின் கண்ணாடியாக விளங்கும் பத்துப் பிரமாணத்திற்கு முன்பாக நிற்க மாட்டார்கள். குணத்தின் தாழ்மையையும் அன்பையும் இது எடுத்துவிடுகிறது. வேத வாசிப்பிற்கும், ஜெபத்திற்கும் செலவிடப்பட வேண்டிய பொன்னான நேரத்தை இது வீணாக்கிவிடுகிறது. ஆத்துமத்தின் இரட்சிப்பை பெரிய அபாயத்திற்குள்ளாக தள்ளாமல் எவரும் உலகின் புது இன்றைய கால நவ நாகரீக பழக்க வழக்கங்களை பின்பற்ற முடியாது. இவைகள் எல்லாமே ஒழுக்கத்தை கெடுக்கின்றவைகளாக உள்ளன. ***Review and Herald, Mar. 31, 1891.***

***உலகம் பார்க்க வேண்டிய ஒரு கண்காட்சி பொருளைப்போல இருக்க விரும்புவது இல்லத்தின் ஒழுக்கத்தை அழிக்கிறது***

1ST Proof

கிறிஸ்துவின் கிருபையின் உதவியுடன் பெண்களால் ஒரு மகத்தான பெரிய வேலையை செய்ய முடியும். இதை அவர்கள் செய்யாமல் இருக்கவே சாத்தான் புதியவைகளைக் கண்டுபிடித்துள்ளான. புதிய உடைகளை கண்டுபிடித்து எல்லோருக்கும் முன்பாக ஒரு காட்சிப் பொருளாக தென்படவே எல்லோரது நேரமும் கவனமும் முயற்சியும் செலவிடப்படுகிறது. கிறிஸ்தவ தாய்மார்களிடமும் இது காணப்படுகிறது. பிள்ளைகளினுடைய கல்வியையோ, சீரான பயிற்சியையோ பார்த்துக் கொள்ள நேரம் இருப்பதில்லை. நல்ல முன் உதாரணங்களாக இருந்து பிள்ளைகளின் மனங்களையும் குணங்களையும் இவர்கள் வளர்ப்பதில்லை. தாயினுடைய கவனத்தையும், நேரத்தையும் சாத்தான் எடுத்துக் கொண்டால், அவனுக்கு இது பெரிய ஆதாயமாக உள்ளது என்பதை அறிந்துள்ளான். பத்தில் ஒன்பது குடும்பங்களின் கவனத்தை மூடத்தனமாக இந்த காரியங்களில் திசை திருப்பிவிட்டான். காட்சிப் பொருளைப்போன்று உலகின் புது உடைகளை அணிந்துகொண்டு மூடத்தனமாக இக்குடும்பங்கள் செயல்படுகிறார்கள். பிள்ளைகளை அவனுக்குரியவைகளாக பார்க்கிறான். தாயின் முழுகவனத்தை பெற்றுவிட்டான். ***Manuscript 43, 1900.***

இரட்சிப்பைவிட உடைகளைப் பற்றியே பிள்ளைகள் அதிகமாக கேட்கிறார்கள். இப்பிள்ளைகளின் தாய்மார்கள் இரட்சகரை அறியவில்லை. உலகின் புதிய கேடான மாற்றங்கள் அறிந்திருக்கிறார்கள். ***Testimonies for the Church, Vol. 4, p. 643.***

வாழ்வின் உயரிய, சிறப்பான, உண்மையானவைகள் பிள்ளைகளிடமிருந்து திருடப்படுகின்றன. வரப்போகும் நித்தியத்திற்கான ஆயத்தத்தை இந்த உலகின் காரியங்களுக்காக விட்டுவிடுகின்றனர். ***Ministry of Healing, p. 291.***

***துணிவின்றி இருக்கும் மக்கள்***

உலகின் புதுநடை பானிக்கேற்றவாறு செயல்பட முயற்சிசெய்வதே தாய்மார்களுக்கு பெரிய சுமையாகயிருக்கிறது. சரீரமும், மனமும், ஒழுக்கமும் இதனால் பெரிய அளவில் சீர்கெடுகிறது. சுரியானவற்றிற்கு தைரியமாக உறுதியாக நிற்க துணிவில்லாமல் பலர் உலகினுடன் சேர்ந்து செல்லுகின்றனர். கிறிஸ்தவ தாய்மார்களும் நல்ல ஒழுங்குகளையும் விட்டுக்கொடுத்துவிடுகிறார்கள். உலகத்தாருடன் சேர்ந்து இன்றைய உலகின் கடவுளைப்போல இருக்கும் புது செயற்பாடுகளையும், நடத்தைகளையும் பின்தொடருகிறார்கள். மனசாட்சி இதற்கு தடை விதித்தாலும் தீமையை எதிர்த்து உறுதியாக நிற்க தைரியம் இல்லாதவர்களாக இருக்கின்றனர். ***Review and Herald, Nov. 17, 1904.***

***பெற்றோர்களே அக்கரையுடன் செயல்படுங்கள்***

பெற்றோர்கள் பிள்ளைகளை பெரும்பாலும் மகிவும் விலையுயர்ந்த உடைகளை அணிய கொடுக்கின்றனர். அலங்கரிப்புகளும் அலங்காரங்களும், ஆபரணங்களும் இவ்வுடைகளில் காணப்படுகின்றன. பெற்றோர்களே பிள்ளைகள் அணிந்துகொண்டிருக்கும் இந்த உடைகளைக் குறித்து பிள்ளைகளிடம் பெருமையாக பேசுகிறார்கள். அவ்வாடைகளில் பிள்ளைகள் பார்ப்பதற்கு அழகாக உள்ளதாகவும் நேரடியாக சொல்லுகின்றனர். இவர்களது இந்த மூடத்தனத்தை சாத்தான் எப்படி பயன்படுத்திக் கொள்ளுகிறான் என்பதை அறியாதவர்களாக இருக்கிறார்கள். இதை அறிந்தால் அவர்கள் நடுங்குவார்கள். இதன் வழியாக பிள்ளைகள் பெரிய தவறுகளை செய்ய எடுத்துச் செல்லப்படுகிறார்கள். ***Pacific Health Journal Jan. 1890.***

***பல தாய்மார்கள் சந்திக்கும் பிரச்சனை***

உங்கள் பெண்கள் ஒரு புதிய உடையைக் கண்டவுடன் அவ்வுடை தங்களிடம் இல்லாதிருப்பின் அதை அணிந்துகொள்ள விரும்புகின்றனர். அல்லது மற்றவர்கள் வைத்திருக்கும் ஒன்றைப் போலவே தாங்களும் பெற்றுக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். நமது விசுவாசத்துக்கு ஏற்றதாக அது இல்லை என்று உங்களுக்குத் தோன்றலாம். அவர்கள் உங்களை அவர்களது வழிகளுக்கு இழுத்துச் செல்லவிடுவீர்களா? அல்லது அவர்களை நீங்கள் கிறிஸ்தவ நெறிகளின்படி வழிநடத்துவீர்களா? நமது பிள்ளைகள் தேவனது பார்வையில் விலைமதிப்பற்றவர்களாக இருக்கிறார்கள். வேத வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்போம். தேவனின் வழிகளில் அவர்களை பயிற்றுவிப்போம். பரலோகின் அங்கிகரிப்பை பெறும்படியாக ஜீவிக்க உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டிய அருமையான வாய்ப்பு உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.



1ST Proof

குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

உலகின் புதுநடை பானியைப் பின்பற்ற அவர்களை நாம் ஊக்கப்படுத்த வேண்டாம். உண்மையுடன் சரியான பயிற்சியை நாம் அவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் உலகின் பின்னாக சென்றுவிட மாட்டார்கள். உலகின் புது பழக்கங்களும் நடத்தைகளும் எதிர்க்கப்பட முடியாத ஒரு ரூபத்தை எடுக்கும் வினோதமாகவும் இருக்கும். அவைகளை உறுதியுடன் எதிர்த்து நிலையாக நிற்க வேண்டும். ***Manuscript 45, 1911.***

***இத்தீமையின் விளைவு***

சிற்றின்பங்களின் மீதும் தகாத ஆடைகளின் மீதும் கொண்டுள்ள நாட்டம் ஆயிரக்கணக்கானோரின் மகிழ்ச்சியை அழித்துக் கொண்டிருக்கிறது. தேவ கட்டளைகளை கைக்கொள்ளுகிறோம் என்று சொல்லிக் கொல்லும் கிறிஸ்தவர்களும் உலகத்தின் மக்கள் செய்வதையே குரங்குகளைப் போல செய்கிறார்கள். இதை செய்து கொண்டும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று பறைசாற்றிக் கொள்ளுகிறார்கள். இதை செய்வதாக சிலர் கிறிஸ்தவர்கள் என்ற பெயரை விட்டுக் கொடுத்துவிடவும் ஆயத்தமாக உள்ளனர். துவறான உடைகளையும் உலகின் இன்பங்களையுமே அதிகமாக நேசிக்கின்றனர். ***Testimonies for the Church, Vol. 3, p. 366.***

உடைகளுக்காக அதிக நேரத்தை செலவழிப்போர், கிறிஸ்து தூரத்திலிருந்து பார்த்த அத்தி மரத்தைப்போல் இருக்கிறார்கள். அந்த மரம் கிளைகளுடனும் இலைகளுடனும் பார்க்க நன்றாக இருந்தது. கனிகளைத் தேடி கிறிஸ்து அதனிடம் சென்றார். உச்சியிலிருந்து அடிவரையிலும் பார்த்தார். ஒரு கனி கூட இருக்கவில்லை. கனிகளை பார்ப்பதற்கே இயேசு ஆவலோடிருக்கிறார். கனிகள் இருக்கும்படி அவர் எதிர்பார்க்கிறார்.

***தேவகுமாரிகளுக்கு இது ஏற்றதானதல்ல***

பொன்னான நமது நேரத்தை அலங்கரிப்புகளுக்காகவும் வெளித்தோற்றத்தை அழகுபடுத்திக் கொள்ளுவதற்கும் வீணாக்குவதைவிட முக்கியமான பல வேலைகள் உள்ளன. பரலோக ராஜாவின் குடும்பத்தின் அங்கத்தினர்களாக இருக்கும் பெண்கள் ஒரு உயரிய வாழ்க்கையை கண்டடைய தங்கள் பொறுப்பை உணருவார்கள். தேவனோடு ஒரு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும் மீட்பருடன் இணைந்து வேலை செய்ய முனைவார்கள். இந்த மேலான வேலையை செய்வோர் உலகின் மூடத்தனங்களினால் கவரப்பட மாட்டார்கள். தேவனை அறியாத பெண்களே இவைகளினால் இழுக்கப்படுவார்கள். தேவனின் குமாரத்திகள் தெய்வீக சாயலை பங்குகொள்ளுவார்கள். அவர்களின் மீட்பரைப் போலவே உன்னதமான நோக்கங்களினால் தூண்டப்படுவார்கள். சமுதாயத்தின் சீர்கேடுகளை எதிர்த்துச் செயல்படுவார்கள். கிறிஸ்துவையும் அவரது வேலையையும் புரிந்து கொண்டவர்களாக அவர்களுடைய திறனுக்கேற்ப மறிக்கும் ஆத்துமாக்களுக்கு தருணம் கிடைக்கும் போதெல்லாம் வேலை செய்வார்கள். கிறிஸ்து வேலை செய்ததைப்போலவே இவர்களும் வேலை செய்வார்கள். ***Testimonies for the Church, Vol. 3, p. 483, 484.***

1ST Proof

***பாகம் - XVI***

***அதிகாரம் - 68***

***நல்லொழுக்கத்தைக் காத்தல்***

**பாவம் மிகுதியான காலம்**

கடைசி காலத்தின் அபாயங்களுக்கு மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாவம் மிகுதிப்படுவதினால் அநேகரது அன்பு தணிந்து போகிறது. இங்கு ***"அநேகர்"*** என்று கிறிஸ்துவினுடைய பின்னடியார்களே சுட்டிக்காட்டப்படுகிறார்கள். பாவத்தின் அதிகரிப்பினால் இவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். கிறிஸ்துவைவிட்டுப் பின் வாங்குகிறார்கள். இப்படியாக அவர்களும் பாதிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. பாவத்தைவிட்டு இவர்கள் தூரமாக நிற்பதில்லை. பாவம் பெருகுவதினால் அவர்களது அன்பு தணிந்துபோகிறது. ஊலகின் பாவங்களில் இவர்களும் பங்குகொள்ளுவதினால் இவர்களது அன்பும் தணிந்துவிடுகிறது. தேவனுக்கு இவர்கள் செய்ய வேண்டிய கடமைகளின் ஆர்வம் குறைகிறது. ***Testimonies for the Church, Vol..2, p. 346.***

***தவறான புத்தகங்கள் மற்றும் படங்களின் தாக்கம்***

இளவயதினர் புத்தகங்களின்மீது ஆர்வமாக இருக்கின்றனர். அவர்களுக்கு கிடைக்கும் எல்லாவற்றையும் படிக்கிறார்கள். உணர்ச்சிவசப்படுத்தும் காதல் கதைகளும் தகாத சித்திரங்களும் சீர்குலைக்கும் தாக்கத்தைக் கொண்டு வருகின்றன. கதைப்புத்தகங்களை அநேகர் ஆர்வத்தோடு படிக்கிறார்கள். அவர்களது சிந்தை கெடுகிறது. துவறான கற்பனைகள் உருவாகின்றன. வண்டிகளில் நிர்வாண படங்கள் விற்கப்படுகின்றன. இத்தகைய படங்கள் பல கடைகளிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த காலத்தில் எல்லாமே சீர்கெட்டிருக்கிறது. கண்களின் இச்சையும் தகாத ஆசைகளும் பார்ப்பதினாலும் படிப்பதினாலும் தூண்டப்படுகின்றன. தவறான கற்பனைகளை செய்துகொள்ளுவதினால் மனம் கெடுகிறது. துகாத காட்சிகளை சிந்திப்பதில் இதயம் இன்பம் காண்கிறது. கீழ்த்தரமான இச்சைகளை இது எழுப்புகிறது. ஒழுக்கம் கெடுக்கப்படுகின்றது. சம நிலையை இழந்த மனம், தகாத மோகங்களினால், இச்சைகளின் ஆசைகள் நிறைவேற்றப்படுகின்றன. இவைகளின் விளைவாக தேவ சாயலில் படைக்கப்பட்ட மனிதர்கள் மிருகங்களைப்போல மாறிவிடுகிறார்கள். நித்திய அழிவிற்குள்ளாக இழுக்கப்படுகிறார்கள். ***Testimonies for the Church, Vol..2, p. 410.***

### *ஒழுக்கச் சீர்கேடே இக்காலத்தின் பிரத்தியேக பாவம்*

உலகின் இன்றைய நிலையைப் பற்றியதான ஒரு பரிதபிக்கும் காட்சி எனக்கு முன்பாக காட்டப்பட்டது. ஒழுக்கமில்லாத நடத்தையே எல்லா இடங்களிலும் மிகுதியாக இருக்கிறது. ஒழுக்கமில்லாமல் வரம்புகளை மீற நடப்பதே இக்காலத்தின் பிரத்தியேக பாவமாக உள்ளது. தீமையானது தனது முடமான தலையை துணிகரத்துடன் உயர்த்துகிறது. இதுபோன்று எப்பொழுதும் இருந்ததில்லை. மக்கள் பகுத்தறிய முடியாதபடி மந்தமாகிவிட்டனர். நல்ல நெறிகளை பின்பற்றுபவர்கள் தீமையின் இந்த வெளிப்பாட்டைக் கண்டு சோர்ந்து விடுகிறார்கள். ***Testimonies for the Church, Vol..2, p. 346.***

இரண்டாம் வருகைக்கு முன்பாக உலகின் நிலையை நான் பார்க்கும்படி ரோமர் 1: 18-32 வசனங்களில் எனக்கு காண்பிக்கப்பட்டது. ***Appeal to Mother p. 27.***



1ST Proof

உபத்திரவமோ, இக்கட்டுகளோ, தேவமக்களை தேவனிடமிருந்து பிரிப்பதில்லை. பாவமே பிரிக்கிறது. பாவத்தினால் தேவனை அனுபவிக்க முடியாமலும் மகிமைப்படுத்தமுடியாமலும் போகிறது. பாவமே ஆத்துமாக்களை அழித்துக் கொண்டிருக்கிறது. பாவமும் தீமையும் ஓய்வு நாளை ஆசரிக்கும் குடும்பங்களில் இருக்கின்றன. ***Testimonies for the Church, Vol..2, p. 390, 391.***

### *வாலிபர்களை சாத்தான் தாக்குகிறான்*

வாலிபர்களின் சிந்தைகளை கொள்ளைக்கொண்டு போவதே இந்த கடைசி காலத்தின் சாத்தானுடைய விசேஷித்த வேலையாக இருக்கிறது. சிந்தனைகளை சீரழித்து, இச்சைகளைத் தூண்டுகிறான். இதை செய்து அவர்களை தீய செயல்களுக்கு வழிநடத்தலாம் என்பதை அறிந்திருக்கிறான். மனதின் உயரிய பண்புகள் நிலைமாறிவிடுகின்றன. இதற்குபின் சாத்தான் அவர்களை முழுமையாக கட்டுப்படுத்தி தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளுகிறான். ***Christian Temperance and Bible Hygiene p. 136.***

### *எதிர்கால சமுதாயத்தின் குறியீடுகள்*

இன்றைய வாலிபர்கள் எதிர்கால சமுதாயத்தின் குறியீடுகளாக இருக்கிறார்கள். இவர்களை நாம் பார்க்கும்பொழுது எதிர்காலத்தைக் குறித்து நாம் என்ன நம்பிக்கை கொள்ள முடியும். பெரும்பான்மையினர் சுகபோக, சிற்றின்ப பிரியர்களாக இருக்கிறார்கள். வேலை செய்வதை வெறுக்கிறார்கள்.

சுய கட்டுப்பாடின்றி இருக்கின்றனர். சிறு காரியங்களிலும் உணர்ச்சிவசப்பட்டு கோபப்படுகின்றனர். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பலர் மனசாட்சியின்றி நல்ல நெறிகளின்றி பயனற்ற பழக்கங்களையே கொண்டுள்ளனர். பணத்தை அதிகமாக செலவு செய்கின்றனர். தீமைக்கு விரைந்து சென்று சமுதாயத்தை அழிக்கின்றனர். நமது உலகம் இரண்டாம் சோதோமாக மாறும் வரையிலும் இது தொடர்ந்து கொண்டு இருக்கும். ஆசைகளும் விருப்பங்களும், நாட்டங்களும் பகுத்தறிவின் கட்டுப்பாட்டிற்குள்ளும், கிறிஸ்தவ மதத்தின் கட்டுப்பாட்டிற்குள்ளாகவும் இருந்தால் இன்றைய சமுதாயம் முற்றிலும் மாறான ஒரு சாட்சியைக்

கொடுத்திருக்கும். இன்றைய அபல நிலை தேவனுடைய திட்டமாக இருக்கவில்லை. இயற்கையின் சட்டங்கள் மீறப்பட்டுவருவதால் இந்த நிலை வந்திருக்கிறது.

***சரீரத்தை தவறாக பயன்படுத்தும் ஒழுக்கமற்ற செயல்கள்***

தங்களை உயரிய நபர்களாக பரைசாற்றிக் கொள்ளுபவர்கள் பாவங்களைப் பற்றியும், அவைகளின் விளைவுகளைக் குறித்தும் புரிந்துகொள்ளுவதில்லை. சிலர் தங்களது பிறப்புறுப்புக்களை தனிமையில் தவறாகப் பயன்படுத்தி ஒழுக்கமற்ற பாவத்தை செய்கிறார்கள். நீண்ட காலமாக பழக்கமாகிவிட்ட பாவம் பகுத்தறிவை மந்தப்படுத்துகிறது. இந்த கேடான பாவத்தின் அறுவறுக்கத்தக்க தன்மையை அவர்கள் புரிந்துகொள்ளுவதில்லை. ***Testimonies for the Church, Vol..2, p. 347.***

பிள்ளைகளும் வாலிபர்களும் இத்தவறை செய்கிறார்கள். இரு பாலருமே இந்த தீங்கை செய்கிறவர்களாக இருக்கின்றனர். ஆத்துமத்தையும் சரீரத்தையும் இது அழிக்கிறது. ஒழுக்கத்தை சீர்குலைத்துவிடுகிறது. கிறிஸ்தவர்களின் மத்தியிலும் இது பழக்கமாகிவிட்டது. சிந்தை மந்தமாகிவிட்டதினால் இது பாவம் என்பதை அவர்களால் பார்க்க முடியாத அபல நிலை உருவாகியுள்ளது. இது தொடரப்பட்டால் மனமும் சரீரமும் அழிந்துவிடும். தேவனுடைய மிக உயர்ந்த படைப்பான மனிதன் ஒரு மிருகத்தைப் போல் மாறுகிறான். தன்னையே கெடுத்துக் கொள்ளுகிறான். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது எல்லா ஆசைகளையும் நீதியின் கோட்பாடுகளைக் கொண்டு கட்டுப்படுத்த வேண்டும். இதை செய்யாதவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. ***Testimonies for the Church, Vol..2, p. 347.***

ஒழுக்க சீர்கேடுகள் மற்ற எல்லா தீமைகளைவிட மனிதனை மோசமான நிலைக்கு தாழ்த்தியுள்ளது. பயப்படுத்தக்கூடிய அளவிற்கு இத்தீமை பெருகிவிட்டது. எல்லா வகையான நோய்களையும் கொண்டு வருகிறது. சிறு பிள்ளைகள் கூட பிறப்புறுப்புக்களை தகாத முறையில் கையாளுகின்றன. இதில் துவங்கி இது ஒரு பழக்கமாகிவிடுகிறது. பிள்ளைகள் வரை இதுவும் வளருகிறது.

***தவறான இச்சைகள் சுதந்தரிக்கப்படுகின்றன***



1ST Proof

இத்தீமையைப் பற்றி பிள்ளைகள் அறிந்திருப்பதில்லை என்று பெற்றோர் நினைக்கின்றனர். பல நேரங்களில் பெற்றோர்களே குற்றவாளிகளாக இருக்கின்றனர். திருமண வாழ்வின் ஆசீர்வாதங்களை தவறாகப் பயன்படுத்தியுள்ளனர். கட்டுப்பாடின்மையினால் தகாத இச்சைகள் பெலப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் அறிவாற்றலும் நல்லொழுக்கமும் பெலவீனமாகிறது. மிருக சுபாவங்கள் ஆவிக்குரியவைகளை மேற்கொண்டுள்ளன. இந்த தீய சுபாவங்களை சுதந்தரித்துக் கொண்டே பிள்ளைகள் பிறக்கிறார்கள். பெற்றோரது குணத்தின் முத்திரை, பிள்ளையின்மீதும் பதிக்கப்படுகிறது. இத்தகைய பெற்றோர்க்கு பிறக்கும் பிள்ளைகள் தன்னிச்சியாகவே இத்தீமைக்கு அடிமையாகிறார்கள். பெற்றோர்களின் பாவம் பிள்ளைகளின்மீதும் வருகிறது. தீய இயல்புகள் பிள்ளைகளின் மீதும் முத்தரிக்கப்படுகிறது. ***Testimonies for the Church, Vol..2, p. 347.***

***வசீகரிக்கும் அடிமைத்தனம்***

மிருக வெறியைப்போன்ற வல்லமையான தாக்கம் ஆண்களையும் பெண்களையும் கட்டுப்படுத்துகிறது. அறிவாற்றல் நிறைந்த நபர்களும் இதனால் கட்டுப்பாட்டை இழக்கிறார்கள். இது என்னை ஆழ்ந்த வருத்தத்திற்குள்ளாக தள்ளியது. துகாத இச்சைகளினால் அடிமைப்படுத்தப்படாமல் இருந்தால் நன்மைக்கேதுவான ஒரு பெரிய தாக்கத்தை இவர்கள் ஏற்படுத்தியிருக்கலாம். மனிதர்கள் மீது நான் கொண்டுள்ள நம்பிக்கை அசைக்கப்படுகிறது.

நல்ல நடத்தையின் கோட்பாடுகளை பின்பற்றுவோரும், மற்றவர்களுடன் வரம்பு மீற நடந்துகொள்ளாதவர்களும் இந்த இரகசியப் பாவத்தை தங்கள் வாழ்க்கையில் அனுதினமும் செய்கிறார்கள். ஜெபக் கூட்டங்கள் நடந்துகொண்டிருக்கும் வேளைகளிலும் இவர்களால் தங்களை கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. கூட்டங்களில் தேவ நியாயத்தீர்ப்பைக் குறித்ததான எச்சரிப்புக்களை கேட்டு நடுங்குவாகள். ஒரு மணி நேரம் கூட முழுமையாக கடந்திருக்காது, தங்களது பிரியமான பாவத்தை செய்து சரீரத்தை தீட்டுப்படுத்துகிறார்கள். இந்த பெரிய தீமைக்கு அடிமைகளாகிவிட்டால் தங்களது இச்சைகளை கட்டுப்படுத்த வல்லமையற்றிருக்கிறார்கள். இப்படியாக பாதிக்கப்பட்டிருக்கும் சில

நபர்களுக்காக நாங்கள் பாரத்துடன் அவர்களுக்கு உதவ முயற்சி செய்திருக்கிறோம். அழுதும் அவர்களுடன் சேர்ந்து ஜெபித்தோம். இத்தீமையை அவர்களைவிட எங்களால் முடிந்த எல்லா உதவிகளையும் செய்தோம். ஆயினும் எங்களுடைய மகத்தான முயற்சிகளுக்கு மேலாகவும் பழக்கமாகிவிட்ட இத்தீமையின் வல்லமை மேலோங்கி நிற்கிறது. இது எஜமானை போல் இருக்கிறது. இப்பாவங்கள் மீண்டும் நடந்தேருகின்றன. ***Testimonies for the Church, Vol..2, p. 468, 469.***

***இத்தீமையை அறிந்துகொண்டு பலியானவர்கள் இதை பரப்புகிறார்கள்***

இத்தீமையில் வல்லமையாக ஸ்தாபிக்கப்பட்டவர்கள் தாங்கள் தொடர்பு கொள்ளுபவர்களிடம் இதை பரப்பாமல் நிம்மதியாக இருக்க முடிவதில்லை. மற்றவர்களுடைய ஆர்வம் முதலில் தூண்டப்படுகிறது. பிறகு இத்தீமையின் அறிவு ஒரு வாலிபனிடமிருந்து இன்னொரு வாலிபனுக்கு பரவுகிறது. ஒரு பிள்ளையிடமிருந்து இன்னொரு பிள்ளைக்கு பரவுகிறது. இறுதியில் இதை அறியாத எவரும், இல்லாத நிலை வந்துவிடுகிறது. ***Testimonies for the Church, Vol..2, p. 392.***

சீர்கெட்ட மனம், வெளிதள்ளப்பட முடியாத அளவிற்கு பல தீமையின் விதைகளை மற்ற மனங்களில் விதைக்கிறது. வாழ் நாள் முழுவதும் பிரயாசப்பட்டாலும் இத்தீய விதைகளை வெளியே அனுப்புவது அரிதாகிறது. ***Testimonies for the Church, Vol..2, p. 403.***

***அதிகாரம் - 69***

***கேடான பழக்கங்களின் விளைவுகள்***

***உயிர் சத்து குறைகிறது***

பாவமான இரகசிய பழக்கங்கள் சரீர இயக்கத்திற்கு தேவைப்படும் உயிர் சத்தை குறைத்துவிடுகிறது. ஆவசியமில்லாமல் செய்யப்படும் எந்த செயலும் அதன் கேடான விளைவுகளை நிச்சயமாக கொண்டு வரும். மூளையானது சிறு பிராயத்தில் அதிக அளவில் பாரப்படுகிறது. சோர்வடைகிறது. பற்றாகுறையும் உடல் களைப்பும் காலத்திற்கு முன்ப வந்துவிடுகிறது. இது பல நோய்கள் தாக்கக்கூடிய தருணத்தை ஏற்படுத்துகிறது. ***Appeal to Mothers p. 28.***

***எதிர்கால நோய்களின் அடித்தளம்***

பதினைந்து வயதிலிருந்து இப்பழக்கம் கைக்கொள்ளப்பட்டிருந்தால் சரீரம் தகாத முறையில் அதிகமாக பயன்படுத்தப்பட்டதை எதிர்க்கும், குறிப்பாக முப்பதிலிருந்து நாற்பத்தைந்து வயது வரையிலும் பல நோய்கள் வந்துவிடும். கல்லீரல், நுரையீரல், நரம்புகள், முதுகு தண்டு, சீறுநீரகங்கள் போன்ற முக்கிய அவையங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன. பல வாத நோய்களும் புற்றுக்களும் உண்டாகும். இயற்கையின் மென்மையான செயல்பாடுகள் வலுவிழக்கின்றன. சரீரத்தின் மற்ற அவையங்கள் செயலிழந்த பாகங்களின் வேலையை செய்ய வேண்டியிருக்கிறது. சரீரத்தின் சமநிலையை இது மாற்றுகிறது. திடீரென சரீரம் பெருஞ் சோர்வுக்குள்ளாகிறது. மரணம் சம்பவிக்கிறது. ***Appeal to Mothers p. 18.***

***ஆறாவது கட்டளை மீறப்படுகிறது***

மற்றவர்களின் உயிரை எடுப்பதும் நமது உயிரை நாமே மெதுவாக அழித்துக் கொள்ளுவதும் ஒரே பாவமே. தவறை செய்து தங்களை கெடுத்துக் கொள்ளுபவர்கள் இதற்கான விளைவுகளை சந்திப்பார்கள். அதுமட்டுமின்றி மனம் வருந்தி முழுமையான மனமாற்றத்தை பெறாமல் பரலோகிலும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இன்னொரு உயிரைக் கொல்லும் பாவத்தை இவர்கள் தங்களுக்கே செய்து கொள்ளுகிறார்கள். அவைகளுக்கான விளைவுகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இதை தேவ சித்தமே ஸ்தாவித்துள்ளது. ***Appeal to Mothers p. 26.***

***சுத்த இருதயம் உன்னோடும் அவதிப்படுகின்றனர்***

பெலவீனமாக இருக்கும் எல்லா வாலிபர்களும் தவறான பழக்கங்களை உடையவர்கள் என்று நாம் கூறிவிட முடியாது. சுத்தமான இதயத்துடன் மனசாட்சிக்குப் பயந்து நடப்போரும் நோய்களினால் பாதிக்கப்படுகிறார்கள். தங்களது கட்டுப்பாட்டிற்கு இல்லாத காரணங்களினால் இவர்கள் அவதிப்படுகின்றனர். ***Appeal to Mothers p. 23.***

1ST Proof

*மனதின் வல்லமைகள் பெலவீனமாகின்றன*

சில பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு படிப்பு பெரிய சுமையாக இருப்பதினால் ஆரோக்கியத்தை இழக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். இளம் மனங்களுக்கு அதிகமான படிப்பு நன்மையானதாக இருப்பதில்லை என்பது உண்மையே. "***பெற்றோர்களே இதைக் காட்டிலும் ஆழமாக உங்களால் பார்க்க முடிகிறதில்லையா?***" பிள்ளைகளின் கருத்துக்களை மட்டும் கேட்டுக் கொள்ளுகிறீர்கள். அவர்களின் தவறான நடத்தைகளுக்கு அவர்கள் கூறும் காரணங்களை நீங்கள் முழுமையாக நம்பிவிடுகிறீர்களா? நல்ல பெற்றோரும், பாதுகாவலர்களாக இருப்போரும் மேலாக மட்டுமே பார்க்காதபடி உண்மையான காரணங்களை கண்டறிய ஆழமாக ஆராய்வார்கள். ***Testimonies for the Church, Vol. 4, p. 96, 97.***

இப்பிள்ளைகளில் சிருடைய சிந்தை பெலவீனப்படுகிறது. தங்களது அறிவாற்றலில் மூன்றில் ஒரு பங்கையே அவர்களால் உபயோகிக்க முடிகிறது. அல்லது பாதி அளவு அறிவாற்றலையே அவர்களால் பயன்படுத்த முடிகிறது. தூய்மையாகவும் ஒழுக்கமாகவும் இருந்திருந்தால் முழு அறிவாற்றலையும் கொண்டிருக்கலாம். தவறான இப்பாவத்தில் அதை எரிந்து விட்டனர். ***Testimonies for the Church, Vol. 2, p. 361.***

*உயரிய இலக்குகளும் ஆவிக்குரிய வாழ்க்கையும் அழிகிறது*

இந்த இரகசிய பாவம் உயரிய நோக்கங்களை அழித்துவிடுகிறது. ஒரு நல்ல கிறிஸ்தவ குணத்தை வளர்த்துக்கொள்ள செய்யப்படும் முயற்சிகளை இது தடுக்கிறது. நமது சரீரத்தின் வல்லமைகளும் மனதின் ஆற்றலும் எல்லா ஆசைகளையும் முழுமையாக தேவ சித்தத்திற்குட்பட்டதாக இருக்க வேண்டும். கிறிஸ்தவத்தின் உண்மையான பொருளை உணர்ந்துகொண்ட எவரும் இதை செய்வார். ஆசைகளாலும் இச்சைகளாலும் கட்டுப்படுத்தப்படும் எந்த நபரும் இயேசுவின் பின் செல்லுபவராக இருக்க முடியாது. இவர்கள் வேரு ஒரு எஜமானின் சேவையில் இருக்கிறார்கள். தீமையின் ஊற்றான அவன் பக்கம் இருப்பதால், தங்களது கெட்ட பழக்கங்களைவிட்டு இயேசுவின் வேலையை தேர்ந்தெடுத்துக் கொண்டு செயல்பட முடியாதவர்களாக இருக்கிறார்கள். ***Appeal to Mothers p. 9, 10.***

*சடங்காச்சாரமான பெலனற்ற கிறிஸ்தவ விசுவாசம்*

கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் காட்டிக்கொள்ளுபவர்களும் இத்தகைய பாவங்களை செய்கிறார்கள். தாங்கள் செய்வது பாவம் என்பதை அறிகிறார்கள். தங்கள் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளுகிறார்கள் என்பதையும் புரிந்துள்ளார்கள். ஆயினும் தங்களது இச்சைகளுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள். மனசாட்சியானது அவர்களது பாவத்தை சுட்டிக் காட்டிக் கொண்டே இருப்பதினால் ஜெபம் செய்ய நாட்டமில்லாதவர்களாக இருக்கிறார்கள். தேவபக்தியின் வேஷத்தை தரித்துக் கொள்ளலாம். இதயத்தில் தேவ கிருபை இல்லாதவர்களாக இருப்பார்கள். இவர்கள் ஊழியத்திற்கு தங்களை ஒப்புக்கொடுப்பதில்லை. தேவனை நம்புவதில்லை. அவரது வேலைகளை செய்வதில் மகிழ்ச்சி காண்பதில்லை. கிறிஸ்துவிற்குள் களி கூறுவதில்லை. ***Appeal to Mothers p. 25.***

*சுய கட்டுப்பாட்டின் வல்லமை இழக்கப்படுகிறது*

சிலர் பாவங்களின் தீமைகளை புரிந்திருப்பதாகக் கூறுவர். ஆயினும் தங்களது இச்சைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று சொல்லுவார்கள். கிறிஸ்துவின் நாமத்தை எடுத்துக் கொள்ளும் எவருக்கும் இத்தகைய அறிக்கையை செய்வது பெரிய தவறாக இருக்கிறது. "***கிறிங்துவின் நாமத்தை தரித்துக்கொள்ளும் எவரும் பாவத்தைவிட்டு விலகட்டும்.***" இந்த பெலவீனத்திற்கு என்ன காரணம். துகாத ஆசைகளும் நாட்டங்களும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டதனால் அவைகள் பெலனடைந்துள்ளன. பகுத்தறிவையும் இவைகள் மேற்கொண்டுவிட்டன. ஆண்களும் பெண்களும் நல்ல நெறிகளை பின்பற்றாதவர்களாக இருக்கிறார்கள். நல்ல கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஜீவிப்பதில்லை. ஆவிக்குரிய வாழ்க்கையில் மறித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களது இயல்பான சுபாவங்களை வளர்த்துவிட்டிருக்கிறார்கள். இவர்களால் சுய கட்டுப்பாட்டுடன் இருக்க முடிவதில்லை. கீழ்த்தரமான இச்சைகள் ஆளுகை செய்கின்றன. மனதை ஆள வேண்டிய வல்லமைகள் இச்சைக்கு அடிமையாகிவிட்டன.

ஆத்துமமானது தரங்கெட்ட ஒரு அடிமைத்தனத்துக்குள்ளாக சிக்கியிருக்கிறது. பாலியல் உணர்வுகளும் ஆசைகளும் ஆவிக்குரிய செழிப்பை அழித்துவிட்டன. பரிசுத்தமும் அழிந்து போயிற்று. ***Testimonies for the Church, Vol. 2, p. 348.***

### *பரலோகுடன் தொடர்பு துண்டிக்கப்படுகிறது*

இப்பாவத்திலிருந்து மனம் காக்கப்படாவிட்டால் பரலோகின் செய்திகளும், தூதுகளும் இதயத்தில் ஒரு மாற்றத்தையும் கொண்டு வருவதில்லை. தகாத உணர்வுகளை திருப்திப்படுத்திக் கொள்ள மூளையின் நரம்புகள் அதிகமாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்நரம்புகள் அவைகளின் ஆரோக்கியத்தை இழந்திருக்கின்றன. இயற்கைக்கு புறம்பான ஆசைகளை திருப்தி படுத்திக் கொள்ள நரம்புகள் செயல்பட்டிருக்கின்றன. மூளையின் நரம்புகள் சரீரத்தின் எல்லா இயக்கங்களுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்நரம்புகளின் வழியாகவே தேவனும் நம்மோடு தொடர்பு கொள்ளுகிறார். நமது உள்ளான வாழ்க்கையையும் மாற்றுகிறார். நரம்பு மண்டலத்தின் மின் சக்தியை பாதிக்கும். உயிர்வாழ்வதற்கு தேவையான சக்தியை குறைத்துவிடுகிறது. மனதின் பகுத்தறிவு இதனால் மந்தமாகிறது. இதை மனதில் வைத்துக் கொண்டவர்களாக ஊழியர்களும், கிறிஸ்தவர்களும் ஆத்துமத்தை கறைப்படுத்தித் தாழ்த்தும் இப்பாவத்திலிருந்து விளகியே இருக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol. 2, p. 347.***

### *சிலர் சஞ்சலப்படுகிறார்கள் ஆயினும் சுய மதிப்பை இழக்கிறார்கள்*

இந்த வகையிலான தீய பழக்கங்கள் எல்லோரையும் ஒரே விதத்தில் பாதிப்பதில்லை. நல்ல ஒழுக்க நெறிகளை வளர்த்துக்கொண்ட பிள்ளைகள் இருப்பார்கள். இத்தீமையை செய்யும் பிள்ளைகளுடன் தொடர்பு கொள்ளுவதால் இதை கற்கிறார்கள். இதனால் மனம் சோருகிறார்கள். எரிச்சலடைந்து பொறாமைப்படுபவர்களாக மாறுகிறார்கள். ஆயினும் இவர்கள் மத ஆராதனைக்கு கொடுக்க வேண்டிய மதிப்பை கொடுப்பார்கள். விசுவாசமற்றவர்களைப் போன்று நடந்துகொள்ள மாட்டார்கள். சில நேரங்களில் அவர்களது மனங்கள் பெருஞ்சஞ்சலத்தை அனுபவிக்கின்றன. தங்கள்மீது அவர்கள் கொண்டிருக்கும் சுய மரியாதையை இழந்து தரமற்றவர்களைப் போன்று



1ST Proof

தங்களை மனதில் பாவித்துக் கொள்ளுகிறார்கள். ***Testimonies for the Church, Vol. 2, p. 392.***

### *சோதனையிலிருந்து சிந்தை பாதுகாக்கப்பட வேண்டும்*

நீண்ட காலமாக இருந்துவரும் ஒரு பழக்கத்தை மேற்கொள்ள வல்லமை இருக்காது. ஒழுக்கத்துடன் வாழ வேண்டும் என்று முடிவெடுத்தாலும் அதை செயல்படுத்த வல்லமையிருக்காது. ஒழுக்கமாகவே வாழ வேண்டும் என்று வல்லமையோடு முடிவெடுத்தாலும் இந்த வல்லமையை நெடுங்கால பழக்கங்கள் மேற்கெண்டுவிடும். தூய்மையற்ற யோசனைகள் கற்பனையை கட்டுப்படுத்துகின்றன. இத்ன நிதிம்மத் வரும் சோதனையானது மேற்கொள்ளப்பட முடியாததாகவே இருக்கிறது. மனமானது உயரிய காரியங்களை சிந்திக்க வேண்டும் மனதின் கற்பனை ஆற்றலும் பரிசுத்தமான தூயவைகளை பார்க்க வேண்டும். இது செய்யப்பட்டால் இது ஒரு பெரிய பாதுகாப்பாக அமைகிறது. மனமானது பரலோகின் புனிதமான உன்னத காரியங்களையே சுற்றி வரட்டும். அப்பொழுது கேடானதினாலும், தரமில்லாதவைகளினாலும் ஈர்க்கப்படாது. ***Christian Temperance and Bible Hygiene p. 135.***

### *இக்காரியங்களில் அறிவுற்றவர்களாக இருங்கள்*

கீழ்த்தரமான இச்சைகளில் ஈடுபட்டால் சத்திய வெளிச்சத்தைப் பலரால் பார்க்க முடியாதபடி இது வழிநடத்திவிடும். விடப்பட வேண்டிய பாவங்களை சத்தியம் காட்டுகிறது. ஆகவே அதை பார்க்காதபடி கண்களை மூடிக்கொள்ளுகிறார்கள். விரும்புவோர் எல்லோரும் சத்திய வெளிச்சத்தைப் பார்க்கலாம். இருளை தெரிந்துகொண்டால் அவர்களது குற்றங்கள் நீங்கிவிடுவதில்லை. ஆண்களும் பெண்களும் இதைப்பற்றி படித்துக்கொண்டு ஏன் இவைகளை அறிந்துகொள்ளுவதில்லை? இது நமது சரீரத்தையும் மனதையும் ஒழுக்கத்தையும் பாதிக்கும். தேவன் நமக்கு சரீரம் என்ற கூடாரத்தைக் கொடுத்திருக்கிறார். இதை நாம் அக்கரையுடன் சிறப்பாக பராமரித்துக் கொள்ள வேண்டும். தேவனது ஊழியத்திற்கும் மகிமைக்கும் இதை பயன்படுத்த வேண்டும். “ ***உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும்,***

*நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." 1 கொரி 6 : 19, 20. "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பர்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கறது; நீங்களே அந்த ஆலயம்" 1 கொரி 3 : 16, 17.* ***Testimonies for the Church, Vol. 2, p. 352, 353.***

*அதிகாரம் - 70*

*எச்சரிப்புகளும் ஆலோசனைகளும்*

*பலரது வாழ்க்கை வெளிப்படுத்தப்பட்டது.*

எனக்கு முன்பாக பலரது வாழ்க்கை வைக்கப்பட்டது. அவர்களது உள்ளான வாழ்க்கையை நான் பார்த்தேன். அதை கண்டு என் ஆத்துமா கலங்கியது. பலலோகம் செல்ல மறுரூபமாக்கப்படுவதைக் குறித்து பேசுபவர்களின் வாழ்க்கைகள் சீர்கெட்டுக் கடக்கின்றன. நம்பத்தகுந்த நபர் எவரேனும் உண்டோ? பாவமில்லாதவர் எவரேனும் உண்டோ? போன்ற கேள்விகளை நான் பல முறை என்னிடமே கேட்டுக்கொண்டுள்ளேன். ***Testimonies for the Church, Vol. 2, p. 349.***

இந்த காலத்திற்கான நிகழ்கால சத்தியத்தை வைத்திருப்பதாக சொல்லிக்கொள்ளும் குடும்பங்களின் நிலை எனக்குக் காட்டப்பட்டது. பயம் என்னை பற்றிக்கொண்டது. இக்குடும்பங்களில் பிள்ளைகளும் வாலிபர்களும் நம்பமுடியாத அளவிற்கு கெட்டுக் கிடக்கின்றனர். இரகசிய பாவங்களும் தங்கள் பிள்ளைகளை அழித்துக்கொண்டிருக்கின்றன என்பதை பெற்றோர்கள் அறியாதவர்களாக இருக்கிறார்கள். தேவ சாயலை இப்பாவங்கள் எடுத்துவிடுகின்றன. சோதோமியரிடம் இருந்த பாவங்கள் இவர்களிடம் இருக்கின்றன. பெற்றோர்களே இதற்கான பொறுப்பாளிகளாக இருக்கிறார்கள். தேவன் மீது அன்பு செலுத்தி அவருக்கு பயந்து நடக்க இவர்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை. பிள்ளைகளை கட்டுப்படுத்தவில்லை. தேவனின் வழிகளை கற்றுக்கொடுக்கவில்லை. சொந்த விருப்பத்தின்படியே செல்லவும் வரவும், உலகத்தாரோடு தொடர்பு வைத்துக்கொள்ளவும் விட்டுவிட்டனர். நல்ல சமுதாயங்களாக போற்றப்படும் இடங்களில் பிள்ளைகள் தேவனுக்கும், பெற்றோரின் அதிகாரத்திற்கும் எதிர்த்து செயல்பட வழிநடத்தப்படுகிறார்கள். உடைகளினாலும் பொழுது போக்குகளினாலும் நடத்தையினாலும் கிறிஸ்துவிற்கு எதிரான ஒரு தாக்கம் நிலவுகிறது.

தேவனுடைய ஜனமாக நிற்பதில் மட்டுமே நமது பாதுகாப்பு அடங்கியிருக்கிறது. தாழ்ந்துகொண்டிருக்கும் உலகின் புது நடைபானிக்கும், செயல்பானிக்கும் நாம் சிறிதுகூட இடம் கொடுக்கக் கூடாது. உலகின் செயல்களுடன் நாம் சமரசமாக போய்விடக் கூடாது. ***Testimonies for the Church, Vol. 5, p. 78.***

*பேதைகளுக்கு அறிவு*

ஒருவர் ஒரு உயரிய மதிப்பு நிறைந்த வேலையை செய்பவராகவும் இருக்கலாம். மாமிசத்தின் இச்சைகளை திருப்பதிபடுத்திக் கொள்ள செயல்படுவாரெனில் அவர் கிறிஸ்தவரே அல்ல. நமது தியானமும், சிந்தனையும், வேலையும் உன்னதமான தன்மையை பெற்றிருக்க வேண்டும். அநேகர் பாவப் பழக்கங்களையும் அவைகளின் விளைவுகளையும் அறியாதவர்களாக இருக்கின்றனர். இதை அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். ***Apple to Mother p. 25.***

*ஜெபிக்க கேட்டுக்கொண்ட நபர்*

என் கணவரும் நானும் ஒரு ஜெபக் கூட்டத்துக்குச் சென்றோம். ஒருவருக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டோம். சரீர நோய்களினால் அதிகமாக துன்பப்படுபவராகவும் ஜெபம் தேவைப்படுகின்ற நபர் என்றும் எங்களுக்கு அவரைக்குறித்து சொல்லப்பட்டது. பார்ப்பதற்கு பெலனற்று சோர்வாக இருந்தார். அவர் குடும்பம் முழுவதுமே நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக கூறினார். ஒரு குழந்தையை இழக்க கொடுத்துவிட்டதாகவும் சொன்னார். எல்லோரையும் அவர் தனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார். நாங்கள் அவருக்காக ஜெபிக்க

1ST Proof


குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

காத்துக்கொண்டிருப்பதாகவும் கூறினார். திருமதி. உவைட்டும் அவர்களது கணவரும் சேர்ந்து எனக்கு ஜெபித்தால் நான் சுகம் பெறுவேன் என்று சொல்லியிருந்தார். கூட்டம் முடிந்த பிறகு எல்லோரும் நாங்கள் இவரை கவனிக்கும்படி சொல்லியிருந்தார்கள். சபை அவருக்கு உதவி செய்துகொண்டிருப்பதாகவும் ஒரு பிள்ளை மறித்துவிட்டதாகவும் எங்களிடம் கூறினார்கள். நாங்கள் களைப்பால் இருந்தபடியால் ஓய்வெடுக்க விரும்பினோம். தேவ ஆவியானவர் உந்தினாலே ஒழிய எவரையும் தனியே சந்தித்து ஜெபம் செய்யப் போவதில்லை என்று முடிவெடுத்திருந்தேன்.

அன்றைய இரவு நாங்கள் மன்றியிட்டு அவருக்காக ஜெபித்தோம். அவரைக் குறித்து தேவ சித்தம் என்ன என்பதை நாங்கள் அறிந்துகொள்ள தேவனிடம் விண்ணப்பித்தோம். சபை ஆட்களும் இவருக்காக ஒன்றாக இணைந்து பலமுறை ஜெபித்திருந்தார்கள். எங்களது ஜெபத்தில் தேவனே மகிமைப்பட வேண்டும் என்று ஜெபித்தோம். தேவனண்டை இதை கொடுத்துவிட்டு நாங்கள் உறங்க சென்றோம். தூக்கத்தில் ஒரு கனவில் இந்நபரைப் பற்றி எனக்கு காட்டப்பட்டது. சிறுவயதிலிருந்து அவரது வாழ்க்கை எனக்கு காட்டப்பட்டது. அவர் பாவத்தை பற்றிக் கொண்டிருந்தார். நாங்கள் ஜெபித்தாலும் பதில் கிடைக்காது என்பதை பார்த்தேன். அடுத்த நாள் அவர் எங்களிடம் ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார். நாங்கள் அவரை தனியே அழைத்து சென்றோம். அவருடன் சேர்ந்து ஜெபிக்க முடியாததற்கு வருத்தம் தெரிவித்தோம். என் கனவை நான் கூறினேன். அவர் தனது பாவத்தை ஒப்புக்கொண்டார். சிறு மகனாக இருந்ததிலிருந்தே இரகசிய பாவத்தை செய்தவராக இருந்தார். திருமணமான பின்பும் அதை தொடர்ந்தார். ஆயினும் இதிலிருந்து விடுபட முயற்சி செய்யப்போவதாகவும் கூறினார். நெடுங்காலமாக இவர் கைக்கொண்டிருந்த பழக்கத்தை மேற்கொள்ள வேண்டி இருந்தது. நடுத்தர வயது மனிதனாக இருந்தார். அவரது ஒழுக்க நெறிகளைக் கொண்டு அத்தீய பழக்கத்தை அவரால் மேற்கொள்ள முடியவில்லை. அவரது ஒழுக்கமும் பெலவீனப்பட்டிருந்தது. நீண்ட காலத்தின் பழக்கம் அவரை ஆட்கொண்டிருந்தது.



1ST Proof

ஒவ்வொரு நாளும் தன்னை தீட்டுப்படுத்திக் கொண்டிருந்தார். துணிவுடன் தேவ பிரசன்னத்தண்டையும் வந்து அமர்ந்தார். தான் அழிந்துகொண்டிருக்கும் சக்தியை தேவன் அதிகரிக்கும்படியாக ஜெபிக்கச் சொல்லியிருந்தார். இதை தேவன் செய்திருந்தாலும், இவர் தொடர்ந்து தனது பாவத்தையே செய்திருப்பார். தேவன் எவ்வளவு பொறுமை உடையவராக இருக்கிறார். மனிதனுடைய தீமைகளுக்கேற்ப நடந்து கொள்ளுவாராகில் எந்த மனிதன் அவருக்கு முன்பாக நிற்க முடியும். நாங்கள் எச்சரிக்கையின்றி செயல்பட்டு இம்மனிதனுக்காக ஜெபித்திருந்தால் என்ன நடந்திருக்கும். அந்நபர் பாவத்தை பற்றிக் கொண்டிருப்பவராக இருந்தார். தேவன் எங்களது ஜெபத்தைக் கேட்டிருப்பாரா? ***"நீர் துன்மார்க்கத்தில் பிரியப்படுகிற தேவன் அல்ல; தீமை உம்மிடத்தில் சேர்வதில்லை. வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்கமாட்டார்கள்; அக்கிரமக்காரர்யாவரையும் வெறுக்கிறீர்." சங் 5: 4,5.***

இந்த மனிதருக்கு மட்டும் இப்படி நடப்பதில்லை. திருமண உறவும் அவரது பாவத்தை மேற்கொள்ள வைக்க முடியாமல் போனது அந்த கேடான பழக்கத்திலிருந்து திருமணத்திற்கு பின்பும் தன்னை அவரால் பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. இப்படியான சூழ்நிலைகள் அரிதானவைகளாகவே இருக்க விரும்புகிறேன். ஆயினும் இந்நபதைப்போன்று பலர் இருக்கிறார்கள் என்பது எனக்கு தெரிகிறது. ***Testimonies for the Church, Vol. 2, p. 349 – 351.***

***தன்னையே கொன்ற ஒருவர்***

இந்த சகோதரர் தான் கிறிஸ்துவை பின்பற்றும் பக்தி நிறைந்த விசுவாசியாக சொல்லிக்கொண்டார். அவரது சரீரம் பெலவீனமாக இருந்தது. அவரை கவனிக்கும்படியாக நாங்கள் வேண்டப்பட்டோம். தரிசனத்தில் அவரைக் குறித்து பார்த்தேன். தன்னையே அவர் வஞ்சித்துக் கொண்டிருப்பவராக இருந்தார். தவறான அந்த இரகசிய பாவத்தை செய்பவராக இருந்தார். தனது ஆரோக்கியத்தை அழித்திருந்தார். இப்பாவம் தேவனுக்கு முன்பாக ஒரு அருவருப்பாக இருக்கின்றது.

இந்த மனிதரும் இப்பாவத்தை நீண்ட கால பழக்கமாக வைத்திருந்தார். சுயகட்டுப்பாட்டை இழந்திருந்தார். நல்ல திறமையான மனிதராக இருந்தார். அவரது சரீரத்தின் வல்லமைகளையும் மனதின் வல்லமைகளையும் சாத்தான் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தான். அவனுக்காக இவைகள் பலியாயின.

தேவனால் கைவிடப்பட்ட நபரைப் போன்று இருந்தார். பாவத்தில் அந்த அளவிற்கு மூழ்கியிருந்தார். காட்டிற்குள் சென்று பல நாட்கள் இரவும் பகலும் உபவாசித்து ஜெபிப்பார். அவரது பாவத்தை மேற்கொள்ளவே இதை செய்தார். ஜெபத்தை மூடிவிட்டு வந்து தனது பாவத்தையே மீண்டும் செய்வார். தேவன் அவரது ஜெபத்தைக் கேட்கவில்லை. தான் செய்ய வேண்டியதை தேவன் செய்யும்படி ஜெபித்தார். பல முறை தேவனிடம் இப்பாவத்தை விட்டுவிடுவதாக வாக்களித்து மீறினார். இந்த பாவத்தினால் தன்னையே கொன்றார். பரலோகின் தூய்மை இவரது பிரசன்னத்தால் இனி ஒருபோதும் கெடுவதில்லை. ***Appleal to Mother p. 24-28.***

***ஒரு பெண்ணுக்கு அறிவுரை***

உன் மனம் அசுத்தமாக இருக்கிறது. வெகு காலமாக ஒரு வேலையும் பொறுப்பும் இல்லாமல் இருந்துவிட்டாய். வீட்டு வேலைகள் உனக்கு பெரிய ஆசீர்வாதமாக இருந்திருக்கும். இவ்வேலைகள் உனக்கு தீங்கை விளைவித்திருக்காது. உனது தவறான யோசனைகளும் நடத்தையுமே உனக்கு தீங்கை இழைத்துள்ளன. ஆண்களும் பெண்களும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளுவதைக் குறிது நீ தவறான கருத்துக்களை கொண்டிருக்கிறாய். ஆண்களுடன் இருக்க விரும்புகிறாய். மனதிலும் சிந்தையிலும் நீ தூய்மையாக இல்லை. காதல் கதைகளை படித்ததினால் பாதிக்கப்பட்டிருக்கிறாய். தவறான யோசனைகளை கற்பனை செய்து கொள்ளுகிறாய். உனது கற்பனை கெட்டுவிட்டது. உன்னால் உனது சிந்தனைகளை கட்டுப்படுத்த முடியவில்லை. சாத்தான் உன்னை கைதியைப்போல் பிடித்துள்ளான. அவன் விரும்புவதைச் செய்ய வழிநடத்துகிறான். ஒழுக்கமான அடக்கமான நடத்தையை நீ கொண்டிருக்கவில்லை. உனது கண்களுக்கு முன்பாக தேவ பயம் இல்லை. உனது திட்டங்களை நிறைவேற்ற தவறுகளை செய்திருக்கிறாய். கறைபடிந்த மனசாட்சியை பெற்றிருக்கிறாய். உனது வழியில் நீ உடநே நின்றாக வேண்டும். இல்லையெனில் நிச்சயமாக உன்னை அழித்துக்கொள்ளுவாய். பகற்கனவு காண்பதை நிறுத்து. மூடத்தனமாக, சீர்கெட்ட பாதையில் உன் சிந்தனைகளை ஓட விடாதே.

ஆண்களுடன் பாதுகாப்பான வகையில் உன்னால் தொடர்பு கொள்ள முடியவில்லை. வெள்ளைத்தைப்போல் உனக்கு சோதனை வருகிறது. உன் இதயத்தினுள் அது வெம்புகிறது. ஒழுக்கத்தையும், அடக்கத்தையும் தகர்த்துப்போடும் அபாயம் உள்ளது. இதே வழியில் சென்றால் எந்த நிலைக்கு செல்வாய். இச்சை என்ற பலிபீடத்தில் உனது நித்தியத்தை பலிகொடுக்கும்படியாக நிற்கிறாய். எத்தகைய ஆசைகள் உன்னை கட்டுப்படுத்துகின்றன. உன்னை அழிக்கும் ஆசைகளுக்கு நீ இடங்கொடுத்தால் உன் பெற்றோரை பெருந்துயரத்திற்குள்ளாக தள்ளுவாய். உனது சகோதரிகளுக்கு இது பெரிய அவமானமாக இருக்கும். நல்ல குணத்தையும், பரலோகையும் நித்திய ஜீவனையும் பலியாக்குகிறாய். இதை செய்ய ஆயத்தமாக இருக்கிறாயா?

தன் அடக்கமின்றி நடந்துகொள்ளுகிறாய். ஆண்மகன்களை நேசிக்கிறாய். எப்பொழுதும் அவர்களைப் பற்றி பேச விரும்புகிறாய். ***"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்."*** உன் பழக்கங்கள் உன்னைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு பெலபட்டுவிட்டன. உனது திட்டங்களையும் ஆசைகளையும் நிறைவேற்றிக்கொள்ள மற்றவர்களை வஞ்சிக்கிறாய். திருத்தப்பட முடியாத நிலைகு இன்னும் நீ செல்லவில்லை. அந்த அபல நிலையை நீ அடைந்திருந்தால் நான் இக்கடிதத்தை உனக்கு எழுதியிருக்க மாட்டேன். தேவ பெலத்தைக் கொண்டு உன்னை உனது கடந்த காலத்திலிருந்து மீட்டுக்கொள்.

ஆண்களைவிட்டு சற்று விலகியே இரு. அவர்களுடன் இருக்கும்பொழுது உனக்கு சோதனைகள் அதிகமாகின்றன. திருமணத்தைப் பற்றி நீ சிந்திக்க வேண்டாம். திருமண வாழிவின் பொறுப்புக்களையும் கடமைகளையும் சுமக்க உனக்கு பல வருடங்களின் அனுபவம் தேவைப்படுகிறது. உனது ஆசைகளையும் யோசனைகளையும் அசா பாசங்களையும் எச்சரிக்கையுடன்

1ST Proof


குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

காத்துக்கொள். இச்சைக்கு இவைகளை பணிபுரிய வைக்காதே. இவைகளை உயர்த்தி தேவனிடம் இவைகளை சமர்பித்துவிடு.

அறிவுள்ள ஒழுக்கமான, அடக்கமான பெண்ணாக நீ மாறலாம். இதற்கென முழுமையாக நீ முயற்சிக்க வேண்டும். விழித்திருந்து ஜெபி. உனது செயல்களையும் நோக்கங்களையும் நன்றாக ஆராய்ந்துகொள். உனது உணர்ச்சிகளையும் ஒவ்வொரு செயலையும் கவனித்துக்கொள். உனது தந்தைக்கு முன்பாக ஒரு அசுத்தமற்ற செய்கையை செய்வாயா? நிச்சயமாக செய்ய மாட்டாய். ஆனால் பரலோக பிதாவிற்கு முன்பாக இதை செய்கிறாய். நமது தேவன் எவ்வளவு உயர்ந்தவராகவும் பரிசுத்தம் நிறைந்தவராகவும் இருக்கிறார். கிறிஸ்துவிற்கு முன்பாகவும் பாவமில்லா தூதர்களுக்கு முன்பாக உன்னை தீட்டுப்படுத்திக் கொள்ளுகிறாய். எச்சரிப்புகளையும், சத்தியத்தையும், மனசாட்சியையும் அசட்டை செய்யும்படி இதை செய்கிறாய். உனது எல்லா செயல்களும் பரலோகில் எழுதப்படுகின்றன என்பதை நினைவில்கொள். உனது வாழ்வின் இரகசியங்களை மீண்டும் சந்திப்பாய்.

நியாயத்தீர்ப்பின் நாளை உன்னைப்போலவே சந்திக்க வேண்டியுள்ள நபராக இருந்துகொண்டு உன்னை மீண்டும் எச்சரிக்கிறேன். தாமதமின்றி கிறிஸ்துவிடம் உன்னை கொடுத்துவிடு. அவர் மட்டுமே தனது கிருபையின் வல்லமையினால் அழிவிலிருந்து உன்னை காப்பாற்ற முடியும். உனது மனதையும் அறிவின் சக்தியையும் அவரால் மட்டுமே மநல்ல ஆரோக்கியத்திற்குள் கொண்டு வர முடியும். தேவ அன்பினால் உன் மனம் நிரப்பப்படலாம். பகுத்தறிவு தெளிவாகவும் முதிர்ச்சியடைந்ததாகவும் இருக்கும். மனசாட்சி தூய்மையுடன் பரகாசிக்கும். தேவ ஆவியானவரின் கட்டுப்பாட்டிற்குள்ளாக உனது சித்தம் பரிசுத்தமாக்கப்பட்டதாகவும், சீரானதாகவும் இருக்கும். நீ எதை தேர்ந்தெடுக்கிறாயோ அதன்படி மாறுவாய். உனது வழியிலிருந்து திரும்பி தீமை செய்வதை நிறுத்தி நன்மை செய்யக் கற்றுக்கொள். மன மகிழ்ச்சியுடன் இருப்பாய். வாழ்வின் போராட்டங்களில் வெற்றி பெறுவாய். மகிமையையும் கணத்தையும் பெற உயருவாய். “ ***கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்.” யோசுவா 24:15 Testimonies for the Church, Vol. 2, p. 559 – 565.***



1ST Proof

***பெற்றோர்கள் தூங்க சாத்தான் வேலை செய்கிறான்***

இது ஒரு துரிதமான காலம். பள்ளிக் கூடத்தின் வயதிலும் ஆண்களும் பெண்களும் ஒருவர்மீது ஒருவர் கவனம் செலுத்த ஆரம்பித்துவிடுகிறார்கள். வகுப்பறையில் தன்னடக்கத்தைப் பயிலுவதற்குரிய சமயமாக அது இருக்கின்றது. ஆண்களும் பெண்களும் ஒன்றாக சேர்க்கப்படுவதின் விளைவுகள் என்ன? இப்படி ஒன்றாக கூடுபவர்களின் ஒழுக்கத்தை இது உயர்த்துமா? இல்லை தகாத இச்சைகளைக் கூட்டுகிறது. சாத்தான் அவர்களை ஆட்கொண்டு தீய பழக்கங்களுக்குள்ளாக வழிநடத்துகிறான்.

பெற்றோர்கள் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். சாத்தான் அவனது கொடியை வீட்டில் நட்டிருக்கிறான் என்பதை அறியாதவர்களாக இருக்கிறார்கள் இந்த காலத்தின் சீர்கெட்ட வாலிபர்களுக்கு என்ன நடக்கும் என்று விசாரிக்கத் தக்கதாக நான் வழிநடத்தப்பட்டேன். மீண்டும் கூறுகிறேன். பெற்றோர்கள் தூங்குகிறார்கள். பிள்ளைகள் தவறான மோகத்தினால் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். தீமையை திருத்த சத்தியம் வல்லமையற்றதாக இருக்கிறது. தீமையை தடுக்க என்ன செய்தாக வேண்டும்? பெற்றோர்களால் விரும்பினால் நிச்சயமாக நிறைய செய்ய முடியும்.

வாலிப பருவத்திற்குள் நுழையும் ஒரு பெண்ணிடம் தன் வயதை சேர்ந்த ஆணோ, தேவையற்ற கவனத்தை செலுத்தினால், அப்பெண் அதை உடனடியாக நிறுத்தக் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். மீண்டுமாக இத்தகைய செயல்கள் நடக்காதபடி தீர்க்கமாக தடுத்துவிட வேண்டும். ஒரு பெண்ணின் தோழமையை ஆண்கள் தேடி வருவார்களேயானால் எங்கேயோ தவறிருக்கிறது என்பதை இது காட்டுகிறது. அப்பெண்ணின் தாய் அவளை கட்டுப்படுத்த வேண்டும். அப்பெண்ணுக்குரிய இடத்தையும் தாயே புரிய வைக்க வேண்டும். வயதிற்கேற்ற பாடங்களை தெளிவாகச் சொல்லித்தரப்பட வேண்டும்.

இருபாலரும் கலந்தே இருக்க வேண்டும் என்ற தவறான கோட்பாடு அதன் தீய விளைவுகளைக் கொண்டுவந்துள்ளது. பெற்றோரும் பிள்ளைகளை பராமரிக்கும் பொறுப்பில் உன்னோடும் சாத்தானைப்போன்று சாதுர்யமாக இருந்தால் இருபாலரும் இணைந்திருப்பது எந்த தவறிற்கும் வழிநடத்தாது. வாலிபர்களின் சிந்தைகளை சாத்தான் எளிதில் கொள்ளை கொண்டு போகிறான். இரு பாலரும் ஒன்றாக இணைவது தீமையை இருபது மடங்கிற்கு கூட்டுகிறது.

***நடைமுறையின் உண்மை நிலவரம்***

இக்காரியங்களை நாம் பெரிதாக்கி பார்க்கின்றோம் என்று நம்பி உங்களை வஞ்சித்துக் கொள்ளாதீர்கள். படத்திற்கு நான் வண்ணம் எதையும் பூசவில்லை. உண்மையான நிலவரத்தின் தகவல்களையே உங்களுக்கு முன்பாக வைத்திருக்கிறேன். விழித்தெழுங்கள்! விழித்தெழுங்கள்! என்னுடைய வேண்டுகோளாக இருக்கிறது. பொதுவாக இன்றைக்கும் காணப்படும் சீரழிவில் உங்கள் பிள்ளைகள் விழுந்துவிடாதபடி, தருணம் இருக்கும்போதே தவறுகளை திருத்துங்கள். உன்னதமான இந்த வேலையை செய்யுங்கள். எல்லா சத்திய வெளிச்சத்தின் உதவியை பெற்றக்கொள்ளுங்கள். அறியாத சத்தியங்களையும் தெரிந்து கொள்ளுங்கள். தேவ சிங்காசனத்தின் முன்பாக நிற்பதைப்போன்று உங்கள் வாழ்வையும், குணத்தையும் ஆராய்ந்துகொள்ளுங்கள். ***Testimonies for the Church, Vol. 2, p. 401.***

பெற்றோர்கள் விழித்தெழும்பும் வரையில், பிள்ளைகளின் நிலை பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. நம்பிக்கையை கொடுப்பதாகவும் இல்லை.

***அதிகாரம் - 71***

***பெற்றோரின் கண்காணிப்பும் உதவியும்***

***குழந்தை பருவத்திலிருந்து சுய கட்டுப்பாடு கற்றுத்தரப்பட வேண்டும்***

பிள்ளைகளுக்கு குழந்தை பருவத்திலிருந்தும் நாம் சுய கட்டுப்பாட்டை கற்றுக்கொடுப்பது மிகவும் முக்கியம். அவர்களது விருப்பங்களை பெரியோரான நமது சித்தத்திற்கு ஒப்படைத்துவிடும் பாட்ததை சொல்லியாக வேண்டும். துரதிஷ்டவசமாக அவர்கள் கெட்ட பழக்கங்களை கற்றுக்கொண்டிருக்கலாம். அப்பழக்கங்களின் விளைவுகளை அறியாதவர்களாக இருப்பார்கள். அவர்களுடன் நிதானித்து பேசி, பகுத்தறிந்து அவர்களது தவறை புரிய வைக்க வேண்டும். தீய பழக்கங்கள் மனதை பாதித்து ஆரோக்கியத்தை அழிக்கிறது என்பதை அவர்களுக்கு விளக்க வேண்டும். பிள்ளைகள் தவறுகளை செய்ய அஞ்சும்படி இப்பயத்தைப் போக்கி பாவத்தை செய்ய சிலர் தூண்டுவார்கள். இப்படியாக தங்களை தவறாக வழிநடத்துவோர் சாத்தானின் பிரதிநிதிகள் என்பதை பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டும்.

1[ST] Proof

***பிள்ளைகளை தூய்மையாக வையுங்கள் அவர்கள் மனங்களை பாதுகாருங்கள்***

பிள்ளைகளின் பழக்கங்களை அறிந்துகொள்ளாமல் ஒரு தாய் இருக்கக் கூடாது. இது பெரிய குற்றம். பிள்ளைகள் தூய்மையானவர்களாக இருந்தால் அந்த நிலையிலே பிள்ளைகளை பாதுகாருங்கள். கடந்த இரண்டு அதிகாரங்களில் நாம் படித்த தீமையை வெறுக்கும்படி பிள்ளைகளின் மனங்களை ஆயத்தப்படுத்துங்கள். ஆத்துமத்தையும் சரீரத்தையும் அழிக்கும் இத்தீங்கிலிருந்து பிள்ளைகளை காத்துக்கொள்ளுங்கள். ***Testimonies for the Church, Vol. 2, p. 13***

சாத்தான் இளவயதினரின் மனங்களை கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறான். அவர்களை காப்பாற்ற முழு மனதுடன் திட்டவட்டமாக செயல்பட வேண்டும். சிறிய பிள்ளைகளும் இத்தீமையை பழகிக்கொள்ளகிறார்கள். அவர்கள் வளர அவர்களுடன் சேர்ந்து தீமையும் வளர்கிறது. மனதாற்றலும் சரீர ஆற்றலும் குன்றிவிடுகின்றன. சரியான ஆலோசனை கொடுக்கப்பட்டிருந்தால் பலர் காப்பாற்றப்பட்டிருப்பார்கள். இந்த தீய பழக்கத்தின் விளைவுகளை தெளிவாகக் கூறி கவனமாக பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லி, நல்ல ஆலோசனைகளைக் கொடுத்திருந்தால் அநேகர் இதிலிருந்து காப்பாற்றப்பட்டிருப்பார்கள். ஆரோக்கியத்தை இது எப்படியெல்லாம் கெடுக்கிறது என்பதும் புரியவைக்கப்பட்டிருக்க வேண்டும். தங்களுக்குப் பெரிய கெடுதியை செய்துகொள்ளுகிறார்கள் என்பதை தெரியாமலே இதை செய்கின்றனர்.

தாய் மார்களே உங்கள் பிள்ளைகள் தவறான பழக்கங்களை கற்றுக்கொள்ளாமல் இருக்க நீங்கள் எச்சரிக்கையுடன் செயல்படுவது தவறாகாது. கற்றுக்கொண்ட தீமையை விட்டுவிடுவதைவிட அதை கற்றுக்கொள்ளுவதே எளிதானதாக இருக்கிறது. ***Testimonies for the Church, Vol. 2, p. 10, 11.***

### *விழிப்புடன் ஆராயுங்கள்*

இந்த தீமையை உங்கள் பிள்ளைகள் செய்துகொண்டிருந்தால் உங்களை வஞ்சிக்கும்படியாக நடந்துகொள்ளும் அபாயம் உள்ளது. தாய்மார்களே நீங்கள் சுலபமாக திருப்தியடைந்துவிடக் கூடாது. ஆழமாக ஆராய்வதை நிறுத்திவிடாதீர்கள். நீங்கள் முழுமையாக திருப்தியடைந்து சிறிதளவும் தவறு எதுவும் இல்லை என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் அன்புக்குரியவர்களின் ஆத்துமாக்களும் ஆரோக்கியமும் பெரிய அபாயத்தில் உள்ளது. மற்ற எல்லாவற்றையும்விட இது முக்கியத்துவம் வாய்ந்தது. பிள்ளைகள் இதை மறைக்கவும் அதைப் பற்றி பேசாமல் இருக்கவும் முயலுவார்கள். தொடர்ந்து விழிப்புடன் செயல்பட்டு ஆராய்ந்தால் உண்மை வெளிவரும். இதை அறிந்து கொண்ட பிறகு இத்தீமையின் தன்மையை பிள்ளைகள் அறிந்துகொள்ளுமாறு செய்ய வேண்டும். பிள்ளைகளுக்கு முன்பாக இதன் தீமைகளை நிதானமாக விவரிக்க வேண்டும். நல்ல குணத்தையும் சுய மரியாதையையும் இது கெடுக்கிறது என்பதை புரிய வைக்க முயலுங்கள். மேலும் இது ஒழுக்கத்தையும் ஆரோக்கியத்தையும் அழித்து, தேவ அன்பை ஆத்துமத்திலிருந்து நீக்குகிறது என்பதையும் தெரிவியுங்கள். ஆத்துமத்தின் மீதாக படியும் கறையாக இது இருக்கிறது. பரிசுத்தத்தின் அழகை எடுத்துவிடுகிறது. பிள்ளையின் இந்த தீய பழக்கம் நின்றுவிட்டது என்ற முழுமையான நம்பிக்கை பிறக்கும் வரையிலும் இதை விடக்கூடாது. ***Testimonies for the Church, Vol. 2, p. 13, 14.***

### *அவசரப்பட்டு குற்றப்படுத்தாதீர்கள்*

இருக்கும் தீமையை சரிசெய்வது எப்படி? என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள். இவ்வேலையை எப்படி துவங்குவது? ஞானமில்லாதிருந்தால் தேவனிடம் செல்லுங்கள். ஞானத்தை அருள தேவன் வாக்களித்துள்ளார். தேவ உதவியைப் பெற்றுக்கொள்ள பக்தியுடன் ஜெபியுங்கள். எல்லோரையும் ஒரே விதமாக கையாளமுடியாது. பரிசுத்தமாக்கப்பட்ட ஒரு பகுத்தறிவுடன் நிதானத்துடன் செயல்பட வேண்டும். பதட்டப்பட்டு அவசரப்படாதீர்கள். பிள்ளைகளை குற்றப்படுத்தாதீர்கள். இப்படி நீங்கள் செயல்பட்டால் உங்களை அவர்கள் எதிர்க்கவே இது தூண்டும். தவறான வழியை பின்பற்றியிருந்தால் மனஸ்தாபப்படுங்கள். இதன் மூலமாக சாத்தான் உங்கள் பிள்ளைகளை சோதிக்க ஒரு கதவை நீங்களே திறந்துவிட்டிருக்கக் கூடும். ஆரோக்கியத்தின் கூறுகளை அவர்களுக்கு முன் கூட்டியே சொல்லிக்கொடுக்காமல் இருந்தால் தவறு உங்கள் பக்கம் உள்ளது. ஒரு முக்கிய கடமையை அசட்டை செய்துள்ளீர்கள். இதன் விளைவாக உங்கள் பிள்ளைகள் தீய பழக்கங்களை பெற்றுக்கொண்டிருக்கக் கூடும். ***Testimonies for the Church, Vol. 2, p. 20, 21.***

### *நிதானத்துடனும் கரிசனையுடனும் ஆலோசனை கொடுங்கள்*

பிள்ளைகளுக்கு சுய கட்டுப்பாட்டை கற்றுக்கொடுப்பதற்கு முன்பாக நீங்கள் அதை கற்றுக்கொள்ளுங்கள். துரிதமாக பதட்டப்பட்டு பொறுமை இழக்கும் பண்பை நீங்கள் கொண்டிருந்தால், பிள்ளைகளுடன் உங்களால் நிதானிக்க முடியாது. நீங்கள் உணர்ச்சிவசப்பட்டுக்கொண்டு பிள்ளைகளின் உணர்ச்சிகளை அவர்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறினால், அது பயன்தராது. இது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்காது.

நிதானமாக ஆழ்ந்த கரிசனையையும், இரக்கத்தையும் கொண்டவர்களாக பிள்ளைகளிடம் செல்லுங்கள். இந்த தவறான பாதையில் தொடர்ந்தால் நிச்சயமாக வரவிருக்கும் சேதத்தை மன பாரத்துடன் எடுத்துரையுங்கள். மனதையும் சரீரத்தையும் முடமாக்கிக் கொண்டு, ஒழுக்கத்தைக் கெடுத்து, தங்களுக்கும் தேவனுக்கும் எதிராக பாவம் செய்கிறார்கள் என்பதை தெளிவுபடுத்துங்கள்.

பரிசுத்தம் நிறைந்த தூய்மையான தேவனுக்கு எதிராகவே பாவம் செய்திருக்கிறார்கள் என்பதை அவர்களை உணரவையுங்கள். இதயங்களை ஆராய்கிறவர் அவர்களது போக்கினால் துக்கமடைகிறார் என்பதையும் அவர்கள் புரிந்தாக வேண்டும். தேவனுக்கு மறைவானது எதுவுமில்லை என்பதை அவர்கள் மனதில் வைக்க வேண்டும். இதை

1ST Proof

நீங்கள் செய்தால் பிள்ளைகள் மனஸ்தாபப்பட்டு மனம் வருந்துவார்கள். இரட்சிக்கப்படுவதற்கேதுவாக துக்கப்படுவார்கள். முழுமையான ஒரு சீர்திருத்தத்தை அனுபவிக்கலாம். பாவங்கள் வெளிவந்துவிட்டதற்காக மட்டும் துக்கிக்க மாட்டார்கள். தங்களது பாவ பழக்கங்களின் மோசமான தன்மைகளைப் பார்க்க வழிநடத்தப்படுவார்கள். தேவனிடம் பாவங்களை அறிக்கை செய்வார்கள். எதையும் தேவனிடமிருந்து மறைக்காமல் எல்லாவற்றையும் விட்டுவிடுவார்கள். தேவனுக்கு எதிராக செயல்பட்டதன் நிமித்தம் மனம் வருந்துவார்கள். தேவனை விசனப்படவைத்து, தங்கள் சரீரங்களை கனயீனப்படுத்தியதற்கு மனஸ்தாபப்படுவார்கள். ஜீவ பலிகளாக தங்கள் சரீரங்களை அவரிடம் சமர்பிப்பதே புத்தியுள்ள ஆராதனை என்பதை உணர்ந்து, தேவனும் இதையே எதிர்பார்க்கிறார் என்பதை புரிந்துகொள்ளுவார்கள். ***Testimonies for the Church, Vol. 2, p. 21, 22.***

***பிள்ளைகளின் தொடர்புகளை பாதுகாருங்கள்***

கிறிஸ்தவ மதத்தின் நெறிகளினாலும், கோட்பாடுகளினாலும் மனம் சம நிலையில் வைத்திருக்கப்பட வேண்டும். இது நடக்காமல் போனால், நல்லொழுக்கமானது தவறான உதாரணங்களினால் சீரழியும். இப்படிப்பட்ட நபர்களை நிச்சயமாக தொடர்புகொள்ள வேண்டி வரும். ***Christian Temperance and Bible Hygiene.***

எல்லோருடனும் தொடர்பு கொண்டு தங்களை அசுத்தமாக்கிக் கொள்ளாதபடி உத்தமமான தாய்மார்கள் பிள்ளைகளை பாதுகாக்க வேண்டும். பிள்ளைகளின் பாதுகாப்பு கேடகமாக தாய் இருக்க வேண்டும். இக்காலத்தின் சீர்கெடுக்கும் செல்வாக்கிலிருந்து விலையேறப்பெற்ற ஆபரணங்களைப்போல் பிள்ளைகளை காத்துக்கொள்ளுங்கள். சில நேரங்களில் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலை வரலாம். இந்த சந்திப்புக்கள் உங்களுக்கு முன்பாக நடக்கட்டும். ஒரே அறையிலோ, ஒரே படுக்கையிலோ தனியாக இரவைக் கழிக்க விடாதீர்கள். தீமையான பழக்கங்களை கற்றுக்கொண்டு விடுவதைவிட அவைகளை அனுகவிடாமல் பார்த்துக்கொள்ளுவதே சாலச் சிறந்தது.

பெற்றோர் பிள்ளைகளை தனியே விடுகிறார்கள். இப்பிள்ளைகள் சென்று தங்கள் நண்பர்களை சந்திக்கிறார்கள். வீட்டைவிட்டு தூரமாகச்



1ST Proof

சென்று நேரத்தை செலவழிக்கிறார்கள். அங்கு தங்களின் விருப்பங்களுக்கு ஏற்ப செயல்படுகிறார்கள். சாத்தான் இத்தருணங்களை நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளுகிறான். பிள்ளைகளின் மனங்களை கட்டுப்படுத்த துவங்குகிறான். அறியாமையினால் தாய்மார்கள் சாத்தானின் வலையில் பிள்ளைகள் சிக்கும்படி விடுகிறார்கள். ***Appeal to Mother p. 13, 14.***

***உணவு முக்கியமானது***

பிள்ளைகளின் உணவைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும். தவறான உணவுகள் பிள்ளைகளின் நல்லொழுக்கங்களை எழுப்பாது. பெற்றோர்கள் பொதுவாக பிள்ளைகளுக்கு அயத்தப்படுத்தும் உணவுகளையே பிள்ளைகளுக்கு பெரிய ஆபத்தை கொண்டுவருபவைகளாக உள்ளன. ***Testimonies for the Church, Vol. 2, p. 400.***

பிள்ளைகளை அவர்களின் எல்லா ஆசைகளையும் நிறைவேற்றிக் கொள்ள விடும் பெற்றோர், சுயத்தை மறுக்க பிள்ளைகளுக்குச் சொல்லித்தருவதில்லை. பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் உணவு வயிற்றை எரிச்சலூட்டுகிறது. உணர்ச்சிவசப்படும் சூழல் சரீரத்தில் ஏற்படுகிறது. இதே செய்தி மூளையை சென்றடைகிறது. இச்சைகள் இதனால் தூண்டப்படுகின்றன. வயிற்றுக்குள் செல்லும் எதுவும் சரீரத்தை மட்டுமின்றி மனதையும் பாதிக்கின்றது. இதை எத்தனை முறை கூறினாலும் தப்பில்லை. நரம்புகளைத் தூண்டி உணர்ச்சிவசப்பட வைக்கும் உணவுகள் இரத்தத்தை சூடாக்குகிறது. நரம்புகளை தூண்டிவிடுகிறது. ஒழுக்க நெறிகள் மந்தபாகின்றன. மாமிசத்திற்கு ஏதுவான ஆசைகள் பகுத்தறிவையும் மனசாட்சியையும் மேற்கொள்ளுகின்றன. உணவில் கட்டுப்பாட்டை கைக்கொள்ள முடியாத ஒருவரால் பொருமையுடனும் சுய கட்டுப்பாட்டுடனும் இருக்க முடியாது. எனவே குணங்கள் வளர்ந்து கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான உணர்ச்சிவசப்படுத்தாத உணவுகளை கொடுப்பது முக்கியமான ஒன்றாகிறது. தேவன் நம்மீது கொண்டுள்ள அதிகமான அன்பினால் ஆரோக்கிய சீர்திருத்த வெளிச்சத்தை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். கட்டுப்படுத்தப்படாத பசியுணர்வின் தீமைகளிலிருந்து

நம்மைக் காக்கவே தேவன் இதை அருளியிருக்கிறார். ***Christian temperance and Bible Hygiene p. 134.***

உணவு மிகவும் எளிமையாக இருக்க வேண்டிய காலம் இது. மாமிச உணவு பிள்ளைகளுக்கு முன்பாக வைக்கப்படக் கூடாது. அது உணர்ச்சிவசப்படுத்துகின்றது. மாமிச இச்சைகளை பெலப்படுத்துகிறது. ஒழுக்க வல்லமைகளை தகர்த்துப் போடுகிறது. ***Testimonies for the Church, Vol. 2, p. 352.***

***சுத்தமும் முக்கியமானது***

அடிக்கடி குளிப்பது மிகவும் நல்லது. தூங்குவதற்கு முன்பும் எழுந்தவுடனும் குளித்தல் முக்கியம். சிறு பிள்ளைகளை குளிப்பாட்டுவதற்கு சில நிமிடங்களே ஆகும். இரத்த ஓட்டத்தை இது அதிகப்படுத்தும். மூளைக்கு புத்துணர்வை கொடுக்கும். தவறானவைகளை செய்யும் நாட்டம் குறைந்துவிடும். அழுக்குடன், கிழிந்த ஆடைகளுடன் தங்களை பார்க்க தேவன் விரும்கிறதில்லை என்பதை சிறு பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். வெளியிலும், உள்ளுக்குள்ளும் தூய்மையாக இருக்கவே தேவன் எதிர்ப்பார்க்கிறார் என்பதை சொல்லுங்கள். சுத்தமாக இருந்தால் மட்டுமே தேவனால் நமக்குள் வாசம் செய்ய முடியும். ***Christian temperance and Bible Hygiene p. 141 142.***

***சரீரத்தை இறுக்காத சுத்தமான உடைகள்***

உடைகள் துப்புரவாகவும் சுத்தமாகவும் இருந்தால் மனமும் இனிமையாகவும் தூய்மையாகவும் இருக்கும். உடையின் ஒவ்வொரு பாகமும் எளிமையாகவும் சாதாரணமாகவும் இருக்க வேண்டும். தேவையற்ற அலங்கரிப்பு இருக்கக் கூடாது. இத்தகைய உடைகளை துவைத்து இஸ்திரி போட்டு வைப்பதற்கும் சுலபமாக இருக்கும். தோலுடன் தொடர்பு கொள்ளும் துணி சுத்தமாகவும், துர்நாற்றமும் இல்லாமல் இருக்க வேண்டும். உடைகள் சரீரத்தை இறுக்கிக்கொள்ளக் கூடாது. தோலின் தன்மைகள் மாற்றும்படியும் உடை இருக்கக் கூடாது. தோலானது எரிச்சலடையக் கூடாது. இதற்கென அதிக கவனம்



1ST
Proof

செலுத்தப்பட்டால், அசுத்தம் பெருமளவில் குறைந்துவிடும். ***Christian temperance and Bible Hygiene p. 142.***

***உடற்பயிற்சி விடப்படக் கூடாது***

வாலிபர்கள் அதிகமாக வேலை செய்து களைத்து விடுவார்கள் என்று சொல்லப்பட்டு உடற்பயிற்சியின்றி அவர்கள் விடப்படக் கூடாது. பிள்ளைகளின் பாரங்களை பெற்றோர்கள் சுமக்கிறார்கள். அதிகவேலை நல்லதன்று. சோம்பலின் விளைவுகள் இதைவிட மோசமானதாக இருக்கின்றன. இது கெட்ட பழக்கங்களுக்கு வழிநடத்துகிறது. தன்னையே அழித்துக் கொள்ளும் தீங்கானஅந்த பழக்கத்தைவிட அதிக வேலையினால் சோர்வடைவது ஐந்தில் ஒரு பங்கு கெடுதியைக் கூட கொடுப்பதில்லை. எளிமையான மிதமான வேலைகளை செய்வதில் பிள்ளைகள் சோர்படைந்தால், இந்த சோர்விற்கு காரணமான வேரு எதையோ அவர்கள் செய்கிறார்கள் என்பதே உண்மை. பிள்ளைகளுக்கு சரீர வேலை கொடுங்கள். தசைகளையும் நரம்புகளையும் அவர்கள் பயன்படுத்தட்டும். இதனால் ஏற்படும் சோர்வு தவறானவற்றை செய்யும் நாட்டத்தை குறைக்கும். ***Testimonies for the Church, Vol..2, p. 348, 349.***

***சோம்பல் சோதனையின் கதவைத் திறக்கிறது***

தாய்மார்களே பிள்ளைகளுக்கு போதுமான வேலையை கொடுங்கள். சோம்பலின் ஆவி சரீரத்திற்கோ, மனதிற்கோ, ஒழுக்கத்திற்கோ நல்லதல்ல. சாத்தானை வரவேற்க கதவை திறக்கிறது. இவ்வாய்ப்புக்களை சாத்தான் நன்றாக பயன்படுத்திக் கொள்ளுகிறான். தனது வரைகளுக்குள் பிள்ளைகளை இழுத்துக்கொள்ளுகிறான். சோம்பலினால் ஒழுக்க சக்தி குறைகிறது. இச்சை பெலப்படுத்தப்படுகிறது. சாத்தானின் தூதர்கள் மனதை முழுமையாக கைப்பற்றிவிடுகின்றனர். மனசாட்சி இச்சைக்கு அடிபணிகிறது. பொருமையுடன் வேலை செய்யும் பழக்கத்தை தம் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். ***Appeal to Mother p. 18, 19.***

***மனந்திருந்துவோரை தேவன் அழிய விடுகிறதில்லை***

உண்மையான மனமாற்றத்தை தேவன் ஏற்றுக்கொள்ளுவார் என்பதை பிள்ளைகளுக்குச் சொல்லி அவர்களை ஊக்கப்படுத்துங்கள். அவர்களின் மீது இரக்கம் பாராட்டி தங்களை சுத்திகரித்துக்கொள்ள அவர்கள் எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிப்பார் என்பதையும் தெரிவியுங்கள். உங்களது பிள்ளைகளின் மனங்களின் மீது கொண்டிருந்த கட்டுப்பாடடை நீங்குவதை சாத்தான் பார்ப்பான். வல்லமையான சேதனைகளை கொடுப்பான். மீண்டுமாக இத்தீமையினால் பிள்ளைகளை கட்டிவிட வழி தேடுவான். திடமான மன உறுதியுடன் சாத்தானின் சோதனைகளை இவர்கள் எதிர்க்க வேண்டும். மிருக இச்சைகளை கட்டுப்படுத்த வேண்டும். இது தேவனுக்கு எதிரானது. சாத்தான் தங்களை எளிதில் கட்டுப்படுத்திவிடக் கூடிய இடங்களுக்கு செல்லக் கூடாது. தாழ்மையுடன் இவர்கள் இருதய சுத்தத்திற்கு தேவனிடம் ஜெபிக்க வேண்டும். அவர் ஜெபங்களை கேட்டு விண்ணப்பங்களுக்கு பதிலளிப்பார். பெலவீனர்களுக்கும் உதவியற்றவர்களுக்கும் தேவன் உதவி செய்வார். ஆனால் அவர்கள் அவரை விசுவாசித்து அவரையே சார்ந்து இருக்க வேண்டும். பாவங்களில் அழிந்துவிட தேவன் அவர்களை விட மாட்டார். ***Appeal to Mother p. 22, 23.***

*அதிகாரம் - 72*

*சீர்திருத்தத்திற்கான போராட்டம்*

*உண்மையான மனமாற்றமும் தளராத முயற்சியும் அவசியம்*

தங்களது சரீரங்களை கெடுத்துக்கொள்ளுபவர்கள் தேவனின் ஈவுகளை பெற்றுக்கொள்ள முடியாது. உண்மையான மனமாற்றத்துடன் முழுமையான சீர்திருத்தத்திற்குள்ளாக வர வேண்டும். தேவ பயத்துடன் பரிசுத்தத்தில் பரிபூரணப்பட வேண்டும். ***Appeal to Mother p. 29.***

தீங்கான பழக்கங்களை கைக்கொண்டிருப்பவர்கள் அவைகளை விட்டுவிடுவதே அவர்களது ஒரு நம்பிக்கையாக உள்ளது. ஆரோக்கயத்தை மதித்து இரட்சிப்பை பெற விரும்புவோர் இதை செய்தாக வேண்டும். இப்பழக்கங்கள் நீண்ட காலமாக இருந்திருக்குமேயானால் சோதனைகளை மேற்கொண்டு இதை உதரித் தள்ள தீர்க்கமாக முடிவெடுத்து, முயற்சி செய்ய வேண்டும். ***Appeal to Mother p. 27.***

*யோசனைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்*



1ST
Proof

நீ உன் யோசனைகளை கட்டுப்படுத்த வேண்டும். இது சுலபமானதாக இருக்காது. முழு மனதுடன் வல்லமையாக முயற்சிக்காவிட்டால் இதை செய்ய முடியாது. அசுத்தமான கற்பனைகள் அச்செயலை செய்வதற்கு ஒப்பாகவே இருக்கிறது. அப்பாவத்தை நடைமுறையில் செய்தவற்களைப் போலவே தேவனுக்கு முன்பாக நிற்கிறோம். தருணம் கிடைக்காததினால் அப்பாவம் நிகழாமல் இருக்கிறது. கற்பனையில் கனவுகளை காணும் பழக்கம் அபாயகரமானது. இது பழக்கமாகிவிட்டால் இதை உடைப்பது முடியாத ஒன்றாக இருக்கும். தூய்மையானவற்றின்மீது சிந்தனையை வைக்க இயலாமல் போகும். ஐம்புலன்களையும், குறிப்பாக கண்ணையும், காதையும் உத்தமத்துடன் காத்துக்கொள்ள வேண்டும். இது நடந்தால் சிந்தை கட்டுப்படும். மாயமான சீர்கெட்ட சிந்தனைகள் உன் ஆத்துமத்தை கறைபடுத்தாது. கிருபையின் பெலம் மட்டுமே இன்பம் தரும். இவ்வேலையை செய்ய முடியும். ***Testimonies for the Church, Vol. 2, p. 561.***

*இச்சைகளும் ஆசா பாசங்களும் பகுத்தறிவின் கீழாக இருத்தல் வேண்டும்*

உங்களது யோசனைகளுடன், ஆசாபாசங்களையும் ஆசைகளையும் கட்டுப்படுத்த தேவன் சொல்லுகிறார். இவைகளை நீங்கள் சரியாக ஆள வேண்டும். உங்கள் இரட்சிப்பு இதை சார்ந்தே உள்ளது. இச்சைகளும் ஆசா பாசங்களும் வல்லமையானவைகள். தகாத நோக்கங்களுடன் இவை தவறாக செயல்பட்டால் உங்களை சீரழித்துவிடும். தேவனும் இன்றி நம்பிக்கையும் இன்றி வீணடிக்கப்பட்ட ஒரு நபராக உங்கள் நிலை மாறும்.

கற்பனையானது தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட வேண்டும். இதை செய்தால் ஆசா பாசங்களும் இச்சைகளும் மனசாட்சிக்கும் பகுத்தறவிற்கும் கீழாக செயல்படும்.

உங்கள் யோசனைகளை கட்டுபாட்டிற்குள் வையுங்கள். தகாதவைகளை படிக்காதபடியும் கட்டுப்பாட்டை கையாளுங்கள். இதை நீங்கள் செய்ய தவறினால், உங்களது வார்த்தைகளும், கற்பனையும், நம்பிக்கையை போக்கும் அளவிற்கு கெட்டுவிடும் கவனத்துடன் வேதத்தை வாசியுங்கள். ஜெபத்துடன் இதை செய்து, வேத

கோட்பாடுகளால் வழிநடத்தப்படுங்கள் இதுவே உங்களது பாதுகாப்பு. ***Testimonies for the Church, Vol. 2, p. 561 - 563.***

***ஐம்புலன்களை தீமையிலிருந்து காத்துக்கொள்ளுங்கள்***

தேவ ஞானத்தைப் பெற்று ஞானிகளாக மாற முடிவெடுப்போர், இவ்வுலகின் தீமையின் அறிவை பெறாமல் இருக்க வேண்டும். இவ்வுலகின் தீமையை அறியாத மூடர்களாக இருக்க வேண்டும். தீமையான எதையும் பார்த்காதபடி தீங்கான எதையும் கற்றுக்கொள்ளாதபடி கண்களை மூடிக்கொள்ளுங்கள். தீமையை கேட்பாதபடி காதுகளையும் மூடிக்கொள்ள வேண்டும். தூய்மையான யோசனைகளையும் செயல்களையும் கறைபடுத்திவிடும்படியாக எதையும் கேட்கக் கூடாது. தவறான வார்த்தைகளை பேசாதபடி நாவை கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். வாயில் கபடம் இருந்தல் கூடாது. ***Appeal to Mother p. 31.***

அசுத்தமான யோசனைகளை தரக்கூடிய எதையும் பார்க்காதீர்கள், படிக்கவும் செய்யாதீர்கள். அறிவாற்றலையும் நல்ல ஒழுக்கத்தையும் வளர்த்துக்கொள்ளுங்கள். ***Testimonies for the Church, Vol. 2, p. 410.***

***வேலையின்றி சதா படித்துக்கொண்டிருக்கக் கூடாது***

ஆதிகமான படிப்பு மூளைக்கு இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துகின்றது. இது உணர்ச்சிகளை தூண்டுவதினால் சுய கட்டுப்பாடு குறைகிறது. உணர்ச்சிவசப்பட்டு தீமையை செய்ய இது வழிகொடுக்கிறது. அசுத்தத்திற்கு கதவு திறக்கப்படுகிறது. சரீரத்தின் பெலங்களை தவறாக பயன்படுத்தப்படுவதாலும், பயன்படுத்தப்படாமலேயே விடப்படுவதினாலும், உலகம் சீர்கெட்டிருக்கின்றது. அகந்தை, அளவிற்கதிகமான உணவுகள், சோம்பல் ஆகியவை மனித முன்னேற்றத்தின் எதிரிகள். சோதோமின் காலத்தில் இவைகள் மனிதனை அழித்தன. இந்தக் காலத்திலும் அதே வகையில் செயல்படுகின்றன.

ஆசிரியர்கள் இவைகளை புரிந்துகொள்ள வேண்டும். இதற்கேற்றபடி மாணவர்களை அறிவுறுத்த வேண்டும். சரியான யோசனைகளை சார்ந்தே நல்ல வாழ்வும் அமைகிறது. இதை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுங்கள். தூய்மையான யோசனைகளுக்கு சரீர வேலை அவசியமானதாக இருக்கிறது. ***Education, p.209.***

***தடுமாறிக்கொண்டிருக்க இது நேரமில்லை***

தேவசாயலுக்கேற்றபடி உருவகிக்கப்டும் தூய்மையான வாழ்வும் குணமும் தளராத முயற்சியினாலும் நல்ல கோட்பாடுகிளனால் மட்டுமே கிடைக்கப்பெறும். நிலைமாறிக்கொண்டிருக்கும் நபர் கிறிஸ்தவ பரிபூரணத்தை அடைய முடியாது. இவர்கள் தராசில் வைக்கப்பட்டு குறைவுற்றவர்களாக காணப்படுவார்கள். கெர்ஜிக்கிற சிங்கத்தைப்போன்று சாத்தான் தன் உணவை தேடுகிறான். இதைப்பற்றி அறிந்திராத எல்லா வாலிபர்களின்மீது தனது தகாத தாக்கங்களை கொண்டு வருகிறான். பாவத்தில் விழ வைக்க முயலுகிறான். ***"காலம் இருக்கிறது இந்த தவறை இந்த ஒரு முறை செய்துவிடு பிறகு செய்யவே வேண்டாம்"*** என்று சாத்தான் சொல்லுகிறான். இதை ஒரு முறை செய்வதும் வாழ்க்கையையே பாதித்துவிடும். அபாயம் நிறைந்திருப்பவைகளின் பக்கத்தில் செல்லாமல் இருப்பதே நல்லது. தீமைக்கான இந்த கால கட்டத்தில் சீர்கேட்டின் வழியே அழகாகத் தெரிகிறது. ஊத்தம இதயம் படைத்த இளவயதினர் பரலோகை நோக்கி கூக்குரல் இடட்டும். ***"வாலிபன் தன் வழியை எப்படி சுத்திகரித்துக்கொள்ளுவான்?"*** என்று கேட்கட்டும். வருகின்ற பதிலைக் கேட்டு கீழ்ப்படிந்து நடக்கட்டும். ***"வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே." சங் 119 : 9. Testimonies for the Church, Vol. 2, p. 408, 409.***

இவ்வுலகில் இருக்கும் எல்லோரும் தவணையின் காலத்தில் இருக்கிறோம். நமது எல்லா செய்கைகளுக்குரிய கணக்கை கொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். செயல்களை கட்டுப்படுத்தும் வல்லமை ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இதை செய்ய முடிவெடுக்க வேண்டும். தூய்மையிலும் ஒழுக்கத்திலும் சிந்தனையிலும், செயலிலும் பெலவீனர்களாக இருந்தால் இயேசுவிடம் இருந்து உதவி பெறலாம். உதவியற்றவர்களின் நண்பன் அவர் மனித சுபாவத்தின் எல்லா

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

பெலவீனங்களையும் அவர் அறிந்திருக்கிறார். மிக வல்லமையான சோதனைகளையும் மேற்கொள்ள பெலம் கொடுப்பார். தாழ்மையுடன் இப்பெலத்தை தேடினால். எல்லோரும் இதைப் பெறலாம். ***Appeal to Mother p. 31.***

வாலிபர்களுக்கு இந்த கால்தில் ஒரே பாதுகாப்பு உள்ளது. தேவனை நமது நம்பிக்கையாக கொண்டிருப்பதே அந்த பாதுகாப்பு. தேவ உதவியின்றி மனித இச்சைகளையும் ஆசைகளையும் கட்டுப்படுத்த முடியாது. உணவிற்கும் இது பொருந்தும். தேவைப்படும் உதவி கிறிஸ்துவிடம் உள்ளது. அவ்வுதவியைப் பெற வெகு சிலரே அவரிடம் செல்லுகிறார்கள். உலகில் இருந்தபொழுது இயேசு சொன்னார். ***"அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை." யோவான் 5 : 40.*** கிறிஸ்துவில் நாம் மேற்கொள்ளலாம். அப்போஸ்தலருடன் சேர்ந்து நாமும் சொல்லுவோம் ***"இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றிலும் ஜெயங் கொள்ளுகிற வர்களாயிருக்கிறோமே." ரோமர் 8 : 37 "என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்." 1 கொரி. 9 : 27. Testimonies for the Church, Vol. 2, p. 409.***

***கிறிஸ்துவில் உண்மையான இன்பத்தைக் கண்டடையலாம்***

கிறிஸ்துவின் மந்தைக்குள்ளாக சேர்ந்துவிடுவதே தீய பழக்கங்கலிருந்து நமது பிள்ளைகளுக்கு இருக்கும் ஒரே பாதுகாப்பாக உள்ளது. உத்தமமான அந்த உண்மையான மேய்ப்பன் அவருடைய கண்காணிப்புக்கு கீழாக அவர்களை வைப்பார். எல்லா தீமையிலிருந்தும் அவர்களை காப்பார். எல்லா அபாயத்திலிருந்து காக்கும் கேடகமாக இருப்பார். அவர்கள் அவரது குரலுக்கு செவிசாய்க்க வேண்டும். ***அவர் சொல்லுகிறார் " என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது....... அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது." யோவான்10 : 27.*** கிறிஸ்துவில் நல்ல புல்வெளிகளை காண்பார்கள். நம்பிக்கையையும் பெலத்தையும் பெறுவார்கள். இதயத்தை திருப்திபடுத்த எதையேனும் ஓய்வின்றி தேடிக்கொண்டு இருக்க மாட்டார்கள். விலையுயர்ந்த முத்தைக் கண்டடைந்துவிட்டார்கள். மனமானது



1ST
Proof

சமாதானமான ஓய்வை அனுபவிக்கின்றது. சமாதானத்திற்குரிய தூய்மையான மேலானவைகளில் இன்பம் காணுகிறார்கள். அவர்களது இன்பங்களை துயத்தை கொடுப்பதில்லை. ஆரோக்கியம் கெடாமல் மனமும் நன்றாக இருக்கிறது. ஆரோக்கிய மானவைகளில் இவர்கள் இன்பத்தைக் காணுகிறார்கள்.

தேவனோடு உறவு, தேவன் மீதான அன்பு, பரிசுத்தம், பாவத்தின் அழிவு, இவைகள் எல்லாம் அவர்களை மகிழ்வூட்டுகின்றன. தேவ வார்த்தையை படிப்பது தகாத கற்பனைகளைத் தூண்டுவதில்லை. தகாத உணர்வுகளை எழுப்புவதில்லை. கதைப் புத்தகங்களைப் போன்று இது தவறான பாதிப்பை கொண்டு வருவதில்லை. வேத வாசிப்பு இதயத்தை பரிசுத்தப்படுத்தி உயர்த்துகிறது. மனம் அமைதியடைகின்றது. துன்பத்திலும், சோதனைகளிலும் அவர்கள் ஜெபிக்கலாம். இது எவ்வளவு பெரிய சிலாக்கியமாக இருக்கிறது. மண்ணும் சாம்பலுமான மனிதர்கள் கிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியத்தினால் உன்னத தேவனின் பிரசன்னத்தண்டையிலும் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆத்துமா தேவனை நெருங்குகிறது. பரிசுத்தத்திலும் அறிவிலும் புதுப்பிக்கப்படுகிறது. சாத்தானின் தாக்குதல்களை எதிர்க்க பெலப்படுகிறது. ***Appeal to Mother p. 23, 24.***

***பாகம் - XVII***

***அதிகாரம் - 73***

***ஆவிக்குரிய வல்லமைகளை எழுப்புதல்***

***நித்தியத்துக்கான பொறுப்புக்கள்***

***பிள்ளைகளுக்கு இக்காலம் பேராபத்தானதாக இருக்கிறது***

நாம் அதிஷ்டம் அற்ற ஒரு காலத்தில் வாழ்கின்றோம். ஆழிவை நோக்கி பெருவெள்ளத்தைப்போன்று எல்லோரும் செல்லுகிறார்கள். இதை எதிர்க்க சிறு பிள்ளைகளின் அனுபவமும் பெலனும் போதுமானதாக இல்லை. பிள்ளைகள் உலகின் போக்கில் இழுத்துச்செல்லப்படக் கூடாது. பொதுவாக வாலிபர்கள் சாத்தானின் பினைக்கைதிகளாக இருக்கிறார்கள். சாத்தானும் அவனுடைய தூதர்களும் இவர்களை அழிவிற்கு வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள். சாத்தானின் சேனைகள் தேவ அரசாங்கத்தை

எதிர்த்து போராடுகின்றனர். தேவனுக்கு தங்களைக் கொடுத்து அவருக்கு கீழ்ப்படிய விரும்புவோரை சோதனைகளால் நிரப்புவான். மனதை தளர வைக்க முயற்சி செய்வான். அவர்கள் சோர்வடைந்து போராட்டத்தை விட்டு விடலாம். ***Testimonies for the Church, Vol. 1. P. 397.***

இன்றைக்கு தேவனுடன் ஒரு நெருங்கிய தொடர்பு தேவைப்படுகிறது. எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்நெருக்கும் இருக்க வேண்டும். உலகின் பாரம்பரியங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் தாங்களும் சேர்ந்துவிடுவதே தேவ மக்களின் பெரிய ஆபத்தாக இருந்துள்ளது. குறிப்பாக வாலிபர்கள் இதனால் தொடர்ந்து ஆபத்துக்குள்ளாகிறார்கள். சாத்தானின் தந்திரங்களை குறித்து பெற்றோர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சாத்தான் பிள்ளைகளை அழிக்க வகைதேடிக் கொண்டிருக்கிறான். சூழ்நிலை இப்படி இருக்க ஒரு பிரச்சனையும் இல்லை என்று நினைத்து பெற்றோர் போலியாக திருப்பதியடைய வேண்டாம். பிள்ளைகளின் மீது தங்களுக்குள்ள நித்தியத்திற்கான பொறுப்புக்களை பெற்றோர் புறக்கணிக்க வேண்டாம். உலகின் காரியங்களின்மீது அக்கரைக் காட்டி, கவனம் செலுத்துவதினால் இத்தவறை செய்கிறார்கள். ***Review and Herald, June 13, 1882.***

### *இதை கண்டுகொள்ளாத மனநிலை*

பெற்றோரின் ஆவிக்குரிய வாழ்க்கை பெலனற்றுப் போவது பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. தேவ பக்தியும் விசுவாசமும் குறைகின்றன. இதனால் பெற்றோர் பிள்ளைகளுக்குத் தாங்கள் செய்ய வேண்டிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதில்லை. தேவ வழிகளை கைக்கொள்ள பிள்ளைகளை முழுமையாக பயிற்றுவிப்பதில்லை. ***Signs of the times Sep. 17, 1894.***

பெற்றோர்கள் பிள்ளைகளை நடைமுறை வாழ்விற்கு தகுதியற்றவர்களாக மாற்றுகிறார்கள். எதிர்காலத்தில் சூழப்போகிய கடினங்களை சந்திக்க பிள்ளைகள் திறனற்றுப் போகிறார்கள். வல்லமையாக சோதனைகள் வந்து, சரியான முடிவுகளை எடுக்க வேண்டிய சமயங்களைக் கையாள முடியாதவர்களாக இருப்பார்கள். வல்லமைகயாக இருக்க வேண்டியவைகளில் பெலவீனர்களாக



1ST
Proof

இருப்பார்கள். கடமை தவறுவார்கள் நன்நெறிகளில் இருந்து நிலைதடுமாறுவார்கள். மனித குணம் இவர்களது பெலவீந்தான் அவதிப்படும் ***Pacific Health Journal Jan. 1890.***

### *முக்கியமான வேலை அசட்டை செய்யப்படுகிறது*

பெற்றோர் தாங்கள் செய்ய வேண்டிய முக்கிய வேலையை விட்டுவிட்டு மற்றவைகளில் மூழ்கியிருக்கின்றனர். இன்றைய உலகில் இதன் நிமித்தமாகவே தீமை இந்த அளவிற்கு காணப்படுகிறது. பொறுமையுடனும் அன்புடனும் இவர்கள் பிள்ளைகளுக்கு தேவனுடைய வழிகளை சொல்லிக் கொடுப்பதில்லை. இதுவே பெற்றோரின் முக்கிய வேலையாக உள்ளது. ***Counsels to Parents, Teachers and Students, p. 129.***

தாய்மார்கள் பல காரியங்களைப்பற்றி அறிந்துகொண்டிருக்கலாம். கிறிஸ்துவை சொந்த இரட்சகராக அறிகிற அறிவே அத்தியாவசியமானது. கிறிஸ்து வீட்டில் இருந்து, இவர்களது ஆலோசகராக இருந்தால் இத்தாய்மார்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே பிள்ளைகளை கிறிஸ்தவ நெறிகளில் வழிநடத்துவார்கள். ***Signs of the times July 26, 1889.***

### *சாத்தான் கட்டுப்படுத்த அனுமதிக்கப்படுகிறான்*

ஆண்களும் பெண்களும் தேவனுக்கு கீழ்ப்படிவதில்லை. தங்கள் சொந்த வழிகளில் செல்லுகிறார்கள். தங்களின் தவறான கற்பனைகளை பின்தொடருகிறார்கள். சாத்தான் நரகத்தின் கொடியை வீட்டில் நிலைநிறுத்துகிறான். இது அனுமதிக்கப்படுகிறது. குழந்தைகள் வழியாகவும் பிள்ளைகள் வழியாகவும் வாலிபர்கள் வழியாகவும் தனது வல்லமையை காட்டுகின்றான். பிள்ளைகளின் தவறான குணங்களில் சாத்தானின் குரலும், சித்தமும் வெளியாகின்றன. இவன் வல்லமையுடன் கட்டுப்படுத்தி தனது திட்டங்களை நிறைவேற்றி கொள்ளுகிறான். கோபத்தைக் காட்டுவதினால் தேவன் கணவீனப்படுகிறார். தேவ பக்தியும் பயமும் நீங்குகிறது. சாத்தானின் வார்த்தைகள் கீழ்ப்படியப்படுகின்றன. சாத்தான் இந்த வகையில் ஆளுகை செய்ய பெற்றோர் விட்டுவிட்டார்கள். இது பெற்றோரின் பாவம். எந்த அளவிற்கு இது நடந்திருக்கிறது

என்பதை எவராலும் கணிக்க இயலாது. ***Testimonies for the Church, Vol. 5, p. 325.***

பல பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு தவறான பயிற்சியை கொடுக்கிறார்கள். பிள்ளைகளை அவர்கள் வழியிலேயே விட்டுவிட்டு கெடுத்துவிடுகிறார்கள். பிள்ளைகளின் கோணலான வழிகளுக்கும் குணங்களுக்கும் பெற்றோர்களே பொறுப்பாளியாகிறார்கள். தேவ பிரமாணத்தை மீறும் சுபாவத்தைப் பிள்ளைகள் கொண்டிருக்கிறார்கள். இதை கொண்டு சாத்தான் அவர்களை முழுமையாக கட்டுப்படுத்துகிறான். ஆபிரகாமைப்போன்று பெற்றோர் தேவனின் வழியில் நடக்க வீட்டாருக்கு கட்டளையிடுவதில்லை. இதன் விளைவு என்ன? சாத்தானின் கலகத்தின் கொடிக்கு கீழாக பிள்ளைகள் நிற்கிறார்கள். தங்களது தவறான சித்தத்தை செய்யவே பிள்ளைகள் முடிவெடுத்திருக்கிறார்கள். அதிகாரத்திற்கு பணிவதில்லை. சுயத்தைத் திருப்திப்படுத்திக் கொள்ளாமல் அதை மறுக்கவே பிள்ளைகளுக்குச் சொல்லித்தரப்பட வேண்டும். இதுவே பிள்ளைகளுக்கான ஒரே நம்பிக்கையாக இருக்கும். ***Letter 117, 1898.***

***ஒழுக்கமற்ற ஒழுங்கற்ற பிள்ளைகளுக்குப் பெரிய போராட்டம் காத்திருக்கிறது***

ஒழுக்கமின்றி தவறாக வளர்க்கப்பட்ட பிள்ளைகள் கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று சொல்லிக்கொள்ளுவதற்கு முன்பாக எல்லாவற்றையும் கற்றாக வேண்டும். இவர்கள் ஒன்றையுமே அறியாத நிலையில் இருக்கிறார்கள். பிள்ளைகள் வளர்க்கப்பட்ட விதம் அவர்களது விசுவாச வாழ்க்கையையும் பாதிக்கிறது. சுய சித்தத்தையே செய்யவும், சுயத்தை மறுக்காமல் பொருமையின்றி, தற்பிரியர்களாகவே இருப்பார்கள். நல்ல ஆலோசனைகளுக்கு செவிகொடுக்க மனமில்லாமல் பொறுப்புக்களை புறக்கணிக்கிறார்கள். இப்பண்புகளை சபையில் காட்டுவார்கள். இவர்களாலும் மேற்கொள்ள முடியும். ஆயினும் போராட்டம் பெரியதாக இருக்கும். கிறிஸ்தவ தரத்தை எட்டுவதற்கு மிகவும் கண்டிப்பான ஒழுங்கிற்குள்ளாக அவர்கள் செல்ல வேண்டியதாக இருக்கும். ஒரு வேளை இறுதியில் அவர்கள் மேற்கொண்டாலும் அழிவின் விழும்பில் இருந்ததை மறுரூபமாவதற்கு முன்பாக புரிந்துகொள்ளுவார்கள். வாலிபப்பிராயத்தில் அவர்கள் சரியாக வழிநடத்தப்படுவதில்லை. பிள்ளை பருவத்தில் பணிந்து கீழ்ப்படிய கற்றுக்கொள்ளவில்லை. இதன் நிமித்தமாகவே அழிவின் மிக அருகாமையில் இருந்தனர். ***Testimonies for the Church, Vol..1 p. 219, 220.***

***சீர்கெடுக்கும் செல்வாக்குகளிலிருந்து பாதுகாத்தல்***

எதையுமே தெரியாத பிள்ளைகளை உலகினுள் கொண்டு வந்த பொறுப்பை பெற்றோர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். உங்கள் பிள்ளைகளின் வாழ்விற்கும் ஆத்துமங்களுக்கும் நீங்களே பொறுப்பாளிகள். உலகின் காரியங்களினால் ஈர்க்கப்படுவார்கள். அவர்களது கற்பனைகளும் தூண்டப்படும். தவறான உலக செல்வாக்குகளிலிருந்து அவர்களை பாதுகாக்கத் தக்கதான ஒரு கல்வியை அவர்களுக்கு நீங்கள் கொடுக்கலாம். பிள்ளைகள் வாழ்வின் பொறுப்புக்களை சுமக்க வேண்டும். தேவனுக்கு முன்பாக தங்கள் நிலையை உணர்ந்துகொள்ள வேண்டும். சத்தியத்தைப் பற்றிக்கொண்டு, கடமைகளை நிறைவேற்றவும், தங்கள் ஒவ்வொரு செயலும் நித்தியத்துக்கான பின் விளைவுகளை கொடுக்கப்பேரிகறது என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இவைகளை பிள்ளைகளுக்கு நாம் சொல்லிக் கொடுக்க வேண்டியுள்ளது. ***Signs of the times. Dec. 9, 1875.***

இந்த காலத்து வாலிபர்கள் சாத்தானின் வழிகளை அறியாதவர்களாக இருக்கிறார்கள். அவனுடைய செயற்பாடுகளை இவர்கள் தெரிந்து கொள்ளுவதில்லை. ஆபத்தான இக்காலங்களில் பெற்றோர் விழித்திருக்க வேண்டும். நீடிய பொறுமையுடன் தளராது உழைக்க வேண்டும். சாத்தான் நுழையும்பொழுதே அவனை வெளியே தள்ளிவிட வேண்டும். உட்காரும்பொழுதும் நடக்கும்பொழுதும் படுக்கும்பொழுதும் எழும்பும்பொழுதும் பிள்ளைகளை அறிவுறுத்திக் கொண்டிருக்க வேண்டும். ***Signs of the times. Feb. 26, 1880.***

இடைவிடாத கண்காணிப்பு இருந்துகொண்டே இருக்க வேண்டும். நீதியின் பாதையில் பிள்ளைகள் வழிநடத்தப்பட வேண்டும். சிறு பிராயத்திலிருந்தே சாத்தான் அவர்களிடம் கிரியை செய்ய துவங்குகிறான். தேவனால் தடைசெய்யப் பட்டவைகளின்மீது ஒரு நாட்டத்தை ஏற்படுத்துகிறான் பெற்றோர் விழிப்புடன் இருந்து, அக்கரையுடன் செயல்படுவதில்

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

பிள்ளைகளின் பாதுகாப்பு அடங்கியுள்ளது. ***Review and Herald, Mar. 13, 1894.***

தேவனை விசுவாசித்து அவருக்கு கீழ்ப்படிவது என்றால் என்ன என்பதை பிள்ளைகளுக்குப் புரிய வைக்க வேண்டும். எதுவும் இதை தடுத்துவிடக் கூடாது. இவ்வேலையை செய்ய தேவைப்படும் நேரத்தை தனியே ஒதுக்கிக்கொண்டு முழு வீச்சுடன் செயல்பட வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students,. P. 129.***

***பெற்றோர்களே மரணத்தைப்போன்ற நித்திரையிலிருந்து எழுப்புங்கள்***

பெற்றோர்களின் நடத்தையினால் அநேக பிள்ளைகள் பெற்றோர்களுக்கு தங்கள்மீது அக்கரையில்லை என்று நினைத்துவிடுகிறார்கள். இது இப்படி இருக்கக் கூடாது. பிள்ளைகளை பெற்றெடுத்திருப்போர், தங்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் எதையும் வரவிடக் கூடாது. இதற்கேற்றபடி வீட்டின் காரியங்களையும் வெளி அலுவல்களையும் நிர்வகித்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவிடம் பிள்ளைகள் அழைத்துச் செல்லப்பட வேண்டும். இதுவே பெற்றோரது வேலையாக உள்ளது. பெற்றோர்கள் இதை செய்வதற்கு தடையாக எதுவும் இருக்கக் கூடாது. இயேசுவின் அன்பைப்பற்றியதான பாடத்தைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். அவர்கள் பேச்சிலும், நடத்தையிலும் செயலிலும் தூய்மையானவர்களாக இருப்பார்கள்.

பெற்றோர்கள் தெய்வீக வல்லமைகளுடன் ஒத்துழைத்தால், தேவன் பிள்ளைகளின் இருதயங்களின்மீது கிரியை செய்வார். நீங்கள் செய்ய வேண்டியதை தேவன் செய்ய மாட்டார். பெற்றோர்களே மரணத்தைப் போன்றதான உங்கள் தூக்கத்திலிருந்த எழும்புங்கள். ***Review and Herald, Oct. 25, 1892.***

***இல்லத்தில் கிறிஸ்தவ மதம் அப்பியாசிக்கப்பட வேண்டும்***

***இதுவே நமது மேலான நம்பிக்கையாக இருக்கும்***

பெற்றோர்கள் தூங்குகிறார்கள். அவர்களது கண்களுக்கு முன்பாகவே பிள்ளைகள் அழிவை நோக்கிச் செல்லுகிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் உண்மையான கிறிஸ்தவம் இருக்க வேண்டும். இந்த செய்தி அவருடைய மக்களுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதை தேவன் சொல்லுகிறார். உங்களது சபைக் கூட்டங்களில் இதை பேசுங்கள். புறக்கணிக்கப்பட்ட இக்கடமையின் உன்னதத்தை நினைவுபடுத்துங்கள். ஒவ்வொருவருடைய மனசாட்சியும் இதை புரிந்துகொள்ளும்படி செய்யுங்கள். பரிசேய ஆவியை இது உடைக்கும். சத்தியத்திற்கு எதிரான தடையும் நீங்கும். வேரு எந்த வகையிலும் இது செய்யப்பட முடியாது. ஒவ்வொரு இல்லத்திலும் உண்மையான கிறிஸ்தவம் இருப்பதே நமது நம்பிக்கையைக் கொடுக்கும். முழு குடும்பமும் தேவனுக்கென்று மனம்மாறும் சாத்தியமும் அதிகமாகிறது. ***Manuscript 21, 1894.***

***சாத்தானின் வல்லமை உடைக்கப்படலாம்***

பெற்றோர் தாங்கள் உணருவதைவிட ஒரு முக்கிய பொறுப்பை பெற்றிருக்கிறார்கள். பிள்ளைகள் பாவத்தையே சுதந்தரித்துக் கொள்ளுகிறார்கள். பாவம் அவர்களை தேவனிடமிருந்து பிரிக்கிறது. இந்த பிரிவை மீண்டும் இணைக்கவே இயேசு மறித்துள்ளார். முதல் ஆதாமிலிருந்து நாம் குற்ற உணர்வையும் மரணத்தையுமே பெறுகிறோம். ஆயினும் கிறிஸ்து இடையில் நுழைகிறார். ஆதாம் விழுந்த இடதில் அவர் விழாதபடி நிற்கிறார். ஒவ்வொரு மனிதனுக்காகவும் சோதனையை சகித்து, ஆதாம் தோற்றுக் கொடுத்ததை இவர் நமக்கு ஜெயித்துக் கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவின் பரிபூரண உதாரணமும் தேவ கிருபையும் ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கப்படுகின்றது. இவைகளைக் கொண்டு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தேவ புத்திரர்களாக மாற பயிற்றுவிக்க வேண்டும். இயேசுவுக்கு தங்கள் இதயத்தைக் கொடுக்க பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். வேதத்தின் ஒவ்வொரு வரியினாலும், ஒவ்வொரு வாக்கியத்தைக் கொண்டும் இதை கற்பிக்க வேண்டும். இதை செய்வதினால் நமது சித்தம் கிறிஸ்துவின் சித்தத்திற்கு கொடுக்கப்படுகிறது. சாத்தானின் வல்லமை உடைகிறது. ***Letter 68, 1899.***

தாய், தந்தையரே முழு நம்பிக்கையுடைய விசுவாசத்துடன் உங்கள் பிள்ளைகளிடம் மன்றாடுங்கள். உங்கள் வாயிலிருந்து பொருமையின்றி பேசப்படும் ஒரு வார்த்தையைக் கூட உங்கள் பிள்ளைகள் கேட்கக் கூடாது. அவசியப்பட்டால், பிள்ளைகளை தவறாக நடக்க அனுமதித்ததற்காக அவர்களிடமே உங்கள் தவறை

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

ஒப்புக்கொண்டு அறிக்கை செய்யுங்கள். தேவனுக்கு பிரியமில்லாத மாயைகள் நிறைந்த பாதைகளில் அவர்களை செல்ல விட்டிருக்கிறீர்கள். நமது தேவன் எல்லோரும் பாவ மன்னிப்பைப் பெற தனது ஒரே குமாரனை துலைந்து போன இந்த உலகிற்காகக் கொடுத்திருக்கிறார்.

பிள்ளைகளை பாதிக்கப்படும்படியாக தவறாக வழிநடத்தியுள்ள பெற்றோர்கள் இருக்கும் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொண்டு, இழந்த காலத்தை மீட்டுக்கொள்ள தேவன் விரும்புகிறார். “இன்றைக்கு” என்று சொல்லப்படும் இக்காலத்தில் தாமே செயல்படுங்கள். ***Letter 66, 1910.***

### *பெற்றோர்க்கே மிக உன்னதமான ஊழிய ஸ்தலம் கொடுக்கப்பட்டிருக்கிறது*

தெய்வீக மாதிரியின்படியாக உங்கள் பிள்ளைகளின் குணங்களை உருவாக்குவதே வாழ்வின் வேலையாக கொள்ளுங்கள். அவர்கள் உண்மையான அலங்காரமான சாந்தமான அமைதலான ஆவியைப் பெற்றுக்கொள்ளுவார்களேயாகில், அது நீங்கள் தந்த பயிற்சியினால் நடந்திருக்கும். வேத வார்த்தைகளை நேசிக்க நீங்கள் அவர்களை வழிநடத்தியதே இந்த நல்ல பலனைக் கொண்டு வந்திருக்கிறது. உலக அங்கீகரிப்புக்கு மேலாக இயேசுவின் புன்முருவலைக் காணவே பிரயாசப்பட்டிருக்கிறீர்கள். ***Review and Herald, Oct. 9, 1883.***

தேவனது வேலையாட்களாக நாம் இருக்கிறோம். நம்முடன் இருப்பவர்களிடமிருந்து இந்த வேலையைத் துவங்க வேண்டும். ஊழியம் நமது வீட்டில் துவங்க வேண்டும். இதைவிட முக்கியத்துவம் வாய்ந்த ஊழிய ஸ்தலம் எதுவுமில்லை. ***Manuscript 19, 1900.***

ஊழியத்தின் ஆவி வீட்டிலிருக்க வேண்டும். தேவ வார்த்தையை நமது குடும்ப அங்கத்தினர்களுக்கு முன்பாகக் கொண்டு செல்ல வேண்டும். தேவ இராஜியத்தில் ஒரு இல்லத்தை தேடிக்கொள்ள அவர்களை வழிநடத்த வேண்டும். ***Manuscript 101, 1908.***

பிள்ளைகளை சரியான முறையில் வழிநடத்தி அறிவுறுத்துவதே மிக உயரிய ஊழியப்பணியாக உள்ளது. எந்த ஒரு ஆணுக்கும்



1ST Proof

பெண்ணுக்கும் இதைவிட மேலான ஒரு ஊழியம் இருக்க முடியாது. ***Testimonies for the Church, Vol. 6, p. 205.***

### *பெற்றோர்கள் உயிருள்ள களிமண்ணை வடிவமைக்கிறார்கள் ஓவியர்களைப் போல் செயல்படுகிறார்கள்*

ஒரு பொருளை அது இருக்கின்றபடியே வரைய ஓவியர்கள் எவ்வளவு பிரயாசப்படுகிறார்கள். தளராத முயற்சியும் ஆழ்ந்த கவனமும் இதற்கு தேவைப்படுகிறது. ஒரு சிலையை வடிவமைப்பவர் தனது கவனம் சற்றும் சிதராதபடி செதுக்குகிறார். இதைப்போலவே பெற்றோர் பிள்ளைகளிடையே வேலை செய்ய வேண்டும். கிறிஸ்துவைப்போலவே பிள்ளைகளும் வடிவமைக்கப்பட வேண்டும். பிள்ளைகள் சீராக உருவகிக்கப்பட்டு ஒரு உன்னத நிலையை அடைய வேண்டும். ஓவியர் முதலில் பொருமையுடன் தான் வரையப்போவதைப் படித்துக் கொள்ளுகிறார். திட்டமிட்டு அதற்கேற்றபடி வேலை செய்கிறார். பிள்ளைகளிடம் வேலை செய்வதும் இதற்கு ஒத்ததாக இருக்கிறது. பயனுள்ள ஒரு வாழ்க்கையை வாழவும், நித்தியத்திற்கும் பிள்ளைகள் தகுதி பெற வேண்டும். இதற்கான பயிற்சியை கொடுப்பதற்காக எடுத்துக் கொள்ளப்படும் நேரம் வீணடிக்கப்படுகிறதில்லை. நல்ல முறையில் பயன்படுத்தப்படுகிறது. பெற்றோருடைய வேலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஓவியரின் வேலை சிறியதாகவும், குறைந்த முக்கியத்துவத்தையே உடையதாக தெரியும். ஓவியர் உயிரற்ற பொருட்களைக் கையாளுகிறார். இதிலிருந்து ஒரு அழகை உருவாக்குகிறார். பெற்றோரது வேலை மனிதர்களிடம் செய்யப்படுகிறது. ஒரு உயிர் நன்மைக்கோ தீமைக்கோ உருவகிக்கப்படுகிறது. மனிதர்களுக்கு ஆசீர்வதமாகவே சாபமாகவோ இருக்கப்போகிறது. இருளுக்கோ அல்லது பாவமில்லா ஒரு நித்திய வாழ்க்கைக்கு ஏதுவானதாக இவ்வேலையின் தாக்கம் இருக்கும். ***Pacific Health Journal May 1890.***

### *பரிபூரணமே இலக்காக கொள்ளப்பட வேண்டும்*

கிறிஸ்துவும் சிறு பிள்ளையாக இருந்தார். அவருக்காக வேண்டி சிறு பிள்ளைகளை கணப்படுத்துங்கள். புனிதமான ஒரு பொறுப்பாக

பிள்ளைகளைப் பாருங்கள். விக்கிரகத்தைப்போல அவர்களை வைக்காதீர்கள். தூய்மையான உன்னதமான ஒரு வாழ்க்கையை வாழ கற்றுக்கொடுங்கள். அவர்கள் தேவனுடைய சொத்தாக இருக்கிறார்கள். இயேசு அவர்களை நேசிக்கிறார். பரிபூரண குணங்கள் உருவாக்கிக் கொள்ள கற்றுக்கொடுப்பதில் அவருடன் ஒத்துழையுங்கள். மீட்கப்பட்ட குடும்பத்தினரிடமிருந்து தேவன் பரிபூரணத்தை எதிர்பார்க்கிறார். கிறிஸ்து அவரது மனுஷீகத்தில் வெளிப்படுத்திய பாவமில்லா தன்மையை நம்மிடம் கேட்கிறார். பிள்ளைகளை மிக சிறப்பான வகையில் பயிற்றுவிக்க பெற்றோர் அறிந்துகொண்டிருக்க வேண்டும். இதை செய்து தேவனுடன் ஒத்துழைக்க வேண்டும். ***Manuscript 19, 1900.***

***மனமாற்றமடைந்த பெற்றோர்கள் தேவை***

மனமாற்றம் அடைந்த பெற்றோரின் மிகப்பெரிய தேவை இருக்கிறது. இரவும் பகலும் இது என்னுடைய பாரமாக இருக்கிறது. இரட்சிக்கப்படத்தக்கதான ஒரு செல்வாக்கை குடும்ப அங்கத்தினர்கள் மீது நாம் கொண்டு வர வேண்டும். இது நடக்க நம்மில் எத்தனை பேர் தேவனுக்கு முன்பாக தங்கள் இதயங்களை தாழ்த்த வேண்டியுள்ளது. பரலோகுடன் முதலில் ஒரு சரியான உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும். இதை அறிந்து கொண்டால் மீட்கப்பட்டவர்களின் ஆசீர்வாதங்களை பிள்ளைகள் சுதந்தரித்துக்கொள்ள பயிற்சி கொடுக்கலாம். ஒவ்வொரு நாளும் பரலோகின் வெளிச்சத்தை ஆத்துமத்திற்குள்ளாக பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். ஆவியானவரின் செய்திகள் மனதிலும் சிந்தையிலும் பதிந்து கொண்டிருக்க வேண்டும். சத்திய வார்த்தைகளையும் பெற்றுக்கொண்டு, அவைகளே வாழ்க்கையை கட்டுப்படுத்த விட வேண்டும்.

பெற்றோர்கள் பெரிய பொறுப்புக்களை பெற்றுள்ளார்கள். தேவன் தங்களுக்கு நியமித்திருக்கின்ற இப்பணியைச் செய்ய உண்மையுடன் உழைத்துக் கொண்டிருக்க வேண்டும். தங்களது ஜீவனின் எல்லா சக்திகளையும் இதற்கென தேவைப்படுவதைப் பார்ப்பார்கள். பொதுவாக காணப்படும் மூடத்தனங்களும் மாய்மாளங்களும் நீங்கும். எந்த தியாகத்தையும் பெரிதாக நினைக்க மாட்டார்கள். எந்த முயற்சியையும்



1ST Proof

ஏரெடுப்பார்கள். தேவனை மகிழ்ச்சியுடன் சந்திக்க இவைகள் வழிநடத்தும். தேவனது பின்னடியார்களே விலையேறப்பெற்ற பங்காக இது இருக்கிறது. எவரும் புறக்கணிக்க முடியாத ஒரு வேலையாகிறது. ***Manuscript 27, 1911.***

***இயேசுவையே தொடர்ந்து கண்ணோக்கிக் கொண்டிருங்கள்***

பெற்றோர்களே உங்களது சிறு மந்தையைக் காக்க உங்களது ஆவிக்குரிய சக்திகள் எல்லாவற்றையும் பயன்படுத்துங்கள். நரகத்தின் வல்லமைகள் இதை அழிந்துவிட ஒன்றாக கூடும். ஆயினும் தேவன் உங்களை எதிரியின் தாக்குதல்களிலிருந்து உயர்த்திக் காப்பார். இப்பொழுது ஜெபிப்பதைவிட அதிகமாக ஜெபியுங்கள். தேவ பிதாவிடம் வர அன்புடனும், தன்மையுடனும் கற்றுக்கொடுங்கள். நல்ல முன் உதாரணமாக இருந்து சுய கட்டுப்பாட்டையும், மற்றவர்களுக்கு உதவவும் சொல்லிக்கொடுங்கள். தன்னை திருப்திப்படுத்திக் கொள்ளக் கிறிஸ்து வாழவில்லை என்று சொல்லுங்கள்.

உங்கள் வழியாக ஒளி வீசும் தெய்வீக வெளிச்சத்தை உங்களண்டை சேர்த்துக்கொள்ளுங்கள். கிறிஸ்து வெளிச்சத்தில் இருக்கிறார். நீங்களும் வெளிச்சத்தில் நடவுங்கள். தேவனுக்கு வேலை செய்ய உங்கள் பிள்ளைகளுக்கு உதவ துவங்கியவுடன் உக்கிரமான சோதனைகள் வரும். இயேசுவைப் பற்றிக் கொள்ளுங்கள். பிடியை விட்டுவிடாதீர்கள். அவர் சொல்லுகிறார் ***“ அவன் என் பெலனைப் பற்றிக்கொண்டு என்னோடே ஒப்புரவாகட்டும்; அவன் என்னோடே ஒப்புரவாவான். “ ஏசாயா 27 : 5.*** துன்பங்கள் எழும். தடைகளை சந்திப்பீர்கள். தொடர்ந்து இயேசுவையே கண்நோக்கிக் கொண்டிருங்கள். பிரச்சனை வரும்பொழுது தேவனே நான் என்ன செய்ய வேண்டும் என்று கேளுங்கள். சோர்வடையாமல், எரிச்சலடையாமல் இருந்தால் தேவன் வழியைக் காட்டுவார். பேச்சின் தாலந்தை கிறிஸ்துவைப்போலவே பயன்படுத்த உதவுவார். வீட்டில் அன்பும் சமாதானமும் நிலவும். நல்ல வழிகளில் தொடர்ந்து செயல்படுவீர்களானால் இல்லத்திலும் ஊழியர்களாக இருக்கலாம். பிள்ளைகளுக்கு கிருபையின் வேலையாட்களாக திகழ்வீர்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 196, 197.***

***இவ்வேலைக்கான வெகுமதிகள் உண்டு***

பிள்ளைகளை தேவ வழியில் வளர்க்க ஒரு விலையைக் கொடுக்க வேண்டியதாகவே உள்ளது. தாயின் கண்ணீர்களும் தந்தையின் ஜெபங்களுமே இவ்விலை. விடாமுயற்சியுடன் பொறுமையாக அறிவுறுத்த வேண்டும். இங்கும் அங்குமாக சிறிது சிறியதாகவும் வேலையை செய்யுங்கள். இவ்வேலைக்கான பலன் நிச்சயம் உண்டு. வெள்ளம்போல இவ்வுலகை சூழ்ந்திருக்கும் தீமையிலிருந்து பிள்ளைகளைப் பத்திரப்படுத்திக் கொள்ளலாம். ***Review and Herald, July 9, 1901.***

*அதிகாரம் - 74*

*ஒவ்வொரு இல்லமும் ஒரு ஆலயம்*

*பெற்றோர்கள் தேவ பிரதிநிதிகளாக இருக்க வேண்டும்.*

இல்லத்தின் வாழிவில் ஒவ்வொரு குடும்பமும் ஒரு ஆலயமாக இருக்க வேண்டும். பரலோக ஆலயதில் ஒரு அழகான அடையாளமாக பெற்றோர்கள் பிள்ளைகளின்மீது அவர்களுக்கு இருக்கும் பொறுப்பை உணர்ந்தால் எரிச்சலடைந்து கோபப்பட மாட்டார்கள். இப்படிப்பட்ட கல்வியை எந்த பிள்ளையும் பெறக் கூடாது. அநேக பிள்ளைகள் குறை கூறுபவர்களாகவும், மற்றவர்களை திட்டுகிறவர்களாகவும், எரிச்சடைகிறவர்களாகவும் உணர்ச்சிவசப்படுகிறவர்களாகவும் இருக்க கற்றுள்ளனர். இதற்கு காரணம் இல்லத்தில் இப்படி இருக்க அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். தேவனது இடத்தில் பெற்றோர்கள் பிள்ளைக்கு முன்பாக நிற்கிறார்கள். இதை மனதில் வைத்தவர்களாக நன்னெறிகளை ஊக்கப்படுத்தி ஒவ்வொரு தவறான சிந்தனையையும் ஒடுக்க வேண்டும். ***Letter 104, 1897.***

நல்லொழுக்கத்தை பெற்றோரும் ஆசிரியர்களும் உதாசீணப்படுத்தினால் பிள்ளைகள் கெட்டுப்போவார்கள். ***Review and Herald, Mar. 30, 1897.***

*வேத வார்த்தையின் மதமே ஒரே பாதுகாப்பு*

பொதுவாகவே வாலிபர்கள் ஒழுக்கத்துடன் இருக்கும் பெலத்தைப் பெற்றிருப்பதில்லை. சிறு பிராயத்தில் தவறான கல்வியைப் பெற்றுக்கொண்டதன் விளைவாக இது உள்ளது. தேவ குணத்தை அறிந்துகொள்ளும் அறிவும், தேவனுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகளும் சிறிய காரியங்களாக நினைக்கப்படக் கூடாது. வேத வார்த்தைகளை பின்பற்றும்படி கிறிஸ்தவ மதமே பிள்ளைகளுக்கான ஒரே பாதுகாப்பு. ***Testimonies for the Church, Vol. 5, p. 23, 24.***

1ST Proof

பெற்றோரின் வாழ்வு தெய்வீகத்தின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டும். இது பிள்ளைகளின் மனங்களில் தேவனின் மீது பக்தியையும், நன்றியுணர்வையும் கொண்டு வரும். வேத வாக்குத் தத்தங்களும், வேத கட்டளைகளும் இதை செய்யும். பெற்றோரின் நீடிய சாந்தமும், நீதியும் தயவும், பிள்ளைகளுக்கு தேவ நீதியையும் தேவனின் பொருமையையும் வெளிப்படுத்துகிறது. பிள்ளை தங்களை நம்பவும் நேசிக்கவும், கீழ்ப்படியவும் சொல்லிக்கொடுக்க வேண்டும். இதை செய்வதன் மூலம் பரலோக பிதாவை நம்பி, அவர் மீது அன்பு செலுத்தி அவருக்கு கீழ்ப்படிய கற்றுக் கொடுக்கிறார்கள். இந்த பரிசை பிள்ளைகளுக்குத் தந்துள்ள பெற்றோர்கள் அவர்களுக்குப் பெரிய பொக்கிஷத்தைக் கொடுத்துள்ளார்கள். இது அசௌரியங்களைப் பார்க்கிலும் மதிப்பானது. நித்தியத்தைப் போன்றே என்றைக்கும் நிலைத்திருக்கும் பொக்கிஷமாக இது உள்ளது. ***Prophets and Kings p. 245.***

*இல்லத்தில் கிறிஸ்தவ மதம் இருத்தல் வேண்டும்*

நமது வாழ்வின் அனுதின செயல்கள் நமது குணத்தைக் காட்டுகின்றன. வீட்டிலும் கிறிஸ்தவ மதம் காணப்பட வேண்டும். இது இல்லாமல் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுவதில் பயனில்லை. இல்லத்தினரிடமிருந்து அன்பற்ற ஒரு வார்த்தையும் பேசப்படக் கூடாது. வீட்டின் சூழலை விரும்பத்தக்க வகையில் வையுங்கள். இளகிய மனதுடன் மற்றவர்களின் நலனைக் கவனியுங்கள். தவணையின் காலத்தில் பரலோகின் செல்வாக்கை ஒவ்வொரு மூச்சிலும் காட்டும் ஒரு குணத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். இந்நபர்கள் மட்டுமே பரலோகிற்குள் நுழைவார்கள். பரலோகில் பரிசுத்தவான்களாக இருக்கப் போகிறவர்கள் இவ்வுலகில் முதலில் பரிசுத்தவான்களாக இருக்க வேண்டும். ***Signs of the times Nov. 14, 1892.***



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

நமது இல்லத்தில் நமது குணத்தின் அழகே பரலோகிலும் தென்படும். நமது குடும்ப வாழ்வில் நாம் காட்டும் குணமே நாம் செல்வோமா என்பதைக் கணிக்கும் அளவு கோலாக உள்ளது. கிறிஸ்துவின் கிருபையை பெற்றுள்ளோர் வீட்டை ஒரு மகிழ்ச்சி நிறைந்த இடமாக மாற்றுகின்றனர். ஓய்வும் சமாதானமும் அங்கு நிறைந்திருக்கும். கிறிஸ்துவின் ஆவி நம்மிடம் இல்லாதிருந்தால், நாம் கிறிஸ்துவினுடையவர்கள் அல்ல. இந்நிலையில் நாம் இருந்தால் பரலோகில் மீட்கப்பட்டவர்களை நம்மால் பார்க்க முடியாது. மீட்கப்படுபவர்கள் பரலோகில் தேவனோடு ஒன்றாக இருப்பார்கள். பரலோக இன்பங்களில் களிகூறுவார்கள். நீங்கள் உங்களை முழுமையாக தேவனிடம் கொடுத்துவிட அவர் விரும்புகிறார். வீட்டிலும் தேவ குணத்தை நீங்கள் பிரதிபலிப்பதே அவரது சித்தமாக இருக்கிறது. ***Signs of the times Nov. 14, 1892.***

***இல்லத்தின் ஆலயத்தில் பெற்றோர்கள் ஆசிரியர்கள்***

நான் தாய் தந்தையரிடம் பேசுகிறேன். ஆலயமாக விளங்கும் உங்கள் வீடுகளில் நீங்கள் ஆசிரியர்களாக இருக்கலாம். ஊழியத்தின் நிறுவனங்களாக நீங்கள் திகழலாம். இலலத்தில் ஊழியர்களாக இருக்க வேண்டியதின் அவசியத்தைப் பெற்றோர்கள் உணரட்டும். அன்பில்லாத வார்த்தைகளும், பதட்டப்பட்டு பேசுவதும் இருக்கக் கூடாது. தேவதூதர்கள் வந்து ஆசிர்வாதங்களை கொடுக்கக் கூடிய இடமாக இருக்க வேண்டும். எடுக்கப்படும் பிரயாசங்களில் இந்த வழியில் வெற்றி கிட்டும். ***Manuscript 33, 1908.***

குடும்பம் ஒரு பயிற்சிப் பள்ளியாக கருதப்பட வேண்டும். கிறிஸ்தவ மதத்தின் கடமைகளை செய்வதற்கான ஆயத்தமாக இது இருக்கிறது. சபையில் உங்கள் பிள்ளைகள் அவர்களது பங்கை நிறைவேற்ற வேண்டும். மனதின் ஒவ்வெசாரு சக்தியும் சரீரத்தின் பெலனும் இயேசுவின் சேவைக்காக ஆயத்தத்துடன் வைக்கப்பட வேண்டும். சத்தியம் உண்மையானதாக இருக்கிறபடியால் அது நேசிக்கப்பட வேண்டும். சத்தியம் பரிசுத்தப்படுத்த வேண்டும். இதன் மூலமாக அந்த உயரிய பள்ளிக்குச் செல்ல தகுதியடைார்கள். இதற்கென நடத்தப்படும் ஆய்வில் தேர்ச்சிபெறுவார்கள். அந்த ராஜரீக குடும்பத்தின் அங்கத்தினர்களாகப் பிள்ளையாக இருப்பார்கள். ***Manuscript 12, 1898.***



1ST Proof

***நிலைமாறாத வாழ்வினை வாழ வேண்டும்***

வாலிப மனங்களில் எல்லா காரியங்களும் பதிகின்றன. முகபாவனை பார்க்கப்படுகிறது. குரலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒவ்வொரு நடத்தையையும் அவர்கள் கவனிக்கிறார்கள். அதன்படியே அவர்களும் செயல்படுகிறார்கள். எரிச்சடைந்து முகங்கோணும் பெற்றோர் பிள்ளைகளுக்கு இப்பாடங்களைக் கொடுக்கிறார்கள். இப்பாடங்களையே பிள்ளைகள் உலகிற்கும் கொடுப்பார்கள். விட்டுவிட வேண்டிய பெற்றோரின் இத்தவறுகள் பிள்ளைகளிடம் காணப்படுகின்றன. விசுவாசத்திற்கு ஏற்றதான நிலைமாறாத ஒரு நடத்தையை பிள்ளைகள் பெற்றோரின் வாழ்வுகளில் பார்க்க வேண்டும். சுய கட்டுப்பாட்டுடன் வாழப்படும் இவ்வாழ்க்கையின் மாறாத தன்மை பிள்ளைகளின் குணங்களை கட்டும். ***Testimonies for the Church, Vol. 4, p. 621.***

***கிறிஸ்துவின் வேலையாட்களாக செயல்பட பிள்ளைகளை பயிற்றுவியுங்கள்***

உறவின் பந்தத்தினால் கட்டப்பட்டிருப்போர், அன்பிற்கும் பாசத்திற்கும் பாத்திரவான்களாக இருக்கிறார்கள். குடும்ப அங்கத்தினர் அன்பையும் தயவையும் வெளிப்படுத்த வேண்டும். பேசப்படும் வார்த்தைகளும், செய்யப்படும் செயல்களும் கிறிஸ்தவ நெறிகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். இப்படியும் வீடும் பள்ளியாக மாற்றப்படலாம். கிறிஸ்துவிற்கு என்று இங்கு வேலையாட்கள் பயிற்சி பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

இல்லம் ஒரு புனிதமான இடமாக கருதப்பட வேண்டும். நம் வாழ்வின் ஒவ்வொரு நாளும் தேவனிடம் நம்மை சமர்பிக்க வேண்டும். இதை செய்தால் விசேஷ உதவிகளை பெற்று, அனுதினமும் வெற்றிகளை ஆதாயப்படுத்திக் கொள்ளுவோம். அனுதினமும் சிலுவை சுமக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வார்த்தையும் எச்சரிக்கையுடன் பேசப்பட வேண்டும்.

கிறிஸ்துவின் குணத்தை வெளிக்காட்டும் பொறுப்பை பெற்றிருக்கிறோம். ***Manuscript 140, 1897.***

### *ஒரு பெரிய தவறு*

***“நான் உங்களை அறியேன்”*** என்று நம்மைப் பார்த்து கிறிஸ்து கூறும்படி நமது வாழ்வு இருந்தால், பிள்ளைகளுக்கு கிறிஸ்தவ வாழ்க்கையை நம்மால் கற்றுக்கொடுக்க முடியுமா? இயேசுவின் தற்தியாகம், நமது வாழ்வில் இல்லாமல் பிள்ளைகளை சரியாக வழிநடத்தி, கணத்திற்குரிய ஒரு வாழ்க்கையை அவர்கள் வாழ நற்கல்வியைக் கொடுக்க முடியுமா? ஆயிரக்கணக்கானோர் இதை செய்கிறார்கள். சுவிசேஷத்தின் நன்மைகளை பிள்ளைகளுக்குக் கொண்டு செல்லுவதாக நினைக்கின்றனர். தங்களது வாழ்வில் அதை மறுதலிக்கின்றனர். இது இப்படியாக இருக்க முடியாது. கிறிஸ்துவின் ஐக்கியத்தை நிராகரிப்பவர்கள், அவரது மகிமையில் பங்குகொள்ளுவதற்கான ஆயத்தத்தைப் புறக்கணிக்கிறார்கள். நற்குணத்தையும் வல்லமையையும் கொடுக்கும் பயிற்சியை ஒதுக்கிவிடுகிறார்கள். கிறிஸ்துவின் சிலுவையை பிள்ளைகள் சுமக்கக் கூடாதபடி தடைசெய்த பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை சாத்தானுக்கு கொடுக்கிறார்கள். இதை காலம் சென்ற பின்பே உணருவார்கள். இதனால் இந்த உலக வாழ்க்கைக்கும் எதிர்காலத்திற்கும் தங்கள் அழிவை முத்தரித்துள்ளனர். சோதனைகள் இவர்களை மேற்கொண்டன. உலகத்திற்கு சாபமாக வளர்ந்துவிடுகிறார்கள். தங்களுக்கு ஜீவனைக் கொடுத்தவர்களுக்கு துயரத்தையும் அவமானத்தையும் கொண்டு வருகிறார்கள். ***Education, 264, 265.***

எந்த வேலைக்கு நமது பிள்ளைகள் அழைக்கப்படுவார்கள் என்பதை நாம் அறியோம். குடும்ப வட்டத்திற்குள்ளாகவே தங்கள் வாழ்வுகளை கழிக்கலாம். சாதாரண வேலைகளை செய்யலாம். அஞ்ஞான தேசங்களுக்கு சத்தியத்தை சுமந்து செல்லும் ஆசிரியர்களாக செல்லலாம். எல்லோரும் ஊழியக்காரர்களாக பணிபுரியவே அழைக்கப்படுகிறார்கள். அவரவர் வேலைகளை செய்வதில் ஊழியர்களாக இருக்கிறார்கள். தேவ இரக்கத்தை உலகிற்கு காட்டுபவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவின் பக்கத்தில் நின்று சுயநலமற்ற ஒரு ஊழியத்தைச் செய்ய ஒரு கல்வியை பெற்றுக்கொள்ள வேண்டும். ***Prophets and Kings p. 249.***

### *தேவ உதவியை சார்ந்திருக்க கற்றுக் கொடுங்கள்*

நன்மை செய்வதற்கான நல்ல திறமைகளை உங்கள் பிள்ளைகளிடம் பார்க்க விரும்பினால் நித்தியத்தை குறித்ததான ஒரு சரியான கண்ணோட்டத்தை அவர்களுக்கு கற்றுக்கொடுங்கள். சத்தியத்தை அவர்கள் பற்றிக் கொள்ளுபவர்களாக இருக்க வேண்டும். தேவ உதவியை சார்ந்து வாழ அறிவுறுத்தப்பட வேண்டும். இக்கட்டிலும் துன்பத்திலும் தேவ உதவியையே அவர்கள் நம்பியிருக்க வேண்டும். இதை அவர்கள் கற்றுக்கொண்டால் இச்சையை அடக்கி உள்ளான சோதனைகளையும் மேற்கொள்ளுவார்கள். ஞானத்தின் ஊற்றுடன் தொடர்பு கொண்டிருப்பார்கள். நன்மை தீமையை பகுத்தறிய இது பெலத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்கும். இப்படிப்பட்டவர்கள் அறிவாற்றலிலும் நல்லொழுக்கத்திலும் பெலவான்களாக இருப்பார்கள். தெளிவான கண்ணோட்டத்தைப் பெற்று சரியாக பகுத்தறிவார்கள். உலக காரியங்களிலும் இதை காட்டுவார்கள். ***Pacific Health Journal 1890.***

### *விசுவாசமும் நம்பிக்கையும் இரட்சிப்பை ஊர்ஜிதப்படுத்துகின்றன*

நமது குடும்பங்களில் தேவனது இரட்சிப்பை நாம் வைத்திருக்கலாம். ஆனால் இதை முழுமையாக நம்பி, இதற்காகவே வாழ வேண்டும். தொடர்ந்து நிலைத்திருக்கும் விசுவாசமும் நம்பிக்கையும் இருக்க வேண்டும். தேவ வார்த்தைகளின் கட்டுப்பாடுகள் நமது நன்மைக்காக கொடுக்கப்பட்டிருக்கின்றன. நமது குடும்பங்களின் மகிழ்ச்சியை அது கூட்டுகிறது. எல்லோருடைய சந்தோஷமும் அதிகமாகும். நமது விருப்பங்களின் தரத்தை உயர்த்தும். பகுத்தறிவை பரிசுத்தப்படுத்தும். சமாதானத்தையும் இறுதியில் நித்திய ஜீவனையும் தருகிறது. தேவ தூதர்கள் நமது இல்லங்களில் தாபரிப்பார்கள். நமது ஆவிக்குரிய வாழ்க்கையின் முன்னேற்றத்தின் நற்செய்தியை பரலோகிற்குக் கொண்டு செல்லுவார்கள். நமது செயல்களை பதிவு செய்துகொண்டிருக்கும் தூதன் மகிழ்ச்சியுடனும் மன இரம்மியத்துடனும் பதிவு செய்வார். ***Signs of the times Apr 17, 1884.***

கிறிஸ்துவின் ஆவி இல்லத்தில் எல்லா நேரங்களிலும் ஸ்தாபரிக்கும் ஒரு செல்வாக்காக இருக்கும். பரலோக செல்வாக்குகளுக்கு ஆண்களும் பெண்களும் தங்கள் இதயங்களை திறக்க வேண்டும். சத்தியமும், அன்பும் இச்செல்வாக்குகளாக இருக்கின்றன. வனாந்தரத்தில் நீர் ஊற்றுக்களைப்போல இவைகள் பாய்ந்து செல்லும். குறைபாடும் வெறுமையும் காணப்படும் இடங்களுக்கு புத்துயிரை கொடுக்கும். ***Manuscript 142, 1898.***

வீட்டில் கொடுக்கப்பட்ட நல்ல கல்வியின் தாக்கத்தைப் பிள்ளைகள் உலகிற்கு கொண்டு செல்லுவார்கள். வீட்டின் வட்டத்தில் வேலை செய்யுங்கள். பிள்ளைகளின் இளம் பிராய வயதிலிருந்து இவ்வேலை துவங்கட்டும். இப்பிள்ளைகள் இந்த நல்ல செல்வாக்கை பள்ளி அறைக்குள்ளும் எடுத்து செல்லுவார்கள். இதன் தாக்கத்தை பலர் உணருவார்கள். தேவன் மகிமைப்படுவார். ***Manuscript 142, 1898.***

***அதிகாரம் - 75***

***சிறு பிள்ளைகளை கிறிஸ்துவிடம் வழிநடத்தல்***

***பிள்ளைகள் எப்பொழுது கிறிஸ்தவர்களாகிறார்கள்***

பிள்ளை பருவத்தில் மனம் செய்திகளை விரைவாக பெற்றுக்கொள்ளுகிறது. குணமும் எளிதாக வளர்க்கப்படுகிறது. சிறு பிராயத்திலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தேவன்மீது அன்பு செலுத்தவும், அவரை கனப்படுத்தவும், கற்றுக்கொடுக்கப்படலாம். ***Manuscript 115, 1903.***

சிறு வயதின் ஒவ்வொரு பிள்ளையும் அவரது பிள்ளையாக இருக்கவே தேவன் விரும்புகிறார். தேவ குடும்பத்திற்குள் தத்தெடுத்துக்கொள்ளுவதே, தேவ சித்தமாக இருக்கிறது. இளவயதினராக இருந்தாலும் விசுவாச குடும்பத்தின் அங்கமாக இருக்கலாம். விலையேறப்பெற்ற ஒரு அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இளகிய மனதுடன் இறுதி வரையிலும் மனதில் தங்கும் செய்திகளை பெற ஆயத்தமாக இருக்கலாம். இயேசுவை நம்பி, நேசித்து அவருக்காக வாழ இதயம் வழிநடத்தப்படலாம். சிறிய ஊழியர்களாக இயேசு அவர்களை மாற்றுவார். அவர்களது சிந்தனை ஓட்டம் முழுமையாக மாறலாம். பாவம் விரும்பப்படக் கூடியதாக தெரியாது. வெறுத்து ஒதுக்கப்படும். ***Counsels to Parents, Teachers and Students, p. 169***

***வயது தடையல்ல***

நல்ல கிறிஸ்தவனாக வாழ ஒரு பிள்ளை எந்த வயதை அடைய வேண்டும்? என்று ஒரு நல்ல நபரிடம் கேட்கப்பட்டது. வயதிற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று பதிலளித்தார். இயேசவை நம்பி, அவர் மீது அன்பு செலுத்தி, அவருக்குள் ஓய்வு காண்பது பிள்ளைக்கு ஏற்றதாக உள்ளது. தாயின் மீது நம்பிக்கைக் கொண்டு அவளை நேசிக்கும் பிள்ளையால் இயேசுவையும் நம்பி நேசிக்க முடியும். தனது தாயின் நண்பராக இயேசுவை பார்க்கலாம். அச்சிறு பிள்ளையின் நண்பராக, இயேசு அன்பு கூரப்பட்டு கனப்படுவார்.

இதை நாம் மனதில் கொண்டால், பிள்ளைகளுக்கு நல்ல உதாரணத்தினாலும், தேவ வார்த்தையைக் கொண்டும் கிறிஸ்தவ பாடங்களைக் கொடுக்க வேண்டும். இதற்காக எவ்வளவு பிரயாசப்பட்டாலும் தவறாகாது. பிள்ளைகளின் ஆராயும் கண்களுக்கும் தெளிவான அறிவுக் கூர்மைக்கும் முன்பாக இவைகள் வைக்கப்பட வேண்டும். நமது கிறிஸ்தவ மதம் நடைமுறையாக்கப்பட வேண்டும். ஆலயத்தைப்போலவே இல்லத்திலும் இது தேவைப்படுகிறது. நமது நடத்தையில் அன்பன்ற தன்மை இருக்கக்கூடாது. அன்பினாலும் மனதுருக்கத்தினாலும் அன்பான உள்ளங்களை பெற்றுள்ளோம் என்பதைக் காட்ட வேண்டும். நமது குடும்பத்தில் இயேசுவானவர் கனம் பொருந்திய விருந்தாளியாக இருக்க வேண்டும். அவரிடம் நாம் பேசி நமது எல்லா பாரங்களையும் அவரிடம் கொண்டு செல்ல வேண்டும். அவரது அன்பைப் பற்றியும், கிருபையைப் பற்றியும், குணத்தைப் பற்றியும் பேச வேண்டும். பக்தி நிறைந்த பெற்றோர்கள் தங்கள் துன்பங்களை அனுதினமும் இயேசுவிடம் கொண்டு செல்வதின் மூலமாக பிள்ளைகளுக்கு ஒரு பெரிய பாடம் கொடுக்கப்படுகிறது. பிரச்சனைகளினால் எரிச்சலடைந்து சலித்துக்கொள்ளுவதைவிட சுமைதாங்கியாக இருக்கும் அவரிடம் எல்லாவற்றையும் எடுத்துச் செல்ல

1ST Proof

வேண்டும். பூ மொட்டானது சூரியனை பார்த்தவுடன் மலருவதைப்போல், பிள்ளைகளின் மனங்களும் இயேசுவிடம் திருப்பப்படலாம். ***Good Health Jan. 1880.***

***ஒவ்வொரு பாடத்திலும் தேவ அன்பு கற்பிக்கப்பட வேண்டும்***

தேவனே நமது தகப்பன் என்பதே ஒவ்வொரு பிள்ளையின் முதல் பாடமாக இருக்க வேண்டும். சிறு பிராயத்திலிருந்தும் இப்பாடம் கொடுக்கப்பட வேண்டும். பரலோக பிதாவை பிள்ளைகள் அறிந்துகொள்ள வைக்கும் பொறுப்பு பெற்றோரிடம் உள்ளது. ஒவ்வொரு பாடத்திலும் தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பது சொல்லித்தரப்பட வேண்டும். ***Review and Herald, Jun. 6, 1899.***

தாய் தந்தையர் குழந்தைகளுக்கும் பிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் இயேசுவின் அன்பை சொல்லிக் கொடுக்க வேண்டும். குழந்தையின் முதல் உச்சரிப்புக்களும் இயேசுவைப் பற்றியதாக இருக்கட்டும். ***Review and Herald, Oct. 9, 1900.***

பிள்ளைகளுக்கு கொடுக்கப்படும் எல்லா பாடங்களும் இயேசுவுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். ***Signs of the Times,. Feb. 9, 1882.***

பிள்ளையின் குழந்தைப் பருவத்திலிருந்தும் தேவ காரியங்களை அறிந்துகொள்ள செய்ய வேண்டும். எளிய வார்த்தைகளில் தாய் கிறிஸ்துவினுடைய வாழ்க்கையைப் பற்றி பிள்ளைக்கு சொல்லட்டும். இதற்கும் மேலாக தனது அன்றாட வாழ்க்கையில் கிறிஸ்துவின் போதகத்தைக் கடைபிடிக்கட்டும். இந்த பூலோக வாழ்க்கை, வரவிருக்கும் பரலோக வாழ்க்கைக்கு ஒரு ஆயத்தமாக இருக்கிறது என்பதை தனது நல்ல முன் உதாரணத்தினால் காட்டப்படும். அந்த நகரத்திற்குள் பிரவேசிக்கும் ஒரு தகுதியைப் பெறவே இவ்வாழ்க்கை நமக்கு தவணையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு செல்லுவதற்கான குணத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். ***Manuscript 2, 1903.***

***மிகுதியான கவனம் தேவை***

நமது பிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் போதுமான கவனம் கொடுக்கப்படுவதில்லை. இதனால் அவர்கள் கிறிஸ்தவ ஜீவியத்தில் வளரவில்லை. சபை விசுவாசிகள் பிள்ளைகளை கரிசனையுடனும் மனதருக்கத்துடனும் கண்நோக்கவில்லை. தெய்வீக வாழ்க்கையில் பிள்ளைகள் முன்னேற வேண்டும் என்று எவரும் பிரயாசப்படவில்லை. ***Review and Herald, Feb. 13, 1913.***

பிள்ளைகள் புறக்கனிக்கப்படுவதினால் தேவன் மகிமைப்படுத்தப்படுவதில்லை. பிள்ளைகளை சாதாரணமாகவே கவனித்து இங்கும் அங்குமாக ஊக்கப்படுத்தும் வார்த்தைகளை பேசினால் போதாது. முழு முயற்சியும், அதிக ஜெபமும், அதிக கவனமும் தேவை. அன்பாலும் கரிசனையாலும் நிரப்பப்பட்ட இதயம், அக்கரையின்றி நம்பிக்கையின்றி இருக்கும் வாலிபர்களை சென்றடையும். ***Counsels on Sabbath School Work. P. 77.***

***"பிள்ளைகளை எனக்காக பயிற்றுவியுங்கள்" என்று இயேசு சொல்லுகிறார்***

பரலோகின் மன்றங்களில் பணிபுரிய பிள்ளைகளை பெற்றோர் பயிற்றுவிக்க வேண்டும். இதை அவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். பிள்ளைகளை இயேசுவே அவர்களது கரங்களில் கொடுத்து ***" இவர்களை எனக்காக பயிற்றுவியுங்கள், தேவ மன்றங்களில் இவர்கள் பிரகாசிக்க வேண்டும்"*** என்று கூறுகிறார். இயேசு என்ற நாமம் உச்சரிக்கப்படுவதினால் எழும் சத்தத்தை பிள்ளைகள் கேட்க வேண்டும். இந்த சத்தம் அவர்களது கவனத்தை இழுக்க வேண்டும். சிறு பிராயத்திலிருந்தும் ஜெபிக்க வழிநடத்தப்பட வேண்டும். இயேசுவின் வாழ்வில் நடந்த சம்பவங்களினால், மனம் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். வரப்போகும் உலகின் மகிமைகளை பார்க்கும்படியாக பிள்ளைகளின் கற்பனைகள் தூண்டப்பட வேண்டும். ***Review and Herald, Feb. 19, 1895.***

***சிறு பிராயத்திலும் கிறிஸ்தவ அனுபவம்***

இயேசு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கும் வாசஸ்தலங்களுக்கு செல்ல ஆயத்தமாக உங்கள் பிள்ளைகளுக்கு உதவுங்கள். தன்னை

1<sup></sup>



1ST Proof

நேசிப்பவர்களுக்காக இயேசு இதை செய்கிறார். தேவன் தங்களுக்கென்று வைத்திருக்கும் நோக்கத்தை நிறைவேற்ற பிள்ளைகளுக்கு உதவுங்கள். நித்திய ஜீவனை தரும்படியாக தங்களுக்காக மரித்தவரை கணம் பண்ணும்படியாக பிள்ளைகளின் ஜீவியம் இருக்க வேண்டும். இதை அவர்கள் பெறுவதற்கான ஒரு பயிற்சியைக் கொடுங்கள். தேவ அழைப்பிற்கு பதில் கொடுக்கக் கற்றுக்கொடுங்கள். இதுவே தேவ அழைப்பாக இருக்கிறது. *“ நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்.” மத்தேயு 11 : 29, 30.* ***Manuscript 138, 1903.***

எனது சகோதர சகோதரிகளே பிள்ளைகளை பயிற்றுவிக்கும்படி ஒரு புனிதமான வேலையை நீங்கள் செய்ய வேண்டியுள்ளது. இளவயதின் காலத்தில் எளிதாக பிள்ளைகளை நன்மைக்குரிய செய்திகளை ஏற்றுக்கொள்ளுவார்கள். மனமும் சிந்தையும் இந்த பக்குவத்தைக் கொண்டிருக்கும். சிறு வயதிலும் அவர்கள் ஆற்ற வேண்டிய ஒரு தனிப் பங்கு உண்டென்பதை அவர்களுக்கு கற்றுக்கொடுறங்கள். இந்த இளம் பிராயத்திலும் ஒரு கிறிஸ்தவ அனுபவத்தை அவர்கள் பெற வேண்டும். ***Letter 10, 1912.***

சிறு வயதிலிருந்தே பிள்ளைகளின் பாதங்கள் நீதியின் பாதைகளில் வழிநடத்தப்பட வேண்டும். பெற்றோர்கள் தங்கள் வாழ்வின் முதல் கடமையாக இதைக் கொள்ள வேண்டும். இதை செய்ய தவறினால் பிள்ளைகள் தவறான பாதைகளை தேர்ந்தெடுத்துவிடுவார்கள். ***Review and Herald, Apr. 4, 1889.***

### *கீழ்ப்படிதல் மனமாற்றத்தைக் காட்டுகிறது*

தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிய நம் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டாமா? பிள்ளைகள் தானாகவே முன் வந்து தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும். இது அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். நமது கீழ்ப்படிதலே நாம் உண்மையான கிறிஸ்தவர்கள் என்பதை காட்டுகிறது. தேவன் கூறியிருக்கின்ற ஒவ்வொரு வார்த்தையையும் ஒரு நோக்கத்துடன் சொல்லியிருக்கின்றார். தேவையற்ற வார்த்தை எதுவும் இல்லை. ***Manuscript 64, 1899.***

### *தேவப்பிரமாணம் சீர்திருத்தத்தின் அடித்தளம்*

தேவ பிரமாணமே குடும்பத்தின் கல்வியாக இருக்க வேண்டும். எல்லா கல்வியைக் கொடுக்கும் கருவியாகவும் இருக்க வேண்டும். பெற்றோர்கள் தேவனின் எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டியுள்ளது. இதை செய்தால் பிள்ளைகளுக்கு நேர்மை தவறாத முன்உதாரணங்களாக இருப்பார்கள்.

தேவ பிரமாணமே நிலைநிற்கக் கூடிய எல்லா சீர்திருத்தங்களின் அடித்தளமாக இருக்கிறது. தேவ கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தை தீர்க்கமாகவும் தெளிவாகவும் உலகிற்கு காட்ட வேண்டும். மாபெரும் சீர்த்திருத்தமானது இல்லத்தில் துவங்க வேண்டும். தேவ பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதே, அயராத உழைப்பிற்கும், நல்ல பொருளாதாரத்திற்கும், உண்மைக்கும், மனிதர்கள் ஒருவரோடொருவர் நீதியுடன் நடந்துகொள்ள வழிநடத்தும். ***Letter 74, 1900.***

### *பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுங்கள்*

குழந்தை பருவத்திலிருந்து உங்கள் பிள்ளைகளுக்கு தேவ கட்டளைகளுக்கு கீழ்ப்படியக் கற்றுக்கொடுத்துள்ளீர்களா? தேவ சாயலுக்கேற்ற ஒரு குணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் கற்றுக்கொடுக்க வேண்டும். இதை அவர்கள் செய்யும்பொழுது கிறிஸ்து அவர்களுக்கு வெளிப்படுவார். தன்னை பிள்ளைகளிடம் வெளிப்படுத்த இயேசு ஆவலாக இருக்கிறார். யோசேப்பின் கதையிலிருந்தும், சாமுவேலின் கதையிலிருந்தும் தானியேலின் கதையிலிருந்தும் இதை புரிந்து கொள்ளுகிறோம். இவர்களது வாழ்க்கைகளின் சம்பவங்களிலிருந்து ஒவ்வொரு பிள்ளையிடமிருந்தும், வாலிபனிடமிருந்தும் தேவன் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை அறிந்து கொள்ளுகிறோம். ***Manuscript 62, 1901.***

கிறிஸ்துவின் பின்னடியார்களாக இருக்க அறிந்துகொள்ளப்பட வேண்டியதை பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சொல்லித்தர வேண்டும். இது தேவன் நியமித்திருக்கிற பிரத்தியேக கடமையாக இருக்கிறது.

1ST Proof


குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

சிறு வயதிலும் பிள்ளைகளுக்கு இதை கற்றுக் கொடுக்க வேண்டும். ***Manuscript 59, 1900.***

*மனமாற்றமடைந்த குழந்தையின் சாட்சி*

கிறிஸ்தவ மதம் பிள்ளைகள் நன்றாக படிக்கவும் உத்தமத்துடன் வேலை செய்யவும் உதவுகிறது. பன்னிரெண்டு வயது நிரம்பிய ஒரு சிறு பெண் அவள் சாட்சியத்தைக் கூறினாள். *“ எனக்கு படிக்கப் பிடிக்கவில்லை, விளையாடவே ஆசைப்பட்டேன். பள்ளியில் சோம்பலாக இருப்பேன். புாடங்களை சரியாக படிக்க மாட்டேன். ஆனால் இப்பொழுதோ தேவனை மகிழ்விக்கும்படியாக ஒவ்வொரு பாடத்தையும் நன்றாக கற்கிறேன். கடந்த காலத்தில் ஆசிரியர் என்னை பார்க்காதபொழுது எல்லோரும் பார்பதற்காக பல குறும்புகளை செய்வேன். ஆனால் இப்பொழுதோ தேவனை மகிழ்விக்கவே விரும்புகிறேன். பள்ளியில் நல்ல விதமாக நடந்துகொள்ளுகிறேன். பள்ளியின் சட்டங்களுக்கு கீழ்ப்படிகிறேன். வீட்டில் சுய நலமான ஒரு பெண்ணாக இருந்தேன். வேலை செய்ய விருப்பமில்லாமல் இருந்தேன். என் தாய் ஏதேனும் வேலை கொடுத்தால் விளையாடுவதைவிட்டு அதை செய்ய முகம் கோணுவேன். ஆனால் இப்பொழுது என் தாய்க்கு உதவுவதே எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. என் அம்மாவை இதன் வழியாக எந்த அளவிற்கு நேசிக்கிறேன் என்பதைக் காட்ட ஆர்வமாக இருக்கிறேன்.”* ***Counsels on Sabbath School Work. P. 79.***

*தள்ளிப்போடுவதை தவிற்த்து விடுங்கள்*

பெற்றோர்களே சிறு பிராயத்திலிருந்தே உங்கள் பிள்ளைகளின் மனங்களை ஒரு ஒழுக்கத்திற்குள்ளாகக் கொண்டு வாருங்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறும் அளவிற்கும் இதை செய்யுங்கள். சிறு வயதானவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு அழிவின் படுகுழியின் மீது அவர்கள் தூங்கிவிடும்படி செய்துவிடாதீர்கள். சிறிய வயதில் பாவத்திற்கு மனம் வருந்த முடியாததென்றும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் பெற்றோர்கள் தவறாக நினைத்துக் கொள்ளுகிறார்கள். ***Testimonies for the Church, Vol. 1, p. 396.***



1ST Proof

எட்டு வயதிலிருந்தும் கூட பிள்ளைகளுக்கு தனிப்பட்ட கிறிஸ்தவ ஜீவியத்தைக் குறித்துப் பேசலாம். அவர்களுடன் பேசும்பொழுது எதிர்காலத்தைப் பற்றி பேசுவதைப்போல பேசாதீர்கள். வளர்ந்த பிறகு பாவத்தைவிட்டு மனம்மாற வேண்டும் என்பதைப் போல அவர்களிடம் பேசக் கூடாது. சரியாக அறிவுறுத்தப்பட்டிருந்தால் சிறு பிள்ளைகளுக்கும் சரியான கண்ணோட்டத்தை பெறுவார்கள். தாங்கள் பாவிகள் என்பதை புரிந்து இரட்சிப்பின் வழியை அறிவார்கள். இயேசுவே அந்த வழி என்பதையும் கண்டு கொள்ளுவார்கள். ***Testimonies for the Church, Vol. 1, p. 400.***

சிறு பிராயத்திலும் தேவனை தேடிக்கொள்ளும் பல வாக்குத்தத்தங்களுக்கு என் கவனம் திருப்பப்பட்டது. *“நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்குநாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும்,” பிரசங்கி 12 : 1 “ என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்.” நீதி 8 : 17* இஸ்ரவேலின் மேய்ப்பன் இன்றும் இதை சொல்லுகிறார். *“சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.” லூக்கா 18 : 16.* சிறுவயதிலும், வாலிப பிராயமுமே தேவனை தேடுவதற்கான சரியான நேரம் என்பதை சொல்லிக் கொடுங்கள். ***Testimonies for the Church, Vol. 1, p. 396, 397.***

*குழந்தைப் பருவதிலிருந்து, வாலிப பிராயத்திலும் வழிநடத்துங்கள்*

ஒரு பிள்ளையை தன் சொந்த விருப்பத்திற்கு விடுவது அவனைக் கெடுப்பதாகும். தீமையில் அப்பிள்ளை தேரிவிடும். துவறான பயிற்சியின் விளைவுகள் பிள்ளை பருவத்திலும் வெளிப்படும். வாலிபத்தில் சுய நலம் பேணப்படுகிறது. இந்த வாலிபன் முழு வளர்ச்சியைப் பெற பாவத்திலும் வளருகிறான். தங்கள் விருப்பங்களுக்கு விடப்பட்ட பிள்ளைகள் பெற்றோர்களின் தவறுக்கான சாட்சிகளாக இருக்கிறார்கள். செல்வாக்கை கொண்டுவரும் சூழலில் பிள்ளைகள் வைக்கப்பட

வேண்டும். இதுவே இத்தீமையை நிறுத்தும். குழந்தைப் பருவத்திலிருந்து வாலிப வயது வரையிலும், அதற்கு பிறகும் பிள்ளையானவன் ஒரு நல்ல சூழலில் வைத்திருக்கப்பட வேண்டும். ***Review and Herald, Sep. 13, 1904.***

*எதிர்கால சோதனைகளிலிருந்து பிள்ளைகளை பாதுகாத்தல்*

பெற்றோர்களே ஒரு முக்கியமான கேள்வியை நீங்கள் உங்களிடமே கேட்க வேண்டும். பெற்றோரின் அதிகாரத்திற்கு கீழ்ப்படிய பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறோமா? இதன் வழியாக தேவனுக்கு கீழ்ப்படிந்து அவரை நேசித்து அவரது பிரமாணத்தை வாழ்க்கையின் வழிகாட்டியாக கொள்ளத் தக்கதான ஒரு கல்வியை கொடுத்திருக்கிறோமா? இதற்கான பயிற்சியை கொடுத்திருக்கிறோமா? கிறிஸ்துவின் ஊழியர்களாக நன்மையை எல்லா இடங்களிலும் செய்ய கற்றுக்கொடுத்திருக்கிறோமா? விசுவாசிகளாக இருக்கும் பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் தேவனுக்காக போராடி நிற்க வேண்டிய காலம் வரும். கிறிஸ்துவிற்காக பலமுறை வென்றாலும் தங்கள் சொந்த நலனுக்கான வெற்றியை பெறுகிறார்கள். ஆனால் தேவ பயத்திலும் கிறிஸ்துவின் அறிவிலும் வளர்க்கப்படாமல் பரலோகுடன் தொடர்பு இல்லாமல் இருந்தால் ஒழுக்கத்துக்கான வல்லமையற்றவர்களாக இருப்பார்கள். தேவனுக்கும் மேலாக தங்களை உயர்த்திக்கொள்ளும் உலகின் ராஜாக்களுக்கு அடிபணிவார்கள் இந்த உலகின் இராஜாக்கள் தேவனது உண்மையான ஓய்வு நாளை ஒதுக்கிவிட்டு போலியான ஓய்வுநாளை ஸ்தாபிப்பார்கள். ***Review and Herald, Apr. 23, 1889.***

*அதிகாரம் - 76*

*சபை அங்கத்தினர்களாவதற்கான ஆயத்தம்*

*சம நிலையான பயிற்சி*

தேவன் சொல்லியிருக்கிறவைகளை பிள்ளைகளுக்கு அறிவுறுத்துங்கள். பொறுமையுடனும் விடாமுயற்சியுடனும், கவனத்துடனும், இரக்கத்துடனும் பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். சரீரத்திற்கும் மனதிற்கும், விசுவாச வாழ்க்கைக்கும் தேவயையான அறிவுரைகளை பெற்றோர்கள் கொடுக்க வேண்டியுள்ளது. இதுவே



1<sup>ST</sup> Proof

தேவன் தந்திருக்கின்ற கடமையாக உள்ளது. தேவ நியமங்களை எப்பொழுதும் பிள்ளைகளுக்கு முன்பாக வைக்க வேண்டும்.

ஆவிக்குரிய பயிற்சியைவிட சரீர ஆரோக்கியத்திற்கான பயிற்சி எளிதாக இருக்கிறது.

ஆத்தும பயிற்சி ஒரு மனிதனை உயர்த்தி அவனை தாய்மைப்படுத்துகின்றது. சிந்தனைகளுக்கும், செயல்களுக்கும், வார்த்தைகளுக்கும் புதிய நறுமணத்தைக் கொடுக்கிறது. தொடர்ந்து, அயராது இதற்காக பிரயாசப்பட வேண்டும். இதயம் என்ற தோட்டத்திலிருந்து தீங்கான ஒவ்வொரு களையும் நீக்கப்பட வேண்டும். பொறுமையுடன் செயல்பட வேண்டும்.

ஆவிக்குரிய பயிற்சி புறக்கணிக்கப்படக் கூடாது. தேவ வார்த்தையின் அழகான பாடங்களை பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுப்போம். இதன் வழியாக அவர்கள் தேவனைப் பற்றி அறிந்துகொள்ளுவார்கள். தவறான எதையும் அவர்கள் செய்யக் கூடாது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீதியையும் நியாயத்தையும் செய்ய கற்றுக்கொடுங்கள். தவறான ஒரு பாதையில் செல்ல உங்களால் அனுமதிக்க முடியாது என்று சொல்லுங்கள். கிறிஸ்துவின் நாமத்தில் தேவசிங்காசனத்தண்டை அவர்களைக் கொண்டு செல்லுங்கள். தங்களுக்காக பரிந்து பேச கிறிஸ்து இருக்கிறார் என்பது அவர்களுக்கு தெரியட்டும். தேவ சாயலுக்கேற்ற ஒரு குணத்தை வளர்த்துக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள். ***Review and Herald, Sep. 15, 1904.***

*தேவனைப் பற்றிய அறிவும், கிறிஸ்துவைப் பற்றியதான அறிவும் அவசியம்*

ஆவிக்குரிய பயிற்சியும் எக்காரணத்தைக் கொண்டும் புறக்கணிக்கப்படக் கூடாது. *“ கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.” சங். 111:10.* சிலர் கல்விக்கு இரண்டாவது இடத்தைக் கொடுக்கின்றனர். கிறிஸ்துவுக்கு முதல் இடத்தைக் கொடுத்துள்ளனர். உண்மையான கல்வியே கிறிஸ்தவ மதமாக இருக்கிறது. ***Counsels to Parents, Teachers and Students, p. 108.***

*நடைமுறை கிறிஸ்தவ அனுபவம்*

கிறிஸ்தவ பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு நடைமுறை கிறிஸ்தவத்தைக் குறித்து அறிவுறுத்த வேண்டும். இதை செய்ய பெற்றோர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும். தேவன் இதை நீங்கள் செய்யும்படி சொல்லுகிறார். இதை செய்ய தவறினால் உங்கள் கடமையை நிறைவேற்ற தவறுகிறீர்கள். தேவனின் ஒழுங்குகளை பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள். கிறிஸ்தவ ஜீவியத்தில் வெற்றி காண்பதையும் அவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள். இவ்வுலகின் காரியங்களில் மனதை வைத்துக் கொண்டு தேவனுக்கு வேலை செய்ய முடியாது என்பதைச் சொல்லிக் கொடுங்கள். அதற்காக சோம்பலாக, ஒன்றும் செய்யாமல் இருப்பது கிறிஸ்தவம் இல்லை என்பதையும் தெளிவாக்குங்கள். இதைக் குறித்து தேவ வார்த்தை திட்டவட்டமாக பேசுகிறது. ***Testimonies for the Church, Vol..5, p. 42.***

*தேவ அறிவை கற்றுக்கொடுங்கள்*

தேவனை அறிந்துகொள்ளுவதே நித்திய ஜீவன். உங்கள் பிள்ளைகளுக்கு இதை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது உலகின் காரியங்களை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? தேவன் உங்களுக்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கும் இல்லத்திற்கு செல்ல தயாராகிக் கொண்டிருக்கிறீர்களா? இரட்சகரின் வாழ்வையும் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். வேதத்தை படிக்க கற்றுக் கொடுங்கள். நித்தியத்திற்குள்ளும் சென்று வாழும் குணங்களை வளர்த்துக் கொள்ள கற்றுக்கொடுங்கள். தேவன் நமது பிள்ளைகளை பாதுகாத்து ஆசீர்வதிக்கும்படி இதுவரையிலும் ஜெபித்திராத வகையில் பாரத்துடன் அதிகமாக ஜெபிக்க வேண்டும். ***Manuscript 16, 1895.***

*அனுதினமும் மனஸ்தாபப்பட்டு பாவ மன்னிப்பைப் பெற கற்றுக்கொடுங்கள்*

எல்லோரும் இந்த தேதியில் என் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டன என்று சொல்ல வேண்டும் என்பதில்லை. சிறு பிராயத்திலும் எல்லா தவறுகளும் இயேசுவிடம் கொண்டு செல்லப்பட்டு மன்னிப்பைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை சொல்லிக்கொடுங்கள். இதுவே பிள்ளைகள் அறிந்து கொள்ள வேண்டிய ஒரு பாடமாக உள்ளது. ஒவ்வொரு நாளும் தாங்கள் செய்யும் தவறுகளுக்காக மனம்வருந்தி இயேசுவிடம் சென்று மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லுங்கள். இயேசு இவ்வுலகில் மனிதனாக வாழ்ந்தபொழுது சிறு பிள்ளைகளை தன்னிடம் வர அனுமதித்தார். இதைப்போலவே நமது பிள்ளைகளின், உண்மையான மனம் உடைந்த ஜெபத்தைக் கேட்டு, பாவ மன்னிப்பை அருளி, ஏற்றுக்கொள்ளுவார். ***Manuscript 5, 1896.***

*நல்ல உபதேசங்களை கற்றுக்கொடுங்கள்*

சத்தியத்தைப் புரிந்துகொண்டு, தேவனைத் தங்கள் வாழ்வில் அனுபவித்தவர்கள், சத்தயத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளுவார்கள். இவர்கள் பிள்ளைகளுக்கு நல்ல உபதேசங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். நமது சபையின் தூண்களைப்போல இருக்கும் சத்தியங்களை பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டும். நாம் ஏன் ஏழாம் நாள் அட்வெந்து மக்களாக இருக்கிறோம் என்பதை புரிந்துகொண்டிருக்க வேண்டும். நாம் ஏன் இஸ்ரவேலர்களாக அழைக்கப்படுகிறோம் என்பதையும், உலகிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட விசேஷ ஜனமாக நாம் இருப்பதையும் பிள்ளைகள் நன்றாக அறிந்திருக்க வேண்டும். பிள்ளைகள் இவைகளையெல்லாம் புரிந்துகொள்ளம்படி எளிமையாக விளக்க வேண்டும். அவர்களது வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் இச்சத்திய விளக்கங்களும் வளரும். ஆறிவாற்றலுக்கு தகுந்த வண்ணம் வளர வேண்டும். சத்தியத்தின் அடித்தளம் ஆழமாகவும் அகலமாகவும் போடப்பட வேண்டும். ***Testimonies for the Church, Vol. 5, p. 330.***

*சுருக்கமாக மீண்டும் மீண்டும் அறிவுறுத்துங்கள்*

பிள்ளைகளுக்கு அறிவுரைகளை கொடுப்போர் நீண்ட நேரத்திற்கு பேசிக் கொண்டு, விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கக் கூடாது. சுருக்கமாகவும் நேரடியாகவும் பேச்சுரைகள் இருக்க வேண்டும். இது ஒரு மகிழ்வூட்டும் செல்வாக்கை கொண்டுவரும். அதிகமான பேச்சு ஆவிக்குறிய அறிவுறுத்தல்களை வெறுக்கச் செய்துவிடும். சொல்லப்பட வேண்டிய தகவல்கள் அதிகமாக இருந்தால், ஒரே நேரத்தில்

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

எல்லாவற்றையும் விளக்கக் கூடாது. அவ்வப்பொழுது நேரம் எடுத்து சிறிது சிறிதாக விளக்கங்களைக் கொடுங்கள். எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் சொல்லுவதைவிட இது பயனுள்ளதாக இருக்கும். நீண்ட பேச்சுரைகள் சிறு மனங்களை சோர்வாக்கிவிடும். அதிகமான உணவு, வயிற்றிற்கு பாரமாகிவிடுவதைப் போலவே இதுவும் அளவிற்கு அதிகமாக செய்யப்பட்டால் சலிப்பை வரவழைத்துவிடும். ***Gospel worker p. 280, 209.***

*மாலை நேரங்கள் விலைமதிப்பற்றவை*

இல்லங்கள் அறிவுரைகள் கொடுக்கப்படும் பள்ளிகளாக இருக்க வேண்டும். ஒரே வேலையை மீண்டும் மீண்டுமாக செய்யப்படும் வேலை ஸ்தலமாக இருக்கக் கூடாது. மாலை நேரங்கள் விசேஷமானவைகளாக கருதப்பட வேண்டும். நீதியின் வழியில் பிள்ளைகள் நடக்க இந்நேரத்தில் அறிவுறுத்தலாம். ***Counsels on Sabbath School Cork. P. 48.***

*தேவ வாக்குத்தத்தங்களை நினைவு கூருங்கள்*

பரிசுத்த ஆவியானவரே நமக்கு ஞானத்தைக் கொடுக்கிறார் என்பதை எப்பொழுதும் மனதில் வைக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் பிள்ளைகளிடம் பேசி, சத்தியத்தின் பொக்கிஷங்களை வெளிப்படுத்த ஆவலாக இருக்கிறார். மேலான ஆசிரியராக கிறிஸ்து இருக்கிறார். இந்த உயரிய ஆசிரியரால் சொல்லப்பட்ட வாக்குத்தத்தங்கள் பிள்ளைகளின் மனங்களை ஆட்கொள்ளும் ஒரு தெய்வீக வல்லமையை கொடுத்து புத்துயிர் அளிக்கும். தெய்வீக காரியங்களை மனம் நன்றாக பழகிக் கொண்டுவிடும். இது சோதனையிலிருந்து காப்பாற்றும் தடுப்புச் சுவரைப்போன்று இருக்கும். ***Counsels to Parents Teachers and Students. P. 172.***

*மகிழ்ச்சியளிக்கும்படி அறிவுறுத்துங்கள்*

சிறு பிராயத்திலிருந்தே பிள்ளைகளுக்குக் கிறிஸ்தவ அறிவுரைகள் கொடுக்கப்பட வேண்டும். ஆக்கினைக்குள்ளாக்குவதைப் போன்று இது கொடுக்கப்படக் கூடாது. மகிழ்ச்சியான ஆவியுடன் மன இரம்மியத்துடன் இது செய்யப்பட வேண்டும். தாய்மார்கள் தொடர்ந்து விழித்திருக்க வேண்டும். பிள்ளைகளால் அறிந்து கொள்ள முடியாத சோதனைகள் வரும். இந்த சிறு மனங்களில் மிக நெருக்கமாக நண்பரைப்போல செயல்பட்டு சோதனைகளை மேற்கொள்ள உதவ வேண்டும். இவைகளில் வெற்றியடைவதில், அவர்களது வாழ்வின் நலன் சார்ந்துள்ளது. ஞானமாக இன்பமாக தோன்றக்கூடிய அறிவுரைகளினால் பெற்றோர்கள் பிள்ளைகளை பாதுகாக்க வேண்டும். பிள்ளைகளும் தேவ குடும்பத்தின் இளைய அங்கத்தினர்கள் என்பதை பெற்றோர்கள் மனதில் வைக்க வேண்டும். நமது இராஜாவின் கீழ்ப்படிதலின் சாலை வழியாக செல்ல பிள்ளைகளுக்கு உதவ வேண்டும். இதை செய்ய அதிகமான ஆர்வத்தைக் காட்ட வேண்டும். அன்பு நிறைந்தவர்களாக அக்கரையுடன் தேவனுடைய பிள்ளையாக இருப்பதன் பொருளை ஒவ்வொரு நாளும் கற்றுக்கொடுக்க வேண்டும். பிள்ளைகள் தங்கள் சித்தத்தை கீழ்ப்படிதலின் பக்கமாக ஒப்புவிக்க வேண்டும். தேவனுக்கு கீழ்ப்படிவதில் பெற்றோர்க்கு கீழ்ப்படிவதும் அடங்கியுள்ளது என்பதைச் சொல்லுங்கள். இது ஒவ்வொரு நாளின் வேலையாக இருக்கட்டும். ஒவ்வொரு மணித்துளியின் வேலையாக இருக்கட்டும். பெற்றோர்களே விழித்திருங்கள். விழித்திருந்து ஜெபியுங்கள். உங்கள் பிள்ளைகளை உங்களுடன் சேர்த்துக்கொள்ளுங்கள். ***Testimonies for the Church, Vol. 6, p. 93, 94.***

*வீட்டு வேலைகளிலிருந்து ஆவிக்குரிய பாடங்களைச் சொல்லிக் கொடுங்கள்*

நாம் மேற்கண்ட வகையில் பிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் ஒரு கல்வியைக் கொடுக்கும் வேலையை தேவன் பெற்றோர்க்கும் ஆசிரியர்களுக்கும் கொடுத்துள்ளார். வாழ்வின் ஒவ்வொரு செயலிலிருந்தும் அவர்களுக்கு ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும். சுத்தமாக இருக்க அவர்களை பயிற்றுவிக்க வேண்டும். இதனுடன் கூட, தேவன் நாம் இதயத்திலும் சுத்தமுள்ளவர்களாக இருக்க விரும்புகிறார் என்பதை கற்றுக்கொடுங்கள். வீட்டை அவர்கள் பெருக்கும் பொழுது தேவன் நம் இதயத்தைச் சுத்தப்படுத்துவதை கற்றுக்கொள்ளட்டும். நாம் கெட்டுப்போகக் கூடிய ஒரு பொருளை வீட்டில் வைத்து கதவுகளையும் ஜன்னல்களையும் நாம் மூடிவிடுவதில்லை. கதவுகளையும் திறந்து வீட்டை காற்றோட்டமாக வைக்கிறோம். அசுத்தங்களை எடுத்துவிடுகிறோம். உணர்வுகள் சரீரத்தின் ஜன்னலைப்போல இருக்கின்றன. இவைகள் பரலோகத்தை

1ST Proof

நாம் பார்க்கும்படியாக திறந்துவைக்கப்பட வேண்டும். சுய நலமும், உலக பிராகாரமான மனதும் வீட்டில் சேரும் தூசுக்கு ஒப்பாயிருக்கிறது. இவைகள் வெளியேற்றப்பட வேண்டும். மனதின் அறைகளுக்குள்ளாக தேவ கிருபை ஊடுரவ வேண்டும். ஒவ்வொரு இயல்பும் சுத்திகரிக்கப்பட்டு பெலப்படுத்தப்பட வேண்டும். அனுதின வீட்டு வேலைகளில் ஒழுங்கை கடைபிடிக்காமல் இருப்பது தேவனை மறக்கச் செய்கிறது. பெயரளவில் விசுவாசிகளாக இருக்க வழி செய்கிறது. நாம் விழித்திருந்து ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இல்லையெனில் நிழலை பற்றிக்கொண்டு நிஜத்தை விட்டுவிடுவோம்.

தங்க நூலைப் போன்று உயிருள்ள விசுவாசம் நமது அனுபவங்களுக்குள்ளாக செல்ல வேண்டும். அனுதின வேலைகளை செய்வதிலும் இது காணப்பட வேண்டும். ***Testimonies for the Church, Vol. 6, p. 170, 171.***

### *புத்தக அறிவும் இதயத்திற்கான கல்வியும்*

வாலிபர்கள் தங்களது மனதின் சக்திகளை முடிந்த அளவிற்கு வளர்த்துக்கொள்ள வேண்டும். இதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். தேவன் கல்விக்கு எந்த ஒரு அளவையும் நிர்ணயிக்கவில்லை. நாம் அதற்கு ஒரு அளவை முடிவு செய்யக் கூடாது. ஆயினும் தேவனுக்காகவும் சக மனிதர்களின் நன்மைக்காகவும் நமது சாதனைகள் பயன்பட வேண்டும். தேவனை இச்சாதனைகள் கணம் பண்ணுபவையாக இருக்க வேண்டும். இப்படி இராதிருந்தால் இச்சாதனைகள் பயனற்றவைகளாகி விடும். நமது அறிவு ஒரு உயரிய நோக்கை அடைவதற்கான ஒரு படிக்கல்லாக நமக்கு இருக்க வேண்டும். இதை செய்தால் மட்டுமே அது தரத்தை பெறுகிறது.

புத்தக அறிவைவிட, இதயத்தின் கல்வி முக்கியமானது. இந்த உலகை பற்றியதான ஓர அறிவை பெற்றுக்கொள்ளுவது அவசியமே. ஆனால் இதற்கென நித்தியத்திற்குரியவைகளை விட்டுவிட்டாள் சரிசெய்யப்பட முடியாத தோல்வியை சந்திப்போம். ***Testimonies for the Church, Vol. 8, p. 311.***

### *இரட்டிப்பான நன்மை*

1ST Proof

நமது பிள்ளைகள் கிரயத்துக்கு கொள்ளப்பட்ட தேவனுடைய சொத்தாக இருக்கிறார்கள். பிள்ளைகளுக்காக நாம் செய்யும் எல்லாவற்றிலும் இதுவே நமது உந்துதலாக இருக்க வேண்டும். தேவ வார்த்தையிலிருந்து பிள்ளைகளுக்குத் தொடர்ந்து அறிவுரைகளை கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். இது அவர்களது இரட்சிப்பிற்கு ஏற்றதாக இருக்கும். சோதனையிலிருந்தும் அவர்களை விளக்கி வைக்கும். பெற்றோர்களும் இவர்களுடன் இணைந்து கற்றுக்கொள்ளுகிறார்கள். இது பெற்றோரின் அறிவை வளர்க்கின்றது. அவிசுவாசம் நீங்கும். விசுவாசமும் கிரியையும் கூடுகின்றது. தேவனை இப்படியாக பின்தொடர அவர்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை பெலப்படுகிறது. ***Review and Herald, May 6, 1909.***

### *இடறும் கற்களாக பெற்றோர்கள்*

உங்கள் பிள்ளைகளுக்கு என்ன உதாரணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? வீட்டில் என்ன ஒழுங்கு கடைபிடிக்கப்படுகின்றது? பிள்ளைகள் அன்பாக இருக்கவும் மற்றவர்மீது அக்கரை கொள்ளவும், ஆவிக்குரிய காரியங்களை மதித்து, தேவனுக்கு முதலிடம் கொடுக்கவும் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். ***Testimonies for the Church, Vol. 5, p. 424.***

ஒவ்வொரு குடும்பங்களும் கடைபிடிக்க வேண்டியவைகளை தேவன் நியமித்திருக்கிறார். இந்நியமங்கள் அன்புடனும் பயபக்தியுடனும் கைக்கொள்ளப்பட்டால், பிள்ளைகள் சிறு வயதிலும் நல்ல கிறிஸ்தவ குணத்தைப் பெற்றிருப்பார்கள். தேவ கட்டளைகளும் நியமங்களும் நல்ல ஒழுக்கத்துக்கு ஏதுவான பயிற்சியின் மதிப்பை தெளிவாக்குகின்றன. பெற்றோரின் வார்த்தைகளுக்கும் செயல்களுக்கும் எதிர்மறையான செல்வாக்கு ஆசிரியரின் வார்த்தைகளினாலும் செயல்களினாலும் கொண்டு வரப்படுகிறது. வழிதவறிப்போகும் பிள்ளைகளின் இதயங்கள் சத்தயத்தைப் புரிந்துகொள்ளுகின்றன. சத்தியத்தின் செல்வாக்குக்குள்ளாக வருகிறார்கள். ஆனால் இதற்கு எதிரான சோதனைகள் தகப்பனிடமிருந்தும் தாயிடமிருந்தும் வருகின்றன. இதனால் இவர்கள் விழுகிறார்கள். சாத்தானின் தந்திரங்களுக்கு பலியாகிறார்கள். பெற்றோர்கள் ஒத்துழைக்காவிட்டால் பிள்ளைகளின் பாதங்களை சரியான

பாதையில் வழிநடத்தமுடியாமற் போகிறது. துவறான உணர்வுகளை வெளிப்படுத்தும் வார்த்தைகள், நீதியின்றி நடந்துகொள்ளும் பெற்றோரின் வாயிலிருந்து வருகின்றன. பிள்ளைகளின் உண்மையான மனமாற்றத்திற்கு இதுவே தடையாக உள்ளது. ***Manuscript 49, 1901.***

***ஜெபத்துக்கேற்ற வாழ்க்கையை வாழுங்கள்***

***"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள்கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்." யோவான் 15 : 7.*** நீங்கள் ஜெபிக்கும் பொழுது இந்த வாக்குத்தத்தத்தை தேவனுக்கு முன்பாக வையுங்கள். பிசுத்தமாக்கப்பட்ட ஒரு தைரியத்துடன் நாம் தேவனிடம் செல்லலாம். அவரது வெளிச்சத்தை நம்மீது பிரகாசிக்க அவரிடம் உண்மையாக வேண்ட வேண்டும். நமது வேண்டுதலை கேட்டு தேவன் பதிலளிப்பார். ஆயினும் நாம் நமது ஜெபங்களுக்கேற்ற ஒரு வாழ்க்கையை வாழ வேண்டும். இதற்கு புறம்பான வகையில் நாம் நடந்துகொண்டால் பயன் இராது. ஒரு தந்தையை நான் கவனித்திருக்கிறேன். பிள்ளைகளுடன் சேர்ந்து வேதத்தை வாசிப்பார். பிறகு ஒன்றாக ஜெபிப்பர்கள். முழங்காலிலிருந்து எழுந்தவுடன் அவர் பிள்ளைகளை திட்ட ஆரம்பித்துவிடுவார். அவர் வேண்டியிருந்த ஜெபத்திற்கு தேவனால் எப்படி பதிலளிக்க முடியும்? பிள்ளைகளை திட்டிய பின்பு அவர் ஜெபித்தாலும் அந்த ஜெபம் பிள்ளைகளுக்கு நன்மையை கொடுத்குமா? நிச்சியமாக இல்லை. இப்படியாக ஒரு ஜெபம் ஏரெடுக்கப்பட்டாலும் அது பாவ அறிக்கையின் ஜெபமாக இருக்க வேண்டும்.

***திருமுழுக்கிற்கு ஆயத்தமாகும் காலம்***

வயது வந்து திருமுழுக்கு பெற்றுக் கொண்டால் மட்டுமே அவர்கள் தேவனது பிள்ளைகளாக மாறுகிறார்கள் என்று பிள்ளைகள் நினைத்துவிடும்படி நடந்து கொள்ளாதீர்கள். திருமுழுக்கு பெறுவதினால் பிள்ளைகள் கிறிஸ்தவர்களாக மாறுவதில்லை. அது அவர்கள் மனமாற்றம் அடையவும் செய்வதில்லை. அது ஒரு வெளிப்புறமான அடையாளமாக இருக்கிறது. இயேசுவை தங்களது இரட்சகராக விசுவாசிப்பதை அது காட்டுகிறது. தாங்கள் தேவ பிள்ளைகள் என்பதை உணர்ந்திருப்பதின் அடையாளமாக உள்ளது. இனி கிறிஸ்துவுக்காகவே வாழப்போவதை குறிக்கிறது. ***Manuscript 5, 1896.***

1ST Proof

திருமுழுக்கு எடுக்க விருப்பம் தெரிவிக்கும் பிள்ளைகளின் பெற்றோர்க்கு செய்ய வேண்டிய ஒரு வேலையுள்ளது. முதலில் தங்களை நன்றாக ஆராய்ந்து பிள்ளைகளுக்கு சரியான அறிவுரைகளை கொடுக்க வேண்டும். இது ஒரு புனிதமான முக்கிய சடங்காக உள்ளது. இதனுடைய பொருள் முழுமையாக புரிந்திருக்கப்பட வேண்டும். பாவத்திற்கு மனம் வருந்தி, மனஸ்தாபப்பட்டு, ஒரு புதிய வாழ்க்கைக்குள் நுழைவதே இதன் பொருள் கிறிஸ்துவிற்குள் இந்த புதிய ஜீவன் ஆரம்பமாகிறது. திருமுழுக்கு எடுக்கும்படி அவசரப்படுத்தக் கூடாது. பெற்றோர்களும் பிள்ளைகளும் திருமுழுக்கிற்கு தங்களை உட்படுத்தினல் என்னென்ன கடமைகளும் பொறுப்புக்களும் தங்கள் மீது விழுகின்றது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். பிள்ளைகள் இதை எடுக்கும்படியாக ஒப்புக்கொடுக்கும் பெற்றோர் பிள்ளைகளுக்கான நல்ல ஊழியர்களாக இருப்போம் என்று வாக்கு கொடுப்பவர்களாக இருக்கிறார்கள். பிள்ளைகள் நல்ல குணத்தை வளர்த்துக் கொள்ள வழிநடத்துவதே அவர்களது வேலையாகிறது. தேவ மந்தையின் இந்த ஆடுகளை கவனமாகவும் அக்கரை கொண்டும் பாதுகாக்க வேண்டும். இதை செய்ய தவறினால் தேவனை கணவீனப்படுத்துகிறார்கள்.

பிள்ளைகள் இயேசுவின் மீது அன்பு கூர்ந்து திரமுழுக்கு பெற விருப்பம் தெரிவிக்கும் சமயமே அவர்களது வாழ்வின் மகிழ்ச்சிகரமான வேளையாக இருக்கும். அவர்களிடம் உண்மையுடன் நடந்துகொள்ளுங்கள். திருமுழுக்கு பெறுவதற்கு முன்பதாக தேவனுக்கு வேலை செய்வதே தங்களது முதன்மையான நோக்கமா என்று கேளுங்கள். இதை எப்படி செய்யத் துவங்குவது என்பதை சொல்லுங்கள். இந்த முதற்காடங்களே முக்கியமானவைகளாக இருக்கின்றன. தேவனுக்கென்று எப்படியாக தங்கள் முதல் வேலையை செய்ய எளிமையாக கற்றுக்கொடுங்கள். அந்த வேலையை அவர்கள் சுலபமாக புரிந்து கொள்ளும்படியாக செய்யுங்கள். சுயத்தை தேவனுக்கு கொடுத்துவிடுவதை விளக்குங்கள். தேவ வார்த்தை சொல்லும்படி

கிறிஸ்தவ பெற்றோர்களின் ஆலோசனைகளுடன் இவர்கள் செயல்பட வேண்டும். ***Testimonies for the Church, vol. 6, p. 93, 94.***

*திருமுழுக்கிற்குபின் பெற்றோரின் கடமைகள்*

நீங்கள் செய்யவேண்டியுள்ளவைகளை குறைவற செய்துவிட்ட பிறகு, மனமாற்றத்தின் பொருளை புரிந்துகொண்டு பிள்ளைகளை மனமாறுவதை நீங்கள் கண்டால், அவர்கள் திருமுழுக்கு பெறட்டும். அவர்களுடைய அனுபவத்தை நீங்கள் ஆராய்ந்து பார்த்து, அது உங்களை திருப்திகொள்ள வைக்க வேண்டும். ஆயினும் மீண்டுமாக இதை சொல்லுகிறேன். முதலில் நல்ல மேய்ப்பர்களாக பணிபுரிய உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். அனுபவமில்லாத பிள்ளைகளின் பாதங்களை கீழ்ப்படிதல் என்ற இடுக்கமான பாதைவழியாக நடத்த வேண்டும். தேவன் பெற்றோரிடம் கிரியை செய்ய வேண்டும். கிறிஸ்தவ தாழ்மையிலும் அன்பிலும் நன்நடத்தையிலும் பிள்ளைகளுக்கு நல்ல முன் உதாரணங்களாக திகழ வேண்டும். சுயத்தை முழுமையாக இயேசுவிடம் கொடுப்பதை பிள்ளைகளுக்குக் காட்ட வேண்டும். பிள்ளைகள் திருமுழுக்கு எடுத்துக் கொள்ள அனுமதித்துவிட்டு, இதன்பின் அவர்கள் விருப்பம்போல செயல்பட விட்டு விடக் கூடாது. சரியான பாதையில் அவர்களை வழிநடத்த நமது கடமையை உணராதிருந்தால் பிள்ளைகள் விசுவாசம் இழந்து, சத்தியத்தின் மீது ஆர்வம் இல்லாமல் போனால், அதற்கு பெற்றோர்களாகிய நாமே காரணமாக இருக்கிறோம். ***Testimonies for the Church, vol. 6, p. 94, 95.***

தேவ ராஜியத்தின் குடும்ப அங்கத்தினர்களாவதற்கு பிள்ளைகள் ஆயத்தப்பட வேண்டும். இதை அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதே பெற்றோரது கடமையாக இருக்கிறது. பரலோக ராஜாவின் பிள்ளைகளாக அவர்கள் மாற வேண்டும். பிள்ளைகளது இரட்சிப்பிற்காக தளராத முயற்சியுடன் தேவனுடன் ஒத்துழைக்க வேண்டும். அவர்கள் தவறினால் திட்டாதீர்கள். திருமுழுக்கு எடுத்தப்பிறகும் தவறு செய்வதை சுட்டிக்காட்டி நகைக்காதீர்கள். அவர்கள் கற்க வேண்டிய பாடங்கள் அநேகம் உள்ளன என்பதை மனதில் கொள்ளுங்கள். தேவ பிள்ளையின் கடமைகளை புரிந்துகொள்ள இப்பாடங்களை கற்க வேண்டியுள்ளது.

*ஜெபக்கூட்டங்களுக்கு ஆயத்தப்படுதல்*



1ST Proof

ஜெபக்கூட்டங்களுக்கு வருவதற்கு முன்பாக நமது குடும்பங்கள் ஒரு வேலையை செய்ய வேண்டும். உணவிற்கான ஆயத்தங்களும், உடைக்கான ஆயத்தங்களும் இரண்டாவதாகவே இருக்கட்டும். வீட்டில் ஒவ்வொருவரும் தங்கள் இதயங்களை ஆராய வேண்டும். ஒரு நாளுக்கு மூன்று முறையாகிலும் ஜெபியுங்கள். இதனுடன் அவ்வப்பொழுதும் ஜெபியுங்கள். இயேசுவை வீட்டில் கண்டடையலாம். இல்லத்தில் நீங்கள் சந்தித்த இயேசுவை கூட்டங்களுக்கும் அழைத்து வாருங்கள். இதை நீங்கள் செய்தால் கூட்டத்தின் ஒவ்வொரு மணி நேரமும் விலையேறப்பெற்றதாக இருக்கும். தனிப்பட்ட ஆயத்தத்தை செய்யாமல் ஜெபக் கூட்டத்தில் இயேசுவின் பிரசன்னத்தை உணர்ந்து கொண்டு, அவர் வல்லமையை அனுபவிக்க நாம் எதிர்பார்க்க முடியாது.

உங்களுக்காகவும், கிறிஸ்துவிற்காகவும் உங்களை சுற்ற இருப்பவர்களுக்காகவும் இல்லத்தில் இவ்வேலையை செய்யுங்கள். இதற்கு முன்பாக ஜெபித்திராத வகையில் ஜெபியுங்கள். தேவனுக்கு முன்பாக உங்கள் இதயங்கள் உடையட்டும். உங்கள் வீடுகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். பிள்ளைகளையும் ஆயத்தப்படுத்துங்கள். அழகான உடைகளுடன் செல்லுவதைவிட தூய்மையான இதயத்துடன் சுத்தமான கரங்களுடன் செல்வதே முக்கியம் என்பதை சொல்லுங்கள். அவர்களது வழிகளில் இருந்திருக்கக் கூடும் எல்லா தடைகளையும் நீக்குங்கள். உங்களிடையே மனஸ்தாபங்கள் உருவாகியிருக்குமானால் அவைகளை சரி செய்து கொள்ளுங்கள். இதை செய்தால் தேவ பிரசன்னத்தை வீட்டில் வரவழைத்துக் கொள்ளுவீர்கள். ஜெபக் கூட்டத்திற்கு நீங்கள் செல்லும்பொழுது தேவ தூதர்கள் உங்களுடன் செல்லுவார்கள். அவர்களது பிரசன்னமும் ஒளியும் இருளின் தீய தூதர்களை விரட்டும். ***Testimonies for the Church, vol. 5, p. 164, 165.***

*விசுவாசத்துடன் சத்திய விதைகளை விதையுங்கள்*

வயலில் விதையை விதைக்கிறவருடைய வேலை, விசுவாசத்தால் செய்யப்படுகிறது. விதை முளைத்து வருவதை விதைத்தவன் புரிந்துகொள்ள முடியாது. ஆயினும் தேவன் இயற்கையில் நியமித்துள்ளவைகளை விசுவாசித்து விதைக்கிறான். விதை செடியாக

மாறும் என்று நம்பிக்கை கொண்டு விதைக்கிறான். பல மடங்கு பலனை எதிர்பார்த்து விதையை தூவுகிறான். இதைப்போலவே பெற்றோரும் ஆசிரியர்களும் வேலை செய்ய வேண்டும். அவர்கள் விதைக்கும் விதையின் பலனை எதிர்பார்க்கலாம்.

விதைக்கப்பட்ட விதையை ஆசீர்வதிக்க நாம் தேவனிடம் கேட்க வேண்டும். சிறு பிள்ளைகளையும் ஆவியானவர் ஆட்கொள்ளுவார். தேவனை நாம் விசுவாசித்தால் உலகின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியிடம் அவர்களை அழைத்துச் செல்லலாம். தேவ குடும்பத்தின் இளைய அங்கத்தினர்களுக்கு பெரிய விளைவுகளை தரக் கூடிய முக்கிய வேலை இதுவே. ***Testimonies for the Church, vol. 6, p. 105.***

***பாகம் - XVIII***

***விசுவாச வாழ்க்கையை தக்கவைத்துக் கொள்ளுதல்***

***அதிகாரம் - 77***

***இல்லத்தில் வேதப் புத்தகம்***

***பல வகைகளில் பயன்படுகிற புத்தகம்***

வேத புத்தகம் விரிவான தலைப்புகளையும், ஆழமான செய்திகளையும் கொண்டுள்ளது. ஒவ்வொருமனதின் ஆர்வத்தை தூண்டக்கூடிய காரியங்களளைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு இதயத்திற்கும் ஏற்புடையதாக இருக்கிறது. சரித்திரங்களும், உண்மையான வாழ்க்கை சரிதைகளும் அதின் பக்கங்களில் காணப்படலாம். அரசாங்க நிர்வாகத்திற்கும், வீட்டு நிர்வாகத்திற்குமான கோட்பாடுகளை கொண்டுள்ளது. மனித ஞானத்திற்கும் மேலானவைகளை உள்ளடக்கியதாக உள்ளது. ஆழமான தத்துவங்களும், இனிமையான சம நிலையான கவிதைகளும் அதில் இடம்பெற்றிருக்கின்றன. மற்ற மனித எழுத்தாளர்களின் புத்தகங்களைவிட மேன்மையானதாக அமைந்திருக்கிறது. உலகின் மற்ற எழுத்துக்களுடன் ஒப்பிட்டு பார்க்கும்பொழுது அளவில்லாத மதிப்பை பெற்றுள்ளது. வேதத்தின் மைய செய்தியே அதன் நிகரில்லா தன்மையை அதற்கு



1ST
Proof

கொடுக்கிறது. ஒவ்வொரு தலைப்பும் ஒரு புதிய தாக்கத்தை கொண்டுவருகிறது, ஒரு புதிய வெளிச்சத்தை பிரகாசிக்கச் செய்கிறது. பரலோகம் அளவிற்கும் உயரமான சத்தியங்களை நித்தியத்திற்கென்றும் பறைசாற்றுகிறது. ***Education, p. 125.***

தேவ வார்த்தைகள் சத்தியம் என்ற அணிகலன்களால் நிரப்பப்பட்டிருக்கிறது. அவைகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்களிலிருந்து இந்த விலையேறப்பெற்ற ஆபரணங்களை பெற்றோர்கள் வெளியே எடுத்து பிள்ளைகளுக்கு அவைகளின் ஜொலிப்புடன் காட்ட வேண்டும். வேதப்புத்தகம் ஒரு புத்தக புதையலாக உள்ளது. கிறிஸ்தவர்களாக வேத வார்த்தைகளின் வழியாக எல்லா நற்கிரியைகளுக்கும் உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். ***Signs of the Times,. Sep. 10, 1894.***

***வேத வார்த்தையில் தேவன் ஒரு விருந்தை வைத்திருக்கிறார்***

தேவன் அவரது வார்த்தையை படிக்கும் சிலாக்கியத்தை நமக்கு கொடுத்திருக்கிறார். இதில் ஒரு பெரிய விருந்தை தேவன் நமக்கு முன்பாக ஆயத்தப்படுத்தியுள்ளார். இந்த விருந்தில் நாம் பங்குகொள்ளும்பொழுது பல நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுகிறோம். வேத வார்த்தைகளை இயேசு அவரது மாமிசமாகவும், இரத்தமாகவும், ஆவியாகவும், ஜீவனாகவும் குறிப்பிட்டுள்ளார். தேவ வார்த்தைகளை நாம் படிக்கும்பொழுது ஆவிக்குரிய வல்லமை அதிகரிக்கிறது. கிருபையிலும் சத்திய அறிவிலும் வளருவோம். சுய கட்டுப்பாட்டின் பழக்கங்கள் உருவாக்கப்பட்டு பெலப்படுத்தப்படுகின்றன. பிள்ளை பருவத்திற்குரிய பெலவீனங்களை சுயநலம், பொறுமையின்மை, உணர்ச்சிவசப்படுதல், சோர்ந்துவிடுதல், போன்றவைகள் மறையும் இவைகளின் இடத்தில் கிறிஸ்தவ பண்புகள் மலரும். ***Counsels to Parents, Teachers and Students,. P. 207.***

வேத கதைகள், மற்றும் உவமைகளின் அழகான பாடங்கள் பிள்ளைகளுக்கான ஆவிக்குரிய ஆகாரங்களாக உள்ளன. தூய்மையான எளிமையான ஆலோசனைகள் தேவனது வார்த்தையில் இருக்கின்றன. பெியவர்களுக்கும் இவைகள் ஆவிக்குரிய உணவாக உள்ளன.

உங்களுக்கு முன்பாக எத்தகைய வேலை உள்ளது! தேவ பயத்திலும் அன்பிலும் இதைப் பற்றிக்கொள்ளுவீர்களா? அவரது வார்த்தையின் வழியாக தேவனுடன் தொடர்பு கொள்ளுவீர்களா? ***Letter 27, 1890.***

***நல்லொழுக்கத்தின் தரம்***

வாலிப மனங்களின்மீது தேவ வார்த்தைகளின் கிரியை இருக்க வேண்டும். நேர்மையின் தரமாக வேதம் இருக்க வேண்டும். கோபமாக திட்டுவதைவிட வேத வார்த்தைகளே திருத்தவும், வழிநடத்தவும், பிழைகளை திருத்தவும் அதிகமாகப் பயன்படும். பிள்ளைகளைத் திருத்த வேதத்தை பிரயோகிக்காமல், மற்ற வழிகளை கையாண்டு அவர்களை அடக்க முயன்றால், இது அவர்களின் கோபத்தைத் தூண்டவிடும். வேத தரத்தை எட்டும்படி பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். இதற்கு நேரம் எடுக்கும். விடாமுயற்சியும் ஜெபமும் இதற்குத் தேவை. வீட்டின் மற்ற வேலைகள் புறக்கணிக்கப்பட்டாலும் இது செய்யாமல் விடப்படக் கூடாது. ***Signs of the Times, Sep. 13, 1877.***

வேத சத்தியங்களை மனம் பெற்றுக்கொள்ளும் பொழுது உலக காரியங்களிலிருந்து உயர்த்தப்படும். தாழ்ந்த நிலையிலிருந்து ஒரு மேலான நிலையை அடையும். புயன்படுத்தப்பட வேண்டிய முறையில் வேதம் பயன்படுத்தப்பட்டு பாராட்டப்பட்டால் வல்லமையான ஒரு உள்ளான ஒழுக்கத்தை எல்லோரும் பெறுவார்கள். வாலிபர்களுக்கும் சரி வயோதிபர்களுக்கும் சரி இப்புத்தகம் இதை செய்யும் நன்நெறிகளை சார்ந்து நடக்கும் சக்தியை கொடுத்து சோதனைகளை மேற்கொள்ளச் செய்யும். ***Testimonies for the Church, Vol. 8, p. 319.***

எல்லா மனித அறிவாற்றல்களையும் ஆள வேண்டிய நியமங்களையும் கட்டளைகளையும் தேவன் நமக்குக் கொடுத்திருக்கின்றார். இவைகள் பரிசுத்தமானவைகளாகவும், நீதியானவைகளாகவும், நன்மையானவைகளாகவும் உள்ளன. இவைகளே வீட்டினுடைய செயல்பாட்டின் தராதரமாக இருக்க வேண்டும். இவைகளை விட்டு விலகுவது பாவமாகிறது. இவைகளே கிறிஸ்தவ மதத்தின் அடித்தளமாக உள்ளன. ***Review and herald Nov. 13, 1888.***



1ST
Proof

***அறிவாற்றலை பெலப்படுத்துகிறது***

படிக்கப்பட வேண்டிய விதத்தில் வேதம் படிக்கப்பட்டால் மனிதர்களின் அறிவாற்றல் பெலப்படும். தேவ வார்த்தையின் பாடங்களும், செய்திகளும், உன்னதமான நோக்கங்களையும் நல்ல பண்புகளையும் வளர்க்கும். வேதத்தில் கணம் பொருந்தியவைகளும் எளிமையாக விளக்கப்பட்டிருக்கின்றன. மனிதனுக்கு தேவையான குணவிருத்தியையும் மனவளர்ச்சியையும் வேதம் மட்டுமே கொடுக்க முடியும். மனிதனின் கற்பனை வேதத்தில் அளவின்றி திறக்கப்படலாம். இப்புத்தக்கதின் செய்திகள் தியானிக்கப்படும்பொழுது சிந்தனைகளும் உணர்வுகளும் தூய்மையான நல்ல தரத்திற்கு உயர்த்தப்படுகின்றன. மற்ற எந்த உயரிய புத்தகத்தைப் படித்தாலும் இது நடக்காது. தரமற்ற புத்தகங்களைப்பற்றி இங்கு பேச வேண்டிய அவசியம் இல்லை. எல்லா வகையான ஞானத்தின் ஊற்றாக தேவனுடைய வார்த்தை உள்ளது. வாலிபர்களின் மனங்கள் இதை புறக்கணித்துவிட்டால் உன்னதமான ஒரு வளர்ச்சியை அடைவதில்லை. நல்ல மனம் படைத்த நிலையான மனிதர்கள் இன்றைக்கு வெகு சிலரே உள்ளனர். இதற்கு காரணம் தேவன் மீது எவரும் அன்பு செலுத்துவதில்லை. தேவனுக்கு பயந்து நடப்போரும் எவரும் இல்லை. கிறிஸ்தவ மதத்தின் நன்நெறிகள் வாழ்க்கையில் அப்பியாசிக்கப்பட வேண்டிய அளவிற்கு கைக்கொள்ளப்படுவதில்லை.

நமது அறிவாற்றலை, நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்து வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தேவ வார்த்தை அதிகமாக படிக்கப்பட்டு அதின் சத்தியங்கள் விளங்கிக்கொள்ளப்பட்டிருந்தால் இப்பொழுது இருப்பதைவிட நாம் ஞானமான அறிவாற்றல் நிறைந்த மக்களாக இருந்திருப்போம். இதன் பக்கங்களை தேடுவதினால் சத்தியை பெற்றுக்கொள்ளுகிறோம். ***Christian Temperance and Bible Hygiene p. 126.***

***வீடும், சமுதாயமும், நாடும் செழித்தோங்க வேதமே அடித்தளம்***

வேத வார்த்தைகளின் பாடங்களை, வாழ்வின் எல்லா காரியங்களிலும் ஒரு மனிதன் செழித்தோங்கச் செய்கிறது. ஒரு தேசத்தின் வெற்றிக்கான அடிப்படை கோட்பாடுகளை இது விவரிக்கிறது.

இந்த நல்ல நெறிகளே ஒரு நாட்டின் செழிப்பின் மூலைக்கல்லாக இருக்கின்றன. சமுதாயத்தின் பாதுகாப்பும் வளர்ச்சியும் இவைகளில் அடங்கியுள்ளன. இவைகள் குடும்பத்தின் பாதுகாப்பாகவும் உள்ளன. இவைகள் இன்றி இந்த வாழ்க்கையில் எந்த மனிதனும் மகிழ்ச்சியையே உண்மையான மதிப்பை கண்டடைய முடியாது. நித்திய ஜீவனையும் பெற முடியாது. வாழ்க்கையின் எல்லா அனுபவங்களுக்கும், ஒரு மனிதனின் எல்லா சூழ் நிலைகளுக்கும் வேத வார்த்தையின் பாடங்களை அவசியமாகின்றன.

***வேத அறிவு ஒரு பாதுகாப்பு***

சிறுவயதிலிருந்து திமோத்தேயு வேத வாக்கியங்களை அறிந்தவராக இருந்தார். இந்த அறிவு சுற்றியிருந்த தீமையிலிருந்து அவருக்கு ஒரு பெரிய பாதுகாப்பாக இருந்தது. சுய நலமான இன்பங்களைத் தேடி தன்னை திருப்திப்படுத்திக் கொள்ளும் சோதனையிலிருந்தும் இது அவரை பாதுகாத்தது. இந்தப் பாதுகாப்பு நமது பிள்ளைகளுக்கும் தேவை. பெற்றோரும், கிறிஸ்துவின் பிரதிநிதிகளும் வேத வார்த்தையில் பிள்ளைகள் நன்றாக அறிவுறுத்தப்படுவதை பார்த்துக் கொள்ள வேண்டும். ***Testimonies for the Church, Vol. 4, p. 398.***

***வேதத்தின்மீது அன்பு செலுத்துதல் இயற்கையாக வருவதில்லை***

வாலிபர்கள் அறியாமை நிறைந்தவர்களாகவும், அனுபவமற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இந்நிலையில் வேத வார்த்தைகளின்மீதும் அதின் சத்தியங்களின் மீதும், தானாகவே அன்பு வராது. சாத்தானின் கிரியைகளில் இருந்து இவர்களைப் பாதுகாக்க தடைச் சுவர்கள் எழுப்பப்பட வேண்டும். இதற்கென பெரிய முயற்சிகள் ஏரெடுக்கப்பட வேண்டும். இதை நாம் செய்யாமறபோனால் இவர்களை சாத்தான் கொள்ளை கொண்டு போய்விடுவான். தேவனது கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டிஎயதையும், பாவக் கறைகளிலிருந்து நம்மை சுத்திகரிக்கும் இயேசுவின் மீதான விசுவாசத்தையும் இளம் பிராயத்திலிருந்தும் பிள்ளைகளுக்கு நாம் சொல்லிக் கொடுக்க வேண்டும். இந்த விசுவாசம் ஒவ்வொரு நாளும்



1ST Proof

சொல்லினாலும் செயலினாலும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். ***Testimonies for the Church, Vol. 5, p. 329.***

***வாலிபர்கள் வேத வாசிப்பை புறக்கணிப்பார்கள்***

இள வயதினரும், வயது சென்றவர்களும் வேத வாசிப்பை புறக்கணிக்கிறார்கள். வேதத்தை படித்து அதை தங்கள் வாழ்க்கையின் சட்டமாகக் கொள்ளுவதில்லை. பெரியவர்களை பார்க்கிலும் பாலிபர்கள் இத்தவறை அதிகமாக செய்கிறார்கள். இவர்களில் அநேகர் மற்ற புத்தகங்களை படிக்க நேரம் செலவழிப்பார்கள். வேதத்தை வாசிக்க தவறுவார்கள். நித்திய ஜீவனுக்கான வழியைக் காட்டும் புத்தகத்தைப் புறக்கணிக்கிறார்கள். வெறுமையான கதைகள் கவனமாக படிக்கப்படுகின்றன. வேதம் ஒதுக்கி வைக்கப்படுகிறது. பரிசுத்தமான ஒரு மேலான வாழ்விற்குரிய வழிகாட்டியாக இது உள்ளது. கதை புத்தகங்களை படித்து வாலிபர்களின் கற்பனைகள் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளன. இதனால் வேதப் புத்தகத்தைப் படிக்க அவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை.

வாலிபர்கள் வேதத்தை புறக்கணித்தால் அவர்களது மனங்கள் ஒரு நல்ல உன்னதமான வளர்ச்சியைப் பெறுவதில்லை. ஞானத்தின் மிக உயரிய ஊற்றாக வேத வார்த்தை உள்ளது. இந்த ஞான ஊற்றை அவர்கள் அசட்டை செய்கிறார்கள். நாம் தேவனது பிரசன்னத்தில் அவரது உலகில் வாழ்கிறோம். அவருடைய சாயலைப் பெற்றிருக்கிறோம். தேவன் நம்மை கவனிக்கிறார். நம்மீது அன்பு செலுத்துகிற். நமது நலனைக் குறித்து அக்கரையுள்ளவராக இருக்கிறார். நாம் சிந்திப்பதற்கான அருமையான செய்திகளாக இவைகள் உள்ளன. நல்ல தரமுடைய ஆழமான தியானங்களுக்குள்ளாக இச்சத்தியங்கள் நம்மை வழிநடத்தும். இவைகளுக்கு தன் மனதையும் இதயத்தையும் திறக்கும் நபர் இவ்வுலகின் சாதாரண உணர்வுகளுக்கேற்ற காரியங்களினால் திருப்தி அடைய முடியாது. ***Counsels to Parents, Teachers and Students, p. 139.***

***பெற்றோரது தவறு பிள்ளையிடம் பிரதிபலிக்கிறது***

சிறு வயதிலும் பிள்ளைகள் பெற்றோர்களை கவனிக்கிறார்கள். பெற்றோர்கள் தேவ வார்த்தையை தங்கள் வழிகாட்டியாக கொள்ளாமல், அதன் செய்திகளை அசட்டை செய்தால் இந்த ஆவியே பிள்ளைகளையும் படிக்கும். ***"எனக்கு கவலை இல்லை என் வழியையே நான்***

*பின்பற்றுவேன்"* என்று கூறுவதைப் போன்ற மனப்பான்மையை பிள்ளைகளும் காட்டுவார்கள். ***Manuscript 49, 1898.***

***வேத வார்த்தைக்கு அதன் கனம் பொருந்திய இடத்தைக் கொடுங்கள்***

பேரிய வெளிச்சத்தைப் பெற்ற மக்களாக நாம் இருக்கிறோம். நமது வார்த்தைகளும், பழக்கங்களும், குடும்ப வாழ்விலும், நமது உறவுகளிலும் மற்றவர்களை சீர்திருத்துபவர்களாக இருக்க வேண்டும். மற்றவர்களை உயாத்தும்படியாக நமது நடத்தை இருக்க வேண்டும். உங்கள் வீடுகளில் தேவனுடைய வார்த்தைக்கு அதன் இடத்தைக் கொடுத்து அதை கணப்படுத்துங்கள். வீட்டின் வழிகாட்டியாக இது இருக்கட்டும். துன்பத்தில் ஆலோசனைகாரனாகவும் ஒவ்வொரு பழக்கத்தின் தரமாகவும் வேதம் கொள்ளப்பட வேண்டும். தேவனது சத்தியமும், அவரது நீதியின் ஞானமும் ஒவ்வொரு குடும்பத்தையும் ஆளுகை செய்ய வேண்டும். இது நடந்தால் ஒழிய குடும்பத்தின் எந்த நபரும் வாழ்வில் செழித்து விளங்க முடியாது. எனது சகோதரிகள் இதை புரிந்துகொள்ளுவார்களா? தாய், தந்தையர் தேவனுடைய வேலையை ஒரு பாரமாக நினைக்கின்றனர். இந்த சோம்பலான பழக்கத்திலிருந்து இவர்கள் விடுபட வேண்டும். சத்தயத்தின் வல்லமை இல்லத்தை பரிசுத்தப்படுத்தும் கருவியாக இருக்க வேண்டும். ***Letter 107, 1898.***

வேத வார்த்தைகளில் உள்ள ஆலோசனைகளை பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும். வேதத்தின் ஒவ்வொரு நியமத்தையும், ஒவ்வொரு வாக்கியத்தையும் பிள்ளைகளுக்குச் சொல்ல வேண்டும். நீங்கள் திருமுழுக்கு எடுத்த வேளையில் இதை செய்வதாக வாக்களித்துள்ளீர்கள். உலக பிரகாரமான எந்த காரியமும் இதை நீங்கள் செய்வதற்கு தடையாக இருக்க வேண்டும். பிள்ளைகளின் ஆத்துமாக்களை காப்பாற்றிக் கொள்ள உங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்யுங்கள். நாம் பெற்ற பிள்ளைகளுக்குத் தத்தெடுத்துக் கொண்ட பிள்ளைகளுக்கும் இதை செய்ய வேண்டும். ***Manuscript 70, 1900.***

***வேத வார்த்தை வீட்டின் பாட புத்தகம்***

பிள்ளைகள் தேவனுக்கு ஊழியம் செய்து உலகிற்கு நன்மை செய்ய பெற்றோர் விரும்பினால் வேதத்தை வீட்டின் பாட புத்தமாகக் கொள்ள வேண்டும். சாத்தானின் தந்திரங்களை அது வெளியரங்கமாக்குகிறது. மனித இனத்தை உயர்த்துகிறது. ஒழுக்கக் கேடுகளை கண்டித்து திருத்துகிறது. நன்மை தீமை பகுத்தறியும் கருவியாக உள்ளது. வேறு பாடங்கள் கற்றுக்கொடுக்கப்பட்டாலும் வேதத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். அதனிடத்தை அதற்கு நாம் கொடுத்தால் தேவன் கனப்படுத்தப்படுவார். உங்களது பிள்ளைகளின் மனமாற்றத்திற்காக தேவன் உங்களுக்காக கிரியை செய்வார். சத்தியமும், அழகும் ஒரு ஆழமான சுரங்கத்தைப் போல இந்த பரிசுத்த புத்தகத்தில் உள்ளன. பிள்ளைகள் இதில் ஆர்வம் காட்டாமல் இருப்பதற்கு பெற்றோரே காரணமாக இருக்கின்றனர். பிள்ளைகளின் ஆர்வங்களைத் தூண்டும் வகையில் வேத வார்த்தைகளை பிள்ளைகளுக்கு முன்பாக வைப்பதில்லை. ***Testimonies for the church Vol. 5, p. 322.***

சாத்தான் வஞ்சகமாக இயேசுவை சோதிக்க வந்தான். ***"என்று எடுதியிருக்கிறதே"*** என்ற ஒரே ஆயுதத்தை அவனுக்கு எதிராக இயேசு பயன்படுத்தினார். வேத சத்தியங்களை சொல்லிக் கொடுக்கும். மகத்தான வேலையை பெற்றோர்கள் செய்ய வேண்டும். மகிழ்ச்சி நிறைந்த ஒரு மன நிலையில் தேவன் கூறியிருக்கும் சத்தியங்களை பிள்ளைகளுக்கு முன்பாக வையுங்கள். பெற்றோர்களாக உங்கள் வாழ்க்கையில் அன்பையும், தயவையும் பொருமையையும் கைக்கொண்டு பிள்ளைகளை உங்களிடம் நெருக்கமாக சேர்த்துக் கொள்ளங்கள். இதை செய்வீர்களானால், பிள்ளைகளுக்கு நல்ல பாடங்களாக நீங்களே இருப்பீர்கள். அவர்களது விருப்பங்களுக்கு விட்டுவிடாதீர்கள். தேவ வார்த்தையை பின்பற்றுவதே உங்கள் வேலை என்பதை அவர்களுக்கு காட்டுங்கள். தேவ பயத்திலும் தேவ கடிந்துறையிலும் பிள்ளைகளை வழிநடத்துங்கள். ***Manuscript 9, 1896.***

***வேதத்தை நியர்த்தியாக ஒழுங்குடன் தொடர்ந்து படியுங்கள்***

வேதத்தை வாசிப்பதில் ஒரு ஒழுங்கை கைக்கொள்ளுங்கள். இதை தவறாது செய்ய உலக காரியங்களில் எதையேனும்



1ST Proof

குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

தேவைப்பட்டால் ஒதுக்கி வையுங்கள். இதை செய்யத் தவறாதீர்கள். ஜீவ அப்பத்தினால் ஆத்துமா போஷிக்கப்படும்படியாக பார்த்துக்கொள்ளுங்கள். ஒரு மணி நேரமோ அல்லது அரை மணி நேரமோ நீங்கள் வேதத்துடன் செலவிட்டால் மிகுந்த நல்ல பலன்களைப் பெறுவீர்கள். வேதமே அதை விளக்கிக் கொள்ளட்டும். ஒரு தலைப்பைக் குறித்து வேதம் பல இடங்களில் என்ன கூறுகிறது என்பதை படியுங்கள். விருந்தாளிகளுக்காகவோ, உங்களை சந்திக்க வருபவர்களுக்காகவோ இதை நிறுத்தாதீர்கள். அவர்களையும் இதில் பங்கெடுக்க வையுங்கள். உலக இன்பங்களை பெற்றுக்கொள்ளுவதைவிட தேவ வார்த்தையின் அறிவை பெற்றுக்கொள்ளுவதே முக்கியமானது என்பது புரிந்துகொள்ளப்படட்டும். ***Review and Herald, Oct. 9, 1883.***

ஒவ்வொரு நாளும் உண்மையுடனும் ஜெபத்துடனும் நாம் வேதத்தை வாசித்தால் அழகான சத்தியங்களை தெளிவாகவும் ஆழமாகவும் விளங்கிக் கொள்ளவோம். ***Counsels on Sabbath School Work. P. 23.***

***ஓய்வு நாள் பள்ளிப் பாடங்களை எல்லோரும் படிக்கட்டும்***

ஓய்வு நாள் பள்ளியானது பெற்றோரும் பிள்ளைகளும் வேத வார்த்தைகளை படிக்க ஒரு தருணத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இதன் நன்மையை பெற பெற்றோரும் பிள்ளைகளும் முன் கூட்டியே ஓய்வு நாள் பள்ளிப் பாடங்களை படித்திருக்க வேண்டும். சொல்லப்பட்டிருக்கும் பாடங்களை முழுமையாக தெரிந்துகொள்ள இது உதவும். ஆவிக்குரிய செய்திகளும் நன்கு மனதில் பதியும். படித்து கொண்டிருக்கும் ஒரு வசனத்தின் முழுமையான பொருளை கண்டுகொள்ளத் தக்கதாக வாலிபர்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

பெற்றோர்களே ஒவ்வொரு நாளும் பிள்ளைகளுடன் சேர்ந்து ஓய்வு நாள் பாடத்தை படிப்பதற்கு நேரத்தை ஒதுக்குங்கள். தேவைப்படுமானால் மற்றவர்களை சகஜமாக சந்திக்கும் வேலையை வேண்டுமானால் ஒத்திவையுற்கள். பரிசுத்தமான சரித்திரங்களை படிக்கும் நேரத்தை தியாகம் செய்து விடாதீர்கள். பெற்றோர்களும் பிள்ளைகளும் இதனால் நன்மையை பெறுவர். பாடத்துடன் தொடர்புடைய முக்கிய வசனங்கள் மனப்பாடம் செய்யப்படட்டும். கடமைக்கென்ற இது செய்யப்பட



1ST
Proof

வேண்டியதில்லை. ஒரு அருமையான சிலாக்கியமாக பாவிக்கப்பட்டு இவ்வேலை நடக்க வேண்டும். ஆரம்பத்தில் மனப்பாடம் செய்வது கடினமானதாக தெரியலாம். இதை தொடர்ந்து செய்யும்பொழுது இக்கடினம் நீங்கிவிடும். சிறிது காலத்திற்குப் பிறகு வசனங்களை மனப்பாடம் செய்துகொள்ளுவது மகிழ்ச்சியை அளிக்கும். இந்த பழக்கம் ஆவிக்குரிய வளர்ச்சிக்குப் பெரிய உதவியாக இருக்கும். ***Counsels to Parents, Teachers and Students,. P. 137, 138.***

வேத தீர்க்கதரிசனங்களையும் வேதத்தின் நியமங்களையும் பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்லி கொடுக்க வேண்டும். இது ஒரு புனிதமான கடமையாக பெற்றோர் பார்க்க வேண்டும். வீட்டில் இப்பாடங்களை பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஓய்வு நாள் பற்றிப் பாடங்ளில் இவர்களும் ஆர்வம் காட்ட வேண்டும். பிள்ளைகளுடன் சேர்ந்து படிப்பதினால் படிக்கப்படுபவைகள் முக்கியமானவைகள் என்பதை காட்டுகிறார்கள். வேத அறிவை பெற்றுக்கொள்ள ஆசையைத் தூண்டுகிறார்கள். ***Testimonies on Sabbath School Wirk. P. 111.***

***மேலோட்டமான தகவல்களினால் திருப்தியடையக் கூடாது***

வேத வார்த்தைகளை முழுமையாகப் புரிந்துகொள்ளும் முக்கியத்துவம் புரிந்துகொள்ளப் படுவதில்லை. *“ கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.” 2 தீமோத் 3 : 15- 17.* வேத வார்த்தைகளுக்கு நமது முதன்மையான கவனத்தைச் செலுத்த வேண்டும். மேலோட்டமான அறிவைப் பெற்றுக்கொண்டு திருப்தியடைந்துவிடக் கூடாது. சத்திய வார்த்தைகளின் முழு பொருளையும் அறிந்துகொள்ள பிரயாசப்பட வேண்டும். பரிசுத்த

ஆவியானவரிடமிருந்து ஆழமாக குடிக்க வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students,. P. 139.***

***பிள்ளைகளது அனுபவங்களுக்கேற்ற பாடங்கள்***

பிள்ளைகளின் மனங்களை நாம் கவனிக்க வேண்டும். எவைகளின்மீது ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இக்காரியங்களைப் பற்றி வேதம் என்ன சொல்லுகிறது என்பதை அவர்களுக்கு வேதத்திலிருந்து கற்றுக்கொடுக்க வேண்டும். நம் ஒவ்வொருவரையும் தேவன் தாமே நமது பிரத்தியேக தனி இயல்புகளுடனும் சுபாவங்களுடனும், மனோபாவங்கனுடனும் படைத்திருக்கிறான். எல்லா நபர்களுக்கும் வேதம் ஒரு செய்தியை வைத்திருக்கிறது. தங்களுடைய வாழ்விற்கு தொடர்புடையதாக இருப்பதை இம்மாணவர்கள் பார்க்க வைக்க வேண்டும். வேதத்தை தங்கள் ஆலோசகராகக் கொள்ள கற்றுக்கொடுக்க வேண்டும்.

வேதத்தின் முழுமையும், ஆழமும், பொருளும் தீர்க்கப்பட முடியாது. அதின் பொக்கிஷங்களை தேடும்படி பிள்ளைகளையும் வாலிபர்களையும் ஊக்குவியுங்கள். ***Education, p. 188.***

***ஒவ்வொருவரும் தனியாகவும் படிக்க வேண்டும்***

தாய் தந்தையர் ஒரு பெரிய பொறுப்பை சுமக்கிறார்கள். பிள்ளைகளுக்கு அவர்கள் செய்ய வேண்டியவைகளே இப்பொறுப்பாக உள்ளது. வேதத்தை விசுவாசித்து அதை படிக்கும் பெற்றோர்கள் தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று உணருவார்கள். தேவ பிரமாணத்திற்கு புறம்பாக செல்லக் கூடாது என்பதையும் புரிந்துகொள்ளுவார்கள். எவரேனும் இவர்களை வேத வார்த்தைகளை அசட்டை செய்ய வழிநடத்தினால், நியாயத் தீர்ப்பில் அதற்கான கணக்கைக் கொடுப்பார்கள். பெற்றோர்கள் தங்கள் ஆத்துமாக்களையும், பிள்ளைகளின் ஆத்துமாக்களையும் தேவ ஊழியர்களை நம்பியும் விட்டுவிடக் கூடாது. தேவனையே நம்பி சார்ந்திருக்க வேண்டும். சிருஷ்டிப்பினாலும் மீட்பினாலும் நாம் தேவனுடையவர்களாக இருக்கிறோம். பெற்றோர்கள் தாங்களே வேதத்தை தேடி வாசிக்க வேண்டும். இரட்சிப்பிற்காக தேவ ஊழியர்களைக் கூட சார்ந்து இருக்கக் கூடாது.



1ST Proof

சத்தியத்தை அவர்களே படித்துக் கொள்ள வேண்டும். ***Manuscript 33, 1900.***

***பிள்ளைகளின் ஆர்வங்களைத் தூண்டும் வேத வாசிப்பு***

வேதத்தைப் படிக்க வாலிபர்கள் ஆசைப்பட வேண்டும். இது அவர்களுக்குக் கற்றுத்தரப்பட வேண்டும். நமது மனங்களிலும் சிந்தனைகளிலும் வேதத்திற்கு முதலிடத்தைக் கொடுப்போம். நுமக்கு தேவைப்படும் எல்லாவற்றிர்கான மேலான அறிவு இதில் கொடுக்கப்பட்டுள்ளது. ***Review and Herals Oct. 9, 1883.***

இவ்வேலையைச் செய்ய பெற்றோர்கள் முதலில் வேத வார்த்தையை அறிந்திருக்க வேண்டும். பிள்ளைகளிடம் தேவையற்ற வார்த்தைகளையும், பயனற்ற கதைகளையும் பேசுவதைவிட வேதத்தின் செய்திகளை பிள்ளைகளுக்குக் கூற வேண்டும். ஞானிகளுக்காக மட்டுமே இப்புத்தகம் எழுதப்படவில்லை. பாமர மக்களுக்காக எளிமையாக எழுதப்பட்டது. வேதத்தின் பெரும்பான்மையான பகுதிகள் சரியாக விளக்கப்பட்டால் ஆர்வத்தைத் தூண்டுவாதகவே இருக்கும். சிறு பிள்ளைகளுக்கும் பெரிய நன்மையைக் கொடுக்கும்.

வேதம் பிள்ளைகளை சோர்வடையச் செய்துவிடும் என்று நினைக்காதீர்கள். ஞானமான ஒரு ஆலோசகரின் வழிநடத்துதலின் கீழ் வேதம் ஆசைப்படக் கூடிய ஒன்றாக இருக்கும். ஜீவ அப்பமாக இருக்கும். பழமையான ஒன்றாக மாறாது. பிள்ளைகளையும் வாலிபர்களையும் கவரும் புத்துயிரும் அழகு் அதில் உள்ளது. பூமியின்மேல் பிரகாசிக்கும் சூரிய ஒளியைப்போல் இது உள்ளது. தொடர்ந்து சூரிய ஒளி பிரகாசத்தாலும் முடிவடைவதில்லை. வேதமும் இப்படிப்பட்டதே. வேத சரித்திரங்களையும், அதன் கோட்பாடுகளையும் பிள்ளைகளும் வாலிபர்களும் படிக்க வேண்டும். இதை படித்தால் மற்ற உலக புத்தகங்கங்கள் இதனுடன் ஒப்பிடப்படும்பொழுது தரமற்றவைகளாக இருப்பதைப் பார்ப்பார்கள். இங்கு அன்பின் ஊற்றையும் இரக்கத்தின் ஊற்றையும் பார்ப்பார்கள். ***Counsels to Parents, Teachers and Students,. P. 171.***

பெற்றோர்களே பிள்ளைகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆலோசனைகள் எளிமையானவைகளாக இருக்கட்டும். பிள்ளைகள் அவைகளை தெளிவா புரிந்து கொள்ளுகின்றனரா என்பதையும் கவனியுங்கள். வேதத்திலிருந்து நீங்கள் கற்கும் பாடங்களை பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். புரிந்துகொள்ள தவறாதபடி பிள்ளைகளுக்கு இவைகளை விளக்குங்கள். வேத வார்த்தையிலிருந்தும் தங்கள் அனுபவங்களிலிருந்தும் வேத தரத்திற்கு ஏற்றவிதத்தில் வாழ கற்றுக்கொடுங்கள். பிள்ளை பருவத்திலும் வாலிபத்திலும் பயனுள்ள நல்ல வாழ்வுகளை அவர்கள் வாழலாம். இத்தகைய வாழ்க்கை பெரிய நன்மைகளைக் கொண்டுவரும். ***Counsels to Parents, Teachers and Students,. P. 109.***

***புதிய சிந்தனைகளைக் கொடுங்கள், சிறப்பான முறைகளை உபயோகியுங்கள்***

நமது பரம பிதா வேதத்தை கொடுத்த பொழுது சிறு பிள்ளைகளையும் மனதில் கொண்டிருந்தார். மனிதர்களின் எந்த புத்தகமும் வேதத்தின் கதைகளைப் போன்று இதயத்தை பற்றிக் கொள்ள முடியாது.

இந்த எளிமையான கதைகளில் தேவ பிரமாணத்தின் கூறுகள் விளக்கப்படுகின்றன. பிள்ளைகளின் பருவத்திற்கு ஏற்றபடி விளக்கங்களைக் கொடுத்து ஆசிரியர்களும் பெற்றோர்களும் இந்த தேவ நியமத்திற்கு கீழ்ப்படியலாம். ***“ நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி,” உபா 6 : 7.***

வரைபடங்கள், சாதாரண படங்கள், கரும்பலகைகள் போன்றவற்றைக் கொண்டு வேத பாடங்கள் மனதிலிருந்து நீங்காதபடி விவரிக்கப்படலாம். ஆசிரியர்களும் பெற்றோர்களும் புதிய முறைகளைக் கண்டுபிடிக்க பிரயாசப்பட வேண்டும். வேதத்தை பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க ஆழமாக சிந்தித்து முழு முயற்சியுடன் செயல்பட வேண்டும்.



1ST Proof

***வேதம் ஒரு வழிகாட்டி***

தேவ பயத்திலும் தேவ கடிந்துறையிலும் உங்கள் பிள்ளைகளை வளர்க்க வேத வார்த்தைகளை உங்கள் வழிகாட்டியாக வைத்துக் கொள்ளுங்கள். இயேசுவின் வாழ்வும், குணமும் அவர்கள் பின்பற்ற வேண்டிய உதாரணமாக முன்வைக்கப்படட்டும். அவர்கள் தவறு செய்தால், அப்பாவங்களைக் குறித்து தேவன் என்ன சொல்லுகிறார் என்பதை வேதத்திலிருந்து படித்துக் காட்டுங்கள். கவனத்துடன் தொடர்ந்து செயல்பட வேண்டும். பெற்றோர்களாலும், ஆசிரியர்களாலும் திருத்ததப்படாத ஒரு துற்குணம் மனதின் சமநிலையை இழக்கச் செய்து முழு குணத்தைக் கெடுத்துவிடும் புது இதயத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள். புதிய நோக்கங்களும், விருப்பங்களும் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் கற்றுக்கொடுங்கள். கிறிஸ்துவிடமிருந்து உதவி பெற்று தேவ குணத்தை வேத வார்த்தைகளிலிருந்து புரிந்துகொள்ள வேண்டும். ***Signs of the Times,. May, 25, 1882.***

***அதிகாரம் - 78***

***ஜெபத்தின் வல்லமை***

***குடும்ப ஜெபத்திற்கான தேவை***

ஒவ்வொரு குடும்பமும் அதனுடைய ஜெப பீடத்தைக்கட்ட வேண்டும். தேவனுக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்பதை உணர்ந்துகொண்டு இதை செய்ய வேண்டும். பிள்ளைகளைப் பயிற்றுவித்துக் கல்வி கற்றுக்கொடுப்போருக்கு வல்லமையும் ஊக்கமும் அவசியம். மற்ற வேலைகளைச் செய்யும் நபர்களைவிட இவர்களுக்கு அதிக வல்லமை தேவைப்படுகிறது. தேவன் இல்லாமலேயே வாழலாம் என்பதைப்போன்று ஒரு உதாரணத்தை நாம் அனுதினமும் கொடுக்கக் கூடாது. இத்தவறை செய்தால் தேவன் ஏற்றுக் கொள்ளுவதில்லை. இந்த வாழ்க்கைக்குரிய கல்வியை மட்டும் கொடுத்தால், பிள்ளைகள் நித்தியத்திற்கான எந்த ஆயத்தத்தையும் செய்யமாட்டார்கள். தேவனில்லாமல் வாழ்வார்கள், தேவனில்லாமலே மறித்தும்போவார்கள். பெற்றோர்களே இவர்களது ஆத்துமாக்களின் கணக்கை தேவனிடம்

கொடுக்க வேண்டும். பெற்றோர்களே காலையிலும் மாலையிலும் தேவனைத் தேடுங்கள். அன்பாகவும் ஞானமாகவும், தயவுடனும் பிள்ளைகளை வழிநடத்தக் கற்றக்கொள்ளுங்கள்.

*குடும்ப ஜெபம் செய்யப்படுவதில்லை*

ஒவ்வொரு குடும்பமும் ஒரு ஜெப வீடாக இருக்க வேண்டிய காலம் இது. அவபக்தியும் அவநம்பிக்கையும் விசுவாசத்தை மேற்கொண்டுள்ளது. பாவம் நிறைந்திருக்கிறது. ஆத்துமத்திற்குள்ளாகவும் தீமை வல்லமையுடன் நுழைகிறது. தேவனுக்கு எதிரான கலகம் வாழ்க்கையில் உருவாகிறது. புாவத்துக்கு அடிமைப்பட்டு நல்லொழுக்கம் சாத்தானின் சர்வதிகாரத்தின் கீழாக வந்துவிட்டது. சோதனைகளின் விளையாட்டு கனமாக ஆத்துமத்தை சாத்தான் மாற்றுகிறான். வல்லமை நிறைந்த ஏதேனும் ஒரு கரம் நடப்படாவிட்டால் எல்லோரையும் சாத்தான் வழிநடத்திக் கொண்டு சென்று விடுவான்.

இந்த ஆபத்தான காலக்கட்டத்திலும் கிறிஸ்தவர்களாக தங்களை பரைசாற்றிக்கொள்ளும் சிலர் குடும்ப ஜெபம் செய்வதில்லை. வீட்டில் தேவனை கனப்படுத்துவதில்லை. தேவனை நேசித்து அவருக்குப் பயந்து நடக்க கற்றுக்கொடுப்பதில்லை. சிலர் தேவனைவிட்டு வெகு தூரம் சென்றுவிட்டனர். தேவனிடம் திரும்பினால் ஆக்கினைக்குள்ளாக்கப்படுவார்கள் என்று நினைத்துவிடுகின்றனர். கிருபையின் சிங்காசனத்தண்டை அவர்களால் வர முடிவதில்லை. ***"ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்."*** *எபிரெயர் 4:16.* ***"அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்."*** *1 தீமோ 2: 8.* தேவனுடன் இவர்களுக்கு ஒரு உயிருள்ள தொடர்பில்லை. பக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு வல்லமையில்லாதவர்களாக இருக்கிறார்கள். ***Testimonies for the Church, Vol. 7, p. 42.***



1ST Proof

ஜெபம் அவசியமானதல்ல என்ற கருத்து, சாத்தானின் வெற்றிகரமான ஆயுத்தமாக இருக்கிறது. இதைக் கொண்டு அவன் பல ஆத்துமாக்களை அழித்துவிட்டான். ஜெபமானது தேவனோடு நாம் பேசுவதாகும். ஞானம், வல்லமை, மனமகிழ்ச்சி, சமாதானம் ஆகியவைகளின் ஊற்றான தேவனை ஜெபம் செய்வதின் வழியாக தொடர்பு கொள்ளுகிறோம். ***Testimonies for the Church, Vol. 7, p. 42.***

*ஜெபமில்லாத வீட்டின் பரிதாபம்*

ஜெபமில்லாத வீட்டைப் பார்க்கிலும் என் மனதை வருந்தவைப்பது எதுவும் கிடையாது. இத்தகைய இல்லங்களில் ஒரு நாள் தங்குவது கூட பாதுகாப்பற்றதாக எனக்குத் தோன்றுகிறது. ஜெபத்தை செய்ய தவறுவோரை அறிவுறுத்துவதற்கு மட்டுமே அவ்வீடகளுக்குச் செல்வேன். இந்த தவறின் பலன்களை பிள்ளைகளிடம் பார்க்கலாம். தேவ பயம் இவர்களிடம் இருக்காது. ***Signs of the Times,. Aug. 7, 1884.***

*கடமைக்கென்று ஜெபித்தல் ஏற்றுக்கொள்ளப்படாது*

பெரும்பான்மையான இடங்களில் காலை, மாலை ஜெபங்கள் ஒரு சடங்கைப் போல் இருக்கின்றன. ஒரே வாக்கியங்களும் வார்த்தைகளும் மீண்டும் மீண்டும் சொல்லப்படுகின்றன. ஆர்வமற்ற ஒரு மந்தமான நிலை காணப்படுகிறது. உண்மையான ஜெப வாஞ்சையோ, நன்றியுணர்வோ இருப்பதில்லை. இப்படிப்பட்ட ஆராதனைகளை தேவன் ஏற்றுக்கொள்ளுவதில்லை. தாழ்மையான உள்ளத்திலிருந்து வரும் உண்மையான விண்ணப்படங்களை தேவன் வெறுப்பதில்லை. பரலோக பிதாவிற்கு நம் இதயங்களை முழுமையாக திறக்க வேண்டும். அவரையே முழுமையாக சார்ந்தவர்களாக நமது விண்ணப்பங்களை ஏரெடுக்க வேண்டும். உண்மையான அன்பின் வெளிப்பாடாக இவைகள் இருக்க வேண்டும். இதுவே உண்மையான ஜெபம். ***Signs of the Times, July 1, 1886.***

*எல்லா வீடுகளும் ஜெபவீடுகளாக இருக்கட்டும்*

தேவனை விசுவாசிப்பதாக சொல்லிக்கொள்ளும் ஒவ்வொரு குடும்பமும் நமது முற்பிதாக்களைப்போல, எங்கே கூடாரம் மாற்றினாலும், அங்கு தேவனுக்கென்று ஒரு ஆராதனை பீடத்தைக் கட்ட வேண்டும்.

தாய் தந்தையர் தேவனிடம் தங்கள் விண்ணப்பங்களை நாள் முழுவதும் கொண்டு செல்ல வேண்டும். தங்களுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்க வேண்டும். தந்தை வீட்டின் ஆசாரியராக இருக்கிறார். காலையும் மாலையும் இவர் தேவ பீடத்தண்டை வந்து தனது பலிகளை செலுத்தட்டும். மனைவியும் பிள்ளைகளும் ஜெபத்துடன் துதிகளை ஏரெடுக்கட்டும். இத்தகைய வீட்டில் இயேசு தங்க விரும்புவார். ***Patriachs and Prophits. P. 144.***

குடும்ப அங்கத்தின் ஒவ்வொருவரும் தாங்கள் பரலோகுடன் ஐக்கியப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை மனதில் கொள்ளட்டும். தனது மக்களின் குடும்பங்களின்மீது தேவன் விசேஷ கவனத்தை செலுத்துகிறார். பரிசுத்தவான்களின் ஜெபம், நறுமன தூபமாக தேவனிடம் தூதர்களால் கொண்டு செல்லப்படுகிறது. காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஜெபம் பரலோகம் நோக்கிச் செல்லட்டும். நமது சார்பாக நம் இரட்சகரின் ஈவுகள் தேவனுக்கு முன்பாக வைக்கப்படும். காலையிலும் மாலையிலும் ஜெபிக்கும் குடும்பங்களை பிரபஞ்சமே கண்நோக்கிக்கொண்டிருக்கிறது. ***Manuscript 19, 1900.***

***தேவனிடம் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிள்ளைகளை தூதர்கள் பாதுகாக்கிறார்கள்***

வேலைக்கு கிளம்புவதற்கு முன்பாக குடும்பம் ஒன்றாக இணைந்து அந்த நாளுக்கென்று ஜெபித்து தேவனிடம் தங்களை ஒப்படைக்க வேண்டும். தந்தையில்லாதபொழுது தாய் இதை செய்ய வேண்டும். இச்சமயங்களில் மனமுவந்த உண்மையான வேண்டுதல்களை தேவனிடம் கொண்டு செல்ல வேண்டும். தாழ்மையான ஒரு இதயத்துடன் தேவனிடம் செல்லுங்கள். உங்களை சுற்றியுள்ள அபாயங்களையும் சோதனைகளையும் அறிந்தவர்களாக தேவனிடம் செல்லுங்கள். உங்கள் பிள்ளைகளும் இதே சூழலில் இருக்கிறார்கள். விசுவாசத்தினால் பிள்ளைகளை தேவனுடன்கட்டுங்கள். தேவன் அவர்களை கவனிக்கும்படி மன்றாடுங்கள். இப்படியாக தேவனிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை தூதர்கள் காப்பார்கள். ***Testimonies for the Church, Vol. 1, p. 397, 398.***

***ஜெபம் பிள்ளைகளை சுற்றி ஒரு பாதுகாப்பு வேலியை கட்டுகிறது***



1ST Proof

காலையில் எழுந்தவுடன் கிறிஸ்தவனுடைய முதல் சிந்தனை தேவனைப் பற்றியதாக இருக்க வேண்டும். உலக வேலைகளும் சொந்த நலத்திற்கானவைகளும் இரண்டாவதாக இருக்க வேண்டும். ஜெப நேரத்தை மதித்து, பக்தியுடன் நடந்து கொள்ள கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். ஜெபத்தினால் கிறிஸ்தவ பெற்றோர் காலையும் மாலையும் பிள்ளைகளை சுற்றி ஒரு பாதுகாப்பு வேலியை அமைக்க வேண்டும். பொருமையுடன் பிள்ளைகளை அறிவுறுத்துங்கள். தேவனை மகிழ்விக்க வாழ்வதெப்படி என்பதைக் கற்றக்கொடுங்கள். அன்பாலும், தளர்ந்துவிடாமலும் இதை செய்யுங்கள். ***Testimonies for the Church, Vol. 1, p.397, 398.***

***ஜெபத்திற்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள்***

ஒவ்வொரு வீட்டிலும் காலை, மாலை ஜெபத்திற்கு சரியான நேரம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். காலை உணவை உண்பதற்கு முன்பாக குடும்பத்தில் உள்ள எல்லோரும் ஒன்றாக இணைந்து, இரவின் பாதுகாப்பிற்கு நன்றி சொல்லி, அந்நாளுக்கான உதவிக்கும் வழிநடத்துதலுக்கும் ஜெபிப்பது நன்மை தரக் கூடியதாக இருக்கும். இதைப்போலவே மாலையிலும் பெற்றோரும் பிள்ளைகளும் ஒன்றாக இணைந்து பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்கு நன்றி சொல்லுவது சிறப்பானதாக இருக்கும். ***Testimonies for the Church, Vol. 7, p. 43.***

***சூழ்நிலைகளுக்கு அடிமையாகிவிடக் கூடாது***

குடும்ப ஜெபம் சூழ்நிலைக்கேற்ற வண்ணம் மாறிவிடக் கூடாது. அவ்வப்பொழுது இதை செய்து, வேலை பலு அதிகமாகும் நாட்களில் இதை புறக்கணிக்கக் கூடாது. இதை செய்தால் பிள்ளைகள் ஜெபத்தினுடைய முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளுவதில்லை. தேவ பிள்ளைகளுக்கு ஜெபம் என்பது ஒரு சாதாரண வேலையன்று. அது ஆழமான பொருளைக் கொண்டுள்ளது. நமது ஜெபங்கள் நன்றியின் காணிக்கைகளைப்போன்று காலையிலும் மாலையிலும் தேவனிடம் கொண்டு செல்லப்பட வேண்டும். ***"கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி, நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள். துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு***

*முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்." சங்கீதம் 95 : 1,2.* ***Manuscript 12, 1898.***

பெற்றோர்களே எவ்வளவு வேலை இருந்தாலும் ஜெபத்திற்கு குடும்பத்தை ஒன்றாக இணைக்கத் தவறாதீர்கள். தேவ தூதர்களின் பாதுகாப்பிற்க வேண்டிக்கொள்ளுங்கள். சிறு பிள்ளைகளும் சோதனைகளை சந்திக்கிறார்கள். ஜெபம் இவர்களுக்குரிய பாதுகாப்பைக் கொண்டு வரும். ***Ministry of Healing p. 393.***

விருந்தினர்களை கவனிப்பதில் தேவனுக்கு செய்ய வேண்டியவைகளைா ஒதுக்கக் கூடாது. ஜெப நேரத்தை எந்த வேலைக்காகவும் விட்டுக்கொடுக்கக் கூடாது. பேசி, களிகூர்ந்து, சோர்ந்துவிடாதீர்கள். இப்படி செய்து சோர்வுற்ற பிறகு சரியாக ஜெபிக்க முடியாது. கடனக்கென்று இத்தகைய ஜெபத்தை செய்தல் ஊனமான மிருகத்தை பலி செலுத்துவதற்கு ஒப்பாக இருக்கும். அந்தி மாலையில் நேரம் எடுத்து பொருமையாகவும் நிதானத்துடனும் துதிகளையும் விண்ணப்பங்களையும் ஏரெடுக்க வேண்டும்.

கிறிஸ்தவர்களை சந்திக்கச் செல்லும் எல்லோரும் ஜெப நேரம் எவ்வளவு முக்கியமானது என்பதைப் பார்த்து புரிந்துகொள்ளட்டும். ஜெபம் செய்யப்படும் நேரம் பரிசுத்தமானது. நாளின் மற்ற அலுவல்களைக்காட்டிலும் இதுவே அதிகமான மன மகிழ்ச்சியைக் கொண்டுவர வேண்டும். இதில் பங்குகொள்ளுபவ்களின்மீதும் ஒரு நல்ல செல்வாக்கு உருவாகும். இவர்கள் சுத்திகரிக்கப்பட்டு உயர்த்தப்படுவார்கள். சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் பெறுகிறார்கள். ***Message to young people p. 432.***

### *ஜெப நேரத்தை பிள்ளைகள் மதிக்க வேண்டும்*

பிள்ளைகள் அன்போடும் மற்றவர்களின் நலன்மீது அக்கரை கொண்டும் நடந்து, இளகிய மனதை உடையவர்களாக இருக்க வேண்டும். இவைகளை அவர்களுக்கு கற்றுக்கொடுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசத்திற்குரிய காரியங்களை மதித்துப் போற்ற வேண்டும். தேவனுக்கு அவர்கள் செய்ய வேண்டியவைகளின் முக்கியத்துவத்தை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக ஜெப நேரத்தை மதிக்க கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். காலையில் எழுந்து குடும்பத்துடன் சேர்ந்து ஜெபிக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol..5, p. 424.***

### *ஜெப நேரம் ஆர்வத்தைத் தூண்டக்கூடியதாக இருக்கும்*

தந்தை வீட்டின் ஆசாரியராக இருக்கிறார். காலை மாலை ஆராதனையை இவர் நடத்த வேண்டும். குடும்பத்துக்கு மன நிறைவையும் மன மகிழ்ச்சியையும் தரக்கூடிய வகையில் இது செய்யப்படலாம். இது சோர்வாக நடத்தப்பட்டால் தேவன் கணப்படுத்தப்படுவதில்லை. குடும்ப ஜெபங்கள் சுருக்கமாகவும் உற்சாகப்படுத்தக் கூடியவைகளாக இருக்கட்டும். நீண்ட நேரத்திற்கு இழுக்கப்படுவதினால் மற்றவர்கள் இதை வெறுத்துவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். நீண்ட அதிகாரம் வாசிக்கப்படும், நீண்ட ஜெபம் செய்யப்பட்டால் சோர்வை உருவாக்கிவிடும். ஜெபம் முடிந்துவிட்டதை எண்ணி எல்லோரும் மகிழ்வார்கள்.

இந்த ஜெப நேரத்தை உற்சாகமூட்டக் கூடியதாகவும் ஆர்வத்தைத் தூண்டும் படியாகவும் வைக்க குடும்பத்தலைவர்கள் விசேஷமாக முயற்சி செய்ய வேண்டும். சிறிதளவாகிலும் முயற்சி செய்து குடும்ப ஜெபத்திற்கு ஆயத்தப்பட வேண்டும். இவ்வாயத்தங்களுடன் ஏரெடுக்கப்படும் குடும்ப ஜெபங்கள் நித்தியத்திற்கென்று பெரிய விளைவுகளைக் கொண்டுவருகின்றன. தந்தை ஒரு சிறிய வேதப் பகுதியை நேர்த்தெடுக்கட்டும். சில வசனங்களைக் கொண்டு ஒரு பாடம் சொல்லப்படட்டும். அப்பாடம் எல்லோராலும் படிக்கப்பட்டு நாள் முழுவதும் அப்பியாசிக்கப்பட வேண்டும். கேள்விகள் கேட்கப்படலாம். சில கருத்துக்களும் சொல்லப்படலாம். சுருக்கமாக ஒரு சம்பவம் விவரிக்கப்படலாம். ஒரு செய்தியை கொடுக்கத்தக்கதாக இது இருக்கட்டும். ஜெபம் செய்யும் நபர் எல்லாவற்றையும் குறித்து ஜெபிக்கக் கூடாது. தேவைகளை எளிமையாகச் சொல்ல வேண்டும். நன்றியை ஏரெடுத்துத் துதித்தும் விண்ணப்பங்களை சமர்பிக்க வேண்டும்.

வேதத்தை வாசிக்கும் ஆசையை இந்த ஜெப நேரம் உருவாக்கும்படி செய்யலாம். ஜெப நேரமே நாளின் மிக இனிமையான சமயமாகவும், உதவிகளை பெற்றுக்கொள்ளும் நேரமாகவும் இருக்க

வேண்டும். மனச்சஞ்சலமோ அன்பற்ற சிந்தனையோவரக் கூடாது. இயேசுவை வரவேற்க பெற்றோரும் பிள்ளைகளும் கூடியிருக்கிறார்கள் என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். தேவ தூதர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஆராதனை சுருக்கமாகவும் உயிருள்ளதாகவும் இருக்கட்டும். ஒரே விதமாகவே நடத்தப்பட வேண்டும் என்பதல்ல. எல்லோரும் வேத வாசிப்பில் பங்கு கொள்ளட்டும். தேவனின் பத்து பிரமாணம் படிக்கப்பட்டு அடிக்கடி சொல்லப்படட்டும். அவ்வப்பொழுது பிள்ளைகளும் வேதத்தை வாசிக்கலாம். இது அவர்களது ஆர்வத்தைக் கூட்டும். படிக்கப்பட்டவைகளிலிருந்து கேள்வி கேளுங்கள். அவர்களும் கேள்விகளை கேட்கட்டும். பொருளை விளங்கச் செய்யும் எல்லாவற்றையும் நன்றாக சித்தரியுங்கள். ஆராதனை அதிக நேரத்திற்கு நீண்டுவிட வேண்டாம். சிறு பிள்ளைகளும் ஜெபத்தில் பங்கு கொள்ளட்டும். பாடல்களை சேர்த்து பாடட்டும். ஒரு வசனம் மட்டுமே படிக்கப்பட்டாலும் பிள்ளைகளின் பங்கேற்பு இருக்க வேண்டும்.***Education, p. 186.***

***இசையின் வல்லமை***

வேத பாடல்களின் சரித்திரம், இசையின் நன்மைகளை விளக்குகிறது. இசை தீமைக்கு தவறாக பயன்படுத்தப்படுகின்றது. இதனால் சோதனைகளில் விழ வசிகரிக்கும் கருவியாக இருக்கிறது. சரியாக பயன்படுத்தப்பட்டால் தேவனின் ஈவாக இருக்கிறது. சிந்தனையையும் ஆத்துமத்தையும் அது உயர்த்துகிறது.

ஆவிக்குரிய சத்தியங்களை மனதினுள் புகுத்தும் ஒரு மகத்தான வல்லமையாக இருக்கிறது. சோகத்தில் வாடியுள்ள ஆத்துமாக்கள் மனதிற்கு பிடித்தமான சிறு வயதின் பாடல்களை நினைவுப்படுத்திக்கொண்டு புதுபெலனடைகின்றன. உற்சாகமும் மனமகிழ்ச்சியும் மலருகிறது. சோதகைகள் வலுவிழக்கின்றன. வாழ்க்கைக்குப் புதிய அர்த்தம் பிறக்கிறது. இது மற்றவர்களிடமும் பரவுகிறது.

கல்வியைக் கொடுக்கம் ஒரு கருவியாகப் பாடல் உள்ளது. இதை நாம் மறக்கக் கூடாது. வீடுகளில் பாடல்கள் பாடப்படட்டும். இவை தூய்மையான பாடல்களாக இருக்கட்டும். இதனால் குறை



1ST Proof

கூறுதல் குறைகிறது, நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அதிகரிக்கிறது. பள்ளிகளிலும் பாடல்கள் பாடப்படட்டும். மாணவர்கள் தேவனன்டை இழுக்கப்படுவார்கள். ஆசிரியர்களிடமும் ஒருவரொருவருடனும் நெருக்கமாக இருப்பார்கள்.

ஆராதனையில் ஜெபத்தைப்போன்றே பாடலும் முக்கியமானது. பல பாடல்கள் உண்மையான ஜெபங்களாக இருக்கின்றன. பிள்ளை இதை உணர்ந்துகொண்டால், பாட்படும் வார்த்தைகளின் அர்த்தம் சிந்திக்கப்படும். அவ்வார்த்தைகளின் தாக்கத்திற்கு மனம் உள்ளாகிறது.

***குரலும் இசை கருவியும்***

காலையிலும் மாலையிலும் பிள்ளைகளுடன் இணைந்து தேவனை ஆராதியுங்கள். அவரது வார்த்தையை படித்து துதித்துப்பாடுங்கள். தேவ பிரமாணத்தைச் சொல்லிப் பார்க்க கற்றுக்கொடுங்கள். தேவ கட்டளைகளைக் குறித்து இஸ்ரவேலர்களுக்கு இப்படியாகச் சொல்லப்பட்டது.***"நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும்,எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி,***" உபா 6: 7 தேவ கட்டளைகளை இசையுடன் சேர்க்க மோசே கூறியிருந்தார். பெரிய பிள்ளைகள் இசைக் கருவிகளை வாசித்தார்கள். சிறு பிள்ளைகள் தேவ கீதங்களை பாடினார்கள். சிறு வயதில் பாடின இவ்வார்த்தைகளை பெரியவர்களான பின்பும் மனதில் வைத்தார்கள்.

புனிதமான பாடல்களாக இஸ்ரவேலர்கள் தேவ கட்டளைகளைப் பாடினார்கள். வனாந்திர யாத்திரையிலும் தேவ பிரமாணத்தின் ஒவ்வொரு வசனத்தையும் பாடலாகப் பாடி கற்றுக்கொண்டார்கள். மோசேயின் காலத்தில் இது அவசியமானதாக இருந்ததென்றால், இந்த காலத்திற்கு இது எவ்வளவு அவசியமானதாக இருக்கும். தேவ பிரமாணத்தின் ஒவ்வொரு எழுத்தையும் பிள்ளைகள் கைக்கொள்ளும்படி செய்து தேவனுக்கு உதவுவோம். நமது இல்லங்களில் இசையிருக்க நம்மால் முடிந்ததை செய்வோம். தேவன் நமது இல்லங்களுக்குள் வருவார். ***Evangalism p. 499, 500.***

### *ஓய்வு நாளில் விசேஷமான ஆராதனை*

ஓய்வு நாட்களில் ஏரெடுக்கப்படும் குடும்ப ஜெபங்களில் பிள்ளைகள் பங்கெடுக்கட்டும். எல்லோரும் தங்களது வேத புத்தகங்களைக் கொண்டு வந்து ஓர் இரு வசனங்களை வாசிக்கட்டும். எல்லோருக்கும் தெரிந்தபாடல் பாடப்படட்டும். பிறகு ஜெபம் ஏரெடுக்கப்படட்டும். பரமண்டல ஜெபத்தை ஒரு சடங்கைப்போல மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருக்க நமக்கு கொடுக்கப்படவில்லை. நமது ஜெபம் எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு உதாரணமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. எளிமையான, உள்ளார்ந்த உண்மையான ஜெபத்தின் எடுத்துக்காட்டாக உள்ளது. எளிதான வேண்டுதல்களின் வழியாக உங்கள் விண்ணப்பங்களை தேவனிடம் வையுங்கள். தேவ இரக்கத்திற்காக நன்றியையும் தெரிவியுங்கள். இயேசுவை ஒரு விருந்தாளியாக உங்கள் வீட்டினுள்ளும் இதயத்தினுள்ளும் வரவேற்றுக் கொள்ளுங்கள். நீண்ட ஜெபங்கள் தேவையில்லை. ஜெப நேரமானது ஒரு ஆசீர்வாதமாகவும் கிடைக்கப்பெற்ற ஒரு பெரிய சிலாக்கியமாக நினைக்கப்பட வேண்டும். மகிழ்வூட்டும் நேரமாக இதை மாற்றுங்கள். ***Testimonies for the Church, Vol. 6, p. 357, 358.***

### *மிகுதியான ஜெபம் தண்டனையைக் குறைக்கிறது*

### *மிகுதியான ஜெபம் பிள்ளைகள் தண்டிக்கப்படுவதைக் குறைக்கிறது*

நாம் பொதுவாக ஜெபிப்பதைவிட அதிகமாக ஜெபிக்க வேண்டும். குடும்பமாக ஒன்றாக ஜெபிப்பதில் பெரிய ஆசீர்வாதமும் வல்லமையும் உள்ளது. பிள்ளைகளுடன் சேர்ந்தும், அவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். என் பிள்ளைகள் தவறு செய்த நேரங்களில் அவர்களுடன் அன்பாக பேசியிருக்கிறேன். பிறகு அவர்களுடன் ஜெபித்தேன். இதை நான் செய்தபொழுதெல்லாம் அவர்களை தண்டிக்க வேண்டிய அவசியம் வரவில்லை. ஜெபத்திற்கு பதிலாக வந்த பரிசுத்த ஆவியானவருக்கு முன்பாக அவர்களது மனங்கள் இளகின. ***Manuscript 47, 1908.***

### *தனி ஜெபத்தின் நன்மைகள்*

தனி ஜெபத்தினால் இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபொழுது வல்லமையையும் ஞானத்தையும் பெற்றார். இரவிலும் விடியற்காலை வேளையிலும் வாலிபர்கள் இயேசு செய்ததையே செய்யட்டும். தனியாக தேவனிடம் ஜெபிக்கட்டும். நாள் முழுவதற்கும் தங்கள் இதயங்களை தேவனிடம் உயர்த்திக்கொண்டே இருக்கட்டும். நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியின் பொழுதும் தேவன் சொல்லுவது இதுவே. ***"உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்." ஏசாயா 41:13.*** நமது பிள்ளைகள் தங்களது வாழ்வின் துவக்கத்திலிருந்தும் இப்பாடங்களை கற்றுக் கொள்ளுவார்களா? இதை அவர்கள் செய்தால் வல்லமையும், இனிமையும், புத்துயிரும், வாழ்வினுள் பிறக்கும். ***Education, p. 239.***

1ST Proof

### *பரலோகின் வாசல்கள் ஒவ்வொரு தாய்க்கும் திறக்கப்படுகிறது*

யோர்தான் நதிக்கறை ஓரத்தில் தனது திருமுழுக்கிற்கு பிறகு இயேசு ஜெபித்தார். மனிதர்களுக்காக ஜெபம் பண்ணினார். பரலோகம் திறக்கப்பட்டது. தேவ ஆவியானவர் புறாவைப்போல் இறங்கினார். இயேசுவானவரை சுற்றிக்கொண்டார். பரலோகத்திலிருந்து ஒரு குரல் கேட்டது. ***"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது." மத்தேயு 3:17.***

இது உங்களுக்கு என்ன செய்தியைக் கொடுக்கிறது. பரலோகம் உங்களது ஜெபங்களுக்குத் திறக்கப்பட்டிருக்கின்றது என்பதை இதிலிருந்து தெரிந்துக் கொள்ளகிறோம். இயேசுவிற்குள் நீங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறீர்கள் என்பதே இதன் பொருள். இரட்சகரின் பாதத்தண்டை தனது பாரங்களை வைக்கும் ஒவ்வொரு தாய்க்கும் பரலோகின் வாசல்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. மனித இனத்தை இயேசு கிறிஸ்து தனது மனித கரங்களால் தன்னுடன் அணைத்துக்கொண்டுள்ளார். அவரது தெய்வீக கரத்தினால் தேவ சிங்காசனத்தை பிடித்துள்ளார். மனிதனையும் தேவனையும் இணைத்திருக்கிறார். பூமியை பரலோகுடன் சேர்த்திருக்கிறார். ***Signs of the times July 22, 1889.***

கிறிஸ்தவ தாய்மார்களின் ஜெபங்களை தேவன் அசட்டைசெய்வதில்லை. நமது பரம பிதா தனக்கென்று ஒரு ஜனத்தைப் பெற்றுக்கொள்ள தனதுமகனை கிரயத் தொகையாகக் கொடுத்துள்ளார்.

உங்களது விண்ணப்பங்களை அவர் நிராகரிக்கமாட்டார். உங்களையும், உங்களுடையவர்களையும் சாத்தானின் கிரியைகளை ஒப்புக்கொடுக்க மாட்டார். எளிமையுடனும் உத்தமத்துடனும் நீங்கள் வேலை செய்ய வேண்டும். உங்கள் கரங்களின் வேலையை தேவன் ஸ்தாபிப்பார். ***Review and Herald, Apr. 23, 1889.***

***அதிகாரம் - 79***

***ஓய்வு நாள் மன மகிழ்ச்சியின் நாள்***

***ஓய்வு நாள் பொதுவாவே அசட்டை செய்யப்படுகிறது***

இந்த காலத்திற்கான சத்தியத்தை விசுவாசிப்பதாகச் சொல்லிக்கொள்ளும் பெற்றோர்கள் பிள்ளைகளை தேவனுக்கென்று பயிற்றுவிப்பதில்லை. இது எனக்கு காட்டப்பட்டது. இப்பெற்றோர்கள் தங்களைக் கட்டுபடுத்திக்கொள்ளவில்லை. தங்களை கட்டுப்படுத்த முயன்றவர்களையும் இவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தேவனின் ஆராதனை பீடத்தின் மேலாக இவர்கள் தங்கள் பிள்ளைகளை விசுவாசத்தினால் வைக்கவில்லை. இவ்வாலிபர்களில் அநேகர் நான்காம் கட்டளையை மீறிவிடப்பட்டிருக்கின்றனர். தேவனுடைய பரிசுத்த நாளில் தங்களுக்கு விருப்பமானதை செய்கிறார்கள். இன்பம் தேடி ஓய்வு நாளிலும் தெருக்களைச் சுற்றுவது இவர்களது மனசாட்சிக்கு தவறானதாகத் தெரியவில்லை. பலர் தங்களுக்கு விருப்பமான இடங்களுக்குச் செல்லுகிறார்கள். தாங்கள் விரும்புவதை செய்கிறார்கள். இவர்களை வருந்த வைக்க விரும்பாததினால் பெற்றேனார்கள் ஒன்றும் சொல்லுவதில்லை. ஏலியைப் போன்று நடக்கிறார்கள்.

இந்த வாலிபர்கள் ஓய்வு நாளையோ, ஜெபக்கூட்டங்களையோ விரும்புவதில்லை. நித்தியத்திற்குரிய பரிசுத்தமானவைகளின் மீது அவர்களுக்கு ஒரு நாட்டமும் இருப்பதில்லை. ***Testimonies for the Church, Vol..3, p. 36, 37.***

***நான்காம் கட்டளையின் விசேஷமான வார்த்தை***

ஓய்வு நாள் கற்பனையில் ***"நினைப்பாயாக"*** என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கில வேதாகமத்தில் இவ்வார்த்தையே



1^ST Proof

அக்கட்டளையின் முதல் வார்த்தையாக இடம்பெற்றிருக்கிறது. பெற்றோர்களே முதலில் நீங்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க மறக்கக் கூடாது. இதை செய்தால் பிள்ளைகளுக்குச் சரியான அறிவுரைகளைக் கொடுப்பவர்களாக இருக்கிறீர்கள். அவர்களும் தேவனுடைய நாளை கனம் பண்ணுவார்கள். கிறிஸ்தவ கல்வி உங்கள் வீடுகளில் தேவைப்படுகிறது. வாரம் முழுவதும் தேவனின் பரிசுத்த நாளை மனதில் கொள்ளுங்கள். அந்த நாள் தேவனுக்கென்று கொடுக்கப்பட வேண்டும். உலக வேலைகளிலிருந்து கரங்களுக்கு ஓய்வுகொடுக்கப்பட வேண்டும். ஆத்துமத்தின் தேவைகள் அன்று கவனிக்கப்பட வேண்டும். ***Manuscript 57, 1897.***

ஓய்வுநாள் இப்படியாக ஆசரிக்கப்பட வேண்டும். அப்பொழுது உலக காரியங்கள் ஆவிக்குரிய காரியங்களின் இடத்தைப் பிடித்துக்கொள்ளாது. ஆறு நாட்களில் செய்யப்பட வேண்டிய எந்த வேலையும் ஓய்வுநாளில் செய்யப்படக் கூடாது. மற்ற நாட்களில் அதிகமாக வேலை செய்து ஓய்வு நாளில் களைப்பாக இருக்கக்கூடாது. ஓய்வுநாளில் தேவனே ஓய்ந்திருந்தார். அது நல்லது என்பதை கண்டார். ***Testimonies for the Church, Vol. 6, p. 354.***

***வெள்ளிக்கிழமையை ஆயத்த நாளாகவையுங்கள்***

வெள்ளிக்கிழமையன்று ஓய்வுநாளுக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டு முடிந்திருக்கட்டும். துணிகள் ஆயத்தப்பட்டு சமையலும் முடிந்திருக்கட்டும். காலணிகள் சுத்தம் செய்யப்பட்டிருக்கட்டும். எல்லோரும் குளித்து முடித்திருக்கட்டும். இதை நீங்கள் செய்வது சாத்தியமானதாகவே இருக்கிறது. இது ஒரு சட்டமாகவையுங்கள். உடைகளை ஆயத்தப்படுத்துவதற்கும. சமையலுக்கும் அந்த நாள் பயன்படுத்தப்படக் கூடாது. சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்பாகவே மற்ற எல்லா வேலைகளும் முடிவடைந்திருக்கட்டும். அன்றாட வாழ்விற்கு சம்பந்தமுடைய எழுத்து வேலைகளும் படிப்பு காரியங்களும் முடிந்திருக்க வேண்டும். பிள்ளைகளுக்கும் இதை விளக்குங்கள். இப்படி செய்வதின் நோக்கத்தையும் விவரியுங்கள். கட்டளையின்படி ஓய்வு நாளை ஆசரிக்க அவர்களும் உங்களுடன் ஆயத்தங்களை செய்யட்டும். ***Testimonies for the Church, Vol. 6, p. 356, 357.***

பல குடும்பங்களில் ஓய்வுநாட்களில் காலணிகளை சுத்தம் செய்யும் வேலையும், துணிகளைத் தைக்கும் வேலையும் செய்யப்படுகிறது. இந்த சிறுசிறு வேலைகள் வெள்ளிக்கிழமையன்று செய்யப்படாததினால் ஓய்வுநாளில் செய்யப்படுகின்றது. ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிக்க இவர்கள் நினைக்கவில்லை.

பிள்ளைகளுடைய துணிகளும் வெள்ளிக்கிழமையன்று ஆயத்தப்படுத்தப்பட வேண்டும். தாயின் வழிநடத்துதலின் கீழ் பிள்ளைகள் தங்கள் உடைகளை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். ஓய்வுநாளன்று பதட்டமில்லாமலும் எந்த வகையிலான குழப்பமும் இல்லாமலும் அமைதியாக கிளம்ப வேண்டும். ***Manuscript 57, 1897.***

ஆயத்த நாளில் இன்னொரு வேலையும் பார்க்கப்பட வேண்டும். குடும்பத்திலும், சபையிலும் இருந்திருக்கக் கூடிய எல்லா வகையிலான மனஸ்தாபங்களும் ஆயத்த நாளிலே சரிசெய்யப்பட்டிருக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol. 6, p. 356.***

***குடும்ப ஆராதனையுடன் ஓய்வு நாள் துவங்கட்டும்***

சூரியன் மறையும் முன்பதற்காகவே குடும்பத்தில் உள்ள எல்லோரும் வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும் எல்லோரும் ஒன்றாக கூடியிருக்கட்டும். அநேகர் இதை செய்வதில்லை. இதில் ஒரு சீர்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். தேவனிடமும், ஒருவரொருவரிடமும் தவறுகளை அறிக்கை செய்யுங்கள். குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் ஓய்வு நாளில் தேவனை கனப்படுத்த விசேஷ ஆயத்தங்களைச் செய்ய வேண்டும். தேவன் இந்த நாளை ஆசீர்வதித்து பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். ***Testimonies for the Church, Vol. 6, p. 356, 357.***

***ஓய்வு நாளின் நேரம் தேவனுடையது***

நமது வேலைகளை செய்துகொள்ள தேவன் நமக்கு ஆறு நாட்களைக் கொடுத்துள்ளார். அவருக்கென்று ஒரு நாளை மட்டும் வைத்துள்ளார். இது நமக்கு ஒரு ஆசீர்வாதமான நாளாக இருக்க வேண்டும். அந்நாளில் மற்ற எல்லா வேலைகளையும் நாம் ஒதுக்கிவிட



1ST Proof

வேண்டும். நமது சிந்தனைகள் வேதனை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். ***Manuscript 3, 1879.***

ஓய்வுநாள் துவங்கியவுடன் நாம் வார்த்தைகளிலும் செயல்களிலும் கவனமாக இருக்க வேண்டும். தேவனுக்குரிய நேரத்தை நமக்காக பயன்படுத்தக் கூடாது. நாமோ நமது பிள்ளைகளோ பிழைப்பிற்கேற்ற எந்த வேலையையும் அன்று செய்யக்கூடாது. ஆறு நாட்களில் இவ்வேலை செய்யப்பட வேண்டும். வெள்ளிக்கிழமை ஆயத்த நாளாக இருக்கிறது. அன்று ஓய்வு நாளுக்கான ஆயத்தங்களை செய்வதில் நேரம் செலவிடப்படட்டும். ஓய்வு நாளைக் குறித்து பேசவும் சிந்திக்கவும் ஆயத்த நாள் பயன்பட வேண்டும். நான்காம் கட்டளையை மீறும் எந்த சொல்லும் செயலும் ஓய்வு நாளில் இருக்கக் கூடாது. சரீரத்திற்கு மட்டும் அன்று நாம் ஓய்வு கொடுப்பதில்லை. மனமானது பரலோகிற்குரியவைகளை சிந்திக்கும் ஒழுங்கிற்குள் வர வேண்டும். உலக காரியங்களை குறித்து பேசுவதினாலும், மற்ற நாட்களைப்போன்று முக்கியமற்றவைகளை பேசுவதினாலும் ஓய்வு நாள் மீறப்படுகிறது. மனதிற்குள் வரும் எல்லாவற்றையும் நாம் பேசுவது, நமது சொந்த பேச்சை பேசுவதாகும். சரியான வழியிலிருந்து நாம் சிறிது விலகினாலும் ஆக்கினைக்குள்ளாகவும் அடிமைத்தனத்திற்குள்ளாகவும செல்லுகிறோம். ***Testimonies for the Church, Vol. 2, p. 702, 703.***

***இது தூங்குவதற்கான நேரமில்லை***

மற்ற நாட்களில் அதிகமாக வேலை செய்துவிட்டு ஓய்வு நாளில் களைப்பாக இருக்கக் கூடாது. இதனால் தேவனுக்கு வேலை செய்ய பெலமும் சக்தியும் இல்லாமற் போகிறது. அவரது பரிசுத்த நாளில் தேவனை தொழுதுகொள்ள முடியாத நிலையில் நாம் இருக்கக் கூடாது. இது தேவனிடமிருந்து திட்டுவதற்கு சமமாக இருக்கிறது. நம்மிடமிருந்தே திருடுபவர்களாகவும் இருக்கிறோம். ஐக்கியத்தின் நன்மைகளை நாம் பெற வேண்டும். மற்ற கிறிஸ்தவர்களின் ஞானத்திலிருந்தும் அனுபவத்திலிருந்தும் நமக்கு பெலன் கிடைக்கிறது.***Review and Herald, Jan 13, 1882.***

ஓய்வுநாளின் பரிசுத்த மணித்துளிகள் படுக்கையின் மீது வீணடிக்கப்படக் கூடாது. ஓய்வு நாளில் குடும்பம் விடியற் ாலையில்

எழுந்திருக்க வேண்டும். தாமதமாக எழுந்தால் பதட்டத்துடனும், குழப்பத்துடனும் ஆராதனைக்கு கிளம்ப வேண்டி இருக்கும். பொருமையின்மை வந்து விடும். பரிசுத்தமற்ற உணர்வுகள் உருவாக்கிவிடும். இதனால் ஓய்வு நாள் மீறப்படுகிறது. அதன் வருகை வரவேற்கப்படுவதில்லை. ஏன் வருகிறது என்பதைப் போன்று பார்க்கப்படுகிறது. ***Testimonies for the Church, Vol. 6, p. 357.***

***பிள்ளைகளுடன் ஆராதனையில் பங்குகொள்ளுங்கள்***

ஓய்வு நாள் ஆராதனையில் பிள்ளைகள் கலந்துகொள்ள வேண்டும். பெற்றோர்கள் இதை ஒரு சட்டமாகவே மாற்றிட வேண்டும். அவர்களும் இதையே செய்ய வேண்டும். ஆபிரகாமைப் போன்று நமது பிள்ளைகளையும் குடும்பத்தினரையும் தேவ கட்டளைகளைக் கைக்கொள்ள வழிநடத்த வேண்டும். கிறிஸ்தவ மதத்தின் பாடங்களை சொல்லினாலும் செயலினாலும் கற்றுக்கொடுக்க வேண்டும். இவைகளின் முக்கியத்துவத்தையும் புரிய வைக்க வேண்டும். ஞானஸ்நானம் எடுத்தவர்கள் தேவ சேவைக்கென்று தங்களை சமர்பிக்க வாக்குக் கொடுத்திருக்கின்றனர். கிறிஸ்தவ வாழ்க்கையில் ஊக்குவிக்கப்படத்தக்கதான இடத்தில் அவர்களும் பிள்ளைகளும் இருக்க வேண்டும். ***Review and Herald, Jan 13, 1882.***

தேவனை ஆரதிப்பதை ஒரு கடமையாக மட்டும் நினைத்துவிடக் கூடாது. ஓய்வுநாள் நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் ஒரு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும். ஓய்வு நாள் தேவனால் பரிசுத்தப்படுத்தப்பட்ட ஒரு மன மகிழ்ச்சியின் நாளாக பார்க்கப்பட வேண்டும். சரியான அறிவுரைகள் ொடுக்கப்பட்டால் பிள்ளைகள் இவைகளை செய்வார்கள். ***Manuscript 3, 1879.***

***ஆலயத்திற்கேற்ற ஆடைகளை அணிந்துகொள்ளுங்கள்***

ஓய்வு நாளில் ஆராதனைக்கென்று செல்வதைக் குறித்து அநேகருக்கு அறிவுரைகள் தேவைப்படுகின்றன. மற்ற நாட்களில் அணியப்படும் சாதாரண உடைகளில் ஓய்வு நாள் ஆராதனைக்கு செல்லக் கூடாது. ஓய்வு நாளுக்கென்று பிரத்தியேகமான ஆடை இருக்க வேண்டும். உலகின் புது பழக்கங்களை நாம் கைக்கொள்ள வேண்டியதில்லை. அதே நேரத்தில் நமது உடைகளைக் குறித்து அக்கரையின்றியும் இருக்கக் கூடாது. வெளிப்புற அலங்காரங்கள் இல்லாமலும், நாம் துப்புரவாகவும் அழகாகவும் இருக்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் உள் மனதிலும் தோற்றத்திலும் சுத்தமாக இருக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol..6, p. 355.***

***ஓய்வு நாளின் பிரசங்கத்தைப் பிள்ளைகளுக்கு விளக்குங்கள்***

ஊழியர்கள் ஒரு புனிதமான உன்னத பணியை செய்கிறார்கள். ஆயினும் செய்திகளை கேட்போருக்கும் ஒரு புனிதமான பொறுப்பு இருக்கிறது. நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள கொடுக்கப்படும் அறிவுரைகளை எல்லோரும் திட மனதுடன் கேட்க வேண்டும். பேசப்படும் ஒவ்வொரு வேத சத்தியத்தையும் அதை கேட்பவர், தேவன் தனக்கு கொடுக்கின்ற தூதாக பாவிக்க வேண்டும். விசுவாசத்துடன் கேட்கப்பட்டு வாழ்க்கையில் அப்பியாசிக்கப்பட வேண்டும். பிரசங்க மேடையிலிருந்து வந்த வார்த்தைகளைப் பெற்றோர் பிள்ளைகளுக்கு விளக்க வேண்டும். அவர்களும் இவைகளைப் புரிந்துகொண்டு தங்களது வாழ்வுகளில் கைக்கொள்ள வேண்டும். இது மிகுதியான சமாதானத்தையும் கிருபையையும் இது தரும். ***Manuscript 41, 1903.***

***விசேஷமான உணவுகளை ஆயத்தப்படுத்துங்கள்***

ஓய்வு நாட்களில் அதிகமாக உண்ணவேண்டியதில்லை. பல வகையான உணவுகளை ஆயத்தப்படுத்தி உண்ண வேண்டும் என்பதும் இல்லை. எளிமையான உணவுகள் ஆயத்தப்படுத்தப்பட வேண்டும். வழக்கமாக உண்ணும் அளவைவிட சற்று குறைவாகவே உணவை எடுத்துக்கொண்டால், மனம் தெளிவாக இருந்து, நன்றாக வேலை செய்யும். ஆவிக்குரிய காரியங்கள் நன்றாக புரிந்துகொள்ளப்படும். அதிகமான உணவு மனதை மந்தப்படுத்துகிறது. விலையேறப்பெற்ற வார்த்தைகளைக் கேட்டாலும் புரிந்துகொள்ள முடியாதபடி போகிறது. துவறான உணவினால் அறிவு குழப்பமான நிலைக்குத் தள்ளப்படுகிறது. ஓய்வுநாட்களில் அதிகமாக உண்ணுவதினால் அநேகர் தேவனை கனவீனப்படுத்துகின்றனர்.

1ST Proof

ஓய்வு நாளில் சமைப்பதை தகர்த்தாலும், குளிர்ந்த நிலையில் இருக்கும் உணவுகளை நாம் உண்ண வேண்டியதில்லை. முந்திய தினம் ஆயத்தப்படுத்தப்பட்ட, உணவு சூடுபடுத்தப்படட்டும். குளிரான சீர்தோஷணம் நிலவும் பொழுது உணவு இப்படியாக கையாளப்படட்டும். உணவுகள் எளிமையானவைகளாக இருந்தாலும் ருசி நிறைந்ததாகவும், பசியைத் தூண்டக் கூடியதாகவும் இருக்கட்டும். மற்ற நாட்களில் உண்ணப்படாத ஒரு உணவை ஆயத்தப்படுத்திக்கொள்ளுங்கள். ஓய்வு நாளின் விசேஷ உணவாக அது இருக்கட்டும். ***Testimonies for the Church, Vol..5, 357.***

***ஆராதனைக்கு பின்பும் ஓய்வுநாளின் நேரம் பரிசுத்தமானது***

ஓய்வு நாள் பள்ளியும் தெய்வீக ஆராதனையும் ஓய்வு நாளின் ஒரு பாகமாக இருக்கின்றன. ஆராதனைக்குப்பின் இருக்கக் கூடிய நேரமும் புனிதமானதாக இருக்கிறது. இது பரிசுத்தமாக பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வேளையில் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் இருக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol..5, 358.***

***ஓய்வு நாளின் செயல்களை திட்டமிடுங்கள்***

வாரத்தின் மிக இனிமையான, ஆசீர்வாதமான நாளாக ஓய்வுநாளை மாற்றுங்கள். பெற்றோர்கள் ஓய்வுநாளில் பிள்ளைகளை கவனிக்க வேண்டும். ஆர்வத்தைத் தூண்டக் கூடிய வேத சரித்திரங்களை பிள்ளைகளுக்குப் படித்துக் காட்ட வேண்டும். ஓய்வு நாளை கனப்படுத்த அவர்களும் கற்றுக்கொள்ளுவார்கள். கற்பனையின்படி ஓய்வு நாளை ஆசரிப்பார்கள். இதற்கென ஆர்வம் கொண்டு, பாரத்துடன் பெற்றோர்கள் செயல்பட வேண்டும். இல்லையெனில் பிள்ளைகளை இப்படி வழிநடத்த முடியாது. சரியான ஒ ருவழியை கைக்கொண்டால் ஓய்வு நாள் மனமகிழ்ச்சியின் நாளாக மாறும். ஆர்வத்துடன் பிள்ளைகள் நல்ல காரியங்களைப் படிக்கலாம். இரட்சிப்பைக் குறித்தும் பேசலாம். இதற்கென பிள்ளைகள் பயிற்சிக்கப்பட வேண்டும். இதை அறிந்துகொள்ளும் கல்வி கொடுக்கப்பட வேண்டும். மனிதனின் இதயம் பொதுவாக தேவனைப் பற்றியும் தேவ காரியங்களைக் குறித்தும் இயல்பாக சிந்திப்பதில்லை. உலகத்தின் வழிகளும் தீய நாட்டங்களும் தகர்க்கப்பட வேண்டும். பரலோக ஒளியானது வீட்டினுள் வர வேண்டும். ***Review and Herald, Apr. 14, 1885.***

***பிள்ளைகளை கவனியாமல் விடாதீர்கள்***

ஓய்வு நாட்களில் அநேகர் பிள்ளைகளைக் கண்டு கொள்ளுவதில்லை. அவர்கள் எங்கிருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பதை அறியாமல் இருக்கிறார்கள்.***Review and Herald, Apr. 14, 1885.***

பெற்றோர்களே மற்ற எல்லா அலுவல்களைப் பார்க்கிலும் ஓய்வு நாளில் உங்கள் பிள்ளைகளை பார்த்துக்கொள்ளுங்கள். வீட்டிலோ வெளியிலோ விளையாடி ஓய்வு நாளை மீற விடாதீர்கள். உங்கள் பிள்ளைகள் ஓய்வு நாளை மீறுவது, நீங்கள் ஓய்வு நாளை மீறுவதாகும். பிள்ளைகள் சுற்றி திரிந்து ஓய்வு நாளை மீற விடப்படக் கூடாது. இது நடந்தால் ஓய்வு நாளை மீறுபவர்களாக தேவன் உங்களை பார்க்கிறார். ***Review and Herald, Sep. 19, 1834.***

***பிள்ளைகளுடன் இயற்கைக்கு செல்லுங்கள்***

பெற்றோர்கள் பிள்ளைகளை, இயற்கையில் தேவனைப் பார்க்க தங்களுடன் அழைத்துச் செல்லலாம். மலரும் பூக்களையும், திறக்கும் மொட்டுக்களையும் உயரமான மரங்களையும், புல்வெளிகளையும் காண்பியுங்கள். தேவன் ஆறு நாட்களில் எல்லாவற்றையும் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்பதை கற்றுக்கொடுங்கள். இத்தகைய பாடங்களை பெற்றோர்கள் பிள்ளைகளின் மனங்களில் ஆழமாக பதிய வைக்கலாம். அடுத்த முறை இப்பிள்ளைகள் இயற்கையின் ஒவ்வொரு காட்சியைப் பார்க்கும்பொழுது தேவனை நினைவு கூற வழிநடத்தப்படுவார்கள். இயற்கையின் தேவனை மனம் சிந்திக்கும். ஓய்வு நாள் ஸ்தாபிக்கப்பட்ட சிருஷ்டிப்பின் காலத்திற்கு பிள்ளைகள் கொண்டு செல்லப்படுவார்கள்.

ஓய்வு நாளில் மகிழ்ச்சியற்று இருக்க வேண்டும் என்று பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கக் கூடாது. வெளியில் செல்லுவது தவறு என்று சொல்லக் கூடாது. ஓய்வு நாட்களில் இயேசுவானவர் சீஷர்களை நதியோரமாக அழைத்துச் சென்றார். அங்கு அவர்களுக்கு

1ST Proof


குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

பாடங்களை கற்றுக்கொடுத்தார். ஓய்வு நாளின் பிரசங்கங்களை இயற்கையின் மத்தியிலும் செய்தார். ***Manuscript 13, 1879.***

***இயற்கையிலிருந்து பாடங்கள்***

இயற்கையில் கிறிஸ்துவைப் பார்க்க பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்லுங்கள். பெரிய மரங்களிலும் தோட்டங்களிலும் அவர்கள் தேவ அன்பை பார்க்கட்டும். தேவ அன்பின் வெளிப்பாடுகளைப் பார்க்க சொல்லிக்கொடுங்கள். எல்லா உயிரனங்களின் ஜீவியக் கூறுகளை தேவனே அமைத்திருக்கிறார் என்பதைச் சொல்லுங்கள். இதைப் போலவே நமக்கும் சட்ட திட்டங்களை வைத்திருக்கிறார். அவைகளைக் கைக்கொள்ளுவதில் உண்மையான மனமகிழ்ச்சியும் சந்தோஷமும் உள்ளது என்பதை பிள்ளைகள் பார்க்க வேண்டும். நீண்ட ஜெபங்களினாலும் பேச்சுரைகளினாலும் அவர்களை சோர்ந்து போக செய்யாதீர்கள். இயற்கையின் பொருள்களின் வழியாகத் தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதைக் கற்றுக்கொடுங்கள். ***Desire of Ages p. 916, 917.***

***தேவனுடைய உண்மையான குணத்தைக் கற்றுக்கொடுங்கள்***

பெற்றோருடைய ஐக்கியத்தில், இயற்கையோடு நேரம் செலவிடப்படும்பொழுது பிள்ளைகள் தேவனைப் பற்றிய சரியான அறிவை பெற்றுக்கொள்ளுவார்கள். இயற்யையின் அழகில் அவர்கள் தேவனை பார்க்கட்டும். இயற்கையில் தேவனது அன்பை வெளிக்காட்டுபவைகளை பிள்ளைகள் கவனிக்கட்டும். பிள்ளைகள் கவரப்பட்டு ஆர்வம் தூண்டப்பட்டவர்களாக இருப்பார்கள். தேவனுடைய அன்பை கடினமானவைகளுடன் ஒப்பிட மாட்டார்கள். இயற்கையின் அழகை அவர்கள் பார்க்கும் பொழுது, அன்பான மளரும் இளகிய தகப்பனாக தேவனைப் பார்ப்பார்கள். அவருடைய கட்டளைகள் தனது அதிகாரத்தை காட்டுவதற்காகக் கொடுக்கப்படவில்லை, மாறாக நமது மகிழ்ச்சிக்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை புரிந்துகொள்ளுவார்கள்.தேவனின் அன்பையும், தயவையும், அழகையும், கண்நோக்கும்பொழுது அவரிடம் நெருங்குவார்கள். அழகான புல்வெளிகளையும் பறவைகளின் பாடல்களையும், பூக்களையும் காண்பியுங்கள். இவையெல்லாமே பரலோக



1ST Proof

ஓவியரின் அன்பையும் திறமையையும் விவரிக்கின்றன. தேவனை மகிமைப்படுத்துகின்றன.

பெற்றோர்கள் தேவன் இயற்கயில் கொடுத்திருக்கும் விலைமதிப்பற்ற பாடங்களைக் கொண்டு தேவ குணத்தைப் பிள்ளைகளுக்குச் சொல்லித்தர வேண்டும். உலகின் புதுப்பழக்க வழக்கங்களுக்காக எளிமையை விட்டு, இயற்கையின் அழகிலிருந்து தங்களை பிரித்துக்கொள்பவர்களால் ஆவிக்குரிய சிந்தையில் இருக்க முடியாது. தேவ சிருஷ்டிப்பில் வெளிப்பட்டிருக்கும் அன்பையும், திறனையும் அவர்களால் புரிந்து கொள்ள முடியாது. அன்பினாலும் ஆர்வத்தினாலும் அவர்களது மனங்கள் துடிப்படைவதில்லை. இயற்கையில் தேவனைப் பார்க்கும்பொழுது வரும் பக்தியும், விசுவாசமும் வருவதில்லை. ***Testimonies for the Church, Vol..2, p. 583, 584.***

***ஏதேனின் வாழ்க்கையை வாழ ஒரு நாள்***

கல்வியின் ஒரு மகத்தான கருவியாக ஓய்வு நாள் பயன்படுத்தப்படுவதற்கு அளவே இல்லை. தேவன் நம்மிடமிருந்து கேட்கும் எதையும், பெருக்கி, ஆசீர்வதித்து அவருடைய மகிமையுடன் சேர்த்து திருப்பிக் கொடுக்கிறார்.

ஓய்வு நாளும், குடும்பமும் ஏதேனில் ஸ்தாபிக்கப்பட்டவை. பிரிக்கமுடியாதபடிக்கு இவையிரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற நாட்களைப் பார்க்கிலும் ஓய்வு நாளில் ஏதேனின் வாழ்க்கையை நம்மால் வாழ முடிகிறது. குடும்ப அங்கத்தினர்கள் வேலை செய்யவும் படிக்கவும் தேவன் திட்டமிட்டிருந்தார். குடும்பமாக இணைந்து ஆராதனை செய்தும், இன்பங்களை அனுபவிப்பதுமே தேவன் நியமித்திருந்து வழியாக இருந்தது. தந்தை இல்லத்தின் ஆசாரியராகவும், தாயும் தந்தையும் இணைந்து பிள்ளைகளுக்கு ஆசிரியர்களாகவும் நண்பர்களாகவும் இருக்க வேண்டும். பாவத்தின் விளைவுகள் இந்த தெய்வீக முறையை மாற்றிவிட்டன. இன்றையக் காலங்களில் தந்தை பிள்ளைகளை அரிதாகவே சந்திக்க முடிகிறது. வாரம் முழுவதும் வேலை பலுவினால் பிள்ளைகளைப் பார்க்க முடியாமல் போகிறது. அவரால் பிள்ளைகளை அறிவுறுத்தவோ, நல்வழிப்படுத்தவோ, சகஜமாக உறவாடவோ ஒன்றாக இருப்பதில்லை.

ஆயினும் தேவ கட்டளை இதற்கும் ஒரு அளவை வைக்கிறது. ஓய்வு நாளின் வழியாக தனது இரக்கத்தின் கரத்தை நீட்டுகிறார். ஓய்வு நாளன்று குடும்பம் ஒன்றாக இணைந்திருக்கவும், அன்பைப் பகிர்ந்து கொள்ளவும் தருணத்தை ஏற்படுத்துகின்றார். இதன் வழியாக இவர்கள் தேவனுடனும், இயற்கையுடனும், தங்களுக்குள்ளும் ஐக்கியப்படுகிறார்கள்.

***ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளாக மாற்றுங்கள்***

தேவன் மீது அன்பு செலுத்தும் எல்லோரும் ஓய்வு நாளை மனமகிழ்ச்சியின் நாளாக மாற்ற பிரயாசப்பட வேண்டும். பரிசுத்தமானதாகவும் கணம்பொருந்தியதாகவும் அந்நாளை வைக்க வேண்டும். தங்களது சொந்த பாவமான இன்பங்களை தேடசென்றால் இதை செய்ய முடியாது. குடும்பங்களில் ஓய்வு நாள் உயர்த்தி பிடிக்கப்பட வேண்டும். இதற்காக எல்லோரும் முயல வேண்டும். வாரத்தின் சிறப்பான நாளாக இதை மாற்ற வேண்டும். இந்த மாற்றம் மகிழ்விக்கும் ஒரு செல்வாக்கைக் கொண்டுவரும். திறந்த வெளிகளில் பிள்ளைகளுடன் சேர்ந்து நடக்கலாம். சூரிய ஒளியில் பழத்தோட்டங்களில் அவர்களுடன் அமரலாம். தேவ சிருஷ்டிப்பைக் குறித்து அவர்களிடம் பேசலாம். ஓய்வற்ற அவர்கள் மனங்கள் அமைதியைப் பெறும். தேவன்மீதும் பக்தியும் அன்பும் பிறக்கும். இயற்கையின் அழகு இந்த வேலையை செய்ய பெரிய உதவியாக இருக்கும்.

ஒவ்வொரு வாரமும் ஓய்வு நாள் எப்பொழுது வரும் என்று எல்லோரும் காத்திருக்கும்படிக்கு ஓய்வு நாள் சிறப்பானதாக இருக்க வேண்டும். இந்நாளில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சரியான அறிவுரைகளைக் கொடுக்க வேண்டும். ஆவிக்குரிய காரியங்களில் பிள்ளைகள் ஆர்வங்காட்டச் செய்ய வேண்டும். தேவ குணத்தைப் புரிந்துகொண்டு, கிறிஸ்தவ குணங்களை பரிபூரணப்படுத்திக்கொள்ள தேவன் என்ன எதிர்ப்பார்க்கிறார் என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இதுவே அவர்களை நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும். ஓய்வு நாளை பிள்ளைகள் வரவேற்கும்படியாக அதை ஒரு மகிழ்ச்சிகரமான நாளாக மாற்றுங்கள். ***Testimonies for the Church, Vol..5, p. 584, 585.***

***ஓய்வு நாளின் முடிவு***



1ST Proof

ஓய்வு நாளின் முடிவில் சூரியன் மறையும்பொழுது ஜெபம் செய்யப்பட்டு துதியின் பாடல்களும் எழும்பட்டும். ஓய்வு நாளை இப்படியாக முடித்துவருகின்ற வாரத்திற்காக தேவ பிரசன்னத்தையும் கேட்டு ஜெபியுங்கள்.

இவைகளையெல்லாம் செய்து ஓய்வுநாளை வாரத்தின் மிக சிறப்பான நாளாக மாற்றுங்கள். பிள்ளைகள் ஓய்வு நாளை மெய்யாகவே மனமகிழ்ச்சியின் நாளாக பார்ப்பார்கள். ஓய்வு நாளும் சிறப்பானதாகவும், பரிசுத்தமானதாகவும் கணப்படுத்தப்படும். ***Testimonies for the Church, Vol..6, p.359.***

***அதிகாரம் - 80***

***பரிசுத்தமானவைகளின் மீது பயபக்திகொள்ளுதல்***

***தேவபக்தி***

தேவபக்தியானது கவனமாக காத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒரு பொக்கிஷமாக இருக்கிறது. ***Education, 242.***

பரிசுத்தமானவைகளை உயர்த்தும்படியான ஒரு கல்வி பிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். நல்ல தேவபக்தியை இக்கல்வி ஊக்குவிக்க வேண்டும். தேவ ஆலயத்திலும் பயபக்தியுடன் இருக்க வழிநடத்த வேண்டும். பரம பிதாவின் பிள்ளைகளாக தங்களை கூறிக்கொள்ளும் அநேகர் நித்தியத்திற்குரியவைகளின் புனித தன்மையை உணருவதில்லை. ***Testimonies for the Church, Vol..5, p. 496.***

***பக்தியுடன் தேவனை கண்நோக்க வேண்டும்***

உண்மையான பக்தி தேவ பிரசன்னத்தையும் அவரது அளவில்லா மகத்துவத்தையும் அறிந்திருக்கும். பார்க்க முடியாத தேவனின் பிரசன்னத்தை பிள்ளைகள் உணர செய்ய வேண்டும். அவர்களது இதயங்களில் இது ஆழமாக பதிந்திருக்க வேண்டும். ***Education, p. 342."தேவன் பரிசுத்தவான்களுடைய ஆலோசனைச் சபையில் மிகவும் பயப்படத்தக்கவர், தம்மைச் சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப்படத்தக்கவர்." சங்கீதம் 89:7.***

***தேவ நாமம் பயபக்திக்குரியது***

தேவ நாமத்தையும் நாம் பக்தியுடன் உச்சரிக்க வேண்டும். சாதாரண வார்த்தைகளைப் பேசுவது போன்று தேவ நாமம் உச்சரிக்கப்படக் கூடாது. ஜெபத்திலும் தேவ நாமத்தை தேவையில்லாமல் மீண்டும் மீண்டுமாக உச்சரித்துக்கொண்டு இருக்கக் கூடாது. *“ வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே.” சங்கீதம் 119: 9.* பரிசுத்த தூதர்களும் தலைகளைத் தாழ்த்தி பக்திவினையத்துடன் தங்களை மூடிக்கொண்டு தேவ நாமத்தை உச்சரிக்கிறார்கள். பாவத்தில் விழுந்த மனிதர்காளகிய நாம் தேவ நாமத்தை உச்சரிப்பதில் எந்த அளவிற்கு பயபக்தியைக் காட்ட வேண்டியுள்ளது. ***Education, p. 243.***

*தேவனுடைய வார்த்தை புனிதமானது*

தேவனுடைய வார்த்தையையும் நாம் கனம்பண்ண வேண்டும். வேத புத்தகமாக அச்சிடப்பட்டுள்ள தேவ வார்த்தையை நாம் மதிக்க வேண்டும். கவனமின்றி அதை சாதாரண புத்தகத்தைக் கையாளுவதைப்போல கையாளக் கூடாது. மற்றவர்களை சிரிக்க வைப்பதற்காக எந்த வேத பகுதியும் பயன்படுத்தப்படக் கூடாது. *“கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது.”“தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர்.” சங் 12:6, நீதி 30:5.*

தேவனுடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும் மதிக்கப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். பெற்றோர்கள் தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிகிறவர்களாய் செயல்பட்டு தேவ நியமங்களை உயர்த்திக் காட்ட வேண்டும். தேவ கட்டுப்பாட்டின் கீழாக வாழ வேண்டும். தேவ பிரமாணத்தின் பரிசுத்தத் தன்மை உணரப்பட்டால் அது குணத்தை மாற்றி ஆத்துமத்தை மனமாற்றத்திற்குள்ளாக வழிநடத்தும். ***Review and Herald, May 10, 1898.***

*ஜெபிக்கும் இடம், தேவபிரசன்னம் இருக்கும் இடம்*



ஒவ்வொரு இல்லத்திலும் காலை மாலை ஆராதனைகளின் வழியாக தேவன் துதிக்கப்பட வேண்டும். பழைய ஏற்பாட்டுக் காலங்களில் கொடுக்கப்பட்ட காலை மாலை பலிகளுக்கு இது ஒப்பாய் இருக்கிறது. ஜெப நேரம் மதிக்கப்பட்டு பக்தியுடன் கண்நோக்கப்பட வேண்டும். பிள்ளைகள் இதை செய்ய கற்றுக்கொடுக்க வேண்டும். ***Counsels to Parents, Teachers and Students p. 110***

ஜெப வேளையையும், ஜெபிக்கும் இடத்தையும் பரிசுத்தமானவைகளாகப் பார்க்க பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். தேவன் அவ்விடத்தில் அந்நேரத்தில் வீற்றிருக்கிறார். நடத்தையிலும் நமது பாவனைகளிலும் பக்தி வெளிப்பட வேண்டும். இதை கைக்கொண்டால் தேவ பிரசன்னத்தை அதிகமாக உணருவோம். ***Education, 242, 243.***

*தேவனது வீடு அவரது பரிசுத்த ஆலயம்*

தேவ பிரசன்னம் இருக்கும் இடத்தில் எப்படியாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை பல வசனங்கள் காட்டுகின்றன. இவ்வசனங்கள் நினைவு கூறப்பட்டு மனதில் ஆராயப்பட வேண்டும். “*அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச் சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார்.” யாத் 3: 5.* யாக்கோபு தேவ தூதர்களின் தரிசனத்தைக் கண்டு இவ்வார்த்தைகளைக் கூறினார். *“யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்தபோது: மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; இதை நான் அறியாதிருந்தேன் என்றான். அவன் பயந்து, இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது வானத்தின் வாசல் என்றான்.”“கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது.” ஆதி 28:16,17; ஆபகூக் 2:20.* ***Education, p. 243.***

நித்தியத்திற்குதியவைகளின் பரிசுத்த தன்மையை பலர் புரிந்துகொள்ளாமல் இருக்கின்றனர். தேவ ஆலயத்தில் நன்நடத்தையைக் குறித்து எல்லோருக்கும் கற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. பிள்ளைகள்



1ST Proof

தேவ ஆலயத்திற்குள்ளாக தாழ்மையான மனநிலையிலும், பக்தி விணையத்துடனும் நுழைய வேண்டும். இது அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டு கட்டளையாக்கப்பட வேண்டும். தெளிவான புத்தியுடையவர்களாக எல்லோரும் ஆலயத்திற்குள் செல்ல வேண்டும்.***Testimonies for the Church, Vol..5, p. 446.***

***வளர்ந்து வரும் அக்கரையற்ற மனநிலையலிருந்து உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்***

இவ்வுலகில் அமைக்கப்பட்டிருந்த ஆசரிப்புக் கூடாரம் புனிதமான இடமாக இருந்தது. கிறிஸ்தவர்களுக்கு இது ஒரு பாடத்தைக் கொடுக்கிறது. தேவன் மக்களை சந்திக்கும் இடத்தை நாம் எவ்விதத்தில் கணப்படுத்த வேண்டும் என்பதை காட்டுகிறது. இதில் ஒரு பெரிய மாற்றம் வந்துள்ளது. நன்மைக்கான மாற்றம் அல்ல. ஆராதனை சம்பந்தமான பழக்க வழக்கங்களில் மோசமான சூழல் வந்திருக்கிறது. தேவனோடு நம்மை தொடர்பு கொள்ளவைக்கும் பரிசுத்தமானவைகள் சாதாரண பொருட்களைப்போல கையாளப்படுகின்றன. மனதளவிலும் தேவ கரியங்களை மதிப்பிற்குரியவைகளாக மக்கள் பார்ப்பதில்லை. பழைய ஏற்பாட்டு காலங்களில் ஆசரிப்புக் கூடாரத்திற்கு கொடுக்கப்பட்ட கனமும் மதிப்பும் இன்று காணப்படுவதில்லை. மனதிலும் சிந்தையிலும் தேவ மக்கள் பயபக்தியுடன் இவைகளை கண்நோக்குவதில்லை. தேவ ஆராதனையின் ஒழுங்கையும் முறையையும் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். உலகின் காரியங்களைவிட இது மேலானதாக இருக்கிறது. ***Testimonies for the Church, Vol..5, p. 491.***

தேவ ஆலயத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய மரியாதையும் பக்தியும் இன்று காணப்படுவதில்லை. ஓய்வு நாளை ஆசரிக்கின்றோம் என்று சொல்லுபவர்களின் பிள்ளைகள் ஓய்வு நாளை மீறுகிறார்கள். இவர்கள் வீட்டைச் சுற்றி ஓடவும் விளையாடவும் தங்களது தீய சுபாவங்களை வெளிப்படுத்தவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆராதனைக்கென்று கூடும் இடங்களில் பிள்ளைகளின் நடத்தை இப்படியாக உள்ளது. அது பரிசுத்த அழகுடன் தேவன் தொழுதுகொள்ளப்பட வேண்டிய இடமாக உள்ளது. அவ்விடம் பரிசுத்தமாகக் காக்கப்பட வேண்டும். பரிசுத்தமான அமைதிநிலவ



1ST Proof

வேண்டும். சீரான ஒழுங்கும், துப்புரவும் தாழ்மையும் இருக்க வேண்டும். ஆனால் இந்த இடம் குழப்பம் நிறைந்த பாபிலோனாக மாற்றப்படுகின்றது. இது கோபத்தை வரவழைத்து அவரது பிரசன்னத்தை நீக்குகிறது. ***Review and Herald, Sep. 9, 1894.***

***எபிரெயர்களை பார்க்கிலும் நமது பக்தி மேண்மையானதாக வேண்டும்***

தேவ ஆலயத்திற்குரிய மரியாதையும், பக்தியும் இன்று பார்க்கப்படுவதில்லை. இது பெரிய உண்மையாக இருக்கிறது. புனிதமானவைகள் கண்டறியப்படுவதில்லை. பரிசுத்தமானவைகள் உயர்த்தப்படுவதில்லை. நமது குடும்பங்களில் பக்தியும், தேவ பயமும் இல்லாததே இதற்கு காரணம். கிறிஸ்தவ விசுவாசத்தின் உயர்ந்த தரம் தூசைபோல ஆகிவிட்டது. தேவன் அவருடைய பழங்கால ஜனங்களுக்கு தீர்க்கமாக கட்டளைகளை கொடுத்திருந்தார். ஒவ்வொன்றையும் அம்மக்கள் துள்ளியமாகவும், ஒழுங்குடனும் சிறிதும் மாறாதபடி கைக்கொள்ள வேண்டியிருந்தது. இன்றைக்கு அவர் குணம் மாறிவிட்டதா? இன்றைக்கும் பரலோகை ஆண்டுகொண்டிருக்கும் அதே மகத்துவத்தைப் பெற்ற வல்லமையான தேவனாக வீற்றிருக்கவில்லையா? தேவன் எபிரெயர்களுக்கு கூறியவைகளை நாம் படிக்க வேண்டும். பெரிய சத்திய வெளிச்சத்தின் மகிமை நம்மீது ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. எபிரெயர்கள் காட்டின பயபக்தியை நாமும் காட்ட வேண்டும். அவர்களைக் காட்டிலும் மேலான ஆசீர்வாதங்களை நாம் பெற்றுள்ளோம். அவர்களைவிட தேவ பக்தியும், தாழ்மையும் நம்மிடம் அதிகமாக காணப்பட வேண்டும். ஆனால் கிறிஸ்தவ ஆராதனையின் பரிசுத்தத்தின் மீது நாம் கொண்டிருந்த விசுவாசத்தை சாத்தான் அழித்துள்ளான். ***Testimonies for the Church, Vol..5, p. 495, 496.***

***ஆலயம் - தேவ ஜனத்தின் ஆசரிப்புக் கூடாரம்***

குடும்பத்தின் ஆசரிப்புக் கூடாரமாக வீடு அமைந்திருக்கிறது. வீட்டின் தனி அறைகளும், வீட்டை சுற்றியுள்ள இயற்கையின் இடங்களும் தனி ஜெபத்திற்கு ஏற்ற இடங்களாக உள்ளன. சபையினர் எல்லோரும் ஒன்றாக கூடும்பொழுது தேவ ஆலயமே ஆசரிப்புக் கூடாரமாகிறது. ஆராதனை நேரம், ஆராதனையின் ஒழுங்கு முறையை குறித்து

திட்டவட்டமான சட்டங்கள் இருக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol..5, p. 491.***

### *பக்திவினையத்துடன் ஆலயத்திற்குள் செல்ல பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள்*

பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் மனங்களில் கிறிஸ்தவத்தின் தரத்தை உயர்த்துங்கள். இயேசுவை தங்களது அனுபவங்களுக்குள்ளாகக் கொண்டு வர செய்யுங்கள். உயரிய ஒரு தேவபக்தியை பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். ஆலயத்தினுள் செல்லும்பொழுது ***"இது தேவனது இல்லம். இங்கு தேவன் இருக்கிறார்"***பெருமையும், பொறாமையும் புறங்கூறுதலும் என்னிடம் இருக்கக் கூடாது. வெறுப்பையும் வஞ்சகத்தையும் என் இதயத்தில் நான் வைக்கக் கூடாது, தேவ பிரசன்னத்திற்குள்ளாக நான் வருகிறேன் என்ற எண்ணம் இருக்க வேண்டும். தேவன் தனது மக்களை சந்தித்து அவர்களை ஆசீர்வதிக்கும் இடமாக இது உள்ளது. நித்தியத்திற்குரிய உன்னதமான பரிசுத்த தேவன் என் இதயத்தை ஆராய்ந்து, என்னுடைய இரகசிய சிந்தனைகளையும் படித்துக்கொண்டிருக்கிறார். ***Testimonies for the Church, Vol..5, p. 294.***

### *பெற்றோர்களுடன் இருக்க வேண்டும்*

தேவ ஆசரிப்புக் கூடாரத்தில் ஆராதனைக்காக கூடுவோரது ஒழுக்கம் உயர்ந்த தரத்தைக் கொண்டுள்ளதாக இருக்க வேண்டும். பரிசுத்தமாக்கப்பட்டதாக இருக்க வேண்டும். இக்காரியம் அசட்டை செய்யப்பட்டுள்ளது. இதன் முக்கியத்துவம் பார்க்கப்படுவதில்லை. இதன் விளைவாக ஒழுங்கின்மை அவபக்தி நிலவுகிறது. கனம் கனவீனப்படுத்தப்பட்டுள்ளது. சபையின் தலைவர்களும் ஊழியர்களும் பெற்றோர்களும் இதை சரியாக புரிந்துகொள்ளாவிட்டால் அனுபவமில்லாத பிள்ளைகளிடம் நாம் என்ன எதிர்பார்க்க முடியும். பிள்ளைகள் பெற்றோரை பரிந்து தனித்தனி சிறு குழுவாக கூடுகிறார்கள். இவர்கள் பெற்றோருடன் இருக்க வேண்டும். தேவ பிரசன்னத்தில் இருந்துகொண்டும், தேவன் பார்க்கிறார் என்பதை அறிந்தும் சிரித்துக்கொண்டும், விளையாடிக்கொண்டும் பக்தியின்றி எப்பொழுதும் நடப்பதைப்போன்று



1^ST Proof

நடந்துகொள்ளுகிறார்கள். ***Testimonies for the Church, Vol..5, p. 496, 497.***

### *அமைதியாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும்*

தேவ செய்தி கொடுக்கப்பட்டிருக்கும் பொழுதும் பேசிக்கொண்டிடு அவபக்தியுடன் நடந்துகொள்ளாதீர்கள். இத்தவறை செய்பவர்கள் தூதர்கள் அவர்களை கவனித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தால் பயந்து வெட்கத்துடன் தலைகுனிவார்கள். தங்களது பாவத்தை வெறுப்பார்கள். கவனமாக செய்தியை கேட்பவர்களை தேவன் எதிர்பார்க்கிறார். மனிதர்கள் தூங்கியபொழுது சாத்தான் களைகளை விதைத்தான் என்பதைப் படிக்கிறோம். ***Message to young people. P. 266.***

### *சாதாரண இடத்தைப்போன்று நடந்துகொள்ளக் கூடாது*

ஆசரிப்புக் கூடாரத்தைப்போன்று தேவ ஆலயத்தில் தேவன் அவரது மக்களை சந்திக்கும் ஒரு பரிசுத்தமான இடம் இருக்க வேண்டும். மற்ற வேலைகளை செய்வதற்கோ, உணவு உண்பதற்கோ இவ்விடம் பயன்படுத்தப்படக் கூடாது. ஆராதனைக்கு மட்டுமே இது பயன்படுத்தப்பட வேண்டும். பள்ளிக்கூட அறையாக இருந்திருக்கும் அறையில் மாணவர்கள் ஆராதனைக்கு கூடினால் அவ்விடத்தின் பரிசுத்தத்தை உணரமாட்டார்கள். பயபக்தியுடன் நடந்துகொள்ள மாட்டார்கள். பொதுவானவைகளும் பரிசுத்தமானவைகளும் இணைக்கப்படுவதினால் இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை பார்க்க முடியாமற்போகிறது.

ஆராதனைக்கென்று பயன்படுத்தப்படும் இடத்தை ஒரு சாதரண இடமாக பாவிக்கக் கூடாது. மற்ற நாட்களின் அலுவல்களுடனும் உணர்வுகளுடனும், தொழிற் சம்பந்தமான காரியங்களுடனும் அவ்விடம் தொடர்பு கொண்டு இருக்கக்கூடாது. ஆசரிப்புக் கூடாரத்திற்குள் நுழையும்பொழுது அவ்விடத்தின் பரிசுத்த தன்மை உணரப்பட வேண்டும். உலக சிந்தனைகளை விட்டுவிட வேண்டும். தேவன் அவரது பிரசன்னத்தை வெளிப்படுத்தும் இடமாக இது உள்ளது. தேவ கண்கள் பார்த்துக்கொண்டிருக்கும் இடமாகிறது. பெருமையும், இச்சையும், சுய மேட்டிமையும், சுய நலமும், பிரிவினைகளும் இவ்விடத்திற்குரியவை அல்ல. ***Manuscript 23, 1886.***

***அமைதியின் ஆவி வெளிப்படுத்தப்பட வேண்டும்***

பெற்றோர்களே பிள்ளைகளை உங்களது கட்டுப்பாட்டிற்குள்ளாக வைப்பது உங்கள் கடமையாக இருக்கிறது. பிள்ளைகள் தங்களது தீய சுபாவங்களையும் கோபங்களையும் முழுமையாக அடக்கிக்கொள்ள வேண்டும். ஜெபக்கூட்டங்களுக்கு பிள்ளைகள் அழைத்துச் செல்லப்பட்டால் தாங்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதை புரிந்துகொண்டு நடக்கும்படி செய்யப்பட வேண்டும். அவர்கள் வீட்டில் அல்ல தேவன் தனது மக்களை சந்திக்கும் இடத்திற்கு வந்திருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும். அமைதியாகவும் விளையாடாமலும் இருக்க வேண்டும். இதை நீங்கள் செய்தால் தேவன் அவரது முகத்தை உங்கள் பக்கமாக திருப்புவார். ஊங்களை சந்தித்து ஆசீர்வதிப்பார்.

பரிசுத்தவான்களின் கூடுகையில் ஒழுங்கு கடைபிடிக்கப்பட்டால் சத்தியம் நன்றாக கிரியை செய்யும். அதை கேட்பவர்களிடம் நன்றாக வேலை செய்யும். அவ்விடத்தில் காணப்பட வேண்டிய பக்தி விணயமும் உன்னதமும் ஊக்குவிக்கப்படும். சத்தியத்தில் வல்லமை இருக்கும். ஆத்துமத்தின் ஆழங்களை அது தட்டி எழுப்பும். இதை கேட்பவர்கள் மரணத்தைப் போன்ற தூக்கத்தில் இருக்க மாட்டார்கள். விசுவாசிகளிடையேயும், அவிசுவாசிகளிடையேயும் ஒரு நல்ல செல்வாக்கு உருவாகும். சில சபைகளில் தேவனின் உடன்படிக்கைப் பெட்டி எடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. தேவ கட்டளைகள் மீறப்பட்டுள்ளதால் இது நடந்துள்ளது. இஸ்ரவேலின் பெலனும் குறைந்துவிட்டது. ***Review and Herald, Sep. 19, 1894.***

***தொந்தரவு கொடுக்கும் பிள்ளையை வெளியே அழைத்துச் செல்லுங்கள்***

தேவ பிள்ளைகள் தேவனுக்கு கீழ்ப்படிவதைப்போலவே உங்கள் பிள்ளையும் தேவனுக்கு கீழ்ப்படிய கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். இந்த நல்ல தரத்தை நீங்கள் காத்துக்கொண்டால், உங்களது ஒரு வார்த்தையே அமைதியற்ற பிள்ளையை அமைதியாக்கிவிடும். பிள்ளைகளை கட்டுப்படுத்த முடியாமற்போனால், இது செய்யத்தகுந்ததல்ல என்று பெற்றோர் நினைத்தால் ஆலயத்திலிருந்து அந்த பிள்ளை உடனடியாக வெளியே கொண்டு செல்லப்பட வேண்டும். அக்குழந்தை ஆலயத்தினுள் இருந்துகொண்டு மற்றவர்களின் கவனங்களையும் திசை திருப்பிக்கொண்டிருக்கக் கூடாது. சபையில் பெற்றோர்கள் பிள்ளைகளை சரியாக கட்டுப்படுத்தாததினால் தேவன் கனவீனப்படுத்தப்படுகிறார். ***Letter 1, 1877.***

***உடையினால் அவபக்தி ஊக்குவிக்கப்படுதல்***

ஆடைகளை அணிவதில் எல்லோரும் துப்புரவாகவும் சுத்தமாகவும் இருந்து ஒழுங்குடனும் செயல்பட வேண்டும். தேவையற்ற வெளி அலங்காரம் இருக்கக் கூடாது. இது ஆசரிப்புக் கூடாரத்திற்கு ஏற்றதல்ல. காட்சிப்பொருளைப்போன்று அமைந்திருக்கும் ஆடைகள் அணியப்படக்கூடாது. இது அவபக்தியை ஊக்குவிக்கும். உடைகளை குறித்ததான காரியங்கள் சிறிதும் விட்டுக்கொடுக்கப்படாமல் கைக்கொள்ளப்பட வேண்டும். இவைகள் வேத நியமங்களுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். உடைகளிலும், மற்றும் பல காரியங்களிலும் உலகின் புது பழக்க வழக்கங்கள் நவ நாகரீகம் என்ற பெயரில் ஒரு பெண் தெய்வத்தைப் போல உலகை ஆண்டு கொண்டிருக்கிறது. இவள் சபைக்குள்ளும் வருகிறாள். சபையானது தேவ வார்த்தையையே தனது தரமாகவும், அளவு கோலாகவும் கொள்ள வேண்டும். பெற்றோர்களும் இதைக் குறித்து ஞானம் பெற்றவர்களாக சிந்திக்க வேண்டும். ***Testimonies for the Church, Vol..5, 499, 500.***

***தேவ ஊழியர்களை கனப்படுத்துங்கள் - இவர்கள் தேவனின் பிரதிநிதிகள்***

தேவனின் ஊழியர்களும் கனப்படுத்தப்பட வேண்டும். ஊழியர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் தேவனுக்காக பேசுபவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு கொடுக்கப்படும் மதிப்பினால் தேவன் கனப்படுத்தப்படுகிறார். ***Education, p. 244.***

தேவ ஊழியர்கள் தேவனது பிரதிநிதிகளாக இருக்கிறார்கள் என்பது பிள்ளைகளுக்குச் சொல்லப்படுவதில்லை. அவர்கள் கொடுக்கும் செய்தி ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக தேவனிடடமிருந்து வரும் செய்தி என்பதை பிள்ளைகள் அறிந்துகொள்ளுவதில்லை. இவ்வூழியர்களுடன் தொடர்புகொள்ளும் பொழுது அவர்கள் கொடுக்கும் செய்தி

1ST Proof


குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை

ஏற்றுக்கொள்ளப்பட்டால் ஜீவனுக்கேதுவானதாகவும் நிராகரிக்கப்பட்டால் மரணத்துக்கேதுவானதாக இருக்கிறது. இதை பிள்ளைகள் அறிய வேண்டியுள்ளது. ***Testimonies for the Church, Vol..5, 497.***

தேவ ஆராதனையுடன் தொடர்புடைய பரிசுத்தமான எதுவும் சாதாரண முறையில் கையாளப்படக் கூடாது. தேவ வார்த்தை பேசப்படும்பொழுது தேவ குரலைக் கேட்கிறோம் என்பதை மனதில் கொள்ளுங்கள் அவரது ஊழியர்களின் வழியாக தேவனே பேசுகிறார். வனத்தை சிதறவிட்டு, தவறான பாதையில் போய்விடாதபடி உங்கள் பாதங்களை பாதுகாக்கும் வார்த்தைகளைக் கேளாமல் இருக்காதீர்கள். ***Message to young people p. 266.***

***குறை கூறும் பெற்றோர்கள்***

பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளுக்கு எத்தகைய உதாரணத்தைக் கொடுக்கிறீர்கள் என்பதைக் குறித்துக் கவனமாக இருங்கள் என்ன சிந்தனைகளை பிள்ளைகளின் மனங்களில் ஓட செய்கிறீர்கள். இளம் மனங்கள் பெலம் பெற்றவை அல்ல. எந்த தாக்கத்தையும் எளிதில் ஏற்றுக்கொள்ளும் ஆராதனையில் பேசியவர் தனது பேச்சுரையில் தவறு எதையேனும் செய்திருந்தால் துணிகரமாக அதைப்பற்றி பேசாதீர்கள். அவரது நல்ல வேலைகளைப் பற்றி பேசுங்கள். அவர் முன்வைத்த நல்ல சிந்தனைகளை மட்டுமே நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். தேவ பிரதிநிதியிடமிருந்து வந்த செய்தியாக இதை நீங்கள் மனதில் வைக்க வேண்டும். தேவ வார்த்தை பேசப்பட்டாலும் பிள்ளைகளிடையே எந்த மாற்றமும் வராததற்கான காணரம் இதில் வெளியாகிறது. இதின் நிமித்தமாகவே பிள்ளைகள் ஆலயத்தையும் கனப்படுத்துவதில்லை. அவர்களுக்கு ஒரு தவறான கல்வி கொடுக்கப்பட்டிருக்கின்றது. ***Testimonies for the Church, Vol..5, 498.***

பெற்றோர்கள் தேவ ஊழியர்களை எப்படியாக பாவித்து, அவர்களை எவ்விதத்தில் நடத்துகிறார்கள் என்பதை பிள்ளைகள் கவனிக்கிறார்கள். இதைக் கொண்டே இவர்கள் தேவ ஊழியர்களை மதிப்பார்கள். பல குடும்ப தலைவர்கள் தங்கள் வீடுகளில் சபை ஆராதனையின் குறைகளைச் சுட்டிக்காட்டி பேசுகிறார்கள். சிலவற்றை தன்மையானதாகச் சொல்லி, பல தவறுகளை சொல்லுகிறார்கள். தேவன் மனிதர்களுக்குக் கொடுக்கும் செய்தி இதனால் கேள்விக்குள்ளாகிறது. பரிகாசத்திற்கும் ஏளன பேச்சிற்க்கான தலைப்பாக இருக்கிறது. இதை பிள்ளைகளும் வாலிபர்களும் பார்க்கும்பொழுது எத்தகைய செய்திகளை பெற்றுக்கொள்ளுவார்கள். பரலோக புத்தகங்களில் பதிவுகள் இதன் தீய விளைவுகளை முழுமையாக வெளிப்படுத்த முடியும். இத்தகைய காரியங்களை பிள்ளைகள் விரைவாகப் பார்த்து புரிந்துகொள்ளுகிறார்கள். பெற்றோர்கள் நினைப்பதைவிட பிள்ளைகள் இவைகளைக் கூர்ந்து கவனிப்பார்கள். பிள்ளைகளது ஒழுக்கத்தை இது தவறாக திசை திருப்புகிறது. இறுதி வரையிலும் இது மாறாது. பெற்றோர்கள் பிள்ளைகள் கடினமாக இதயம் படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்று பெற்றோர்கள் புலம்புகிறார்கள். தேவ வழியில் நடத்துவது எளிதானதாக இருப்பதில்லை என்றும் கூறுகிறார்கள். இந்நிலைக்கான உண்மையான காரணம் பரலோகின் புத்தகங்களில் எழுதப்பட்டிருக்கிறது. பெற்றோர்கள் மனம் மாறாதவர்களாக இருந்திருக்கிறார்கள். பரலோகத்துடனும், அதன் வேலையுடனும் அவர்கள் இசைவாக இல்லை. தேவ ஊழியத்தைக் குறித்தும், அவரது ஆசரிப்புக் கூடாரத்தைக் குறித்தும் பிள்ளைகளுக்கு கல்வி கொடுக்கப்பட்டது. இவைகளின் பரிசுத்தத்தை அவர்கள் பார்க்கும்படி பெற்றோர்கள் நடத்தவில்லை. இந்த அறிவுரைகள் சரியாக கொடுக்கப்படாததினால் ஒரு தீங்கான செல்வாக்கு பல வருடங்களுக்கும் இல்லத்தில் நிலவுகிறது. இந்த சூழ்நிலையில் இருந்த பிள்ளைகள் தேவ ஊழியத்தின் தன்மையை புரிந்துகொள்ளுவது கேள்விக்குறியாகிறது. தேவ இரட்சிப்பையும் இவர்களால் புரிந்துகொள்ள முடியாமற் போகிறது. தேவனுக்குரிய காரியங்கள் பயபக்தியுடன் பேசப்பட வேண்டும். நீங்கள் தொடர்பு கொள்ளும் எல்லோரிடமும் தேவ ஊழியர்களிடமிருந்து வரும் செய்தியை தேவனிடமிருந்து வரும் செய்தியாக பாவிப்பதைக் காட்ட வேண்டும். இக்காரியங்களைப் பற்றி பேசுமபொழுது மொழியும் சரியான வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். ***Testimonies for the Church, Vol..5, 497, 498.***

***தேவ பக்தியை ஒரு அன்றாட பழக்கமாக ஆக்கிக்கொள்ளுங்கள்***

இந்த காலத்தின் வாலிபர்களுக்கு தேவபக்தி தேவை. நல்ல கிறிஸ்தவ பெற்றோர்களின் பிள்ளைகளும் ஆலயத்தில் ஒரு பயபக்தியைக்



1ST Proof

காட்டுவதில்லை. ஒழுங்காக நடந்துகொள்ளுவதில்லை. தேவ ஊழியர்கள் தேவனது வார்த்தையை பிரசங்கித்துக்கொண்டிருக்கும் பொழுது, சிலர் படித்துக்கொண்டிருக்கிறார்கள், சிலர் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள், சிலர் இரகசியமாக பேசிக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களின் கவனங்களை இவர்கள் திசை திருப்புவதினால், இவர்களது கண்கள் பாவம் செய்கின்றன. இந்த பழக்கம் கண்டிக்கப்படாவிட்டால் வளர்ந்து மற்றவர்களையும் பாதிக்கும்.

தேவன் ஆராதிக்கப்படும் கூட்டங்களில் கவனமின்றியும், அக்கரையற்றும் இருப்பது பெருமையாதல்ல என்பதை பிள்ளைகளும் வாலிபர்களும் புரிந்துகொள்ள வேண்டும். பக்தியற்ற ஒவ்வொரு சிந்தனையையும், செயலையும் தேவன் பார்க்கிறார். பரலோகில் இவைகள் பதிவு செய்யப்படுகின்றன. ***"உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்"*** என்று சொல்லுகிறார், அவரது கண்களிடமிருந்து எதுவும் மறைக்கப்படுவதில்லை. தேவ ஆலயத்தில் கவனமின்றி அக்கரையற்றிருக்கும் பழக்கத்தை நீங்கள் ஏற்படுத்திக்கொண்டிருந்தால் உங்களது சக்திகளை பிரயோகித்து அதை திருத்திக்கொள்ளுங்கள். இதை செய்து நீங்கள் சுய மரியாதை உள்ளவர்கள் என்பதைக் காட்டுங்கள். தேவபக்தியும், பக்திவினயமான நடத்தையும் உங்களுடைய இயல்பாகவே மாறிவிட வேண்டும். ***Youth's Instructor Oct. 8, 1896.***

***அதிகாரம் - 81***

***இல்லமும் சபையும் ஒருங்கிணைந்து வேலை செய்தல்***

***கிருபையின் வேலையை இல்லத்தில் துவங்குங்கள்***

பெற்றோர்களே கிருபையின் வேலையை உங்களது இல்லங்களில் துவங்குங்கள். தேவ தூதர்களுடன் நீங்கள் ஒத்துழைப்பதை பிள்ளைகள் பார்க்க வேண்டும். ஒவ்வொரு நாளும் நீங்கள் மனமாற்றம் அடைய வேண்டும். தேவ இராஜியத்தின் நித்திய வாழ்விற்கு உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் பயிற்றுவித்துக் கொள்ளுங்கள். தேவதூதர்கள் உங்களது பெலம் நிறைந்த உதவியாளர்களாக இருப்பார்கள். சாத்தான் உங்களை சோதிப்பான். விழுந்துவிடாதீர்கள். சாத்தான் பயன்படுத்தக்கூடிய ஒரு வார்த்தையைக் கூட பேசாதீர்கள்.



1ST Proof

சத்தியம் தூய்மையானதாகவும் மாசற்றதாகவும் இருக்கிறது. அது இதயத்தில் வாசம் செய்யட்டும். குடும்ப அங்கத்தினர்கள் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கட்டும். ***"நான் ஒரு கிறிஸ்தவனாக இருப்பேன். இங்கு இருக்கும் எனது பள்ளியில் பரலோகத்திற்குள் செல்வதற்கான ஒரு குணத்தை நான் வளர்த்துக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் என்னிடம் எப்படி நடக்க வேண்டும் என்று நினைக்கிறேனோ, அப்படியே நான் எல்லோரிடமும் நடந்துகொள்ளுவேன். இவ்வுலகில் கிறிஸ்துவை வெளிப்படுத்துபவர்கள் மட்டுமே பரலோக மன்றங்களுக்குள்ளாக பிரவேசிக்க முடியும்."***

குடும்ப வாழ்வினை உங்களால் முடிந்த வரையில் பரலோகத்தைப்போலவே மாற்றுங்கள். குடும்ப ஜெபத்திற்காக எல்லோரும் ஒன்றாக கூடும் பொழுது, தேவ ஊழியத்தில் பொறுப்புக்களை சுமந்துகொண்டிருப்போருக்காக ஜெபிக்க மறக்கக் கூடாது. ***Manuscript 93, 1901.***

தங்கள் குடும்பங்களை சரியாக நிர்வகித்துக் கொள்ளுவோர் சபைக்குள்ளும் ஒழுங்கையும், பக்தியையும் கொண்டுவரும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவார்கள். கிருபையும் நீதியும் ஒன்றோடு ஒன்று பக்கமாக நிற்பதை வெளிப்படுத்துவார்கள். கிறிஸ்துவின் குணத்தை பிள்ளைகளுக்குக் காட்டுவார்கள். அன்பும் தயவும் அவர்கள் உதடுகளின் சட்டமாக இருக்கும். இது அவர்களது கட்டளைக்கு பெலத்தையும் அதிகாரத்தையும் கொடுக்கும். இவர்களுக்கு பிள்ளைகள் கீழ்ப்படிவார்கள். ***Review and Herald, Feb. 19, 1895.***

***ஒரு நல்ல இல்லம் ஒரு நல்ல சபையை உருவாக்குகிறது***

ஒவ்வொரு இல்லமும் பெற்றோர்கள் தலைமைதாங்கும் ஒரு சபையாகவே உள்ளது. பிள்ளைகளின் இரட்சிப்பிற்காக பிரயாசப்படுவதே பெற்றோர்களின் முதன்மையான வேலையாக இருக்க வேண்டும். தாயும் தந்தையும் இல்லத்தின் ஆசாரியராகவும், ஆசிரியராகவும் செயல்பட வேண்டும். கிறிஸ்துவின் பக்கமாக நிற்க வேண்டும். இது வீட்டினுள் ஒரு நல்ல செல்வாக்கினைக் கொண்டு வரும். இதன் தாக்கம் சபையிலும் உணரப்படும். ஒவ்வொரு விசுவாசியும் இதை அங்கிகரிப்பார்கள்.

இல்லங்களில் இந்த பரிசுத்தமும், பக்தியும் காணப்படாததால் தேவனின் வேலை தடைபடுகிறது. வீட்டிலும், வேலை பார்க்கும் இடத்திலும் செய்ய முடியாததை எந்த மனிதனாலும் சபையிலும் செய்ய முடியாது. ***Manuscript 57, 1903.***

***சபையில் நன்நடத்தை வீட்டில் கற்றுக்கொள்ளப்படுகிறது***

சபையில் எப்படி நடந்துகொள்ளுவது என்பதை கற்றுக்கொடுக்கும் பள்ளியாக வீடு உள்ளது. நாம் எல்லோரும் தேவ குடும்பத்தின் அங்கத்தினர்களாக இருந்தால் வீட்டில் நன்நடத்தைக் காணப்படும். குடும்பத்தின் ஒவ்வொரு நபரும் மற்ற நபர்களை மகிழ்விப்பார்கள். தேவ தூதர்கள் இரட்சிப்பை சுதந்தரித்துக் கொள்ளுபவர்களுக்கு ஊழியம் செய்கிறார்கள். பரலோக குடும்பத்தின் ஒரு உதாரணமாக உங்கள் குடும்பம் இருக்க இவர்கள் உதவுவார்கள். வீட்டில் சமாதானம் இருந்தால், சபையிலும் சமாதானம் இருக்கும். இந்த விலையேறப்பெற்ற அனுபவம் சபையிலும் கொண்டுவரப்பட்டால் எல்லோரும் அன்புடன் நடந்துகொள்ளுவார்கள். சண்டைகள் நின்றுவிடும். கிறிஸ்தவ நற்குணம் சபை அங்கத்தினர்களிடம் காணப்படும். இவர்கள் இயேசுவோடு இருக்கிறார்கள் என்பதை உலகமும் கண்டுகொள்ளும். இயேசுவிடமிருந்து இவர்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் புரிந்துகொள்ளும் சபையில் உள்ள எல்லோரும் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்தால் உலகின்மீது இது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சிந்தியுங்கள். ***Manusript 60, 1903.***

***சபையில் பெலவீனம் இருப்பதற்கான காரணம்***

போதகர்கள் தங்கள் வேலையை ஒழுங்காக செய்யாததால் சபை இன்றைய நிலைக்கு வந்துவிட்டதாக பலர் நினைக்கின்றனர். சபைக்கு உண்மையான மேய்ப்பர்களும் ஊழியர்களும் அவசியமே கிறிஸ்துவிற்கு தங்களை ஒப்புவிக்காத வாலிபர்களிடம் இவர்கள் வேலை செய்ய வேண்டும். இவர்களுக்கு மட்டுமின்றி பெயரளவிற்கு சபையில் இருப்பவர்களுக்காகவும் வேலை செய்ய வேண்டும். பல ஊழியர்கள் தங்கள் கடமைகளை செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆயினும் பெற்றோர்கள் தங்களது வேலையை அசட்டைசெய்தால், சபை ஊழியர்களின் வேலை பயனில்லாமல் போகிறது. குடும்பத்தில் கிறிஸ்தவ ஜீவியம் இருப்பதில்லை. இதன் நிமித்தமாக சபையிலும் கிறிஸ்தவ வல்லமை காணப்படுவதில்லை. பெறோர்கள் தங்கள் கடமைகளைச் செய்யத் துவங்காத வரையிலும் வாலிபர்கள் தங்கள் கடமையை உணர வைக்க முடியாது. வீட்டில் உண்மையான கிறிஸ்தவம் இருந்தால், சபையினுள்ளும் அது கொண்டு வரப்படம். தேவனுக்காக வேலை செய்யும் பெற்றோர் நன்மைக்கான ஒரு வல்லமையாக இருக்கிறார்கள். பிள்ளைகளை கட்டுப்படுத்தி, ஊக்கப்படுத்தி தேவ கடிந்துரையில் அவர்களை வளர்க்கும்பொழுது சுற்றி இருப்பவர்களுக்கும் ஒரு ஆசீர்வாதமாக இருப்பார்கள். இவர்களது வேலையினால் சபையும் பெலப்படுகிறது.

1ST Proof

***கடமைகளை புறக்கணிக்கும் பெற்றோர் சபையை உயர்த்துவதில்லை***

வீட்டில் கீழ்ப்படியாமை அனுமதிக்கப்பட்டால், பிள்ளைகள் தேவ இராஜியத்தையும் எதிர்ப்பார்கள். ஆவியானவருடைய வல்லமை இதனால் செயல்பட முடியாமற் போகிறது. இத்தகைய பிள்ளைகள் ஒரு வேளை எதிர்காலத்தில் சூழ்நிலையின் நிமித்தமாக இயேசுவை ஏற்றுக்கொள்ளலாம். ஆயினும் அந்த நிலையில் சுயத்துடன் பயங்கரமான போராட்டங்களை போராட வேண்டியதாக இருக்கும். இந்த போராட்டத்தின் வழியாகவே தங்களை தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பார்கள். பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்ட தவறான கல்வியினால் சபை பாதிக்கப்படுகின்றது. கீழ்ப்படியாமையும், அதிகாரத்தை எதிர்க்கும் துணிகரமும் வீட்டில் அனுமதிக்கப்படுகிறது. இந்த ஆவியை கொண்டுள்ளோரால் தேவனுக்கு கீழ்ப்படிய முடியாது. ***Review and Herald, May 30, 1897.***

***ஆவிக்குரிய வாழ்க்கை குறை கூறுவதினால் அழிக்கப்படுகிறது***

துவறான வார்த்தைகளை பேசும்படியாக நீங்கள் உந்தப்பட்டு சோதிக்கப்படும்பொழுது, இச்சோதனையை மேற்கொள்ள கிருபைக்காக ஜெபியுங்கள். நீங்கள் பேசுவரை பிள்ளைகள் கேட்கிறார்கள். அதையே அவர்களும் பேசுவார்கள். நீங்கள் காட்டும் உதாரணத்தினால் அவர்களுக்கு ஒரு கல்வியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். தவறான

வார்த்தைகளை சபை அங்கத்தினர்களிடம் நீங்கள் பேசினால், பரலோகினுள் அனுமதிக்கப்பட்டால் அங்கேயும் இதையே செய்வீர்கள்.

சபையிடம் ஒரு குடும்பம் வந்த பிறகு, அது சபைக்கு ஒரு உதவியாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்க வேண்டும். குறை கூறும் ஒரு வார்த்தையையும் பேசாதீர்கள். பல சபைகளில் ஆவிக்குரிய விசுவாச வாழ்க்கை அழிக்கப்பட்டுள்ளது. புறங்கூறும் ஆவி சபைக்குள் வர அனுமதிக்கப்பட்டுள்ளது. நாம் ஏன் மற்றவர்களை குற்றப்படுத்துகிறோம்? தவறாக உங்களிடம் பேசுபவர்களிடமோ, தவறாக உங்களிடம் நடந்துகெள்ளுபவாகளிடமோ, எதையும் பேசாமல் அமைதியாக இருங்கள். இதுவே அவர்களுக்கு நீங்கள் கொடுக்கின்ற வல்லமையான கடிந்துரையாக இருக்கும். முழுமையான அமைதியை காத்துக்கொள்ளுங்கள். உங்களது அமைதி பேசும்.**Manuscript 21, 1903.**

***தணித்து விடப்பட்ட வாலிபர்களை கவனித்தல்***

குடும்பம் இல்லாத வாலிபர்களின் மீது எவரேனும் அக்கரை கொண்டு அவர்களை கவனிக்க வேண்டும். இதை செய்பவர்கள் பிரசங்க மேடையிலிருந்து தேவ செய்தியைக் கொடுக்கும் ஒரு ஊழியருக்கு சமமான வேலையை செய்கிறார்கள். இவ்வேலையை நம் ஒவ்வொருவரிடமிருந்தும் தேவன் எதிர்பார்க்கிறார். இவ்வாலிபர்கள் கிறிஸ்தவ குணத்தை மாசு படுத்தும் தவறான பழக்கங்களை கற்றுக்கொள்ளாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கென உண்மையுடன் பிரயாசப்பட வேண்டும். கிறிஸ்துவை பின்பற்றுவோர் வேதவார்த்தையின் மீது வாலிபர்கள் நாட்டங்கொள்ளும்படியாக செய்ய வேண்டும். ***Fundementals of Christian Education, p. 51.***

***ஊழியக்காரனுக்கு விசேஷ தருணங்கள் கொடுக்கப்படுகின்றன***

சமயம் வாய்க்கும்பொழுதெல்லாம் இயேசுவின் அன்பின் கதை பிள்ளைகளுக்குச் சொல்லப்படட்டும். ஒவ்வொரு பிரசங்கத்திலும் பிள்ளைகளுக்கென்று அதில் ஒரு சிறு பாகம் இருக்க வேண்டும். கிறிஸ்துவின் ஊழியர்கள் இந்த சிறு பிள்ளைகளின் நண்பர்களாக இருக்கலாம். இவர்களுடன் ஒரு ஆழமான நெருக்கத்தை உருவாக்கிக் கொள்ளலாம். தேவ வார்த்தையின் அறிவை இப்பிள்ளைகளுக்கு



1ST
Proof

சொல்லிக்கொடுக்கும் ஒவ்வொரு வாய்ப்பும் பயன்படுத்தப்பட வேண்டும். சாத்தானின் கிரியைகளுக்கு எதிராக இது ஒரு தடைச்சுவற்றை எழுப்புகின்றது. சிறு பிராயத்திலும் தேவ சத்தியங்களை பிள்ளைகள் அறிந்துகொண்டால் தீமை தடுக்கப்படுகிறது. இவர்களும்***" என்று எழுதியிருக்கிறதே"***என்று கூறி சாத்தானை எதிர்ப்பார்கள்.

***சபையில் இருப்பதைப்போல் வீட்டிலும் இருங்கள்***

பெற்றோர்களே நீங்கள் பிள்ளைகளின் ஆசிரியர்களாக இருக்கிறீர்கள். சத்தியம் உங்கள் மனசாட்சியையும் பகுத்தறிவையும் கட்டுப்படுத்த வேண்டும். ஒவ்வொரு வார்த்தையும் செயலும் இதற்கு இசைவாக இருக்க வேண்டும். தேவ ஆராதனையின்போது நடந்துகொள்ளுவதைப்போலவே வீட்டிலும் நடந்து கொள்ளுங்கள். வீட்டிலுள்ள எல்லோருக்கும் ஒரு நல்ல குணத்தைக் காண்பியுங்கள். குடும்பத்தின் இளைய அங்கத்தினர் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதை தூதர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். வீட்டின் கிறிஸ்தவம் நிச்சயமாக சபைக்குள்ளும் கொண்டு செல்லப்படும். ***Manuscript 84, 1897.***

***பாகம் - XIX***

***நியாயத்தீர்ப்பின் நாள்***

***அதிகாரம் - 82***

***வெகு காலம் சென்றுவிட்டது***

***சாத்தான் தனது சேனைகளை அணிவகுத்துக் கொண்டிருக்கிறான்***

சாத்தான் யுத்தத்திற்கு தனது சேனைகளை அணிவகுத்துக் கொண்டிருக்கிறான். இதற்கு நாம் தனிப்பட்ட விதத்தில் ஆயத்தமாகியுள்ளோமா? நாமும் நமது குடும்பத்தாரும் எதிரியை புரிந்துகொண்டிருக்கிரோமா? அவன் யுத்தம் பண்ணுகின்ற வழிகளை அறிந்துகொண்டிருக்கிறோமா? கடமைகளுக்கும், நன்நெறிகளுக்கும் கேற்ற பழக்கங்களை நமது பிள்ளைகள் திடமனதுடன் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்களா? இந்த உயர்ந்த தரத்தை நாம் விட்டுக்கொடுக்காமல் இருக்கின்றோமா? இக்காலத்திற்குரிய

அடையாளங்களை எல்லோரும் புரிந்துகொள்ளும்படி நான் ஜெபிக்கிறேன். யுத்த களத்தில் பிள்ளைகள் நமது பாதுகாப்பாகவும், பெலனாகவும் இருக்க வேண்டும். ***Review and Herald, Apr. 3, 1889.***

***எதிர்பார்த்திராத அதிர்ச்சிக்கு ஆயத்தமாகுங்கள்***

பாவம் அதன் உச்சகட்டத்தை எட்டிவிட்டது. உலகம் குழப்பத்தில் நிறைந்திருக்கிறது. ஒரு பெரிய பயங்கரம் மனிதர்கள்மேல் வரவிருக்கிறது. முடிவு வெகு சமீபமாக உள்ளது. உலகம் எதிர்பார்த்திராத ஒரு அதிர்ச்சியை சந்திக்கப்போகிறது. இதற்கென தேவ மக்கள் ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற காலம் விலையேறப்பெற்றதாக உள்ளது. சில நாட்களின் தவணைக் காலமே நமக்கு உள்ளது. இதில் நாம் எதிர்காலத்தின் நித்திய வாழ்விற்கு ஆயத்தமாக வேண்டும். ***Youth's Instructor Apr. 28, 1908.***

***பல குடும்பங்கள் ஆயத்தமாக இல்லை***

ஓய்வு நாளிலும் ஞாயிற்றுக்கிழமையிலும் நான் பல தரிசனங்களை இரவில் கண்டேன். மக்களுக்கு முன்பாக என் சாட்சியத்தை கூறிக்கொண்டிருந்தேன். ஒரு பெரிய கூடாரத்திற்குள் நான் இருந்தேன். அது மக்களால் நிரம்பி வழிந்தது. அம்மக்களுக்கு ஒரு தீர்க்கமான செய்தியை தேவன் வைத்திருந்தார். அதை நான் அவர்களிடம் கூறினேன். தேவனை சந்திக்க ஆயத்தமில்லாதிருந்த குடும்பங்களே எனது செய்தியின் பாரமாக இருந்தது. நமது மக்கள் தங்கள் இதயங்களை ஆராய்ந்து முழுமனதுடன் தேவனைத் தேட வேண்டியதே என் செய்தியாக இருந்தது.

உண்மையான மனமாற்றத்தை அனுபவித்த பெற்றோர்கள் தேவ வார்த்தையின் ஒழுங்கிற்குள் தங்களது வாழ்க்கையை கொண்டுவருவதை குடும்பத்தில் வெளிப்படுத்துவார்கள். பிள்ளைகளுக்கு சரியான ஒரு பயிற்சியைக் கொடுப்பதே பெற்றோர்களின் மிக முக்கியமான வேலையாக உள்ளது. ***Letter 64, 1911.***

***பெற்றோர்களுக்கான கேள்விகள்***



1[ST] Proof

பெற்றோர்களே எப்படியாக செயல்பட்டுள்ளீர்கள்? உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பிற்கு உண்மையாக இருந்திருக்கிறீர்களா? அசுத்தமான சிந்தனைகளையும் செயல்களையும் வார்த்தைகளையும் விளைவிக்கும் வழிகளில் உங்கள் பிள்ளைகள் செல்வதை பார்த்திருக்கிறீர்கள். தேவ உதவியுடன் அவர்களது, அபாயங்களை சுட்டிக்காட்டியிருக்கிறீர்களா? தங்களது சொந்த விருப்பங்களின் பாதையின் தீமையை விவரித்துள்ளீர்களா? தாய்மார்களே தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கிற கடமையை புறக்கணித்துவிட்டீர்களா? மனிதர்களுக்கு உங்களுக்கு கொடுக்கப்பட்டதைவிட ஒரு பெரிய வேலை கொடுக்கப்பட்டிருக்க முடியாது. உங்களது பொறுப்புக்களை சுமக்க மறுத்துவிட்டீர்களா? தேவனது நியாயத்தீர்ப்புக்களை சந்திக்கும் இக்கட்டுக் காலம் நமக்கு முன்பாக உள்ளது. பரிசுத்தமற்ற, மாசுபடிந்த ஜனங்களின்மீது இந்நியாயத்தீர்ப்புகள் விழப்போகின்றன. அந்த வேளையில் நீங்கள் சரியாக வழிநடத்தாததை உணர்ந்து உங்கள் பிள்ளைகள் உங்களை சபிப்பார்களா? ***Review and Herald, Dec. 23, 1902.***

***சத்தியத்திற்குள் புதிதாக வந்துள்ள பெற்றோர்களுக்கு அறிவுரை தேவை***

உலகத்திற்கு கொடுக்கப்படவுள்ள தேவ இரக்கத்தின் கடைசி செய்தியை சுமந்து செல்லுவோர், ஒரு வேலையை செய்ய வேண்டும். குடும்ப வாழ்க்கையில் உண்மையான கிறிஸ்தவத்தை அப்பியாசிக்கும்படியாக பெற்றோர்களை அறிவுறுத்த வேண்டும். இந்த பெரிய சீர்திருத்த இயக்கமானது, பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குத் தேவ பிரமாணத்தின் கோட்பாடுகளை கற்றுக்கொடுப்பதில் துவங்க வேண்டும். மக்களுக்கு முன்பாக தேவ கட்டளை வைக்கப்படும்பொழுது எல்லோரும் தங்கள் கடமைகளை புரிந்துகொள்ளுவார்கள். கீழ்ப்படிதலின் அவசியத்தை புரிந்துகொள்ளுவார்கள். இதற்கான முடிவை அவர்களுக்காக மட்டுமின்றி, பிள்ளைகளுக்காகவும் எடுக்கிறார்கள் என்பதை காட்டுங்கள். தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிவதே நமது ஒரே பாதுகாப்பு என்பதை பார்க்க செய்யுங்கள். உலகத்தை அழிவிற்கு

இழுத்துக்கொண்டிருக்கும் தீமைகளிலிருந்து இது நம்மைக் காக்கிறது.***Testimonies for the Church, Vol..5, p. 119.***

***நமது வாலிபர்களுக்கு உதவி, ஊக்குவிக்க வேண்டும்***

இளவயதினருக்காக வேலை செய்ய வேண்டிய நேரமும் தருணமும் இதுவே. மிகவும் அபாயகரமான நெருக்கடியில் நாம் உள்ளோம் என்பதை அவர்களுக்கு சொல்லுங்கள். உண்மையான தெய்வீகத்தைக் கண்டுகொள்ள முயற்சி செய்கின்றோம் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ளட்டும். நமது வாலிபர்களுக்கு சரியான வகையில் உதவிகள் செய்யப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும். இவர்கள் பரிசுத்தமாக்கப்பட்ட இதயங்களை பெற்றுக்கொள்ளத்தக்கதாக இந்த உதவி இருக்க வேண்டும். பரிசுத்தப்படுத்தும் ஒரு நன்மையான கிறிஸ்தவ செல்வாக்கே இவர்களது தேவையாக இருக்கிறது. ***Fundementals of Christian Education, p. 547.***

***தாமதிக்காதீர்கள்***

வரப்போகும் சம்பவங்களின் நிழலை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். பெற்றோர்கள் பிள்ளைகளுக்காக உண்மையான வேலை செய்யுங்கள். இப்பொழுதே இதை செய்யுங்கள். இதுவே எனது வேண்டுகோள். கிறிஸ்தவ விசுவாசத்தின் அறிவுரைகளை தினமும் கொடுங்கள். தேவன் மீது அன்பு செலுத்தக் கற்றுக்கொடுங்கள். நீதியான நன்நெறிகளுக்கு கீழ்ப்படியச் சொல்லுங்கள். ஆவியானவரின் தெய்வீக செல்வாக்கினால் வழிநடத்தப்படுங்கள். உண்மையான விசுவாசத்துடன் இவ்வேலையை உடனே செய்யுங்கள். ஒரு மணி நேரம் கூட தாமதிக்காதீர்கள். ***Review and Herald, Apr. 23, 1889.***

***முழுமையான வேலையை செய்யுங்கள்***

பெற்றோர்களே தேவனுக்கு முன்பாக உங்களை தாழ்த்துங்கள். பிள்ளைகளிடமிருந்து துவங்கும் ஒரு முழுமையான வேலையை செய்யுங்கள். பிள்ளைகளை சரியாக வழிநடத்தாததினால் தேவ வார்த்தையை அசட்டை செய்துள்ளீர்கள். இந்த தவறிற்கு தேவனிடம் மன்றாடி மன்னிப்பைப் பெறுங்கள். தேவ வெளிச்சத்திற்காகவும் வழிநடத்துதலுக்காகவும் ஜெபியுங்கள். உங்கள் தவறுகளையும்



1ST Proof

தோல்விகளையும் கண்டுகொள்ள, ஒரு இளகிய மனசாட்சியைப் பெற்றுக்கொண்டு, தெளிவாக பகுத்தறிய வேண்டிக்கொள்ளுங்கள். தாழ்மையான மனமுடைந்த இதயங்களிலிருந்து எழும்பும் இத்தகைய ஜெபங்களை தேவன் கேட்பார்.

***பாவ அறிக்கை அவசியமாக இருக்கலாம்***

உங்கள் குடும்பத்திற்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளில் தவறியிருந்தால் முதலில் தேவனிடம் அதை அறிக்கை செய்யுங்கள். பிள்ளைகளையும் உங்களுடன் கூட்டிச் சேர்த்து உங்கள் தவறுகளை ஒப்புக்கொள்ளுங்கள். இல்லத்தில் ஒரு சீர்திருத்தத்தை கொண்டுவர வாஞ்சிப்பதையும், இல்லம் எப்படியாக அமைக்கப்பட வேண்டுமோ, அந்தப்படியே அதை அமைக்க அவர்கள் உதவ வேண்டும் என்பதை சொல்லுங்கள். தேவ வார்த்தையின் வழிமுறைகளை அவர்களுக்கு படித்துக் காண்பியுங்கள். அவர்களுடன் சேர்ந்து ஜெபியுங்கள். பரலோக இராஜியத்தில் ஒரு இடத்தை ஆயத்தப்படுத்திக்கொள்ள அவர்களது ஜீவன்களை விட்டுவைக்க தேவனிடம் கேளுங்கள். இந்த வழியாக ஒரு சீர்திருத்தத்தை நீங்கள் துவங்கி, தொடர்ந்து தேவனது வழிகளை காத்துக் கொள்ளங்கள்.

***முழுமையான கீழ்ப்படிதலின் உதாரணத்தைக் கொடுங்கள்***

தேவ கட்டளைகளை பிள்ளைகள் தெளிவாக புரிந்துகொள்ளும்படி பெற்றோர் செய்ய வேண்டும். அக்கட்டளைகளுக்கு தங்கள் வாழ்நாள் முழுவதும் கீழ்ப்படிய வேண்டிய முக்கியத்துவத்தை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இதுவே மோசேயினுடைய வேலையாக இருந்தது. முழுமையாக கீழ்ப்படிதலின் நல் உதாரணத்தை பிள்ளைகளுக்குக் கொடுக்க தேவன் வலியுறுத்துகிறார். குடும்ப வாழ்க்கையில் எல்லா வேலைகளுக்கும் மேலான வேலையாக இதுவே செய்யப்பட வேண்டும். மூன்றாவது தூதுடன் சேர்ந்து இது செய்யப்பட வேண்டும். தேவ கட்டளையை மீறுவது என்றால் என்ன என்பதை பெற்றோர் பிள்ளைகளுக்கு விளங்கவைத்திருக்க வேண்டும். இதை செய்ய தவறுவதற்கு அறியாமையை ஒரு காரணமாக கூற முடியாது. அதிகமான வெளிச்சம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எவரும் இருளில் நடக்க வேண்டியதில்லை. அறியாமையிலும் இருக்க வேண்டியதில்லை.

இஸ்ரவேலரின் ஆசிரியராக இருந்ததைப்போலவே இன்றும் தேவன் நமது ஆசிரியராக இருக்கிறார். எல்லோரும் அவருக்கு கீழ்ப்படிய வேண்டிய பரிசுத்தமான உடன்படிக்கைக்குள்ளாக கட்டப்பட்டிருக்கிறோம். ***Letter 90, 1898.***

***பிள்ளைகளின் இரட்சிப்பிற்கு ஜெபித்து வேலை செய்யுங்கள்***

இதயமானது சுய கட்டுப்பாட்டையும், சுய மறுப்பையும் பழகிக்கொள்ள வேண்டும் என்பதை பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். வாழ்வின் நோக்கங்கள் தேவ சித்தத்திற்கு இசைவாக இருக்க வேண்டும். கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து பிள்ளைகள் வளருவதைக் கண்டு நீங்கள் திருப்தியடையக் கூடாது. அவர்கள் அக்கரையற்று இருந்தால் அதை சிறு விஷயமாக எடுத்துக்கொள்ளாதீர்கள். தேவனிடம் இரவும் பகலும் அழுது ஜெபியுங்கள். ஜெபித்து பிள்ளைகளினுடைய இரட்சிப்பிற்காக வேலை செய்யுங்கள். ***“ கர்த்தருக்குப் பயப்படும் பயமே ஞானத்தின் ஆரம்பம்”***இதுவே சமநிலையான ஒரு நல்ல குணத்தின் ஊற்றாக இருக்கிறது. தேவ பயமின்றி தாங்கள் சிருஷ்டிக்கப்பட்ட நோக்கத்தை எவரும் கண்டடைய முடியாது. ***Review and Herald, Apr. 23, 1889.***

***குணத்தைக் கட்டுபவர்களாக கிரியை செய்யுங்கள்***

குணத்தைக் கட்டுபவர்களாக தாங்கள் செயல்பட வேண்டிய பொறுப்பை ஏழாம் நாள் அட்வெந்து ஜனம் முழுமையாக உணர வேண்டும். பிள்ளைகளுக்காக பெற்றோர்கள் உண்மையாக வேலை செய்தால் தேவ நோக்கத்திற்காக வேலை செய்கிறவர்களாக இருக்கிறார். உலகிற்காக தேவன் வைத்திருக்கிற திட்டத்தை பெலப்படுத்துபவர்களாக இருப்பார்கள். நமது மக்களில் இல்லங்களிலிருந்து ஒரு பெரிய வாலிப கூட்டத்தை தம்பக்கமாக சேர்க்க தேவன் வாஞ்சிக்கிறார். தங்களது குடும்பங்களின் தெய்வீக செல்வாக்கினால் இவ்வாலிபர்கள் தேவனிடம் தங்கள் இதயத்தை ஒப்புவித்தவர்களாக இருப்பார்கள். தேவனுக்கென்று ஒரு உயரிய சேவையை செய்ய புறப்படுவார்கள். இல்லத்தின் தெய்வீக அறிவுறுத்தல்களால் இவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டிருப்பார்கள். காலையிலும் மாலையிலும் இவர்களது இல்லங்களில் குடும்ப ஜெபம் இருந்திருக்கும். இதன் செல்வாக்கை அனுபவித்திருப்பார்கள். தேவன் மீது அன்பு செலுத்தி அவருக்கு பயந்து



1ST Proof

நடந்த பெற்றோர்களின் தளராத உதாரணத்தை பார்த்திருப்பார்கள். இவைகளினால் தேவனிடம் தங்களை சமர்பிக்க கற்றுக்கொண்டிருப்பார்கள். அவரை ஆசிரியராக ஏற்றுக்கொண்டு தேவ வேலையை செய்ய ஆயத்தமாக உள்ளார்கள். தேவனின் உண்மையான குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் இவர்கள் திகழுகிறார்கள். இத்தகைய வாலிபர்கள் உலகிற்கு கிறிஸ்துவின் கிருபையையும் வல்லமையையும் காட்டுவார்கள். ***Counsels to Parents, Teachers and Students, p. 131.***

***அதிகாரம் - 83***

***வெகுமதிகள்***

***நியாயத்தீர்ப்பு நாளின் ஒரு காட்சி***

ஒரு கனவு எனக்கு வந்தது. ஒரு பெரிய கூட்டத்தைப் பார்த்தேன். தடீரென வானங்கள் கருமையாயின. இடி இடித்து மின்னல் மின்னியது. வுானத்திலிருந்து, பூமிவரையிலும், இடியைவிட சத்தமான ஒரு குரலின் சத்தம் கேட்டது. ***“முடிந்தது”***என்று அக்குரல் கூறியது. ***“ ஐயோ நாங்கள் ஆயத்தமாக இல்லை”***என்று அக்கூட்டத்தில் சிலர் கதறினார்கள். ***“ஏன் நீங்கள் ஆயத்தமாக இல்லை”*** என்ற கேள்வி அவர்களிடம் கேட்கப்பட்டது. கிருபையாக நான் கொடுத்த தருணங்களை நீங்கள் ஏன் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ***“நான் ஆயத்தமாக இல்லை; நான் இரட்சிக்கப்படவில்லை. நித்தித்தை நான் இழந்துவிட்டேன்”***போன்ற அலறல்கல் என் காதுகளில் ஒளித்துக்கொண்டிருக்க நான் எழும்பினேன்.

நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற பெரிய பொறுப்புக்களை மனதில் கொண்டு எதிர்காலத்தை குறித்து சிந்திப்போம். வரவிருக்கும் எதிர்காலத்திற்கு எப்படியாக ஆயத்தமாவது என்பதை புரிந்துகொள்ளுவோம். அந்த நாளின் தேவ கோபத்தை நாம் சந்திப்போமா? தேவனின் அன்பையும் சத்தியத்தையும் நிராகரித்தால் இந்நிலை வரும். அந்நாளில் பாவியின் ஆக்கினைக்கான காரணம் பிரபஞ்சத்தில் எல்லோரும் கேட்கும்படியாக வாசிக்கப்படும். முதன் முறையாக பெற்றோர்கள் பிள்ளைகளின் இரகசிய பாவங்களை

தெரிந்துகொள்ளுவார்கள். பிள்ளைகளும் பெற்றோர்களுக்கு எதிராக எத்தனை தவறுகளை செய்திருக்கிறார்கள் என்பதை பார்ப்பார்கள். இதயங்களின் இரகசியங்களும் நோக்கங்களும் வெளிவரும். மறைவானதெல்லாம் வெளியாகும். நியாயத்தீர்ப்பை நகைத்து ஏளனம் பேசினவர்கள் அதன் உண்மையை பார்ப்பார்கள்.

தேவ வார்த்தைகளை வெறுத்தவர்கள் அதன் எழுத்தாளரை நேரடியாக சந்திப்பார்கள். நியாயத்தீர்ப்பின் நாளை மனதில் கொள்ளாமல் நம்மால் வாழ முடியாது. தாமதிக்கப்பட்டிருந்தாலும் அது சமீபமாக வந்துவிட்டது. நம்மை நெருங்கி விரைந்துகொண்டிருக்கிறது. பிரதான தூதனின் எக்காளம் விரைவில் மறித்தோரை எழுப்பப்போகிறது. உயிருள்ளோரை அதிர்ச்சிக்குள்ளாக்கப்போகிறது. அந்நாளில் துன்மார்க்கர் நீதிமான்களிடமிருந்து பிரிக்கப்படுவார்கள். மேய்ப்பன் வெள்ளாடுகளையும் செம்மரியாடுகளையும் பிரிப்பதைப்போல இருக்கும்.

***பிள்ளைகள் எங்கே என்று தேவன் கேட்கும்பொழுது***

தேவன் கொடுத்த பொறுப்புக்களை புறக்கணித்த பெற்றோர்கள், நியாயத்தீர்ப்பில் அதற்கான பதிலை கொடுப்பார்கள். ***"எனக்காக பயிற்றுவிக்க நான் கொடுத்த குழந்தைகள் எங்கே"***என்று தேவன் கேட்பார். எனது வலதுபக்கத்தில் அவர்கள் ஏன் நிற்கவில்லை? தங்களது ஞானமான அன்பு பிள்ளைகளின் தவறுகளை பார்க்காதபடி செய்ததை பெற்றோர் புரிந்துகொள்ளுவார்கள். பரலோகிற்கு வர தகுதிபெறாத குணங்களை இப்பிள்ளைகள் வளர்த்துள்ளார்கள். பிள்ளைகளுக்குப் போதிய கவனத்தையும் நேரத்தையும் கொடுக்கவில்லை என்பதை மற்றவர்கள் பார்ப்பார்கள். அன்பையும், அனுதாபத்தையும் காட்டாததால் பிள்ளைகள் இப்படியாக மாறியுள்ளனர் என்பதை பார்ப்பார்கள். ***Testimonies for the Church, Vol..4, p. 424.***

பெற்றோர்களே உங்கள் வாய்ப்புக்களை நீங்கள் இழந்தால் தேவன் உங்கள் மேல் இரக்கம் காட்டும்படி நான் ஜெபிக்கிறேன். நியாயத்தீர்ப்பின் நாளன்று என்னுடைய அழகான சிறு மந்தை எங்கே? என்று தேவன் உங்களிடம் கேட்பார்.



1ST Proof

ஒரு வேளை நீங்கள் மட்டும் பரலோகிலிருந்து உங்கள் பிள்ளைகள் அங்கு இல்லாமற்போனால் அது எப்படி இருக்கும்? இதோ தேவனே நீங்கள் கொடுத்த பிள்ளைகள் என்று நீங்கள் சொல்ல முடியுமா? பெற்றோர்களின் தவறுகளை பரலோகம் எழுதிவைத்துக் கொண்டிருக்கிறது. ***Manuscript 62, 1901.***

***குடும்பங்கள் தேவனுக்கு முன்பாக நியாயந்தீர்க்கப்படும்***

பெற்றோர்களும் பிள்ளைகளும் இறுதி நாளில் சந்திக்கும்பொழுது அது எப்படிப்பட்ட காட்சியாக இருக்கும். தங்கள் வாழ்க்கையை அழித்துக்கொண்ட ஆயிரக்கணக்கான பிள்ளைகள், தங்களுடைய அபல நிலைக்கு காரணமாக பெற்றோர்களுடன் நிற்பார்கள். இந்த பொறுப்பை பெற்றோர்கள் சுமக்கிறார்கள். தேவன் இவ்வாலிபர்களை தவறானவர்களாக படைத்தாரா? நிச்சயமாக இல்லை. தேவ தூதர்களுக்கும் சற்று சிறியவர்களாக அவரது சாயல் அவர்களை தேவன் படைத்தார். தவறான குணத்தை உருவாக்கின வேலையை செய்த நபர் யாராக இருக்கிறார்? தேவசாயலற்றுப்போகும்படி இவர்களது குணத்தை மாற்றினவர் யார்? தேவ பிரசன்னத்தை பிரிந்து, தூதர்களுடன் ஐக்கியங்கொள்ள முடியாதபடி செய்தவர் யார்? பெற்றோர்களின் பாவங்களை பிள்ளைகள் சுதந்தரித்துக் கொண்டார்களா? தவறான இச்சைகளையும் ஆசைகளையும் அவர்கள் சுதந்தரித்துள்ளார்களா? இன்பத்தை தேடிச் சென்ற தாயினால் தனது கடமையை நிறைவேற்ற முடிந்ததா? கொடுக்கப்பட்டிருந்த மாதிரியின்படி பிள்ளையை பயிற்றுவிக்க தாய் தவறியுள்ளாள். இத்தகைய தாய்மார்கள் எல்லோரும் தேவனது நியாயத்தீர்ப்பை கடந்தாக வேண்டும்.***Testimonies for the Church, Vol..3, p. 568, 569.***

***பரலோகின் படத்தைப்போன்ற பதிவுகள்***

பெற்றோர்களும் பிள்ளைகளும் ஒவ்வொரு நாளும் குணத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொருவருடைய குணத்தின் கூறுகள் பரலோக புத்தகங்களில் அச்சிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஓவியர் ஒரு படத்தை வரைவதுபோல தேவன் அவரது ஜனங்களை படமெடுத்துக் கொண்டிருக்கிறார். பாவனைகள் கூட அழகாக பரலோக புத்தகங்களில் பதிவாகின்றன. பரலோகில் உங்களைக் குறித்து எப்படிப்பட்ட பாடங்கள்

சித்தரிக்கப்பட நீங்கள் விரும்புகிறீர்கள். பெற்றோர்கள் இக்கேள்விகளுக்கு பதில் கொடுங்கள். பரலோக ஓவியர் எப்படிப்பட்ட படங்களை உங்களைக்குறித்து பதிவுசெய்துகொண்டிருக்கிறார்.

இதை இப்பொழுதே நான் முடிவு செய்ய வேண்டும். மரணம் வரும் தருவாயில் எந்த துற்குணமும் சரிசெய்யப்பட முடியாது.

ஒவ்வொரு தனி நபருக்கும் இது ஒரு முக்கியமான வேலையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளுக்குரிய பதிவுகளும் பரலோக புத்தகங்களில் ஏறிக்கொண்டிருக்கின்றன. உங்களைக்குறித்து இப்படியும் சொல்லிக் கொள்ளுங்கள். ***“ இன்று என்னுடைய பதிவுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன”***ஒவ்வொரு மணி நேரமும் இந்த கேள்வியைக் கேளுங்கள் “***எனது வார்த்தைகள் தேவ தூதர்களுக்கு எப்படியாக தோன்றப்போகிறது. வெள்ளித்தட்டுகளில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்கு சமமாக இருக்கின்றனவா? அல்லது காயப்படுத்தும் புயற்றாற்றைப்போல இருக்கின்றனவா?”***

நமது வார்த்தைகளும் செயல்களும் மட்டுமல்ல, நமது யோசனைகளும் நம்மை பற்றிய படமாக இருக்கின்றன. ஒவ்வொரு ஆத்துமாவும் நன்மையானதாகவும், நன்மையை செய்வதாகவும் இருக்கட்டும். உங்களது படங்கள் உங்களை வெட்கப்பட வைக்கக் கூடாது. நமது ஒவ்வொரு உணர்வும் முகத்தில் பிரதிபலிக்கும். பரலோகில் நம்மைப் பற்றி காட்டும் படங்கள் நல்லவைகளாக இருக்க தேவன் நமக்கு உதவட்டும். ***Letter 78, 1901.***

***அக்கரையின்றி இருந்திருக்கிறீர்களா?***

பிள்ளைகளின் நித்திய நன்மைக்காக பெற்றோர்கள் ஜெபத்துடனும் அக்கரையுடனும் பார்த்துக்கொள்ள வேண்டும். பெற்றோர்கள் தங்களிடமே ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும். நாம் அக்கரையின்றி இருந்திருக்கின்றோமா? இந்த உன்னத பணியை நாம் புறக்கணித்துள்ளோமா? சாத்தானின் சோதனைகளின் விளையாட்டு பொருளாக இருக்க பிள்ளைகளை விட்டிருக்கின்றோமா? கிறிஸ்துவிற்கு எதிராகவும் சத்தியத்திற்கு எதிராகவும் நமது பிள்ளைகள் அவர்களது நேரத்தையும், தாலந்துகளையும் பயன்படுத்த விடப்பட்டிருக்கிறார்கள்.



1ST Proof

இதை அனுமதித்ததற்காக தேவனிடம் நாம் கணக்கு கொடுக்க வேண்டும். பெற்றோர்களாக நமது கடமைகளை நாம் அசட்டை செய்துள்ளோம். இதன் காரணமாக சாத்தானின் இராஜியத்தில் அநேகர் சேர்ந்துள்ளனர். ***Testimonies for the Church, Vol. 6, p. 429 430.***

பிள்ளைகளுக்கு தாய்மார்கள் சரியான கல்வியை கொடுக்கத் தவறினால், இத்தவறு அத்தாய்மார்கள் மீதே பிரதிபலிக்கும். பிள்ளைகளை சரியாக பயிற்றுவித்து வழிநடத்தாததினால் அவர்களுடைய பாரங்களும் குழப்பங்களும் அதிகரிக்கும். பொறுமையுடன்இப்பிள்ளைகளைக் கையாண்டு, சரியான பயிற்சியைக் கொடுத்திருந்தால் இச்சூழ்நிலை வந்திருக்காது. பிள்ளைகள் கீழ்ப்படியவும் அதிகாரத்தை மதிக்கவும் கற்றிருப்பார்கள். பிள்ளைகளின் குணங்களை வளர்ப்பதையே தாய்மார்கள் முதன்மையான வேலையாக கொள்ள வேண்டும். இதை செய்தால் நல்ல பலனை காண்பார்கள். முட்களும், களைகளும் வேர்பிடிக்காமல் ஒரு நல்ல அறுவடையைப் பெறலாம். ***Signs of the Times, Aug. 5, 1875.***

***உண்மையற்ற பெற்றோர்களை பிள்ளைகளே ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார்கள்***

இவ்வேலையை உண்மையுடன் செய்யாத பெற்றோர்களின் மீது தேவ சாபம் தங்கும். அவர்களையே புண்படுத்தப்போகும் முட்செடிகளை நடுகிறார்கள். நியாயத்தீர்ப்பிலும் தங்களுடைய தவறுக்காக கணக்கு கொடுக்க வேண்டும். நியாயத்தீர்ப்பின் நாளில் இதை சந்திக்க வேண்டி வரும். நியாயத்தீர்ப்பில் இப்பிள்ளைகள் எழுந்து தங்களை சரியாக கட்டுப்படுத்தாததற்கு பெற்றோர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார்கள். தவறான அனுதாபங்களும் கண்மூடித்தனமான அன்பும் பிள்ளைகளினுடைய தவறுகளை பெற்றோர்கள் கண்டிக்காமல் விட்டுவிடத்தக்கதாக செய்தது. இதனால் பிள்ளைகள் இரட்சிப்பை இழந்திருக்கிறார்கள். இவர்களுடைய இரத்தப்பழி பெற்றோர்கள்மீது வந்துள்ளது. ***Testimonies for the Church, Vol..1, p. 219.***

***உண்மையுடன் செயல்பட்ட பெற்றோர்களை பிள்ளைகள் உயர்த்துவார்கள்***

நியாயச்சங்கம் உட்கார்ந்து புத்தகங்கள் திறக்கப்படும். ***"நன்மையை செய்திருக்கிறாய்"***என்ற தீர்ப்பு வந்தால், அழியாமையின் கிரீடம் மேற்கொண்டவரின் சரசின்மீது வைக்கப்படும். இவர்கள் தங்கள் கிரீடங்களை உயர்த்தி தங்களது தாய்மார்களை சுட்டிக்காட்டி,***"எனது தாயே என்னை இப்படி உருவகித்தாள், தேவ கிருபையினால் இது நடந்தது. என் தாயின் அறிவுரைகளும், ஜெபங்களும் எனது ஆத்துமத்தை நித்திய இரட்சிப்பிற்கு வழிநடத்தியுள்ளது"***என்பார்கள். ***Message to Young people p. 330.***

***உண்மையுடன் கொடுக்கப்பட்ட பயிற்சியின் விளைவுகள் வெளிப்படும்***

சுய நலமில்லாத ஆவியுடன் கிரியை செய்தவர்கள், அதன் பலனை அனுபவிப்பார்கள். ஒவ்வொரு உன்னத செயலும் நல் விளைவுகளை கொடுக்கும். கடைபிடிக்கப்பட்ட ஒவ்வொரு நல்ல கோட்பாடும் அதன் பலனை தரும். இவைகளின் சில விளைவுகளையே நாம் இங்கு பார்ப்போம். இதை செய்தவர்கள் அவர்களின் கிரியைகளுக்கான நற்பலனை பார்க்க முடியாமல் போகலாம். தங்களால் பார்க்க முடியாதவர்களையும், இத்தன்மைகள் சென்றடைகின்றன. பல பெற்றோர்களும், ஆசிரியர்களும் செய்த வேலைகள், பயனில்லாமல் போனதைப் போன்று தோற்றமளிக்கிறது. அவர்களுடைய நல்ல பணிகள் நிறுத்தப்பட முடியாத ஊற்றுக்களை திறந்துவிட்டிருக்கின்றன என்பதை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். தாங்கள் பயிற்றுவித்து வழிநடத்தின பிள்ளைகள் மற்ற மனிதர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பதை விசுவாசத்தினால் மட்டுமே அவர்களால் காண முடிகிறது. அப்பிள்ளைகள் உருவாக்கும் நல்ல செல்வாக்குகளை நேரடியாக பார்க்க முடியாமல் போகிறது. ஆயிரமடங்காக அவர்களது கிரியைகளின் பலன் பெருகும். பலர் விதைகளை விதைக்கிறார்கள். அதன் அறுவடையை விதைத்தவர்களின் மரணத்திற்கு பிறகு உலகமானது பெற்றுக்கொள்ளுகிறது. மற்றவர்கள் கனிகளை உண்ணத்தக்கதாக செடிகளை நடுகிறார்கள். நன்மைக்கேதுவானவைகளை துவங்கி இருக்கிறார்கள் என்பதை அறிந்து திருப்தி கொள்ளுகிறார்கள்.



1ST Proof

வரவிருக்கும் நித்தியத்தில் இதனுடைய முழுபலனை பார்ப்போம். ***Education, p. 305, 306.***

***பிள்ளைகளையும் வாக்குத்தத்தத்தின் தேசத்திற்கு அழைத்து வருதல்***

தேவ சிங்காசத்திலிருந்து வரும் ஒளியானது வாழ்க்கை என்ற பாதையின்மீது பிரகாசிக்கின்றது. ஆதி இஸ்ரவேரலர்களைப்போன்று நமக்கு முன்பாகவும் ஒரு மேக ஸ்தம்பமும் அக்கினி ஸ்தம்பமும் கடந்து செல்லுகிறது. நமது முற்பிதாக்களைப் போலவே நாமும் நமது பிள்ளைகளை வாக்குத்தத்ததம் பண்ணப்பட்ட தேசத்துக்கு கொண்டு செல்லலாம். ***Signs of the Times, Nov. 24, 1881.***

தேவனுக்கென்று உங்கள் வீடு அமைந்திருக்கட்டும். அவருக்காக உங்கள் குடும்பம் இருக்க வேண்டும். பரலோகின் வாசலுக்கு உங்கள் குடும்பத்துடன் சென்று ***"இதோ தேவனே நாங்களும் நீங்கள் கொடுத்த பிள்ளைகளும் வந்திருக்கிறோம்"*** என்று நீங்கள் சொல்லியாக வேண்டும். பிள்ளைகள் பெரியவர்களாகவும் வளர்ந்து இருக்கலாம். ஆயினும் அவர்கள் உங்கள் பள்ளைகளாகவே இருக்கிறார்ள். நீங்கள் அவர்களை கவனித்துக் கொண்ட விதமும், நீங்கள் அவர்களுக்கு கொடுத்த கல்வியும் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவை. பிள்ளைகளும் உங்களுடன் ஜெயங்கொண்டவர்களாக நிற்பார்கள். நீங்கள் சொல்லுவீர்கள்***"இதோ தேவனே நானும் என்னுடைய பிள்ளைகளும்"Manuscript 49, 1894.***

***துண்டிக்கப்பட்ட இணைப்புக்கள் மீண்டுமாக இணைக்கப்படுகின்றன***

இயேசு கிறிஸ்து தூதர்களுடன் மகிமையுடனும் வருகிறார். திரளான தேவதூதர்களின் கூட்டம் அவருடன் வரும். அத்தூதர்கள் பிரகாசிப்பார்கள். தன்னை நேசித்து தனது கட்டளைகளை கைக்கொண்டவர்களை கனப்படுத்தி வருகிறார். அவர்களை அவருடன் சேர்த்துக்கொள்ளுவார். அவர் அவர்களை மறக்கவில்லை. அவர் செய்துகொடுத்த வாக்குத்தத்தங்களை மறக்கவில்லை. ஒரு குடும்பம் இணைவதைப்போல இவர்கள் இணைகிறார்கள்.

***ஒரு தாய்க்கு ஆறுதல்***

உங்களது பிள்ளையின் இரட்சிப்பைக் குறித்து நீங்கள் விசாரிக்கிறவர்களாக இருக்கிறீர்கள். இயேசுவினுடைய வார்த்தைகளே உங்களுக்குரிய பதிலாக இருக்கின்றன. ***"சிறு பிள்ளைகளை என்னிடத்தில் வருவதற்கு இடங்கொடுங்கள் அவர்களை தடைபண்ணாதிருங்கள். தேவனுடைய இராஜியம் அப்படிப்பட்டவர்களால் ஆனது"*** இந்த தீர்க்கதரிசனத்தை நினைவில் கொள்ளுங்கள். ***"ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுமையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள். உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு; உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." ஏரேமியா 31: 15-17.***

இந்த வாக்குத்தத்தம் உங்களுடையது, இதைக் கொண்டு நீங்கள் ஆறுதல் அடையலாம் தேவன் மீது நம்பிக்கை கொள்ளலாம். பல சிறு பிள்ளைகள் இக்கட்டுக் காலத்திற்கு முன்பாகவே நித்திரைக்குள்ளாக செல்வார்கள் என்பது எனக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆயினும் நம் பிள்ளைகளை மீண்டும் சந்திப்போம். பரலோக மன்றங்களில் அவர்களை அறிந்துகொள்ளுவோம். தேவனை நம்புங்கள் பயப்படாது இருங்கள். ***Letter 96, 1899.***

***சிறு பிள்ளைகளை தூதர்கள் தாயிடம் தூக்கிச் செல்லுகிறார்கள்.***

***"இரட்சிப்பு"*** எத்தனை மகத்துவம் உடையதாக இருக்கிறது. வெகு காலமாக பேசப்பட்டிருக்கின்றது, வெகு காலமாக மனிதர்கள் இதற்கென காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும் இது முழுமையாக புரிந்துகொள்ளப்படாத ஒன்றாகவே உள்ளது.

உயிர்வாழ்ந்துகொண்டிருக்கும் நீதிமான்கள் ஒரு நாழிகையில் மாற்றப்படுகிறார்கள். தேவனுடைய சத்தத்தைக் கேட்கும் வேளையில் மகிமைப்படுகிறார்கள். சாவாமையை பெற்றுக்கொள்ளுகிறார்கள். மேகங்களுடன் எழுந்து இயேசுவை சந்திக்கிறார்கள். நான்கு திசைகளிலிருந்தும் தூதர்கள் தேவ ஜனங்களை ஒன்றாக கூட்டி சேர்க்கின்றனர். சிறு பிள்ளைகளை தேவ தூதர்கள் தூக்கி சென்று தாயிடம் ஒப்படைக்கிறார்கள். மரணத்தினால் வெகு காலமாக பிரிக்கப்பட்ட நண்பர்கள் ஒன்றாக இணைகிறார்கள். இனி பிரிவதில்லை. மகிழ்ச்சியின் கீதங்களுடன் தேவ நகரத்தை நோக்கி எழும்புகின்றனர்.

***நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த நாள்***

நமது முதல் பெற்றோர்கள் பாவம் செய்து ஏதேனைவிட்டு வெளியேறினார்கள். அதிலிருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் வந்து சாத்தானின் வல்லமையை உடைக்க தேவ பிள்ளைகள் காத்துக்கொண்டிருந்தார்கள். மீண்டுமாக இயேசுவானவர் தங்களை பரதேசினுள் கொண்டு செல்வார் என்பதை நம்பினார்கள்.

உபத்திரவத்தின் வழியாக பரலோகத்தை நாம் சுதந்தரித்துக்கொள்ள வேண்டியுள்ளது. ஆயினும் பரலோகத்தின் மேன்மைகளுடன் ஒப்பிட்டு பார்க்கும்பொழுது, சுலபமாகவே நாம் இத்தனை மகத்துவமான இடத்திற்குள்ளும் செல்லுகிறோம் என்பது புரிகின்றது. நமக்கு இதை தருவதற்காக இயேசுவானவர் எவ்வளவு பாடுகளை சுமந்தார் என்பதை பார்த்தேன். கிறிஸ்துவின் பாடுகளுக்குள்ளாகவும் நாம் ஞானமுழுக்கு பெறும்படியாக நான் ஜெபித்தேன். சோதனைகளைக் கண்டு விலகாமல் பொறுமையுடனும் மன மகிழ்ச்சியுடனும் இவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசுவின் பாடுகளினால் நாம் சுத்தவான்களாகிறோம் என்பதை மனதில் கொள்ள வேண்டும். ***Early Writing p. 67.***

***பரலோகம் விலைமதிப்பற்றதாக உள்ளது***

பரலோகமே நமது வாழ்க்கையாக இருக்க வேண்டும். இதை இழந்துவிடும்படியாக நாம் எதையும் செய்யக் கூடாது. நமது ஒவ்வொரு அடியையும் தேவன் ஒழுங்குபடுத்த வேண்டும். ஜெயங்கொள்ளுகின்ற இந்த பெரிய வேலையில் தேவன் நமக்கு உதவட்டும். ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கிரீடங்களை வைத்திருக்கிறார்.

1ST Proof

நீதிமான்களுக்காக வெள்ளங்கிகளை வைத்திருக்கின்றார். மகிமையையும், கனத்தையும், சாவாமையையும் தேடுவோர்க்கு மகிமையான ஒரு நித்தியத்தைக் கொடுக்கப்போகிறார். தேவ நகரத்திற்குள் செல்லும் ஒவ்வொருவரும் வெற்றிபெற்றவர்களாக அதனுள் நுழைவார்கள். ஆக்கினைக்குள்ளான குற்றவாளியாக அதன் உள்ளாக செல்லுவதில்லை. தேவ குமாரர்களாக செல்லுவோம். அங்கு இந்த அருமையான வரவேற்பு நமக்கு கொடுக்கப்படும்.***"அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்." மத்தேயு25:34.Christian Temperance and Bible Hygiene p. 149.***

*கிறிஸ்துவின் மகிழ்ச்சியில் பங்குகொள்ளுதல்*

நாங்கள் உள்ளே செல்ல வாசலின் இருபக்கமும் தூதர்களின் அணிவகுப்பைப் பார்த்தோம். வலிசையாக நின்றுகொண்டிருந்தார்கள். இயேசு பேசுகிறார் ***"அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்." மத்தேயு25:34.*** அவரது மகிழ்ச்சியில் நாம் பங்குகொள்ளுகிறோம் என்கிறார். அது என்ன மகிழ்ச்சி. உங்களது பாடுகளின் நற்பலன்களைப் பார்ப்பதே அந்த மகிழ்ச்சி தாய்மார்கள் தங்களது முயற்சிகளுக்கான நல்ல பலன்களை காண்பதும் இந்த மகிழ்ச்சி. உங்கள் பிள்ளைகளும் இங்கு இருக்கிறார்கள். ஜீவ கிரீடங்கள் அவர்களின் தலைகளின்மேல் உள்ளன. தேவ தூதர்கள் இப்பிள்ளைகளின் தாய்மார்களின் நாமங்களை நித்தியத்திற்கும் மாறாததாக மாற்றுகிறார்கள். இவர்களது முயற்சிகளே பிள்ளைகளை இயேசுவிடம் கொண்டுவந்துள்ளது. ***Manuscript 12, 1895.***

*வெற்றியின் மகிமையான நாள்*

சபை இப்பொழுது போராடிக்கொண்டிருக்கிறது. இருளிலிருக்கும் உலகுடன் நாம் போராடிக்கொண்டிருக்கிறோம். கிட்டதட்ட முழு உலகமும்



1ST Proof

விக்கிரக ஆராதனையை செய்கிறது. இந்த யுத்தம் முடிவுக்கு வரும் நாள் வரும். வெற்றி கிடைக்கப்பட்டிருக்கும். பரலோகத்தைப்போலவே பூலோகிலும் தேவனுடைய சித்தம் செய்யப்பட வேண்டும். எல்லோரும் சந்தோஷமான ஒரு குடும்பமாக இருப்பார்கள். துதியையும், நன்றியையும் உடைகளாக தரித்து கொண்டிருப்பார்கள். இது கிறிஸ்துவின் நீதியின் அங்கி. இயற்கையும் அதனுடைய பரிபூரண அழகுடன் தேவனை துதித்து ஆராதிப்பதைப்போல இருக்கும். பரலோகத்தின் ஒளியால் பூமி நிரப்பப்பட்டிருககும். நிலாவின் வெளிச்சம் சூரியனின் வெளிச்சத்தைப்போல ஆகிவிடும். சூரியனின் வெளிச்சம் இப்பொழுது இருப்பதைவிட ஏழு மடங்கு அதிகமாகிவிடும். முகிழ்ச்சியில் ஒவ்வொரு வருடமும் செல்லும். இந்தக் காட்சியை பார்த்து நட்சத்திரங்களைப்போன்ற தேவ தூதர்கள் பாடிக் கொண்டிருப்பார்கள். தேவ குமாரர்கள் களி கூறும் குரலை எழுப்புவார்கள். இயேசுவும் பிதாவும் ஒன்றாக இணைந்து ***"இனி ஒருபோதும் பாவம் இருப்பதில்லை, ஒரு போதும் மரணம் சம்பவிக்கப்போவதில்லை"***என்று உறைப்பார்கள்.

எதிர்கால மகிமையின் தரிசனங்களாக இவைகள் உள்ளன. தேவனே இவைகளை காட்டியிருக்கிறார். இவைகள் நம் மனங்களுடன் நெருக்கமாக பிணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பார்க்க முடியாத இதுபோன்ற தெய்வீக தரிசனங்கள் எப்பொழுதும் நமக்கு முன்பாக வைத்துக்கொள்ள வேண்டும். நித்தியத்தை சரியாக புரிந்துகொள்ள இது உதவும். இது நமக்கு வல்லமையை கொடுக்கும். மற்றவர்களையும் ஒரு நல்ல வாழ்க்கையை வாழ நமது செல்வாக்கும் அவர்களை உயர்த்தும்.

*தேவன் "இதுநல்லது" என்று சொல்லுவாரா*

அந்த வெண்மையான சிங்காசனத்திற்கு முன்பாக நீங்கள் நிற்பீர்கள். உங்களது கிரியைகள் வெளியரங்கமாக்கப்படும். புத்தகங்கள் திறக்கப்படுகின்றன. ஒவ்வொரு வாழ்க்கையின் பதிவுகளும் அறியப்படுகின்றன. அந்த பெரிய கட்டத்தில் அநேகர் அங்கு வெளிப்படுத்தப்படுபவைகளை சந்திக்க ஆயத்தமில்லாதவர்களாக இருக்கிறார்கள். சிலரது காதுகள் அதிர்ச்சியைக் கொடுக்கும் இவ்வார்த்தைகளை கேட்கின்றனர். ***"தராசில் நிறுக்கப்பட்டாய்***

***குறையுள்ளவனாக காணப்பட்டாய்”***பல பெற்றோர்களை பார்த்து நீதிபதி சொல்லுவார் ***“எனது வார்த்தை உங்களுக்கு முன்பாக தெளிவாக இருந்தது. அதன் பாடங்களுக்கு ஏன் நீங்கள் கீழ்ப்படியவில்லை? அது தேவனுடைய குரல் என்பதை நீங்கள் அறியவில்லையா? வழிதவறாதபடி வேதத்தை ஆராய நான் சொல்லவில்லையா? நீங்கள் உங்களை மட்டும் அழித்துக்கொள்ளவில்லை. உங்களது மாய்மாலங்களினால் பலரை தவறாக வழிநடத்தியுள்ளார்கள். என்னிடம் உங்களுக்கு எந்த பங்கும் இல்லை. விலகுங்கள் விலகுங்கள்”***

இன்னொரு கூட்டத்தார் நடுங்கிக்கொண்டு இயேசுவை நம்பினவர்களாக நிற்கிறார்கள். தங்களது தகுதியற்ற நிலையை உணர்ந்தவர்களாக மன பாரத்துடன் அழுத்தப்பட்டிருக்கிறார்கள். நன்றியுணர்வுடனும் ஆனந்த கண்ணீருடனும் தேவனின் அங்கீகாரத்தை கேட்கிறார்கள். பெருந்துயரங்களும், துன்பங்களும் சோதனையின் நாட்களும் இக்குரலை கேட்கும்பொழுது மறக்கப்படுகின்றன. இனிமையான இசையைப்போன்று இவ்வார்த்தைகள் இருக்கின்றன.

மீட்கப்பட்டோரின் கூட்டமும் அங்கு நிற்கிறது. வெற்றியின் ஓலைகளை இவர்கள் கரங்கள் பிடித்துக்கொண்டிருக்கின்றன. தலைகளில் கிரீடங்கள் காணப்படுகின்றன. உத்தமத்துடனும் உண்மையுடனும் தேவனுக்காக வேலை செய்ததினால் பரலோகத்திற்கு தகுதியடைந்துள்ளார்கள். உலக வாழ்க்கையின் அவர்களது கிரியைகள் பரலோக மன்றங்களில் அங்கிகரிக்கப்படுகின்றன.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கிரீடங்களும், நீதியின் அங்கிகலும், சுர மண்டலங்களும் கொடுக்கப்படுவதைப் பார்க்கின்றனர். அளவில்லாத மகிழ்ச்சியை அடைகின்றனர். விடிவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த பயம் நிறைந்த காலம் முடிந்துவிட்டது. கண்ணீரிலும் ஜெபத்திலும் விதைக்கப்பட்ட விதைகள் பலனற்றுப்போனதைப் போல தெரிந்தாலும் இறுதியில் முழு பலனை கொடுத்துவிட்டன. அவர்களது பிள்ளைகள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். பெற்றோர்களே இந்த மகிழ்ச்சியின் கீதத்தை அந்த நாளின் பாடுவார்களா? ***Signs of the times July 1886.***

1ST Proof



குழந்தை வளர்ப்பிற்கான ஆலோசனை